


# கலைமகள்



## தொகுதி ௧௦

(பகுதி ௫௫—௬௦)

[தாது ஸூ ஆடிமீ முதல் தாது ஸூ மார்கழிமீ முடிய]

——:o:——

ஆசிரியர்:

ஆர். நாராயணசாமி ஐயர், பி.ஏ., பி.எல்.

1936

சென்னை லா ஜர்னல் அச்சுக்கூடம், மயிலாப்பூர்.

 [விலை ரு. 2-6-0

# பத்தாந் தொகுதியின் பொருளடக்கம்

சரித்திரம்:

சாஸ்திரம்:



சிறுவர் பகுதி:



மதிப்புரை:

# கட்டுரை எழுதியவர்கள்




# நிலவில் மலர்ந்த முல்லை

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

---

சீவகசிந்தாமணியை நான் ஆராய்ந்து பதிப்பித்த காலத்தில் (1887-இல்) அதிலுள்ள மேற்கோள்கள் இன்ன இன்ன நூலிலுள்ளனவென்று கவனித்தபொழுது பலபழைய தமிழ்நூல்களைப் பற்றி அறிந்தேன். பத்துப்பாட்டென்று ஒரு தொகைநூல் உண்டென்பதும், அது *திருமுருகாற்றுப்படை முதலிய பத்துத் தனிநூல்களை உடையதென்பதும் நாளடைவில் தெரியவந்தன. அதனால், பத்துப்பாட்டைத் தேடிப்பெற்று ஆராயவேண்டுமென்ற ஆவல் உண்டாயிற்று. பல நண்பர்களுடைய உதவியால் பத்துப்பாட்டின் ஏட்டுப்பிரதிகள் சில கிடைத்தன. ஆனாலும் அவற்றில் பத்துப் பாட்டுக்களும் இல்லை. இருந்த பாட்டுக்களும் தனியே மூலமில்லாமல் உரைமட்டும் உள்ளனவாகவும், இடையிடையே குறைந்தும் இருந்தன; உள்ள பகுதிகளும் திருத்தமாக இல்லை. ஆகையால் மேலும் மேலும் பத்துப்பாட்டுப் பிரதிகளைத் தேடிவந்தேன். நான் கும்பகோணம் காலேஜில் வேலைபார்த்து வந்த அக்காலத்தில் விடுமுறைக்காலங்களில் வெளியூர்களுக்கு இதன் பொருட்டுப் பிரயாணம் செய்து வருவதுண்டு.

ஒருசமயம்† ஆவணியவிட்டத்தோடு தொடர்ந்து ஒரு வாரம் விடுமுறை கிடைத்தது. திருநெல்வேலிப் பக்கத்திற் பரம்பரை வித்துவான்களுடைய வீடுகளில் தேடினால் சுத்தமான

---

* 1. திருமுருகாற்றுப்படை, 2. பொருநராற்றுப்படை, 3. சிறுபாணாற்றுப்படை, 4. பெரும்பாணாற்றுப்படை, 5. முல்லைப்பாட்டு, 6. மதுரைக்காஞ்சி, 7. நெடுநல்வாடை, 8. குறிஞ்சிப்பாட்டு, 9. பட்டினப்பாலை, 10. மலைபடுகடாம் என்பன.

† 1888-ஆம் வருஷமென்று ஞாபகம்.

பிரதிகள் கிடைக்கக் கூடுமென்று எண்ணியிருந்தேன். ஆதலின் அவ்விடுமுறையில் திருநெல்வேலிக்கும் ஆழ்வார்திருநகரி முதலிய ஊர்களுக்கும் சென்றுவர நிச்சயித்து அங்கங்கேயுள்ள சில அன்பர்களுக்கு வருவதை எழுதியிருந்தேன். இதனை என் தந்தையாரிடம் தெரிவித்தபோது அவர், "சிராவணத்திற்கு இங்கே இராமல் வெளியூருக்குப் போகவேண்டாம். அடுத்த விடுமுறையில் பார்த்துக் கொள்ளலாமே" என்று எனது எண்ணத்திற்குத் தடை உண்டாக்கினர். நான் போகவேண்டிய அவசியத்தைச் சொன்னேன். அவர் சிறிதேனும் இணங்காமல், போகக் கூடாதென்று தடுத்தனர். சிராவணத்தைக் காட்டிலும் பத்துப்பாட்டு எனக்குப் பெரிதாயிருந்தமையால் மிகவும் சிரமப்பட்டு அவரிடம் தக்க சமாதானம் கூறி விடைபெற்றுப் புறப்பட்டேன்.

இரவு எட்டுமணி. 'ரயில்வே ஸ்டேஷனு'க்கு ஓர் ஒற்றை மாட்டுவண்டி பேசிக்கொண்டு ஏறினேன். என் தந்தையார் அரை மனத்தோடு விடை கொடுத்தனுப்பினர். ஒரு தகரப்பெட்டி மட்டும் உடன்வந்தது. வண்டி வாணுதுறை என்னும் இடத்துக்குத் தென்பாற் செல்லும்போது எதன்மேலோ மோதிக் குடைசாய்ந்து விட்டது. நான் கீழே விழுந்தேன்; என்மேலே பெட்டி விழுந்தது. இந்த நிலையிலும் எனக்கு ஊக்கக் குறைவு உண்டாகவில்லை. என் மனம் முழுவதும் திருநெல்வேலியில் இருந்தது. ஏதாவது ககன குளிகையை ஒரு மகான் கொடுத்து 'இதை மிகவும் அவசரமான சமயத்தில் உபயோகி' என்று சொல்லியிருந்தால், அந்தச் சமயத்தில் அதை உபயோகித்திருப்பேன். என் மனவேகத்துக்கு நேர் மாருக வண்டியின் வேகம் இருந்ததோடு, இடைவழியில் கீழேயும் வீழ்த்திவிட்டது.

திரும்பி வீட்டுக்குப் போய் இருந்து மறுநாள் புறப்படலாமென்று முதலில் எண்ணினேன்; முன்பே எனது பிரயாணத்தைத் தடுத்த என் தந்தையாருக்கு வண்டி குடைசாய்ந்த அபசகுனமும் துணைசெய்து பின்னும் என் பிரயாணத்தைத் தடுக்க ஏதுவாகுமென்று நினைந்து அங்ஙனம் செய்வது தக்கதன்றென்று பின்பு துணிந்தேன். ஆதலால் பேசாமல் வண்டிக்காரனுக்குரிய சத்தம் முழுவதையும் கொடுத்துவிட்டுப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு 'ஸ்டேஷனை' நோக்கி நடந்தேன். நல்லவேளையாக நான் உத்தேசித்துச் சென்ற ரயில்வண்டி கிடைத்தது; ஏறிச் சென்றேன்.

தஞ்சாவூருக்கு அப்பால் வரும்போது நடுவழியில் ஒரு காட்டில் வந்து வண்டி திடீரென்று நின்றது. பல ரயில்வே அதிகாரிகள் வந்து நான் இருந்த வண்டியைக் கீழும் மேலும் பார்த்தார்

கள். தூக்க மயக்கத்தோடிருந்த என்னைக் கீழே இறங்கி வேறு வண்டிக்குப் போகும்படி அதட்டிச் சொன்னார்கள். நான் இருந்த வண்டிக்கு முன்னே இருந்த வண்டியில் தீப்பிடித்து விட்டதாம். அதனால் இரண்டு வண்டிகளையும் கழற்றிவிட அவர்கள் எண்ணினார்கள். நான் ஈசுவரத்தியானம் செய்துகொண்டு வேறுவண்டியிற் போய் ஏறினேன். புறப்பட்டதுமுதல் உண்டான இந்தச் சங்கடங்களால் மனத்துக்குள் சிறிது சஞ்சலம் உண்டாயிற்று; எனக்கு இருந்த ஊக்கமிகுதியாற் பிறகு அது நீங்கிற்று.

மறுநாள் காலையில் சௌக்கியமாகத் திருநெல்வேலியை அடைந்தேன். அங்கே அக்காலத்தில் ஸப்ஜட்ஜாக, கனகஸபை முதலியாரென்ற கனவான் ஒருவர் இருந்தார். அவர் தஞ்சாவூரில் உத்தியோகத்தில் இருந்து பிறகு அங்கிருந்து திருநெல்வேலிக்குப் போனவர். தஞ்சாவூரில் இருந்த காலத்தில் அவர் எனக்குப் பழக்கமானார். அப்பொழுது ஒருமுறை என் நண்பர் புரொபஸர் ம-ா-ா-ஸ்ரீ சுந்தரராமையரவர்கள் மூலம், தாம் திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டிருப்பதாகவும், அங்கே ஏடுகள் தேடும் விஷயத்தில் தம்மால் இயன்ற உபகாரம் செய்வதாகவும் சொல்லியனுப்பிய துண்டு. அது நினைவிலிருந்தமையினாலும், நான் புறப்படுவதற்கு முன் அவருக்கும் எழுதியிருந்தேனாதலாலும், திருநெல்வேலியில் அவர் பங்களாவை விசாரித்துக்கொண்டு சென்றேன். அவர் என்னைக் கண்டவுடன் க்ஷேமசமாசாரத்தைக் கூட விசாரியாமல், "உங்களுக்குத்தான் ஒரு கடிதம் எழுதித் தபாலிற் போடவைத்தேன்; உங்களிடம் சொல்லவேண்டியவற்றை இந்தக் கடிதத்தில் எழுதியிருக்கிறேன்" என்று சொல்லி ஒரு கடிதத்தை என் கையில் கொடுத்தார். அது விலாஸமெழுதித் தபால் தலையும் ஒட்டப் பெற்று அனுப்பத்தக்க நிலையில் இருந்தது. அதனை நான் பிரித்துப் பார்த்தேன். அதிலிருந்த செய்திகளின் கருத்து வருமாறு:—

"நான் தங்களுக்கு வாக்களித்தபடி ஏட்டுச் சுவடிகள் விஷயத்தில் உதவிசெய்ய இயலாதவனாக இருக்கிறேன். இளமை முதற் கொண்டு என்னுடைய நண்பராயுள்ள ஸ்ரீ சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் தமக்குச் சில ஏட்டுச்சுவடிகள் வேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். நான் தேடித்தருவதாக அவர்களுக்கு வாக்களித்திருக்கிறேன். தங்களுக்கு வேண்டியனவாகச் சொன்ன புஸ்தகங்களையே அவரும் கேட்டிருக்கிறார். அதனால் தங்களுக்கு உதவி செய்ய இயலாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பக்கங்களில் வந்து தேடிச் சிரமப்படவேண்டாம்."

இதைப்படித்துப் பார்த்தேன்; முதலியாரை நோக்கி, "மெத்த ஸந்தோஷம். நீங்கள் உதவி செய்வதாகச் சொல்லியிருந்தமையால்

உங்களைத்தேடி வந்தேன். தங்களுக்கு என்னைப்பற்றிய கவலை வேண்டாம். இந்தப் பக்கங்களிற் பல பிரபுக்களையும் வித்துவான்களையும் நான் நன்கு அறிவேன். அவர்கள் மிக்க அன்போடு எனக்கு உதவி செய்வார்கள். ஆதலினால் நான் போய்வருகிறேன்" என்றேன்.

முதலியார், நான் மிகவருத்தப்படுவேனென்று நினைத்திருப்பார் போலும்! எனது விடை அவருடைய முகத்தில் ஒரு வியப்புக் குறிப்பை உண்டாக்கியது: "அப்படியா! உங்களுக்கு யார் யார் நண்பர்கள்? எந்த எந்த ஊர்களுக்குப் போகப் போகிறீர்கள்?" என்று அவர் கேட்டார்.

நான், "இந்தப் பக்கத்திற் பலபெரிய கனவான்களுடைய ஆதரவு எனக்குக் கிடைக்கும். பல ஜமீன்தார்களுடைய பழக்கம் எனக்கு உண்டு. ஆழ்வார்திருநகரி, ஸ்ரீவைகுண்டம், தென்திருப்பேரை முதலிய இடங்களுக்கெல்லாம் போய்த் தேட எண்ணியிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு மெய்யன்பர்களாகிய பல உத்தியோகஸ்தர்கள் பெயர்களையும் கனவான்கள் பெயர்களையும் சொன்னேன். நான் குறிப்பிட்டவர்களெல்லாம் அவர் அதிகாரத்திற்குப் புறம்பான வேலைகளிலுள்ளவர்கள்.

கேட்ட முதலியார், "அப்படியானால், கிடைக்கும் புஸ்தகங்களில் எனக்கும் ஏதாவது கொடுத்தால் தாமோதரம் பிள்ளையவர்களுக்கு அனுப்புவேன்" என்றார்.

நான் நகைத்துக் கொண்டே, "நானே பறந்து கொண்டிருக்கிறேன். இந்த நிலையில் உங்களுக்கு வேறு கொடுக்க வேண்டுமோ? நீங்கள் பெரிய உத்தியோகத்தில் இருப்பவர்கள். உங்களுடைய செல்வாக்குக்கு எவ்வளவோ சுவடிகள் கிடைக்கலாம்" என்று சொல்லி விடைபெற்று வந்துவிட்டேன்.

பிறகு கைலாஸபுரத்தில் இருந்த வக்கீலும் ஜனோபகாரியுமாகிய அன்பர் ஸ்ரீ ஏ. கிருஷ்ணசாமி ஐயரென்பவரது வீடுசென்றேன். அவர் மிக்க அன்போடு, "தாங்கள் வருவதை முன்பே தெரிவிக்கக் கூடாதா?" என்று சொல்லி உபசரித்து உணவு முதலிய சௌகரியங்களைச் செய்வித்தார். நான் ஆழ்வார்திருநகரிக்குப் போய் அங்கேயுள்ள கவிராயர் வீடுகளில் ஏடு தேடுதற்கு வந்த என் கருத்தை அவரிடம் தெரிவித்தேன். அவர், "தாங்கள் சிறிதும் கவலைப்படவேண்டாம். என்னுடைய நண்பரும் வக்கீலுமாகிய சுப்பராய முதலியாரென்பவர் ஸ்ரீவைகுண்டத்தில் இருக்கிறார். அவருக்கு ஒரு கடிதம் தருகிறேன். அவர் தங்களுக்கு வேண்டிய சௌகரியங்களையெல்லாம் செய்து கொடுப்பார்" என்று கூறினர். பிறகு ஸ்ரீவைகுண்டத்திற்கு ஒருவண்டி ஏற்பாடு செய்து கொடுத்துதவி என்னை அனுப்பினர்.

ஸ்ரீவைகுண்டம் போய்ச் சேர்ந்து ஸ்ரீசுப்பராய முதலியாரைக் கண்டேன். அவர் மிக்க அன்போடு உபசரித்துப் பேசினார்; தம்மால் இயன்ற உதவிகளையெல்லாம் செய்வதாக வாக்களித்தார். பிறகு அவருடன் அங்கிருந்து அருகிலுள்ள ஆழ்வார்திருநகரிக்குச் சென்றேன். நான் கடிதம் எழுதியிருந்த அன்பர்கள் என் வரவை எதிர்பார்த்திருந்தனர். திருவாவடுதுறை மடாதிபதிகளாகிய ஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்களும் அவ்வூர் மடத்திலிருந்த தங்கள் காரியஸ்தருக்கு உத்தரவு செய்திருந்தார்கள். அவர்கள் யாவரும் முயன்று கவிராயர்கள் வீட்டிலுள்ள சுவடிகளை யெடுத்து நான் வந்தவுடன் பார்க்கத்தக்க நிலையில் வைத்திருந்தனர்.

நான் முதலில் லக்ஷ்மண கவிராயரென்ற ஒருவருடைய வீட்டிற்குப் போனேன். அவர் மிகச் சிறந்த வித்துவானாகிய தீராத வினைதீர்த்த திருமேனி கவிராயரென்பவருடைய பரம்பரையினர். அவர் வீட்டில் ஆயிரக்கணக்கான சுவடிகள் இருந்தன. பல பழைய நூல்களும், இலக்கணங்களும், பிரபந்தங்களும், புராணங்களும் இருந்தன. எல்லாவற்றையும் பிரித்துப் பிரித்துப் பார்த்து வந்தேன். நான் தேடிக்கொண்டிருந்த பத்துப்பாட்டு கிடைக்கவில்லை. ஒரு சுவடியில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட சுவடிகளின் ‘ஜாப்தா’ இருந்தது. அதிற்கண்டவற்றுள் பத்துப்பாட்டின் முதல் ஏழு பாடல்களுள்ள பிரதியும் ஒன்று. அப்பொழுது, ஊரை விட்டுப் புறப்பட்டதுமுதல் அநுகூலமான செய்தியொன்றையும் பெறுமல் தளர்ச்சியடைந்திருந்த என்மனத்தில் சிறிது ஊக்கம் பிறந்தது. அந்தச் சுவடிக் குவியல்களிலே பத்துப்பாட்டு அகப்படக் கூடுமென்றே நம்பினேன்.

மூன்று நாட்கள் ஆழ்வார் திருநகரியில் இருந்தேன். வந்த முதல்நாள் ஆவணியவிட்டம். ஸ்ரீவைகுண்டத்தில் இருந்த பள்ளிக்கூட ‘இன்ஸ்பெக்டரு’ம் என் நண்பருமாகிய சிவராமையரென்பவருடைய வீட்டில் தங்கியிருந்தேன். ஒவ்வொருநாளும் லக்ஷ்மண கவிராயர் வீட்டில் ஏடு பார்ப்பதும், இடையிலே சிலசமயங்களில் தாயவலந்தீர்த்த கவிராயர், அமிர்த கவிராயர் முதலிய வேறு கவிராயர்கள் வீடுகளிலுள்ளவற்றைப் பார்ப்பதும் என்னுடைய வேலைகளாக இருந்தன. முப்பது கவிராயர்கள் வீடுகளில் தேடினேன். லக்ஷ்மண கவிராயர் வீட்டிலுள்ள ஏடுகளெல்லாவற்றையும் பார்த்தேன். பத்துப்பாட்டு அகப்படவில்லை. இது நான் புறப்பட்ட காலத்துச் சகுனங்களின் பயன் என்றெண்ணி வருந்தினேன். என் உள்ளம் சோர்ந்தது.

அப்பொழுது லக்ஷ்மண கவிராயர், “எங்கள் வீட்டில் அளவற்ற ஏடுகள் இருந்தன. எங்கள் முன்னோர்களில் ஒருதலைமுறையில்

மூன்று சகோதரர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் இறந்து விட்டனர். அவருடைய மனைவியாரின் பிறந்தகம் தச்சநல்லூர். தம் புருஷர் இறந்தவுடன் அவர்கள் தச்சநல்லூர் சென்றுவிட்டார்கள். போகும்போது இங்கிருந்த சுவடிகளையெல்லாம் பாகம் பண்ணி மூன்றில் ஒருபகுதியை எடுத்துக்கொண்டு போய்விட்டார்களாம்'' என்றார். "பத்துப் பாட்டும் அந்தச் சுவடிகளோடு தச்சநல்லூருக்குப் போயிருக்கவேண்டும். சரி; இவ்வளவு சிரமப்பட்டும் பயனில்லாமற் போயிற்றே!'' என்று வருந்தி நான் கூறினேன்.

அவர் திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டு, "ஒரு விஷயம்: மறந்துவிட்டேன்; இவ்வூரில் என்னுடைய மாமனார் இருக்கிறார். தேவர்பிரான்பிள்ளை யென்பது அவர் பெயர். அவருக்கும் எனக்கும் இப்பொழுது மனக்கலப்பில்லை. என்னுடைய வீட்டிலிருந்த வேலைக்காரன் ஒருவன் சில சுவடிகளைக் கொண்டு போய் அவரிடம் கொடுத்துவிட்டான். அவரிடம் நீங்கள் தேடும் புஸ்தகம் இருக்கிறதாவென்று பார்க்கச்செய்யலாம். ஆனால் நான் அவரோடு பழகுவதை விட்டுவிட்டேன்'' என்றார்.

"அவற்றையும் பார்ப்போம். தாங்கள் மட்டும் தயை செய்ய வேண்டும். எனக்காகவும் தமிழுக்காகவும் மனஸ்தாபத்தை மறந்து தாங்கள் அவர் வீட்டில் இருப்பவற்றை வாங்கித் தரவேண்டும்; என்னை வரச்சொன்னாலும் உடன்வருவேன்'' என்று நான் அவரைக் கேட்டுக்கொண்டேன்; அருகிலுள்ளவர்களும் சொன்னார்கள். கவிராயர் அங்ஙனமே செய்வதாக ஒப்புக்கொண்டார்.

ஏடுகளைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கையும் மனமும் சோர்ந்து, அவ்வூரில் ஸப்ரிஜிஸ்த்ராராக இருந்த இராமசாமி ஐயரென்பவர் வீட்டுக்குப் போனேன். இரவு அவர் வீட்டிற் போஜனம் செய்துவிட்டுத் திண்ணையில் உட்கார்ந்தேன். அவ்வூரிலுள்ள சில ஸ்ரீவைஷ்ணவப் பெரியார்கள் என் விருப்பப்படி திவ்யப் பிரபந்தத்திலுள்ள சில பாசுரங்களின் பழைய வியாக்கியானங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நான் மிக்க விருப்பத்துடன் கேட்டு மகிழ்ந்தேன். இயல்பாகவே அவ்வியாக்கியானங்களைக் கேட்டு அடையும் முழுமகிழ்ச்சியும் எனக்கு அப்பொழுது உண்டாகவில்லை. அதற்குக் காரணம் அவற்றைச் சொன்னவர்களது குறையன்று; என் உள்ளத்துக்குள்ளேயிருந்த, 'பத்துப்பாட்டு அகப்படவில்லையே!' என்ற குறையே.

இங்ஙனம் இருக்கையில், அன்று ஏதோ விசேஷமாதலின், திருவீதியில் பெருமாளும் சடகோபாழ்வாரும் எழுந்தருளினர்கள். ஆழ்வார் அவதரித்த திவ்யதேசம் அவ்வூரென்று நான் சொல்வது மிகை. நானும் பிறரும் எழுந்து தரிசனம் செய்தோம். நான்

வணங்கினேன். பட்டர்கள் சந்தனம், புஷ்பமாலை முதலியவற்றை அளித்தார்கள். எல்லோருடைய அன்பும் ஒருமுகப்பட்டு அத்தகைய மரியாதைகளை நான் பெறும்படி செய்தது. அப்பொழுது நம்மாழ்வார் திருக்கோலத்தைத் தரிசித்தேன்; அவரைப் பார்த்து, "ஸ்வாமீ! வேதம் தமிழ்செய்தவரென்று தேவரீரைப் பாராட்டுகின்றார்கள். தேவரீருடைய ஊருக்குத் தமிழ்நூலொன்றைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறேன். தமிழுக்குப் பெருமையருளும் தேவரீருக்கு, நான் பட்ட சிரமம் தெரியாததன்றே! நான் தேடி வந்தது கிடைக்கும்படி கருணைசெய்யாமல் இருப்பது நியாயமா!" என்று சொல்லிப் பிரார்த்தித்தேன். உள்ளம் அயர்ந்துபோய் 'இனிமேல் செய்வது ஒன்றும் இல்லை' என்ற முடிவிற்கு வந்தமையினால் இங்ஙனம் பிரார்த்தனை செய்தேன்.

பெருமாளும் ஆழ்வாரும் அவ்விடத்தைக் கடந்து அப்பால் எழுந்தருளினார்கள். நாங்களும் திண்ணையில் வந்து உட்கார்ந்தோம். நிலா ஒளி நன்றாக வீசியது. அப்பொழுது லக்ஷ்மண கவிராயர் எதையோ தம் மேல் ஆடையால் மறைத்துக்கொண்டு மிகவேகமாக எங்களைநோக்கி வந்தார். திருக்கோயிலில் பிரஸாதங்களைப் பெற்று அவற்றை மறைத்துக்கொண்டு வருகிறாரென்று நான் நினைத்தேன். வந்தவர், "இந்தப்புஸ்தகத்தைப் பாருங்கள்; இந்த ஒன்றுதான் என் மாமனாரிடம் இருக்கிறது; பார்த்துவிட்டுத் திருப்பியனுப்பிவிடுவதாகச் சொல்லி வாங்கிவந்தேன்" என்றுகூறி மேல் வஸ்திரத்தால் மூடியிருந்த சுவடியை எடுத்தார். அவர் என்னிடம் கொடுப்பதற்கு முன்பே ஆத்திரத்தால் நான் அதனைப் பிடுங்கினேன்; மேலே கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து அந்த நிலாவின் ஒளியிலேயே பிரித்தேன். சட்டென்று முல்லைப் பாட்டு என்ற பெயர் என் கண்ணிற் பட்டது. நிலாவில் மலர்ந்த அம்*முல்லையினால் என் உள்ளம் மலர்ந்தது. எனக்கு உண்டான சந்தோஷத்திற்கு எல்லையில்லை. மிகவிரைவாக முதலிலிருந்து திருப்பித்திருப்பிப் பார்த்தேன். முதலில் திருமுருகாற்றுப்படை, அப்பால் பொருநராற்றுப்படை, அதன்பின் சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை—இப்படி நெடுநல்வாடை முடிய ஏழுபாட்டுக்கள் இருந்தன. ஒவ்வோர் ஏட்டையும் புரட்டிப் புரட்டிப் பார்க்கையில் என்னையே மறந்துவிட்டேன். சந்தோஷ மிகுதியினால் அப்பொழுது என் வாயிலிருந்துவந்த வார்த்தைகள் அருகிலிருந்தவர்களுக்குப் பொருள்பட்டிரா. அந்தச் சமயத்தில் மட்டும் என்னை யாரேனும் புதிதாகப் பார்த்திருந்தால் எனக்குப்

*பத்துப்பாட்டில் ஐந்தாவதாகிய முல்லைப்பாட்டு, முல்லையெனவும் வழங்கப் பெறும்.

பைத்தியம் பிடித்திருப்பதாகவே கருதியிருப்பார்; என்னுடைய மனஉணர்ச்சி அவ்வளவு தீவிரமாக இருந்தது.

"ஆழ்வாரைப் பிரார்த்தித்தது வீண்போகவில்லை. அவர் கண்கண்ட தெய்வமென்பதில் ஐயமேயில்லை" என்று அருகில் இருந்தவர்களிடம் கூறினேன். அன்று இரவுமுழுவதும் சந்தோஷ மிகுதியினால் எனக்குத் தூக்கமே வரவில்லை. மறுநாட் காலையில் திருக்கோயிலுக்குச் சென்று பெருமாளையும் ஆழ்வாரையும் தரிசித்து அர்ச்சனை செய்வித்து, "இப்படியே நான் நினைத்த காரியங்களுக்கெல்லாம் அநுகூலம் செய்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்துவிட்டு வந்தேன்.

அப்பால், ஊற்றுமலை ஜமீன்தாராகிய ஹ்ருதயாலய மருதப்பத் தேவருக்குக் கொடுக்கும்பொருட்டு உயர்ந்த 'பைண்டு' செய்து ஊரிலிருந்து கொண்டு போயிருந்த சீவக சிந்தாமணிப் புஸ்தகத்தையும் வேறு சிலபுஸ்தகங்களையும் லக்ஷ்மண கவிராயருக்குக்கொடுத்தேன். அங்கே கிடைத்த *ஐங்குறுநூற்றின் பழைய உரையுள்ள குறை ஏட்டுப்பிரதி ஒன்றையும், பதிற்றுப்பத்து, புறப்பொருள் வெண்பாமாலையாகிய இரண்டையும் பத்துப்பாட்டோடு கைக்கொண்டு, யாவரிடமும் விடைபெற்று, வேறு சில ஊர்களிலுள்ள கவிராயர் வீடுகளிலிருந்த ஏடுகளையும் பார்த்துக்கொண்டு திருநெல்வேலி சென்றேன்.

அங்கே கனகஸபை முதலியாரைக் கண்டேன். அவர், "எங்கெங்கே போயிருந்தீர்கள்? யார் யார் உதவிசெய்தார்? ஏதாவது கிடைத்ததா?" என்று விசாரித்தார். நான் எனக்கு உதவி செய்த அன்பர்களையும் கிடைத்த சுவடிகளையும் தெரிவித்தேன். அவர், "எனக்கு ஏதாவது தந்தால் தாமோதரம் பிள்ளைக்கு அனுப்புவேன்" என்றார். "தேடாத இடமெல்லாந்தேடி, அலையாத அலைச்சலெல்லாம் பட்டுப் பெற்றவைகளை உங்களுக்கு நான் எப்படித் தருவேன்? நீங்கள் சிரமப்படாமல் பிறருடைய சிரமத்தில் லாபம் பெறுவது நியாயமா?" என்று சொன்னேன். அவர், மேலே ஒன்றும் பேசவில்லை. நான் கும்பகோணம் வந்து சேர்ந்தேன்.

நிலவில் மலர்ந்த முல்லையையுடைய அப்பிரதியிலும் ஏழு பாட்டுக்களின் உரைமாத்திரம் இருந்தது; ஆனால் திருத்தமுள்ளதாகக் காணப்பட்டது. நான் ஏடுகளைத் தேடிப் பட்ட சிரமத்தைப்பற்றிய வரலாறுகள் மிகப் பல. அதில் இந்த நிகழ்ச்சி ஒன்றென்பதை மட்டும் இங்கே அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

---

* இந்தப் பிரதிதான் ஐங்குறுநூற்றை நான் பதிப்பிப்பதற்கு ஆதாரமாக இருந்தது.

# இலக்கியம்



## தமிழ் எழுத்துக்களின் குறையும் உச்சரிப்பு முறையும்

சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியார்

---

தமிழ் எழுத்துக்குறிகள் மிகவும் குறைப்பட்டனவென்பது அன்னியர்களுடைய அபிப்பிராயம். இதற்குக் காரணம் க, ச, ட, த, ப, இவ் வைந்து எழுத்துக்குறிகளும் முறையே, **क ख ग घ ह; च छ ज झ श स; ट ठ ड ढ; त थ द ध; प फ ब भ;** இந்த இருபத்திமூன்று வடமொழி எழுத்துக்களுக்கும் பதிலாக நிற்பதால், என்பார்கள். மலையாளம், தெலுங்கு, கன்னடம், இந்தத் திராவிடபாஷைகளில் இவ் விருபத்திமூன்று எழுத்துக்களுக்கு இருபத்திமூன்று குறிகள் வழங்குகின்றன. தமிழில்,

க என்பது **क, ग, ह** என்ற மூன்று உச்சரிப்புக்களையும் குறிக்கும்.

ச என்பது **श, च, ज,** என்ற மூன்று சப்தங்களுக்கும் நிற்கும்.

ட என்பது **ड, ट** என்ற இரண்டு வகை உச்சரிப்பும் கொள்ளும்.

த என்பது **द, त** என்று இரண்டு வகையாகவும் உச்சரிக்கப்படும்.

ப என்பது **प, ब** என்ற இரண்டு எழுத்துக்களுக்கும் ஒரு குறியாகும்.

ஆக இந்த ஐந்து எழுத்துக்கள் பன்னிரண்டு உச்சரிப்புக் கொள்ளும்.

மற்ற 11 உச்சரிப்புக்கள் தமிழில் கிடையாது. தமிழில் இராத உச்சரிப்புக்களுக்குத் தமிழில் குறிப்புகள் இல்லாதது ஒரு

குறையாகாது. ஒப்புக்கொள்ளப்பட்ட குறையை மட்டில் ஆராய்வோம். உண்மையில், சரியாய் ஆராய்ந்துபார்த்தால், இந்தக்குறை குறுகிக்குறுகி முற்றிலும் விதிக்குட்பட்டுப் போவதைக் காண்போம். எவ்வாறெனின்,

க என்பது மொழியின் முதலெழுத்தாக வந்தால்தான் க உச்சரிப்பு. மொழியின் இடையிலோ, ஈற்றிலோ வந்தால் ह உச்சரிப்புக்கொள்ளும். களவு, கொடுமை, காடு, கிளி, குதிரை; பகுதி, தகுதி, விகுதி, வகை, ஆகாரம், அதிகம், ஆகும், வருக, முதலியவாறு. மெல்லின எழுத்துடன் சேர்ந்து வந்தால் ग உச்சரிப்புக் கொள்ளும்; பங்கு, தங்கம், வாங்கலாம், முதலியவாறு. க இரட்டித்தால் வல்லின ஓசைபெறும்; பக்கம், அக்கா, தக்கவன்.

ச என்பது மொழியின் முதலிலும், இடையிலும், ஈற்றிலும் श உச்சரிப்புத்தான் கொள்ளும்; செவ்வாய், சுவை, சும்மா, சாதல், பசி, மாசு, கொசு, தசை, ஆசான், முதலியவாறு.

இரட்டித்தால்தான் வல்லோசை च பெறும்; அச்சம், பச்சை, தச்சன், கச்சை, அச்சு, பிச்சை, முதலியவாறு. மெல்லினத்துடன் வந்தால் ज ஓசை பெறும்; பஞ்சம், பஞ்சு, தஞ்சை, முதலியவாறு.

ட என்பது ड உச்சரிப்பு தான். ट என்பது இரட்டித்தால் தான் வரும்; கட்டு, பட்டை, கட்டை, கட்டில், மட்டு. இடு, ஆடு, ஓடு, கடை, வடக்கு, தடை, முதலியவைகளில் ட என்பது ड உச்சரிப்பே. மெல்லினத்துடன் ड என்றாகும் என்பது சொல்லாமலே விளங்கும்; பண்டம், வண்டி, கூண்டு, முதலியன.

த என்பது மொழியின் முதலில் त உச்சரிப்பு; இடையிலும் இறுதியிலும் द உச்சரிப்பு.

தகப்பன், தாய், தித்திப்பு, தோல், துவையல், தையல்.

அது, இது, பொது, பாதி, பகுதி, காதம், கதை, மாதம், காதல். இரட்டித்தால் त உச்சரிப்பு பெறும்; மெத்தை, கத்து, வாத்து, அத்தி, முதலியவாறு.

மெல்லினத்துடன் வரின் द உச்சரிப்பு; வந்து, கந்தல், கூந்தல், மந்தி.

ப என்பது மொழியின் முதலில் प உச்சரிப்பு; பாலம், பசு, பொது, பூட்டு. இரட்டித்தாலும் प உச்சரிப்பு; அப்பம், கப்பல், தித்திப்பு, அப்போது, முதலியவாறு. இரட்டிக்காமல் இடையி

லும், ஈற்றிலும், மெல்லினத்துடனும் வந்தால் ब உச்சரிப்பு; கம்பம், வம்பு, அம்பு, செம்பு, உருபு, மரபு, திரிபு, மார்பு.

றகர ஒற்றுக்குப் பின் வரும் வல்லின எழுத்தை இரட்டித்த தாகவே வைத்துக்கொள்ளவேண்டும்; ஆகையால், அது வல்லோசை பெறும். ஆகவே, பொதுவாக, வல்லின எழுத்துக்கள் மொழியின் முதலிலும், றகர ஒற்றுக்குப்பின் அல்லது இரட்டிக்கும்போதுமே வல்லோசை பெறும். மற்ற இடங்களில் உண்மையான வல்லின ஓசை பெறாது.. இடையிலும், ஈற்றிலும் க என்பது ஹ ஆகும். ச என்பது ஶ என்ற எழுத்தேயாகும். றகரத்திற்குப் பின் அல்லது இரட்டித்தால்தான் च ஆகும். ட என்பது ड எழுத்தேயாகும். இரட்டித்தால்தான் ट ஆகும்.

மெல்லினத்திற்கு அடுத்தாப்போல் எல்லா வல்லின எழுத்துக் களும் முறையே ग, ज, ड, द, ब ஆகும்.

வடமொழிச் சொற்களைத் தமிழில் கொள்ளும்போது அவை களின் சமுஸ்கிருத உச்சரிப்பே வைத்துச்சொல்லவேண்டும் என் பது கூடாது. அது தமிழ்முறையாகாது. பண்டித மணிப்பிரவாள மாகும். வருஷம் என்றுதான் தமிழில் சொல்ல வேண்டும்; வர்ஷம் என்பது தமிழல்ல. மாதம் என்று சொல்லுவதுதான் சரி; மாஸம் என்பது சுத்த சமுஸ்கிருதமேயாகும்; தமிழாகாது. அவ்வாறே, துவேஷம், மாமிசம், சீதை, அருச்சுனன் முதலியன. புராதனமாகத் தமிழில் வழங்கும் வடமொழிச்சொற்களுக்குத் தமிழ் உச்சரிப்புக் கொடுத்துச்சொல்லுவதே முறையாகும். த்வேஷம், மாம்ஸம், ஸீதா, அர்ஜுனன் என்பவை தமிழல்ல. மேலே நான் குறிப்பிட்ட விதிகள் தமிழில் கலந்த வடமொழிச்சொற்களுக்கும் பொருந்தும். சீதை என்பதைத் தமிழில் शीतै என்றுதான் சொல்லுவார்கள். सीता அல்லது सीतै என்பது தமிழர் முறையாகாது. அவ்வாறே கதை 'कतै' என்பதும் சுத்த சமுஸ்கிருத முறை. कदै என்பது தான் தமிழ்முறை. 'அதை', 'கதை', 'விதை', 'மதி' 'அன்னை யும் பிதாவும்', இவைகளிலெல்லாம் தமிழர் த என்பதை द வாகத்தான் உச்சரிப்பார்கள். அவ்வாறு உச்சரிப்பது தமிழ்முறை யில் சரியேயாகும்.

தாகம், தசரதன், தமயந்தி, துரோணன் என்பவையில் மொழிமுதலில் நிற்கும் தகரத்தைத் தமிழர் त ஆகவே உச்சரிப் பார்கள்; அவ்வாறு உச்சரிப்பதும் சரியேயாகும். द என்று உச் சரிப்பது வடமொழி வழக்காகும். தமிழில் நன்றாகப்பதியாத வடமொழிச்சொற்களின் உச்சரிப்பு சமுஸ்கிருதத்தை ஒட்டியே

நிற்கும். அச்சொற்களுக்கு மேற்குறித்த விதிகள் பொருந்தா. ஆகவே, தமிழில் உள்ள உயிரெழுத்துக்களும், மெல்லின இடையின எழுத்துக்களும், குறைவின்றி இருக்கின்றன. வல்லின எழுத்துக்கள் மேற்கண்டவாறு சில விதிகளுக்குட்பட்டு, மாறுபாடு இல்லாமல் இடத்தை யனுசரித்து உச்சரிக்கப்படுவதால்*, அவ்வகையிலும் கூறப்படும் குறையானது உண்மையில் குறையாகாது.

தமிழ்மொழிகளுக்கும் தமிழருக்குமே தமிழ் எழுத்துக்குறிகள் உண்டாக்கப்பட்டவை. பிறபாஷைகளைத் தமிழ் எழுத்தைக் கொண்டு எழுதப்புகின் பல குறைகள் தோன்றும். அதைக் கொண்டு தமிழ் எழுத்துக்களை நாம் குறை கூறுவதோ இகழ்வதோ கூடாது.

---

* சென்னை கல்விக்கழகத்தார் ஆதரவில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் தமிழ் அகராதியில், தமிழ்மொழிகளுக்கெதிராகக் கொடுக்கப்பட்டிருக்கும் 'ரோமன்' உச்சரிப்புக்குறிகளில், க, ச, ட, த, ப, எழுத்துக்களை ஒரேமாதிரியாக எல்லாமொழிகளிலும் எல்லா ஸ்தானத்திலும் (क, च, ट, त, प,) *k, ch, ṭ, t, p* என்று காட்டப்பட்டிருப்பதின் பொருள் எனக்கு விளங்கவில்லை. அவ்வாறுதான் தமிழர்கள் உச்சரிக்கிறார்கள், அல்லது உச்சரிக்கவேண்டும், என்று அகராதி ஆசிரியர்களின் எண்ணம் என்று வைத்துக்கொள்ளுவது சுத்த அசம்பாவிதமாகும். 'அது' என்பதை *atu* (अतु), 'இடு' என்பதை *iṭu* (इटु), 'கொடு' என்பதை *koṭu* (कोटु) என்று அகராதியில் காட்டியிருக்கிறபடி யாராவது தமிழர் உச்சரிக்கிறார்களா, உச்சரிக்கச் சம்மதிப்பார்களா? இவ்வகராதியில் தமிழ்மொழிகளுடன் கலந்த மலையாளம், கன்னடம், இம்மொழிகளைச் சரியான முறையில் *Kadu, Kodu* என்று காட்டி, தமிழ்மொழிகளை மட்டும் இவ்வாறு தவறான உச்சரிப்புகளைக்காட்டி 'ரோமன்' எழுத்துக்களில் எழுதியிருப்பதின் நோக்கமும் பயனும் விளங்கவேயில்லை. தமிழ் அறியாதவர்களுக்காக 'ரோமன்' எழுத்துக்களில் மொழியைக்காட்டியிருக்கிறது. அவ்வாறு தமிழ் அறியாதவர்களுக்குச் சரியான தமிழ் உச்சரிப்பல்லவோ கொடுக்கவேண்டும். அதற்குப்பதில் *atu* (அது), *itu* (இது), *vantu* (வந்து), *pokutal* (போகுதல்), *aimpatu* (ஐம்பது), *eppaṭi* (எப்படி), *inta* (இந்த), *aṭippaṭutal* (அடிப்படுதல்), என்றெல்லாம் காட்டியதின் தத்துவம் என்ன ?

# 'அபஸ்வரம்'

எஸ். ஜி. எஸ்.

---

இங்கிலாந்தில் வாடகைக்கு விடுவதற்கென்றே யெண்ணி 50, 100 வீடுகளை ஒரு கும்பலாகக் கட்டுவதுண்டு. அவைகளுக்கு டெனெமெண்ட் (*Tenement*) வீடுகள் என்று பெயர். கட்டுபவனுடைய முக்கிய எண்ணம் செலவைச் சுருக்குவதே. ஒவ்வொரு வீட்டின் இருபக்கத்துச் சுவர்களும் பெயருக்குத்தான் சுவர்கள். இரண்டு அங்குல கனத்தில் மரப் பிளாச்சுக்களும் சுண்ணும்புமாகக் கட்டப்பட்டு, அவைகள் நிற்பதுகூடத் தங்களுடைய சொந்த பலத்திஞலல்ல, கட்டுபவனுடைய மனோ பலத்திஞல்தான் என்று சொல்லக்கூடும். அதனுல் ஒரு வீட்டில் பேசுவது முழுவதும் அடுத்த வீட்டில் கேட்கும். ஆகவே இவ்வித வீட்டிலிருப்பவனுக்குப் பக்கத்து வீட்டுக்காரனுடைய யோக க்ஷேமங்களும் காலக்ஷேபங்களும் அநேகமாய் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

இந்த விசேஷத்தைப் பரிகசித்து 1935-ஆம் ஹு மேஸ்ரீ 4-ஆம் தேதியின் 'ஹ்யூமரிஸ்ட்' (*Humorist*) எனும் ஆங்கிலப் பத்திரிகையில், ஒருவர் தம்முடைய அடுத்த வீட்டுக்காரனுக்குத் தான் எழுதும் பகிரங்கக்கடிதரூபமாக ஒரு வியாசம் எழுதியிருக்கிருர். அதில் அவனுக்குத் தெரிவிக்கிருர்:—"உம்முடைய சம்சாரத்தை நீர் எவ்வளவு சாதுர்யமாகப் பேச்சால் ஆளுகிறீர் என்பது எனக்கு ஆச்சர்யத்தை உண்டாக்குகிறது. கிராமபோன் ரிகார்டுகளில் எவையெல்லாம் உமக்கு அபீஷ்டம் என்பதை நான் நன்கு அறிவேன். உம்மைக் காணவரும் சிநேகிதர்கள் ராஜாங்க நீதியைப்பற்றி எந்த எந்த அபிப்பிராயங்களை மனசில் வளர்க்கிருர்கள் என்பதைக் கேட்க, நான் அர்த்தராத்திரிவரையில் விழித்திருக்கலானேன்." இவ்விதமெல்லாம் எழுதி நடுச்சுவரின் இரண்டங்குல அமைப்பைப்பற்றி மேலும் பரிகசித்து முடிக்கிருர்: "நீர் உம்முடைய வீட்டில் படம் மாட்டுவதற்காகச் சுவரில் அடிக்கும் ஆணிகள் என்னுடைய பக்கத்தில் நுனியை நீட்டுகின்றன. ஆனுல் நான் அடிக்கும் ஆணிகளும் இவ்விதமே உம்முடைய பக்கத்தை எட்டிப்பார்க்குமென்பதற்குச் சம்சயமில்லை. ஆகையால் நாம் இருவரும் ஒத்துப்பேசி இருவருக்கும் சௌகரியப்

பட்ட இடங்களில் ஆணிகளை அடித்துவிட்டால், உம்முடைய பக்கத்தில் நீரும், என்னுடைய பக்கத்தில் நானுமாக அதே ஆணிகளின் மேலேயே, இருவரும் தத்தம் படங்களை மாட்டிக் கொள்ளலாம்.''

இவ்விதம் இவர் பாடும் ராகமெல்லாம் மத்திச்சுவர் இத்துணை மெல்லியதாயிருப்பதொன்றே.

இதே ராகத்தில் நம்முடைய சிறந்த தமிழ் பத்திரிகைகளி லொன்றில் சமீபகாலத்தில் (இவ்வருஷம் ஏப்ரில்ீ 26-ஆம் வ சஞ்சிகையில்) ஒருவர் வெகு ரசமாக எழுதியிருக்கிறார். அவருடைய வியாசமும், தமது பக்கத்து வீட்டுக்காரனுக்கு ஒரு வன் எழுதும் பகிரங்கக்கடிதம் என்கிற நடையையே தழுவியது. அதிலும் மேற்சொன்ன மாதிரி அநேக ஹாஸ்ய விஷயங்கள் வெகு சாதுர்யமாக எழுதியிருப்பதை வாசிக்கலாம். அதிலும், ஒரு பக்கத்திலிருந்து அடிக்கும் ஆணி மற்றொரு பக்கம் புறப்படு வதைப்பற்றியும், இருபக்கமும் படங்கள் மாட்டலாம் என்பதும் எழுதியிருக்கிறது. ஆகவே இதுவும் அதே ராகந்தான். ஆனால் இதனுடைய ஆசிரியர் ஆரம்பத்தில் சொல்லுகிறார்:—“முன்பின் தெரியாத தங்களுடன் நான் ஏன் பேசவிரும்பவேண்டும் என்று நீங்கள் கேட்கலாம்........ தங்களுக்கும் எனக்கும் மத்தியில் குறுக்கே நிற்பது இரண்டடிச் சுவர்தான்.''

இரண்டு அடிச்சுவரா? அப்படியானால் இந்தக் கடிதம் எழுது வானேன்? எழுதினவருக்கு என்ன குறை? உலகமெல்லாம், சாதாரணமாக, ஓரடி, ஒன்றேகாலடி கனமுள்ள நடுச்சுவரை வைத்துக்கொண்டுதானே வசித்து வருகிறார்கள்! இரண்டடிச் சுவர் இருந்தால், அப்புறம் இருந்து கத்துவதுகூட இப்புறம் காது கேட்காதே! இரண்டடிச் சுவரைப் பிளந்துகொண்டு வருகிற இரண்டே காலடி நீளமுள்ள ஆணியை நாம் எங்கே காணலாம்?

யானைக்கும் அடிசறுக்கும் என்பதுபோல் இது ஒரு கைத் தவறுதலோவென்று எண்ணவேண்டாம். ஆங்கில தேசத்து “டெனேமெண்ட்'' வீடுகள் மாதிரியில் இரண்டு அங்குலச்சுவர் என்று எழுதினால் சாதாரணத் தமிழருக்கு அது சரியாகத் தோன்றாதே என்றுதான் அவர் சுவருக்கு இரண்டடி கனத்தைக் கொடுத்தார். ஆனால் அதன் பலன் என்ன? ராகம் முழுவதும் அந்த இடத்தில் மாறிற்று. ‘ஹ்யூமரிஸ்டி’ல் எழுதினவர், அவ்விதம் இரண்டங்குலச் சுவருடன் கட்டின வீட்டில் குடியிருப்பவர்களுக்கு சௌகரியங்கள் உண்டாகிறதே என்று எழுதினார். அந்த மாதிரி சௌகரியங்களை எல்லாம் (சுவரைக்காட்டிலும் பெரிதான ஆணி

உள்பட) நம்முடைய ஆசிரியர் இரண்டடிச் சுவருள்ள குற்ற மற்ற வீட்டில் ஏற்பட்டதாக வாசிப்பவரை எண்ணச் சொன்னால் எவ்விதம் எண்ணமுடியும்?

ஆகவே, இந்த ஒரு விஷயத்தில் ஓர் "அபஸ்வரம்" நேரிட்டு விட்டது.

சங்கீதத்தில் ஸ்வரம் எவ்விதமோ, அவ்விதம், எந்தக் கலையிலும் பிரதானமான ஒரு விஷயத்தில் அக்கலையின் நிபந்தனைகளுக்கு விரோதமாகச் சென்று, பாவத்தைத் தலைகீழாகக் கவிழ்க்கும் பிழையைக் குறிப்பிட, "அபஸ்வரம்" என்ற வார்த்தையையே கடன் வாங்கிக்கொள்வோம்.

நம்மிடையில் சங்கீதத்தில் முன்னிற்கும் வித்வான்களின் கிருபையால், அக்கலையில் ஆசைப்பட்டவர்களுக்கு, ஞானம் பரவிக்கொண்டிருக்கிறது விசேஷ ஞானம் இல்லாதவர்கள்கூட அபஸ்வரமாகப் பாடக்கூடாது என்பதை மறுக்கமாட்டார்கள்.

எழுத்துக்கலையிலும் அவ்விதமே. பிரமுகர்கள் சாதாரண மாக அபஸ்வரமாய் எழுதமாட்டார்கள். அவர்களிடத்தில் அத்தோஷம் ஏற்பட்டால், அது, அச்சுக்கு அனுப்பும் அவசரத்தினாலோ இதற்கொப்பான வேறு காரணத்தினாலோ உண்டானதே தவிர, வேண்டுமென்று எழுதப்பட்டதல்ல. அவ் விதம் எழுதினால் பாதகமில்லை என்று சொல்லமாட்டார்கள். ஆனால் இந்தக் கலையிலும் "அபஸ்வரம்" நேரிடுவது உண்டு என்றும், இங்கேயும், அதை நீக்காவிடில், கலையின் அழகே போய் விடுமென்றும் ஸ்தாபிப்பதற்காகவே, விஸ்தாரமாக ஒரு திருஷ் டாந்தம் எடுத்துரைக்கப்பட்டது.

இதர ஜீவஜந்துக்களை உத்தேசித்து, மனிதருக்கு விசேஷ லக்ஷணமான ஒவ்வொரு விஷயமும் ஒரு கலைக்கு அடங்கினது தான். மற்றக்கலைகளிலும் அபஸ்வரம் என்பது உண்டு. அது அறிவுள்ளவர்க்கு வெறுப்பை உண்டாக்குகிறது. அதை நீக்க வேண்டும் என்கிற எண்ணமே சாதாரணமாக நம்மிடையில் பரவு கிறதாகத் தோன்றவில்லை. காலை விழிப்பது முதல் இரவில் உறங்கும் வரையில் கண்ணுக்கு வேதனை உண்டாக்கும் அபஸ்வரங் களுக்குக் கணக்கில்லையே! எவரும் மறுக்கக்கூடாத சில பட்ட வர்த்தனமான உதாரணங்களை மாத்திரம் கவனிப்போம்.

ஒரு நாடகத்தில் ஸ்ரீராமனாக நடிப்பவன் கழுத்தில் 'காலரும்', 'நெக்டையும்' தரித்துவந்தால், அது சாஸ்திர ரீதியா, அபஸ்வரமா? சென்னைப்பட்டணத்தில் விக்டோரியா பப்ளிக் ஹாலில் அரங்கேற்றிய ஒரு நாடகத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான்

'காலருடன்' பிரசன்னமானதை நான் கண்டிருக்கிறேன். இக்காலத்து சினிமா டாக்கிகளில் இதற்கு நிகராக எத்துணையோ உதாரணங்களைக் காணலாம்.

சகுந்தலை கண்வருடைய ஆச்ரமத்தில் வசித்த காலத்தில் எம்மாதிரி வஸ்திரம் தரித்திருந்தாள்? ரவிவர்மாவின் படத்தில், துஷ்யந்தனுக்கு அனுப்புவதற்கு, ஓர் இலையின்மேல் பத்திரிகை எழுதும் பாவனையில் காணும் சகுந்தலை, ஒரு பங்களூர்ச் சேலையைத் தரித்திருக்கிருள். அது போதாதென்று நம்முடைய உயர்ந்த பதவிஸ்திரீகள், அப்படத்தின் அச்சுப் பிரதியை வாங்கி, அச்சேலைக்கு ஜிகினு வைத்துத் தைத்து, அவர்கள் வீட்டில் நாம் நுழையும் போதே, இந்த திருஷ்டி அபஸ்வரம் நம்முடைய கண்களைக் குத்தும்படி, வாசல் சுவரிலேயே படத்தைத் தொங்கவிடுகிருர்கள். யசோதை பால்கறக்க, குழந்தை கிருஷ்ணன் பக்கத்தில் நிற்கும் படத்தை, நம்முடைய நாட்டில் யார்தான் அறியார் என்று நினைக்கலாம். இருந்தாலும், அப்படத்தை ஒருவர் நோக்கி "உங்களுடைய கடைசிப் பையனு, இது" என்று கேட்டார். இந்த ஒரு கேள்வியிலிருந்து அவருடைய விவேகத்தைப்பற்றி நாம் என்ன நினைக்கக்கூடும்? சகுந்தலைக்கு ஜிகினு தைக்கிறவர்களுக்கும், அவருக்கும் வாஸ்தவத்தில் என்ன வித்யாசம்? "இயமதிகமனோஜ்ஞா வல்கலேனபி தந்வீ" (**इयमधिकमनोज्ञा वल्कलेनापि तन्वी**) "மரவுரி உடுத்தியும் இவள் எவ்வளவு அழகாயிருக்கிருள்" என்று அவளைக்குறித்து துஷ்யந்தன் சொன்னது அவர்களுடைய ஞாபகத்திலில்லாமலிருக்கலாம். ஆனல் இம்மாதிரி தோஷங்கள் செய்பவர்கள், அறிவதற்கு சிரத்தை மாத்திரம் இருந்தால், அந்தந்தக் காலங்களில், கிருஷ்ண புருஷனே, ராமபிரானே, சகுந்தலையோ, எம்மாதிரி உடைகள் அணிந்திருந்தார்கள் என்று கிரந்தங்களிலிருந்தும் இவ்விஷயங்களைக் கற்றுணர்ந்தோரிடமிருந்தும், அறியக்கூடாதா? இந்தச் சிரமங்கூடப் பட இஷ்டமில்லாதவர்கள் அந்த ரூபங்களை நமக்குக் காண்பிப்பதாக முன்வருவானேன்? மரவுரி உடுத்திய ஸ்திரீயை அழகாய் வர்ணிக்கும் வழி தெரியவில்லையே, எப்படி வர்ணிப்பது என்று கேட்டால், இதர தேசத்திய அநேக படங்கள் விடை அளிக்கின்றன. அப்படி இல்லை, பங்களூர்ச்சேலையும் ஜிகினுவும் உடுத்தித்தான் அவளை அழகாய்க் காண்பிக்க முடியுமென்றுல், துஷ்யந்தனுக்கு சுலோகம் எழுதுவதற்கு அவளுடைய கையில் ஓர் இலையைக் கொடுப்பானேன்? 'க்ரீம்லெய்ட் பேபரை'யும் ஒரு 'டைப்ரைடரை'யும் கொடுக்கலாமே? பிறகு, துஷ்யந்தனைத் தேடி வருகையில், அவள் கால்நடையாக வராமல், ஒரு மோட்

டாரில் வந்து இறங்கினுல், கம்பீரமாக இருக்குமல்லவா? நான் சொல்வது எல்லாம் ஒருக்கால் அநாவசியமாகக் கூட இருக்கலாம். இந்த யுக்திகள் ஒரு டாக்கீ முதலாளிக்கு ஏற்கனவே தோன்றி, நிறைவேற்றப்பட்டு, ஏனையோரும் இந்த க்ஷணமே கண்டு களித்துக்கொண்டிருக்கிறுர்களோ, என்னமோ!

நம்முடைய நாட்டு விஷயங்களிலேயே இம்மாதிரி. அந்நிய தேசத்தார்களுடைய கலைகளை, நமக்குத் தகுந்த பரிசய மில்லாமல் கடன்வாங்குகையில் நாம் செய்யும் அக்கிரமங்களைப் பார்க்கும் போது தேவர்களுக்கும் அழுகை வரும்.

ஐரோப்பாவில், பல நூற்றுண்டுகளாகச் சில்ப சாஸ்திரம், முறையே அபிவிருத்தியாகிவந்ததில், ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு காலத்தில், பலவிதக் கட்டிடங்களுக்கும், அதாவது கோவில், வீடு, தளக்கோட்டை, முதலியவைகட்குப் பலவித விசேஷ ரூபங்கள் அமைந்தன. அந்தக் கண்டத்தில் சாதாரணப் படிப்புள்ள வருக்குக்கூட, ஒரு கட்டிடத்தை நோக்கினுல், அம்மாதிரியில், எந்த தேசத்தில், எந்தக் காலத்தில், என்ன காரணத்தினுல், அதாவது எந்த அவசியத்தின்பொருட்டு, அக்கட்டிடம் கட்டப்பட்டது என்று சொல்லமுடியும். நமக்கு அந்த ஞானம் கிடையாது; அவசியமுமில்லை. நம்முடைய நாட்டுச் சம்பிரதாயங்களின் படியே எவ்வளவோ அழகாகவும், சௌகரியமாகவும் வீட்டைக் கட்டிக் கொள்ளலாம். ஆனுல் நீங்கள் இன்றையதினம் குற்றுலத்திற்குச் சென்று நோக்கினுல், ஐரோப்பாவில் ஐந்துவித தேசங்களில் ஐந்து நூற்றுண்டுகளில் ஜீவித்திருந்த சில்ப சம்பிரதாயங்களெல் லாம், யாதொரு அழகு, சௌகரியம், அவசியமுமில்லாமல், ஒரே ஒரு பெரிய பங்களாவில் சேர்க்கப்பட்டு, நம்முடைய கண்ணுக் கெதிராக, ஒன்றிற்கொன்று விரோதமாக நிற்பதைக் காணலாம். அந்த பங்களாவிலிருந்து, ஒருபக்கத்தில் சூலமும் இரும்புக் கவசமுமாக ஒரு ரண வீரனும், மற்ருெரு பாகத்தில் புஸ்தகமும் ஜபமாலையுமாக ஒரு பாதிரியாரும் கிளம்பினுல், அது தம்மில் பொருத்தமாகவே இருக்கும். ஆனுல் இந்த இரண்டும் ஒரே கட்டிடத்தில் சேர்ந்து காணும்பொழுதோ?

வீடுகள் பொங்கிய சென்னைப்பட்டணத்திலோ, இம்மாதிரி அற்புதக் கலப்புகளைப் பற்றிக் கேட்க வேண்டாம். இந்தக்காட்சிக்கும் திகைக்காமல், வாசல் சுவரில் தொங்கும் சகுந்தலையின் படத்திற்கும் அஞ்சாமல், உள்ளே நுழைந்தால், 'க்வீன் ஆன்' (*Queen Anne*) காலத்துக் கைகள் (மாத்திரம்) உள்ள நாற்காலிக்கெதிராக, 'ஜேகோபியன்' (*Jacobean*) காலத்து முறுக்கிய கால்கள் (மாத்திரம்) உள்ள ஒரு மேஜை, 1936-ஆம் வருஷத்திய மரக்

கடைத் தெரு வார்னிஷ் வாசனை வீச, ஜ்வலிப்பதைக் காணலாம். அந்த ஹாலில் உள்ள வர்ண அமைப்புக்களைக் கண்டாலோ—சுவரின் வர்ணம், சோபாவின் மெத்தையின் வர்ணம், ஜன்னலில் தொங்கும் திரையின் வர்ணம்—ஈசுவரா! இவைகளின் அபஸ்வரத்திற்குத் தேவர்கள்மாத்திரம் அழுதால் போதாது.

"இப்படியெல்லாம் இருந்தால் என்ன பிரமாதம்?" என்று கேட்கலாம். வாஸ்தவமே. ஒரு வஸ்திரத்தைப் பாதி வேஷ்டியாகவும், பாதி சேலையாகவும் நெய்தால் என்ன? பாயசத்தில் லவணத்தைக் கலந்தால் என்ன? வீணைக்குப் பக்கவாத்தியமாக மத்தளத்தை (தவில்) அடித்தால் என்ன? நெற்றியில் பாதிக்குத் திருநீறும் பாதிக்குத் திருநாமமும் இட்டால் என்ன? இச்செய்கைகளில் பொருத்தமில்லை. எண்ணப்பட்ட சௌகரியமோ, ருசியோ, செவியின் இன்பமோ, மத ஆசாரமோ, குன்றுமே ஒழியச் சிறக்காது; எல்லாம் "அபஸ்வரங்கள்" என்று மாத்திரம் சொல்லலாம்.

ஞானமார்க்கத்தைக் காட்டிய சங்கர, ராமாநுஜ, மத்வாசார்யர்களைக் குறிப்பாக ஆசார்யர்கள் என்று சொல்லுகிறோம். ஐதிகத்தைச் சேர்ந்த எல்லாக் கலைகளிலும், நம்முடைய முன்னோர்களுக்கிருந்த அபிலாஷையும், கௌரவமும், இவைகள் சம்பந்தமாக, "ஆசார்யர்" என்கிற அந்த ஒரு பதத்தை அவர்கள் உபயோகித்த விதத்திலிருந்தே அறியலாம். அந்தந்தக் கலையின் உண்மையைக் கண்டுபிடித்து, அழகான (அபஸ்வரமில்லாத) கோவிலையோ, விக்ரகத்தையோ, நகையையோ ஸ்ருஷ்டிப்பவன் அந்த வித்தையில் ஆசார்யனாக அழைக்கப்பட்டான். இக்காலத்திலோ, அழகின் உண்மை, பொருத்தம், அமைப்பு இவைகளையே துறந்த பிறகு, பிறருக்கு வழிகாட்டுவோன், அவனுடைய சிஷ்யன், முன் செல்லுவோன், பின் செல்லுவோன் என்பது கிடையாது. மதவிஷயத்தில் எப்படியோ, அவ்விதமே கலைகளிலும் யாவரும் சமம்: எல்லாக் கல்தச்சனும், தட்டானும், மரத்தச்சனும் ஆசாரிகள்தான். அவர்களுடைய தாரதம்யத்தையும், குணாகுணத்தையும் கண்டுபிடித்துக் குணசாலிகளை உத்சாகிப்பித்துப் போஷித்துவர சக்தியுள்ளவர்கள் மேற்சொன்னவிதம் குற்றாலத்து பங்களாவையும் பட்டணத்து வீட்டையும் கட்டி மகிழ்ந்துவருகிறார்கள்.

யானைக்கும் பூனைக்கும் வித்தியாசம் காணாதவனும், வாதம் பருப்பும் நேர்வாளப்பருப்பும் துல்யமான ஆகாரமென்று எண்ணுபவனும், ரோஜாப்புஷ்பத்திற்கும் இலுப்பைப்பூவிற்கும் அழகிலும் வாசனையிலும் குணபேதமறியாதவனுமான மனிதன், ஒன்று சந்நியாசி அல்லது பயித்தியக்காரன். அவன், வீடுகட்டாமல், மேஜை, நாற்காலி, கிராமபோன் வாங்காமல், சங்கீதம், சித்ரம்,

நாடகம் இவைகளை ரஸிக்கிறேன் என்கிற பாவனை பண்ணுமல், வாஸ்தவத்தில் சந்நியாசியாயிருந்துவிட்டால், இவ்வித அபஸ்வரங்கள் நாட்டில் பரவாது. ஆனால் அவன் கிருகஸ்தனுக விளங்குகிருன். அவனுக்குச் செல்வம் ஏற ஏற, இக்கார்யங்களில் முனைகிருன். அவனுடைய அபஸ்வரங்களால் மற்றவர்களுடைய உணர்ச்சிகளைத் தாக்குவதும் தவிர, அவனுடைய தனத்தின் சக்தியினுல், இதர ஜனங்களுக்கு ஒரு தவருன வழியைக் காட்டித் தொழிலைத் தேடும் கலாஞானிகளைக்கூட அவனுடைய வழிக்கே இழுக்கிருன்.

அல்லது, அவனே இன்றும் தனத்தைச் சேகரிக்கும் தொழிலாளிபர்வத்திலிருந்தால், முன்சொன்னபடி, 'காலரை' அணிந்து ராமபிரானுக அரங்கமேடையில் ஏறத் தயாராக இருக்கிருன். இது ஓர் "அவன்" ஆக இல்லாமல், ஓர் "அவள்" ஆக இருந்தாலோ, கேட்கவேண்டாம். கால்அங்குல கனத்திற்குப் பௌடரைக் கன்னத்திற் பூசி, அவள் ஒரு டாக்கியில் "ஹைஹயோ! ஹீசா! ஹென்னையும் ஹிப்படியா இம்சிக்கணம்!" என்று பிரலாபித்தால் கூட, அந்த டாக்கியைத் "திறப்பதற்கு" உன்னத பதவியிலிருக்கும் கனவான்களைக் கோருகிறவர்களு முண்டு. அதை வர்ணிப்பதற்கு அகராதியிலுள்ள உரிச்சொற்கள் போதாவென்று நினைப்பவருமுண்டு.

வீட்டிற்குள்ளேயும் இவ்விதமே: எவளுடைய முகவர்ணத்திற்கும் கமலங்களுக்கும் எள்ளளவேனும் பொருத்த மில்லையோ அவளுக்கே அபஸ்வரமாதா குரூர எண்ணத்துடன் கமலங்களைச் சொரிந்துகொள்ளும் சக்தியை அளிக்கிருள். வேறு எட்டுவித இரத்தினங்கள் உலகத்தில் உண்டு. அவற்றில் ஒன்றிரண்டு தனக்குப் பொருத்த மாயிருக்குமென்கிற எண்ணமே அவள் மனத்தை எட்டுகிறதில்லை. ஆனால் ஏற்கெனவே அகன்ற முகத்தை இன்னும் அகற்றியோ, நீண்ட முகத்தை இன்னும் நீட்டியோ, பல விதத்திலும், உள்ள சௌந்தரியத்தை மறைத்து, ஒவ்வொரு தோஷத்தையும் வலுவாக ஸ்தாபிக்கக்கூடிய நகைகளே சில மாதர்களின் மனத்தைக் காந்தம்போல் ஆகர்ஷிக்கின்றன. எல்லாம் அந்த அபஸ்வரமாதாவின் செயல்!

நான்மாத்திரம் சுபாவத்தில் பயந்தவனுயில்லாது போனுல், குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டதாகச் சொல்லும் பழமொழிக்கு நிகரான புதுச்சொல், "அழகு பண்ணிக் கொள்ள எண்ணினுள். ஆனுல், பாவம்! நகையைப் போட்டுக்கொண்டாள்" என்பேன்.

பக்தியுடன் கோவிலுக்குப் போகிருேம். 'கந்தத்வாராம் துராகர்ஷாம்' (गन्धद्वारां दुराघर्षां) 'நல்ல வாசனையால் லக்ஷ்மி

தேவியின் தயவை அடையலாம்' என்று ஸ்துதிசெய்துகொண்டே நுழைகிறோம். சந்நிதிக்குப் போகும் வழியில் வீசும் வௌவால் நாற்றத்தை நீக்குவது மநுஷ்ய சக்திக்கு மிஞ்சிய காரியமா? 'அபிஷேகப்ரியோ சிவ:'—ஸ்வாமிக்கு அபிஷேகத்தில் பிரியமாக இருப்பது, நாம் அசுத்தத்தைச் சேகரிக்க வேண்டுமென்று காட்டுகிறது? சந்நிதி முழுவதும் எண்ணெய்ப் பிசுக்காகவும் அழுக்கடைந்துமா இருக்கவேண்டும்? சாதாரண அந்தஸ்துள்ளவருடைய வீட்டிலுள்ள பூஜை அறை அளவு சுத்தமாகவாவது ஒரு பெரிய கோவிலின் கர்ப்பக்கிருகத்தை வைத்துக்கொள்ள முடியாதா? விருத்தமான இத்துணை காரியங்களைச் சகிப்பவர் சங்கீதப் பிரியராயிருந்தால் ஒரு பாட்டுக்கச்சேரியில் நாலு அபஸ்வரங்களைச் சகிப்பாரா?

* * *

'இவை யெல்லாம் எங்களுக்குத் தெரிந்த விஷயங்கள் தான். இவ்வித தோஷங்களை நாட்டிலிருந்து எவ்விதம் நீக்குவோம்?'

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல நான் வல்லவனல்லன். ஆனால் எல்லோருக்கும் தெரிந்த சில அம்சங்களை நானும் சொல்வேன். 'அபஸ்வர மில்லாமல் பாட ஆசைப்படுகிறேன். அதற்கு நான் என்ன செய்யவேண்டும்?' என்று ஒருவன் கேட்டால் 'கற்பதைச் சரியாகக் கற்றுக்கொள்ளவேண்டும்' என்றுதானே பதிலளிக்கமுடியும். சங்கீதம், கவிதை, இவைகளிலெப்படியோ, அவ்விதமே, ஒவ்வொரு கலையிலும். இது நமக்குத் தெரியாத விஷயமில்லை என்றிராமல், இதனுடைய யதார்த்த அம்சங்களை அறிய வேண்டுமென்கிற அக்கரையுடன் முயலுபவர்க்குச் சிறிதேனும் எண்ணம் கைகூடாமலிருக்குமா?

---

# அம்மையப்பர்

வித்துவான் என். டி. திருவேங்கடாசாரி, பி. ஏ.

நம் நாட்டில் ஒவ்வோர் ஊரிலும் சிவன்கோயில் காணப் படுகிறது. ஆனால் எல்லாகோயில்களிலும் ஒரேசுவாமியாய் இருப்பதில்லை. ஒவ்வொன்றிலும் மூர்த்திபேதம் காணப்படுகிறது. நடராஜர், பிக்ஷாடனமூர்த்தி, மாதொருபாகர் என்றிவ்வாறு சிவ பெருமானின் நாமமும், வடிவமும் வேறுபடுகின்றன.

இவற்றுள் உமாமஹேசுவர சொரூபம் சிவபெருமானே எல்லா உலகங்கட்கும் தாயும் தந்தையுமாவர் என்பதை விளக்கு கிறது. சிவம், சக்தி இரண்டும் இரண்டறக்கலத்தலையும் இது உணர்த்தும். இவ்வடிவம் மற்றும் பல தத்துவங்களை யுணர்த்து மென்பர். ஆதலின் அடியார் பலர் இவ்வடிவில் ஈடுபட்டுளர். சம்பந்தர் 'தோடுடையசெவியன்' எனச் சுட்டிக்காட்டியதும் இதனையே.

இந்த உமாமகேசுவர சொரூபத்தை அதிகமாகப் பாராட்டு பவர் குமரகுருபரசுவாமிகள் என்னலாம். உமையொரு பாகரைக் கண்டு உருகுபவர்; சிறந்த தமிழ்ப்புலவர்களில் ஒருவர்; இவர் பக்திச்சுவைததும்பப் பாடுவதில் மிகவும் வல்லவர். குமரகுரு பரசுவாமிகள் ஒருநாள் உமையொருபாகரைப் பாட நினைத்தார். சிவபெருமான் இவ்வடிவில் ஆணல்லன், ஆனால் பெண்ணுமல்லன்; இரண்டும் ஒருங்கே அமையப் பெற்றவனல்லனோ? ஆதலால் இவனைப் பாடுவது சுலபமான காரியமன்று. ஏகமூர்த்தி எனப் பொருள்பட, 'ஒருவன்' என்று பாட நினைத்தார். இச்சொல் பெண்பாகத்தைக் காட்டாதென்று அறிந்தார். 'ஒருத்தி' என்று சொல்லநினைத்தார். இதுவும் அங்ஙனமே ஆணுருவைக் காட்டாத குறையுடையதெனக் கண்டார். என் செய்வர்! இரண்டுருவையும் ஒருங்கே குறிக்கும்சொல் தமிழில் இல்லையோ என யோசித்தார். தம் இலக்கிய அறிவின் பயனால், 'ஒருவர்' என்ற சொல் இருத்தல் கண்டார். (ஒருவர் என்ற சொல் தமிழில் உயர்திணை ஆண்பால்

பெண்பால் இரண்டையும் காட்டும் என்று அறிக.) அப்போது அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. உடனே, 'ஈசா! உம்மை ஒருவன் என்பேனோ? ஒருத்தி என்பேனோ? தமிழில் ஒருவர் என்ற சொல் இல்லாவிடில் உம்மை எவ்வாறு பாடுவேன்?' என்னும் பொருட்பட,

"ஒருவனுக்கு மொருத்திக்கு முருவொன்றுலவ்
வுருவை யிஃதொருத்தனென்கோ ஒருத்தியென்கோ
இருவர்க்கு முரித்தாக வொருவரென்றோர்
இயற்சொலிலதெனில் யான்மற்றென் சொல்கேனே" *

எனப்பாடினர்.

மற்றொருசமயம் குமரகுருபரர், அம்மையப்பரைத் 'தாயே' என்றழைக்கலுற்றார். இவ்வாறு கூறுவது குறையுடைமை என்றுணர்ந்து, 'தந்தையே' என்றார். இதுவும் ஏனையபாகத்தை ஒழிப்பது கண்டார்; இருவருக்கும் பொருத்தமாக எவ்வாறு விளிப்பதென யோசித்தார். முடிவில் 'எந்தாய்!' என்றழைத்தார். [இச்சொல் எம்+தாய், எம்+தந்தை எனப் பிரிபட்டு, எம்முடைய தாயே, எம்முடைய தந்தையே, என முறையே பொருள்படுதல் காண்க.] சுவாமிகள் முன்னிலும் மகிழ்ந்து,

"செவ்வாய்க்க ருங்கட்பைந் தோகைக்கும் வெண்மதிச்சென் [னியற்கும்
ஒவ்வாத்திருவுரு ஒன்றேயுளதவ் வுருவினைமற்
றெவ்வாச்சிய மென்றெடுத்திசைப்பே மின்னருட் புலியூர்ப்
பைவாய்ப் பொறியரவல்கு லேந்தா யென்று பாடுதுமே."

என்றருளிச் செய்தனர்.

இவ்வாறு துதித்துவணங்கும் நாட்களில் ஒருநாள், உமையவள் வழுவாது முப்பத்திரண்டறம் வளர்ப்பதும், சிவபெருமான் பிக்ஷை எடுப்பதும் இவர் நினைவிற்கு வந்தது. 'உலகில் ஏற்போரும் உண்டு; இரப்பவர்களுக்குக் கொடுப்போரும் உண்டு. ஆனால் ஒருவரே இரப்போரும் புரப்போருமா இல்லாமல் உலகத்தியற்கை இரண்டு வேறுபட்ட தன்மையுடையதாய் இருக்கிறது. அப்படியிருக்க இம்மூர்த்தியிடம் வேறெங்கும் காணமுடியாத அபூர்வச்செயல் காணப்படுகிறதே. ஒரே உருவத்தில் இடப்பாகம் அறம்வளர்த்து, இரப்போர்க்களிப்பது; வலப்பக்கம் யாசகத்

* சிதம்பரச் செய்யுட் கோவை. 54.

தொழிலைக் கொண்டிருக்கிறதே. இது என்ன ஆச்சரியம்!' என்று எண்ணினார். தாம் கண்ட அதிசயத்தைப் பின்வரும்செய்யுளில் வெளியிடுகிறார். அச்செய்யுள் வருமாறு:—

"தானமால் களிறும் மாநிதிக் குவையும்
ஏனைய பிறவும் ஈகுநர் ஈக;
நலம்பா டின்றி நாண் துறந் தொரீஇ
இலம்பா டின்றி ஏற்குநர் ஏற்க;
புரவலர் புரத்தலும் இரவலர் இரத்தலும்
இருவே றியற்கையும் இவ்வுல குடைத்தே: அதா அன்று.

ஒருகா லத்தில் உருவமற் றொன்றே
இடப்பால் முப்பத் திரண்டறம் வளர்ப்ப
வலப்பால் இரத்தல் மாநிலத்தின்றே
பன்மணி மாடப் பொன்மதிற் கமலைக்
கடிநகர் வைப்பினிற் கண்டேம்
வடிவ மற்றிது வாழிய பெரிதே.

(திருவாரூர் நான்மணிமாலை-8)

---

# தாய்சொல்த் துறந்தால் வாசகமில்லை

டி. கே. சிதம்பரநாத முதலியார்.

சென்ற வெள்ளிக்கிழமை திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்கு மோட்டார் பஸ்ஸில் போனேன். பஸ் புதிதாய் இருந்தது. வாங்கி ஒரு வாரந்தான் ஆகிறது என்றும் சொன்னார்கள். சுமார் அஞ்சரை மணிக்கு வறண்ட பொட்டலுக்கு இடையே வண்டி போய்க்கொண்டிருந்தது. திடீர் என்று எங்கேயோ இருந்து இங்கிலீஷ் சங்கீதம் வந்து காதில் விழுந்தது. வண்டியில் இருந்தவர்கள் திகைத்துப்போய் அக்கம்பக்கம் பார்த்தார்கள். ஒன்றும் விளங்கவில்லை. எல்லாருக்கும் ஒரே ஆச்சரியமாய் இருந்தது. கடைசியில் வண்டி ஓட்டுகிறவர் "வண்டியில் ரேடியோ வைத்திருக்கிறோம். கொளும்பிலிருந்து பாட்டு வருகிறது" என்று சொன்னார். பிரயாணிகள் "நல்லமாதிரிதான். பஸ்ஸில் போகிறவர்களுக்கு சங்கீதமும் கேட்டுக் கொண்டு போகலாம் போல் இருக்கிறது" என்று சொல்லி சந்தோஷப் பட்டார்கள்.

வண்டி நின்ற நின்ற ஊர்களில் எல்லாம் ஆண், பெண், பிள்ளைகள் ரேடியோ வைபவம் கேட்க வண்டியைச் சுற்றி மொய்த்து விட்டார்கள். கேட்டுக் கொண்டிருந்தவர்களுடைய ஆனந்தத்தையும் வியப்பையும், முகங்களில் மாலிதான் ('ஆனந்தவிகடன்' சித்ராசிரியர்) வந்து எழுதிவிட்டுப் போய்விட்டாரோ என்று தோன்றியது. கூடிய கூட்டம் வண்டியை அப்பால் போவதற்கு இடங் கொடுக்கவில்லை. கூட்டத்தைக் கிழித்துக்கொண்டுதான் சென்றது வண்டி. இப்படியாக வண்டி ஓடும்போதும் கெடிகளில் நிற்கும் போதும் சங்கீதத்தைக் கேட்டுக்கொண்டே போனோம். ஆக முக்கால் மணி நேரம் இங்கிலீஷ் சங்கீதத்தைக் கேட்டுக்கொண்டே இருந்தோம். ஒருவர் சொன்னார்: "பாஷை ஒன்றும் விளங்கவில்லை. ராகமோ சா ராகம் அல்லது ஒரே ஒப்பாரியாய் இருக்கிறது. அடடா, ரொம்ப ஹிம்ஸையாய் இருக்கிறதே. அதை நிறுத்தி விடுங்கள், ஐயா" என்று வண்டி ஓட்டுகிறவரைப் பார்த்துச் சொன்னார். ஓட்டுகிறவருக்கும் அது கஷ்டமாய் இருந்ததால் நிறுத்தப் பார்த்தார். எந்திரத்தில் ஏதோ கோளாறு ஏற்பட்டிருந்ததால் நிறுத்த முடிய

வில்லை. கொளும்பிலுள்ள இங்கிலீஷ் பாகவதருக்கோ எங்களுடைய கஷ்டத்தை நேரில்ப் பார்க்க முடியவில்லை.

பார்க்க முடிந்தாலும், அஹிம்ஸா தர்மத்தில் அவருக்கு நம்பிக்கை உண்டோ என்னமோ! எந்திரம் பழையதாய், துருப் பிடித்துப்போயிருந்தால் எல்லாரும் சேர்ந்து ஒக்கிட்டு விடப்பார்த்திருப்பார்கள். ஆனால் அது புத்தப் புதிது. அன்றைக்குத்தான் வெள்ளோட்டம். பார்க்கவேணும் அப்போது பிரயாணிகளின் பரபரப்பை! "கண்டக்டருடைய தோல்ப்பைக்குள் பணம் போய்விட்டது என்று தானே இப்படி எல்லாம் நம்மைக் கஷ்டப்படுத்துகிறார்" என்று மூலையில் ஒருவர் முணு முணுத்தார். "வண்டியை விட்டு இறங்கி அடுத்த வண்டியில் ஏறிப் போவோமே" என்று வேறொருவர் பிரேரேபித்தார். எல்லாருக்கும் ஆமோதிக்க மனசு இருக்கத்தான் செய்தது.

அப்போது வந்ததையா வேறொரு சப்தம்! ஒருவர் 'பேஷ், பேஷ்' என்றார். 'பலே' என்றார் மற்றொருவர். 'பேசாதேயுங்கோள்' என்று அனேகர் அதட்டினார்கள். எல்லாரும் குனிந்த வண்ணமாய்ச் செவியைச் சாய்த்துக் கேட்க ஆரம்பித்தார்கள். "அருச்சுனனைப் பார்த்து கிருஷ்ண பரமாத்மா ஆனவர், நான் சொல்லுவதைக் கேட்டு அறிந்து கொள்ளுவாயாக. தமோகுணம் என்பது எல்லோரையுமே பீடிக்கிறது. தமோகுணமானது ஒரு காரியம் தக்கது தகாதது என்று வித்யாசப்படுத்த முடியாமல் அறிவு கெட்டிருக்கும் போதும், கருமங்களில் கஷ்டம்தான் உண்டு என்று எண்ணும் போதும்......." என்ற தமிழ் வசனம் கேட்டது. வண்டியிலிருந்தவர்களுக்கு, முன்பு இல்லாத அமைதியும் கவனமும் வந்துவிட்டது. பகவத் கீதையைப் பற்றிய பிரசங்கம் என்று தெரிந்து கொண்டோம். கொளும்பிலிருந்து தமிழ் வார்த்தைகள் வருகிறதென்றால் எளிதா! ஒருவகையாய் வியப்போடு பக்தியும் கலந்து கொண்டது. சிறிது நேரத்தில் பேசிவந்த வசனம் நின்று சங்கராபரணத்தில் ஒரு விருத்தமே வந்துவிட்டது.

பேச்சு, பாட்டு, சங்கீதம், எல்லாம் சாமானியந்தான். இருந்தாலும் எல்லாருக்கும் மனஎழுச்சி உண்டாகி, ரேடியோவின்மேல் இருந்த எரிச்சல் எல்லாம் போய் அதனிடத்துப் பிரியமே வந்துவிட்டது. எந்திரத்தில் ஏற்பட்டிருந்த கோளாறு எப்படிப்போனால் என்ன என்று எண்ணிவிட்டோம். இதே சமயத்தில் திருச்செந்தூர் கெடிக்கு வண்டி வந்து சேர்ந்துவிட்டது. வண்டியை விட்டு நாங்கள் கீழே இறங்கவும் நேர்ந்து விட்டது. பகவத்கீதைப் பிரசங்கத்தைக் கேட்க முடியாமல் வண்டி கெடிக்கு வந்துவிட்டதே என்று வருந்தினோம்.

வண்டியிலிருந்தவர்கள் எல்லாரும் பொதுவாய் கிராமவாசிகள். இங்கிலீஷில் ஸ்கூல் பைனலுக்கு மேல் இல்லை. (நான் மாத்திரம் சென்னை யூனிவர்ஸிட்டியில் பட்டம் பெற்றவன்.) உயர்தரக் கல்வி எல்லாம் இல்லாமல் இருந்த காரணத்தினாலேயே அவர்களுக்கு இங்கிலீஷ் சங்கீதத்தை அனுபவிக்க முடியவில்லை என்று சொல்ல தைரியம் ஏற்பட்டது. தைரியம் ஏற்படவும், விளங்காத விஷயத்தில் வெறுப்பும் உண்டாய்விட்டது.

காலேஜ் வகுப்புகளில் முரண்டிக் கொண்டு அவர்கள் படிக்க நேர்ந்திருந்தால், உபாத்தியாயர்களுக்கும் பரீக்ஷை செய்கிறவர்களுக்கும் பயந்துபோய் 'இங்கிலீஷ் சங்கீதம் நல்லாய் இருக்கிறது. ஜெர்மன் சங்கீதமும் முஸ்ஸோலினியினுடைய இத்தாலி நாட்டு சங்கீதமும் ரொம்ப ரொம்ப நல்லாய் இருக்கிறது' என்று சொல்லவும் எண்ணவுமே நேர்ந்திருக்கும். ஆங்கில பாடபுஸ்தகங்களிலுள்ள வியாசங்களில் மேதாவிகள் அந்தவிதமாகச் சொல்லியிருக்கும் போது வேறு விதமாக எப்படிச் சொல்லலாம்?

எப்போது அனுபவிக்க முடியாததை அனுபவித்து விட்டோம் என்று எண்ணிவிட்டார்களோ, பிறகு எப்படி அனுபவிக்கக் கூடியதை அனுபவிக்கத் தோன்றும்! தமிழ் வார்த்தையையும் சங்கீதத்தையும் கேட்டபோது கிராமவாசிகளுக்கு இல்லாத ஓர் ஆர்வமும் இன்பமும் ஏற்பட்டது. இரும்பைக் கரும்பென்று மென்றுகொண்டிருந்தவர்களுக்கு, கைக்குக் கரும்பு வந்தால் என்ன, இரும்பு வந்தால் என்ன!

இவ்வளவும் தமிழ் நாட்டிலுள்ளவர்கள் சம்பந்தமாக மிகைபடக் கூறல், ஏளனச் சொல் என்று சிலர் அபிப்பிராயப் படலாம். ஆனால் சென்னையில் தமிழர்களே கூடிய காலக்ஷேபக் கச்சேரியில், பாகவதர் முக்காலே மும்மாகாணிவாசி தமிழ் ஒழிந்த இதர பாஷைகளிலேயே பாடல்களைப் பாடிக்கொண்டிருக்கக் கேட்டிருக்கிறோம். போதாக்குறைக்குத் தமிழும் இங்கிலீஷும் மாத்திரம் தெரிந்த 'பி.ஏ. பி.எல்' கள் பாகவதரைப் பார்த்து, கன்னடம், ஹிந்துஸ்தானி, பங்காளி, குஜராத்தி என்று தங்களுக்குக் கொஞ்சங்கூடத் தெரியாத பாஷைகளில் பாடும்படி தூண்டுவாரையும் பார்த்திருக்கிறோம். இது ஒருவேளை பாகவதர் வைத்திருக்கும் சில்லரைச் சரக்கு இன்ன இன்ன என்று காட்டக் கூடும். ஆனால் 'பி.ஏ. பி.எல்' களின் சுய பாவ உணர்ச்சி இன்மையையும் அவர்களுடைய ஏமாளித்தன்மையையும் நன்றாய்க் காட்டி விடுகிறதல்லவா. பங்காளத்திலுள்ள 'பி.ஏ. பி.எல்' கள் இப்படிச் செய்ய மாட்டார்களாம்.

என் நண்பர் ஒருவர் (அல்லகாபாத் பக்கத்திலிருந்து வந்து தமிழ் நாட்டில் ஹிந்தி பிரசாரம்செய்து வருகிறவர்), "இந்தியா வில் எத்தனையோ தேசங்களில் பிரசாரம் செய்திருக்கிறேன். தெற்குப் பிரதேசங்களிலும் செய்திருக்கிறேன். பங்காளி களோ, கன்னடியர்களோ, தெலுங்கர்களோ, மலையாளிகளோ, யாரானாலும் சரி, தாய்பாஷையினிடத்து நம்பிக்கையும் பிரிய மும் இருந்து கொண்டிருக்கப் பார்த்திருக்கிறேன். தமிழ் நாட்டில் மாத்திரம் இதற்கு நேர் மாறாகப் பார்க்கிறேன். தாய் மொழியைப் புறக்கணிக்கிறது தமிழருக்கே உரிய தனிப்பண்பு. தமிழில் எவ்வளவோ உயர்தரமான இலக்கியங்கள் இருப்பதாகவும், தமிழ்வசனம் எவ்வளவோ சக்தி வாய்ந்ததென்றும் கேட்டிருக் கிறேன். அவைகளை இங்கிலீஷ்ப் படித்து முற்றிப்போனவர்கள் கவனிப்பதாகவே இல்லை. ஆகாரத்தோடு ஆகாரமாய் எண்ண வேண்டிய தாய்மொழியின்பாடு இது என்றால், ஹிந்தி பாஷை யில் அவர்களுக்கு நம்பிக்கையோ ஆர்வமோ இருக்கிறது என்று சொல்லுகிறது எந்த விதத்திலும் எனக்கு அறிந்து கொள்ள முடியாத காரியம்" என்று சொன்னார். கவி ரவீந்திரநாத் டாகூர் சென்னைக்கு வந்திருந்தபோது, தமிழர்கள் தங்கள் தமிழைப் புறக் கணிக்கிறார்கள், அவர்களுக்கு மோகம் எல்லாம் இங்கிலீஷில்தான், என்று தெரிந்ததும் அவருக்கு வந்த வருத்தத்துக்கு அளவில்லை.

நாம் ஒருவருக்கொருவர் சந்தித்துப் பேசும்போது இங்கிலீ ஷில் பேசுகிறோம் என்பதை முதலில் அவர் நம்பவில்லை. பிறகு நேரில் கையும் களவுமாகக் கண்டு கொண்டார். இதுகாரணமாக நம்மவர்கள்பேரில் அவருக்கு இருந்த அபிப்பிராயம் நமக்கு உத் ஸாகத்தைக் கொடுக்கக் கூடியதாய் இருக்கவில்லை. ஆனால், மோட் டார் வண்டியிலிருந்த பிரயாணிகளுக்கு ரேடியோவிலிருந்து வந்த இங்லீஷ்ப் பாட்டுகள் பிடிக்கவில்லை, தமிழ் வசனமும் பாட்டும் எவ்வளவோ சந்தோஷத்தைக் கொடுத்தது, என்று தெரியவந்தால் டாகூருக்கு நம்மிடத்தில் நம்பிக்கை அற்றுப் போகாது. உண்மை யில் சந்தோஷப்படுவார். இப்படி அவருக்கு சந்தோஷம் கொடுக்கக்கூடிய காலம் சீக்கிரமாக வரும் என்று நம்புகிறோம்.

---

# சித்திரம்

## தமிழ் வைத்தியம்

வித்துவான் ச. கு. கணபதி ஐயர்

---

பலவிதப் பிறவிகளிலும் மனிதப்பிறவியே மேலானது. புண்ணிய பாவங்களையும், இன்ப துன்பங்களின் வழிகளையும் அறிந்துகொள்ளும் பகுத்தறிவு மனிதனுக்கே வாய்த்திருக்கின்றது. மானிடப்பிறவியின் பயன் முத்தி அடைவதேயாம். முத்தி அடைவதற்குச் சில சாதனங்களை நாம் கைக்கொள்ள வேண்டும். தேகதிடமும், ஆரோக்கியமும், நீண்ட ஆயுளுமிருந்தாலொழிய அச்சாதனங்களைப் பெறுவது அருமையாகும்.

உணவும் செயல்களும் ஒவ்வாமையினால் மனிதன் நோய்வாய்ப்பட்டு வாழ்நாளின் இடையில் உடல்மெலிவை அடைகிறான்; அல்லது அகால மரணத்துக்கு ஆளாகின்றான். வீடு பேற்றையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட மனிதர் நெடுங்காலம் திடமுள்ளவர்களாக வாழ்ந்திருத்தற் பொருட்டே வைத்தியமுறை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

ஒரு நாட்டு மக்களின் உடற்கூறு அந்நாட்டு மண்ணோடு தொடர்புடையதென்று பெரியோர்கள் கூறுவார்கள். ஒருவருக்கு நோயுண்டானால் அந்நோயைப் போக்க, அவர் வாழும் நிலத்தில் விளைந்த பொருள்களைக் கொண்டு செய்யப்பட்ட மருந்தே சிறந்ததாகும். நோய் உள்ள இடத்திலேயே அதற்கு முறிவான மருந்தும் கடவுளால் அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் நோயாளி வாழும் தேசத்தின் கால இயல்புக்கு ஏற்றவாறும், நோயாளியின் பழக்க வழக்கங்கள், மதம், முதலியவற்றிற்குத் தக்கவாறும், அவன் உண்ணும் மருந்தும் பத்தியவகைகளும் அமைய வேண்டும். இந்த விதிகளை ஒட்டியே ஒவ்வொரு நாட்டிற்கும் தனித்தனியே வைத்தியசாத்திரங்கள் எழுதப்பட்டுள்ளன. இவ்விஷயத்தை நோக்கும்போது அந்த அந்த நாட்டு மக்களுக்கு அவ்வந் நாட்டு அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்ட வைத்திய

முறைகளே சிறந்தனவாகுமென்பது புலனாகின்றது. தமிழ்நாட்டில் தோன்றித் தமிழ்நாட்டிலேயே பரம்பரையாக வாழ்ந்து வருகின்ற வர்களுக்குப் பண்டைத் தமிழ் வைத்தியர்கள் கூறும் மருத்துவ முறைகளே சிறந்தவையாம்.

தமிழ் வைத்திய முறை சித்தவைத்தியம் எனப்படும். போகர், கொங்கணர், தேரையர், கோரக்கர், முதலிய தமிழ்நாட்டுச் சித்தர் கள் கண்டறிந்த முறையாதல் பற்றி இஃது இப்பெயர் பெற்றது.

நோய்களைத் தீர்ப்பதன் பொருட்டு, மருந்து செய்தல், உதிரங் களைதல், அறுத்தல், சுடுதல், ஆகிய நான்கு முறைகளையும் அக்காலத் திலேயே நம் முன்னோர்கள் நன்கறிந்திருந்தார்கள். அவர்களுடைய மருந்துகள் பெரும்பாலும் பொன் முதலிய உலோகங்களிலிருந்தும் தாவர வர்க்கத்திலிருந்தும் செய்யத்தக்கவை. பிராணிகளைக் கொன்று அவற்றின் உதிரம் முதலியவற்றைக் கூட்டிச் செய்யப் படும் மருத்துவ முறையை அவர்கள் பெரும்பாலும் அறியார்கள். அவர்கள் ஜீவகாருண்யம் மிகுந்தவர்களாதலால், ஓரறிவுடைய செடி கொடிகளைக்கூட மருந்துக்காகப் பிடுங்கும்போது சில மந்திரங் களை உச்சரித்துக் கொண்டு அவற்றைப் பறிக்கவேண்டும் என்று எழுதி வைத்திருக்கிறார்கள்.

தாவரவர்க்கத்தை மனிதர் உடல் நலங்குறித்துச் சிதைத்தலும் இழுக்குடையதே என்னும் கருத்து, பின்வரும் பெருங்கதை யடிகளிற் குறிப்பிக்கப்படுகின்றது:—

"மாமுதல் சாய மருந்துகொண் டாஅங்கு
நங்குடி வலித்தல் வேண்டி நம்பி
தன்குறு கெடுத்த தகவி லாளனேன்" (விழாக்கோண்டது)

இது பிரச்சோதனனென்னும் அரசன் உதயணனை நோக்கிக் கூறியது. உதயணனைச் சிறைப்படுத்தித் தன் குமாரர்களுக்குப் படைக்கலப் பயிற்சி செய்விக்கும்படி செய்த தன் வன்கண்மைக்கு மரத்தின்வேர் சாயும்படி மருந்துகொள்ளும் வன்கண்மையை உவமை கூறுகின்றான்.

முற்காலத்திய தமிழ்வைத்திய நூல்கள் பல இருந்தன. அவை யாவும் செய்யுள் வடிவிலுள்ளவை. அவற்றுள் பெரும்பாலன அழிந்துபோயின. அங்ஙனம் அழிந்தும் இக்காலத்தில் தமிழ் நாட்டில் எங்கும் மிகுதியாகக் காணப்படும் சுவடிகள் வைத்தியச் சுவடிகளே. அவை இக்காலத்தில் தமிழ்ப்புலமை வாய்ந் தோரால் புறக்கணிக்கப்பட்டுள்ளன. முற்காலத்திலே தமிழறிஞர் கள் வைத்தியசாத்திரக் கல்வியைத் தமிழோடு தொடர்புபடுத்தி ஓதி வந்தார்களென்று பலகாரணங்களைக் கொண்டு நிச்சயிக்க வேண்டி

யிருக்கிறது. மருத்துவர்களிற் பலர் தமிழ் வித்துவான்களாக இருந்துவந்தனர். மருத்துவன் தாமோதரனார் என்பவர் கடைச் சங்கப் புலவருள் ஒருவர். இவர் திருக்குறளின் பெருமையைக் கூறவந்தவிடத்து, ''சிந்திநீர்ச் சருக்கரையும் சிதைக்கப்பட்ட சுக்கையும் தேனோடு கலந்து மோந்தபின் தலைக் குத்துத் தீரும்'' *என்று கூறியிருக்கிறார். பெரும்பாலும் ஆரோக்ய விதிகளைத் தொகுத்துக் கூறும் ஆசாரக்கோவை என்ற நூலை ஒரு புலவர் இயற்றியுள்ளார். இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது. சில புலவர்கள் தாம் எழுதிய நீதி நூல்களுக்கு அக்காலத்தில் சர்வசாதாரணமாக வழங்கி வந்த சிறந்த மருந்துகளின் பெயர்களை அமைத்துள்ளார்கள். அவற்றுள் சில †திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் என்பன. திருவள்ளுவர் தாம் எழுதிய திருக்குறளில் 'மருந்து' என்று ஓர் அதிகாரத்தை அமைத்திருக்கிறார். பதார்த்தகுண சிந்தாமணி என்று தமிழில் ஒரு நூல் இருக்கிறது. இது மருந்துக்குப் பயன்படும் வேர், இலை, கிழங்கு, முதலிய பொருள்களின் குண குணங்களை எடுத்துக் கூறுகின்றது. இவற்றைத் தவிர வாகட விஷயங்களிற் பல, உவமைகளாக இலக்கியங்களிற் காணப்படுகின்றன.

ஒருகாலத்தில் தமிழறிஞர்களால் பெரிதும் போற்றிவரப் பட்ட சித்த வைத்தியம், இன்று மெலிவுற்றிருக்கும் காரணம் என்னவென்ற வினா எழுகின்றது.

தமிழ் வைத்தியம் இந்நாட்டில் பரவியிருந்த காலத்தில் வடநாட்டார் தங்கள் வைத்தியமுறையை இங்கே கொண்டு வந்தனர். அஃது ஆயுர்வேதம் எனப்படும்.

ஆயுர்வேதமும் இந்தியாவில் தோன்றியதே. ஆயுர்வேதமும் சித்தவைத்தியமும் ஒன்றைப் பார்த்து மற்றொன்று திருத்தப்பாடுகளை அமைத்துக் கொண்டன. ஒன்றில் புலமை வாய்ந்தவர் மற்றொரு வைத்திய முறையையும் கற்கலானார். இதன் பயனாக நாளடைவில் இரு முறைகளும் தம்முள் பெரும்பாலும் ஒன்றுபடலாயின. இக்காலத்தில் வைத்தியத்தில், வடநாட்டு முறைக்கும் தமிழ்

---

* ''சிந்திநீர்க் கண்டம் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்.''

—திருவள்ளுவமாலை.

† திரிகடுகம் - சுக்கு, திப்பிலி, மிளகு. ஏலாதி - ஏலம் முதலியவற்றாற் செய்யப்படும் ஒரு சூர்ணம். சிறுபஞ்சமூலம் - கண்டங்கத்திரி வேர், சிறுமல்லி வேர், சிறுவழுதுணை வேர், நெருஞ்சி வேர், பெருமல்லி வேர் என்பன.

முறைக்கும் அதிக வேற்றுமை காண்பது அரிது. தமிழில் வழங்கி வந்த சில மருந்துகளின் பெயர்களும் நோய்களின் பெயர்களும் இன்று வடமொழிப் பெயர்களால் வழங்கப் படுகின்றன. பெயர்கள் வடமொழியாயிருத்தலைக் கொண்டு அப்பெயர்கள் குறிக்கும் பொருள்கள் பழந்தமிழர்களால் கண்டறியப் படாதவை என்று நாம் தீர்மானித்துவிடலாகாது. தாமிரபர்ணி யாற்றுக்குத் தனித் தமிழில் 'போருநை' என்று ஒரு பெயருண்டு. இக்காலத்தில் அச் சொல் உலகவழக்கத்தில் வழங்குவதில்லை. தாமிரபர்ணி என்ற வடமொழிப் பெயரைக்கொண்டு, ஆரியர்கள் தமிழ்நாட்டிற்கு வாராதமுன் இந்த நதி தமிழ்நாட்டில் இல்லை என்று 'பொருநை' என்ற சொல்லைக் கேள்வியுற்றிராத ஒருவன் தீர்மானித்து விடுவானானல், அவனைக் குறித்து நாம் என்ன சொல்வது! ஆரியச் சிதைவாகிய பிராகிருதமொழி ஒருகாலத்தில் இந்தியாவின் பொது மொழியாக இருந்தது. அக்காலத்தில் பலதமிழ்ப் பெயர்கள் பிராகிருதபாஷையில் மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். அவ்விதம் மொழிபெயர்க்கப்பட்ட சொற்களே மிகுதியாகப் பயின்றுவந்த காரணத்தினல் அவற்றிற்குரிய தனித்தமிழ்ச் சொற்கள் வழக்காறற்று ஒழிந்தன.

ஆயுர்வேத முறையும் சித்தவைத்திய முறையும் ஒன்றோடொன்று கலந்து, சகோதர முறையில் நாட்டில் செல்வாக்குற்றிருந்த காலத்தில்தான் தமிழில் பல பல வைத்திய நூல்கள் தோன்றின. இவற்றை எழுதியவர்களில் பெரும்பாலோர் ஆரியம் தமிழாகிய இருமொழியிலும் வல்லவர்கள். அவர்கள் தம்மாலெழுதப்படும் நூல்கள் தம்பெயராலேயே நிலவவேண்டுமென்ற விருப்பங்கொண்டவர்கள் அல்லர். அவர்கள் எழுதிய நூல்கள் அகத்தியர், திருவள்ளுவர் முதலிய பெரியோர்களின் பெயர்களால் இன்று விளங்குகின்றன. இவர்களின் மாணவ பரம்பரையினரில் ஒருசிலர் தாம் பாடங் கேட்டவற்றைத் தொகுத்து வெளியிட்டிருக்கலாம். இறையனுர் களவியலுரையை, நக்கீரரிடமிருந்து சிஷ்ய பரம்பரையாகப் பாடங்கேட்டு வந்தவரில் ஒருவர் எழுதிவைத்தார். இறையனுர் களவியலுரை நக்கீரரால் செய்யப்பட்டதென்று இன்று வழங்குகிறது. அதுபோல் இவையுமிருக்கலாம் என்று சிலர் அபிப்பிராயப் படுகின்றனர்.

இந்த இரண்டு மருத்துவ முறைகளும் இந்தியாவில் ஒரே மாதிரியான செல்வாக்குடன் இருந்துவருகையில், முகம்மதியர்கள் இங்கே குடியேறினர்கள். அவர்கள் தம்முடன் யூனனி முறையை இங்கே கொணர்ந்தனர். ஆயுர்வேதமும், சித்தவைத்தியமும் இந்தியாவிலேயே தோன்றினமையின்; அவை நமது உடற்கூற்றுக்கு

ஏற்றவை; மதவிரோதமற்றவை. யூனானி முறை அத்தகையதன்று. அது வேற்று நாட்டிலிருந்து வந்தது; நமக்குப் புதியது. முகம்மதியர்கள் அக்காலத்தில் ஆள்பவர்களாக இருந்ததால் யூனானி முறை நாடெங்கும் எளிதிற் பரவலாயிற்று. அம்முறை இங்கு வந்ததால் ஆயுர்வேத சித்தவைத்திய முறைகளுக்கு இடர்ப்பாடு நேர்ந்தது என்பதற்குத் தக்க சான்றுகளில்லை. பல முகம்மதிய அரசர்கள் இந்து வைத்திய பண்டிதர்களையும் ஆதரித்து வந்ததாகத் தெரிகிறது.

பிற்காலத்தில், ஐரோப்பியர்கள் இந்நாட்டில் குடியேறிய காலத்திலிருந்துதான் சித்தவைத்தியம் மெல்ல மெல்ல க்ஷீணித்திருக்கவேண்டும். மேல்நாட்டார்கள் இந்தியாவைப் பிணிப்பதற்குத் தங்கள் வைத்திய முறையை ஒரு கருவியாகக் கொண்டனர் என்று சிலர் கூறுகின்றனர். ஜான் பஹ்டன் என்னும் ஆங்கிலேய வைத்திய நிபுணர், ஷாஜஹான் புதல்வி நோய் வாய்ப்பட்டிருக்கையில் அந்நோயைத் தீர்த்து ஆங்கிலேயருக்காக வங்கமாகாணத்திற் சில இடங்களையும் உரிமைகளையும் பெற்றார். பாதிரிமார்கள் பல இடங்களில் இலவச வைத்தியசாலைகளை நிறுவி அவற்றின் மூலம் இந்தியமக்களின் அன்பையும் ஆதரவையும் தேடமுயன்றனர். இவற்றின் மூலம் பல இந்தியமக்கள் கிறிஸ்தவர்களாயினர்.

ஆங்கிலேய அரசு இங்கே நிலையாக நிறுவப்பட்ட பிறகு நாடெங்கும் மேல்நாட்டு முறையில் இலவச வைத்தியசாலைகள் தோன்றின. இந்திய இளைஞர்களுக்கு மேல்நாட்டு மருத்துவக் கல்வியைப் புகட்டப் பல மருத்துவப் பள்ளிகள் தோன்றின. சத்திரப் பயிற்சி மேல்நாட்டு வைத்திய முறையில் ஒரு சிறந்த பகுதியாக இருப்பதனாலும், பல இந்தியர்கள் மேல்நாட்டு முறைகளிற் கை தேர்ந்து வைத்தியர்களாக வந்துவிட்டமையாலும், மருந்துகள் இலவசமாகக் கிடைத்து வந்தமையாலும், மருந்துகள், புட்டிகள், ஆஸ்பத்திரியின் ஒழுங்குமுறை, முதலியவற்றின் கவர்ச்சியினாலும் நம் நாட்டுமக்கள் மேனாட்டு வைத்திய முறையை அதிகமாக ஆதரிக்கத் தொடங்கினார்கள்.

இந்நிலையில் சித்தவைத்தியர்களுக்கும் ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் நாட்டில் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. அவர்களிடத்தில் பணம் கொடுத்து வைத்தியம் பார்த்துக் கொள்ளுகிறவர்கள் அருகிவிட்டதனால் பரம்பரை நாட்டுவைத்தியர்கள் நாளடைவில் தம் தொழிலை விட்டொழித்தார்கள். அவர்கள் வழிவந்தவர்கள் வயிறுவளர்க்க வேறு தொழில்களைக் கைக்கொண்டனர். நாட்டுவைத்திய நூல்களில் பல இக்காலத்தில்தான் கவனிப்பா

ரற்றுச் செல்லரித்து அழிந்து போயிருக்கவேண்டும். ஆயுர்வேதத்தைவிடச் சித்தவைத்தியம் பரவியிருந்த இடம் அளவில் குறைந்ததாக இருந்ததால், பின்னதற்கு வந்த வீழ்ச்சி மிகப்பெரியதாயிற்று.

சித்த வைத்தியத்தின் வீழ்ச்சிக்குப் பிறிதொரு காரணமும் கூறலாம். தமிழ்க்கலைகளெல்லாம் பழங்காலத்தில் பாணர், கூத்தியர், கொத்தர், பொற்கொல்லர், வள்ளுவர் முதலியவர்களால் போற்றி வளர்க்கப்பட்டு வந்தன. பிறகு நம்மவர் இத்தொழிலாளிகளை 'இழிகுலத்தவர்' என்று புறக்கணிக்கலாயினர். அதனால் இவர்கள் ஆதரவின்றி ஆக்கம் குன்றித் தம் தொழில்களை விட்டொழித்தனர். சித்தவைத்தியம் பரம்பரையாக நாவிதர்களால் பேணப்பட்டு வந்தது. நாவிதர் இன்னும் மருத்துவர் என்றும், பண்டிதர் என்றும் அழைக்கப்படுகின்றனர். நாவிதர் வைத்தியம் செய்தலை இன்னும் தமிழ்நாட்டின் சில பாகங்களிற் காணலாம். இவர்கள் 'இழிந்த தொழிலாளிகள்' என்ற தப்பெண்ணம் தமிழ்நாட்டில் பரவிவிட்டபின் இவர்களிடம் பண்டிதம் பார்த்துக் கொள்பவர்கள் அரியராயினர். நோய்வாய்ப்பட்டவர்களுக்கு உறுதுணையாக ஆயுர்வேதியர் தமிழ்நாட்டில் நிலைகொண்டதனால் 'பண்டிதர்' பாடு அம்பலமாயிற்று. கடைச்சங்க காலத்தில் தமிழ் அரசர்கள் வைத்தியர்களுக்குச் சிறந்த நிலையளித்துப் பாதுகாத்து வந்தனர். அரசருக்கு ஆலோசனை கூறும் எண்பேராயத்தாரில் ஆயுர்வேதியரும் கூறப்படுதலைச் சங்கநூல்களிற் காணலாம். பிற்காலத்தில் இருப்பினும் தமிழ் வைத்தியமுறை மறைந்தமை வருந்தத்தக்க செய்தியேயாகும்.

நிற்க, உத்தேசமாகப் பதினைந்து வருஷங்களுக்கு முன்பு தமிழ் மக்கள் விழித்துக் கொண்டார்கள். மேல்நாட்டு வைத்திய முறைப்படி செய்யப்பட்ட மருந்துகள் வேறு நாட்டிலிருந்து வருவதால் அவை இந்தியர்களின் தேகக்கூற்றுக்கும் இயல்புக்கும் ஒவ்வாதனவென்றும், அவற்றுள் சில, இந்தியரின் மத உணர்ச்சியைப் பாதிப்பன வென்றும் சில இந்திய விற்பன்னர்கள் கண்டுகொண்டு, தமிழ் வைத்திய முறைக்கு ஆக்கந்தேட முயன்றனர். இதே சமயத்தில் இந்நாட்டில் ஸ்வதேசி இயக்கம் தோன்றியதால், மேல்நாட்டு மருத்துவத்தால் நம்முடைய அளவற்ற பணம் வெளிநாடுகளுக்குச் சென்றுவிடுகின்றன வென்ற காரணத்தைக் காட்டிச் சில பொருளாதார நிபுணர்கள் இந்திய வைத்திய முறையைப் புனருத்தாரணம் செய்யவேண்டுமென்று பலமாகக் கிளர்ச்சி செய்தார்கள். இவ்வித முயற்சிகளால் சித்தவைத்தியம் மீட்டும்

சிறிது தலையெடுத்திருக்கிறது. சில நகரசபைகள் நாட்டுவைத்தியத்துக்கு ஆதரவு தர முன்வந்துள்ளன. என்றாலும் பொது ஜனங்களுக்கு இதனிடம் இன்னும் அதிகப் பற்று ஏற்படவில்லை.

தமிழ் வைத்தியம் முற்காலத்தில் இருந்த உயரிய நிலையை அடையவேண்டுமானால் கீழ்க்கண்ட ஆலோசனைகள் நம்மவர்களால் ஏற்றுக் கொள்ளப் படவேண்டும். தமிழில் நல்ல பயிற்சியுள்ளவர்கள் பழைய வைத்தியநூல்களை ஓதி ஆராய்ந்து சிறந்த பதிப்புக்களாக வெளியிடவேண்டும். நாடெங்கும் இலவசத் தமிழ் வைத்தியசாலைகளை ஏற்படுத்தச் செல்வர்கள் முன்வரவேண்டும். தமிழ் வைத்திய முறைப்படி வைத்தியம் பார்த்துக்கொள்ளுவோருக்குக் குறைந்த பொருட்செலவோடு, நோயும் எளிதில் நீங்கிவிடுமென்ற உணர்ச்சி பொதுமக்களிடம் என்று பரவுகின்றதோ அன்றே இம்முறை ஓங்கும் என்பதை நாம் மறத்தலாகாது. சித்த வைத்திய சம்பந்தமான ஒரு தமிழ்ப் பத்திரிகை நாட்டில் எளியவர்களுக்கும் எளிதில் கிடைக்கும் வகையில் வெளிவரல் வேண்டும். வைத்திய விஷயங்களிற் பல, இன்று இன்னும் நூல்களிற் புகாமல் பலமக்களிடம் கைம்முறைகளாக நிலவி வருகின்றன. அவைகள் ரகஸ்யமாகவும் போற்றப்படுகின்றன. அவற்றையெல்லாந் தொகுத்து நூல்வடிவில் வெளியிடுவதற்குச் சிலர் முன்வரல் வேண்டும். இன்னோரன்ன முறைகள் தேசபக்தர்களால் கையாளப் படுமாயின், சிலகாலத்தில் தமிழ்வைத்தியம் தான் இழந்துவிட்ட பழம் பெருமையை மீட்டும் பெற்றுவிடும் என்பதிற் சந்தேகமில்லை.


# ஆசார்ய ஜகதீச் சந்த்ர வஸு (போஸ்)

டி. என். எஸ்.

---

பிறப்பும், ஆரம்பக் கல்வியும்

தாவரங்களுக்குக்கூட உயிரும், உணர்ச்சியும் உண்டு என்று கண்டறிந்து, அதை ப்ரத்யக்ஷமாக உலகிற்குக் காட்டியவர் ஜகதீச்



ஆசார்ய ஜகதீச் சந்த்ர வஸு (போஸ்)

சந்த்ர வஸு. டாக்காவுக்கு அருகிலுள்ள விக்ரமபுரம் என்னும் கிராமத்தில் 1858-ஆம் வருஷம் நவம்பர்மீ ஒரு கௌரவமான குடும்பத்தில் அவர் பிறந்தார். சிறுவயது முதற்கொண்டே அவருக்குப்புதிதாக ஏதாகிலும் கண்டுபிடிப்பதில் ஊக்கம் இருந்து வந்தது. அப்பொழுது பரீத்பூரில் ஸப்-டிவிஷனல் ஆபீசராக இருந்த அவருடைய தகப்பனார், பகவான் சந்த்ர போஸ், மகன் விரும்பிய மார்க்கத்திலேயே அவனை விட எண்ணி, அவன் அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய சாதனங்களைச் செய்தார்.

பகவான்பாபு சுதேசிக் கல்வி முறையே சிலாக்யமானதென்று கருதுபவர். அவருக்குக் கீழ் உத்தியோகமாயிருந்தவர்கள் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலப் பள்ளிகளுக்கு அனுப்ப, பகவான்பாபு மட்டும் தம்மகன் ஜகதீசனை கிராம பாடசாலையில் சாதாரண நாட்டுப்புறத்துச் சிறுவர்களுடன் கல்வி பயில வைத்தார். இந்தக் கிராமப் படிப்பே ஜகதீசின் பிற்காலவாழ்க்கைக்கு அஸ்திவாரக் கல்லாக இருந்தது.

## இந்தியாவிலும், சீமையிலும் மேற்படிப்பு

கல்கத்தாவிலுள்ள ஸெண்ட் ஸேவியர் காலேஜில் ஜகதீச் பி.ஏ. பரீக்ஷையில் தேறினர். அதற்குப்பின் அவருக்கு இங்கிலாந்து சென்று ஐ. ஸி. எஸ். பரீக்ஷக்குப் படிக்கவேண்டுமென்று ஆசை உண்டாயிற்று. அதைத் தம் தந்தையிடம் கூறினர். தாமே ஒரு நல்ல உத்யோகஸ்தரா யிருப்பினும் பகவான்பாபு தம் மகனுக்கு அவ்வழி ஏற்றதல்ல என்று தெரிந்து அதற்குச் சம்மதிக்கவில்லை. விஜ்ஞானம், வைத்தியம் போன்ற மற்ற துறைகளில் பயிற்சிபெற ஜகதீச் இங்கிலாந்துக்குச் செல்வதை அவர் தடை செய்யவில்லை.

லண்டனில் வந்ததும் வைத்திய மாணவனுகச் சேர்ந்து முதல் வருஷம் தேறிவிட்டார். இரண்டாம் வருஷம்தான் முக்கியமான வருஷம். மனிதனின் அவயவங்களைத் தனித் தனியே ஆராய்ச்சி செய்யப் பிணங்களை அறுக்கும்போது உண்டாகும் துர்நாற்றத்தினுல் ஜகதீச் சந்திரர் அடிக்கடி ஜுரத்தில் விழுந்தார். அதனுல் அவர் வைத்தியப் படிப்பை நிறுத்திவிட்டு விஜ்ஞானத்தைப் பற்றிப் படிக்கக் கேம்ப்ரிட்ஜில் போய்ச் சேர்ந்தார்.

இயற்கை விஜ்ஞான 'ஸ்காலர்ஷிப்' அவருக்குக் கிடைத்தது. 1885-ஆம் வருஷம் லண்டன் சர்வகலாசாலையிலிருந்து பி. எஸ்ஸி பட்டத்துடன் வெளியேறினர்.

## உத்தியோகமும், சங்கடமும்

படிப்பெல்லாம் முடிந்ததும் கல்கத்தாவுக்குத் திரும்பினர். அப்பொழுது அவருக்கு வயது இருபத்தைந்து. மிகவும் சிரமப் பட்டு கல்கத்தா ராஜதானிக் கல்லூரியில், பௌதிக சாஸ்திர பண்டிதராகச் சேர்ந்தார். கறுப்பு ஜாதியானுக இருந்ததால் அவர்மேல் அந்த இலாகாவைச் சேர்ந்தவர்களுக்கு அருவருப்பு. அக்காலத்தில், சாதாரணமாக ஓர் இந்தியனுக்கு, அதே உத்தியோகத்திலிருக்கும் ஐரோப்பியனின் சம்பளத்தில் மூன்றில் ஒருபங்கு குறைத்தே கொடுத்து வந்தார்கள். ஜகதீச் பாபுவுக்கோ இதிலும் பாதிதான் கொடுக்க உடன்பட்டனர். அவர் பதவி இன்னும்

ஸ்திரமாக்கப் படவில்லை என்ற சாக்குச் சொன்னார்கள். இவ்வளவு அநியாயங்களையும் சகித்துக்கொண்டு ஜகதீச்பாபு விடாமுயற்சியுடன் உழைத்துவந்தார். தமக்கு அநீதி செய்கிறார்கள் என்று அவர்கள் தாங்களாகவே தெரிந்துகொள்ளும்பொருட்டு, மாதா மாதம் சம்பளத்திற்காகச் 'செக்' வந்ததும், அதை மாற்றாமல் அப்படியே வைத்து விடுவார். இம்மாதிரி மூன்று வருஷம் செய்தார். அம் மூன்று வருஷங்களும் அவரும் அவர் மனைவியும் எவ்வளவு பொறுமையுடன் தங்கள் கஷ்டத்தைச் சகித்து வந்தார்களோ பகவானே அறிவார்!

நான்காம் வருஷ ஆரம்பத்தில், காலேஜ் பிரின்ஸிபாலும், கல்வி இலாகா டைரெக்டரும், அவருடைய உண்மையான ஊழியத்தையும், பெருந்தன்மையையும் கண்டு அவரைப்போற்ற ஆரம்பித்தனர். இந்த மனமாறுதலால் போஸின் உத்யோகம் காயமாகியது மல்லாமல், சென்ற மூன்று வருஷங்களாக வாங்காத முழுச் சம்பளத்தையும் மொத்தமாகப் பெற்றார்.

### ஆராய்ச்சி: கம்பியில்லாத் தந்தி

**1896**-ஆம் வருஷம் மின்சார சம்பந்தமான ஒரு கட்டுரை எழுதினர். அது விஜ்ஞான உலகில் மிகவும் உயர்தரமானதென்று கொண்டாடப் பட்டது. ராயல் ஸொஸைடியார் (*Royal Society*) அக் கட்டுரையைத் தமது பத்திரிகையில் பிரசுரிக்கக் கொடுத்துதவும்படி வேண்டினர். அதைப் பிரசுரித்தது மல்லாமல் பார்லிமெண்டிலிருந்து, அவர் மேன்மேலும் ஆராய்ச்சி செய்வதற்காக, உதவிச் சம்பளமும் பெறும்படி செய்தனர். அதற்குப்பின் வங்காள கவர்ன்மெண்டார் சில உதவிகள் அளிக்க முன்வந்தனர்.

இந்தச் சமயத்தில், ஆகாச (*Ether*) மூலமாக (கம்பியில்லாமலே) எப்படி ஸங்கேதங்களை (*Signals*) அனுப்ப முடியும் என்ற ஆராய்ச்சியில், உலகத்தில் வெவ்வேறு இடங்களிலிருந்த ப்ரொபஸர் மார்க்கோனி, போஸ், ஓர் அமெரிக்கர், இம் மூவரும் ஈடுபட்டிருந்தனர். வங்காள கவர்னர் உள்பட பல பிரமுகர்கள் முன்னிலையில், முதன்முதலாக அதை ப்ரத்யக்ஷமாக நடத்திக் காட்டியவர் ஜகதீச் போஸ்தான்.

### இங்கிலாந்தில் எதிர்ப்பு

**1901**-ஆம் வருஷம் ராயல் ஸொஸைடியாரின் முன், தாவரங்கள், மிருகங்கள் இரண்டிற்கும் ஒரேவிதமான சில உணர்ச்சிகள் இருப்பதை நிரூபித்துக் காட்டினர். அப்பொழுது ஸர் ஜான் பர்டன் ஸான்டர்ஸன் (*Sir John Burdon*

*Sanderson*) என்ற பழுத்த விஜ்ஞானி, போஸ் தம்முடைய பழைய பௌதிக சம்பந்தமான ஆராய்ச்சியைவிட்டு இதில் நுழைந்தது தவறென்றும், போஸ் தாம் எழுதிய கட்டுரையில் சாதாரண தாவரங்களுக்கும் உணர்ச்சி யிருப்பதாகக் கூறியதைத் தாம் ஒப்ப முடியாதென்றும், கட்டுரையின் பெயரை வேறு விதமாக மாற்ற வேண்டு மென்றும் கூறினர். இரண்டொருவர் அவர் பக்கம் சேர்ந்து கொண்டனர். ஆனல் போஸ் தாம் பிடித்த பிடியை விடவில்லை. இதனல் அவர் கட்டுரையைத் திருப்பிவிட்டனர்.

ஜகதீச் சந்திரர் இந்தியாவிற்குத் திரும்பிவந்து சேர்ந்தார். ஆனுலும் அவர் மனம் நிம்மதி யடைந்தபாடில்லை. எப்படியாவது தான் கண்டுபிடித்தது சரி என்று அவர்களுக்கு நிரூபித்துக் காட்ட வேண்டுமென்று தீர்மானித்துவிட்டார்.

போஸ் மீண்டும் ராயல் ஸொஸைடிக்குச் சென்ருர். அவர்கள் தமக்கு நல்வரவு அளிப்பார்களா என்று முதலில் ஐயமுற்ருர். அவருடன் கூடவிருந்த மற்ருெரு விஜ்ஞானி "இதற்குள் தளர்ந்து விடாதே, போஸ். அவர்கள் கூண்டில் அவர்களைப்போய்த் தாக்கினல் சும்மா இருப்பார்களா?" என்று ஆறுதல்கூறவே, மும்மடங்கு ஊக்கத்துடன் போஸ் தமது ஆராய்ச்சியில் இறங்கினர்.

## சொள்கை நிரூபணம்

கடைசியாக ஒருநாள், தம்முடைய பரிசோதனைகளை அவர்கள் முன்னிலையில் காட்டினதும் அவர்கள் அடைந்த ஆச்சர்யத்திற்கும், சந்தோஷத்திற்கும் எல்லையில்லை. ஆனல் இன்னும் அவருடைய துரதிர்ஷ்டம் அவரை விட்டபாடில்லை. 1901-இல் போஸ் தம் ஆராய்ச்சிக் கட்டுரைகளை ராயல் ஸொஸைடியாரிடம் கொடுத்தபோது அங்கு வந்திருந்த ஒரு விஜ்ஞானி அதைப் பார்த்துவிட்டு, தாம் மறுபடியும் செய்துபார்த்துத் தாமே கண்டு பிடித்ததாகக் கூறினர். ஆனல் நல்லவேளையாக அக்கட்டுரையை 'ப்ரூப்' பார்த்த இருவர், போஸ்தான் முதலில் நிரூபித்தார் என்று தெரிவிக்கவே, எல்லோரும் போஸின் ஆராய்ச்சிகளை முழு மனதுடன் அங்கீகரித்தனர்.

1909-ஆம் வருஷம் வங்காள உப-கவர்னர் ஸர் ஜான் உட்பர்ன் (*Sir John Woodburn*) இந்திய கவர்ன்மெண்டின் சார்பாக அவரைப் பாரிஸில் நடந்த விஜ்ஞான காங்கிரஸுக்கு அனுப்பினர். அதற்குப்பின் போஸ் உலகயாத்திரை செய்துவரப் புறப்பட்டார்.

ஆக்ஸ்போர்டில் அநேக பிரபல விஜ்ஞானிகள்முன் சில பரிசோதனைகளை நிகழ்த்திக் காட்டினர். அவர்கள் போஸின் விஜ

ஞானக் கருவிகளைப்பார்த்து, "இதெல்லாம் எங்கே செய்தீர்கள்?" என்று கேட்டதற்கு, போஸ் மிகப் பெருமையுடன், "இந்தியாவில்" என்றார். தாம் இந்தியர் என்பதை அவர் ஒருநாளும் மறந்ததில்லை.

அமெரிக்கா, ஐரோப்பா முதலிய கண்டங்களிலுள்ள விஜ்ஞான சங்கங்களெல்லாம் அவருக்கு நல்வரவேற்பு அளித்தன. கடைசியாக இந்தியாவுக்குத் திரும்பினார்.

பஞ்ஜாப் ஸர்வகலாசாலையார் 1200 ரூபாய் கொடுத்து அவரைப் பிரஸங்கம் செய்ய அழைத்தனர். அவர் அப்படியே செய்வதாக வாக்களித்து, அந்த ரூபாய் ஆயிரத்து இருநூறையும் திருப்பியளித்து, அதை வேறுயாராவது ஆராய்ச்சியாளருக்கு மாதாமாதம் ரூபாய் நூறாகக் கொடுத்துதவுமாறு கூறினார்! அங்கு நிகழ்த்திய பிரஸங்கத்தில், "புத்தருடைய வைத்தியனாக இருந்த ஜீவகன், சிறுவயதில் எவ்வாறு வங்கதேசத்திலிருந்து தக்ஷசீலத்திற்கு (பஞ்ஜாபிலுள்ளது) வித்தைபயில வந்தானோ, அதுபோலவே இதோ ஒரு யாத்ரீகன் இருபத்தைந்து நூற்றாண்டுகள் கழித்து தனக்குத்தெரிந்த கொஞ்சம் ஞானத்தை உங்களுக்குப் புகட்ட வந்திருக்கிறான். அக்காலத்தில் நானாதேசங்களிலிருந்து வித்தை கற்க, இந்தியாவிலுள்ள தக்ஷசீலம், நாளந்தா, காஞ்சி, முதலிய வித்யாபீடங்களுக்கு எத்தனையோ மாணாக்கர்கள் வந்தார்கள்!" என்று பாரத நாட்டின் பண்டைப் பெருமையை எடுத்துக் காட்டினார்.

## ஆராய்ச்சிமுடிபுகளும், பெருமையும்

போஸ் எதைக்கண்டு பிடித்ததனால் உலகத்தில் இவ்வளவு பிரபலமாக விளங்குகிறார்? தாவரங்களுக்குக் கூட உயிரும், உணர்ச்சியும், மனிதர்களைப்போல் ரத்தக்குழாய்களின் அமைப்பும், அதன் மூலமாகக் கிட்டும் ஆகாரத்தைத் தன்மயமாக்கிக் கொள்ளும் சக்தியும், உண்டென்பதை அறிந்து நிரூபித்துக் காட்டியதனால் தான். தொட்டால்சிணுங்கி போன்ற சில தாவரங்களுக்குத்தான் உணர்ச்சி உண்டு என்று வெகுகாலம்வரை எண்ணப்பட்டு வந்தது. ஆனால் தாவரங்கள் அனைவற்றிற்கும் அவ்வுணர்ச்சி இருக்கிற தென்று தாம் கண்டுபிடித்திருக்கும் 'க்ரெஸ்கோக்ராப்' என்ற நுட்பமான கருவியின் உதவியால் ப்ரத்யக்ஷமாகக் காட்டுகிறார். அதில் இணைக்கப் பட்டிருக்கும் எழுதுகோல் ஒரு கறுப்புப் பலகையில் தாவரத்தினுடைய உணர்ச்சியின் வேகத்தை அநேகம்புள்ளி களிட்டுக் குறிக்கிறது. ஒருபுள்ளிக்கும் அதற்கடுத்த மற்ற புள்ளிக்கும் இடையிலுள்ள இடம் $\frac{1}{100}$ வினாடி என்பதாக நாம் கொள்ளவேண்டும். உதாரணமாக, ஒரு செடியை அடிக்கிறோம்

என்று வைத்துக்கொள்வோம். அதற்கு அந்த அடி உறைத்துப் பதில் சங்கேதம் தர $\frac{1}{500}$ வினாடிநேரம் ஆகிறது. செடி ஓய்ந்திருந்தால் இன்னும் கொஞ்ச நாழிகை பிடிக்கும். செடியை ஓங்கி அடித்தோமானால் திக்ப்ரமை யடைந்ததுபோல் ஜீவனாடி அடித்துக்கொள்ளாது வெகுநேரம் நின்றுவிடுகிறது. வெயில்காலத்தில் அதிக வேகத்துடனும், குளிர்காலம், மழை காலம், மப்புபோட்டிருக்கும் சமயம், குறைந்தவேகத்துடனும் நாடி அடித்துக் கொள்கிறது. மரங்கள் இரவு 12 மணியிலிருந்து காலை 8 மணிவரை தூங்குவதாக போஸ் கூறுகிறார். சமீபத்தில் அவர் கல்கத்தாவில், சில மரங்களுக்கு மயக்க மருந்தைக் கொடுத்து (நமக்கு ரணசிகித்ஸை செய்வதற்குமுன் வலிதெரியாமலிருக்க 'க்ளோரபாரம்' கொடுப்பதுபோல்) அவைகளைப் பெயர்த்து வேறிடத்தில் நட்டார். சீக்கிரத்தில் அம்மரங்கள் செழிப்பாக வளர ஆரம்பித்தன.

அவர் கண்டுபிடித்திருப்பதில் மற்றொன்று (*Super Retina or Artificial eyes*) செயற்கைக் கண்கள் என்பது.

55-ஆவது வயதில் உத்யோகத்தைவிட்டு விலகவேண்டிய போஸ், வங்காள கவர்மெண்டார் அவர் அரிய தொண்டிற்காக இன்னும் இரண்டுவருஷம் அவர் பதவியை நீடித்ததால், அதை ஏற்றுக்கொண்டார். பிறகு சர்க்கார் அவருக்கு ஸர் பட்டம் கொடுத்தனர்.

ஆசார்ய பி. ஸி. ராய் "போஸ் சாதாரணமான விஞ்ஞானி யல்ல. நூதன யுகத்தை உண்டாக்கியவர். சுயநலமற்றவர். மார்க்கோனி கண்டுபிடித்ததற்கு முன், போஸ் கம்பியில்லாத் தந்தி கண்டுபிடித்து விட்டார். அதற்குப் 'பேடென்ட்' வாங்கியிருந்தால் எவ்வளவோ பொருளீட்டி யிருப்பார்." என்று கூறுகிறார்.

போஸ் கல்கத்தாவில் ஓர் ஆராய்ச்சிசாலை ஏற்படுத்தினார். அதில் சேர நாலா தேசங்களிலிருந்தும் மாணவர்கள் விண்ணப்பம் போடுகிறார்கள். அவர் கண்டுபிடித்த 'க்ரெஸ்கோக்ராப்' என்ற கருவிக்கு எல்லாதேசங்களிலிருந்தும் 'ஆர்டர்' வருகிறது.

போஸ் இதெல்லாம் தாம் கண்டுபிடித்ததாகப் புகழ்ச்சி பண்ணிக்கொள்ளவில்லை. "யாவும் அவனே, உயிரெல்லாம் ஒன்று, என்று தெரிவிக்க இறைவனே இதெல்லாம் செய்துமுடித்தான்" என்கிறார்.

---

# சாஸ்திரம்

## மனித வாழ்க்கையும் பூச்சிகளும்—II

ராவ்சாகேப் டி. என். எஸ். ராகவாச்சாரி. B. A.

---

நமது கைத்தொழில்களில் உபயோகப்படுகிற அரக்கு, சாயம், முதலிய வஸ்துக்களை உண்டுபண்ணும் பூச்சிகள் மனிதருக்கு உபயோகமானவைதாம். ஆயினும் இவ்வினத்தைச் சேர்ந்த பூச்சிகளிற்பல, பயிர்களை நாசம் செய்யும் தன்மையன. சீமையத்திப் பழத்தைப் பழுக்கச் செய்வது ஒரு குளவி.

**சீமையத்தியும், குளவியும்.**

சீமையத்திப்பழத்தின் ஜீவிய சரித்திரம் மிகவும் விநோதகரமானது. காட்டத்தி, அல்லது கல்லத்தி என்று சொல்லும் அத்திக்காய் ருசியாயிருப்பதில்லை. வெகு காலமாக ஸ்மர்ணா என்ற ஊரில் சீமையத்திச் செடிகளைக் காட்டத்தி மரங்கள் வளர்ந்திருக்குமிடங்களிலே பயிர் செய்தார்கள். சீமையத்திச்செடியின்மேல் காய்கள் நிரம்பிய காட்டத்திக் கிளைகளை வெட்டித்தொங்கவிட்டு வந்தார்கள். ருசியுள்ள நல்ல அத்திப்பழங்கள் பழுத்தன. இவைகளை அமெரிக்காவுக்கு ஏற்றுமதிசெய்து நல்ல லாபமடைந்து வந்தார்கள். அமெரிக்கா கண்டத்தவர், இச்செடிகளைத் தங்கள் தோட்டங்களில் பயிரிட்டால் நல்ல லாபமுண்டு என்று கண்டுகொண்டு, ஸ்மர்ணாவிலிருந்து சீமையத்திச்செடிகளைத் தருவித்து வளர்த்தார்கள். பழங்களே கிடைக்கவில்லை. செடிகளை அனுப்பியவர் தங்களை மோசஞ் செய்துவிட்டதாக எண்ணி, நேரிலேவந்து பார்வையிட்டுத் தங்களுக்குத் தேவையான உயர்தரச்செடிகளைப் பொறுக்கி எடுத்துப்போய் வளர்த்துப் பார்த்தார்கள். அப்பொழுதும் பயனில்லாமற் போயிற்று. அதன்பிறகு, காட்டத்திக் கிளைகளைக் கட்டிவைக்கும் முறையை அறிந்துகொண்டு, தாங்களும் காட்டத்திச்செடியையும் கூடவே பயிராக்கிக் காட்டத்திச் செடியின் பூக்களிலிருந்து மகரந்தப்பொடியைச் சேகரித்துச் சீமையத்திப் பூக்களில்

தூவினர்கள். மிகச்சிறந்த பழங்கள் கிடைத்தன. ஆயினும், ஆயிரக்கணக்கான செடிகளிலுள்ள கோடிக்கணக்கான புஷ்பங்களின்மேல் இவ்விதமாக மகரந்தப் பொடியைக் கையால் தூவிப் பழுக்கவைப்பது மிகவும் கஷ்டமான காரியமாகப்போகவே, ஏதாவதொரு பூச்சியினுதவியால் இக்காரியத்தை நிறைவேற்ற வேண்டுமென்று தீர்மானித்தார்கள். ஆழ்ந்த ஆராய்ச்சிகள் செய்து 'சால்சிட் வாஸ்ப்' என்ற குளவிதான் இந்த வேலைக்கு சிலாக்கியமானதெனக் கண்டுபிடித்தார்கள். அதன் காரணமாக, இப்போது அக்குளவி தானகவே அத்திப்பழத்தோட்டங்களில் குடிவந்து விட்டது; அமெரிக்கா கண்டத்தவர்க்கு ஏராளமான திரவியத்தைத் தருகிறது. இதுபோன்ற மகரந்தப்பொடி மாற்றல்களினல் இன்னும் எவ்வளவோ புதிய சௌகரியங்கள் ஏற்படலாம். புஷ்பங்களில் வந்து உட்கார்ந்து ரீங்காரம் செய்யும் பூச்சிகளின் பழக்க வழக்கங்களை நாம் எல்லோரும் சூக்ஷுமமாகவும், கவனமாகவும் உற்றுநோக்கினல், புதியனவாய்ப் பல விஷயங்களை இயற்றுவித்தல் கூடும்.

வண்டு.

அமெரிக்கா கண்டத்தில், ராக்கிமலைகளிலிருந்து லேடி பறவைகள் என்னுமோர் பூச்சியின் குஞ்சுப்புழுக்களை, ஒவ்வொரு வருஷத்திலும் நவம்பர் மாதத்தில் சேகரிக்கிருர்கள். இக்குஞ்சுப்புழுக்களை நகரங்களுக்குக் கொண்டுவந்து சீதளமாயுள்ள செயற்கை அறைகளுள் வைத்துக்காப்பாற்றி, அடுத்த வருஷம் ஏப்ரல் அல்லது மே மாதத்தில் (இதற்குள் புழுக்கள் பெரும் பூச்சிகளாக மாறியிருக்கும்) இந்தப்பூச்சிகளை விவசாயிகளுக்கு விலைக்கு விற்கிருர்கள். இந்தப் பூச்சியின் விசேஷகுண மென்னவென்ருல், கோதுமை, அரிசி, முதலிய பலபயிர்களைத் தின்று பெருத்த நஷ்டத்தையுண்டு பண்ணும் ஒருவிதப் பச்சை ஈக்களை இவை தீவிரமாகத் தின்று விடுகின்றன. ஆகவே பயிர்கள் செழித்துப் பலனளிக்கும். இவ்விதம் செய்வதனல் வடஅமெரிக்காகண்டத்தில் மட்டும், பல கோடி டாலர்கள் (ஒரு டாலர்=சுமார் ஒரு வராகன்=மூன்றரை ரூபாய்) வருஷந்தோறும் லாபமாகிறதாம். பயிரிடப்பட்ட தான்யங்களையும், பழங்களையும் முதிருந் தறுவாயிலுள்ள செடிகளையும் தின்றுநாசமாக்கக்கூடிய பல பூச்சிகளைக் கொன்று தின்னும் வண்டினங்கள் ஆயிரக்கணக்கானவை.

சாணி, எரு, குப்பை, அழுகிக் கொண்டிருக்கும் மாமிசம் முதலிய பதார்த்தங்கள், இன்னும் இவைபோன்ற மற்ற அசுத்த

வண்டு: கறையான்

சாமான்களேயே உணவாக உட்கொண்டு அவ் வசுத்தங்களே இல்லாமற் செய்யும் பூச்சிகள், வண்டு, கறையான் முதலியன மூன்ருவது வகுப்பைச் சேர்ந்தவை. கறையான் வீடுகளிலுள்ள சாமான் களேயும், மரங்களேயும் தின்று நாசமாக்கிவிடுகிறதே, இதை எப்படி உபகாரிக் கூட்டத்தில் சேர்ப்பது என்று கேட்கலாம். கறையான், வீடுகளில் புகுந்து நஷ்டம் உண்டாக்குவது வாஸ்த வந்தான். கறையானே வருந்தி யழைப்பது போல் அதற்கு உணவாகும் பொருள்களே அதற்குக் கிட்டும்படிக்கு வைப் பதனுலல்லவோ அது அவ்விதம் செய்கிறது. கறையானுக்குப் பிடித்த முக்கிய உணவு, தாவரப்பொருள்களிலுள்ள 'செல்லு லோஸ்' என்னும் சத்து. மடிந்தும் மக்கியும்போன மரங்கள், செடி, கிளே, இலே, முதலிய தாவரப்பொருள்கள் இவற்றிலிருந்து இந்தச் சத்தைக் கறையான் அடைகிறது. மண்ணுண்ணிப்பாம்புகள் அடி யிலிருக்கும் மண்ணே மேலுக்கும், மேலேயிருக்கிற மண்ணேக்கீழுக் கும் கொண்டுபோய் மண்ணின் சத்தை காற்ருடச்செய்து விருத்தி செய்வது போல், கறையான்களும் செய்கின்றன. கறையான்புற்று ஒரு பெரிய கற்கோட்டையை ஒத்தது. இந்தப் புற்றுக்கள் 20 அல்லது 30 அடி உயரம் கூட இருக்கும். கறையான்புற்றின் சுவர் கள் மக்கிப்போன மிகச்சிறிய மரத்துண்டுகளேயும், மண்ணேயும் சேர்த்துக் கறையான்களின் உமிழ்நீரால் இசைத்துப் பிசைந்து கட்டப்பெற்றவை. கறையான்புற்றைக் கட்டபாரையைக் கொண்டு இடித்தாலும் நுனிமழுங்குமே யல்லாது, புற்று இலகுவில் இடி யாது. கறையான்புற்று ஒன்றைச் செங்குத்தாக வெட்டிப்பார்த் தால், அதற்குள் அதிசயமான செயற்கைக்காட்சிகள் காணப்பெறும். புற்றுக்குள், 70 அல்லது 80 அடி ஆழமுள்ள மிகச்சிறிய கிணறு ஒன்று இருக்கும். இக்கிணற்றிலிருந்து கறையான்கள் சரம் போல ஜலம் எடுத்துக்கொண்டு ஏறி மேல்நோக்கி வருவதைப் பார்க்க லாம். இவ்விதம் ஜலம் கொண்டுவருவதற்குக் காரணம் இரண்டு. முதலாவது, புற்றிற்குள் குளிர்ச்சியான காற்று எப்போதும் நட மாடிக்கொண்டிருக்க வேண்டும் என்று ஒன்று. இரண்டாவது, தங்கள் ஆகாரத்திற்கு வேண்டிய 'காளான்' நாய்க்குடை (*Mushroom*) களேப் பயிராக்கவேண்டியது. கறையான் நாய்க்குடை விதைகளேப் போட்டுத் தண்ணீரூற்றிவளர்க்கும். கறையான் மேலே கூறிய உணவுப் பொருள்களே உண்டு வளர்வதோடு, ஒன்றுக் கொன்று உணவு ஊட்டிக்கொள்ளும். ஒன்று தான் சாப்பிட்ட உணவை 'எதிர்க்கெடுத்து' வயிற்றினின்றும் வாய்க்குக் கொண்டுவந்து, மற்ெருரு கறையானுக்கு ஊட்டும். இது

மட்டுமல்லாமல், ஒன்றுக்கொன்று தேகத்தின் மேல் சுரக்கும் வியர்வை போன்ற எண்ணெய்ச் சத்தை நக்கியுண்ணும். 890 வகைப்பட்ட கறையான்களுண்டு. இவை ஒவ்வொன்றிலும் ஐந்து இனங்கள். அவற்றுள் மூன்று இனங்கள்தாம் முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கும் சக்திவாய்ந்தவை. மற்றைய இரண்டு இனங்களும் மலடுகள். இவை உழைப்பாளிகளாகவும், சிப்பாய்களாகவும் காலங்கழித்து மடிவன. இவ்வைந்து இனங்களின் தேகத்தில் சுரக்கும் வியர்வையையொத்த சத்து, வெவ்வேறு ருசியும் மணமுமுள்ளது. ராணி இனத்தைச் சேர்ந்த கறையானின் தேகச்சுரப்பை மிகவும் சிலாக்கியமானதாகக் கறையான்கள் மதிக்கின்றன.

## இடையூறு இயற்றும் பூச்சிகள்

பயிர்களைத் தின்றுநாசமாக்கி நஷ்டம் விளைவிக்கும் பூச்சிகள் உலகம் முழுவதும் வியாபித்திருக்கின்றன. இவை பூச்சி வகுப்பிலுள்ள இனங்கள் எல்லாவற்றிலும் காணப்படுகின்றன. புஸ்தகங்கள், உடுக்கும் உடைகள், நாற்காலி, மேஜை, கட்டில், முதலிய வீட்டுச் சாமான்கள் எல்லாவற்றையும் கடித்துத் துவாரமிட்டுத் தின்று ஜீவிக்கும் பூச்சிகள் பல வுண்டு. புஸ்தகங்களையும், காகிதம்,

**ராமபாணம்:**
**கரப்பான்:**
**வெட்டுக்கிளி:**
**தத்துக்கிளி:**

தஸ்தாவேஜுகளையும் துளையிட்டுச் சாப்பிட்டு வளரும் வெள்ளிமீன் என்று சொல்லப்படும் ராமபாணத்தை எல்லாரும் நன்கறிவார்கள். இப்பூச்சிக்குக் கண் கிடையாது. சிறகுகளுமில்லை. ஆனால் முகத்தில் நீண்ட இரண்டு மயிர்கள் உண்டு. இவைதாம் அப்பூச்சியின் சப்த, ஸ்பரிச, ரஸ, ரூப, கந்தத்துக்கு உதவியான கருவிகள். கரப்பான்பூச்சி, மா, சர்க்கரைப் பதார்த்தங்கள், முதலியவற்றின் மேல் விசேஷமாக வந்து உட்காரும். அது சாப்பிடுகிறது அதிகமல்ல. அது உட்கார்ந்தமட்டில் பதார்த்தங்கள் இறைக்கப்பட்டு, அதன் புழுக்கைகளினால் அசுத்தமாக்கப்படுவது அதிகம். இருட்டான சாக்குடைகளிலும் சுவர்ப்பிளவுகளிலும் இந்தப்பூச்சி வசிக்கும்.

வெட்டுக்கிளிகளினால் நெற்பயிர், கோதுமைப் பயிர்களுக்கு ஏற்படும் சேதம் கணக்கிடமுடியாது. ஒரு வெட்டுக்கிளிக்கூட்டம் பயிர்நிறைந்த வயல்களில் வந்து சேர்ந்தால், வெகுசீக்கிரத்தில் பயிர்கள் அவ்வளவையும் தின்று நாசமாக்கிவிடும். தென்னிந்தியாவில், இதுவரையில் வெட்டுக்கிளிகளால் பயிருக்குச் சேதம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. வட இந்தியாவிலும், எகிப்துதேசத்

தில் சூயஸ்கால்வாய் பிரதேசத்திலும், வெட்டுக்கிளி உபத்திரவம் அதிகம். இந்த வெட்டுக்கிளிகள் ஊரூராய்ப் பறந்துபோய்ப் பயிரை நாசம்செய்வதாக இதுவரையில் எல்லோரும் நினைத்து வந்தார்கள். ஆனால் சென்ற சில வருஷங்களில் நடத்தப்பெற்ற தீவிர ஆராய்ச்சியினால், வெட்டுக்கிளிகள் வருஷந்தோறுமோ அல்லது சிற்சில வருஷங்களுக்கொருதரமோ ஏதாவது ஒரு பிரதேசத்தில் திடீரெனத்தோன்றிப் பயிர்களைத்தின்று நாசம் செய்வதில்லை என்றும், ஒருதரம் ஒரு பிரதேசத்தில் தோன்றிய வெட்டுக்கிளிகள் அப்பிரதேசத்திலேயே தத்துக்கிளிகளாக உருமாறி வசித்து வந்து, சிற்சில வருஷங்களில் மறுபடி வெட்டுக்கிளிகளாகின்றன வென்றும், தகுந்த பிரமாணங்களுடனும், ருசுக்களுடனும் நிருபிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஊர்விட்டு ஊர்செல்லும் தன்மையுடைய வெட்டுக்கிளிகள் என்ற ஒரு பிரத்தியேகமான இனம் இல்லை என்பது சமீபத்தில் விளக்கப்பட்டிருக்கிறது.

மூட்டைப்பூச்சி இனத்தில் சேர்ந்த பல பூச்சிகள் பயிர்களைச் சேதம் செய்யும். ஐரோப்பாவில் கோதுமைப்பயிரை யழிக்கும் ஹாட்டென்டாட் பக், முட்டைக்கோஸ் கீரையைக்குடைந்து தின்னும் பூச்சி, நெற்பயிரையழிக்கும் நெற்பூச்சி, பருத்தியை நாசமாக்கும் நெருப்புப்பூச்சி, தேயிலைப்பயிரைத்தின்று வளரும் (தேயிலைக் கொசுகு என்று சொல்லப்படும்) பூச்சி, நார்த்தம்பழம், ஆரஞ்சுப்பழத்தோட்டங்களில் மிக்க உபத்திரவம் செய்து இலைகளைத்தின்று உதிரச்செய்து, பூக்களையுங்கடித்துப் பிஞ்சுகளைப் பருக்கவிடாமலடிக்கும் பளபளப்பான இலைப்பூச்சி, முதலியவை மூட்டைப்பூச்சி இனத்தைச் சேர்ந்தனவே யாகும்.

**சிகேடா, முதலியன**

செடிப்பேன் முதலிய சிதள் பூச்சிகள் செடிகளின் மேலேயே வசிப்பவை. செடியின் ரஸத்தை உறிஞ்சியும், சத்தைக் கிரகித்துத் தின்றும் வாழ்வன. இவற்றின் ஆகாரக்குழாயின் இடையில் இரண்டு பிரிவுகளுண்டு. ஒன்றின்வழியாக ஆகாரத்திலுள்ள திரவ சத்து நேரே குடலைப்போய்ச் சேரும். மற்றொன்றின் வழியாகத் தான் கெட்டிப் பதார்த்தங்கள் நடுக்குடலுக்குட்போகும். சிகேடா (*Cicada*) என்னும் பூச்சி, அஸ்தமன சமயத்தில் பாடுவதைப்பலர் கேட்டிருக்கலாம். உஷ்ணப்பிரதேசங்களில்தான் இவை மிகவும் வியாபித்துள்ளவை. இப்பூச்சிகளின் ஆண்கள் மட்டுமே பாடுந் திறமை வாய்ந்தவை. ஆப்பிள்செடி, பேரிக்காய்ச்செடி இரண்டையும் தின்று திரவசத்தை யுறிஞ்சும் பூச்சிகள் இந்த இனத்தைச் சேர்ந்தவை.

வண்டினங்கள்: வண்டினங்களில் இரண்டு லக்ஷம் வகை உண்டு. இவை கரும்புப் பயிர், நெற்பயிர், தென்னை, முதலிய பல பயிர்களையும், நமது உணவுப்பொருள்களில் பல வற்றையும் தின்று வருஷந்தோறும் கோடிக்கணக்கான ரூபாய்களை நஷ்டமுண்டுபண்ணிவருகின்றன. பயிர்களின் வேர்களை மட்டும் வெட்டித் தின்னும் வண்டுகள் சில. குருத்து, இலை, மொக்கு, புஷ்பம், கதிர், இவைகளில் விசேஷமான பற்று உடைய வண்டுகள் பல. ஆப்பிள் செடியின் புஷ்பத்திற்குள் முட்டையிட்டுப் புஷ்பம் பழமானபின் வண்டாகி, பழத்தைத் தின்றுவிட்டு அதைக் குடைந்துகொண்டு வெளியேறும் வண்டின் ஜீவியசரித்திரம் மிக்க ஆச்சரியமானது. பெண்வண்டு, சாதாரணமாக ஆப்பிள் செடியின் பட்டையின் மேல் ஒட்டிக்கொண்டு வசிக்கும். அஸ்தமன சமயத்தில் பறந்தோடி விளையாடும். ஆப்பிள் செடியில் பிஞ்சாக மாறக்கூடிய கருவுற்ற புஷ்பத்திற்குச்சென்று, 40 அல்லது 60 முட்டைகளை அதிலே இடும். முட்டையிட்ட பத்து நாட்களுக்கெல்லாம் குஞ்சுகள் வெளிப்பட்டு, ஆப்பிள் பிஞ்சுக்குள் குடைந்துகொண்டே போய் வசித்துவரும். பிஞ்சு பருக்கப்பருக்க, குஞ்சுகளும் காயைத்தின்று பருக்கும். கடைசியாக, ஆப்பிள் பழுப்பதற்குமுன் பழத்தின் நடுவைக் குடைந்துசொண்டு, வண்டின் குஞ்சுகள் புழு வடிவமாக வெளியேறிவிடும். பழமும் உருப்படாது; நலிந்து போம். வெளிப்பட்ட குஞ்சு ஒரு கூட்டைச்செய்து கொண்டு, மரப்பட்டையிலுள்ள இடுக்குகளில், உறங்கும் புழுவாக மாரிக்காலம்முழுவதும் வசிக்கும். ஆப்பிள் செடி மறுபடி பூக்கவாரம்பித்தவுடன், குஞ்சும் பருத்துப் பூச்சியாகமாறி, முட்டையிடப் புறப்பட்டுவிடும். இவ்விதமாகவே அவ்வண்டுகள் தங்களுடைய ஆயுளைக் கழிக்கின்றன. நாற்காலி, மேஜைகள் செய்வதற்கான பற்பல விலையுயர்ந்த மரங்களைத் துளைத்துப் புரையாக்கிவிடும் நீண்ட கொம்புபோன்ற அவயவங்களைத் தலையில் கொண்ட வண்டுகள் ஆயிரக்கணக்கான மரங்களை வருஷந்தோறும் நாசமாக்குகின்றன. இன்னும் மரத்திற்குள் குடைந்து சென்று, மரத்தினுள்ளேயிருக்கும் சத்துப்பொருள்களைப் பொடியாக்கித் தின்றுவிடும் வண்டுகள் பலவுள. நாற்காலி, மேஜை, கட்டில், முதலிய மரச் சாமான்களில் சிறு துவாரமிட்டுக் குடைந்துசென்று மரத்தை நாளடைவில் கெடுத்துவிடும் வண்டுக்கு "மரணக்காவல் வண்டு" எனப்பெயர். இவை வீட்டின் உத்தரம், தூண், முதலியவற்றையும் இவ்வாறே நாசமாக்கும். உணவுக்கான தானியங்களையும், தோல், பருத்தி, புகையிலை, இவைகளாலாக்கப்பெற்ற சாமான்களையும், தின்று வசிக்கும் சிறு வண்டுகள் பல. அரிசி, கோதுமை, ரவை, கடலைமா,

முதலிய பொருள்களில் நாம் விசேஷமாகப்பார்க்கும் செக்கான் பூச்சியும் ஒரு வண்டுதான். பிஸ்கோத்து, புஸ்தகங்கள், தானியங்கள், அபின், இவைகளைக் குடைந்து தின்னும் வண்டு பிஸ்கோத்து வண்டு எனப்படும். தென்னைமரப்பாளையையும், தென்னைமரத்தையுமே குடைந்து தின்னும் வண்டிற்குக் காண்டாமிருக வண்டு என்று பெயர். இவ்வண்டடித்த தென்னைமரம் பட்டுப்போய் உலர்ந்து விடும்.

ஈ; கொசு.

ஈ, கொசு, முதலிய பூச்சிகளைப்பற்றி அடுத்தபடி விசாரிப்போம். தானியங்களுக்குக் கெடுதிவிளைக்கும் பல பூச்சிகள் இவ்வினத்தைச் சார்ந்தவை. நீயூஜீலண்டு தேசத்தில் பேரிக்காயைக் காய்க்கச்செய்ய முடியாமலே போனது, 'பேரிக்கொசு' என்ற சிறு பூச்சியின் உபத்திரவத்தினாலே தான். மெக்ஸிகோ தேசத்தில் ஆரஞ்சுமாக்கட் என்னும் பூச்சியின் உபத்திரவத்தின் காரணமாக ஆரஞ்சு, நார்த்தை, கிச்சிலிப்பழத்தோட்டங்களில் ஏராளமான நஷ்டமுண்டாகிறது. பாலடைக்கட்டி, உலர்த்தப்பெற்ற திராட்சைப் (கிசுமிசு) பழம் இவைகளைத்தின்று நாசமாக்கும் ஈக்களினத்தைச் சேர்ந்த பூச்சிகள் சில உண்டு. இவ்வாறு இடையூறியற்றும் பூச்சியினங்கள் இன்னும் பலவுள.

மனிதருடைய சுகாதார நிலைமைக்கு இடைஞ்சல் செய்வனவாய், அவர்களுடைய தேக சௌக்கியத்தைக் கெடுப்பனவாய், நோயுண்டாக்கவல்லமை யுடையனவாய், அவர்களுடைய மரணத்திற்கே காரணமாய், சில பூச்சிகள் இருக்கின்றன.

மனிதரைக் கடித்தோ, கொட்டியோ, அல்லது உணவுப் பொருள்களை விஷமாக்கியோ, சுகாதாரநிலைமைக்குக் கேடுவிளைவிக்கும் பூச்சியினங்கள் பின்வருவன:—(1) ஈக்கள் (2) தெள்ளு (3) பேன் (4) மூட்டைப்பூச்சி (5) குளவி, தேனீ இனங்கள்.

ஈக்கள்: இப்பூச்சிகளால் மனிதர் துன்புறுவது பலரும் நன்கறிந்த விஷயமே. ரத்தபேதி, வாந்திபேதி, டைபாயிட் என்னும் விஷ ஜ்வரம், முதலிய கொடிய நோய்களால் வருந்துபவரது வாந்தி, மல, மூத்திரங்களில் நிறைந்துள்ள, கண்ணுக்குப்புலப்படாத, அணுக்கிருமிகளைத் தாங்கிச் சென்று, நோயற்றவர்களுக்குக் கொடுத்து, மரணத்திற்கிடமுண்டாக்கும் சக்திபெற்ற பூச்சிகளிவை. இவைகளால் இன்னும் பல வியாதிகளும் பரவுகின்றன. ஆயினும், இந்த இனத்தைச்சேர்ந்த ஈயின் முட்டைகளினின்றும் வெளிப்படும் புழுக்குஞ்சுகளை நல்ல வழியில் பயன்படச்செய்திருக்கிறார்கள். எளிதில் ஆறிவராத ஆழமான புண்களுக்குள் இவற்றை விடுகிறார்கள். அழுக்கை இவை உண்பதால் புண்கள்

விரைவில் ஆறிவிடுகின்றன. இந்த நூதன ஆராய்ச்சி மிகவும் பாராட்டத்தக்கது. மிகவும் அருவருக்கத்தக்க, கொடிய, பாதகச் செயல்களைச் செய்துவரும் ஈக்களுங் கூட, நன்மைபயக்கும் திறன் வாய்ந்துள்ள ஒரு அமிசம் பொருந்தியிருப்பனவாக ஏற்பட்டது. இரத்தத்தை உறிஞ்சிக்குடித்து வளரும் ஈக்களுள் சில, வெகு கொடிய நோய்களைப் பரவச்செய்கின்றன. தூங்குநோய் என்னும் கொடிய வியாதியை யுண்டாக்கும் ட்ரிபனசோம் என்னும் அணுப் பிரமாணமான பூச்சியைத் தொத்தும்படி செய்வது இரத்தங் குடிக்கும் ஒருவகை ஈ. இரத்தம் குடித்து வளரும் ஈக்கள் சில, மாடுகளை மட்டும் உபத்திரவிக்கும்; மனிதரைக் கடிப்பதில்லை. கொசுக்கள் கடிப்பதனால் ஏற்படும் உபத்திரவமும், வலியும் அளவற்றவை. அவைகள் கடிப்பதால் மலேரியா, யானைக்கால் ஜ்வரம், மஞ்சள் ஜ்வரம், முதலிய நோய்கள் பரவுகின்றன. டிங்கு ஜ்வரமும் கொசுக்களால் பரவச்செய்யப்படுவதாக ஆராய்ச்சிகளினின்றும் புலப்படுகிறது.

காலா-ஆஜார் என்னும் ஈரலைப்பற்றிய கொடிய கட்டி ஜ்வரத்தைப் பரவச்செய்வதற்குக் காரணமானவை என்று சில பூச்சிகள் கருதப்பட்டு வருகின்றன. மண்பூச்சி (தெள்ளுப் போன்ற ஒரு கொசுகு), மூட்டைப்பூச்சி, இவ்விரண்டுந்தான் முக்கியமாக அவ்விதம் கருதப்படுகின்றன. தெள்ளுப்பூச்சியில் அநேகவகைகள் உள்ளன. இவை உலகம் முழுவதும் வியாபகமுள்ளவை. ப்ளேக் என்னும் மஹாமாரி நோயைப் பரவச்செய்வது இப்பூச்சியினத்திற் சில. இவை எலிகளின் மேல் சாதாரணமாக வசித்து வரும். எலிகள் பிளேக் நோயால் பீடிக்கப்பட்டு இறக்கும். இவ்வாறு இறந்த எலியின்மேலுள்ள தெள்ளுப்பூச்சிகள், இறந்த எலியை விட்டுவிட்டு வேறு எலியைத் தேடிச்செல்லும். மற்றோர் எலி கிடைக்குமுன்னர் இடையில் மனிதன் தென்பட்டால் அவனையுங் கடிக்கும். அப்போழுது பிளேக் நோய்க் கிருமிகளை மனிதனுக்குட் செலுத்தும். அவனுக்கு பிளேக் நோய் உண்டாகும். இப்பூச்சிகள் ஒரெலியை விட்டு மற்றோர் எலியைத் தேடி அடைவதற்குள், 38 நாள் வரையில் ஆகாரமில்லாமல் ஜீவிக்க வல்லன. மற்றொரு வகைத் தெள்ளுப் பூச்சி, மனிதன் ரோமத்தில் ஒட்டிக்கோண்டு இரத்தத்தைக் குடிக்கும் சக்தி வாய்ந்தது. இத்தெள்ளும் நோயைப் பரவச்செய்யும்.

பேன்: சுகாதாரமற்ற விடங்களில், சுகாதார விதிகளை யனுஷ்டிக்காமல் வசிக்கும் ஜனக்கூட்டங்களில், பேன் விருத்தியடைந்து, டைபஸ், ரிலாப்ஸிங் ஜுரம், முதலிய நோய்களைப் பரவச்செய்கிறது.

வாலில்லாக்குரங்குகள், வாலுள்ள சில குரங்குகள், இவைமேல் மட்டும் சஞ்சரிக்கும் தன்மையன மனிதனின் தலையில் சஞ்சரிக்கும் பேன்கள்.

மூட்டைப்பூச்சி: படுக்கைகளிலும், கட்டில் நாற்காலிகளிலும் மறைந்து வசிக்கும் மூட்டைப்பூச்சிகள் பகலில் வெளிவருவதில்லை; இரவில் மட்டுமே சஞ்சாரம் செய்யும். இரத்தமே இவைகட்குணவு. இப்பூச்சிகட்குச் சிறகுகள் இல்லையென்றே சொல்லலாம். பறக்கும் தன்மை யற்றவை. காலா-ஆஜார் என்னும் ஜ்வரத்தைப் பரவச்செய்வதில் இப்பூச்சிகள் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சிலர் கருதுகிறார்கள். பிளேக்நோய்க்கிருமிகளும் இப்பூச்சிகளின் குடல்களில் வசித்து வளருந்தன்மையுடையவையென்று நிரூபிக்கப் பெற்றுள்ளமையால், அந்நோயையும் இப்பூச்சிகள் பரவச்செய்கின்றனவோ என்னும் சந்தேகம் இருக்கிறது. இது இன்னும் நிவர்த்திக்கப்படவில்லை. ரயில் வண்டிகளில் பிரயாணம் செய்யும்போது இப்பூச்சிகளியற்றும் கொடுமையை யறியாதாருமுண்டோ?

எறும்பு, குளவி, தேனீ: மனிதரைக்கொட்டி வலியுண்டுபண்ணும் சக்திவாய்ந்தவை. வலியுண்டாவதற்குக் காரணம், இவை கொட்டும்பொழுது சிறிது விஷத்திராவகத்தை யுட்புகுத்துதலேயாகும். இந்த விஷத் திராவகத்தைச் சுரக்கும் காய்களினின்று ஒரு நுண்ணிய விஷப்பைக்குச் செலுத்தப்பட்டுக் கொடுக்கின் வழியாக விஷம் மனிதருக்குட் புகுத்தப்படுகிறது. மேற் கூறிய பூச்சிகளின் விஷம் எல்லாம் ஒரு தன்மைத்தல்ல. உதாரணமாக, குளவியின் விஷம் எறும்பின் விஷத்தைக்காட்டிலும் கொடியது. கொட்டியவிடத்தில் உண்டாகும் வலிமட்டுமே யல்லாமல், தேள் விஷம் போன்று சரீர முழுவதிலுமே நோய் உண்டாக்கக்கூடியது. தேனீக்களின் விஷமும் இத்தன்மைத்தே. தேனீக்கள், குளவிகள், கொட்டுவதனால் மூச்சடைப்பு, கைகால் முடக்கம், பாரிசநோய், இரத்தமுறிவு, முதலிய கொடிய விபரீதங்களும் ஏற்படக்கூடும். குளவி, தேனீ, இவைகளின் கூடுகளைக் கலைக்க முயல்வது தவறு. அப்படிக் கலைக்க யத்தனிப்பதால் பூச்சிகள் வெருண்டு, மூர்க்கமடைந்து, ஆவேசத்துடன் மனிதரைக் கொட்டிக் கொன்றுவிடும். இப்படி யிறந்துபோன மனிதர்களுமுண்டு.

சாதாரணமாகக் குளவி, தேனீ, இவைகள் கொட்டுவதனாலுண்டாகும் வலிக்கு, 'மேந்தால்' என்னும் மருந்தைக் கொட்டுவாயில் தேய்க்கவேணும். கொட்டிச் சில நேரங்கழித்து ஏற்படும் வீக்கம், வலி, இவைகளுக்குப் படிக்காரஜலம், துருசு, துத்தநாகம், ஈயம், முதலியவற்றைக் கரைத்துத் துணியில் நனைத்துப் போடவேண்டும்.

ஆகவே, மனிதவாழ்க்கையின் மேம்பாட்டிற்குக்காரணம் அவன் இயற்கையாக உண்டாகும் பொருள்களைத் தன் சௌகரியத்திற்கேற்றவாறு உபயோகித்துக் கொள்வதே. பலவாயிர வருஷங்களாக வெகு ஆழத்தில் அடங்கிக்கிடந்த நிலக்கரியை வெளிப்படுத்தி, நீராவி யந்திரங்கள், ஆலைகள், முதலியவைகட்கு உபயோகமாகும் படிச்செய்கிறான். மலைகளினின்று வழியும் நீர்வீழ்ச்சிகளின் உதவியால், மின்சாரத்தைப் பலவேலைகட்கு உபயோகப்படுத்திக் கொள்கிறான். இயற்கையில் தங்கள் குட்டிகளுக்குப் பால் சுரக்கும் பசுக்களைத் தனக்கும் பால் தருமாறு செய்கிறான். தானியங்களை வளரச்செய்து அவைகளிலுள்ள புஷ்டியான உணவுப்பொருள்களைக் கண்டறிந்தும், வெவ்வேறு ஜாதிச் செடிகளை ஒட்டவைத்து புது வகையான மலர், காய், கனி, ஈனும் மரங்களையும் செடிகளையும் உற்பத்தி செய்துமிருக்கிறான். பசு, எருமை, போன்ற கால்நடைகளிலும் தன்னுடைய புத்தி கூர்மையினால் உயர்ந்த ஜாதிகளைக் கொண்டு புதிய இனங்களைச் சிருஷ்டிசெய்து அதனால் பயனடைகிறான். பயிர் பச்சைகளை அழிக்கும் பூச்சிகளை, வேறுவகையைச் சேர்ந்த பூச்சிகளின் உதவியால் ஹதம் செய்து, பயிரைச் செழிப்பாக வளர வைக்கிறான். மிக்கக் கொடிய நோய்வாய்ப்பட்டு வருந்துபவருக்கு ரணசிகித்ஸையைச் செய்யும்போது வலிதெரியாதவாறு மயக்க மருந்து கொடுக்கிறான். பிரஸவகாலங்களில் அபாயம் நேரா வண்ணம் எவ்வளவோ நூதன சௌகரியங்களைக் கையாண்டுவருகிறான். மனிதசரீரத்தினுள்ளிருக்கும் அவயவங்களனையவையும் ஒரு கண்ணாடியில் புலப்படும்படி புதிர்க்கதிர் (X-*ray*) என்னும் வெளிச்சத்தைத் தன் சௌகரியத்திற்கேற்றவாறு கையாளுகிறான். பக்ஷிகள் பறப்பதன் மர்மத்தை யறிந்து ஆகாயவிமானம் கண்டுபிடித்து, விரைவில் தூரதேசங்களுக்குச் செல்லுகிறான். உலகவியற்கையில் ஏற்படும் பிள்ளைப்பேறுகளையும் கட்டுப்பாடு செய்யச் சிறிது காலமாக யத்தனித்து வருகிறான். "கற்றது கைம்மண்ணளவு" என்பது நிச்சயமானால், இனி மனிதன் செய்யப்போவது உலகளவே யாகும் என்பதில் என்ன சந்தேகம்!

---

# ஸெலீனியமும் திரைப்படமும்

பி. ஸி. முத்தையா, பி. ஏ., பி., எல்.

I

**1817**-ஆம் ஆண்டில் பெர்ஜீலியஸ் (*Berzeleus*) என்பவர் கந்தகத்திராவகம் செய்யும் தமது ஆராய்ச்சி சாலையில் புதிதாக ஓர் உலோகத்தைக் கண்டு பிடித்தார். இந்தப் புதிய உலோகத்திற்கு ஸெலீனியம் (*Selenium*) என்று பெயர் வழங்கப்பட்டது. இது எஃகைப்போன்று கரும்சாம்பர் நிறமுடையது. தண்ணீரை விட உத்தேசம் $4\frac{1}{2}$ மடங்கு கனங் கூடியது.

இந்த உலோகம் ஒரு (விசேஷ) தனிக்குணம் வாய்ந்தது. இதனால் விஜ்ஞானம் பெரும் முன்னேற்றத்தையும் எதிர்பாராப் பலன்களையும் அடைந்திருக்கிறது. தற்பொழுது 'ஸினிமா'ப் பற்றுள்ள நம்மவர்களை ஒரே சமயத்திலேயே கண்டும் கேட்டும் இன்புறச் செய்யும் நூதன பேசும் சலன சித்திரங்களின் உயிர் நாடியாய்த் துலங்குவது ஸெலீனியமே. ஸெலீனியம் கண்டு பிடிக்கப்பட்டிராவிட்டால் இப்பொழுதிருப்பதுபோன்ற பேசும் படங்களைப் பற்றியே நாம் கேட்டிரோம்.


மின்சார சக்தியானது சாதாரணமாகப் பஞ்ச உலோகங்கள் வழியாகத் தாவும். பஞ்ச உலோகங்களிலும், மின்சார சக்தியைச் செலுத்துங் கடத்திகளுள், செம்பே பிரதானமாக உபயோகப் படுத்தப்படுகின்றது. மின்சார சக்தியைத் தன்வழி செலுத்தும் தன்மைக்குக் கடத்துகை என்று பெயர். அலுமினியம் முதலிய உலோகங்களுக்கு மின்சார சக்தியைக்கொண்டு செல்லும் தன்மை யுண்டு. ஸெலீனியமும் இத்தன்மையுள்ளது. ஆனால் இத்தன்மை யிலேயே ஒரு விசேஷகுணம் பெற்றது. அது என்னவெனில், ஸெலீனியத்தின்மேல் ஒளி படுந்தோறும் அதன் கடத்துகை கூடுகின்றது. ஸெலீனியக் கம்பியை ஓர் இருட்டறையில் வைத்து அதன் வழி மின்சார சக்தியைச் செலுத்துவோமானால், மிகக்குறை வான அளவு மின்சாரமே இதனூடு செல்லும். காரணம் என்ன வென்றால், இருளில் ஸெலீனியத்தின் கடத்துகை மிகவும் குறைந்து விடுகிறது. இந்த ஸெலீனியத்தின்மேல் ஒளி படுமானால் கூடுதல் மின்சாரம் இதன்வழிசெல்கிறது. ஒளிவலிமைக்குத் தகுந்தபடி கடத்துகை கூடிக்கொண்டே வருகிறது; அதாவது, ஸெலீனியக்

கம்பி வழியாய்ப் பாய்கிற மின்சாரசக்தியின் அளவு அதிகரிக்கிறது. ஒளிபடும்போது இம்மாற்றங்கள் இமைப்பொழுதில் ஏற்படு கின்றன. இத்தனிக்குணத்தைக் கொண்டே ஸினிமா உலகம் தற்பொழுதுள்ள பெரும் பலன்களை அடைந்துவருகின்றது. ஸெலீனியத்தின் உதவியாலேயே ஒலியை ஒளியாகவும், ஒளியை ஒலியாகவும் மாற்ற முடிகிறது.

இத்தன்மையதாக ஸெலீனியம் உபயோகத்திற்கு வருமுன் ஒலியை ஓரேமுறையாகத்தான் உருவப்படுத்த இயன்றது: ஒலி யால் உண்டாகும் சலனங்களை "டயாப்ரம்" என்னும் தகட்டுக் கருவியால் உணரச்செய்ய, அவ்வுணர்ச்சியின் பயனாக அத்தகட்டில் பற்பல அசைவுகள் ஏற்படும். இந்த "டயாப்ரம்" என்னும் தகட்டின் விளும்பில் ஓர் ஊசியின் அற்றம் இணைக்கப்பட்டிருக்கும். ஆகவே, தட்டில் ஒலிசலனங்களால் ஏற்படும் அதிர்ச்சிக்கேற்ப இவ்வூசியும் அசைக்கப்படும். இந்த ஊசியால், கட்டியான மெழுகு வட்டுக்களில் கண்களுக்குக்கூட புலன்படாத நுண்ணிய மேடுபள்ளங்கொண்ட கோடுகளாக அவ்வசைவுகள் பதித்தெ தெடுக்கப்படும். 'கிராமபோன் ரிகார்டுகள்' மேற்கூறியது போன்று ஒலியைப் பதித்து எடுக்கப்பட்டவைகளே.

நடன நாடகங்களைப் படமாகப் பிடித்துத் திரைப்படங் களாகக் காண்பிக்கும்பொழுது, மேலே கூறியவிதம் தயாரித்த ரிகார்டுகளையும் கிராமபோனில் வைத்துச் சுழற்றி ஊசியால் தீட்டிப் பேசும் படக்காட்சிகளாகக் காண்பிக்க முயன்றனர். ஆனால் அம் முயற்சி பயன்படவில்லை. வெவ்வேறு இயந்திரங்களால் பிடிக்கப் பட்ட நடிப்பும் பேச்சும் பேதமின்றி வெளிப்பட்டு ஏகமாய் ஒத்துப்போவது அசாத்தியமாயிற்று. தவிரவும், ஸினிமாப் படச் சுருள்கள் சாதாரணமாகத் தெறிப்பதுண்டு. தெறித்த தகடுகள் பசையால் ஒட்டப்படும். இவ்வண்ணம் ஒட்டும்பொழுது படத் தகட்டின் நீளம் குறைவுபட்டு, தொனிரிகார்டுகளுடன் கலந்து போவதில்லை. ஆகவே, திரையில் காணும் படங்களில், வாய் அசைவின்றி இருக்கும்பொழுது பேச்சுக்கேட்பதும், பேச்சுக் கேட்காதபொழுது வாய் அசைவதுமாக, முரண் ஏற்பட்டது. இதுபோன்ற வேறு பல முரண்பாடுகளும் தோன்ற ஆரம்பித்தன. இவ்வித முரண்பாடுகள் அனையவும் ஸெலீனியத்தின் உதவியால் நிவர்த்தி செய்யப்பட்டன. இப்பொழுது ஒலியும் நடிப்பும் ஒரே தகட்டிலேயே படமாகப் பதிவுசெய்யப்படுகின்றன. படச்சுருள் களை இயந்திரத்தால் அகற்றி, அவற்றின் ஊடே பிரகாசமான ஒளி யைச் செலுத்தும்பொழுது, நடிப்பும் ஒலியும் ஏகசமயத்திலேயே

ஒன்றுக்கொன்று முரண்பாடில்லாமல் வெளிப்படுகின்றன. இதன் விபரங்களைக் கீழே தருகிறோம்.




இப்படத்தில் A என்பது ஒரு மின்சார அடுக்கு.

B என்பது ஸெலீனிய உலோகத்தால் செய்த ஒரு கலம்.

C என்பது சாதாரணமாகக் கம்பிவழியாகப் பேசும் வர்த்தமானங்களைக் காதிற்குப் புலப்படுத்தும் "டெலிபோன் ரிஸீவர்" என்னும் ஒரு கருவி.

D மின்சாரத்தைச் செலுத்துவதற்கும் நிறுத்துவதற்குமுள்ள சாவி (இணைத்தி?).

E ஸெலீனிய அறைமேல் ஒரு விநாடிக்கு 200 தடவைக்கு மேல் மின்னும்படியான ஓர் இயந்திரம். இது சினிமா 'ப்ரொஜெக்ட'ருடைய (எறிபி?) முன்பக்கம், சுழலும் சூத்திரம்போல், அமைக்கப்பெற்றது. ஆர்க்லைட்டின் (ஒளிர்விளக்கு?) முன், குவியக்கண்ணாடியை அடுத்து, நாலோ ஐந்தோ துவாரங்கள் வெட்டப்பட்ட தகடு ஒன்று, ஒரு மின்சார இயந்திரத்தால் சுழற்றப்படுகின்றது. கண்ணாடியினூடு வரும் ஒளி, சுழலும் தகட்டில் உள்ள துவாரங்கள் வழியாகத்தான் ஸெலீனியக் கலத்தில் விழ முடியும். மின்சார இயந்திரத்தின் வேகத்தால் இந்தத் தகட்டை ஒரு விநாடிக்கு நூறு முறை சுற்றும்படி செய்ய, தகட்டில் உள்ள 4 துவாரங்களால் ஒரு விநாடிக்கு 400 தரம்வரை ஸெலீனியக் கலத்தின்மேல் ஒளி மின்னும். இயந்திரத்தின் வேகத்தைப் பெருக்கியோ குறைத்தோ, மின்னலின் எண்ணிக்கையை இஷ்டப்படி அதிகப்படுத்தவோ குறைவுபடுத்தவோ செய்யலாம்.

இவ்வைந்தையுந் தவிர மற்றுமுள்ள பாகங்கள் மின்சாரம் செல்லும் செம்புக்கம்பிகள்.

படத்தில் காட்டியபடி கருவிகளை அமைத்து மின்சார சக்தியைச் செலுத்துவோமானால், அது சகல பாகங்களிலும் சென்று கொண்டிருக்கும். அதே சமயத்தில் ஒளிர்விளக்கையும் பொருத்தி, சுழலுந்தட்டையும் சுழற்றி, ஸெலீனியக் கலத்தின் மேல் ஒரு


விநாடிக்கு 256 தரம் ஒளி மின்னும்படி செய்தால், டெலிபோன் ரிஸீவரிலிருந்து 'ஸ்' என்ற சுரம் எழும். ஆர்மோனியப் பெட்டிகளில், 'ஸ்' என்ற சுரம், பெட்டியினுள் வைத்திருக்கும் 'ரீட்' என்னும் தகடு காற்றினால் அசைக்கப்பட்டு விநாடிக்கு 256 தரம் அசைக்கப்பெறுவதனால் உண்டாகிறது. அதுபோலவே, டெலிபோன் ரிஸீவரில் வைத்திருக்கும் ஒலித்தகடும் காற்றில் அசைக்கப்பட்டு மின்சார காந்தசக்தியால் விநாடிக்கு 256 தரம் வீதம் அசைவுபெற்று 'ஸ்' என்ற சுரத்தைக் கிளப்புகிறது. இவ்விதம் அசையப்பெறுவதின் காரணமாவது:—

ஸெலீனியக் கலத்தின்மேல் ஒளிபடாதிருக்கும்பொழுது கடத்துகை மிகவும் குறைவுபடுகிறது. அப்பொழுது மின்சார காந்தம் காந்தசக்தி வலுப்பெறாமல் போக, டெலிபோன் ரிஸீவர்த் தகடு அசைக்கப்படுவதில்லை. ஆனால் ஐந்தாம் நம்பர் இணைத்தியிலிருந்து ஒளி மின்னும்பொழுது மின்சாரசக்தி ரிஸீவர்வழி தாவுகிறது. பலத்த சக்தி தாவும்பொழுது, மின்சாரகாந்தம் காந்தசக்தி பெற்று ரிஸீவர்த்தகட்டை இழுத்து அசைக்கிறது. ஸெலீனியக் கலத்தின்மேல் விநாடிக்கு 256 தரம் ஒளி மின்னுவதால் விநாடிக்கு 256 தரம் காந்தசக்தி வலுப்பெற்று 'டெலிபோன் ரிஸீவர் டயாப்ரம்' ஒரு விநாடிக்கு 256 முறை அசைந்து 'ஸ்' என்ற சப்தம் உண்டாகிறது. இவ்விதமாக ஒளி ஒலியாகின்ற தன்மை விசித்திரமல்லவா?

## II

### 'போட்டோபோன்' என்னும் ஒலியை ஒளியாக மாற்றும் சூத்திரம்.

இப்படத்தில் A என்பது டெலிபோனில் பேசுவதற்குரிய வாய்க்குழாயைப்போல் சற்றுப்பெரிதாக அமைக்கப்பட்டுள்ள ஒலி




வாங்கி என்னும் ஓர் இயந்திரம். இதில் 'டயாப்ரம்' என்னும் ஒரு தகடு இருக்கின்றது; கிராமபோன் ஒலியுறையிலுள்ள தகடுபோல்

அமைக்கப் பெற்றது. இது ஒலியினால் உண்டாகும் சலனங்களால் அசைபடுகிறது. இதைத் தொட்டுந் தொடாமலும் மின்சாரத்தைக் கொண்டுபோகும் கம்பிகள் இணைக்கப்பட்டுள்ளன. ஒலியின் சலனங்களுக்குத் தகுந்தபடி தகடு அசைக்கப்பெற்று மின்சாரக் கம்பிகளில் தட்டுப்பட்டு மின்சாரத்தைத் தாவச்செய்கிறது. ஒலியின் வலிமைக்குத் தகுந்தபடி மின்சாரமும் கூடுதலாகவோ குறைவாகவோ இக்கருவியின் வழியாகத் தாவும்.

B. செலுத்துவதற்கும், நிறுத்துவதற்குமான இணைத்தி.

C. அடுக்கு.

D. மின்சாரவிளக்கு. இது மிகவும் நுண்ணிய அளவு மின் சார சக்தியையும் ஒளியாகக் காண்பிக்கக் கூடியது. ஆனால் ஒளியின் நுண்ணிய பேதங்கள் மனிதக்கண்களுக்குப் புலப்படா. பேசும் பொழுது ஒலிவாங்கியின் மூலமாக மின்சார ஒழுக்கில் நுட்பமான பேதங்கள் ஏற்படுகின்றன.

E. மின்சார விளக்கிலிருந்து உண்டாகும் பிரகாசக்கதிர்கள்.

F[1]. குவியக் கண்ணாடி.

S. சிறு துவாரம்.

F[2]. குவியக் கண்ணாடி நம்பர் 2.

G. படம் பிடிக்கும் அறை.


இந்தப் படம்பிடிக்கும் அறையில் மருந்து தடவிய படச் சுருள்கள் வைக்கப்பட்டுள்ளன. நடனப்பதிவு செய்யும்பொழுது இத்தகடுகள் ஓர் உருளையிலிருந்து அகற்றப்பட்டு, படம்பிடிக்கும் கண்ணாடியின் சார்பாக இன்னொரு உருளையில் சுருட்டப்படுகின்றன. இந்தப் படம்பிடிகருவி, நடிக்கும் நாடகபடங்களையும், ஒலியால் மின்சார விளக்கில் உண்டாகும் ஒளிபேதங்களையும், ஒரே தகட்டிலேயே பதித்து எடுக்கின்றது.

படத்திற் காட்டியபடி வசதியாகக்கருவிகளை அமைத்துக் கொண்டபின், படம்பிடிகருவியின் முன்பக்கம் நாடகங்கள் நடிக்கப்படும். போட்டோபோனின் உதவியால், பேசும் ஒலிகளும் பாடும் ஒலிகளும் ஒளியாக மாற்றப்படுகின்றன. இந்த ஒளியின் பேதங்கள் கண்களுக்குப் புலன்படாத, நெருங்கிய, நுண்ணிய, கோடுகளாகவும், நடனங்கள் பதிவுப்படங்களாகவும் ஒரே தகட்டிலேயே பதித்து எடுக்கப் படுகின்றன.

## III

ஸினிமா காட்சி காட்டப்படும் சமயங்களில், மேற்கூறியவாறு தயாரிக்கப்பட்ட தகடுகளிலிருந்து சப்தம் வெளிப்படுவதற்குக் கீழேயுள்ள படத்திற் காட்டியபடி கருவிகள் அமைக்கப்படுகின்றன.

A. மிகவும் பிரகாசமான (ஆர்க்லைட் என்னும்) ஒளிர் விளக்கு. ஸினிமாப்படங்கள் எப்பொழுதும் ஒளிர்விளக்கின் பிரகாசத்தாலேயே திரையில் காண்பிக்கப்படுகின்றன.




B. ஒளிர்விளக்கின் கதிர்களை நுண்மைப் படுத்தும் கண்ணாடி.

C. துவாரம்.

D. பூதக்கண்ணாடி.

E. சுழலிலிருந்து அகற்றப்படும் படச்சுருள். இது போட்டோபோனின் உதவியால் தயாரிக்கப்பட்டது.

பூதக்கண்ணாடியின் வழியாய் வரும் ஒளியானது படச்சுருளின் வழியாக ஊடுருவிச்சென்று ஸெலீனியக் கலத்தின் மேல் படுகிறது.

F. ஸெலீனியக் கலம்.

G. மின்சார அடுக்கு.

H. மின்சாரசக்தியின் வலிமையைக் காட்டும் அளவி.

I. மின்சார சக்தியை ஒழுங்குபடுத்தும் ரியோஸ்டாட் (*Rheostat*).


L. டெலிபோன் ரிஸீவரைப்போல் அமைக்கப்பெற்ற ஒலி பெருக்கி.

ஒளிர்விளக்கின் ஒளி B, D, கண்ணாடிகள் வழியாக வந்து படச்சுருளை ஊடுருவி, ஸெலீனியக் கலத்தின்மேல் படுகிறது. படச்சுருள் வேறு சூத்திரங்களால் அகன்றுகொண்டே வருகிறது. ஊடுருவிவரும் ஒளிக்கதிர்கள் படத்தின் மேல் பற்றியிருக்கும் நுண்மை கோடுகளின் கனத்திற்கேற்றபடி கூடியும், குறைந்தும்,

ஸெலீனியத்தின்மேல் படுகின்றன. அதன்மேல் படும் ஒளியின் பேதங்களுக்கேற்ப ஸெலீனியத்தின் கடத்துகையும் பேதப்படுகின்றது. இம்மாற்றங்களுக்கொப்ப மின்சார சக்தியின் ஒழுக்கும் வித்தியாசப்படுகின்றது. மின்சாரவலிமையின் பேதங்களால் ஒலிபெருக்கியிலுள்ள (டயாப்ரத்) தகட்டில் அசைவுகள் ஏற்படுகின்றன. தகட்டின் அனக்கங்களால் ஒலி-அலைகள் கிளம்பிச் சப்தங்கள் எழும்புகின்றன. போட்டோபோனின் அருகாமையில் வைத்துப்பேசிய சப்தங்கள் போட்டோபோனின் உதவியால் படச்சுருள்களில் பதிக்கப்பட்டுத் திரும்பவும் ஸெலீனியக் கலத்தின் உதவியால் ஒலிபெருக்கி வழியாய் இவ்விதம் வெளிக்கிளம்புகின்றன.

இவ்வண்ணம் ஒலி ஒளியாகவும், ஒளி ஒலியாகவும் மாறுவது ஆச்சர்யத்திலும் ஆச்சர்யமல்லவா! இப்புதுமையின் பெருமை ஸெலீனியத்தைக் கண்டுபிடித்த பெர்ஜீலியஸுக்கும், அதன் தனிக்குணத்தையும் உபயோகங்களையும் ஆராய்ந்து அறிந்து உலகிற்குக் காட்டிய டாக்டர் ரங்கின்ஸுக்குமே. ஆதலினாலேயே இன்றும் அவர்கள் பெயர்கள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டு விஞ்ஞான உலகத்தால் போற்றப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கடத்திகள் | .. | *Conductors (of heat, electricity, etc.)* |
| கடத்துகை | .. | *Conductivity* |
| ஒளிவலிமை | .. | *Intensity of light* |
| இடைநிற்றி (?) | .. | *Diaphragm* |
| அசைவுகள் | .. | *Vibrations* |
| படச்சுருள்கள் | .. | *Films* |
| அடுக்கு | .. | *Battery* |
| இணைத்தி | .. | *Switch* |
| எறியி(?) | .. | *Projector* |
| ஒளிர்விளக்கு | .. | *Arclight* |
| குவியக் கண்ணாடி | .. | *Focussing Lens* |
| ஒலிவாங்கி | .. | *Microphone* |
| ஒலி உறை | .. | *Sound Box* |
| படம்பிடி அறை | .. | *Moving film Camera* |
| ஒலிபெருக்கி | .. | *Loud speaker* |
| ஒழுக்கு | .. | *Current* |



# விஷ விருக்ஷம்

## பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாய

[நகேந்த்ரன் ஒரு பெரிய தனவான். அவன் குந்தநந்தினி என்ற அநாதையான ஓர் அழகிய யுவதியைத் தன் ஆதரவில் வைத்துக் கொண்டு போஷிக்கலானன். நகேந்த்ரனின் மனைவி ஸூர்யமுகி யென்பவள், தான் சகோதர முறை பாராட்டிவந்த தாராசரண் என்பவனுக்குக் குந்தத்தை விவாகம் செய்துகொடுத்தாள். தாராசரண் நண்பர்களில் தேவேந்த்ரன் ஒருவன். அவன் மணவாழ்க்கையில் இன்பமிழந்து மனைவியின்பால் வெறுப்புற்றுத் தனிமையில் காலங் கழித்து வருபவன். அவன் குந்தநந்தினியின் புது இளமையின் எழிலைக் கண்டதும் மயங்கிப்போனன். நிற்க, சின்னளில் அந்த இளம் பருவத்திலேயே குந்தம் 'விதவை' என்ற பழிக்கு ஆளாகி நகேந்த்ரன் மாளிகைக்கு வந்து சேர்ந்தாள். ஒரு நாள் தேவேந்த்ரன் அம் மாளிகைக்கு ஹரிதாஸி வைஷ்ணவி என்ற பிச்சைக்காரி வடிவில் வந்து குந்தத்தைத் தனிமையில் கண்டு பேசும் சந்தர்ப்பத்தைப் பெற்று ஓடிப்போயிருந்த குந்தத்தினுடைய மாமியார் ஓரிடத்தில் தங்கி யிருப்பதாகவும், அவள் குந்தத்தைப் பார்க்க விரும்புவதாகவும் கூறினன். குந்தம் அவ்வேஷதாரியைப் பின்தொடர மறுத்துவிட்டனள். இதற்கிடையில் ஸூர்யமுகி, தன் கணவன் நகேந்த்ரன் குந்தத்திற்குத் தன் மனதைப் பறிகொடுத்து விட்டானே வென்று ஐயுற்றுத் தன் நாத்தியாகிய கமலமணி என்பவளுக்கு அவ்விஷயத்தைக் குறித்துக் கடிதமெழுதினள். ஸூர்யமுகிக்கு எழுதிய பதில் கடிதத்தில் கமலமணி இந்தச் சந்தேகத்தைக் கண்டித்தாள். கணவன் வரவரக் குடிப்பழக்கத்திற்கு ஆளாகி உலகத்தின்மீது வெறுப்பு கொண்டிருப்பதைக் கண்டு, ஸூர்யமுகி கமலமணியை கோவிந்தபுரத்திற்கு வருமாறு அழைத்துக் கடிதம் எழுதுகிருள்.]

(524-ஆம் பக்கத் தொடர்ச்சி)

### பதிநான்காவது அத்தியாயம்

### அகப்பட்டுக் கொண்டாளே!

மனக்கிலேசம் குடிகொண்டிருந்த கோவிந்தபுரத்து மாளிகை மலர்ச்சியுடன் விளங்கிற்று. கமலமணியின் இன்முறுவலைக்கண்டு நிர்ப்பாக்கியவதி ஸூர்யமுகியின் கண்ணீர் நின்றுவிட்டது. வீட்டில் நுழைந்ததுதான் தாமதம், அலங்கோலமாய் இருக்கும்

மன்னியின் குழலை வாரிமுடிய வந்தாள் கமலமணி. "மன்னி! பூ ரெண்டு சொருகட்டுமா?" என்றாள். ஸூர்யமுகி வெட்கித் தன் நாத்தனாரின் மோவாயில் ஒருதட்டுத் தட்டினாள். "அடி அம்மா, நான் சொருகவில்லை" என்று சொல்லிக் கமலமணி திருட்டுத்தன மாக ஸூர்யமுகியின் கூந்தலில் பூவை வைத்தாள். அன்று அந் தப்புரத்திற்கு வந்த பெண்டுகள் சிலர், "இதென்னடீ அதிசயம்? இந்தமாதிரி மானங்கெட்டுப் பூச்சொருகிப்பார் உண்டோ, இந்த வயதில்" என்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டனர்.

மகிழ்ச்சியின் ஒளியைத்தரும் கமலமணியின் மலர்முகம், நகேந்த்ரனுடைய நெற்றிக்கட்டில் கவிழ்ந்திருந்த இருட்டை நீக்க வில்லை. கமலமணி தன் அண்ணனை ஸேவித்துநின்றாள். "எப்போ வந்தே, கமலா" என்று க்ஷேமசமாசாரம் விசாரித்தான் நகேந்த் ரன். கமலமணி மிகவும் வணக்கமாய், ஒன்றுமே அறியாதவள் போல், "அண்ணா! பாப்பாதான் என்னை இங்கு அழைத்து வந்தான்" என்றாள். நகேந்த்ரன் "வாடா, என்திருட்டுக் கண்ணா" என்று கொஞ்சியவண்ணம் குழந்தை ஸதீசை எடுத்து முத்தமிட் டான். குழந்தை தன் நன்றியைக்காட்ட மாமாவின் கழுத்தைக் கடித்து மீசையைப்பிடித்து இழுத்தது.

கமலமணி குந்தநந்தினியைப்பார்த்ததும், கீழ்க்கண்ட ஸம்பா ஷணை நடந்தது.

"அடி, குந்தம்! எப்படி இருக்கே?"

குந்தநந்தினி ஸ்தம்பித்து நின்றாள். சற்று நிதானித்துக் கொண்டு "இருக்கேன்" என்றுகூறிப் பெருமூச்சுவிட்டாள்.

"'இருக்கேன், அக்கா' என்றுசொன்னால் உன் வாயிலுள்ள முத்து உதிர்ந்துவிடுமோ? இதோபார், இனிமேல் நீ 'அக்கா' என்று அழைக்கவேண்டும். இல்லாவிட்டால் உன்னைச் சூடிட்டு விடுவேன்" என்றாள் கமலமணி.

குந்தம், கமலமணியை 'அக்கா' என்று கூப்பிட ஆரம்பித் தாள். குந்தம் கல்கத்தாவில் கமலமணியுடன் இருக்கும்போது அவளை இந்தமாதிரி கூப்பிட்ட வழக்கம் இல்லை. அவளே மித பாஷிணி. ஆனால் கமலமணியின் இனிய நடத்தையும் உயர்ந்த குணமும் அவளை ஆகர்ஷித்தன. குந்தநந்தினிக்கு அவளிடம் உள்ளூற ஆசை உண்டாயிற்று. சில வருஷங்களாய் அவர்கள் பிரிந்திருந்தபோதிலும் குந்தநந்தினி பழைய ஞாபகங்களை

மறந்துபோகவில்லை. பழைய வாஞ்சை மறுபடியும் வளரத் தொடங்கியது. பாசம் அதிகரித்தது இருவருக்கும்.

கமலமணி தன்வீட்டிற்குத் திரும்ப ஏற்பாடு செய்து கொண்டிருப்பதைப் பார்த்து ஸூர்யமுகி, "இன்னும் இரண்டு நாள் இருந்துவிட்டுப் போயேன். நீ போய்விட்டால் நான் சாகத் தான்வேண்டும். எனக்கு என்னமோ ஒன்றுமே பிடிக்கவில்லை இந்த வாழ்வில். உன்னிடம் எல்லாவிஷயங்களையும் சொன்னால் தான் என்நெஞ்சு வேகும்" என்றாள்.

"மன்னி, உன் விஷயத்தை ஓர் ஒழுங்கு பண்ணிவிட்டுத்தான் நான் இந்த இடத்தைவிட்டு நகருவேன்" என்றாள் கமலமணி.

"நீ என்ன பண்ணப்போகிறாய்?"

"உனக்குக் கர்மம் பண்ணப்போகிறேன். (மனதிற்குள்ளே) அடி பேதாய், உன்னை உறுத்தும் முள்ளை நீக்குவதைத்தான்."

கமலமணி கல்கத்தாவிற்குப் புறப்படப் போகிறாள் என்ற செய்தியைக் கேட்டுக் குந்தம் தன் அறைக்குச்சென்று, மறைவாக அழ ஆரம்பித்தாள். கமலமணி ஓசைப்படாமல் அவளைப் பின்தொடர்ந்து சென்றாள். குந்தம் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கண்ணீர் பெருக்கிக்கொண்டிருந்தாள். கமலமணி அவளை எழுப்பி, கூந்தலைச் சீவிப் பின்ன ஆரம்பித்தாள். கமலமணிக்கு ஒரு பித்து: யாரைப்பார்த்தாலும் அவர்கள் கூந்தலை விதவிதமாக அவள் பின்னி முடிப்பது வழக்கம்.

கொண்டை சொருகியானதும், குந்தம் நிமிர்ந்து உட்கார்ந்தாள். கமலமணி அவளுடைய தலையைத் தன் மடிமேல் வைத்துக் கொண்டு, அவள் விடும் கண்ணீரைத் தன்முந்தானையால் துடைத்து "குந்தா! நீ ஏன் அழறே?" என்று ஆந்தரீகமாகக் கேட்டாள்.

குந்தம், "அக்கா, நீ போய்விடுகிறாயே" என்றாள். கமலமணியால் வந்த சிரிப்பை அடக்கமுடியவில்லை. ஆனால் அந்தச் சிரிப்பை லக்ஷ்யம் பண்ணாமல் அவள் கண்களில் இரண்டொரு நீர்த்துளிகள் துடித்தன. அவை அவளுடைய தாடையில் வழிந்து ஓடுவது வெய்யில் காயும்போது பெய்யும் மழையை ஒத்திருந்தது.

கமலமணி: இதற்கா அழறே?

குந்தம்: அக்கா, என்மேல் உனக்கு நிஜமான பிரியந்தானா?

கமல: ஏன் அப்படிக் கேட்கிறாய்? உன்னை யாரும் விரும்பவில்லையா இங்கே?

குந்தம் மௌனமாய் இருந்தாள்.

கமல: யாரும் உன்னை ஆதரவுடன் கவனிக்கவில்லையா? ஸூர்யமுகிகூட?

குந்தம் சும்மா இருந்தாள்.

கமல: அண்ணாகூட?

அதற்கும் குந்தம் வாய்திறக்கவில்லை.

கமல: உனக்கு என்மேல் வாஸ்தவமான ஆசை இருந்தால் என்னோடு நீயும் வந்துவிடுகிறதுதானே?

குந்தம் அப்பொழுதும் பதில்தரவில்லை.

மீண்டும் கமலமணி, "வருகிறாயா?" என்றாள்.

குந்தம் தலையை அசைத்து "வரமாட்டேன்" என்றாள்.

கமலமணியின் முகம் வாட்டமுற்றது.

குந்தநந்தினியின் உச்சியை ஆதரவுடன் தடவி அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு, "குந்தா? வாஸ்தவத்தைச் சொல்" என்றாள்.

"எதை, அக்கா?" என்றாள் குந்தம்.

"நான் எதைக்கேட்கிறேனோ அதை. நான் உனக்கு அக்கா மாதிரி—என்னிடத்தில் நீ எதையும் ஒளிக்கக் கூடாது. நான் யாரிடமும் சொல்லமாட்டேன். (தன் மனதினுள்) என்னுடைய மந்திரி ஸ்ரீசபாபுவுக்கும், குழந்தையின் காதுக்குமட்டும்தான் இது எட்டும்."

"நீ எதைக் கேட்கிறாய், அக்கா?"

"நீ அண்ணாபேரில் ஆசை கொண்டிருக்கிறாயா? சொல்."

இதற்குக் குந்தநந்தினி மறுமொழி பகரவில்லை. கமலமணியின் மார்பில் முகத்தை வைத்துக்கொண்டு, தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள். கமலமணி, "புரிந்தது, இதற்காகத்தான் நீ உருகிப் போகிறாய். நீ சாவதோடுகூட இருப்பவர்களையும் சாக அடிக்கிறாயே. அடி பாவி!" என்றாள் மிகவும் வருத்தமுற்ற குரலில்.

குந்தநந்தினி தலையைத் தூக்கிக்கொண்டு கமலமணியையே சற்றுநேரம் உற்றுநோக்கினாள். கமலமணி அதன் அர்த்தத்தை அறிந்தவளாய், "அடி மூடமே, தலையில் கல்லைப் போட்டுக் கொண்டாயே. அதன் பலனை இதோ கண்முன்னே பார்த்துகொண்

டிருக்கிறாயே—" இதற்குமேல் வார்த்தைகள் வெளிவராமல் அவள் வாயிலேயே நின்றுவிட்டன.

குந்தம் துக்கம் தாளமுடியாமல் கமலமணியின் மார்பில் தலையைச் சாய்த்துக்கொண்டாள். அவளுடைய கண்ணீர்ப்பெருக்கு கமலமணியின் வக்ஷஸ்தலத்தை நனைத்துவிட்டது. குந்தநந்தினி வெகுநேரம் வரை குழந்தைபோல் அழுதுகொண்டிருந்தாள்.

பத்தரைமாற்றுத் தங்கமான கமலமணி, 'இது உண்மையில் காதலே' என்று ஐயமறத் தெரிந்துகொண்டாள். 'உள்ளூறக் குந்தம் வேதனைப்படுகிறாள்—ஸுகத்தையும் அடைந்து இருக்கிறாள்' என்று அவள் நன்றாக அறிவாள். பெண்ணினமாதலால் கமலமணிக்கும் தன்னைப் போல் ஒரு ஜன்மம் துயரினால் துடிப்பதைப் பார்த்து ஸஹிக்க முடியவில்லை.

அவள் தன் கண்களில் ஊறும் நீரை உதறிவிட்டு, "குந்தா!" என்று கூப்பிட்டாள்.

குந்தம் நிமிர்ந்து பார்த்தாள்.

கமலமணி "நீ என்னோடு வந்துவிடு" என்றாள்.

மறுபடியும் குந்தநந்தினியின் கண்களிலிருந்து பலபலவென்று கண்ணீர் உதிர்ந்தது.

கமலமணி, "வராது போனால் பாதகமில்லை. ஆஹா, பட்டான இந்த ஸம்ஸாரம் இப்படியும் நிலைகுலைந்து போகவேண்டுமா?" என்று கூறிப் பெருமூச்சுவிட்டாள்.

குந்தம் கேவிக் கேவி மார்பு அலைபட அழுவதைப்பார்த்து, கமலமணி "வருகிறாயா என் செல்வமே. . . . நீயே யோசித்துப்பார், குந்தா!" என்றாள்.

ஏதோ ஒரு தீர்மானத்திற்கு வந்தவளாய், குந்தம் கண்களைத் துடைத்துக்கொண்டு "வருகிறேன், அக்கா, உன்னோடு!" என்று வாய் திறந்தாள்.

இதற்கா இத்தனை நாழிகை! கமலமணிக்கு இதன் கருத்து விளங்கிற்று—யார் மங்களத்தின் பொருட்டுக் குந்தம் தன் ஸுகத்தையும் இழக்க உறுதிகொண்டிருக்கிறாள்? ஸூர்யமுகியின் நன்மைக்காகவும் நகேந்த்ரனுடைய நன்மைக்காகவும், அவனைத் தன் மனதை விட்டகற்ற திடம் கொண்டிருக்கிறாள். ஆனால் பேதை தன் ஸுகத்தை அதலஜலத்தில் விட்டு விட்டாள். அவள் தன் நன்மையைக் கோரவில்லை என்று கமலமணிக்கு நன்றாகப் புலப்பட்டது.

## பதினைந்தாம் அத்தியாயம்

### ஹீரா

அதேசமயம் பாடிக்கொண்டே ஹரிதாஸி வைஷ்ணவி அந்தப்புரத்தினுள் வந்தாள்.

* "காண்டா வநே துல்தே கேலாம் கலங்கோ புல
கோ ஸகி! கலங்கோி புல
மாதாய் பர்லேம் மாலா கேந்தே,
கானே பர்லேம் துல
ஸகி, கலங்கோி புல"

அன்று ஸூர்யமுகி அங்கு இருந்தாள். வைஷ்ணவியின் பாட்டைக் கேட்கக் கமலமணியை அழைத்துவரச் சொன்னாள். கமலமணியும் குந்தநந்தினியும் அங்குவந்ததும், வைஷ்ணவி மிகுதியான பாட்டைப் பாடத்தொடங்கினாள்.

† "மரி மர்போ காண்டா புடே
புலேர மது காபோ லுடே
குஞ்ஜே போாயி கோதாய் புடே
நவீன முகுல்"

கமலமணி புருவத்தைச் சுளித்து "அடி வைஷ்ணவி, பாழாய்ப் போக உன்பாட்டு. உனக்கு வேறொன்றும் பாடவராதா?" என்றாள்.

ஹரிதாஸி, "ஏனம்மா?" என்றாள். கமலமணிக்கு வந்த கோபம் இன்னும் அதிகரித்தது. "ஏனா? இதோ விளக்குமாற்றை எடுத்துக்கொண்டு வருகிறேன்—அப்பொழுது தெரியுமடீ" என்றாள்.

ஸூர்யமுகி ஹரிதாஸியை நோக்கி மெதுவாக, "அடி, இந்த மாதிரி பாட்டெல்லாம் எங்களுக்குப் பிடிக்கவில்லை. இது ஸம்ஸாரிகள் வீடு. நல்லதாகப் பாடு" என்றதும், ஹரிதாஸி "சரி" என்று பாட ஆரம்பித்தாள்.

---

* முள் நிறைந்த வனந்தனிலே சென்றிருந்தேன் பூப்பறிக்க
சகியே! நேற்று களங்கமெனும் பூப்பறிக்க.
மாலையாக்கி முடியில் அதனைச் சூட்டிக் கொண்டேனே,
சிமிக்கியாகச் செவியில் மாட்டிக் கொண்டேனே
ஸகியே! களங்கமெனும் மலரதனை.

† முள்தைத்து வருந்தினும் அத
னுள் ஊறும் இன்னமுதைப் பருகிடுவேனே
எங்கே புதிய மலர் என்று நான் தேடி அலைகிறேனே.

* "ஸ்ம்ருதி சாஸ்த்ர பட்போ ஆமி பட்டாசார்யேர் பாயே தரே;
தர்மாதர்ம சிகே நிபோ கோன் பேடி வா நிந்தா கரே."

கமலமணி புருவத்தை நெரித்து, "மன்னி! உனக்கு இஷ்டமானால் நீ கேள் இந்தப்பாட்டை—நான் போகிறேன்" என்று மொழிந்து அவ்விடத்தை விட்டகன்றாள். ஸூர்யமுகியும் முக வாட்டத்துடன் வந்துவிட்டாள். அங்கு கூடியிருந்த மற்ற ஸ்திரீகள் அவரவர்கள் கார்யங்களை நாடிச்சென்றனர். சிலர் மட்டும் அங்கு தங்கினர். அவர்களில் குந்தம் ஒருத்தி. குந்தநந்தினி பாட்டை ரஸித்துக் கொண்டிருந்தாள் என்று எண்ணவேண்டாம். அவள் வேறு ஏதோ கவனமாக அங்கு உட்கார்ந்திருந்தாள். ஹரிதாஸியின் ஸங்கீதமும் நின்றுவிட்டது. அதைக்கண்டு எல்லோரும் எழுந்துபோக ஆரம்பித்தனர். குந்தம் மாத்திரம் எழுந்திருக்கவில்லை. அவள் தன் மனதை எங்கேயோ பறிகொடுத்தவளாகத் தோன்றினாள். குந்தம் தனிமையாக இருப்பதைப் பார்த்து ஹரிதாஸி அவளுடன் வார்த்தையாட நெருங்கினாள். குந்தம் சிலவற்றைக் கேட்டாள். சிலவற்றை அவள் காதில் போட்டுக்கொள்ளாமல் பராமுகமாய் இருந்தாள்.

இந்தக் காட்சியைத் தொலைவிலிருந்து கவனித்துக்கொண்டிருந்தாள் ஸூர்யமுகி. இருவரும் ஆந்தரீகமாகப் பேசுவது போல் அவளுக்குப் பட்டது. உடனே கமலமணியை அழைத்து இதைக் காண்பித்தாள்.

**கமலமணி:** எனக்கு இதில் யாதொரு விகல்பமும் தோன்றவில்லையே? வைஷ்ணவியோடு பேசுவதினால் என்ன தவறு? ஹரிதாஸி புருஷனா என்ன? பெண்பிள்ளை தானே?

**ஸூர்யமுகி:** அவள் புருஷனோ பெண்ணோ, போகப் போகத் தெரியும்.

**கமல:** (வியப்புற்று)—அது என்ன மன்னி?

**ஸூர்ய:** எனக்கென்னமோ யாரோ புருஷன்தான் இந்த மாதிரி மாறுவேஷம் போட்டுக்கொண்டு நடிக்கிறான் என்று தோன்றுகிறது. இப்பவே இதைத் தெரிந்துகொண்டு வருகிறேன். —குந்தம் பாபிஷ்டியா? குந்தத்திற்கும் இவளுக்கும் என்ன சம்பந்தம்?

"அவசரப்படாதே, மன்னி. நான் விளக்குமாற்றைக் கொண்டு வருகிறேன். சாணியைக் கரைத்து அந்த வைஷ்ணவி

---

* பட்டாசாரியின் காலடியில் ஸ்ம்ருதி சாஸ்த்ரம் படிப்பேன் யான்;
தர்மம் அதர்மம் கற்பேன், யார் எதை வேண்டுமானாலும்
[சொல்லிக்கொள்ளட்டும்.

யின் தலையில் நன்றாகப் புடைத்தால், குட்டுத் தானாக வெளியாகிறது'' என்று கூறியவண்ணம் கமலமணி துடைப்பம் எடுத்துவர உள்ளே சென்றாள். வழியில் அவளுடைய கவனத்தைக் குழந்தை ஸதீச் கவர்ந்தான். ஸதீச் தன் மாமியின் குங்கும பரணியிலிருந்த குங்குமத்தைப் பூசிக்கொண்டு, நெற்றி, மூக்கு, உடம்பாத்யந்தம் சென்னிறக் கோலத்துடன் விளங்கினான். தன் பிள்ளையின் கூத்தைப் பார்த்துக் கமலமணி வந்தகாரியம் எல்லாவற்றையும் மறந்துவிட்டாள்—வைஷ்ணவியின் நல்ல காலம்!

ஸூர்யமுகி வேலைக்காரி ஹீராவைக் கூப்பிட்டாள்.

ஹீராவை நேயர்கள் அறிந்திருப்பார்கள். இவ்விடத்தில் அவளைப்பற்றி சற்று விரிவாகச் சொல்லவேண்டியது அவச்யமாகும்.

நல்ல நடத்தை யுடையவர்களையே தம் மாளிகையில் வேலைக்காகப் பொறுக்குவதில் நோக்கமுடையவர்கள் நகேந்த்ரனும் அவனுடைய தந்தையும். அதிகச் சம்பளம் கொடுத்தாலும் நல்ல குடும்பத்து ஸ்திரீகளே அந்தப்புரத்தில் வேலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு. இதனால், கிராமத்துப் பெண்களும் யாதொரு பயமின்றி தத்தர் மாளிகையில் கௌரவத்துடன் வேலை செய்து பிழைத்து வந்தனர். நெறிதவறாத பணிப்பெண்களில் ஹீரா முக்கியமாக விளங்கினாள்.

ஹீரா சிறுவயதிலேயே தத்தர் மாளிகையில் வேலைக்கு அமர்ந்தாள். அவள் கற்றுக்குட்டியானதால், அவளுடைய பாட்டி கொஞ்சநாள்வரை வேலைகளைச் செய்துவந்தாள். ஹீரா விரைவில் வேலைகளைச் செய்யப் பழகியதும், கிழவி தான் சேர்த்துவைத்த கொஞ்சம் பணத்துடன், கோவிந்த புரத்திலேயே கடைசி நாட்களைக் கழிக்க, ஒரு சிறிய குடில் அமைத்துக் கொண்டாள். ஹீரா அவளுடைய ஆசைக்குப் பாத்திரமான ஒரே பேத்தி.

இப்போது ஹீராவுக்கு வயது இருபது. மற்றெல்லா வேலைக்காரிகளைக் காட்டிலும், அழகிலும், குணத்திலும், புத்தியிலும் சிறந்தவள். எல்லோரும் மதிக்கும்படி அந்தப்புரத்தில் அவள் விளங்கினாள். அறியாத வயதிலேயே அவள் கைம்பெண் ஆகிவிட்டாள். இதனால் கோவிந்தபுரவாசிகளுக்கு இவள்பேரில் மிகவும் அனுதாபம். ஹீராவின் நடத்தையில் யாதொரு கோளாறையும் காணோம். அவள் கொஞ்சம் அதிகப்பிரஸங்கி; ஆபரணங்கள் பூணுவதிலும், அலங்கரித்துக் கொள்வதிலும், அவளுக்கு அளவிறந்த மோகம்; அவ்வளவு தான்.

ஹீரா கட்டழகி—நல்ல மா நிறமானவள். குமுதமலர் போன்ற கண்கள் படைத்தவள். சற்றுக் குள்ளமேயொழிய, நல்ல லக்ஷணம் வாய்ந்த முகவெட்டுடையவள். கருநாகத்தை யொத்து அவளுடைய கூந்தல் அடர்ந்து சுருண்டிருக்கும். ஹீராவுக்கு சங்கீதத்தில் பைத்தியம் உண்டு. மறைவில் தன்னை மறந்து பாடிக் கொண்டிருப்பாள். வேலைக்காரிகளிடையே கலகம் விளைவித்து வேடிக்கைபார்ப்பது அவளிடத்தில் உள்ள ஒரு குறும்புத்தனம். இருட்டில் மறைந்து சமையல்காரிக்குப் பயம் காட்டுவதில் அவளுக்குக் குதூஹலம். சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கொள் ளும்படி பிள்ளைகளைத் தூண்டிவிட்டு வேடிக்கைப் பார்ப்பாள். யாராவது அயர்ந்து தூங்குவதைப் பார்த்தால், அவள், அவர்கள் முகத்தில் கரும்புள்ளி செம்புள்ளி இடுவது வழக்கம்.

இந்தமாதிரி துஷ்டத்தனங்களைத் தவிர்த்து ஹீராவிடம் இன்னும் சில குற்றங்கள் இருந்தன. அவை போகப் போகப் புல னாகும். இதுமட்டும் சொல்லிவிடுகிறேன்—எங்கேயாவது அத்த ரையோ, பன்னீரையோ கண்டுவிட்டால், ஹீரா அவைகளைத் திருடாமல் விடமாட்டாள்.

ஸூர்யமுகி ஹீராவை அழைத்து, "இந்த வைஷ்ணவி யாரடீ? உனக்குத்தெரியுமா?" என்று கேட்டாள்.

ஹீரா, "தெரியாது அம்மா! இந்த ஊரில் அவளை நான் பார்த்ததில்லை. பூஜை விடுதியிலுள்ள வைஷ்ணவிகளை விசாரித் தால் தெரியும். ஒருக்கால் கருணாவுக்கும், சீதளாவுக்கும் தெரிந் திருக்கலாம்" என்றாள்.

"ஆனால் இவளைப்பார்த்தால் பூஜை விடுதியிலிருக்கும் வைஷ்ணவியாகத் தோன்றவில்லையே. இவள் யார் என்று நீ அறியவேண்டும். குந்தநந்தினிக்கும், இவளுக்கும் எப்படி அறிமுகம் ஏற்பட்டது?—இதைத் தெரிந்து வரவேண்டும். உனக்கு தீபாவளிக்குக் காசிப் பட்டுப்புடவை வாங்கித்தருகிறேன்—தெரிகிறதா?—உம்" என்றாள் ஸூர்யமுகி.

புதுப்புடவை, அதுவும் பட்டுப்புடவை, என்றதும் ஹீரா வுக்குப் பூரித்துவிட்டது. "அம்மா! எத்தனை நாட்களுக்குள் இதைப்பற்றி விசாரித்து உங்களுக்குச் சொல்லவேண்டும்?" என்றாள்.

**ஸூர்யமுகி:** உனக்கு எப்போது இஷ்டமோ. ஆனால் இப் பவே அந்த வைஷ்ணவியைத் தொடர்ந்து வேவு பார்த்தால்தான் காரியம் ஜெயமாகும்.

ஹீரா: சரி, போகிறேன்.

ஸூர்ய: அடி ஹீரா! ஜாக்ரதை, இதைப்பற்றி யாரிடமாவது உளறிவிடப் போகிருய்—தெரிகிறதா?

அச்சமயம் அங்குவந்த கமலமணியுடன் ஸூர்யமுகி நடந்தவை யாவும் பகர்ந்தாள். இதைக்கேட்டு, கமலமணி ஸந்தோஷமடைந்து, ஹீராவைப்பார்த்து "அடி, முடியுமானல் அந்தச் சிறுக்கியைக் கைகொண்டவரைக்கும் புடைத்துவிட்டு வா" என்ருள்.

ஹீரா, "அம்மா, நான் இதெல்லாம் சரியாகச் செய்கிறேன். ஆனல் புடவை வேண்டாம்." என்ருள்.

"பின் என்னவேண்டும்?" என்று வினவினுள் ஸூர்யமுகி.

கமலம் குறுக்கிட்டு "மன்னி, அவளுக்கு அகமுடையான் வேண்டும்போலிருக்கிறது! யாருக்காவது அவளைக் கட்டிக் கொடுத்துவிடேன்" என்ருள்.*

ஸூர்யமுகி "அப்படியே—ஹீரா உனக்கு யார்மேல் ஆசை? சொல்லடீ. கமலமணியம்மா இருக்கும்போதே கல்யாணத்தை முடித்து விடுகிறேன்" என்ருள்.

"ஆகட்டும். அகத்தில் எனக்குகந்த பிள்ளையாண்டான் இருக்கிருன்" என்ருள் ஹீரா.

"யாரடீ அவன்?"

"யாரா—யமன்தான்!"

(தொடரும்)

---

* விதவைகள் மறுவிவாகம் பண்ணிக்கொள்ளுதல் வங்காளத்தில் வைஷ்ணவ மதத்தைச் சேர்ந்தவர்களிடையே ஒரு ஸம்ப்ரதாயம். ஈச்வர சந்த்ர வித்யாஸாகரர் தம்முடைய 'விதவாவிவாகம்' என்னும் அரிய புஸ்தகத்தில், இந்த முறை சாஸ்த்ரோக்தமானது என்று எடுத்துக்காட்டியிருக்கிருர்.

# ரவீந்த்ர தரிசனம்


த. நா. ஸேநாபதி

---

[கவியரசர் ரவீந்த்ரநாதருடைய 'கீதாஞ்ஜலி'யை ஆங்கிலத்தில் படித்தது முதல், என் சகோதரர்களுக்கும் எனக்கும், அதை வங்காளி மூலத்திலேயே படித்து அதன் இன்சுவையை அனுபவிக்கவேண்டுமென்றும், அவரை நேரில் காணவேண்டுமென்றும் அவா உண்டாயிற்று. ஆனால் வங்காளிபாஷையை எப்படிக் கற்பது?—சின்னச் சின்னப் பாடபுத்தகங்களிலிருந்து ஆரம்பிப்பதென்றால் ரொம்ப நாளாகும். முதலில் இலக்கணம் கற்பதென்றால் அதுவும் சரியான முறையாக மனதில் படவில்லை. இப்படி யிருக்கையில் 1927-ஆம் வருஷம், ஸெப்டம்பர் மீ, 'மாடர்ன் ரெவ்யூ' என்ற மாதப்பத்திரிகையில், கவியரசரின் "ஊர்வசீ" என்னும் வங்காளிக் கவிதையும், அதன் மொழிபெயர்ப்பும் வெளிவந்திருந்தன. அதைப் பார்த்தவுடன் எங்களுக்கு ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டது. எங்களிடம் 'குமாரஸம்பவம்' என்ற காவியம் இருந்தது. அதில், ஸம்ஸ்க்ருத ச்லோகங்களுக்குக் கீழ், வங்காளியிலும் இங்கிலீஷிலும் அந்த ச்லோகங்களின் அர்த்தம் போடப்பட்டிருந்தது. கஷ்டப்பட்டு அதிலிருந்து வங்காளி அக்ஷரங்களை மூன்றே தினங்களில் என் மூத்த சகோதரர் கற்றார். அப்புறம் "ஊர்வசி" யைப்படித்தோம். அவ்வங்காளிக் கவிதையில் ஒரு வரியைத் தவறி விட்டுவிட்டிருந்தார்கள். ஆனால் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பில் மட்டும் அதன் பொருள் கொடுக்கப்பட்டிருந்தது. அதை வைத்துக்கொண்டு என் சகோதரர் தன்னால் கூடுமானவரை அதைத் திரும்பவும் வங்காளி பாஷையில் ஆக்கி, அதைக்குறித்து 'மாடர்ன் ரெவ்யூ' பத்திராதிபருக்குக் கடிதம் எழுதியிருந்தார். ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! அடுத்த மாதம் அப்பத்திரிகையின் 'பிழைதிருத்த'ப் பத்தியில், என் சகோதரர் எழுதிய வரியும், கவிதையில் விட்டுப்போன வரியும் ஒன்றாயிருக்கக்கண்டோம். இன்னொரு வேடிக்கை! அந்த வருஷம் பள்ளிக்கூடத்தில் ஸம்ஸ்க்ருத பரீக்ஷையில் நான் எழுதும்போது தேவநாகரி அக்ஷரங்களுக்குப் பதிலாக என்னை அறியாமல் சில வங்காளி அக்ஷரங்களை எழுதிவிட்டேன். அப்படியிருந்தபோதிலும் பரீக்ஷையில் தேறிவிட்டேன் என்று வைத்துக்கொள்ளுங்கள்.]

**1930**-ஆம் வருஷம், மார்ச்மாதம் (எத்தனாந்தேதி என்று ஞாபகமில்லை), ரவீந்த்ரநாதர் சென்னைக்கு வந்து இறங்கி, அப்புறம் கொழும்பில் கப்பல் ஏறி இங்கிலாந்துக்கு 'ஹிப்பெர்ட்'

பிரஸங்கம் நிகழ்த்துவதற்காகப் போகிறார், என்று பத்திரிகைகளில் செய்தி வந்தது. கடைசியாக, அவரைத் தரிசித்து எங்கள் ஆவலைத் தீர்த்துக்கொள்ள, தங்கமான சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி மனம்பூரித்தோம். அன்றையதினம் காலை வெகு சீக்கிரமாக எழுந்திருந்து, பல் துலக்கிக்கொண்டு, வீட்டை விட்டுப் புறப்பட்டோம். ஆறுமணிக்கே ஸென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வந்து, ப்ளாட்பாரம் டிக்கட் வாங்கிக்கொண்டு, கல்கத்தாமெயிலின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். கும்பலே காணோம். பிரம்ம ஞான சங்கத்தைச் சேர்ந்த சிலர், மஹாகவியை வரவேற்று அடையாற்றுக்கு அழைத்துச் செல்ல மோட்டாருடன் வந்திருந்தனர். அன்று கொஞ்சம் நாழிகழித்தே கல்கத்தாமெயில் வந்தது.


ரவீந்த்ரநாத் டாகூர்

முதல் வகுப்புக் கம்பார்ட்மெண்டிலிருந்து, தலையில் புது மாதிரியான கறுப்புக்குல்லாயுடன், நீண்ட, 'சாக்கோலேட்' வர்ணக் கதர் அங்கி அணிந்து, வேதகாலத்து ரிஷியோவென எண்ணும்படியாக, சிவந்த நிறமும் நெடியவடிவமுமுள்ள ஒருவர் இறங்கினார். அவர்தான் கவி என்று நாங்கள் உடனே அறிந்துகொண்டோம். அவருடன், அவர் மகன் ரதீந்த்ரநாத் டாகூர், மருமகள் ப்ரதிமா தேவி, பேத்தி நந்தினி, அவர் காரியதரிசி, ஆகிய நால்வர் வந்திருந்தனர். சாமான்களெல்லாம் வண்டியை விட்டு இறக்கப்பட்டதும், அவற்றை ஒருமுறை பார்த்துவிட்டு, ரவீந்திரர், வெள்ளி போன்ற மதுரமான குரலில், "ஓடி ஆச்சே கினா?" (அது இருக்கிறதா இல்லையா?) "ஏடி ஆச்சே கினா?" (இது இருக்கிறதா இல்லையா?) என்று தன் மருமகளைப்பார்த்துக் கேட்டார். இதிலிருந்து ரவீந்த்ரநாதர் ஸம்ஸாரத்தைத் துறந்த சந்யாசியல்ல; குடும்பஸ்தர்தான் என்று அறிந்தோம்.

ரவீந்த்ரர், அவருடைய காரியதரிசி, மருமகள், பேத்தி, ஆகிய நால்வரும் ஒரு காரில் ஏறிக் கொண்டனர். நாலைந்துபேர், அவருடைய கையெழுத்தையும், உபதேசமொழிகளையும் வாங்கிக்

கொள்ள, 'ஆட்டோக்ராப்' ('கையெழுத்து') புத்தகங்களை நீட்டினர். ஒருதரம் இதைப்பற்றி மஹாகவி மிகவும் அழுத்தமாகக் கண்டித்திருப்பதை நாங்கள் பத்திரிகை யொன்றில் படித்திருந்தோம். அதில், "இந்த ஐரோப்பிய முறையை அநாவசியமாகப் பின்பற்ற வேண்டாம். நான் எழுதிக்கொடுப்பதுபோல் நீங்கள் நடந்தீர்களானல் எனக்குத் திருப்திதான். அப்படி இல்லையே. 'ஒரு பெரியவரின் கையெழுத்து என்னிடமும் இருக்கிறது' என்று பெருமையடிப்பதற்கே நீங்கள் அதை வாங்கிக் கொள்ளுகிறீர்கள்." என்று கூறியிருந்தார். ஆயினும் இப்பொழுது அப்புஸ்தகத்தை நீட்டினவர்களுக்குச் சில நன்மொழிகள் எழுதித் தந்தார்.

எங்களுக்கும் அவர்சொன்னது சரியென்றுதான் பட்டது. ஆதலால் நாங்கள் அவருடைய கர ஸ்பர்சத்தையும், அவருடன் வங்காளியில் பேசவும் மட்டுமே விரும்பினோம். எனக்குப் பேச வராததால் என் மூத்த சகோதரரை முன்னால் தள்ளினேன் (அவர்கொஞ்சம் சங்கோசப் பிராணி). நான் அவரைப் பேசும்படி தூண்டினேன். கொஞ்சநேரம் கழித்து, அவர் கவியின் அருகில் வந்து, குரல்நடுங்க, ('ஆமார் ஹாதே ஆபனர் சுப ஸ்பர்ச கருன்' = 'என்கையில் தங்களுடைய சுபமான கரஸ்பர்சம் செய்வீர்' என்பதற்குப் பதில்) "ஆமார்........கரோ" (என்....செய்வாய்) என்று தவறுதலாகக் கூறினர். ஆயினும் மஹாகவி என் சகோதரருடைய பிழையைப் பொருட்படுத்தாமல், தம்முடைய கரத்தை நீட்டி, எங்களைத் தமது கூர்மையான பார்வையால் ஆச்சரியத்துடன் நோக்கினர். 'தமிழ்நாட்டிலும் வங்காளி பாஷைமேல் சிரத்தை கொண்டவர்கள் இருக்கிறார்களா!' என்று எண்ணி வியப்புற்றார் போலும்! நாங்கள் மூவரும் அவருடைய கரத்தைக் கண்களில் ஒற்றிக்கொண்டோம். அவரருகில் உட்கார்ந்த வண்ணம் இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அவர் பேத்தி—எட்டுவயதுச் சிறுமி—நாங்கள் யார் என்று வினவுவதுபோல் அவரை நோக்கினள்.

சற்றுநேரம் கழித்து அவருடைய கார் புறப்பட்டுச் சென்றது. நாங்களும் வீட்டுக்குப்போகப் புறப்பட்டோம். அப்பொழுது பக்கத்திலிருந்த எங்களுக்குத் தெரிந்த ஒரு சர்க்கார் உத்யோகஸ்தர், "அந்தக் கிழவர் யார்?" என்று கேட்டார். நாங்கள், "ரவீந்திரநாத் டாகுர்" என்றோம். அவர் ஒன்றும் புரியாமல், "அப்படியென்றால் யார்? ஏதாவது கிறிஸ்தவ மத குருவா?" என்று கேட்டார். அவருக்கு நாங்கள் என்ன பதில்கூறுவது?—

அதற்குள் அவர் சிநேகிதர் ஒருவர் வரவே அவரும் எங்கள் பதிலை எதிர்பார்க்காமலே அவருடன் போய்விட்டார். நாங்களும் வீடுவந்து சேர்ந்தோம்.

இதிலிருந்து நம் தமிழ்நாட்டில் ரவீந்த்ரநாதரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பவர்களின் எண்ணிக்கையை, விரல்விட்டுச் சுலபமாக எண்ணிவிடலாம் என்று எனக்குத் தோன்றிற்று.

அன்று நான் கண்ட அவருடைய திவ்ய வடிவம் இன்றும் என் மனக்கண்முன் அப்படியே காட்சி யளிக்கின்றது. தம்முடைய (ஜீவனஸ்ம்ருதி) 'வாழ்க்கை நினைவுகளை' எழுதிய மஹாகவிக்கு, அன்றொருநாள் மூன்று தமிழ் இளைஞர்கள் தம் கரத்தைப்பற்றி இழுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டது, இன்னும் ஞாபகத்தி லிருக்கும் என்று நினைக்கிறீர்களா? வயது முதிர்ந்து வருவதால் மறந்துபோயிருக்கலாம் என்றே எண்ணவேண்டியிருக்கிறது.

# ஸ்ரீகாந்தனின் புனர்ஜன்மம்

"கல்கி"

---

ஸ்ரீகாந்தன் பெரியமனுஷாள் வீட்டுப் பிள்ளை. அவனைப்பார்த்த வுடனேயே எவருக்கும் அது தெரிந்து போய்விடும். அவனைப் பெரிய மனுஷாள் வீட்டுப் பெண் என்பதாக லவலேசமும் சந்தேகிப்பதற்கு இடமிராது.

ஸ்ரீகாந்தனுக்கும் இருபதாம் நூற்றுண்டுக்கும் இவ்வுலகில் சேர்ந்தாற் போல் ஜனனம் ஏற்பட்டது. வளர்வதிலும் அவர்களுக்குள் இந்தப்போட்டி இருந்துவந்தது. ஸ்ரீகாந்தனுக்கு ஒரு வயது நிறைந்தால், இருபதாம் நூற்ருண்டுக்கும் ஒரு வருஷம் பூர்த்தியாகும். இருபதாம் நூற்ருண்டு ஒரு மாதத்தைக் கடந்தால், ஸ்ரீகாந்தனும் ஒரு மாதத்தைக் கடப்பான். இப்படியாக இருபதாம் நூற்ருண்டு 1931-ம் வருஷத்தை யடைந்தபோது, ஸ்ரீகாந்தனும் 31-வது பிராயத்தை அடைந்தான். மேலேபோவதற்கு முன்னுல் இந்த முப்பது வருஷத்தில் ஸ்ரீகாந்தனுடைய சரித்திரத்தையும், அவனைச் சேர்ந்தவர்களின் சரித்திரத்தையும் சுருக்கமாகத் தெரிந்துகொள்வோம்.

**அப்பா:** ஸ்ரீகாந்தன் பிறந்தபோது ஏகாம்பரய்யர் ஜில்லா முனிசீப்; சீக்கிரத்தில் ஸப்ஜட்ஜ் உத்தியோகம் ஆகவே, வந்தவர்கள் வராதவர்கள் எல்லோரும் "ஸ்ரீகாந்தன் பிறந்தவேளை" என்று சொன்னுர்கள். பலவருஷம் உத்தியோகம் பார்த்த பின்னர், அவர் ஐம்பத்தைந்து என்று சொல்லப்படுகிற ஐம்பத்தெட்டாவது வயதில் பென்ஷன் பெற்று, இன்றுவரை வாங்கிக் கொண்டு வருகிருர். ஒரு மாதமாவது வேண்டாமென்று சொல்லவில்லை. வைதிக காரியங்களை மிகவும் சிரத்தையாகப் பண்ணுகிறவர். அந்த ஊர் பஞ்சாமிகனபாடிகள் தம்முடைய பெண்ணின் கல்யாணச் செலவுக்கு அய்யர்வாளின் வருஷாப்திகத்தையே நம்பியிருக்கிருரென்று தெரிகிறது.

**அம்மா:** ஸ்ரீகாந்தனுடைய தாயாரைப் பார்த்தவர்கள் எல்லோரும் "மகா லக்ஷ்மிக்குச் சகோதரி ஒருத்தி இருக்கமுடியுமானுல், அவள் இவள்தான்; அவள் இவள்தான்" என்று சொல்வார்கள். பெரியகுடும்பத்தில் பிறந்தவள் இந்த மாதரசி. (இவளுக்குக் கூடப்பிறந்தவர்கள் பதினுெரு பேரும், கூடப்பிறக்காதவர்கள் இன்னும் அநேகரும் உண்டு.) புகுந்த குடும்பமும் இவளால் பெரிதாகியே வந்தது. இந்த அம்மாளுக்குக் கச்சேரிக்குப் போகும் புருஷனும், நல்ல இடங்களில் வாழ்க்கைப்பட்ட நாலு குமாரிகளும், அவர்களைக் கண்ணுடியைப்போல் பாதுகாக்கும் நாலு மாப்பிள்ளைகளும், திரளான பேரன் பேத்திகளும், மற்றும் பல சௌபாக்கியங்களும் இருந்தும், ஒரே ஒரு மனக்குறைமட்டும் இருந்தது. வாசலில் வந்து "அம்மா! பிச்சை!" என்று கேட்கும் பிச்சைக்காரனுக்கு ஒரு பிடி அரிசி

"இல்லை!" என்று சொல்லியனுப்ப வீட்டில் ஒரு மாட்டுப்பெண் இல்லையே யென்பதுதான் அந்தக்குறை. இத்தனைக்கும் காலாகாலத்தில் பிள்ளையாண்டானுக்குக் கலியாணம் பண்ணிவைத்ததில் குறைச்சல் உண்டா?

சகோதரிகள்: ஸ்ரீகாந்தனுக்குமுன் அவனுடைய பெற்றோர்களுக்குப் பிறந்த நாலு புதல்விகளும் ஸ்ரீகாந்தனுடைய மூத்த சகோதரிகளாகவும் ஏற்பட்டது ஒரு விசித்திரமே. அவர்கள் ஸ்ரீகாந்தன்மேல் வைத்திருந்த பிரியத்தையோ கேவலம் மரக்கால் படியினால் அளவிட முடியாது. அவன் கைக்குழந்தையா யிருந்தபோது, ஒரு நிமிஷம் அவனை அவர்கள் தரையில் விட்டு வைத்திருக்கமாட்டார்கள். அவனுக்குப் பல் முளைத்த பிறகு யார் அவனுக்குப் பல் தேய்ப்பது என்பது பற்றிப் பலத்த போட்டி அவர்களுக்குள் ஏற்படும். அவனுக்கு மூக்கு உண்டான பிறகு, யார் அதைச் சிந்துவது என்று சண்டை போடுவார்கள். அவனுக்குக் கல்யாணம் நடந்தபோது, யார் அவனுடைய கண்களுக்கு மையிடுவது என்பதில் போட்டி ஏற்பட்டு, கடைசியில் நாலுபேரும் மையிடவே, அவனுடைய கண்கள்—எப்போதும் மற்றவர்களுடைய துக்கத்துக்காக அழுகிற கண்கள்—தங்கள் சொந்தத்திற்கே அழ வேண்டியதாயிற்று. உண்மையில் அந்தக் கல்யாணம் நாலு நாளிலும் தான் பட்ட கஷ்டங்களை நினைத்துக்கொண்டால் ஸ்ரீகாந்தனுக்கு இப்போது கூடக் கதிகலங்கத்தான் செய்யும்.

ஸ்ரீகாந்தனுடைய மனைவியைப்பற்றிச் சொல்வதில் இன்னும் நான் காலந் தாழ்த்தினால் கதை மேலே ஓடாது.

ஸஹதர்மிணி: ஸ்ரீகாந்தனுக்குப் பதினெட்டாவது வயதிலேயே கலியாணம் நடந்தது. வது, ஐந்நூறு வேலி மிராசுதாருடைய ஒரே கடைக்குட்டிப் பெண் என்பது குறிப்பிடத்தக்கது. அப்போது அவளுக்கு வயது பன்னிரண்டு. அழகையில் அவள் ரதிக்குச் சமமாயிருந்தாள். குடுகுடுவென்று அவள் ஓடும் போது நாம் பார்த்திருந்தால் "சுவரில் எழுதிய எந்த திவ்ய சித்திரந்தான் இப்படி ஓடமுடியும்?" என்று ஆச்சரியப்பட்டிருப்போம்.

ஆகவே ஸ்ரீகாந்தன் அவள் பேரில் கணக்கு வழக்கில்லாத காதல் கொண்டிருந்ததில் ஆச்சரிய மென்ன? அவர்களுடைய சாந்திகலியாணத்தன்று இரவு, ஸ்ரீகாந்தனும் அவனுடைய மனைவியும் ஜன்னலைத் திறந்து வைத்துக்கொண்டு, விளக்கேற்றிவைத்துக் கொண்டு, சீட்டாடிய விவரம் உலகத்தில் கேள்விப்பட்டவர்களுக் கெல்லாம் தெரிந்தேயிருக்கும்.

ஆனால், அவர்களைப்பார்த்து எந்தப் பாவி பொறுமைப்பட்டானோ, எந்தத் துஷ்டை திருஷ்டிவைத்தாளோ, தெரியாது; சீக்கிரம் அவர்களுடைய காதல்வாழ்க்கை முடிவுற்றது. ஸ்ரீகாந்தன் மனைவிக்கு என்னமோ வந்துவிட்டது. சிலர் வியாதி என்றார்கள். சிலர் "இல்லை; ஹிஸ்டரியா" என்றார்கள். வேறு சிலர் "பிசாசு பிடித்திருக்கிறது" என்றார்கள். "ஏவல், சூனியம்" என்றவர்களும் உண்டு. "மாமியார் மருந்திட்டாள்" என்றார்கள் சில பொல்லாத துஷ்டர்கள். யார் என்ன சொன்னால் என்ன? கணவன் வீட்டுக்கு வந்த இரண்டு வருஷத்துக்கெல்லாம் அந்தப் பெண் பிறந்த வீட்டுக்குப் போனாள். போனவள் மறுபடி திரும்பி வரவேயில்லை. ஐந்தாறு

வருஷம் தகப்பனார் வீட்டிலேயே நோயும் நொடியுமாய்க் காலந்தள்ளி விட்டுக் கடைசியில் இந்தத் துக்க உலகத்தை நீத்துச் சென்றாள். அவள் புத்திசாலி என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இனிமேல் பயமின்றி நாம் ஸ்ரீகாந்தனைப்பற்றியும் சிறிது கவனிக்கலாம்.

ஸ்ரீகாந்தன்: உருவத்தில் அவன் ஏறக்குறைய மன்மதனை யொத்திருந்தான். மன்மதனுக்கு இரண்டு கால், இரண்டு கை, இரண்டு கண், இரண்டு காது, ஒரு மூக்கு எல்லாம் (அவன் எரிவதற்குமுன்) இருந்தது போல் ஸ்ரீகாந்தனுக்கும் இருந்தன. மற்றப்படி குணவிசேஷங்களில் அவன் மன்மதனுடன் முற்றிலும் மாறுபட்டான். சாயங்காலவேளைகளில், கரும்பு வில்லுங் கையுமாக, பிரிந்திருக்கும் ஸ்திரீ புருஷர்களைத் தேடிக்கொண்டு போவதற்குப் பதில் அவன் டவுன்ஹால் கிளப்பை நோக்கிச்சென்றான். அங்கே போய், பிங் - பாங் விளையாடினான். உண்மையில், மனைவி பிறந்தகத்திற்குப் போனபிறகு அவனுக்கு வாழ்க்கையில் இருந்த ருசியெல்லாம் இந்தப் பிங் - பாங்கின் மேல் ஏற்பட்டதேயாகும். அந்த விளையாட்டில் வெகு தேர்ச்சியடைந்து, அநேக பந்தய ஆட்டங்களில் வெற்றிபெற்றுப் பல 'கப்'புகளும் வாங்கினான். அவையெல்லாம், அவனுடைய கலியாணத்தின் போது பரிசாகவந்த கண்ணாடி பீரோவில் அழகாக வைக்கப்பட்டிருந்தன.

ஸ்ரீகாந்தன், பி. ஏ. பாஸ்செய்து எப். எல். வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது, அவனுடைய மனைவிக்கு மேற்கூறியபடி சித்தப்பிரமை ஏற்பட்டது. அத்துடன் படிப்பை அவன் விட்டு விட்டான். உத்தியோகத்துக்கு முயற்சிசெய்யவுமில்லை. பையன் மனம்ஒடிந்து போகாமல், எப்படியாவது பிள்ளையாய் இலட்சணமாய் இருந்தால்போதும் என்றிருந்த அவன் தகப்பனாரும் அவனை வற்புறுத்தவில்லை.

மனைவி காலஞ்சென்றபிறகு, அவன் தாயாரும் சகோதரிகளும் புனர் விவாகத்தைப்பற்றி அடிக்கடி ஞாபகப்படுத்துவார்கள். அவர்கள் அந்தப் பேச்சை எடுத்ததும் ஸ்ரீகாந்தன், "உங்களுக்குப் புண்ணியமாய்ப் போகட்டும். இன்னும் கொஞ்சநாளைக்குக் கலியாணம் என்ற பேச்சை எடுக்காதீர்கள்" என்று கூறுவான். அவனுடைய குரலில் தொனித்த பரிதாபமும் பிடிவாதமும் அவனுடைய தாயார், சகோதரிகளின் வாயைக்கூட அப்போதைக்கு அடைத்துவிடும்.

இப்படிப்பட்ட ஸ்ரீகாந்தனுடைய வாழ்க்கையில்தான் அந்த 1931-ஆம் வருஷத்தில் ஓர் அதிசய சம்பவம் நேர்ந்தது.

## 2

ஸ்ரீகாந்தன் பிறந்து வளர்ந்து பிங்-பாங் ஆடிய அந்நகரத்தில் அவ் வருஷ ஆரம்பத்தில், சாத்வீக மறியல் தீவிரமாக நடந்துகொண்டிருந்தது. சர்க்கார் பிரதிநிதிகள் தங்கள் கடமையைத் தடிகொண்டமட்டும் நடத்தி வந்தனர். அவர்கள் இன்னும் பல தீரமான நடவடிக்கைகளையும் கைக்கொண்டனர். காங்கிரஸ் ஆபீஸ்களையும் தொண்டர் ஜாகைகளையும் பூட்டி

விட்டார்கள். தொண்டர்களுக்குத் தங்க இடமோ, உண்ண உணவோ கொடுக்கக் கூடாதென்ற உத்திரவைத் தண்டோராப் போட்டுப் பகிரங்கப் படுத்தினார்கள்.

சில நாளைக்கு நகரமே கதிகலங்கிக் கிடந்தது. தூரத்தில் எங்கேயாவது வெள்ளைக்குல்லாவைப் பார்த்து விட்டால், கிரகஸ்தர்கள் உடனே கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டார்கள்.

இப்படிப்பட்ட அதிகார அமலை மீறுவதற்குரிய ஆண்மை அந்த நகரில் ஒரே ஒருவருக்குத்தான் இருந்ததென்று வெளியாயிற்று. அந்த ஒருவரோ பெண்ணாய்ப் பிறந்தவரா யிருந்தார். அவர் பெயர் ஸ்ரீமதி வஸுந்தரா தேவி.

அந்நகரத்திற்கு ஸ்ரீமதி வஸுந்தரா வந்து சிலமாதகாலந்தான் ஆகியிருந்தது. அந்நகரின் முனிசிபாலிடியினால் நடத்தப்பட்ட பெண்கள் பள்ளிக்கூடமொன்றுக்குத் தலைமை உபாத்தியாயினியாக அவள் வந்திருந்தாள். வயது இருபது, இருபத்திரண்டுதானிருக்கும். அவளுடைய வயது முதிர்ந்த தந்தையும் அவளும், ஒரு சிறிய தனிவீட்டில் குடித்தனம் இருந்தார்கள். ஹோட்டலிலிருந்து சாப்பாடு வரவழைத்துக்கொண்டு சாப்பிட்டார்கள். வஸுந்தரா பள்ளிக்கூடத்துக்குப் போயிருக்கும் சமயங்களில், அவள் தகப்பனார் ஒரு பழைய பிடிலை வைத்துக்கொண்டு அப்பியாசம் செய்து கொண்டிருப்பார்.

இவர்களுடைய வீட்டு வாசலில் ஒருநாள் தடியடியால் நொந்து, பசியினால் மெலிந்த இரண்டு சத்தியாக்கிரஹத் தொண்டர்கள் வந்து சேர்ந்தார்கள். அச்சமயம் கிழவர் பிடில்அப்பியாசம் செய்ததைக் கூட அவர்கள் பொருட்படுத்தாமல், திண்ணையில் சோர்ந்து விழுந்தார்கள். ஏறக்குறைய அதே சமயத்தில் பள்ளிக்கூடத்திலிருந்து வஸுந்தரா திரும்பி வந்தாள். ஊரில் நடப்பதெல்லாம் அவள் கேள்விப்பட்டிருந்தாள். இதனால் ஏற்கெனவே அவள் மனம் இளகியிருந்தது. இப்போது நேருக்குநேர் அத்தொண்டர்களைப் பார்த்ததும் அவளால் சகிக்க முடியவில்லை. அவர்களை உள்ளே அழைத்துச்சென்று தங்களுக்கு வைத்திருந்த ஹோட்டல் சாப்பாட்டை அவர்களுக்கு இட்டாள்.

இந்தச் செய்தி நகரமெங்கும் பரவியது. அன்றுமுழுதும் எல்லாரும் இதைப்பற்றியே பேசினார்கள். டவுன்ஹால் கிளப்பில் பிங் - பாங் ஆடுமிடத்தில்கூட இந்தப் பேச்சு எட்டிற்று. "இதற்குத்தான் தைரியம் வேண்டுமென்கிறது. தைரியமில்லாவிட்டால் ஒருவன் என்ன மனுஷனோடு, ஸார், சேர்த்தி? இத்தனைக்கும் அவள் ஒரு பெண்பிள்ளைதான். இந்த ஊரில் எந்த மீசை முளைத்த ஆண்பிள்ளைக்காவது அவளுடைய தைரியம் இருந்ததா? நான் கேட்கிறேன்!" என்று ஒருவர் ஆவேசமாய்க் கேட்டார். இதெல்லாம் ஸ்ரீகாந்தனுடைய காதில் விழுந்தது. ஆனால் மனதில் இலேசாகத்தான் பதிந்தது. உண்மையில் அவன் அதைப்பற்றிச் சிறிதாவது சிரத்தை கொண்டான் என்று சொல்வதற்கே இல்லை.

இரண்டுவாரம் கழித்து அதே மனுஷர் வஸுந்தரா என்னும் பெயரை மறுபடி பிரஸ்தாபித்தபோதுதான் ஸ்ரீகாந்தன் சிறிது கவனிக்கத் தொடங்

ஜினன். "கேட்டயளா ஸார்! இன்று பெரிய மீட்டிங் கூடப் போகிறதாம். அதில் வஸுந்தரா தேவி தேசீயகீதம் பாடப் போகிறாளாம்.." என்றார் அந்த சிநேகிதர்.

"அதென்ன, ஸார்! புதுப் பெயராயிருக்கிறது? அவள் வங்காளியா, குஜராத்தியா?" என்று ஸ்ரீகாந்தன் கேட்டான்.

"அதுதானே வேடிக்கை? அவள் தமிழ்நாட்டு ஸ்திரீதான்! பெயரை அப்படி மாற்றி வைத்துக்கொண்டிருக்கிறாள். அவள் தகப்பனார் பெயர் ராமகிருஷ்ணய்யர். தகப்பனும் பெண்ணுந்தான் தனியாக வசிக்கிறார்கள்."

"நிஜமாகவா? எதற்காக அப்படிப் பெயரை மாற்றிவைத்துக்கொண்டாள்? அவர்கள் யார்? எந்த ஊர்?"

"அதெல்லாம் ஒன்றும் தெரியாது. அவர்களுடைய பூர்வீகம் பெரிய மர்மமாயிருக்கிறது. அவளுக்குக் கலியாணமாகவில்லையென்கிறார்கள் சிலர். புருஷன் செத்துப்போய்விட்டான் என்கிறார்கள் சிலர். புருஷன் எங்கேயோ இருக்கிறான் என்றும் வேறுசிலர் சொல்கிறார்கள். மொத்தத்தில் ரொம்பக் கஷ்டப்பட்டவர்கள் என்று தெரிகிறது."

ஸ்ரீகாந்தன் அன்று பொதுக்கூட்டத்துக்குச் சென்றிருந்தான். அந்தப் பொதுக்கூட்டம், காந்தி-இர்வின் ராஜி உடன்படிக்கையைக் கொண்டாடுவதற்காகக் கூட்டப்பெற்றது. வஸுந்தரா தொண்டர்களுக்கு அன்னமளித்த மறுநாளே, மகாத்மா விடுதலையடைந்து வைஸ்ராயின் மாளிகைக்குப் பிரயாணமானார். இதுகாரணமாகவே வஸுந்தராவின்மீது நடவடிக்கை எதுவும் அதிகாரிகள் எடுக்கவில்லை. சில நாளைக்கெல்லாம் ராஜி உடன்படிக்கையில் காந்திமகானும் வைஸ்ராய் இர்வினும் கையொப்பமிட்டார்கள். இந்த சந்தோஷச் செய்தியின் நிமித்தம் அந்த ஊரில் நடந்த கொண்டாட்டங்களில், ஸ்ரீமதி வஸுந்தரா நடுநாயகமாக விளங்கினாள். அந்த பிரம்மாண்டமான ஜன சமுத்திரத்தின் மத்தியில் வஸுந்தரா எழுந்து தேசீயகீதம் பாட ஆரம்பித்ததும், ஏதோ மந்திரசக்தியினால் சமுத்திரம் திடீரென்று அலை ஓய்ந்தது போல், நிச்சப்தம் ஏற்பட்டது. சென்ற இரண்டுவருஷகாலமாக யாரைப்பற்றியே இடைவிடாமல் பேசியும் சிந்தித்தும் வந்தார்களோ, அப்படிப்பட்டவளை முதன் முதலாக நேருக்குநேர் பார்க்கும்போது, அதிலும் அவள் சௌந்தர்யமும், கம்பீரமும், நாகரிகமும் வாய்ந்த யௌவன ஸ்திரீயாகவும் இருந்துவிட்டால், எவரும் பேச்சிழந்து பிரமித்து நிற்பதில் வியப்பில்லையல்லவா? ஸ்ரீகாந்தனும் இப்படித் தன்வசமிழந்து நின்றான்.

அன்று பொதுக்கூட்டத்தில் பேசிய பிரசங்கி ஒருவராவது ஸ்ரீமதி வஸுந்தராதேவியின் துணிவைக் குறிப்பிட்டு அதை உதாரணமாக எடுத்துக் காட்டாமல் முடிக்கவில்லை. மத்தியில் ஓர் உற்சாகமுள்ள இளைஞர் எழுந்திருந்து "ஸ்ரீமதி வஸுந்தராதேவி நாலு வார்த்தையாவது பேசவேண்டுமென்று இங்கு அநேகருடைய கோரிக்கை" என்று இடி முழக்கம்போன்ற குரலில் கூவினார். உடனே அந்தப் பெரிய கூட்டத்தின் எல்லாப் புறங்களிலிருந்தும் காது செவிடுபடும்படியான கோஷம் எழுந்தது. மேடையிலிருந்த தலைவர்களும் வற்புறுத்தியதின்பேரில் வஸுந்தரா எழுந்து ஒரு கும்பிடு

போட்டுவிட்டுப் பின்வரும் ஐந்தாறு வாக்கியங்களைச் சொன்னாள்:—"சகோதரிகளே, சகோதரர்களே! நீங்கள் எல்லாரும் இவ்வளவு தூரம் என்னைக் கௌரவப்படுத்தியதற்காக மிகவும் வந்தனம். நீங்கள் எனக்குச் செய்யும் கௌரவத்தை தேசத்தொண்டுக்குச் செய்யும் கௌரவமாகவே நான் பாவிக்கிறேன். வாஸ்தவத்தில் நான் அப்படிப் பிரமாதமான காரியம் ஒன்றும் செய்துவிடவில்லை. பசித்து வந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவதென்பது நம்முடைய புராதன தர்மம். அதை நாம் ஒருநாளும் கைவிட முடியாது. பசியுடன் என்னுடைய வீட்டுவாசலுக்கு வந்த இரண்டு தொண்டர்களுக்குச் சாப்பாடு போட்டதில் நான் என்னுடைய கடமையைச் செய்தேனே தவிர வேறொன்றுமில்லை. அத்தகைய சந்தர்ப்பம் உங்களுக்கு வந்திருந்தால், நீங்கள் ஒவ்வொருவரும் அப்படியே உங்கள் கடமையை நிறைவேற்றியிருப்பீர்கள் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் கிடையாது. வந்தே மாதரம், மகாத்மா காந்திக்கி ஜே!"

அன்று பொதுக்கூட்டம் முடிந்து திரும்பிப்போகும்போது எல்லாரும் வஸுந்தராவைப்பற்றியே பேசிக்கொண்டுபோனார்களென்று சொல்ல வேண்டியதில்லை.

"ஒரு சூடு கொடுத்தாள், பார்த்தயளா, ஸார்! 'சந்தர்ப்பம் வந்தால் நீங்கள் ஒவ்வொருவரும் அப்படியே செய்திருப்பீர்கள்' என்று சொன்னாளே! பயந்து கதவை மூடிண்ட பயல்களுக்கெல்லாம் அது மனதிலே நன்றாய்த் தைத்திராதா?" என்றார் ஒருவர்.

"பிறத்தியாரைச் சொல்லப்போய்விட்டீரே! நீரும் நானும் என்ன செய்து விட்டோம்?" என்றார் இன்னொருவர்.

"நான் சொல்றேன், கேளுங்கோ. இனிமேல் நாமெல்லாம் வளையல் போட்டுண்டு வீட்டுக்குள்ளேயே இருந்துவிடவேண்டியதுதான்" என்று மிகவும் உற்சாகத்தோடு ஒருவர் கூறினார்.

"பாருங்களேன்! ஸார்! ஒரு புடவை உடுத்திய ஸ்திரீக்குள்ள தைரியம் இந்த ஊரிலே ஆண்பிள்ளைகளுக்கெல்லாம் இல்லையே? என்ன பிரயோஜனம்?" என்று ஒருவர் வைராக்கியமாய்ப் பேசினார்.

"அவள் புடவை கட்டிக்கொண்டிருந்தாளே. அது ஒன்று போதும்! நம் வீடுகளிலும் தரித்திரங்கள் பதினெட்டு முழத்தைப் பிரி மாதிரி சுத்திக்கிறதே!" என்றார் இன்னும் பரவசநிலையிலிருந்த ஒருவர்.

## 3

ஸ்ரீகாந்தன் வீட்டுக்குச் சென்றதும் அன்று பொதுக் கூட்டத்தைப் பற்றித் தன் தாயாரிடமும் சகோதரிகளிடமும் சொன்னான். (நாலு சகோதரிகளில் இரண்டு பேராவது எப்போதும் பிறந்தவீட்டில் இருப்பார்கள்.) ஒரு பொம்மனாட்டி பேசினாள் என்று கேட்டதும் அவர்களும் ஆச்சரியப் பட்டார்கள்.

"ஏண்டாப்பா, அவாள் என்ன ஜாதிப்பேரோ?" என்று கேட்டாள் தாயார்.

"சாக்ஷாத் பிராமணாள்தான், அம்மா! அதிலும் ஸ்மார்த்தாள்!" என்றான் ஸ்ரீகாந்தன்.

"அதுவும் அப்படியா? வடமாளோ, அக்ஷசாஸ்திரமோ! அக்ஷசாஸ்திரத்தில்தான் இப்படித்துணிந்து வருவார்கள்."

"பார்! எவ்வளவு புத்திசாலித்தனமாய்ப் பேசுகிறாய். ஜாதிதான் ரொம்ப முக்கியமான விஷயமாக்கும். நீங்களும் பொம்மனாட்டியென்று பிறந்தீர்களே!" என்று வெறுப்புடன் கூறினான் ஸ்ரீகாந்தன்.

சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு சகோதரி "அவளுக்கு எத்தனை வயது இருக்கும்?" என்று கேட்டாள்.

வஸுந்தராவைப்பற்றி யாருடனாவது ஏதாவது பேசவேண்டுமென்றிருந்தது ஸ்ரீகாந்தனுக்கு. எனவே, "இருபத்தைந்து வயதுக்குள்ளிருக்கும்" என்று பதில் சொன்னான்.

"ஆம்படையான், கீம்படையான் ஒருவரும் கிடையாதா?" என்று இன்னொரு சகோதரி கேட்டாள்.

"அதெல்லாம் உங்களுக்கென்ன கவலை?"

"ஏண்டா? பின்னே கவலையில்லையா? பிராமணாளாய்ப் பிறந்து காலாகாலத்திலே கலியாணம் செய்துகொள்ளாவிட்டால் நன்றாயிருக்கோ?" என்றாள் தாயார்.

அதற்குள் சகோதரிகளில் ஒருத்தி அம்மாவின் காதில் வந்து ஏதோ சொன்னாள். உடனே அவள் "சிவ சிவ! காலம் கெட்டுப்போயிற்று ஏண்டா! அவள் கழுத்தில் தாலி இருக்கோ, பார்த்தயோடா?" என்றாள். பின்னோடு, "நான் பார்த்தேன்னாக் கேட்டுடுவேன். அவள் யாராய்த்தானிருக்கட்டுமே? எனக்கென்ன பயம்?" என்று தலையையாட்டினாள்.

ஸ்ரீகாந்தன் "நீங்கள் நாசமாய்ப் போனயள்" என்று சொல்லிவிட்டு எழுந்திருந்து சென்றான்.

அதுமுதல் ஸ்ரீகாந்தன் காங்கிரஸ் கூட்டங்களுக்கு வழக்கமாகப் போய் வரலானான். இதனால் காங்கிரஸ்காரர்கள் சிலரோடு அவனுக்குச் சிநேகம் ஏற்பட்டது. கொஞ்ச நாளைக்கெல்லாம் காங்கிரஸ் ஆபீஸுக்கும் போகத் தொடங்கினான். ஒரு மாஜி ஸப்ஜட்ஜின் புதல்வன்—பணக்கார இளைஞன்—காங்கிரஸில் ஊக்கம் காட்டுவதுபற்றி அவ்வூர் காங்கிரஸ்காரர்களுக்கெல்லாம் மிகவும் சந்தோஷமாயிருந்தது. இரண்டு மாதங்களுக்குப் பிறகு புதிய காங்கிரஸ் கமிட்டிகள் அமைக்கப்பட்டபோது ஸ்ரீகாந்தன் தாலூகா காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியாக நியமிக்கப்பட்டான்.

அதற்கு மறுநாள் அவன் வஸுந்தராவின் வீட்டுக்குப் போனான். (அடிக்கடி பொதுக்கூட்டங்களில் சந்தித்ததில் அவர்களுக்குள் சொற்பப் பரிசயம் ஏற்பட்டிருந்தது.) அவளிடம் "நான் காரியதரிசி பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறேன். அதை நிறைவேற்றுவதற்கு நீங்கள்தான் உதவி செய்யவேண்டும். உங்களால்தான் நான் இந்தக் காங்கிரஸ் வேலையில் ஈடுபட்டதே, தெரியுமல்லவா?" என்றான்.

வஸுந்தராவின் உள்ளத்தில் உவகை பொங்கிற்று. துயரம் நிறைந்த தன்னுடைய வாழ்க்கையில் இப்படி ஒரு சந்தர்ப்பம் வருமென்று அவள் எதிர்பார்க்கவேயில்லை.

"என்னால் இந்த உதவி செய்யத் தடையில்லை. அதைவிட வாழ்க்கையில் என்ன சந்தோஷம் இருக்கிறது? ஆனால் முனிசிபல் சேர்மன் ஏதாவது ஆட்சேபிப்பாரோ என்றுதான் யோசனை செய்கிறேன்" என்றாள்.

"முனிசிபல் சேர்மனை நான் போய்ப் பார்க்கிறேன். அவர் வேண்டுமானால் ஆட்சேபிக்கட்டும், பார்க்கலாம். அப்படியே வந்தால் இந்த வேலை என்ன பிரமாதம்? இந்த ஊரில் நாங்கள் இவ்வளவு பேர் இல்லையா? சும்மா விட்டுவிடுவோமா?" என்றான் ஸ்ரீகாந்தன்.

முனிசிபல் சேர்மன் ஆட்சேபிக்கவில்லை. உண்மையில் காந்தி-இர்வின் உடன்படிக்கை அமலிலிருந்த அந்த வருஷத்தில் ரொம்பப்பேர் திடீரென்று காங்கிரஸ் அநுதாபிகள் ஆனார்கள். சர்க்கார் அதிகாரிகள்கூடக் காங்கிரஸ் நிர்வாகிகளின் நல்ல அபிப்பிராயத்தைப் பெற விரும்பினார்கள்.

இந்த 1931-ஆம் வருஷத்தில் தமிழ்நாடெங்கும் காங்கிரஸ் நிர்மாண வேலைகள் தீவிரமாகத்தான் நடைபெற்றன. ஆனாலும் ஸ்ரீகாந்தன் காரியதரிசியாயிருந்த தாலூகா கமிட்டியைப்போல் அவ்வளவு வேலை எந்தக் கமிட்டியும் செய்யவில்லை என்று சொல்லலாம். இந்தப் பெருமை முழுவதும் வஸுந்தரா தேவிக்கே சேரவேண்டுமென்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அசந்தர்ப்பத்திலும் ஸ்ரீகாந்தன் சொல்லிவந்தான்.

ஒருநாள் அவர்கள் இருவரும் தனியாயிருக்க நேர்ந்தபோது, "நாம் இவ்வளவுநாள் பழகிய பிறகும் உங்களுடைய பழைய வாழ்க்கையைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. என்னைப்பற்றி ஒரு விவரம் பாக்கியில்லாமல் சொல்லியிருக்கிறேன். உங்களைப்பற்றி ஒரு வார்த்தைகூட நீங்கள் சொன்னதில்லை. இஷ்டமில்லாவிட்டால் வேண்டாம். ஆனால் எனக்கென்னவோ தெரிந்துகொள்ள ஆவலாயிருக்கிறது" என்றான் ஸ்ரீகாந்தன்.

வஸுந்தரா, "உங்களுக்கு என்ன வேண்டுமோ, கேளுங்கள்! சொல்கிறேன்" என்றாள்.

"உங்களுக்குக் கல்யாணமே ஆகவில்லையா?"

"பேஷாய் ஆகியிருந்தது. அதற்கு அடையாளம் வேண்டுமானால் பார்க்கிறீர்களா?" என்றாள். அப்புறம் திரும்பி, முதுகிலிருந்த துணியைச் சிறிது விலக்கினாள். அங்கே, செம்பொன் நிறமுடைய அம்முதுகின் மத்தியில், கறேலென்று இரண்டு நீளமான வடுக்கள் இருந்தன.

ஸ்ரீகாந்தன் கண்களை மூடிக்கொண்டான். அவை நெருப்புச் சுட்ட வடுக்கள் என்பதை உணர்ந்த அவன், "எனக்குப் பார்க்க சகிக்கவில்லை" என்றான்.

"என் மாமியார் சூடுபோட்ட வடுக்கள். அவளுடைய பிள்ளைக்கு மருந்திட்டது என்பது முதல் குற்றம். கொடுமை பொறுக்காமல் என் தகப்பனாருக்குக் கடிதம் எழுதியது இரண்டாவது குற்றம்" என்றாள்.

"அப்படிப்பட்ட கஷ்டம் அநுபவித்த நீங்கள் எப்படித்தான் இவ்வளவு உற்சாகமா யிருக்கிறீர்களோ? எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது!" என்றான் ஸ்ரீகாந்தன்.

"முதலில் சங்கீதந்தான் எனக்கு மன ஆறுதல் அளித்தது. இந்த ஊருக்கு வந்தபிறகு உற்சாகத்திற்குப் புதிதாக இரண்டு காரணங்கள் ஏற்பட்டன. ஒன்றுதான் தேசத்தொண்டு; இன்னொன்று—இன்னொன்று உங்களுக்கே தெரியும்."

இதற்கு ஸ்ரீகாந்தன் ஏதோ பதில் சொல்ல வாயெடுத்தான். ஆனால் தொண்டை அடைத்துக்கொண்டது. ஏதோ தெளிவில்லாத சப்தந்தான் வெளிவந்தது.

கொஞ்சநேரங் கழித்து, "உங்களைப் போன்றவர்களுடைய கதையைக் கேட்கும்போது, தேச விடுதலை கூட அவ்வளவு முக்கியமல்ல; நமது சமூகத்திலுள்ள ஊழல்களை நீக்கப் பாடுபடுவதுதான் முக்கியமெனத் தோன்றுகிறது" என்றான்.

"இரண்டுக்கும் விரோதம் ஒன்றுமில்லையே. தேசத்தொண்டு, சமூகத் தொண்டு இரண்டும் சேர்ந்தாற்போல் செய்யலாமே?" என்றாள் வஸந்தரா.

## 4

**1931**-ஆம் வருஷக் கடைசியில் ஒருநாள் ராமகிருஷ்ணய்யர் வஸந்தராவை அருகில் உட்காரவைத்துக்கொண்டு, "அம்மா! உன்னையும் ஸ்ரீகாந்தனையும்பற்றி உலகில் பலவிதமாய்ப் பேசிக்கொள்கிறார்களே? இந்தக் கிழவன் காதுக்குக்கூட அது எட்டியிருக்கிறது. அதன் உண்மை என்ன, அம்மா?" என்று கேட்டார்.

"என்ன, அப்பா, பேசிக்கொள்கிறார்கள்?"

"நீங்களிருவரும் கல்யாணம் செய்துகொள்ளப்போவதாய்ச் சொல்கிறார்கள்."

"அவ்விதம் நேர்ந்தால் உங்களுக்கு அது கஷ்டமாயிருக்குமா, அப்பா! அப்படியானால் நான் கனவில்கூட...."

ராமகிருஷ்ணய்யர் ஒரு பெருமூச்சு விட்டு, "குழந்தாய்! நீ எப்படியாவது சந்தோஷமா யிருக்கவேண்டும். அதுதான் பகவானிடம் இரவுபகலாக நான் பிரார்த்தித்துவருவது" என்றார்.

ஏறக்குறைய அதேசமயத்தில் தேசத்தின் அரசியல் நிலைமையில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. மகாத்மா காந்தி இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டுக்குப் போனவர்—சீமையிலிருந்து திரும்பிவந்தார். அவரை வரவேற்பதற்கு அதிகாரவர்க்கத்தார் ஆயத்தமாயிருந்தார்கள். மகாத்மா காந்தி வைஸ்ராய் வில்லிங்டனை பேட்டிகேட்டதும் அது மறுக்கப்பட்டதும், பின் அவர் கைதுசெய்யப்பட்டதும், மீண்டும் சத்தியாக்கிரஹம் தொடங்கப்பட்டதும் சரித்திர சம்பவங்கள்,

இந்த நாட்களில் 'ஸ்ரீகாந்தன் என்ன செய்யப்போகிறான்? ஸ்ரீகாந்தன் என்ன செய்யப்போகிறான்?' என்றே ஊரெங்கும் பேச்சாயிருந்தது. அதைப்பற்றி இரண்டு பேருக்குமட்டும் எவ்வித சந்தேகமும் ஏற்படவில்லை. அவர்கள் ஸ்ரீகாந்தனும் வஸுந்தராவுந்தான்.

"நாளையதினம் நானும் இன்னும் ஐந்து தொண்டர்களும் காங்கிரஸ் ஆபீசிலிருந்து கிளம்பி மறியலுக்குப் போகின்றோம். ஆனால் கடைத்தெரு வரையில்கூட விடமாட்டார்கள் போலிருக்கிறது. தடியைத் தாராளமாகவே உபயோகிக்கும்படி அதிகாரிகளுக்கு உத்திரவு வந்திருக்கிறதாம்" என்றான் ஸ்ரீகாந்தன்.

"நானும் உங்களுடன் வருவேன்" என்று தழதழத்த குரலில் கூறினாள் வஸுந்தரா.

"கூடவே கூடாது. நாம் இருவரும் முதல்நாளே போய்விட்டால் அப்புறம் ஒன்றும் நடக்காது. குறைந்தது இரண்டுமாதமாவது நீங்கள் வெளியில் இருக்கவேண்டும்."

கொஞ்சநேரம் விவாதத்திற்குப்பிறகு, வஸுந்தரா அதுதான் சரியென்று ஒப்புக்கொண்டு அப்படியே செய்வதாக வாக்களித்தாள்.

"நாளைக்கு நான் எப்படி சகிக்கப்போகிறேனோ தெரியவில்லை. உங்கள்மேல் விழும் அடி ஒவ்வொன்றும் என் இருதயத்தில் விழுவதுபோலவே எனக்கிருக்கும் என்றாள்."

"அப்படி நீங்கள் சொன்னால் எனக்கு இருக்கிற தைர்யமும் போய் விடும்."

"நான் சொன்னது தவறுதான்; மன்னியுங்கள். என்ன இருந்தாலும் ஸ்திரீபத்திதானே?"

"நான் வேறுவிதமாய் எண்ணிக்கொள்வேன். என்மேல் அடிவிழும் போது உங்கள்மேல் அவ்வடிகள் விழாமல் தடுப்பதாக எண்ணிக்கொள் வேன். அப்போது மும்மடங்கு தைரியம் எனக்குண்டாகும். உண்மையும் அதுதானே. என் இருதயத்தில் நீங்கள் இருக்கிறீர்களல்லவா?"

அந்த 1932-ஆம் வருஷத்தில் பாரதநாட்டில் ஆயிரக்கணக்கான சாதாரண மனிதர்கள்—ஏதோ ஒரு தெய்வீக சக்தியினால்—மகத்தான வீரபுருஷர்கள் ஆனார்கள். தடியடி, படுகாயம், பலநாள் ஆஸ்பத்திரி சிகிச்சை, அதற்குப் பிறகு வருஷக்கணக்கில் சிறைவாசம், இவைகளை எதிர்பார்த்துக்கொண்டு அவர்கள் பத்தி பத்தியாய்ச் சென்றார்கள். அப்படிச் சென்றவர்களில் ஸ்ரீகாந்தனும் அவனுடைய ஐந்து சகாக்களும் சேர்ந்தவர்கள். கஷ்டமென் பதையும் நோவென்பதையும் இன்னதென்று அறியாமல் உருண்டு திரண்டு வளர்ந்திருந்த அவனுடைய தோள்களிலும், முதுகிலும், கால்களிலும் அடி விழ விழ, அவனுடைய வாய் "வந்தேமாதரம்" என்று பன்மடங்கு உரத்த சப்தத்துடன் கோஷித்தது.

கடைசியில் ஸ்மரணையற்று அவர்கள் விழுந்தபிறகு அடிப்பதை நிறுத்திச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோனார்கள். மறுநாள் அவர்கள் எல்லாரும் ஆறு ஆறு மாதம் சிறைத்தண்டனை அடைந்தனர்.

அந்த இரண்டுநாளும் ஸ்ரீகாந்தனுடைய வீட்டில் அல்லோலகல்லோல மாயிருந்தது. அவனுடைய தமக்கை பட்ட கவலைக்கு அளவேயில்லை. "ஐயோ! அப்பாவின் பென்ஷனுக்கு ஆபத்துவராமல் இருக்கவேண்டுமே?" என்று அவர்கள் பரிதபித்தார்கள். "அப்பவே ஒரு கால்கட்டைக் கட்டிவிடு என்று சொன்னேனே? என் வார்த்தையை ஒருவரும் கேட்கவில்லையே!" என்று அம்மா கதறினாள். அந்த மாஜி ஸப்ஜட்ஜின் நிலைமையை நான் என்ன வென்று சொல்லட்டும்? "இனிமேல் காங்கிரஸ்காரர்கள்தானே அரசாங் கத்தில் அதிகாரம் வகிக்கப்போகிறார்கள்? அந்த வயனிலாவது பையனுக்கு ஏதாவது உத்தியோகம் ஆகட்டும்" என்று அவர் எண்ணியிருந்தார். அதனால் தான், ஸ்ரீகாந்தன் காங்கிரஸ் காரியதரிசியானதையெல்லாம் அவர் ஆட் சேபிக்கவில்லை. இப்பொழுது அது விபரீதமாய் முடிந்தது.

## 5

ஸ்ரீகாந்தனுடைய துணிவையும் தியாகத்தையும் பற்றி ஊரில் எல்லா ரும் ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் அவனைப் பின்பற்றுவதற்கு ரொம்பப்பேர் தயாராயில்லை. "நாம் ஜெயிலுக்குப் போவதாயிருந்தால் வேறுவழிகளை அனுசரிக்கலாம். திருடலாம்; போர்ஜரி செய்யலாம்; வேறு ஏதாவது பண்ணலாம். இந்த மறியல் சமாசாரம் வேண்டாம்" என்று அவர்கள் எல்லாம் எண்ணினார்கள்.

இந்த நிலைமையை வஸுந்தராவினால் சகிக்கமுடியவில்லை. ஒருவாரம் வரையில் ஏதோ முயற்சி செய்துபார்த்தாள்; அதற்குப் பிறகு, தான் வெளி யில் இருப்பதில் பயன் ஒன்றுமில்லையென்று கண்டு இன்னும் இரண்டு ஸ்திரீ தொண்டர்களுடன் மறியலுக்குப் புறப்பட்டாள். புறப்பட்ட இடத்திலேயே அவர்களைக் கைதுசெய்து கொண்டுபோனார்கள். மற்ற இருவருக்கும் மூன்று மாதமும், வஸுந்தராவுக்கு மட்டும் ஒன்பது மாதமும் சிறைவாசம் கிடைத் தது. தள்ளாத வயதில், தன்னைத்தவிர வேறு ஆதரவில்லாத தந்தையைத் தனியே விட்டுப்போவது அவளுக்கு எத்தனையோ கஷ்டமாய்த்தானிருந்தது. ஆனால் அந்த வருஷத்தில் நம் தேசத்தில் இம்மாதிரி பைத்தியக்காரச் செயல்களை அநேகர் செய்யத் துணிந்தனர்.

வேலூர் ஸ்திரீகள் சிறைச்சாலையில் அவ்வருஷம் வைக்கப்பட்டிருந்த தேச சேவிகைகளில் வஸுந்தராவைப்போல் உற்சாகமாயிருந்தவர்கள் வேறு யாருமில்லை யென்றே சொல்லலாம்.

அவளுடைய சிந்தனைகளில் ஸ்ரீகாந்தன் அடிக்கடி வந்துகொண்டிருந் தான் என்று சொல்லவேண்டியதில்லை. வருங்காலத்தைப்பற்றி எவ்வளவு விதமாக அவள் யோசித்தாலும், அது ஸ்ரீகாந்தனில் வந்தே முடிந்தது. கடைசியில் அவர்களிருவரையும் பகவானே ஒன்றுசேர்த்தாரென்றும், இனி மேல் பிரிந்து வாழமுடியாதென்றும், சமூகத்தின் எதிர்ப்பு எப்படியிருந்த போதிலும் தாங்களிருவரும் சேர்ந்து தேச சேவையில் தங்கள் வாழ்நாளைக் கழிக்கவேண்டுமென்றும் அவள் உறுதி கொண்டாள்.

ஏறக்குறைய ஆறுமாதம் சென்றபோது அவளுடைய உள்ளத்தில் பர பரப்பு அதிகம் ஏற்பட்டது. ஸ்ரீகாந்தன் சீக்கிரம் விடுதலையடைந்துவிடு

வான், தன்னைப் பார்க்க வருவான் என்ற எண்ணம் அவள் மனதில் எழுந்துகொண்டிருந்தது. ஆறுமாதம் முடியவும் அவள் தினந்தோறும் அவனிடமிருந்து கடிதத்தை எதிர்பார்க்கத் தொடங்கினாள். இன்று வரும், நாளை வரும் என்று எதிர்பார்த்துப் பார்த்து ஒருமாதம் சென்றுவிட்டது; 'ஒருவேளை விடுதலையாகி வந்ததும் மறுபடியும் சட்டமறுப்புச் செய்து சிறை புகுந்து விட்டானோ', என்று எண்ணியபோது அவளுடைய நெஞ்சு துணுக்குற்றது. ஐயோ! தான் விடுதலையடையும் வரையிலாவது அவன் வெளியிலிருக்கக் கூடாதா?

இந்த எண்ணம் தோன்றிய பிறகு அவளால் சும்மாயிருக்கமுடியவில்லை. "ஊரில் முக்கிய விசேஷங்களையெல்லாம் அடுத்த கடிதத்தில் கட்டாயம் எழுதவும்" என்று தகப்பனுக்கு எழுதினாள். தகப்பனாரிடமிருந்து பதில் வந்தது. அதில் சில வரிகள் ஜெயில் அதிகாரிகளினால் அடிக்கப்பட்டிருந்தன. அந்த வரிகளில் இரண்டு இடத்தில் ஸ்ரீகாந்தன் என்னும் பெயர் இருப்பதாக வஸுந்தராவுக்குத் தோன்றிற்று. இதனால் அவளுடைய மனச்சஞ்சலம் இன்னும் அதிகமாயிற்று.

தகப்பனாருடைய கடிதத்தில் இன்னொரு விஷயமும் இருந்தது. சென்னையில் வஸுந்தரா கல்விபயின்று தேறிய ஸேவாசிரமத்தின் தலைவியிடமிருந்து அவருக்கு ஒரு கடிதம் வந்திருந்ததாம். அந்த ஆசிரமத்திலேயே ஓர் உபாத்தியாயினி வேலை காலியாயிருப்பதாகவும், வஸுந்தரா விடுதலையாகிவந்ததும் சென்னைக்கு வந்து அந்த வேலையை ஒப்புக்கொள்ளும்படியும் எழுதியிருந்தாளாம்.

அந்த ஸேவாசிரமத்தின் தலைவி ஓர் அபூர்வமான ஸ்திரீ. முக்கியமாக, வஸுந்தராவிடம் அவள் விசேஷ பிரியம் வைத்திருந்தாள். இனிமேல் முனிசிபல் பள்ளிக்கூடங்களில் அவளுக்கு வேலை கிடைப்பது கஷ்டமென்று அறிந்து இந்த ஏற்பாடு செய்திருந்தாள்.

ஆனால் வஸுந்தராவுக்கு இதைப் படித்ததும் புன்னகை உண்டாயிற்று. சென்னைக்குத் திரும்புவதா? ஸேவாசிரமத்தில் வேலையா?—தன்னுடைய வாழ்க்கை இப்போது ஸ்ரீகாந்தனுடைய வாழ்க்கையுடன் பிணைக்கப்பட்டிருப்பதை அவர்கள் என்ன கண்டார்கள்?

ஒன்பது மாதமும் சென்றது. வஸுந்தரா விடுதலையடைந்தாள். விடுதலையில் எவ்வளவு குதூகலத்தை எதிர்பார்த்தாளோ, அதில் ஒரு பகுதிகூட ஏற்படவில்லை. சிறை வாசலில் ஒருவேளை யாரையாவது எதிர்பார்த்திருந்து அவர் வராததினால் ஏமாற்றம் அடைந்தாளோ?

வழக்கம்போல் வேலூரிலிருந்த சில காங்கிரஸ் அபிமானிகள் அவளை வரவேற்று அழைத்துச்சென்று ரயிலில் ஏற்றிவிட்டார்கள்.

இரவு ஒரு நிமிஷங்கூட அவள் தூங்கவில்லை. இடையிடையே வண்டி நிற்கும்போதெல்லாம் பிளாட்பாரத்தில் குறுக்கேநெடுக்கே போகிறவர்களைக் கூப்பிட்டு "ஸ்ரீகாந்தனைப்பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" என்று கேட்கலாமாவென அவளுக்குத் தோன்றிற்று.

ஒன்பது மாதத்துக்குமுன்பு கைதியாக ரெயிலேறிய அதே ஸ்டேஷனில் இப்போது வஸுந்தரா சுதந்தரமுள்ள ஸ்திரீயாக வந்து இறங்கினாள்.

ஆனல் அப்போது மனதிலிருந்த குதூகலத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட இப்போது இல்லை.

பிளாட்பாரத்தில் சுற்றுமுற்றும் பார்த்தாள். அவள் எதிர்பார்த்த மனிதர் எங்கும் காணப்படவில்லை. ஆனல் அவளுடன் கைதியான இரண்டு ஸ்திரீகளும் வந்திருந்தார்கள். அவர்கள் அவளைப் பிரியத்துடன் தழுவிக் கொண்டு அழைத்துச் சென்றார்கள். வெளியே அவர்கள் அமர்த்தியிருந்த வண்டியில் மூவரும் ஏறிக்கொண்டனர்.

ஜெயில் யோகக்ஷேமங்களை விசாரித்த பிறகு "இப்போது யார் இங்கே காங்கிரஸ் காரியதரிசி?' என்று வஸுந்தரா கேட்டாள்.

"இங்கு இப்போது காங்கிரஸுமில்லை; காரியதரிசியுமில்லை."

"நிஜமாகவா? ஸ்ரீகாந்தன்கூடவா ஒன்றும் செய்யவில்லை?"

"ஸ்ரீகாந்தனு? உனக்கு சமாசாரம் தெரியாதா?"

"தெரியாதே? என்ன சமாசாரம்? மறுபடியும் ஜெயிலுக்குப் போய் விட்டாரா, என்ன?"

வஸுந்தராவின் நெஞ்சு அப்போது உண்மையாகவே துடித்தது.

"அவர் ஏன் ஜெயிலுக்குப் போகிறார்? அவருக்குப் பைத்தியமா பிடித் திருக்கிறது?"

வஸுந்தரா கொஞ்சம் ஆறுதலடைந்தாள். இவர்களுக்கென்ன, பிறத்தியார்மேல் புகார் சொல்வதுதான் வேலை. அவர் ஏன் அவசரப்பட்டுக் கொண்டு ஜெயிலுக்குப் போகவேண்டும்?

"இப்போது ஊரில் இருக்கிறாரா?" என்று கேட்டாள்.

"ஊரில் எப்படி இருப்பார்? அவருக்கு இன்றைக்குப் பாண்டிச்சேரியில் கல்யாணம். பாவம், உனக்கு எப்படித் தெரியும்?"

ஐந்து நிமிஷங்கள் கழித்துத் தழதழத்த குரலில் வஸுந்தரா கேட்டாள்: "எதற்காகப் பாண்டிச்சேரியில் கல்யாணம்?"


"பெண்ணுக்குப் பதின்மூன்று வயது; சாரதா சட்டத்தை ஏமாற்று வதற்காக அங்கே போய்ப் பண்ணுகிறார்கள்!"

வஸுந்தராவின் வீட்டு வாசலிலேயே அந்த சிநேகிதர்கள் விடை பெற்றுச் சென்றார்கள், ராமகிருஷ்ணய்யர் பிடில் வாசித்துக்கொண்டிருந்த வர், வாசலில் வண்டிச் சத்தம் கேட்டதும் பிடிலை நிறுத்தினர்.

"குழந்தாய்!" என்றார்.

"அப்பா!" என்று அலறிக்கொண்டு வஸுந்தரா ஓடிவந்து அவருடைய கழுத்தைக் கட்டிக்கொண்டாள். இருவரும் கண்ணீரைப் பெருக்கி விம்மி விம்மி அழுதார்கள்.

அரைமணி நேரம் கழித்து அழுகை ஒருவாறு நின்றபொழுது வஸுந் தரா, "அப்பா! ஸேவாசிரமத்துக்குக் கடிதம் எழுதிவிடுங்கள்; நாம் நாளைக்கே புறப்படலாமல்லவா?" என்றாள்.




## "செல்லப் பிள்ளை"


ஸி. வி. சுப்பிரமணியம்

கொட்டையூர் என்பது கும்பகோணத்திற்கு அருகேயுள்ள ஒரு சிறிய கிராமம். அதில் குமாரஸாமி என்ற குயவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரு பையன் உண்டு. அவன் பெயர் குப்பு.

குப்புவுக்கு வயது பதிநான்கு இருக்கும். படிக்கவே மாட்டான். பள்ளிக்கூடத்திற்குப் போவதில்லை. அசாத்திய விஷமம் செய்வான். அப்படியிருந்தும் தந்தை அவனைக் கண்டிப்பதேயில்லை. ஏன்? ஒரே பையனானதால் அவ்வளவு செல்லமாக வளர்த்து வந்தான்.

குமாரஸாமிக்கு கும்பகோணத்தில் ஒரு சிறிய கடையுண்டு. பிரதிதினமும் அதிகாலையில் எழுந்திருப்பான். கடைக்குத் தேவையான சட்டிகளையும் பானைகளையும் செய்து, சூளையிட்டுக் கடையில் கொண்டுபோய்ச் சேர்ப்பான். அவைகளை விற்றுக் கிடைக்கும் பணத்தைக்கொண்டு ஜீவனம் செய்வான். இது தான் அவனுடைய தினசரி வேலை.

ஒருநாள் குமாரஸாமி ஒரு முக்கியமான காரியமாக வெளியூருக்குச் செல்ல நேரிட்டது. கடையை கவனித்துக்கொள்ள வேறு ஆஸாமி ஒருவருமில்லை; ஆகையால் தன் மகனைக் கூப்பிட்டு "குப்பு! நாளைக்கு நான் ஊரிலிருக்கமாட்டேன். நமது கடையை நீ தான் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். முடியுமா?" என்றான். குப்புவும் சம்மதித்தான். தந்தைக்கு அசாத்திய சந்தோஷம்.



"குப்பு, யாரிடத்திலும் அதிக வார்த்தை வைத்துக் கொள்ளாதே. வீண் கும்பல் கூட்டாதே. கடையை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்" எனக் கட்டளையிட்டு, கடைச்சாவியைக் குப்புவிடம் கொடுத்து விட்டு, வெளியூருக்குச் சென்றான்.

மறுநாட்காலை குப்பு எழுந்தான்; கடையைத் திறந்தான். ஜனங்கள் சாமான்கள் வாங்கவந்தனர். குப்பு அவர்களுக்குச் சரியான பதிலே சொல்லவில்லை. "என் தந்தை யாருடனும் அதிக வார்த்தை வைத்துக் கொள்ளாதே என்று சொல்லியிருக்கிறார். ஆகையால் நான் உங்களுடன் அதிகமாய்ப் பேசத் தயாராயில்லை. நீங்கள்போகலாம்" எனக்கூறி அவர்களை அனுப்பி விட்டான். பிள்ளையின் சாமர்த்தியத்தைக்கண்ட அவர்கள், சிரித்துக் கொண்டே வேறு கடைக்குச் சென்றுவிட்டார்கள்.




குப்புவின் கடைக்குப் பக்கத்தில் ஒரு ஆப்பக் கடையிருந்தது. அதில் ஏராளமான ஈக்கள் மொய்த்துக்கொண்டேயிருந்தன. அவைகளில் சில, குப்புவின் கடையிலும் புகுந்தன. குப்புவுக்கு வந்தது கோபம்.

"என் தந்தைக்குத் தெரிந்தால் என்ன நினைப் பார்! கடையில் ஏன் வீண்கும்பல்?" எனச் சொல்லிக்கொண்டே கூடிய வரையில் அவைகளைத் துரத்திப் பார்த்தான். ஈக்கள் திரும்பவும் திரும்பவும், அங்கிருந்த பானைகளின் பேரிலும், சட்டிகளின் பேரிலும் உட்கார்ந்தன. குப்புவின் ஆத்திரம் அதிகமாயிற்று. எடுத்



தான் ஒரு குண்டாந்தடியை; அடித்தான் ஈக்களை. ஆனால் ஈக்களா சாகும்? மண் பாண்டங்கள் படபட வென உடைந்தன. ஈக்கள் அப்பொழுதும் கடையை விட்டுத் தொலையவில்லை. பாவம்! என்ன செய்வான் குப்பு!

நல்ல வேளையாய் அவனுக்குத் தந்தையின் மூன்றுவது கட்டளை ஞாபகத்திற்கு வந்தது. உடைந்த பானைகளையும், சட்டிகளையும் பொறுக்கிக் கூடைகளில் நிரப்பி, கடையைக் கூட்டிச் சுத்தமாக வைத்தான். இதற்குள் இரவுநேரம் வர, ஈக்களும் மறைந்தன. ஆனால் குப்புமட்டும் கடையை



விட்டு நகரவில்லை. இரவு முழுவதும் குப்பு கடையிலே

யே உட்கார்ந்திருந்தான். சாப்பிடவுமில்லை, தூங்கவுமில்லை. பாவம்! அவன் என்ன செய்வான்? தந்தை வரும் வரையிலல்லவோ கடையைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டும்!

இரவுநேரம் சென்றது. குப்புவை எங்கெங்கேயோ தேடிக் களைத்துப் போனாள் அவன் தாயார். நல்லவேளையாய் குமாரஸாமியும் ஊருக்குத் திரும்பினான். குப்புவைக் காணாது திகைத்தான். இருவருமாகத் தேடிக் கொண்டே, கடையை அடைந்தனர். இவர்களைக் கண்டதும், குப்புவுக்கு ஒருபாரம் விட்டது போலாயிற்று. "அப்பா! முன்னால் கடையை ஒப்புக் கொள்ளுங்கள்.



நீங்கள் தெய்வம்தான். என்னால் ஒரு நாள்கூடப் பார்த்துக்கொள்ளமுடியாத இந்தக்கடையை, நீங்கள் எப்படித்தான் தினந்தோறும் பார்த்துக்கொள்ளுகிறீரோ" எனக்கூறி கடைச்சாவியைத் தந்தையிடம் கொடுத்தான்.

இரவுமுழுவதும் தன்மகன் சாப்பாட்டிற்கும் வீட்டிற்கு வராமல் கண்விழித்திருப்பதையும், அங்கிருந்த பாண்டங்கள் காணாதிருப்பதையும் கண்ட குமாரஸாமி, தனக்கு அன்று பகலிலும் இரவிலுமாக, நல்ல வியாபாரம் நடந்திருப்பதாகவே எண்ணினான். அன்புடன் தன்மகனை அருகில் அழைத்து "குப்பு! சாமான்களை விற்ற பணம் எங்கே?" என்றான்.

தன் தந்தையின் கட்டளைப்படி, தான் வாடிக்கைக்காரர்களிடம்கூட அதிக வார்த்தை வைத்துக்

கொள்ளாதிருந்ததையும், கடையில் வீணகும்பல் கூடிய ஈக்களை குண்டாந்தடியால் அடித்துத் துரத்தியதையும், கடையில் உடைந்து போன சட்டிபானைகளை, முன்ருவது கட்டளைப்படி, சுத்தமாய்க் கூட்டிக் கூடையில் அள்ளி வைத்திருப்பதையும், தான் வரும் வரையில் கடையைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளச் சொன்னபடி, இரவுமுழுவதும் பசியையும் பொறுத்து, தூங்காமல், கடையைப் பார்த்துக் கொண்டதையும், அவனிடம் தெரிவித்தான் குப்பு. பெற்ருேரின் மனம் எப்படியிருக்குமென எண்ணுகிறீர்கள் ?

"மடையா ! உன்னுல் என் கடையே நாசமாகி விட்டதே !" என்ருன் குமாரஸாமி ஆத்திரத்துடன். "அவன் என்ன செய்வான்? நாம் அவனைச் செல்லப் பிள்ளையாக வளர்த்து, ஒருகாரியத்திலும் பழக்கமில்லாதவனுகக் கெடுத்தோம்" என்ருள் தாயார் வருத்தத்துடன். அப்பொழுதுதான் தன் குற்றத்தை உணர்ந்தான் குப்பன்.

அன்றையதினத்திலிருந்து குப்பு, தன் விளையாட்டு புத்தியை விட்டொழித்தான். மற்றப் பையன்களுடன் பள்ளிக்கூடத்திற்குச் சென்ருன். நன்ருகப் படித்தான். ஒழிந்த வேளைகளில், தன் தந்தைக்கு உதவியாக இருந்து, மண்பாண்டங்களை நன்ருகச் செய்யவும், விற்கவும் கற்றுக்கொண்டான். தற்சமயம், சமர்த்தனென எல்லோராலும் கொண்டாடப் படுகிருன்.

---




## ஜேபிக்குள் புத்தகசாலை!

பிஸ்கே என்பவர் ஒரு புதிய யந்திரம் கண்டுபிடித்திருக்கிறார். அதன் உதவியால், ஒரு புத்தகத்தை அதன் தற்போதைய விலைக்கு அறுபது மடங்கு குறைத்து விற்றாலும் லாபம் கிட்டி விடும் என்கிறார். 'டைப்' அடித்த ஒரு புஸ்தகத்தின் ஒவ்வொரு பக்கத்தையும் படப்பதிவு மூலமாக நூறு மடங்கு சிறிதாக்கி, வார்த்தெடுத்து, இரண்டங்குல அகலம், ஐந்து அங்குல நீளமுள்ள காகிதத்துண்டுகளில் அச்சிட்டால், அம்மாதிரி ஐந்து காகிதத்துண்டுகளில் ஒரு பெரிய நாவலைக்கூட அடக்கி விடலாமென்றும், லக்ஷம் பதங்கள் கொண்ட ஒரு புத்தகத்திற்குப் பத்தாயிரம் பிரதிகள் அச்சிட்டு, பிரதி ஒன்று நாலுகாசு வீதம் விற்காலமென்றும் கூறுகிறார். அவ்வளவு சிறிய எழுத்துக்களைச் சாதாரணமாகப் படிக்க முடியாததலால், அதற்கென்று ஒரு பூதக்கண்ணாடியும் தயாரித்திருக்கிறார். இவ்வாறாக 500 தனிப்புத்தகங்களடங்கிய ஒரு புத்தகசாலையையே ஜேபிக்குள் எடுத்துக் கொண்டு செல்லமுடியும்!

## உலகத்தில் பெரிய புத்தகம்

சாதாரணமான ஒரு மனிதனைவிட உயரமான பூகோளபடப் புத்தகம் ஒன்று இருக்கிறது. உலகத்தில் இதைவிடப் பெரிய புத்தகம் கிடையாது. கி. பி. 1660-ஆம் ஆண்டில், சில டச்சு வியாபாரிகள் இப்புத்தகத்தை அப்பொழுது இங்கிலாந்தில் அரசாண்ட இரண்டாம் சார்லஸ் மன்னவனுக்கு அளித்தார்களாம். இப்பொழுது இது பிரிட்டிஷ் கண்காட்சி சாலையில் இருக்கின்றது. சுமார் 400 வருஷங்களுக்குமுன் எழுதப்பட்ட போதிலும் இதிலுள்ள படங்கள் தவறின்றி இருக்கின்றன.

## வாலில்லாக் குரங்கு

வாலில்லாக் (உரங்குவுடான்) குரங்குகளுக்கு, மனிதனுக்குச் சமமான புத்தி இருக்கிறது என்று சில திருஷ்டாந்தங்களால் தெரிகிறது. சிறுவயது முதற்கொண்டு அதைப் பழக்கினால், அது மனிதர்களைப் போலவே எல்லா விஷயங்களிலும் நடந்து கொள்கிறதாம்.

ஒரு மிருகக்காட்சிசாலையில், ஒரு வாலில்லாக்குரங்கு இருந்தது. அதன் கூட்டிலிருந்து கொஞ்சதூரத்தில் கடலைக்காய் ஒன்று கிடந்தது. அதைக் கையால் எட்டி எடுக்கப் பிரயத்தனப்பட்டது அக்குரங்கு; ஆனால் முடியவில்லை.

அப்புறம் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுத் தன்கூட்டில் பரப்பப்பட்டிருந்த வைக்கோலில் கொஞ்சம் எடுத்து கெட்டியாகத் திரித்து, கடலைக்காய்மேல் போட்டு இழுத்தது. கடைசியில் கடலைக்காய் அதன் கைக்கு எட்டிவிட்டது.

அதுவே ஒருசமயம் ரொம்ப நோயுற்றுக் கிடந்தது. ஊசிகுத்தி மருந் தேற்ற வேண்டியிருந்தது. இதை இரண்டுமுறை செய்து விட்டார்கள். மூன்றும் தடவை டாக்டர் வந்தபோது, அது தானுகவே கையைக்காண்பித் ததாம். அதைக் கண்டு டாக்டர் ஆச்சர்யப்பட்டு, "மனுஷ்யர்களில் கூட இப்படிப்பட்டவர்கள் வெகு துர்லபம்" என்றாராம்.

—மாடர்ன் ரெவ்யூ.

## விநோதமான (?) ஆகாரங்கள்

(1) தென் அமெரிக்காவில் அமேஜான் நதிக்கரையிலுள்ள சுதேசிகள் ஒருவகைப் பாம்பை உணவாகக் கொள்கின்றனர். (2) முந்நாட்களில் இதாலி தேசத்தில் நத்தையை மிக ருசியுள்ள தின்பண்டமாகக் கருதிவந்தனராம். திராக்ஷை ரஸம் நிறைந்த தட்டுக்களில் அவற்றைப் போட்டுவிடுவார்களாம். அதைக் குடித்துவிட்டு, அவை பருத்து மயங்கிப்போய்க் கிடக்குமாம். அப்புறம் அதை உட்கொள்வார்களாம். (3) பர்மா தேசத்தில் ஒருவிதப் பல்லியை ஆகாரமாக உட்கொள்ளுகிறார்கள். (4) துருக்கிதேசத்தில் சகஜ மாகக் கரப்பான்பூச்சிகளை வெண்ணெயில் பொறித்துச் சாப்பிடுவார்களாம். (5) யானையின் கால் என்றால் சில நீக்ரோ ஜாதியினருக்கு நாவில் ஜலம் ஊறுமாம். அது அவ்வளவு ருசியானது என்று கருதப்படுகிறது. (6) பிலிப் பைன் தீவுகளில் பதினாறும் நூற்றாண்டில் சுதேசிகளால் நரமாமிஸம் சிரேஷ்டமாகக் கருதப்பட்டுவந்ததாம். (7) அமெரிக்காவில், சமீபத்தில் தவளைகள் ருசியுள்ள ஆகாரப்பொருளாகக் கருதப்பட்டு, தவளைகளுக்கு எங்கும் வெகு 'கிராக்கி' ஏற்பட்டிருப்பது யாவருமறிந்த விஷயம். தவளைப் பண்ணைகள் அநேகம் எங்கும் உண்டாகி, 8, 9 பவுண்ட் நிறையுள்ள கொழுத்த தவளைகளை உற்பத்தி செய்துவருவதும் பிரசித்தமான விஷயம். (8) பேனைக் கூட ஒரு தின்பண்டமாக இப்பொழுதும் உட்கொள்ளுகிறார்கள் மங்கோலியா விலுள்ள சில ஜாதியினர். இதிலிருந்து மனிதன் உட்கொள்ளாத ஜீவ ஜந்துவே இவ்வுலகில் கிடையாது என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

## பால் சுரக்கும் மரம்

அமெரிக்காவிலுள்ள குவாடெமாலா என்ற பிரதேசத்தில் ஒருவகை மரத்திலிருந்து பால் எடுக்கிறார்கள். ருசியில் பசும்பாலுக்கு நிகராகச் சொல்லலாம் என்று ப்ரொபஸர் ரிக்கார்ட் என்னும் அமெரிக்கர் கூறுகிறார். அப்பிரதேசத்திலுள்ள சுதேசி ஜனங்கள் அப்பாலை காப்பியில் விட்டும், தயிராகத் தோய்த்தும் சாப்பிடுகிறார்கள்.

—நாசுரல் ஹிஸ்டரி மாகஸின்.

## சப்பாத்தியிலிருந்து ரப்பர்

அமெரிக்காவிலுள்ள டாக்டர் விச்மான் என்பவர் புதுவிதமான ரப்பரைக் கண்டுபிடித்திருக்கிறார். சப்பாத்தி இலைகளிலிருந்து சார் பிழிந்து அதைக் காய்ச்சினால் ரப்பர் போன்ற வஸ்து உண்டாகிறதாம்.

—பாபுலர் ஸையன்ஸ்.

## புராதன மரக்கோயில்

நார்வே தேசத்திலுள்ள ஆஸ்லோ என்ற ஊரில், 800 வருஷங்களுக்கு முன் மரத்தால் கட்டப்பட்ட ஒரு மாதாகோயில் இருக்கிறது. இரும்பு ஆணிகளே அதில் உபயோகப் படுத்தப்படவில்லை. மர ஆப்புகளாலும், வஜ்ரத்தாலுமே மரப்பலகைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அம்மாதாகோயில் ஜீர்ண தசையை அடையவில்லை.

—பாபுலர் மெகானிக்ஸ்.




## கலைச்சொற்கள்*

ஒரு பாஷையில் சொல்லாக்கல் அதன் வாழ்விற்கோ தாழ்விற்கோ காரணமாகிறபடியால், அது ஆழ்ந்த யோசனையுடனும், தீர்க்கதரிசனத்தோடும், மனவிசாலத்துடனும், பலவித நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டும் செய்யப்பட வேண்டிய காரியம். ஆகவே வேறுபட்ட மனப்போக்குள்ள பண்டிதர்கள் பலர் சேர்ந்து தமது அபிப்பிராயங்களைச் செவ்வனே ஆராய்ந்து முடிவுகட்டி அதன்படி நடப்பதே முழுநன்மை தரும். அவ்வாறின்றி, பேதப்பட்ட அபிப்பிராயங்களைக்கொண்ட ஒரு கூட்டம் வீண் சண்டையிலேயே காலத்தைக் கழித்துவிடக்கூடும் என்று அஞ்சியோ என்னவோ, ஒருதலையான அபிப்பிராயங்களைக் கொண்டே, சொல்லாக்கத்தைச் செய்து முடித்ததில் கழகத்தார் சற்று அவசரப்பட்டுவிட்டார்கள் என்றே நினைக்கிறோம்.

சொல்லாக்கம் மனம்போனபடி செய்யக் கூடியதொன்றல்ல; அவ்வாறு ஏற்பட்டால், திகைப்பும் குழப்பமுமே மிஞ்சும். சில பொது விதிகளுக்கும், பாஷைகளின் வேறு வேறான பண்புகளுக்கேற்பச் சில சிறப்பு விதிகளுக்கும் உட்பட்டு, கலைமுறையில், சொல்லாக்கம் நடைபெற வேண்டும். 'கலைச்சொற்களி'ன் முன்னுரையிற் காணும் கொள்கைகளிலும், வாதங்களிலும் பெரும்பாலன நாம் முழுமனதோடு ஒப்பக் கூடியனவே. சிலவே நாம் ஏற்கக் கூடாதன. இவற்றுள் முக்கியமான ஒன்றைமட்டும் இங்கே குறிப்பிடுவோம்: ஸம்ஸ்கிருதச்சொற்களை அறவே நீக்குவதை ஒரு குறிக்கோளாகவே கொண்டுவிட்டது ஒருவிதக் குறுகிய மனப்பான்மையையே காட்டுகின்றது. திராவிடபாஷை எதாயினும் சரி, ஓரளவிற்கு வடசொற்களைச் சொல்லாக்கத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்வதே நல்லது என்பதற்கு அநேக காரணங்கள் கூறக் கிடக்கின்றன. அவற்றை யெல்லாம் இங்கு விவரிக்கஇயலாது. அவசியமான போதகூட நாம் ஸம்ஸ்க்ருதச் சொற்களைக் கையாளாது பிடிவாதஞ் செய்வது தீமையே தரும் என்பதில் ஐயமில்லை.† மக்களுக்காகப்

---

* 'சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம்', திருநெல்வேலி, தொகுத்தது. விலை அணா எட்டு.

† 1933-ஆம் வருஷம், டிசம்பர்மீ, சென்னையில் கூடிய தமிழ் அன்பர் மகாநாட்டில், தமது வரவேற்புப் பிரசங்கத்தில், தாக்ஷிணாத்தியகலாநிதி,

பாஷையே யொழிய, பாஷைக்காக மக்களில்லை. காரணம் எதுவாயிருப்பினும், தமிழ்நாட்டில் வடமொழிச் சொற்கள் கலந்தே எங்கும் தமிழ் வழங்கி வருகிறது; அவற்றின் வீதம் வேண்டுமானல் இடத்துக்கிடம் சிறிது மாறியிருக்கக் கூடும். ஆகவே, வழக்கத்திலுள்ளவையும், நல்ல பொருத்தமுள்ளவையும், சுலபமானவையுமான சொற்களை, வடமொழி என்பதற்காக மட்டும் புறக்கணிப்பது நலமல்ல. உதாரணமாக, *Dictator* என்பதற்குத் தமிழ்நாடு முழுவதும், எல்லா பத்திரிகைகளிலும், 'சர்வாதிகாரி' என்ற தொடர் வழங்கிவருகிறது. ஸம்ஸ்கிருதம் என்பதற்காக மட்டும் இதை யொழித்து 'முழு ஆணையாளன்' என்பதை வழங்குவது நகைப்பிற் கிடமேயாகும். *Machine* என்பதற்கு எந்திரம் (இயந்திரம், யந்த்ரம்) என்று எங்குந் தெரிந்த சொல்லிருக்க, வடமொழி என்பதற்காக அதை நீக்கிவிட்டு, 'பொறி' என்பதையே உபயோகிக்க முற்படுவது நெருப்புப் 'பொறி'க்கும் மாயாத தமிழன் தலைப்'பொறி'யே யாகும். *Crystal* என்பதற்கு 'உருவி' எனப் பிரதிபதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சாதாரண வழக்காற்றிலிருக்கும் 'படிகம்' என்பது வடமொழி என்றே தள்ளப்பட்டதென்று நினைக்கிறோம். 'படிகம்', 'படிகமாதல்', 'படிகமுகம்', 'படிகக் கோணம்', 'படிகத்தெளிவு' என்று ஆக்கிக் கொள்ளலாம். இதுபோன்றன மிகப்பல; விரிக்கிற் பெருகும். வடமொழிச் சொற்களையுந் தொடர்களையும் கொள்ள வேண்டுமென்றால், 'அபாஜ்ய வர்த்தனம்' (*Prime factor*), 'லகுதம சாமான்ய அபவர்த்யம்' (*L.C.M.*), 'நிஷ்பீடனம்' (*Pressure*), போன்றனவற்றை ஆக்கிக் கொள்ள வேண்டுமென்பதல்ல. சாமான்யமாய்ப் பேச்சு வழக்கில் இருப்பன, சொல்லாக்க விதிகளுக்கு ஒத்திருந்தால், வடமொழியாயினும் ஏற்கத் தக்கனவே என்பதுதான் நாம் கூறுவது.

மற்றபடி சில சிறு குறைகளே 'கலைச்சொற்களி'ல் காணப்படுகின்றன: (1) ஆங்கிலத்திலுள்ள ஒரே வார்த்தைக்குத் தமிழிலும் ஒரே சொல்லை ஆக்குவதே முறை: உதாரணமாக, *Meter* என்று முடியும் தொடர்களனைவற்றிற்கும் 'அளவி' என்று கொள்வதே நன்மை. *Barometer* என்பதற்கு 'காற்று அழுத்தமளவி' என்பதுபோல், *Thermometer*, *Calorimeter*, *Sonometer*, *Spherometer* என்பனவற்றிற்கு முறையே, (உடல்) 'அனலளவி', 'கனலியளவி', 'சுர(ஸ்வர)மளவி', 'உருட்சியளவி' என்றுதான் ஆக்கவேண்டுமே யொழிய, அனற்பதனி, கனலிக்கலம், சுரஞ்சுட்டி, உண்டைக்கோல் என்று செய்வது, பிழையன்றாயினும், சொல்லாக்கப்பயனைப் பெரிதுங் குறைத்து விடும். (2) சில வார்த்தைகள் பொருந்தாதவாறு அமைந்திருக்கின்றன. உதாரணமாக, '*Condensation*' என்பது தமிழில் 'நீரியாதல்' என்று காண்கிறது. வாயு திரவமாக மாறும்பொழுது 'நீரியாதல்' சரியே. திரவம் திடமாக மாறும்பொழுது எவ்வாறு 'நீரியாதல்' கூடும்? ஆகவே, இரண்டிற்குமாகும்படி, 'திணிதல்' 'தடித்தல்' 'துன்னுதல்', போன்றவையே பொருந்தும். இதுபோன்ற உதாரணங்கள் பெருக்கி இடமடைப்பதில் பயனில்லை.*

---

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் இவ்விஷயமாய்க் குறித்துள்ள அபிப்பிராயம் தமிழன்பர்கள் கவனிக்கத்தக்கது.

*இவையெல்லாம் 'பூதநூல்' பகுதியில் மட்டுமே இருந்து எடுக்கப்பட்டன.

மேற்கூறியபடி ஆங்காங்கு சில சிறு குறைகளிருப்பினும், சொல்லாக்கக் கழகத்தார் செய்துமுடித்திருக்கும் வேலை எவ்வளவு கஷ்டசாத்தியமான தென்பதை அறிந்தவர் அனைவருக்கும் அவ்வேலையின் அருமை நன்கு புலப்படும். ஊக்கத்துடனும், தற்காலத்தேவைகளைக் கவனித்தும், கூடுமானவரை சொல்லாக்கவிதிகளை யனுசரித்தும், வெகுதிறமையோடும், விரைவாகவும், தாம்மேற்கொண்ட பணியை நிறைவேற்றியதற்குக் கழகத்தாருக்குத் தமிழகம் பெரிதும் கடப்பாடுடையது என்பது மிகையாகாது. இன்னும்வேண்டிய சொற்களை ஆக்கித்தொகுத்தும், கலை நூல்கள் எழுதியும், எழுதுவித்தும், தமது தொண்டைத்தொடர்ந்து செய்து முடிப்பார்களென்று எதிர்பார்க்கிறோம். தமிழ்நாட்டில் இரண்டு மூன்று பாஷையிற் பயிற்சியுள்ளார் அநேகரிருக்கின்றனர். அத்தகையோரனைவரும், இம்முக்கியமான வேலையில் அசிரத்தை காட்டாமல், தாமாகவே முன்வந்து தமிழ்ச்சொல்லாக்கத்தில் உதவிபுரியாவிடில், தாய்பாஷைக்குத் தாம் செய்யவேண்டிய கடமையைக் கைவிட்டவராவர். தமிழின் முன்னேற்றம் இப்பொழுது, இத்துறையில், நாமெல்லோருங் காட்டும் ஊக்கத்தையும் உழைப்பையும் பொருத்ததே என்பதைத் தமிழபிமானிகள் நன்ருக உணர்ந்து நடக்கவேண்டியது.

—வை.

தனிப்பாமஞ்சரி: தென் திருப்பேரை அபிநவ காளமேகம், ஸ்ரீ அநந்த கிருஷ்ணய்யங்கார் இயற்றியது. கானவித்யா பிரஸ், ஸ்ரீ வைகுண்டம். விலை அணு 8. கவிகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்: அருள்சுரந்து வரும்பொழுது மாத்திரமே, தன்னிச்சையாக, பாடுவோர் ஒரு சாரார். யமகம், திரிபு, அந்தாதி, சிலேடை, ரதபந்தம், நாகபந்தம், கமலபந்தம், சுழிபந்தம், அரிகண்டம், யமகண்டம், முதலிய கட்டுப்பாடுகளுக்குட்பட்டுப் பாடுவோர் மற்ரொருவகை. ஒருவிதத்தில் பார்த்தால் பல நிபந்தனைகளுக்குட்பட்டுப் பாடுவதே புகழுக்குரியது என்று தோன்றும். ஆனல் இவர்கள் தம்மை உட்படுத்திக் கொள்ளும் கட்டுப்பாடுகளே உண்மைக் கவிதைக்குத் தடையாய் அமைகின்றன என்பதைக் கவனிக்க வேண்டும். இது ஒருவனுடைய கால்களைக் கட்டிவிட்டு அவனை ஓடச் சொல்வதையே ஒக்கும். அவன் அந்நிலையில் ஓடுவது சாமர்த்தியத்திற்கு அடையாளந்தான். ஆனல், அதிகமாகவாவது, நன்ருகவாவது அவனல் ஓடமுடியுமா? மேலும், இக்கட்டுப்பாடுகளைக் கடந்து செய்யுளியற்றும் முயற்சியில் கவிதா சக்தியையே எவ்வாறெல்லாமோ திரித்து, மடக்கி, ஒடித்துவிட வேண்டிவருகிறது. சில சமயங்களில் ரஸாபாஸமாய் முடிகிறது. காரியசித்தியே முக்கியமாகிவிடுவது இயல்பாதலால், ருசிக்குறைவுகளையும் விரஸங்களையும் பொருள்படுத்தத் தோன்ருது. இதுவே பழக்கமாகி, நாளடைவில், உண்மைக்கவிதையின் லக்ஷணமே புலப்படாமல் போய்விடவும் கூடும். பிள்ளை வரங்கேட்கப் போய் புருஷனை இழந்த கதையாய் விடும். இந்த அபாயம்பற்றியே யமகம், திரிபு, சிலேடைகள், பந்தங்கள், கண்டங்கள், முதலியன அதிகமாகவோ வழக்கமாகவோ பாடுவோர் பெரிய கவிகளாவதுமில்லை; மகாகவிகள் இவற்றில் அதிகம் ஈடுபடுவது மில்லை,

பண்டைய காலங்களில் வாழ்க்கை இவ்வளவு பெரிய போராகவோ நெருக்கடியாகவோ இல்லை. ஜனங்களுக்கு அவகாசம் அதிகமிருந்தது. ஆகவே, பொழுது போக்கிற்காகவும், சாமர்த்தியப் பரீக்ஷைக்காகவும், போட்டா போட்டியாகத் தமிழ்ப் புலவர்களும் வள்ளல்களும் கவிச்சிலம்பம் வீசினார்கள். கவிதைக்கே நேரமில்லை என்று சொல்லும்படி அவசர வாழ்க்கையைக் கைக்கொண்ட இந்நாளில் இச்'சர்க்கஸ்' வித்தைகளுக்கு அநேகமாய் இடமேயில்லை யென்றால் மிகையாகாது. இக்காலத்தும் சிலர் இத்துறைகளிலேயே ஈடுபடுவதைக் காணுந்தோறும், Dr. Johnson வேறொரு விஷயத்தைப்பற்றிச் சொன்னது இதற்குப் பொருந்துமென்ற ஞாபகமே நமக்குண்டாகிறது: "ஒரு ஸ்திரீ மதப்பிரசாரம் செய்வது ஒருநாய் தன் பின்னங்கால்களைமட்டும் கொண்டு நடப்பது போன்றதே: பார்ப்பதற்கு என்னவோ நன்றாகவே இல்லை; ஆனால், அவ்வாறு செய்யும்படி அவர்களுக்குத் தோன்றியதே ஒரு பெரிய ஆச்சரியம்."

என்றாலும், சிலேடை முதலிய 'சிலம்ப' வகைகளைக் கையாளுவதற்கு ஒருவிதத் தனிச் சாமர்த்தியமும் பழக்கமும் வேண்டுமென்பதை மறுக்க முடியாது. பார்வதியும் பனைமரமும், ராசாவும் கூசாவும், ஊசியும் கோபுரமும், கந்தனும் பச்சைமிளகாயும்..............ஒன்றென்று பாடுவது சுலபமல்ல. அதற்கு ஒருவகை மூளைச் சுருசுருப்பும்,மனப்பாய்ச்சலும், விஷயப் பொருத்த உணர்ச்சியும் வேண்டும். ஆகவே, பொழுது போக்காகவோ தமாஷுக்காகவோ, திறமையை நிரூபிக்கவோ, வேண்டுமென்றால் ஒரொரு சமயம் இத்துறைகளில் இறங்கி விளையாடலாம். ஆனால் இவற்றிற்கும் உண்மைக் கவிதைக்கும் உள்ள ஒற்றுமை, சந்திரனுக்கும் முயலுக்குமுள்ள தொடர்பிலுங் குறைந்ததே என்பதை ஒரு நிமிஷமும் மறக்கலாகாது.

இத்தனிப் பா மஞ்சரியில் காணப்படும் சிலேடைகளில் சில, ரஸக்குறைவாயிருந்தாலும், அமைப்பு சம்பந்தப்பட்ட மட்டில் அதிகங் குறைகூற இடமில்லை. சில தனியன்களும், ஸ்தல அம்மானைகளும் நன்றாகவே அமைந்திருக்கின்றன. சுபத்ராபரிணயத்திலிருந்து கொடுத்திருக்கும் வெண்பாக்களில் அநேகம், சிலேடைகளும் பலவித 'சித்திர விசித்திர'ங்களும் நிறைந்துள்ளன. இவை ஆசிரியரின் செய்யுளியற்றுந் திறமைக்குச் சான்றாக நிற்கின்றன. மதிப்புரையில் அன்பர் டி. கே. சிதம்பரநாத முதலியார் சொல்லியிருப்பது போல், "விந்யாச விசித்திர வேலைகளுக்குத் தமிழ்ப் பாஷை எப்படி, எவ்வளவு, இடங் கொடுக்கிறதென்பது" நூலைப் படிப்போருக்கு விளங்கும்.

பாலர்கல்வி: பங்குனி, சித்திரைப்பகுதிகள். பிரசுரகர்த்தர்கள் : தென் இந்திய ஆசிரியர் சங்கம், 41, சிங்கராச்சாரித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை, வருஷ சந்தா ரூ. 2; தனிப்பிரதி ரூ. 0—4—0. ஆரம்பக் கல்வியின் அபிவிருத்தியையும், ஆசிரியர்களின் நலத்தையுமே கவனிக்கும் மாதாந்தரப் பத்திரிகை. தற்காலம் கல்விமுறைகளைப்பற்றி நம் நாட்டில் உள்ள குழப்பம் சொல்லத்தரமன்று; அபிப்பிராய பேதங்கள் கணக்கிலடங்கா. ஒருவர் சொல்வதை இன்னொருவர் ஏற்பதில்லை. நிலை இவ்வாறாக, கூக்குரல் அதிகமேயொழிய, உருப்படியாகக் கார்யங்கள் ஒன்றும் நடைபெறுவதில்லை,

ஆசிரியர்கள் குழந்தைகள் மனதில் முளை போடும் எண்ணங்களைப் பொறுத்ததே பிற்காலத்தில் இவர்கள் கல்வியின் நிலைமையும், இவர்களால் நாட்டிற்கு விளையும் நன்மையும். ஆகவே சிரத்தையுடனும், தியாக புத்தியுடனும், தீர்க்கதரிசனத்துடனும், உன்னத குணமும் உயர் நோக்கமும் கொண்ட ஆசிரியர்கள் இவ்விஷயத்தில் சேர்ந்துழைப்பது அத்தியாவசியம். அதற்கு இப்பத்திரிகை ஒரு சிறந்த சாதனமாகக்கூடும் என்பது எமது நம்பிக்கை.

நமது தற்காலப் படிப்புமுறையின் பெருங்குறை, கல்விக்கும் வாழ்க்கைக்கும் சம்பந்தமே யில்லாததுதான் என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இதை மனதிற்கொண்டு, குழந்தைகளுக்குக் கொடுக்கும் கல்வி கூடுமானவரை அவர்கள் அனுபவத்தை யொட்டியே யிருக்கும்படிசெய்வது மிகுந்த நன்மையைத் தரும். 'பாலர் கல்வி' முதலிரண்டு இதழ்களிலும் காணும் கட்டுரைகள் இந்நோக்கத்தையே கொண்டிருப்பது மகிழ்ச்சி தருகிறது. 'எண் இடவேலை' என்ற கட்டுரை ஆரம்ப ஆசிரியரனைவருடைய கவனத்திற்குமுரியது. சிறுவர் போதனைக்கு இன்றியமையாத விஷயங்களும், வாழ்க்கையைச் சம்பந்தப்படுத்தியே கல்வியைப் புகட்டும் வழிநுட்பமும் இக்கட்டுரையில் காணப்படுகின்றன. 'விளையாட்டிலும் படிப்பு' என்பது போன்ற கட்டுரைகளும் அதிகம் பயன் தரக்கூடியனவே. அநேகக் கல்விச் செய்திகளும் குறிப்புகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டுவரும் 'இரக்ஷணை'ப் படங்கள் பெரிதும் உபயோகமான அம்சம். ஆசிரியர்களும் மற்றும் கல்வித்துறையில் ஈடுபடுபவர்களும் இப்பத்திரிகையை ஆதரிக்க வேண்டியது கடமை.

**பாடாண் பாட்டு:** மஞ்சகுப்பம் செயிண்ட் ஜோஸப் கலாசாலைத் தமிழாசிரியர் ஆத்திரேயன் ஸ்ரீநிவாசன் இயற்றியது. ஆசிரியரிடமும், பொம்மய பாளையம், மயிலம், மடங்களிலும் கிடைக்கும். மயிலந் தேவஸ்தான ஆதீன பரம்பரை தர்மகர்த்தத்வம் இனும்தார் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் சீரும், சீலமும், நாட்டின் இயற்கை வளம் முதலிய பல்வகைத் தோற்றமும், ஐந்திணை நெறிமையும், செவ்வேள் துதியும், கூறும் நூல். திருமுருகாற்றுப் படையின் வழிபற்றி வந்தது. அதிலுள்ள பொருளுயர்வு, சொல்லணி, ஓசை நயம், கவிமாட்சி முதலிய பல சிறப்புகளையும் இந்நூலில் அநேக இடங்களில் காணலாம்.

**மட்டி மாணிக்கம்:** நெல்லை சு. வெங்கடராமன் எழுதியது. விலை 5 அணா. வித்தியாஸாகரன் கோ, மவுண்ட் ரோட், மதராஸ். ருஷிய மகான் டால்ஸ்டாய் எழுதிய சிறுகதை யொன்றைத் தமிழர் வாழ்க்கைக்கு ஒருவாறு அமைத்து எழுதியிருக்கிறார் ஸ்ரீமான் வெங்கடராமன். இக்கதையில் நல்ல நீதியும், 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்ற முதுமொழியின் உண்மையும் நன்றாக விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன. இரண்டாம், மூன்றாம் பாரம் மாணவர்களுக்கு உப-பாடபுத்தகமாக வைக்கத் தகுதியுள்ளது. புத்தகத்தின் விலை மட்டும் சற்றுக் குறைவாக இருந்திருக்கலாம். —ஸே.

**ஸௌந்தர்ய லஹரீ:** தேவநாகரி லிபியில் மூலமும், தமிழில் பதவுரை, கருத்துரை, குறிப்புரை, முதலியவைகளும் கூடியது. மொழிபெயர்ப்பா

சிரியர் மஹா-ா-ா-ஸ்ரீ G. V. கணேசய்யர் B. A., B. L., அவர்கள். டெம்மி 258 பக்கம், விலை ரூ. 2. கிடைக்குமிடம்: மானேஜர், ஆர்யதர்மம் ஆபீஸ், கும்பகோணம். மதராஸ் லா ஜர்னல் பிரஸ், மயிலாப்பூர், சென்னை.

ஸௌந்தர்ய லஹரீ என்னும் இந்நூல் ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர்களால் பக்தாநுக்ரஹத்திற்காக இயற்றப்பட்டது. இதில் அம்பிகையே முழுமுதற் கடவுளென்பதும், ஏனைய தேவர்கள், அவ்வம்மையின் கருணையினால் தத்தம் தொழிலைப் புரிபவர்களென்பதும், பக்தர்கள் தத்தம் விருப்பத்தை விரும்பியாங்குப் பெறுவரென்பதும் சிறப்பான வகையில் கூறப்பட்டுள்ளன. மேலும், சாக்த மதப்படி சிற்சில மத ரஹஸ்யங்களும், அம்பிகையின் ஆராதனை ரஹஸ்யங்களும் இந்த நூலில் அடங்கி யிருக்கின்றன. பதவுரை மிகத் தெளிவாக எழுதப்பட்டுளது. அதனினும் சிறப்புடையது குறிப்புரை. குறிப்புரையில் இங்கு கூறப்பட்ட விஷயங்களுக்கொத்தவை எவ்வெந் நூல்களில் கூறப்பட்டிருக்கின்றனவோ அவற்றை யெல்லாம் ஒருங்கே திரட்டிக் குறித்துள்ளார். 9, 11, 34, 41, 75-ஆ. சுலோகங்களின் குறிப்புரைகள் படித்தின்புறத்தக்கன.

ஆங்காங்கே சிற்சில எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. அடுத்த பதிப்பில் அவை நீக்கப்பட்டுவிடுமென எதிர்பார்க்கிறோம். பொருளறிந்து அம்பிகையின் புகழ்நூலைப் பாராயணம் செய்ய விரும்புவோர்க்கு இது ஒரு கருவூலமாகும் என்பதில் ஐயமின்று. தீ. சு. சு.

[கீழ்க்கண்ட புத்தகங்களின் விவரங்களுக்கு, நமது சித்திரை-மீ இதழில் 'புத்தக வரவு' என்ற தலைப்பின் கீழ்ப் பார்க்கவும்.]

கரிகால் பெருவளத்தான்:—திருமாவளவன் என்று காரணப்பெயர் பெற்ற சோழ மன்னன் முதலாங் கரிகாலனது மேம்பாடுரைக்கும் ஓர் ஆராய்ச்சி நூல். இதை வாசிக்கும் யாருக்கும் ஆசிரியரின் தமிழ்ப் பயிற்சியும், ஆராய்ச்சித் திறமையும், எழுத்துவன்மையும் புலப்படாதிரா. ஆராய்ச்சி முடிபுகளில் இரண்டொன்றுமட்டும் தற்காலம் ஒப்புக்கொள்ளக் கூடியவையல்ல. அதிலும், முக்கியமாக, கரிகாலன் (தனியாகவோ, சேர பாண்டிய மன்னர்களுடனோ) இமயம் வரை படையெடுத்துச் சென்றதும், வச்சிரம், மகதம், அவந்தி, முதலிய நாடுகளை வென்று திறை யெடுத்ததும், உண்மையென்றே கொண்டிருப்பது வியப்பைத்தருகிறது. மற்றபடி, கரிகாலனது இறைமாட்சியும், அவன் வாணிகத்தைப் பலவாறு வளம்படுத்தித் தந்ததும், அவன் காலத்தில் தமிழ்பெற்றிருந்த சிறப்பும், சமயம் அடைந்துவந்த வளர்ச்சியும், எல்லாம் வெகு நன்றாக எடுத்துக்கூறப்பட்டுள்ளன; எவ்வளவு தடவை வேண்டுமென்றாலும் படிக்கலாம். பழைய நூல்களிலிருந்து ஆதாரமெடுத்து ஆராய்ச்சி செய்திருக்கும் விதமும், விஷயங்களின் தொகுப்பும், அவற்றின் வைப்புமுறையும், வெகு உயர்ந்த வகையில் அமைந்திருக்கின்றன. தமிழ்நடை வெகுச்சிறந்தது; எழுத்துத்திறன் விரும்புவோர் இலட்சியமாகக் கொள்ளக் கூடியது. மேல் வகுப்புக்களுக்குப் பாடமாக வைப்பதற்கு மிகப்பொருத்தமான நூல்.

இந்தியக் கைத்தொழில் முன்னேற்றம்: இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குக் காரணம், கைத்தொழில் விருத்தியின் அவசியம், முதலியவற்றை விளக்கிக் கூறும் நூல். முன்காலத்தில் எவ்வாறிருந்த போதிலும், இன்று, தான் இஷ்டப்பட்டாலும், படாவிட்டாலும், இந்தியா உலக நிகழ்ச்சிகளை விட்டு விலகிநிற்பது இயலாது; இந்தியர் தனிவாழ்வு நடத்துவதென்பது பொருளில்லாத பேச்சு. உலகத்திலுள்ள வேறெல்லா நாடுகளிலும் கைத்தொழில் அபிவிருத்தி வெகு ஜாக்கிரதையாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, காலத்திற்கேற்ப, நாமும் விவசாயத்தில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையைக் குறைத்தும், கைத்தொழில்களை மேம்படுத்தியும் வருவது நமது நன்மைக்கு இன்றியமையாதது. இதைப் புள்ளி விவரங்களோடு எடுத்துரைத்து, கிராமக் கைத்தொழில், மத்தியதரக் கைத்தொழில், பெருங்கைத்தொழில்—இவற்றை இடம், பொருள், ஏவலுக்குத் தக்கபடி அமைத்து நடத்துவதற்கான யோசனைகளை ஆசிரியர் கூறியிருக்கிறார். இதுவிஷயத்தில் ஜனங்களுடைய கடமையையும் அரசாங்கத்தார் புரிய வேண்டிய உதவிகளையும் எடுத்துக் காட்டியிருக்கிறார். இம்மாதிரி புத்தகங்கள், வேறு பாஷைகளில் இருந்தாலும், தமிழில் அருமையே. ஆகையால் இவ்விஷயங்களை இதுவரை நன்கு அறிந்துகொள்ளாத தமிழரனைவரும் சிரத்தையுடன் படிக்கவேண்டிய புத்தகம். பள்ளிக்கூடங்களில் மத்தியதர வகுப்புகளுக்குப் பாடமாக வைத்தால் மாணவர்கள் உபயோகமும் ரஸமுமுள்ள பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள ஏதுவாகும்.

நான் கண்டதும் கேட்டதும்: இப்புத்தகத்தின் பொருளடக்கத்தை இதன் பெயரே ஓரளவு சூசிப்பிக்கின்றது. டாக்டர் சாமிநாதையர் அவர்கள் கண்டும் கேட்டும் அறிந்த சில வரலாறுகளை இதில் கூறியிருக்கிறார்கள். இவை பத்திரிகைகளில் கட்டுரைகளாக வெளிவந்தபொழுது படித்தின்புறாதவர்கள் இப்பொழுதேனும் படித்து மகிழ்வார்கள் என்று நம்புகிறோம். ‘பரம்பரைக் குணம்’, ‘வெங்கனூர்க் கோயிற் சிற்பம்’, ‘மருத பாண்டியர்’, ‘முள்ளால் எழுதிய ஓலை’ முதலிய கட்டுரைகளை எவ்வளவு முறை படித்தாலும் சலிக்காது. விஷயங்களோ மனதை உருக்கிப் பண்படுத்தக்கூடியன. நடையோ ஐயர் அவர்களுக்கே உரியதான தனிச்சிறப்பு வாய்ந்தது: எளிமையும், தெளிவும், கம்பீரமும், சக்தியும் ஒருங்கே பெற்று, படிப்போரைத் தன்வழி இழுத்துச் செல்லும் ஆற்றல் படைத்தது. இதுபோன்ற இன்னும் அநேக தொகுதிகளை தமிழுலகம் ஆவலோடு எதிர்பார்க்குமென்பதில் ஐயமில்லை. இத்தகைய பல பணிகளைத் தமிழன்னைக்குச் செய்துவரவேண்டிய ஆயுளையும் அரோக சரீரத் திடனையும் ஐயர் அவர்களுக்கு இறைவனருள்வானாக என்பதே தமிழகத்தின் பிரார்த்தனை.

ராஜரத்னம் அல்லது உத்தமலக்ஷியம்: பொழுதுபோக்கிற்காக எழுதப்பட்ட ஒரு நவீனம். கதைப் போக்கிலோ, கல்பனையிலோ, நடையிலோ, விசேஷச் சிறப்பெதுவும் இருப்பதாகக் கூறமுடியாது. தமிழுக்கோ தமிழர்க்கோ அதிகப் பயன்தருமென்று சொல்ல இடமில்லை.

**திருவருணை யமகவந்தாதி:** 'ஒருகால் தம் கருத்துள் வைப்பார்' வினை தீர்க்கும் அருணையம்பதியின் சிறப்புரைப்பது. யமகம் பாடுவதின் அருமை யாவருமறிந்ததே. அதிலுள்ள கஷ்டத்திற்குத் தகுந்த பலனுண்டா என்பது மட்டுமே சந்தேகத்திற்கிடம். இத்தலத்திற்கு இதுகாறும் 'யமக அந்தாதி' இயற்றப்படாமை கண்டு அதைச் செய்யவேண்டுமென்று ஆவலுற்றதாக ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது: இதுவரை ஒருவரும் பாடாத துறையையே கைக்கொள்ளவேண்டும், ஒவ்வொரு ஸ்தலத்திற்கும் யமக அந்தாதி இருந்தே தீரவேண்டும், என்ற மனோபாவம் சற்று வியப்பைத் தருகிறது. மற்றபடி, ஆசிரியரின் உழைப்பும், பக்தியும், தமிழ்நூற் பயிற்சியும், இந்நூலைப் படிப்போருக்குப் புலனாகும்.

**தாத்ரு வருஷத்திய திருகணித பஞ்சாங்கம்:** தலைமுறை தலைமுறையாகக் கையாளப்பட்டுவரும் கணிதமுறையில் பரிசோதித்து ஆக்கப்பட்ட கணித பஞ்சாங்கம். சாதாரணமாய் பஞ்சாங்கங்களில் காணப்படாத சில விசேஷ அம்சங்கள் இதில் அமைந்திருக்கின்றன. சோதிட சாஸ்திரத்திற்குப் பெரிதும் உதவக்கூடிய அரிய விஷயங்களையும் இதில் காணலாம். வைத்தியநாத தீக்ஷிதீயத்தை ஆதாரமாகக் கொண்டு சில நோன்பு முதலிய விசேஷங்கள் ஆராய்ச்சி செய்து தரப்பட்டிருக்கின்றன.

---




# "அப்படிச் சொல்லலாமா?"

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

---

பாலவனத்தம் ஜமீன்தாராக இருந்தவரும், தமிழன்பு மிக்கவரும், இப்போது மதுரையிலுள்ள தமிழ்ச் சங்கத்தின் ஸ்தாபகருமாகிய ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள் ஏறக்குறைய நாற்பது வருஷங்களுக்கு முன் ஒருமுறை தம் பரிவாரங்களுடன் கும்பகோணத்திற்கு வந்திருந்தார்கள். அவருடைய அன்பரும் ஸேது சம்ஸ்தானத்துச் சங்கீத வித்துவானுமாகிய பூச்சி ஐயங்காரென்று வழங்கும் ஸ்ரீநிவாஸ ஐயங்காரும் அப்போது அவருடன் வந்திருந்தார். ஐயங்கார் அக்காலத்தில் சிறுபிராயத்தினர்; பட்டணம் சுப்பிரமணிய ஐயரிடத்திலும் மகாவைத்தியநாதையரிடத்திலும் அவர் இசைப் பயிற்சி பெற்றவர்; அவர் முன்னுக்கு வந்து புகழடைய வேண்டுமென்ற விருப்பம் பாண்டித்துரைத் தேவருக்கு மிகுதியாக இருந்தது. அதனால் கும்பகோணத்திலிருந்து திரும்புகையில் அங்கிருந்த அன்பர்களிடம், "இவரைப் பிரகாசப்படுத்த வேண்டும்" என்று சொல்லிவிட்டு அவர் இராமநாதபுரம் சென்றார். ஸ்ரீநிவாசையங்கார் மட்டும் கும்பகோணத்தில் தங்கினார்.

அக்காலத்தில் கும்பகோணம் காலேஜில் ஆசிரியராக இருந்த ஸ்ரீ ஸாது சேஷையர் முதலிய பல கனவான்கள் சேர்ந்து ஸ்ரீநிவாசையங்காருடைய சங்கீதக் கச்சேரி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்தனர். கச்சேரி அந்நகரத்துள்ள 'போர்ட்டர் டவுன் ஹாலில்' நடைபெற்றது. நகரத்திலிருந்த கனவான்களும், உத்தியோகஸ்தர்களும், சங்கீத வித்துவான்களும், வேறு பலரும் வந்திருந்தார்கள். கூட்டம் மிகுதியாக இருந்தது; அம் மண்டபம் முழுவதும் எள்ளிட இடமில்லை.

ஸ்ரீநிவாசையங்கார் மிகவும் அருமையாக அன்று பாடினார். திருக்கோடிகாவல் கிருஷ்ணையர் முதலிய வித்துவான்கள் அந்தக் கச்சேரியில் பிடில் முதலியன வாசித்துச் சிறப்பித்தனர். சங்கீத ரஸிகர்கள் பலர் நிறைந்த அந்தப்பெரிய நகரத்துக்கேற்றபடி ஸ்ரீநிவாச ஐயங்காருடைய பாட்டு அமைந்திருந்தது. அவருக்கு அன்று ஒரு தனிஊக்கம் உண்டாயிற்று. கச்சேரிக்கு வந்திருந்த யாவரும் ஐயங்காருடைய கானாமிர்தக் கடலில் மூழ்கித் தம்மையே மறந்திருந்தனர். பலர் தங்கள் வீடுகளில் நடைபெறும் விசேஷங்களுக்கு அவரை வருவித்துப் பாடச் செய்யவேண்டுமென்று அப்போது தீர்மானித்தனர்.

கச்சேரி முடிவடைந்த பிறகு அவ்வித்துவானைப் பாராட்டிச் சிலவார்த்தைகள் சொல்லவேண்டுமென்று ஸாது சேஷையர் என்னிடம் சொன்னார். அவரைப்பற்றிப் பின்வருமாறு பேசினேன்:-

"ஆறு சுவைகளும் நிரம்பிய விருந்துணவை உண்டுவிட்டு அந்த உணவைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்யவேண்டு மென்றால் அது முடியுமா? அதுபோல ஸ்ரீநிவாசையங்காரளித்த சங்கீத விருந்தை நுகர்ந்து எல்லாம் மறந்திருக்கும் இந்த நிலையில் பேசுவதற்கு எப்படி முடியும்? என்னைப் போலவே எல்லோரும் இருக்கிறீர்களென்பது எனக்குத் தெரியும். சங்கீதத்திற் பெயர் பெற்ற சோழநாட்டிற் பரம்பரையாகச் சங்கீத வித்துவான்கள் வாழ்ந்துவரும் இந்த நகரத்தில், பாண்டி நாட்டிலிருந்து ஒரு வித்துவான் வந்து எல்லோரையும் மயக்கி விட்டாரென்பதை நினைக்கையில் எனக்கு ஆச்சரியம் மேலிடுகின்றது. இந்தச் சிறு பிராயத்திலேயே இவ்வளவு திறமையோடு விளங்கும் இவர் இன்னும் சிலகாலத்தில் நம்முடைய நாட்டிலுள்ள யாவருடைய உள்ளத்தையும் கவரும் ஆற்றலுடையவராவாரென்பதில் சந்தேகமில்லை. இந்த நகரத்தில் முன்பு த்ஸௌகம் ஸ்ரீநிவாசையங்காரென்று ஒரு பழைய சங்கீதவித்துவான் இருந்தார். அவர் தஞ்சாவூரிலிருந்த சிவாஜி மகாராஜாவால் ஆதரிக்கப்பட்டவர். இந்நகரில் சக்கரபாணிப் பெருமாள் ஸந்நிதியில் அவ்வரசர் கட்டளைப்படி இருந்து பாடிக்கொண்டு வாழ்ந்து வந்தார். அவரை யாவரும் த்ஸௌகம் சீனுவையங்காரென்றே வழங்குவார்கள். இந்த நகரத்தில் வேறொரு ஸ்ரீநிவாசையங்கார் வந்து எல்லோருக்கும் சங்கீதத் தேனைப் புகட்டிப் புகழ்பெறப் போகிறாரென்பதை நினைந்து அவருடைய இயற்பெயராகிய ஸ்ரீநிவாசையங்காரென்பது சீனுவையங்காரென்று முன்பே குறைந்துவிட்டது போலும்" என்று பேசிப் பாராட்டினேன்; அப்பொழுது புதிதாக இயற்றிய

பாடலொன்றையும் சொன்னேன். பிறகு ஸ்ரீநிவாசையங்கார் தக்க சம்மானம் பெற்று ஊர்போய்ச் சேர்ந்தார்.

கும்பகோணத்தில் அக்காலத்தில் பக்தபுரி அக்கிரகாரத்தில் கோபாலையரென்ற ஒரு தமிழ் வக்கீல் இருந்தார். அவர் தஞ்சாவூர்ச் சமஸ்தானத்தில் சங்கீத வித்துவானாக இருந்து புகழ்பெற்ற பல்லவி கோபாலையருடைய பேரர். அவர் தம்முடைய பாட்டனார் பெற்ற சர்வமானியங்களை வைத்துக்கொண்டு சுகமாக வாழ்ந்து வந்தார். அவருக்குச் சங்கீதத்திலும் நல்ல பழக்கம் உண்டு. பல பழைய வித்துவான்கள் இயற்றிய கீர்த்தனங்களும் மற்ற உருப்படிகளும் அவருக்கு ஆயிரக்கணக்காகப் பாடம். பல்லவி கோபாலையருடைய சாகித்தியங்களையும், த்ஸௌகம் சீனுவையங்காருடைய கீர்த்தனங்களையும் அவர் அடிக்கடி பாடிக்கொண்டேயிருப்பார்; அவ்வூருக்கு வரும் சங்கீத வித்துவான்களெல்லோரும் அவர் வீட்டிற்குச் சென்று அவரோடு பேசியிருந்துவிட்டுச் செல்வார்கள்; அவரிடமிருந்து சில கீர்த்தனங்களைக் கற்றுக்கொண்டும், தமக்குத் தெரிந்த கீர்த்தனங்களிற் பிழைகள் இருந்தால் அவற்றைத் திருத்திக்கொண்டும் போவார்கள்.

பூச்சி ஐயங்கார் கும்பகோணத்துக்கு வந்த காலத்தில் முற்கூறிய கோபாலையருக்குப் பிராயம் ஏறக்குறைய எழுபதுக்கு மேல் இருக்கும். ஐயங்கார் அவரைப் போய்ப் பார்க்கவில்லை. அவரும் கச்சேரிக்கு வரவில்லை.

பூச்சி ஐயங்காரது கச்சேரி நடந்த மறுநாள் யாரோ ஒருவர் கோபாலையரிடம் சென்று, 'த்ஸௌகம் சீனுவையங்கார் பெயர் இவருடைய பெருமையை நோக்கிக் குறைந்துவிட்டது' என்று நான் பேசினதைச் சொல்லிவிட்டனர். தம்மிடம் ஐயங்கார் வாராமையால் இயல்பாக அவருக்கு இருந்த கோபத் தீ பின்னும் மூண்டெழுந்தது. "அப்படியா சமாசாரம்! விட்டேனா பார் அந்தப் பிள்ளையாண்டானை!" என்று சொல்லிக் கைத்தடியை எடுத்துக்கொண்டு உடனே புறப்பட்டார். அவருடைய உடலில் முதுமையினால் இருந்த நடுக்கம் அப்பொழுதுண்டான கோபத்தாற் பின்னும் அதிகமாயிற்று; கை நடுங்கக் கால் தள்ளாடக் கோபம் தம்மைச் செலுத்த வீதிவழியே வந்தார்; அங்கவஸ்திரம் விழுந்து கீழே புரண்டது. வரும்போதே, "காலம் கலிகாலமாய் விட்டது. வாய்க்கு வந்ததெல்லாம் பேசிவிடுவதா?" என்று சொல்லிக்கொண்டே நடந்தார். அவருடைய வேகத்தையும் கோபநிலையையும் கண்ட சிலர் அவரைப் பின் தொடர்ந்தனர். 'யாரையோ தம்

கைத்தடியால் அடித்துவிட்டு மறுகாரியம் பார்க்கப் போகிறார் இவர்' என்று யாவரும் எண்ணினர்.

பக்தபுரி அக்கிரகாரத்துக்கு அடுத்ததாகிய ஸஹாஜி நாயகர் தெருவின் இரண்டாவது வீட்டில் நான் வசித்துவந்தேன். கோபாலையர் என் வீட்டை நோக்கி வந்தார். அப்பொழுது காலையில் மணி 9 இருக்கும். நான் காலேஜுக்குப் போக வேண்டியவனாகை யால் வழக்கப்படி வீட்டின் பின்புறத்திலுள்ள கிணற்றடிக்குச் சென்று ஸ்நானம் செய்துகொண்டிருந்தேன். கோபாலையர் என் வீட்டில் நுழைந்தார். உள்ளே என் சிறிய தந்தையார் இருந்தார். கோபாலையருக்கு அப்பொழுது கண் பார்வை குறைந்திருந்தது. ஆகையால் என் சிறிய தந்தையாருகில் வந்து அவரை மேலுங் கீழும் பார்த்து இன்னாரென்று தெரிந்துகொண்டு மிக்க ஆத்திரத்தோடு, "உங்கள் பிள்ளையாண்டான் இருக்கிறானா?" என்று இரைந்து கேட்டார். அவர் கேட்ட குரல் என் காதில் விழுந்தது. அவர் என் பேச்சினாற் கோபங்கொண்டு வந்திருக்கிறாரென்பதை நான் நன்றாக உணர்ந்துகொண்டேன். நனைந்த ஆடையுடனே உள்ளே ஓடிவந்து கோபாலையரிடம், "க்ஷமிக்க வேண்டும்! க்ஷமிக்க வேண்டும்!!" என்று பணிவாகச் சொன்னேன்.

"க்ஷமிக்கவா? உங்களுடைய தகப்பனார் இருந்தால் நீங்கள் பேசினதைக் கேட்டுச் சகிப்பாரா? நீங்கள் அப்படிச்சொல்லலாமா? த்ஸௌகம் சீனுவையங்கார் பெருமை உங்களுக்கு என்னதெரியும்? அவர் இருந்தால் இப்பொழுது உங்களை என்ன செய்திருப்பார் தெரியுமா! ஒரு சிறுபையனை இவ்வளவு தூரம் உயர்த்திப் பேசலாமா? அந்த ஸிம்ஹமெங்கே! இந்தப்பூச்சி எங்கே!" என்பவற்றைப்போலப் பல கேள்விகளைச் சரசரவென்று ஆத்திரத்தோடு அவர் என்னைக் கேட்டுக்கொண்டே போனார். நான் என்ன சொல்வேன்!

"பொறுத்துக்கொள்ள வேண்டும்; பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று கூறி நமஸ்காரம் செய்தேன்.

"நீங்கள் செய்தது எவ்வளவு பெரிய தவறு தெரியுமா?" என்று கேட்டார் கோபாலையர்.

"க்ஷமிக்கவேண்டும்: என்னவோ சொல்லிவிட்டேன். ஒரு வித்தையில் நூதனமாக முன்னுக்கு வருபவர்களை அப்படிப் பேசித்தானே பிரகாசப்படுத்தவேண்டும்; ஒன்றுக்குப் பத்தாகச் சொல்லியே உத்ஸாகத்தை உண்டாக்க வேண்டும்; அதனால் அப்படிச்

சொன்னேன். வேறுவிதமாகத் தாங்கள் எண்ணிக்கொள்ளக் கூடாது" என்றேன்.

"எண்ணிக்கொள்வதா? நீங்கள் அப்படிப் பேசினதற்கு வேறு என்ன அர்த்தம்? கீழே உட்காருங்கள்; அந்த மகானுகிய த்ஸௌகம் சீனுவையங்கார் கீர்த்தனங்களைக் கேளுங்கள்" என்று சொல்லி அந்தக் கிழவர் உட்கார்ந்தார்; நானும் ஈரவேஷ்டியோடே உட்கார்ந்தேன். உடனே அவர் த்ஸௌகம் சீனுவையங்கார் இயற்றிய சில வர்ணங்களைப் பாடிக்காட்டினுர்; அவை வெவ்வேறு ராகங்களில் அமைந்திருந்தன. அவர் வேறு சில கீர்த்தனங்களை யும் பாடினுர். நடுங்கிய குரலாக இருந்தும் அவற்றைப் பாடும் பொழுது கையை ஆட்டுவதும் தலையை அசைப்பதுமாகிய அவர் செயல்கள் அவருடைய உத்ஸாகத்தின் அளவைப் புலப்படுத்தின. மேல் ஸ்தாயியில் பாடத் தொடங்கும்போது அது பிடிபடாமை யினுல் தம் கையை உயர்த்தி உயர்த்திக் காட்டிக் காட்டி அவர் அபிநயம் செய்தபோது அவர் அடைந்த இன்பத்தை, உண்மையில் தம் சாரீர பலத்தினுல் அந்த ஸ்தாயியில் பாடுபவர்கள் கூட அடைந்திருக்கமாட்டார்கள். முதிர்ந்த பிராயத்தில் அவர் அவ் வளவு பாடியது எனக்கு அளவற்ற வியப்பை உண்டாக்கியது. த்ஸௌகம் சீனுவையங்கார்பால் அவருக்கிருந்த பேரன்பும், அவருக்கு இழுக்கு நேர்ந்ததைப் போக்கவேண்டுமென்ற எண்ண மும் அவரிடம் புதிய சக்தியை உண்டாக்கின.

"எப்படி இருக்கின்றன, பார்த்தீர்களா? அவருடைய பெரு மையை நீங்கள் உண்மையில் தெரிந்துகொண்டிருந்தால் அப்படிச் சொல்லத் துணிந்திருக்க மாட்டீர்கள். இப்பொழுதாவது த்ஸௌகம் சீனுவையங்காருடைய சக்தியைத் தெரிந்துகொண்டீர் களா?" என்று கோபாலையர் கேட்டார்.

"தெரிந்துகொள்ளாமல் என்ன? முன்பும் தெரிந்துகொண்டு தான் இருக்கிறேன். இப்பொழுது பின்னும் நன்ருகத் தெரிந்து கொண்டேன். அவரெங்கே! இவரெங்கே! உபசாரத்துக்காக நான் சொன்னதை ஒரு பொருளாகத் தாங்கள் எண்ணக் கூடாது. பெரியவர்களெல்லாம் ஒரு வஸ்துவைப் பெருமைப் படுத்த வேண்டுமென்ருல் இப்படிப் பாராட்டிச் சொல்வது வழக்கம். மாளிகைகளை மேருவைக் காட்டிலும் சிறந்தவை என்று சொல்வார்கள்; அதனுல் மேருவுக்குப் பெருமை குறைந்து போகுமா? மேருவை எடுத்துச் சொல்வதனுலேயே அதன் பெருமை பின்னும் விளங்கும். அதுபோல இதுவும்

த்ஸௌகம் சீனுவையங்காரை நான் குறைவாகக் கூறியதாகாது; இப்படிக் கூறியதால் பின்னும் அவருடைய பெருமையே விளங்கும்.''

"அதெல்லாம் உங்கள் தமிழ்ப் புஸ்தகங்களில் வைத்துக் கொள்ளுங்கள். சபையிலே பேசுவதென்றால் அப்படி யோசியாமல் சொல்லிவிடலாமா? தப்பு தப்புத்தான்'' என்று தீர்ப்புக் கூறினார் கோபாலையர்.

அதற்கு மேல் நான் என்ன சொல்ல முடியும்? ஒருவாறு சமாதானங் கூறி அனுப்பினேன். பழைய வித்துவானிடத்தில் அந்தக் கிழவருக்கு இருந்த அன்பும், அவ்வித்துவானுடைய பெருமையைக் காப்பாற்றுவதில் அவருடைய சக்திக்கு மேற்பட்டு விளங்கிய பற்றும், அப்பெருமைக்குக் குறைவு நேருங் காலத்தில் உண்டான மானமும் இந்நிகழ்ச்சியால் நன்றாக வெளியாயின.

———




# தமிழும் பிறமொழிக் கலப்பும்

**வித்துவான் ச. கு. கணபதி ஐயர்**

## I

ஆதியில் மக்கள் அறிவையும் ஆற்றலையும் குறைந்த அளவிலேயே பெற்று ஏறக்குறைய விலங்குகள் போலவே வாழ்ந்து வந்தார்கள். அக்காலத்தில் அவர்கள் ஒருவித மொழியையும் பேசினதில்லை. முதன்முதல் சைகைகள் வாயிலாகவும், அதன் பின் பொருளற்ற ஒலிகளின் வாயிலாகவும், ஒருவர் கருத்தை மற்றவர் உணர்ந்து கொண்டனர். அதன் பின்னரே பேச்சுவழக்குத் தோன்றியது. பேச்சு வழக்கேற்பட்ட சில காலத்தில் வரிவடிவில் எழுத்துக்கள் கண்டறியப்பட்டன. வரியெழுத்தில்லாத மொழிகளிற் பல இன்றும் வழங்கி வருகின்றன. எழுத்துக்கள் கண்டறியப்பட்டபிறகு மனிதர் தம் உள்ள இன்பத்தைப் பெருக்கிக்கொள்ளக் கருதி இலக்கியங்களை எழுதத் தொடங்கினர். இலக்கியங்களுக்கு இலக்கண அமைப்பு அவசியமாயிற்று.* பொதுவாக எந்த மொழியும் மேற்கூறிய முறைப்படியே வளர்ந்து செம்மையுற்றிருக்கவேண்டுமென்பது மொழிநூலோரின் துணிபு.

உலகத்தில் பழைய மொழிகளாகக் கருதப்படுவனவான தமிழ், ஆரியம், ஹீப்ரு, கிரீக், அராபிக் முதலியவற்றில் தமிழ் மிகவும் பழமையானதொன்றும்.

இது பல்வேறு காலங்களில் பலதுறைகளில் வளர்ச்சியுற்று வந்திருக்கிறது; வந்துகொண்டிருக்கிறது. இலக்கியத் துறையில் முற்காலத்தில் பிரபந்தங்கள் இல்லை; நாளடைவில் தமிழ் பலவகைப் பிரபந்தங்களைக் கண்டது. உரைநடையை உலகியலை நோக்கி இன்றியமையாததாக்கிக்கொண்டு அதனைத் திருத்திக்கொண்டு வருகின்றது. இலக்கணத் துறையில் மூன்றாகவிருந்த இலக்கணங்களை, நாளாக ஆக ஐந்தாகக் கணக்கிட்டுக்கொண்டது. பாட்டியல் என்ற பிறிதோரிலக்கணத்தையும் மேற்கொண்டது. பாக்களை விரிவு

* "இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலின்"—நன்னூல்

படுத்திப் பாவினங்களைத் தழுவிக்கொண்டது. தமிழ்மொழி இங்ஙனம் பல துறைகளில் வளர்ச்சியுற்ற விவரங்களைத் தனித்தனியாக ஆராய்ந்து எழுதினால் அவ்வாராய்ச்சி ஒரு பெரிய நூலாக முடியும். இங்கே, தமிழ் பிறமொழிக் கலப்பை மேற்கொண்டு நிற்கும் நிலையினை ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## II

ஒரு சமூகத்தாருடன் மற்றொரு சமூகத்தார் பழக நேருங் காலங்களில் ஒருவருடைய பாஷைச்சொற்கள் மற்றொருவருடைய பாஷையிற் புகுவது இயல்பு. இவ்விதக் கலப்பை எல்லா மொழிகளுள்ளும் காணலாம். நாம் புதியவர்களுடன் பழக நேரும் காலங்களில், நம் நாட்டிலில்லாமல் அவர்கள் கொணரும் புதிய பொருள்களைக் கண்டால் அவற்றை அவர்கள் அமைத்த பெயர்களாலேயே நாமும் குறிக்கின்றோம். அப்பொருள்களுக்குப் புதிய (ஆக்கச்) சொற்களைத் தமிழில் ஆக்கிக்கொள்ளல் வேண்டும் என்ற உணர்ச்சி பொதுமக்களிடம் தோன்றாமையே இதற்குக் காரணம். இவ்வகையில் ஒரு மொழியிலுள்ள சொற்கள் மற்றொரு மொழியிற் புகுவது இயல்பேயன்றோ! பேச்சு வழக்கிலுள்ள எந்தமொழியும் பிற பாஷைச் சோற்கலப்புற்றதாகவே இருக்கும்; இதற்கு விலக்கே கிடையாது.

தமிழ்மொழி மிகப் பழைய காலந்தொட்டுப் பேச்சு வழக்கிலிருந்து வந்திருக்கிறது. தமிழர் பண்டைக்காலத்தில் அநேகமாக உலகமுழுவதும் சஞ்சாரம் சென்று வந்தமையையும், பிறநாட்டார் தமிழர்களுடன் வியாபாரத் துறையில் தொடர்பு வைத்திருந்தமையையும், பழைய நூல்களிற் சில அறிகுறிகளால் அறியலாகும். அக்காலத்திலே ஒருவர் மொழியிலுள்ள சொற்கள் மற்றொருவரின் மொழியில் இடம்பெற்றிருத்தல்வேண்டும். தோகை (மயில்), மாங்காய், அரிசி, கருவாப்பட்டை, இஞ்சி முதலிய பொருள்களை, மேல் நாட்டார் முதன்முதல் தமிழர்களால் அறிந்துகொண்டனர். ஆகையால் அவர்கள் அப்பொருள்களின் தமிழ்ப்பெயர்களையே தங்கள் மொழிகளிலும் வழங்கலாயினர். இவ்வகையில் இன்னும் பல தமிழ்ச்சொற்கள் மேனாட்டுப் பழையமொழிகளில் புகுந்துவிட்டன. இதுபோலவே பிறமொழிகளின் சொற்கள் தமிழில் புகுந்திருத்தல் வேண்டும்.

ஒரு பாஷைச்சொல் மற்றொன்றிற் புகுந்ததென்றால் அங்ஙனம் அவை புகப்பெற்ற பாஷைக்கு ஒருவாற்றானும் சிறப்புக் குறைந்துவிடாது. இதனை எவரும் நினைவில் வைத்தல் வேண்டும். ஆங்கிலத்தில் பல பாஷைச் சொற்கள் மல்கிக் காணப்படுகின்றன.

அதனுல் அம்மொழிக்கு இழுக்கொன்றுமில்லையே! இன்று அம் மொழியன்றோ உயர்நிலையில் நாகரிகம் வாய்ந்து உலகிற்கே பொது மொழியென்று எவரும் சொல்லத்தக்கவாறு மிளிர்கின்றது! பிற மொழிகளின் கூட்டுறவினுல் தமிழ்மொழி இழுக்கடைந்துவிட்ட தாகக் கருதுவது சரியன்று. அக்கூட்டுறவு தமிழிற்குப் பல வழி களில் ஆக்கத்தை அளித்திருக்கின்றது.

ஒரு காலத்தில், தமிழ், இந்தியா முழுவதும் பரவி இருந்தது. ஆரியம் முதலிய மொழிகள் இந்தியாவுக்கு வந்தபின் தெற்கே யன்றி மற்றப் பிரதேசங்களில் இருந்த தமிழ், பிறமொழிக் கலப் பைத் தாராளமாக ஏற்றுக்கொண்டு வேறு மொழிகள் என்று சொல்லத்தக்க நிலைமையை அடைந்தது. இப்பொழுது இந்தியா விலுள்ள மொழிகளில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, கொடகு, தோட, கோட, குருக், கோண்டி, மால்டோ, பிராஹுமி என்ற மொழிகள் திராவிட பாஷா சமூகத்தைச் சார்ந் தவை என்பர் மொழிநூலோர். அவையெல்லாம் ஆதியில் தமி ழாகவே இருந்து, பிறகு வேறு மொழிகளின் கலப்பை யேற்றுப் பல பிரிவினவாக மாறியிருத்தல்வேண்டும். ஒரு மரத்திலிருந்து சில கிளைகளும், அவற்றிலிருந்து பல கோடுகளும், அவற்றிலிருந்து பல வளார்களும் பிரிந்திருப்பதுபோல், இப்பிரிவுகளும் தோன்றி யிருக்கலாம். தமிழிலிருந்து பிரிந்துபோன பாஷைகளிற் பல வடமொழியையும் அதன் வழிமொழியாகிய பிராகிருதத்தையும் பெரும்பாலும் தழுவிக்கொண்டு, இன்று தம் தாய்மொழி தமிழன்று என்று சொல்லக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டன.

தமிழும் சங்க காலத்திலிருந்ததுபோல் இப்பொழுது இல்லை. நூல் வழக்கு ஒருவிதமாகவும் பேச்சு வழக்கு வேறுவிதமாகவும் மாறிவிட்டன. நூல் வழக்கிலேயும் சங்ககாலத்துக்கும் பிற்காலத் துக்கும் நெடுவாசி வேற்றுமை காணப்படுகிறது. இம்மாறு பாட்டுக்குத் தக அவ்வக்காலையில் அறிஞர்கள் இலக்கணம் அமைத்து ஒரு நியதியை நிலைநாட்ட முன் வந்தனர். அதனுல், தமிழ், பிறமொழிக் கலப்பால் அல்லலுருமல் பலதுறைகளில் வளர்ச்சியுற்றே வந்தது. இதுகாலை ஆங்கிலமொழி அரசியல் மொழியாகி எங்கும் பரவியுள்ள காரணத்தினுல் நம்மில் பலர் தமிழைப் புறக்கணிக்கின்றனர். ஆங்கிலம் கற்றவர்களிற் பெரும் பாலோர் தம் தமிழ்நடையில் நூற்றுக்கு ஐம்பதுக்கு அதிகமாக ஆங்கிலச்சொற்களைக் கலந்து பேசுகின்றனர். இவ்விதக் கலப்பு ஒருவகையிலும் தமிழுக்கு ஆக்கந்தராது. இங்ஙனமே சில தலை முறைகள் செல்லுமாயின் தமிழின் வடிவம் மாறிவிடக்கூடும்; அறவே மறைந்துவிடுதலும் கூடும். இந்த மாறுபாடு மெல்ல

மெல்ல நிகழ்வதால் ஒரு தலைமுறையில் உள்ளார்க்குப் புலனாகாது. ஆதலின் தமிழ் மொழியைப் பாதுகாக்க நாம் தீவிரமாக யோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டிய காலம் இது.

## III

நிற்க, தமிழிலே புகுந்துள்ள பிறபாஷைச் சொற்களில் மிகுதியாகக் காணப்படுபவை ஆரியச்சொற்களேயாம். முதன்முதலில் தமிழோடு கலந்த சொற்களும் ஆரியச் சொற்களாகவே இருத்தல் வேண்டும். தமிழிற் புகுந்த ஆரியச்சொற்களைத் தமிழர் வடசொல் என்பர். வடசொல்லின் இலக்கணம் தோல்காப்பியத்திலேயே கூறப்படுகின்றது.* இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள பழைய நூல்களிற் பழமை வாய்ந்தது தொல்காப்பியமே.

ஆரியமொழியின் தொடர்பினால் தமிழ் பிற்காலத்தில் பல துறைகளில் வளர்ந்தோங்கியது. தமிழிலக்கணங்களிற் சில வடமொழிச் சார்பைப் பின்பற்றிச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். இலக்கணம் என்ற சொல் லக்ஷணம் என்ற ஆரியச் சொல்லின் திரிபாகும் என்பர். தமிழிலே அணி யென்று ஓரிலக்கணம் விரிவாக இருந்ததில்லை. பிற்காலப் புலவர்கள் வடமொழிப் போக்கை ஒட்டித் தமிழ் அணியிலக்கணத்தை வடமொழியினின்றும் பெயர்த்துக்கொண்டனர். தமிழிலுள்ள சோதிடம், சமய நூல் முதலியவற்றுள் வடசொற்கள் அதிகமாகப் பயின்றிருக்கின்றன. தமிழரின் சோதிடம், சமயம், மருத்துவம் முதலியன, வடமொழியின் தொடர்பினால் ஆக்கம் பெற்றிருத்தல் வேண்டுமென்பது இதனாற் புலனாகின்றது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணங்களையும் தவிரப் பாட்டியல் என்றோரிலக்கணம் தமிழில் இருப்பதாக முன்னர்க் கூறினேன். அது பிரபந்தங்களின் இலக்கணம், முதன் மொழிப் பொருத்தம், முதலியவற்றைக் கூறுகின்றது. அதிற் கூறப்படும் பிரபந்தங்களின் பெயர்களிற் பல, வடமொழிப் பெயர்களாகவோ இரண்டின் கலப்புப் பெயர்களாகவோ காணப்படுகின்றன. தமிழ்ப் பிரபந்தங்களை இயற்றிய புலவர்களிற் பலர், தமிழ் ஆரியம் என்ற இருமொழிகளிலும் வல்லவர் என்று தெரிகின்றது.

சங்க காலத்திலே வடமொழிக்கும் தமிழுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கவில்லை. அதனாற்றான் சங்கநூல்களில் அதிகமாக வடமொழிக்கலப்புக் காணப்படவில்லை. ஆனால் மதவிஷய

---

* "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
யெழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே."

தோல்காப்பியம், சோல், 395

மாக மட்டும் வடமொழிப்போக்கை நம் மொழி சங்க காலத்தி லேயே மேற்கொண்டுவிட்டது. மதசம்பந்தமான செய்திகளைக் கூறும் தமிழ்நூல்களும் நூற்பகுதிகளும் அதிகமாக வடசொற் கலப்புடையனவாக இருக்கின்றன. உதாரணமாக, மணிமேகலை என்ற நூலுள் பின்னுள்ள சில காதைகளையும், பரிபாடலையும் உற்றுநோக்குவார்க்கு இவ்வுண்மை விளங்கும்.

சமண மதமும் பௌத்த மதமும் தமிழரல்லாதார் கண்டறிந் தவை. ஆரியத்தையும் அதன் சிதைவாகிய பிராகிருத மொழிகளை யும் பேசிவந்தவர்கள்தாம் அம்மதங்களைத் தமிழ் நாட்டிற்குக் கொணர்ந்தார்கள். அவர்கள் தங்கள் சமயக்கொள்கைகளைத் தமிழ் நாட்டிற் புகுத்தத் தமிழைக் கற்றார்கள்.* சமணர்களாலும் பௌத்தர்களாலும் தமிழில் வடமொழிக் கலப்பு அதிகமாக ஏற் பட்ட போதிலும், அவர்கள் தமிழ்மொழிக்குச் செய்துள்ள பேரு பகாரத்தை நாம் மறத்தலியலாது. இப்பொழுது நாம் அறிந் துள்ள தமிழ்நூல்களில், சிந்தாமணி, யாப்பருங்கலம், காரிகை, நம்பியகப்பொருள், நன்னூல், சில பாட்டியல்கள், நிகண்டுகளிற் பல, முதலியன சமணரியற்றியவையாகும். மணிமேகலை, குண்டல கேசி, வீரசோழியம், முதலியவை பௌத்தரியற்றியவை. தொகை நூல்களிற்[1] சில நூல்களும் எஞ்சியவற்றுள் பல பாக்களும் சமண பௌத்தப் புலவர்கள் செய்தவை. திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய சில நூல்களைச் செய்தவர்கள் சமண பௌத்தரோ என்ற ஐயப்பாடும் தமிழ்நாட்டில் நிலவி வருகிறது.

ஜைனர்கள் மணிப்பிரவாளம்[2] என்று புதிதாக ஒரு நடை யைத் தோற்றுவித்தனர். இந்நடையில் தமிழ்ச் சொற்களும் வட மொழிச் சொற்களும் விரவியே வரும். இந்த நடையில் ஸ்ரீபுராணம் என்ற ஜைனநூலும், சமணமத சம்பந்தமான நீலகேசியுரையும் பிறவும் எழுதப்பட்டன. இந்நடையின் தோற்றம், உத்தேசமாக கி. பி. ஏழாம் நூற்றாண்டாக இருத்தல்வேண்டும். வைணவர்

---

*தற்காலம் மதப்பிரசாரம் செய்ய வந்திருக்கும் மேல்நாட்டுப் பாதிரி களில் சிலர், தமிழ்மொழியையும், தமிழ் இசையையும், 'காலக்ஷேபம்' என் னும் முறையையும் பயின்று அவற்றைக் கையாண்டு வருவது கவனிக்கத் தக்கது. ப—ர்.

1. தொகை நூல்களாவன பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பவை.

2. முத்துக்களும் பவளங்களும் நிரல்பட மாலையாகக் கோத்தாற் போல் தமிழ்ச்சொற்களும் வடமொழிச்சொற்களும் சமமாகக் கலந்துவர எழுதப்படும் ஒருவித நடை மணிப்பிரவாள மெனப்படும்—(மணி—முத்து; பிரவாளம்—பவளம்.)

களும் சமணரைப் பின்பற்றித் தங்கள் உரைநூல்களை மணிப்பிரவாளத்திலேயே எழுதத் தொடங்கினார்கள். சாதாரணக் கல்வியுமின்றிக் கேள்வியின்பம் ஒன்றையே விரும்பிய பொதுஜனங்கள், இந்நடையிலுள்ள மதநூல்களைக் கேட்டுவந்ததன் பயனாகப் பல வடசொற்கள் தமிழ்மொழியில் உலகவழக்கைப் பெற்றன. உலக வழக்கி லிருந்துவந்த தமிழ்ச்சொற்களிற் பல மறைந்தன. தமிழ் மொழியிலே வடசொற் கலப்பேற்பட்ட பிறகு தோன்றிய நன்னூல் முதலிய இலக்கண நூல்களிலே, அவற்றை இயற்றினோர் வட சொற்களுக்கு இலக்கணம் வகுக்கவேண்டிய அவசியம் நேர்ந்தது. வடமொழிச் சொற்களைத் தமிழோசைக்கியைய எங்ஙனம் மாற்றிக் கொள்ளவேண்டு மென்பது முதலியன அந்நூல்களிற் காணப்படுகின்றன. காலம் செல்லச் செல்ல வடசொற் பிரயோகம் இவ் விலக்கண வரம்பைக் கடந்துவிட்டது. வில்லிபுத்தூரார், அருணகிரிநாதர், முதலியோர் வடசொற்களைத் தமிழோசைக்கியைய மாற்றிக்கொள்ளாமல் அவற்றை அவற்றின் பழைய வடிவத்திலேயே தங்கள் நூல்களில் உபயோகித்திருக்கின்றனர். மேற்கூறிய செய்திகளால் தமிழில் வடமொழிக் கலப்பேற்பட்ட வரலாறு ஒருவாறு விளங்குகின்றது.

## IV

சிறிது காலம் சென்றபின் தமிழ்நாட்டிலே இந்துஸ்தானி அரசியல்மொழியாக ஏற்பட்டது. அக்காலத்தில் இந்துஸ்தானிச் சொற்கள் பல, தமிழ் வழக்கிலே புகுந்தன. உலக வழக்கிலே—தமிழ்மக்கள் பேச்சு வழக்கிலே—இதுகாலை எத்துணையோ இந்துஸ்தானி மொழிகள்* கலந்திருக்கின்றன. அங்குஸ்தான், இரிசால், கஜானா, சபாஷ், சலாம், ஜமுக்காளம், ஜன்னல், சிரஸ்ததார், செக்குபந்தி, தாசீல்தார், பராக், மகஜர்நாமா, முதலியவை தமிழில் வழங்கும் இந்துஸ்தானி மொழிகளாம். பிற்காலத்துத் தமிழ்ப் புலவர்களும் இந்துஸ்தானி மொழிகளிற் பலவற்றைத் தம் நூல்களில் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஆங்கிலேயர் இன்று இராஜாங்க வியவகாரங்களை ஆங்கிலத்தின் வாயிலாக ஆற்றிவரினும், அத்துறையில் பல இந்துஸ்தானி வார்த்தைகள் கலந்திருப்பது ஈண்டு நோக்கத் தக்கது.

## V

இப்பொழுது ஆங்கிலம் அரசியல் மொழியாக இருந்துவருவதால் ஆங்கிலச் சொற்களிற் பல, தமிழில் பயின்று வருகின்றன.

---

* முகம்மதியரின் பழக்கத்தால் தமிழிற் புகுந்த அராபிக், உருது, முதலிய சொற்களையும் உட்படுத்தி இங்கே பொதுவாக இந்துஸ்தானி என்று குறித்துள்ளேன்,

கோர்ட், ஈரங்கி, கலெக்டர், ஆபீஸ், பெஞ்சு, மோட்டார், உயில் போன்ற சொற்களுக்கு நாம் தனித் தமிழ்ச்சொற்களை அமைத்துக்கொள்ளுதல் கூடும்; என்றாலும் பொதுமக்கள் அவ்வாக்கச் சொற்களைக் கொள்வார்களா என்பது சந்தேகம்.

இந்நாள் வரையில் தமிழ் வளர்ச்சி பிறமொழிகளின் தொடர்பினால் யாதொரு தடையையும் கண்டதில்லை. அதற்கு மாறாகப் பல சீர்திருத்தங்களைப் பெற்றுள்ளது என்னலாம். ஆரியத்தைப் பார்த்துத் தமிழ் அடைந்துள்ள மேன்மை இன்னதென்பது மேலே விவரிக்கப்பட்டது. ஆங்கிலத்தைக்கண்டு இக்காலத்தில் இது புதிய வன்மையைப் பெற்றிருக்கிறது என்னல் மிகையாகாது. ஆங்கிலம் இந்நாட்டிற்கு வந்த பின்னரே நாம் அம்மொழியை நோக்கி முற்றுப்புள்ளி முதலிய குறியீடுகளைத் தமிழ்மொழிக்கு ஏற்றுக்கொண்டிருக்கிறோம்; தமிழ் வசன நடையும் சீர்மையுற்று வருகின்றது.

## VI

தமிழ்மொழியிலே பிறமொழிகளில் இருப்பனபோல் சாத்திர நூல்கள் இல்லை. அவற்றை நாம் மொழிபெயர்த்தே ஆகவேண்டும். அங்ஙனம் மொழிபெயர்த்துக் கொள்ளுதற்குப் போதிய தமிழ்ச்சொற்கள் நம் மொழியிலில்லாமை தமிழ்ச் சாத்திரங்கள் வெளிவருவதற்கு ஒரு தடையாக நிற்கின்றது. இந்நிலையில் நாம் பிறமொழிச் சொற்களைத் தழுவுவதா, அன்றி, சாத்திர சம்பந்தமான பிறமொழிச் சொற்களுக்கு நேரியவாறு ஆக்கச் சொற்களை உண்டாக்கிக் கொள்வதா? இந்தப் பிரச்சினை மிகச் சிக்கலானது.

தற்காலத்தில் தமிழிற்கு உரையாணியாக விளங்கும் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி திராவிட வித்யாபூஷணம் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் தமிழில் பிறமொழிக் கலப்பு விஷயமாகக் கொண்டுள்ள அபிப்பிராயத்தை இங்கே காட்டியுள்ளேன். அப்பெரியார் 1933-ஆ டிஸம்பர் 23-ஆந் தேதி சென்னையிற் கூடிய தமிழன்பர் மகாநாட்டில் ஆற்றிய வரவேற்புப் பிரசங்கத்திலிருந்து சில பகுதிகள் கீழே காட்டப்பெற்றுள்ளன:

"இக்காலத்தில் விருத்தியாகி வரும் சாத்திரஅறிவு தமிழ் மக்களிடத்தும் நன்றாகப் பரவவேண்டுவது இன்றியமையாததாதலின் அத்துறையிலுள்ள நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுதல் அவசியமேயாகும். ஆனால் அவ்வகை மொழிபெயர்ப்புக்கள் ஒரேமுறையாக இருக்கவேண்டும். சாத்திர ஸம்பந்தமாகவும் பொருளின் பெயர்களாகவுமுள்ள மற்ற பாஷைச் சொற்களும் வேறு சிலவகைச் சொற்களும் இப்பொழுது சாதாரணமாகத் தமிழில் வழங்குகின்றன. அவற்றை மாற்றிப்

புதிய சொற்களை உபயோகிக்கத் தொடங்கினால் அப்புதிய சொற்கள் தமிழ்நாடு முழுவதும் வழக்கத்தில் அமைவதற்கு நெடுங்காலம் ஆகும். சொற்களின் வழக்கமும், அவற்றின் பொருள் எளிதில் விளங்குதலும் முக்கியமேயன்றி எல்லாம் தனித்தமிழ்ச் சொற்களாகவே இருக்கவேண்டு மென்பது அநுபவத்தில் இயலுவதன்று................................"

"மொழி பெயர்க்கும்பொழுது பண்டைத் தமிழிலக்கியங்களில் கலைகளுக்குரியனவாக உள்ள சொற்களை இயன்றவரையில் உபயோகித்துக் கொள்ளலாம். பிற பாஷைச் சொற்களை எடுத்தாளும்பொழுது தமிழுக்கு ஏற்றபடி அவற்றின் உருவத்தை மாற்றிக்கொள்ளலாம்..................."

"ஒருபாஷை வேறு பாஷையின் தொடர்பினால் விரிவுறும். அதனால் அப்பாஷையின் அழகு ஒருபோதும் குறையாது......................."

"தம் கருத்தை, தமிழ்நாட்டினர் எளிதில் அறிந்துகொள்ளவேண்டு மென்பதை எழுதுபவர்கள் மனத்திற்கொண்டு எழுதுவதுதான் பயனை அளிக்கும். பேசினாலும் எழுதினாலும் கருத்தை அறிவிக்கும் நோக்கத்தை முக்கியமாகக் கொள்ளவேண்டுமே யன்றிக் கடினநடையைக் கைக்கொள்ளுதல் கூடாது; கொண்டால், 'தமிழே கடினமானது' என்ற எண்ணம் தமிழர்களுக்கு உண்டாகிவிடும்."

இப்பெரியாரின் அபிப்பிராயம் இங்ஙனமிருக்க, வேறு சில அறிஞர்கள் தமிழ் மொழியிலே பிறமொழிக் கலப்பே இருத்தல் ஒண்ணாது என்று கூறுகின்றார்கள். இந்நிலையில் தமிழ் எழுத்தாளர்கள் தங்களுக்குத் தோன்றிய வழிகளில் பிறமொழிகளை அதிகமாகக் கலந்தும் கலவாமலும் தமிழ் உரைநடையை எழுதி வருகிறார்கள். எல்லோரும் ஒன்றுசேர்ந்து 'இனி இன்ன வழியைத்தான் மேற்கொள்ளவேண்டும்' என்று திட்டமாக ஒரு முடிபுக்கு வருவது எந்நாளோ, அந்நாளிலிருந்துதான் தமிழுக்கு விமோசன மேற்படுமென்றெண்ணுகிறேன். நேற்றுத் தோன்றிய மொழிகள் எல்லாம் பலவாறு சீர்திருத்தங்களை அமைத்துக்கொண்டு இன்று நாகரிக உலகிலே கலைவளம் படைத்துத் திகழ, நம் பண்டைத் தமிழ் பழம் பெருமையைப் பாராட்டிக்கொண்டு ஒருவழியிலும் முன்னேற்ற மடையாமல் தவிப்பதா? இவ்விஷயத்தைத் தமிழரில் ஒவ்வொருவரும் நினைவில் வைத்துத் தம் தாய்மொழி வளர்ச்சிக்கு ஆவனசெய்ய முற்படுவார்களாக.

# பண்டைக் கவிகள் கண்ட காதல்முறை

எஸ். கே. சாமி

---

காதல், தமிழர் தலையாய்ப் போற்றியதோர் உணர்ச்சி. இயற்கை நெறிப்பட்டு இயற்கை வாழ்வு நடாத்திய பண்டைத் தமிழர் இயற்கைக் காதலுக்கோர் இலக்கணங் கண்டனர்: அவ்வுணர்ச்சியினை ஐந்திலக்கணத் தொன்றும் அகப்பொருளிற் கொண்டனர். அகப்பொருளாவது, ஒத்த இயல்புடைய தலைவனும் தலைவியும் உண்மை அன்பு பூண்டொழுகி, அதுபற்றி அவர்கள் இதயத்தில் எழும் சிந்தனைகளே யாகும். அது பலவாகப் பிரிக்கப்பட்டுளது. ஒவ்வொரு பிரிவினுக்கும் விரிந்த இலக்கணமும் உண்டு. அவற்றுள் கைக்கிளை யென்பதொன்று; ஐந்திணை என்பது மற்றொன்று; பெருந்திணை என்பது வேறொன்று.

"கைக்கிளை யுடையதொரு தலைக் காமம்.
ஐந்திணை யுடைய தன்புடைக் காமம்.
பெருந்திணை யென்பது பொருந்தாக் காமம்!"

ஆகவே, உண்மை இன்பம் பயப்பது ஐந்திணையே. இது, களவு கற்பு என இருவகைப்படும். நாயகன் நங்கையைக் காண்பது; யாரென எண்ணம் கொள்வது. இதன் பிறகு இருவரும் குறிப் புணர்ந்து பிறரறியாது கூடுவது களவு; தாய் தந்தையர் மண முடித்துவைக்க, மகிழ்ந்து வாழ்வது கற்பு.

இத்துறையில் கம்பர், வில்லிபுத்தூரார், சேக்கிழார் ஆகிய பண்டைக் கவிகள் தத்தம் நூற்களில் கூறிப்போகும் அரிய செய்யுட்களைப் படித்துக் கற்றோர் அடையும் இன்பத்திற்கு இணை வேறொன்றுமில்லை.

## I—கம்பர்

கம்பர் தமது காப்பியத்தில் இராமனும் ஜானகியும கொண்ட காதலை எவ்வாறு போற்றி உரைக்கின்றாரென்பதைக் கவனிப்போம். மிதிலையில் ஜானகியை இராமன் கண்டதும் காதலுறுகின்றான். அவளும் அஞ்சனவண்ணன்மீது அளவிலாக் காதல்கொண்டு அவனையே மணப்பேன் என்று உறுதி கொள்கிறாள். வேலையொத்த சீதையின் கண்களும் இராமனின் விழி

களும் சந்திக்கின்றன. அவர்களிருவரும் 'மாறிப்புக்கிதய மெய்து கின்றனர்.' இதை கவி,

"அண்ணலும் நோக்கினன்—அவளும்
நோக்கினள்."

என்றும்,

"நோக்கிய நொக்கென்னும் நுதிகொள் வேலினை
ஆக்கிய மதுகை யான்றோளி னாழ்ந்தன
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும்
தாக்கணங் கனையவள் தனத்தில் தைத்தவே"

என்றுங் குறிப்பிடுகிறார். இவ்வாறு உள்ளப் புணர்ச்சியால் ஒன்று பட்ட ஜானகி, வீரனது உறவை வேகமாய் விரும்பினள். வில்லொடித்து வீரம்காட்டிய நாயகனை, உற்றார் பெற்றோர் அறிய மணமுடித்து மகிழ்ந்தாள்.

## II—வில்லிபுத்தூரார்

வில்லிபுத்தூரார் வேறொரு முறையில் வைத்துப்போகின்றார். தவவேடம் தாங்கிய விஜயன் தீர்த்தயாத்திரை மத்தியில் பாண்டியனின் மாளிகையில் தங்கவும், அவ்வரசனின் அருமந்த புதல்வி சித்திராங்கதையைக் கண்டு காதல் கொள்ளவு மிடமேற்படுகின்றது. அந்நங்கையின் எழிலைக் கண்டு அளவிலா ஆசை கொண்டு, தனது தவக்கோலத்தை மாற்றி மாரனைப் பழிக்கும் சுகுமாரனாய் மாறுவதைக் கவிஞர் வர்ணித்திருப்பது யாவருக்கும் மகிழ்ச்சி விளைக்கும். காதல்விடம் தோய்ந்த அம்பையொத்த விழியினையும், நுண்ணிய இடையினையும், பின்னற் சடையினையும், அன்ன நடையினையும், பிறவற்றையும் படைத்த சித்திராங்கதை, காதல் என்னும் கடலில் வீழ்ந்து தவிக்கும் அர்ச்சுனனைக் கண்டாள்:

"செந்திருவை யனையாளும் திருமாலை யனையானுஞ்
சிந்தை யொன்றாய்
வந்திருவர் விலோசனமுந் தடையின்றி
உறவாடி மகிழ்ச்சி கூர்ந்து
வெந்துருவ மிழந்த மதன் மீளவும்
வந்திரதியுடன் மேவுமாபோற்
கந்தருவ முறைமையினாற் கடவுளருக்குங்
கிடையா காமந் துய்த்தார்."

இலக்குமியை யொத்த சித்திராங்கதையும், திருமாலை யொத்த விஜயனும் சிந்தை ஒன்றி உறவாடி இன்பமெய்தி வாழ்ந்தனர்.

## III—சேக்கிழார்

இனி, தடுத்தாட்கொண்ட புராணத்தில் சேக்கிழார் எவ்வாறு காதலைக் கையாளுகிறார் என்று கவனிப்போம். மின்னொளி மேனியும், கருங்குழலும், இடுங்கிய இடையும், அகன்ற விழிகளும் படைத்த பரவை நாச்சியார், பாங்கியர் சூழ நடந்து பெருமானை வழிபடச் சென்றனள். அவ்வழகியைச் சுந்தரர் கண்ணுற்றார். கண்டவுடன் காதல் கொண்டார். அவள் பேரெழிலில் மையல் கொண்டு மனமுருகி இவ்வாறு நினைக்கின்றார்:—

“ கற்பகத்தின் பூங்கொம்போ !
காமன்றன் பெருவாழ்வோ !
பொற்புடைய புண்ணியத்தின்
புண்ணியமோ !
விற்துவளை பவளமலர் புயல்சுமந்து
மதிபூத்த விறைக் கொடியோ !
அற்புதமோ சிவனருளோ
அறியேனென் றதிசயித்தார்.”

கற்பகத்தின் பொலிவினையுடைய பூங்கொம்போ, மாரனது மாண்புபொருந்திய செல்வமோ, புண்ணியத்தின் புனிதத் தோற்றமோ, மேகத்தைத் தாங்கி வில்லையும் பவள மலரையும் மதியினையும் தன்னிடத்தே மலரப்பெற்ற பூங்கொடியோ, ஆதிசிவனின் அருளோ, யாதோ யான் அறிகிலேன் என்று காதல்வெள்ளத்தில் மூழ்கிய சுந்தரரைக் கண்ணுற்ற பரவை நாச்சியார் அவரிடம் அளவிலா அன்பு பூண்டார்.

“ முன்னே வந்தெதிர் தோன்று
முருகனோ பெருகளியால்
தன்னேரில் மாரனோ
தார் மார்பில் விஞ்சையனோ
மின்னேர் செஞ்சடையண்ணல்
மெய்யருள் பற்றுடையவனோ
என்னேயென் மனந்திரித்த
இவன் யாரோ வென நினைந்தார்.”

பரவை நாச்சியார் சுந்தரரைப் பார்த்து, முருகவேளோ, அழகின் ஆலயமாகிய மாரவேளோ, அல்லது நறுமலர் மாலையணிந்த விஞ்சையனோ; பரமசிவனின் அன்பனாய் விளங்கு மிவன் எனது இதயத்தைக் கவர்ந்துவிட்டான். இவன் யாரோவெனக் கலங்கிக் காதல்கொண்டு கரைகின்றார். இவ்வாறு காதலுற்ற இருவரும், இறைவன் திருவருளால் உறவினர் அறிய மணமுறையால் கலந்து மகிழ்ந்தனர்.

சம்பர், சேக்கிழார் ஆகிய இரு கவிஞர்கள் கூறிய காதல் போக்கிற்கும், வில்லிபுத்தூரார் வைக்கும் முறைக்கும் மாற்றமிருக்கிறது. சித்திராங்கதையை அருச்சுனனும், பரவையைச் சுந்தரரும், சீதையை இராமனும், கண்டவுடனேயே காதல் கொள்கின்றனர். ஆயினும், பின்னவரிருவரும் தாய் தந்தையரறிய மணம் புரிந்து, மகிழ்வுடன் வாழ்கின்றனர். முன்னவரோ காந்தர்வ முறையில் மணம் முடிக்கின்றனர். ஒத்த குணமுடைய தலைவனும் தலைவியும் உண்மையாய் நேசித்துக் கலந்து காமம் துய்த்தபின் பிரிய இடமேற்படுகின்றது. பிரிவாற்ருமையினல் தலைவி, சோர்ந்துருகுவதையும், பாங்கியர் தேற்றுவதையும் காப்பியத்தில் காண்கின்ருேம். தலைவனும் தலைவியின் பிரிவாற்ருமையினல் மெய்யுருகுகின்றனன். காதலரிருவரும் ஆருத் துயரமுற்றுக் கண் துஞ்சாது வருந்துவதைக் கவிஞர் சித்திரித்துக் காட்டுகின்ருர்.

இவ்வாறு மேற்கூறிய மூன்று காதல்களில் முதலதும் மூன்ருவதும் உள்ளப் புணர்ச்சியாகிய காட்சியளவிலேயே நின்று விடுகின்றன. உற்ருர் உறவினரறிய மணமுடித்த பின்னரே மெய்யுறு புணர்ச்சி நிகழ்கின்றது. நடுவணதில், காந்தர்வமுறையில் மெய்யுறு புணர்ச்சி நிகழ்கின்றது. ஆகவே, இது களவின்பால் பட்டது. ஏனைய இரண்டும் கற்புத்துறையில் வந்தன. காதலின் கதியில் இத்தகைய வித்தியாசமிருப்பினும், மூன்றிலும் தலைவன் தலைவிகள் ஒருவர் மீதொருவர் குறையா அன்பு பூண்டுவிடுகிருர்கள். ஆகையால் இவை எல்லாம் ஐந்திணையே.

இனி ஒருதலைக் காமத்தையும், அதன் விளைவுகளையும் மிகுந்த உயரிய வழியில் வர்ணித்திருக்கின்றனர் பண்டைப் புலவர்கள். சூர்ப்பணகை இராமன்மீது ஆசைகொண்டதையும், கீசகன் பாஞ்சாலியிடம் பாசங்கொண்டதையும், கற்பனைசக்தியால் நம் கண்ணெதிரே காட்டி மகிழ்விக்கின்ற கவிகளின் பெருமையை அளவிடமுடியுமோ? விரிவஞ்சி விடுக்கின்ருேம். தமிழ் நூல்களை ஊன்றிப் படிப்போருக்குப் பண்டைத்தமிழர், காதலை ஒரு தெய்வத்தன்மைகொண்ட உணர்ச்சியாகவே போற்றி வந்திருக்கின்றனர் என்பது நன்கு விளங்கும். இது வெகு பொருத்தமுடையதே. ஆதியில் தோன்றியது காதல் உணர்ச்சி; தூய்மைப்பட்ட அதன் விகாரமே கடவுள் உணர்ச்சி என்பதில் ஐயமில்லையன்ருே?

# திருவள்ளுவரின் உவமைத்திறன்—II

( ஏ. எஸ். முத்தையா முதலியார் )

---

வள்ளுவர் இயற்கைப் பொருள்களுட் சிலவற்றை உவமைகளாகக் கொண்டாளும் திறமை கண்டு மகிழ்தற்குரியது.

**1**

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பார்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று"

மனத்தின்கண் அன்பில்லாத உயிர் இல்லறத்தில் வாழ்தல், பாலைநிலத்தில் பட்டுப்போன மரம் தளிர்த்தாற்போலும். நீர் நிழலற்ற மணற்காட்டில் வற்றல் மரம் எக்காலத்திலும் மறுபடி துளிர்த்து வளருவது கூடாதகாரியம். அது போலவே, அன்பு என்பது ஒரு சிறிதும் இல்லாத ஒருவன் மனைவி மக்களோடு இல்லறத்தில் இருந்து வாழ்க்கை நடத்துவது அரிதினும் அரிது. உவமையின் சிறப்பை விளக்கிக் கூறவேண்டிய அவசியமுமுண்டோ?

**2**

"மோப்பக் குழையு மனிச்சமுகந் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

அனிச்சம்பூ முகர்ந்து பார்க்கப்படும்போதே ஒரு சிறிது வாடும். அதுபோல, இல்வாழ்வான் முகம் வேறுபட்டு நோக்க விருந்தினர் வாடுவர். மிக மிருதுவான அனிச்சம் என்னும் பூ முகர்ந்து அறிவதிலேயே வாடிவிடும். அதைவிட நுண்ணுணர்ச்சி கொண்டவர் விருந்தினர் என்பதை இங்கு ஆசிரியர் காட்டுகின்றனர். விருந்தினர் ஒரு வீட்டிற்குச் சென்ற சமயம், அவ்வில்லாள் முகம் மாறுபட்டாளானல் உடனே அங்கு நின்றும் அகன்று விடுவர். இங்ஙனம் விருந்தினர் இயல்பு அனிச்சம் பூவினும் மிகவும் மெல்லியது. இதுவாவது முகர்ந்தால்தான் வாடும்; விருந்தினரோ நோக்க வேறுபாட்டினலேயே மனமிழந்துவிடுவர், என்பதை அழகாக உய்த்துணரவைத்திருக்கும் திறன் புகழ்ச்சி கடந்தது. விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத குணங்கள் மூன்று; அவை யாவன: இன்முகம், இன்சொல், இன்செய்கை. முதற்

கூறிய இன்முகம் இல்லாததைக் கண்டதும், விருந்தினர் வாடி நீங்குதல் இயல்பு. "இன்னேக்கியரில் வழி எய்திய நல்விருந்தும்" என்று கம்பர், வள்ளுவர் கருத்தை நன்கு அமைத்திருக்கின்றார்.

## 3

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று"

அறம் விளக்கும் இனியசொற்களும் ஒருவனிடத்தில் உளவாயிருக்க, அவற்றைக் கூருது பாவம் பயக்கும் இன்னாத சொற்களைக் கூறுதல், இனிய கனிகள் தன்னிடத்திலிருக்க அவற்றை நுகராது காய்களை உண்பதுபோலும். இனிய சொல் இன்பத்தைத் தந்து நன்மையைத் தரும். இன்னாத சொல் துன்பத்தைத் தந்து தீமையைக் கொடுக்கும். "இன்சொலாலன்றி இருநீர் வியனுலகம், வன்சொலா லென்று மகிழாதே" என்பது வள்ளுவர் கூறியதனை வலியுறுத்தும். நல்ல மதுரமான கனிகள் இருக்கும்போது ஒருவரும் காய்களைத் தீண்டுவதில்லை; இது உலக இயல்பு. இவ்வுவமையின்மூலம் பொருள் நன்கு விளங்குதல் காண்க.

## 4

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"

உலகநடையை விரும்பிச் செய்யும் பெரிய அறிவினையுடையவனது செல்வம் ஊரிலுள்ளார் தண்ணீருண்ணும் குளம் நீரால் நிறைந்தாற்போலும். ஊர்நடுவே நிற்கும் குளம் நீர் நிறைந்து விளங்கினல் பாழ் போகாது; நெடிதுநின்று, எல்லார்க்கும் உதவும். அதுபோலவே, உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலை அறிந்த அறிவாளனிடத்திலுள்ள செல்வம், யாவர்க்கும், எக்காலத்தும் பயன்படும். ஊருணி சிறியார், பெரியார், வறியர், செல்வர், ஆண், பெண், முதலிய பலர்க்கும் என்றும் ஒரு தடையு மில்லாது உபயோகப்படும். அத்தன்மையை யொக்கும் பெருந்தகையாரின் செல்வம்.

## 5

"பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின்."

இதுவும், கீழ்வரும் குறளும் மேலே கொடுக்கப்பட்ட குறளின் பொருளையே வேறு வகையில் வற்புறுத்தும். ஒப்புரவு செய்வான் கண்ணே செல்வம் படுமாயின், அது பயன்படு மரம் ஊர்நடுவே பழுத்தாற் போலும். ஊர் நடுவில் ஓர் இன்கனி

கொடுக்கும் மரம் பழுத்தால், அப்பழத்தினல் அடையக் கூடிய பலனைப் பலரும் அனுபவிப்பர்; அதுபோலவே, செல்வம் உலக நடையை அறிந்து நடக்கும் ஒருவனிடம் அகப்படுமாயின், அதனல் செல்வத்தின் பயனைப் பலரும் அடைவர். எல்லார்க்கும் எளிதிற் பயன் கிடைக்கும் என்பது இவ்வுவமையினல் தெளிவாகும் பொருள்.

6

"மருந்தாகித் தப்பா மரத்தற்றுற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்."

செல்வம் பெருந்தகையானிடத்தில் அமையுமாயின், அது ஒவ்வொரு உறுப்பும் ஏதாவது ஒரு பிணிக்கு மருந்தாகும் வேப்ப மரத்தை யொக்கும். இம்மரம் கொள்ளுதற்குரிய இடங்களில் நின்றும், மறைந்து நில்லாமலும், காலத்தால் வேறு படாமலும், யார்க்கும், எப்பொழுதும் பயன்படுமாறுபோல, பெருந்தகையானது செல்வமும் பலர்க்கும், பலவகையிலும் பயன்படும். "பெரியவர் தம் நோய்போற் பிறர்நோய் கண்டுள்ளம் எரியின் இழுதாவர்" என்ற உண்மையைக் காண்க. வேம்பின் ஒவ்வொரு உறுப்பும் மருந்துக்கு உதவும் என்பது யாவரு மறிந்ததே. உவமையின் பொருத்தமும் நயமும் வெளிப்படை.

7

"அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று."

சுற்றத்தோடு நெஞ்சு கலத்தலில்லாதவன் வாழ்க்கை குளப் பரப்புக் கரையின்றி நீர் நிறைந்தாற்போலும். ஒரு குளம் கரையின்றி யிருக்குமானல், அதில் நீர் நிறைந்து நிற்கமுடியாது; வெளியே போய்விடும்; அதுபோல தன் சுற்றத்தினரோடு கூடிக் கலந்து வாழாதான் செல்வம், தாங்குவாரில்லாததனல் வெளியில் வீணக விரயமாய்விடும்.

8

"நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம் பழுத் தற்று."

ஏழைகளுக்குதவுவோன் என்று வறுமைவாய்ப்பட்டார் விரும்பி அண்டாதவன் செல்வம், ஊரிடை நிற்பதோர் நச்சுமரம் பழுத்தாற்போலும். ஊர்நடுவே நிற்பது ஒரு நஞ்சுமரம்; அது பழுத்து யாருக்கு என்ன பயன்? அதைத் தின்பவர் இறப்பது திண்ணம். அதுபோல, ஓர் உலோபியினிடம் செல்வம் அடைந்திருப்பதனல் நன்மை எதுவுமில்லை; தீமை விளையவுங்கூடும்.

## ௯

"தொட்டனைத் தூறு மணற்கேணி, மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு."

மணலில் தோண்டும் கேணியில் தோண்டிய அளவிற்கு ஜலம் ஊறும். அதுபோல மக்கட்கு அறிவு கற்ற அளவினதாக ஊறும். மணல் தோண்டத் தோண்டத் தண்ணீர் சுரப்பதுபோல், கற்கக் கற்க அறிவு அதிகப்படும். ஆகவே, ஒருவன் எத்துணை தூரம் கற்கின்றானோ அத்துணை தூரம் அவன் அறிவிற் சிறந்தவனாகின்றான். தோண்டத்தோண்டத் தண்ணீர் நல்லதாகக் கிடைக்கும். அறிவு வளர்வதற்குக் கற்றல் மேலும் மேலும் இன்றியமையாதது என்பது இவ்வுவமையாற் போந்த பொருள்.

## 10

"நுனிக்கொம்பர் ஏறினார், அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்."

ஒரு மரக்கொம்பினது நுனியின் கண்ணே ஏறி நின்றார் மேலும் செல்வாராயின், அவ்வூக்கம் அவர் உயிர்க்கு இறுதியாய் முடியும். இவ்வுவமையினின்றும் பெறக்கூடிய பொருளை நாமே கொள்ளலாம். ஒருவன் தன்னால் மேற்கொள்ளக்கூடிய காரியத்தை எடுத்துக் கொண்டால், அதனால் அவனுக்குக் கேடில்லை; அல்லாது கண்மூடித்தனமாக நடந்தால் தவறான ஊக்கமே தன் உயிர்க்கு ஆபத்தாகக் கூடும். ஓர் அரசன் பகைமேற் செல்வான் தொடங்கித் தன்னாற் செல்லக் கூடிய அளவுஞ் சென்று, மனவெழுச்சியால் மேலுஞ் செல்லமுயன்றால், அவ் வெழுச்சி வினைமுடிவிற் கேதுவாகாது அவனுயிர் முடிவிற் கேதுவாகக்கூடும். "பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம், சால மிகுத்துப் பெயின்" என்ற குறள் வெண்பாவும் இதனை வலியுறுத்தும். உவமையின் எளிமையே அதன் பெருமையாக அமைந்த நயம் கவனிக்கற்பாலது.

## 11

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு."

நீர்ப்பூக்களுடைய தாளின் நீளம் தாங்கள் நின்ற நீரினளவாம்; அதுபோல, மக்களின் உயர்வு அவர்களின் மனவூக்கத்தளவினதாம். "நீரளவேயாகுமாம் நீராம்பல்" என்பதனால் ஆம்பல், தாமரை, குவளை, முதலிய நீர்ப்பூக்களின் நாளம் நீரினளவேயாகும்; அதுபோல, ஒருவனது அறிவோடு கூடிய முயற்சியே அவனது உயர்வின் எல்லை. "முயற்சி திருவினையாக்கும்" என்பதும் இதனை வலியுறுத்தும். ஆகவே, ஊக்கம் ஊழையும் உப்பக்கம் காணச்செய்யும்.

## 12

"இணரூழ்த்து நாறா மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்."

கற்றுவைத்த நூலைப் பிறரறியும் வண்ணம் விரித்துரைக்க மாட்டாதவர், கொத்தின் கண்ணே நன்கு மலர்ந்தும் மணம் வீசாத பூவை யொப்பர். அழகாக மலர்ந்தும் வாசனையில்லாத பூச் சூடப்படாதவாறுபோல, நூல் நன்கு கற்றுணர்ந்தும், பிறர்க்குச் சொல்லமாட்டாதார் நன்கு மதிக்கப்படார்; தமக்குரிய முழுப் பெருமையையுமடையார். இப்பொருளை உணர்த்த இவ்வுவமை யை விடச் சிறந்ததொன்றுமில்லை. இஃது நாள்தோறும் கண்டு அநுபவிக்கக்கூடியதே.

## 13

"இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து"

முள்மரத்தைச் சிறுமுளையா யிருக்கும்பொழுதே நீக்கிவிட வேண்டும்; அதை வளரவிட்டு விட்டால், அது முதிர்ந்து அதை நீக்குபவரின் கையைக் கிழித்துவிடும். இது பிறிதுமொழிதல் என்னும் அணி. இவ்வுவமைப் பொருளினின்றும் விளங்கக்கூடிய உபமேயப் பொருள்: நாம் களையவேண்டிய பகையை ஆரம்பத்தி லேயே தொலைத்துவிட வேண்டும். அன்றி, அது வலியுற்றபின் களைய முயன்றால் நம்மை அது வென்றுவிடும் என்பது. 'நகத் தால் கிள்ளி யெறிவதை விட்டுக் கோடரிகொண்டு பிளப்பதா என்பது உலகப் பேச்சு. இஃதை ஆசிரியர் உவமையாக அமைத்த திறன் பாராட்டற் பாலது.

மேற்கூறிய குறள் வெண்பாக்களிற் காணப்படும் உவமைகள் நம்மைச் சுற்றியுள்ளவையும் நாம் தினந்தோறும் காண்பவையு மான இயற்கைப்பொருள்களினின்றே எடுத்தாளப்பட்டுள்ளன. புலவர்கள் ஞானக்கண்ணிற்கு இப்பொருள்கள் நயத்தை அளிப்ப தால், அவர்கள் தக்க இடங்களில் அவற்றை அமைத்து பொருள் விளக்கஞ் செய்துவிடுகின்றனர்.

# சரித்திரம்

## போலிச் சாஸனங்கள்

தி. நா. சுப்பிரமணியன்

---

சரித்திர ஆராய்ச்சிக்கு முக்கிய ஆதாரங்களுள் ஒன்று கல்லிலும் செம்பிலும் கிடைக்கும் சாஸனங்கள். ஆனால், கல்லிலும் செம்பிலும் பொறிக்கப்பட்டு அழிவில்லாமலிருப்பதினாலேயே அவை யாவும் நம்பிக்கைக்குரிய ஆதாரங்களெனக் கொள்வது அபாயம். இலக்கியங்களிற் புகுந்து உண்மைபோல் நிலவிவரும் இடைச்செருகுகளைப் போல, சாஸனங்களிலும் போலிகள் உள.

சாஸனங்களெல்லாம் சரித்திர ஆராய்ச்சிக்கு உபயோகப் படவேண்டும் என்னும் நோக்கத்துடன் எழுதப்பட்டன வல்ல. அநேகமாக அவை நிலங்கள் முதலியவற்றின் உரிமைச் சீட்டுக்கள் ஆகும். அவ்வுரிமைகளை அனுபவிப்பதற்கு ஆதாரங்களான அச் சீட்டுக்கள் எவ்வளவு அவசியமென்பதைச் சொல்லவேண்டிய தில்லை. இவ்வாறு அவை பெரிதும் உபயோகமாயிருந்ததே ஓர் அபாயத்திற்குங் காரணமாகிவிட்டது. உண்மைச் சீட்டுக்கள் அகப்படாவிட்டால், அவற்றிற்குப் பதிலாகப் புதிய சீட்டுக்கள் சிருஷ்டிக்கப்பட்டு வந்தன. போலிச் சாஸனங்கள் வழக்கிற்கு வந்ததற்கு இதுவே முக்கிய காரணமாகும்.

எவ்வளவுக்கெவ்வளவு ஒரு நாடு பல்வேறு காலங்களில், பல்வேறு வமிசங்களின் ஆளுகையின் கீழ்வந்து அதன்பயனாக இராஜீய, சமூக நிலைமையில் வேறுபாடுகளைப் பெறுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு அந்த நாட்டில் போலிச்சாஸனங்கள் அதிகமாக ஏற்பட இடமுண்டாகிறது. ஒரு நாட்டை வேற்றரசன் பிடித்துக் கொண்டால், அச்சமயத்தில் அந்த நாட்டிலிருந்த இறையிலி யாவற்றையும் தவிர்த்து விடுவான். மறுபடியும் தானே கொடுப்பது போலச் சிலவற்றைக் கொடுப்பான். அக்காலத்தில் தானத்தை மறுபடியும் பெற விரும்புவோர் தங்களுக்கு உள்ள பழைய உரிமைகளை ஆதாரங்கள்மூலம் நிலைநிறுத்த வேண்டும். இவ்விதம் பண்டைய தானங்கள் நிறுத்தப்பட்டதையும், பிற்காலத்திற்

புதுப்பிக்கப்பட்டதையும் பற்றிய குறிப்புகள் நம் நாட்டுச் சரித்திரத்தில் மிகுதியாக உள்ளன.*

ராஷ்டிரகூட மன்னனுன மூன்றும் கிருஷ்ணன், தான் பட்டத்திற்கு வந்ததும், துலாபாரம் செய்ததுதவிரப் பண்டைய அரசர்கள் அபகரித்துக்கொண்ட நானூறு கிராமங்களை மறுபடியும் தானம் வழங்கினுன் என்பதைக் கி. பி. 915-ஆம் வருஷத்திய நவசாரிகைச் செப்பேடுகள் தெரிவிக்கின்றன. அதேபோலச் சளுக்கிய அரசனுன முதலாம் விக்கிரமாதித்தன் தன் தந்தையான இரண்டாம் புலிகேசியை வென்று நாட்டைக் கைக்கொண்ட காலத்து, முடியுடைவேந்தர் மூவர் நிறுத்திய தானங்களைத் தெய்வங்களுக்கும் பிராம்மணர்களுக்கும் தான் புதுப்பித்ததாகக் கூறிக் கொள்ளுகிறுன்.

பண்டைக்காலத்து அரசர்கள் தாங்கள் கொடுத்த தானம் ஆசந்திரார்க்கம் அனுபவிக்கப்படவேண்டும் என்பதை விரும்பித் தங்களுக்குப் பின் வருபவர்களை அத்தானங்களை மதித்து அவற்றின் உரிமைகளை அளிக்கும்படிக் கேட்டுக் கொள்ளுகிறுர்கள். இவ்விதமான வேண்டுகோள் பொதுவாக எல்லாச் சாஸனங்களிலும் காணப்படும். அச்சாஸனங்கள் எக்காரணத்தாலோ அழிந்துவிடின், அவ்வுரிமையாளர்கள் போலியாக அவ்வுரிமைகளை எழுதி வைத்துக்கொள்ளுகிறுர்கள். இங்ஙனம் போலிச் சாஸனங்களைத் தயார்செய்பவர்கள், மூலசாஸனத்தில் கண்டிருந்த செய்திகளை அரைகுறையாக அறிந்தோ, முழுமையும் அறியாமலோ, தங்கள் மனம் போனவாறு எழுதிவிடுகிறுர்கள். இதனுல் இவ்வுண்மையை அறியாத சில சரித்திர ஆராய்ச்சியாளர்கள் அவற்றிற் கண்ட வமிசாவளி முதலியவற்றின் மாறுபாடுகளை உணர இயலாது பிழைபடக் கூற ஏதுவாகிறது.

---

* உதாரணமாக வேள்விக்குடிச் செப்பேடுகளைக் கூறலாம். பாண்டியன் பல்யாகசாலைப் பெருவழுதி என்பவன் வேள்விக்குடி என்னும் கிராமத்தைக் கேள்வி அந்தணாளர்க்குத் தானம் செய்திருந்தான். பாண்டிய நாட்டைக் களப்பிரர்கள் கைக்கொண்டகாலத்தில், அவர்கள் அந்தத் தானத்தைத் தவிர்த்துக் கட்டிக்கொண்டுவிட்டார்கள். பின்னர் பாண்டியர்கள் கிளம்பி நாட்டைக் கைக்கொண்டு வெகுகாலம் சென்ற பிறகு, முதலில் தானம் பெற்றவர்களுடைய சந்ததியார், பராந்தகன் நெடுஞ் சடையன் என்னும் அரசனிடம் தங்கள் குறையை முறையிட்டுத் தங்களுக்குள்ள பழைய உரிமைகளை ஆதாரங்களுடன் நிலை நிறுத்தினர். அரசன் அதன்பேரில் வேள்விக்குடி என்னும் பழம்பதியை மீண்டும் அவர்களுக்கு வழங்கினுன் என்பதை அச்சாஸனம் கூறுகின்றது.

இவ்விதம் போலிச்சாஸனங்களை உற்பத்தி செய்யும் வழக்கம் தொன்றுதொட்டதாகும். கன்னோசியை ஆண்ட ஹர்ஷவர்த்தனன் காலத்தைச் (கி. பி. 631-2) சார்ந்த மதுவனச் செப்பேடுகளால் சோமகுண்டிகை என்னும் கிராமத்தைக் கூடசாஸனத்தின் ஆதரவால் ஒரு பிராமணன் அனுபவித்து வந்த செய்தியும், மன்னன் அதை நிவர்த்தித்து அந்தக் கிராமத்தை வேறு சிலருக்குத் தானம் கொடுத்த செய்தியும் தெரியவருகின்றன. அதே போலத் தாராசண்டி என்னும் இடத்திலுள்ள கல்வெட்டு ஒன்றால், கன்னோசி அரசனான விஜயசந்திரனின் வேலைக்காரர்களுள் ஒருவனிடமிருந்து சில பிராமணர்கள் ஒரு கூடாம்பரத்தைப் பெற்று, அதைக் கொண்டு சில கிராமங்களை அனுபவித்துவந்தார்கள் என்பதும், அப்போலிச் சாஸனத்தை ஏற்றுக் கொள்ளாது அக்கிராமங்களினின்றும் கடமைகளைப் பெறலாம் என்று மகாநாயகன் பிரதாபன் என்பவன் தனக்குப் பின் வருபவர்களுக்கு அறிவித்தான் என்பதும் தெரிய வருகின்றன.

தருமசாஸ்திரங்களிலே இவ்விஷயத்தைப்பற்றிக் குறிப்புகள் காணப்படுவது இவ்வழக்கம் இருந்துவந்ததை வற்புறுத்துகிறது. போலிச் சாஸனங்களை உற்பத்தி செய்பவர்களுக்கு சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கும் தண்டனை சிரச்சேதமேயாகும். அந்நூற்களில் சாஸனங்களை ஆராய்வதற்கு லேக்ய பரீக்ஷை எனப்படும் விரிவான விதிகள் கூறப்பட்டுள்ளன. அவ்விதிகளின்படி நோக்கினால், இப்பொழுது கிடைத்திருக்கும் சாஸனங்களுட் பெரும்பாலன அவற்றிற்கு விரோதமாகவே காணப்படும்.

சாஸனங்களை நாம் கூர்ந்து கவனித்தால் அவை போலியா உண்மையா என்பதைச் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். போலிச் சாஸனங்களை அறிந்துகொள்வதற்கு அடியிற் கண்டவை முக்கியமான பரீக்ஷைகளாகும்.

பண்டைய சாஸனங்களைப் பொறித்த வினையாளர்கள் அவற்றை அழகாகவும், எழுத்துக்களை நன்கு விளங்கும்வண்ணமும் பொறித்துள்ளார்கள். மேலும், ஏடுகளில் எழுதப்பட்ட சாஸனங்கள் அவ்வக்காலத்திற் கேற்றவாறு உருவ வேறுபாடுகளை உடைத்தாயிருந்தன. தென்னாட்டிற் காணப்படும் பழைய காலத்துச் செப்பேடுகள் சுவடி போன்ற நீண்ட வடிவத்தையும், விஜயநகர அரசர் காலத்துச் செப்பேடுகள் புத்தக வடிவையும், உடையன.

பண்டைக்காலத்து வழக்கிலிருந்த எழுத்துக்கள் நாளடைவில் வளர்ச்சியடைந்து இப்பொழுதுள்ள நிலையை அடைந்திருக்

கின்றன. இவ்வெழுத்துக்களும் ஒவ்வொரு தேசத்திலும் வெவ்வேறு விதமான வளர்ச்சியைப் பெற்றுள்ளன. ஆதலின், ஒரு சாஸனம் எந்த நாட்டில், எந்தக்காலத்தில் ஏற்பட்டதோ, அக்காலத்தில், அந்நாட்டில் வழங்கிவந்த எழுத்துக்களாற் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறன்றி மிகவும் பிற்பட்ட காலத்து எழுத்துக்களையோ வழக்கொழிந்த எழுத்துக்களையோ கொண்டு எழுதப்பட்டிருக்குமானால், அது போலிச் சாஸனம் என்று நாம் நிச்சயமாகக் கூறலாம்.

சாஸனங்கள் பொதுவாக தானங்களையே குறிக்கின்றன. தான சாஸனங்களில் எந்தெந்த விஷயங்கள் கூறப்படவேண்டும் என்பதை தர்ம சாஸ்திரங்கள் விரிவாகக் கூறுகின்றன. அவை, தானங் கொடுத்தோன், அவனது வமிசாவளி, கொடுக்கப்பட்ட தானவிபரம், காலம், தானத்திற்குரிய பாதுகாப்புகள், சாக்ஷி, முதலியனவாகும்.

தான பத்திரங்களை எழுதுவதில் ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொருவிதமான உரைநடை வழங்கி வந்திருக்கிறது. தானம்பெற்றோர்கள் அனுபவிக்க வேண்டிய உரிமைகளும் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு விதமாகக் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக, உடும்பொடி ஆமை தவழ்தவெலாம், சாவாமூவாப் பேராடு, கற்று, முற்றாட்டு, என்பன போன்ற சொற்கள் ஒரோர் காலங்களில் வழங்கிவந்து, பின்பு வழக்கொழிந்தன. சாஸனங்களின் உரைநடை சரியானபடி இல்லாவிட்டால், அவற்றைப் போலியென நாம் நிச்சயமாகக் கூறலாம்.

சாஸனங்களிற் குறிக்கப்படும் காலம், தேசந்தோறும் மாறுபட்டிருக்கும். சகம், கலி, கொல்லம், புதுவைப்பு, விக்கிரம ஆண்டுகள் போலப் பல அப்தங்கள் வழக்கில் இருந்துள்ளன. பாண்டிய சாஸனங்களில் ‘இரண்டாம் ஆண்டைக் கெதிர் பதினலாமாண்டு’ என்பதுபோலப் பொதுவாக ஈராண்டுகள் குறிக்கப்பட்டுள்ளன. இதைப்போலவே, மாதம், தேதி, நாள், நக்ஷத்திரம், முதலியவற்றைக் குறிப்பதிலும் மாறுபாடுகள் உள. இவையாவும் சரியான முறையில் உபயோகப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். தானங்கள் பொதுவாகக் கிரஹணம் முதலிய புண்ணியகாலங்களிலேதான் கொடுக்கப்படுவது மரபு. இதையனுசரித்துப் போலிச் சாஸனங்களைச் சிருஷ்டிப்பவர்களும், அந்தத் தானங்கள் ஏதாவது சூர்ய சந்திர கிரஹணங்களை முன்னிட்டுக் கொடுக்கப்பட்டன எனக் கூறுவதுண்டு. கணிதமுறைப்படி அவற்றை ஆராய்ந்தால்

சில சமயங்களில் அவ்விதமான கிரஹணங்களே ஏற்பட்டிருக்க முடியாவென்பது புலப்படும்!

போலிச்சாஸனங்களை எழுதுபவர்கள் பொதுவாகப் பிரசித்தி பெற்ற ஓர் அரசன் கொடுத்தனவாகக் கூறக்கூடிய தானங்களையே சிருஷ்டிப்பார்கள். அங்ஙனம் அவர்கள் எழுதும்பொழுது அந்த அரசனுடைய போர்ச்செயல்களையும், வெற்றி மேம்பாடுகளையும், இதர குணாதிசயங்களையும், அவனது பரம்பரையையும் கூறுவதற்கு நாட்டுவழக்கில் தாங்கள் அறிந்த செய்திகளையே புனைந்து எழுதுவார்கள். அதனால் பல சமயங்களில் உண்மையற்ற செய்திகள் புகுந்துவிடும். அன்றியும், சமீபகாலத்தில் நடந்த செய்திகளை வெகு காலத்திற்கு முன்பு நடந்தனபோல் மாற்றிக் கூறிவிடுவது முண்டு. இதனால் சரித்திர ஆராய்ச்சியில் நேரிடும் பிழைகள் பல. இதேபோலத் தானங்களைப் பெற்றவர்களையும் அவர்கள் வமிசத்தையும் வருணிப்பதிலும் தவறுகள் காணக்கூடும்.

இவ்விதம் போலிச் சாஸனங்களை உண்டாக்குவது சமீப காலத்திலும் நடந்துள்ளது; இப்பொழுதும் நடந்து வருகின்றது. மேலைக்கங்க அரசனான இரண்டாம் சிவமாரன் என்பவனால் கி. பி. 807-ஆம் வருஷத்தில் கொடுக்கப்பட்ட தானத்தைத் தெரிவிப்பதாக எழுதப்பட்டுள்ள சுரதேனுபுரச் செப்பேடுகள், சென்ற நூற்றாண்டிலேதான் இனாம் கமிஷனர் முன்பாக தாக்கல் செய்வதற்காகத் தயார் செய்யப்பட்டனவாகும் என்னும் செய்தியை மைசூர் சாஸன இலாக்கா அதிகாரியாயிருந்த ரைஸ் (L. Rice) துரைமகனார் குறித்துள்ளார். அதேபோல, வங்காள ஏஷியாடிக் ஸொஸைட்டியின் புத்தகசாலையில் ஒரு செப்பேடுளது; அது தான பத்திரம் அல்ல. கி. பி. 1347-இல் வடஇந்தியாவில் முகம்மதிய அரசர்களுடன் நடந்த ஒரு சண்டையைப்பற்றிக் கூறுகின்றது. கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் ஆண்ட அசோகமன்னனின் கல்வெட்டுக்களிற் காணப்படும் எழுத்துக்களைக்கொண்டு இவ்வேடு பொறிக்கப்பட்டுள்ளது. இச்சாஸனத்துள் அந்த எழுத்து 'பாலி' என்னும் பெயரால் கூறப்பட்டிருக்கிறது. பாலி என்பது ஒரு மொழியே அன்றி, எழுத்தின் வகை அல்ல என்பதை நாம் அறிவோம். சாஸனம் ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளது. அசோக மன்னன் காலத்தைச் சார்ந்த ஸம்ஸ்கிருத சாஸனம் ஒன்றும் இதுவரையில் கிடைத்ததில்லை. இச்சாஸனத்தில் காணப்படும் எண்கள் தற்கால வழக்கில் உள்ளவைகளேயாகும். பெயர்ச்சொற்கள், ஆங்கிலேய நாகரிகம் நம் நாட்டில் புகுந்த பிறகு அவை அடைந்த திரிபு உருவில் எழுதப்பட்டுள்ளன!

சிற்சில சமயங்களில் கிடைக்கும் சாஸனங்களில் அவை மூல சாஸனங்கள் அல்லவென்றும், அவற்றின் பிரதிகள் எனவும் கூறப் பட்டிருப்பதுண்டு. ஆயினும் மூலம் நமக்குக் கிடைப்பதில்லை. இப் படிப்பட்ட சாஸனங்களையும், முக்கியமாகச் செம்பில் உள்ளவற் றையும், நாம் நம்பமுடியாது. இம்மாதிரியான ஒரு பிரதியை நாம் ஆராயுங்கால், எழுத்துக்களின் வரிவடிவங்களைத் தவிர மற்றைய பரீக்ஷைகளின் முடிவாகச் சாஸனம் எந்தக் காலத்தைச் சார்ந்த தாகக் கூறப்படுகின்றதோ அந்தக்காலத்திற்கு ஏற்றபடி இருக் கிறதா என்பதைக் கவனித்தல் வேண்டும். தமிழ்நாட்டிற் கிடைக் கும் கல்வெட்டுக்களில் இம்மாதிரியான பிரதி சாஸனங்கள் பல உள. பொதுவாக, அப்படியுள்ளவை பழைய கோயில்களைப் பிரித்துக்கட்டுவதற்கு முன்பு அவற்றின் சுவர்களில் காணப்பட்ட வெட்டுக்களைப் பெயர்த்தெழுதி வைத்துக்கொண்டு புதிய கட்டிடம் முடிந்த பிறகு பொறிக்கப்பட்டனவாகும். எழுதுவோரின் பிழையால், மூலத்திற்கும் பிரதிக்கும் வேறுபாடுகள் ஏற்படுவது இயல்பு. ஆராய்ச்சியாளர்கள் அவற்றைச் சுலபமாகக் கண்டு கொள்ளுதல் கூடும்.

இவ்விதம் கிடைக்கும் போலிச் சாஸனங்கள் யாவும் செம்பி லேயே உள்ளன. கல்வெட்டுக்களில் கிடையா. ஏனெனில், செப் பேடுகளில் பொறிப்பதை இரகசியமாக முடித்துவிடலாம். கல் வெட்டுக்களோ கோயில்முதலிய பொது இடங்களில் பொறிக்கப் படவேண்டும். அன்றி, அவற்றைப் பொறிப்பதற்குக் கிராம உத்தியோகஸ்தர்கள் முதலிய பலரது அனுமதியைப் பெறவேண் டியதால் பகிரங்கமாகப் போய்விடும். இதனாலேதான் போலிச் சாஸனங்கள் கற்களில் காணப்படவில்லை.

மேலே குறித்தவற்றினின்றும், நம் நாட்டிற் கிடைக்கும் சாஸனங்கள் யாவற்றையும் உண்மைச் சாஸனங்களாகக் கொள்ளக் கூடாது என்பதும், அவற்றுள் போலிச் சாஸனங்கள் இவை என் பதை ஆராய்ந்தெடுத்தல் அவசியம் என்பதும், நன்கு விளங்கும். ஆகவே, ஆராய்ச்சியாளர்கள் அவற்றை நன்கு ஆராய்ந்து அறிந்து போலிகளைக் களைந்தெறிவது அவசியமாகும்.

# கொடைக்கானல் யாத்திரை

'ஸ்ரீரங்கன்'

---

சென்ற கோடை விடுமுறையில் எங்கள் மோட்டார் "சிவப்பு மின்ன"லுடன் கொடைக்கானலுக்குச் செல்வதென்று தீர்மானித்தோம்.

குமுதினியை அழைத்துச் செல்லவேண்டுமென்று பிரியம்வதை விரும்பினாள். அவ்விதமே குமுதினியின் கிராமத்திற்கும் சென்று அவளையும் அழைத்துக்கொண்டு ஒருதினம் காலை எட்டு மணிக்குத் திருச்சியிலிருந்து புறப்பட்டோம்.

முந்தின சாயங்காலம் மழை பெய்திருந்தது. அன்று காலை சூர்யோதயம் மிக ரம்யமானதாய் மனதைக் கவர்ந்தது. வானத்தில் சில மேகக் கூட்டங்கள், விடைபெற்றுச் செல்ல அறியாத விருந்தினர்கள் போல, தயங்கித் தயங்கி நின்றுகொண்டிருந்தன. வெய்யிலின் உக்கிரம் சிறிதுமில்லை. மெதுவாகத் தென்றல் வீசிற்று. "மின்ன"லில் உட்கார்ந்து, தூளியில்லாத அந்த நல்ல ரஸ்தாவில் செல்லுங்கால், காலைநேர இனிமையும், வேகமாகச் செல்லுவதால் காற்று வதனத்தில்பட்டு உண்டாக்கும் உற்சாகமும் சேர்ந்து எவ்விதக் கல்நெஞ்சு படைத்த மனிதனையும் கவியாக மாற்றிவிடுவனவா யிருந்தன. உள்ளத்து ஆனந்தத்தைப் பாட்டின் மூலம் வெளிப்படுத்த ஆர்வமுண்டாயிற்று.

"இவ்விதக் காலை நேரத்தில் யாத்திரை செய்யத் தொடங்கும் நமது தேசக் கிராமவாசிகள் முன்காலத்தில் தாங்கள் கண்ட காட்சிகளைப் பாடிக்கொண்டே போவார்கள். அவ்விதப் பாட்டுக்களையே நாடோடிப்பாட்டுக்களென வழங்கி வருகின்றனர்" என்றேன்.

"'கோட்டைமேலே இரண்டு கொம்பானை,
கொம்புக்கு இரண்டு கிளியானை'

என்பதும் அந்த மாதிரிப் பாட்டுகளில் ஒன்றுதானே?" என்றாள் பிரியம்வதை.

"ஆமாம்; நான்கூட அவ்விதம் கேள்விப்பட்டிருக்கிறேன். ஓர் ஏழைப் பிராம்மணன் யாத்திரை போனனும். வழியில்

கண்ட எல்லாவற்றையும் ஒரு பாட்டாக எழுதிக்கொண்டானும். பிறகு அதைச் சொல்லி ஒரு பிரபல ஜோஸ்யனென்று கீர்த்தி பெற்றானும்.

‘இரட்டைப் பனைமரம் நிற்கக்கண்டேன்,
ஆந்தை விழிக்கக் கண்டேன்.’

என்பது முதலியன” என்று குறும்புத்தனமாகக் குமுதினி சொன்னாள்.

நான் ஒன்றுமே சொல்லவில்லை. கௌரவமாய் மோட்டாரை ஓட்டிக்கொண்டே போனேன். ஒன்றிரண்டு முறை வழி பிசகினதற்குக் குமுதினி ஏதோ சொன்னதற்கும் அவ்விதமே நடந்து கொண்டேன். பெண்பாலர்க்கு என்ன தெரியும்?

திருச்சியிலிருந்து திண்டுக்கல்லுக்குப் போகும் ரஸ்தா மிகப் புராதனமானது.

“இவ்வழியாகத்தான் மதுரையில் திருமலை நாயக்கன் மஹாலிலிருந்த உயர்ந்த சிற்பங்களையெல்லாம் பெயர்த்துத் திருச்சிக்கு எடுத்துச் சென்றிருப்பார்கள். இத்தாலி தேசத்தில் பிறந்து, தம் உற்றார் உறவினரை விட்டு நம்மைத் திருத்துவதற்காக நம்நாடு வந்த வீரமாமுனிவர் இந்த வழியாகத்தான் தம் பல்லக்கில் சென்றிருப்பார். ஹைதர் தன் ஐரோப்பியப் படைகளுடன் திண்டுக்கல் கோட்டையைப் பிடித்துக்கொண்டதும் இந்த வழியாகத்தானிருக்கும்” என்றாள் குமுதினி.

குமுதினியிடம் உள்ள குற்றம் அது—முன்கால சரித்திரத்தில் பிரமை. அவளுக்கு மிகச் சந்தோஷம் தரவேண்டுமென்றால், சரித்திரப் புத்தகக் குவியல்களுக் கிடையில் அவளை உட்காரவைத்து விட்டால் போதும். இவ்விதம் பண்டைய சரித்திரத்தில் உள்ள ஆர்வத்தினால் மிரண்டிருக்கும் அவள் கண்களுக்கு, ஒவ்வோர் இடிந்த கல்லும், ஒவ்வோர் இடிந்த மண்டபமும், ஓர் அற்புத வஸ்துவாகத் தோன்றின. தவிரவும், தனது பக்கத்தில், தனக்கு முன்பாகவே தொடங்கிப் படித்தவன் ஒருவன் வீற்றிருக்கிறானே என்பதையே மறந்துவிட்டாள். அதை அவளுக்கு ஞாபகப் படுத்தினேன்.

“முதலில் நாயக்கர்களுக்குத் திருச்சிதானே ராஜதானியாக இருந்தது. திருமலை நாயக்கர் திருச்சியிலிருந்து ஒரு சமயம் மதுரை நோக்கிப் போய்க்கொண்டிருக்கையில் வயிற்றுவலியால் மிகவும் பீடிக்கப்பட்டார். ஸ்ரீ ரங்கநாத ஸ்வாமிக்கு எத்தனையோ பிரார்த்தனை செய்தும் அது நிற்கவில்லை. ஓர் இரவு கனவில் ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் அவருக்குத் தரிசனமாகி மதுரையில் தன்

னுடைய கோவிலைக் கட்டும்படி சொல்லி அருளினாள். அவ்விதம் செய்வதாக நாயக்கர் பிரதிஜ்ஞை செய்த பிறகே வயிற்றுவலி நின்றது. அதற்குப் பிறகல்லவோ மதுரை மீனாக்ஷி அம்மன் கோவில் பிரபலமாய்க் கட்டப்பட்டது; நாயக்கர்களுக்கும் மதுரை தலைநகரமாயிற்று. அந்த ஸ்வப்நம் கண்டது, நாம் இப்போது செல்லுகிறோமே, இதே இடத்தில்தான்.'' என்று முடித்தேன்.

''இதில் எவ்வளவு தூரம் வாஸ்தவம்?'' என்று குமுதினி கேட்டாள்.

''மீனாக்ஷி அம்மன் கோவிலைப்பற்றி உனக்குச் சந்தேகமா?'' என்று கேட்டேன்.

''அது ஒன்று மில்லை——''

''அப்படியானால் வயிற்றுவலியில் நம்பிக்கையில்லைபோலும்?''

''நம்பாமலிருப்பானேன்? இவள் நேற்றிரவில் இட்ட விருந்தை இப்போது நினைத்தாலும் எனக்கு வயிற்றுவலிமாதிரி காண்கிறதே'' என்றாள் பிரியம்வதை எனக்குச் சாக்ஷியாக.

திருச்சியிலிருந்து திண்டுக்கல் சுமார் ஐம்பத்தைந்து மைல். பத்துமணி வாக்கில் அங்கே போய்ச் சேர்ந்தோம்.

''திண்டுக்கல் என்கிற பெயர் எவ்விதம் ஏற்பட்டது தெரியுமா? திண்டு என்ற இராக்ஷஸனுடைய கல் இது'' என்றாள் குமுதினி.

''கல்லாக மாறின ஓர் இராக்ஷஸனுடைய திண்டு இது'' என்று நான் திருத்தினேன்.

''நான் சொன்னது இம்பீரியல் கஜட்டீரில் எழுதி யிருக்கிறது'' என்றாள் குமுதினி.

''ஆனால் நான் சொன்னதுதான் உண்மையான ஸ்தல புராணம்'' என்றேன்.

அங்கே சற்றுநேரம் தங்கிக் காலை போஜனம் அருந்திப் பிறகு அம்மைநாயக்கனூருக்குப் புறப்பட்டோம். அப்போது வெயில் ஏறிவிட்டபோதிலும், கொடைக்கானல் போகப்போகிறோமென்ற ஆவலுடன், மலைமேல் எவ்வளவு குளிர்ச்சியாயிருக்குமென்பதைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்த பிரியம்வதை, ''வெயிலே தெரியவில்லை! வழி ச்ரமமே தெரியவில்லை! எவ்வளவு நாழிகையாய் வருகிறோம், எவ்வளவு தூரம் வந்திருக்கிறோம், ஒன்றுமே தெரிய வில்லையே'' என்றாள்.

அம்மையநாயக்கனூரைத் தாண்டிப் பிறகு மலையடிவாரம் வந்து சேர்ந்தோம். மலை ஏற ஆரம்பிப்பதற்குமுன் ஒரு முறை

"மின்ன"லை நிறுத்தி எல்லாம் சரியா யிருக்கிறதாவென்று பார்த்துக்கொண்டேன். மலைரஸ்தா ஆரம்பத்தில் மிகக் குறுகியதாயும், செங்குத்தாயும், வளைந்து வளைந்து செல்வதாயுமிருக்கிறது. ஒரு சமயத்தில் ஒரு வண்டிதான் செல்லமுடியும். ஆனால், கொஞ்சதூரத்திற்கு ஒரு முறை, ரஸ்தாவைச் சுமார் அறுபதடி அகலம் செய்திருக்கிறார்கள். எதிரில் ஏதாகிலும் வண்டி வந்தால், இவ்விதம் அகலப்படுத்தி யிருக்கும் இடத்தில் அது ஒதுங்கி நின்று நமக்கு வழிகொடுக்கும். ஏறும் வண்டிக்கு முன்பாத்தியமே ஒழிய இறங்கும் வண்டிக்குப் பாத்தியம் கிடையாது. ஏனென்றால் ஏறும் வண்டியை ஒரு தடவை நிறுத்தி விட்டால், பிறகு அதற்கு மேடு ஏறப் புறப்படச் சக்தி இருக்குமோ இல்லையோ, ஒருக்கால் பின்னாக நகர ஆரம்பித்துவிடுமோ, என்ற பயத்தினால் இவ்விதம் சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள் போலும்!

மார்க்கம் செங்குத்தானதென்று சொன்னேனல்லவா? ஒவ்வொரு முறை ரஸ்தா வளைந்து, முன்னதைவிட உயரமாய்ச் செல்லும் பாதை எதிரில் தென்பட்டதும், குமுதினி உற்சாகத்துடன், "ஆ, இதை உன்னால் (உன்னுடைய மோட்டாரால்) ஏற முடியாது. விசையை (*Gear*) மாற்றாமல் ஏறவே முடியாது" என்பாள். அது ஏறிவிடும். இவ்விதந்தான் உலகத்தில் "எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி——" ஏமாந்து போவது!

முக்கால்தூரம் சென்றபிறகு, ஒரு சிறிய சமதளம் தென்பட்டது. அவ்விடத்தில் வண்டியை நிறுத்தி அநேக படங்களைப் பிடித்தேன். ஆனால் நாம் ஒன்று நினைக்க, படம் பிடிக்கும் 'காமிரா' ஒன்று நினைக்கிறது. முடிவில் அப்படங்களின் விசித்திர லாவண்யத்தைப் பார்த்தபோது, நிரபராதியான, "கலைமகளி"ன் பத்திராதிபருடைய, அல்லது இதை வாசிப்பவருடைய, கண்களைப் "பறிப்பதில்" எனக்கு இஷ்டமில்லையாகையால் அப்படங்களை அச்சிட அனுப்பவில்லை.

மலை ஏற ஏற எல்லாருக்கும் உற்சாகம் அதிகரித்தது. சுமார் இருபதுமைல்தூரம் வந்தபிறகு, "மின்ன"லை நிறுத்தி எல்லாரும் கீழே இறங்கிச் சுற்றிலுமுள்ள காட்சியைக் காணலுற்றோம்.

கொடிக்கானல் (*The forest of creepers*—கொடிகள் நிறைந்த காடு) என்கிற பெயர் மிகப் பொருத்தமானதே. ஆரம்பத்தில் பாறைகளில் பரவும் புல் பூண்டுகளும், கொடிகளும் இருக்கின்றனவே தவிர, உயரவளர்ந்த செடிகள்கூடக் காணவில்லை. ஆனால் மலைச்சிகரத்திலிருக்கும் சில மரங்களினுயரத்தை அண்ணாந்து பார்க்கையில் நமக்குத் தலைச் சுற்றுதலே உண்டாகிறது.

நான் சொல்லும் அச்சமயம், சுமார் ஐயாயிரம் அடிக்கு மேலான உயரத்திலிருந்தோம். கண்களுக் கெட்டிய தூரம் ஒரே பசுமையான இயற்கைவனப்பின் காட்சி! அதுவும் அவ்வளவு உயரத்திலிருந்தால் எவ்வளவு தூரம் சுற்றிலும் கண்களுக் கெட்டு கிறது!

அவ்விதம் வெகுதூரம் எட்டி என்ன பயன்? நமது உள்ளத் தின் மதிப்பையும் அகந்தையையுந்தான் இழக்கிறோம். நமது சிறுமையே நமக்கு நன்றாகத் தெரியவருகிறது. ஆயிரக்கணக் கான வருஷங்களாய் அசைவற்று இங்கேயே இருந்துவரும் இந்த மலைப்பிரதேசங்களின் கம்பீரக்காட்சியினிடையில், சுவல்ப ஆயு சுள்ள மனிதனும், அவன் சிறு குடிசைகளும், அவன் தகர மோட் டார்களும், ஏதோ மிக அல்பமாய்த் தோன்றிப் பரிகசிக்கத் தகுந்தவைகளாகின்றன! (இது குமுதினியின் நேர்த்தியான எண் ணமும் பாஷையும்—எனக்குத் தோன்றியதெல்லாம், மலைப் பிரதேசங்களில் ஏன் இவ்வளவு சீக்கிரத்தில் பசி எடுக்கிறது என்பது தான்! சில இளநீர்களை அருந்தியதன்மேல், அந்த தத்துவ விசாரமும் நின்றுவிட்டது!)

கொடைக்கானலில் நீலமேகன் இருக்கிறான். "எங்கள் வீடு .... வது மைல்கல்லிற்கு அடுத்தாற் போலிருக்கிறது. நீங்கள் வருவதை எதிர்பார்த்துக்கொண்டே யிருப்பேன்" என்று அவன் எழுதியிருந்தான். ஆகையால் மைல்கற்களைப் பார்த் துக்கொண்டே போனோம். எல்லாரும் அந்தக் கற்களின்மேலேயே முழுகவனத்தையும் செலுத்தி இருந்தமையால், குறிப்பிட்ட மைல்கல் புதைந்திருந்த மேட்டின் சிகரத்திலிருந்த அவன் வீட் டையும் கவனிக்காமல் கடந்து சென்றோம். இம்மாதிரிச் செய் வதில், உலகத்தில் அநேகர் எங்களுக்குத் துணையிருப்பார்கள் என்று எண்ணுகிறேன்.

கொடைக்கானலில் முக்கியப் பொழுதுபோக்கு, படகு தள்ளுவதும், நடப்பதும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் எங்கள் அநுபவத்தில் முக்கியப் பொழுதுபோக்கு சாப்பிடு வதே. படகு தள்ளுவதும் நடப்பதும் வெளிவியாஜம். படகில் உட்கார்ந்து ஏரிக்கரையில் சாப்பிட்டோம்; ஏரிநடுவில் சாப்பிட் டோம்; ஏரிக்கு எதிர்க்கரையில் சாப்பிட்டோம்; மூன்று மைல் விஸ்தீர்ணமுள்ள அந்த ஏரியின் எல்லாப் பாகத்திலும் சாப்பிடாத தற்குக் காரணம் நாங்கள் அங்கே அதிக நாட்கள் தங்கவில்லை என்பதே. நடந்து சென்றும் அருவிக் கரையில் சாப்பிட்டோம். எங்கெங்கே அருவியின் வீழ்ச்சி மிக அழகாயிருந்ததோ அங்கெல்

லாம் உட்கார்ந்து சாப்பிட்டோம். என்ன சாப்பிட்டென்ன? அந்தக் குளிரில் வெகு சீக்கிரம் மறுபடி பசி எடுத்துவிடுகிறது!

* * * *

கொடைக்கானல் புஷ்பங்களின் அழகைக் கண்டு குமுதினி அதிகம் குறைப்பட்டாள். அவள் கிராமத்தில் அவ்விதம் புஷ்பிக்கிறதில்லையாம். ஆனால் பிரியம்வதையின் சிந்தனை தாத்காலிகமானது. "இங்கிலீஷ் புஷ்பங்களால் பூஜை செய்யலாமா? அதை பகவான் அங்கீகரிப்பாரோ?" என்பதே அவள் கவலை.

இங்கிலீஷ் புஷ்பங்களைப் பகவான் அங்கீகரிப்பது மாத்திரமல்ல, இதனிடையே வாசம் செய்துகொண்டுமிருக்கிறார் என்ற எண்ணமே ஒரு சமயம் உண்டாயிற்று—அது, ஸ்ரீமான்.....ஐயரும் அவர் சகோதரரும் ஒரு தோட்டத்தைக் காண்பிக்க எங்களை அழைத்துச் சென்றபொழுதே. கொடைக்கானல் புஷ்பங்களின் அழகை இரண்டு மூன்று தினங்களாய்ப் பார்த்துப் பரிசயம் பெற்றிருந்த போதிலும், அந்தத் தோட்டத்திற்குள் நுழைந்ததும், எங்களுக்குண்டான வியப்பை வர்ணிப்பது சாத்தியமல்ல. அங்கே புஷ்பித்திருந்த நூற்றுக்கணக்கான—ஆயிரக்கணக்கான—புஷ்பங்களின் வர்ணங்களும், வனப்பும் எங்களைப் பிரமிக்கச்செய்தன. இவ்வளவு மனோகரமான காட்சியைக் காண நாம் எவ்விதம் அருகராவோம் என்று குமுதினி சங்கடப்பட்டாள்.

ஐரோப்பாவிலிருந்தும், ஆஸ்திரேலியாவிலிருந்தும் செடிகளும் விதைகளும் தருவித்து, அந்தத் தோட்டத்தின் சொந்தக்கார அம்மாள் பயிர்செய்துவருகிறதாய்த் தெரிகிறது. இவர் அவைகளுக்காகப் படும் சிரமமும் சிந்தனையும் அதிகமே. ஆனால் எவ்வளவு சிரமப்பட்டிருந்தாலும், எவ்வளவு பொருட்செலவு செய்திருந்தாலும், அப்புஷ்பங்கள் கேவலம் தங்கள் இயற்கைப்படி வளர்ந்து புஷ்பித்த மாத்திரத்திலேயே பிரத்யுபகாரம் செய்வதும் தவிர, இவரை அவைகளுக்குக் கடன்பட்டவராய்ச் செய்துவிட்டன. அவ்வளவு லாவண்யத்துடன் இவைகள் மலர்வதே மனிதனுக்கு ஓர் அருள்செய்வது போலல்லவா!

(இதை வாசிப்பவர் 'இந்த எண்ணங்களெல்லாம் உனக்குத் தோன்றியிருக்கமாட்டா, குமுதினியுடையவைதான்' என்றால், நான் அதைத் துளியேனும் மறுக்கப்போவதில்லை.)

எங்களை அழைத்துச்சென்றவர் பற்பல தினுசுப் புஷ்பங்களைப் பற்றி சொன்ன சமயம், முன்பின் கேட்டிராத அந்தப் பெயர்களை ஆயுள் பூராவும் அறிந்தவர்கள்போல், பிரியம்வதையும் குமுதினியும் தலையாட்டினதைப்பற்றியும், "ஓகோ, இதுவா அது!" என்றதைப்

பற்றியும் நான் ஒன்றும் சொல்லப்போகிறதில்லை. ஆனால் "இந்தப் புஷ்பத்தின் வர்ணத்தில் ஒரு புடவையை நெய்ய முடியாதா!" என்று பிரியம்வதை பிரலாபித்தது மாத்திரம் மிகப் பரிதாபமாயிருந்தது. அந்தத் தோட்டத்தை விட்டு வெளியே வருவதற்கு மனமில்லை. மிகப் பிரயாசையுடன் வந்தோம். வெளியே வந்த பின் ஓர் அருவிக்கரையில் உட்கார்ந்து கையில் கொண்டுவந்திருந்த சில பழங்களைச் சாப்பிட்ட பிறகுதான் மனத்திற்குச் சற்று ஆறுதல் உண்டாயிற்று.

கொடைக்கானலை விட்டுப் பிரிந்து, குளிர்ந்த மலைப்பிரதேசத்தை விட்டு வெயிற் கொளுத்தும் தாழ்ந்த பூமிக்கு இறங்கி வருவதற்கு, யாருக்கு விருப்பமிருக்கும்! நிர்ப்பந்தத்தால்தான் வரவேண்டி யிருந்தது.

ஆனால் ஒவ்வொருவரும் தமதுள்ளத்தில் 'மீண்டும் வரலாம்' என்ற ஆசையை வளர்த்துத் தம்மைத் தேற்றிக்கொள்ள முயல்கின்றனர்.

# வரதுங்கராமன்

## சோமசுந்தர தேசிகர்

---

### இளமை

கி. பி. பதினாறும் நூற்றாண்டிலே பல புலவர்கள் தமிழ்நாட்டிலே வாழ்ந்து வந்ததோடு, சிற்றரசர்களாக விருந்து அரசாட்சி செய்தோரிலும் பலர் தக்க கல்வியுடையவர்களாயிருந்தனர். கல்வியறிவு மட்டோடு நில்லாது இவர்கள் நூலியற்றுந்திறமையும் வாய்ந்தவர்களாயிருந்தனர். அவ்வாறிருந்தவர்களில் வரதுங்கராம பாண்டியன் என்பவனும் ஒருவன்.

தங்கள் பழைய உயர்நிலை கெட்டு, பாண்டியநாட்டுக்குத் தொன்றுதொட்டுத் தலைநகராயிருந்த மதுரையையுமிழந்து, பாண்டியர்கள் திருநெல்வேலிப் பக்கத்தில் விஜயநகர அரசர்களின் கீழ் சிற்றரசர்களாக வாழலாயினர். இவர்களில் அரிகேசரி பராக்கிரம பாண்டியன் என்பவனை முதல்வனாகக் கூறலாம்[1]. இவனுக்குப் பின் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு கழித்து அபிராம பராக்கிரம பாண்டியன் அரசாட்சிக்கு வந்தான். அவனுக்கு பராக்கிரமன் என்றும், சாலிவாடிமதி திருநெல்வேலிப் பெருமாள் என்றும் இரண்டு பிள்ளைகள் இருந்தனர். அவர்களுள் பராக்கிரமன் என்னும் பேருடைய மூத்தவனுக்குக் குணராமன் என்றும் வரதுங்கராமன் என்றும் இரண்டு பிள்ளைகள்[2] இருந்தனர். இளையவனாகிய திருநெல்வேலிப் பெருமாளுக்கு அதிவீரராமன், ஸ்ரீவல்லபன் என்று பேர்கொண்ட இரண்டு பிள்ளைகள் இருந்தனர். இவர்களுள் பராக்கிரமனுடைய இரண்டாவது பிள்ளையாகிய வரதுங்கராமனே ஈண்டு குறிப்பிடப் பட்டவன்.

---

1. அரிகேசரி பராக்கிரம பாண்டியன் சகம் 1344-க்குச் சரியான கி. பி. 1442-இல் அரசாளத்தொடங்கி, ஏறக்குறைய 42-ஆண்டு அரசாண்டான். இவன்தான் தென்காசி விசுவநாதர் கோயில் கட்டியவன்.

2. பிள்ளைகள்: தளவாய் அக்கிரகாரம் சகம் 1510-ஆம் ஆண்டுச் செப்பேடு, சுலோகம் 13 - 17. T. A. S. I, 127.

வரதுங்கராமனுக்குப் பெற்றோர்கள் அபிராம சுந்தரேசுவரன் எனப்பெயரிட்டனர்.[1] சுருக்கமாக அபிராமன் எனவும் வழங்க லாயினர். இவன் நல்ல கல்வியறிவு வாய்க்கப்பெற்றவன். இவன் நிம்பையென்ற வேம்பத்தூரிலுள்ள ஈசான முனிவரிடம் கல்வி பயின்றான். அந்த நன்றியை,

> 'தேசான[2] சிவஞானச் செஞ்சுடரான் மும்மலமாம்
> மாசான விருளகற்றி மன்னுயிரைப் புரந்தளித்துத்
> தூசானே யுரியசைத்தோன் றொல்சமைய நிறுத்து நிம்பை
> ஈசான முனிவனிணை யடியை யிறைஞ்சுவாம்.'

என்ற துதிச்செய்யுளால் விளக்குவான்.

கல்வியில் வல்லவனாக விருந்தது போலவே இவன் போரிலும் வல்லவனாகவிருந்தான். அக்காலத்திலே விஜயநகர அரசர்களுக் குள் அரசைக் குறித்துச் சண்டையுண்டாயிற்று. அது தென் னாட்டிலும் பரவிற்று. தஞ்சாவூர்ச் சீமையை யாண்ட அச்சுதப்ப நாயக்கர், வெங்கடபதியோடு சேர்ந்துகொண்டு மதுரை நாயக்கர் களை எதிர்த்தார். மதுரை நாயக்க வரசர்களுக்குத் துணையாக வரதுங்கராமனும், தஞ்சைவாணனும் சென்றனர். இருதிறத் தாருக்கும் வல்லம் என்ற ஊரில் நடந்த போரில் வீரராஜனின் படைகள் சின்னாபின்னமாயின. அச்சுதப்ப நாயக்கர் தன் சேனை யோடு ஓடிவிட்டார்.[3] இந்தப் போரில் இவர்களே வெற்றியடைந் தார்கள்.[4] பின்னர் சேரநாட்டையாண்ட திருவடிகளில் ஒருவரைத் தோற்கடித்ததாகக் கூறுகிறான்.[5] முற்குறித்த வல்லம் போரில் வீரத்தோடு சண்டையிட்ட திருமலைராஜன் கேட்டுக்கொண்ட வண்ணம் வரதுங்கராமன், இளவரசனாக யிருக்கையிலேயே, தன் னுடைய அரசனது அனுமதி பெற்று, சீவிலிப்புத்தூர் தாலுக்கா விலுள்ள புதுக்கோட்டையை அந்தணர் பலருக்குத் தானமாக வழங்கினான். சகம் 1504-இல் சொக்கப் பண்டிதர் மகன் மருத்து வனான சந்திரசேகரனுக்கு முருகனேரி என்ற ஊரை முற்றூட்டாக வழங்கினான்[6]. இவன் இவ்வாறாகத் தன் இளமையிலேயே வீரமும், கொடையும், கல்வியுமுடையவனாக விருந்தான்.

---

1. T. A. S. I, 133.
2. பிரமோத்தரகாண்டம் - குருவணக்கம்.
3. T. A. S. I, 84.
4. புதுக்கோட்டைச் செப்பேடுகள்.
5. முன்வரும் வாண்மங்கலம் காண்க.
6. தளவாய் அக்கிரகாரம் செப்பேடுகள் T. A. S. I, 110.

## அரசாட்சி

வரதுங்கராமனுடைய தகப்பனுன பராக்கிரம பாண்டியன் சகரவாண்டு 1465-இல் குலசேகரன் என்ற பட்டம் பூண்டு அரசு கட்டிலேறினுன்.[1] அவனுக்கு அக்காலத்தில் ஆண் சந்ததிகள் இல்லை யென்று தெரிகிறது. அதனுலே அவனுடைய தம்பியான திருநெல்வேலிப் பெருமாளும் இராஜ காரியங்களைக் கவனித்து வந்தான். சற்றேறக்குறைய பத்தாண்டு அரசாட்சி செய்து கி. பி. 1552-இல் பராக்கிரம பாண்டியன் விண்ணுலகடைந்தான். ஆனுல், அவன் இறக்குமுன் குணராமனென்றும், அபிராமனென்றும் இரண்டு பிள்ளைகள் பிறந்திருந்தனர். அவர்கள் சிறுவர்களானமையின் அரசாட்சியை நடத்தும்பொறுப்பு சிற்றப்பனுன திருநெல்வேலிப் பெருமாளுக்கு வாய்த்தது. ஆகவே அவன் கி. பி. 1552-இல் வீரவேள் குலசேகரப் பெருமாள் என்ற பட்டஞ் சூடி அரசு கட்டிலேறினுன். இவன் பதின்மூன்ருண்டு இராச்சிய பாரஞ் செய்து, உலகவாழ்வைத் துறந்து சிவபெருமானது திருவடி நிழலை யடைந்தான். அதன் பின்னர் அந்த ஆண்டான கி. பி. 1564-லேயே இவன் குமாரனுன அதிவீரராமன் அரசு கட்டிலேறினுன். இவன் அரசாட்சியின் போதே வரதுங்கராமன் இளவரசனுகி இராச்சியபாரத்தைத் தாங்கலாயினுன். இவனது முன்னேன் குணராமன், யாது காரணம்பற்றியோ, அரசுரிமைக்கு ஆசை கொள்ளாது சுகஜீவியாகக் காலந்தள்ளிவந்தானென்று தோற்றுகிறது.[2] ஆகவே இளவலான அபிராமன், சாலியவாகன சகம் 1509-க்குச் சரியான கலி 4689-இல் பட்டஞ் சூடினுன். இதனை,

> 'நண்புற் றெதிர்ந்தகலி நாலாயிரத் தறுநூற்
> றெண்பத்தொன் வானிவிருங் கடல்சூழ்—மண்பெற்று
> மன்னுமகு டம்புனைந்தான் வேல்வீற மாறனென
> மன்னவர்கோ மானபிரா மன்[3]'

என்ற தென்காசிக் கோயிற் சாசனம் வலியுறுத்தும். இவன் மகுடஞ் சூடும்போது வீரபாண்டியன் என்றும், அபிஷேக வீரபாண்டியன் என்றும், வரதுங்கராமன் என்றும், பல பட்டங்களைச்[4] சூடினுன். (ஆயினும் சகம் 1517 வரையில் அதிவீரராமன் அரசாட்சி நடந்துவந்ததாகத் தெரிகிறது.[5]) தான்

---

1. தென்காசிக் கல்வெட்டு.
2. செந்தமிழ், தொகுதி 4.
3. T. A. S. I. 116.
4. T. A. S. I. 133: சுலோகம் 22,23,
5. T. A. S. I. 126,

அரசு கட்டிலேறின இரண்டாமாண்டான சகம் 1510-லேயே கோவிந்தபட்டன் என்ற ஒருவனுக்குச் சிலாரிப்பட்டி என்ற ஊரைத் தானமாக வழங்கினான். சகம் 1517-இல் இராம கிருஷ்ணப்ப நாயக்கன் வேண்டுகோளுக்கிணங்க, நதிக்குடி என்ற ஊரை அதிவீரராமன் பெயரால் அதிவீரராமபுரம் என்று பேரிட்டுப் பல பிராமணருக்குத் தானம் செய்தான்.[1] இவ்வாறாக இவன் செய்த தான தருமங்கள் அளப்பிலவாகும். இவன் கரிவலம் வந்த நல்லூரில் அதிகப்பற்றுடையவனாக இருந்தான்.

இவனது மனைவியும் நன்கு கற்ற பண்டிதையாவாள். இவள் இவனுக்கு இன்னுயிர்த் துணைவியாக வாய்த்தது இவனது அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும். வரதுங்கராமன் போர் மேற் சென்றிருந்த காலத்திலே அவனுடைய மனைவி கூறியதாகக் காணப்படுஞ் செய்யுள்கள் வருமாறு:

'செப்பாரு முகிழ்முலையா ரெல்லாருங் கணவருடன் சேர்ந்துவாழ
ஒப்பாரு மில்லாவென் கணவனுடன் யான்கூடி யுறவாடாமல்
எப்பாலு மிகுகாமத் துயராலும் நாடோறும் மெலிந்து வாடி
இப்பாடு படவென்றே யிறைவனென் றலையோட்டி லெழுதினானே.

என்னையவ ரமறந்தும் யானவரை மிகநினைந்திங் கிருந்துவாட
முன்னைவினைப் பயன்றானோ வட்பிறப்பிற் செய்ததவ முடிந்தவாறோ
கன்னன்மத னபிராமன் வரதுங்கராமனியற் காசி நாட்டில்
அன்னவயற் குருகினங் காளினி யெவ்வாறுயிர் தரித்திங் காற்றுமாறே.

எண்டிசா முகமுந் திங்களிளநிலா வெள்ளங் காயக்
கொண்டமால் பெருகுந்தோறும் கொழுங்கணீர் முலையிற் கோப்பப்
பண்டுநா மறியாக் காமத்துயரினாற் படுவதெல்லாம்
வண்டுகோ ளுரையீ ருங்கள் வரதுங்க ராமனுக்கே.'

இப்பாக்களை இராக்கினி பாடி 'பணியாரக் குடத்துள் வைத்து மதுரைக்கு' அனுப்பியதாக தமிழ் நாவலர் சரிதை[2] கூறும். தலைவனைப் பிரிந்த தலைவிக்கூற்றாகக் காணப்படுகின்ற இப்பாக்கள் இராஜமாதேவி தன் கணவனிடத்து வைத்த அன்பின் மிகுதியையும் காட்டும்.

இனி இவ்வம்மையார் அதிவீரராமன் இயற்றிய நூலான நைடதத்தைக் குறித்து, அது 'நாய் விரைந்தோடி யிளைத்தாற் போன்ற தன்மையுடைத்து' என்று கூறியதாகக் கர்ணபரம்பரையாக ஒரு செய்தி வழங்கி வருகிறது.

---

1. T. A. S. I. 126.
2. தமிழ் நாவலர் சரிதை பக், 63.

வரதுங்கராமனைப் பல புலவர் கூடியிருந்தனர் என்று அறிகின்றோம். அவனுடைய அவைக்களத் தலைமைப் புலவராக விருந்தவர் காசிக்கலியன் கவிராயன் ஆவர். காசி யென்பது தென் காசியாகும். இப் புலவர்பெருமான் அந்த வரதுங்கராமன் மேல் 'நாண்மங்கலம், குடை மங்கலம், வாண்மங்கலம், என்ற புறத்திணைக் குரிய பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் நாண்மங்கலமாவது, 'அரசன் நாடோறும் தான் மேற்கொள்ளுகின்ற செற்றமாகிய சிறைசெய்தலும், செருச் செய்தலும், கொலைபுரிதலும், ஆகிய வற்றை விடுத்துச் சிறந்த தொழில்களான சிறைவிடுதலும், செரு வொழிதலும், இறைதவிர்தலும், தானஞ் செய்தலும், வேண்டின கொடுத்தலும், பிறவுமாம்.' வரதுங்கராமன்மேற் பாடிய நாண் மங்கலம் வருமாறு:—

'சீர்கொண்ட செங்கமலை வாழத் திரையாடைப்
பார்கொண்ட வாள்வீர பாண்டியனென்—றேர்கொண்ட
கானுலா மாலைக்கனக மகுடம் புனைந்தான்
மானவே லானபிரா மன்.'

குடைமங்கலமாவது, குடையினது பெருமையாம். குடை நிழலைச் செய்தலின் அதனை ஏதுவாகக்கொண்டு குடிபுறங்காத்துக் கோலோச்சுதலாம். இவ்வரசன்மேற் பாடிய குடைமங்கலம் வருமாறு:—

'சேணுலவு வெண்டிங்கட் செல்வனெனத் தண்ணென்று
நீணிலமோ ரேழு நிழற்றுமே—பேணிவந்து
பூவேந்த ரேத்தும் புகழ்வீர பாண்டியனங்
கோவேந்தன் கொற்றக் கொடை.'

இனி வாண்மங்கலமாவது, பகைவரைக் குறித்த வாள்வெற்றி யால் பசிப்பிணி தீர்ந்த பேய்ச்சுற்றமும் பிறரும் வாளினை வாழ்த்து வதேயாம். அது வருமாறு:

'பற்றலர் மண்கொள்ளும் பணிந்தார்க் கரசளிக்குங்
கொற்ற முயர்க்குமறங் கூறுமே—விற்றடந்தோள்
வில்லவனை வென்றுகொண்ட வீரமாறன் செழியன்
வல்லமெறிந் தானேந்து வாள்.'

இவற்றைக் கலியன் கவிராயன் தான் கூறியதாகக் காணப்படுஞ் செய்யுள் வருமாறு:

'கற்றுணர்ந்தோன் காசிக் கலியன் கவிராயன்
மற்றடந்தோள் வேல்வீரமாறனுக்குச்—சொற்புனைந்தான்
நாண்மங்கலமு நவிற்றுகுடை மங்கலமும்
வாண்மங்கலமும் வகுத்து.'

இச்செய்யுள்களெல்லாம் தென்காசிக் கோயிற் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

காசிக் கலியன் கவிராயனையன்றி ஐயம்பெருமாள் சிவந்த கவி ராசன் என்பார் புரூரவ சரிதையைக் காவியமாகச் செய்து இவ ரது அவையிலே அரங்கேற்றினர்.

## செய்த நூல்கள்

வரதுங்கராமன் செய்ததாக நமக்குக் கிடைத்துள்ள நூல்கள் இரண்டேயாம். அவற்றுள் ஒன்று பிரம்மோத்தரகாண்டம் எனப்படும். இது பஞ்சாக்ஷரம், விபூதி, சோமவாரம், பிரதோஷம், இவற்றின் பெருமைகளைக் கூறுவது. இந்த நூல் பாயிர முள்பட இருபத்திரண்டு அத்தியாயங்களும், 1310 திருவிருத் தங்களுமுடையது.

கருங்குதிரைப் பெருங்கடல் சூழவனிபுரந்
திகல்கடந்து கலியைமாற்றி
மறந்திகழ விலங்கிலைவேல் வரதுங்க
ராமனியன் மதுரைச் சங்கஞ்
சிறந்தவறு காற்பீடந்தனிற் பிரமோத்
திரகாண்டம் தென்சொலாக்கி
அறந்தழைக்குங் கவிஞர்செவிக் காரமுத
மாகவரங் கேற்றினனே.

என்பதனாலே இவரே இந்நூலைச் செய்தாரென்பது உறுதிபெறும்.

இவர் இயற்றிய மற்றொருநூல் கோக்கோகம் என்பது. இது வடமொழியிலுள்ள கொக்கோக நூலைக் கடைபிடித்துத் தமிழிலே மொழிபெயர்க்கப்பட்ட நூல். இதனுள் பெண்களின் இயல்பும் மதன சாஸ்திரத்துக்குரிய பிறவும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. இதுபொழுது இந்நூல் கிடைப்பதருமை.

திருக்கருவைவெண்பாவந்தாதி முதலியன இவர் இயற்றிய னவாகச் சொல்வாருமுண்டு. ஆனால் அவை அதிவீரராம பாண் டியனால் இயற்றப்பட்டவையேயாகும்.

---

# சாஸ்திரம்

## விஞ்ஞானமும் அதன் அவசியமும்

எஸ். முத்து ஐயங்கார்

---

விஞ்ஞானமென்றால் என்ன? "முறைப்படுத்தப்பட்ட பொதுவிஷய அறிவே விஞ்ஞானம்" என்பர் ஹக்ஸ்லி என்ற பேராசிரியர். "இயற்கையின் உண்மைகளையும், இயற்கையின் விதிகளையும் பற்றி யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டும், முறைப் படுத்தப்பட்டுமுள்ள, மனித சமூகம் தேடிய, விஷயமே விஞ்ஞா னம்; அது முறைப்படுத்தப்பட்டிருப்பதால் உண்மைகளை மேன் மேலும் கண்டு பிடிக்கவும், வாழ்க்கைச் சாதனங்களை அமைக்கவும் பயன்படுவது" என்று கூறும் வெப்ஸ்டரின் அகராதி. சுருங்கச் சொன்னால், நமது புலன்களைக்கொண்டு அறியப்படும் பொருள் களையும் நிகழ்ச்சிகளையும் பற்றிய செய்திகளே விஞ்ஞானம். நாம் அறிந்துள்ள எல்லா விஷயங்களும் விஞ்ஞானம் என்பதில் ஒரு வாறு அடங்கும் என்னலாம். இதுவே விஞ்ஞானம் என்ற மொழிக் குப் பரந்த பொருள். நாளடைவில் நமது உலகியலறிவு பல துறை களிலும் பெருகி வந்திருக்கிறது. எல்லா விஷயங்களையும் விஞ்ஞா னம் என்ற ஒரே தலைப்பின்கீழ்க் கற்பது அரிதாகவிருக்கிறது. அதனாலேயே விஞ்ஞானத்தைப் பல துறைப்படுத்தியுள்ளனர். இவற்றில் யாதானும் ஒரு துறையில் இறங்கிக் கரைகாண்பதற்கே நம் வாழ்நாள் போதாது. கணிதம், ரஸாயனம், பௌதிகம், வானநூல், பூமிநூல், பிராணிநூல், தாவரநூல், மனநூல், சமூகநூல், முதலியன விஞ்ஞானத்தின் பல துறைகளாகும்.

ஆயினும் நாம் அறிந்துள்ள எல்லா விஷயங்களையும் விஞ்ஞா னம் என்று சொல்லுவதில்லை. புராணங்களையும், கதைகளை யும், நவீனங்களையும் (நாவல்களையும்), விஞ்ஞானத்துடன் சேர்ப் பதில்லை. ஏனெனில், விஞ்ஞானத்தில் சேர்க்கப்படவேண்டிய விஷ யங்களுக்குச் சில தனிக்குணங்களுண்டு. கவனமாகப் பார்த்தும், சோதனை செய்தும், அமைதியுடன் ஆலோசித்தும் தெரிந்து

கொள்ளப்படும் விஷயங்களே விஞ்ஞானம். விஞ்ஞான சாஸ்திரம் கூறும் விஷயங்களின் உண்மைகளைச் சோதனைகள் செய்து காட்டக் கூடும். மற்றைய அவ்வாறில்லை. சமூகக்கொள்கைகளும், நம்பிக்கைகளும் நிரூபித்துக் காட்டமுடியாத விஷயங்கள். மாரியம்மன் விளையாட்டால் பெரியம்மை வார்க்கிறது என்கிறோம். இந்த நம்பிக்கையைச் சோதனை செய்து காட்டமுடியாது. பிள்ளையில்லாதவன் நரகம் போவான் என்றுகூட நம்புகிறோம். இதுவும் அவ்வாறே. இவைபோன்ற கொள்கைகளை யாவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஒளிக்கிரணம் விநாடிக்கு லட்சத்து எண்பத்தாறுயிரம் மைல் வீத வேகத்துடன் செல்கிறது என்பதைச் சோதனைகளால் நிரூபிக்கலாம். 'யாதானுமொரு பொருள் ஒரு திரவத்தில் மூழ்கினால் எடை குறைந்து காட்டும்; அக்குறைவு அப்பொருள் வெளியேற்றும் திரவத்தின் எடைக்குச் சமம்' என்ற ஆர்க்கிமிடீசின் தத்துவம் என்றும் பொய்யானதில்லை. இம்மாதிரி விஷயங்களே விஞ்ஞானம்.

மற்றொரு குணம். விஞ்ஞானத்தை யாரும் கற்கலாம். மத சம்பந்தமான சில நூல்களைப்போல ஆண் கற்கலாம் பெண் கற்கப்படாது, இச்சாதியான் கேட்கலாம் அச்சாதியான் கேட்கலாகாது, என்ற கட்டுப்பாடில்லை. விஞ்ஞானம் மக்கட்கெல்லாம் பொதுவானது. விஞ்ஞான விஷயங்களை அறிந்துகொள்ளப் பொது அறிவே வேண்டும். ஒரு விஞ்ஞான நூலை இயற்றிய சமூகத்தாரின் கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் நாம் அறியவேண்டியதில்லை. மதநூல்களும், இலக்கிய நூல்களும் அவ்வாறில்லை. சங்கீதம், சிற்பம், முதலிய கலைகளும் கூட அவ்வாறில்லை. நமக்குச் சிறந்ததாகத் தோன்றும் ஒரு சிற்பம் மேனாட்டாருக்குப் பிடிக்காமலிருக்கலாம். அவர்களுடைய பாட்டு நமக்குக் கூப்பாடாக விருக்கலாம். ஆனால் விஞ்ஞான உண்மையொன்றைக் கண்டுபிடித்தவன், அல்லது விஞ்ஞான அறிவைக்கொண்டு ஒரு சாதனத்தை நிர்மாணித்தவன் யாராயினும், உலகம் முற்றிலும் அவன் பெருமையை விரைவில் அறியும்; அவனைப்புகழும்.

விஞ்ஞான நூல்கள் கூறும் 'விதி' களைப்பற்றி ஒரு தவறான எண்ணம் நமக்கு உண்டு. இயற்கையிலுள்ள பொருள்களும் நிகழ்ச்சிகளும் விஞ்ஞான விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று நாம் நினைக்கிறோம். உண்மை அவ்வாறில்லை. இயற்கையைக் கவனித்து அதன் ஒழுங்கையே விஞ்ஞானிகள் வருணித்துள்ளனர். அவ்வருணனைகளே விஞ்ஞான 'விதிகள்'. உதாரணமாக, நியூடனுடைய சலனவிதி யொன்றை எடுத்துக்கொள்ளு

வோம். 'ஒரு விசையினுல் வலிக்கப்படாதவரை அசையாது நிற்கும் பொருள் அசையாது; சலித்துக்கொண்டிருக்கும் பொருள் ஒரேவித வேகத்துடன் சென்று கொண்டிருக்கும்' என்ற இயற்கையின் நடப்பை நியூடன் கண்டறிந்து கூறினுர். இதற்கு மாறுபாடாக எப்பொருளும் நடக்கக்காணும். இவ்விதிக்கு மாறுபட்டு நடக்கக் கூடாதென்று இயற்கைப்பொருள்களுக்கு நியூடன் விதி செய்யவில்லை. 'இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம்' சொல்லியுள்ளார். விஞ்ஞான விதிகளுக்கு மாறுபாடு காணப்பட்டால் அவற்றை மாற்றிக்கொள்ள விஞ்ஞானிகள் எப்பொழுதும் தயார்.

விஞ்ஞானசாஸ்திர வளர்ச்சியில் மூன்று படிகளுண்டு. முதலாவது, பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் பற்றிய விபரங்களைச் சேகரித்தல். இரண்டாவது, இவற்றுள் காணப்படும் ஒழுங்குகளையும் வேற்றுமைகளையும் வருணித்தல்; இவைகளே விதிகள், தத்துவங்கள், பொதுவிதிகள் என்பன. மூன்ருவது, இவ்வாறு ஒழுங்குகளும் வேற்றுமைகளும் இருப்பதற்குக் காரணங் கூறல்; இதன் பயனுகச் சித்தாந்தங்கள் பெறப்படும். விஞ்ஞான சாஸ்திரத்தில் எந்தத் துறையிலும் இம்மூன்று படிகளையும் காணலாம். பௌதிக நூலின் ஒரு பகுதியாகிய ஒளிநூலை எடுத்துக்கொள்வோம். முதன் முதலில் ஒளிக்கிரணங்கள் கண்ணுடிகளில் பிரதிபலிக்கும்பொழுது நிகழும் விவரங்களும், ஒரு சாதனத்தினின்று மற்ருென்றுக்குள் செல்லும்பொழுது நிகழும் விவரங்களும், சேகரிக்கப்பட்டன. பிறகு இவற்றையெல்லாம் பிரதிபலவிதிகள் இரண்டிலும் (*Laws of Reflection*), ஒளிவக்ரவிதிகள் இரண்டிலும் (*Laws of Refraction*), விஞ்ஞானிகள் அடக்கினர். நாளடைவில் இவ்விதிகளுக்குக் காரணம் கூறப் புகுந்த விஞ்ஞானிகள் பல சித்தாந்தங்களைத் தோற்றுவித்தனர். முதன் முதலில் விஞ்ஞானிகள் நம்பியது 'ஒளிஅணுச்சித்தாந்தம்' என்பது. சமீப காலத்தில் கண்டறியப்பட்ட பல விவரங்களுக்குக் காரணங்கூற இச்சித்தாந்தத்தால் இயலவில்லை. ஆகையால் 'ஒளியின் அலைச் சித்தாந்தம்' தோன்றிற்று. 'மின் - காந்த சித்தாந்தம்' முதலிய சிலவும் இருக்கின்றன. ஒளிசாஸ்திர வளர்ச்சியில் மேற்கூறிய மூன்று படிகளையும் நாம் பார்க்கலாம். மேலும், சித்தாந்தங்கள் நாளடைவில் மாறுபடக்கூடும் என்பதையும், சித்தாந்தங்களை மாற்றிக் கொள்ள விஞ்ஞானிகள் தயார் என்பதையும் அறியலாம்.

விஞ்ஞானம் என்பது உண்மைகளை அறியும் ஒரு முறையுமாகும். நமக்குப் பலவிஷயங்களில் ஐயம் தோன்றுகிறது; உண்மையைக் கண்டுபிடிக்க விரும்புகிறோம், அல்லது ஒரு தீர்மானத்

திற்கு வர எண்ணுகிறேம். இவ்வகை ஆராய்ச்சிகளுக்கு விஞ்ஞானிகள் ஒரு சிறந்த முறையைக் கையாண்டு வருகின்றனர். அதை 'விஞ்ஞானமுறை' என்னலாம். எவ்விஷயத்தின் உண்மை, அல்லது காரணம், விளங்கவில்லையோ, அதன் சம்பந்தமான விவரங்களையெல்லாம் சேகரித்தல்—அவற்றை ஒழுங்குபடுத்தி ஒரு காரணத்தை யூகித்தல்—இந்த யூகம், சேகரித்த விவரங்களுக்கு மாறுபாடின்றி இருக்கிறதா வென்று ஆராய்தல்—மாறுபாடிருந்தால் யூகத்தைச் சிறிது மாற்றியமைத்தல்—பிறகு யூகத்தினின்று பெறப்படும் அநுமிதங்களை மேலும் சோதனை செய்து உறுதிப்படுத்தல்—இவையே இம்முறையின் முக்கியமான படிகள்.

இம்முறையைக் கூர்ந்து நோக்கினல் கண்கூடான விஷயங்களைக்கொண்டே ஐயந்தீர்க்கவேண்டும் என்பது நன்கு விளங்கும். எக்காலத்திலும் இம்முறையை மக்கள் கையாண்டு வந்திருக்கிறார்கள். ஆயினும், விஞ்ஞானிகள் இம்முறையை விசேடமாக உபயோகிப்பது சமீப காலந்தொட்டுத்தான். எதைக்கேட்டாலும் புத்தகத்தைப் புரட்டுவர் சிலர்; 'அந்தப் பேராசிரியர் அப்படிக் கூறியுள்ளார், அதனால் இது பொய்' என்று கண்கூடாகக் கண்டதைக்கூட மறுப்பர் சிலர். சிறுத்த பொருளொன்றையும் பருத்த பொருளொன்றையும் பைசா நகரக் கோபுரத்தினின்று ஒரே காலத்தில் கீழே விட்டார் கலிலியோ. அவை ஒரே சமயத்தில் கீழே விழுந்தன. இதைப் பார்த்த சிலர் தம் கண்களை நம்பவில்லை. அதிகக் கனமுள்ள பொருள் கனக்குறைவுள்ள பொருளைவிட வேகமாகக் கீழே விழும் என்று அரிஸ்டாடில் சொல்லியுள்ளதால் கலிலியோ செய்த சோதனையைப் பார்த்த சிலர், அதை மந்திரவாதமென்று நினைத்தனர்! புத்தகங்கள் அவசியமில்லை என்று சொல்லவில்லை; அவை அவசியந்தான்; எல்லாவற்றையும் நாமே கண்டுபிடித்து அறிந்துகொள்ள இயலாது. ஆனல் புத்தகங்களில் கூறியுள்ளவையெல்லாம் உண்மைகள் என்று சிறிதும் விசாரணையில்லாமல் நம்பலாகாது. ஒரு கதை: சில நூற்றுண்டுகளுக்குமுன் ஸ்காத்லாந்தில் மிகவும் படித்த புலமையுடையோர் ஒரு கூட்டம் கூடினர். அங்கு குதிரைக்கு எத்தனை பற்கள் என்ற கேள்வி எழுந்தது. ஒருவருக்கும் தெரியவில்லை. அந்தப் புத்தகத்தைப் பார்க்கலாமா, இந்தப் புத்தகத்தைப் பார்க்கலாமா என்று ஆலோசித்தனர். அரிஸ்டாடில் எழுதிய நூலைப் பார்க்கத் தீர்மானித்தனர். அப்பொழுது அக்கூட்டத்திலிருந்த ஒருவர் (புரட்சிக்காரர் போலும்!) "ஒரு குதிரையின் வாயைத் திறந்து பற்களை எண்ணிப் பார்த்தால் நிச்சயமாகத் தெரிந்து கொள்ளலாம்" என்று கூறினர். அங்கு குழுமியிருந்த புலவோர் பலரும் பதைபதைத்தனர். "அடடா!

அரிஸ்டாடிலைத் துரும்பெனத் தள்ளிவிட்டனரே இவர்" என்று கோபித்து அவரைத் தங்கள் கூட்டத்தைவிட்டுத் துரத்திவிட்டனர்! இம்மாதிரியான புத்தகப் புழுக்களுக்கு விஞ்ஞானம் இடங் கொடாது.

விஞ்ஞானம் கற்ற ஒருவன் எதையும் உடனே நம்பிவிடமாட்டான். ஜாக்கிரதையுடன் ஆராய்ந்தே ஒரு விஷயத்தைக் கொள்ளுவான். புத்தகம் கூறுவது சரியான முறையில் நிச்சயிக்கப்பட்டது தானு என்று ஆராய்ந்தே ஏற்பான்.

விஞ்ஞானம் என்ருல் என்னவென்று பார்த்தோம். விஞ்ஞானத்தால் மக்கட்கேற்பட்ட பயன்கள் யாவை? அதை மாணவர் கற்பது அவசியந்தானு? முக்கியமாக நம் நாட்டிற்கு என்ன பயன் விளையும்? என்ற கேள்விகள் அடுத்தாற்போல் எழுகின்றன.

விஞ்ஞானம் அதைக் கற்போரை ஜாக்கிரதையுள்ளவராகவும் ஒழுங்குள்ளவராகவும் செய்கிறதென்பர். விஞ்ஞானம் கற்கச் சோதனைகள் அவசியம்; அவைகளை ஜாக்கிரதையாகவும் ஒழுங்காகவும் செய்தல்வேண்டும். ஆகவே, பொதுவாக இவ்வழக்கம் விஞ்ஞானங் கற்போருக்குப் படியும் என்பர். ஆனுல் இப்பயன் நிச்சயமாக உண்டாகும் என்று கூற முடியாது. விஞ்ஞானம் கற்பதில் ஜாக்கிரதையாகவும் ஒழுங்காகவுமுள்ள ஒருவன் வாழ்க்கையிலும் அவ்வாறிருப்பன் என்று கூற முடியாது.

விஞ்ஞானத்தைத் தக்க முறைப்படி வெகுகாலம் கற்ருல் விஞ்ஞானமுறையில் பயிற்சி உண்டாகும். இப்பயன் எளிதில் ஏற்படாது; கற்போன் பலமுறை தானே சோதனைகள் செய்யவேண்டும்; காரணம் தெரியாதவற்றிற்குக் காரணம் கண்டறிதலிலும், ஐயப்பாடுள்ள 'கவர்த்த வழி' நிலையில் ஐயந்தீர்த்து நிச்சயித்தலிலும் பல ஆராய்ச்சிகளைச் செய்யவேண்டும்.

விஞ்ஞானம் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடியது. விஞ்ஞானத்தின் உதவியால் கணக்கற்ற வாழ்க்கைச்சாதனங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளோம். ஆதலின் விஞ்ஞானம் படித்தோன் இச்சாதனங்களின் உபயோகங்களையும், உபயோகிக்கும் முறையையும் காரணங்களுடன் அறியலாம்.

இயற்கை நிகழ்ச்சிகளைப் பொருள்படக் கோர்க்கிறது விஞ்ஞானம். அற்பமாகத் தோன்றும் பொருள்களிலும் நிகழ்ச்சிகளிலும் உயர்வைக் காணச் செய்கிறது. வாழ்க்கையின் நோக்கம் உயருகிறது. நம்முடைய எளிமையும், உலகை ஆக்கியோன் பெருமையும், விஞ்ஞானம் கற்போருக்கு எளிதில் புலனும்.

ஒரு விஞ்ஞானி கேள்வியுற்ற எதையும் உடனே நம்பமாட்டான்; அதற்கு வேண்டிய விவரங்களைத் திரட்டி அவற்றை வகுத்துத் தொகுத்த பிறகே ஒரு தீர்மானத்திற்கு வருவான். அப்பொழுதுதான் உண்மையை விரும்புதலும், கோணுத உள்ளமும், ஒரு விஞ்ஞானிக்கு ஏற்படும். நன்னடக்கைக் குரிய பண்புகளையும் விஞ்ஞானம் வளர்க்கிறதென்னலாம்.

இக்காலத்தில் முன்னணியில் நிற்கும் நாடுகள் விஞ்ஞான சாஸ்திரப் பயிற்சியில் மேம்பட்டவை. நம் நாடு முன்னேற்ற மடைய விஞ்ஞானமும் ஒரு கருவியாகும். யாவருக்கும் ஓரளவு விஞ்ஞானம் தெரிந்திருக்கவேண்டும். பள்ளிக்கூடங்களில் கீழ் வகுப்புகளிலிருந்தே விஞ்ஞானத்தைப் போதிக்கவேண்டும். பத்திரிகைகளிலும் எளியநடையில் யாவரும் அறியும்படி விஞ்ஞான விஷயங்களை வெளியிடல்வேண்டும்.

'விஞ்ஞானத்தைச் சிறுவர்கள் அறிந்துகொள்ள முடியாது, அதனுல் இதைக் கீழ் வகுப்புக்களில் பாடமாக வைக்கக் கூடாது' என்று சிலர் கூறுவர். இது சரியன்று. இயற்கைப்பொருள்களின் குணங்களை ஒழுங்குபடத் தொகுத்துக் கூறுவதே விஞ்ஞான நூலாகும். சிறுவர்களும் தம் புலன்கள் வழியே அறியும் விஷயங்களைப் படிப்படியாக வகைப்படுத்தியும் தொகுத்தும் உலகைத் தெரிந்துகொள்ளுகின்றனர். ஆதலால் விஞ்ஞானத்தின் எளிய பாகங்கள் அவர்களுக்கு நன்மையையே விளைக்கும். முறைமட்டும் சிறந்திருக்கவேண்டும். 'புத்தகத்திலிருக்கிறது விஞ்ஞானம்' என்று மட்டும் அவர்கள் எண்ணிவிடக்கூடாது. தம்மைச் சூழ்ந்துள்ள பிராணிகளும், தாவரங்களும், மற்ற பொருள்களும் விஞ்ஞானத்திற்கு விஷயங்கள் என்று அவர்கள் நன்ருக உணரவேண்டும். வானத்திலுள்ள மீன்களும், கோள்களும் அவர்களுக்குக் களிப்பைக் கொடுக்கவேண்டும். ஓடியாடித் திரிந்தே அவர்கள் விஞ்ஞானம் கற்றுக்கொள்ளவேண்டும். நோக்கியும், கேட்டும், முகர்ந்தும், சுவைத்தும், உற்றுமே அவர்கள் விஞ்ஞானத்தை உணரவேண்டும்.

# உயரப் பறத்தல்

பே. நா. அப்புஸ்வாமி அய்யர், பி. ஏ., பி. எல்.

'உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமோ?' என்பது பழமொழி. 'ஆகாது' என்பது சாமானிய ஜனங்கள் சொல்லும் பதில். வழக்குப் பேசுகிறவர்கள் வேறு விதமாக பதில் சொல்லுவார்கள். 'பருந்து பறக்கும் உயரத்திலே குருவி எப்படிப் பறக்கும்? அது பறந்தால் அல்லவோ இந்தக் கேள்வி கேட்கலாம். மிகவும் உயரப் பறப்பதற்கு வேண்டிய உடல் கட்டுக்கோப்பும், சிறகு வலிமையும் அதற்கு இல்லேயே. ஆகையால் அது பறக்காது. அதனல் பருந்தும் ஆகாது' என்று காரணத்துடன் பதில் சொல்லுவார்கள். வழக்கின் முடிவு சரியானுலும் படிகள் அவ்வளவு சரியில்லே. ஏனெனில், சிறகே அற்ற மனிதர்கள்—பறப்பதற்கு வேண்டிய அமிசங்கள் யாதொன்றும் இல்லாத மனிதர்கள்—நிமிர்ந்து நிற்கும் மனிதர்கள்—பருந்தை முழுக்க முழுக்கத் தோற்கடித்து விட்டார்கள். பருந்தே பறந்தறியாத, பருந்தினல் எவ்வளவு முயன்றும் பறக்கமுடியாத, மிகவும் உன்னதமான பிரதேசம்வரை அவர்கள் பறந்து போயிருக்கிருர்கள். வெறும் சிறகுகளால் அல்ல, உடலோடு ஒட்டிய உறுப்புக்களால் அல்ல, தாமாக இயற்றி அமைத்துக் கொண்ட சிறந்த கருவிகளின் துணையை வைத்துக்கொண்டு அவர்கள் வெகு உயரம் ஏறிவிட்டார்கள். இன்னும் மேன்மேலும் உயரத்தில் ஏற முயன்றுவருகிருர்கள்.*

---

*அவர்கள் செய்த பிரயத்தினங்களின் சரிதம் வருமாறு:—

1931-ஆம் வருஷம் வரையில் மனிதன் எவ்வளவோ முயன்றும் எட்டு மைல் உயரத்துக்கு மேல் அவனல் ஏற முடியவில்லே. அந்த வருஷம் மே மாதம் 27-ஆம் தேதியன்று, (பெல்ஜியம் தேசத்திலே பிரஸ்ஸல்ஸ் சர்வகலா சாலேயைச்சேர்ந்த) புரொபஸர் ஆகஸ்ட் பிக்கார்ட் என்பவரும், கிப்வெர் என்பவருமாக (ஜெர்மனி தேசத்தைச் சேர்ந்த பவேரிய மாகாணத்திலே உள்ள) ஆக்ஸ்பெர்க் என்னும் நகரத்திலிருந்து பலூனில் உயரக் கிளம்பினர்கள். அந்தப் பலூனனது ஒன்பதரை மைல் உயரத்துக்கு மேல் ஏறிற்று.

சாதாரணமாக ஆகாயவிமானத்தில் ஏறிப் போவதுபோலத் திறந்த இடத்திலே உட்கார்ந்துகொண்டு இவ்வளவு உயாம் ஏறிப் பிழைக்க முடியாது. உயர ஏற ஏறத் தாங்கமுடியாத அளவிலே குளிர் மிகுந்திருக்கும். அக் குளி

ஏன் இப்படி எல்லாம் செய்கிறார்கள்? ஒரு மைல் பறந்தாலென்ன? ஒன்பது மைல் பறந்தாலென்ன? அதற்கும் மேல் பறந்தால்தான் என்ன? நாம் வாழ்வதற்குப் பூமி போதாதா? ஆகாயத்திலே கோட்டையா கட்டிக்கொண்டு வாழப்போகிறோம்? காசையும் செலவழித்து உயிரையும் பறிகொடுத்து இவ்வளவு உயரம், 'நான் உயர', 'நான் உயர' என்று பறக்காமல் இருந்தால் என்ன? இது வீண் சாகசம் தானே? கிறுக்குப் பிடித்தால் அல்லாது, சுயபுத்தி உள்ளவர்கள் யாராவது, இப்படிச் செய்வார்களா? என்று பலர் சொல்லக் கேட்கிறோம்.

இது சாகசம் என்பது வாஸ்தவம்தான். ஆனால் வீண் சாகசமும் அல்ல, கிறுக்கும் அல்ல. மிருகப் பிராயமாயிருந்த மனிதன் படிப்படியாக அறிவு முதிர்ந்து மேன்மை அடைந்து இப்போது சிறப்பான நாகரிக வாழ்க்கை புரிவதற்கு இவ்வகையான சாகசங்கள்தான் காரணம். தீரர்கள் துணிந்து அரும்செயல்களை இயற்றி உயிரைக் கொடுத்தாயினும் அறிவைப் பெருக்கிவந்ததால் நாம் மேன்மையுற்றிருக்கிறோம்; உயிர் நிலைத்திருக்கிறோம்.

நம்மைச் சுற்றி எல்லாப் பக்கங்களிலும் விரிந்து அகன்று கிடக்கும் வானவெளியிலிருந்து ஒருவகைக் கிரணங்கள் நம்மை வந்து கிட்டுகின்றன. ரேடியத்திலிருந்து உண்டாகும் கிரணங்களையும், எக்ஸ் - ரே என்னும் கிரணங்களையும் காட்டிலும் ஆயிரக்கணக்கான மடங்கு சக்திமிக்கனவாக இவை இருக்கின்றன. ரேடியத்

---

ரால் கண்விழிகூட உறைந்து போகும். அவ்விடத்திலே வெளி அழுத்தமும் மிகவும் குறைவாக இருக்கும். உடல் அழுத்தம் மிகுந்தும் வெளி அழுத்தம் குறைந்தும் இருப்பதால் மூச்சுவிடுவது கஷ்டமாகிவிடும்; காதிலிருந்து இரத்தம் பொசியும். அதனால் உயிருக்கே அபாயம் வந்துவிடும். இவற்றையெல்லாம் அறிந்த அந்த விஞ்ஞானிகள் ஏற்ற பரிகாரங்களைத் தேடி அமைத்துக்கொண்டார்கள். நல்ல கனத்த அலுமினியத் தகட்டினால் பெரிய உருண்டை ஒன்று செய்தார்கள். உயர்ந்த இடத்திலே உண்டாகக்கூடிய அழுத்தத்தைத் தாங்க வல்லதாக அது இருந்தது. அதற்குள்ளே காற்றே புகமுடியாதபடி கட்டிக் கதவுகளை அமைத்துக்கொண்டார்கள். உருண்டைக்குள்ளே உடலைக் காப்பாற்றுவதற்கான சூடும், சுவாசிப்பதற்கான காற்றும் இருக்கும்படி செய்துகொண்டார்கள். அந்த அலுமினிய உருண்டையைப் பலூனோடு சேர்த்துப் பிணைத்தார்கள். அதற்குள்ளே தாங்கள் இருவரும் ஏறி உட்கார்ந்துகொண்டு, கதவுகளை இறுகமூடி உயரக் கிளம்பினார்கள். அதற்குமுன் மனிதன் ஏறி அறியாத உயரம்வரை ஏறி, உயிரோடு திரும்பிவந்து சேர்ந்தார்கள்.

மறுவருஷம், அதாவது 1932-ஆம் வருஷம், ஆகஸ்ட் மாதம் 17-ஆம் தேதியில் புரொபஸர் பிக்கார்ட் மறுபடியும் உயர ஏறினார். அவருக்குத் துணையாக கோஸின்ஸ் என்பவர் ஒருவர் கூடச் சென்றார். ஸ்விட்ஸெர்லாந்து தேசத்

திலிருந்து உண்டாகும் சக்திமிக்க கிரணங்களைத் தடுப்பதற்கு இரண்டு அங்குல கனமுள்ள ஈயத் தகடு போதும். ஆனால் இக் கிரணங்களோ பதினெட்டு அடி கனமுள்ள ஈயத்தகடுகளையும் எளிதில் ஊடுருவி அப்புறம் செல்லுகின்றன.

இக்கிரணங்கள் மலைமேலும் உள; மண்கீழும் உள; வானிலும் உள; காற்றிலும், நீரிலும் உள. இவை காணப்படாத இடமே இல்லை.

இன்னொரு விசித்திரம். இவை ஏதோ ஒரு திக்கிலிருந்து மற்றொரு திக்கை நோக்கி வருவனவாகக் காணப்படவில்லை. எல்லாத் திசைகளிலிருந்தும் ஒரேசமயத்தில் இவை வருகின்றன; வந்துகொண்டே யிருக்கின்றன. இவற்றைப்பற்றி இன்னும் முழுதும் தெரிந்தபாடில்லை.

இவற்றின் தன்மைகளுள் சிற்சிலவே அறியப்பட்டிருக்கின்றன. அணுக்களைத் தகர்க்கும் மாயசக்தி இக்கிரணங்களிலேதான் இருக்கின்றது என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள்.

இவற்றுக்குப் பிரபஞ்ச-ரச்மிகள் என்று பொருள்படும் காஸ்மிக் - ரே என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

இவற்றை ஆராய்வதுதான் உயரப் பறப்பதன் முக்கிய நோக்கம்.

---

திலே உள்ள துபென்தோர்ப் விமானசாலையிலிருந்து அவர்கள் பலூனில் புறப்பட்டார்கள். அந்தப் பலூன் பத்தேஅரைக்கால் மைல் உயரம் ஏறிற்று.

அதற்கு மறுவருஷத்திலே, அதாவது 1933-ஆம் வருஷம், ஸெப்டெம்பர் மாதம் 30-ஆம் தேதியிலே ருஷியாவில் 'யு. எஸ். எஸ். ஆர்' என்னும் பலூனது இதைக் காட்டிலும் உயர ஏறி, பதினொன்றே முக்காலே அரைக்கால் மைல்வரை போய்விட்டுப் பத்திரமாகக் கீழே இறங்கிவந்தது.

அடுத்த வருஷத்திலே, அதாவது 1934-ஆம் வருஷம், ஜனவரி மாதத்திலே ருஷியாவில் 'ஒஸோவியாகிம்' (லுப்தகன்) என்னும் பலூன் ஒன்று கிளம்பிக் கிட்டத்தட்டப் பதினான்கு மைல் உயரம் வரை எட்டிற்று. ஆனால் கீழேவிழுந்து உடைந்து தகர்ந்து போயிற்று. அதில் ஏறிப்போன மூன்று பேர்களும் மரணம் அடைந்தார்கள்.

அமெரிக்காவிலும் பலூன் ஏற்ற முயற்சிகள் நடந்துகொண்டு வந்தன. 1934-ஆம் வருஷத்தில், ஜூலை மாதம் 27-ஆம் தேதியன்று கெப்னெர் என்பவரை மாலுமியாகக் கொண்டு ஒரு பலூன் உயரக் கிளம்பிற்று. அதில் ஏறிச்சென்றவர்கள் பாரசூட் என்னும்குடைபோன்ற கருவியைத் துணையாகக் கொண்டு உயிரிழக்காமல் பத்திரமாய்த் தரைவந்து சேர்ந்தனர்.

அதே வருஷத்தில், அக்டோபர் மாதம் 22-ஆம் தேதியன்று, புரொபஸர் ஜீன் பிக்கார்ட் என்பவர் பலூனில் ஏறினர். இவர் மேற்கூறிய ஆகஸ்ட்

இதைத்தவிர இன்னொரு நோக்கமும் உண்டு. முன்காலத்தில் தரைமேல் நடந்து சென்ற மனிதன், ரயிலையும் மோட்டார்காரையும் வைத்துக்கொண்டு மிகவும் வேகமாகப் போகத்தொடங்கினான். பிறகு இந்த வேகமும் போதவில்லை. அதனால் ஆகாயத்தில் ஏறிப் பறந்தான். இப்பொழுது அவன் சென்றுவரும் ஆகாய மார்க்கமானது சில விஷயங்களில் மிகவும் சௌகரியமானது. அவனுக்கு இப்பொழுது ஆற்றைக் கடக்கப் பாலம் வேண்டியதில்லை; மலையைக் கடக்கக் கணவாய் வேண்டியதில்லை; பாதையும் தண்டவாளங்களும் வேண்டியதில்லை. ஆனால் இந்த மார்க்கமானது எத்தனையோ வகைகளில் அபாயகரமாகவும் இருக்கிறது. பனியும், மூடுபனியும், மேகங்களும் இவ்வழியிலே நெருங்கி அவனுக்குக் கண்தெரியாமல் வழிமறைக்கின்றன. மின்னலும் புயல்காற்றும் எதிர்பாராதபடி தோன்றி அவனுக்குப் போராபத்தை விளைவிக்கின்றன. அவன் போகும் வழிநெடுகப் பரந்து கிடக்கும் காற்றை எதிர்த்துத் தள்ளிக்கொண்டே போகவேண்டியிருக்கிறது.

இதனால் இப்பொழுது பறக்கும் உயரத்தைக் காட்டிலும் அதிக உயரத்தில் ஏறிப் பறந்தால் நல்லது என்று சில விஞ்ஞானிகள் எண்ணினார்கள். புயற்காற்றும், மழையும், பனியும், மேக

---

பிக்கார்ட்டின் சகோதரர். அவரோடு இரட்டைப் பிள்ளையாக உடன் பிறந்தவர். இவருடன் இவர் மனைவியும் ஏறிச் சென்றாள். இவர்கள் டிட்ராய்ட் நகரத்திலிருந்து புறப்பட்டார்கள். இந்நகரம் மிசிகான் மாகாணத்தில் உள்ளது. இவர்கள் ஏறிய பலூன் பத்துமைல் உயரம் ஏறிற்று. இதைக் காற்று தள்ளிக்கொண்டு போய்விட்டது. அதனால் இவர்கள் ஏறிய இடத்திலிருந்து இருநூறு மைல்களுக்கு அப்பால் உள்ள காடிஸ் நகரத்திலேபோய் இறங்கவேண்டியதாயிற்று. இந்நகரம் ஒகியோ மாகாணத்தைச் சேர்ந்தது. முதன்முதலில் பலூனில் இவ்வளவு உயரம்வரை ஏறிப் பறந்த கௌரவம் ஜீனெட் பிக்கார்ட் அம்மாளுக்கே உரியது.

இதற்கடுத்த வருஷம், அதாவது 1935-ஆம் வருஷம், ஜூன் மாதம் 26-ஆம் தேதியன்று ருஷியாவிலுள்ள மாஸ்கோ நகரத்தின் விமானசாலையிலிருந்து ஒரு பலூன் புறப்பட்டுப் பத்துமைல் உயரம்வரை ஏறிப் பத்திரமாகத் தரைவந்து சேர்ந்தது. இதிலே உள்ள விசேஷம் ஒன்று கவனிக்கத்தக்கது. இது மிகவும் உயரத்திலே மிதக்கும்போது இதற்கு ஏதாவது அபாயம் நேரிட்டால், அப்பொழுது இந்தப் பலூனையே மிகப் பெரிய பாரசூட்டாகச் செய்துகொண்டு இதிலுள்ளவர்கள் உயிருடன் கீழேவந்து சேரும்படி இதைக் கட்டியிருந்தார்கள்.

சென்ற வருஷத்தில் மிகப்பெரிய பலூன் ஒன்றைப் பறக்க விடவேண்டுமென்று அமெரிக்காவிலே முயன்றார்கள். பெரிதாகப் பலூன் கட்டினார்கள். அதற்கு 'இரண்டாவது எக்ஸ்ப்லோரர்' என்று பெயரிட்டார்கள். அதை

மும், மின்னலும் அங்கே கிடையா. ஆதலால் அந்தவழி மிகவும் சௌகர்யமான வழி என்று அவர்களுக்குத் தோன்றிற்று. ஆதலின் அவர்கள் அந்த வழியிலே 'என்ன என்ன சௌகரியங்கள் இருக்கின்றன?', 'என்ன என்ன அசௌகரியங்கள் இருக்கின்றன?' என்று தீர்மானமாகக் கண்டறிவதற்கான ஆராய்ச்சிகளைத் தொடங்கினார்கள்.

இதுதான் உயரப் பறப்பதின் இரண்டாவது நோக்கம்.

உயிரை இழந்தாலுங் குற்றமில்லை, மனித இனத்துக்கே உபகாரமாக உள்ள உண்மைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும், உலக நன்மையின் பொருட்டு இயற்கை யன்னையின் இரகசியங்களை அறிந்துகொள்ளவேண்டும், என்று சிற்சில விஞ்ஞானிகள் எண்ணி வருகிறார்கள். நாம் ஆச்சரியப்படும்படியான தீரச் செயல்களை எண்ணித் துணிந்து செய்கிறார்கள். அவர்கள் சொல்லுகின்ற வழியைப் பின்பற்றிப் போவதற்குப் போதிய துணிவு நம்முள் எல்லோருக்கும் இருக்காது. ஆயினும் அவர்களுடைய புத்தியின் கூர்மையையும், நெஞ்சின் தைரியத்தையும், லோகோபகார சிந்தையையும் நாம் வாயாரப் புகழவாவது செய்யலாம் அல்லவா? அவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் பயன் அடைய வேண்டும் என்று வாழ்த்தி நமக்கே நன்மை தேடிக்கொள்ளலாம் அல்லவா?

---

ஜூலை மாதம் 12-ஆம் தேதியன்று பறக்கவிடவேண்டுமென்று எல்லா ஏற்பாடுகளும் ஆகி இருந்தன. ஆனால் அந்தப் பலூனுக்குக் காற்றடைக்கும்போது அது திடீரென்று வெடித்துப் போய்விட்டது. இன்ன காரணத்தால் என்பது இன்னும் விளங்கவில்லை. அந்தப் பலூன் குறைந்தது பதினைந்து மைல் உயரம் வரையாவது ஏறிப் போகும் என்று எதிர்பார்த்திருந்தார்கள்.

இன்னும் மேன்மேலும் உயரஉயரப் பறப்பதற்கு வேண்டிய முயற்சிகளைப் பல நாடுகளிலும் செய்துவருகிறார்கள்.



# வேணுகானம்

## ஒரு கலைக்கதை

---

திரிவேணி பத்திரிகையின் பழைய இதழ்களை ஒருநாள் புரட்டிப் பார்த்துக் கொண்டிருக்கையில் கண்ணுக்குப்பட்ட ஒரு கதையை நடுவிலிருந்து படிக்கலானேன். மனத்தைக் கவர்ந்த அக்கதையை ஆரம்பித்த இடத்திலிருந்து என்னையும் அறியாமல் முடிவுவரை படித்து மிகவும் அனுபவித்து, இதை யார் எழுதியது, இவ்வளவு அழகான பாவசித்திரம், தேசாபிமானம், தெய்வபக்தி, கலைஞானம், தேடியெடுக்க ஒரு பிழையில்லாத, ஸ்படிகத் தெளிவு பொருந்திய, ஆங்கில பாஷா நடை— இவ்வளவும் யார் இழைத்தாக்கியது என்று கதையின் முகப்பைத் திருப்பிப் பார்த்தேன். கன்னட இலக்கியத்திற்குப் புத்துயிர் தந்து வருபவர்களின் முன்னணியில் நிற்கும் ஆசிரியரும், என் நண்பருமான மாஸ்தி வேங்கடேசய்யங்கார் எழுதியதென்றிருந்ததைக் கண்டு பெரு மகிழ்ச்சியுற்றேன். ஆசிரியர் பெயரின்கீழ் கன்னடத்திலிருந்து ஆங்கில மொழிபெயர்ப்புச் செய்தவர் என் பள்ளிக்கூடச் சகாவாயிருந்து, பிறகு வாழ்வில் நாங்கள் வெவ்வேறு பாதைகளில் பிரிந்து போயிருந்தாலும், இளமைப்பருவத்திற்போலவே இப்பொழுதும் எங்கள் நட்பு வாடாது இருந்துவரும் நவரத்னம் ராமராவ் அவர்கள் என்று கண்டதும் என் மகிழ்ச்சி அளவுகடந்து பொங்கிற்று. அழகும், விஷயமும் பொருந்திய இக்கதையைத் தமிழரும் அனுபவிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டுத் தமிழில் பெயர்த்தேன். கதையின் பெயர் "மாஸுமதி" என்பதை "வேணுகானம்" என்று மாற்றினேன். கலையே ஒரு நாட்டின் உயிர். இவ்வுண்மையை விஷயமாக அமைத்து, இன்னும் வேறு பல நல்ல தத்துவங்களையும் பொருத்தி, மிக்கக் கற்பனா சக்தியுடன் இக்கதை ஆக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர் எழுதியதைக் குறைக்க மனம் வராதபடியால் கதை கொஞ்சம் நீண்டுவிட்டது. ஆயினும் படிப்போருக்குச் சோர்வு தோன்றாது என்று எண்ணுகிறேன்.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி.

[என் *பாட்டனார் ஒரு "துப்பட்டி கலெக்டர்". அந்த நாட்களில் கறுப்பு மனிதர்களுக்கு அதற்கு மேல் உத்தியோகம் கிடையாது. என் பாட்டனாரிடம் ஆங்கில மேல்அதிகாரிகளுக்கு மிகுந்த நம்பிக்கையும் சிநேகமும். எங்கள் வீட்டில் அவர் காலத்துக் கடுதாசிக் கட்டுகளும் தஸ்தாவேஜுகளும் ஏராளமாய் இருந்தன. அவைகளைப் பிரித்தெடுத்து உபயோகமில்லாத குப்பையைப் பொசுக்கிப் போடப் பார்த்தபொழுது*

வெள்ளைக்காரக் "கலெக்டர்" ஒருவருடைய தினசரிக் குறிப்புப் பாதி கிழிபட்டுப் போனது காணப்பட்டது. அதைப் படித்துப்பார்த்ததில் சில பாகங்கள் வெகு ரஸமாக இருந்தன. அவற்றை நீங்களும் ரஸிப்பீர்களென்று மொழிபெயர்த்துச் சொல்லுகிறேன், கேளுங்கள்.]

இராவணனைக்கொன்றபின் தன் வீர பட்டாளத்துடன் நகரத்துக்குள் பிரவேசித்து விபீஷணனைச் சிம்மாதனத்தில் அமர்த்திப் பட்டாபிஷேகம் செய்விக்கலாம் என்று எண்ணி ஸ்ரீராமர் போனாராம். போகும்போது நகரத்து வாசலில் நிலைக்கதவத்தில் பதிய வைத்திருந்த ஓர் அற்புதமான மரகதக் கல்லைப் பார்த்தாராம். அதைப் பார்த்ததும் அவர் உள்ளத்தில் உண்டான ஆசையின் வேகத்தைக் கண்டு அவர் பயந்துவிட்டாராம். 'அடடா! நகர வாசலிலேயே இப்படி என் மனம் தடுமாறினால், இன்னும் உள்ளே பிரவேசித்துவிட்டால் என்ன விபரீதம் நேரிடுமோ' என்று பயந்து, தான் வெளியிலேயே இருந்துகொண்டு இலக்குமணனை உள்ளே அனுப்பி விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம் செய்து முடித்துவிடச் சொல்லி விட்டார் என்றொரு கதை சொல்லக் கேட்டிருக்கிறேன்.

நமக்குக் கிட்டின இந்த தேசம் ஓர் இலங்கையைப் போன்றது. ஆனால் நாமோ ஸ்ரீராமசந்திரனைப் போலில்லை. "எல்லாம் விட்டு விட்டு என்னோடு வா" என்று சொன்னது ஏசுநாதரல்ல! பணப்பிசாசுதான் அம்மாதிரி நம்மைக் கூவியழைத்ததாகவும், நாமும் அதைத் தொடர்ந்து பின் செல்வதாகவு மிருக்கிறது. நாம் இந்த தேசத்தில் கால்வைத்ததுமுதல் எல்லாப் பொருள்களையும் கவர்ந்துகொண்டு போவதே தொழிலாக இருக்கிறோம். இங்கே அழகுள்ள எதைக் கண்டாலும் அதை நம்மூருக்குத் தூக்கிப் போகவேண்டும் என்று தீர்மானித்து விடுகிறோம்.

இப்படியெல்லாம் சிந்திக்க ஒரு சம்பவம் நடந்தது. என் தங்கை எமிலியும் அவள் புருஷனும் கொஞ்சநாள் என்னுடன் சுகவாசம் செய்ய வந்திருந்தார்கள். எமிலி புருஷன் ஜான் பார்க்ஹூஹாருக்கு இந்த நாட்டின் மேல் அளவிலாப் பிரியம். நம் ஆங்கில சமூகத்திற்குள் இந்தியா என்றால் வேறு யாருக்கும் அவ்வளவு மோகம் இல்லை. இந்த நாட்டில் வசிக்கும் மக்களின் சுபாவமும், பேச்சும், பழக்க வழக்கங்களும் அவருக்கு வெகு நன்றாய்த் தெரியும். இந்த தேசத்தின் புராதன நாகரிகத்திலுள்ள சிரேஷ்டமான விஷயங்களெல்லாம் அவர் நன்கு அறிவார். கோயில்களிலுள்ள அழகிய சிற்பங்களின் பொருள் எல்லாம் அவருக்கு விளங்கும். அதில் அவர் மிகவும் ஈடுபட்டு அனுபவிப்பார். இந்தியாவின் கலைகளும் அதன் நாகரிக மேம்பாடும் நம்மவருக்கு விளங்கியதும், இந்த தேசத்தில் ஒரு சிறந்த நாகரிகம் பல்லாயிர வருஷங்களாகக் காப்பாற்றப்பட்டு அதுவே இன்னும் மக்களின் தினசரி வாழ்வில் ஊடுருவி நின்று அவர்கள் எண்ணும் எண்ணங்களையும், செய்யும் செயல்களையும் நேர்வழியில் நிற்கச்செய்து வருகிறது என்பதை மேல்நாட்டார் அறிந்ததும் ஜான் பார்க்குஹார் செய்த சேவையாலேதான். இந்நாட்டில் பார்க்கவேண்டிய கோயிலோ, கோட்டையோ, அரமனையோ, மடமோ, எங்கிருந்தாலும் போய்ப் பார்த்திருக்கிறார். பழைய

சித்திரங்கள், சிலைகள், முதலிய பூர்விகக் கலைப்பொருள்கள் எங்கிருந்தாலும் தேடிக் கண்டுபிடித்துப் பார்த்து அனுபவிப்பார். அவர் அனுபவித்ததைப் போலவே அவர் அவைகளைப்பற்றி எழுதிய வியாசங்களைப் படிப்பவர்களும் அனுபவிப்பார்கள். இந்திய மக்களும் அவரைப் புகழ்ந்து நன்றி செலுத்து வார்கள். இந்த சேவையிலெல்லாம் எமிலியும் தன் புருஷனுடன் கலந் துழைப்பவள். அவளும் இந்த நாட்டின்மேல் மிகவும் அன்புகொண்டவள்.

எங்கெங்கேயோ தேடிக் கண்டுபிடித்துப் பல சிற்பங்களையும் சித்திரப் படங்களையும் விலைகொடுத்தோ, இரந்தோ சேகரித்து வைத்திருக்கிறார். இன்னும் சில உருப்படிகள் சம்பாதித்துப் பூர்த்திசெய்து ஒரு சித்திரக் கலா மண்டபமே அமைக்க வேண்டுமென்பது அவர் ஆசை. இங்கே வரும் வழியில் அவர்கள் அஜண்டா குகைகளுக்குப் போயிருந்தார்கள். வந்ததிலி ருந்து பார்க்குஹாருக்குப் பேச வேறு விஷயமே கிடையாது. எப்போதும் அஜண்டா ஓவியங்களைப் பற்றித்தான். ஆனால் எமிலி மட்டும் மௌனமாகவே இருந்தாள். நான் கேட்டதற்கு, "நானும் பார்த்து மிகவும் அனுபவித்தேன். ஆனால் ஒரு வருத்தம் உண்டு" என்றாள். "ஏன், என்ன விஷயம்?" என்று கேட்டேன்.

"விஷயமாக ஒன்றுமில்லை. என் மனதில் உண்டான ஓர் எண்ணம், அவ் வளவே; இவ்வளவு அழகாகச் சித்திரம் எழுதினர்களே, அவர்கள் காகிதத் திலாவது, கித்தானிலாவது எழுதியிருக்கக் கூடாதா! எவ்வளவு விலையானாலும் கொடுத்து வாங்கி ஊருக்கு எடுத்துப் போயிருக்கலாமே. நம்முடையதாக வைத்திருக்கலாமே! ஏன் இப்படிக் கல்லின்மேல் சித்திரித்து நம்மை மோகிக்க வைத்து ஆசை தீர்த்துக்கொள்ள வழியேயில்லாமல் செய்தார் களோ தெரியவில்லை."

அவள் சொன்னது சரியென்றே தோன்றிற்று. இந்திய கலையில் ஊக் கம் கொண்டவர்களுக்கு இவ்வித வருத்தம் உண்டாவது சகஜம்தானே. அழகான ஒரு பொருளைக் கண்டால் யாருக்கும் அதை அடையவேண்டும் என்று ஆசை உண்டாவது சுபாவம்தானே.

இப்படியே பேசிக்கொண்டுபோய் என் ஜில்லாவிலுள்ள பழைய கோயில், கோட்டைகளைப் பற்றிய பேச்சுக்கு வந்தோம்.

"உன் இலாகாவில் மாஸுமதி என்ற ஓர் ஊர் இருக்கிறதாமே? அங்கே ஒருவரிடம் சில பழைய ஓவியங்கள் இருக்கின்றனவாமே? நான் அவற்றைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று, படங்கள் வைத்திருப்பவர் பெயரும் விவரமும் சொல்லி, "முடிந்தால் அவரிடமிருந்து ஒன்றிரண்டு வாங்கிப்போக விரும்புகிறேன். இதற்கு ஒத்தாசை செய்ய முடியுமா?" என்று கேட்டார்.

ஆகட்டுமென்றேன். இந்தத் தேசத்தின் கலைச்சிறப்பை உலகத்தாருக் குத் தெரியப்படுத்த வேண்டும் என்று எனக்கு மிக்க ஆசை யிருந்துவந்தது. அவ்வாறே நேற்று மாஸுமதிக்கு எல்லாரும் போனோம். மாஸுமதி இப் போது ஒரு சின்னஞ்சிறு கிராமம். மிகவும் ஜீரணித்துப்போய் கேவலமான நிலையிலிருக்கிறது. "பேச்ரா" என்ற ஜாபிதாவில் சேரவில்லை, அவ்வளவு

தான். (பேச்ரா என்றால் பே+சிராஃ, அதாவது உருதுவில் 'விளக்கு இல்லா ஊர்' என்று பொருள். தற்போது குடியில்லாமல் நிலவரிக்கணக்கு களுக்கு மட்டில் ஒரு தனிக் கிராமம்). ஊருக்கு வெளியே சில தனிக் கொட் டகைகள்; ஊருக்குள் நான்கைந்து வீடுகள் தான். எல்லா வீட்டாரும் ஏர் பிடித்து ஜீவனம் செய்பவர்கள்.

இதற்குச் சில நாட்களுக்கு முன்பு நான் அவ்வூருக்குப் போயிருந்தேன். ஒரு வயோதிகர் திண்ணையில் வெயில் காய்ந்துகொண்டிருந்தார். ஏன் ஊர் இந்த நிலைக்கு வந்துவிட்டது என்று கேட்டேன். ஒரு விநோதம் உண்டு இந்தியாவில். ஒரு படிப்புமறியாத சாதாரண மனிதர்களுங்கூட ஆழ்ந்த தத்துவங்களை நன்றாய்க் கண்டவர்களாயிருக்கிறார்கள். கிராமக்குடியான வர்கள் பேச்சிலேயுங்கூட வேதாந்த உண்மை கமழ்கிறது. குடியானவன் கூட ராஜகுமாரனைப்போல் கம்பீரமாக நடந்துகொள்ளுகிறான். ஊர் பாழாய்ப்போனதற்குக் காரணம் கேட்டதற்குக் கிழவர் சொன்னதாவது:

''எல்லா நகரங்களும்தான் நசித்துப்போகவேண்டும்'' என்றார்.

''சில நகரங்கள் விருத்தியாகிக்கொண்டு மிருக்கின்றனவே!'' என்றேன்.

''வளருங்காலத்தில் வளர்கின்றன. அதற்குப் பின் நசித்துப் போகின் றன'' என்றார்.

''உங்கள் ஊருக்கு எக்காலத்திலாவது வளர்பருவம் இருந்ததா?'' என்று கேட்டேன். கேள்வி அவ்வளவு புத்திசாலித்தனமான கேள்வியல்ல. ஆனால் கிழவரை எப்படியாவது ஊரைப்பற்றிப் பேச்சுக்கு இழுக்கவேண்டுமென்று இவ்வாறு கேட்டேன்.

அவர் புன்சிரிப்புச் சிரித்து, ''முதலில் யௌவனம் இன்றி விருத்தாப் பியம் எப்படி வரமுடியும்?'' என்றார்.

அப்புறம் கிழவர் ஆரம்பித்துவிட்டார். ''இதுதான் புராணங்களில் சொல்லப்பட்ட மாஹிஷ்மதி நகரம். புகழ் ஓங்கி வளர்ந்த கார்த்தவீரியாருச் சுனனுடைய இராஜதானி. அவனுக்குப்பின் எத்தனையோ இராஜவமிசத் தார் இங்கே ஆண்டனர். ஒவ்வொரு வமிசமும் ஓங்கி வளர்ந்து பிறகு நசித் துப் போயிற்று. கடைசியாக முஸல்மான்கள் படையெடுத்து வந்தார்கள். அவர்களால் தாக்கப்பட்டுத் தோல்வியடைந்து, இராஜதானியாயிருந்த இந்த நகரம் பாழடைந்து இம்மாதிரி கிராமமாகி நின்றது. க்ஷீணித்துப்போய், நாலு வீடுகள்தான் நிற்கின்றன, பாருங்கள்'' என்றார்.

புராணங்களில் கூறப்பட்டிருக்கும் மாஹிஷ்மதி, 'பேச்ரா' ஆகப்போ கும் இந்த கிராமந்தான் என்பது விநோதமாக இருந்தது. ஆனால் கிழவ னுருக்கு இதைப்பற்றி கொஞ்சமும் சந்தேகமில்லை! ஒரு கல்மண்டபத்தைக் காட்டி, ''இங்கேதான் ஆயிரங் கை கார்த்தவீரியாருச்சுனன் தேகப்பயிற்சி செய்துவந்த இடம்'' என்றார். ஒரு பழைய குளத்தைக்காட்டி, ''இதுதான் அருச்சுனன் தினமும் நீராடிய குளம்; அதோ கோயில்; அதுவே அவன் பூஜை செய்துவந்த தேவாலயம்'' என்றெல்லாம் காட்டினார். இன்னொரு மண்டபத்தைக் காட்டி, ''இங்கேதான் இராவணனைப் பிடித்துக் கொண்டு

வந்து மாஹிஷ்மதியிலுள்ள ஆண் பெண் அடங்கலும் வேடிக்கைப் பார்க்க நர்த்தனம் செய்வித்தது. இங்கேதான் ராவணன் பத்துத் தலைகளையும் இருபது கைகளையும் நீட்டி ஒளிவீசும் பூதாகாரமாகக் கூத்தாடினன். முதலில், பாவம், வெட்கப்பட்டு மாட்டேன் என்றான். கார்த்தவீரியன் கோபங்கொண்டு இராவணனை ஓர் அறை அறைந்தான். அறைகொண்டதும் ராவணன் திடீரென்று எழுந்துநின்றான். எழுந்த வேகத்தில் அவன் தலைகள் கூரையில் இடித்து கல்லில் பத்துக் குழிகளாக்கியதை இப்போதும் பார்க்கலாம்'' என்று கிழவர் மண்டபத்தின் கூரையைக் காட்டினர்.

இந்தத் தேசத்தில் எந்தச் சிறிய ஊரிலுங்கூட இவ்வண்ணம் தங்கள் ஊரைப்பற்றி ஸ்தல புராணங்கள் சொல்லுவார்கள். தேவர்களும் புராண வீரர்களும் சம்பந்தப்பட்ட கதைகளும், சம்பவங்களும், தங்கள் ஊரிலேயே நடந்ததாகச் சொல்வார்கள். இருஷிகளும், முனிகளும் இப்போதும் தங்கள் ஊரில் வாசம் செய்வதாகச் சொல்வார்கள்—இந்தக் கிழவர் பேச்சில் வியப்பொன்றுமில்லை.

ஆனல் இந்தக் கிராமம் முன்காலத்தில் ஒரு பெரிய நகரமாகத்தான் இருந்திருக்க வேண்டும். உதாரணமாக இந்த இரண்டு மண்டபங்களைப் பார்க்கலாம். அதிக உயரமில்லாது, தாழத்தான் கட்டியிருந்த போதிலும் கற்தூலங்கள் எவ்வளவு பெரியவை! கட்டடத்தின் உறுதியும் தொழில்நேர்த்தியும் கவனிக்கத்தக்கன. இதைக் கட்டிய ஆட்கள் தேகபலம் கொண்டவர்கள் என்பதைப்பற்றி ஐயமில்லை. அருச்சுனன் குளமோ, முன்னூறு முழச் சதுரம்; கொத்திய கல்லால் விசாலமான படிகள் அமைக்கப்பட்டு வேலைத் திறமையுடன் கட்டப்பட்டிருக்கிறபடியால், பல இராஜவமிசங்களும் நாடுகளும் நசித்துப்போனலும், பல்லாயிர வருஷங்களாகக் குளம்மட்டும் கட்டினது கட்டினபடி இருக்கிறது. செய்யும் தொழிலில் பூரண சிரத்தையும் மகிழ்ச்சியும் கொண்டு, அழகும் உறுதியும் அமைத்துப் பொருள்களை உண்டு பண்ணுவதே ஓர் ஆனந்தம் என்று கருதினவர்கள்தான் இத்தகைய ஒரு குளம் கட்ட முடியும். குளத்தில் இப்போது கொஞ்சம்தான் ஜலம் இருக்கிறது. அந்த ஜலம் எல்லாத் திசையிலும் ஒரே படிவரிசையில் தங்கி நிற்கிறது. படிகள் அவ்வளவு சுத்தமாக, நேர் தவறாமல், கட்டப்பட்டு காலப் போக்கால் கொஞ்சமும் கெடாமலிருக்கின்றன.

கோயிலைப் பாருங்கள். கிரேக்கு சிற்பத்தின் வடிவழகையும், நம்முடைய (ஆங்கிலேய) பெரிய உன்னதமான கட்டடங்களையும் கண்ட நம் கண்ணுக்கு, இந்தியாவில் காணும் கட்டடங்களும் சிற்பவேலைகளும் முதலில் ஒருவாறு 'இவ்வளவுதானு' என்று தோன்றலாம். ஆனல் கோயில்முழுதும் நின்று பார்த்தால் அதன் அழகு ஒன்றும் குறைந்ததல்ல வென்பதை உணர்வோம். இது ஒரு சாதாரணக்கோயில். நன்றாய், கல்லும் கம்பங்களும் வேலைத்திறமையுடன் சுத்தமாய் அமைத்துக் கட்டப்பட்டிருக்கிறது. கோயிலில் ஒரு மூர்த்தியுண்டு. ஆனல் பல வருஷங்களாகப் பூஜை கிடையாது.

ஊரிலும் முன்காலத்தில் பெரிய மாளிகைகளாக இருந்திருக்கவேண்டிய கட்டடங்களின் அஸ்திவாரக் கல்வரிசைகளை நெடுகக் காணலாம். வரிசை

களைக் கவனித்தால் நல்ல அந்தமாகத்தான் நகரம் அமைக்கப்பட்டிருந் திருக்கவேண்டும் என்று ஊகிக்கலாம்.

"இதுதான் அக்கிரகாரம்" என்று ஒரு வரிசைக்கற்களைக் கிழவனார் காட்டினார். "இது தட்டாரத் தெரு, இது இன்னொரு ஜாதியார் தெரு" என்று வேறு வேறு வரிசைகளைக் காண்பித்தார். இப்போதுள்ள நிலைமையில், நகரத்தின் வீடுகளிலும் தெருக்களிலும் கற்பனாசக்தியாலுங்கூட ஜனங்களை நிரப்பி மனக்காட்சி காணமுடியவில்லை.

என் மைத்துனர் சொன்ன படங்களைப்பற்றி விசாரித்ததில் இந்த வயோதிகர் வீட்டில்தான் அவை இருக்கின்றனவென்று தெரிந்தது. அவருக்குச் சொல்லியனுப்பினோம். வெளியில் வந்து பழைய மரியாதை முறைகளை யனுசரித்து நமஸ்காரம் செய்து உள்ளே அழைத்துச்சென்றார். அவர் நடை, பாவனைகளில் அவர் பெருமைவாய்ந்த சுபாவங்கொண்டவர் என்பது தெரிந்தது.

"நீங்கள்தானா கிருஷ்ணய்யர்?" என்றார் பார்க்குஹார்.

"ஆமாம், ஐயா."

"உங்களிடம் கொஞ்சம் ஜோலியிருக்கிறது. அதற்காகத்தான் வந்தோம்".

"உத்தரவு"

"தங்களிடம் சில அழகிய புராதனப் படங்கள் இருக்கின்றனவாமே, அவைகளை நாங்கள் பார்க்கமுடியுமா? அதற்காகத்தான் வந்தோம்."

"ஓரிரண்டு படங்கள் இருக்கின்றன. இருப்பவைகளைத் தாங்கள் பார்க்கலாம், உட்காருங்கள்"

என்று சொல்லி எங்களை அஜா (ஆசா)ரத்தில் இருக்கச்செய்து உள்ளே போய்ச் சில படங்களுடன் வந்தார். முரட்டுக்கித்தான்மேல் ஏதோ மெழுகுப் பசை பூசி, அதன்மேல் வெகுசாதாரண சாயங்கள்கொண்டு எழுதப் பட்டிருந்தன. ஆனால் சித்திரத்தில் எல்லாக் கோடுகளும் அழகும் நிச்சயமும் கொண்டவையாயிருந்தன. சில படங்களில், எழுதியதைச் சில விடங்களில் அவித்துத் திருத்தி எழுதியதாகவிருந்தது. சில, முதலில்கண்ட கற்பனைப் படியே எழுதியது எழுதியவாறு, திருத்தப்பாடில்லாமல், இருந்தன. ஓவிய மெழுதிய கை மிகத் திறமைகொண்ட கை. எண்ணியதை எண்ணியவாறு லேசாக வரையக்கூடிய கை என்பது விளங்கிற்று. ஒரு படம் கோபாலகிருஷ்ணன் படம். அதைப் பார்த்தவுடன் படமெழுதியவருக்குக் கோபாலகிருஷ்ணன் ஊனுடலுடன் நின்று காட்சி தந்ததைக் கண்டே எழுதியதாகத் தோன்றிற்று.

ஆஹா! அந்த உருவத்தின் நிற்கும்நிலை, குழல் அன்புருவமாகிய உதடுகளைத்தொட அதை வாயில்வைத்துப் பிடித்திருக்கும் விரல்களின் அழகு, கண்களில் காணும் கரைகடந்த கருணைக்கடல், இவைகளை எப்படி வருணிக்க முடியும்? ஒரு கால்மேல் பாரம் தாங்கி, தேகம் சற்றுச் சாய்ந்தவாக்காய், மார்பின்மேலுள்ள பூமாலை மையத்தில் நில்லாமல் ஒரு பக்கமாகத் தொங்க— இதெல்லாம் ஒருவாறு சொல்லிவிடலாம். ஆனால், குழலோசையைக் கேட்ட

உலகம் பிரமித்துப் போய் அதன் ஆனந்தத்தில் மூழ்கி நிற்கும் காட்சியை எப்படித்தான் வருணிக்கமுடியும்! உலகத்தில் ஒலி என்பதே, புலன்கள் எல்லாமே, பிரகிருதியே, அந்த அநந்த திவ்வியகானத்தில் ஒன்றாய்ப்போய், மரங்கள் ஆடாமல் நிச்சப்தமாய் நிற்பதும், கானத்தைக்கேட்ட கன்றுகளும் பசுக்களும் அப்படியே—புல் மேய்ந்திருந்தவை புல் மேய்ந்தவாறே, துள்ளிக் குதித்தன துள்ளினவாறே, நின்றது நின்றவாறே—மோகித்து நிற்பதும், தேவர்களும், இருஷிகளும், கோபிகைகளும் அந்த வேணுகானம் என்னும் அமிருதத்தைக் குடித்து வெறிகொண்டவர்களைப் போல் ஆடுவதும், இவை களை யெல்லாம் எவ்வாறு சொல்லால் விவரிக்க முடியும்? இப்படத்தை எழுதினவன் தன் ஓவிய நாயகனான பகவானை நேரில் கண்டவனேயாவான்; கண்களால் அனுபவித்துத்தான் எழுதினான், வேறில்லை.

எமிலியும், பார்க்குஹாரும் மகிழ்ச்சி ஆவேசத்தில் மூழ்கினர்.

"இது யார் எழுதிய படம்?"

"என் பாட்டனார் எழுதியது."

"அவர் தெய்வீகப்புலமை பெற்றவர்."

"எங்கள் வமிசத்தில் அவர் ஒருவர்தான்."

"அவர் வேறு படங்கள் ஏதாவது எழுதினாரா?"

"ஓ! பல படங்கள் எழுதினார். ஆனால் அநேகமாக இதைப்போலவே கோபாலகிருஷ்ணன் படங்கள்தான். அதில் அவருக்குப் பைத்தியம். எத்தனையோ எழுதினார். எழுதி எழுதி இதுதான் நின்றது."

இப்படிச்சொல்லிவிட்டு உள்ளேபோய் ஒரு மூட்டை படம் கொண்டு வந்து அவிழ்த்தார். எல்லாம் கோபாலகிருஷ்ணன் படம்தான். சிலவற்றில் சிற்சில பேதமிருந்தாலும், அநேகமாக ஒன்றுக்கொன்று நகல்களாகவே யிருந்தன. சில, பொதுத்தோற்றத்தில்தான் வித்தியாசப்பட்டிருந்தன. எல்லாம் சேர்ந்து பதினாறு படங்களிருந்தன.

"அவர் படங்கள் முடித்து முடித்து, ஏதோ திருப்திகொள்ளாமல் ஒன்றன்பின் ஒன்றை வைத்துவிடுவார். தான் கண்ட அருட்காட்சியை கண்டபடி எழுதமுடியவில்லையே என்று வருத்தப்படுவார். மறுபடியும் எழுத ஆரம்பிப்பார். இவ்வாறு கடைசியாக எழுதினதைத்தான் தாங்கள் முதலில் பார்த்தது."

பார்க்குஹாருக்கு உற்சாகம் அதிகரித்து, அந்தப் படத்தை மறுபடியும் உற்றுப்பார்த்தார்.

"இந்தப் படம் அவருக்குத் திருப்தியளித்ததாகச் சொன்னாரா?"

"இல்லை, இல்லை. இது முடிந்து சில நாளைக்குள் மறுபடியும் ஒரு படம் எழுதலானார். பத்துப் பன்னிரண்டு நாள் விரதமிருந்து, பூஜை முடித்து, ஆரம்பித்தாராம். என் பாட்டனார் வாழ்க்கை ஓர் அதிசயம், எஜமான். நோன்பு முடிந்ததும், தியானத்திலிருந்தவர் திடீர் என்றெழுந்து, என் பாட்டி, அவர் மனைவியை யழைத்து 'அடியே, சுவாமி தரிசனம் கொடுத்துவிட்டார்.

தேங்காய், பூ, பழம் கொண்டுவா!' என்றார். அதன் பின் எழுத உட்கார்ந்தார். மத்தியானம் வெகுநேரமாயிற்று. படம் முடியவில்லை. அவர் தமையனார் தன்பூஜையை முடித்துக்கொண்டு அவர் பக்கத்தில் மெதுவாக வந்து உட்கார்ந்தார். குழந்தைகளும், என் பாட்டியும்—அப்போது அவள் (என் கப்பனாரை) கர்ப்பமாயிருந்தாளாம்—பட்டினியிருக்கக் கூடாதென்று சொல்லி அவர்கள் மட்டும் சாப்பிட்டிருந்தார்கள். என் பாட்டனாரும் அவர் தமையனாரும் உபவாசம். அஸ்தமிக்கும் சமயம்; ஆனால் இன்னும் படம் எழுதிக்கொண்டேயிருந்தார். அப்போது திடீர் என்று 'கொள்ளைக்காரர்! கொள்ளைக்காரர்!!' என்று கூக்குரல் கிளம்பிற்று. ஊர்மேல் கொள்ளைப்படை வந்ததென்று ஊரார் எல்லாம் கோட்டைக்கு ஆயுதங்கள் எடுத்து ஓடினார்கள். ஊர் வாசல் மூடப்பட்டது. என் பாட்டனார் வீரர். எழுந்து, 'இந்தப் படம் இன்று முடிவதில் பகவானுக்கு இஷ்டமில்லைபோலும்' என்று சொல்லிக்கொண்டே வில்லும் தூணியும் எடுத்துப் புறப்பட்டார்.

"வீட்டில் பெண்டுகள் அவரை மிகவும் வேண்டினார்களாம், சாப்பிட்டு விட்டுப் போங்கள் என்று. அவர் சிரித்துக்கொண்டே 'சாப்பாடு காக்கும், சண்டை காக்கமாட்டாது' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுவிட்டார். தமையனாரும், 'இருக்கட்டும், சீக்கிரம் வந்துவிடுவார்' என்று சொல்லிக் காத்திருந்தாராம். பூஜை செய்த பிரஸாதம் ஒரு பழம் மட்டில் என் பாட்டனார், பெண்டுகள் வேண்டுதலுக்கு இணங்கி, சாப்பிட்டுவிட்டுப் போனதாகச் சொன்னார்கள்.

"கொள்ளைக்கு வந்த படை பெரும்படை. எங்களுடைய ஆட்கள் குறைவு. தாக்க வந்தவர்களுக்கு ஏதாவது கொடுத்துச் சமாதானப்படுத்தி அனுப்பிவிடுவது புத்திசாலித்தனமாக விருந்திருக்கும். அப்படியும் சிலர் யோசனை சொன்னார்களாம். இவ்வாறு சமாதானம் செய்தனுப்பியிருந்தால் போய் விட்டிருப்பார்கள். ஆனால் என் பாட்டனார் சூரர். அதற்கு ஒப்புக்கொள்ள வில்லை. தன்னைப்போல் இன்னும் சிலரைச் சேர்த்துக்கொண்டு கோட்டைச் சுவர்மேல் ஏறி, தாக்க வந்த படையை எதிர்க்க ஏற்பாடு செய்துகொண்டு இங்குமங்கும் போய்க்கொண்டிருக்கையில் கொள்ளைக்காரர்களில் ஒருவன் குறிபார்த்து அவரைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டான்.

"அதன் பிறகு எங்களுடைய ஆட்கள் அதிகமாகச் சேர்ந்து விட்டார்கள். வயல்களுக்குப் போயிருந்தவர்கள் சமாசாரம் கேட்டு ஓட்டமாய் வந்ததும் எல்லாருமாகச்சேர்ந்து கொள்ளைக்காரர்களை விரட்டி அடித்துத் துரத்திவிட்டார்கள்.

"எல்லாம் முடிந்ததும் என் பாட்டனாரை வீட்டுக்குத் தூக்கிவந்தார்கள். குண்டு மார்புக்குள் போய்விட்டது. உயிர் துடிதுடித்துக்கொண்டிருந்தது. ஒரு தடவை கண் திறந்து பேசினாராம்.

"'ஆமாம், சீக்கிரம் வந்துவிடுகிறேன். வந்து படத்தை முடித்துவிட வேண்டாமா' என்று சொன்னதும் பிராணன் போய்விட்டதாம். மரணத்தருவாயில் அவர் மனம் சண்டையைவிட்டுப் படத்துக்குப் போய்விட்டது.

"என் பெரியபாட்டனுர்—அவர் என் பாட்டனுரைவிடப் பல வருஷங்கள் பெரியவர், அவருக்குத் தகப்பனர் மாதிரியே இருந்தாராம்—துக்கம் தாங்காமல் மார்பில் அடித்துக்கொண்டு, 'ஐயோ, என் குழந்தாய், உனக்கு ஒரு வாய் சாதம் போடாமல் பசியுடன் சாவுக்கு அனுப்பிவிட்டேனே' என்று அலறி அழுதாராம். இதை வளர்ப்பானேன்? பாட்டனுரைத் தகனம் செய்துவிட்டுக் கிரியைகள் முடித்தார்கள்.

என் பெரியபாட்டனுர் அதுமுதல் சித்தம் மாறினவர் போலவே இருந்தார். எப்போதும் வாசலண்டை யாரோ வருவதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறவாறே இருப்பாராம். விருத்தாப்பிய தசையில் என்னென்னவோ உளறிக் கொட்டுவாராம். 'இல்லை, அவன் வரமாட்டான்', 'என்ன நினைத்துக்கொண்டு இருந்தானே', 'வந்து விடுவான், வந்து விடுவான்'—என்றிவ்வாறெல்லாம் முணுமுணுப்பாராம்; பிறகு அவரும் காலகதி அடைந்தார். தன் தம்பி கட்டாயம் மறுபடியும் வருவான், வந்து படத்தை முடிப்பான், என்று சொல்லி இறந்தார். வந்து படத்தை முடிப்பார் என்றே அவர் நம்பிக்கை."

கிழவனுர் கதையை முடித்து மௌனமாயிருந்தார். நாங்களும் பேசவில்லை. கொஞ்சநேரம் கழித்து பார்க்குஹார் மெதுவாக, "அன்று அவர் எழுதிய படம் எங்கே?" என்றூர்.

"உள்ளே இருக்கிறது"

"அதைத் தயவுசெய்து காட்ட முடியுமா?"

"எங்கள் பெரியவர்கள் அதை யாருக்கும் காட்டக்கூடாது என்று சொல்லுவார்கள்."

"என்?"

"அது முடியாத படம். அதில் பிழைகள் இருக்கும். அதைப் பார்ப்பவர்கள் அதில் குற்றம் சொல்லக்கூடும். கலைஞருடைய ஆத்மாவை அது உறுத்தும்; அவர் புகழுக்கு அது ஒரு குறையாகும்."

"ஐயா, உங்கள் ஓவியப்புலவப் பாட்டனுர் ஒரு வீரர், மகான், தெய்வீகக் கலையருள் பெற்றவர். அவரை யார் குறை கூறுவார்கள்? கூறினுல்தான் என்ன? நாங்கள் குற்றம் கூறும் சுபாவக்காரர்களல்ல, தயவு செய்து படத்தைக் காட்டுங்கள்" என்று வற்புறுத்திஞேம்.

"சரி, அப்படியே யாகட்டும். நீங்கள்மட்டில் வந்திருந்தால் காட்டியிருப்பேனே இல்லையோ. இந்த அம்மாள் உங்கள்கூட இருக்கிறுள்; அதனுல் காட்டுகிறேன். அவர்கள் பார்க்கவேண்டும் என்று மிக ஆசைப்படுவதாகத் தெரிகிறது. இன்னெரு காரணமுமுண்டு. அதைச்சொன்னுல் உங்களுக்கு வேடிக்கையாகவிருக்கலாம். என் பெரியபாட்டனுர் இறக்கும் தருவாயில், தன் தம்பி மறுபடியும் கட்டாயம் வருவான்; வந்து படத்தை முடிப்பான், என்று சொல்லி இறந்தார். அப்படி வந்து படத்தை முடிப்பார் என்பதே அவர் நம்பிக்கை".

"உங்கள் பாட்டனுரும் கூட அப்படிச்சொன்னுரா?"

"அப்படித்தான் அவர் சொன்னதைக் கேட்டவர்கள் எண்ணினர்கள். அதன்மேல் எங்கள் குடும்பத்தில் ஒரு நம்பிக்கை என்னவென்ருல், மறுபடியும் அவர் எங்கள் குடும்பத்தில் குழந்தையாக ஜன்மம் எடுத்துப் படத்தை முடிப்பார், என்பது. அப்படி அவர் மறுஜன்மம் எடுத்துவந்து முடிக்குமுன் படத்தை யாருக்கும் காட்டக்கூடாதென்பது எங்கள் விருப்பம். என் தகப்பனர் பிறந்ததும், பெரியபாட்டனர் அவரைச் சிறுவயதில் நன்ருக கவனித்துக்கொண்டே இருப்பாராம்; எதாவது பாட்டனருடைய ஓவியச் சக்தியின் குறிகள் காணப்படுகின்றனவா, என்று. ஆனல் அப்படி எதும் தோற்றவில்லே. நான் பிறந்ததுங்கூட அப்படியே எதிர்பார்த்தாராம். அப்போதும் அவர் எண்ணம் நிறைவேறவில்லே. ஆயினும் அவர் காலகதி அடையும்போது, 'என் தம்பி சொன்ன சொல் தவறமாட்டான். சத்திய வந்தன். கட்டாயம் ஒரு நாள் வந்தே தீருவான். கோபாலகிருஷ்ணன் படம் ஜாக்கிரதை, பத்திரமாக வைத்திருங்கள்' என்று சொல்லி இறந்தாராம். என் தகப்பனர் ஒருநாள் இந்தப்படத்தைத் தன் குருவுக்குக்காட்டினர். அப்படியே நானும் இந்த அம்மாவுக்குக் காட்டலாம் என்று தோன்றுகிறது. படத்தைக் காட்டலாம் என்று அவர்கள் முகத்தில் ஏதோ என்னே ஏவுகிறது."

இவ்வாறு சொல்லி, உள்ளேபோய், இரண்டு படங்கள் கொண்டுவந்து, அதில் ஒன்றை எங்கள்முன் வைத்தார்.

படத்தைப் பார்த்து நான் பிரமித்துப்போனேன். அது ஒரு மாயைப் படமாகவே யிருந்தது. ஒவ்வொரு கோடிலும் ஒரு ஜாலம். அதைச் சொல்ல முடியாது! வேணுகானம் காற்றையே ஸ்தம்பிக்கச்செய்து அதை அடக்கி ஆண்டுவிட்டதாகத் தோற்றம் படத்தில் உண்டாயிருந்தது. தனித்தனியாகப் பார்த்தால் நாம் பார்த்த மற்ற படங்களேப்போலத்தான் இதுவும் தோன்றும். ஆனல் இப்படத்தில் ஏதோ ஒரு மாயை—இன்னதென்று விளங்கவில்லே—உயிர் ததும்பி ஆடி நின்றது. எமிலி கண் கொட்டாமல் அதைப் பார்த்துக் கொண்டு ஆனந்த பரவசமாயிருந்தாள்.

"இதுதான முடிவுபெருத படம்?" என்ருள் வெகுநேரம் கழித்து.

"இல்லே, இல்லே. இதோ!" என்று இரண்டாவது படத்தை எங்கள் முன் திறந்து வைத்தார்.

அம்மம்ம!

எமிலி "ஹா!" என்று கூவிப் பிரமித்துப் போனள்.

எல்லாரும் வாய்திறவாமல் படத்தை வெகுநேரம் பார்த்துக்கொண்டிருந்தோம். அற்புதமான சித்திரம். கொஞ்சநேரம் கழித்து பார்க்குஹார்,

"இந்தப் பசுவின்கீழ் என்ன எழுத எண்ணினர்களோ?" என்ருர்.

ஏதோ எழுத ஆரம்பித்து ஓரிரண்டு கோடுகள் வரையப்பட்டிருந்தன. வரைந்துவரும்பொழுதே திடீர் என்று நிறுத்திவிட்டாற்போல் காணப்பட்டது.

"தெரியவில்லே. அந்தக் கோடுகள் இழுத்து, அதைப் பூர்த்திசெய்யுமுன் இவ்விடத்தில்தான் கொள்ளேக்காரர்கள் வந்து, கூக்குரல் கிளம்பி, படத்தை விட்டுவிட்டு உயிர் மாய்க்கப் போய்விட்டார்."

மறுபடியும் நான் படத்தை உற்றுப்பார்த்தேன். கோடு இழுத்திருக்கு மிடத்தில் மற்றொரு பசுவை எழுத ஆரம்பித்ததுபோல் எனக்குத் தோன் றிற்று. ஆனால் எப்படி நிச்சயமாய்ச் சொல்லமுடியும்? எமிலி படத்தைப் பார்த்துக்கொண்டே மௌனமாகவிருந்தாள்.

"வேறு யாராவது உங்கள் பாட்டனார் உத்தேசத்தைப்பற்றி ஊகிக்க யத்தனித்தது உண்டா?" என்று கிழவனாரை நான் கேட்டேன்.

"என் மகள்வயிற்றுப் பேரன் ஒரு பையன் இருக்கிறான். அவன் ஏதோ சொன்னான். வேறு யாரும் ஊகித்து எதையும் சொன்னது கிடையாது" என்றார்.

"ஐயா, எனக்கு இந்தப் படத்தை விலைக்குகொடுக்கமுடியுமா? கொடுத் தால் உங்கள் பாட்டனார் பெயரை எங்கள் தேசத்தில்—மேல்நாட்டில்—கீர்த்திபெறச் செய்வேன். என்ன சொல்லுகிறீர்கள்?" என்றார் பார்க்குஹார்.

"அதெப்படி முடியும்? படம் கொடுக்க முடியாது. என் பெரியபாட் டனார் அதை யாருக்கும் காட்டக்கூடச் செய்யவேண்டாம் என்றல்லவோ சொன்னார்?"

"நான் கேட்பது என் லாபத்திற்காகவோ சந்தோஷத்திற்காகவோ அல்ல. உங்கள் பாட்டனாருக்கு நியாயமாய்க் கிடைக்கவேண்டிய புகழ் அவ ருக்குக் கிடைக்கச் செய்யத்தான் நான் படத்தைக்கேட்பது. உங்கள் ஊர்—உங்கள் தேசம்—இதனால் கியாதி அடையும்"

"ஆனால் அவர் சொன்னபடி மறுபடி வந்தால் நாம் என்ன செய்வோம்?"

"யார்? உங்கள் பாட்டனாரா? கிழவனாரே, அப்படிக்கூட நடக்குமா? அப்படி யாராவது நம்புவார்களா? யோசியுங்கள்."

"நாம் யோசிப்பதில் என்ன பயன்? வருகிறேன் என்று சொன்னவருக் கல்லவோ தெரியும். வெறுமனே சொல்லமாட்டாரே! படத்தை அவருக் காக வைத்திருப்பது எங்கள் கடமை. எங்கள் பெரியோர்கள் எல்லாம் அப்படியே சொல்லி இருக்கிறார்கள். அப்புறம் ஆண்டவன் இஷ்டம்."

இதற்குமேல் பார்க்குஹார் வேறொன்றும் சொல்லவில்லை. "சரி; உங்களிஷ்டம். ஆனால் யோசித்துப் பாருங்கள். எங்களுக்கு இப்போதே அவசரமில்லை. மறுபடி நாலு ஐந்து நாட்களில் வருகிறோம். நீங்கள் முடிவு செய்து சொல்லுங்கள். எப்படியானாலும் சரி."

இப்படி நாங்கள் பேசிக்கொண்டிருந்ததை எமிலி கவனித்ததாகவே யில்லை. திடீரென்று படத்தை விட்டு எங்களைப் பார்த்து,

"நான் சொல்லட்டுமா?" என்றாள்.

"என்ன?" என்றேன்.

"சித்திரம் எழுதியவர் இந்த இடத்தில் என்ன எழுத எண்ணினார் என்று?"

"சொல்" என்றேன்.

எமிலி சந்தோஷத்தால் முகம் சிவந்து சொன்னாள்: "எனக்குத்தோன்று கிறது, இந்த இடத்தில் ஒரு கன்று பால்குடிக்கத் தாயின் மடியை நோக்கித்

தாவி ஓடியது நடுவழியில் பகவானுடைய வேணுகானம் காதில் தாக்க, பசி தீர்ந்து எல்லாம் மறந்து நின்றுவிட்டதாகச் சித்திரக்காரர் எழுத ஆரம்பித்தார் என்று எண்ணுகிறேன். வெறும் பால் குடித்தால், தாய்ப்பாலானாலுங்கூட, மறுபடி பசிக்குமல்லவா? பகவான் குழலமிருதம் குடித்தபின் பசியே தீர்ந்த தல்லவா? கானம் அப்போதுதான் ஆரம்பித்த சமயம் என்பது சித்திரக்காரர் கற்பனை. பார், எல்லாக் குறிகளும் அதற்கிசைந்திருக்கின்றன. முதல் படம் எல்லாரும் வழக்கமாய் எழுதும் காட்சி. இந்தப்படத்தில் குழல் வாசிக்க ஆரம் பித்த க்ஷணத்தை அப்படியே சித்திரித்திருக்கிறது. இல்லையா, பாருங்கள்'' என்றாள்.

“அப்படியானால் என் பேரப் பையன் சொன்னது நிஜமே!'' என்றார் கிழவர்.

“என்ன சொன்னான்?'' என்று நாங்கள் ஒரே வாக்காய் எல்லாரும் கேட்டோம்.

“அவன் சொன்னது—‘பார், பகவான் ஏதோ இப்போது எண்ணி, அதை வெளியிடக் குழலை எடுத்து வாயில் வைத்திருக்கிறார். பார், வெளிவந்த சுவரங்கள் காற்றையும் ஸ்தம்பிக்கச் செய்துவிட்டன. இதோ இந்தக் கன்றைப்பார், தாயிடம் தாவிப் போகையில் வழியில் அப்படியே நின்றுவிட்டது. பாலைவிடத் தித்திக்குமல்லவா பகவான் வேணுகானம்! குழலோசை உண்டபின் பால் என்னத்திற்கு’— இப்படித்தான் சொன்னான். அம்மாளும் இப்போது அப்படியே சொல்லுகிறார்கள்''

பையனுடைய புத்தி நுட்பத்தைக்கண்டு வியந்தோம். உண்மையில் படத்தைப் பார்க்கப் பார்க்க எங்கும் கானத்தின் லாகிரி பொங்கிக் கிளம்பு வதையும், குழலை வாயில்வைத்த பகவானின் முகத்தில் ஒரு சங்கல்ப அருணோதயம் ஒளிவீசுவதையும் கண்டோம்.

பார்க்குஹார், “ஐயா, உங்கள் பையனை ஓவியம் பழக்குங்கள். அவன் பெரிய சித்திரக்கலைஞன் ஆவான் என்பதில் சந்தேகமில்லை. நாங்கள் நாலுநாள் கழித்து வருகிறோம். அப்போது படம் எங்களுக்குக் கொடுக்கும் விஷயம் முடிவாகச் சொல்லுங்கள்'' என்றார்.

எமிலி ஒன்றும் பேசவில்லை. பிறகு எழுந்து புறப்பட்டோம். கிழவனார் வெற்றிலைபாக்குக் கொடுத்து அனுப்பினார்.

படத்துக்காக நாங்கள் மறுபடி போகும் உத்தேசமில்லை. படத்தின் மேல் முன்போலவே எங்களுக்கு மோகம்தான். நல்ல விலை கொடுப்பதாக ஆசை காட்டினால் கிழவனார் கொடுத்துவிடலாம். ஆனால், நாங்கள் போவ தாக இல்லை. அதற்குக் காரணம் சொல்லுகிறேன்.

நாங்கள் வீடு திரும்புகையில் எமிலி கார்த்தவீரியன் குளப்படியில் சற்று நேரம் உட்கார்ந்தாள். பார்க்குஹார் சிற்றுண்டிக் கூடையைக் கொண்டு வந்து அவிழ்த்தார். எல்லாரும் பலஹாரத்திற்கு உட்கார்ந்தோம்.

“என்ன அழகான குளம்!'' என்றாள் எமிலி.

“அழகாய்த்தான் இருக்கிறது. ஆனால் இப்போது தண்ணீர் வற்றிக் கிடக்கிறது. அதோ பார், யாரோ முட்டாள் சில கல்லுகளைப் பெயர்த்து

எடுத்துப்போய்விட்டான். அநேகமாய் ஒரு விகாரமான சிறு வீடு கட்ட அந்தக் கல்லை உபயோகித்திருப்பான்'' என்றேன்.

''அண்ணா! அம்மாதிரிதான் நாமும் செய்து வருகிறோம். உனக்கு அது தெரியவில்லையா? குளத்தில் ஜலமில்லைதான். ஆனால் குளம் அப்படியே இங்கே இருக்கிறது. யாராவது கொஞ்சம் கவனித்துச் செடி கொடி பிடுங்கி எறிந்து கட்டடம் அழியாமல் பார்த்துவந்தால், என்றைக்காவது ஜலம் வரும் போது அதைக்கொள்ளக் குளம் இருக்கிறது. இந்தச் சுந்தரமான படிகளின் மேல் எத்தனை தலைமுறைகளாகச் சிறு பெண்களும் யுவதிகளும் சந்தோஷ மாகச் சிலம்பும் கால் மெட்டிகளும் ஒலிக்க ஏறியிறங்கி நடந்திருப்பார்கள்! அந்த மங்கள ஓசை காதில் இப்போதும் கேட்கிறாப்போலவே யிருக்கிறது. குளம் இப்படியே இருந்தால் ஜலமும் வரலாம். ஜலமெடுக்கப் பெண்குழந்தை களும் வரலாம். ஆனால் கற்களைப் பிடுங்கி எறிந்து குளத்தைப் பாழாக்கி விட்டால் அப்புறம் என்ன இருக்கிறது? யாரும் கிட்ட நெருங்கப் பயப்படும் விகாரமான குழிதான். தண்ணீர் வந்தாலும் குட்டை நாறும். அவ்வளவே.''

''உண்மைதான், எமிலி. ஆனால் அதிலிருந்து நீ சொல்லுவது என்ன, எனக்குத் தெரியவில்லை'' என்றேன்.

''என்னவென்றா கேட்கிறீர்? கேளும்: படம் ஒன்று நன்றாயிருக்கிற படியால் அதை எடுத்துப்போய்விடுகிறோம். சிலை ஒன்று அழகாயிருந்தால் அதைத் தூக்கிப்போய்விடுகிறோம். இவ்வாறு நாம் செய்துகொண்டே போனால், இந்தத் துர்பாக்கிய தேசம் கண்விழித்து எழும்போது அதற்கு என்ன மிச்சமிருக்கும்? சொல்லுங்கள் பார்க்கலாம். ஐயோ, நாம் செய் வது மகாபாவம்!'' என்றாள்.

''ஆனால் உனக்குத் தெரியாதா, நாம் கொண்டுபோவதெல்லாம் இந்த தேசத்தின் பெருமையை உலகத்திற்குக் காட்டுவதற்கல்லவோ? வெறுமனே கொள்ளையா அடிக்கிறோம்?''

''இம்மாதிரி நாம் பரப்பும் புகழால் இந்த தேசத்திற்கு நிரம்ப லாபம் தான்! இந்தக் கிழவனாருக்குச் சொல்லுகிறீர்—உன் பேரனுக்குச் சித்திரம் எழுதச் சொல்லித்தாவென்று. சொல்லிவிட்டு, அவர் வீட்டுப் படத்தை எடுத் துப் போய்விட ஏற்பாடு செய்கிறோம். அவருக்கு இது மிக நன்மை செய்த வாறல்லவா?''

குதிரைகள்மேல் மெதுவாக வீடு திரும்பினோம். கொஞ்ச தூரம் சென்றபின் எமிலி என்னிடம் சொன்னாள்:

''அண்ணா, உனக்குத் தெரியுமா; இந்த ஜனங்களுக்கு ஒரு நம்பிக்கை யுண்டு, சிலசமயம் உடலை விட்டு உயிர் வெளியேகிக் கொஞ்சகாலம் இங்கு மங்கும் அலைந்து மறுபடி திரும்பிவரும் என்று. அப்படி ஆத்மா வெளியே போயிருக்கும்போது உடல் மூர்ச்சையாகக் கிடக்கும். அப்போது வேறொரு பிராணன் வந்து தனக்குச் சேராத உடலில் புகுந்து கொண்டு சொந்தக் கார ஆத்மாவுக்கு இடமில்லாமல் செய்து விடுமாம்.''

இத்தகைய நம்பிக்கையைப் பற்றி நானும் கேள்விப்பட்டிருப்பதாகச் சொன்னேன்.

"'பரகாயப் பிரவேசம்' என்று அதற்குப்பெயர் சொல்லுவார்கள். இப்படித் திரும்பிவரலாம் என்று ஒரு தேகத்தைவிட்டு ஆத்மா வெளியே போயிருக்குங்காலத்தில் அந்த தேகத்தை எங்கேயாவது ஒளித்து வைத்து, அல்லது விரூபமாக்கி, அடையாளம் தெரியாமல் செய்துவிட்டால், அதன் பிராணன் திரும்பிவந்து உடல் கிடைக்காமல் இங்குமங்கும் பரிதாபமாகத் தங்க இடமில்லாமல் திரியுமல்லவா?"

"கற்பனை சரிதான். ஆனால் என்ன?"

"அண்ணா, 'பாரதமாதா' என்றிவர்கள்சொல்லிக்கொண்டாடும் அழகிய ஒரு தேகம் இப்போது மூர்ச்சையில் கிடக்கிறது. அவள் குழந்தைகள் அத்தேகத்தைச் சுற்றிப் பிரலாபித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். ஆனால் இப்போதுதான் அவள் முகத்தில் உயிர் மறுபடி வரும்போல் சின்னம் தோன்றுகிறது. இச்சமயத்தில் அவளுடைய உடலை விரூபமாக்கி விடலாமா? அவளுடைய கழுத்தாரத்தையும், விரல் மோதிரங்களையும், கை வளையல்களையும் கழட்டிக்கொண்டு போய் விடுவதா? திரும்பி வரும் உயிருக்குத் தன் உடல் தனக்கு அடையாளம் தெரியாமல் செய்துவிடலாமா? உடலைத்தூக்கி ஒளித்துவிட்ட மாதிரிதானே இதுவாகும்? குழந்தைகளின் கண்ணீரைத் துடைக்கலாம் என்று தாய் ஆசைப்பட்டு ஓடிவரும் சமயம், நாம் இவ்வாறு உடலைத்திருடியோ, அதன் ஸ்ரீயைக் களவாடியோ, விடலாமா? அவளுடைய குழந்தைகளைத் தாயில்லா அநாதைகளாக்கலாமா நாம்? இது நமக்குத் தகாது என்பது என் எண்ணம்."

இப்படிச்சொல்லிய எமிலியின் கண்களில் நீர் ததும்பிற்று. பார்க்குஹார் வேறுபக்கமாக முகம்திருப்பிக்கொண்டான். ஒருவேளை அவனும் தன் குழந்தை ஜியார்ஜை அப்போது நினைத்துக்கொண்டானோ என்னவோ! எமிலி மூர்ச்சையாகக்கிடக்க, பக்கத்தில் ஜியார்ஜ் உட்கார்ந்து அழுது கொண்டு உயிர் திரும்பிவரக் காத்திருப்பதாக ஒருவேளை மனதில் கற்பனைக் காட்சி பார்த்துக்கொண்டிருந்தானோ என்னவோ தெரியவில்லை. வீடுபோய்ச் சேரும்வரை நாங்கள் மறுபடி பேசவில்லை.

படத்துக்காகப் போவதில்லை என்று இன்றுகாலை தீர்மானித்து விட்டோம்.

இந்தச் சம்பவம், இன்னொரு எண்ணம் நான் சிலகாலமாக எண்ணியதை ஊர்ஜிதப்படுத்திற்று. இந்திய ஜாதியார் இழந்துவிட்ட கல்வி கேள்விகளுக் குப் பதில் நம்முடைய நாகரிகம், கல்வி, கேள்விகளை அவர்களுக்குத் தரலாம். ஆனால், உண்மையில் அது ஓர் உடல் தனக்கு உரிய பிராணனுக்காகக் காத் திருக்க அந்நிய ஆன்மா ஒன்று வந்து பரகாயப்பிரவேசம் செய்து அவ்வுடலை ஆக்கிரமித்தது போலவேயாகும்.

# மந்திரவாதி

"ஸேனு"

---

நகரமெங்கும் ஒரே பரபரப்பாக இருந்தது. கடைத்தெருக் களிலும், பெரிய வீதிகளிலும், அழுக்கடைந்த ஆடைகளுடன் சில மனிதர்கள் கும்பலாகக்கூடி தாழ்ந்தகுரலில் பேசிக்கொண் டிருந்தனர்.

இந்தமாதிரியான ஒரு ரஸ்தாவில், ஏழுவயது சிறுவன் ஒருவனைக் கையைப் பிடித்துக்கொண்டு அவன் தாயார்—நாற்பது வயதுள்ள ஒரு ஸ்த்ரீ—விரைவாக அழைத்துச் சென்றுள். சிறு வன் அடிக்கடி திரும்பிப் பார்ப்பான். அவனுக்கு அந்த அழுக் காடை உடுத்தின 'ராக்ஷஸர்கள்' (அவர்கள் தோற்றம் பயங்கர மாயிருந்ததால்) ஏன் அப்படிக் கூடிக்கூடிப் பேசுகிறுர்கள் என்று அறிய ஆவல்.

திடீரென்று குதிரைகளின் குளம்போசை கேட்டது. கையில் துப்பாக்கி ஏந்திய பத்து அல்லது பதினைந்து சிப்பாய்கள் கும்பலாக நிற்கும் அம்மனிதர்களை விரட்டியடித்தனர். அவர்கள் மூலைக்கு ஒருவராய் ஓடினர்.

சிறுவனுக்கு இதெல்லாம் வியப்பாக இருந்தது. அவன் தன் தாயாரை நோக்கி, "அம்மா ஏன் அவர்களை அடித்துத் துரத்து கிறுர்கள்? அவர்களெல்லாரும் துஷ்டர்களா?" என்று கேட்டுக் கொண்டே யிருக்கையில் சிப்பாய்கள் இவர்கள் இருந்த இடத் தை நெருங்கவே, அந்த ஸ்த்ரீ 'உஷ்' என்று பையனுடைய வாயை மூடி, பரபரவென்று அங்கு சென்றுகொண்டிருந்த ஒரு ரிக்ஷா வண்டியை நிறுத்தச் சொல்லி, கூலி ஒன்றும் பேசிக்கொள்ளாமலே சிறுவனுடன் அதில் ஏறிக்கொண்டாள். பயத்தால் அவள் உடல் நடுங்கியது. "சீக்கிரம் போ, அப்பா" என்றுள்.

ரிக்ஷாவண்டிக்காரன், "ஏனம்மா பயப்படுறீங்க, நம்பளே ஒண்ணும் செய்யமாட்டாங்க—எங்கே போவணும், அம்மா?" என்று கேட்டான்.

"மேட்டுத்தெருவுக்கு எவ்வளவு கேட்கிறுய்?"—அப்பொழுது தான் அந்த அம்மாளுக்குக் கூலி இன்னும் பேசிக்கொள்ளவில்லை என்ற நினைவு வந்தது.

"மூணணு, அம்மா" என்றுன் ரிக்ஷாக்காரன்.

"ஒன்றரையணுவுக்குமேல் தம்பிடிகூடக் கொடுக்கமுடியாது. இஷ்டமில்லாவிட்டால் இறங்கி டிராம் வண்டியில் போய்க் கொள்ளுகிறேன்" என்றுள் அந்த ஸ்த்ரீ.

"அம்மா, டிராம் இன்னிக்கே பிடித்து ஓடாது"

"ஏன்?" என்று திகிலுடன் கேட்டாள் அந்த ஸ்த்ரீ.

சிறுவன், ரிக்ஷாக்காரன் என்ன பதில் சொல்லப்போகிறுன் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

"நாலுநாளாக ஆலைகளிலெல்லாம் வேலை நிறுத்தம் செய்திருக்கிறுங்களே தெரியாதா, அம்மா? இன்னிலேயிருந்து டிராம் தொழிலாளிங்கள்கூட 'இஷ்ட்ரைக்' பண்ணியிருக்காங்க." என்றுன் ரிக்ஷாவாலா.

"அப்படியானல் சும்மா வீட்டில் குந்திக்கொண்டு கிடக்கிறதுதானே? ஏன் தெருவில்வந்து கும்பு கூடுகிறுங்க?"

"வியர்வை வழிய நாள் முழுவதும் வேலை செய்துகூடக் குறைச்சல் கூலி கொடுத்தால் யார் சும்மா இருப்பாங்க? தங்கள் கக்ஷியிலே நியாயம் இருக்குதுண்ணு பொதுஜனங்களுக்குத் தெரிய வைக்க வேண்டாமா, அம்மா?—நாங்களெல்லோரும் கூட, அவங்க பேரிலே இரக்கப்பட்டு இன்னும் ஒரு வாரத்தில் வேலை நிறுத்தம் செய்யப் போகிறேம்."

'இவர்கள் நினைத்தால் டிராம், பஸ் எல்லாம் நின்று விடுகிறதாமே! அப்படியானல் இவர்கள் பெரிய மந்திரவாதிகள் என்பதில் சந்தேகமில்லை' என்று எண்ணினன் அச்சிறுவன். ஆனலும் சிப்பாய்கள் விரட்டினல் கலைந்து ஓடுகிறுர்களே! மந்திரவாதிகள் சிப்பாய்க்கு ஏன் பயப்படவேண்டும்?—அதுதான் சங்கரன் என்னும் அச்சிறுவனுக்கு விளங்கவில்லை.

* * *

அன்று இரவு முழுதும் சங்கரனுக்குத் தூக்கமே வரவில்லை. அவன் வீட்டெதிரே ஒரு குதிரைலாயம் இருந்தது. அங்கே குதிரைக்காரனின் மனைவி சமைத்துக் கொண்டிருந்தாள். அடுப்பு எரிவதனுலுண்டான வெளிச்சம் சங்கரன் படுத்திருக்கும் அறையில் ப்ரதிபலித்தது. தாயாரருகில் படுத்திருந்த சங்கரன் மெள்ள எழுந்து வாசற்பக்க ஜன்னலண்டை வந்து நின்றுன்.

குதிரைலாயத்திற்கு வெளியில் இரண்டு மூன்று மனிதர்கள் நின்றுகொண்டு கைகளை ஆட்டி ஆட்டி என்னமோ பேசிக்கொண்டிருந்தனர். ஏற்கனவே பயங்கரமாகவிருந்த அவர்களுடைய தோற்றத்தை அந்த வெளிச்சம் இன்னும் பயங்கரமாக எடுத்துக் காட்டியது.

சிறுவன் சங்கரனுக்கு அவர்கள் நல்லவர்களா துஷ்டர்களா என்று விளங்கவில்லை. சற்றுநேரம் யோசனை செய்துவிட்டுத் திரும்பவும் போய்ப் படுக்கையில் படுத்துக்கொண்டான்.

மறுநாள் காலை எழுந்ததும் பல் தேய்த்துக்கொண்டு சமையலறைப் பக்கம் போனான். சமையல்காரப் பொன்னன் அங்கே யிருந்தான். "காப்பி ஆகவில்லையா இன்னும்?" என்று கேட்டான் சங்கரன். "பால்காரன் வரவில்லையே" என்றான் சமையல்காரன்.

சற்றுநேரம் கழித்து பால் கறப்பவர்கள்கூட ஆலைத்தொழிலாளர்க்காக அனுதாபப்பட்டு அன்று கறக்க மறுத்துவிட்டார்கள் என்று செய்தி வந்தது.

சங்கரன் தன் தாயாரைப் பார்த்து, "அப்படியானால் இன்னிக்கி காப்பி கிடையாதா, அம்மா" என்றான். "ஆமாம்" என்றாள் அவன் தாயார்.

அன்று காப்பி சாப்பிடாததால் சங்கரனுக்குத் தலைவலி.

மறுநாள் கறிகாய் விற்பவர்கள் சந்தைக்கு வரவில்லை. அன்று வெறும் சாதமும் ரஸமும்தான் சங்கரன் வீட்டில் சாப்பாடு.

சங்கரனுக்கு எல்லாத் தொழிலாளிகளின் மீதும் கோபம். தன் தாயாரைப் பார்த்து, "அவர்களெல்லாரும் துஷ்டர்கள் தானே?" என்று கேட்டான்.

அவன் தாயார் புருவத்தைச் சுளித்தாள். ஆனால் ஒரு பதிலும் கூறவில்லை.

குப்பைகூட்டும் தோட்டிகளும் மறுநாளேபிடித்து வரவில்லை. அதனால் வீதிகளிலும் வீடுகளிலும் துர்க்கந்தம் வீசியது.

சங்கரனுடைய தகப்பனார் ஏதோ வேலையாக வெளியூருக்குப் போயிருந்தார். அன்று வரவேண்டியவர் இரவு வெகுநேரம் ஆகியும் வரவில்லை. சங்கரன் அம்மாவைப் பார்த்து, "அம்மா, ஏன் அப்பா வரல்லே" என்றான். அவன் தாயார், "ரெயிலெல்லாம் கூட நின்றுவிட்டது—தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்துவிட்டதால்" என்று பதிலளித்தாள்.

திரும்பவும் அந்தத் தொழிலாளர்கள் தானா? அப்பாவை ஏன் அவர்கள் வீட்டுக்கு வரவிடாமல் செய்யவேண்டும்? அப்படியானால் அவர்கள் மகா துஷ்ட மந்திரவாதிகள்தான்—சங்கரனுக்கு வந்த கோபத்தில் அவர்களைக் கட்டி அடிக்கவேண்டுமென்று தோன்றிற்று.

காப்பி சாப்பிடாததால் சங்கரனுக்கு வரும் தலைவலியை இரண்டுநாளாகக் காணோம். காய்கறி இல்லாமல் ரஸம்சாதம் சாப்பிட்டே வயிற்றுப்பசி தீர்ந்தது.

திடீரென்று, ஒருநாள், எல்லாம் முன்போலவே ஆகிவிட்டது. ரெயில், டிராம், பஸ், ரிக்ஷா எல்லா வண்டிகளும் ஓட ஆரம்பித்

தன. சங்கரனின் தகப்பனுர் வீடு வந்துசேர்ந்தார். மார்க்கெட்டு களில் பழையபடி காய்கறிகள் விற்கத் தொடங்கினுர்கள். தோட் டிகள் குப்பையைக் கூட்டினர். பால்காரர்கள் கறக்க வந்தனர். அழுக்காடை அணிந்த தொழிலாளிகள் இப்பொழுது முகமலர்ச்சி யுடன்,

‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்.
வீணில் உண்டு களிப்போரை நிந்தனைசெய்வோம்.
ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே!’

என்று பாடிக்கொண்டே வீதிகளில் சென்றனர்.

சங்கரனுக்கு இதெல்லாம் இன்னும் ஆச்சர்யமாக விருந்தது. தன் தாயாரைப் பார்த்து, “ஏன் இவர்களெல்லாரும் சிரித்துக் கொண்டு போகிறுர்கள்?” என்று கேட்டான்.

“அவர்கள் சம்பளத்தை உயர்த்தி விட்டார்கள்—அதனுலே.”

ஒரு நாள் அவன் வீட்டு வேலைக்காரியோடு, அவள் புருஷன் வந்து பேசிக்கொண்டிருந்தான். அவனைப் பார்த்தால் ஒரு தொழிலாளி மாதிரி இருந்தது. சங்கரன் அவனருகில் வந்தான்.

அம்மனிதன் சங்கரனைப் பார்த்ததும் பயந்து ஒதுங்கினுன். அவன் மனைவி, “நம்ம சின்ன யஜமானர்தான்” என்றுள்.

தொழிலாளியைப் பார்த்து சங்கரன், “ஏ! அப்பா, நீ பெரிய மந்திரவாதியாச்சே! எங்கப்பாவை ரயிலில் வரவிடாமல் செய் தாயே. மார்க்கெட்டிலே கறிகாய் விற்காமல், தொட்டுக்கொள்ள ஒன்றுமில்லாமல் எங்களைச் சாப்பிட வைத்தாயே! நீ துஷ்டன்” என்று சொல்லிக்கொண்டே போனுன்.

தொழிலாளிக்கு ஒன்றுமே புரியவில்லை. அதற்குள் வேலைக் காரி சங்கரனைப் பார்த்து “அம்மா வந்தாங்களான கோவிச்சுப் பாங்கோ. போ, கண்ணு, உள்ளே” என்றுள்.

சங்கரன் உள்ளே போனுன். இன்னும் அம்மா வரவில்லை என்று தெரிந்ததும் மறுபடியும் வெளியில் வந்து பார்த்தான். அந்த மனிதன் வேலைக்காரியோடு ஏதேதோ சொல்லி அழுது கொண்டிருந்தான். அவளும் கண்ணைப் பிசைந்துகொண்டிருந் தாள்.

டிராம், பஸ், ரெயில் எல்லாவற்றையும் நிறுத்தும் அந்த ‘மந்திரவாதி’ ஏன் அழவேண்டும் என்பதுதான் சங்கரனுக்குப் புரிய வில்லை—பெரியவனுனல் ஒருவேளை அறிந்து கொள்வானே என்னமோ!

---

# விஷ விருக்ஷம்

## பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாய

[நகேந்த்ரன் என்ற தனவானும் அவன் மனைவி ஸூர்யமுகியும் குந்தநந்தினி என்னும் அநாதைப்பெண்ணைப் போஷித்துத் தாராசரணனுக்கு மணமுடித்து வைக்கின்றனர். ஆனால் குந்தம் விதவையாகி மீண்டும் நகேந்த்ரன் மாளிகைக்கே வந்துவிடுகிறாள். முன்னொரு சமயம் குந்தத்தைக்கண்டு மோஹங்கொண்ட தேவேந்த்ரன், இப்பொழுது ஹரிதாஸி வைஷ்ணவி என்ற பிச்சைக்காரி வடிவில் நகேந்த்ரன் மாளிகைக்கு வந்து, பொய் சாக்குச் சொல்லி குந்தத்தை வெளிக்கொண்டுவரப் பார்க்கிறான். ஆனால் குந்தம் வர மறுக்கிறாள். இதற்கிடையில் ஸூர்யமுகி, நகேந்த்ரன் குந்தத்திற்குத் தன் மனதைப் பறிகொடுத்துவிட்டான் என்று ஒருவாறு அறிந்து, நாத்தி கமலமணிக்குக் கடிதம்எழுதி வரவழைக்கிறாள். கமலமணி, குந்தமும் நகேந்த்ரன் பால் காதல் கொண்டிருப்பதை யறிகிறாள். மீண்டும் வைஷ்ணவி வந்து குந்தத்தினிடம் தனிமையாகப் பேசுவதைக் கண்ணுற்ற ஸூர்யமுகி, அவர்கள்பேரில் சந்தேகம்கொண்டு, வைஷ்ணவியைத் தொடர்ந்து வேவுபார்க்க ஹீரா என்ற வேலைக்காரியை அனுப்புகிறாள்.]

(67-ஆம் பக்கத் தொடர்ச்சி)

### பதினாறும் அத்தியாயம்

### "மாட்டேன்"

அன்று மாலைப்பொழுது நகேந்த்ரனுடைய மாளிகையைச் சேர்ந்த சோலையிலுள்ள குளப்படியில் குந்தநந்தினி உட்கார்ந்திருந்தாள். குளத்தின் ஜலம், தெளிந்து கருநீலமாகத் தென்பட்டது. வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்—இந்தக் குளத்தின் பின்புறமாகத்தான் புஷ்போத்யானம். காவின்நடுவே சலவைக்கல்லால் அமைந்த ஒரு லதாமண்டபம். கொடிவீட்டின் எதிரேதான் குளத்திற்குச் செல்லும் படிகள். அதன் இரு மருங்கிலும் இரண்டு பெரிய புராதனமான மகிழ மரங்கள். அதன் கீழ், குளப்படியில், அந்த அந்திவேளையில், ஏகாங்கியாய் உட்கார்திருந்தாள் குந்தம். குளிர்ந்த நீரில் ப்ரதிபலிக்கும் நக்ஷத்திரக் கூட்டங்களைப் பார்த்தவண்ணம் இருந்தாள். மாலை மங்கலில் செம்பருத்தி மலர்கள் கருமையாகத் தோன்றின. குளத்தின்

மறு மூன்று பாரிசங்களிலும், மா, பலா, கொய்யா, கிச்சிலி, இலந்தை, முதலிய பழ விருக்ஷங்களும், தென்னை மரங்களும், அநேக மலர்த் தருக்களும் அடர்ந்து, இருளில், சமமில்லாத உயரத்தையுடைய பெரிய மதிளைப்போல் விளங்கின. ஓரோரு ஸமயம் உச்சாணிக் கிளையில் இருக்கும் புள்ளினத்தின் ஆர்த்தல் அந்த நிச்சப்தத்தைக் கலைக்கும். மந்தமாருதம் நீரின்மேல் படிந்து தாமரை மொட்டுக்களையும் தாரகைகளின் ப்ரதிபிம்பத்தையும் அசைத்துச் செல்லும். குந்தநந்தினியின் தலைக்கு நேரே மகிழந் தளிர்கள் காற்றில் அசையும் சலசலப்பு. மகிழ மலர்களின் அடங் கிய பரிமளம் மெதுவாகப் பரவிக் கொண்டிருந்தது. காற்றடிக் கும்போதெல்லாம் மகிழ மலர்கள் குந்தநந்தினியின் மேலும், அவளைச் சுற்றியும் 'டப் டிப்' பென்று உதிரும். பல புஷ்பங்களின் ஸுகந்தம் சேர்ந்து ஸ்வப்னலோகத்திலிருந்து வீசுவது போலிருந் தது. மின்மினிக் கூட்டம், அலைபடாத பொய்கையினுடைய படிகப்புனலின் மீது அணைந்தும் ஒளிர்ந்தும் பரந்து செல்லும் விசித்திரக் காட்சி. எங்கோ மரக்கிளையில் ஊசலாடும் வௌவால்கள் கீச்சுடும் எதிர்பாராத அரவம். மேகங்கள் இங்கொன்று அங் கொன்ருக ககனமார்க்கத்தில் வழிதப்பி அலைந்து கொண்டிருந்தன. நக்ஷத்திரங்கள், இரண்டொன்று மனோதுக்கத்தினலோ என்னவோ, வானின்று சிதறிவிழுந்தன. குந்தநந்தினியின் முகபாவனை அவள் ஹ்ருதயத்தை வாட்டும் வேதனையைக் காட்டியது. அவள் எதைப் பற்றிச் சிந்திக்கிருள்? இதுவாக இருக்குமோ: "எல்லோருக்கும் முன்னல் என்உயிர் போயிருக்கக்கூடாதா? எல்லாவிஷயத்திற்கும் நன்மையாக முடிந்திருக்குமே? நானும் இறந்து நக்ஷத்திரமாக மாற மாட்டேனு?"--தன் பிதா பரகதிக்குச்செல்லும்போது தான் கண்ட அதிசயக் கனவை குந்தநந்தினி மறந்தே போய்விட்டாள். அதனு டைய சாயை அஸ்பஷ்டமாகக்கூட அவள்மனதில் தோன்றவில்லை. ஆனல் தாயார் தன்னை ஒரு ஸமயம் நக்ஷத்திரலோகத்திற்கு வரும் படி அழைத்தது மாத்திரம் அவளுக்கு ஞாபகம் இருந்தது.

"ஆஹா! நானும் நக்ஷத்திரமாகி துயர் நிரம்பிய இவ்வுலகை விட்டு நீங்கி சாந்தியை அடையமாட்டேனு" என்று எண்ணுவாள். "மனிதர்கள் இறந்தால் நக்ஷத்திரமாக மாறுகிருர்களா? ஆனல் அம்மா, அப்பா, அண்ணு, யாவரும் இப்போது நக்ஷத்திரங்களாக இருப்பார்கள். எந்த நக்ஷத்திரம் என் அம்மா? அதோ, அதுவா? அண்ணு சிவப்பாய் இருப்பான்; அதோ அந்தச் சிவப்பு நக்ஷத் திரம் தான் அவன்.....அந்த நக்ஷத்திரம் அப்பாவாக இருக்கலாம்..... இல்லை, இதுவோ? எனக்கு ஒன்றும் தெரியவில்லையே. எதுவாயி ருப்பினும் நான் படும் வேதையைப் பார்த்துக்கொண்டுதான்

இருப்பார்கள். நான் அழுவது அவர்களுக்குத் தெரிகிறதோ இல்லையோ? நான் கண்ணீர் சிந்தி என்னப் பிரயோஜனம்? என் தலையில் இந்தமாதிரி எழுதி இருக்கிறதே? அம்மா என்னை அப்பொழுதே கூப்பிட்டாள். ஐயோ! அடிஅம்மா, என்னைத் துன்பங்கள் வாட்டுகின்றனவே. நான் சாகேனு?...எப்படி உயிரை விடுவது? குளத்தில் அமிழ்ந்து....நல்லது, அப்படியே செய்கிறேன். இறந்தால் நான் நக்ஷத்திரமாக ஒளிர்வேன். கீழே இந்தப் பாழும் உலகை, நிம்மதியாக அந்த ஸ்வர்க்கத்திலிருந்து நோக்குவேன். மண்ணுலகில் வளரும் யாதொரு பாபமும் என்னை அணுகாது. அவ்வளவு தொலைவில் பாப சிந்தனைகள் என்னைத் தீண்டுமா?.... நான் எப்படி இறப்பேன்? ஐயோ! என் ந....நகே.... நகேந்த்ரன்..நகேன்..நகேன். என் கண்ணினுள் மணியே! நீ என்னை விட்டுப்பிரிய ஸஹிப்பாயோ?..சீ..இது என்ன, பிதற்றுகிறேன்? ஸூர்யமுகிக்கு அல்லவா நகேந்த்ரன் சொந்தம். குந்தம்! உனக்கு வந்த கேடு என்ன?....ஸூர்யமுகியை மணந்து கொள்ளாமல் அவர் என்னை மனைவியாகக் கொண்டிருந்தால்?— சே..வீண்எண்ணம்.....குளத்தில் விழுந்து சாவது தான் சரி. எனக்கு ஏது வேறு மோக்ஷம்? குளத்தில் இறங்கி மடிகிறேன்— நாளைக்கு என்பிணம் மிதக்கும். எல்லோரும் வந்து பார்ப்பார்கள்..., ஐயோ மானக்கேடு! என் நகேந்த்ரன் மனம் எப்படித் துடிக்கும்? நக்ஷத்திரமாகி இதைப் பார்க்கும்போது, என்னுல் ஸஹிக்கக் கூடுமா? நானும் அதோ சிதறி விழும் நக்ஷத்திரங்களில் ஒன்ருவேன். என் நகேன், நகேன்....சீ மறுபடியும் இது என்ன, என்னையும் மீறி வருகிறதே?...நகேன் என்னைப் பற்றி என்ன நினைப்பார்?..சே..முழுகி இறக்கக்கூடாது. நான் என்னைக் கோரமாக ஆக்கிக்கொள்ளப்போகிறேன். அவர் என்னுடைய ரூபத்தைப் பார்த்து வெறுக்க வேண்டும்....ஐயோ அவர் மனம், அதனுல் வாடுமோ? அந்தத் துக்கத்தை நான் எப்படி ஸஹிப்பேன். விஷத்தைத் தின்று மரித்தாலோ?..... விஷம் எங்கு கிடைக்கும்?..யார் கொண்டுவந்து எனக்குக் கொடுப்பார்கள்? அப்படித்தான் கிடைத்தாலும் எனக்குத் துணிவு வருமா? எப்படியும் தின்பேன்....ஆனுல் இப்போது வேண்டாம்..அவர் என்பேரில் ஆந்தரீக அன்பு கொண்டிருக்கிருர். இதை நினைக்கும் போதே இன்பம் என் தலைக்கேறுகிறது. கமலமணி இதை என்னிடம் ஜாடையாகச் சொன்னுள். அது வாஸ்தவமாக இருக்குமா? ஒருவேளை அப்படி அவர் இராவிட்டாலோ? சீ..பின் கமலமணிக்கு இது எப்படித்தெரியும். அடி பைத்தியம்! அப்பொழுதே நீ கேட்டுத் தெரிந்துகொண்டிருக்கக்கூடாதா?....என்னை அவர்

நேசிக்கிறார்! அவர் அவ்வாறு செய்வதற்கு என்னிடம் என்ன சிறப்பிருக்கிறது?....ரூபமா?....குணமா? அழகா?"—இம் மாதிரி எண்ணங்கள் மனதில் சுழல, துயரத்தின் உருவமான குந்தம் குளத்து நீரில் குனிந்து தன் நிழலைப் பார்த்தாள். அவள் முகம் அதில் நன்றாகத் தெரியவில்லை. திரும்பிப் பழைய இடத்திலேயே வந்து அமர்ந்தாள். "சீ....நான் என்னவெல் லாம் எண்ணுகிறேன்....ஸூர்யமுகியைக் காட்டிலுமா நான் அழகி? ஹரமணி, விசு, முக்தா, சந்த்ரா, பாமா, இவர்களைக் காட்டிலுமா நான் அழகி? ஏன், வேலைக்காரி ஹீராவைக் காட்டிலும் நான் அழகில் சொட்டி வழிகிறேனா? ஹீரா என்னை விட ஸூந்தரி..ஆம் அவள் கறுப்பாய் இருந்தால் என்ன? முகம் எவ்வளவு லக்ஷணமாக இருக்கிறது! அழகைப் பார்த்தாகிவிட் டது..குணத்திலோ?..எனக்கு ஒன்றும் விளங்கவில்லை..போ. அவரவர் குணங்களையும் குற்றங்களையும் நான் எப்படிக் கண்டறிய முடியும்?.... சாக எனக்கு ஏனோ தைர்யம் வரவில்லை? அடி பாபி! உன் மூளையை ஏன் இப்படிக் கலக்கிக் கொள்கிறாய்? நீ இதையெல்லாம் உண்மை யென்று எண்ணுகிறாய்?..கமலமணி என்னை ஏன் கல்கத்தாவிற்கு வரும்படி அழைக்கிறாள்? எனக்குப் பிடிக்கவில்லையே. அவரைப் பாராது எப்படி உயிர் தரிப்பேன்? நான் போகமாட்டேன்—போகமாட்டேன். ஊஹூம், ஊஹூம்.. போகாது இங்கே இருந்துதான் என்ன பிரயோஜனம்....? என்னை அவர் கண்ணெடுத்துப் பார்ப்பாரா? என்மேல் க்ருபாகடா க்ஷம் விழுமா? கமலமணி சொல்வதில் உண்மை இருந்தால், எனக்கு நன்மையைச் செய்தவளுக்கு நான் ப்ரத்யுபகாரமாகத் தீங்கே இழைக்கிற மாதிரி ஆகவில்லையா? ஸூர்யமுகியின் மனம் இதனால் துயரப்படுகிறதோ? இதில் என்ன அதிசயம்? பொய்யோ, மெய்யோ, நான் கல்கத்தாவிற்குச் சென்றால் எல்லாருக்கும் க்ஷேமம். ஆனால் என் மனம் இடம் கொடுக்கவில்லையே. நான் குளத்தில் விழுந்து இறப்பதே உத்தமம்..எனக்கு மூச்சுத்திணறுமே..? அடி அம்மா, இந்தமாதிரித் துன்பம் அனுபவிப்பதற்காகவோ என்னை விட்டுச் சென்றாய்?"—குந்தம் தன் முகத்தை இரு மலர்க்கரங் களாலும் மூடிக்கொண்டு விம்மி விம்மி அழத்தொடங்கினாள்.

அப்போது இருட்டில் தோன்றும் மின்னொளி போல், பழைய ஸ்வப்னத்தின் நினைவுகள் சுத்தமாக அவள் மனதின்கண் மூண்டன. வித்யுத் (மின்சார) ஸ்பர்சம் பட்டவள் மாதிரி குந்தம் சட்டென்று எழுந்துநின்றாள். "நான் இதுவரை எல்லாவற்றையும் மறந்து இருந் தேனே. ஏனோ எனக்கு இந்த மறதி? என் கதி இப்படியாகு மென்றுதான் அம்மா அப்பவே என்னை நக்ஷத்திரலோகத்திற்கு

அழைத்தாள். நான் ஏனே போக மறுத்துவிட்டேன்? அந்தச் சமயமே போயிருந்தால் இவ்வளவு தூரத்திற்கு.....சரி, நான் சாகத் துணிந்துவிட்டேன்" என்று நெஞ்சொடு மொழிந்து, படிகளின் வழியாகக் கீழே இறங்க ஆரம்பித்தாள். இயற்கையிலேயே மிரட்சியையுடைய அந்த அபலையின் உடல் அடிக்கடி நடுங்கிற்று. ஜலத்தின் ஸமீபம் வரவர அவளுடைய கால்கள் தடுமாறின. ஆனல் மனதில் கொண்ட ஸங்கல்பத்தை விடாமல் அதை நிறைவேற்றக் குளத்தில் இறங்கினுள். அச்சமயம் பின்புறமாய் யாரோ சந்தடி செய்யாமல் வந்து அவளுடைய முதுகை மெதுவாகத் தொட்டு,



"குந்தா" என்று கூப்பிடுவது போலிருந்தது. அந்தக் கும்மிருட்டில், தன் பின்னுல் நிற்பது நகேந்த்ரன் என்று கண்டு கொண்டாள்

குந்தம்..அன்று தான் சாவதாகக்கொண்ட பிரதிக்ஞையை விட்டு விட்டாள்.

நகேந்த்ரனு? இத்தனைநாள்வரை நீ ஒழுங்குதவறி நடந்த தில்லையே! நீ கற்றதின் பயன் இதுதானே? சீ..சீ..நீ சோரன்—சோரனைக் காட்டிலும் ஹீனன். ஸூர்யமுகியின் உடமைகளைத் திருடினாலும் பாதகமில்லை..உன் கள்ளத்தனம் அவள் பிராணனுக்கு ஹானியை விளைவிக்குமே? உன் வசம் ஸூர்யமுகி தன் ஸர்வமும் கொடுத்து விட்டாளே..அதற்குப்பதிலா இது? நீ திருட்டுத்தன மாகச் செல்வது ஏனோ? நகேந்த்ரா! இதைவிட நீ சாகலாமே. நீ மானியானால் இப்பொழுதே குளத்தில் விழுந்து மரிப்பாய்!

குந்தநந்தினி! இந்தக் கள்ளனுடைய ஸ்பர்சம் பட்டா உன் மெய் சிலிர்க்கிறது? பேதாய்! இவனுடைய ஸ்பர்சத்தைக் காட்டி லும்—இதோபார்—குளத்து நீர் குளுமையாக இருக்கிறதே! இவனுடைய மனதைக்காட்டிலும் பரிசுத்தமாய் இருக்கிறதே! இவன் இழைக்கும் விஷத்தைக் காட்டிலும் அது உனக்கு அம்ருத மயமாகத் தோன்றவில்லையா? நீரில் தெரியும் நக்ஷத்திரங்கள்கூட உன்னைப் பார்த்துத் துயரம் தாளாமல் துடிக்கின்றனவே? சாகிறாயா? விழுந்துவிடு...குந்தநந்தினி! உனக்கு இறக்க மனம் வரவில்லையா என்ன?

நகேந்த்ரன், "குந்தம், நீ கல்கத்தாவிற்கா போகிறாய்?" என்றான். குந்தம் பதிலே பேசவில்லை; கண்களில் ஊறும் நீரை உதறித் துடைத்துக்கொண்டாள். கள்ளன் மறுபடியும் "குந்தா! நீ இஷ்டப்பட்டுத்தானே போகிறாய்?" என்று கேட்டான்.

இஷ்டப்பட்டா? ஹரிஹரி! குந்தம் நீரைத் துடைத்தாளே யொழிய பதில் ஒன்றும் சொல்லவில்லை. "குந்தா, ஏன் அழுகிறாய்?" நகேந்தரனுடைய இவ்வசனத்தைக் கேட்டுக் கோடைப்புயலென்ன குந்தநந்தினியின் கண்களில் நீர் துளித்தது..தேம்பித்தேம்பி அழ ஆரம்பித்தாள். "இதைக்கேள்..குந்தா! நான் இதுவரை எவ்வளவோ கஷ்டப்பட்டு அடக்கிப் பார்த்தேன்..ஆனால் என் னால் முடியவில்லை. உயிரை ஏன் வைத்துக் கொண்டிருக்கிறேன் என்றுகூடச் சில சமயம் எனக்குத் தோன்றுகிறது. என் மனதோடு நான் போராடியது ஸர்வேச்வரனுக்குத்தான் தெரியும். (காமுகனுக்குக்கூடவா ஈச்வரன் உண்டு!) உன்னை மறந்துவிட மதுபானத்தில் ஆறுதலைத் தேடினேன். அதனாலும் முடியவில்லை. உன்னை விட்டு அரைக்கணமும் பிரியமுடியாது. குந்தா! என்னைத் திரும்பிப் பாரேன். விதவா விவாகம் பண்ணிக்கொள்வதில் ஒரு தவறுமில்லை. இந்தக்காலத்தில் அது ஸஹஜமாய்விட்டது. நான்

உன்னை மணந்துகொள்ள விரும்புகிறேன். நீ உத்தரவு கொடேன்'' என்று உருக்கமாக மொழிந்தான் நகேந்தரன்.

குந்தநந்தினி அப்போது வானத்தை நோக்கிய வண்ணம் ''மாட்டேன்'' என்றாள்.

மீண்டும் நகேந்த்ரன், ''ஏன்? குந்தா! விதவா விவாஹம் சாஸ்த்ரத்திற்கு விரோதமென்றா?'' என்று வினவினான். குந்தம் தலையைஅசைத்து, ''மாட்டேன்''என்றாள். ''ஏன்மாட்டேனென்று சொல்லுகிறாய்? குந்தா! என்னை மணந்துகொள்ள மாட்டாயா? . .சொல்லேன். சொல்லேன். நான் உன்னை மனப்பூர்வமாக நேசிக்கிறேனே'' என்றான் நகேன்.

''மாட்டேன்'' என்றாள் குந்தம்.

அப்போது எவர் மனதையும் உருக்கும்படி, ப்ரேமையின் ஆர்வத்துடன், பல இன்மொழிகளைக் குந்தநந்தினியிடம் மொழிந்தான் நகேந்த்ரன். அப்பொழுதும் குந்தம் ''மாட்டேன்'' என்றாள்.

அந்த க்ஷணம், குளத்து ஜலம் நிர்மலமாகத் தண்மையுடன் விளங்க, நாற்றிசையும் பூவின் மணம் கமழ்ந்து தென்றல் உலவ, விண்மீன்கள் படிக ஜலத்தில் துடிப்பதைப் பார்த்து நகேந்த்ரன் ''ஆஹா! இந்த சீத ஜலத்தில் படுக்கைகொண்டு உயிரை விட்டால் எவ்வளவு இன்பமாக இருக்கும்?'' என்றான்.

குந்தம் அப்பொழுதும் ''மாட்டேன்'' என்று வானைநோக்கிய படி கூறினாள்.

விதவா விவாஹம் சாஸ்த்ர ஸம்மதமானதல்ல வென்பதற்கு 'மாட்டேன்' என்றாளா? பின் எதற்கு? ஒரு வேளை, 'நகேந்த்ரனைக் குளிர்ந்த நீரில் மரிக்க விடமாட்டேன்' என்று சொன்னாளோ என்னவோ? ஆனல் குந்தநந்தினி குளத்தில் விழுந்து ஏன் மடியவில்லை? குளிர்ந்த, படிகம் போன்ற, ஜலத்தில் நக்ஷத்திர பிம்பங்கள் துடித்தன. குந்தம் நீரில் விழுந்து ஏனோ உயிரை விடவில்லை?

## பதினேழாம் அத்தியாயம்

### விபரீதமாக முடிந்த வேவு

தன்னுடைய இடத்திற்கு வந்ததும் ஹரிதாஸி வைஷ்ணவி மறுபடியும் தேவேந்த்ரபாபுவாக மாறிவிட்டாள். வேலைப்பாடு அமைந்த வெள்ளி ஹுக்காவின் சுருள்-குழாய் தேவேந்த்ரனுடைய அதரபானத்திற்காக ஏங்கி உதட்டை நீட்டிற்று. ஹுக்காவின்மேல் நெருப்பு சுடுமணிபோல் ஜ்வலித்துக் கொண்டிருந்தது. பக்கத்தில் ஒரு படிகப் பாத்திரத்தில் எக்ஸ்ஷா

(*Exshaw*) என்னும் மதேச்வரீ பொன்னிறகாந்தியுடன் தளும்பிக் கொண்டிருந்தாள். மூலையில் பூனை ஒன்று, தேவேந்த்ரன் வழக்க மாகப் போடும் இரைக்காகக் காத்துக்கொண்டிருந்தது. அடிக் கடி தூக்கம் அதன் கண்களை அழுத்தியது. இதற்குள் ஹுக்கா விற்கும் எக்ஸ்ஷாவிற்கும் பொறுமை மேலிட்டு, மனஸ்தாபம் உண் டாயிற்று. "இதோ நான் உன்னை முன்னதாகவே ஆச்ரயித்தேன். முத்தம் கொடுக்க உதட்டையும் நீட்டினேன். என்னைத் தான் நீ முதலில் கவனிக்கவேண்டும்" என்றது ஹுக்கா, தேவேந்த்ரனைப் பார்த்து. மதேச்வரிக்கு இது தாளவில்லை— "என்னைப்பார், என் சுவையைப்பார். முதலில் என்னைக் கவனி" என்றது பாத்திரத்தில் நுரை கொப்புளிக்க. "நான் இருக் கிறேனே ஒரு ஜீவன், கண் தெரியவில்லையா?" என்று கூறுவது போலிருந்தது பூனையின் முகபாவம்.

தேவேந்த்ரபாபு யாரையும் விட்டுக்கொடுக்கவில்லை; எல்லோ ரையும் சமமாகவே பாவித்தான். த்ரோக சிந்தனையில்லாமல் ஹுக் காவின் சுருள்குழாயை வாயில் வைத்தான். ஹுக்காவின் ப்ரேமை தூமாகாரமாக அவனைக் கவிழ்ந்து சென்றது. எக்(ஸ்)ஷேச்வரியை ஆதரித்து வயிற்றில்விட்டான். அவளுடைய மையல் தேவேந்த்ர னுடைய தலைக்கேறியது. மிகுந்திருந்த ஸுராவை ஒரு தட்டில் ஊற்றிப் பூனைக்கு வைத்தான். பூனை அதைப் பருகி மதுமயக்கத்தால் குறட்டைவிட ஆரம்பித்தது. வேலையாட்கள் மார்ஜாலஸ்வாமியை அப்புறப்படுத்தினர்—அதன் நாஸிகாத்வனி பாபுவின் நிஷ்டையைக் கெடுக்கக் கூடுமல்லவா?

அதே சமயம், ஸுரேந்த்ரன் தேவேந்த்ரனைக்காண அங்கு வந்தான். க்ஷேம ஸமாசாரங்களைக் கேட்டுக்கொண்ட பிறகு, ஸுரேன் தன் நண்பனை விளித்து, "தேவேன், மறுபடியும் எங்கு போயிருந்தாய்?" என்று கேட்டான்.

தேவேன்: இதற்குள் உன்காதிற்கு இதை யார் எட்ட விட் டார்கள்?

ஸுரேன்: பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகம் அஸ்த மித்து விடுமா? நீ மறைத்துவைத்தாலும் ஊர் முழுவதும் உன்னைப் பற்றித் தமுக்கு அடிக்கிறதே!

தேவேன்: ஸ்வாமி ஸாக்ஷியாக நான் எதையும் ஒளிக்கவில்லை. எந்தத் தடிப்பயலுக்கு நான் பயப்படவேண்டும்?

ஸுரேன்: இந்தமாதிரி சொல்லிவிட்டதனால் நீ ரொம்ப கெட்டிக்காரன்தான்! வாஸ்தவத்தில் உனக்கு மானம், ஹீனம் இருந்தால், இந்தமாதிரி நான் சொல்லும்படி வைத்துக்கொள்ள

மாட்டாய். உடம்பில் வெட்கமிருந்தால் வைஷ்ணவிவேஷம் போட்டுக்கொண்டு ஊர் சுற்றப் போவாயா?

தேவேன்: ஸாதாரண வைஷ்ணவியின் வேஷமா? ரஸிகையான வைஷ்ணவி அல்லவா! என் நெற்றியில் ரஸகலி இன்னும் நன்றாக மறையவில்லை பார்?

ஸுரேன்: உன் பாழும் மூஞ்சியை நான் இன்னும் சரியாகக்கூட கவனிக்கவில்லை. நான்மட்டும் உன்னைக் கையும் பிடியுமாக அந்த வைஷ்ணவியின் உடையில் கண்டுபிடித்திருந்தேனானால் சவுக்கு முறிய விளாசியிருப்பேன்.

தேவேந்த்ரனுடைய கையிலிருந்த மதுபாத்திரத்தைப் பிடுங்கிக்கொண்டு ஸுரேந்த்ரன் மீண்டும் தொடங்கி, "உன் புத்தி ஸ்வாதீனத்தில் இருக்கும்போதே நான் இரண்டொரு வார்த்தைகள் பேச வேண்டியிருக்கிறது. அப்புறம் நீ குடிக்கிறாயோ, எக்கேடு கெடுகிறாயோ, அதைப்பற்றி எனக்கு அக்கரையே இல்லை" என்றான்.

தேவேன்: சொல்லு. இன்றைக்கு ஏன் இப்படி சிடுசிடுவென்று எரிந்து விழுகிறாய், ஸுரேன்? ஹைமவதியின் காற்று உனக்கும் அடித்து விட்டதா என்ன?

இந்தத் துன்மார்க்கன் சொல்லுவதைக் காதில் போட்டுக்கொள்ளாமலே ஸுரேன், "யாரைக் கெடுக்கவடா இந்தப் புது வேஷம்?" என்றான்.

தேவேன்: அது உனக்குத் தெரியாதா என்ன?—ஞாபகம் இருக்கிறதா, ஸுரேன், நம்ம தாராசரண் தேவகன்னிகையைப் போன்ற ஒரு கட்டழகியைக் கல்யாணம் பண்ணிக்கொண்டானே—அவள் இப்போது விதவையாகி விட்டாள். தத்தர்மாளிகையில் வாடி வதங்குகிறாள் பாவம்! அவளைப் பார்க்கத்தான் போயிருந்தேன்.

ஸுரேன்: அடே, உன்னிடம் இருக்கிற துர்நடத்தைகள் போதாமல், அந்த அநாதைப் பெண்ணை நாசம் பண்ணத் துணிந்து விட்டாயா? தேவேன், நீ மஹா—பாதகன். உன்னோடு ஸ்நேகம் பண்ணுவது கூட மகா பாபம்.

இம்மாதிரி தன் ஆப்த நண்பன் கண்டித்துக் கூறுவதைக் கேட்டுக்கொண்டே முகம் சுண்டி மௌனமாக இருந்தான் தேவேந்த்ரன். சற்றுநேரம் கழித்து தேவேந்த்ரன் தன்னைச் சமாளித்துக்கொண்டு, லஜ்ஜையில்லாமல், "என்மேல் நீ கோபித்துக் கொள்ள வேண்டாம். என் சித்தம் என்னுடைய ஸ்வாதீனத்திலேயே இல்லை. நான் எதை வேண்டுமானாலும் விட்டுவிடுகிறேன். ஆனால் அந்த ஸ்த்ரீயின்மேல் மூண்ட மோகத்தை விடமுடிய

வில்லையே. அன்று தாராசரண் வீட்டில் அவளைக் கண்டதுமே நான் அவளுடைய திவ்ய ஸௌந்தர்யத்தின் ஆகர்ஷணையில் அகப்பட்டுக் கொண்டேன். ஜ்வரம் எப்படி நோயாளியை வாட்டுகிறதோ, அதுபோல் இவளைப்பற்றிய நினைவும் என்னைத் தஹிக்கிறது. அவளை அடைய நான் செய்த சூழ்ச்சிகளுக்குக் கணக்கே இல்லை. இன்னும் அவளை அடையும் பாக்கியம் எனக்குக் கிட்ட வில்லை. கடைசியில் எனக்கு ஒரு யோசனை உதித்தது. வைஷ்ண வியின் வேஷம் பூண்டு அவளை நெருங்குவதே சரி என்று துணிந்து தத்தர் அந்தப்புரத்திற்குச் சென்றேன். ஆனால் அந்தப்பெண்ணை நெருங்கும்போது அவள் நெருப்பாகத் தோன்றினாள். அவ ளுடைய சீலம் எனக்கு பயத்தை மூட்டியது" என்றான்.

"அப்படி இருக்கும்போது நீ ஏன் மறுபடியும் அங்கு போனாய்?"

"வேறு எதற்கு—அவளைக் கண்குளிரப் பார்ப்பதற்கே. அவளோடு இரண்டு பேச்சுப் பேசுவதற்காகத்தான்—பாட்டுப்பாடி அவள் மனதைக் கவரத்தான்."

"அடே, இதோ சொல்லிவிடுகிறேன். விளையாட்டாகச் சொல்லுகிறேன் என்று எண்ண வெண்டாம். நீ அந்த அபலை யைக் காண மறுபடியும் அங்கு போவாயானால், உன் முகத்தில் அப்புறம் விழிக்கவே மாட்டேன். ஜன்ம ஜன்மத்திலும் உனக்கும் எனக்கும் உள்ள சம்பந்தம் அற்றுப்போய்விடும். மேலும், உன்னை இஷ்டப்படி செய்ய விட்டுவிடுவேனென்று எண்ணாதே. உன் தீய செயல்களைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளெல்லாம் செய் வேன், பத்திரம்."

"நீ ஒருவன்தான் எனக்கு ஆந்தரீகமானவன். என் ஆஸ்தி யில் பாதிவேண்டுமானாலும் கொடுத்து விடுவேனே யொழிய உன்னை விட்டு நான் பிரியேன். உன்னைத் துறக்கவேண்டி எனக்கு விதி இருந்தால் நான் என்ன செய்வது?—ஆனால் குந்தநந்தினியை மாத்திரம் நான் பாராமல் இரேன்."

"அப்படியா?—இதோடு உனக்கும் எனக்கும் சம்பந்தம் அறுந்துவிட்டது" என்று மொழிந்து ஸுரேன் துயர்பட்ட மனத்துடன் அவ்விடத்தை விட்டகன்றான்.

தன் ஒரே ஸ்நேகிதனின் அன்பைப் பறிகொடுத்த துக்கத்தில் ஆழ்ந்து சிறிதுநேரம்வரை தேவேந்த்ரன் சிலைபோல் உட்கார்ந்திருந் தான். மனதில் ஏதோ ஒரு முடிவிற்கு வந்தவனாய், "சே, கிடக் கிறது. இந்த வாழ்வில் எனக்கு என்னதான் ஸுகம் இருக்கிறது? எனக்கு நானேதான்—" என்று நெஞ்சொடு கூறி ஒரு 'கிளாஸ்

டம்ப்ளர்' பிராந்தி பருகினுன். அதனுல் அவனுடைய கலங்கிய சித்தம் சற்று நிம்மதியை அடைந்தது. தேவேந்த்ரன் படுக்கையில் படுத்துக்கொண்டு கண்களை மூடியவண்ணம் பாட ஆரம்பித்தான்.

* 'ஆமார் நாம ஹீரா மாலினி
ஆமி தாகி ராதார் குஞ்ஜே, குப்ஜா ஆமார் நநதினீ
ராவண பலே சந்த்ராவளீ
துமி ஆமார் கமலகலி
சுனே கீசக மேரே க்ருஷ்ண
உத்தாரிலோ யாக்ஞஸேனீ'

தேவேந்த்ரனுக்குக் குடிவெறி அதிகமாவதைக் கண்டு அவனுடைய ஸகாக்கள் ஒவ்வொருவராக எழுந்து போயினர். தேவேந்த்ரன் தனிமையாக அங்கு இருப்பது, படகுகளே இல்லாமல் சூன்யமாய் இருக்கும் அகண்ட நதிநடுவே அலையும் மரத் துண்டுபோலிருந்தது. மது வாரிதியில் மூழ்கி மூழ்கி எழுந்து கொண்டிருந்தான். அவன் லாஹிரியில் அமிழ்ந்திருந்தபோது அவனை வாட்டிய நோய்களான மகர திமிங்கலங்கள், அதல ஜலத்தில் மறைந்திருந்தன; அவைகள் இன்னும் வெளிக் கிளம்பவில்லை. இன்ப ஸாகரத்தில் நீந்தும் அவனுக்குச் சுற்றிலும் நிலவு தேன் பொழிவது போலவும், மணம் ஏந்தி ம்ருதுவாகத் தென்றல் வீசுவது போலவும், ப்ரமை ஏற்பட்டது. அப்போது ஜன்னலுக்கு அருகில் 'கட்கட்' என்று சப்தம் கிளம்பிற்று. யாரோ மெள்ள இலைக்கதவைத் திறந்து பார்த்துவிட்டுச் சட்டென்று மூடிவிட்டது தெரிந்தது. குடிமயக்கம் சற்றுக்கலைந்து தேவேந்த்ரன், "யாரது கதவை அசைக்கிறது?" என்ருன். ஓர் உத்தரமும் வராததால் ஜன்னலுக்கு அருகில் வந்து பார்த்தான். ஒரு பெண்ணுருவம் அவ்விடத்தை விட்டுச் செல்லக்கண்டான். தேவேந்த்ரன், சாளரத்தைத் திறந்து தோட்டப்புறத்தில் குதித்துத் தள்ளாடிக்கொண்டே அவளைத் துரத்த ஓடினுன்.

அந்தப்பெண் அவன் கையில் சிக்கிக்கொள்ளாமல் ஸுலபமாகவே ஓடியிருக்கலாம். ஆனுல் அவள் அந்த மாதிரி செய்யவில்லை. ஒருவேளை இருட்டில் அவள் தோட்டத்திலிருந்து செல்லும் வழி தவறி விட்டாளோ என்னவோ! தேவேந்த்ரன்

*என் பேர் தோட்டக்காரி ஹீரா. ராதாவின் குஞ்ஜத்தில் இருக்கிறேன் நான்; கூனி என்னுடைய நாத்தி. சந்த்ராவளியை நோக்கி ராவணன் 'என் கமலமொட்டே' என்று அழைக்கிருன்; இதைக் கேட்டு கீசகன் க்ருஷ்ணனைக் கொன்று த்ரௌபதியை மீட்டான்.

அவளைப் பிடித்துக்கொண்டான். இருட்டில் அவள் முகம் நன்ருக விளங்கவில்லை. மதுவெறி இன்னும் சரியாக நீங்கவில்லை அவனுக்கு. "அப்பா, எந்த மரத்துப் பேயோ" என்று குழறினன். அவளை வீட்டினுள் இழுத்துவந்து விளக்கைத்தூண்டி, "யாரடி, எந்த சூன்யக்காரியடீ?" என்ருன். ஆளுக்குக் கொஞ்சம் கிலிதான். மறுபடியும் ஒன்றும் தோன்றாதவனுய், "ஐயோ! என்னுல் முடிய வில்லையே. நீ போய்விடேன். வரும் அமாவாசைக்கு உனக்குப் பொங்கல் இடுகிறேன். அம்மா காட்டேரி! இன்றைக்கு இந்தப் பிராந்தியை மட்டும் குடித்துவிட்டுப் போ.." என்று கூறி அவளை ஒரு சோபாவில் உட்காரவைத்து 'டம்ப்ளர்' நிறைய பிராந்தியை ஊற்றி அவளிடம் நீட்டினன்.

வந்த ஸ்த்ரீ அதை வாங்கிக் கீழே வைத்து விட்டாள். அப்போது வெறியன் விளக்கை எடுத்துப் பெண்மணியின் முகத்திற்கு நேராகப் பிடித்தான். மறுபடியும் விளக்கை அறையின் ஒவ்வோரு மூலையிலும் வைத்து, அவளைப் பல திக்குகளிலிருந் தும் நோக்கினன். அப்போது அவன் கண்களில் ஒளியே இல்லை; அவை ஈயம்போல் விளங்கின. சட்டென்று விளக்கை நகர்த்தி விட்டு, "நீ யார்? உன்னை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதே?" என்ருன் சற்று புத்திஸ்வாதீனத்துடன்.

தான் யாரெனக் கண்டுபிடித்துக்கொண்டான் என்று எண்ணியவளாய் அந்தப் பெண்மணி, "நான்தான், ஹீரா" என்று மொழிந்தாள்.

"*Hurrah! Three cheers for* ஹீரா" (ஹீராவுக்கு ஜே! ஜே! ஜே!) என்று கூவிக் குதித்தெழுந்தான். உடனே பூமியில் விழுந்து, கையில் பிராந்திப் புட்டியுடன் ஸாஷ்டாங்கமாய் அவளை நமஸ்கரித்து ஸ்தோத்ரம் பண்ண ஆரம்பித்தான்:

*நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோநம:
யா தேவீ வட விருக்ஷேஷு சாயா ரூபேண ஸம்ஸ்திதா—(நமஸ்...நம:)
யாதேவீ தத்த க்ருஹேஷு ஹீரா ரூபேண ஸம்ஸ்திதா—(நமஸ்...நம:)
யாதேவீ புஷ்கர காடேஷு சுபடி ஹஸ்தேன ஸம்ஸ்திதா—(நமஸ்...நம:)
யாதேவீ சர த்வாரேஷு ஜாண்டா ஹஸ்தேன ஸம்ஸ்திதா—(நமஸ்...நம:)
யாதேவீ மம க்ருஹேஷு பேத்னீரூபேண ஸம்ஸ்திதா—(நமஸ்...நம:)

---

எந்த தேவி ஆலமரத்தில் நிழல்வடிவாக வாழ்கிருளோ,
எந்த தேவி தத்தர் வீட்டில் ஹீராவாக விளங்குகிருளோ,
எந்த தேவி குளக்கரையில் கூடையுடன் தோன்றுகிருளோ,
எந்த தேவி துடைப்பம் கொண்டு வீட்டுவாசலில் நிற்கிருளோ,
எந்த தேவி என் க்ருஹத்தில் பேயாக வந்திருக்கிருளோ,
*அவளை நான் வணங்குகிறேன், வணங்குகிறேன்......

"அப்புறம் தோட்டக்கார மாமி வந்தாள்..உனக்குத் தெரியுமா?" என்று பிதற்றினன்.

வைஷ்ணவியைப் பின்தொடர்ந்துவந்து, ஸாமர்த்தியக்காரி ஹீரா, தேவேந்த்ரபாபுவும் ஹரிதாஸி வைஷ்ணவியும் ஒரே ஆள் என்று தெரிந்துகொண்டாள். தேவேந்த்ரன் எதற்காக தத்தர் வீட்டிற்கு வந்துபோய்க்கொண்டிருக்கிறான்? இதன் மர்மத்தை அறிவது சற்றுக் கஷ்டம்தான். ஸாஹஸ சித்தமுடைய ஹீரா, தேவேந்த்ரனுடைய வீட்டிற்கு வேவுபார்க்க வந்தாள். அவள் அவனுடைய அறையின் சாளரத்தின் அருகில் நின்றுகொண்டு, தேவேந்த்ரனுக்கும் ஸுரேந்த்ரனுக்கும் நடந்த சம்பாஷணையை அக்ஷரம் விடாமல் ஒட்டுக் கேட்டாள். தான் வந்த கார்யம் பலித்துவிட்ட ஸந்தோஷத்தினால் குதித்துக்கொண்டே அவள் திரும்பும்போது, தற்செயலாக அவளுடைய கை சாளரத்தின் இலைக்கதவின்மேல் உராய்ந்தது. ஹீரா திடுக்கிட்டுத் தன்னை யாராவது பார்த்துவிடப் போகிறார்களே என்று பயந்து அவ்விடத்தை விட்டுத் துரிதமாகப்போகத் தலைப்பட்டாள். அப்புறம் தான் தேவேந்த்ரன் அவளைத் துரத்திக்கொண்டு ஓடிவந்து பிடித்தது எல்லாம். ஹீரா தேவேந்த்ரனுடைய பிடியிலிருந்து தப்பி ஓடிவிட ஸமயம் பார்த்துக்கொண்டிருந்தாள். தேவேந்த்ரன் அவள் கரத்தில் பூர்ணமான மதுபாத்திரத்தைக் கொடுத்தான். "நீங்களே அருந்துங்கள்" என்றாள் ஹீரா தட்டிக்கழிக்க. அவள் சொன்னது தான் தாமதம், ஒரே விழுங்கில் பாத்திரத்தைக் காலி செய்தான் தேவேன். அந்த விழுங்கே பூரா மயக்கத்தை அவனுக்கு உண்டுபண்ணிற்று. இதுதான் தருணமென்று ஹீரா ஓட்டம் பிடித்தாள்.

தேவேந்த்ரனுடைய தலை தொங்கலிட்டது. படுக்கையில் சாய்ந்து குடியின் தென்பினால் சாளரத்தின் இலைக்கதவில் தாளம் போட்டுக்கொண்டே மீண்டும் ஸங்கீதத்தை எடுத்துவிட்டான்.

*'வயஸ் தாஹார் பசர் ஷோலோ
தேக்தே சுன்தே காலோ கோலோ
பிலே அக்ரமாஸே மோலோ
ஆமி தகன் காஞய் பொடே.'

---


*வயது பதினாறுள்ள இளவயது மங்கை,
கன்னங்கரேலென்றிருப்பாள் பார்வைக்கு,
மார்கழிமாதம் இறந்துபோனாள், குடலில் ரக்த நோய் கண்டு,
நான் பள்ளத்தில் விழுந்த அன்று.

அன்றிரவு ஹீரா நேரே ஸூர்யமுகியிடம் செல்லாமல் தன்னகத்திலேயே படுத்துக்கொண்டாள். மறுநாள் பொழுது விடிந்ததோ இல்லையோ நடந்தவை யாவும் ஸூர்யமுகியிடம் பகர்ந்தாள். தேவேந்த்ரன் குந்தநந்தினியைப் பார்க்கவே வைஷ்ணவி வேஷம் போட்டுக்கொண்டு வந்தான் என்னும் விஷயத்தை அவள் அழுத்தமாகக் கூறி முடித்தாள். குந்தம் நிரபராதி என்று ஹீரா கூறவில்லை. ஸூர்யமுகியும் இதைப் பற்றி விசாரிக்கவில்லை. ஏன் ஹீரா இப்படி இதை மாத்திரம் மறைத்துக் கூறவேண்டும்? குந்த நந்தினியைக் கெடுப்பதில் இந்தத் தாமரை இதழ்க் கண்ணிக்கு என்ன உத்ஸாஹமோ? ஸூர்யமுகியும் கண்ணால் பார்த்திருக்கிறாள் குந்தம் வைஷ்ணவியுடன் கலந்து பேசுவதை. அதனால் ஸூர்ய முகிக்கு அவள்மேல் ஸந்தேஹம் ஏற்பட்டது. ஏற்படுவது ஸஹஜம்தானே!

ஹீராவின் பேச்சைக் கேட்டதும் ஸூர்யமுகியின் நீலோத்பல விழிகள் சிவந்து போயின. அவளுடைய நெற்றியிலுள்ள நரம்புகள் தடித்து, மனதில் செல்லும் ஒரு விகார உணர்ச்சியைக் காட்டின. கமலமணியும் இந்த சமாசாரத்தைக் கேட்டாள். ஸூர்யமுகி குந்தநந்தினியை உடனே வரவழைத்து "அடி, குந்தம்! ஹரிதாஸி வைஷ்ணவி யார்? நிஜத்தைச் சொல்லு? அவளை உனக்கு எப்படித் தெரியும்? உன்னைப்போல் ஒரு வ்யவஸ்தை கெட்டவளை என் வீட்டில் வைத்துக்கொள்வது தகுதியல்ல. இப்பொழுதே என் வீட்டைவிட்டு நட! எங்கேயாவதுபோ. இல்லாவிட்டால் இதோ ஹீராவைக் கூப்பிட்டு துடைப்பம் கொண்டுஅடித்து வெருட்டச் சொல்வேன்" என்று சினம் பொங்கியவளாய்ப் படபட வென்று வார்த்தைகளைக் கொட்டி விட்டாள்.

குந்தநந்தினியின் தந்தக்கொடிபோன்ற சரீரம் நடுக்க முற்றது. அவள் மூர்ச்சித்துக் கீழே விழப்போவதைக் கண்டு, கமலமணி ஓடிவந்து பிடித்துக்கொண்டாள். குந்தத்தைப் படுக்க வைத்து ஆதரவு தோய்ந்த குரலுடன் அவளைத் தடவிக்கொடுத்து, "கண்ணே, நீ வருத்தப்படாதே. அவள் உன்பேரில், அந்தச் சிறுக்கியின் பேச்சை நம்பி, எது வேண்டுமானாலும் கூறட்டும்— நான் அதையெல்லாம் நம்பவில்லை.. என் குந்தநந்தினி!" என்று தேற்றரவு கூறினாள். அப்போது கமலமணியின் விழிக்கடையில் இரண்டு நீர்மணிகள் துடித்துக்கொண்டிருந்தன.

---




## தாயை மறவாதே!

சி. சோமசுந்தரம் பிள்ளை

---



தாயே உன்னைப்
பெற்றெடுத்தாள்,
தாயே உனக்குப்
பால் கொடுத்தாள்;



தாயே உனக்குச்
சோறூட்டித்
தன்னல மின்றி
வளர்க்கின்றாள்;



தாயே உனக்கு
நோய்வந்தால்
தக்க மருந்து
கொடுக்கின்றாள்;



தாயே உனக்குத்
தின்பண்டம்
தயவாய் செய்து
தருகின்றாள்;



தாயே உனக்குத்
தலைவாரிச்
சரியாய் அழகு
செய்கின்றாள் ;



தாயே உன்னைப்
பள்ளிக்குத்
தவறா தனுப்பி
வருகின்றாள் ;




தாயை என்றும்
மறவாதே ;
தாய்சொல் என்றும்
துறவாதே ;

தாயே கடவுள்
என்றெண்ணித்




தாயை வணங்கி
வாழ்ந்திடுவாய்.

# பா ல்



பசுவும் எருமையும்
பால்கறக்கும்,
பசுவின் பாலே
நோய்தீர்க்கும் ;

பாலைக் காய்ச்சிக்
குடித்திடலாம்,
பாயசஞ் செய்து
சாப்பிடலாம்.



பாலில் புரைமோர்
இட்டுவைத்துப்
பக்குவஞ் செய்தால்
தயிராகும் ;



தயிர்மேல் படிந்த
ஏடெடுத்துத்
தண்ணீர் விட்டுக்
கடைவதனுல்
வெண்ணெய் திரண்டு
மேலெழும்பும் ;
வெண்ணெயைச் சேர்த்து
வைத்தெடுத்துக்
காய்ச்சிக் கொண்டால்
நெய்யாகும்.
கடைந்த தயிரு
மோராகும்.

பாலும் சோறும்
தின்றிடலாம்,
பசுமோர் தயிரும்
குடித்திடலாம்.



பாலைச் சேர்த்துப்
பலகாரம்
பக்குவமாகச்
செய்திடலாம்.

---




## பந்தயப் புருக்கள்

அமெரிக்கா தேசத்திலுள்ள சாட்டநூகா என்ற நகரில், வருஷா வருஷம் நூதனமான முறையில், புருப் பந்தயம் நடைபெறுகிறது. ஆயிரக் கணக்கான சொந்தக்காரர்கள்—நாட்டுப்புறத்துக் குடியானவனிலிருந்து பட்டணத்தில் வசிக்கும் கோடீச்வரன் உள்பட யாவரும் அதில் கலந்து கொள்கின்றனர்.

பந்தய தினத்தன்று புருக்கள் புறப்படுமுன் அவற்றின் கால்களில் தனித்தனி அடையாளமிட்ட அலுமினியம் வளையங்கள் போடப்படுகின்றன. வளையம் ஒவ்வொன்றினுள்ளும் ஒரு ரகஸிய எண் இருக்கிறது. காலே எல்லோரும் நகர மைதானத்தில் கூடினதும், துப்பாக்கி வெடியோசை கேட்கும். உடனே சொந்தக்காரர்கள் தத்தம் கூட்டைத் திறந்து விடுவார்கள். சற்றுநேரம்வரை எங்குபார்த்தாலும் புருமயமாக விருக்கும். பிறகு புருக்கள் தெற்கும், மேற்கும், வடக்கும், கிழக்குமாக நாலா திக்குகளும் பறந்து செல்லும். ஒரு புரு ஒரு நிமிஷத்திற்கு சராசரி 1 மைல் வீதம் செல்லும். புயற்காற்றினல் தடை ஏற்படலாம்; பைரிகள் (புருவுக்கு விரோதமான அடப்பான் என்னும் பக்ஷிகள்) அவைகள் மீது பாய்ந்து கொன்று விடலாம்; ஷிகாரிகள் சுட்டுவிடலாம். ஆனல் இவ்வாபத்துக்களினின்றும் தப்பினல் அவை கட்டாயம் தம்மிருப்பிடத்தை வந்து அடையும், அது ஆயிரம் மைல் தூரத்திலிருந்த போதிலும் சரி.

புருக்கள் சரிவர வந்துசேரச் சொந்தக்காரர்கள், புருக்கள் அறிந்து கொள்ளும்பொருட்டு, தங்கள் வீட்டுக் கூரைகளுக்கு ஒரு தனி வர்ணம் கொடுத்து வைப்பார்கள். தூரத்தில் தங்கள் புருவோ புருக்களோ தெரியும் போதே சொந்தக்காரன் (அல்லது அவனைச் சேர்ந்தவர்கள்) மறைவாகப் போய்விடுவார்கள். ஏனென்றல், சில புருக்கள் திகிலினலும், கலவரத்தினலும் கொஞ்சத்தில் உள்ளே நுழையமாட்டா. தாமாகவே கிராதிபோட்ட கூட்டின் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைய அவற்றைப் பழக்கி இருக்கிறர்கள். கூட்டினுள் சென்றதும் கதவு தானகவே மூடிக்கொள்ளும். இதில் பழக்கமிராத புரு, அது எவ்வளவு தூரம்தான் பறப்பதில் சாமர்த்தியம் வாய்ந்ததாக விருப்பினும், பந்தயத்திற்கு லாயக்கானதல்ல வென்று கருதப்படும்.

புரு கூட்டில் நுழைந்ததும், இத்தனை நேரம் மறைவிடத்திலிருந்த சொந்தக்காரன், புருவின் காலிலுள்ள வளையத்தை எடுத்து ஒரு சிறிய சம்புடத்தில் வைத்து ஒரு புதுவிதமான கடிகாரத்தின் மேலுள்ள துவாரத்தின் வழியாக அதனுள் போட்டுவிட்டு, அதன் மீதுள்ள கைப்பிடியைச் சுழற்று

வான். கடிகாரம் தானாகவே, 'இத்தனை மணிக்குப் புறா வந்து சேர்ந்தது' என்று உள்ளே குறித்துக்கொள்ளும். இக்கடிகாரத்தைப் பந்தயத்திற்குமுன் மத்யஸ்தர்கள் பரிசோதித்துப் பார்த்த பிற்பாடுதான் உபயோகப்படுத்தலாம்.

புறாக்களுக்குத் தங்களுடைய கூடுகளின்மேல் மிகவும் பற்றுதலுண்டு. இதற்குச் சில அத்தாட்சிகள் கூறுகிறேன். அமெரிக்காவிலுள்ள ஒரு குடியானவன் அநேகம் புறாக்களை வளர்த்து வந்தான். ஒருசமயம் அவன் வீட்டில் புறாக்கூண்டுக்கருகில் நெருப்புப்பற்றிக்கொண்டது. கூட்டின் கதவைத் திறந்து அவன் புறாக்களையெல்லாம் வெளியே விட்டுவிட்டான். ஆனால் அவை திரும்பவும் அதிலே போய்ப் புகுந்துகொண்டன. அவற்றைக் காப்பாற்றக் குடியானவன் பட்ட பாடு சொல்லி மாளாது.

ஒரு புறா வளர்ப்பவன் தன் புறாக்கள் இரண்டைச் சில மைல் தூரத்திலுள்ள மற்றொருவனுக்கு விற்றான். புதிய சொந்தக்காரன் புறாக்களின் பறக்கும் இறகுகளைக் கத்தரித்து, வீட்டு முற்றத்தில் விட்டுவிட்டான். விற்றவன் எங்கெங்கெல்லாமோ சுற்றிவிட்டு வீட்டுக்கு வந்ததும், விற்றபுறாக்கள் அங்கே இருப்பதைக்கண்டு ஆச்சரியமுற்றான். அவையிரண்டும் நடந்தே வந்தன என்று தெரியவந்தது.

இதே மாதிரி பந்தயப்புறா ஒன்று பாதிவழியில் களைப்புற்று ஒரு வீட்டு முற்றத்தில் விழுந்துவிட்டது. அதன் பறக்கும் இறகுகளை அவ்வீட்டார் கத்தரித்து விடவே, அது ரொம்பநாள்வரை பறக்கச் சக்தியற்று இருந்து மீண்டும் இறகு முளைத்ததும் சொந்த இடத்திற்கு வந்து சேர்ந்தது.

பைபிளில் கூறப்படும் ஸாலமன் ராஜா காலத்திலேயே புறாப்பந்தயம் ஒரு முக்கியமான வேடிக்கையாகக் கருதப்பட்டு வந்தது. சமீபத்தில் நடந்த மகாயுத்தத்தில் இவ்விதப் புறாக்கள்தான் கடிதங்கள், செய்திகள், முதலியவற்றை ரகஸியமாக அனுப்புவதற்குகந்த சாதனங்களாக விருந்தன. காணாதுபோன ஒரு பெரிய பட்டாளத்தையே இவற்றின் உதவியால் கண்டுபிடித்தனர்.

நியூ யார்க்கிலுள்ள தினசரிப் பத்திரிகையின் சொந்தக்காரர் ஒருவர் புறாவொன்று வைத்துக்கொண்டிருக்கிறார். யாராவது பெரிய மனிதர் கப்பலில் வந்து இறங்கப் போகிறார் என்று தெரிந்தவுடன், முன்னாலேயே அவரைப் பேட்டி காணத் தம் புறாவையும் நிருபரையும் அனுப்பி விடுவார். நிருபர் கப்பலில் வந்தவரைப் படம் பிடித்ததும், புறா அதை விரைவில் காரியாலயத்தில் கொண்டுவந்து கொடுத்துவிடும். அப் பெரிய மனிதர் கப்பலிலிருந்து இறங்குவதற்குள்ளாகவே சற்று முன்னர்தான் பிடிக்கப்பட்ட அவர் படம் பத்திரிகையில் வந்து விடும்.

இதெல்லாம் கேவலம் ஒரு புறாவினால் செய்ய முடிகிறது ஓர் ஆச்சரியந்தான். சிலர் அவை நம்மைவிடக் கூர்ந்து கவனிக்கும் சக்தியுடையவை என்றும், சிலர் ஆகர்ஷண சக்தியானது தானாகவே அவற்றைத் தம்மிடத்திற்கு கொண்டு விடுகிறதென்றும் கூறுகின்றனர். விஞ்ஞானிகளோ இவ்விஷயத்தில் மௌனம் சாதிக்கின்றனர். எப்படியிருப்பினும் சரி, அவை இவ்வகண்ட வானில் வழி தவறாமல் பறந்து, காடு, நகரங்களைக் கடந்து

எத்தனையோ மைல் தூரத்திலுள்ள சொந்த இடத்தை அடைவது ஆச்சர்யத்திலும் ஆச்சரிய மன்றோ!

—பாபுலர் ஸையென்ஸ்.

## வேவுகாரர்கள்

கப்பற் படை, ஆகாயவிமானப்படை, முதலியவைகளின் பலம், புதிதாகத் தேசப் பாதுகாப்புக்காகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் யந்திரங்களின் மர்மம், இன்னும் இவை போன்ற அரசியல் முதலிய ரகஸியங்களை அறிய, அந்நிய நாடுகளைச் சேர்ந்த, விஞ்ஞான முறை தெரிந்த, நவநாகரிக வேவுகாரர்கள் அநேகம்பேர் அமெரிக்காவில் இருக்கின்றனர், இவர்களில் பெரும் பாலோர் ஜப்பானுடைய ஏவலாட்கள். இதற்குக் காரணம், அமெரிக்காவில் இந்த விஷயத்தில் சட்டம் அவ்வளவு கடுமையாக இல்லாததே. கீழ்வரும் செய்திகளிலிருந்து அவர்கள் எவ்வளவு திறமைவாய்ந்தவர்களென்று தெரியவரும்.


ஒரு ஹோட்டல் முதலாளி திடீரென்று இறந்துவிட்டான். டாக்டர் வந்து பரிசோதித்துப் பார்த்துவிட்டு அவன் மாரடைப்பினால் இறந்துவிட்டான் என்று கூறினர்.

அவருடன் இருந்த போலீஸ் உத்தியோகஸ்தர்களில் ஒருவன், "ஆமாம், அப்படித்தான் இருக்கும். அவனுக்கு விரோதிகள் யாருமே கிடையாது. கப்பற்படையைச் சேர்ந்தவர்களெல்லோரையும் அவனுக்குத் தெரியும். நல்ல மனுஷ்யன், பாவம்" என்றான்.

அச்சமயம் 'பஸ் பஸ் பஸ்' என்று என்னவோ சப்தம் கேட்டது. "ஐயோ! பிணம் ஏதோ பேசுகிறாப்போலே இருக்கிறது" என்று பயந்தடித்துக் கொண்டு ஓடினான் அப்போலீஸ் உத்தியோகஸ்தன். மற்றொருவன் கட்டிலருகில் சென்று, பிணத்தைக் கீழேவைத்து விட்டு, படுக்கையின் கீழ் கையை விட்டான். ஒரு பெட்டி யகப்பட்டது. அதில் ஒரு டெலிபோன் இருந்தது. 'ரிஸீவரை'க் காதில் வைத்துக்கொண்டு உற்றுக்கேட்டான். யாரோ அந்நியபாஷையில் பேசுகிறார்களென்று தெரியவந்தது. அந்த பாஷை யாருக்கும் தெரியாததால் தலைமைப் போலீஸ் உத்தியோகஸ்தன், ஆங்கிலத்தில், "ஐயா, இந்த ஆசாமி இறந்துவிட்டார். நாங்கள் அவருடைய நண்பர்கள்" என்றான்.

சற்றுநேரங் கழித்து அரைகுறை இங்கிலீஷில், "அப்படியானால் அவர் சாமான்களையெல்லாம் கலைக்காமல் வைத்திருங்கள். நான் இவ்விடத்திலுள்ள ஓர் அந்நிய நாட்டு ஸ்தானீகர். இதோ ஒருமணி நேரத்திற்குள் வருகிறேன்" என்று பேசுவது கேட்டது.

கொஞ்சநேரம் சென்றதும் அந்த ஸ்தானீகர் வந்து இறந்துபோனவரின் சாமான்களை எடுத்துக்கொண்டு போய்விட்டார். ஆனால் அதற்குமுன்னரே அரசாங்கத் துப்பறிபவர்கள் செத்தவன் வைத்திருந்த காகிதக்குவியல்களைப் பரிசோதனை செய்ததில் அமெரிக்கக் கப்பற்படை சம்பந்தமான சில ரகஸிய 'ப்ளான்' களும், செய்திகளும் இருக்கக்கண்டு அதையெல்லாம் போட்டோ பிடித்துக்கொண்டனர்!




[அடியிற்கண்ட புத்தகங்கள் மூன்றும் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரால் இயற்றப்பெற்றவை. திருவட்டீசுவரன் பேட்டை, தியாகராஜ விலாஸத்தில் கிடைக்கும். விலை, முறையே, அணா 8, 8, 9.]

**கனம் கிருஷ்ணையர்.** 'இந்திய மக்கள் சரித்திர உணர்ச்சி இல்லாதவர்' என்னும் ஏச்சுச்சொல் முற்றிலுந் தவறுனதென்று சொல்லிவிட முடியாது. சிறந்த முறையில் எழுதப்பட்ட சிற்சில சரித்திரக் கோவைகள் இருப்பது உண்மையே என்ருலும், நம் நாட்டின் விஸ்தீர்ணத்தையும், அதன் பல்வகைப் பெருமைகளையும், அதில் வாழ்ந்து வெவ்வேறு துறைகளில் மேம்பாடுற்ற பெரியோர்களின் எண்ணிக்கையையும் நோக்கும்போது, நமக்கு இவற்றைப்பற்றிக் கிடைத்திருக்கும் சரித்திர ஆதாரங்கள் மிகக் குறைவே என்பதை மறுக்கவொண்ணுது. ஐஹிக கீர்த்தியைச் சிறிதும் பொருட்படுத்தாது, தம் கடமையைத் திறம்படச் செய்துசென்ற கர்மவீரர் பலரைப்பற்றி நாமறிவதற்கேயில்லை. 50, 100 வருஷங்களுக்கு முன்னரே தான் இருந்தவர்களைப்பற்றிக்கூட நமக்குத் திட்டமாக ஒன்றும் அறிய முடிவதில்லை. இதனுல் நமது உள்ள வளர்ச்சிக்கு ஏற்படும் குறையையும், நமது நாட்டின் சிறப்பைப் பிறர் சரியானபடி உணர்வதற்குள்ள தடையையும் விவரித்துரைக்க வேண்டியது அவசியமில்லை.

இவ்வித சரித்திரஆதாரமின்மை எல்லாத் துறைகளுக்குமே பொது. என்ருலும், விசேஷமாகச் சங்கீத உலகில் அதிகம். நம் நாட்டு இசைக்கலை இவ்வளவு உயர்வடைந்திருப்பதற்கு மூல புருஷர்கள் எவ்வளவு பேர் இருந்திருக்கவேண்டும்? அவர்கள் யார் யார், எத்தகையோர், எப்பொழுது, எவ்வாறு, வாழ்ந்தார்கள், சங்கீதத்திற்கு எவ்வெவ்வகையில் பாடுபட்டனர், முதலிய விஷயங்கள் ஒன்றுமே நமக்குக் கிடைப்பதில்லை. இரண்டொரு கர்ண பரம்பரைக் கதைகளைத் தவிர வேறொரு செய்தியும் நமக்குக் கிட்டுவதில்லை. கனம் கிருஷ்ணையர் விஷயம் இதற்குப் போதுமான சாக்ஷி. இவர் சமீப காலத்தில் இருந்தவர். அக்காலத்திய சங்கீத உலகத்தில் மிகப் புகழ்பெற்றவர். கனமார்க்கத்தைத் தானே கற்றுத் தெளிந்து, யாவரும் வியக்கும்படி பாடிக் காட்டியவர். ராகபாவம் நன்கமைந்த அநேக கீர்த்தனங்களை இயற்றியவர். இவர் இவ்வாருன சிறப்புக்கள் பெற்றிருந்தும், இவரது பெயரும், கீர்த்தனங்களும் இவ்வளவு சுவல்ப காலத்துக்குள் அநேகமாக மறைந்துவிட்டன

வென்ருல், நமது ஜனங்களின் சரித்திர உணர்ச்சிக் குறைவையன்றி வேறெதைக் காரணமாகக் கொள்ளக்கூடும்? அகஸ்மாத்தாக, பாத நாட்டியத்தின் மறுமலர்ச்சி மூலமாக, இவரது கீர்த்தனைகளிற் சில வெளிவந்தன. இவற்றின் அழகைக் கண்ட சிலர் இவற்றை இயற்றியவரைப்பற்றி அறிய ஆவல் கொண்டனர். இது சம்பந்தமான விவரங்கள் எங்கும் கிடைப்பதரிது என்று கண்டனர்!

இத்தறுவாயில், ஐயரவர்கள் முன்வந்து கிருஷ்ணையரின் சரித்திரத்தையும், கீர்த்தனங்களையும் தொகுத்து வெளியிட்டது ஒரு பேருபகாரமேயாகும். ஐயரவர்களின் புத்தகத்தின் சிறப்புக்களைத் தமிழுலகுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. அவர்களது தெளிந்த நடையும், சுவைமிகுந்த விஷயங்களும், அவற்றின் வைப்பு முறையும் யாவருக்கும் மகிழ்ச்சி விளைக்கும் என்பதில் சந்தேகமில்லை. இத்தகைய அருமையான வெளியீடுகளைத் தமிழுலகம் ஆதரிக்காவிட்டால், அதற்கு ஒருவிதப் பிராயச்சித்தமுமில்லை.

இது சம்பந்தமாக மற்ருெரு விஷயமும் கவனிக்கத்தற்குரியது. ஐயரவர்கள் இசைக்கல்வி மிகுந்த பரம்பரையில் வந்தவர்கள்; சிறு பிராயம் முதல் சங்கீதத்தில் ஆர்வமும், பயிற்சியும் உடையவர்கள். கனம்கிருஷ்ணையர், ஐயரவர்களின் தகப்பஞரின் தாயாருக்கு அம்மான். ஐயரவர்கள் தந்தையார், கிருஷ்ணையரின் கீர்த்தனங்களில் பெரிதும் ஈடுபட்டிருந்தவர். ஆகவே, அவற்றிற் பல தமது தந்தையார் பாடி ஐயரவர்கள் கேட்டறிந்திருக்கக் கூடும். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்றபடி, இப்பொழுதே இசையாளரில் சிலராவது ஐயரவர்களிடமிருந்து கிருஷ்ணையரின் கீர்த்தனங்களை முறையாகப் பாடப் பழக்கிக்கொள்வது பலவித நன்மைக்கேதுவாகும்; ஐயரவர்கள் எடுத்துக்கொண்ட பிரயாசைக்கு ஒருவிதக் கைம்மாறுமாகும். ராக பாவமும், கமகநிறைவும் உள்ள கிருஷ்ணையரின் கீர்த்தனங்களை நாம் இழக்க இயலாது. இவற்றை முறையாகப் பாடுவோரின் தொகை நாளுக்கு நாள் அருகிக்கொண்டே வருகிறபடியால், சங்கீதப் புலவர்கள் இவ்விஷயத்தில் கவனஞ் செலுத்துவது அத்யாவசியம்.

கோபாலகிருஷ்ண பாரதியார். 'உலகம் பலவிதம்,' 'மக்களின் ருசிவேறுபாடு அனந்தம்,' 'ஒருவனுக்கு விருந்து மற்ருெருவருக்கு வேம்பு,' என்ற அனுபவ உண்மைகளுக்கு ஏதாவது விதிவிலக்குண்டென்ருல் அது கோபால கிருஷ்ணபாரதியாரின் 'நந்தன் சரித்திரக்' கீர்த்தனங்களேயாகும். கற்ரோர், பாமரர், இசைப்பயிற்சி மிக்குள்ளோர், சங்கீதம் முழம் என்னவிலை என்று கேட்பவர், பக்தியில் மூழ்கியவர், கடவுள் நினைவே இல்லாதவர், ஆகிய எல்லோரும் ஒரே அபிப்பிராயமாக நந்தன் சரித்திரத்தை அனுபவித்து மகிழ்வது யாருமறிந்ததே. இக்கீர்த்தனங்கள் உலவாத இடமே தமிழ்நாட்டில் இல்லை. பக்தியின் சிறப்பும், கர்நாடக, இந்துஸ்தானி சங்கீதங்களின் நயமும், தமிழ் பாஷையின் தெளிவும், இக்கீர்த்தனங்களில் நன்கு விளங்குகின்றன. பாரதியாரின் 'நந்தன் சரித்திர'த்தை ஒரு சாதாரணக் கதை என்று கொள்ளுவது தவறு; வேதாந்த உண்மைகளையும், ஆத்ம சாக்ஷாத்காரம் செய்த ஒரு ஜீவன்முக்தரின் அந்தரங்க அனுபவங்களையும், தன்னுள் அடக்கிய ஒரு அரும் பெரும் பொக்கிஷம் என்பதே பொருந்தும்.

தமிழ் நாட்டில் இத்தகைய பெரியாரின் ஜீவிய நிகழ்ச்சிகளிற் சிலவாவது அறிந்தவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அவரை நேரில் கண்டு பழகியவரின் சங்கியை இன்னும் குறைவே. இவர்களும் முதுமைப் பருவத்தினராகவே இருத்தல் வேண்டுமாகலின், இன்னும் சிறிது காலஞ் சென்றால், இவர்களுடன் கோபாலகிருஷ்ண பாரதியாரைப் பற்றிய ஸகல விவரங்களும் மறைந்துவிடும். தமிழ் நாட்டின் சங்கீதத்திற்கே ஒரு பெருமையைக் கொடுத்த இம்மகானின் வாழ்க்கையைப் பற்றி நாமும், நம் பின் வருவோரும் கொஞ்சமும் அறிய முடியாது போய்விடும். நந்தன் சரித்திரத்தைப் போலவே, பாரதியார் செய்த இயற்பகை நாயனார், திருநீலகண்ட நாயனார், இவர்களின் சரித்திர கீர்த்தனங்கள் மறைந்துபோனது தமிழ் நாட்டிற்கே ஒரு பெரும் நஷ்டம் என்பதை யாரேனும் மறுக்கமுடியுமோ? பாரதியாரின் சரித்திர நிகழ்ச்சிகளும், சில தனிக்கீர்த்தனங்களும் இவ்வாறாகி விடாமல், அச்சுவித்தை இருக்கும்வரை அவை அழியாது நிலவும்படி வெகுச்சிறந்த வகையில் ஐயரவர்கள் செய்துவிட்டார்கள். அதற்குத் தமிழகம் அவர்களுக்குச் செய்யும் கைம்மாறு முளதோ?

**புதியதும் பழையதும்.** 'கலைமகளில்' வெளி வந்தனவும், 'மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரத்'தில் உள்ளனவுமான பத்து வரலாறுகளையும், புதிதாக எழுதப்பட்ட பத்து வரலாறுகளையுங் கொண்ட தொகுதி. 'நான் கண்டதும் கேட்டதும்' என்றதிற்போலவே, இத்தொகுதியிலும் ரஸமான தமிழ் நாட்டு வரலாறுகள் பல காணப்படுகின்றன. 'சங்கராபரணம் நரசையர்' 'தலைமுறைக்கும் போதும்', 'வண்டானம் முத்துசாமி ஐயர்', 'கண்ணீர் துடைத்த கரம்', 'சிறந்த குருபக்தி', 'ஏழையின் தமிழன்பு', 'பிறை முழு மதியானது', முதலியன படிக்கப்படிக்கத் தெவிட்டா. விஷயங்கள் சொல்லுமுறை, நடை—எல்லாம் வழக்கம்போல் மிகச்சிறந்து விளங்குகின்றன என்பதைச் சொல்லுவது மிகை. இத்தகைய வெளியீடுகளைத் தமிழ் மக்கள் ஆதரித்து பயன் பெறுவதே ஆசிரியருக்குகந்த கைம்மாறாகும்.

---




# ‘தர்மம் தலைகாக்கும்’

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

1

கொள்ளிடத்தின் வடகரையில் ஆங்கரை என்பதோர் ஊர். அது திருச்சிராப்பள்ளி ஜில்லா லாலுகுடி தாலுகாவில், லாலுகுடிக்கு வடமேற்கே இரண்டுமைல் தூரத்தில் பல ஊர்களுக்குச் செல்லும் சாலைக்கிடையே அமைந்துள்ளது. அங்கே அக்கிரகாரத்தில் இருநூறுக்கு மேற்பட்ட அந்தணர்களின் வீடுகள் உண்டு. அவர்களிற் பெரும்பாலோர் ஸ்மார்த்தப் பிராம்மணர்களுள் மழநாட்டுப் பிரகசரணமென்னும் வகுப்பைச் சார்ந்தவர்கள். அவர்கள் யாவரும் சிவபக்தியுடையவர்கள். தங்கள் தங்களால் இயன்ற அளவு விருந்தினர்களை உபசரித்து உண்பிக்கும் வழக்கம் உடையவர்களாக இருந்தனர். பழைய காலத்தில் இவ்வழக்கம் எல்லாச் சாதியினரிடத்தும் இருந்து வந்தது.

ஏறக்குறைய நூற்றைம்பது வருஷங்களுக்குமுன் மேற்கூறிய ஆங்கரையில் சுப்பையரென்ற செல்வர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு இரண்டாயிரம் ஏகரா நன்செய்கள் இருந்தன. அவை ஏழு கிராமங்களில் இருந்தனவென்பர். அவருடைய குடும்பம் பரம்பரையாகச் செல்வமுள்ளதாக விளங்கிய குடும்பம். அவர் தெய்வபக்தியும், ஏழைகளிடத்தில் அன்பும், தர்மசிந்தனையும் வாய்ந்தவர்.

அவர் நாள்தோறும் காலையில் ஸ்நானம் செய்துவிட்டுப் பூஜை முதலியவற்றை முடித்துக் கொள்வார்; பிறகு தாம் போசனம் செய்வதற்குமுன் தம் வீட்டுத்திண்ணையில் யாரேனும் அதிதிகள் வந்துள்ளார்களா வென்று பார்ப்பார். திரிசிரபுரம், ஸ்ரீரங்கம், திருவானைக்கா முதலிய இடங்களுக்குப் பாதசாரிகளாகச் செல்ப

வர்களும் அவ்வூர்களிலிருந்து தங்கள் தங்கள் கிராமங்களுக்குச் செல்பவர்களுமாகிய வழிப்போக்கர்கள் அவருடைய வீட்டுக்கு வந்து திண்ணையில் தங்கியிருப்பார்கள். அவர்களைச் சுப்பையர் உள்ளே அழைத்துப் பசியாற அன்னமிட்டு உபசரிப்பது வழக்கம். அவர் அன்னமிடுவதை யறிந்து பல பிரயாணிகள் அவர் வீட்டுக்கு வருவார்கள். அவருடைய வீடானது ஒரே சமயத்திற் பலர் இருந்து சாப்பிடும்படி விசாலமாக அமைந்திருந்தது. எல்லா வகையினருக்கும் அவரவர்களுக்கேற்ற முறையில் அவர் உண வளிப்பார். பசியென்று எந்தநேரத்தில் யார் வரினும் அவர்கள் பசியை நீக்கும் வரையில் அவரது ஞாபகம் வேறொன்றிலும் செல்லாது.

தம்முடைய வீட்டிற்கு இரவும் பகலும் இங்ஙனம் வந்து போவாரை உபசரித்து அன்னமிடுவதையே தம்முடைய வாழ்க் கையின் பயனாக அவர் எண்ணினார். பசிப்பிணி மருத்துவராகி வாழ்ந்துவந்த அவருடைய புகழ் எங்கும் பரவியது. அவரை யாவரும் *அன்னதானமையரென்றும், அன்னதானம் சுப்பைய ரென்றும் வழங்கலாயினர்.

சுப்பையர் குடும்பம் மிகவும் பெரியது; அவருடைய சகோதரர்கள், அவர்களுடைய மனைவிமார், பிள்ளைகள், பெண் கள், மருமக்கள், முதலியோர் ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்தனர். அன்னதானம் செய்யும் பொருட்டு அவர் தனியே சமையற்காரர் களை வைத்துக்கொள்ளவில்லை. அவர் வீட்டிலுள்ள பெண்பா லாரே சமையல் செய்வதும் வந்தோரை உபசரித்து அன்னமிடு வதுமாகிய செயல்களைச் செய்துவந்தனர். சிறுபிள்ளைகள்முதற் பெரியவர்கள்வரையில் யாவரும் இலைகளைப் போட்டும், பரிமாறி யும், பிற வேலைகளைப் புரிந்தும் தம்முடைய ஆற்றலுக் கேற்றபடி உரிய காரியங்களைக் கவனிப்பார்கள். அதிதிகளுக்கு உபயோகப் படும் பொருட்டு, அப்பளம், வடகம், வற்றல், ஊறுகாய்கள் முத லியவற்றை அவ்வப்போது செய்துவைக்கும் வேலையில் அவ்வீட்டுப் பெண்பாலார் ஈடுபட்டிருப்பார்கள். அவருடைய வீடு ஒரு சிறந்த அன்ன சத்திரமாகவே இருந்தது; குடும்பத்தினர் யாவரும் தர்மத்திற்காக அன்புடன் உழைக்கும் பணியாளர்களாக இருந் தனர்.

"இப்படி இருந்தால் எப்படிப் பணம் சேரும்? எப்பொழு தும் இந்தமாதிரியே நடந்து வருவது சாத்தியமா?" என்று யாரே

---

* இவருடைய பரம்பரையினருள்ளும், இவருறவினர் பரம்பரையின ருள்ளும் அன்னதானமென்ற பெயரையுடையவர்கள் சிலர் உண்டு.

னும் சிலர் சுப்பையரைக் கேட்பார்கள். அவர், "பரம்பரையாக நடந்துவரும் இந்தத் தர்மத்தைக்காட்டிலும் மேற்பட்ட லாபம் வேறொன்று எனக்கு இல்லை. பசித்து வந்தவர்களுக்கு அன்னமிடு வதே சிவாராதனமென்று எண்ணுகிறேன். தெய்வம் எவ்வளவு காலம் இதை நடத்தும்படி கிருபை பண்ணுகிறதோ அவ்வளவு காலம் நடத்தியே வருவேன். நான் செய்வது கெட்டகாரியமில்லை யென்ற திருப்தியே எனக்குப் போதும்" என்பார்.

இங்ஙனம் அவர் இருந்துவரும் காலத்தில் ஒருசமயம் மழை யின்மையாலும் ஆறுகளில் ஜலம் போதியவளவு வாராமையாலும் நிலங்களில் விளைச்சல் குறைந்தது. ஆயினும் அவர் அன்னதானத் தைக் குறைக்கவில்லை. இப்படி ஒருவர் அன்ன மிடுகிறாரென்ற செய்தியை அறிந்த பல ஏழை ஜனங்கள் அங்கங்கே உண்டான விளைச்சற் குறைவினால் ஆதரவு பெறாமல் சுப்பையர் வீட்டிற்கு வந்து உண்டு அவரை வாழ்த்திச் சென்றார்கள். இதனால் அக்காலத் தில் வழக்கத்திற்குமேல் அவர் அன்னதானம் செய்ய நேர்ந்தது. ஆயினும் சுப்பையர் மனங்கலங்கவில்லை. நாயன்மார்களுடைய வர லாற்றை உணர்ந்திருந்த பரமசிவ பக்தராகிய அவர் அந்நாயன்மார் கள் இறைவன் சோதனைக்கு உட்பட்டுப் பின் நன்மை பெற்றதை யறிந்தவராதலின், தம்முடைய நிலங்கள் விளைவுகுன்றியது முதலியனவும் அத்தகைய சோதனையே என்றெண்ணினார். தர்மம் தலைகாக்குமென்ற துணிவினால், எப்பொழுதும் செய்துவரும் சிறப்புக்குக் குறைவில்லாமல் அன்னதானத்தை நடத்திவந்தார். பொருள் முட்டுப்பாடு உண்டானமையால் தம் குடும்பத்துப் பெண்பாலாரின் ஆபரணங்களை விற்றும், அடகுவைத்தும் பொருள்பெற்று அன்னதானத்திற்குப் பயன்படுத்தி வந்தார். அத னாற் குடும்பத்தினருக்குச் சிறிதேனும் வருத்தம் உண்டாகவில்லை; அப்பெண்களோ அந்த நகைகள் ஒரு நல்ல சமயத்தில் பயன்பட் டது கருதி மகிழ்ந்தார்கள். அந்தக் குடும்பத்திலுள்ள யாவரும் ஆடம்பரமின்றி யிருந்தார்கள்.

பொருள் முட்டுப்பாடு அவ்வருஷத்தில் நேர்ந்தமையால் அரசாங்கத்துக்குச் செலுத்தவேண்டிய 'கிஸ்தி'யை அவரால் செலுத்தமுடியவில்லை. பெருந்தொகையொன்றை வரிப்பணமாக அவர் செலுத்த வேண்டியிருந்தது. அவ்வூர்க் கணக்குப்பிள்ளை மணியகாரர் ஆகியவர்கள் வரி வசூல் செய்ய முயன்றார்கள். சுப் பையர் தம்முடைய நிலைமையை விளக்கினார். அவர்கள் சுப்பைய ருடைய உண்மை நிலையையும் பரோபகார சிந்தையையும் நன்கு அறிந்தவர்களாதலால் அவர் கூறுவது மெய்யென்றே எண்ணினர். ஆயினும் மேலதிகாரிகளுக்கு எவ்விதம் பதில் சொல்லுவது?

அதனால் சுப்பையரை நோக்கி, "நாங்கள் என்ன செய்வோம்! உடனே வரியை வசூல் செய்ய வேண்டுமென்று எங்களுக்கு உத்தரவு வந்திருக்கிறதே!" என்றார்கள். சுப்பையர், "என்னால் வஞ்சனையில்லை யென்பது உங்களுக்கே தெரியும். நான் வரியைச் செலுத்தமுடியாத நிலையில் இருப்பதாக மேலதிகாரிகளுக்கே தெரிவியுங்கள். அவர்கள் இஷ்டம்போலச் செய்துகொள்ளட்டும். அவர்கள் நிலத்தை ஏலம் போடக்கூடும். தெய்வம் எப்படி வழி விடுகிறதோ அப்படியே நடக்கும்; அதுவே எனக்குத் திருப்தி" என்றார்.

சிலர் அவரிடம் வந்து, "இந்தக் கஷ்டகாலத்திற் கூட அன்னதானத்தை ஏன் வைத்துக்கொள்ள வேண்டும்? சிலகாலம் நிறுத்திவைத்தால் வரியையும் கொடுத்துவிடலாம்; உங்களுக்கும் பணம் சேருமே" என்றார்கள். அவர், "இந்தக்காலத்தில் அன்னம் போடாவிட்டால் இவ்வளவு நாள் போட்டும் பயன் இல்லை; இப்போதுதான் அவசியம் இந்தத் தர்மத்தைச் செய்து வரவேண்டும். கஷ்டமென்பது எல்லோருக்கும் இருப்பதுதானே? பல ஏழைகள் பசியோடு வரும்போது நாம் சும்மா இருப்பதைவிட இறந்துவிடலாம். இப்பொழுது கடன்பட்டாவது இந்தத் தர்மத்தைச் செய்துவந்தால் நன்றாக விளையும் காலத்தில் உண்டாகும் லாபத்தினால் ஈடு செய்துகொள்ளலாம். இப்பொழுது செய்யாமல் நிறுத்திவிட்டால் அந்த நஷ்டத்திற்கு ஈடு செய்யவே முடியாது" என்றார்.

கணக்குப் பிள்ளையும் மணியகாரரும் நடந்ததைப் *பேஷ்காரிடம் தெரிவித்தனர். அவர் வந்து பார்த்தார்; அவருக்கும் ஒன்றும் தோன்றவில்லை; தாசில்தாருக்குத் தெரிவித்தார். அவர் மிக்க முடுக்கோடு வந்து பயமுறுத்தினார். சில ஹிம்ஸைகளும் செய்து பார்த்தார். சுப்பையர் தம்முடைய நிலைமையை எடுத்துச் சொன்னார்; தாசில்தார், "இந்த அன்னதானத்தை நிறுத்திவிட்டுப் பணத்தைக் கட்டும்" என்று சொல்லவே சுப்பையர், "தாங்கள் அதைமட்டும் சொல்லக்கூடாது. எங்கள் பரம்பரைத் தர்மம் இது. இதை நிறுத்தி விடுவதென்பது முடியாத காரியம். என்னுடைய மூச்சு உள்ள வரையில் இதை நிறுத்த மாட்டேன்; எனக்கு என்ன துன்பம் வந்தாலும் வரட்டும்" என்றார்.

தாசில்தார், "இதெல்லாம் வேஷம்! அன்னம் போடுகிறேனென்று ஊரை ஏமாற்றுகிற வழி" என்றார். சுப்பையர்பால் சில காரணங்களால் பொறாமை கொண்ட குமாஸ்தாக்கள் சிலர்

---

* பேஷ்கார் - ரெவினியூ இன்ஸ்பெக்டர்.

தாசில்தாரிடம் அவரைப்பற்றி முன்னமே கோள் கூறியிருந்தனர். தாசில்தாரும் கோபியாதலின் சுப்பையருடைய குணத்தை அறிந்து கொள்ளவில்லை.

"உம்மால் பணம் கொடுக்க முடியாவிட்டால் உம்முடைய நிலத்தை ஏலம் போடுவேன்" என்றார் தாசில்தார்.

"அவ்விதம் செய்வது அவசியமென்று உங்களுக்குத்தோன்றினால், தெய்வத்தினுடைய சித்தமும் அதுவாக இருக்குமானால், நான் எப்படி மறுக்கமுடியும்?" என்று சுப்பையர் பணிவாகக் கூறினார்.

தாசில்தார் நிலத்தை ஏலம் போட்டார்; 'இந்தத் தர்மதேவதையின் நிலத்தை ஏலம் எடுத்தால் நம் குடும்பமே நாசமாகிவிடும்' என்ற எண்ணத்தால் அவ்வூரிலுள்ளோரேனும் அயலூரினரேனும் வந்து ஏலம் எடுக்கத் துணியவில்லை. தம் அதிகாரமொன்றையே பெரிதாக நினைத்த தாசில்தாருக்கோ கோபம் பொங்கியது; மீசை துடித்தது; கண்கள் சிவந்தன. "இந்த மனுஷன் பொல்லாதவனென்று தெரிகிறது. இவனுக்குப் பயந்தே ஒருவரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை. இருக்கட்டும். இவனுக்குத் தக்கபடி ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்லித் தாசில்தார் போய்விட்டார். சுப்பையரைப் போலவே வேறுபலர் வரிசெலுத்தவில்லை. ஆயினும் அவர்கள் செலுத்தவேண்டிய தொகை சிறிதாதலின் எவ்வாறேனும் வசூல் செய்துவிடலாமென்ற தைரியம் தாசில்தாருக்கு இருந்தது. சுப்பையர் பெருந்தொகை செலுத்தவேண்டியவராக இருந்தமையின் அவர்மீது தாசில்தாருக்கு இருந்த கோபத்துக்கு அளவில்லை. உடனே, பலரிடமிருந்து வரிவசூல் செய்யப்படவில்லை யென்பதையும், அவர்களுள் பெருந்தொகை செலுத்தவேண்டிய சுப்பையர் முயற்சியொன்றும் செய்யாமல் இருப்பதையும், அவருடைய நிலத்தை ஏலம் எடுக்க ஒருவரும் துணியாததையும் ஜில்லா கலெக்டருக்கு எழுதித் தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று தெரிவித்தார்.

'எல்லாம் பரமசிவத்தின் திருவுள்ளப்படி நடக்கும்' என்ற மனச்சாந்தியோடு சுப்பையர் அன்னதானத்தைக் குறைவின்றி நடத்திவந்தார்.

தாசில்தாருடைய கடிதத்தைக்கண்ட கலெக்டர் லாலுகுடிக்கு வந்து 'முகாம்' போட்டார். அவர் ஒரு வெள்ளைக்காரர்; மதியூகி; எதையும் ஆலோசித்துச் செய்பவர்; தர்மவான்; நியாயத்துக்கு அஞ்சி ஒழுகுபவர்; தமிழ்ப் பயிற்சி உள்ளவர். பிறர் தமிழ் பேசுவதைத் தெளிவாக அறிவதோடு தாமே தமிழிற் பேசவும்

தெரிந்தவர். அவர் லாலுகுடிக்கு வந்து தாசில்தாரையும் வரச் செய்து அவரிடம் சுப்பையரைப்பற்றி விசாரித்தார்.

தாசில்தார் தம்முடைய அதிகாரமொன்றும் சுப்பையரிடத்திற் செல்லவில்லை யென்ற கோபத்தினால் அவரைப்பற்றி மிகவும் கடுமையாகக் குறை கூறினர். "அவன் பெரிய ஆஷாடபூதி. இவ்வளவு நிலம் வைத்திருக்கிறவனுக்குப் பணம் இல்லாமலா போகும்? ஏதோ சிலருக்குச் சோற்றைப் போட்டுவிட்டு அன்ன தானமென்று பேர் உண்டாக்கிக்கொண்டு பணத்தை மறைவாகச் சேகரித்து வைத்திருக்கிறுனென்றே நான் எண்ணுகிறேன். தன் வீட்டிலுள்ள நகைகளைக்கூட ஒளித்துவைத்துவிட்டான். துரையவர்கள் சிறிதேனும் இரக்கம் காட்டாமல் அந்த மனுஷனைத் தக்கபடி சிக்ஷிக்கவேண்டும்" என்றார்.

தாசில்தாருடைய பேச்சில் கோபம் தலைதூக்கி நிற்பதைக் கலெக்டர் உணர்ந்தார். அவருடைய வார்த்தைகளை அப்படியே நம்புவது அபாயமென்றெண்ணினர். ஆதலின், அந்தப்பக்கங்களில் இருந்த வேறு சிலரிடம் சுப்பையரைப்பற்றி இரகசியமாக விசாரித்தார். அவ்வந்தண உபகாரியிடம் பொறாமை கொண்ட சிலரையன்றி மற்றவர்களெல்லாம் அவரைப்பற்றி மிக உயர்வாகச் சொன்னர்கள்; அவர் செய்யும் அன்னதானத்தைப் பற்றி உள்ளங்குளிர்ந்து பாராட்டினர்கள். கலெக்டர் துரை எல்லாவற்றையும் கேட்டார்.

## 2

ஒருநாள் இரவு சுப்பையர் வழக்கம் போலத் தம்முடைய வீட்டுத் திண்ணையிலே படுத்திருந்தார். பகலிலும் இரவிலும் யாவருக்கும் அன்னமிட்டபின்பு அகாலத்தில் யாரேனும் பசியோடுவந்தால் அவர்களுக்கு உதவும்பொருட்டு உணவுவகைகளைத் தனியே வைத்திருக்கச் செய்வது அவருடைய வழக்கம். சிலசமயங்களில் மழை முதலியவற்றல் துன்புற்று வழிநடைப்பிரயாணிகள் நள்ளிரவில் வருவார்கள். அவர்களுடைய பசியைப் போக்குவதற்கு அவ்வுணவு உதவும்.

சுப்பையர் படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது நெடுந்தூரத்திலிருந்து, "சாமீ! சாமீ!" என்று ஒரு சத்தம் கேட்டது. அது சுப்பையருடைய தூக்கத்தைக் கலைத்தது. அவர் விழித்தெழுந்து சத்தம்கேட்கும் வழியே சென்றார். அக்கிரகாரத்தின் கோடியிலிருந்து யாரோ ஒருவன் "சாமீ! சாமீ!" என்று கத்திக்கொண்டிருந்தான்.

"யாரப்பா அது?" என்று கேட்டார் சுப்பையர்.

"சாமீ! நான் பக்கத்திலுள்ள ஊர்ப் பறையன். வேறு ஊருக்குப் போய்த் திரும்பி வருகிறேன். பசி தாங்கமுடியவில்லை. இவ்வளவு தூரம் நடந்து வந்தேன்; மேலே அடியெடுத்து வைக்க முடியவில்லை" என்ருன்.

"அப்படியானுல், சற்று நேரம் இங்கே இரு; இதோ வருகிறேன்" என்று சொல்லிச் சுப்பையர் தம் வீட்டுக்கு வந்தார். வந்து வெளிக்கதவைத் திறக்கச்செய்து சமையலறையிற் புகுந்தார். அங்கிருந்த கறி, குழம்பு, ரஸம், மோர், முதலியவற்றைத் தனித்தனியே தொன்னைகளிலும் கொட்டங்கச்சிகளிலும் எடுத்து, அன்னத்தை ஒரு பெரிய மரக்காலில் போட்டு அதன் மேல் கறி முதலியவற்றை வைத்து மேலே இலையொன்ருல் மூடினுர். அப்படியே அதை எடுத்துக் கொண்டு தெருவின் கோடிக்கு வந்து, "இந்தா அப்பா! இந்த மரக்காலில் சாதம், குழம்பு, கறி, ரஸம் எல்லாம் வைத்திருக்கிறேன். அதோ இருக்கிறதே, அந்த *வாய்க்காலுக்குப்போய்ச் சாப்பிட்டுவிட்டு உன் ஊருக்குப் போ. முடியுமானுல் மரக்காலை நாளைக்குக் கொண்டுவந்து கொடு; இல்லாவிட்டால் நீயே வைத்துக்கொள்" என்று சொல்லி அந்த மரக்காலைக் கீழே வைத்தார்.

பறையன் அதை எடுத்துக் கொண்டு, "சாமீ! உங்களைத் தெய்வம் குறைவில்லாமல் காப்பாற்றும்; தர்மம் தலைகாக்கும்" என்று வாழ்த்திவிட்டுச் சென்ருன். அவனுடைய பேச்சில் ஒரு விதமான நாக்குழறல் இருந்தது; "பாவம்! பசியினுல் பேசக்கூட முடியவில்லை! நாக்குக் குழறுகிறது!" என்று சுப்பையர் எண்ணி இரங்கினுர். அவன் பசியைத் தீர்க்க நேர்ந்ததுகுறித்து மகிழ்ந்து வீடுவந்து சேர்ந்தார்.

லாலுகுடியில் 'முகாம்' செய்திருந்த கலெக்டர் மேற் சொன்ன நிகழ்ச்சி நடைபெற்றதற்கு மறுநாள் தம்மிடம் வர வேண்டுமென்றும், தாம் விசாரணை செய்ய வேண்டுமென்றும் சுப்பையருக்கு உத்தரவு முன்பே அனுப்பியிருந்தார். விசாரணை நாளன்று சுப்பையர் உரியகாலத்தில் செல்லாமல் நேரம் கழித்துச் சென்ருர்.

அவர் கலெக்டர் துரையின் முன் நிறுத்தப் பட்டார். நீர்க்காவி ஏறிப் பழுப்பு நிறமாயிருந்த அவருடைய வஸ்திரம் இடையிடையே தையலையுடையதாயும், சில இடங்களில் முடியப்பட்டும் இருந்தது; அவருடைய உடம்பில் விபூதி விளங்கியது; மார்பில் ருத்திராட்சமாலை இருந்தது. அவர் நேரம்கழித்து வந்தத

* இது மலட்டாறென்று வழங்கும்.

னுற் கோபம்கொண்டவரைப் போலக் கலெக்டர் இருந்தார்; முகத்திற் கோபக் குறிப்புப் புலப்பட்டது; "இவரா சுப்பையர்?" என்று கேட்டார் துரை.

அருகிலிருந்த தாசில்தார், "ஆமாம்!" என்றார்.

கலெக்டர், "இவ்வளவு ஏழையாக இருப்பவரையா நீர் பெரிய பணக்காரரென்றும், வரிப்பணம் அதிகமாகத் தரவேண்டு மென்றும் எழுதியிருக்கிறீர்?" என்று கேட்டார்.

**தாசில்தார்:** இதெல்லாம் வேஷம். இப்படி வந்தால் துரை யவர்கள் மனமிரங்கி வரியை வஜா செய்யக்கூடுமென்ற வஞ்சக எண்ணத்தோடு வந்திருக்கிறார்.

கலெக்டர் அவரைக் கையமர்த்திவிட்டுச் சுப்பையரைப் பார்த்து, "நீரா ஆங்கரைச் சுப்பையர்?" என்று கேட்டார்.

**சுப்பையர்:** ஆம்.

**கலெக்டர்:** நீர் ஏன் சரியான காலத்தில் வரவில்லை? சர்க்கார் உத்தரவை அலக்ஷியம் செய்யலாமா?

**சுப்பையர்:** துரையவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது: காலையில் எழுந்து ஸ்நானம் செய்து பூஜையை முடித்துக்கொண்டு நான் வருகிறவர்களுக்கு ஆகாரம் செய்விப்பது வழக்கம். இன்று அந்த வழக்கப்படியே யாவரும் போஜனம்செய்த பிறகு வந்தேன்.

**கலெக்டர்:** உம்முடைய வரிப்பணம் அதிகமாகப் பாக்கி இருக்கிறதே, தெரியுமா?

**சுப்பையர்:** தெரியும். என்மேல் வஞ்சகம் இல்லை; நிலம் சரி யானபடி விளையாமையால் வரிப்பணத்தை என்னால் இப்பொழுது செலுத்த முடியவில்லை.

**கலெக்டர்:** அன்னதானமட்டும் எப்படிச் செய்கிறீர்?

**சுப்பையர்:** கிடைக்கும் நெல்லையெல்லாம் வைத்துக் கொண்டு செய்கிறேன். முன்பு, அன்னதானம் செய்தது போக மிஞ்சுவதில் வரியைச் செலுத்துவேன். இப்பொழுது அது முடிய வில்லை. அன்னதானத்திற்கே போதாமையால் என்வீட்டு நகை களை அடகு வைத்துக் கடன் வாங்கியிருக்கிறேன்; சிலவற்றை விற்கவும் செய்தேன்.

**கலெக்டர்:** இவ்வளவு கஷ்டப்பட்டு நீர் அந்த அன்னதானத் தை ஏன் செய்யவேண்டும்?

**சுப்பையர்:** அது பரம்பரையாக எங்கள் குடும்பத்தில் நடந்து வருகிறது.

**கலெக்டர்:** அன்னம் போடுவது பகலிலா? இரவிலா?

சுப்பையர்: இரண்டு வேளையும் போடுவதுண்டு. பாதசாரிகளாக வருகிறவர்கள் பசியோடு எப்போது வந்தாலும் போடுவது வழக்கம்.

கலெக்டர்: எந்தச் சாதியாருக்குப் போடுவீர்?

சுப்பையர்: பிராம்மணருக்கும் மற்றச் சாதியாருக்கும் அவரவர்களுக்கு ஏற்ற முறையில் போடுவோம். பசித்து வந்தவர்கள் யாரானாலும் அன்னமிடுவேன்.

கலெக்டர்: பறையருக்கும் போடுவதுண்டா?

சுப்பையர்: ஆகா, போடுவதுண்டு; எல்லோரும் சாப்பிட்ட பிறகு போடுவோம்.

கலெக்டர்: இதுவரையில் அப்படி எத்தனை தரம் பறையர்களுக்குப் போட்டிருக்கிறீர்?

சுப்பையர்: எனக்கு நினைவில்லை; பலமுறை போட்டதுண்டு.

கலெக்டர்: சமீபத்தில் எப்போது போட்டீர்?

சுப்பையர்: நேற்றுக்கூட ஒரு பறையன் பாதிராத்திரியில் பசிக்கிறதென்று வந்தான்; சாதம் கொடுத்தேன்.

கலெக்டர்: அப்படியா! என்ன என்ன கொடுத்தீர்? எல்லோரும் சாப்பிட்டு மிச்சமான சோற்றையா கொடுத்தீர்?

சுப்பையர்: அகாலத்தில் யாராவது வந்தால் உபயோகப்படுமென்று ரசம், குழம்பு முதலியவற்றிலும் ஓரளவு வைத்திருப்பது வழக்கம். ஆதலால் நேற்று வந்தவனுக்கு அன்னம், கறி, குழம்பு, ரஸம், மோர், எல்லாம் கொடுத்தேன்.

கலெக்டர்: இலை போட்டா சாப்பாடு போட்டீர்?

சுப்பையர்: இல்லை; அது வழக்கமில்லை. ஒரு மரக்காலில் அன்னத்தை வைத்து, அதன்மேல் தனித்தனியே தொன்னையிலும் கொட்டங்கச்சிகளிலும் குழம்பு முதலியவற்றை வைத்துக் கொடுத்தேன்.

கலெக்டரோடு வந்திருந்த உத்தியோகஸ்தர்கள் யாவரும் இவ்வளவு விரிவாகக் கலெக்டர் விசாரணை செய்வதை நோக்கி வியப்புற்றார்கள். தாசில்தார், "எல்லாம் பொய்" என்று சொல்லி முணுமுணுத்துக் கொண்டேயிருந்தார்.

கலெக்டர்: உமக்கு அந்தப் பறையனைத் தெரியுமா?

சுப்பையர்: இருட்டில் இன்னாரென்று தெரியவில்லை.

கலெக்டர்: அவனிடம் கொடுத்த மரக்காலைக் கொண்டு வந்து காட்டுவீரா?

**சுப்பையர்:** அதை அவன் இன்னும் திருப்பிக் கொடுக்கவில்லை.

**கலெக்டர்:** அப்படியானால் நீர் அவனுக்கு அன்னம் கொடுத்ததற்குச் சாக்ஷி வேறு என்ன இருக்கிறது?

**சுப்பையர்:** சாக்ஷி எதற்கு? தெய்வத்துக்குத் தெரியும். அப்படி நான்செய்ததை வேறுயாரிடம் சொல்லிக் கொள்ள வேண்டும்?

**கலெக்டர்:** அந்த மரக்காலை அவன் திருப்பிக் கொடாவிட்டால் என்ன செய்வீர்?

**சுப்பையர்:** 'முடியுமானால் கொடு, இல்லாவிட்டால் நீயே வைத்துக்கொள்' என்று நானே சொல்லிக் கொடுத்தேன்; அவன் கொடுக்காவிட்டால் எனக்கு ஒன்றும் நஷ்டமில்லை.

கலெக்டர், "அப்படியா!" என்று சொல்லிக்கொண்டே மேஜை முழுவதையும் தரைவரையில் மறைத்து மூடப்பட்டிருந்த துணியை மெல்லத் தூக்கினார். என்ன ஆச்சரியம்! அதன்கீழே ஒரு மரக்கால் வைக்கப்பட்டிருந்தது.

"நீர் கொடுத்த மரக்கால் இதுதானா பாரும்?" என்று சொல்லித் துரை அதை எடுத்து மேஜையின்மேல் வைத்தார்.

சுப்பையர் திடுக்கிட்டார்; தம் கண்களையே அவர் நம்ப முடியவில்லை. கண்ணைத் துடைத்துத் துடைத்துப் பார்த்தார். தாம் முதல்நாள் பாதிராத்திரியில் ஒரு பறையனிடம் கொடுத்த மரக்கால் அங்கே வந்ததற்குக் காரணம் தெரியவில்லை. அங்கே இருந்த யாவரும் ஒரு நாடகத்தில் மிகச்சுவையான காட்சியொன்றில் ஈடுபட்டு மெய்ம்மறந்தவர்போல் ஆனார்கள்.

"என்ன, பேசாமல் இருக்கிறீர்! ராத்திரி நீர் செய்த அன்ன தானத்துக்குச் சாக்ஷியில்லை யென்று எண்ணவேண்டாம். பாதி ராத்திரியில் வந்த பறையன் நான்தான்! நீர் கொடுத்த மரக்கால் இதுதான்! இந்த இரண்டு சாக்ஷியும் போதா விட்டால், என்னுடன் அங்கேவந்த குதிரைக்காரன் வேறு இருக்கிறான். நீர் சொன்னதெல்லாம் உண்மையே. உம்முடைய வீட்டு அன்னத்தையும் கறி முதலியவற்றையும் நான் ருசி பார்த்தேன். உம்முடைய ஜன்மமே ஜன்மம்" என்றார் கலெக்டர்; அவருடைய கண்களில் நீர் ததும்பியது; உள்ளத்தில் உண்டான உருக்கம் அவர் தொண்டையை அடைத்தது. சிறிதுநேரம் அவராற் பேச முடியவில்லை. பிறகு, "உமக்கு எந்தக்காலத்திலும் குறைவே வராது. தெய்வம் உம்மைக் குறைவில்லாமல் காப்பாற்றும்; தர்மம் தலை காக்கும். உமக்காகத்தான் மழை பெய்கிறது" என்றார்.

அந்த வார்த்தைகளின் தொனியில் முதல்நாள் இரவு பறையன், 'தெய்வம் உங்களைக் குறைவில்லாமல் காப்பாற்றும்; தர்மம் தலைகாக்கும்' என்று சொன்ன வார்த்தைகளின் தொனி ஒலிப்பதை அப்போதுதான் சுப்பையர் உணர்ந்தார்; தமிழைப் புதிதாகக் கற்றுக்கொண்ட வேற்று நாட்டாராகிய துரையின் பேச்சானது, பசியினால் நாக்குழறிப் பேசுபவனது பேச்சைப்போல ராத்திரியில் தமக்குத் தோன்றிய தென்பதையும் அறிந்தார். அவருக்கு இன்னது சொல்வதென்று தோற்றவில்லை.

"அப்படியே அந்த நாற்காலியில் உட்காரும்! நீர், வரிப் பணத்தை மோசம் செய்ய மாட்டீரென்பது எனக்கு நன்றாகத் தெரியும். நானும் உம்முடைய மரக்காலை மோசம் செய்யாமல் இதோ கொடுத்துவிட்டேன்; எடுத்துக்கொள்ளும். உம்முடைய தர்மம் குறைவின்றி நடைபெற இந்த வரிப்பணம் உதவுமானால், அதைவிட இந்த ராஜாங்கத்துக்கு வேறு லாபம் இல்லை. உம்மால் எப்போது முடியுமோ, அப்போது வரியைக் கட்டலாம்! உம்மை ஒருவரும் நிர்ப்பந்தம் செய்யமாட்டார். நான் இந்த ஜில்லாவில் இருக்கும் வரையில் உமக்கு ஒருவிதமான துன்பமும் நேராது" என்றார் கலெக்டர். பிறகு தாசில்தாரை நோக்கி "உம்முடைய வார்த்தையை நான் நம்பியிருந்தால் பெரிய பாவம் செய்தவனாவேன். இனிமேல் இந்த மாதிரி ஒருவரைப்பற்றியும் தீர விசாரியாமல் நீர் எழுதக்கூடாது" என்று கண்டித்துக் கூறினார்.

மேஜைத் துணியாகிய திரையைத் துரை தூக்கியதும், அம் மேஜைக்கடியில் அவ்வந்தண வள்ளலது அன்னதானத்தை அளந்த மரக்கால் இருந்ததும், அதனைத் துரை எடுத்து மேஜையின்மேல் வைத்து மனமுருகிப் பேசிக் கண்களில் நீர் ததும்ப வீற்றிருந்ததுமாகிய அக்காட்சிகளை நம்முடைய அகக்கண்ணால் நோக்கும்போது நமக்கே மயிர் சிலிர்க்குமாயின், அங்கேயிருந்து கண்ணால் பார்த்தவர்களுடைய உள்ளமும் உடலும் எப்படியிருந்திருக்குமென்பதைச் சொல்லவும் வேண்டுமா?

[கும்பகோணம் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதராக இருந்த வித்துவான் ஸ்ரீ சி. தியாகராச செட்டியாரவர்கள், 1883-ஆம் ஆண்டு திருவானைக்காவில், திருமஞ்சனக்காவேரிக் கரையில், ஆங்கரைச் சுப்பையருடைய பரம்பரையினர் சிலரைக் கண்டு பேசிக்கொண்டிருந்தனர். நானும் உடனிருந்தேன். அப்பொழுது செட்டியார், அவர்களைப் பாராட்டிவிட்டு இவ்வரலாற்றைக் கூறினர். அவர்களும் சொன்னார்கள். மேற்படி சுப்பையருடைய பெண் வழியிற்றோன்றிய மணக்கால் ம-ள-ள-ஸ்ரீ கந்தசாமி ஐயரென்பவர்களாலும் சமீபத்தில் சில விஷயங்கள் அறிந்துகொண்டேன்.]




## கலைச் சொல்லாக்க முயற்சிகள்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

---

தன்னுடலின் அழகு தனக்கே தெரியாது. பிறருக்குத் தான் தெரியும். அதிக சிரமப்பட்டு நிலைக்கண்ணாடி வைத்துப் பார்த்துக்கொண்டாலும் தன் அழகு தனக்கே சரியாகத்தெரிவது துர்லபம்.

இவ்வாறே தமிழ்மொழியின் அழகு தமிழருக்குத் தெரிவதில்லை. தமிழ் பேசுவதிலும், படிப்பதிலும், எழுதுவதிலும், தன்னை யறியாமல் தமிழனுக்கு உண்டாகும் உள்ளுவப்பேதான் தமிழின் அழகுக்குப் பிரமாணம். அந்த அழகை வெளித்தோற்றமாகத் தமிழருக்கு எடுத்துக்காட்டுவது கஷ்டம்.

எவ்வளவு அழகு பொருந்திய சிற்பமும், ஆரோக்கியம் கொண்ட உடலும், சரிவரக் கவனித்துப் போற்றாமல் பலகாலம் விட்டுவிட்டால் கெட்டுப்போகும். பெரிய மாளிகையானாலும், சுத்தமாகவும், ஒழுங்காகவும் வைத்துக் கொள்ளாமற் போனால் குடியிருக்க இடமும் வசதியும் போதாமல் போகும். பாஷையும் இவ்வாறே தான். போற்றப்படாமற் போயின், நாளாவட்டத்தில் எப்பாஷையும் அழகும், மொழிச்செல்வமும், லாகவமும் குன்றியதாகத் தோன்றும்—உண்மையில் குன்றியும் போகும். பிறமொழிகள் கடன்வாங்கும் வழக்கமும், உள்ள மொழிகளை மறப்பதும், தாய்பாஷைமேல் அலட்சியமும் வெறுப்புங்கூட உண்டாக்கிவிடும். இப்போது நாம் சுதந்தரமும் பெருமையும் நீங்கி அடிமையும் சிறுமையு மடைந்தோமென்பதை அனைவரும் காண ஒரு தோல்விக் கொடிபோல் ஆங்கில மொழிகளை எப்போதும் உபயோகிக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருக்கிறோம். மொழிப்பிச்சை யில்லா

விடில் வாழ்க்கையே சாத்தியமில்லை என்று நிச்சயம்செய்துதீர்த்து விட்டாற்போல் நடந்துகொள்ளுகிறோம்.

ஆங்கிலத்தின் நரம்புக்கட்டும், லாகவமும், பொருட்செறிவும் தமிழில் கிடையாது என்று தமிழை மறந்த தமிழர் எண்ணுகிறார் கள். இவர்கள் புதிய சொற்களும் சொற்றொடர்களும் ஆக்கினா லல்லாது தமிழில் எதையும் இக்காலத்தில் சொல்ல முடியாது என்பார்கள். பழைய சொற்களையும் புராதனக் கலைகளையும் மறந்துவிட்டதே இவ்வாறான எண்ணங்களுக்குக் காரணம். வீட்டி லுள்ள பழைய பெரிய பெட்டியில் கிடக்கும் பட்டாடைகளை மறந்து, கந்தல்துணியுடன் கடைக்குப்போய்க் கடனுக்குச் சேலை வாங்குவதைப் போன்றது இந்த மொழிப்பிச்சைக்கொள்கை.

*Plus, minus*, $x^2$, $x^3$, $x^n$, *equation, square, cube root*— இவைகளையும், ஏன், ஏறக்குறைய கணித முழுமையும் பல நூற் றாண்டுகளுக்கு முன், வேறுபாஷைக் கலப்பின்றி, உலகத்திற்கு அளித்த இந்தியா, ஊரூராய் அலைந்து மறுபடி தாய்வீட்டுக்கு அந்தக் கலை திரும்பிவந்த காலத்தில், 'உனக்கு உடுக்க இங்கே ஆடையில்லை. பிற தேசத்தாருடைய உடுப்புகள் அணிந்துதான் நீ இங்கே இருக்கலாம்' என்கிறது! என்ன வெட்கக்கேடு! இவ்வாறே வேறு பல சாஸ்திரங்களும். எல்லாக் கலைகளுக்கும்போதிய மொழிச்செல்வம் நம் தாயண்டை உளது. தமிழும், சமுஸ்கிருத மும் சேர்ந்து உலகத்தையே அளக்கலாம். நம் நாட்டுக்குப் பழக்க மான உடை உடுத்தினால்தான் கலைகளைக்கண்டு பயப்படாமலும் திகைக்காமலும் நம் நாட்டு மக்கள் அவைகளண்டை நெருங்கிப் பழகிப் பயனடைவார்கள்.

---

ஒரு விஷயத்திற்குச் சொல் இல்லை, புதிதாகத்தான் ஆக்கிக் கொள்ளவேண்டும் என்று ஆழ்ந்து சோதித்துப்பார்த்து முடிவு செய்தால்—சோம்பேறித்தனத்தாலும், அறியாமையாலும், அவ சரத்தாலும் இல்லாமல், உண்மையில் முயன்றும் கிடைக்கவில்லை என்றால்—புதியதொரு சொல்லை ஆக்கும்முறையில் ஆக்கவேண் டியது அவசியம். அந்தந்த சாஸ்திரம் படித்தறிந்தவர்கள்தான் அந்தந்த சாஸ்திரத்திற்கு வேண்டிய சொற்களை விஷயநுட்ப மறிந்து அமைக்க முடியும். கலைப்பயிற்சி இல்லாதவர்கள் ஆட் சேபணையும் சமாதானமும் எளிதில் சொல்லிவிடுவார்கள். ஆழ்ந்த அறிவுடன் ஆராய்ச்சி செய்யத் தகுந்தவர்கள்தான் இந்தப் பணி யில் கலந்துகொள்ளலாம். நல்ல முறையில் ஆக்கப்பட்ட சொற்

களை, அறிந்தவர்கள் மகிழ்ச்சியுடன் போற்றுவார்கள். பழைய கலைச் சொற்களைத் தேடித் திரட்டுவதும், புதியன ஆக்குவதுமான இந்தப் பணியை, தனித்தமிழ் இயக்கத்துடன் கலந்து கலவர முண்டாக்கிக் கொள்ளுதல் தவறாகும்; தமிழில் சேரும் தன்மை கொண்ட சமுஸ்கிருத மொழிகளைக் காரணமின்றி வெறுத்தல் கூடாது; தனித்தமிழ் வெறியும், வடமொழி மோகமும்—இரண்டும் இந்தத் தமிழ்ப்பணிக்குத் தடையாகும்.

உலகம் முழுதும் ஆங்கிலமொழி பரவிவருகிறது. நாமும் ஆங்கிலக் கலைச்சொற்களையே அமைத்துக் கொண்டாலென்ன? சப்தத்தில் எனது, உனது, என்றெல்லாம் ஏது, விஷயம்தானே முக்கியம்? காலத்தை ஏன் வீண் போக்கவேண்டும்? என்றெல்லாம் சிலர் வாதம் செய்வார்கள். இதற்குப் பதில் சொல்லி முடிவுகட்ட இயலாது. யுக்திவாதத்தைவிட உள்ளத்தின் உவப்பே பிரமாணம். தமிழ்மொழியால் ஒன்றைக் குறித்தவுடன் தமிழனுக்கு அது மனதுக்குள் தனதாக அடங்கி மகிழ்ச்சி தருகிறது. மற்ற இரவல் மொழிகளால் தமிழன் அந்த மகிழ்ச்சி காணமாட்டான். இந்த ஒரு காரணமே போதும்.

# ககாவாவின் சிந்தனைகள்

ஏ. டி. கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., பி. எல்.

டோயோஹிகோ ககாவா என்னும் பெரியார் ஜப்பான் தேசத்தில் கோப் என்னும் நகரில் 1888-ஆம் வருஷம் ஜூலை-மீ 10-ஆம் தேதி பிறந்தார். அவா என்னும் மாகாணத்தில் 19 கிராமங்களுக்கு அதிகாரியாக இருந்த இவரது தந்தையைக் காலசக்கரத்தின் விநோதச் சுழற்சி 'பிரிவி கௌன்ஸி வி'ன் காரியதரிசியாகக் கொண்டுவந்து சேர்த்தது. இத்துடன் துறைமுக சம்பந்தமான ஒரு வியாபாரத்திலும் அவர் ஈடுபட்டிருந்தார். தமது மனைவியைக் கிராமத்திலேயே விடுத்து, ஒரு நாட்டியக் கணிகையின் காமவலையிலுழன்று தமது பேரையும் அந்தஸ்தையும் வரவர மோசமாக்கிக்கொண்டே வந்தார். நாளடைவில் அவருக்கு நான்கு குழந்தைகள் பிறந்தன. அவர்களில் ஒருவரே ககாவா என்னும் பிரசித்தி பெற்ற ஜப்பானியப் பெரியார்.

இவருக்கு நாலு வயது நிரம்பு முன்னமே, குடி முதலிய கேளிக்கைகளில் மூழ்கியிருந்த தாய் தந்தையர் இருவரும் மரிக்க, இவரது தந்தையின் தர்மபத்தினியிடம் இவர் ஒப்புவிக்கப்பட்டார். தமது குடும்ப வாழ்க்கைக்கும், தம் கணவரின் உயிருக்குமே யமனாய்த் தோன்றிய 'கீஷா'*வின் குழந்தையிடம் அவருக்கு எவ்வளவு தூரம் அன்பிருக்கக் கூடுமென்பதை வாசகர்களே ஊஹித்துக்கொள்ளலாம். ஆகவே, ககாவாவின் குழந்தைப் பருவம் துக்கமயமாகவே இருந்ததில் வியப்பொன்றுமில்லை.

கிராமப் பள்ளிப் படிப்பு முடிந்ததும் டோகுஷிமா என்னு மூரிலுள்ள பள்ளிக்கூடத்தில் சேர்ந்தார். இங்குள்ள பிள்ளைகள்விடுதியில் இவர்கண்ட ஒழுக்கக் குறைவும், ஆபாஸமும், சிறுபிள்ளையாயிருந்தாலும், இவரைத் திடுக்கிடச் செய்தன. அதனால் தனது சகபாடிகளோடு அளவளாவாமல் தனியேயிருந்து எண்ணுதுமெண்ணி, சிந்தை நொந்து கண்ணீர் பெருக்கிய வண்ணமாகவே சிறிது காலங் கழித்தார். இந்த சமயம் சில கிருஸ்துவப்பாதிரிகள் வந்து இவரைக் கைதூக்கி விடாதிருந்தால், என்ன நேர்ந்திருக்கு மென்று சொல்லுவதியலாது. அப்பாதிரிகளின் ஆழ்ந்த மனக்கனிவும், அவர்களுடைய அன்பும் இன்பமும் நிறைந்த குடும்ப வாழ்க்கையும், அவர்களது பொது ஒழுக்கத் தூய்மையும் சிறுவன் ககாவாவுக்கு, தைர்யத்தையும் உத்சாகத்தையும் கொடுத்து, மறுபிறப்பளித்ததென்னலாம். அவர்களையே வழி

---

*ஜப்பானிய விலைமாது.

காட்டியாகக்கொண்டு ககாவா, தமது 21-ஆவது வயது நிரம்பு முன்னரே, தம் வாழ்க்கையை ஏழை எளியார்களை ஸம்ரக்ஷிப்பதற்காகவே அர்ப்பணம் செய்ய தீக்ஷை பூண்டார்.

டோகியோ நகரத்தில் பதினாயிரக்கணக்கான பஞ்சைகள், அநாதைகள், மூர்க்கர்கள், கொலைபாதகர்கள், நிறைந்த குப்பங்களைப் பார்வையிட்டார். 6-அடி நீளம், 6-அடி அகலமுள்ள குடிசைகளில், 20, 30, 40 பேர்கள்—ஆண், பெண், சிறுவர், வயதுவந்தவர், உலகமறியாதவர், பரம தூர்த்தர்கள், கூட்டங் கூட்டமாக—நாய், பன்றிகளிலுங் கேடாக வாழ்வதைக் கண்டார். இந்த 6 அடி சதுர குகைகளுக்கு ஜன்னல் கிடையாது. கதவு திறக்கும் பொழுது மட்டுமே சிறிது வெளிக்காற்று உள்ளே செல்லும். சுற்றிலுமுள்ள கண்ணராவிகளை வர்ணிப்பது சாத்தியமில்லை. சுருக்கிச் சொன்னால் இக் குப்பங்கள் ரௌரவம் முதலிய நரகங்களையும் எளிதில் தோற்கடித்துவிடும். இத்தகைய பயங்கரக் குப்பம் ஒன்றில் 1909-ஆு கிருஸ்துமஸ் பண்டிகையின் போது ககாவா குடியேறினார். ஏழை மக்களுக்காகப் பாடுபடுவோர் அவர்களுடனிருந்து அதே வாழ்க்கையை மேற்கொண்டால்தான், சரியானபடி சேவைசெய்ய முடியுமென்பதே அவர் எண்ணம். இங்கு இவரைச் சுற்றி எங்கு திரும்பினாலும், குடி, களவு, காமம், கொலை, தீராநோய், பிசாசுகளையும் வெருண்டோடச் செய்யும் மனிதக் கசடுகள்— இவற்றின் கோலாகலமே. ஆனால், ககாவா என்று மனித சமூகத்தின் மீது நிறையன்பு பூண்டாரோ அன்றே பயம் என்பதைக் களைந்தெறிந்து விட்டார்.

ஒரு குடிசையில் ககாவா தனது சாமான்களை இறக்கியதுதான் தாமதம். குப்பக்காரர்கள் அனைவரும் வந்து கூடிவிட்டனர். ஒட்டுவாரொட்டியான ஒருவித மேக ரணத்தால் பீடிக்கப்பட்ட ஒரு துர்ப்பாக்கியன் ககாவாவுடன் தானிருக்க அனுமதிக்கும்படி அவரை வேண்டினான். இதை இறைவன் செய்யும் சோதனையாகவே கருதி ககாவா அந்நோயாளியைத் தன்னோடுகூட வைத்துக் காப்பாற்ற ஆரம்பித்தார்! வர வர இவரது குப்பக்குடும்பம் பெருகியது! கூடவிருந்தவர்களில் மற்றொருவன் கொலை பல புரிந்து, பயங்கரக் கனவுகளால் இரவு முழுவதும் தூக்கமின்றி அல்லல்படும் ஒரு பாதகன். ககாவாவிடமுள்ள ஓர் அதிசய சக்தி தனக்கு ஆதரவளிக்கும் என்று நம்பி இவன் ககாவாவின் கைகளை விடாது இறுகப் பிடித்தபடியே இரவைக்கழிப்பான். ஒருநாள் ஒருவன் இவரது 'ஷர்ட்'டைக் கேட்டான். உடனே அதைக் கழட்டிக் கொடுத்துவிட்டார். மறுநாள் அதேபோல் அவருடைய 'கோட்'டையும், கால்சட்டையையும் ஒருவன் பெற்றுச் சென்றான். அவரிடம் மிஞ்சியிருந்தது ஒரு பாவாடை மாத்திரமே! கேட்டதைக் கொடுக்க மறுத்தாலோ கட்டாரியை உருவுவதும், 'எதிரியை'க் குத்துவதும், ஒரு நொடி வேலை. கொலை செய்வது அவர்களுக்கு சர்வசகஜம்; அதையொரு பெருமையாகவே கருதினர்! இவ்வாறான சகபாடிகள் கூடிக் ககாவாவைத் துன்புறுத்திய வண்ணமே இருப்பார்கள். 'நன்மைக்கு நன்மை செய்யலாம். தீமைக்குத் தீமை செய்வது கூடாது' என்ற கொள்கையை உறுதியாகக் கடைபிடித்தவர் ககாவா; ஆகவே, தந்திரத்தாலோ, ஓடியொளிந்தோ, கிடைத்ததை

யனுபவித்தோதான் அவர்கள் இழைத்த கொடுமைக்கு ஒருவாறு அவர் ஈடு கொடுத்து வந்தார். ஒருநாள் ஒரு சகா பெரிய கல் ஒன்றை அவர் தலைமீது போட்டான்! மற்றொருவன் ஒருநாள் இவரை முகத்திலடித்து நான்கு பற்களை உதிர்த்துவிட்டான்! அன்பு நிறைந்த மனத்தினரான ககாவா இத்தகைய கொடுமைகளை எல்லாம் சாந்தத்தோடும் புன்சிரிப்போடும் சகித்துக் கொள்வார். "இக்குப்பங்களே எனது ஆராய்ச்சிசாலை. இந்த சகாக்களே உபகரணங்கள். இவற்றைக்கொண்டு நான் என் ஆத்ம பரிசோதனையை நடத்தி வருகிறேன். கடவுள் அருள் எவ்வாறிருக்கிறது பார்க்கலாம்" என்று அவர் அடிக்கடி சொல்லுவதுண்டு.

வாழ்க்கையைப்பற்றியும் சமூகப் பழக்கவழக்கங்களைப்பற்றியும் ஆழ்ந்து சிந்தித்ததின் பயனாக, உலக துன்பங்களுக்கு மருந்து ஆதிகிருஸ்துவமத சமதர்மக் கொள்கைகளே என்று முடிவு செய்தார். இதை வற்புறுத்த எங்கும் பிரசங்கங்கள் புரிந்தார். பல 'நவீனங்களும்', வேறு புத்தகங்களும் எழுதிப் பிரசுரித்தார். இவ்வாறு ஏழைகளின் நலத்துக் கேற்றவைகளையே திடமனதுடனும், விருப்பு வெறுப்பின்றியும் செய்து இப்பெரியார் இன்னமும் சமூகத் தொண்டாற்றி வருகிறார். சில வருஷங்களுக்குள் இவரது கூர்மையான புத்தியும், உபகாரசிந்தையும், செயல் திறனும் எங்கும் பரவின. 'ஏழைபங்காளன்', 'எளியவர்க்காதாரன்' என்று பொது ஜனங்களால் வாழ்த்தப் பெற்றார். 1921-ஆம் வருஷ நடந்த தொழில் வேலைநிறுத்தத்தின் போது 30,000 தொழிலாளிகளும் ஒரே மனதாக, 'ககாவாவே நமக்குகந்த தலைவர்' என்று கொண்டு அவர் சொற்படி கேட்டு நற்பயனடைந்தனர்.

வீண் வாதங்களிலும், வாழ்க்கைக்குச் சம்பந்தமில்லாத ஆராய்ச்சிகளிலும் அவர் காலத்தைச் செலவிடுவதில்லை. 'துயரமே நிறைந்த ஏழைகளின் வாழ்க்கையில் சிறிதாவது சந்தோஷமுண்டாக்குவதற்கே நேரம் போதவில்லையே' என்று உருகி அல்லும் பகலும் உழைத்து வருகிறார். இவரது சமதர்மம் இப்பொழுது ருஷ்யாவில் நடைபெறும் பொதுஉடமையல்ல. கிருஸ்துவ மதத்தின் அடிப்படையானதும், டால்ஸ்டாய் அனுஷ்டிக்க முயன்றதுமான கொள்கைகளே இவர் மேற்கொண்டவை. கிருஸ்துமகான், சினாய் மலையில் செய்த உபதேசமே இவரது வாழ்க்கைமுறையின் அஸ்திவாரம். ஜனங்களுக்குப் பரஸ்பரமுள்ள பொறாமை, பயம், பகைமை முதலிய துர்க்குணங்களை ஒழித்து, அவர்கள் உள்ளத்தில் அன்பை நிரப்பவேண்டு மென்பதே அவர் நோக்கம்.

ஏழைகளுக்காக இவர் செய்துவந்த பேருபகாரமான தொண்டைப் பாராட்டி ஜப்பானிய அரசாங்கம், ஜப்பானில் 6 பெரிய நகரங்களிலுள்ள குப்பங்களை அழித்து, குப்பத்தார்க்கு வீடுவசதிகள் உண்டாக்கிக் கொடுக்க 6-வருஷத் திட்டமொன்று போட்டு, அவ்வேலைக்கு சுமார் 3 கோடி ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். தாழ்ந்த மக்களுக்கு வேண்டியன செய்து தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாய் விளங்கும் ககாவாவின் வாழ்க்கையைப்பற்றி மேற்கண்ட சில விஷயங்களையும், அவரது மனோ பரிபக்குவத்தையும் அறியத் தமிழர்க்கு ஆவலும், அவற்றை யறிவதாற் சிறிது பயனும், இருக்குமென்றே நம்புகிறோம். ப—ர்]

அற்புதங்களுக்காக வெகுதூரம் போகவேண்டாம். நானே ஓர் அற்புதம்தான். நான் பிறவியெடுத்ததும், உயிர் தரித்திருப்பதும் அற்புதங்களே. முதல் முதலில் நான் ஜன்மம் எடுத்ததே அற்புதம்தான். நோய் பல பீடிக்க, வலி குன்றி ஓய்ந்திருக்கும் இவ்வுடம்பில் உயிர் இன்னும் இருப்பதும் ஓர் அற்புதமே.

இவையெல்லாம்விட அற்புதம் ஒன்றுண்டு. அதுதான் என் ஆத்துமா. அது நித்தியமானது. பாசமயமான இவ்வுலகில் ராகங்களில் சிக்கிக் கொள்ளாமல், இறைவன் அருளால் நான் வெற்றி பெறவும், பக்தர் கூட்டத்தில் நானும் ஒருவனாய் முன் செல்லவும் எனக்கு ஆண்டவன் புத்தி கொடுத்ததும் ஒரு பெரிய அற்புதம் தான். சில சமயங்களில் காமம் முதலிய காலர் வந்து என்னைக் கைப்பற்ற எவ்வளவோ முயலுகின்றனர். ஆனால், அவரினும் ஆயிரம் மடங்கு பலனுள்ள மகா பரிசுத்தமான ஓர் அருட்பெருஞ் சக்தி வந்து என்னை ஆண்டு காக்கிறது. இந்த நிலையை நினைக்கும் போது இதைவிடப் பெரிய அற்புதம் என்ன இருக்கக் கூடும் என்றே தோன்றுகிறது.

* * * * *

இயற்கையில் உள்ளது ஒவ்வொன்றும் அழகானது என்பதற்கில்லை. ஏனெனில் இயற்கைவனப்புக் காண்போரின் மனநிலையைப் பொறுத்திருக்கிறது. துயர்படுவோர் கண்ணுக்கு இளவெயிலும் வெண்ணிலவும்கூட வெறுக்கத்தக்கனவா யிருக்கின்றன. ஆனந்தத்தால் மனம் நிறைந்தவர்களுக்குக் குப்பத்துச் சாக்கடைச் சேறும் நீருங்கூட ஆனந்தவூற்றெனவே தோற்றுகின்றன!

ஆத்தும பரிபக்குவம் அடையப் பெறாதவர்களுக்கு இயற்கையில் பொதிந்து கிடக்கும் தத்துவநிதிகள் எட்டுவதில்லை. கள்ளம் கபடு அறியாத நம் முன்னோர் கண்ணுக்கு, மலையும், ஆறும் தெய்வமாகவே தோன்றின. இப்பால் தோன்றிய நம்மவர்கள் பொய்யும் பயமும் நிறைந்திருந்ததால், அவர்களுக்கு எங்கு பார்த்தாலும் பேயும் பூதமுமே தென்படலாயின.

இக்கால மக்களுக்கு சாஸ்திரஞானமும் ஆராய்ச்சிஞானமும் இசைந்திருப்பதால், அவர்களுக்கு இயற்கையை உள்ளபடி கண்டு உவகை எய்துதல் இயலுகிறது. இறைவன் அருளைப் பருகினவர்க்கே இயற்கைமீது இச்சையெழும். காட்டிலே முளைத்துப் பூக்கும் புஷ்பங்களுக்கும் நாட்டிலே தோன்றி வாழும் கவிவாணருக்கும் பரஸ்பர ஆத்தும சம்பந்தம் நேரிடுவது எப்படி? அன்பினால்தான். அன்பு நெகிழும்வரை இயற்கை கண்ணுக்குத் தோன்றுவதில்லை.

ஆத்துமஞானம் உள்ளவன்தான் இப்படி இயற்கையின்மீது மோகம் அடையமுடியும் என்று தாராளமாய்ச் சொல்லலாம்.

* * * * *

கண்ணீரை யாரும் விரும்புவதில்லை. நள்ளிரவின் தேவதையே, இதோ என் கண்ணீரை (மூங்கில் உழக்கில்) வாங்கிக்கொள். இறைவனுக்கு அர்ப்பணமாகவே என் துக்கக் கண்ணீரை உகுக்கிறேன். இறைவன் சந்நிதானத்திலே அர்ப்பணம் செய்ய என்னிடம் வேறெதுவுமில்லை. திருவிழாவுக்கு உழக்கிலே எண்ணெய் கொண்டுவருவதற்குப் பதிலாக, நான் கண்ணீர் உழக்கைக் கொண்டுவருகிறேன். 'அதிலே, மனங்கசந்து உகுத்த கண்ணீரும், இறைவன் அருளின நலன்களுக்கு நன்றி செலுத்தின கண்ணீரும், பாசங்கள் மிஞ்சினதால் உகுத்த கண்ணீரும், ஆனந்தக் கண்ணீரும், எல்லாம் இருக்கின்றன. படைப்பிலேயே நான் அழும் குழவியானேன். நடுப்பகலில் பகவத் சந்நிதியிலே வரக் கூச்சமாயிருக்கிறது. தனியே, இரகசியமாய், நள்ளிரவில் நான் ஆண்டவன் சந்நிதியை நாடுகிறேன்!

என் கண்ணினுள் மணியே! உருகு. என் கண்விழிகளே வெள்ளமாய்க் கசியட்டும். ஈசுவரனுக்கு என் ஆவியின் சத்துவத்தையே அர்ப்பணம் செய்யமாட்டேனா? இவ்வென் கண்ணீர் ஈசுவர சந்நிதான பலிபீடத்திலே பரிமளம் வீசட்டும். என் கண்ணீர் பளிங்கு போல் நிஷ்களங்கமாயிருக்கட்டும்.

கண்ணீரே, கண்ணீரே! ஆத்துமத்துவத்தைக் கசக்கிப் பிழிந்தெடுத்த கண்ணீரே! ஈசுவர சந்நிதியைக் கிட்டுகிறோம் என்ற ஆனந்தத்தால் வடிந்த கண்ணீரே! ஆண்டவன் சந்நிதியில் நுழைய உரிமையில்லையே என்ற ஏக்கத்தால் உகுந்த கண்ணீரே! மாறிமாறி வடிந்து, ஊறி, பெருக்கெடுத்தோடிக் கலப்பதால் மனதை உருக்கும் பண் பயிலும் கண்ணீரே! வா, கண்ணீரே, கடவுள் சந்நிதியில் தயங்காமல் வா!

* * * * *

ஈசனை அறிந்தவர்களுக்குத் துயரமே மாபெரும் வித்தை. வாழ்நாளைத் திருநாளாக எண்ணி ஆண்டவன் இவ்வுலகில் துன்பங்களைத் தூவி வைத்திருக்கிறார். எத்தனைபேர் சோகரஸ ரஸிகர்கள் அரிச்சந்திர நாடகத்துக்குக் காசு கொடுத்து கண்விழித்துப் பார்க்கிறார்கள்? ஏன்? கடைசியில் மயானகாண்டம் வரும்போது தாமும் சந்திரமதியோடு கண்ணீர்விடத்தான்! ஆனால் நிலவுலகில் எண்ணிறந்த சோகபாகங்கள் நமக்கு காசுச் செலவில்லாமல் நம் கண்முன் நடக்கும்படி ஈசன் அருளியிருப்பதை யாராவது கவனிக்

கிறார்களா? ஸுகபோகங்களில் தலைகால் தெரியாமல் ஈடுபட்டிருப்போர்க்கு துயரம் ஒரு பெரும் சோதனையாகும்.

தாய்ச்சிங்கம் தன் குட்டியைப் பிறந்த மூன்றாம்நாள் மலையுச்சியிலிருந்து உருட்டுகிறது என்று சொல்லுகிறார்கள். ஈசுவரனடியாய்ப் பிறந்திருக்கும் நமக்கு அவனைப்போல சக்தி வாய்ந்திருக்க வேண்டும். ஆகையால் துயரம், துரதிருஷ்டம், தரித்திரம், தொல்லை, ஆகிய ஒவ்வொன்றும் வாழ்க்கைக்கு வேண்டிய அணிகலன்கள் என்று நாம் கொள்ளவேண்டாமா?

மனமே, வெள்ளம் கரைபுரண்டு வரட்டும். புயல் அடிக்கட்டும். ஸப்த மேகங்களும் இடியும் மின்னலுமாய்க் கலந்து மோதட்டும். பூகம்பம் வந்து நடுக்கிப் பிளக்கட்டும். எனக்கு அவையொன்றிற்கும் பயமில்லை. எனக்குத் துன்பமே ஒரு பெரிய பொழுதுபோக்கு.

*    *    *    *    *

மனிதருள் மிக மிகத் தாழ்ந்தோரிடையில் ஈசன் வாசமாயிருக்கிறார். சிறைச்சாலைகளிலே அடைபட்டிருக்கும் கைதிகள் நடுவில் குப்பைமேட்டில் அவர் வீற்றிருக்கிறார். ஏழைப்பிள்ளைகள் இரக்குங் கையராய்ப் படியேறி வருகையில் அவர்களோடு ஆண்டவனும் ஐயம் ஏற்க வருகிறார். பிச்சை கூவி அளிக்கும் தாதாவின் வாசல்தோறும் திரண்டு குவியும் தரித்திரர்மத்தியில் அவரும் வந்து சேருகிறார். நோயாளிகளிடையே ஆண்டவன் இருக்கிறார். வேலையில்லாதாராய், வேலை கொள்வாருண்டோ வென்று சந்தி தோறும் நிற்கும் கூட்டத்தாருடன் தானும் கூலியாளாக வருகிறார்.

ஆகையால் ஆண்டவன் தரிசனம் வேண்டுபவன் ஆலயத்தை நாடுமுன் சிறைச்சாலைக்குப் போய்ப் பார்க்கட்டும். கோயிலுக்குப் போகுமுன் சிகிச்சா மண்டபத்துக்குப் போய்ப் பார்க்கட்டும். வேதபுராணங்களைப் படிக்குமுன் வாசலில் நிற்கும் வறியவர்க்குப் பிச்சையிடட்டும்.

ஆலயத்துக்குப் போய்வந்த பிறகு சிறைச்சாலைக்குப் போய்ப் பார்ப்பானாயின், அவ்வளவு நேரம் ஆண்டவன் தரிசனத்துக்கு ஆலசியம் செய்தவனாகமாட்டானா? கோயில்களுக்கு முதலில் போய்விட்டுப் பிறகு சிகிச்சைச்சாலைக்குப் போனால், அவ்வளவு நேரம் ஐயன் சேவைக்குத் தாமதம் ஆகாதா? வாசலில் வரும் வறியோர்க்குச் சகாயம் செய்யாமல் வேதசாஸ்திர புராணப் படிப்பில் ஈடுபட்டானாகில், எளியோரிடையே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஈசன் வேறிடம் பெயர்ந்து போய்விடுவாரே! கூலிவாங்கி வயிறு வளர்க்க வேலை கிடைக்காதவர்களை எவன் மறக்

கிருனே, அவன் ஆண்டவனையே மறந்தவனுகிருன். எனக்கு ஜனங்களிடத்தில் அன்பு அதிகம். கொலைகள் புரிந்து, கண்டவரஞ் சும்படியாக நடக்கும் துராத்துமாவிடத்திலும் என் அன்பை இளகச்செய்யக் கூடிய என்னவோ ஒன்று இருக்கிறது. ஜனங்களின் துன்பம் சகிக்க முடியாதபோது நான் பயந்தோடுகிறேன். எத்தனையோ தடவை நான் சிங்காவா குப்பங்களைவிட்டு ஓடியிருக்கிறேன். ஏன், சில துஷ்டர்கள் என்னை இருக்கவிடவில்லை. என்றுலும் அந்தக் குப்பத்துவாசிகளை நான் கைவிட்டுவிடவில்லை.

இயற்கையில் எத்தனையோ பொருள்கள் வசீகரமாயிருக்கின்றன. ஆனுலும் குப்பத்து ஏழைப் பிள்ளைகளும் எனக்கு மிகுந்த ஊக்கமளிக்கிருர்கள். அவர்களோடு ஓடி விளையாடும் பாக்கியம் எனக்குக் கிடைத்தால், அதை விட்டுவிட்டு அவர்களைவிடச் சந்திரனும், மலைகளும், அருவியும் அழகானவை என்று சொல்லமாட்டேன்.

பாவமே மக்களை இழிவு படுத்துகிறது. உலகிலே கள்ளும், கொடியநோயும் இல்லையென்ருல் எந்தப் போக்கிரியிடமும் பயப்படவேண்டியதில்லை. தரித்திரத்தினுல் பயமில்லை. தரித்திரனுக்குக் கள்வெறி ஏறினுல் அவனைக்கண்டு அஞ்சவேண்டியதுதான்.

தமது துஷ்ட நடத்தையாலேயே சிலருக்கு நோய் வருகிறது. நல்ல பருவமாயிருந்த தாசிகளும் தளர்ந்து, கிழமாகிக் கூனிவிடுகிருர்கள். இவ்வாறு அவாது துர்நடத்தைதான் அவர் அழிவிற்குக் காரணமென்றுலும், அவர்களைத் துறந்துவிட என் மனந்துணியவில்லை. ஜனங்களிடம் எனக்குப் பற்றுக் குறையாது. இந்த வாஞ்சையை நான் விட முடியாது. கள் என்னும் பேய் உள்ளேறி இவர்களைப் பயங்கரப் பேய்களாக்கும்போது நான் பயந்து தப்பி ஓடினுலும், வெறி தெளிந்தவுடனே அவர்களைத் தேடிப்பிடித்து அவர்களுடன் முன்போலவே பழகுகிறேன். சமூக இயக்கங்களும், மத சித்தாந்தங்களும் வெவ்வேறு என்று சிலர் சொல்லுகிருர்கள். ஆனுல் அப்படிச் சொல்லுகிறவர்கள் மதம் என்பது ஜீவன் முழுவதையும்பற்றிய ஒரு பெருங்கலை என்பதை உணராதவர்களே. ஐஹிக விஷயங்களும், ஆமுஷ்மிக விஷயங்களும், பற்றற்றனவாயும் ஈச்வரனுக்கும் இவ்வுலகத்துக்கும் சம்பந்தமில்லாமலும் இருக்கும் பட்சத்தில், இந்த வாதம் சரியாயிருக்கலாம். ஆனுல் உபகாரமே உஜ்ஜீவனம் என்பவர்களுக்கு சமூகத் தொண்டையும் மதசேவையையும் பிரிப்பது முடியாத காரியம்.

மதம் என்பது நமது ஜீவியத்தின் கிரியாபாவம். ஆனுல் மத சம்பந்தமில்லாமல் சமூக இயக்கங்கள் எப்படித்தனித்திருக்க முடியும்? பயங்காளிகள்தான் ஈசுவரன் வேறு, இவ்வுலகம் வேறு என்று

இரண்டாகப் பிரிக்கிறார்கள். வர்த்தகசாலைகளில்கூட ஈச்வரபக்தி நிறைந்துவழிந்தாலன்றி உண்மையான மதம் ஒன்றும் ஏற்பட முடியாது.

* * * * *

தரித்திரமே எனக்கு மகிழ்ச்சி தருவது. விசேஷ ஆஸ்திபாஸ்திகள் இருப்பது விசனிக்கத்தக்கது. ஒருவனுக்கு ஒன்றும் இல்லாவிட்டால், துயரங்கள் குறையும். இப்படிச் சொல்லுவதனால் வயிறு பிழைக்கத் தேவையானவற்றைக்கூடத் தேடவேண்டாம் என்று சொல்லவில்லை. எப்படியாவது நான் வசிக்கமுடியுமானல், பெரியமாளிகை ஒன்றும் எனக்குத் தேவையில்லை. அதைக் காட்டிலும் ஒரு தோப்பின் நடுவில் ஒரு குடிசை போதும். நத்தையும் நாரையும், தாமரையிலையுமே எனக்கு நண்பர்கள். இது போதும்; பணங்காசு, பாக்கியங்கள் எனக்கு வேண்டாம்.

இதே காரணத்தினல்தான் நான் சம்பந்தப்பட்டிருக்கிற தொழிலாளர் சங்கங்கள் பெரும்பொருள் தேடவில்லை, நாடவுமில்லை. அவைகள் கேட்பவை யெல்லாம் மூன்று வரங்கள்தான்:— பிழைக்கப்போதுமான ஆதரவு; வேலை கிடைக்காது திண்டாடாமல் உத்தியோகம்; தாமும் ஆண்மக்கள் என்று காட்டும் கௌரவம். இவ்வளவுதான். இதைவிட்டுப் பேராசையினல் ஏற்பட்ட தொழிலாளர் இயக்கங்களில் ஈடுபட எனக்கிஷ்டமில்லை.

* * * * *

இரும்பு, எஃகு, கருங்கல், சிமிட்டி, இவைகளினலெல்லாம் நாகரிகமான கட்டடங்கள் ஏற்பட்டதன்பின் மக்களுக்கு நிலத்தில் இருந்த பிடிப்புத் தளர்ந்துவிட்டது. நிலமே ஆண்டவன் பாதக் குறடு. நிலத்தின் மணமே எனக்கு உயிரளிக்கும் ஸஞ்சீவி. நாகரிகம் பெற எனக்கு விருப்பம் இல்லை. நிலத்தில் மண்ணோடு மண்ணாய், மண்தரையில் தூங்கவும், வசிக்கவும் எனக்கு இஷ்டம்.

* * *

இவ்வுலகில் சொத்து சுதந்திரத்தைப்போல் அர்த்தமற்றது வேறொன்றுமில்லை. சின்னக் குழந்தைகளுக்கு இரத்தினங்களைப் பார்க்கிலும் பாசிமணியின்மீதே பிரியம் அதிகம். உலோபிகளுக்கோ விசேஷ ஆராய்ச்சித் திறமையைக் காட்டிலும் ஒரு பொன் காசு அதிக மதிப்புள்ளதாகத் தோன்றுகிறது. சுருங்கச் சொல்லின், எந்த வயதிலும் ஒரு பொருளின் உபயோகத்தைப் பொறுத்திருக்கிறது அதில் உள்ள அவா.

அதனல் தமது ஜீவிய முழுவதும் ஆக்குந் தொழிலிலேயே ஈடுபடுகிறவர்களுக்குச் சொத்துரிமையில் நோக்கமில்லை. விஞ்ஞான

சாஸ்திரிக்கு பாசிமணிகளிலாவது, தங்கக்காசுகளிலாவது கவனம் செல்வதில்லை.

சொத்துரிமை என்பது ஒரு மேலோடு போன்றது. அதனால் பலனை அடைபவன் அதனுள்ளே ஒளிந்து கொள்பவன் ஒருவன் தான். அதை மீறி வளரவேண்டுமென்று விரும்புவோனுக்கு அது ஒரு தடையாயிருக்கிறது. முதுகெலும்பு இல்லாத பிராணிகளுக்கே ஓடு இருக்கிறது. ஆகையால் சொத்துரிமையை விடாமல் பிடித்துக்கொண்டிருப்பவர்களை முதுகெலும்பில்லாத ஜந்துக்கள் என்று சொல்லலாம்.

புதுப்புது விஞ்ஞான ஆராய்ச்சிகளும் சாஸ்த்ரீய யந்திரங்களும் ஏற்பட்டு வரும் இந்த யுகத்தில் முதுகெலும்பு இல்லாத இப்பிராணிகள் விடாமல் பேசிக்கொண்டிருக்கும் இந்த சொத்துரிமையைப்பற்றி பெரிய மாறுதல்கள் ஏற்படவேண்டுவது அவசியம். ஐயோ பாவம்! இந்த எலும்பற்ற ஜீவன்களுக்கு என் பூரண அநுதாபம்.

# புதிய விழிப்பு

பெ. நா. அப்புஸ்வாமி அய்யர், பி. ஏ., பி. எல்.

---

"பூமண்டல முழுதிலும் பெரிய விழிப்பொன்று வரப்போகிறது. அதற்காதாரமாக ஹிந்துஸ்தானம் கண்ணைவிழித்து இருபதாண்டுகளாயின. ஹிந்துஸ்தானத்துக்குள் தமிழ்நாடு முதலாவது கண்விழித்தது. ஆனால், இன்னும் புத்தி சரியாகத் தெளியாமல் கண்ணை விழிப்பதும் கோட்டாவி விடுவதுமாக இருக்கிறது"

என்று சற்றேறக்குறைய இருபது வருஷங்களுக்கு முன்னாலே சுப்பிரமணிய பாரதியார் எழுதிவைத்தார். இப்பொழுது தமிழ் நாட்டிலே தூக்கம் கொஞ்சம் தெளிந்திருக்கிறது; இன்னும் முற்றிலும் தெளியவில்லை.

தூங்குகிறவர்களை எழுப்பினால் சிலர் உடனே நன்றாக விழித்துக்கொண்டுவிடுகிறார்கள் அல்லவா! பாரதி அவர்களுள் ஒருவர். அவருடைய கண்களுக்கு அப்பொழுதே தெளிவாகத் தெரிந்த விஷயங்களிற் பல இப்பொழுதுதான் தமிழ்நாட்டு மக்களுக்குப் புலனாகி வருகின்றன. தமிழை அவமதித்துவந்த தமிழ்மக்களிடையே இப்பொழுதுதான் தமிழிடத்தே அன்பும், பற்றும், மதிப்பும் ஏற்பட்டு வருகிறது. தமிழை எப்படி எழுதவேண்டும்? அதை எப்படிச் சீர்திருத்திச் செழுமையாக்கவேண்டும்? பிற பாஷைகளிலிருந்து மொழிபெயர்ப்புக்களை எவ்வாறு இயற்றுவது நல்லது? விஞ்ஞான சம்பந்தமான சொற்களை அமைத்துக்கொள்ளும் வழிகளுள் எது சிறந்தது? என்பனவற்றை அவர் சிந்தித்து முடிவு கட்டியிருக்கிறார். தமிழின் சுவையை அனுபவித்து வெறிகொண்ட பாரதி—தமிழ் நாட்டின் மேன்மையைப் பற்றி ஓயாது கனவு கண்ட பாரதி—சொல்லுவதைக் கேளுங்கள். தமிழ் நடையைப் பற்றி அவர் சொல்லுகிறார்:—

"தமிழ் வசனநடை பிறந்து பல வருஷமாகவில்லை. தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும். ஆதலால், இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்த பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்ய வேண்டும். கூடியவரை பேசுவது போலவே எழுதுவது உத்தமமென்பதே என்னுடைய கக்ஷி. எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது ஒரு தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம், எதை எழுதினாலும், வார்த்தைசொல்லுகிற மாதிரியாகவே அமைத்துவிட்டால் நல்லது."
[கலைகள்—73ஆம் பக்கம்]

"பழக்க மில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து, அதாவது ஜனங்களுக்குச் சற்றேனும் பழக்கமில்லாமல் தனக்கும் அதிகப் பழக்கமில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து, எழுத ஆரம்பித்தால் வாக்கியம் தத்தளிக்கத்தான் செய்யும், சந்தேகமில்லை. ஆனல், ஒரு வழியாக முடிக்கும்போது, வாய்க்கு வழங்குகிறதா என்று வாசித்துப் பார்த்துக்கொள்ளுதல் நல்லது." [கலைகள்—பக்கம் 74]

இதைத்தொடர்ந்து அவர், "அல்லது, ஒரு நண்பனிடம் படித்துக் காட்டும் வழக்கம் வைத்துக் கொள்ளவேண்டும்" என்று சொல்லுகிருர். இது அவ்வளவு நல்ல யோசனையா? நடக்கக் கூடியதா? படித்துக் காட்டுவதற்கு எத்தனையோ பெயர்கள் தயாராக இருக்கலாம்! கேட்பதற்கு அத்தனை நண்பர்கள் அகப்படுவார்களா என்பது சந்தேகம்! அகப்பட்டுக் கொண்டால் பின்னும் அவர்கள் நண்பர்களாகவே இருப்பார்களா என்பது அதைவிடச் சந்தேகம்! பாரதிக்கும் இச்சந்தேகம் இருந்திருக்கவேண்டும். அதனல் அவர் ஓர் எச்சரிக்கை செய்கிருர்:

"சொல்லவந்த விஷயத்தை மனதிலே சரியாகக் கட்டிவைத்துக் கொள்ளவேண்டும். பிறகு கோணல், திருகல் ஒன்றும் இல்லாமல், நடை நேராகச் செல்லவேண்டும்....ஆரம்பத்திலே மனதிலே கட்டிமுடித்த வசனங்களையே எழுதுவது நன்று. உள்ளத்திலே நேர்மையும் தைரியமுமிருந்தால், கை பிறகு தானகவே நேரான எழுத்து எழுதும். தைர்யம் இல்லாவிட்டால் வசனம் தள்ளாடும். சண்டிமாடுபோல ஓரிடத்தில் வந்து படுத்துக்கொள்ளும்; வாலைப் பிடித்து எவ்வளவு திருகினலும் எழுந்திருக்காது....நமது தற்கால வசனநடையில் சரியான ஒட்டமில்லை. தள்ளாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது." [கலைகள்—பக்கம் 74]

ஒரு பாஷை வளரவேண்டுமானல், பிறபாஷைகளிலுள்ள சிறந்த இலக்கியங்களையும் அறிவுநூல்களையும் தெரிந்துகொள்ளுவது அவசியம். ஆதலால் மொழிபெயர்ப்புக்கள் அவசியம். பாரதியார் இதைப் பலமுறை வற்புறுத்தியிருக்கிருர். ஆனல் மொழிபெயர்ப்பு முறையைப்பற்றி ஓர் எச்சரிக்கை செய்கிருர்:—

"பிற தேசத்துப் பத்திரிகைகள்....பல விஷயங்களை மொழிபெயர்த்து எழுதுகின்றன. ஆனல் அந்த மொழிபெயர்ப்புக்களில் ஸ்வபாஷையின் வழக்கங்களையும் பிரயோகங்களையும் கைவிட்டு அன்னிய பாஷையின் வசனநடையைப் பின்பற்றும் வழக்கம் கிடையாது. ஆனல், தமிழ் நாட்டிலோ முழுதும் தமிழ்நடையை விட்டு இங்கிலீஷ் நடையில் தமிழை எழுதும் விநோதமான வழக்கம்....காணப்படுகிறது. முதலாவது, நீ எழுதப்போகிற விஷயத்தை இங்கிலீஷ் தெரியாத ஒரு தமிழனிடம் வாயினல் சொல்லிக்காட்டு. அவனுக்கு நன்ருக அர்த்தம் விளங்குகிறதா என்று பார்த்துக்கொண்டு பிறகு எழுது. அப்போதுதான் நீ எழுதுகிற எழுத்து தமிழ்நாட்டிற்குப்

பயன்படும். உனக்கு இஹ பர க்ஷேமங்களுக்கு இடமுண்டாகும். இல்லாது போனால், நீயும் சிரமப்பட்டு மற்றவர்களுக்கும் பயனில்லாமல் போகிறது.''

இது நல்ல யோசனை.

விஞ்ஞான சாஸ்திரங்கள் யாவும் தமிழ்ப்படுத்தப்படவேண்டும், அவை தமிழ் நாட்டில் நிலவ வேண்டும் என்பது பாரதியாரின் கனவுகளுள் ஒன்று.

''ஐரோப்பிய ஸயன்ஸின் ஆரம்ப உண்மைகளைத் தக்க கருவிகள் மூலமாகவும் பரீக்ஷைகள் மூலமாகவும் பிள்ளைகளுக்குக் கற்பித்துக் கொடுத்தல் மிகவும் அவசியமாகும்.'' [சமூகம்—பக்கம் 60]

இங்கே பாரதியார் பரீக்ஷைகள் என்றது பேனாவும் மையுமாகப் பையன்கள் வாத்தியார்களைத் திட்டிக்கொண்டே எழுதும் பரீக்ஷைகள் அல்ல. இது அடுத்த வாக்கியத்தால் விளங்கும்.

''பிள்ளைகளுக்குத் தாங்களே ஸயன்ஸ் சோதனைகள் செய்துபார்க்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.'' [சமூகம்—பக்கம் 61]

''அந்த சாஸ்திரங்களையெல்லாம் ஏக காலத்திலே தமிழில் எழுதி முடிப்பதற்காக ஒரு பண்டித சங்கம் ஏற்படக்கூடும். நமது ராஜாக்களுக்கும், ஜமீன்தார்களுக்கும், செட்டிகளுக்கும் நல்ல புத்தியுண்டாகித் தமிழில் நவீன சாஸ்திரம் சேர்ப்பதாகிய காரியத்தை அவர்கள் தக்க பண்டிதர்களின் உதவி கொண்டு, விரைவில் நிறைவேற்றி மேன்மை பெறக்கூடும்.'' [கலைகள்—பக்கம் 98]

இங்கே பண்டிதர்கள் என்றது தமிழ்ப் பண்டிதர்களை மட்டுமல்ல, விஞ்ஞான சாஸ்திரப் பண்டிதர்களையும் கூடத்தான். இவ்விருவகைப் பண்டிதர்களும் ஒன்று சேர்ந்தாலன்றி இக்காரியம் நடைபெறுவது கஷ்டம். வெறும் தமிழ்ப் பண்டிதர்கள் மட்டிலும் சேர்ந்தால், பழைய தமிழ்ச் சொற்களைத் தேடிப் பிடித்துத் துலக்கிக் கொடுப்பார்கள். ஒரு புறம் துலக்கும்போதே இன்னொரு புறத்தில் துரு ஏறிக்கொண்டு வரும்; பொருள் விளங்காது. விஞ்ஞான சாஸ்திரப் பண்டிதர்கள் மட்டும் சேர்ந்தாலோ, தமிழ்த் தெய்வம் இருக்கிற இடமே தெரியாமல் போய்விடக்கூடும்.

விஞ்ஞானச் சொற்களைச் சேகரிக்க அவர் ஓர் உபாயம் சொல்லிக் கொடுக்கிறார். கக்ஷிகள் மிகுந்த இந்தக் காலத்திலே அதைச் சொல்வதற்குக் கூடச் சற்றுப் பயமாயிருக்கிறது. நாம் அதை ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அவர் என்ன சொல்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ளலாம் அல்லவா? அவர் சொல்லுகிறார்:

''ஸ்ரீகாசியிலே, 'நாகரி ப்ரசாரிணி சபையார்' ஐரோப்பிய ஸங்கேதங்களை யெல்லாம் எளிய ஸம்ஸ்கிருத பதங்களில் போட்டு, மிகப் பெரியதோர்

அகராதி உண்டாக்கி வருகிருர்கள். அந்தச் சொற்களை வேண்டியவரை, இயன்றவரை, தேசபாஷைகள் எல்லாவற்றிலும் ஏககாலத்தில் கைக்கொண்டு வழங்கலாம். ஐரோப்பாவில் எல்லாபாஷைகளும் இவ்விதமாகவே லத்தீன், யவன பரிபாஷைகளைக் கைக்கொண்டிருக்கின்றன. இவ்வாறு செய்வதால் நமது தேசபாஷைகளில் ஸங்கேத ஒற்றுமை ஏற்படும். அதனுல் சாஸ்திரப் பயிற்சி தேசமுழுவதும் வளர்ந்தோங்கி வருதல் எளிதாகும்.'' [கலைகள்—பக்கம் 10C]

இன்னும்,

"பௌதிக சாஸ்திரங்கள் கற்றுக் கொடுப்பதில், மிகவும் தெளிவான எளிய தமிழ் நடையில் பிள்ளைகளுக்கு மிகவும் ஸுலபமாக விளங்கும்படி சொல்லிக் கொடுக்கவேண்டும். இயன்ற இடத்திலெல்லாம் பதார்த்தங்களுக்குத் தமிழ்ப் பெயர்களையே உபயோகப் படுத்தவேண்டும். திருஷ்டாந்தமாக, 'ஆக்ஸிஜன்', 'ஹைட்ரஜன்', முதலிய பதார்த்தங்களுக்கு ஏற்கெனவே தமிழ் நாட்டில் வழங்கப்பட்டிருக்கும் பிராணவாயு, ஜலவாயு என்ற நாமங்களையே வழங்கவேண்டும். தமிழ்ச் சொற்கள் அகப்படாவிட்டால் ஸம்ஸ்கிருத பதங்களை வழங்கலாம்......இந்த இரண்டு பாஷைகளிலும் பெயர்கள் அகப்படாத இடத்தில் இங்கிலீஷ் பதங்களையே உபயோகப்படுத்தலாம். ஆனுல் குணங்கள், செயல்கள், நிலைமைகள்—இவற்றுக்கு இங்கிலீஷ் பதங்களை ஒருபோதும் வழங்கக் கூடாது. பதார்த்தங்களின் பெயர்களை மாத்திரமே இங்கிலீஷில் சொல்லலாம், வேறுவகையால் உணர்த்த இயலாவிடின். [சமூகம்—பக்கம் 62, 63]

ஒரு தேசத்தின் சீரும் சீர்கேடும் அதன் பெண்களின் நிலையைப் பொறுத்ததாயிருக்கிறது. சுதந்திரம் மிகுந்த இங்கிலாந்திலே பெண்கள் அடிமைகளாகியிருந்த நிலையை மீறி விடுதலை பெறவேண்டித் தங்கள் பெண்மையையும் மறந்து தீவிரமான முயற்சிகள் செய்தகாலத்திலே, அந்நாட்டிலுள்ள ஆண்மக்களுங்கூடச் சிந்தை கலங்கிப் பெண்களின் விடுதலைக்குத் தடைகள் செய்தனர். அப்பொழுதே பாரதியின் கண்ணுக்குப் புதுமைப் பெண்ணின் உருவம் தெளிவாகத் தெரிந்தது. அவளுடைய "நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞானச் செருக்கும்'' அவருடைய கண்ணின் முன்னேவந்து நின்றன. "நறிய பொன்மலர் மென்சிறுவாயினுல் அந்நங்கை கூறிய புதுமைகள் நாரதன் வீணையின் நாதத்தையும்,'' "நம்பிரான் கண்ணன் வேய்ங்குழல் இன்பத்தையுமே'' அவருக்கு நினைப்பூட்டின. புதுமைப் பெண்ணுனவள் பராசக்தியாகவே அவருக்குத் தோன்றினுள்.

"ஸ்திரீகளுக்கு ஜீவன் உண்டு; மனம் உண்டு; புத்தியுண்டு; ஐந்து புலன்கள் உண்டு; அவர்கள் செத்த யந்திரங்கள் அல்லர், உயிருள்ள செடி

கொடிகளைப் போலவுமல்லர். சாதாரண ஆண்மாதிரியாகவேதான். புற வுறுப்புக்கள் மாறுதல்: ஆத்மா ஒரேமாதிரி.

இதனை மறந்து அவர்களைச் செக்குமாடுகளாகப் பாவிப்போர் ஒரு திறத்தார். பஞ்சுத் தலையணைகளாகக் கருதுவோர் மற்றொரு திறத்தார். இரண்டும் பிழை.

ஸ்திரீகள் தமக்கிஷ்டமான பேரை விவாகம் செய்துகொள்ளலாம். விவாகம் செய்துகொண்ட புருஷனுக்கு ஸ்திரீ அடிமையில்லை, உயிர்த்துணை; வாழ்க்கைக்கு ஊன்றுகோல், ஜீவனிலே ஒரு பகுதி; சிவனும் பார்வதியும் போல; விஷ்ணுவும் லக்ஷ்மியும் போல". [மாதர்—பக்கம் 12]

சங்கீதம் முதலிய கலைகளைப் பற்றிப் பாரதியார் சொன்ன விஷயங்கள் அப்பொழுது கக்ஷிகளுக்கு இடமாயிருந்தன. இப்பொழுது அவை அநேகமாக யாவரும் ஒப்புக்கொண்ட விஷயங்களாகிவிட்டன. ஹார்மோனிய சுருதி நல்லதா? தம்பூர் சுருதி நல்லதா? பெண்கள் வாய்விட்டுப் பாடலாமா? அடக்கமாகக் கள்ளத்தொண்டையில்தான் பாடவேண்டுமா? சங்கீதக் கச்சேரிகளில் பழம்பாட்டுக்களையே திரும்பத் திரும்பப் பாடுவது சரியா? புதிதுபுதிதாகப் பாடவேண்டாமா? தமிழ் நாட்டிலே தெலுங்குப் பாட்டையும் ஸம்ஸ்கிருதப்பாட்டையும் பாடினால் ஜனங்கள் இன்பமடைவார்களா? மாட்டார்களா? முழுக்க முழுக்க (நூற்றுக்கு நூறு) தமிழ்ப் பாட்டுத்தான் தமிழ் நாட்டிலே பாடவேண்டுமா? என்னும் விஷயங்களைப் பற்றி அவர் சொல்லுவதைக் கேளுங்கள்.

"ரஸ ஞானம் இல்லாதபடி பல்லவிகளும் கீர்த்தனங்களும் பாடுவோர் ஸங்கீதத்தின் உயிரை நீக்கிவிட்டு வெற்றுடலை—அதாவது பிணத்தை—காட்டுகிறார்கள். இக்காலத்து ஸங்கீத வித்வான்களிலே பலர் 'ஸங்கீதத்திற்கு நவரஸங்களே உயிர்' என்பதை அறியாதவர்.

முத்துசாமி தீக்ஷிதர், தியாகையர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர், முதலியவர்களின் கீர்த்தனங்களிலே சிலவற்றை அதிக ஸங்கதிகளுடன் பாடுவோரே 'முதல்தர வித்துவான்கள்'. இந்தக் கீர்த்தனங்கள் எல்லாம் ஸம்ஸ்கிருதம் அல்லது தெலுங்கு பாஷையில் இருக்கின்றன. ஆகவே, முக்காலே மும்மாகாணி 'வித்துவான்' களுக்கு இந்தக் கீர்த்தனங்களின் அர்த்தம் தெரியாது. எழுத்துக்களையும் பதங்களையும் கொலைசெய்தும், விழுங்கியும் பாடுகிறார்கள். அர்த்தமே தெரியாதவனுக்கு 'ரஸம்' தெரிய நியாயம் இல்லை.

தமிழ்நாட்டு ஜனங்களுக்கு இரும்புக் காதாக இருப்பதால், திரும்பத் திரும்ப எழெட்டுப் பாட்டுக்களை வருஷக்கணக்காகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தோற்காது உள்ள தேசங்களிலே இந்தத் துன்பத்தைப் பொறுத்துக்கொண்டிருக்க மாட்டார்கள்.

பூர்விக மஹான்களுடைய பாட்டுக்களை மறந்துவிடவேண்டும் என்பது என்னுடைய கக்ஷியன்று. அவற்றை அர்த்தத்துடன் பாடவேண்டும். புதங்

களைப் பிழையாக உச்சரிக்கக் கூடாது. பதங்களை வாய்விட்டுத் தெளிவாகச் சொல்லவேண்டும். விழுங்கிவிடக் கூடாது. பத்து, முப்பது கீர்த்தனங்களையே ஓயாமற் பாடி ஸங்கீதத்தை ஒரு தொல்லையாகச் செய்துவிடக்கூடாது.

புதிய புதிய கீர்த்தனங்களை வெளியே கொண்டுவரவேண்டும். இப்போது ஸங்கீத வித்வான்களிலே தலைமைப்பட்டிருப்போர் தமிழிலே புதிய மெட்டுக்களில் கீர்த்தனங்கள் செய்ய முயலவேண்டும். நவரஸங்களின் தன்மைகளையும், இன்னின்ன ராகங்களை இன்னின்ன விதங்களிலே பாடினால், இன்னின்ன ரஸங்கள் உண்டாகும் என்பதையும் கற்றுத் தெரிந்து கொள்ளுதல் அவசியம்.

'பூர்வகாலத்து மகான்களுக்குத் தெய்வப்பிரஸாதம் இருந்தது. எங்களுக்கில்லையே என்ன செய்வோம்?' என்று புதிய வித்வான்கள் புதிய கீர்த்தனங்களை அமைப்பதிலே பின்வாங்கக்கூடாது. தெய்வங்கள் இறந்து போகவில்லை...............................................................

இப்போது உலக முழுவதிலுமே ராஜாக்களையும் பிரபுக்களையும் நம்பி வித்தைபழகும் காலம் போய்விட்டது. பொது ஜனங்களை நம்பவேண்டும். இனிமேல் கலைகளுக்கெல்லாம் போஷணையும் ஆதாரவும் பொதுஜனங்களிடமிருந்து கிடைக்கும். அவர்களுக்கு உண்மையான அபிருசி உண்டாக்கிக் கொடுப்பது வித்வான்களுடைய கடமை...............

வித்வான்கள், பழைய கீர்த்தனங்களைப் பாடம்பண்ணி, புராதன வழிகளைத் தெரிந்து கொள்ளுதல் அவசியம். ஆனால் தமிழ்ச் சபைகளிலே எப்பொழுதும் அர்த்தம்தெரியாத பிறபாஷைகளில் பழம் பாட்டுக்களை மீட்டும் மீட்டும் சொல்லுதல் நியாயமில்லை. அதனால் நமது ஜாதி, ஸங்கீத ஞானத்தை இழந்துபோகும்படி நேரிடும்.

மேலும், 'பாட்டுக்குத் தாளமே யொழிய, தாளத்துக்குப் பாட்டில்லை' என்ற விஷயத்தைப் பாடுவோர் நன்கு தெரிந்து கொள்ளவேண்டும்."

ஹார்மோனியத்தைப் பற்றி அவர் சொல்லுவதாவது:

"தமிழ்நாட்டு மாதர்களுக்குள்ளே நல்லபாட்டு வளர்ச்சிபெறவேண்டும் என்பது என்னுடைய விருப்பம். ஆனால் அதற்கு ஹார்மோனியப்பெட்டி ஒரு விக்கினமாக வந்து சேர்ந்திருக்கிறது.

அறியாதவன் தனது அறியாமையை வீட்டில் இருந்தபடியே இரண்டு மூன்று வீதிகளுக்குப் பிரசுரம் பண்ணவேண்டுமானால், அதற்கு இந்தக் கருவியைப் போல உதவி வேறொன்றுமில்லை. வீணை தவறாக வாசித்தால் வீட்டில் உள்ள ஜனங்களுக்கு மாத்திரந்தான் துன்பம்; ஹார்மோனியம் தெருமுழுதும் ஹிம்ஸைப் படுத்திவிடும்.........ஹார்மோனியம் பேயிரைச்சல் போடுவதிலே பாட்டின் சத்தம் கணீரென்று கேட்பதில்லை. பாட்டுக் கீழாகவும் சுருதி மேலாகவும் நிற்கிறது.........பாட்டுக்கு உதவியாகச் சுருதி ஒலிக்க வேண்டும். பாட்டை விழுங்கும் ச்ருதி பிரயோஜனமில்லை. அது வெறும் மடமை.

ஆணாயினும் பெண்ணாயினும் கள்ளத் தொண்டையை வைத்துக் கொண்டு பாடலாகாது. தொண்டையைத் திறந்து பாடினால்தான் சுகமுண்டாகும்.........'' [கலைகள்—பக்கம் 102-120]

'பலருக்கு ஆகாசமே உடை, வாயுவே ஆகாரம்' என்று உள்ள நமது தேசமானது முன்னேறுவதற்குப் பல யோசனைகள் சொல்லுகிறார். அவற்றுள் ஒன்றைக் கேளுங்கள் :

''வெளிநாட்டுக்குக் கப்பலேறிப் போங்கள். புறப்படுங்கள், புறப்படுங்கள், தொழிலாளிகளே, வியாபாரிகளே, வித்வான்களே, புத்திமான்களே, எப்படியேனும் யாத்திரைச் செலவுக்குப் பணம் தயார்செய்துகொண்டு அன்னிய தேசங்களைப் பார்த்துவிட்டு வாருங்கள். நமது தொழில்களுக்கும் கலைகளுக்கும், யோசனைகளுக்கும் வெளிநாடுகளில் ஏராளமான உதவி கிடைக்கும். சந்தேகப்படவேண்டாம்.'' [சமூகம்-பக்கம் 135]

ஓரிடத்தில் வேடிக்கை செய்கிறார், இன்னோரிடத்தில் திடீரென்று ஓர் உவமையைச் சொல்லி நம்மைப் பிரமிக்கச் செய்கிறார்; ஓரிடத்தில் பராசக்தியை வருணிக்கிறார், இன்னோரிடத்தில் சிட்டுக் குருவியைப் பற்றிச் சொல்லுகிறார். சிட்டுக் குருவியிலிருந்து பராசக்திக்கு அவர் மனமானது தாவித் தாவி ஓடிவிடுகிறது. சூரியோதயத்திலிருந்து நாட்டின் முன்னேற்றத்துக்கு ஓடிவிடுகிறது. கேளுங்கள் :

''தமையனுக்குக் கோட்டையில் ரெவினியூபோர்டு ஆபீஸிலே உத்தியோகம். அவருக்கு நான்கு வருடங்களுக்கு ஒருமுறை ஆபீஸில் பத்து ரூபாயும், வீட்டில் இரண்டு குழந்தைகளும் 'ப்ரமோஷன்.'' [சமூகம்-பக்கம் 3]

''சாகப்போகிற எறும்பைப்போல் மனிதன் சிறகு முளைத்துப் பறக்கிறான்.'' [தத்துவம்-பக்கம் 117]

''சமயம் (மதம்) வேறு, குருக்கள் கட்டுப்பாடு வேறு என்பதை மறக்கலாகாது. அவை ஒன்றுக்கொன்று தீயும் சாம்பரும் போலாம். மதத்தை மீறிக் கட்டுப்பாடு செல்லும்போது நதியை மணல் மூடுவது போல் ஆகிறது. அங்கு நீர் கெட்டுப் பாலைவனம்போல் தோன்றும்'' [தத்துவம்-பக்கம் 133]

''புதர்க் கூட்டத்திலே தீப்பிடித்தாற்போல மனதிலுள்ள மற்றக் கவலைகளையும் எண்ணங்களையும் எரிக்கும் ஒரே ஜோதியோடு விளங்கும் பெரிய விருப்பத்தைத் தியானமென்று கூறுகிறோம்.'' [தத்துவம்-பக்கம் 7]

''ஒரு சிறிய மலரின் இதழிலே வர்ணங் தீட்டுவதற்குப் பல்லாயிர வருடங்கள் இருந்து பழகும் நெடுநேர்மை கொண்டது, பெரிதும் சிறிதும் ஆகிய முதற்பொருள், பராசக்தி.'' [தத்துவம்-பக்கம் 37]

''சரித்திரத்தில் சூரியோதயமாகிறபோது கிழக்கே ஒளி ஊர்ந்தூர்ந்து வராது; பாய்ந்துவரும். எட்டுத் திசையும் உடனே நிரம்பச் செய்யும்'' [தத்துவம்-பக்கம் 148]

சிட்டுக்குருவியின் அழகைப் பாரதியுடன் நீங்களும் அநுபவியுங்கள் :

"சிறிய தானியம்போன்ற மூக்கு; சின்னக் கண்கள்; சின்னத் தலை; வெள்ளைக் கழுத்து; அழகிய மங்கல்-வெண்மை நிறமுடைய பட்டுப்போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் இவை கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப்போர்த்த முதுகு; சிறிய தோகை; துளித் துளிக் கால்கள்" [கலைகள்—பக்கம் 11]

இன்னும் இவை போன்ற எத்தனையோ விஷயங்களையும் இவைபோல் அல்லாத வேறு விஷயங்களையும் இனிய, எளிய, தெளிவான நடையிலே, பாரதியார் மிகவும் அழகாகச் சொல்லியிருக்கிறார்.* அவற்றைப் படித்துப் பயனடைவது தமிழறிந்தவர் அனைவருஞ் செய்யவேண்டிய கடமை.

---

*தத்துவம் —— விலை அணா 10;
மாதர் —— விலை அணா 8;
கலைகள் —— விலை அணா 8;
சமூகம் —— விலை அணா 12;

ஸ்ரீ. சி. சுப்பிரமணிய பாரதி எழுதியவை. திருவல்லிக்கேணி, பாரதிப் பிரசுராலயத்தில் கிடைக்கும்.

# பாரதியார் கடிதம்

[புத்துயிர்பெற்று ஜீவவேகங்கொண்ட இந்தியாவின் பிரதிநிதிகளில் முதன்மையானவராகக் கொள்ளத்தக்கவர் சுப்பிரமணிய பாரதியார். தாய் நாட்டின்மீது அவர் வைத்திருந்த அன்பின் பெருக்கும், புராதனமான, சிறப்புவாய்ந்த ஒரு நாகரிகத்தின் வழிவந்தவர் இந்தியர் என்று அவர் அடைந்த பெருமையின் அளவும், இனியும் உலகத்துக்கு உய்யும்வகை செய்ய வல்லது இந்தியாவே என்று அவர் பூண்டிருந்த நம்பிக்கையின் திடமும் அவரது நூல்களைப் படிப்போருக்கு எளிதிற் புலனாகும். பாரதியார் தேச பக்தியே உயிராகக்கொண்டு வாழ்ந்தவர்; தமது கவிதாசக்தியால் தேசிய உணர்ச்சிக்கே ஒரு வளர்ச்சிதந்தவர்; பலதுறைகளிலும் சமூகச்சீர்திருத்தம் விரும்பிச் செய்தவர்; இலக்கிய விஷயத்தில், அதிலும் தமிழ்வசன ஆக்கத்தில், பெரிதும் அக்கரை கொண்டவர்; தற்கால விஞ்ஞான முறைகளின் அருமை யறிந்தவர்; அவற்றை நாமும் வேண்டியவாறு பயன்படுத்திக்கொள்வது இன்றியமையாதது என்று வற்புறுத்தி உழைத்தவர்.

மேனாடுகளில், இத்தகைய சிறப்புவாய்ந்த ஒரு கவியின் நூல்களையும், அவரது ஜீவிய நிகழ்ச்சிகளையும் பற்றி ஆராயப் பல இலக்கிய நிபுணர்கள் முன்வந்து, அதற்கென்று சங்கங்கள் நிறுவியும், பத்திரிகைகள் நடத்தியும், வேறுவகைகளிலும், அக்கவியின் அருமைபெருமைகளைக் குன்றின் மேலிட்ட விளக்கென அனைவரும்அறியும்படி செய்வர். பாரதியாரைப்போல் பல துறைகளிலுந் தலைசிறந்து விளங்கிய ஒரு கவியின் நூல்களுக்கு இன்றுகூட அச்சுப்பிழைகளின்றி சுத்தமான பதிப்பு ஒன்றில்லாததும், அவர் இவ்வளவு சமீபகாலத்தவராயிருந்தும் அவரது வாழ்க்கைநிகழ்ச்சிகளை ஒருவருமறியாதிருப்பதுமே தமிழர்களின் மனப்பான்மையையும், அசிரத்தையையும் நன்கு காட்டுகின்றன.

இப்பொழுது சிலவருடங்களாக, ‘பாரதிதினம்’ கொண்டாடியும், பாரதிப் பாட்டுப் போட்டிகள் அவ்வப்போது நடத்தியும், இதுபோன்ற வேறு வழிகளிலும், பாரதி அன்பர்கள் சிறிது ஊக்கங்காட்டிவருவது மகிழ்ச்சிக் குரியதே. ஆயினும், நாம் இதுவரை செய்தது ‘கைம்மண்ணளவு’, ‘செய்யாதது ‘உலகளவு’ என்பதை மறக்கலாகாது. பாரதி நூல்களைத் தக்கோர் யாரேனும் மேற்பார்த்து, திருத்திப் பிழையின்றி ஒரு பதிப்பு வெளியிடுவது உடனே செய்யவேண்டிய ஒரு தொண்டாகும். பாரதியார் மறைந்து சுமார் 15 வருஷமே யாகின்றது; அக்காலத்தில் அவருக்கு இளவயதே. ஆகலின், அவரை நேரில்கண்டு அளாவளாவியவர்களும், சிறிதுகாலமாவது உடனிருந்தவர்களும், நெருங்கிப்பழகிய நண்பர்களும், அநேகர் ஆங்காங்கு இன்னும் ஜீவந்தர்களாயிருப்பது இயல்பு. இவர்களுள் பலருக்கும், மற்றோருக்கும், பாரதியார்

கைப்படஎழுதிய கடிதங்களும், இவருக்கு அவர்களிடமிருந்து வந்தனவும் பல இருக்கவே வேண்டும். இக்கடிதங்களையெல்லாம் தேடித் திரட்டி வெளியிட்டால் பாரதியாரைப்பற்றிய பல செய்திகளையும் ஜனங்கள் அறிய ஏதுவாகும். ஒருவருடைய குணாதிசயங்களையும், மனப்போக்குகளையும், கொள்கைகளையும் வெளிக்காட்ட அன்னார் எழுதுங் கடிதங்களைவிடச் சிறந்த சாதனம் வேறொன்றில்லை என்பது யாவருக்கும் உடன்பாடே. ஆகவே இது விஷயமாகவும் கவனம் செலுத்தப்படவேண்டியது அவசியம். இப்பணியின் கொடியேற்றமாக, 1918-இல் பாரதியார் புதுவையிலிருந்து தமது கனிஷ்ட சகோதரர் சி. விசுவநாதையருக்கு எழுதிய ஒரு கடிதத்தை அவர் கையெழுத்திலேயே, அவர் கைச்சாத்துடன், அப்படியே நகலெடுத்து அடுத்த பக்கம் தந்திருக்கிறோம். தமிழ் எழுதுமுறையையும் மற்றும் பலதிறப்பட்ட விஷயங்களைப்பற்றியும், பாரதியார் கொண்டிருந்த அபிப்பிராயங்களின் போக்குகளை இக்கடிதத்தில் ஒரு சிறிது காணலாம். பாரதி அன்பர்களுக்கு அவர் கையெழுத்தும் கையொப்பமும் கொண்ட இக்கடிதம் பெரிதும் இன்பம் விளைக்கும் என்பதில் ஐயமில்லை. இக்கடிதத்தைக் கொடுத்துதவிய ஸ்ரீயுத விசுவநாதையருக்கு நமது நன்றி உரியது. ப—ர்.]

---

*பிழைசோதித்த திருத்தப் பதிப்பொன்று வெளியிடும்விஷயமாக பாரதி பிரசுராலயத்தார் ஏற்கெனவே தக்க ஏற்பாடுகள் செய்திருப்பதாகத் தெரியவருகிறது. இது தமிழ்நாடு முழுவதற்குமே மகிழ்ச்சி விளைக்கு மென்பதில் சந்தேகமில்லை. அவர்களது முயற்சி விரைவில் பயன்தருமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

†மேற்கண்டவை அச்சேறியபிறகு, 11-ஆம் தேதியன்று, சென்னையில் 'பாரதி தினம்' தகுந்தவாறு கொண்டாடப்பட்டது. காலையில் பாட்டு, சித்திரப்போட்டிகள் நிகழ்ந்தன. மாலை, ஸ்ரீமான் கி. பாலசுப்பிரமணிய ஐயர் தலைமைவகித்து பாரதியன்பர் பொதுக் கூட்டமொன்றைச் சிறப்புற நடத்தித் தந்தனர். பாட்டுப் போட்டியில் பரிசுபெற்ற சிறுவரும் சிறுமிகளும் சில தேசிய கீதங்களைப் பாடினர். அன்பர்கள் பலர் பாரதியாரின் தேசசேவையையும், தமிழ்த்தொண்டின் பெருமையையும் பாராட்டி அவருக்குப் புகழ்மாலை சூட்டினர். அச்சமயம், பாரதியாரின் குடும்பம் தற்காலம் கஷ்ட ஜீவனஞ் செய்துவருவதையும், அவர்களுக்குச் சிறிது உதவி புரிவது தமிழ் நாட்டின் தன்மதிப்புக்கே இன்றியமையாதது என்பதையும் சிலர் வற்புறுத்தியது இங்கே குறிக்கத்தக்கது. ப—ர்.

ஓம் சக்தி.

**C. SUBRAMANIA BHARATI**

*Pondicherry, 3rd August, 1918.*

ஸ்ரீமான் விசுவநாதனுக்குப் பராசக்தி துணை செய்க.

உன்னுடைய அன்பு மிகுந்த கடிதம் கிடைத்தது. அதைப் படித்து அதிலிருந்த உன்னுடைய பக்தியின் பயனாகிய உண்மையைக் கண்டு ஸந்தோஷ மடைந்தேன்.

தந்தைக் கப்பால் நீ என்னை ~~[illegible]~~ ஸஹாய மாகக் கருதுவது முறையே. இது வரை உனக்கு நான் ஒரு ஸஹாயமும் செய்வதற்குரிய இடம் பொருளேவல் எனக்குத் தெய்வ ஸங்கற்பத்தால் கிடையாமற் போய் விட்டது.

அதை யெண்ணி இப் போது வருத்தப் படுவதிற் பயனில்லை. எனினும் இனிமேல் வரப் போகும் காலத்திலே எனக்கு நற் செல்வமும் அருளும் உன் போன்றோர்க்கு நன்மைகள் செய்யும் திறமும் நிச்சய மாக வரும்.

உன் கடிதத்திற் கண்ட படி நீ இங்கே என்னைப் பார்க்க வரும் காலத்தை மிக ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். சீக்கிரம் வா.

தங்கை ஸ்ரீ-லக்ஷ்மி சில வருஷங்களுக்கு முன் எட்டயபுரத்துக்கு வந்திருந்த காலத்தில் என்னைக் கொஞ்சம் பணம் அனுப்பச் சொல்லியிருந்தாள். அப் போது என் கையில் பணம் இல்லாத படியால் அனுப்ப வில்லை. அது முதல் என் மீது கோபம் கொண்டு எனக்கு ஒரு வார்த்தை கூட எழுதாம லிருக்கிறாள்.

என்னை க்ஷமிக்கும் படிக்கும் எனக்கு அடிக்கடி காயிதங்களெழுதும் படிக்கும் நீ அவளுக்கு உடனே மிகவும் அழுத்தமான ப்ரார்த்தனை செய்யும் படி வேண்டுகிறேன்.

“தம்பி யுடையான் படைக் கஞ்சான்” என்ற வாக்யத்தின் உண்மையை உன் விஷயத்தில் நம்பி யிருக்கலா மென்றே நம்புகிறேன்.

இனி மேல் இங்கிலீஷில் காயிதம் எழுதாதே. நீ எழுதும்
தமிழ் எத்தனை கொச்சை யாக இருந்த போதிலும் அதைப் படிக்க
எனக்கு இஷ்டம். கொச்சைத் தமிழ் கூட எழுத முடியா
விட்டால் ஸம்ஸ்கிருதத்திலே காயிதம் எழுது.
"விநாயகர் ஸ்தோத்திரம்" (தமிழ்ப்பாட்டு)
ஸ்ரீ வி. ராமஸ்வாமி அய்யங்கார் என்னிடம் அச்சிடப்
அச்சிட வாங்கிக் கொண்டு போனார். இன்னும் அச்சிடப் படவில்லை.
மேலும், அவர் "பாஞ்சாலி சபதம்" அச்சிடும் ஸமயத்தில் குறைப்பட்டு
மாதிரி பணம் செலவாகத் துப்பட்டுப் பட்டணத்தில் அனுப்ப முடிய
சொன்னார். அவ்வளவும் அனுப்ப

உடனே புதுச்சேரியில் எனது ஸாமான்களை அனுப்பும் படி
ஏற்பாடு செய்.
அது மாத்திர மே யன்றி "விநாயகர் ஸ்தோத்திரம்" வேலையை விரைவில்
முடித்துப் புஸ்தகங்களை அனுப்பும் படி சொல்லு.
உடம்பை யெண்ணி பயப் படாதே. அடிக்கடி பால் குடி. நெய்
எப் போதும் ஸந்தோஷமாக இரு.
வேறு எந்த விஷயத்துக்கும் கவலைப் படாதே.
இவ் வுலகத்தில் மனிதன் பொறுமையாலும் பய மின்மையாலும்
தேவத் தன்மை அடைகிறான். அந் நிலைமை உனக்கு மஹா சக்தி
அருள் செய்க.

உனது அன்புள்ள ஸஹோதரன்
ஸி. ஸுப்பிரமணிய பாரதி.

# சரித்திரம்

## சங்க காலத்துப் பாண்டிய அரசர்கள்

எஸ். ஆர். பாலஸுப்ரமணியம், எம்.ஏ., எல்.டி.

I

இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டத்தில் தமிழ்ச்சங்கப் பிரசித்திபெற்ற கபாடபுரத்தைப் பற்றி ஒரு குறிப்பு உள்ளது. இக்குறிப்பு ஆதிகாவியத்திலுள்ளதா அல்லது புராணங்கள் ஏற்பட்ட பிற்காலத்துச் சேர்க்கப்பட்டதா என்று நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. காத்தியாயனர் பாண்டியர்களைப்பற்றி சொல்லி யிருக்கிறாரா என்பது சந்தேகத்திற் கிடமாயிருக்கிறது. காத்தி யாயனர் சூத்திரம் சரியாயிருந்தால், இவர்கள் தேசத்தின் பெயர் 'பாண்டு' என்றிருந்திருக்க வேண்டும். ஆனால், தமிழ் மக்கள் இப்பாகத்தைப் பாண்டிய நாடு என்றே வழங்கிவந்திருக்கின்றனர். (ஸம்ஸ்கிருதத்தில் பாண்டு என்ற பதத்திலிருந்து பாண்டியன் என்பது வந்திருக்கலாம். வட இந்தியாவில், மத்திய தேசத்தில், பாண்டு என்று ஒரு ஜாதியார் உண்டு). மேலும், தென்னவர்கள் பாரதப் பாண்டவர்களோடு சம்பந்தமுள்ளவர்களாக ஒரு கதையு மிருப்பது இவ்விரு பெயர்களும் சம்பந்தப்பட்டவையே என்ற எண்ணத்தை பலப்படுத்துகிறது.

கௌடில்யர் அவருடைய அர்த்தசாஸ்திரத்தில் தென்னாட் டுப் பாண்டியர்களையும் அவர்கள் தலைநகர் மதுரையையும் பற்றிக் கூறியுள்ளார். அதில் பாண்டிய கவாடகம் என்ற ஒருவித முத்தும், மதுரம் என்ற ஒருவிதப் பஞ்சாடையும் சொல்லப் பட்டிருக்கின்றன.

அதேவிதமாய் மஹாவம்ச சரித்திரம், புத்தரின் நிர்வாணத் துக்குப்பிறகு ஈழத்தரசனான விசயன் என்பவன் ஒரு பாண்டியராஜ கன்னிகையை மணந்ததாகக் கூறும். ஆனால் இவ்விதக்குறிப்புகள் சாதாரணமாகச் சரித்திரத்திற்கு உபயோகப்படா.

பாண்டியர்களின் மூலத்தைப்பற்றி ஒன்றும் நிச்சயமாகச் சொல்லமுடியாது. கொற்கைச் சகோதரர்கள் கதை தென்னாட் டிற் குரியதாயிருக்கலாம். சேரன், சோழன், பாண்டியன் என்று மூன்று சகோதரர்கள் இருந்ததாகவும், அவர்கள் தாம்ரபர்ணி

நதிமுகத்துவாரத்திலுள்ள கொற்கையில் சேர்ந்து வாழ்ந்துவந்த தாகவும், இம்மூவர்களும் முக்காணி என்ற நிலத்தைப் பொது வாய் அனுபவித்தார்கள் என்றும், பிறகு அவர் பிரிந்த காலத்தில் பாண்டியன் அந்நாட்டிலேயே தங்கினதாகவும், மற்றவர்கள் பிற நாட்டுக்குச்சென்று புதுராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டதாக வும் தமிழ்ப்புராணங்கள் கூறும்.

பாண்டவர்களுடைய சம்பந்தமும், சந்திரவம்சாவளி அமைப் பும் பிற்காலத்திலேயே ஏற்பட்டிருக்கவேண்டும். இக்கதைகளி லிருந்து கொற்கை, மணலூர், கல்யாணபுரம் என்ற ஊர்கள் மதுரைக்குமுன் தலைநகராக இருந்திருக்கவேண்டுமென்று சொல் வதற்கில்லை. ஏனெனில், இவைகளைப்பற்றிக் கூறும் எல்லாவற்றி லும் முதலாவது அரசனே மதுரையை ஸ்தாபித்ததாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

மௌரிய அரசர்கள் தென்னிந்தியாமீது படையெடுத்ததாகச் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் அதற்குப் போதுமான ஆதாரமில்லை. அசோகரின் கல்வெட்டுக்களில் பாண்டியநாட் டைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் மலைக்குகைகளும், படுக்கைகளும், அவைகளில் பிராஹ்மி லிபியில் கல்வெட்டுக்களும் அகப்பட்டிருக்கின்றன. இக்கல்வெட்டுக்களில் எவ்வரசனின் பெயரும் காணோம் (என்று லும் கி. மு. 2 அல்லது 3-ஆவது நூற்றாண்டில் பாண்டியநாட்டார் எழுத்தறிவுடைய நாகரிகம் வாய்ந்தவராக இருந்தனர் என்பதில் சந்தேகமில்லை). இச்சின்னங்கள் பௌத்த, சமண மதத்தவர்கள் தென்னிந்தியாவில் வசித்ததற்கு அடையாளமாகும். இவர்களில் பௌத்தர் முற்பட்டவர் என்றும், சமணர்கள் தமிழ்நாட்டு நாக ரிகத்தையும் தமிழ் பாஷையையும் விருத்திசெய்வதில் வெகு ஊக்க முடையவரென்றும் தெரியவருகிறது. வட இந்தியாவில் அரசர் களும் மதாபிமானிகளும் இச்சன்னியாசிகளுக்கு மலைக்குகைகள் ஆக்கியுள்ளனர். தென்னிந்திய அரசர்கள் இவ்வாறு செய்ததாகத் தெரியவில்லை. ஆகையால் தென்னாட்டரசர்கள் பௌத்த, சமண மதங்களைக்காட்டிலும் பிராமண (ஹிந்துவைதிக) மதத்தில் அதிகப் பற்று உடையவர்களாக இருந்திருக்க வேண்டும்.

## சங்க காலம்

பாண்டியநாட்டு ஆதி அரசர்கள், சங்க நூல்கள் என்று சொல் லப்படும் பழைய தமிழ் நூல்களில் கூறப்படும் அரசர்களே. சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற நூல்களைச் சங்கநூல்கள் என்று கூறுவது சரியல்ல என்பர் சிலர். சங்கம் என்பது உண்

மையில் இருந்ததா, அவ்வாறாயின் அது எக்காலம், என்ற விஷயங்களைப்பற்றிப் பலமான வாதம் நிகழ்ந்து வருகிறது. இறையனார் அகப்பொருள் உரையில், 3 சங்கங்கள் 9990 வருஷங்கள் நடைபெற்றனவென்றும், 8,598 புலவர்கள் அச்சங்கங்களை அலங்கரித்தனரென்றும், 197 பாண்டிய அரசர்கள் சங்கத்தைப் போற்றினதாகவும், காண்கிறது. இந்நூலின் உரை மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார்காலமுதல், பரம்பரையாய், நீலகண்டனார்காலம் வரை வழங்கிவந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் சங்க நூல்களிலிருந்து அனேக மேற்கோள்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. ஆனால், இதில் கூறப்படும் சில சம்பவங்கள் கி.பி. 7-ஆவது நூற்றாண்டின் இறுதிக்கு முற்பட்டதாகக் கூறமுடியாது. ஆகவே, உண்மையாக நிகழ்ந்த சம்பவங்களும், அநேகக் கட்டுக் கதைகளும் இவ்வுரையில் கலந்துள்ளன என்றே எண்ணவேண்டியிருக்கிறது. இதிலுள்ள பாண்டிய அரசர்கள் புலவர்களின் பெயர்கள் கல்வெட்டுக்களில் காணப்படுவனவே. பௌத்த சம்பந்தம் பலமாயிருந்த காலத்தில் பௌத்தசங்கம் இருந்தது போலத் தமிழ்பாஷையை வளர்க்க ஒரு கல்விமான்களின் சங்கம் இங்கு ஏற்பட்டிருக்கலாம்.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, இவைகளே சங்கநூல்கள். பதினெண்கீழ்க்கணக்கு, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை இவைகளைச் சங்கமருவிய நூல்கள் என்று சொல்லலாம். இந்நூல்களின் ஆராய்ச்சியிலிருந்து பின்வரும் விஷயங்கள் ஏற்படுகின்றன:

1. சங்ககாலம் என்பது மூன்று அல்லது நான்கு தலைமுறை நீடித்ததாதல் வேண்டும்; 150, 200 வருஷங்களாவது நடைபெற்றிருக்கவேண்டும்.

2. தென்னாட்டு மூவேந்தர்களும், அவர்களுக்கு இடையே அநேக சிற்றரசர்களும் வாழ்ந்திருத்தல் வேண்டும். இவர்கள் ஒருவருக்கொருவர் சிலசமயம் சண்டை போட்டும், சிலசமயம் கூட்டுறவு கொண்டாடியும் வந்திருத்தல் இயல்பே.

3. கிரீக், ரோம பூகோள சாஸ்திரிகள் சொல்லியிருப்பதிலிருந்து இத்தென்னாட்டினர், அயல்நாடுகளோடு வியாபாரம் செய்யும் துறைமுகங்களும் கப்பற் செல்வமும் வாய்ந்தவர்கள் என்று தெரியவருகிறது. முசிரி, கொற்கை, தொண்டி என்ற துறைமுகங்களும், மிளகு, மது, பட்டாடை முதலிய ஏற்றுமதிப்பொருள்களும், கூறப்பட்டுள்ளன. சொற்சுவையையும், நடையையும் கவனித்தால், பத்துப்பாட்டு முதலிய நூல்களும், சிலப்பதிகாரமும் மணிமேகலையும், ஒன்றுக்கொன்று நெருங்கிய காலத்தனவாகவேண்டும்.

இவைகளுக்குச் சில நூற்றுண்டுகளின் பிறகே திருவாசகம், தேவாரம் என்ற நூல்கள் ஏற்பட்டிருக்கக்கூடும். இவ்விருகாலத்து மதரீதி இந்த அபிப்பிராயத்தை ஊர்ஜிதப்படுத்துகிறது. சிலப்பதிகார காலத்து மதநிலைக்கும், தேவாரகாலத்து நிலைக்கும் எவ்வளவோ வித்தியாசமுளது. சிலப்பதிகாரத்தில் கூறியுள்ள கோயில்களையும், வேட்டுவவரியையும், ஆய்ச்சியர்குரவையையும், கவனித்தால், அக் காலம் ஜைன, பௌத்த மதசம்பந்தம் மேலிட்டிருப்பதும், தேவாரம், திருவாய்மொழி முதலியவற்றில் சைவ, வைஷ்ணவ மதக்கொள்கைகள் ஓங்கியிருப்பதும், இந்நூலாசிரியர்கள் புறச் சமயங்களைக் கண்டனஞ் செய்வதும், வெளிப்படையாய்த் தெரி கின்றன. மேலும், சங்கநூல்களில் பல்லவர்களுடைய சரித்திரக் குறிப்புகள் யாதொன்றுமில்லை. ஈழநாட்டு அரசனுகிய கயவாகுவும், சேரன் செங்குட்டுவனும் ஒரேகாலத்தவரென்று சிலப்பதிகாரத் திலிருந்து தெரியவருகிறது: செங்குட்டுவன் பத்தினிக் கடவு ளுக்கு நித்தியபூஜைசெய்து வணங்கி நிற்குங்கால், ஆரியமன்னரும், மாளவ வேந்தரும், இலங்காபுரக் கயவாகுவும், தங்கள் நாட்டில் எழுந்தருளிவிக்க வரந்தரவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள் என்று கூறுவதைக் கவனிக்கவும்.

"அருஞ்சிறை நீங்கியவாரியமன்னரும்
பெருஞ்சிறைக்கோட்டம் பிரிந்தமன்னரும்
குடகக்கொங்கரு மாளவ வேந்தரும்
கடல்சூழிலங்கைக் கயவாகு வேந்தனும்
எந்நாட்டாங்க ணிமையவரம்பனி
னன்னுட்செய்தநாளணிவேள்வியில்
வந்தீகென்றே வணங்கினர்வேண்டத்
தந்தேன் வரமென் றெழுந்ததொருகுரல்."

இக்கயவாகு என்பது, ஈழதேசத்து பௌத்த சரித்திரமாகிய மஹா வம்சத்தில் குறிப்பிட்டிருக்கும் முதலாவது கஜபாகுவையே குறிக்கு மென்று தோன்றுகிறது. கி.பி. 12-ஆவது நூற்றுண்டுக்கு முன் ஈழத்தை (சிங்களம்) ஆண்ட அரசர்களில் கஜபாகு என்று பெயர் கொண்ட அரசன் ஒருவனே இருந்ததாகத் தெரிகிறது. அவன் ஆண்டகாலம் கி.பி. 173 முதல் 195 வரையில் இருந்திருக்கலா மென்று விக்கிரமசிங்கர் என்பவர் எழுதிய சிங்கள அரசர்களின் கால அட்டவணையிலிருந்து ஏற்படுகிறது. ஆகவே, சங்கநூல் களில் கூறியுள்ள சேரன் செங்குட்டுவனும், மற்ற அவன்காலத்து வாழ்ந்த சோழ, பாண்டிய அரசர்களும், கி.பி. இரண்டாவது நூற்றுண்டின் இறுதியில் இருந்தவர் என்றே கொள்ளவேண்டி யிருக்கிறது.* மேலும், தென்னிந்தியாவுக்கும் இத்தாலி தேசத் தாருக்கும் வியாபார சம்பந்தம் அதிகமாயிருந்தது. ரோம சக்கர வர்த்தியான அகஸ்டஸ்காலத்தில் தூதர்கள் இந்தியாவிலிருந்து இருமுறை வந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ட்ராபோ என்பவர், 120 கப்பல்கள் சேர்ந்த கூட்டம் செங்கடலை விட்டுப்

* Epigraphia Zeylanica Vol. III, pp. 1-47.

புறப்பட்டு, வருஷந்தோறும் இந்தியாவை நோக்கி வியாபார நிமித்தம் செல்வது வழக்கம் என்று எழுதியிருக்கிறார். முசிரியில் ரோமராணுவப்படையும் அகஸ்டஸுக்குக் கோயிலும் இருந்ததாகத் தெரியவருகிறது. இந்திய வியாபாரச்சரக்குகள் ரோமாபுரியில் இந்தியாவைவிட நூறுமடங்கு அதிகவிலைக்கு விற்பதாகப் பிளினி முறையிடுகிறார். தவிர, கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் அரசாண்ட ரோமாபுரி சக்கரவர்த்திகளுடைய ரோம நாணயங்கள் நூற்றுக்கணக்காகத் தென்னிந்தியாவில் அநேக இடங்களில் புதையல்களிலிருந்து அகப்பட்டிருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை:

| நெ | புதையல் அகப்பட்ட வருஷம் | இடம் | நாணயங்களின் விவரம் |
|---|---|---|---|
| 1. | 1850 | கோட்டையம் | அநேக தங்க நாணயங்கள் |
| 2. | 1856 | கலியம் புத்தூர் [மதுரைக்குச் சமீபம்] | டைபீரியஸ், க்ளாடியஸ், நீரோ, டொமீஷ்யன் முதலியவர்களின் தங்க நாணயங்கள். |
| 3. | | பொள்ளாச்சி [கோயமுத்தூர்] | இரண்டு புதையல்கள்.—அகஸ்டஸ், டைபீரியஸ். |
| 4. | 1858 | கரூர் | இரண்டு புதையல்கள்:<br>ஒன்றில் அகஸ்டஸின் வெள்ளி 500<br>ஒன்றில் டைபீரியஸின் ,, 90 |
| 5. | 1842 | வெள்ளலூர் (கோயம்புத்தூர்) | இரண்டு வெள்ளிநாணயப் புதையல்கள்.<br>புதையல் 1. 135 - அகஸ்டஸ்.<br>378 - டைபீரியஸ்.<br>5 - கிளாடியஸ். |
| | 1891 | ,, | புதையல் 2. 180 - அகஸ்டஸ்.<br>329 - டைபீரியஸ். |
| 6. | 1898 | கருக்காக்குரிச்சி [புதுக்கோட்டை சமஸ்தானம்] | |

| எ. | அரசர்களின் பெயர் | ஹில் என்பவரின் ஜாப்தா | ஸூயல் என்பவரின் ஜாப்தா |
|---|---|---|---|
| 1. | அகஸ்டஸ் ஸீஸர் | 40 | 40 |
| 2. | டைபீரியஸ் ஸீஸர் | 163 | 169 |
| | டைபீரியஸூம் அகஸ்டஸூம் | 6 | |
| 3. | நீரோ ட்ரூஸூஸ் [மூத்த ட்ரூஸூஸ்] | 11 | 11 |
| 4. | அந்தோனியா, ட்ரூஸூஸின் மனைவி | 15 | 15 |
| 5. | ஜர்மானிகஸ்ஸூம், காலிகுலாவும் | 8 | 8 |
| 6. | அக்ரிப்பினா, ஜர்மானிகஸின் மனைவி | 1 | 1 |
| 7. | காலிகுலா; காலிகுலாவும், அகஸ்டஸூம் | 5 | 5 |
| 8. | கிளாடியஸ் | 89 | 94 |
| | கிளாடியஸூம், நீரோவும் | 5 | |
| 9. | அக்ரிப்பினாவும், கிளாடியஸூம் | 22 | 32 |
| | அக்ரிப்பினாவும், நீரோவும் | 10 | |
| 10. | நீரோ | 123 | 123 |
| 11. | வெஸ்பேஷியன் | 3 | 3 |
| | | 501 | 501 |

இவ்வரசர்கள் ஆண்டகாலம் சுமார் கி. மு. 29 முதல் கி. பி. 79 வரை— கி. பி. முதலாவது நூற்றாண்டு. இக்கயவாகு கால ஒற்றுமையையும் ரோம தென்னிந்திய சம்பந்தத்தையும், மற்ற காரணங்களையும் யோசித்தால், சங்ககாலம் என்பது கிறிஸ்து சகாப்தத்திற்கு அடுத்த நூற்றாண்டுகளாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

## கல்வேட்டுக்கள்.

கல்வெட்டுக்களிலிருந்து ஏதாவது ஆதாரம் உண்டா என்று கவனிப்போம்.

1. வேள்விக்குடி சாஸனத்தில் பல்யாகசாலை முதுகுடுமி பெருவழுதி யென்பவன் பரிசளித்தோன்.

2. களப்பிரர்காலம்வரையில் பரிசுபெற்றோனும் அவன் சந்ததியாரும் மேற்படி வேள்விக்குடி கிராமத்தை அனுபவித்தனர்.

3. களப்பிரருக்குப்பிறகு கடுங்கோன் என்னும் பாண்டிய அரசன் பாண்டிய நாட்டைத் திரும்பக் கைக்கொண்டான்.

4. கடுங்கோனின் பேரன், சிலைத்தடக்கை கொலைக்களிற்றுச்செழியன் வானவன் செங்கோற்சேந்தன்.

5. பெரிய சின்னமனூர்ப் பட்டயங்கள், அரிகேசரிப் பராங் குசன் என்ற அரசனை முதலாகக் கொண்டுள்ளன. இவன் வேள் விக்குடி சாஸனத்தில் சேந்தனுக்கு அடுத்தபடி கூறப்பட்டிருப்ப வனாக இருக்கலாம். ஆதி பாண்டியராஜர்கள் தலையலங்கானத்தில் நிகழ்ந்த போர் வென்றதாகவும், சங்கத்தை ஏற்படுத்தினதாகவும், பாரதத்தைத் தமிழில் மொழிபெயர்ப்பித்ததாகவும் இச்சாஸனம் கூறும். ஆனால் இதில் பொதுவாய்ப் 'பாண்டிய அரசர்கள்' என்றுளதே ஒழிய இன்னாரென்று குறிக்கப்படவில்லை. களப்பிரர் காலத்திற்கு அடுத்த முற்பகுதியில், முதுகுடுமி ஆண்டதாக வும், கடுங்கோனின் பேரன் செழியன் என்றும், இச்செழியனே தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழிய னென்றும், சிலர் அபிப்பிராயப் படுகின்றனர். இது தவறாகும். பெயர் ஒற்றுமையிலிருந்து மாத்திரம் நிச்சயமான தீர்மானத்திற்கு வர முடியாது.

மேற்கூறிய விஷயங்களிலிருந்து, சங்ககால மென்பது கிறிஸ்து சகாப்தத்திற்கு அடுத்த நூற்றாண்டுகளாக இருக்கலாம் என்பதே துணியத்தக்கது.

# இலங்கையும் இந்தியாவும்

கே. எஸ். வைத்யநாதன்

I

இலங்கையின் சரித்திரத்தைப் பற்றிக் கூறும் விஷயங்கள் பல்வேறு மூலங்களிலிருந்து கிடைக்கின்றன. இவைகள் பெரும் பாலும் இதிஹாஸங்களிலிருந்தும், பண்டைய அரசர்களின் கல் வெட்டுகள், சிலாசாஸனங்கள் முதலியவைகளிலிருந்தும், அத்தே யத்தின் பூர்விகர்களால் கட்டப்பட்டு, பின்னர் வெகு வருடங்க ளாகப் பாழடைந்து, தற்காலம் நிலைகுலைந்து நிற்கும் பௌத்த கட்டடங்கள், விஹாரங்கள், ஸ்தூபங்கள், பள்ளிகள் முதலியவை களிலிருந்தும், அறியவரும் விஷயங்களே. இலங்கையை யாண்ட மன்னர்கள், அத்தேயத்தின் நிலைமை, சமயம், முதலியவைகளைப் பற்றிப் பல்காரணங்தொட்டு அத்தேயத்தோடு போக்குவரவு செய்துவந்த நாடுகளில் கிடைத்துள்ள காவியங்கள், நூல்கள், கல் வெட்டுகள், நாணயங்கள் முதலியவைகளிலிருந்து மற்றும் சில விஷயங்கள் புலப்படுகின்றன.

மேற்கூறியபடி இலங்கையைப்பற்றிக் கூறும் இதிஹாஸங்கள், மஹாவம்சம், ராஜாவளி, பூஜாவளி, நிகாய ஸங்கிரகம், ராஜ ரத்னகரம் முதலியன. இவைகளுள் மஹாவம்சம் என்னும் இதிஹாஸமே மிகவும் புராதனமானதும் பிரதானமாகவுமுள்ளது. இதன் ஆசிரியர் ஏனைய இதிஹாஸங்களில் கண்டுள்ள பிழை களுக்கும், மற்றும் உள்ள குற்றங்களுக்கும் உட்படவில்லை. இவ்விதர இதிஹாஸங்களுக்குப் பலநூற்ருண்டுகளுக்கு முன்னரே மஹாவம்சம் இயற்றப்பட்டது. மேலும், இதை இயற்றிய மஹா நாமா என்பவருக்குப் பல பழைய காவ்யங்களும், சரித்திர சம்பந்த மான நூல்களும் கிடைத்திருந்தன. அவைகளிலுள்ள பிழை கள், குற்றங்கள், முதலியவைகளையெல்லாம் அகற்றி இந்த இதி ஹாஸத்தை இயற்றியருளினர். இதர இதிஹாஸங்களின் ஆசிரியர் களுக்கு இம் மஹாநாமா இயற்றிய மஹாவம்சத்தைத் தவிர வேறு ஆதாரங்களாக உதவக் கூடியவை கிடைக்காமற் போயின. ஆகையால், இத்தகைய பண்டைஆதாரங்களை உதவியாகக்கொண்டு இயற்றப்பட்டதும், மற்றவைகளிற் கண்ட குறைகளைத் தவிர்த் துள்ளதும், பிறரால் ஆதாரமாக உபயோகிக்கக் கூடியதுமான இதிஹாஸம் இம்மஹாவம்சம் ஒன்றே.

இந்நூலைக் கற்போருக்கு, இவ்வாசிரியர் உள்ளதை உள்ளவாறு கூறலும், மன்னர், வீரர், முதலியோர் அடைந்த வெற்றி தோல்விகளைச் சிறிதளவேனும் மாற்றிக் கூறாமல் நடந்தவற்றை நடந்தபடி வரைதலும் வியக்கத் தக்கனவாக இருக்கின்றன. மற்றைய நூல்களோ தத்தம் சமயங்களுக்கு அனுகூலமாக இருக்குமிடங்களில் உள்ளவைகளை உயர்த்திக் கூறியும், பிரதிகூலமாக உள்ள இடங்களில் பழித்துக்கூறியும், சிலவிடங்களில் முக்கியமான விஷயங்களையும்கூட தங்கள் சார்பிற்கு அனுகூல மாகாமலிருந்தால் கூறாமலே விட்டும் செல்கின்றன. இத்தகைய, நூலாசிரியர்க் கொவ்வாத லக்ஷணத்தை மஹாவம்சத்தின் ஆசிரியர் அறவே ஒழித்தது மகிழ்ச்சிக்குரியதன்றோ?

இம்மஹாவம்சம் சரித்திரவாராய்ச்சிக்கு அதிக உபயோகமாகவுள்ளது. இந்நூலிலிருந்து உண்மையாக நடைபெற்ற விஷயங்களை ஆராய்ச்சியாளர் எளிதில் அறியக்கூடும். இலங்கைக்கு முதன்முதலில் விஜயன் என்னும் லாடதேசத்தரசகுமாரன் வந்ததிலிருந்து தாதுஸேனன் என்னும் அரசன் தங்கள் இராஜாங்கத்தை அபகரித்த தமிழர்களிடமிருந்து மறுபடியும் மீட்டு இராஜ்ய பாரம் வகித்த வரையும் உள்ள சரித்திரத்தைக் கூறும் மகா வம்சம். இதற்குப் பின்பு நடந்த சரித்திரம் அடங்கியுள்ள பகுதிக்கு "சூளவம்சம்" என்று பெயர் வழங்கலாயிற்று. ஆனால் மொத்தமாகவே மஹாநாமா எழுதிய பகுதியுடன் சூளவம்சம் என்ற பகுதியையும் சேர்த்து ஒருங்கேயே மஹாவம்சம் என்ற ஒரே பெயரே எல்லோராலும் வழங்கப்பட்டு வருகிறது. பின்னர் வரையப்பட்டுள்ள பகுதியில் ஒருபாகம் "தர்மகீர்த்தி" என்னும் பௌத்த தேரரால் இயற்றப்பட்டது. தாதுஸேனன் என்னும் அரசனிலிருந்து முதலாம் விஜயபாஹு என்னும் மன்னன்வரை உள்ள சரித்திரத்தில், மேற்கூறிய பிழையின்மை மிகவும் பாராட்டத் தக்கது. முதலாம் விஜயபாஹுவிற்குப்பின்னர் உள்ள சரிதங்கள் பல பிழைகளுட னிருந்ததாலும், முழு அத்தியாயங்களே பல காணப்படாமையாலும், அந்தப் பகுதியின் விஷயங்களைத் தீர ஆராயாமல் கொள்ளுவது அபாயமேயாகும்.

இனி மஹாவம்சத்தில், இந்தியாவைப்பற்றியும், இந்திய அரசர்களைப்பற்றியும் கூறியுள்ள விஷயங்களைச் சிறிது விசாரிப்போம். மஹாவம்சம் முதன்முதலில் கூறும் விஷயம் விஜயன் வரவு. விஜயன் இலங்கையைச் சேர்ந்த தினம் புத்தர் நிர்வாணமடைந்த தினம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இலங்கா தீவத்தில் இருந்த பௌத்த பிக்ஷுக்கள், காலவரையறைக்கு புத்தர் நிர்வாண

மடைந்த வருடத்தையே தொடக்கமாக வைத்து வழங்கிவந்தனர். இவர்கள் எல்லா விஷயங்களிலும் இக் காலவரையறையை உபயோகிக்கவில்லை. பௌத்த சங்கத்திற்கும் பௌத்த மதத்திற்கும் வளர்ச்சியோ, வளர்ச்சிக்கு ஏற்பட்ட சாதனங்களோ, வளர்ச்சி நிலைகுலைவோ, மற்றும் இவை சம்பந்தப்பட்ட முக்கியமான விஷயங்களோ, நேர்ந்ததைக் கூறும் சந்தர்ப்பங்களில் மட்டுமே இந்தக் காலவரையறையை உபயோகித்து வந்தனர் என்பது நன்கு புலப்படுகின்றது. இப்பெரிய சம்பவமாகிய பௌத்தநிர்வாண வருடத்திற்குப்பின் 218 ஆவது வருடத்தில் அசோக மஹாராஜாவுக்குப் பட்டாபிஷேகம் நடந்தது என்பதும், இச்செய்தி அசோகன் ஆட்சி பெற்றதற்கு நான்கு வருடங்களுக்குப் பின்னர் நடந்த சம்பவம் எனவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆகையால், அசோகனது அரசுரிமை 214-ஆம் வருடத்தில் (புத்தநிர்வாணக் கணக்கில்) பெற்றதாகும். மஹாவம்சத்தில் அசோகனின் பாட்டன், தகப்பன், இவர்களைக் கூறும்போது அவரவர்கள் ஆண்ட வருடங்கள் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளன.

சந்திரகுப்தன் 24.
பிந்துசாரன் 28.

ஆகையால் இவ்விருவருடைய மொத்த ஆட்சிகாலம் 52 வருடங்கள். பௌத்தநிர்வாண வருடக் கணக்கில், சந்திரகுப்தன் அரசுரிமை பெற்ற ஆண்டு 214—52=162க்குப் பின்னர் எனத் தெளிவாகும். இம்மௌரிய வம்சத்து முதலரசன், யவன தேயத்து அரசனைப் பெருங்கீர்த்தி வாய்ந்த அலக்ஸாண்டர் என்பான் இந்தியாமீது படையெடுத்த காலத்தவன் என்பது எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதே. யவன தேயத்துச் சரித்திர மூலங்கள் முதலிய இதர அத்தாக்ஷிகளைக் கொண்டு, இச்சந்திரகுப்தன் அரசுரிமை பெற்ற ஆண்டு கி. மு. 319 என்பது எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வருடம் மேற்கூறியபடி பௌத்தநிர்வாண வருடக் கணக்கில் புத்தநிர்வாணத்திற்கு 162 வருடங்களுக்குப் பின்னர் நடந்ததென அறிந்தோம். ஆகையால், பௌத்த நிர்வாணம் கி. மு. 319+162=481ல் நடந்தது என நிர்ணயிக்கலாம். சந்திரகுப்தன் ஆட்சி தொடங்கிய வருடம் சில வருடங்கள் பின்னரே எனவும் கூறுவாருளர். எங்ஙனமாயினும் புத்தநிர்வாணம் சற்றேறக்குறைய கி. மு. 481 என ஏற்படுதல் தெள்ளிது. மேற்கூறிய அரசர்களுடைய ஆட்சிகாலத்தின் மொத்த காலவரையறையில் ஏறக்குறைய மூன்றுவருடங்கள் முன் பின்னிருக்க இடமுண்டு. ஜெனரல் கன்னிங்ஹாம் என்பாராலும், மேற்கூறிய புத்தமத நூல்களில் ஆங்காங்கே சிதறிக் கிடக்கும்

ஜோதிஷகணித நிலைகளைக் கண்டு சுவாமிக்கண்ணு பிள்ளை அவர்களாலும், நிர்ணயிக்கப்பட்ட இப் பௌத்தநிர்வாண வருடம் கி. மு. 478 என்பதே. இதுவே பெரும்பாலும் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆகவே, மஹாவம்சத்தில் கண்டுள்ள மௌரிய அரசர்களது கால விஷயங்களைக்கொண்டு புத்தநிர்வாண காலத்தையும் இவ்வரசர்களது காலங்களையும் மேற்கூறியபடி நன்குணர மஹாவம்சம் ஓர் இன்றியமையாத சாதனமாயிற்று. இனி மௌரியர்க்குமுன்னர் வடஇந்தியாவில் அரசுசெலுத்திய சைசுநாக வம்சத்தவர்களைப்பற்றி மஹாவம்சம் கூறுவதைச் சற்று கவனிப்போம். இந்த நூலின் நான்காவது அத்தியாயத்தில் இம்மன்னர்களைப் பற்றிக் கூறியிருக்கிறது. இந்த வம்சத்து முதல் மன்னன் பெயர் பாதியா என்றும், அவன் மகன் பிம்பிசாரன் எனவும் அறியக்கிடக்கிறது. இந்த பிம்பிசாரன் புத்தர்காலத்தவன். இம்மன்னனும் கௌதமரும் சிநேகிதர்கள் என்றும், இவ்விருவர்களில் புத்தர் பிம்பிசாரனைவிட ஐந்து பிராயம் பெரியவர் எனவும் குறிக்கப்பட்டுள்ளது. மற்றும், புத்தர் தம் இருபத்தொன்பதாவது வயதில் துறவு பூண்டார் என்றும், ஆறு வருடங்கள் வெளியே இருந்த பின்னர் அவரது முப்பத்தைந்தாவது பிராயத்தில் திரும்பி வந்தனரெனவும் கூறப்பட்டுள்ளது. பிம்பிசாரன் பதினைும் பிராயத்தில் இராஜ்ஜியபாரம் வகித்தான் என்றும், இவனது பதினைும் ஆட்சி ஆண்டில் புத்தர் தம் கொள்கைகளை இவனுக்குப் போதித்தார் என்றும், இம் மன்னன் ஐம்பத்திரண்டு வருடம் ஆட்சி புரிந்தான் என்றும் வரையப்பட்டுள்ளது. தகப்பனாகிய பிம்பிசாரனைக் கொன்றுவிட்டு அவன் மகனான அஜாதசத்ரு பட்டத்துக்கு வந்து அரசுசெலுத்தினான் எனவும், இவனது எட்டாவது ஆண்டில் புத்தர் விண்ணுலகம் எய்தினரெனவும் குறிக்கப்பட்டுள்ளது. அஜாதசத்ரு முப்பத்திரண்டு வருடங்கள் ஆண்ட பின்னர், இந்நூலின்படி, இவனது புத்திரன் உதாயீ பத்தகன் என்பான் பதினாறு வருஷங்களும், அவனுக்குப் பிறகு அவன் புத்திரன் அனிருத்தனும், பிறகு அவனது பேரன் முண்டனும், எட்டு வருடங்கள் ஆட்சி செய்தனரென்றும், முண்டனுக்குப் பின்னர் அவன் மகன் நாகதாசகன் என்பான் இருபத்திநான்கு வருடங்கள் இராஜ்ஜியபாரம் வகித்ததாகவும் அறிகிறோம். பிறகு தேச மக்கள் ஒருங்கு சேர்ந்து ஓர் உள்நாட்டுக் குழப்பம் விளைத்ததாகவும், அதன்பயனாகப் பிரஜைகளாலேயே மந்திரியான சிசுநாகன் அரசனாக்கப்பட்டான் எனவும் தெரியவருகிறது. இந்த சிசுநாகன் பதினெட்டு வருடங்கள் அரசாட்சி புரிந்தான். அவ

னுக்குப்பின்னர் அவன் மகன் காலாசோகன் இருபத்தெட்டு வருடங்கள் ஆண்டான் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

இங்ஙனம் வரையப்பட்டுள்ள வம்சாவளியினது கிரமம் இவ் வம்சத்தைப்பற்றிக் கூறும் புராணங்களில் காணப்படவில்லையாயினும், இவ்வம்சாவளியில் கண்ட கீர்த்திபெற்ற அரசர்கள் ஆங்கும் கூறப்பட்டுள்ளனர். புராணங்களிலிருந்து எடுக்கப்பட்ட வம்சாவளி பின் வருமாறு:

| | | |
|---|---|---|
| சிசுநாகன் | —639 | கி. மு. |
| காகவர்ணன் | —712 | ,, |
| க்ஷேமேந்திரன் | —587 | ,, |
| பிம்பிசாரன் | —537 | ,, |
| அஜாதசத்ரு | —485 | ,, |
| தர்சகன் | —453 | ,, |
| உத்யன் | —432 | ,, |
| நந்திவர்த்தனன் | —411 | ,, |
| மஹாநந்தி | —390-370 | ,, |

சிசுநாக வம்சத்திற்கு முன்னர் ஆண்ட பிரத்யோத வம்சம் சுமார் கி. மு. 637-ஆம் ஆண்டில் முடிவு பெற்றதென ரொமேஷ் சந்திர தத்தர் 'புராதன இந்திய நாகரிகம்' என்னும் நூலில் கூறியுள்ளார். ஏகதேசமாக ஒவ்வொரு அரசனுக்கும் இருபத்திரண்டு அல்லது இருபத்தைந்து ஆண்டுகள் ஆட்சி காலம் கொடுக்கலாம் என எல்லோராலும் மதிக்கப்பட்டுள்ளது. இங்கு பிம்பிஸாரனுக்கும் மற்றவர்க்கும், மஹாவம்சத்தில் குறிக் கப்பட்டுள்ள காலங்களில் சிலவற்றை உண்மையாக எடுத்துக் கொள்ளலாம். அஜாதசத்ருவின் எட்டாம் ஆண்டில் புத்தர் நிர் வாணமடைந்தார் என்பதிலிருந்து, புத்தநிர்வாண வருடம் கி. மு. 478 என மேற்கூறியபடி நிர்ணயிக்கப்பட்டபடியால், இவ்வரசன் கி.மு. 486 ல் தன் தகப்பனாகிய பிம்பிசாரனைக் கொன்று பட்டத் துக்கு வந்தான் என அறியலாகும். அங்ஙனமே அவனுக்கு முன் ஆண்ட பிம்பிசாரன் கி. மு. 537 முதல் 485 வரை, அதாவது 52 வருடங்கள், ஆட்சிபுரிந்தான் எனவும் அறியலாகும். இப் படியே ஒருவாறு முறைப்படும்படி இவ்வம்சத்தினரது காலங்களை யும், வம்சத்தின் சரித்திரத்தையும், சிறிதளவேனும், அறிய மஹாவம்சம் ஓர் ஒப்பற்ற பேருதவியாக விளங்குகிறது. வட இந்தியாவைப்பற்றிச் சரித்திரமுறையாக யாதும் அதிகமாக அறிய முடியவில்லை. ஆனால் தென் இந்தியாவின் சரித்திரத்தை விளக்கக்

கூடிய சரித்திர சம்பந்தமான விஷயங்கள் பலவுள. இவைகளைச் சற்று ஆராய்தல் தகுதியுடைத்து.

விஜயன் முதன்முதலில் இலங்கா த்வீபத்திற்கு வந்துசேர்ந்து பட்டாபிஷேகம் செய்துகொள்ள யத்தனிக்கையில், தனக்கு ஒத்த உயர்குல அரசி இல்லாமையால், இக் குறையை நீக்கப் பாண்டிய அரசனுக்குத் தூது விடுத்தனன் என்றும், இதைத் தூதுவரிடம் கேள்வியுற்ற பாண்டிய அரசன் தன் மகள் விஜயாளையும் மற்றும் 699 உயர் குலப்பெண்களையும், பெருந் தனங்களுடனும் சிறப்புடனும் இலங்கைக்குத் தூதுவர்களுட னனுப்பினன் எனவும் அறிகிறோம். இவர்கள் அத்தீவையடைந்து விஜயனைச் சேர்ந்த உடனே பட்டாபிஷேகம் நடந்து, பின்னர் விஜயன் முப்பத்தெட்டு வருடங்கள் ஆட்சிசெய்து மகவில்லாம லிறந்தனன் எனக் கூறப்பட்டுள்ளது. இச்செய்தி உண்மையானதா என்று ருஜூப்படுத்த ஏற்ற ஆதாரங்கள் நமக்குக் கிடைத்தில.

பின்னும் தேவானும்பிரிய திஸ்ஸன் என்று இலங்கேச்வரனாக விளங்கிய (இலங்கை அசோகன் எனக் கூறத்தகுதியுள்ள) ஒரு கீர்த்திவாய்ந்த மன்னனது மகனான சூரதிஸ்ஸன் என்பான் தனது பத்தாம் வருஷத்தில் 'மலபாரி'லிருந்து (மலையாளப் பிரதேசத்திலிருந்து) வந்த இரண்டு தமிழ் வாலிபர்களால் கொல்லப்பட்டான் எனவும், இவர்கள் வியாபாரிகளாக வந்து இவ்வரசனைக் கொன்றபின்னர் இருபத்திரண்டு வருடங்கள் இலங்கையில் செங்கோல்செலுத்தினர் எனவும், பிறகு இவர்கள் சூரதிஸ்ஸனது சகோதரனான அசேலன் என்பவனால் கொல்லப்பட்டனர் எனவும் இந் நூலில் கண்டிருக்கிறது. மேற்குறித்த சம்பவங்கள் உண்மையாக நடந்தனவா, அன்றி முழுதும் கட்டுரையா என்று தெளிவதற்குத் தக்க ஆதாரங்கள் இல்லை. இவ்வசேலன் பத்து வருடங்கள் ஆண்டான். இவனுக்குப் பிறகு ஏலாரன் என்னும் தமிழன் இராஜ்ஜியத்தை அபகரித்தனன். இந்த ஏலாரன் சோழதேசத்தினன் என்றும், கீர்த்திபெற்ற ஓர் உயர்ந்த குடியில் பிறந்தவன் எனவும், நாற்பத்தினான்கு வருடங்கள் நீதி நெறிமுறை தவறாமல் செங்கோல் செலுத்தினான் எனவும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளான். இவ்வரசன் தன் தலையணைப் பக்கம் ஒரு மணியைக் கட்டுவித்து, தேசத்தில் நியாயம் வேண்டுவோர் யாவரும் சிறிதளவேனும் இடரில்லாமல் நியாயம் பெற்றுப்போக மணியடிக்கும்படி செய்திருந்தனன். பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ள மனுச்சோழன்போல் இவனும் ஒரு

பசுவின் கன்றின்மேல் தேரோட்டிய காரணத்தால் தன் மகன் பேரில் தேரோடவிட்டான் எனவும் இந்நூல் கூறுகிறது! இந்த ஏலாரன் ஹிந்துவாகவிருந்தபோதிலும் தேசத்தில் விளங்கிய இதர மதங்களையும் கௌரவித்து வந்தான் எனவும் கூறப்பட்டுள்ளது. இவ்வரசனது பெயர், திருக்குறள் ஆசிரியராகிய திருவள்ளுவர் காலத்தவனான ஏலாரசிங்கனை ஞாபகமூட்டுகிறது. இவ்வேலாரன் ஒருநாள் தேரில் செல்லுகையில் பௌத்த விஹாரம் ஒன்றில் தேர் இடிபட்டுக் கட்டடத்திற்குச் சிறிது தீங்கு நேரவே, தேரின் சக்கரத்தினடியில் தன் தலையை விட்டு உயிரை இழக்க யத்தனித்தான் எனவும், அதைக் கண்ட பௌத்த பிக்ஷுக்கள் அது தகுதியன்றென்றும், விஹாரத்தை முறைப்படி கட்டுதலே போதுமானது என்றும் எடுத்துச் சொல்ல ஏலாரன் அங்ஙனமே செய்தனன் என்றும் கூறப்பட்டுள்ளது. பின்னும் இவன் செய்த மற்றொரு ஆச்சரிய கார்யம் என்னவெனில், ஒரு கிழவி தான் வெய்யிலில் உலரப்போட்ட நெல் அகாலத்தில் பெய்த மழையினால் நனைந்துபோகக்கண்டு துயருடன் அரசனிடம் முறையிடவே, அம்மன்னன் பட்டினிகிடந்து, இந்திரனை ஜெயித்து, காலாகாலங்களில் பெய்யவேண்டிய மாரிகளைக் கிரமமாகப் பெய்யும்படி செய்வித்தான் என்று கூறப்பட்டுள்ளது. ஆதாரங்கள் இல்லாமையால் இந்த ஏலாரன் யாவன் என்பதும், இவனைப் பற்றிய மற்ற விஷயங்கள் யாவை என்பதும் தீர்மானமாக அறியச் சிறிதும் இடமில்லாமலிருக்கின்றது. இவனது கீர்த்தியை இலங்கை வாசிகள் இன்றும் பாராட்டுகின்றனர். இலங்கைமன்னர் வழிவந்த துட்டகாமணி என்பான் இராஜ்யத்தை மீட்க இவனை எதிர்த்துப் போர் செய்தான். அவனைப் பல்வேறு இடங்களில் ஏலாரன் தோல்வியடையச் செய்த போதிலும், கடைசியில், முன்னரே ஏலாரன் செய்தியனுப்பியதை யறிந்து பல்லுகன் என்னும் அவனது மருமகன் ஒருபெருஞ் சேனையைத் திரட்டிக்கொண்டு வந்து துட்டகாமணியுடன் போர்புரிந்தும், பயன்படவில்லை என்று தெரிய வருகிறது.

மறுபடியும் வட்டகாமணி என்னும் அரசன்காலத்தில் இந்தியாவின் சம்பந்தம் சிறிது கூறப்பட்டுள்ளது. வட்டகாமணி கி. மு. 104-ல் அரசாட்சி வகித்தான். ஆட்சி தொடங்கின முதல் வருஷமே அவனுக்கு இரண்டு அபாயங்கள் நேர்ந்தன. இவன் ஐந்துமாதகாலம் ஆண்டவுடனே தமிழ்நாட்டு வாலிபர்கள் ஏழு பேர் படையெடுத்து வந்தனர். அவர்களுள் இருவர் பௌத்த பிக்ஷாபாத்திரத்துடன் வந்து, அரசனது கிரீடத்தையும், இராணியையும் தங்கள் வசப்படுத்திக்கொண்டு இந்தியாவிற்குத்

திரும்பினர். மற்றைய ஐவர் அரசு புரிந்தனர்; மொத்தம் 14 வருடம், 7 மாதம் ஆண்டனர். இவர்கள், முறையே, பலஹத்தன், பாதிகன், பணயமாறன், பிணையமாறன், தாடியன் என்ற பெயருடையவராகக் கூறப்பட்டுள்ளனர். இவர்கள் யாவர் எனத் துணிய இடமில்லை. ஆனால் இவர்களுள் இருவர் மாறன் என்ற பெயர்களுடன் கூறப்பட்டிருத்தலால் பாண்டிநாட்டவராக இருத்தல் சாத்தியமாகும். இவர்களுக்குப்பிறகு வட்டகாமணி மறுபடியும் இராஜ்யபாரம் ஏற்று 12 வருடங்கள் ஆட்சி செலுத்தினன். இந்தக் கீர்த்திபெற்ற வட்டகாமணிக்குப்பிறகு மூன்றரசர்கள் ஆண்டனர். அதற்குப்பின் அனுலா என்பவள் தனது காதலர்களைக் கொண்டு அரசு செலுத்திவந்தாள். அவள் காதலர்களுள் இருவர் தமிழ்தேயத்தினர் எனக்குறிக்கப்பட்டுள்ளது. வடுகன் என்பான் ஒருவன். இவன் ஒரு வருஷம், இரண்டு மாதம் ஆண்டான். மற்றொருவன் பெயர் நீலியன். இவன் ஒரு பிராம்மண தமிழ்ப் புரோஹிதன். இவன் ஆண்டது ஆறு மாதங்கள்தான்.

பிற்காலத்தில் இளநாகன் என்பான் ஆட்சிக்கு வரும் பொழுது லம்பகன்னர் என்னும் வம்சத்தவர் கலகஞ் செய்யவே, இந்தியாவிலிருந்து அழைத்துவந்த சேனைகளின் உதவியைக் கொண்டு அவர்கள் விளைவித்த கலகத்தை அடக்கினன். ஆனால் மறுபடியும் அவர்கள் உபத்திரவம் கொடுத்துக்கொண்டே யிருந்தனர்.

ஓஹாரிகதிஸ்ஸன் என்பான்காலத்தில் அவனது தம்பி அபயநாகன், அரண்மனையில் மஹாராணியிடங் களவொழுக்கஞ் செய்து, விஷயம் வெளியானதும், உயிர் பிழைப்பதற்கு இந்தியாவிற்கு ஓடிவந்தான். இவனைப்போலவே கெட்ட நடத்தையுடைய இவன் மாமன், சில தமிழர்கள், இவர்கள் உதவியைப்பெற்று இலங்கைக்குத் திரும்பிவந்து, படையெடுத்து, ராஜ்யத்தையும் ஓஹாரிகனது அரசியையும் பெற்று எட்டு வருடங்கள் ஆண்டான். பிறகு கோடகாபயன்காலத்தில் சோழதேசத்தவனான சங்கமித்தன் என்னும் பிக்ஷு, பிக்ஷுக்களின் சபைகளில் வாதித்துப் புகழ்பெற்றான். அக்காலத்தில் வைதுல்யக்கொள்கை முன்னேற்ற மடைந்திருந்தது. அதன் மாறுபாட்டமும் அதிகரித்து, அபயகிரி விஹாரத்துப் பிக்ஷுக்கள் பலர் தேசத்தை விட்டு ஓட்டப்பட்டனர். இங்ஙனமிருக்கையில் கோடகாபயன் தன் மக்கள் இருவருக்கு இச்சங்கமித்தனை ஆசிரியனாகப் போதிக்க வைத்தான். இவ்விருவர்களுள் ஜேட்ட திஸ்ஸன் என்றவன் அரசுரிமை பெற்றவுடன் சங்கமித்தன்

வந்துசேர்ந்து, மஹாவிஹாரத்தை அழிக்கச்செய்தான். இவனாட்சி முழுதும் மதச் சச்சரவுகள் நிரம்பி யிருந்தன.

தமிழர்கள் மறுபடியும் மித்தசேனன் என்னும் அரசன் ஆண்ட காலத்தில் படையெடுத்து வந்தனர். படையெடுத்துவந்த தமிழர்களுள் பாண்டு என்பான் மித்தசேனனைக் கொன்று ஐந்து வருடங்கள் ஆண்டான். பரிந்தன் என்பவன் அவனுக்குப் பின்னர் மூன்று வருடங்கள் அரசாட்சி செய்தான். குட்ட பரிந்தன் பரிந்தனுக்குப்பின் பதினாறு வருடங்கள் ஆண்டான். பிறகு திரிதரன் என்னும் பெயருடைய தமிழன் அரசுரிமை பெற்றான். இவனை இலங்கை அரசர் மரபில்வந்த தாதுசேனன் கொன்றான். இப்படி உயிர்துறந்த திரிதரனுக்குப் பின்னர் தாடியன் அரசாட்சி செலுத்தினான். இவனது மூன்றாவது ஆண்டில் தாது சேனன் இவனையும் கொன்றான். பாதியன் என்பான் தாடியனுக் குப்பிறகு ஏழுமாதங்கள் அரசு புரிந்து, தாதுசேனனுடன் போர் செய்து உயிர் துறந்தான் என மஹாவம்சம் கூறி முடிக்கிறது.

# சாஸ்திரம்

## வைத்தியம்

எஸ். ஜீ. எஸ்.

---

எனக்குப் பரிசயப்பட்ட ஒரு நியாயாதிபதி சிலகாலம் திருநெல்வேலி ஜில்லாவில் அலுவல் பார்த்து வந்தார். கக்ஷிக்காரனாகட்டும், சாக்ஷியாகட்டும், குறிப்பிட்ட வாய்தாவில் அவருடைய கச்சேரிக்கு வரமுடியாது நேரிட்டால், அதற்குக் காரணம் தங்களுடைய தேக அசௌக்கிய மென்றே சொல்லுவார்கள். என்ன அசௌக்கியம் என்று அவர் கேட்டாலும் கேட்காது போனாலும், அவர்கள் தமிழில் மனுக்கொடுத்தாலும், இங்கிலீஷில் தந்தியடித்தாலும், எந்த பாஷையிலும் "வாயு" என்றுதான் தெரிவிப்பார்கள். அம்மனிதருக்கு எந்த ஊராகட்டும்— ஸ்ரீவைகுண்டம், கைலாசபுரம், பிரம்மதேசம்—எங்கேயானாலும், ஒரே வாயு சஞ்சாரமென்றும், வேறு வியாதிகள் நுழைவதில்லை என்றும், என் சிநேகிதர் இவ்விதம் அறியலானார்.

அதற்குமுன், அவர் தென்னார்க்காடு ஜில்லாவில், கொஞ்ச காலம் அலுவல் பார்த்திருந்தார். அங்கே பிரபலமாயுள்ள ஒரு ஜாதியாரில் எவரையாவது நோக்கி, "அவர் உமக்கு என்ன உறவு?" என்று கேட்டால், "அவர் எனக்கு மாமன்" என்று தான் பதில் கிடைக்கும். அறுபது வயதானவர், இரண்டு வயதுள்ள சிறுவனைத் தனக்கு மாமன் என்று சொல்லுவார். எத்துணை தடவை கேட்டாலும் அவ்விதமே பதிலளிப்பார். "உமக்கு அவர் எப்படி மாமன் ஆகவேணும்?" என்று கேட்டால்மாத்திரமே, "அதுவா, அவர் என் தங்கையின் புருஷனுக்குத் தம்பி", அல்லது "என் சிறிய தகப்பனாரின் பிள்ளை" என்று நிதானமாக விளக்குவார். இந்த விசேஷத்தைக் கண்டுபிடித்த பிறகு, அந்த நியாயாதிபதி, காலத்தை வீணாக்காமல், முதல்கேள்வியிலேயே "வரப்போகிற சாக்ஷி உமக்கு எப்படி மாமன்?" என்று கேட்டுவிடுகிற வழக்கம். ஏழாந்தலைமுறையிலாவது ஏதாவது உறவு இருந்தால், அவ்விதத்

தில் மாமன் என்று வெளியாகும். அதுவும் இல்லாது போனுல், "அவர் எனக்குப்பேருக்கு மாமனே ஒழிய, உறவுக்கு மாமனில்லை". என்ருவது கூறப்படும். ஆகையால் ஜகமெல்லாம் மாமன்என்றே எண்ண வேண்டியிருந்தது.

இந்த அநுபவத்தை என் சிநேகிதர் திருநெல்வேலி ஜில்லா வில் உபயோகிக்க எண்ணினுர். "என்ன வியாதி?" என்று கேட்பதுதான் தப்பு என்று நினைத்தார். கக்ஷிக்காரர் வரவில்லை என்ருவது, சாக்ஷி வரவில்லை என்ருவது வக்கீல் தெரிவித்த உடனே, இவர் முகத்தில் ஒன்றும் காட்டாமல், முதற் கேள்வியாகவே, "அவருக்கு என்ன வாயுவு?" என்றே கேட்கத்தொடங்கினுர். அதனுல் என்ன? வக்கீல் தன்பின் நிற்கும் குமாஸ்தாவை ஒரு வார்த்தை கேட்டுவிட்டு, ஒரே பதிலைத்தான் கம்பீரமாக அளிப்பார்.

"தத்த வாயு."

"அப்படியென்ருல் என்ன அர்த்தம்?"

"அதுதான், பித்தவாயு" (இதுகூடத் தெரியாதா என்கிற பாவனையில்).

ஆகவே, தான் அந்த ஜில்லாவில் இருந்த காலம் முழுவதும் இவ்விதம் வாயுவினுல், தானே மிகவும் பீடிக்கப்பட்டதாக என்னுடைய சிநேகிதர் சொல்வார். இவ்வளவு நேர்த்தியான நாட்டில்கூட தான் கண்டதெல்லாம் பித்த வாயுவுதானென்றும், வாயுவின் பரவிய சக்தியில் சிலருக்கு இருக்கும் நம்பிக்கை பகவானிடத்திலில்லையென்றும் அவருடைய கொள்கை.

சொற்ப காலத்திற்கு முன், ஒரு கொலை வழக்கு விசாரணையாயிற்று. ஒரு வீட்டில் ஒரு புருஷனும் ஸ்திரீயும் மாத்திரம் வசித்து வந்தார்கள். ஒருநாள், பாதி ராத்திரியில், அந்த ஸ்திரீ கதவைத் திறந்து வெளியே வந்து, தெருவில் விழுந்து, "ஐயோ! என்னுடைய எஜமானர் போய்விட்டாரே" என்று புரண்டு அழுதாள். பக்கத்து வீட்டுக்காரர்கள் கூட்டம்கூடி விசாரித்ததில், புருஷன் வாயுவினுல் இறந்துவிட்டதாகச் சொன்னுள். அவர்கள் அவளைத் தேறுதல் செய்துவிட்டு தங்கள் தங்கள் வீட்டிற்குத் திரும்பினுர்கள். ஆனுல் இவர்களுடைய மத்தியில் இருந்த தலையாரிமாத்திரம் நாஸ்திகன். வாயுபக்தி இல்லாதவன். அவனுக்கு சம்சயம் உண்டானதனுல் போலீசாருக்குத் தெரிவித்தான். அவர்கள் வந்து பார்க்கும்போது, பிரேதத்தின் கழுத்தில் கைவிரலடையாளங்கள் மாதிரி ஏதோ கறுத்துக் காணப்பட்டன. வீட்டில் வெங்காய வாசனை பலமாயிருந்தது. தன் புருஷனுடைய கழுத்தின்பேரில்

வாயுவுக்காகவென்று தான் வெங்காயச்சாற்றைத் தடவினதாக அவள் சொன்னாள். அவள் கையிலணிந்திருந்த கண்ணாடி வளையல்கள் உடைந்து தரையில் சிதறியிருந்தன. பிரேதத்தை டாக்டரிடம் பரீக்ஷைக்காக அனுப்பினார்கள். கடைசியில் அந்த ஸ்திரீயின்மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டது. அவர்கள் இருவரைத் தவிர வீட்டில் வேறெவரும் அன்று ராத்திரி இருக்கவில்லை என்றும், படுக்கப்போகும் வரை அவன் சௌக்கியமாயிருந்தானென்றும், அவள் கதவைத் திறந்து வெளியில் வருகிறவரையில் கதவு அடைக்கப்பட்டிருந்ததென்றும், அவன் இறப்பதனால் அவளுக்கு சௌகரியமுண்டென்றும், சாக்ஷிகள் மூலமாக வெளியிடப்பட்டது. பிரேதத்தைப் பரீக்ஷை செய்த டாக்டரும் ஒரு சாக்ஷி.

எல்லாம் முடிந்தவுடன் கைதியின் வக்கீல் எழுந்திருந்தார்.

வக்கீல்: இறந்தவனை யாரும் கொல்லவில்லை. அவன் வாயுவினாலே இறந்தான்.

நியாயாதிபதி: இப்பொழுது டாக்டர் சாக்ஷி சொன்னாரே— அவனுடைய கழுத்தின்மேல் கைவிரல்கள் கொண்டு அழுத்தப்பட்டுக் கறுத்த ரத்தம் தோய்ந்திருந்ததாகவும், அந்த அடையாளங்களைப் போக்கடிக்கலாம் என்கிற ஆசையினால்தான் வீட்டிலிருந்த வெங்காயத்தை இவள் தேய்த்திருக்கவேணுமென்றும் கூறினாரே?

வக்கீல்: அவ்விதம் ஒன்றுமில்லை. வாயுவுக்கு வெங்காயம் நல்ல மருந்து என்று 'யுவரானரு'க்குத் தெரிந்திருக்குமே?

நியாயாதிபதி: இவ்வித உபயோகம் உண்டென்று எனக்கு இதுவரை தெரியாது—போகட்டும். அந்தக்கறுத்த விரலடையாளங்களோ?

வக்கீல்: என் கக்ஷிக்காரி நல்ல எண்ணத்துடன் உயிரைக் காப்பாற்ற வேணுமென்கிற ஆவலில் வெங்காயத்தை அழுத்தித் தேய்த்ததால், அவ்விதம் கோடுகோடாய் ரத்தம் கட்டியிருக்க வேண்டும்.

நியாயாதிபதி: ஆனால் கைவளையல்கள் உடைந்ததும்—?

வக்கீல்: வெங்காயச் சாற்றைத் தேய்த்த வேகத்தினால்தான் உடைந்திருக்கவேண்டும்.

நியாயாதிபதி: தொண்டையே முறிபட்டிருந்தது என்று டாக்டர் பிரமாணத்தின் மேல் சொன்னாரே?

வக்கீல்: எல்லாம் வாயுவு, யுவரானர். அவனுக்கு வாயுவினால் காக்காய்வலிப்புமாதிரி ஏதோ கண்டிருக்கவேண்டும். அப்

பொழுது கழுத்தை இப்படியும் அப்படியுமாகத் திருப்புவதனுல், தொண்டை தானுகவே முறிபட்டிருக்கவேண்டும். வாயுவு தவிர வேறென்றுமில்லை, யுவரானர்.

நமக்கு வாயுவின்மேல் இவ்வளவு விசுவாஸம் உண்டாவதற்கு என்ன காரணம்? நம்முடைய வைத்திய சாஸ்திரத்தில், வாயு, பித்தம், கபம், என்று வியாதிமூல பேதங்கள் மூன்று வர்ணிக்கப் பட்டிருக்கின்றன. கபம் என்பதைப் பேச்சில் அதிகமாக உபயோகிக்கக் காணேம். இருமிக் காட்ட முடிந்தால் மாத்திரமே தனக்குக் கபம் இருப்பதாக வியாதிக்காரன் சொல்லிக் கொள்ளுகிருன். பித்தம் என்கிற வார்த்தையின்மேலும் அதிக மோகத்தைக் காணேம். ஒருவேளை அதற்கும் பயித்தியம் என்பதற்கும் ஏதோ சம்பந்தமிருக்கலாமென்று நம்முடைய மனதின் ஒரு மூலையில் ஒரு பயம் தோன்றுவதனுல் இருக்கலாம்! ஆகவே, எல்லாச் சமயத்திற்கும், எல்லா அவசியத்திற்கும் உபயோகிப்பதற்கு வாயுவு என்கிற ஒரு பதம்தான் பாக்கியாக நிற்கிறது. ஆகையால் அதுவே பிரயோகிக்கப்பட்டு வருகிறதுபோலும்!

இவ்விதம் ஏறக்குறைய எல்லா வியாதிகளுக்கும் ஒரு பதத்தையே உபயோகித்தாலும், அல்லது மூன்று பதங்களில் ஒன்றையே உபயோகித்தாலும், அதனுல் எவருக்கு என்ன பலன்? இச் செய்கை சரியென்ருல் எல்லா விஷயங்களிலும் அவ்விதம் செய்வது நன்றல்லவோ? ஒவ்வொரு மனிதனுக்கும் வெவ்வேருகப் பெயரை இட்டு அதை நாம் உணரவேண்டிய கஷ்டமில்லாமல் எல்லோருக்கும் ஒரே பெயராக, சங்கரா, நாராயணு, என்று வைத்துவிடுவது சுலபம். எந்தச் சங்கரனுவது எந்தச் சங்கரனுடைய செல்வத்தைக் கொண்டு போகலாம். எந்த நாராயணனுவது எந்த நாராயணனுடைய குற்றத்திற்குரிய தண்டனையை அனுபவிக்கலாம். நாமும், எந்த வியாதி கண்டாலும், அதன் சுபாவத்தை அறிய வேண்டுமென்கிற ஆவல் இல்லாமலும், நம்முடைய தவறுதல்களுக்கும் அதற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்கிற கொள்கையின்பேரிலும், எல்லாப் பிழைகளையும் வாயு பகவான் பேரில் சுமத்திவிட்டு, எல்லா ரோகங்களுக்கும் ஒரே வாயுகுளிகையை உட்கொள்ளலாம்.

இவ்விதம் குழப்பம் வருவதற்கு எதனுல் இடம் உண்டாகிறது என்று ஆலோசித்தால், (வியாதிக்காரராகிய நமக்குள்) ஒருவருக்காவது வாயு, பித்தம், கபம், என்கிற பதங்கள் நம்முடைய வைத்திய சாஸ்திரத்தில் என்ன தாத்பர்யத்துடன் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன என்கிற அறிவு லவலேசமும் கிடையாது என்பதனுலேயே.

அவ்வறிவு வைத்தியர்களுக்கிடையிலாவது இருக்கத்தான் வேண்டும். ஆனால் பிறருக்கு விளங்கும்படியாக எடுத்துக்காட்டும் ஆவல் அவர்களுக்கில்லை யென்று நான் சொல்லத் துணிகிறேன். சாதாரணப் படிப்புள்ளவர்களுக்கு மனதில் அர்த்தமாகும் விதத்தில், வேறு எல்லா விஜ்ஞானங்களின் ஸ்தூல விஷயங்களைப்பற்றியும், பொதுஜன உபயோகத்திற்காக எழுதப்பட்ட கட்டுரைகளிலும் புஸ்தகங்களிலும் நாம் வாசிக்கிறோமல்லவா? வைத்தியவிஷயத்தில்கூட மேல்நாட்டாரின் கொள்கைகள், முயற்சிகள், சித்தாந்தங்கள், இவைகளெல்லாம் நமக்குச் சாதாரணமாய் அர்த்தமாகின்றனவல்லவா? நம்முடைய வைத்தியசாஸ்திரத்திற்கும், மேல்நாட்டாரின் வைத்தியசாஸ்திரத்திற்கும், விசேஷமான வித்தியாச காரணம் அந்த வாத, பித்த, கப ஸம்பிரதாயமே. இதை உலகத்திலுள்ள இதர விஜ்ஞானிகளுக்காவது நம்முடைய வைத்தியர்கள் வெளிப்படுத்தக் கூடாதா? பண்டிதரல்லாத நமக்குத்தான் அறியும் சக்தி குறைவாயிருக்கலாம். ஆஸ்பத்திரிக்காரர்களுக்கு சுதேச வைத்தியசாஸ்திரத்தின்மேல் பொறாமை இருக்கலாம். ஆனால் அன்னிய நாடுகளிலும், உலகம் முழுவதிலும், ஞானமே தெய்வம் என்று அவாவுடன் காத்திருக்கும் விஜ்ஞானிகளின் பேரில் என்ன குற்றம் சொல்லலாம்? அவர்களுக்குத் தெரியத்தக்க விதத்திலாவது நம்முடைய பண்டிதர்கள் இதை எடுத்துச் சொல்லுவது மிக்க உபயோகமல்லவா? நம்மைச் சாதாரணமாகப் பீடிக்கும் இருபது முப்பது வியாதிகளை எடுத்து அவைகளுடைய ஆங்கிலப் பெயரைக் குறிப்பிட்டு, ஒவ்வொன்றையும் எந்த சமயத்தில், என்ன காரணத்தினால், எந்தத் தலையின் கீழ்ச் சேர்க்கவேண்டும் என்றும், அவ்விதம் சேர்ப்பதனால் சிகிச்சைசெய்வதில் என்ன விசேஷ சௌகரியமிருக்கிறதென்றும் துலக்கினால் சாலவும் நல்லதன்றோ? இவ்விதம் செய்யாதவரையில், ஒருவருக்கு வியாதிகண்டால் மேல்நாட்டோர் மாதிரியே, அது வாயு, பித்தம், கபம், இம்மூன்றில் எதில் சம்பந்தப்பட்டதென்று அறியாமலும், கவனிக்காமலும் வைத்தியம் செய்யலாமென்று அவர் சொல்லுவதில் என்ன தப்பு? நம்முடைய சுதேசி வைத்தியத்தை ஸர்க்காரில் அதிகமாக உற்சாகப்படுத்துவதில்லை என்று நாம் எவ்விதம் குறை கூறலாம்?

மற்றொரு விதத்திலும் நம்முடைய பண்டிதர்கள் பேருபகாரம் செய்யலாம். சில இடங்களில், முக்கியமாக கல்கத்தாவில் "ட்ராபிகல் ஸ்கூல் ஆப் மெடிசின்" (*Tropical School of Medicine*) என்கிற சாலையில், நம்முடைய சுதேசமருந்துச் சரக்குகளை, ஒவ்வொன்றாக எடுத்து, கேள்விப்படுகிற மாதிரி ஏதாவது அதில் குணமிருக்கிறதா என்று பரீக்ஷித்துப் பார்க்கிறார்கள். இந்த

ஒரு மருந்தைக் கஷாயம் செய்து கொடுத்தால் இந்த வியாதி குணமாகிறது என்று கிராமத்தில் ஒரு கிழவி சொன்னால்கூட அதைப் பரீக்ஷை செய்யத் தயாராயிருக்கிறார்கள். பக்ஷபாத மில்லாமலும், ஆவலுடனும், ஊக்கத்துடனும் பரீக்ஷை செய்தும், அநேகமாக ஒன்றிலாவது கேள்விப்பட்ட குணம் காணப்படவில்லையே என்று பரிதபிக்கிறார்கள். இந்த அதிசயம் எப்படி நேருகிறது என்று கேளுங்கள்!

ஒரு சரக்கைப் பரீக்ஷிக்கிறதென்றால், அந்தச் சரக்கை நம்முடைய வைத்தியத்தில் எப்படி உபயோகப்படுத்துகிறார்களோ, அவ்விதத்தில் அவர்கள் பரீக்ஷிக்கிறதில்லை. அந்தச் சரக்கின் ஜீவாதார சக்தி (*active principle*) என்பதை முதலில் அதினின்று பிரித்தெடுக்கிறார்கள். அவ்விதம் பிரித்தெடுக்கப்பட்ட பாகத்தை மாத்திரமே, மருந்தாகக் கொடுத்து பரீக்ஷை செய்கிறார்கள். இது எதுபோல் என்றால், ஒரு ஸ்திரீயின் முகம் மனதிற்குப் பிடித்தால் அவளுடைய முகத்தை மாத்திரம் விவாகம் செய்துகொள்ளுகிற மாதிரி.

ஆனால் தங்களுடைய சரக்குகளை மேல்நாட்டார் இவ்விதமே பிரித்தெடுக்கிற வழக்கம். சிங்கோனா மரப்பட்டையிலிருந்து கொய்னா, இபிகாக்குயூவனாவிலிருந்து எமெடின், இதுமாதிரி பிரித்தெடுத்துத்தான் வெகு கணக்கான அளவுகளில் மருந்தாக உபயோகிப்பது வழக்கம். ஆனால், இப்பொழுது சொற்பகாலமாக அவர்களுடைய அனுபவத்திலே, எமெடினுடைய குணமும் தாய்ச் சரக்கின் குணமும் சில விஷயங்களில் பேதப்படுகிறதென்றும், கொய்னாவைக் காட்டிலும் முழுப்பட்டையே சில வேளைகளில் அதிகமாகப் பலிக்கிறதென்றும் கண்டுவருகிறார்கள். இருந்தாலும் அவர்களுக்கு வியாபாரத்திலேயே நோக்கம். ஒரு சரக்கின் ஜீவாதார சக்திக்குக் குணமுண்டென்றால் அதைப் பிரித்தெடுத்து, அழகான புட்டிகளில், பொடியாகவோ மாத்திரைகளாகவோ அடைத்து, ஆயிரக்கணக்கில் நல்ல விலைக்கு ஏற்றுமதி செய்து பணம் ஸம்பாதிக்க வேணும்.

நம்முடைய எண்ணங்களோ அவ்விதமல்ல. வேண்டிய ஸமயத்தில் கடையிலிருந்து காலணாவுக்குக் கை நிரம்பப் பட்டையை வாங்கி வருவோம். பட்டை முழுவதையும் (சில வேளைகளில் முறையில் இல்லாது அதிகப்படியாக நம்முடைய கைவிரலையும்!) சேர்த்து இடித்துக்கொள்வோம். சில ஸமயம் இந்த முழுமருந்தின் நல்ல குணத்தை அதிகப்படுத்தவோ, அதன் கெட்ட குணத்தை மாற்றவோ, அதனுடன்கூட இரண்டு சரக்குகளை 'விருத்த

வைத்திய'மாகச் சேர்த்துக் கொள்வோம். இவ்விதம் செய்வதால் கிடைக்கும் பலன், அவர்கள் ஆராய்ச்சிசெய்து எடுக்கும் ஓர் அரைகுறைச் சரக்கில் கிடைக்கவில்லையே என்றால் அது சரக்கினுடைய தப்பிதமா? நாம் உபயோகிக்கிறவிதத்தில் அவர்களும் உபயோகித்துப் பார்த்தால் மாத்திரமே அல்லவோ சரியான பரீக்ஷையாகும்? நம்மைப்போல் கைவிரலை நசுக்கிக் கொள்ள வேண்டாம்; அளவில் ஒரு கணக்கில்லாமல் கண்திட்டமாகவும் கைதிட்டமாகவும் மருந்தை விழுங்கவேண்டாம்; மற்றதெல்லாம் முறைப்படி செய்ய வேண்டாமா?

முன்காலத்தில் ஒரு காட்டரசன் இருந்தான். அவன் புலித்தோலின்மீதே நித்திரை செய்வது வழக்கம். ஆரியர்கள் இலவம் பஞ்சின்மேல் சயனிக்கிறார்களென்றும் அதை மெச்சுகிறார்களென்றும் கேள்விப்பட்டான். தன்னுடைய படுக்கை அறையில் பஞ்சைக் கொண்டுவந்து கொட்டும்படி ஆக்ஞாபித்தான். ஆரியர்கள் பஞ்சைத் துணிக்குள் அடைப்பதாகக் கேள்வி என்று அவனுடைய மந்திரி தெரிவித்தான். "துணி எதற்காக? பஞ்சைக் காட்டிலும் துணி மிருதுவாக இருக்குமா? வேண்டாம்" என்று அரசன் மறுத்துவிட்டான். கொட்டின பஞ்சின்மேல் படுத்தான். காட்டு மனிதனுகையால் அவ்விதமே உறங்கிவிட்டான். காலையில் அந்த அறையிலிருந்து ஓர் அரவம் கிளம்பியது. வேலைக்காரர்கள் ஓடி வந்தார்கள். ஒரு விநோதக்காட்சியைக் கண்டார்கள்! அரசனுடைய கண், மூக்கு, வாய்—எல்லாம் ஒரே பஞ்சு. சிறிதுநேரம் வரையில் வாயிலிருந்து "புகூ" "புகூ" என்ற சப்தம் கிளம்பியதேயொழிய, அரசன் என்ன சொல்லுகிறான் என்று ஒருவருக்கும் விளங்கவில்லை. வாயில் புகுந்த பஞ்சு முழுவதும் வெளிப்பட்ட பிறகுதான், அரசனுடைய அபிப்பிராயத்தில் "ஆரியர்கள் பெரிய முட்டாள்கள்" என்று தெரிய வந்தது!

ஆரியர்களா முட்டாள்கள்?

ஒரு சரக்கின் ஜீவாதார சக்திக்கு யாதொரு வைத்தியகுணமுமில்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் அதனுடைய குணம் வேறு, முழுச்சரக்கின் குணம் வேறு. இதற்குச் சுலபமான திருஷ்டாந்தம், சர்க்கரை. கரும்புரஸத்தின் ஜீவாதார சக்தியான சர்க்கரையை மேலும் மேலும் சுத்தம் செய்து, நல்ல வெளுத்த சர்க்கரையாகவும், அழகான மணல்சீனியாகவும் மேல்நாட்டார் தயார் செய்கிறார்கள். ஆனால், நம்முடைய வயிற்றுக்குள் அழகைக்கண்டு களிப்பதற்கேற்ற கண்களில்லாததனாலோ எந்தக் குற்றத்தினாலோ, அந்தச் சர்க்கரை நமக்கு ஸுகம் அளிக்கவில்லை. அதனால் சில

வியாதிகள் சம்பவிக்கின்றன வென்றும், பிரித்து எடுக்காத முழு வெல்லத்தையாவது பூராச் சர்க்கரையையாவது உபயோகிப்பதே அதைக்காட்டிலும் மிகவும் நலம் என்றும் மேல்நாட்டு விஞ்ஞானி களில் சிலர்தான் நமக்கு இப்பொழுது சொல்லுகிறார்கள்.

முழுச்சரக்குக்கும் அதினின்று பிரித்தெடுத்ததற்கும் குணத் தில் வித்தியாசம் உண்டு என்று ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கை யில், இங்ஙனம் அவர்கள் செய்கிற பரீக்ஷையில் அந்த ஜீவாதார சக்தியினால் குறிப்பிட்ட வியாதி ஸ்வஸ்தமாகவில்லை என்றால், சரக்கே உபயோகமில்லை யென்று ஏற்படுகிறது?

இஷ்டப்பட்ட இடத்தை அடைவதற்காக நாம் கிழக்கே போகும் மார்க்கத்தைக் காட்டினால், கேட்பவர் மேற்கே போகும் ரஸ்தாவிலே சென்று 'அந்த இடம் தென்படவில்லை, ஆகையால் அம்மாதிரி இடமே கிடையாது' என்று சொல்லுவது நியாயமா?

இவ்விஷயத்தைச் சரிப்படுத்த வேண்டுமென்றால், அந்த 'ட்ராபிகல் ஸ்கூல் ஆப் மெடிசின்' என்கிற சாலையிலிருந்து பிரசுரஞ் செய்யப்படும் கிரந்த நூல்களை நம்முடைய பண்டிதர்களும், இதில் அக்கறை கொண்ட மற்றவர்களும், வாங்கிப் பார்த்தால் எந்த விதத்தில் அவர்களுடைய ஆராய்ச்சியைத் திருத்திச் செலுத்தி நன்மையை உண்டாக்கலாமென விளங்கும் என்பது என்னுடைய துணிபு.

இவ்விதம் செய்கிறவரையில் "உங்களுடைய வாத, பித்த, கப ஸம்பிரதாயம் எங்களில் ஒருவருக்கும் புரியவில்லை. உங்களுக்கே புரிகிறதோ என்று சந்தேகமாயிருக்கிறது, உங்களுடைய மருந் துச் சரக்குகளில் ஒரு விசேஷ குணத்தையும் காணோம்" என்று சர்க்காரில் சொல்லுவது ஓர் ஆச்சரியமா?

# படப்பதிவியல்

போ. ஸ்ரீநிவாசன்

---

"இறையை யுணர்த்தும் நூல்பலவாம் எண்ணை யுணர்த்தும்
நூல் பலவாம்
முறையை யுணர்த்தும் நூல் பலவாம் மூவாநெறி சொல்
நூல் பலவாம்
மறையை யுணர்த்தும் நூல் பலவாம் மருந்தை யுணர்த்தும்
நூல் பலவாம்
குறையொன்றில்லாத் தமிழ்க்கிணையாய்க் கூறத்தகுமோர்
மொழியுண்டோ?"

என்ற தமிழ்ப் பெரியாரொருவரின் பாமொழிக்கேற்பத் தமிழ் நாட்டில் பண்டு அரிய நூல்கள் பல உலவிப் பயன்தந்துவந்தன. காலஞ் செல்லச்செல்ல இயற்கைநிலையும் மக்கள் மனநிலையும் அடைந்த மாறுபாட்டையொட்டி இந்நூல்களில் அடங்காத பல கலைகள் இயங்கலாயின. மேலைநாட்டுக் கல்வித் துறையில் இந்தியர் பயிற்சிபெற ஆரம்பித்ததும், பலவித நவீன அறிவியற் கலைகள் இங்கு தலையெடுக்கலாயின. அக்கலைகளில் ஒன்றாகிய படப்பதி வியல் என்பது நம் நாட்டில் வரவேற்கத் தக்கதோர் கல்விச் செல்வமென்பது கூறாமலே யமையும்.

படப்பதிவியல் என்பது இரசாயன முறையில் படங்சோள் தகடுகளிலும், படலங்களிலும் ஒளியின் செயலால் ஓவியங்கள் பதிப்பதைப் பற்றின ஓர் உன்னத கலை. இம் முறையில் செய்யப் படும் ஓவியங்களை உருவப்படங்கள் என்றும், இவைகளைச் செய் விப்பவரை படம்பிடிப்போர் என்றும் வழங்குகிறோம். இப் படப்பதிப்பியலானது முன்னாட்களில் எவ்வெந் நிலைகளினின்று தற்காலத்தில் இவ்வுன்னத நிலையை யடைந்திருக்கிறது என்பதை நோக்குவோம்.

நாம் இப்பொழுது அறிந்திருக்கும்படியான 'ஒளி வரைதல்' விந்தையானது முதன்முதலில் எப்போது கண்டுபிடிக்கப்பட் டது என்பதைத் தீர்மானமாக எளிதில் கூற முடியாது. எனினும், பரிதியின் கதிர்களால் சருமம் கறுப்பதுதான் முதன்முதலில் அறியப்பட்ட செய்தி யென்பதற்கையமில்லை. இது தற்போது படம் பதிவு செய்து அச்சிடும் முறைகளிற் பயன்படும் படப்பதிவு


தாள்கள் ஒளிமுன் கறுப்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மையான செயலே என்பது நோக்கற்பாலது. ஆனால் இத் துறையில் ஈடுபட்டு, சூரியவொளியால் பொருள்கள் கறுப்படையுஞ் செயலை முதன்முதலில் ஆராயப் புகுந்தவர், கார்ல் உவில்ஹேல்ம் ஸ்கீல் என்னும் பெரியாரே. இவர், வெள்ளிப் பசியடு என்னும் இரசாயனப் பொருளை ஒருநாள் வெயிலில் வைத்து அஃதடைந்த நிற வேறுபாடுகளை யெல்லாம் நோக்கினர். ஒளி மேலும்மேலும் அப்பொருளிற் படவே அது முதன்முதலில் மஞ்சளாகவும், பின் பழுப்பு நிறமாகவும், ஊதா நிறமாகவும், கடைசியாகக் கருமை நிறமாகவும் மாறியது. இவர் இதைப்பற்றி மிகுதியும் ஆராய்ந்து, இது சூரியனின் வெண்மை யொளியினாலே உண்டான போதிலும், இவ்வெண்மையொளியிலுள்ள கருஞ்சிவப்புக் கதிரே இவ்வாறு நிறவேறுபாட்டை யுண்டுபண்ணிற்று என்று கண்டுபிடித்தார்.

இவருக்குப் பின்னர் கி. பி. 1782, 1798-ஆம் ஆண்டுகளில் சேனீபியர் என்பாரும், கேளண்ட்ரம் போர்ட் என்பவரும் முறையே இவ்வறிவியற் கலையைப்பற்றி ஆராய்ச்சி நிகழ்த்தினர். 1801-ஆம் ஆண்டிலே சோகான் உவில்ஹேல்ம் ரிட்டர் என்பவர் சூரியனது வெண்மையொளியில் கருஞ்சிவப்புக் கதிருக்கு அப்பால் சில கதிர்கள் இருக்கின்றனவென்றும், அவை நிறமாலைகாட்டியி னுதவியாலுங் கட்புலனுக்குத் தோற்றாவென்றும், எனினும் வெள்ளிப்பசியடு என்னும் இரசாயனப்பொருளைக் கறுக்கச் செய்கின்றனவென்றும் கண்டுபிடித்தனர். இதன்பின் அநேக ஆராய்ச்சியாளர்கள் இவ் விதச் செய்திகளை முனைந்து கற்கத் தொடங்கினர். இதன் பயனாக, 19-ஆம் நூற்றாண்டிலேயே ஒளியின் செயல் நன்குணரப்பட்டது. என்றாலும், இவ் வரிய ஆராய்ச்சிகளின்மூலமாய் முதன்முதலாக படப்பதிவைச் செய்துமுடித்த பெருமை இங்கிலாந்து தேசத் திற்கே யுரியது.

பொருள்களினின்றும் வெளிநோக்கிச் சதா அதிவிரைவாகச் சென்று கொண்டிருப்பதல்லவா ஒளியின் தன்மை? இவ்வொளித் திரள் நம் கண்ணுக்குள் செல்லும்போதுதான் நாம் அப்பொருள் களைக்காண்கிறோம். மேலும், ஒளிக்கதிர்கள் எப்போதும்நேராகவே செல்லுகின்றன. இதனாற்றான் நம் கண்பார்வைக்கு நேரேயுள்ள பொருள்களைத் தவிர மற்றப் பொருள்களை நாம் காண முடிவ தில்லை. இது இவ்வாறாவதால், ஒளிவிடுகின்ற ஒரு பொரு ளிலிருந்து வரும் கதிர்கள் ஒரு நுண்ணிய துவாரத்தின் வழி யாய்ச் சென்றால், சிறிதுதொலைவில், அப்பொருளின் ஒரு சிறு உரு வந் தோன்றும். பகற்பொழுதில் சூரியனுடைய கதிர்கள் தாழ்ந்த

குடிசைகளின் கூரைத் துவாரங்களின்வழியே புகுந்தபின் சூரியனுடைய உருவத்தை* நிலத்தில் தோற்றுவிப்பதும், உச்சிப்பொழுதில் அடர்ந்து விரிந்த மரத்தடியில், இலைகளினிடையே உள்ள சிறுவெளியின் மூலமாய்ச் சூரியனது ஒளிக்கதிர்கள் வந்து நிலத்திடையே சூரியனின் உருவத்தைத் தோற்றுவிப்பதும் நாமெல்லோருங் கண்டறிந்த காட்சியன்றோ?

அட்டையாலான ஒரு சிறு நான்குமூலைச் சதுரப்பெட்டியொன்றில் ஒருபாகத்தில் சதுரமாகக் கீறி யெடுத்துவிட்டு அவ்விடத்தில் வெகு மெல்லிய வெள்ளைக் கடுதாசி யொன்றை




யொட்டி அதற்கெதிரேயுள்ள மற்றப்பக்கத்தில், நடுமையத்தில், ஒரு சிறு துவாரஞ் செய்து, அம்மெல்லிய தாள்மீது பார்வையைச் செலுத்தினுல், அதன்மீது, எதிரேயுள்ள பொருளானது தலைகீழாகவும், புறம் மாறியும், உருவங் குறுகியும் தோன்றும். மேற்கூறிய கருவியையே ஊசிக்கண் படம்பதியம் என்று வழங்குவார்கள். இவ்வித இயற்கைத் தத்துவமே படப்பதிவியல் துறையில் மிகுதியும் பயன்படுகிறது என்று நாம் அறிய வேண்டும். முன்னே கூறப்பட்ட 'ஊசிக்கண் படம்பதிய'த்தில் உண்டாகும் உருவம் ஒருவாறு மங்கியும், கூர்மையில்லாமலும், ஒருநிலைப்படாமலும் தோன்றும். இவ்விதக் குறைகளை நீக்குதற்கே துவாரத்திற்கு முன்னேயாகிலும், பின்னேயாகிலும், கண்ணுடிவில்லை ஒன்று, அல்லது இரண்டு, அமைக்கப்பட்டிருக்கும். வில்லைகளின் நயத்திற்குத் தக்கவாறு தெளிவான, நிலைத்த, கூரிய, சீரிய, உருவம் உண்டாகும். ஆகவே வில்லைகளின் நயத்திற்கேற்ப இத்தகைய கருவிகளின் விலையு மதிகரிக்கும்.

படப்பதிவியலுக்கு இன்றியமையாதது படம்பதியம் என்னுங் கருவியே. படம்பதியங்களிற் பலவிதங்கள் உண்டு. பெட்டி போன்றும், மடக்கிச் சுருக்கிச் சட்டைப் பைக்குள் வைக்கும் படிக்கும் பலவகைகள் உள. ஆனல் அவற்றிலுள்ள முக்கிய பாகங்களில் மாறுபாடில்லை. அவை:—

*சூரியக்கிரஹண காலங்களில் குறைவடைந்த உருவம் நன்கு தெரியும்.

1. இருளிடம். இது மரத்தினுல் பெட்டிவடிவமாகச் செய்யப்பட்டு, உட்பக்கங் கறுப்புச்சாய மேற்றி யிருக்கும்; இன்றேல் நவீன வகைகளிற்போல, நீட்டி மடக்கக்கூடிய கருந் துருத்தியாலாக்கப்பட்டிருப்பினும் இருக்கும். 2. ஒளிக் கதிர்களைச் செம்மைப்படுத்தும் கண்ணுடிவில்லை. இது கருவியின் ஒருபுறத்தில் நடுமத்தியமாக அமைக்கப்பட்டிருக்கும். 3. ஒளிமூடி. இது துவாரத்திற்கருகே அமைக்கப் பட்டிருக்கும். ஒரு பொருளை




யுருவகம் பண்ணும்பொழுது, கருவியை அப்பொருளுக்கெதிரே நிறுத்தி, உள்ளிருக்கும் படங்கொள் தகட்டில், அல்லது படலத்தில், உருவம் பதியுமளவு வெளிச்சத்திற்குத் தக்கபடி சற்றுத் திறந்து பின் மூடுவதே இவ்வொளிமூடியின் தொழிலாகும். 4. இவ்வொளிமூடிக் கெதிரே இருளிடத்திற்குள், படங்கொள் தகடுகள் அல்லது படலச் சுருள், வைப்பதற்கேற்ற இடம் ஒன்றுண்டு.


இக்கருவியால் படத்தைப் பதித்தபின், உள்ளே வைக்கப் பட்டு தம்மீது உருவங்களைப்பற்றிய தகடுகளையும், படலங்களையும் செம்மைப்படுத்த வேண்டும். இனித் தகடுகளைப் பற்றியும், படலங்களைப்பற்றியும், செம்மை செய்யும் முறைகளைப் பற்றியும் விவரமாகக் கூறப்புகின் மிக விரியுமாதலின், ஈண்டு மிகச் சுருக்கமாகவே குறிப்பிடுவேன். முதன்முதலாக உருவம்பதிந்த தகட்டை ஒளிபடாமற் பாதுகாத்து, ஓர் இருளறைக்குட் கொணர வேண்டும். பின், செவ்வொளி பரப்பும் சிறு விளக்கொன்றை யேற்றுதல் வேண்டும். இனி, உருவம் பற்றிய தகட்டை மெல்லிய பஞ்சால் துடைத்துத் தூயதண்ணீரில் துரிதமாக முழுக்கி யெடுத்துச் செம்மை செய்யும் தட்டில் செவ்வனே விட்டு, உருவத்தைப் புலனுக்கும் உரிய நீர்மருந்தையூற்றி வேண்டிய அளவிற்கு அசைத் தசைத்துக் கொண்டிருந்து, கரிய உருவங் கனிந்த காலையில், மீண்டுந் தூயதண்ணீரில் தகட்டை முழுக்கியெடுத்துப் பின் உருவத்தை நிலைப்படுத்தும் மருந்துநீரில் சிறிதுகாலம் அமிழ்த்தி வைத்துப் பின்னும் நெடுநேரந் தூயதண்ணீரில் மிக நன்ருக அலசியெடுத்துத் தூசிபடாத விடத்தில் தகட்டை உலரவைக்க வேண்டும். இவ்வாருக உலர்ந்த தகட்டை உற்று நோக்குவோமாயின், வெள்ளையெல்லாங் கறுப்பாயும், கறுப்பெல்லாம் வெள்ளையாகவும் நிறந்திரிந்த உருவமே காணப்படும். இதனின்றும், படப்

பதிவு தாள்களின்மேல் ஒளியின் செயலால் அச்செடுத்துப் பின்னர் செம்மை செய்யுமுறையால் தெளிவித்த ஒளிவரைவுகளே உருவப் படங்கள் என வெளிவருகின்றன.

இத்தகைய ஒளிவரைவுகளின் பெருமை என்னே! படம் பார்த்து மகிழாதார் பாரினிலில்லையன்றோ? ஒளிவரைவுகளின் மேன்மையைப்பற்றி நான் அதிகங் கூறவேண்டுவதில்லை. தற்காலம் பத்திரிகை யுலகத்திலே ஒளிவரைவுகளில்லாத இடமே கிடையாது. முன்னெல்லாம் வெற்றுப் பாளம் பாளமாக அச்சிட்ட வரலாறுகளெவையும் உள்ளத்தைக் கவரும் பெற்றியில்லாதிருந்தன. ஆனால் இப்போது ஒளிவரைவு படங்கள் கொண்டுள்ள சிறு வரலாறும் பெரிதும் உவக்கப்படுகின்றது. மேலும், கல்வி கற்பிக்கும் முறையிலே படங்கள்தான் சிறந்து விளங்குகின்றன. பலகாலும் படித்துப் படித்து விளங்காதவையெல்லாம், அவற்றிற்கேற்ற படங்களைக் கண்ணுற்ற அந்த நொடியிலே விளங்கிவிடுகின்றன. எழுத்துக்களையே காணும் கண்கள் பூத்துப்போகின்றன. ஆனால் படங்களைப் பார்க்கும் கண்கள் களிகூறுகின்றன. இதனால்தான் படம் பதியங்கள் நன்கு மதிக்கப்பட்டு, படம் பிடிப்போர்க்கு நல்ல பொருளீட்டிக் கொடுக்கின்றன. ஆகவே இக்கலையானது மேலும் மேலும் வளர்ந்துகொண்டே வருகின்றது.

மேனாடுகளில் படப்பதிவியற் கல்விச் சாலைகள் அநேகம் நிறுவப்பட்டிருக்கின்றன. நமது நாட்டிலும் சிறிது சிறிதாக இக்கலை வளர்ந்துவருகிறது. இன்னும் விருத்தியடைவதற்கு அதிக இடமிருக்கிறது. இதனால் மனதிற்கு விளையும் உத்ஸாகமோ சொல்லத்தரமன்று. ஆதலின், கூடியவரை எல்லோருமே, தங்கள் தங்களுக்கேற்றவாறு, ஓய்வு காலங்களில் இவ்வருங் கலையைப் பயின்று வந்தால் நற்பயனுக்கு ஏதுவாகும்.

| | | |
|---|---|---|
| *Photography* | ... | படப்பதிவியல் |
| *Photographic Plate* | ... | படங்கொள் தகடு |
| ,, *Film* | ... | ,, படலம் |
| *Photograph* | .. | படப்பதிவு, ஒளிவரைவு |
| *Photographer* | .. | படம் பிடிப்போன் |
| *Camera* | .. | படம்பதியம் |
| ,, *(Pin-hole)* | .. | ,, (ஊசிக்கண்) |
| *Camera Chamber* | .. | இருளிடம் |
| ,, *Shutter* | ... | ஒளிமூடி |
| *Lens* | ... | வில்லை |
| *Silver Chloride* | ... | வெள்ளிப் பசியடு |
| *Spectroscope* | .. | நிறமாலைகாட்டி |
| *Dark room* | .. | இருளறை |



# விஷ விருக்ஷம்

பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாய

(185-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## பதினெட்டாவது அத்தியாயம்

### திக்கற்றவள்

நள்ளிரவு. மாளிகையில் உள்ளவர் யாவரும் நித்திரையில் ஆழ்ந்து, எங்கும் சந்தடியற்று இருந்தசமயம், குந்தநந்தினி தன் அறையை விட்டு வெளியேறினாள். அரையிலிருந்த ஒரே புடவையுடன் ஸூர்யமுகியின் வீட்டைத் துறந்து அந்நடுநிசியில் பதினேழு வயதான அவ்விளநங்கை திக்கற்று உலகமெனும் பயங்கர ஸமுத்ரத்தில் குதித்தாள். இருட்டோ சொல்ல வேண்டியதில்லை. கொஞ்சம் கொஞ்சமாக மேகங்கள் ஆகாயத்தைக் கப்பிக்கொண்டே வந்தன. இந்தப் பயங்கர இருளில் அவளுக்கு வழி எப்படித் தெரியும்? யார் வழிகாட்டப் போகிறார்கள்? குந்தநந்தினி இதுவரை தத்தர் மாளிகையைத் தாண்டித் தனியாக வெளியே சென்றதில்லை. அவளுக்குத் திக்கு திசை யொன்றும் தெரியாதது வியப்பல்ல. அவள் போவதற்குத்தான் இடம் எங்கே?—மாளிகையின் இருண்ட சாயலில் குந்தம் அலைந்து கொண்டிருந்தாள். நகேந்த்ரனுடைய சயன அறையிலிருந்து சற்றுவெளிச்சம் தெரியக்கூடாதாவென்று எண்ணி அவள் மனது அலைந்தது—புண்பட்ட அவள் சித்தத்திற்கு அது எவ்வளவோ சாந்தியை அளிக்குமே!

நகேந்த்ரனுடைய படுக்கையறையைக் குந்தநந்தினிக்கு நன்றாகத் தெரியும். திரும்பித் திரும்பி அதையே அவள் நோக்கிக்கொண்டிருந்தாள். சாளரங்களின் மூலமாக தீபவெளிச்சம் வந்துகொண்டிருந்தது. ஆனால்—துரதிர்ஷ்டம்—இலைக்கதவுகள் மாத்திரமே திறக்கப்பட்டிருந்தன. உள்ளே இருக்கும் தன் மனதுக்கினிய வஸ்துவை அவளால் பூர்ணமாகக் காணமுடியவில்லை. வெட்டுக்கிளிகள் தீபஒளியைத் தேடிக் கண்ணாடிக் கதவின்மீது வந்து மோதிக்கொண்டன. குந்தநந்தினியின் இளகிய நெஞ்சம் இந்த சிறிய பூச்சிகளுக்காக வேதனைப்பட்டது.

குந்தம் பித்துப் பிடித்தவள் மாதிரி சாளரத்தையே நோக்கியபடி வெகுநேரம் இருந்தாள். அவ்விடத்தை விட்டு அவளால் அகல

முடியவில்லை. நகேந்த்ரனுடைய சயன அறைக்கு நேர் எதிரே ஒரு பெரிய சவுக்குமரம் இருந்தது. குந்தம் அதன்கீழ் நின்ற வண்ணம் சாளரத்தைக் கூர்ந்து கவனித்தாள். பாதிராத்திரி; மைச் சிமிழ் இருட்டு. மரங்களில் எங்கு பார்த்தாலும் துடிக்கும் மின் மினிக்கூட்டம். வானில் ஒரு கருமுகிலைத் துரத்திக்கொண்டு ஓடும் இன்னொரு கார்மேகம். அதன் பின் இன்னும் மந்தை மந்தை யாகச் செல்லும் மப்புகள். விண்மீன்கள் இரண்டொன்று மினுக் மினுக்கென்று மேகஅலையில் அமிழ்ந்தும் எழுந்தும் தெரிந்தன. வீட்டைச் சுற்றியுள்ள சவுக்குமரங்கள், மேகம்திரண்ட வானை அளாவித் தலைவிரித்து ஆடும் நிசாசரப் பேய்கள் மாதிரி தோன் றின. அவைகள் அசைவதனல் உண்டாகும் சப்தம் பலபூதங்கள் ஒன்றுகூடி பைசாசமொழியில் மெள்ளப் பேசிக்கொள்வதுபோல் இருந்தது. அந்த காடாந்தகாரத்தைக் கண்டு அவைகளும் வெருண்டுவிட்டன போலும். மாளிகையில் எங்கோ ஒரு சாள ரத்தின் கதவு காற்றில் அறைபட்டு ‘சடேல்’ என்று மூடிக்கொள் ளும் பேரரவம். ஒரு கறுப்பு ஆந்தை பயங்கரமாகக் கூவிக் கொண்டே கூரைமேல் பறந்து சென்றது. வெகுதூரத்தில் நாய் கள் குரைத்துக்கொண்டே எதையோ துரத்திச் செல்லும் இரைச் சல். அடிக்கடி சவுக்கு மரங்களினின்று முள்போன்ற காய்கள் கீழே விழுந்து கொண்டிருந்தன. தென்னை மரங்களின் ஓலைகள் காற்றில் ‘டர்—ர்ர்—’ என்று அடித்துக்கொள்ளும் ஓசை. தொலைவிலுள்ள பனந்தோப்பின் சலசலப்பு நன்ருகக் கேட்டது. நகேந்த்ரனுடைய அறையின் சாளரத்தின் வழியாக வெளிச்சம் இன்னும் வந்துகொண் டிருந்தது. கணக்கற்ற பூச்சிகள் ஒளியைக் கண்டு மயங்கி பறந்து வந்துகொண்டிருந்தன. குந்தநந்தினியும் அத்திக்கையே கவனித் துக்கொண்டிருந்தாள்.

சாளரத்தின் ஒரு கதவு மெள்ளத் திறக்கப்பட்டது. ஒரு மனிதனுடைய உருவம் ஒளித்திரைமுன் வந்து நின்றது. அது நகேந்த்ரனே! — நகேந்த்ரா! இருண்ட சவுக்கு மரத்தின்கீழ் ஒரு குந்தபுஷ்பம் இருப்பது உனக்குத் தெரியவில்லையா? நீ கத வைத் திறக்கும்போது அவளுடைய ஹிருதயம் படபட வென்று அடித்துக்கொண்டதே, அது உன் செவிக்குக் கேட்டதா? . . ஒரு வேளை உடனே சாளரத்தை மூடிவிட்டு மறைந்து போவாயோ வென்ற சங்கையோ குந்தத்திற்கு? உன்னைப் பார்க்கும் பாக்கியம் அடைந்தும், உள்ளூற அவள் ஸுகத்தைப் பெறவில்லை. . . தீபத் தின் முன்பாக நின்ருல் உன் மேனி நன்ருக விளங்கவில்லை. ஒரு தரம் தீபத்தின் பின்னல் சென்று நில்லேன் . . ஓ துங்கிப்போகாதே. குந்தம் உனக்காக வாடுகிருள். நில்லேன் . . . . அந்தக் குளத்தின்

தெளிந்த சீதஜலம் உன் ஞாபகத்தை விட்டுப் போய்விட்டதா? அதில் விழுந்த நக்ஷத்திரபிம்பம், .... அதற்குப்பின் நடந்தவை யாவும் உன் ஞாபகத்திற்கு வரவில்லையா? இதற்குள் மறந்துவிட்டாயா என்ன?............இரு....அதோ ஆந்தை கூப்பிடுகிறது. நீ இன்னும் சற்று நாழிகைக்கெல்லாம் கதவை மூடிக்கொண்டு போய்விடுவாய். குந்தம் இந்த இருளில் மிரண்டு சாகவேண்டியதுதான்...அதோ கண் கூசும்படியான மின்னல்—நீ போகாதே..... இங்கே குந்தம் பயப்படுகிறாள். அவள் உடல் சிலிர்ப்பது உனக்கு எப்படித் தெரியும்? அதோ இருண்ட மேகங்கள் தலைதெறிக்க ஓடுகின்றன. சற்றுநாழிகைக்கெல்லாம் பெருமழை கொட்டப்போகிறது. குந்தநந்தினிக்குப் புகலிடம் கொடுப்பார் யார்?..............பார், நீ கதவைத் திறந்திருக்கிறாய்.....கும்பல் கும்பலாகப் பூச்சிகள் உன் அறையில் வந்து தீக்கு இரையாகின்றன. 'ஆஹா! இந்தப் பூச்சிகள் தான் என்ன பாக்கியம் பண்ணியிருக்கின்றன' என்று குந்தம் எண்ணுகிறாள். பூச்சிகள் பொசுங்கிச் சாகின்றன. அந்த கதி தனக்கும் வராதா என்றுதான் குந்தமும் வேண்டுகிறாள்! 'என் மனம் துயரப்பட்டுப் பொசுங்குகிறதே யொழிய நான் மட்டும் ஏனோ சாகவில்லை?' என்றுதான் நெக்குருகுகிறாள் குந்தம்.

சாளரத்தின் கதவை நகேந்த்ரன் மூடிவிட்டான்—அட கடின சித்தனே! இதனால் நீ நஷ்டப்படுவது என்னவோ? நீ ராத்திரியில் விழித்திருக்க வேண்டுமென்று என்ன தலையெழுத்து?....நீ போய் ஸுகமாகப் படுத்துக்கொள்.. உன் உடம்பு கெட்டுவிடும். இந்த அநாதைக் குந்தம் செத்தால் சாகட்டும். 'என்னால் உனக்கு ஏன் வீண் வேதனை'—இதையே குந்தம் சொல்லுகிறாள்.

சற்றுமுன் ஒளிவிட்ட சாளரம் இப்போது இருளடைந்து தென்பட்டது. அதைப் பார்த்துக் கண்ணீர்விட்டாள் குந்தம். அவள் எழுந்து எதிரே கண்ணில்பட்ட வழியைப் பிடித்துக்கொண்டு சென்றாள்..எங்கு சென்றாள்?..நிசாசரப் பேய்கள் சவுக்குமரங்களிலிருந்து 'உய்..உய்' என்ற பயங்கர சப்தத்துடன் "எங்கு போகிறாய் பெண்ணே?" என்று வினவின. பனைமரங்கள் சலசலவென்று சப்தம் செய்து "எங்கேயம்மா போகிறாய் இந்த இருட்டில்?" என்று கேட்டன. ஆந்தை ஒன்று "குந்தம், போகிறாயா?" என்று கூவிற்று. தூரத்தில் மறையும் மாளிகையின் பெரிய சாளரங்கள் "சரி, நீ போ..உனக்கு இனி நகேந்த்ரனைக் காட்டமாட்டோம்" என்றன. குந்தநந்தினி—உலகமே அறியாத அபலையான குந்தம்—அத்திசையைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றாள்.

போனாள்..போனாள்.. போய்க்கொண்டே இருந்தாள் குந்தம். ஆகாயத்தில் மேகங்கள் உருண்டுகொண்டே இருந்தன. எல்லாம் ஓர் இடத்தில் கவிழ்ந்து ஆகாயத்தைப் பின்னும் கருப்பாகச் செய்தன..மின்னல் கண்ணைப் பறித்தது. மின்னலுக்குப் பின் மின்னல். காற்று உறுமிற்று; மேகம் முழங்கியது; காற்றும் மேகமும் சேர்ந்து வையம் நடுங்கக் கர்ஜித்தன. இருள் அரக்கன் வானில் எங்கும் தோன்றி பயமுறுத்தினான்—குந்தம்! நீ எங்கே போய்ச் சேரப்போகிறாய்?

புயல் எழுந்தது. முதலில் அது வரும் சப்தம்; அப்புறம் புழுதியின் ஆர்ப்பாட்டம்......அதற்குப் பிறகு மரக்கிளைகளைச் சின்னபின்னமாக்கி ஸாக்ஷாத் வாயுபகவானே வந்துவிட்டார். சடசட....படபட உச், உச்..ஜோ..வென்று வானம் கிழிந்து வரும் மழைத்தாரை —குந்தம், இந்த ஸமயத்தில் நீ எப்படிப் போகப்போகிறாய்?

பளிச்சென்று ஒரு மின்னல் வெட்டிற்று. அந்த வெளிச்சத்தில் ஒரு சிறு குடில் அருகில் இருப்பதை உணர்ந்தாள் குந்தம். வீட்டின் சுவர்கள் யாவும் களிமண்ணால் ஆனவை. முன்பக்கம் ஒரு சிறு தாழ்வாரம் இறக்கப்பட்டிருந்தது. குந்தநந்தினி சண்டமாருதத்தினின்று பிழைக்க கூரையின் நிழலில் வந்து தங்கினாள். வீட்டின் கதவின்மேல் சாய்ந்து அவள் நிற்கவே, அது சப்தம் செய்தது.

உள்ளிருக்கும் வீட்டுக்காரியின் செவிக்கு இது கேட்டது. முதலில் காற்றேவென்று சும்மா இருந்துவிட்டாள். ஆனால் காலடியில் உறங்கும் நாய் குரைக்க ஆரம்பிக்கவே அவளுக்குத் திகில் மூண்டது. சற்று நடுக்கத்துடனேயே கதவைத் திறந்து பார்க்கும்போது ஒரு ஸ்திரீ நின்றிருப்பது தெரிந்தது.

வீட்டுக்காரி "யாரது?" என்று வினவினாள்.

குந்தம் பதில் சொல்லவில்லை.

"யாரடீ நீ? நான் கேட்கிறேனே..?"

"மழைக்குப் பயந்து நின்று கொண்டிருக்கிறேன்" என்றாள் குந்தம்.

வீட்டுக்காரி குந்தத்தை ஊன்றிக் கவனித்தவளாய் "என்ன.. என்ன? யார் நீ?" என்றாள்.

"அம்மா, மழைக்காக இங்கு நான் வந்து தங்கினேன்."

"இந்தக் குரலை எங்கோ கேட்டிருக்கிறேன்....ஆமாம். ஞாபகம் வருகிறது.. அம்மா, நீ உள்ளே வா.."

வீட்டுக்காரி, குந்தநந்தினியை உள்ளே அழைத்துச் சென்று காடவிளக்கை ஏற்றினுள். அப்போது குந்தம் தன்னெதிரே நிற்பது ஹீராவென்று தெரிந்துகொண்டாள்.

ஹீரா, "புரிந்துவிட்டது.... எஜமானியின் வசவைத் தாளாமல் ஓடிவந்துவிட்டாய். பயப்படாதே அம்மா! நீ இங்கிருப்பதை நான் யாரிடமும் சொல்லமாட்டேன். இங்கேயே நீ எத்தனை நாளானுலும் தங்கியிரு" என்ருள்.

## பத்தொன்பதாவது அத்தியாயம்

### ஹீராவின் கோபம்

ஹீராவின் வீட்டைச் சுற்றிலும் வேலி. உள்ளே சுப்ரமான இரண்டு அறைகள். தரையில் சிக்குத்தாமரை, ஹம்ஸ பக்ஷி, தேவதை, முதலிய உருவங்களில் இழைகோலங்கள் வரையப்பட்டிருந்தன. பச்சுப்பச்சென்று சாணத்தால் மெழுகப்பட்ட முற்றம். அதன் ஒரு மூலையில் காய்கறிச் செடிகளும், மல்லிகைக்கொடி படர்ந்த பந்தலும், அதன்கீழ் காசித்தும்பையும், ரோஜாச் செடியும் இருந்தன. மாளிகையைச் சேர்ந்த தோட்டக்காரனே இவைகளைக் கொண்டுவந்து இங்கு வளர வைத்தவன். ஹீரா விரும்பினுல் அவன் தோட்டத்தையேகூட கொண்டுவந்துவிடுவான். தோட்டக்காரனுக்கு இதனுல் என்ன லாபம் என்று கேட்கிறீர்களா? ஹீரா தன் கையாலேயே மடித்த தாம்பூலத்தை அவனுக்குக் கொடுப்பது வழக்கம். கருப்பு வளையல்கள் அணிந்த ஹீராவின் கரம் ஹுக்காவை அவனிடம் நீட்டும்போது, தோட்டக்காரன் அந்த இன்பமே குடிகொண்டவனுய் வீட்டிற்குச் சென்று இரவு முழுவதும் அவளைப்பற்றியே கனவு காண்பான்.

அந்த வீட்டில் வசிப்பவர்கள் ஹீராவும் அவள் பாட்டியுமே. ஓர் அறையில் கிழவியும் மற்றென்றில் ஹீராவும் படுப்பது வழக்கம். குந்தநந்தினிக்கு அவள் தன் அறையிலேயே இடம் கொடுத்துப் படுக்கச் சொன்னுள். குந்தம் படுத்துக்கொண்டாளே யொழிய தூங்கவே இல்லை. அடுத்த தினமும் அவளைத் தன்னிடத்திலேயே இருக்கும்படி செய்தாள் ஹீரா. "இரண்டொரு நாள் இருந்துவிட்டுப் போ. உனக்கு வருத்தம் சற்று ஆறினதும் நீ எங்குவேண்டுமானுலும் போ, அம்மா" என்ருள். குந்தம் அதற்குச் சம்மதித்தாள். அவள் கோரினபடியே ஹீரா அவளை மறைத்து வைத்தாள். கிழவி பார்க்காதபடி அறைக்கதவையும் பூட்டுப் போட்டு மூடிவிட்டாள். பிறகு தன் கார்யத்தைக் கவனிக்க மாளிகைக்குப் புறப்பட்டாள். உச்சி வேளையில் கிழவி குளிப்பதற்

காக வெளியே சென்றதும், ஹீரா அங்கு வந்து குந்தநந்தினிக்கு ஸ்நான .ஆகாராதிகளைச் செய்வித்தாள். மறுபடியும் பூட்டிவிட்டுத் தன் அலுவலாகச் சென்றுள். காரியங்களைப் பார்த்துக்கொண்டு திரும்பி வந்ததும் ஹீரா குந்தநந்தினியுடன் அதே அறையில் படுக்கை கொண்டாள்.

'கட கட, கிட் கிட்' என்று வெளியே யாரோ கதவுத் தாழ்ப்பாளை அசைக்கும் சப்தம் கேட்டது. ஹீரா வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருந்து ஆச்சர்யபரவசமாய் நின்றுள். ஒருவனே இந்தமாதிரி கதவை அசைப்பது வழக்கம்—பாபுவின் தோட்டக்காரன். ஆனல் இவ்வளவு மிருதுவாக அசைக்கமாட்டானே அவன்? அவன் தட்டும்போது 'கட் கட், கட கட' என்ற கடூரமான சப்தம்தானே எழும்பும்? ஆனல் இப்போது வரும் ஓசையோ வேறுவிதமாக இருக்கிறதே? அது 'கிட் கிட் கிடி..ஹீரா என் கண்ணுட்டி. டிணி டிணி..டிணி டிணி..ஹீராவே, என் கண்மணி' என்று மெதுவாகக்கூறுவது போலிருந்தது. மறுபடியும் ஹீரா மெள்ள எழுந்து கதவைத் திறந்து பார்த்தபோது ஒரு ஸ்திரீ வெளியே நின்றுகொண்டிருந்தாள். அடுத்த க்ஷணமே ஹீராவின் வாயிலிருந்து, "அடி நீயா, என் மருக்கொழுந்தே!" என்ற பேச்சுக் கிளம்பிற்று.

ஹீராவின் மருக்கொழுந்து யாரென்றுல் இடைச்சி மாலதி. அவள் இருப்பிடம் தேவீபுரம். தேவேந்த்ரபாபுவின் மாளிகைக்கு அருகாமையிலேயே வசித்து வந்தாள். அவள் ஒரு வேடிக்கையான மனுஷி. வயது முப்பதிற்குக் கிட்டத்தட்ட இருக்கும். நாஸூக்கான புடவை உடுத்தியிருந்தாள். கையில் அடுக்கு வளையல்கள். உதட்டில் தாம்பூலக்கறை. சற்று வெளிர் மாநிறமானவள். வெய்யிலினுல் கன்றிய முகம். மூக்குச் சற்றுச் சப்பை. மூக்குத்தாள் உரிஞ்சின அடையாளம் அப்படியே இருந்தது. நெற்றியில் பச்சை குத்தியிருந்தாள். மாலதி தேவேந்த்ரனுடைய வேலைக்காரி அல்ல; அவனை அண்டினவளும் அல்ல. ஆனல் அவனுக்கு அநேக விஷயங்களில் அனுகூலமானவள். இதரர்களால் செய்ய முடியாத ஒரு கார்யத்தை அவள் செய்து முடிப்பதில் வல்லவள். மாலதியைப் பார்த்ததும் சாமர்த்தியக்காரி ஹீரா, "அடி என் கற்பகமே! ஏதாவது கார்யம் இருந்தால்தான் நீ இங்கே வருவாய். வந்த காரியம் என்ன சொல்லு?" என்றுள்.

அந்தக் 'கற்பக'மும் தாழ்ந்தகுரலில் "உன்னை தேவேந்த்ரன் அழைத்துவரச் சொன்னுன்" என்றுள்.

ஹீரா சிரித்துக் கொண்டே "எனக்கு இதில் ஒரு பங்கும் இல்லையே?" என்று கேட்டாள்.

மாலதி ஹீராவை ஒரு தட்டுத் தட்டி "என்னடீ உளறுகிறாய்? பாவம், உனக்கு ஒன்றும் தெரியாது, வா..எழுந்திரு" என்றாள். ஹீராவும் மாலதி இதைத்தான் சொல்லப்போகிறாள் என்று முன் பாகவே தெரிந்துகொண்டாள். அவள் விரும்பியதும் அதுவே.

"நான் பாபுவீட்டிற்குப் போகவேண்டியிருக்கிறது. எனக்காக ஆள் வந்து காத்திருக்கிறான். என்ன சமாச்சாரமோ தெரியவில்லை. நீ இங்கேயே இரு......நான் இதோ வந்து விடுகிறேன்" என்று ஹீரா உள்ளே சென்று குந்தத்தைப் பார்த்துக் கூறி, அறையில் எரியும் விளக்கை ஊதி அணைத்துவிட்டாள். அந்த அந்தகாரத் தில் எப்படியோ ஹீரா நொடிப்பொழுதில் அழகான ஒரு புடவை யை உடுத்திக்கொண்டு மாலதியுடன் வெளிக்கிளம்பினாள்.

இரு ஸகிகளும்,

*'மனோர் மதன் ரதன் பேலே யதன் கரி தாய்
ஸாகர் சேஞ்சே துல்போ நாகர பதன் கரே காய்'

என்று உல்லாஸமாகப் பாடிக்கொண்டே வழி நடக்கலாயினர்.

தேவேந்த்ரனுடைய கேளீக்ருஹத்திற்கு ஹீராமட்டும் சென் றாள். அன்று தேவேந்த்ரன் மதுவில் ஆழ்ந்திருந்தாலும் புத்திஸ்வாதீனத்துடன் இருந்தான். ஹீராவுடன் அவன் அப் போது ஒழுங்கீனமாய் ஸம்பாஷிக்கவில்லை. "ஹீரா, முன்னே நான் பூர்ணமான குடிஅவஸ்தையில் இருந்ததனால் நீ வந்ததன் காரணத்தை நான் அறியவில்லை. நீ வந்த அலுவல் என்னவோ அதைத் தெரிந்துகொள்ள வேண்டியே உன்னை இங்கு வரவழைத் தேன்" என்றான் தேவேந்த்ரன்.

ஹீரா, "உங்களைப் பார்க்கலாமென்றுதான் நான் வந்தேன்" என்றாள். தேவேந்த்ரன் சிரித்தான். "நீ ரொம்ப புத்திசாலி. உன்னை வேலையாளாகப் பெற்றது நகேந்த்ரனுடைய அதிர்ஷ்ட வசமே. வைஷ்ணவிவேஷம் போட்டுக்கொண்டுவந்த ஆஸாமி யாரென்று அறியத்தானே நீ வந்தாய்? என் மனதில் உள்ளதைத் தெரிந்துகொள்ள நீ ஆவல் கொண்டிருக்கிறாய் போலும்! உன் சூக்ஷ்ம புத்திக்கு இதன் மர்மம் புரியாதிருக்குமா? நானும் உன்னிடத்தில் அதை மறைக்கமாட்டேன். நீ உன் யஜமான னுடைய கட்டளையை நிறைவேற்றிப் பரிசும் பெற்றிருப்பாய், ஸந்தேகமே இல்லை. இப்போது நான் சொல்லும் ஏவலை நீ

* மனதிற்குகந்த ரத்தினத்தைக் கண்டெடுத்தால் அதை அருமையாகப் போற்றிடுவேன்; கடலில் மறைந்திருந்தாலும் நீரை இரைத்துக் கண்ணு ளனைப் பெற்றிடுவேன், நெறி தவறின பதிதை யாகிவிடினும் சரி.

செய்து முடித்தால் என்னிடத்திலும் நீ ஏராளமாக ஸன்மானம் பெறுவாய்.....ஹீரா!" என்றான்.

பாபசிந்தனையில் ஊறும் மனிதனுடைய ஒவ்வொரு வசனத்தையும், மனப்போக்கையும் எழுதுவதென்றால் மிகவும் கஷ்டமான காரியம். பணத்தாசை காட்டி ஹீராவை தேவேந்த்ரன் மயக்கி, குந்தத்தைத் தனக்கு விற்றுவிடும்படி கேட்டான். திடீரென்று சினம்பொங்கி எழுந்தது ஹீராவுக்கு. அவளுடைய பத்ம நேத்திரங்களினின்று ரத்தம் தெறித்தது. காதில் குபுகுபுவென்று ஆவி பரவிச் சென்றது. அவள் எழுந்து நின்று, "யோக்யரே! என்னை வெறும் வேலைக்காரி என்றெண்ணி யல்லவோ இந்த அடாத வார்த்தைகளைப் பேசினீர். இதற்குப் பதில் என்னால் பகர முடியாது. இதோ நேரே சென்று என் யஜமானனிடம் தெரிவித்துவிடுகிறேன் உம்முடைய பாதகச் சூழ்ச்சிகளை. அவர் அதற்குத் தகுந்த பரிஹாரம் செய்வார்" எனப் படபடவென்று கூறிவிட்டு வெளியே வந்தாள்.

தேவேந்த்ரன் சிறிதுநேரம்வரை திக்பிரமை பிடித்தவனாய்த் தான் எண்ணினதெல்லாம் மண்ணாகிவிட்டதனால் மௌனமாக உட்கார்ந்திருந்தான். தன்னைச் சமாளித்துக்கொள்ள இரண்டு டம்ப்ளர் பிராந்தியை வயிற்றில் விட்டான். உடனே பழைய உணர்ச்சியை மீண்டும் பெற்றுப் பாடத் தொடங்கினான்:

*'எஸேசிலோ பக்ணு கரு, பா கோயாலே ஜாப்ணு கேதே'

## இருபதாவது அத்தியாயம்

### ஹீராவின் த்வேஷம்

காலையில் எழுந்திருந்ததும் ஹீரா தன் வேலையைக் கவனிக்க மாளிகைக்குப் புறப்பட்டாள். குந்தம் காணாமல் போய்விட்டதைப்பற்றி மாளிகையில் ஒரே அமளிகுமளி. அவள் மனமுடைந்து வீட்டைவிட்டு அகன்றாள் என்று வீட்டிலுள்ளவர் யாவர்க்கும் தெரியும். ஆனால் இதைப்பற்றிய செய்தி ஊரில் பூர்ணமாக இன்னும் பரவவில்லை. குந்தம் போய்விட்டது நகேந்த்ரனுக்கும் தெரியவந்தது. அவள் எதற்காகப் போய்விட்டாள் என்பதை யாருமே அவனுக்குச் சொல்லவில்லை. "நான் எந்த ஸமயத்திலாவது குந்தநந்தினியை வித்தியாஸமாகச் சொல்லிவிட்டேனோ? அது தாளாமல் இனி அரைக்கணமும் இந்த இடத்தில் நிற்கக்கூடாதென்று போய்விட்டாளோ?" என்று

*முன்னே வந்தது மலட்டுப் பசு; அதன் பின்னே சாப்பிட வந்தான் இடையன் ஜாப்ணு.

நகேந்த்ரனுடைய மனது விசாரத்தில் ஆழ்ந்தது. "அவளுக்குப் போக்கிடம் ஏது? கமலமணி ஒருத்திதானே அவளுக்குப் பரிசய மானவள்; அவளையும் விட்டு எங்கு சென்றிருப்பாள்?"—நகேந்த்ர னுடைய முகம் இருளடைந்தது. அவனை நெருங்க யாருமே துணிவுகொள்ளவில்லை. இது ஸூர்யமுகியின் தவறோ வென்று கூட அவன் விசாரித்துத் தெரிந்துகொள்ள வில்லை. ஆனால் அவன் அவளுடன் பேசுவதைமட்டும் நிறுத்திவிட்டான். ஊர் ஊராய், கிராமம் கிராமமாய், குந்தநந்தினியைத் தேட ஆட்கள் சென்றனர்.

கோபத்தினாலோ, பொறாமையினாலோ, ஸூர்யமுகி தாக்ஷண் யம் பாராமல் குந்தத்தை வைது துரத்திவிட்டாள். ஆனால் அது இவ்வளவு விபரீதத்தை விளைவிக்கும் என்று அவள் எண்ணவே இல்லை; பயத்திற்கு ஆளானாள். குந்தநந்தினிக்கும் தேவேந்த்ரனுக்கும் உள்ள சம்பந்தம் வெறும் கட்டுக்கதையே என்று கமலமணி அவளிடம் கூறியிருந்தும் ஸூர்யமுகி பதட்ட மாக இவ்வாறு செய்துவிட்டாள். அப்படி தேவேந்த்ரனுடன் அவளுக்கு நட்பு இருந்திருக்கும் பக்ஷத்தில், அது எப்படியாவது வெட்டவெளிச்சமாகி யிருக்குமே! குந்தநந்தினியின் மாசற்ற ஸ்வபாவம் இம்மாதிரி அவகேட்டிற்கு இடம் தரவே தராது. தேவேந்திரன் ஸ்ருஷ்டித்த இந்த அபவாதத்திற்குக் குந்தம் எப்ப டிப் பொறுப்பாளியாவாள்? ஸூர்யமுகியின் மனதில் இந்த சம் சயங்கள் யாவும் ஒவ்வொன்றாகக் கிளம்பிவந்தன. இதனால் அவ ளுக்கு ஏற்பட்ட மனோவேதனையும் பன்மடங்கு விருத்தி அடைந் தது. போதாக்குறைக்குத் தன் புருஷனின் பராமுகம் அவள் உள் ளத்தை ஊடுறுவி வருத்தியது. குந்தத்தை இதற்காக ஆயிரம் தடவை திரஸ்கரித்தாள். தன்னையும் 'என் விதியே!' என்று நொந்து கொண்டாள். குந்தத்தைக் கண்டுபிடிக்க அவளும் ஆட்களை ஏவினாள்.

கமலமணி கல்கத்தாவிற்குப் பிரயாணமாவது குந்தநந்தினி காணாமற் போனதை முன்னிட்டு நின்றுவிட்டது. அந்தப் பெண் கள்நாயகம் யாரையும் குறைகூறவில்லை. அவள் தன் கண்ட ஹாரத்தைக் கழற்றி, வீட்டு வேலையாட்களின்முன் காண்பித்து, "குந்தத்தைக் கண்டுபிடித்து அழைத்துவருபவர்களுக்கு இந்த மாலை இனாம்" என்றாள்.

அந்தப்பாவி ஹீரா எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு நின்றாளே யொழிய வாயே திறக்கவில்லை. ஹாரத்தைக் கண்ணுற்ற தும் கொஞ்சம் சபலம் அவளுக்கு உண்டாயிற்று. ஆனால் அதை

அடக்கிக் கொண்டாள். மத்தியான வேளை நெருங்கியதும் ஹீரா சரசரவென்று தன் வீட்டை அடைந்து, கிழவி ஸ்நாநத்திற்குச் சென்றிருந்த சமயம் குந்தநந்தினிக்கு ஆஹாரம் செய்வித்து மாளிகைக்குத் திரும்பிவிட்டாள். மறுபடியும் இரவில்தான் அவள் வந்து குந்தநந்தினியுடன் அதே அறையில் படுத்துக் கொண்டாள். ஆனால் கண்ணிமை இருவருக்கும் மூடவே இல்லை. அன்று முழுவதும் குந்தம் தன் மனோவேதனையினால் துயிலற்றுப் புரண்டு கொண்டிருந்தாள். ஹீராவும் தன் ஸுக துக்கங்களை நினைந்தபடி கண் அயராதிருந்தாள். அவளுடைய மனதில் தோன்றியதையெல்லாம் எப்படி நாம் ஆராய்ந்தறிய முடியும்? அது மிகவும் ரகஸியமானது. சொல்லுதற்கு இயலாதது.

அடி ஹீரா! சீச்சீ..உன்னை அழகாகத்தான் பிரமன் படைத்திருக்கிறான். இந்த இளம் வயதில் உன் ஹ்ருதயத்தில் ஏன் இவ்வளவு கவடு வைத்திருக்கிறாய்? ஏன், சொல்லு? ஸ்ருஷ்டி கர்த்தா உனக்கு இந்த வயதில் தீராத்துயரை இழைத்தது பற்றியா?—ஹீராவை ஸூர்யமுகியின் ஸ்தானத்தில் வைத்தால் இந்தக் கபடம் அவள் நெஞ்சை விட்டு நீங்குமா? ஹீராவைக் கேட்டால் என்ன சொல்லுவாள்? "நீங்காது" என்றுதான். ஹீராவின் இடத்தை ஹீராவைத் தவிர்த்து யார் வஹிக்கமுடியும்? ஹீரா ஹீராதான். தீயகுணங்கள் இயற்கையில் உண்டாகின்றன என்கிறார்கள் உலகத்தவர். "இந்தப்பாழும் உலகத்தவரின் தொந்தரவு தாளாமல்தான் நான் தீய வழியில் புகுந்தேன்" என்று தீயோன் விளம்புகிறான். "ஐயா! எங்கேயாவது ஐந்து ஏழாகுமா?" என்று கேட்கிறார்கள் ஜகத்தோர். "ஸ்வாமி! நான் ஏழு ஆவதற்கு என்ன தடை? கூட இரண்டு என்னுடன் சேர்த்தால் ஏழாகிவிடுகிறேன்" என்கிறது ஐந்து.

ஹீராவின் மனப்போக்கும் இதே தோரணையில் போய்க் கொண்டிருந்தது. அவள் மனதில் சென்ற எண்ணங்கள்தான் என்ன? 'இப்போது என்ன செய்யலாம்? குந்தத்தை தத்தர் மாளிகையில் கொண்டு சேர்த்துவிட்டால் கட்டாயம் கமலமணியின் ஹாரத்தைப் பெறலாம். வீட்டு எஜமானியும் ஏதாவது கொடுப்பாள். பாபுவும் சும்மாவா இருப்பார்?..இல்லை, குந்தத்தை அந்த தூர்த்தன் கையில் கொடுத்துவிட்டால் ரொக்கமாய் ரூபாய் வரும். —சே, இந்தப் பிராணன் இருக்கும் வரை அம்மாதிரி பாபக்ருத்யத்தில் தலையிடமாட்டேன். நானும் ஒரு பெண்ஜன்மம்தானே! மஹாபாபம்!...ஆனால் தேவேந்த்ரனுடைய கண்களுக்கு இந்தக் குந்தம்தான் அழகியோ? எனக்கு எப்படி அவளுடைய அந்தம் வரும், அரிசிக் கஞ்சி குடிப்பவளுக்கு? எனக்கும் நல்ல உணவு

கள் கிடைத்தால், நானும் நல்ல ஆடைகளைக் கட்டிக் கொண்டால், துரும்போடு துரும்பு எடுத்துப்போடாமல், உடம்பு நலுங்காம லிருந்தால், நானும்தான் படத்தில் எழுதியிருக்கும் ரூபவதி ராணி யாக இருப்பேன். நான் மூக்கால் அழுது கதறினாலும் என்னைப் பார்த்து இந்த தேவேந்த்ரன் ஆசை கொள்ளப்போகிறானா? பாசி யிராதுபோனால் பத்மம்பூக்கவே பூக்காதோ? குந்தம் இராவிட்டால் தேவேந்த்ரன் வேறுயாரையும் இச்சிக்கமாட்டானா?..உம்..அவர வர்கள் விதிப்படிதான் எல்லாம் நடக்கிறது. அதற்காக நான் சினந்துகொள்வானேன்? என்னுடைய தலையெழுத்து..மனதோடு உருகி மடியவேண்டியதுதான். இதற்குமுன்னெல்லாம் நான் யாராவது காதல்கொள்வதைப் பார்த்தால் அவர்களை ஏளனம் செய்து சிரிப்பேன். காதலாம் கீதலாம், உண்மையில் அந்தமாதிரி ஒரு நிலைகூட உண்டா வென்று கூறி உதறித் தள்ளுவேன். இப் போது என் நிலைமையைப் பார்த்தால் யார்தான் சிரிக்கமாட்டார் கள்? ஈச்வரன் என்னை இந்தச் சோதனைக்கு ஆளாக்கி யிருக்கிறார். அப்போது கர்வப்பட்டேன். என்னை மட்டந்தட்ட இந்தக் கூத்தெல்லாம் நடக்கிறது. இந்தப் பல்லியும் கடைசியில் அந்தக் காடிப்பானையிலேயே போய் விழுந்து தவிக்கிறது. இன்னொரு களவைக் கண்டுபிடிக்கப் போய் என் மனதையே ஒரு கள்ளனுக்குப் பறிகொடுத்து விட்டேனே..சே என்ன தலைபிறக்கம்! ஐயோ! அந்தப் பாவியின் அழகும் வசீகரமும் என்னை உருக்குலைக்கின்றன வே! புஷ்ப பாணத்தில் இவ்வளவு விஷம் இருக்கும் என்று நான் நினைக்கவே யில்லை. ஐயோ அது என்னை எவ்வாறெல்லாமோ வருத்துகிறதே..அவன் எல்லா அம்சத்திலும் எனக்கு உயர்வாகத் தோன்றுகிறான். அந்தப்பாவி, குந்தத்தை எப்படியாவது தன்னி டம் சேர்ப்பித்து விடும்படி என்னை நயவஞ்சகமாக மயக்கிக் கேட் கிறான். அடபாவி! இதைச் சொல்வதற்கு என்னைத்தவிர வேறு யாரும் உனக்கு அகப்படவில்லையா? இதோ பார், உன் மூக்கை உடைத்து விடுகிறேன்..எனக்கு அப்படி ஆத்திரம் வருகிறது. சீலத்தை மீறி நடக்கக்கூடாது என்றாலோ, பாதை முழுவதும் முட் கள் ஏனோ என்னைப் பாதிக்கின்றன...சீ! துர் எண்ணங்களே! என் மனதை விட்டு அகலுங்கள். இதுவரை நான் தூய்மையாக நடந்துவிட்டு இப்பொழுது பாபத்திற்கு வசமாவேனோ? ஸர் வேச்வரனுக்கு என் அந்தக்கரணத்தை ஸமர்ப்பித்த பிறகு ஏனோ இந்தக் கொடிய எண்ணங்கள் என்னைச் சுற்றி அலைகின்றன? குந்தத்தை அவன் கையில் ஒருபோதும் சிக்கவிடேன்.... விடேன். அதை நினைக்கும்போதே என் உடல் எரிகிறது.... குந்தம் நிரபராதி. அவளை அவன் எந்தவிதத்திலும் ஹிம்ஸிக்

காதவாறு பார்த்துக்கொள்வேன்..அவளை நான் காப்பாற்றுவேன். ..அது எப்படி? இந்த பண்டன் வைஷ்ணவிவேஷம் போட்டுக் கொண்டுதான் வரட்டும், வேறு என்ன சூழ்ச்சி வேண்டுமானாலும் செய்யட்டும், அவன் என் குந்தநந்தினியை நெருங்குவதைப் பார்க்கிறேன்!....குந்தத்தைப் பழையபடி தத்தர்மாளிகைக்கே கொண்டுபோய் விடவேண்டும். ஆனால் அவள் போக மாட்டாளே? அந்த இடத்தை அவள் மனம் வெறுக்கிறது. எல்லோரும் சேர்ந்து 'என் அம்மா, எங்கேடீ போய்விட்டாய்? நீயில்லாமல் வீடு வெறிச்சென்றிருக்கிறதே, என் கிளியே..முத்தே' என்று பரிந்து அழைத்தால், அவள் போவாளோ என்னமோ? என் மனதில் ஒன்று இருக்கிறது. பகவானால்கூட அதைக் கண்டிக்கமுடியாது...ஆஹா, குந்தநந்தினியை மீண்டும் கண்ட மாத்திரம் அந்த ஸூர்யமுகியின் நீண்ட மூஞ்சி 'பொத பொத' வென்று ஆகிவிடும். இந்தமாதிரி நடக்க வேண்டியிருக்கிறது ஈச்வரனுடைய ஆக்ஞை! நீங்கள், ஸூர்யமுகியின்மீது உனக்கு ஏன் இவ்வளவு ஆத்திரம் என்று கேட்பீர்கள். ஆமாம், அப்படித்தான். என்னை அவள் எந்த விஷயத்திலும் அவமரியாதையாக நடத்தினது கிடையாது. அதற்கு மாறாக எப்பொழுதும் அவளிடமிருந்து ஆதரவையே நான் பெற்றிருக்கிறேன். இதை மறுத்தால், கண் அவிந்துவிடும். அப்படியிருக்க அவள்மேல் ஏன் மனஸ்தாபம்? அது ஏனோ எனக்குக்கூடப் புரியவில்லை, அதன் காரணம். ஸூர்யமுகி அதிர்ஷ்டக்காரி; நானோ ஏழை. இந்தக் குறையே என்னை வாட்டுகிறது. இதனால்தான் எனக்கு அவள்மேல் கார்ப்பண்யம். அவள் உயர்ந்தவள்;நான்தாழ்ந்தவள்; அவள் யஜமானி. நான் அடிமை. இந்த வேற்றுமையே என்னைப் பாதிக்கிறது. இதுவே என் பகைக்குக் காரணமாகும். அவள் நல்ல ஸ்திதியில் வாழ்வது ஈச்வரானுக்ரஹம்; அதை ஒப்புக்கொள்கிறேன். அது அவளுடைய குற்றமாகாது...அவளை ஏன் த்வேஷித்துக்கொள்ள வேண்டும், ஈச்வரன் நான் கஷ்டப்படும்படி என் தலையில் எழுதியிருக்கிறான். என் பேரில் என்ன த்வேஷம் அவருக்கு?..நான் என்ன தீங்கு யாருக்குச் செய்தேன்? அவளுக்கு இடையூறு விளைவிப்பதனால் எனக்கு நன்மை ஏற்படும் பக்ஷத்தில், நான் ஏன் அந்தக் கார்யத்தைச் செய்யக்கூடாது? தன்னைப் போக்கித்தானே தர்மம்..இருக்கட்டும். நான் எதற்கும் தீர யோசித்துச் சொல்லுகிறேன், இது எவ்வளவு தூரம் போகும் என்பதை. இப்போது எனக்கு வேண்டியதெல்லாம் கொஞ்சம் பணமே. எனக்கு யார் கையின் கீழிலும் வேலை செய்யவேண்டுமென்ற அபேக்ஷை இல்லை. ஸ்வதந்த்ரம் வேண்டும்....பெண்களுக்கு அதற்கு உரிமை இல்

லையா?:...எங்கிருந்து பணம் வரப்போகிறது? இதோ வழி ஏற்பட்டிருக்கிறது, சுலபமாக நகேந்த்ர பாபுவினிடமிருந்து பணம் வருவதற்கு....குந்தநந்தினியின்மேல் நகேந்த்ரனுக்கு உயிர் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இப்போது பாபு குந்த ஸ்மரணையாகவே கிடக்கிறார். பெரிய மனிதன் மனது வைத்தால் என் கார்யம் கைகூடினமாதிரிதான். ஆனால் வழியில் இந்த ஸூர்யமுகி குந்தகமாக நிற்கிறாளே....புருஷனையும் ஸ்திரீயையும் பிரிப்பது மஹத்தான பாபம். இதன்பொருட்டுத்தான் தயங்குகிறேன். இந்த மனஸ்தாபத்தை மூட்டிவிட்டால் ஸூர்யமுகியை அதலஜலத்தில் தள்ளினாற்போலதான். அவள் கரையேறுவதேது?—என் மனம் கடினமாகிவிட்டது. இந்தக் கார்யத்தைச் செய்வதற்கு இதோ முனைந்துவிட்டேன்!

என்னுடைய சூழ்ச்சிகள் பலித்துவிட்டால், பாபு குந்தத்தின் தாஸானுதாஸர் ஆகிவிடுவார்.... ஸதா அவளுக்கு ஷோடசோபசார பூஜைதான். இந்தக் குந்தம் சுத்த அசடு.. உலகம் இன்னதென்று அறியாதவள்....நான்தான் இவளுக்குப் பின்னால் நின்று புத்தி புகட்டவேண்டும். இவளை என் வசத்திற் கொண்டுவருவது எளிதான கார்யம். சூத்திரக் கயிறு என் கையில் இருக்கையில் அவளை என்னிஷ்டப்படி ஆட்டுவது சிரமமா?. அவள் மூலமாக என் ஆக்ஞை பாபுவரைக்கும் ஸம்பிரமமாகச் செல்லும். அவள் மூலமாக எதை வேண்டுமானாலும் நான் நடத்துவேன். பாபு செய்யும் குந்தநந்தினி பூஜையில் வரும் பிரஸாதங்கள் யாவும் எனக்குத்தான். அந்த அதிகாரம் என் ஒருத்திக்குத்தான். நான் அப்புறம் வீட்டிலுள்ளவர்களைக் கண்ணில் விரலைவிட்டு ஆட்டி வைப்பேன். ஸூர்யமுகியும் என் ஆட்சிக்கு அடங்கவேண்டியது தான்.

ஆனால் பகவான் என்ன செய்கிறானே?..நகேந்த்ரனுக்கே இந்தக் குந்தமலரைத் தருகிறேன். அவன் ஒருவன்தான் அதை அனுபவிக்க உகந்தவன். ஆனால் அந்தக் கார்யத்தை இப்போதே சட்டென்று செய்துவிடமாட்டேன். கொஞ்சநாட்களாவது அவர்கள் அவதிப்படவேண்டும்..... அவளைப் பத்திரமாக மறைத்து வைப்பேன். பிரிவாற்றாமையே பிரேமையின் அஸ்திவாரத்தைப் பலப்படுத்துகிறது. நகேந்த்ரன் குந்தநந்தினியின்மேல் வைத்த மோகம் இன்னும் பக்குவமடையட்டும்..... உள்ளம் உருகி ஓடட்டும்.....இன்னும் கொஞ்சதினங்களே. அவளைக் கண்டதும் அந்தச் சாதகபக்ஷி பன்மடங்கு காதல்பொங்கி ஓடிவருவான். நான் ஹீராவோ கொக்கோ? அப்புறம் பாருங்களேன், இந்த ஸூர்யமுகியின் பவிஷைக் காட்டி வைக்கிறேன். அதற்கும் அவள்

அசையாது போனால் அவள் மண்டை உறுதியானது என்றே சொல்லவேண்டும். நான் தோல்வியடைந்து ஓடவேண்டியதுதான். ஆனால் அந்தமாதிரி தோல்வியை நான் சுலபமாக ஏற்றுக்கொள்பவளல்ல. என் கருவி குந்தம் இருக்கும்போது எனக்கு என்ன கவலை? நான் எழுந்திரு என்றால் அவள் எழுந்திருக்க வேண்டும், உட்காரு என்றால் உட்காரவேண்டும். இந்த மாதிரி சக்தியினாலேயே பாபுவையும் நான் சமாளிப்பேன்—இப்போது கிழவியைக் காமார்காட்டுக்கு (அடுத்த ஊர்) அனுப்பி வைத்தால்தான் குந்தத்தைப் பயமின்றி ஒளித்துவைப்பது ஸாத்யமாகும்'—இம்மாதிரி கற்பனைகளில் பாபி ஹீரா தன் மனதைப் போகவிட்டாள்.

ஏதோ சாக்குச் சொல்லிக் கிழவியைக் காமார்காட்டுக்குத் துரத்திவிட்டாள். குந்தத்தைத் தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டாள். அந்தப் பேதைக் குந்தம் ஹீரா தனக்குச்செய்யும் சுச்ரூஷைகளைக் கண்டு 'ஹீராவைப்போல் யாருமே இருக்கமாட்டார்கள். கமலமணிகூட என்மீது இவ்வளவு நேசமாக இல்லை' என்று எண்ணிப் பூரித்துப் போனாள்!

# வாக்குதத்தம்

ஒரத்தி. ஒ. ப. தேசிகன்

---

"கோட்டைக்கு நாம் போய்ச் சேருவதற்குள்ளாக நன்ருக இருட்டிவிடுமோ?" என்று அச்சத்துடன் வினவினுள் ராணி வீதாதேவி. அவளுடைய முகத்தில் கவலைக் குறிகள் தோன்றின.

"இல்லை யம்மணி, இன்னும் அரைநாழிகைக்குள்ளாக நாம் கோட்டையை யடைந்துவிடுவோம். இங்கிருந்து மூன்றுமைல் தூரம்கூட இராது" என்ருன் அவளுக்குத் துணையாக வந்த ஆயுதபாணிகளான சிறிய கோஷ்டியின் தலைவன், கொண்டப்பா. இவ்வாறு கூறிவிட்டு அவன் பல்லக்கைத் தூக்கும் ஆட்களைச் சற்று வேகமாக நடந்து செல்லும்படியாக ஆக்ஞையிட்டான்.

ஆனுல் போகிகள் என்ன செய்வார்கள் பாவம்! அவர்கள் ஏறிக்கொண்டிருந்தது ஒரு செங்குத்தான குன்று. ஆகையால் வெகு சாவதானமாகவும், மெள்ளவும்தான் போகமுடிந்தது. பந்தோபஸ்துக்காக உடன்வந்த நால்வரும் தங்களது குதிரைகளின் கடிவாளங்களை இழுத்துப்பிடித்து அவற்றின் பதட்டத்தையும் வேகத்தையும் அடக்கவேண்டியிருந்தது. ராணி, "ஐயோ, நாம் இன்னும் ஒருமணி நேரம் முந்தியே புறப்பட்டிருக்கலாகாதா" எனக் கூறிப் பெருமூச்செறிந்தாள். மறுக்ஷணம் அவள் எதையோ கேட்டுத் திடுக்கிட்டவள்போல், "கொண்டப்பா, அதென்ன சத்தம்?" என்று வினவினுள். "சத்தமா, எனக்கு ஒன்றும் கேட்கவில்லையே" என்ருன் கொண்டப்பா.

"உனக்கு ஒன்றும் கேட்கவில்லையா! இது ஆச்சரியமாயிருக்கிறது. தெளிவாகக் கேட்டதே. ஒரு பெரிய ஆரவாரமாக இருந்தது எனக்கு."

"இல்லை, இன்றையதினம் தாங்கள் மிகுந்த கலவரமடைந்திருக்கிறீர்கள். அதன் காரணமாக . . . ."

இதற்குள் சிப்பாய்களில் ஒருவன் தன் குதிரையைச் சட்டென்று நிறுத்தி, "இரு, எனக்குக்கூட ஏதோ கேட்கிறது" என்று கூறினுன்.

உடனே எல்லாரும் தாங்கள் நின்ற இடத்திலிருந்தே செவிகொடுத்துக் கேட்கலாயினர். ஆம், இம்முறை அதைக் குறித்து ஒருவருக்கும் சந்தேகமேயில்லை. வெகு தூரத்தில்—அமைதியற்ற ஒரு ஜனக்கூட்டத்தினின்று கிளம்பும் பேரிரைச்சல், கடல் அலைகளின் ஆரவாரத்தைப்போன்று அவர்களது செவிகளில் வீழ்ந்தது. கொண்டப்பா தன் குதிரையை முடுக்கி விரைவாக முன்னே செலுத்தி மற்றவர்களையும் தன்னைப் பின்பற்றும்படியாக உற்சாகமூட்டினுன்.

விஸ்தாரமான ரஸ்தாவை யடைந்ததும் அவன் குதிரையைச் சாலை யோரத்தில் ஓர் புதரில் கட்டிவிட்டு அங்கிருந்த உயரமான ஓர் ஆலவிருக்ஷத்தின் மீதேறி நாற்புறங்களிலும் தன் பார்வையைச் செலுத்தினான்.

அப்பொழுது அவன் கண்ட காட்சியானது பீதியினால் அவனது தேகத்தை நடுக்கமுறச் செய்தது. வெகு தூரத்திலிருந்து எழும்பிய புழுதிப் படலம் மேகமண்டலத்தையும் மறைத்தது. அதன் மத்தியில் இவர்களை நோக்கி நூற்றுக்கணக்கான மக்கள் தலைவிரிகோலமாக விழுந்தடித்து ஓடி வந்துகொண்டிருந்தார்கள். தங்கள் வீடுவாயில்களை யெல்லாம் துறந்து உயிருக்கே பயந்து ஓடிவருபவர்கள் அவர்கள் என்பது பார்த்தமாத்திரத்திலேயே தெரிந்தது. இந்த அமளிகுமளிக்குக் காரணம் என்னவாயிருக்கும் என்று நிதானிப்பதற்குள்ளாகக் கவலையுடன் கீழே காத்திருந்த ராணி அவனை யழைத்து, "கொண்டப்பா, என்ன சமாசாரம்? கடல் முழக்கம்போன்ற இப்பெருத்த ஆரவாரம் எங்கிருந்து உண்டாகிறது? அதற்குக் காரணம் யாது?" என்றாள் பரபரப்புடன்.

"தாயே, நாம் ஏதோ ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறோம். அது எப்படிப்பட்டதென்று இன்னும் தெரியவில்லை. நீங்கள் இனி ஒரு கணமேனும் இவ்விடம் இருப்பது தகாது. சிறிதளவு ஆலஸ்யமும் செய்யாது உமது தமையனாரிடமே திரும்பிச் செல்லவேண்டும். வரதனும் வெங்கட்டனும் துணையாக வருவார்கள்.—ராமு, உன் குதிரையினின்றும் கீழே இறங்கு. ராணிகாரு அதன்மீது சவாரி செய்யட்டும்" என்று நிறுத்தாமல் பேசிக்கொண்டேபோனான் கொண்டப்பா.

தன்னுடைய கேள்விகளுக்குப் பதிலளியாமல் கொண்டப்பா இவ்வாறு உத்தரவுகள் பிறப்பித்தது ராணிக்குப் பிடிக்கவில்லை. ஆதலின் அவனை நோக்கி, "உனது அமல் இதனுடன் நிற்கட்டும். என்னுடைய கேள்விகளுக்குப் பதிலளியாமல் நீ ஏதேதோ ஆர்ப்பாட்டம் செய்கிறாயே? நீ பார்த்ததென்ன, அதை நான் முதலில் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும்" என்றாள்.

"அம்மா, தாங்கள் வீணாக என்மீது கோபிப்பதில் பயனில்லை. வார்த்தையாடுவதற்கு இது நேரமன்று. கோட்டை முற்றுகைக் குட்பட்டுவிட்டதென்று அஞ்சுகிறேன். இல்லாவிடில் இவ்வளவு கலவரமிருக்காது. அதோ பாருங்கள். அவர்கள் நம்மை நெருங்கிவிட்டார்கள். கோட்டைக்குள் கேவலம் 150 மனிதர்களே இருக்கின்றனர். சுத்தவீரரான நமது எஜமான் பேராபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறார். அவருக்கு நேரக்கூடிய விபத்தை எண்ணவே எனக்குப் பயமாயிருக்கிறது."

"அப்படியாயின் நாம் கோட்டைக்கே விரைந்து செல்வோம். கோட்டைக்குச் செல்லும் இரகஸ்ய வழி யொன்று எனக்குத் தெரியும். என்னை யவ்விடம் அழைத்துச் செல்வாயாகில் நானும் என்னாலியன்ற உதவியைச் செய்யலாம். ஆனால், கொண்டப்பா, இந்தப் பகைவர்கள் யார்?"

"பேசிக்கொண்டிருக்க இது சமயமல்ல. மறுவார்த்தை பேசாமல் நான் சொல்கிறபடி தாங்கள் செய்யவேண்டும். அவ்வாறு செய்ய மறுத்

தால் பலாத்காரத்தை யுபயோகித்துத் தங்களை நிர்ப்பந்தப்படுத்துவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை'' என்று அவன் கோபத்துடன் கர்ஜித்தான்.

''நீ என்னிடம் இத்தகைய வார்த்தைகளை எவ்வாறு கூறத் துணிந்தனை! என் பிராணநாதரிடத்தில் என்னைக்காட்டிலும் உனக்கு அதிக விசுவாஸம் போலும்! சே, என் முன் நில்லாதே, அப்பாற் செல்'' என்று கோபத்தினுல் உதடுகள் துடிக்க மொழிந்துவிட்டு, ராணி தனக்காகச் சித்தப்படுத்தியிருந்த குதிரையின்மீது ஏறிக்கொண்டாள்.

கொண்டப்பா ராணியின் கோபாவேசத்தையும், வசைமொழிகளையும் லட்சியம் செய்யவில்லை. அதற்கு மாருக அவன் அவளது குதிரைக்கு முன்பாக நின்றுகொண்டு, அதன் கடிவாளத்தைப் பிடித்து நிறுத்தி, ''ராணிகாரு, இதோ பாருங்கள், என்னுடைய பிச்சுவா இருக்கிறது. அதனுல் என்னை ஒரே யடியாகக் குத்தி வீழ்த்திவிட்டு அப்புறம் தாங்கள் தாராளமாக எங்கு வேண்டுமோனுலும் செல்லுங்கள். தற்சமயம் தாங்கள் என் வசத்திலிருக்கிறீர்கள். தங்களுக்கு யாதொரு தீமையும் நேராது பத்திரமாய்ப் பாதுகாத்து வீடு சேர்ப்பது எனது கடமை. எனது வார்த்தைகளைத் தாங்கள் உதாஸீனம் செய்யும்படியாக இப்பொழுது நான் விடமுடியாது'' என்று அழுத்தமாக உரைத்தான்.

கொண்டப்பாவின் வார்த்தைகள் முற்றுப்பெறுவதற்குள்ளாகவே உயிர் தப்பி யோடிக்கொண்டிருந்த ஜனக் கூட்டத்தின் முன்வரிசையிலிருந்தவர்கள் அவனையும் மற்றவர்களையும் நோக்கி, ''கொண்டப்பாகாரு, மஹாராணியும் கூடவா இங்கு இருக்கிருர்கள்? ஓடுங்கள், ஓடுங்கள், ஹைதர் அலி வந்துவிட்டான். எங்கும் கொள்ளையும் கொலையும் மலிந்துவிட்டன. குதிரை வீரர்கள் பின்னுல் வந்துகொண்டிருக்கிருர்கள். ஊரெல்லாம் நெருப்புப் பற்றி எரிகிறது'' என்று கூக்குரலிட்டார்கள்.

''உங்களுக்கு உயிரின்மீது ஆசையிருந்தால் ஓட்டம்பிடியுங்கள்'' என்று பின்னுலிருந்து மற்ளெரு குரல் கிளம்பியது.

அவ்வளவு தான். பயித்தியம்பிடித்த ஜனக்கூட்டம் தலைகால் தெரியாமல் மீண்டும் பழையபடியே ஓட்டம்பிடிக்கத் தொடங்கியது. அந்தக் கலவரத்திலும் குழப்பத்திலும் ராணியையும் அவளைச் சேர்ந்தவர்களையும் கவனிப்பார் யாருமில்லை. கொண்டப்பா ஜனக்கூட்டத்தை மிகுந்த சிரமத்துடன் விலக்கிக்கொண்டு ராணிக்கு வழியுண்டாக்குவதற்குள்ளாக, சாலையின் வளைவிலிருந்து ஒருவர்பின் ஒருவராகக் குதிரைவீரர்கள் பலர் வந்து சேர்ந்தார்கள். அவர்களுடைய தலைவனிடமிருந்து ஏதோ ஒரு சமிக்ஞை புறப்படவும் ஜனக் கூட்டத்தை நோக்கிக் குண்டுகள் பறந்தன. ஒரு துப்பாக்கி ரவை ராணி ஆரோகணித்திருந்த குதிரையின் முன்காலைத் தாக்கவும், அது வலி பொறுக்கமாட்டாமல் மிரண்டு பின்கால்களால் நின்றுகொண்டு ராணியைக் கீழே தள்ளியது. அதைக் கண்ணுற்ற கொண்டப்பா அவளை மிதிபடாமல் தடுக்கக் கருதி மிக்க விரைவுடன் அவ்விடத்தை நெருங்கினுன். ஆனுல் அதற்குள்ளாக ராணி பிரக்ஞை இழந்துவிட்டாள்.

அவளைப் பத்திரமாக ஓரிடத்தில் கொண்டு சேர்க்குமுன்னமே குதிரை வீரர்கள் கொண்டப்பாவையும் அவனது சிறிய கோஷ்டியையும் வளைத்துக் கொண்டுவிட்டார்கள்.

கத்திகள் கத்திகளோடு உராய்ந்தன! இருதரப்பினரிடமிருந்தும் உரத்த சப்தங்களும், வசவுச் சொற்களும் கிளம்பின! வீரர்கள் ஒருவரோடொருவர் மோதிக்கொண்டனர்!

"இன்னும் கொஞ்சகாலம் பிழைத்திருக்கவேண்டுமென்ற ஆசை யிருந்தால் உங்கள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டுப் பணிந்துவிடுங்கள்! இல்லாவிடில் உங்களிடம் கடுகளவும் இரக்கம் காட்டுவேன் என்று எண்ணாதீர்கள். உயிரோடு தோலை உரித்துவிடுவோம்—லதீப், உன்னை நெருங்கும் அந்தப் பயலைக் கவனித்துக்கொள்" என்றான் குதிரைப்படையின் தலைவன்.

அவனது படையில் இருபது வீரர்களுக்குமேலிருந்தார்கள். லதீப் தவிர இன்னும் மூவருக்கு வெங்கட்டன், ஒருவனாகவே ஜவாபு கொடுத்துக் கொண்டிருந்தான்.

இதனிடையில் கொண்டப்பா மிக்க லாகவமாகப் படைத்தலைவனது கத்தியை யொடித்துக் கீழே வீழ்த்தினான். ஆனால் அதே நிமிடம் அவன் முதுகில் யாரோ கத்தியினால் ஓங்கிக் குத்தினார்கள். கொண்டப்பா தன் குதிரையினின்றும் கீழே உருண்டான். மற்றவர்கள் என்ன செய்வார்கள் பாவம்! அவர்கள் ஒவ்வொருவரும் நால்வருக்கு மேற்பட்ட எதிரிகளுடன் ஏககாலத்தில் போராட வேண்டியிருந்தது. வெங்கட்டன் இரத்தப் பெருக்கினால் மூர்ச்சையுற்றான். வரதனும் ராமுவும் செயலற்றவர்களாயினர். முடிவில் ஹைதர் அலியின் ஆட்களே வெற்றிபெற்றனர். காயமடைந்த வீரர்களுக்கு சிகிச்சை செய்யவேண்டிய வேலையே அவர்களுக்குப் பாக்கிநின்றது.

படைத்தலைவன் கொண்டப்பாவைச் சுட்டிக்காட்டி, "இந்த மனிதனை முதலில் கவனியுங்கள். அவன் சாமானியமானவனன்று. ஏதோ ஒரு சிலரே அவ்வளவு லாகவமாக என் கரத்திலிருக்கும் கத்தியை அப்புறப்படுத்த வல்லவர்" என்று கூறிவிட்டு, மற்றவர்களைப் பார்த்து "இவர்களைக் குரூரமாக நடத்தவேண்டாம். இதோ நிற்கும் ஒருவன்மட்டும் பிழைப்பது துர்லபம்தான். எனினும், அவனுக்கும் சிகிச்சை செய்து பாருங்கள்" என்று கட்டளையிட்டான்.

"அவர்கள் நம்மில் ஐவரைக் கொன்றுவிட்டார்களே" என்று முணுமுணுத்தான் படையாட்களில் ஒருவன்.

"ரஹ்மான், அதனால் பாதகமில்லை. சேதமிராத போராட்டம் எங்கேயாயினுமுண்டா? இவர்கள் நால்வரே யிருந்தபோதிலும் அவ்வளவு துணிச்சலாக நம் அனைவரையும் எதிர்த்துப் போராடியதுபற்றி நாம் அவர்களைப் பாராட்டவேண்டும்."

ராணிக்குப் பிரக்ஞை வந்தது. காயமொன்றும் இல்லாவிடினும் பயத்தினாலேயே அவள் மூர்ச்சையடைந்திருந்தாள். அவள் மெல்ல எழுந்திருந்தாள். பல்லக்குத் தூக்கும் போகிகளோ வெடவெடவென்று நடுங்கிக்கொண்டு

என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தனர். அவர்களைப் பார்க்கப் பரிதாபகரமாக யிருந்தது.

படைத்தலைவன் மெதுவாக ராணி யிருக்குமிடத்தை யணுகி வணக்கத்துடன் அவளுக்கு ஸலாம் செய்தபின், அவள் யாதொன்றுக்கும் அஞ்ச வேண்டியதில்லை யென்றும், தங்களால் அவளுக்கு யாதொரு தீங்கும் நேராதென்றும் தேறுதல் உரைத்தான்.

''அம்மா, தாங்கள் இன்னுமொன்பதை நாங்கள் நன்கறிவோம். உண்மையில் தங்களை எங்களுடன் அழைத்துச் செல்லவே நாங்கள் இங்கு வந்திருக்கிறோம் என்பதை ஒளிப்பதில் பயனில்லை. தங்களை நாமக்கல்லுக்கு அழைத்துச் செல்லவேண்டு மென்பது எங்கள் எஜமானரது உத்தரவு.''

''கொண்டப்பா எப்படி யிருக்கிறான்? ஐயோ, அவன் பிழைப்பானா?'' என்று கேட்டுவிட்டு ராணி அழத் தொடங்கினாள்.

''கொண்டப்பா யார்?—ஓ! அந்த மனிதனா? அவனுக்கென்ன? அவன் பிழைத்துவிடுவான் என்பதைக் குறித்து சந்தேகமே வேண்டாம். பல்லக்கில் திரும்பவும் ஏறுங்கள். தங்களுடைய ஆட்களே தங்களைக் கோட்டைக்கு எடுத்துச் செல்லுவார்கள்'' என்றான்.

''கோட்டைக்கா? அப்படியாயின் கோட்டை உங்கள் வசப்பட்டுவிட்டதா? ஐயோ, எனது கணவரின் கதியென்ன? அவர் உயிருடனிருக்கிறாரா, அல்லது உயிரிழந்துவிட்டாரா? அப்பனே, உனக்குப் புண்ணியமுண்டு. திக்கற்ற ஒரு பெண்மணியிடம் உண்மையைச் சொல்லக்கூடாதா?''

''அம்மணி, கோட்டை இன்னும் எங்கள் கைவசமாகவில்லை. அதனால்தான் இந்தத் தொல்லையெல்லாம். எங்கள் சேனாதிபதி உங்கள் கணவரின்மீது அளவற்ற கோபங்கொண்டிருக்கிறார். உம் கணவருக்கு, ஒன்று, எல்லையற்ற அசட்டுத்தைரியம் இருக்கவேண்டும். அல்லது அவர் சுத்தப் பயித்தியக்காரராக இருக்கவேண்டும். இல்லாவிடில் நாலாயிர வீரர்களுக்குமேல் அடங்கிய பெருத்த சைனியத்தை, விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய ஆட்களினுதவியால் தன்னுடைய சிறு கோட்டையினின்றும் எதிர்த்துச் சமாளித்துவிடலாம் என்று அவர் நினைப்பதற்குக் காரணம் யாது? இந்த அசட்டுப் பிடிவாதத்தினால் அவருக்கு யாதொரு அநுகூலமும் ஏற்படாதாயினும், அதன் விளைவு என்னவாகும் என்பதைக் குறித்து அவர் சிறிதேனும் சிந்தித்துப் பார்க்கவில்லையா? படே படே ஆஸாமிகளான பாளையக்காரர்களெல்லாம் எமது சுல்தானுடைய பெயரைக் கேட்டமாத்திரத்திலே மறுவார்த்தை சொல்லாமல் பணிந்துவிடுகையில், இவர்மாத்திரம் அவரை முன்பின் யோசியாது எதிர்த்து நிற்கத் துணிந்தது வெறும் பயித்தியக்காரத்தனமே யல்லவா? இன்றைக்கில்லாவிடில் நாளைக்காகிலும் அவர் பணிந்துபோகவேண்டியவரே. ஆனால் ஆதியிலேயே சாவதானமாக அவர் பணிந்திருப்பாரேயானால் அவருக்கு யாதொரு குறைவும் நேரிட்டிராது. இப்பொழுதோ சுல்தான் அவரை எக்கதியில் கொண்டுவிடுவாரோ அதை ஆண்டவனே யறிவான்'' எனக் கூறி முடித்தான்.

"கொள்ளையிட்டும், தீக்கொளுத்தியும் நாட்டைப் பாழ்படுத்துபவனும், இராஜ்யத்தைத் துராகிருதமாக அபகரிப்பவனுமாகிய ஹைதர்அலிதான் உங்கள் சுல்தானோ?"

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் படையாட்களில் ஒவ்வொருவனுக்கும் ஆத்திரமூண்டது. ஆனால் தலைவன் அவர்களது ஆத்திரத்தை யடக்கி, "அம்மணி, அவ்வளவு பதட்டம் வேண்டாம்......இதற்குமேல் வீண் வார்த்தைகளை வளர்ப்பதில் பயனில்லை. பதிற்பேசாமல் பல்லக்கி லேறுங்கள்" எனக் கூறி, பல்லக்கைச் சுமந்துவரும் போகிகளை விளித்து "ஏ, சைத்தான்களே, தூக்குங்கள் பல்லக்கை" என்று உத்தரவிட்டான்.

ராணி தன் தவறை யுணர்ந்தாள். மிகவும் நல்லவனாகக் காணப்பட்ட அப்படைத்தலைவன்முன் தான் நிதானந்தவறிக் கூறிய மொழிகளைக் குறித்து வருந்தினாள். தனக்கு என்ன ஆபத்து நேருமோ வென அச்சமுற்றாள். ஆனால் வழிநெடுகப் பட்டாளங்கள் கூடார மடித்துத் தங்கியிருந்தபோதிலும் அவளை யொருவரும் உபத்திரவம் செய்யவில்லை.

கோட்டையைச் சமீபித்ததும் படைத்தலைவன் தனக்கு மேலதிகாரியாகக் காணப்பட்ட ஒருவனிடம் இரண்டொரு வார்த்தைகள் கூறிய பின்னர் பல்லக்கைக் கருடமூக்கு முஸல்மான் ஒருவனுடைய பொறுப்பில் ஒப்புவித்தான். அவன் அவர்களை ஒரு பாழ் வீட்டிற்கு அழைத்துச் சென்று ராணியை அதன் அறை யொன்றில் சற்றேனும் மரியாதையின்றித் தள்ளிவிட்டுக் கதவைப் பூட்டிக்கொண்டான். அதன்பின் வெளியே யிருந்து பாரா கொடுக்கத் தொடங்கினான்.

அவ்வறையிலே ஒரு சிறிய விளக்கு 'மினுக் மினுக்' கென எரிந்து கொண்டிருந்தது. அறையில் ஒரே சாளரமிருந்தது. அதன் வழியாக ராணி அழுதாள்; பயமுறுத்தினாள்; அப்புறம் கெஞ்சினாள். அவர்களுடைய உத்தேசம் யாதென்று தெரிவிக்குமாறு மன்றாடினாள். ஆனால் கற்சிலையாயினும் அசையும்; அவன் சிறிதும் இரங்கவில்லை. ஒவ்வொரு சமயம் இராணியின் மொழிகளைக்கேட்டு ஆத்திரமடைந்தவனாக அவன் கஞ்சா குடிப்பதனால் சிவந்த தனது முரட்டுப் பார்வையை அவள்மீது செலுத்தவும், அவ்விழிகளில் காணப்படும் கோபாக்னியைக் கண்டு ராணி நடுநடுங்கி அறையின் கோடிக்கு ஓடிப்போய்விடுவாள்.

## II

இவ்வாறு மூன்று மணிநேரம் கழிந்தது. அதற்குப் பிறகு அவனுக்குப் பதிலாக வேறொரு காவலாளி வந்தான். அவனுடைய கரடுமுரடான தாடியும், தோற்றமும் பார்ப்பதற்குப் பயமூட்டின. அவனுக்குச் சுமார் 40 வயதிருக்கலாம். அவன் மிகவும் சாவதானமாக, ஒரு 'காரமான' சுருட்டை வாயில் வைத்துக்கொண்டே சாளரத்தின் இரும்புக் கிராதிகளின்வழியாக உள்ளே எட்டிப் பார்த்துவிட்டு, அவளை நோக்கி, "அரே, அந்த மூலையில் நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்?" என்று கூவினான். அதற்குப் பதிலில்லை.

"உனக்குப் பேசத்தெரியாதா, அல்லது பேசுவதற்குஇஷ்டமில்லையா?" என்று அவன் மறுபடியும் குறும்புத்தனமாகக் கண்ணடித்துக் கூறினான். ராணிக்கு ரௌத்ராகாரமாகக் கோபம் வந்துவிட்டது.

"அயோக்கியப் பயலே, என்ன சொன்னாய்?" என்றாள்.

"அச்சா, உனக்குப் பேசுவதற்குத் தெரியும், நீ ஊமையல்ல; இருந்தாலும் சும்மா அவ்வளவு கோபம் பண்ணாதே; உங்கள் புருஷனையும் இங்கே நாம் தருவிக்கிறோம். . . . . அடேடே! அந்த முட்டாள் நல்ல அதிர்ஷ்டம் பண்ணியிருக்கிறான் . . . . நீ மெத்த அழகாய் இருக்கிறாய் . . . ."

"அடே, நீ என்ன கண்டபடி உளறுகிறாய். இதற்குமேல் பேசினால் உன் நாக்கையறுப்பேன்" என்று ராணி கர்ஜித்தாள். கோபவெறியில் அவளுக்கு இன்னது செய்கிறோமென்றுகூடத் தெரியவில்லை. அவனையடித்துத் தாத்துவதற்குத் தனது முஷ்டியை ஓங்கிக்கொண்டு ஜன்னற் கம்பிகளின் அருகில் ஓடிவந்தாள். அதற்குள் அவன் சாடையாகப் பின்னால் நகர்ந்துவிடவும் ஜன்னற் கம்பிகளில் அவளது கை பட்டுப் பெரும்வேதனையை யுண்டாக்கியது.

"ராணிகாரு, நீ ரொம்ப கர்வம் பிடித்தவள். ஆனால் இதற்கெல்லாம் உன் புருஷன்தான் காரணம். இப்பொழுதுகூட, அதாவது நாளை உதயத்திற்குள், அவன் வழிக்கு வந்துவிடும் பக்ஷத்தில், உன் உயிருக்கு அபாயமிராது. . . . . இல்லாவிடில் . . . ."

"எங்கள் ஜாதியில் உயிரினும் மானமே பெரிதென்பது உனக்குத் தெரியுமா? என்னிடம் வீண் பரிகாஸம் செய்யாதே. நான் இன்னும் சில நிமிடங்களே உயிருடனிருப்பேன். என் சேலையின் ஒரு முனையை அதோ அந்தத் தூலத்தின் மீதும், மற்றோர் முனையை என் கழுத்தைச் சுற்றியும் மாட்டிக்கொண்டால், அப்புறம் உங்கள் பயமுறுத்தல் என்னை யொன்றும் செய்துவிடாது."

"அரே இதென்ன கஷ்டகாலம்; நானாக உனக்கு யாதொரு தீங்குமுண்டாக்க விரும்பவில்லை. அதனால் நீ இப்பொழுது உன் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டியதில்லை. நீ நினைப்பதுபோல் நான் அவ்வளவு கொடியவனல்ல. போர்க்களத்தில் எனது இரத்தம் கொதித்து எழுவது ஸகஜமேயாயினும், மற்றவேளைகளில் நான் நிதானந்தவறுபவனன்று. எனக்கும் பெண்டு பிள்ளைகளிருக்கிறார்கள்."

"ஆனால் உன்னுடைய பேச்சும் நடத்தையும் ஒரு குடும்பஸ்தனுடையதாகக் காணப்படவில்லையே?"

"உண்மையைச் சொல்வது ஒரு தப்பிதமாகுமா? உன் புருஷன் ஒரு பெரும் முட்டாள் என்பது கேவலம் உண்மையல்லவா? இல்லாவிடில் 4000 வீரர்களடங்கியதொரு பெரிய பட்டாளம் உதவியற்ற ஒரு கோட்டையைச் சுற்றி முகாம் போட்டுக்கொண்டிருக்க, அதைத் தன் எலிவளையினின்றும் எதிர்த்துத் தாத்திவிடலாமென்று கனவு கண்டுகொண்டிருக்கிறான் இச்சிறிய பாளையக்காரன். உன்னுடைய புருஷன் மிகுந்த தைரியசாலியாக யிருக்கலாம். கோழைத்தனமிராத சுத்த வீரனாகவுமிருக்கலாம். தனிமையாக அவன் இவ்வளவு பெருத்த ஸைநியததை எதிர்த்துநிற்க முடியுமா? அது சாத்தியந்தான் ஆகுமா? ஐயோபாவம், உன்னைப் பார்த்தால் எனக்கு இரக்கம் தோன்றுகிறது. உன்னுடைய அறியாமையால் அதை உணராது நீ என்னைப் பழிக்

கிறாய்; நீ என்னைத் திட்டுவதனால் எனக்கொன்றும் குடிமுழுகிப் போய் விடாது. ஆனால் ஒன்றுமட்டும் கூறுவேன். நீ அவனுடைய ஆசை மனைவி. உன்னுடைய புத்திமதியைக் கேட்டு அவன் நல்வழிக்கு ஒருக்கால் திரும்பக் கூடும். உனக்கு ஹைதர் அலியைத் தெரியாது. அவருடைய துடுக்கைப் பற்றி நீ கேள்விப்பட்டிருக்க மாட்டாய். அவர் மனம்வைத்தால் உங்களை வேருடன் அழித்துவிடுவார். அவருடைய வஞ்சம் எவ்வளவு கொடியதாக விருக்குமென்று என்னால் சொல்லமுடியாது. மற்றவர்களை ஆதரிப்பதிலாகி லும், அல்லது துன்புறுத்துவதிலாகிலும் ஹைதர் ஒரு முடிவுக்கு வந்துவிட் டால், அதனின்றும் அவரைத் திருப்புவதற்கு ஒருவராலும் இயலாது. உள்ள படியே தைரியசாலிகளைக் கண்டால் அவருக்குப் பிரியமே. ஆதலின் இப் பொழுதும்கூட அவர் உன் புருஷனை மன்னித்துவிடக்கூடும். ஆனால் வேண்டுமென்றே தன் அழிவைத் தேடிக்கொள்ளுவோருக்கு யார்தான் உதவிபுரிவார்கள்? எங்களுடைய தளகர்த்தர் ஒருமுறைக்கு இருமுறை தன்னிடம் பணிந்து விடும்படியாக உன் புருஷனுக்குச் செய்தி யனுப்பியும் அவன் அதை லட்சியம் செய்யவேயில்லை. என்ன இறுமாப்பு! நீ உன் கண்களாலேயே இந்தப்பெரிய பெரிய ஸைநியத்தையும், பெரிய பெரிய பீரங்கி முதலிய யுத்த தளவாடங்களையும் பார்த்திருக்கிறாய் அல்லவா? ஹைதர்கானிடமிருந்து ஒரு வார்த்தை கிடைப்பதுதான் பாக்கி, அந்த வார்த் தை எட்டிய மறு க்ஷணமே உங்கள் கோட்டை, கொத்தளம், யாவும் தவிடு பொடியாய்விடும். இப்பொழுதாவது உன் கணவரின் முட்டாள்தனம் உனக்கு விளங்குகின்றதா?''

''அதெல்லாம் சரிதான். ஆனால், நீ முன்யோசனையுடன் பேசுவதா கத் தோற்றவில்லை. நான் இந்நிலையில் அவருக்கு எப்படி உதவிபுரிய முடியும்? நான் உன்னைப்போன்ற போக்கிரிகளிடம் சிக்கிக்கொண்டு இவ்விடம் சிறைப்பட்டிருக்கிறேன். அவரோ நாற்புறமும் ஸைநியங்களால் சூழப்பட்ட கோட்டைக்குள் அடைபட்டிருக்கிறார். நான் அவருக்கு எப்படிச் செய்தி அனுப்புவது? அவரை நல்வழிக்குத் திருப்புவது எவ்விதம் சாத்தியமாகும்?''

''அதுதானே கஷ்டமாயிருக்கிறது. நீ எங்களுடைய சேனாதிபதியின் மூலமாக உன் புருஷனுக்கு ஒரு கடிதம் வரைந்து அவரை ஏன் சமாதானம் செய்துகொண்டுவிடும்படியாகக் கேட்கக்கூடாது?''

''அந்தக் கடிதம் என்னிடமிருந்து பலாத்காரமாக வாங்கப்பட்ட தென்று அவர் நினைத்தால்.......?''

''உன்னைச் சிறைப்படுத்தியிருக்கும் செய்தியொன்றே உன் புருஷனை அச்சமூட்டுவதற்குப் போதாதா?''

ராணி இப்பொழுது தன் நிலைமையை உணர்ந்தாள். வெளிப்பார் வைக்குக் கொடூரமான முரட்டுத் தோற்றத்துடன் காணப்பட்ட அவன் உண்மையிலேயே நல்லவனாக இருக்கவேண்டுமென்றும், தன்னிடமுள்ள ஓர் அநுதாபத்தினாலேயே தன்னுடைய வசைமொழிகளையும் பாராட்டாது அவன் பேசுகிறானென்றும் அவளுக்கு விளங்கியது.

"ஐயோ, நான் என்ன செய்வேன்? எனக்கு ஒன்றும் நிச்சயமாகத் தெரியவில்லையே. என் மனம் எவ்வாறு பதைக்கிறதென்று உனக்குத் தெரியாது. என்னுடைய கொடுஞ் சொற்களை மறந்துவிடு; இதற்கேதாயினும் ஒரு வழி காண உதவி செய்யும்படியாக நான் உன்னை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்" எனப் பரிதாபம் கலந்த குரலில் வேண்டினாள் ராணி. அவளுடைய கண்களினின்றும் நீர் பெருகியது.

"எனக்குத் தெரிந்ததையெல்லாம் நான் சொல்லியாய்விட்டது. அதைத் தவிர வேறு வழி கிடையாது."

"நான்மட்டில் தனியாக அவரிடம் போனாலென்ன?"

"தனியாகவா! அது எப்படி முடியும்?"

"கோட்டைக்குச் செல்லும் ரகஸ்யவழியொன்று எனக்குத் தெரியும்."

"இரகஸ்ய வழியா?.சிப்பாய்களறியாமல் நீ யதை அணுகுவது எப்படி?"

"அதெல்லாம் என் பாடு. நடுநிசியில் என்னைத் தவிர வேறொருவரும் அந்தப் பாதையில் போவதற்குத் துணியார். அப்பனே, உனக்குக் கோடி புண்ணிய முண்டு. உன்னைப்பார்த்தால் நல்லவனாகவே காண்கிறது. உன்னுடைய வெளித் தோற்றத்தையும் முரட்டுப் பேச்சுக்களையும் கண்டு நான் உன்னைப்பற்றி வேறுவிதமாக எண்ணிவிட்டேன். உன் இதயத்தில் இரக்கம் குடிகொண்டிருக்கிறதென்பதை இப்பொழுது நான் அறிந்துகொண்டேன். என்மீது சற்றே இரக்கம் வை. இக்கடுஞ் சிறையினின்றும் என்னைமட்டும் விட்டுவிடுவாயாகில்........"

"பேஷ்! உன்னை வெளியே தப்பியோடவிட்டு, அதற்குப் பதிலாக நான் என் உயிரைக் கொதுவை வைக்கவேண்டும்போலிருக்கிறது! நீ மட்டில் வெளியேறி உன் புருஷனிடம் செல்லவேண்டும். அதற்குப் பதிலாக எனது உயிர் துடிதுடிக்க என் சவம் தூக்குமரத்தில் ஊஞ்சலாடவேண்டும் அல்லவா! அடேயப்பா, இந்தப் பெண்பிள்ளைகளுக்கு எவ்வளவு சுயநலம்?"

"கடவுளறியக் கூறுகிறேன். எனக்கு அம்மாதிரியான எண்ணம் சிறிதேனுமில்லை. என்னுடைய ஆவேசத்தில் என்னசொல்கிறேன் என்றறியாமல் அவ்வாறு கூறிவிட்டேன். பின் இந்நிலையில் நான் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? நான் என்ன செய்தால் என் புருஷனுக்கு வரப்போகும் தீமையைத் தவிர்க்கலாகும்? நீ எதைச் சொன்னாலும் நான் மறு வார்த்தையின்றி அதன்படியே நடப்பேன்."

"யோசனையற்ற பெண்ணே! கேள். நீ சொல்லும் இரகஸ்யவழியின் வாயிலாகவே உன்னால் கோட்டையை அடைய முடியுமாயின், அவனிடம் வெளிப்படையாக எல்லா விஷயங்களையும் எடுத்துச் சொல்லு. அவனுடைய வீண் அகம்பாவத்தாலும் அசட்டுப் பிடிவாதத்தாலும் அவனுக்கு விளையும் தீங்குகளையெல்லாம் அவனுக்கு அறிவுறுத்து. ஹைதரின் மாட்சியையும், பகைவரிடமும் பரிந்து நடக்கக்கூடிய அவரது பரந்த மனோபாவத்தையும், அவனுக்கு விளங்கக் கூறு. அப்பால் எவ்வளவு சீக்கிரமாக இவ்விடம் திரும்பிவிட முடியுமோ அவ்வளவு சீச்கிரமாக வந்துவிடு. நாளை உதயத்திற்கு முன் நீ மீண்டும் இவ்விடத்திலிருக்கவேண்டும். இல்லாவிடில் உன்னை

இவ்விடமிருந்து தப்பியோட விட்டதற்காக எனக்கு எத்தகைய சிக்ஷை விதிக்கப்படுமென்று தெரியுமல்லவா? என் உயிரையே இழக்கவேண்டிவரும். இந்தப்படிச் செய்ய நீ தயாரா யிருக்கிறாயா?"

"நாளை வைகறைக்குள் இவ்விடம் திரும்புவேனென்று தெய்வசாக்ஷியாக ஆணையிடுகிறேன். தங்கள் உடைமையே அழிந்திடினும் வாய்மை தவறாத உத்தமர்களின் சந்ததியில் உதித்தவள் என்ற முறையில் நான் செய்யும் இச் சத்தியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்: எனது சகோதரனாக உன்னை எண்ணி இவ்வார்த்தைகளைக் கூறுகிறேன். என் கணவர் எனது வார்த்தைகளை ஏற்றுக்கொண்டாலும் சரி அல்லது நிராகரித்தாலும் சரி, நாளை உதயத்திற்குள் நான் இவ்விடம் திரும்பவும் வந்து சேர்ந்து விடுவேன் என்பது சத்தியம், சத்தியம்! இச்சத்தியத்தினின்றும் சிறிதளவேனும் பிறழுவேனாயின், கண்ணியமும், நேர்மையும் வாய்ந்த ஓர் உத்தம ஆத்மாவை யவமதித்து, அதற்கு அழிவுதேடியதற்குரிய கொடிய சாபம் என்னைச் சூழுமாக! நான் இரவு பகலாக எந்த ஒரு பரமேச்வரனை வணங்கி வழிபடுகிறேனோ, அத்தகைய பரமாத்மா எனக்கு அதன் பொருட்டு எத்தகைய கொடூரமான தண்டனையை விதித்தாலும் அது என் விஷயத்தில் அதிகமாகாது. எங்கள் சாஸ்திரத்தில் கூறப்படும் ரௌரவாதி நரகங்களில் மிகமிகக் கொடிய நரகத்தில் நான் வீழ்ந்து அதன் கொடுமைகளுக் குட்படுவேனாகவும்!"

காவலாளியின் முகத்தில் திருப்திக்குறிகள் காணப்பட்டன. சந்தடியின்றிப் பூட்டில் சாவி சுழன்றது! கதவு சற்றுப் பின்புறம் நகர்ந்தது. மறுவிநாடியில் ராணி அவ்வறையினின்றும் வெளியேறினாள்.

"உனது வதனம் எவ்வளவு மாசற்றதாக இருக்கிறதோ அவ்வாறே உனதுள்ளமும் பரிசுத்தமானதாக இருக்குமென்று எண்ணுகிறேன். ஆனால் வெளித்தோற்றத்தைக் கண்டு நான் ஏமாற்ற மடைந்ததாக ஏற்படுமானால், ஒரு கள்ளங்கபடமற்ற எளிய மனிதன் அலறித் துடித்துத் துடித்து உயிரை விடுகையில் அவனது மரணத்தறுவாயில் இடும் சாபங்களும், அவனது கோரமான, அதி பயங்கரமான, பழிவாங்கும் எண்ணமும் ஏழேழு ஜன்மத்திற்கும் உன்னை விடாது பின்தொடர்ந்தே வரும் என்பதைமட்டில் நினைவில் வைப்பாயாக!"

ராணிக்குத் தன்னையு மறியாது கண்ணீர் அரும்பியோடியது. அவனது பாதங்களில் வீழ்ந்து தனது நன்றியை வெளிப்படுத்தலாமாவென்றுகூடத் தோற்றியது.

"இதற்கு மேல் அவகாசமில்லை, உனது அலுவலை அதிசீக்கிரமாகக் கவனி!"

ராணிக்குக் கால்கள் எழும்பவில்லை! எனினும் தன்னை யொருவாறு திடப்படுத்திக்கொண்டு காற்றினும் கடுவேகமாக ஓட்டம்பிடிக்கத் தொடங்கி அப்பேரிருளிடையே மறைந்தாள்!

கோட்டைக்குத் தென்புறம் சதுப்பான பிரதேசம். ஆதலின் ஹைதரின் படைகள் மற்ற மூன்று புறங்களிலும் பாளையமிறங்கியிருந்தனர். இந்த சதுப்பு நிலத்தை நோக்கியே ராணி ஓடத்தொடங்கினாள். அவளுக்கு முற்றி

லும் தைரியம் பிறக்கவில்லை. திரும்பித் திரும்பிப் பார்த்து, தன்னை யாரேனும் பின்தொடருகிறார்களா என்று அடிக்கடி கவனிப்பாள். ரஸ்தாவின் திருப்பத்தில் அவள் சற்று மூச்சுவிடுவதற்காக நின்றாள். அதற்குமேல் தனக்கு யாதொரு ஆபத்துமில்லை யென்று திடப்படுத்திக்கொண்டு அடுத்திருந்த நெல்வயல்களின் மூலமாக விழுந்தடித்துச் சதுப்பு நிலத்தை நோக்கி மறுபடியும் முன்போலவே ஓடலானாள்.

முட்களும், புதர்களும் அவளது கால்களில் கீறி, அவளது ஓட்டத்தைத் தடுத்தன. ஒவ்வொருசமயம் முழங்காலளவு சேற்றில் அகப்பட்டுக்கொண்டு காலையெடுக்கமாட்டாமல் அவள் தவித்தாள். கடைசியில் முட்களும், புதர்களும் செறிந்த கட்டாந்தரையில் காலடி வைத்தாள். இங்கே அவள் மிக்க பரபரப்புடன் எதையோ தேடிப்பார்த்துவிட்டு, மோப்பம் பிடிக்கும் வேட்டை நாயைப்போல் மறுபடியும் சிறிது தூரம் சென்று ஓரிடத்தில் நின்றாள். அங்கே ஒரு பெரிய பாறை; அதனடியில் புதரடர்ந்த பிரதேசம். சுற்றிலும் பின்னிக்கொண்டிருந்த கொடிகளையும், புதர்களையும் விலக்கி அவ்விடத்தில் ஏதோ வழியுண்டுபண்ண முயன்றாள்.

அதே சமயத்தில் அவளுக்குப் பின்புறத்திலிருந்து "உஷ், உஷ்" என்று ஒரு சத்தம் கிளம்பியது. அதைச் செவியுற்றதும் "வீரப்பா, வீரப்பா!" என்று மெதுவாக அழைத்தாள் ராணி. "யாரது?" என்று கணீரென ஒரு குரல் ஒலித்தது.

"நான் தான், ராணி ஸீதா"

ராணியின் குரலைக் கேட்டதுதான் தாமதம், வீரப்பன் தன் மறைவிடத்தினின்றும் வெளிக்கிளம்பினான்.

"தாயே, இதென்ன பரிதாபகோலம்! தாங்கள் இந்த இடத்தை எப்படி அடைந்தீர்கள்? உங்களை யாராகிலும் பின்தொடருகிறார்களா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை; அவர் சௌக்கியமாக இருக்கிறாரா?"

"அம்மணி, அவருக்கு ஒரு குறைவுமில்லை. அவர் தங்களைப்பற்றியே கவலையுடனிருக்கிறார். இனித் தங்களை மீட்பதற்கு மார்க்கமே யில்லையென்று அவர் கைவிட்டு விட்ட இவ்வேளையில் எதிர்பாராவிதமாகத் தாங்களே இவ்விடம் வந்துவிட்டது அவருக்குப் பெருமகிழ்ச்சியூட்டும். வாருங்கள், உடனே அவரிடம் அழைத்துச் செல்லுகிறேன்."

அதற்குமேல் ராணிக்குச் சொல்லவேண்டுமோ? அந்தச் சுரங்கத்தின் வழியாக வீரப்பனைப் பின்தொடர்ந்து மகிழ்ச்சியுடன் சென்றாள்.

## III

"எனதருமை ஸீதா, அவன் பரம அயோக்கியன், நன்றி மறந்தவன்; நாட்டை வஞ்சக முறைகளால் துராகிருதமாக அபகரித்தவன். அவனிடமா என்னைப் பணிந்துபோகச் சொல்லுகிறாய்?" என்று ஆத்திரத்துடன் மொழிந்தான் கிருஷ்ணப்ப நாயக்.

"நாதா! நமக்கு அதைத் தவிர வேறு வழியில்லை. கால தேச வர்த்தமானங்களுக்கேற்ப இங்கிதமறிந்து நடப்பதுதான் உண்மை வீரத்திற்கு அழகு செய்வதாகும். ஆயிரக்கணக்கான பகைவர்களைத் தாங்கள் எதிர்த்து எங்ஙனம் சமாளிக்க முடியும்? நம்முடைய அரசரோ சிறையிலிருக்கிறார். நல்லகாலம் பிறக்கும்வரையில் இந்த இழிவை நாம் சகித்துத்தானாக வேண்டும்."

"அதைக்குறித்து நான் மனதாற் சிந்திக்கவும் முடியாது!"

"அப்படியாயின் நான் இதோ புறப்பட்டுச் செல்லுகிறேன். அடுத்த முறை நாம் மறுஉலகில் சந்திப்போம்" எனக் கூறி ராணி அவனை யாலிங்கனம்செய்து கண்ணீரைப் பெருக்கினாள்.

"வேண்டாம், என் கண்ணே, நீ என்னைவிட்டுப் பிரியக்கூடாது. இருந்தால் நாம் உயிருடன் வாழ்வோம். இல்லாவிடில் ஒன்றாக மடிவோம்!"

"தாங்கள் எவ்வளவு யோசனையற்ற வார்த்தைகளைக் கூறுகிறீர்கள்? நம்மிடம் அன்பு செலுத்திய ஓர் உத்தமனுக்கு இதனினும் வேறு என்ன அபகாரம் செய்யவேண்டும்? நான் தங்கள் வார்த்தைகளுக்கு இணங்குவேனாயின் அவனுக்குத் தூக்குமரமே கதி. அதற்குக் காரணமாக இருப்பதைக் காட்டிலும் என்னையே அணு அணுவாகச் சிதைத்துச் சித்திரவதை செய்ய நான் உடன்படுவேன்" என்று கூறியவண்ணம் அவனது ஆலிங்கனத்தினின்றும் தன்னை விடுத்துக்கொண்டாள் ராணி.

"ஸீதா! அவஸரப்படாதே. சீக்கிரத்திலேயே எங்களுக்குள்ளாக ஓர் உடன்படிக்கை ஏற்பட்டுவிடும். அப்பொழுது நீ அங்கு திரும்பிப்போக வேண்டிய அவசியமே யிராது."

"இல்லை, நான் கட்டாயம் திரும்பிச் சென்றே யாகவேண்டும். அன்பே, பொழுது விடிவதற்கான அறிகுறிகளை இதோ நான் காண்கிறேன். நான் அவ்விடம் செல்வதற்குள்ளாக அவனது குற்றம் கண்டுபிடிக்கப் பட்டுவிடுமாயின் அவனது கதி யாதாகும்? நீங்கள் உங்களது விருப்பப் பிரகாரம் நடந்துகொள்ளுவதைக் குறித்து எனக்கு ஆக்ஷேபணையில்லை. என்னை மட்டும் இப்பொழுது போகவிடுங்கள்."

திக்பிரமையடைந்த அவளது கணவன் மேல்வார்த்தை பேசுமுன், ஸீதா புறப்பட்டுவிட்டாள்.

இரகஸ்ய வழியாகத் திரும்பவும் ஓட்டம்; சேற்றிலும் தண்ணீரிலும் முன்போலவே அகப்பட்டுக்கொண்டு தவிப்பு. மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க, கால்கள் மடிந்து சோர்வுற்று, மூர்ச்சையடையும் நிலைமையில், அவள் தான் சிறையிலிருந்த இடத்தை அணுகினாள். ஆனால் அங்கே அவள் கண்ட காட்சி அவளைத் திடுக்கிட்டு ஓ வென்று அலறச் செய்தது.

ஏனெனில் அவளது காவலாளியை அங்கே காணோம்! அறையின் கதவு திறந்தவாறிருந்தது.

அவள் உள்ளே நுழைந்து வீடு முழுவதும் தேடினுள். அவள் குரல்களுக்கெல்லாம் பதிலாகக் கிடைத்தது அக்குரலின் பிரதித்வனியே. அவளுடைய மார்பு படபடவென அடித்துக்கொண்டது. இருதயம் அப்படியே வெடித்துவிடும் போலிருந்தது.

''ஐயோ! அந்த எளிய மனிதனின் அழிவுக்கு—கோர மரணத்திற்கு—வழிதேடிய மகாபாபியாய்விட்டேனே. அவனது கடைசி நிமிஷங்களில் எவ்வாறு கதறியழுதானே! அந்தியகாலத்தில், தன்னை அக்கதிக்குள்ளாக்கிய என்னை எவ்வாறு சபித்தானே!'' என்று அவளது மனம் பதைபதைத்தது.

அதற்கப்புறம் அவள் யாதொன்றுக்கும் அஞ்சவில்லை. மரணபயம்கூட அவளை விட்டு அகன்றுவிட்டது.

சற்று தூரத்திற்கப்பால் ஒரு கூடாரம் அடிக்கப்பட்டிருந்தது. அதை நோக்கி அவள் தைரியமாக நடந்தாள். அதன் வாயிலில் இரண்டு வீரர்கள் பாரா கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அதனை நெருங்கி உள்ளே எட்டிப் பார்த்ததும், அவள் ஆச்சர்யத்திஞல் மெய்மறந்து ஓவெனக் கூச்சலிட்டாள்.

ஏனெனில், தான் எதிர்பார்த்ததற்கு மாருக அவளுடைய சிறைச்சாலைத் தோழன், அக்கூடாரத்திற்குள்ளே பல நண்பர்களுக்கு மத்தியில் உட்கார்ந்து, சாவதானமாக ஹுக்கா குடித்துக் கொண்டிருந்தான். இடையிடையே அவன் சிரித்துக்கொண்டும், தன்னைச் சுற்றிலுமுள்ளவர்களிடம் உரத்த குரலில் உற்சாகமாக வார்த்தையாடிக்கொண்டுமிருப்பதைக் கண்டு அவளுடைய வியப்பு அதிகரித்தது.

அதற்குமேல் அவளுக்கு ஆத்திரம் தாங்கவில்லை. மிக்க பரபரப்புடன் கூடாரத்திற்குள் நுழைய முயன்ருள். ஆனல் காவல்புரியும் சிப்பாய்கள் அவளை உள்ளே அனுமதிக்க மறுத்தனர். இராணி பிடிவாதமாகத் தன்னுடைய சிறைக் காவலாளியாகவிருந்த அம்மனிதனைச் சுட்டிக்காட்டி ''அதோ யிருக்கும் எனது நண்பருடன் அவஸரமாகச் சில வார்த்தைகள் நான் பேசவேண்டும்'' என்று சற்று அதிகாரத்துடன் மொழிந்தாள்.

அதற்குப் பிரதியாக, ''தாங்கள் யாரிடம் பேசவேண்டும். சுல்தானிடமா?'' என்று வினவினுன் காவலாளிகளில் ஒருவன்.

''சுல்தானு! எந்த சுல்தான்?''

''எந்த ஸுல்தானு? சுல்தான் ஹைதர்அலி தான். இது தெரியாமலா நீங்கள் அவரை உங்களது நண்பரென்று அழைக்கிறீர்கள்?''

இராணி அப்படியே ஸ்தம்பித்துப் போய்விட்டாள். அவள் தேகம் முழுவதும் அச்சத்திஞலும் வியப்பிஞலும் குலுங்கியது.

''தயவுசெய்து மாட்சிமைதங்கிய அரசர்பிரானிடம், ராணி வீராதேவி அவருடைய பேட்டிக்காக வெளியே காத்திருப்பதாக அறிவியுங்கள்.''

வாயிற்காப்போன் ஹைதரிடம் செய்தி எட்டவைத்து, திரும்பி வந்து அவளை உள்ளே அழைத்துச் சென்றுன்.


இராணியைக் கண்டதும் ஹைதர்அலி தனது ஆஸனத்தினின்றும் எழுந்து அவளை மிக்க மரியாதையுடன் எதிர்கொண்டழைத்து, "ராணிகாரு, தங்கள் வரவு நல்வரவாகுக" என்று புன்னகையுடன் மொழிந்தார்.

அதற்குள் ராணி முழந்தாளிட்டு வணங்கி, "ஐயனே, எனதறியாமையால் இழைத்த பிழைகளையும், தங்கள்பால் நான் உபயோகித்த கொடுஞ்சொற்களையும், வசைமொழிகளையும் மறந்து மன்னித்துவிட வேண்டுகிறேன். இந்தப் பரம சாமானியமான தோற்றத்திலேயும் முரட்டுப்பேச்சுகளுக்குப் பின்னேயும், மைசூர் ராஜ்யத்தின் சிம்மாஸனாதிபதியாகிய தாங்கள்........."

"ராணிகாரு, எழுந்திருங்கள். நான் தங்களை முன்னதாகவே மன்னித்துவிட்டேன். தங்கள் பொருட்டாகத் தங்களுடைய கணவரையும் மன்னித்துவிட்டேன். சற்று நேரத்திற்குள்ளாக அவரும் இவ்விடம் வந்து சேருவார். அவருக்கு நற்புத்தி புகட்டி, தமது நிலையினை உணரச் செய்ததுபற்றி எனது நன்றி தங்களுக்குரியது" என மொழிந்தார் சுல்தான்.

சிறிது நேரத்திற்கப்பால் அவள் புருஷனும் அவ்விடத்திற்கு அழைத்துவரப்பட்டார். ஹைதர்அலி அவருடைய தைரியத்தைப் பாராட்டி, அவருடைய வாளாயுதத்தைத் திரும்பவும் அவரிடமே அளித்துத் தன்னிடம் விசுவாஸமுள்ளவராக இருக்கும்வரையில் மேன்மேலும் அவர் பதவியை உயர்த்திப் பல வழிகளிலும் ஆதரவு அளிப்பதாக வாக்களித்தார்.

---




## கடல்நீர் உப்பானதேன்?

‘ஞானம்’

---

ஒரு காலத்தில் சமுத்திரம் முழுவதும் எவ்வித அலையுமில்லாமல் ஒரு பெருங் குளம்போல் தத்தளித்துக்கொண்டு, எல்லாரும் குடிக்கக்கூடிய சுத்தமான நீரையுடையதாயிருந்ததாம். அந்த காலத்தில் கடற்கரையோரமாயுள்ள ஓர் ஊரில் கபிலன் என்று ஒரு சிறுவன் வசித்துவந்தான். அவன் தகப்பனற்ற ஏழை. தினம் கடைவீதிக்குச் சென்று சாமான் தூக்கிவைத்துக் காசு சம்பாதித்து வந்தான். ஒரு நாள், கபிலன் தன் வயிற்றுக் கொடுமையினால் மிகுந்த கஷ்டப்பட்டுத் தன் வீட்டுக்குச் சாமான்களைச் சுமந்துவந்ததைக் கண்ட ஒரு சீமான், பேசினதற்கு அதிகமாகவே கூலிகொடுத்தனுப்பினர். உடனே அவன் வீட்டையடைந்து தன் தள்ளாத தாயாரிடத்தில் காசைக் கொடுத்து வழக்கம் போல் அன்று கூழ் காய்ச்சாமல் அப்பம் செய்யச்சொல்லிச் சென்றான். அவளும் தன் பிள்ளையின் பிரியத்திற் கிணங்கக் கடைக்குச் சென்று மாவு வாங்கி அப்பம் செய்துவைத்தாள். அன்று மத்தியானம் கபிலன் சமுத்திரத்தில் ஸ்நானம் செய்து, அப்பம் தின்ன மிகுந்த ஆசையுடன் வீட்டிற்குத் திரும்பினன். அப்பொழுது வீட்டுவாசலில்

தள்ளாத கிழவர் ஒருவர் நடுக்கிக் கொண்டு நிற்பதைக் கண்டான். அவர் கபிலனைப் பார்த்து "பசி வயிற்றை



யெரிக்கிறது, எதானாலும் கொஞ்சம் கொடு, அப்பா" என்று கெஞ்சினார். கபிலன் மனமிளகி, அவருக்குச் சில அப்பங்களைக் கொடுத்தான். கொஞ்சம் கொஞ்சமாய் எல்லா அப்பத்தையும் தின்றுவிட்டார் கிழவர்! வயிறு நிறைந்ததும், அவர் கபிலனை மனதார ஆசீர் வதித்து, எங்கிருந்தோ ஓர் யந்திரத்தை எடுத்தார். "ஏதோ என் கையினால் ஆனது இதுதான். உனக்கு இஷ்டமானதை நினைத்துக்கொண்டு இதை முடுக்கினால் கூடை கூடையாக வந்து கொட்டும். பிறகு உனக்குப் போதுமென்றபொழுது இதோ இந்த மந்திரத்தைச் சொல்லி வேறுபக்கம் முடுக்கினால் நின்றுவிடும்" என்று சொல்லி, அந்த யந்திரத்தைக் கொடுத்து மந்திரத்தையும் சொன்னார். அதைக்கேட்ட கபிலன் பிரமித்து, "உண்மையாகவா! எதோ, விளையாட்டுச் சாமான்கள் வரச்சொல்லுங்கள் பார்க்கலாம்!" என்று யந்திரத்தை முடுக்கினான். உடனே அந்த யந்திரத்திலிருந்து அநேக விதமான விலையுயர்ந்த விளையாட்டுச் சாமான்கள் உதிர்ந்தன. பிறகு கபிலன் "போதும், போதும்" என்று மாற்று மந்திரத்தையும் சொல்லி வேறுபக்கம் முடுக்கி நிமிர்ந்து பார்த்தான். அங்கு அக்கிழவரைக் காணோம். உடனே பொம்மையும் கையுமாக வீதிக்கு ஓடினான். அங்கும் காணோம். வந்தவர் சாக்ஷாத் சிவபெருமானே!

ஆனால் அச்சமயம் அந்தப்பக்கமாக வீதிக்கோடியில் வசித்துவந்த ஒரு கர்வம்பிடித்த செல்வச்சீமாட்டி சென்றாள். அவள் கபிலன் கையிலிருந்த விலையுயர்ந்த பொம்மையைப் பார்த்து, "ஏதப்பா அது?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தாள். வீட்டினுள்ளும் விலையுயர்ந்த விளையாட்டுச்சாமான்கள் நிறைந்து கிடந்ததைக் கண்டு பிரமித்தாள். அப்பொழுது கபிலன், ஆனந்த மேலீட்டினால், அவைகள் கிடைத்த விதத்தையும் அந்த யந்திரத்தின் மகிமையையும் ஆதியோடந்தமாகச் சொன்னான். அதைக்கேட்ட அவள் யந்திரத்தின்மேல் பாய்ந்து அதைத் தூக்கிக்கொண்டு வெளியே ஓடிப்போய் விட்டாள்.


வீட்டையடைந்து, "நம் உக்கிராணத்தில் என்ன இல்லை?" என்று தன் தாதியைக் கேட்டாள். "உப்புத்தானம்மா இல்லை" என்றாள் தாதி. உடனே அச்செல்வச் சீமாட்டி, "உப்பு வேண்டும்" என்று யந்திரத்தை முடுக்கினாள். அந்த நிமிஷமே யந்திரம் உப்பை வாரி இறைக்கத் தொடங்கிற்று. வீடு வாசல் முழுதும் உப்பால் நிறைந்தது. "போதும், போதும்" என்று அவள் எப்படி எப்படியோ திருப்பினாள் யந்திரத்தை. ஊம் ஹூம்; அது நிற்கவேயில்லை. அதை நிறுத்தவேண்டிய மந்திரம் அவளுக்குத் தெரியாது! சிறிது நேரத்தில் ஊர் முழுவதும் உப்பால் நிறைந்து விட்டது. இதைக் கண்ட ஊர்ஜனங்களனைவரும் விஷயம் அறிந்து அச்சீமாட்டியின் புருஷனிடத்தில் சென்று முறையிட்டனர். அவன் தன் மனைவியைத் திட்டித் தொந்திரவு செய்யத் தொடங்கினான். அவள், உபத்திரவம் பொறுக்க முடியாமல் யந்திரத்

தைத் தூக்கிக்கொண்டு கடற்கரைக்கு ஓடினாள். வழிநெடுக உப்பு இறைந்து கொண்டேதான் சென்றது. அவள் புருஷனும் அவளைத் துரத்திப் போனான். அவள் வெகு தூரம் சென்று, கரையோரமாக நின்று, கடலுக்குள் யந்திரத்தை வீசி எறிந்து, தானும்



விழுந்துவிட்டாள். அன்றைய தினத்துக்குள்ளேயே கடல்நீர் வாயில் வைக்க வொண்ணாத உப்பு நீராக மாறினது.

கடலில் விழுந்த சீமாட்டி வெகுதூரம் ஓடினாள். அப்பொழுதும் அவள் புருஷன் அவளை விடவே யில்லை; அவள் முழுகிய பொழுது அவனும் மூழ்கினான். அவன் ஆண் அலை (பெரிய அலை) யாகவும் அவன் மனைவி பெண் அலை (சிறு அலை) யாகவும் மாறினர். நீங்கள் சமுத்திர அலைகளைக் கவனித்துப் பார்த்திருக்கிறீர்களா ? இன்றும் ஆண் அலை பெண் அலையைத் துரத்திக்கொண்டுதான் வருகிறது. ஆனால் அதைப் பிடிக்கவே முடிவதில்லை.




## ஆகாயவாணியும் தூரதர்சனமும்

'இன்னும் சில வருஷங்களுக்குள் ஸாதாரண மனிதர் ஒவ்வொருவரும் இப்பொழுது தொலைபேசி வைத்துக்கொள்வது போல், ஒரு தனி ஆகாயவாணி வைத்துக்கொள்ள முடியும்' என்று அமெரிக்க 'ரேடியோ' நிபுணர் டேவிட் ஸார்நாப் கூறுகிறார்.

ஸமீபத்தில் ஜேபியில் எடுத்துச்செல்லக்கூடிய கடிகார அளவில் ஒரு 'ரேடியோ டெலிபோன்' கண்டுபிடித்திருக்கிறார்கள். இதைப் பலவிதங்களில் பரீக்ஷித்துப் பார்த்து சரியாக வேலை செய்யக்கூடியது என்று திடமாக அறிந்துகொண்டனர். ரோமாபுரியில் இப்பொழுது பாதசாரிகளும், 'மோட்டார்' முதலிய வண்டிகளில் பிரயாணம் செய்வோரும், எத்தனையோ மைல்களுக்கப்பாலுள்ள தங்கள் ஸ்நேகிதர்களுடன் ஸம்பாஷிக்க முடியும் என்பதை ப்ரத்யக்ஷமாகக் காண்கிறார்கள்.

ஆகாயவாணியின் உதவியால் புயல், மூடுபனி போன்ற இடையூறுகளிலிருந்து விமானிகள் தப்ப முடிகிறது. பகைவரின் ஆகாயவிமானங்கள் நாட்டுக்குள் இரவிலோ பகலிலோ வந்தால் ஆகாயவாணியின் மூலமாகக் கண்டுபிடித்துவிட முடிகிறது.

ஆகாயவாணிநிலையம் எவ்வளவுக்கெவ்வளவு உயரத்தில் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு வெளிவிடும் (transmitter) கருவியிலிருந்து ஒலி நன்ருகக் கேட்கும். அதனல் உலகிலேயே உயரமுள்ள கட்டடமான அமெரிக்க 'எம்பயர் ஸ்டேட் பில்டிங்'கில் இம்மாதிரி ஓர் ஆகாயவாணி நிலையம் ஏற்படுத்தி யிருக்கின்றனர்.

ஆரம்பத்தில் 'மோர்ஸ் கோட்' என்ற ஒருவித ஸங்கேத சப்தத்தால் செய்திகளை அறிந்தனர். அப்போதைக்கும் இப்போதைக்கும் எவ்வளவு வித்யாஸம்!எவ்வளவு முன்னேற்றம்! கடல்களைக்கடந்து எத்தனையோ மைல்களுக்கப்பாலுள்ள ஓரிடத்தில் பிடிக்கப்பட்ட படப்பதிவுகளோ, கையால் எழுதப்பட்ட எழுத்துக்களோ, ககனமார்க்கமாக அப்படியே வடிவு குலையாமல் இவ்விடம் வந்து சேருகின்றன! வீட்டில் உட்கார்ந்தவாறே சித்திரப் படங்கள் நிறைந்த ஒரு தினசரிப் பத்திரிகையை வெளியிடுவதுமன்றி படங்களை அயல் தேசங்களுக்கும் அனுப்பமுடியும்!

பிலடெல்பியாவிலுள்ள ஓர் ஆகாயவாணிநிலையத்தில் சூக்ஷ்மமான எந்திர சக்தியால் ஓர் ஆணி வெற்றுத்தாளொன்றின்மேல் வைக்கப்பட்ட 'கார்பன்' காகிதத்தில் படம் வரைகிறது. கீழேயுள்ள கடுதாசியின்மேல் அவ்வுருவம் பதிந்துவிடுகிறது. இது, அதே சமயம் நியூ யார்க் நகரில் எழுதப்படும்

ஒரு படத்தின் ப்ரதிபிம்பமே என்பதிலிருந்து தூரதர்சனம் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று தெரிகிறதல்லவா?

இன்னும் சில வருஷங்களுக்குள் கடிதங்கள், படங்கள், பத்திரிகைகள், விரல் அடையாளங்கள், முதலியவற்றை வாயுமார்க்கமாக வேறோரிடத்திற்கு அனுப்புவது சாத்தியமென்றால் அது ஆச்சர்யத்திலும் ஆச்சரியமன்றோ?

ஆகாயவாணி மூலமாக இவ்வாறு முதன்முதலில் வந்து கண்ணுக்குப் புலப்பட்ட படங்களும், எழுத்துக்களும் மங்கலாகவும் புள்ளிகள் நிறைந்தும் இருந்தன. இப்போதோ அவைகளுக்கும் மூலத்திற்கும் வித்யாஸமே தெரிவதில்லையாம்.

புயலடிக்கும் சமயங்களில் சக்திவாய்ந்த ஆகாயவாணிகள் இருந்தால்கூட ஒலி நன்றாகக் கேட்காது என்றால், ஸாதாரணமானவற்றைப் பற்றி கூறுவானேன்; 'கூ கூ' என்று காற்றின் இரைச்சலைத் தவிர வேறொன்றும் கேட்காது என்பது யாவருமறிந்ததே. இந்தச் சங்கடத்தை நிவர்த்திக்க எட்வின் ஆர்ம்ஸ்ட்ராங்க் என்ற அமெரிக்கர் தீவிர ஆராய்ச்சி செய்து ஜெயமடைந்துவிட்டார். ஒரு புயலிரவில் தினசரிப் பத்திரிகை ஒன்றின் முகப்புப் படத்தை யனுப்பித்தார். அது கீறு, கோடு ஒன்றும் விழாமல் சுத்தமாக வேறோரிடத்திற்கு வந்து பதிந்தது.

எத்தனையோ மைல்களுக் கப்பாலுள்ள ஒரு மனிதருடன் அவர் முகத்தைப் பார்த்துக்கொண்டே பேச முடியும் என்பது அதிசயமல்லவா? இம்மட்டோ? ஜேம்ஸ் போர்ட் என்ற அமெரிக்க 'ரேடியோ' நிபுணர் எஞ்ஜினியரிங் வகுப்பு மாணவர் நிறைந்த கூட்டமொன்றில், "எப்படிப் படங்களை ஆகாயமார்க்கமாக அனுப்பிக் கண்ணால் பார்க்கக் கூடுமோ, அதுபோலவே கூடியவிரைவில் வாசனையையும் முகரலாம்; ருசியையும் அனுபவிக்கலாம், என்று நான் திடமாகக் கூறுவேன்" என்றார்.

பாரசீக தேசத்திலுள்ள ரோஜாத் தோட்டத்திலிருக்கும் ரோஜா மலர், பன்னீர், இவற்றின் மணத்தை நம் வீட்டில் உட்கார்ந்தபடி முகருவதென்பது, நடக்கக்கூடிய காரியமா என்று நாம் எண்ணலாம். நம் முன்னோர்கள்—100 வருஷத்திற்கு முந்தி இருந்தவர்கள் கூட— ஆகாய விமானத்தில் பறக்க முடியும் என்று நினைத்திருப்பார்களா? அதுபோலவே இன்னும் ஒரு நூற்றாண்டிற்குள் என்னென்ன அதிசயங்களும் அற்புதங்களும் நிகழவிருக்கின்றனவோ, நம் சிற்றறிவால் எப்படி அறியக்கூடும்?

## கறவைத்தொழில் வளர்ச்சி

சென்ற எப்ரல் மாதம்வரை கறவைத்தொழில் இலாகா, பூஸாவிலுள்ள சாம்ராஜ்ய விவசாய ஆராய்ச்சிசாலையின் ஒரு கிளைஸ்தாபனமாக இருந்துவந்தது. ஆனால் அத்தொழிலினால் கோடிக்கணக்கில் வருமானம் கிடைக்கிறபடியால், அதைச்சரிவர நடத்துவதற்காக இந்தியா கவர்ன்மெண்டார் அதைத் தனியாகப் பிரித்து, பிரத்தியேகக் கறவைத்தொழில்

ஆராய்ச்சி நிபுணர் ஒருவரையும் நியமித்திருக்கின்றனர். சமீபத்தில் வைஸ்ராய், தேக ஆரோக்யத்திற்கும், திடனுக்கும் பால் இன்றியமையாதது என்று பிரஸங்கம் செய்தது எல்லாருக்கும் ஞாபகம் இருக்கலாம். இப்பொழுது கவர்ன்மெண்டார் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சியால், இத்தொழிலில் இந்தியாவும் விருத்தியடைந்து மற்றதேசங்களுக்குச் சமமாக வந்துவிடலாம் என்ற ஒரு நம்பிக்கைக்கு இடமேற்பட்டிருக்கிறது.

கர்ஸன் பிரபு வைஸ்ராயாக இருந்த காலத்தில், விவசாய இலாகாவை ஏற்படுத்தினபோது, ஆடுமாடு அபிவிருத்தியின்றி விவசாயம் முன்னேற்ற மடையாது என்று தெரியவந்தது. ஆடுமாடு அபிவிருத்தி என்றால் கறவைத் தொழில் முன்னேற்றமும் அவசிய மென்பது கூறாமலே விளங்கும். ஆகையால் இதுவிஷயமாக விவசாய ஸ்தாபனத்தார் எடுத்துக்கொண்ட சிரத்தையின் பேரில், பொதுமக்களின் கோரிக்கைக்கு இணங்கி, சர்க்கார் 1921-ஆம் வருஷம் மிஸ்டர் வில்லியம் ஸ்மித் என்ற அனுபவமுள்ள ஒரு நிபுணரை நியமித்தனர்.

சென்ற பதினைந்து வருஷங்களுள் அவ்விலாகாவின் உதவியினால் கறவைத்தொழில் மிகவும் அபிவிருத்தியடைந்திருக்கிறது என்று அதிகாரிகளின் அறிக்கையிலிருந்து தெரியவருகிறது. கறவை மாடுகளின் சௌகர்யத்திற்கு ஏற்றவாறு தற்காலமுறைப்படி இடங்கள் கட்டவும், பண்ணைகள் வாங்கவும் திட்டங்கள் போட்டு உதவினர். நகரங்களில் அசுத்தமான பாலினால் உண்டாகும் தீமைகளைப் போக்க, நகரசபைகளுக்குச் சிறந்த யுக்திகளைச் சொல்லித்தந்தனர். பிஞ்ஜராப்போல்களையும், கோசாலைகளையும் விஞ்ஞானமுறையில் நடத்தச்சொல்லி, சுத்தமான பால் வசதிக்கு ஏற்பாடுசெய்தனர்.

இன்னும் அநேக இடங்களில் கிளைஸ்தாபனங்கள் நிறுவினால்தான் தேசம் முழுவதும் நன்மையுண்டாகும் என்று கண்டனர். அதற்குப் பயிற்சிபெற்ற அநேகரும், மேய்ப்பு நிலங்களும் அவசியம். ஆகையால் 1923ல், கார்னல், பங்களூர், வெல்லிங்டன், ஆனந்தா, என்ற இடங்களில் ராணுவ இலாகாவின் கீழ் இருந்த பண்ணைகளைக் கறவை இலாகா அதிகாரிகளின் மேற்பார்வையில் விட்டனர். இவைகளுள் பங்களூரிலுள்ள ஸ்தாபனம் பிரதானமாக விளங்கியது. இந்தியா, பர்மா, ஸிலோனைச் சேர்ந்த பலர் இந்த ஸ்தாபனத்திலும், அலகாபாதிலுள்ள விவசாய ஆராய்ச்சிசாலையிலும் பயிற்சி பெற்றனர்.

கறவை இலாகா நிபுணரின் ஆலோசனை வரவர அத்யாவச்யமாயிருந்ததாலும், அவர் ஒருவரால்மட்டும் மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பது இயலாததாலும், அவருக்குத் துணையாக, வெளிநாட்டிலும் இந்தியாவிலும் பயிற்சிபெற்று அனுபவம் வாய்ந்த ஓர் இந்தியரை நியமித்தனர். 1931ல் டென்மார்க்கில் நடந்த கறவைத்தொழில் மகாநாட்டிற்கு இந்தியாவின் சார்பாக அவரை அனுப்புவிக்கவே, மேல்நாடுகளில் எவ்விதம் கறவைகளை அபிவிருத்தி செய்கின்றனர் என்று அறிந்துவர அவருக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது.

அதற்குப்பின் அவ்விலாகாவில் இன்னும் அநேக உத்யோகஸ்தர்களைச் சேர்ப்பது அவசியமாயிற்று, ஆனால் பொருளாதார நிலைமை மிகவும் சீர் கேடுற்றிருக்கவே அந்த யோசனை நிறைவேறாததுமன்றி, இன்னும்கூட செலவைக் குறைத்து சிக்கனம் செய்ய வேண்டியதாயிற்று.

ஆகையால் உப-நிபுணர் பதவியைத் தற்பொழுதிற்கு நீக்கிவிட்டனர். ஆனந்தா என்ற இடத்திலுள்ள ஆராய்ச்சிசாலையை மூடினார்கள்.

ஆனால் மீண்டும் பொருளதாரநிலைமை சரிப்பட்டுவந்தபோது முதன் முதலாக இந்த ப்ரச்னையைத் தீர்ப்பதென்ற முடிவுக்கு வந்தனர் சாம்ராஜ்ய விவசாய ஆராய்ச்சி இலாகாக்காரர். முன்போலவே ஓர் உப-நிபுணர் பதவியும், ஒருப்ரத்தியேகக் கமிட்டியும் ஏற்படுத்தினர். 1933ல் ஸிம்லாவில் நடந்த மாகாண பொருளாதார நிபுணர் மகாநாட்டில் இதற்காக ஒருதிட்டம் போட்டு 6 லக்ஷம் ரூபாய் தருமாறு கவர்ன்மெண்டாரைக் கேட்க, அவர்களும் உடன் பட்டனர்.

தற்போது, இந்தியா, வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் டப்பிப் பால், பொடிப்பால் சத்து, இவைகளுக்கு வருஷம் சராசரி 2, 00, 00, 000 ரூபாய் கொடுக்கிறது. ஆனால் இத்திட்டம் நிறைவேறினால் இத்தொகை மீதமாவதுமன்றி, இத்தொழில் முன்னேற்றமடைந்து இந்தியா வெளிநாடுகளுக்கு நிகராக ஆகிவிடும். இத்திட்டத்தின்படி கறவைத்தொழில் ஆராய்ச்சிசாலைகளில் இன்னும் வசதிகள் ஏற்படுத்திப் பண்ணைகள் வாங்கப்போவதாகவும் அநேகக் கிளைஸ்தாபனங்கள் நிறுவி, முக்கியமான இடங்களிலெல்லாம் பிரசாரம் செய்யவேண்டியது அவசியம் என்றும் தீர்மானித்திருக்கின்றனர். எல்லாக் கிளைஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும் ஒற்றுமையுடன் தங்கள் வேலையை நடத்தினார்களானால், கூடிய விரைவில் இந்த சுதேசிக் கைத் தொழிலில் இந்தியா முன்னேற்றமடையுமென்பதில் சந்தேகமில்லை.

முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியன என்னவென்றால், பணம் வேண்டும், பொதுஜனங்களுக்கு அதில் அக்கரை இருக்கவேண்டும், தற்கால முறையில் பயிற்சிபெற்ற அனுபவம் வாய்ந்த நிபுணர்கள் வேண்டும். இதையெல்லாம் சாத்யமானவரை செய்துமுடிப்பதாக சாம்ராஜ்ய விவசாய இலாகா அதிகாரிகள் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்றனர்.




# மாணாக்கர் விளையாட்டுக்கள்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

## முன்னுரை

ஒரு கலாசாலையில் வேலை பார்ப்பது எளிதான காரியமன்று. உபாத்தியாயருக்கு அடிக்கடி கோபம் வரும்படி மாணாக்கர்கள் நடப்பார்கள். பாடம் சொல்லும் முறை, அடக்கியாளும் முறை இரண்டிலும் நல்ல பழக்கம் இருந்தாலன்றி ஒரு கலாசாலையில் காலந்தள்ள முடியாது. ஆசிரியர்களிடத்திலுள்ள குறைபாடுகளையெல்லாம் விளம்பரப்படுத்துவதில் மாணாக்கர்களுக்கு ஒரு தனி ஊக்கம் இருக்கும். ஆனால் தம்முடைய ஆசிரியர் சிறந்தவரென்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டால் அவர்களுக்கு உண்டாகும் அன்பு வேறுவிதமாகவே இருக்கும். தங்கள் வாழ்நாள் முழுவதும் தங்கள் ஆசிரியர்களை அவர்கள் போற்றி வருவார்கள். அத்தகைய மாணாக்கர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே உண்டாகும் அன்பு மிக உயர்ந்தது; ஆசிரியராக இருக்கும் கால முழுவதும் இன்பமாக இருப்பதற்கு அவ்வன்பே உதவி செய்யும்; இல்லையெனில் ஏதோ கடமைக்கு வேலை பார்த்ததாகத்தான் முடியும்.

1880-ஆம் வருஷத்தில் கும்பகோணம் காலேஜில் வேலையில் நியமிக்கப்பெற்று அதுமுதல் 1903-ஆம் வருஷம் வரையில் அவ்விடத்திலும், அப்பால் 1919-ஆம் வருஷம் வரையில் சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜிலும் வேலைபார்த்து வந்தேன். ஏறக்குறைய 40 வருஷகாலம் கலாசாலை உபாத்தியாயராக இருந்துவரும் நிலை இறைவனருளால் எனக்கு ஏற்பட்டது. கும்பகோணம் வருவதற்கு முன்பு நான் திருவாவடுதுறை மடத்தில் படித்துக்கொண்டும் பாடஞ்சொல்லிக்கொண்டும் இருந்தேன்; பிரஸிடென்ஸி

காலேஜிலிருந்து விலகிய பின்பும் சிதம்பரம் ஸ்ரீ மீனாட்சி தமிழ்க் காலேஜில் பாடஞ் சொல்லியதுண்டு. ஆயினும் கும்பகோணத்தி லும் சென்னையிலும் இருந்த காலமே என்னுடைய தமிழ்ப் பணியில் ஒரு சிறந்த பகுதியாக அமைந்தது.

நான் காணும் கனவுகளில், கலாசாலையிற் பல மாணாக்கர் களிடையே இருந்து அவர்களுடைய உத்ஸாகமான செயல் களையும் அவர்கள் பேசும் பேச்சுக்களையும் அறிந்து மகிழுங் காட்சிகளே பல. தம்முடைய குடும்பத்தையே மறந்துவிட்டுக் கல்விகற்றல் ஒன்றையே நாடிப் பறவைகளைப்போலக் கவலை யற்றுப் படித்துவந்த மாணாக்கர்களுடைய கூட்டத்திடையே பழகு வதைப் போன்ற இன்பத்தை வேறு எங்கும் நான் அனுபவித்த தில்லை. அவர்களுடைய அன்பை நினைத்தாலே என் உள்ளத்தில் ஒரு புதிய ஊக்கம் உண்டாகும். அந்தக் காலம் போய்விட்டதா னாலும் அக்காலத்து நிகழ்ச்சிகளின் நினைவு இன்னும் என் மனத் தில் இருக்கிறது. அதனால், நான் நினைக்கும்போதெல்லாம் உள்ளத் தால் மீண்டும் கலாசாலையிலிருந்து பாடஞ்சொல்கிறேன்; இன்புறு கிறேன்.

இக்காலத்து மாணாக்கர்களுக்கும் அக்காலத்து மாணாக்கர் களுக்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு. நல்ல பொருளை நல்ல பொருளென்று உணர்ந்து பாராட்டும் சக்தி அவர்களுக்கு இருந்தது. தெய்வபக்தி, மரியாதை, அடக்கம் முதலியன அவர் களால் உயர்ந்த குணங்களாகக் கருதப்பட்டன. அத்தகைய மாணாக்கர்களுக்குப் பாடஞ் சொல்வதற்குப் புண்ணியம் பண்ணி யிருக்க வேண்டுமென்றே நான் கருதினேன்.

இளைஞர்களுக்கு விளையாட்டுத்தனம் இருப்பது இயல்பு. வகுப்பில் சில விளையாட்டுக்களை மாணாக்கர்கள் காட்டுவார்கள். ஆயினும் அவற்றை அடக்கும் முறையில் அடக்கினால் அவர்கள் பெட்டிப்பாம்புபோல் ஆகிவிடுவார்கள்; பின்பு தாம்செய்த குற்றத் திற்கு இரங்குவார்கள். அவர்கள் பெருங்குற்றம் செய்தார்களென் றும், அதற்குத் தண்டனை விதிப்பதற்குரிய அதிகாரி தாமென்றும் எண்ணுவது ஆசிரியருக்குத் துன்பத்தையே விளைக்கும். உலகியல்பு நன்றாகத் தெரியாத அவர்கள் பேதைமையாற் செய்கிறார்களென் றெண்ணிப் பிரியமாக நல்லறிவு புகட்டினால் அவர்கள் வணங்கி விடுவார்கள்.

வகுப்புக்களில் யாரேனும் குற்றம் செய்தால் அம்மாணாக் கரைச் சுட்டி, “ஏன் இங்ஙனம் செய்தாய்?” என்று வெளிப்படை

யாகக் கேட்பது என் வழக்கம் அன்று. அவர் செய்த குற்றத்தை மனத்தில் வைத்துக்கொண்டு, பொதுவாக, இத்தகைய குற்றங்களைச் செய்வதால் மாணாக்கர்களுடைய அபிவிருத்திக்கே பாதகம் நேருமென்று, பாடத்தில் ஒரு சந்தர்ப்பத்தைக் கற்பித்துக் கொண்டு குறிப்பாகச் சொல்வேன்; அல்லது ஒரு கதையைக் கூற ஆரம்பித்து அதன் முகமாக, அத்தகைய குற்றம் செய்வது கெடுதலென்பதைப் புலப்படுத்துவேன். இதனால் குற்றஞ் செய்த மாணாக்கர் மனம் வருந்தி இரங்கித் தனியே என்னிடம் வந்து மன்னிப்புக் கேட்பார்; பிறகு திருந்தி விடுவார்.

மாணாக்கர்கள் செய்யும் இத்தகைய விளையாட்டுச் செயல்களில் ஒவ்வொன்றும் விநோதமாக இருக்கும். ஆசிரியர்களாக இருந்தவர்கள் யாவரும் இத்தகைய செயல்களைப்பற்றி அனுபவத்தில் நன்கு அறிந்திருப்பார்கள். இவற்றை விஷமமென்றோ, குறும்பென்றோ, அசட்டுச்செயலென்றோ கூறுவதைவிட விளையாட்டென்று சொல்லுவதே மிகவும் பொருத்தமாக எனக்குத் தோற்றுகிறது. இத்தகைய மாணாக்கர் விளையாட்டுக்களில் எனக்கு இப்பொழுது ஞாபகம் வந்த சிலவற்றை எழுத விரும்புகின்றேன்.

## 1

## அண்டருலகம்

நான் கும்பகோணம் காலேஜில் சேர்ந்தவுடன், என்னைத் தம்முடைய ஸ்தானத்தில் வைத்து உபகாரம்செய்தவரும் எனக்கு முன் அங்கே தமிழாசிரியராக இருந்தவருமாகிய வித்வான் ஸ்ரீ தியாகராச செட்டியார் மாணாக்கர்களுக்குப் பாடஞ் சொல்லும் முறையை எனக்குக் கற்பித்தார். அதற்கு முன் ஆங்கிலப் பள்ளிக்கூடத்திற் பாடஞ் சொல்லும் பழக்கம் எனக்குச் சிறிதும் இல்லை. மடத்திற் பாடஞ் சொல்லிக் கொடுப்பதற்கும் காலேஜில் பாடஞ் சொல்லிக்கொடுப்பதற்கும் எவ்வளவோ வேற்றுமையுண்டு.

பாடஞ் சொல்லும்போது செய்யுளைப் படிக்கச் செய்து அதிலுள்ள விஷயத்தைச் சுருக்கமாக முதலிற் சொல்லிவிடுவேன்; அப்பால் கடினமான பதங்களுக்கு உரைகூறுவேன். இயன்றவரையிற் பிள்ளைகளை இசையுடன் படிக்கச் சொல்வேன். இசைப்பயிற்சியில்லாதவர்களை வற்புறுத்தமாட்டேன். படிக்கும்போது சொற்கள் நன்றாக விளங்குமாறு பிரித்துத் திருத்தமாகப் படிக்கும்படி கற்பிப்பேன். முதல்நாள் நடைபெற்ற பாடத்தில் மறுநாள் கேள்வி கேட்ட பிறகே புதுப்பாடத்தைத் தொடங்குவது எனது வழக்கம்.

ஒருமுறை எப். ஏ. முதல்வகுப்பில் நைடதம் பாடஞ்சொல்லி வந்தேன். அதில் இந்திரப்படலம் பாடமாக அமைந்திருந்தது. ஒருநாள் வழக்கம்போல் முதல்நாள் நடந்த பாடத்திற் கேள்வி கேட்டுக்கொண்டுவந்தேன். ஒரு செய்யுட்பகுதியாகிய, 'அண்ட ருலகத்திறைவ னவ்வுழி யிருப்ப' என்பதிலுள்ள அண்டருலக மென்பதன் பொருளென்னவென்று ஒரு மாணுக்கரைக் கேட்டேன். அவர் சிறிதும் யோசியாமல் "நாகருலகம்" என்று சொன்னுர். அவர் சொல்லும் விடை என்காதில் விழுவதற்குமுன் வகுப்பில் உள்ள பிள்ளைகள்யாவரும் கொல்லென்று சிரித்தார்கள். சிலர் சிரிப்புத் தாங்கமாட்டாமல் வாயைத் துணியாற் பொத்திக் கொண்டனர். விடைகூறியவர் பிழையாகக் கூறினுரென்பது யாவருக்கும் தெரியும். "ஆனுல் அதற்காக இவ்வளவு சிரிப்பு ஏன்?" என்று நான் நினைத்தேன். விடை சொன்ன மாணுக்கரும் ஒன்றும் விளங்காதவரைப்போல் நின்றுகொண்டிருந்தார். நான் எல்லோரையும் சும்மாயிருக்கும்படிக் குறிப்பித்துவிட்டு, "ஏனப்பா நாக ருலகம் என்ருய்?" என்று கேட்டேன். அவர் மிக்க மயக்கத்தை உடையவராய்ப் பிள்ளைகளையும் என்னையும் மாறிமாறிப் பார்த்துப் பசபசவென்று விழித்தார். அவர் ஒன்றும் சமாதானம் கூறவில்லையென்பதை யறிந்த வேருெரு மாணுக்கர் எழுந்து, "இங்கிலீஷில் அண்டர் (*Under*) என்பதற்குக் கீழென்று பொருள். அண்டருலகம் என்பதைக் கீழுலகமென்றெண்ணி இப்படிக் கூறினுரென்று தோற்றுகின்றது" என்று சொன்னுர். பின்புதான் எனக்கு விஷயம் விளங்கியது.

ஸம்ஸ்கிருதமும் தமிழும் கலந்த தொடர்மொழிகளே தமிழில் வருவதுண்டென்றும், இங்கிலீஷ் கலந்த மொழிகள் வருவதற்கு நியாயமில்லையென்றும், இங்கிலீஷ் இந்நாட்டுக்கு வருவதற்கு முன் இருந்த நைடத ஆசிரியருக்கும் இங்கிலீஷுக்கும் சம்பந்தமே யில்லையென்றும் ஒருவாறு சொல்லி அம்மாணுக்கரை உட்காரச்செய்தேன்.

அப்பால், "பாடம் படிக்கும்போது வார்த்தைகளை நன்ருக ஆராய்ந்து படிக்கவேண்டும். ஒவ்வொரு வார்த்தையும் எந்த உருவத்திலிருந்து எப்படி மாறி வந்ததென்று தெரிந்துகொள்வது நலம். எந்தச் சொல்லுக்கும் மனம்போனபடி பொருள் செய்யக் கூடாது. வடமொழிப் பதங்களாக இருந்தால் அவற்றினுடைய மூலத்தை அறிந்துகொள்ள வேண்டும்" என்று மற்ற வகுப்புப் பிள்ளைகளுக்குஞ் சொன்னேன்.

## 2

## வயலிலுள்ள முத்துக்கள்

நைடதம் நாட்டுப்படலத்தில் உள்ள,

"அருமறைக் கிழவ ருள்ளத் தவாக்கெட வன்பி னல்கும்
பெருநிதிக் குப்பை யோடு பெய்புனல் பெருகி யோடி
வரிவளை யலறி யீன்ற மணியிள நிலவு காலும்
திருவளர் கழனி தோறுஞ் செந்நெலை வளர்க்கு மாதோ"

என்ற பாடலை ஒருமுறை பாடஞ் சொல்ல நேர்ந்தது.

"நிடத நாட்டிலுள்ள செல்வர்களின் பெருங்கொடையையும் வளத்தையும் கூறுவது இச்செய்யுள். அரிய வேதத்தை உணர்ந்த அந்தணர்களுடைய உள்ளத்திலுள்ள ஆசை நீங்கும்படி அந்நாட்டிலுள்ளோர் அன்போடு பெரிய திரவியத்தொகுதிகளைத் தானமாக அளிப்பார்கள். அங்ஙனம் தானஞ் செய்யும்போது தாரை வார்க்கும் ஜலம் ஓடிச்சென்று வயல்களிற் பாய்ந்து அங்குள்ள செந்நெற் பயிரை நன்ருக வளரச் செய்யும். அவ்வயல்களில் சங்குகள் முழங்கிப் பல முத்துக்களைப் பெறும். அம்முத்துக்களின் ஒளி இளநிலவைப்போல இருக்கும்" என்று பொருள் சொல்லி அரும்பதங்களுக்குப் பொருளும் வேறு விசேடங்களும் சொன்னேன். அப்படிச் சொல்லி முடித்தவுடன் வகுப்பிலிருந்த மாணுக்கர்கள் குறிப்பெடுத்துக்கொண்டார்கள். அப்பொழுது ஒரு மாணுக்கர் எழுந்து நின்ருர். அவருக்கு 12 பிராயம் இருக்கும். "ஏன் நிற்கிருய்?" என்று கேட்டேன். "இந்தப் பாட்டில் ஒரு சந்தேகம் உண்டாயிற்று" என்ருர்.

**நான்:** சொல்லலாமே!

**மாணுக்கர்:** யாசகத்துக்கு வருகிறவர்கள் வயல்களையெல்லாம் தாண்டிக்கொண்டுதானே ஊருக்குள் வரவேண்டும்? அப்படி வரும்போது வயல்களில் முத்துக்கள் நிரம்பியிருப்பதைப் பார்ப்பார்களே. அவற்றை எடுத்துத் தங்கள் மடியிலே கட்டிக்கொண்டு போய் விற்றுச் செல்வத்தை யடையலாமே! எதற்காக அவர்கள் யாசிக்க வேண்டும்?

இப்படிக் கேட்டவர் உண்மையில் அறியாமையால் கேட்கிருரென்பது எனக்குத் தெரியும். நல்ல குணமுடையவராதலின் இயற்கையாகவே அவர் சந்தேகித்துக் கேட்டாரென்று உணர்ந்தேன். இத்தகைய வருணனைகளை அவர் முன்பு படித்திருக்கமாட்டாரென்று தோற்றியது. "இந்தப் பாட்டினுடைய தாத்பரியம் நிடத

நாட்டில் தர்மவான்கள் அதிகமாக இருந்தார்களென்பதுதான். அதைச் சாதுர்யமாக இவ்வாசிரியர் வருணித்திருக்கிறார். இப்படிச் சொல்லுவது கவிகளுடைய இயல்பு. இதைக் கவிமதமென்று சொல்லுவார்கள். இந்த வருணனை உயர்வு நவிற்சியணியென்னும் இலக்கணத்தின்பாற்படும். நாம் பேசும்போது கூடச் சில சமயங்களில் இயற்கைக்கு மாறான விஷயங்களைச் சொல்லுகிறோம். ஒரு குதிரையைப்பற்றிப் பாராட்டும்போது, 'அதுவா! மணிக்கு நூறுமைல் போகாதா!' என்கிறோம். ஒருவனுடைய ஆற்றலைச் சொல்லுகையில், 'இவன் அவனை எடுத்துச் சாப்பிட்டு விடுவான்' என்று கூறுகிறோம். ஒருவருடைய கைராசியை, 'நீ தொட்டதெல்லாம் பொன்னாகுமே!' என்று புகழ்கிறோம். இத்தகைய வார்த்தைகளுக்கு உள்ளவாறே பொருள் கொள்ளக்கூடாதல்லவா? உப்பில்லாமல் கலக்கஞ்சி குடிப்பவனென்று ஒருவனைப் பாராட்டினால், உடனே கலக்கஞ்சியை முன்னே வைத்து, 'இதைக் குடி' என்று சொல்லிவிடலாமா? மற்றவர்கள் சிரமப்பட்டுச் செய்யும் காரியத்தை எளிதில் முடிப்பவனென்றுதானே கொள்ளவேண்டும். இதுபோலவே கவிகள் தங்கள் நூல்களில் வருணனைகளை அமைத்திருக்கிறார்கள். ஒரு நகரத்தினுடைய மதில் உயர்ந்து கற்பக மரத்துக்கு வேலியாக இருக்குமென்று சொல்வார்கள்; மதில் மிக உயர்ந்ததென்பது தான் கருத்து. ஒரு நகரத்தை வருணிக்கும்போது வீதியின் இரு பக்கத்திலுமுள்ள தென்னமரங்கள் மிக உயர்ந்து வளர்ந்திருத்தலால் சூரியனுடைய குதிரைகள் மேலே போகும்போது மிதிக்க அம்மரங்களிலுள்ள இளநீர்கள் உடைந்து அவற்றிலிருந்து நீர் வீதிகளில் ஓடிச் சேறுவதற்குக் காரணமாகுமென்று சொல்லியிருப்பார்கள். அந்தச்சேற்றில் நெல் விளைக்கலாமேயென்று கேட்கலாமா? தென்ன மரங்கள் மிக்க செழிப்புடையனவென்ற கருத்தை மட்டும் தெரிந்துகொள்ளவேண்டும். இப்படி உள்ள வருணனைகள் நம் தேசபாஷைகளில் மிக அதிகம்" என்று சொன்னேன். அம்மாணாக்கர் ஒருவாறு சமாதானமடைந்து உட்கார்ந்தார். ஆனாலும் முழுச் சமாதானமும் அடைந்தாராவென்பது எனக்குச் சந்தேகமாகவே இருந்தது.

மற்றவகுப்பிலுள்ள பிள்ளைகளுக்கும் இத்தகைய சந்தேகங்கள் நேராமலிருக்குமாறு இவ்வருணனைகளை உள்ளபடியே பொருள் செய்துகொண்டு அதன்மேல் ஆராய்ச்சி செய்வது விபரீதமாகுமென்றும், கவியினுடைய கருத்தை யறிந்து சந்தோஷிக்க வேண்டுமென்றும் சொன்னேன்.

## 3

## எங்கள் ஐயா

ஸ்ரீ தியாகராசசெட்டியார் காலேஜ் வேலையிலிருந்து விலகிய பின்பும் சில மாதங்கள் கும்பகோணத்தில் மகாதளம் பேட்டைத் தெருவில் இருந்து வந்தார். ஒவ்வொருநாளும் காலேஜ் வேலை முடிந்தவுடன் மாலையில் அவர் வீட்டுக்குச் சென்று பார்த்துப் பேசியிருந்துவிட்டுத் தெரிந்துகொள்ளவேண்டியவற்றைக் கேட்டு வருவேன்.

அக்காலத்தில் எப்.ஏ. பரீட்சைக்கு நைடதத்தில் ஒரு பகுதி பாடமாக இருந்தது. செட்டியார் வேலையிலிருந்து நீங்கும் போது அதில் ஒரு பாகத்தைச் சொல்லி முடித்திருந்தார். நான் வேலைக்குவந்த பிறகு எஞ்சியிருந்த பாகத்தைப் பாடஞ் சொன்னேன்.

ஒருநாள் வழக்கம்போல் காலேஜ் வேலை முடிந்தவுடன் தியாக ராச செட்டியாரைப் பார்க்கச் சென்றேன். அங்ஙனம் செல்லும் பொழுது, என்னுடன் சில மாணுக்கர்களும் வந்தார்கள். மகா மகக்குளத்தைச் சுற்றிக் கரையில் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரால் மிக அழகாகக் கட்டப்பெற்ற பதினறு சிவாலயங்கள் உண்டு. அவற்றுள் மேல்புறமாக இருக்கும் ஆலயம் ஒன்று ஜபம் செய்வ தற்கும் மாலைவேளையில் இருந்து பொழுதுபோக்குவதற்கும் வசதியாக இருக்கும்.

அங்கே தியாகராச செட்டியார் இருந்தார்; உடனிருந்த இராமகிருஷ்ணபிள்ளை யென்ற ஒரு மாணுக்கருக்கு ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய திருவிடைக்கழி முருகன் பிள்ளைத் தமிழைப் பாடஞ் சொல்லிக்கொண்டிருந்தார். அப்பொழுது நாங்கள் போய் உடன் அமர்ந்து கேட்டுக்கொண்டிருந்தோம். பாடஞ் சொல்லிவந்த செட்டியார் ஒரு செய்யுட்பகுதியை விளக்கி அதற்கநுகூலமாகக் கம்ப ராமாயணத்திலிருந்து ஒரு செய்யுளைச் சொன்னுர். சொல்லும்போது அவர் உள்ளமுழுதும் கம்பர் வாக்கிற் பதிந்தது; மிகவும் உருகி அச் செய்யுளைப் பாராட்டினுர். அப்பொழுது அங்கே வந்திருந்தவரும், மகாமகக்குளத்தின் மேல்கரையில் வசிப்பவரும், செட்டியாரிடம் பாடங்கேட்டு முதல் வருஷத்தில் பி. ஏ. பரீட்சை தேறியவருமாகிய பி. கோபாலையரென்பவர், செட்டியார் சொன்ன கம்பராமாயணச் செய்யுளை அடுத்துள்ள இரண்டு மூன்று பாடல்களைச் செட்டியார் சொல்லுகிறபடியே சொல்லிவிட்டு, "ஐயா அவர்கள் இந்தப் பாட்டுக்

களைப் பாடஞ் சொல்லும்போது எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்!" என்று மிகப் பாராட்டினர்.

செட்டியார் உள்ளங்குளிர்ந்து என்னை நோக்கி, "இப்படிப் பிள்ளைகளுடைய மனத்திற்படும்படியும் அவர்களாகச் செய்யுட்களில் ஈடுபட்டு மனப்பாடம் செய்யும்படியும் நீங்கள் பாடஞ் சொல்லுவீர்களா?" என்று கேட்டார். "நான் என்ன சொல்வேன்! உங்களைப்போலச் சொல்வதற்கு யாரால் முடியும்? நீங்களெங்கே! நானெங்கே! ஏதோ ஒருவாறு உங்களை நினைத்துக் கொண்டு சொல்லுவேன். உங்களைப்போல் பிள்ளைகள் பாடம் பண்ணிக்கொள்ளும்படி சொல்ல இயலாது" என்று பணிவாகச் சொன்னேன். செட்டியாருக்கு இந்த வார்த்தைகளைக் கேட்டதில் உள்ளத்துள் சிறிது திருப்தி யுண்டாயிற்றென்பதை அவர் முகம் புலப்படுத்தியது.

அப்பொழுது என்னுடன் வந்தவருள் ஒருவரும், முற்கூறிய கோபாலையருடைய வீட்டிற்கு அடுத்தவீட்டில் வசிப்பவரும், எப். ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருந்தவரும், தைரியசாலியுமாகிய எம். ராமசந்திரையரென்பவர் கனைத்துக்கொண்டு செட்டியாருடைய முகத்தைப் பார்த்தார்; "என்ன ஐயா சொன்னீர்கள்! என் கண்ணுக்குமுன் எங்கள் ஐயாவை இப்படிக் கேட்கிறீர்களே. இந்தத் தர்மசங்கடமான கேள்வியை நீங்கள் இவர்களைக் கேட்கலாமா? இவர்களும் என்னால் முடியாதென்று சொல்லிவிட்டார்கள். எனக்கு மிக்க வருத்தமாயிருக்கிறது. நீங்களே இவர்களை வேலையிற் சேர்க்கும்போது நல்ல படிப்பாளியென்றும் நன்றாகப் பாடஞ் சொல்லுவார்களென்றும் சொல்லியிருக்கிறீர்களே; அப்படிச் சொல்லிவிட்டு இப்பொழுது எங்களுக்கு முன்னே இப்படிச் சொல்வது நன்றாக இல்லையே! இவர்கள் நன்றாகத்தான் பாடஞ்சொல்லுகிறார்கள்; மனத்திற்படும்படியே கற்பிக்கிறார்கள்" என்றார்.

**செட்டியார்:** அதெல்லாம் சரி; பாடமாகும்படி சொல்வாரா என்றுதான் கேட்டேன்.

**ராமசந்திரையர்:** ஏன் சொல்லமாட்டார்கள்? இவர்கள் சொல்லும்போதே செய்யுட்கள் தாமாக எங்களுக்குப் பாடமாகிவிடுகின்றன.

**செட்டியார்:** அப்படியானால் சில செய்யுட்களைப் பாராமற் சொல்லுவாயா?

**ராம:** அதில் என்ன தடை? இதோ, ஒப்பிக்கிறேன்; கேளுங்கள்.

இவ்வாறு சொல்லிவிட்டு அந்த மாணாக்கர் தம்முடைய பாடமாகிய நைடதம், பிரிவுறு படலத்திலிருந்து சில பாடல்களைச் சொன்னார்; அப்பால், "போதுமா? இன்னும் சொல்ல வேண்டுமா?" என்றார்.

செட்டியாரோ அதோடு விடாமல், "நீ என் மாணாக்கன் தானே?" என்றார். அவர் செட்டியாரிடம் சிலகாலம் பாடங் கேட்டவர்.

**ராம:** ஆமாம்; ஆனாலும், இந்தப் பாடல்களெல்லாம் இவர்கள் சொல்லிக்கொடுத்தவை. நீங்கள் சொன்ன பாடத்திற் சில மறந்தாலும் மறந்திருக்கும்; இவர்கள் பாடத்தில் சிறிதளவும் மறதியில்லை. உங்கள் பிரிவினால் எங்களுக்கு வருத்தமில்லாதபடி பாடஞ் சொல்லி உங்கள் ஸ்தானத்தின் கௌரவத்தை இவர்கள் பாதுகாத்து வருகிறார்கள். அத்தகைய எங்கள் ஐயாவைப் பார்த்து நீங்கள் இப்படிக் கேட்கலாமா?

**செட்டியார்:** உன்னுடைய பழைய உபாத்தியாயரைப் பார்த்து இவ்வளவு தைரியமாகப் பேசலாமா?

**ராம:** எங்கள் புதிய உபாத்தியாயரைப் பார்த்து நீங்கள் மட்டும் இப்படிச் சொல்லலாமா? உங்களிடம் படித்த நான் இந்தத் தைரியத்தை உங்களிடமே கற்றுக்கொண்டேன்.

செட்டியார் சிரித்தார்; "நீ சொல்லியது சரிதான். நான் கொண்டுவந்து வைத்தவரைப்பற்றி நீ இவ்வளவு புகழ்ந்து பேசுவது எனக்குத்தான் முதலில் சந்தோஷத்தை அளிக்கிறது" என்று சாதுரியமாகக் கூறி முடித்தார்.

'செட்டியார் பாடஞ் சொன்ன இடத்திலிருந்து கற்பிக்க வந்திருக்கிறோமே; நாம் பாடஞ் சொல்வதில் பிள்ளைகளுக்கு எத்தகைய அபிப்பிராயம் இருக்குமோ!' என்று எண்ணியிருந்த எனக்கு இந்த நிகழ்ச்சி ஆறுதலையும் ஊக்கத்தையும் அளித்தது.

---

# இலக்கியம்



## மழவை சிதம்பர பாரதியார்

ஜே. வேங்கடராம அய்யர்

---

தமிழ்நாட்டில் கலைமகள் என்றும் இளமையுடன் விளங்குவ தாகவே முதியோரின் கொள்கை. ஒரு பாஷையின் இலக்கியம் வளம்படும்போது அதை உபயோகிக்கும் வழிகளும் வளர்வது சகஜம். இக்காரணம்பற்றியே என்றும் வளர்ச்சியுள்ள கலைமகளை யுவதியாகக் கவிகள் சித்திரித்துள்ளார். சங்கநூல்களிலும், பிரபந்தங்களிலும், இதிஹாஸங்களிலும், சந்தநூல்களிலும் தமிழ் நடம்புரிந்து நிற்பதோடு, கீர்த்தனைகள் வாயிலாகவும், தருக்கள், கண்ணிகள் வாயிலாகவும் தமிழ்பாஷை ஒருவகை நல்வளம் அடைந்திருக்கிறது. அருணாசலக் கவிராயரின் இராமயண கீர்த்தனைகளும், வேதநாயகம் பிள்ளையவர்களின் ஸமரஸ கீர்த்தனை களும், நீலகண்ட சிவன் கீர்த்தனங்களும், மிகவும் இன்பமான வர்ணமெட்டுகளில் அமைந்து தமிழ் உலகிற்குப் பல்வகை நலத்தை யளித்து விளங்குகின்றன.

நீண்டகாலமாக நமது தேசத்தில் பக்திமார்க்கம் பெரும் பாலோரால் கடைப்பிடித் தொழுகப்பட்டு வருகிறது. இதற்கனு குணமாகவே பண்களும் பாசுரங்களு மியற்றப்பட்டுள்ளன. கதை ரூபமாகக் 'காலக்ஷேபங்கள்' தஞ்சையை யாண்ட மகாராஷ்டர மன்னர்கள் மூலமாய் தமிழ்நாட்டிற் குடியேறியது. இன்றைக்கும் காலக்ஷேபங்களில் மராத்தி, ஹிந்தி உருப்படிகள்தான் அதிகமாகப் பாடப்பட்டு வருகின்றன. இவ்வுருப்படிகள் ஆங்காங்கு பாடப் படும்போது கேட்பவர்களுக்குப் பெரும்பாலும் அவ்வப்பாஷா ஞானமில்லாததால் அவைகளின் சுவையை யறியமுடியாமலிருக் கிறது. தமிழ்பாஷையிலேயே இவ்வுருப்படிகளிருந்தால் அவை களின் சாரத்தை யாவருமெளிதி லறிந்துகொள்ள முடியும். கீதவாத்தியாபினயத்துடன் பகவத் ஸ்மரணை செய்து பரம் பொருளைப் போற்றிப் புகழ்வதுதான் 'கதா காலக்ஷேப' மென்

பதின் நோக்கம். கீதங்களின் வாயிலாய் மனது எளிதில் லயமடைகிறது. இன்னிசையோடு கீதத்தின் பொருளும் கேட்போர் மனதிற் பட்டால் அவாது கருத்து இழுத்து நிறுத்தப்படுகிறது. இதுதான் சங்கீதத்தின் ஆனந்தம். பாத்திரம் நிறைய பானகம் எதிரிலிருந்தாலும், அதை வாயிலிட்டாலன்றி எப்படி அதன் சுவையை யறியமுடியாதோ, அப்படியே கீதம் கேட்க இனிமையாயினும் அதன் பொருளே மனதிற்கு ஆனந்தமளித்து அதை ஏகாக்கிரப்படுத்துகிறது. பக்தியைப் புகட்டுவதற்கு 'கதாகாலக்ஷேபம்' ஓர் எளிதான வழி. அரன் புகழுரைத்தலும், அடியார் சென்ற மார்க்கங்களை அறிவித்தலுமே கதைகளின் முக்கிய கருத்து. இத்தகைய 'காலக்ஷேப'த்திற்கு ஓர் எடுத்துக் காட்டாக தமிழ் பாஷையில் நந்தனர் சரித்திரத்தின் மூலமாய் கோபாலகிருஷ்ண பாரதியார் 'காலக்ஷேப' நூல் இயற்றியது யாவருமறிந்ததே. இதைப்போலவே பாண்டியநாட்டில் மதுரைக்குத் தென்கிழக்கேயுள்ள மழவராயனேந்தல் என்னும் கிராமத்தில் சின்னசாமி என்ற சிதம்பர பாரதியார், தமிழில் அரிய கதாகாலக்ஷேப நூல்களும், பக்திரஸமான கீர்த்தனைகளு மியற்றியுள்ளார். இவர் வாக்கு இன்பமாகவும் இசைப்பொருத்த முள்ளதாகவுமிருக்கிறது.

இவர் ஜனனபூமியாகிய மழவராயனேந்தலை மழவை யென்றழைப்பதுண்டு. சிலேடைப்புலி பிச்சுவய்யரவர்கள் பிறந்த வேம்பத்தூருக்கு மேற்கில் இவ்வூரிருக்கிறது. இவ்விரண்டு ஊர்களுக்குமிடையே வைகை நதி பிரவாகித்து நிற்கிறது. மழவையில் சங்கீத சாகித்திய தமிழ் வித்வான்கள் பரம்பரையில் வந்த சிதம்பர பாரதியார், சுப்பிரமணிய தீக்ஷிதரென்ற பிராமணரின் புதல்வர். பாரதியாரின் மூத்த சகோதரர் சுப்பராமய்யரென்பவர் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் அஷ்டாவதானியாயிருந்த தமிழ்ப் புலவர். பாரதியார் 'விஜய வருடம் மின்மதியிடபம், விஜய வவிட்டமு மேவிடச் சனித்தவர்': சுமார் 1833-ஆம் வருடம் பிறந்தவர்.

தன் குலதனமாகிய தமிழைத் தன் தந்தையாரிடமும் தன் தமையனாரிடமும் கற்றறிந்து இயல் இசை நாடகங்களில் தேர்ச்சியுற்றார். கொம்பில் பழுத்த பழம்போல் தன் குடும்பத்திலேயே கல்வி பயின்று விளங்கியவர். இளமை முதலே இறைவனை வழிபட்டு மனதை அங்குமிங்கும் செலுத்தாது உலகத்தில் இருந்தும் உலகம் உட்புகாவண்ணம் மனத் துறவுற்றனர். தன் வாழ்நாட் காலம் பூராவும் அரியையும் அரனையும் போற்றித் துதித்துப் பாடி மகிழ்வுற்றவர். தன் பக்தி மேலீட்டினால் அரி, அரன், அம்பிகை,

இவர்கள்மேல் கீர்த்தனங்களும், பெரியபுராணச் சரித்திர கீர்த்தனை ரூபமான கதா காலக்ஷேபங்களும், ருக்மணி, துருவ, அம்பரீஷ, குசேல சரித்திர காலக்ஷேபங்களு மியற்றியுள்ளார்.

மதுரை அம்பிகை பேரில் மீனாக்ஷி சந்தக் கும்மியும், திருக் கோகர்ணம் பிரகதாம்பாள் பேரில் சந்தக்கும்மியு மியற்றியிருக் கிறார். இவர் கதைகளில், மஹாராஷ்டிர சம்பிரதாயத்திலுள்ளது போல், சவாய், சாகி, திண்டி, கேகாவளி, அபங்கம், ஆரியா, முதலிய சந்தங்களில் தமிழ் உருப்படிகளும், வெண்பா, கலித்துறை, சந்த விருத்தங்கள், கீர்த்தனங்கள், முதலியவைகளும் காணப்படு கின்றன. சங்கீதத்திலும் சாகித்தியத்திலும் சிறப்புடனும், பொருட் சுவையுடன் பக்தி வழுவாதும், பல கற்பனைகளுடன் கீர்த்தனங்கள் சமயோசிதமாய் செய்யப்பட்டிருக்கின்றன. பழமையிற் புதுமை யென்றாற்போல், பழைய வழியில் தமிழ் கற்று, காலத்திற்கேற்ற வாறு அருமையான ஒருமையுள்ள கீர்த்தனங்களியற்றியிருக்கு மிவருடைய நூல்களின் சாரத்தை என் சிற்றறிவிற்கு எட்டிய வரை யில் அடியிற் குறிப்பிடுகிறேன். நறுநெய்யைத் துரும்பாலெடுத்து மாதிரி காட்டுவதுபோல் என் சிற்றறிவால் காட்டப்படும் நூற் களின் 'வாசனை' பெரியோர்கள் நேரிற் படித்துக் கேட்டு ஆனந் திக்க வேண்டிய விஷயமாதலால், எவ்வளவு எழுதினும் ஏட்டி லடங் காததாயிருக்கிறது. இவர் 1898-ஆம் வருடத்தில் துறவு பூண்டு விண்ணுலகடைந்தனரெனத் தெரியவருகிறது. இவர் புதல்வர் களில் ராமசாமி அய்யரென்றவர் இப்போது ஜீவந்தராயிருக்கிறார். இவரும் இயல் இசைத்தமிழ்களில் வல்லவர்.

(1) **சந்தக்கும்மிகள்:** பிரகதாம்பாள் சந்தக் கும்மி திருக்கோகர்ணம் பிரகதம்பிகை பேரில் பாடியது.* இதற்கு வேம்பத்தூர் சிலேடைப்புலி பிச்சுவய்யரவர்கள்,

> "அற்புதஞ் சேர் தென் கபிலையம்மை (பி) ரகந் நாயகிமேற்
> பற்பல சந்தங்கள் பகர்குமியைச்—சொற்புலவோர்
> போற்று மழவை புரிவாழ் சிதம்பரமா
> லேற்றின னெல்லோரு மெய்க்கவே"

என்று சாற்றுக்கவி யளித்திருக்கின்றார்கள். இந்நூல் முதற் சந்தத்தில்,

> "மணிதங்குக—பிலையின்பா—கரிலங்கிய—பிரகதம்பிகை
> மாதங்கிமேற் கும்மிப்பாட்டுரைக்க

---

*இந்நூல் 1899-ஆம் வருடம் மதுரை சவுத் இந்தியன் பிரஸில் அச்சிடப் பட்டிருக்கிறது.

அணிதங்கிய—பிரைவென்றுல—வொருகொம்புடை—மதகுஞ்சர
னம்பொற்பதத் துணைக்காப்பாமே''

என்ற சந்தம் செந்தமிழ்த் தேனைக் காதில் பாய்ச்சா நிற்கிறது.

நாட்டுவளத்தில்,

''தடமெலா மதன் கணைகளே—பணை
யிடமெலாஞ் சிலைப்பணைகளே.
அடர்மலரெங்கும் நாணிகளே—சோலை
அகமெலாந் தென்றற் காணிகளே.''

''தந்திகள் நீர்க்கிரி பாயுமே—கந்
தரங்கள் நீர்க் கொள்ளல் போலேயுமே.
மந்தி கவிகளை யடுக்குமே—மதுச்
சிந்துகனியுணக் கொடுக்குமே''

''பலாக்கனியில் முழவடிக்குமே—மந்தி
யார்த்திடவே மயில் நடிக்குமே
சிலாக்கியம் செய்து சிரமிசைக்குமே—சோலை
மேற்பலமுங் கொடுத்திசைக்குமே''

என்றும், இன்னும் பலதிறப்படவும் வர்ணித்துள்ளார்.

சந்தம்

மனப்பெண்கள்த—நிழற்கண்களை—நாடுவாரதை
வரிக்கெண்டைக—ளெனத்திண்கர—மூடுவார்''

என்று நிலவளச் சிறப்புடன் பெண்களின் பேதைமையையும் வர்ணித்திருப்பது குறிப்பிடத்தக்கது. நகர்வளச் சிறப்பில்,

''இல்லாமை பொய்மாதரிடைகளே—என்றுஞ்
செல்லாமை கலிநடைகளே
பொல்லாமை முழுமணிகளே—சற்றும்
நில்லாமை துயர்பிணிகளே''

''மாதர் நெஞ்சத்தினு மாழமே—அகழ்
வாரிதிபோல கல் நீளமே
மேதகு கோட்டை விண்ணளக்குமே—கண்டு
மேருவும்மா முடிதுளக்குமே''

என்றும்,

சந்தம்

''புதுவாபுரி—தனைநாடிய—அமராபதி—அளகாபுரி
பொருவாமலு—மறைவாயுள—நாணுமே
இதுவாய்கொடு—சொலமாவுர—கனுமேமிக—மனம்நாடிட
யிழியாதல—முறவேயுடல்—கோணுமே''

"அளிகள்வந்தளி—மதுவையுண்டமிழ்—முருகுபைங்குழ—லதிலருந்தவ
ரகமுமஞ்சரி—யுடன்மிலைந்தம—னேன்மணி
ஒளிமிகும் பிறை—யடைகிடந்ததை—நிகரிலங்கிய நுதல்பொருந்திய
உருவமிஞ்சிய—சுரத தந்திரசி—காமணி."

"வஞ்சிக்கொடியிடை தள்ளாட மையல்—மிஞ்சிமதனுந் தொடர்ந்தோட
ரஞ்சிதமாக நடைபயின்று நீங்கள்—நாலைந்து பெண்களும் வாருங்கோடி."

சந்தம்

"வெற்றிகொண்டிடு—கணைக்கும்பிர—மித்திலங்கிய—பிணைக்கும்பொரு
வித்தையுந்தனி மிரட்டுந்தருகண்களா
முற்றிலுங் கதிர்—களைக்கொண்டுமெ—தித்திடுந்திரு—மதிக்கும் பிரபை
மொய்த்திடுங் குளிர்—முகத்தின் சிறு—பெண்களா."

"துங்கமிகுந்திடுஞ் சித்திராங்கி—ரதி
யங்கம்பொருந்தி யரத்திஞங்கி
நங்கையர்மால்கொளும் வஜ்ஜிராங்கி—நீங்கள்
நாலைந்து பெண்களும் வாருங்கோடி"

என்றும் வரும் சந்தக் கும்மிகளில் காணும் விசேட கற்பனைகளும் சந்த நயமும் போற்றத் தகுந்தவை.

"வண்டாருங் குழலாட—வரிவிழியம்புகளாட
வெண்டரளவடமாட—விளங்குங் கொங்கைக் குடமாட"
"கொங்கை சுமந்திடப் பொருக்காக்—கொஞ்சவிடை தள்ளாட
அங்கசனும் மெய்மறந்தங்—கவசமுற்று மல்லாட
ஆடவர்கள் மனமாட—அரிவையர்களினமாட
நாடுந்தவரகமும்நளி—னத்திலை நீர் போலாட"

என்ற வர்ணனையும் கற்பனையும் அழகா யமைந்திருக்கின்றன.

"விண்ணவர் மாதரதிசயிக்க—ரம்பை—மேனகை யூர்வசியுந் திகைக்க
விண்மதிபோலும்—முகங்கண்டு—கைமரைமேலும்—முகிழ்க்கப்பின்
னெண்ண கையாலும்—கதிரெனப்—பின்னதினுலும்—மலர்ந்திட
மிசைகொண்டதி—ரடிபந்தென—விசைகொண்டிடை துவளும்படி
விரைந்தெழும்பி நடித்தாரே—யெங்கும்—நிறைந்து குமியடித்தாரே"

என்னும் இச்சந்தத்தில் மிகவும் நூதனமான சந்தநடை காணப்படுகின்றது. இந்நூலில் திருக்கோகர்ண க்ஷேத்திரத்தின் வரலாறும் மஹிமையும் சொல்லப்பட்டிருக்கின்றன. இச்சந்தக் கும்மியிலுள்ள சந்தங்களைக் காரைக்குடி வீணை சகோதரர்கள் தங்கள் கச்சேரிகளில் யாழிலிசைத்துப் பாடுவதுண்டு. கேட்போருக்கு மிகவும் ஆனந்தமாயிருக்கும். இதைப்போலவே மீனுக்ஷி சந்தக் கும்மியும் மிகவும் அழகாய் அமைக்கப் பெற்றது. இதில்,

சந்தம்

"மதுராஞ்சிதவ—(மி)ருத சந்திர—ஸ(தி)ருச சுந்தர—வதனியம்புஜ
மலர்மடந்தையை நிகர் விளங்கிய—மோஹினி
கதிர்சிறந்திடு—முகுரதுங்கஸு—கனநயம்பெறு—(பி)ரமர கொந்தள
கமுமிலங்கிய—(மி)ருதுள பங்கஜ வாகினி"

என்ற சந்தத்தில் வடமொழியுந் தென்மொழியும் பாலுந்தேனு மாய்ப் பொலிந்தமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

வைகை நதி வர்ணனையில் வரும்,

"எங்களையாண்டருள்—ஸம்பந்த மூர்த்தியே டேந்துநதி யெதிர்நீந்துநதி
துங்கமிகுந்த குண்டோதரனுண்டுஞ்—சுரக்குநதி மெய்நிறக்கு நதி"

என்பது போன்றன கற்றோர்க்கும் மற்றோர்க்கும் மகிழ்ச்சி விளைக்கும். இக்கும்மியில் *ஹாலாஸ்ய மகாத்துமியமும் சுருக்கமாய்ப் பாடப்பட்டிருக்கிறது.

---

* இக்கும்மியின் 3-ஆம் பதிப்பு 1935-ல் மதுரையில் அரிஸமய திவாகர பிரஸில் அச்சிடப்பட்டிருக்கிறது.

# ககாவாவின் சிந்தனைகள்—II

ஏ. டி. கிருஷ்ணமாச்சாரி, பி.ஏ., பி.எல்.

பிரம்மாண்டமான கட்டடங்களைக் கட்டுகிற மதங்கள் மனதை வருத்துகின்றன. அவை ஆத்தும தத்துவத்தின் உதிர்ந்து போன ஓடு போன்றவை. கட்டடங்கள் கட்டும் மதத்தைவிட மனிதரைப் புனிதமாக்கும் மதமே மேலானது. இந்தக் காரணத்தினால், எந்த மதமானாலும் சரி, அது பெரிய கட்டடங்களுள்ளதானால் நான் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை.

உலகிலே எல்லாக் கோயில்களையும், பள்ளி வாசல்களையும், மண்டபங்களையும், ஜெபாலயங்களையும், தரையோடு தரையாய் இடித்துவிட்டால் நலமுண்டாகும். ஒருவேளை அப்பொழுது தான் நமக்கு உண்மையான ஞானம் இன்னதென்று விளங்குமோ என்னமோ. நம் படுக்கையறையிலும், பாடசாலையிலும், தெருக்களிலும், தொழிற்சாலையிலும், கைத்திறனிலும், உலாவுகையிலும், உழைப்பிலும், பொழுதுபோக்கிலும், உணவிலும், உறக்கத்திலும்—எங்கும் உண்மையான ஈசுவரபக்தி வியாபிக்கவேண்டும்.

*  *  *  *

இயேசுவைக் கொன்றவர்கள் மதவெறிக் கூட்டத்தார்தான். புத்தரைப் பரிகசித்தவர்கள் பிராமணோத்தமர்கள்தான். புதிதாய்ப் பிறந்த உணர்ச்சிகளால் உயிர்பெற்றெழும் இயக்கங்களைத் தாக்கி அழிப்பவர்கள் பணத்துக்கும் பதவிக்கும் ஆசைப்பட்டு அவற்றைக் கட்டிக்கொண்டு அழுகிறவர்கள்தான். அவர்களால்தான் அமைதி உலவுகிறதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் தங்களுக்கு ஏற்றபடி நீதி நியாயங்களை ஏற்படுத்திக்கொண்டு, கடவுள் பெயரைச் சொல்லி ஜனங்களை ஏய்க்கிறார்கள். இந்த மோசத்தினால் எல்லாரையும்விடக் கடவுளுக்குத்தான் அதிக தலையிறக்கம் உண்டாகிறது.

இயேசு, யூத ஜாதியாருக்கு மட்டும் போதிக்கவில்லை. புத்த ருடைய அவா குபேர அரண்மனைமட்டும் அழிந்தால் போதும் என்றதில்லை. உலகமுழுவதுமே மோக்ஷ நிலையை அடையவேண்டும் என்றார். எவ்வித சூழ்ச்சியையும் மீறி உண்மை வெளிப்பட்டுவிடும். சிலுவையில் இறந்த கிறிஸ்து உண்மையின் குமாரனாக மரித்தார். தேசத்துரோகி என்று சொல்லித்தான் ஸாக்ரடீஸுக்கு விஷத் தைக் கொடுத்தார்கள்.

ஜனங்களுக்கு மனச்சாட்சி என்று ஒன்று இருக்கிறது என் பதை அடியோடு மறந்துவிட்டு அதிகாரத்தினால் மட்டுமே ஆள முயலுவோர் தேசத்தின் கேட்டுக்குச் சீக்கிரம் வழி தேடுகிறார்கள் என்பது நிஜம். மதவெறி வேட்டையிலிருந்துதான் ஸ்பெயினின் வீழ்ச்சி தொடங்கிற்று. மதத்தின் பெயரால் கட்டுப்பாடுகளை ஏற் படுத்துவதற்கு முன்னே இருதய கமலத்தில் இருக்கும் கடவுளைத் தெரிந்துகொள்ளுங்கள்.

பொய்யுடன் சண்டைபோட நேரிடுமே என்று சத்தியம் பயப்படலாமா? உலகத்தைக் கெடுப்பது பொய்வேஷந்தான்; சத்தியமல்ல. சத்தியத்தினால் ஏற்படும் அல்லோலகல்லோலத்தி னின்றும் பிற்கால சந்ததியார்க்கு எப்பொழுதும் சாசுவதமான ஓர் ஏற்பாடு உதயமாகிறது வழக்கம்.

* * * *

மிருகபலத்தைக்கொண்டு எதையும் ஜயிக்கலாம் என்கிற கொள்கை அநேகருக்கு இருக்கிறது. பலம் அவ்வளவு பெரிய வஸ்துவாயிருந்தால் பூகம்பங்களும், எரிமலைப் பொங்கல்களும் எப்பொழுதும் பலன் தரவேண்டுமே? இவ்வுலகிலேயே அவதார புருஷர்களைவிட இந்தப் பீடைகளால், அளவிட முடியாத நன்மை கள் ஏற்படுமே? உலகக்ஷேமம் சேனாபதிகள் கையிலும், சேனாபதி களை ஆட்டும் சர்வாதிகாரிகள் கையிலும், புஜபலத்தை நம்பி யிருக்கும் அராஜகக் கலகக்காரர் கையிலும் இல்லை யென்பது நிச்சயம்.

சமூக க்ஷேமம் நன்மை பயக்கும் பல காரணங்களால் ஏற் படுகிறது. விசேஷ குணம், லக்ஷியம், ஊக்கம், ஆக்கம், நுணுக் கம் முதலியவை அக்காரணங்கள். இவற்றால் விசேஷ நன்மை உண்டாகிறது. பலாத்காரத்தினால் ஏற்படுத்தப்படும் ராஜ்யங்கள் பலாத்காரத்தினாலேயே அழிந்துவிடும். அப்படிப்பட்ட நிலை யில்லா ராஜ்யத்தில் என்னை வாசஞ் செய்யச் சொல்லாதீர்கள். பலாத்கார தத்துவம் எந்த ரூபத்தில் தோன்றினாலும் எனக்கு அதனிடம் விசுவாசம் கிடையாது.

நம் உள்ளத்தினின்று எழுகிற—விஞ்ஞானம், ஆராய்ச்சி, நுணுக்கம், கலை, நாடகம், ஓவியம், நீதி, மதம், முதலிய பரோபகார விசேஷம் பொருந்திய—சக்தி ஒன்றுதான் நம்மை உய்விக்குமே யன்றி மற்றொன்றன்று. உள்ளிருந்துதித்தெழும் இவ்வல்லமை களைக் கைவிட்டால், பகட்டு வல்லமைகளாற் பயனில்லை. என் ஆதாரம் கண்ணுக்குத் தெரியாத ஆத்தும பலம்தான்; மிருக பலம் அல்ல.

* * * *

கலகத்தினால் அத்துகளை மீறிச் செய்யும் காரியங்களாலும், எதையும் வழக்கிட்டுக் குற்றம் பார்க்கும் தன்மையாலும் அநேக விஷயங்கள் வெளிக்கிளம்புகின்றன. என்னைப் பொறுத்த மட்டில், இப்போதுள்ளதுதான் மனிதவாழ்க்கையின் உச்சநிலை என்று நம்பமாட்டேன். என் மனத்தைக் கவரும் மார்க்கம் எது என்றால், அன்பு ததும்பி அவ் வன்புவெள்ளத்தில் பகைவர்களையும் மறந்துவிடும் மார்க்கம்தான். முதலாளிக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன் தவறாய் நடந்து தன் நடத்தையின் தவறை ஒப்புக் கொண்டு பிறர் மனப்போக்கை ஆமோதிக்க மனமுள்ளவனாயி ருக்கக் காணும்போதும், அம்முதலாளிகளின் குற்றங் குறைகளைத் தன்னுடையவையே போல மன்னித்து மறந்துவிடும் சுபாவமுள்ள, சாந்தகுணம் படைத்த, ஒரு தொழிலாளியைக் காணும்போதும், என்னால் கண்ணீர் சொரியாமல் இருக்கமுடிவதில்லை.

யாராவது கேட்கலாம், "அப்படியும் மூடர்கள் உண்டா?" என்று. ஆனால் அப்படியும் ஒரு மகான் இவ்வுலகில் இருந்தார். அவரை இயேசு என்று அழைத்தார்கள். ஒரு தச்சன் குமாரன். தானும் தச்சுவேலை செய்பவர். அவருடைய சன்மார்க்கத்திலேயே நான் நெறிதவறாமல் நடக்கும் ராஜபாட்டையைக் கண்டு கொண்டேன். கலகத்தைவிட அன்புதான் பலமுடையது.

* * * *

ஆண்டவன் அருளிச்செயல் என்பது, சத்தியம் ஜீவனில் ஆழப் புகுவதேயாம். அறிவும், ஆசாரமும் வெவ்வேறானவை: ஒருவனுடைய ஆசாரங்கள் எல்லாவற்றிலும் சத்தியம் இராவிட் டால், ஆண்டவனும் அவனும் சம்பந்தமற்றவர் ஆகின்றனர். வாழ்க் கையின் ஊடே சத்தியம் கலந்து புகுந்துவிட்டால், அப்பொழுது தான் ஆண்டவன் மானிடரின் காரியமாகவும், காரணமாகவும், துணையாகவும் ஆகிறார்.

ஆகையால் ஆண்டவன் அருளிச்செயல்களைத் தேடுகிறவர்கள் வெறும் அறிவினால்மட்டுமே ஆண்டவனைக் காண முடியாது. முதல்முதலில் உலகில் ஏற்றத்தாழ்வுகளை உற்றுநோக்கவேண்டும்.

ஒடுக்கப்பட்டவர்களுக்கு விடுதலை அளிக்கவேண்டும். தரித்திரருக்குச் சோறு துணி கொடுக்கவேண்டும். குருடருக்குப் பார்வை தரவேண்டும். ஏழைகளுக்குப் பிழைக்க வழி தேடவேண்டும். இதையெல்லாம் செய்தால், தினந்தோறும் ஆண்டவன் திருவிளையாடல்கள் தென்படும்.

இதுதான் சத்தியம். சமூக ஊழியர்கள் ஆண்டவனைத் தினமும் தரிசிக்கிறார்கள். கடவுள் அவர்களுடன் பேசுகிறார். அவர் சந்நிதானத்திலே அவர்கள் இருக்கிறார்கள். மதச்சண்டைக்காரர்கள் சுவடிகளைப் படித்து அறிவினால் ஆண்டவனைக் காணவேண்டுமென்று தேடிக் கிட்டாத கடவுள், பூமியிலே (எளிய) மக்களுக்கிடையே தாமே வந்து காட்சி தருகிறார். ஆண்டவன் திருவிளையாடல்கள் ஓய்ந்துவிடவில்லை. பொய்ப் புலவர்களும், பொய்க் குருக்கள்களும்தான் அவ்வருளை மறக்க வைக்கிறார்கள்.

* * * *

ஒவ்வொரு நொடியிலும் நிகழ்வன ஆண்டவன் அருளின்படி ஏற்படுகின்றன. ஒவ்வொரு காரியமும் ஆண்டவன் ஜோதியின் வினையாம். அவர் எங்கும் இருக்கிறார். சமையலறையில் எதிர்கொண்டழைக்கிறார். கிணற்றங்கரையில் நிற்கும்போது நம்மை உற்றுநோக்குகிறார். தொழிற்சாலையின் சந்தடியிலும், கூட்டத்தின் நெருக்கடியிலும், வண்டிகளில் இடமில்லாமல் கூரையைப் பிடித்துக்கொண்டு தொங்கும்போதும், ஆண்டவனைத்தான் உசுவாஸிக்கிறோம். இருப்புச் சம்மட்டியை எடுத்துக் கொல்லன்பட்டறையில் அடிக்கும்போதும் ஆண்டவன் இருதயத்திலேதான் இருக்கிறோம்.

இதுதான் உண்மை ஆத்துமாவின் நன்னிலை. தாகந்தீர (கள்ளையல்ல) ஆண்டவனைக் குடித்து வெறிக்கவும், வயிறார (சோற்றையல்ல) ஆண்டவனைப் புசிக்கவும், ஆத்துமம் நிலைகொள்ளும். கனவிலும், நினைவிலும், துக்கத்திலும், சந்தோஷத்திலும்—எப்பொழுதும் அவன் திருவருட்பிரகாச வெள்ளத்தில் நடப்பதே அவன் அடியார், ஆத்துமவித்தையைச் செவ்வையாயுணர்ந்தோர், அனுபவிக்கும் ஆனந்தம்.

* * * * *

அவசரமான கவலைகளைச் சற்று அகற்றிவிட்டு அண்டபகிரண்ட சச்சிதானந்தத்தின் ஆன்ம போதங்களைக் கொஞ்சம் உற்றுக்கேட்டால், ஜன்மம் ஒரே ஆனந்தமாகிறது. அப்போது மாயை மனதை விட்டகலுகிறது. இவ்வுலகத் தொல்லைகளிலுள்ள பற்று அற்றுப்போகிறது. சொல்லொணு அல்லோலகல்லோலத்தின் நடுவிலும் கலைக்கமுடியாத ஓர் ஆத்மசாந்தி ஏற்படுகிறது.

வெறுந் துன்பத்தை மூட்டும் பொருள்களைக் கண்டால் எனக்குப் பிடிக்கிறதில்லை. என்னமோ 'நாகரிகம்' என்கிறார்களே, அப்படி வாழ எனக்கு 'மவுசு' சிறிதுமில்லை. கடைசிவரையில் நான் இயற்கை தேவியின் குழந்தையாகவே இருந்து விடுகிறேன்: தோப்புகளும், கோட்டான்களும், முயல்களும், கோழிகளும், என்னை ஆசிர்வதித்தால், என் ஜன்மம் சாபல்யமாகும்; பூரணமாய் ஆகும்.

இவ்வுலகில் பந்தபாரங்கள் இல்லாமல் உலாவுவதைவிடத் தென்பானது வேறில்லை. உடைமைகள் அதிகமானால் அவை திருட்டுப்போமோ என்கிற பயம் தொடர்ந்து வாட்டுகிறது. மிக அழகாக உடுத்திக்கொண்டால் எங்கே அழுக்காய் விடுகிறதோ என்று கவலை ஏற்படுகிறது. உயர்ந்த பதவியில் இருந்தால் எங்கே தாழ்வு வருகிறதோ என்று திகில் உண்டாகிறது. மிகப் படித்திருக்கிறோம் என்று பெருமை கொண்டிருந்தால் யாராவது இலேசாய் நினைத்துச் சிறுமைப்படுத்தும்போது தாங்குகிறதில்லை: ஆத்திரம் வருகிறது. ஆகையால் கோவணம், அரைஞாண்—கோவணம்—அது போதும் உலக சஞ்சாரத்துக்கு.

*　　*　　*　　*　　*

மனம் உடைந்துபோவதற்கு ஒருவித காரணமும் எனக்குத் தோன்றவில்லை. காமாதிகளை ஜயிக்க எனக்கு விசேஷ பலம் இல்லையா? இந்த சடலம் ஆத்துமாவையே அடிமையாக்கிக்கொள்ளக் கூடிய சலுகை கொண்டது என்று சொல்லுகிறதார்? என் அநுபவம் நேர்மாறானது. நான் ஏமாந்துபோகாத ஓர் ஆத்துமாநுபவத்தைச் சொல்லலாம் என்றால், எனக்கு ஆச்சர்யமான பலம் இருக்கிறது என்பதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை.

உலகில் சிறந்த எழுத்தாளர்கள் ஏன் தங்கள் நூல்களில் தங்கள் குற்றங்களையே நடுநாயகமாக வைத்து எழுதுகிறார்கள்? முழுமனதோடு ஒப்புக்கொள்ளுவதில் இலக்கியச் சிறப்பு இருக்குமானால், நான் என் பலத்தையே சிறப்பித்துக் கூறுவேன்.

எனக்குள்ளிருக்கும் வைதிக ஆஸ்தையானது அநித்திய இன்பங்களில் ஆழ்ந்திருக்கச் சம்மதிக்கிறதில்லை என்று சொல்லுகிறேன். எனக்குக் கடவுள்பித்தம் பிடித்தது முதல் என் மனதை அல்ப எண்ணங்களுக்கு ஒப்படைக்க முடியவேயில்லை. எனக்குப் பெருமையாய் இருக்கிறது. என்னுள்ளிருக்கும் சர்வசக்தியுள்ள கடவுளின் சக்திக்காகப் பெருமைப்படுகிறேன்.

*　　*　　*　　*　　*

எங்கள் பையன் ஒரு கவி. அவன் அர்த்தம் புரியாத அநேக பேச்சுக்களைக் குளறிக் கொட்டுகிறான். அது என்னடா என்று

கேட்டால் நான் கட்டின பாட்டு என்கிறான். அப்பாவின் கையைத் தலையணையாக வைத்துக்கொண்டு படுத்துக்கொள்ளுகிறான். கைக்குள்ளேயிருந்து ஏதோ பாட்டுச் சத்தம் கேட்கிறது என்றும் சொல்லுகிறான். இப்படி எத்தனையோ கவிதா கற்பனைகளைக் கொட்டுகிறான்.

அவனுக்கு வயது, மூன்று வருஷம் எட்டு மாதம் ஆகிறது. மேடர்லிங்கின் 'ப்ளூ பர்ட்' என்ற நூலின் கதாநாயகனைப்பற்றி எனக்குத் தெரியாவிட்டாலும், என் மகன் ஆத்தும விவரங்களில் சிறந்த துணைவனாவான். கவலைகள் அடியோடு மறந்துபோகிற ஆனந்த போகத்துக்கு என்னை அழைத்துக்கொண்டு போகிறான். ஜாலக்கண்ணாடிலோகத்தில் அவன்தான் என்னை அழைத்துச் செல்லுகிறான்.

“குழந்தைபோன்ற மனப்பான்மை இருந்தாலன்றி, கடவுளின் ராஜ்யத்தில் எவனும் நுழைய முடியாது” என்று இயேசு சொன்னது ரொம்ப சரிதான்.

கிழவர்கள் பிதற்றுகிற உளறல்களை நாம் பயத்தோடும் பக்தியோடும் மதித்து, அதற்கெல்லாம் நீதி என்றும், நியாயம் என்றும், சித்தாந்தம் என்றும், பெயர் சூட்டின போதிலும், இவைகளின் மூலமாய் ஆயிரம் வருஷங்களில்கூட மானுடவர்க்கத்தின்—மனித ஜன்மத்தின்—சாபல்ய லட்சியங்களை அடைய முடியாது. ஒருவன் சிறு குழந்தையாகி, இளமையும் மேன்மேல் பெருகும் பலமும் பெற்றால்தான் இந்த ஜன்மம் பரிபூரண நிலையை அடையும்.

* * * * *

அன்பே என்னைச் சதா தூண்டுகிறது. பிறர் அன்புக்கு பாத்திரமாயிருக்கவேண்டும் எனும் ஆசையைவிட பிறரிடமுண்டாகும் அன்புதான் என்னைப் பலமாய்த் தூண்டுகிறது. ஏழு வயது முதல் பதினேழாம் பிராயம் வரையில் பிறர் நேசத்தில் ஆசை வைத்து அதனால் நான் ஓயாத துயரத்தில் இருந்தேன். இப்பொழுது நான் வாழ்க்கையில் நாற்பதாவது கல்லைக் கடந்துவிட்டதனால், பிறரை நேசிக்க வேண்டும் என்கிற கோரிக்கையே பெருகிவருகிறது.

என் மனைவியும் மக்களும் என்மேல் ஆசையாயிருக்கவேண்டும் என்கிற அவா எனக்கில்லை. அதைவிட அவர்கள்மேல் நாம் வாஞ்சையாயிருக்க வேண்டும் என்கிற எண்ணமே என் மனதில் குடிகொண்டிருக்கிறது. சுருங்கச் சொன்னால், என்னுள் 'பெற்ற மனம்' என்னும் பான்மை உதித்துவிட்டது. பிள்ளைப்பேறும், மனோ உணர்ச்சியும் இணைந்து என்னைப் பிறர்மேல் வைத்த வாஞ்சையில் தம்மை மறக்கச் செய்கிறதுபோல் எனக்குத்

தோன்றுகிறது. என் மக்கள்மீது வாஞ்சையாயிருக்கும்போது பரம சந்தோஷத்தை அநுபவிக்கிறேன். பிள்ளைகள் பக்கத்தி லில்லாதபோது என்னைவிட ஒன்றியானவன் உலகில் இல்லை.

* * * * *

ஸதா அவசரமாயிருக்கிறவனுக்குக் காலபுருஷன் அர்த்தம் புரியாத ஒரு மறைபொருளா யிருக்கிறான். மனதையும் நெஞ்சையும் தாக்கும் எண்ணில்லாத பல பிரச்னைகளுக்கு காலத்தின் கதியில் தான் விமோசனம் ஏற்படும். காலபுருஷன் ஆறுதலளிக்கிறான். அவன் (நம்) நண்பன்.

இருட்டு ஒருபோதும் முடிவடையாது என்றெண்ணாதே. பொழுது விடிந்ததும் கிழக்கிலிருந்து சூரியன் தோன்றி உன்னை அழைக்கும். புயலும் என்றைக்கும் வீசாது. அது ஓய்ந்தவுடனே விசேஷ அமைதி உண்டாகும்.

கால புருஷனைப்போல் விபரீதமானதொன்றுமில்லை. எவ்வளவு வளர்ந்தாலும் எதுவும் காலத்தால் ஒரு முடிவுக்கு வருகிறது. காலத்தினால் பாலர் பருவமாகின்றனர். காலத்தினால் குரூர மன்னர் மடிகின்றனர். காலத்தினால் வியாதியஸ்தர் சொஸ்தமாகின்றனர். மனமுடைந்தவர் தேறுகின்றனர். தாழ்ச்சியினால் வரும் சுருக்கென்ற கஷ்டங்கள் நீங்குகின்றன. மண்ணின்கீழ் மறைந்து கிடக்கும் தானியமணிகளும் காலத்தினால் விளைவுக்குப் பக்குவமாகின்றன.

காலம்தான் ஊக்கத்துக்குத் தாய். காலம்தான் ஆக்கத்துக்குத் தந்தை. மனமே, ஆத்திரப்படாதே. உன் துயர்நாளில் காலம் உனக்கு என்ன செய்யப்போகிறது என்பதைச் சிந்தித்துப் பொறுமையோடிரு.

பல இன்னல்களைக் கடந்து முன்னேறினவர்கள் தங்கள் பதவியினால் அளவுகடந்த மகிழ்ச்சி அடைந்து, தமது முயற்சியையும் தைரியத்தையுமே அளவுகோலாக மதித்து, தம்மினும் எளியாரின் நஷ்டகஷ்டங்களைப் பார்த்தும் அனுதாபப் படுகிறார்களில்லை.

அப்படியே, துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறவர்களும் பிறரைப்பற்றிக் கவனிக்க ஒழிவில்லாமல், எளியாரைப் பாராமல் விட்டுவிடுகிறார்கள். மேலும், அநேகம்பேர் கஷ்டம் என்பது எப்படி இருக்கும் என்றே ஒருநாளும் தெரியாதவர்களாயிருப்பதால் பிறருடைய கஷ்டத்தைப் பார்த்து மனமிரங்கத் தோன்றாமலிருக்கிறார்கள்.

கஷ்டங்களைத் தாண்டிக் கரையேறி கர்வம் அடையாமல் இருக்கவும், துன்பங்கள் நேர்ந்தும் திகிலடையாமல் இருக்கவும்,

தூரத்தில் துயரங்கள் தெரியும்போது விட்டுக்கொடுக்காமல் இருக்கவும்—இவை யாவும் பரம்பொருளின் அன்பு வெள்ளத்தில் ஆழ்ந்தோருக்கே இயலும்.

* * * * *

'பார்த்தால் என்னமோ மனிதரூபம்தான்; ஆனால் நெஞ்சு மிருகப் பிராயம்' என்று சாதாரணமாக வழங்கும் வசனத்தைச் சரி என்று சொல்ல எனக்குச் சம்மதம் இல்லை. குரங்கையாவது நரியையாவது பார்க்குங்கால் நம்மைவிட அவை தாழ்ந்த குணம் படைத்திருப்பதாக எனக்குத் தோற்றவில்லை. ஹார்ட்மன் சாஸ்திரியாரின் 'குரங்கு ஆராய்ச்சி' யைப் படித்தபொழுது கொரில்லா என்னும் குரங்கு ஏகபத்னிவிரதம் உள்ளது என்று கேட்டு வியப்புற்றேன். உஷ்ணப் பிரதேசத்துக் காட்டில் வசிக்கும் குரங்குகள் ஒரு மனைவியுடனிருக்க, மனிதர்களில் அநேகர் பல மனைவிகளைக் கொண்டிருக்கின்றனர் என்பது உண்மையல்லவா?

எத்தனையோ ஜனங்கள் செய்கிறார்களே, அப்படிக் குரங்குகள் வருஷாவருஷம் கோடிக்கணக்கான தோண்டிகள் கள்ளைக் குடிப்பதாகக் கேள்விப்பட்டதில்லை. சிங்கங்கூட விருந்து உண்டால் எவ்வளவு மிதம் என்று தெரிந்தே புசிக்கிறது.

மாமிச பக்ஷிணிகளில் வரிப்புலிதான் மிகக் கொடியது என்கிறார்கள். அதுகூட 4 வருஷம் 8 மாதத்தில், 120 லக்ஷம் பேரைக் கொன்று, போதாக்குறைக்கு 200 லக்ஷம் பேரைக் காயப்படுத்தினதில்லை.

'பார்த்தால் மனிதன்; நெஞ்சோ மிருகப்பிராயம்' என்கிற பேச்சு ஓநாயின் காதிலாவது ஒரு காட்டுப்பன்றியின் காதிலாவது விழுமானால், அவற்றிற்கு எவ்வளவு கோபம் வரும் என்று சொல்ல முடியாது! அவைகளுக்காக நான் ஒன்று சொல்லுவேன். இனி, 'பார்வைக்கு மிருகம், நெஞ்சோ மனுஷப்பிராயம்' என்றிருக்கட்டும். இதுதான் உண்மை.

# துஷ்ட சதுஷ்டயம்

வித்துவான் ச. கு. கணபதி ஐயர்

---

பாரத கதாபாத்திரங்களில் துரியோதனனும், அவன் தம்பி துச்சாதனனும், சகுனியும், கன்னனுமாகிய இந்த நால்வருடைய கூட்டமும் துஷ்டசதுஷ்டயம் என்று வழங்கப்படும். துஷ்டர்களின் நான்மை என்பது இத்தொடரின் பொருளாகும். வில்லி பாரதத்திலே பல இடங்களில் இந்நால்வர் ஒருங்கே கூறப்படுவர். இவர்களது இழிசெயலைக் காட்டக்கூடிய இடங்களிலெல்லாம் வில்லிபுத்தூரர் இவர்களுடைய பெயர்களை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் கூறிச்செல்கிறார். இந்தமாதிரி, வில்லிபாரதத்தில் ஏறக்குறையப் பதினேரிடங்களில் துஷ்ட சதுஷ்டயப் பிரஸ்தாபம் வருகிறது. அவ்விடங்கள் சுவைப்பட இயற்றப்பெற்றவையாகும்.

திருதராஷ்டிரன் தருமருக்கு இளவரசுப்பட்டம் சூட்டிய பிறகு துரியோதனன் அந்தத் திருதராஷ்டிரனிடம் சென்று,

> "இகன்மிகு கன்னனு மென்னிளை யோரும்
> சகுனியு முண்டு தகுந்துணை; நெஞ்சில்
> உகவை யிலாரொடு றேனினி"
>
> (வாரணவத. 102)

என்று கூறுமிடத்தில் துஷ்ட சதுஷ்டயம் முதன் முதல் குறிக்கப்படுகின்றது.

அடுத்தபடியாக, இந்நால்வரும் இவர்தம் வருக்கமும் ஒரு பாம்பாக உருவகப் படுத்தப்பட்டிருப்பது இவர்களின் இழிவைக் காட்டுகின்றது.

பொதுவாக எம்மதத்தினரும் வஞ்சனை, சூது, வாது, முதலிய தீய குணங்களுக்கு உவமையாகப் பாம்பைக் கூறுவதுண்டு. வில்லிபுத்தூரார் தம் பாரதத்தில் வஞ்சனை, செய்ந்நன்றி கொல்லல், முதலியவற்றைக் கூறுகையில் விஷயத்தைப் பாம்போடு தொடர்பு படுத்திக் கூறுவதுண்டு.

"பன்னகந் தனக்கமிர்தம் கொடுத்தாலும் விடமொழியப்
பயன்கொ டாதே" (கிருட். 25)

என்று ஓரிடத்திற் குறிக்கிறார். துரியோதனனை இழிவுபடுத்திக் கூறும் இடங்களிலெல்லாம் 'அரவ வெங்கோடியோன்' என்றும், 'பன்னக துவசன்' என்றும் அவன் கொடியையும் அவனுடன் தொடர்புபடுத்திக் கூறிச்செல்கிறார். 'அரவக்கொடியை உடைய வனுக்கு அரவத்தின் இயல்பு இருக்குமன்றோ' என்பதை மனத் திற்கொண்டு இவ்வாறு கூறுகிறார் போலும். மேலும், 'அரவக் கொடியோன்' என்ற தொடருக்குப் பாம்பைப்போல் மிகக்கொடிய வன் என்ற தொனிப் பொருளும் அமைந்திருத்தல் காணத்தக்கது. தன்னந் தனியனாய்ப் போர்செய்த சிறுவனை அபிமன்யுவின் வில்லையும் இரதத்தையும் அழித்து, அவனைப் பாதசாரியாகச் செய்து, கன்னன் அவனுடன் யுத்தம் செய்யும்சமயம் இவ்வாசிரியர் கன்னனை, "தன்கைப் பொருகணைப் புயங்கம் போல்வான்" என்கிறார். தன் கையிலே உள்ள அம்பாகிய நாகத்தைப் போன் றவன் என்பது இத்தொடரின் பொருளாகும். அதுபோலவே துஷ்டர் நால்வரும் அவர்தம் வருக்கமும் பாம்பாக உருவகிக்கப் பட்டிருக்கிறார்கள்;

"சாலும் வஞ்சச் சகுனியோ டெண்ணிய
நாலு மைந்தரும் நச்செயி றாகவும்
வாலும் மெய்யும் வருக்கங்க ளாகவும்
ஆலும் வெம்பகை ஆடா வானதே"

(திரௌபதி. 100)

என்பது அச்செய்யுள். விஷப்பாம்பிற்கு நான்கு விஷப் பற்களுண் டென்பது அக்காலத்தார் கொள்கை. அதனையொட்டி வில்லி யார் துஷ்ட சதுஷ்டயத்தை ஒரு விஷப்பாம்பின் நான்கு விஷப் பற்களாக உருவகப் படுத்தியுள்ளார்.

பாண்டவர்கள் சூதுபோரில் தோற்றபிறகு துரியோதனன் அவர்களுடைய பொருளையெல்லாம் தன் வசப்படுத்திக் கொள்வ தைக் குறித்து ஆலோசனை செய்ததாகக் கூறுமிடத்து,

மன்னனும் தம்பி தானும் மாமனும் மாறா வண்மைக்
கன்னனும் தம்மி லெண்ணி"

(சூது. 194)

என்று ஆசிரியர் குறிக்கின்றார்.

துச்சாதனன் திரௌபதியைச் சபையில் கொண்டுவந்து நிறுத்தியபோது,

" நாகம் புனைபொற் றுவசனுடன் நவிலா நின்ற நால்வருமே
சோகம் பிறவா திருந்தார்மற் றொழிந்தார் யாரும் சோகித்தார் "
(சூது. 228)

என்கிறார்.

அபிமன்யு இறந்தபோது துக்கித்தவர்களையும் துக்கியாதவர்களையும் கூறும்போதும் இங்ஙனமே,

" ஈரிரண்டு பெயரொழிய மற்றுள்ளார் அழுதிரங்கி
யென்பட் டாரே "

என்று கூறுகிறார்.

பாண்டவர்கள், தாம் சூதில் இழந்தவற்றைத் திருதராஷ்டிரன் மொழிகளால் பெற்றுத் தம் நகருக்குத் திரும்பும் சமயம், சகுனியின் தூண்டுதலால் துஷ்டர் நால்வருங்கூடி ஆலோசித்துப் பாண்டவரைக் காட்டுக்குச் செல்ல ஏவுகிறார்கள். இங்கே வில்லிபுத்தூரார்,

" சகுனிசொன் மருகன் கேட்டுத் தம்பியு மங்கர் கோவும்
முகமுகம் நோக்கி யெண்ணி யெம்பிநீ மொழிக வென்றான் "
(சூது. 268)

என்று கூறுகிறார்.

துரோணர், பாண்டவர் தாம்இழந்த இராச்சியத்தைப் பெறுவதற்குச் சில நிபந்தனைகளைக் கூறுமிடத்து,

" மேல்வரு கரும மெண்ணு வெகுளியான் மிக்க வீரர்
நால்வரு மெம்ம னோர்கள் நவின்றன சிறிதுங் கேளார் "
(சூது. 272)

என்று கூறுவதாகக் குறித்துள்ளார். பிறிதோரிடத்தில்,

" ஒழிவுசெய் கருணை நால்வர் "
(சூது. 283)

என்கிறார். கருணைஒழிந்த நால்வர் என்பது இத்தொடரின் பொருளாகும். கருணை இன்மை வடமொழி முறைபற்றி 'ஒழிவு செய் கருணை' எனப்பட்டது.

காளமாமுனிவரைக் கொண்டு பாண்டவரைக் கொல்வதற்கு இந்நால்வரும் சேர்ந்து ஆலோசித்தமையைக் கூறுமிடத்து,

" ஆண்டு மற்றவ ரடைதரு காலையி லரவவெங் கொடியோனும்
மூண்ட ழற்பொறி கன்றிய மனத்தினர் மூவரு முடன்முன்னி "
(நச்சுப். 3)

என்று குறிப்பதோடு அதேசெய்யுளில் இவர்களை 'அருளிலாப் பாவியர்' என்றும் கூறுகிறார்.

எட்டாம் நாட் போரில் தன் தம்பியரில் சிலர் இறந்து பட்டமைக்கு வருந்திய துரியோதனன் பீஷ்மரிடம் சென்று, 'நீர் சேனைத் தலைவராக இருப்பதால் என் கட்சிக்கு அழிவில்லை என்று எண்ணியிருந்தேன். இப்பொழுது இப்படி நிகழ்ந்ததே!' என்று இரங்கிக் கூறும்பொழுது பீஷ்மர் அவனுக்கு நல்லுபதேச மொழிகளைச் சொல்லுமிடத்து,

"கால்வரு கவன மான்றேர்க் கன்னனும் கன்ன பாக
மால்வரு கலுழி வேக மாவலான் சகுனி தானும்
நூல்வரு பழுதில் கேள்வி நம்பியும் நீயு மிந்த
நால்வருங் குறித்த எண்ணம் நாளையே தெரியும் ஐயா"

என்று துஷ்ட சதுஷ்டயத்தை அவர் இகழ்ச்சியாகக் கூறித் துரியோதனன் சகவாசதோஷத்தால் கெடுவதைக் குறிப்பிடுகிறார். இந்த இடத்தில் பீஷ்மரானவர் கன்னன், சகுனி, துச்சாதனர்களுக்குக் கொடுத்திருக்கும் அடைமொழிகள் சிறப்புடையனவாயினும், விரோதமாகப் பொருள்பட்டு அவர்களுக்குப் பழிப்பைத் தருவனவாக அமைந்துள்ளமை படித்து இன்புறற்குரிய தொன்றும்.

பீஷ்மர் சேனைத்தலைவராக இருக்கத் தகுதியற்றவர் என்று கருதிய துரியோதனன், கன்னனை அவர் நிலையில் அமைக்க எண்ணி அக்கன்னனை வருவித்ததாகக் கூறும் செய்யுள் துஷ்டசதுஷ்டயத்தின் இழிவை நன்கு காட்டுகின்றது;

"முன்போ ருடைந்து தனதில் லடைந்த
முடிமன்னன் முன்னை யிரவில்
தன்போலு மாம னவனோடு கேடு
தருதம்பி யோடு கருதிப்
பின்போதில் வண்மை யொழிவானை யோடி
யழையென்று பேச வவனும்
மின்போ லிறந்த விளையோர்கள் பாடு
வினவா விருந்த பொழுதே" (ஒன்பதாம் போர். 2)

என்பது அச்செய்யுள். துஷ்டசதுஷ்டயரில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொருவகையில் இழிவைப் புலப்படுத்துகின்றது இச்செய்யுள். 'முன்போருடைந்து தனதில்லடைந்த' என்றதனால் துரியோதனனுக்கும், 'தன்போலும்' என்றதனால் 'துரியோதனன் எவ்வளவு தீமையுடையவனோ அவ்வளவு தீமையையுடைய' என்று சகுனிக்கும், 'கேடுதரு' என்றதனால் துச்சாதனனுக்கும், 'பின்போதில் வண்மை ஒழிவான்' என்றதனால் கன்னனுக்கும், இழிவு புலப்படுகின்றது. கன்னனுக்கு அஃது இழிவு தருவது எங்ஙனமெனில், கூறுகிறேன்: அவன் நாடோறும் முற்பகலிலேதான் தருமங்களைச் செய்வது வழக்கம்.

" அடுத்த தானமும் பரிசிலு மிரவலர்க்
கருளுடன் முற்பக லளவும்
கொடுத்து நாயகன் புகுந்தனன் நாளைநீர்
குறுகுமி னென்றவன் கோயில்
தடுத்த வாயிலோர்...................." (கிருட். 239)

என்பதனுலும், இந்திரன் வேதியன் வடிவோடு கன்னனிடம் கவச குண்டலங்களைப்பெற வந்தகாலை, கன்னன் இரவலற்கு வழங்கும் நேரமாகிய முற்பகலில் வரஇயலாமைக்குத் தன் மூப்பே காரண மென்று அவன் குறிக்கும்,

" தளர்ந்தவென் நடையினுல் ஆனதே பிற்பகல் "

என்ற அடியாலும் கன்னனது இந்த வழக்கம் புலனுகின்றது. 'இரவலற்கு வழங்குவதற்குக் காலநியமம் கூடாது; கன்னன் அங்ஙனம் நியமங்கொண்டு பிற்பகலில் வண்மையை நீக்கியிருத்தல் இழுக்காகும்' என்ற கருத்தை உட்கொண்டே வில்லியார் இங்கே 'பின்போதில் வண்மை ஒழிவானை' என்று கூறினர்.

மேலே காட்டியபவாறு துஷ்டசதுஷ்டயத்தின் செயலைப் பல விடங்களில் இவ்வாசிரியர் அமைத்திருத்தல் போலவே தருமரின் பொறுமை, அர்ஜுனனது வில்வீரம் முதலிய வேறுபல விஷயங்களையும் அங்கங்கே அமைத்துச் செல்கிருர். வில்லி பாரதம் முழுவதையும் ஒரே மூச்சில் படிப்பதனுல் வில்லிபுத்தூரார் பாவிகமாகப் பல நீதிகளைக் கூறிச்செல்லும் பண்பும், இப்பாரத நடையின் போக்கும், ஆங்காங்கே அவர் நீதிகளையும் உவமைகளையும் புலப்படுத்தும் அழகும் நமக்குப் புலனுகும்.

# சரித்திரம்

## சங்ககாலத்து ராஜீய நிலைமை

எஸ். ஆர். பாலஸுப்ரமணியம், எம்.ஏ., எல்.டி.

---

சங்ககாலத்துப் பாண்டிய ராஜ்யத்தின் எல்லை தெற்கே குமரியும் வடக்கே தென்வெள்ளாறும் ஆகும்; தற்காலத் திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை ஜில்லாக்கள் சேர்ந்தது. சுமார் 20 அரசர்களின் பெயர்கள் கிடைக்கின்றன. அவர்கள் ஆண்ட கால வரையறையும் வரிசைக்கிரமமும் சொல்வது இயலாது. தொடர்ச்சியாய் அக்காலத்துப் பாண்டிய சரித்திரத்தை ஸ்ரீமான் கனகசபைப் பிள்ளை எழுதியிருக்கிறார். இவ்வாறு ஒருமிக்கத் தொடர்ச்சியாய் எழுத ஆதாரங்கள் இடங்கொடுக்கவில்லை. ஆகவே இவ்வரசர்களின் சரித்திரத்தில் முக்கிய அம்சங்களை மாத்திரம் தனித் தனியே கூறுவோம்.

களப்பிரர் காலத்திற்குமுன் ஆண்ட சங்ககாலத்து அரசர்களிலே வேள்விக்குடிச் சாஸனமளித்த முதுகுடுமி என்ற அரசனைத் தவிர வேறு ஒருவரைப்பற்றியும் பாண்டிய சாஸனங்கள் கூறவில்லை. தலையாலங்கானத்து நெடுஞ்செழியனுக்கு முன் ஆண்ட அரசர்களில், நெடியோனும், பல்யாகசாலை முதுகுடுமியும் முற்பட்டவர்களென்று மதுரைக்காஞ்சி கூறும். உரையாசிரியர் நச்சினார்க்கினியர், நெடியோன் என்பது வடிம்பலம்ப நின்றவன் என்றவனைக் குறிக்கும் என்று அபிப்பிராயப்படுகிறார். முதுகுடுமி என்பவர் வேள்விக்குடிச் சாஸனகர்த்தாவாக இருக்கவேண்டும். இத்துணைக் காலத்திற்குப் பிறகு, இவ்விரண்டு அரசர்களுக்கும் காலபேதம் எவ்வளவு என்றும், சிலப்பதிகாரத்தில் கூறியிருக்கும் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனுக்கும், தலையாலங்கானத்துச் செரு வென்றவனும் மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை இவைகளின் நாயகனுமான நெடுஞ் செழியனுக்கும் இடையிலுள்ள காலம் எவ்வளவு ஆகியிருக்குமென்றும் சொல்ல முடியாது. வடிம்பலம்ப நின்றவனென்ற பாண்டியன் புராண காலத்தோன். திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் 21-ஆவது திருவிளையாடலில் இவனுடைய பெருமையைக் காணலாம். இவன் பஃறுளி

யாற்றை உண்டாக்கினுன். இவன் கடல்தெய்வத்திற்குப் பெரிய தொரு விழவு செய்தான் என்றும், ஒருகாலத்து மதுரையை அழித் தற்கு வந்த கடலைச் சோமசுந்தரக்கடவுள் அருளிய வேலை எறிந்து வற்றச் செய்து, அக்கடலைத் தன்னுடைய காலின் வடிம்பை அலம்பும்படி உயர்ந்து நின்றதால் இவன் இப்பெயர் பெற்றுனென் றும் சொல்லப்பட்டிருக்கிறது. முதுகுடுமிப் பெருவழுதியைப் பற்றி இன்னும் அதிக விவரங்கள் தெரிகின்றன. இவனைப்பற்றிப் புறநானூற்றில் நெட்டிமையாரும், காரிகிழாரும், நெடும்பல்லியத்த ஞரும், ஐந்து பாக்களைப் பாடியுள்ளார். அயல்நாட்டை ஜெயித்த தால் கிடைத்த பொன்னைக் கூத்தர்க்கு வழங்கியதாகவும் [புறம். 12], விரோதிகளின் அகன்ற நல்லரண்களை ஒரு கழுதையைப் பூட்டி உழுது பாழ்படுத்திப் பகைவர் தேயத்துக்கண் குதிரையி னுடைய குளம்புகள் தாவத் தன் தேரைச் செலுத்தினுனென்றும், அப்பகைவர்களுடைய வாவிகளிற் களிற்றைப் படிவித்ததாகவும், ஆகவே வசைபட வாழ்ந்த ஒன்னுர் பலரோ என்றும், தரும நூல் களிலும், வேதங்களிலுஞ் சொல்லப்பட்ட யாகங்களை முடித்து, யூபம் நட்ட வேள்விச்சாலைகள் பலவோ என்றும் புகழ் காண் கின்றது [புறம். 15]. மற்ருெரு பா, இவன் இராஜ்யத்தின் எல்லை வடக்கே இமயமும், தெற்கே கன்னியாறும், கிழக்கேயும் மேற்கே யும் கடல் என்று குறித்து அவன் மதியம்போலவும் ஞாயிறு போலவும் மன்னுக என்று வாழ்த்துகிறது [புறம். 6]. சிலப்பதி காரக் கதையில் கண்ட சம்பவங்கள் நிகழ்ந்த காலத்து, ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன் மதுரையை ஆண்டதாகவும், கண்ணகி மூலமாய்க் கோவலனின் பேதைமை தெரிந்ததும் அவன் உயிர் துறந்ததாகவும் அறிகின்றோம்.

புறம் 183-ஆவது பாட்டு இந்நெடுஞ் செழியன் பாடினது. குடிப்பிறப்பு, குலம், இவற்றைக் காட்டிலும் கல்வி மேலானது என்பது இதன் பொருள்.

> "உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
> பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
> பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
> சிறப்பின் பாலாற் ருயு மனந்திரியு
> மொருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளு
> மூத்தோன் வருக வென்ன தவரு
> ளறிவுடை யோனுற ரசுஞ் செல்லும்
> வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
> கீழ்ப்பா லொருவன் கற்பின்
> மேற்பா லொருவனு மவன்கட் படுமே." [புறம் 183]

இவன் சிற்றரசனும், கொற்கைக் காவலனுமான வெற்றிவேற் செழியன் பொற்றெழிற் கொல்லர் ஆயிரவரைப் பத்தினிக் கடவுளுக்கு உயிர்ப்பலி கொடுத்து வேள்வியும் விழாவும் செய்யவே, நாடுமலிய மழைபெய்து நோய்த் துன்பமும் நீங்கியதாகச் சிலப்பதிகாரம் கூறும். இவன் ஒருவேளை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் மகனாய் இருக்கலாம். இவனை இளஞ் செழியன் என்றுஞ் சொல்லுவர். இச்சம்பவம் உண்மையில் நிகழ்ந்திருக்கலாம். இவன் கி. பி. இரண்டாவது நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட கயவாகு காலத்தவனாய் இருக்கலாம்.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப்பற்றியுள்ள பாக்களின் தொகுதி:—

| | | |
|---|---|---|
| புறம் | 23, 25, 371 | கல்லாடனார் |
| ,, | 72, 79 | இடைக்குன்றூர் கிழார் |
| ,, | 18, 19 | குடபுலவியனார் |
| அகம் | 116, 162 | பரணர் |
| குறுந்தொகை | 393 | ,, |
| அகம் | 36, 253, 266 | நக்கீரர் |
| நற்றிணை | 358 | ,, |
| நெடுநல்வாடை (பத்துப்பாட்டு) | | ,, |
| அகம் | 338 | மதுரைக் கணக்காயனார் |
| புறம் | 24, 26, 372 | மாங்குடி கிழார் |
| மதுரைக்காஞ்சி (பத்துப்பாட்டு) | | மாங்குடி மருதன் |
| புறம் | 72 | இச் செழியனே பாடியது* |

இளமைப் பருவத்திலேயே இவன் பட்டத்திற்கு வந்தான். பட்டத்திற்கு வந்த கொஞ்ச காலத்திற்குள் நெடுஞ் செழியனது பெருமையையும், உயர்ந்த தலைமையையும் அறியாத இரு பெருவேந்தரும் ஐம்பெரு வேளிருமாகிய ஏழரசரைத் தான் ஒருவனாய் நின்று பொருதான். இச்சண்டை தலையாலங்கானத்தில் நிகழ்ந்தது. இவ்வூர் தஞ்சாவூர் ஜில்லாவில் திருவாரூருக்கு வடமேற்கே 8 மைல் தூரத்திலுள்ள தலையாலங்காடு என்ற ஊராய் இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

"கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழிய
னாலங் கானத் தகன்றலை சிவப்பச்
சேரல் செம்பியன் சினங்கெழு திதியன்
போர்வல்லி யானைப் பொலம்பூ ணெழினி
நாரரி நறவி னெருமை யூரன்

*[நற்றிணை 387-ம், அகம் 175-ம்?]

றேங்கம ழகலத்துப் புலர்ந்த சாந்தி
னிருங்கோ வேண்மா னியமேறர்ப் பொருநனென்
றெழுவர் நல்வல மடங்க வொருபகல்
முரைசொடு வெண்குடை யகப்படுத்துரைசெலகொன்று"

புறம் 72-ஆம் பாட்டு நெடுஞ்செழியனே இயற்றியது:

"நல்ல யானையினையும் தேரையும் குதிரையையும் வீரரையும் உடையேம் யாமென்று கர்வம்கொண்ட பகை அரசர்களைக் கைக் கொண்டிலேனாயின் பொருந்திய எனது குடை நிழற்கண் வாழ்வார் தாங்கள் சென்றடையும் நிழற் காணாதே கொடியன் எம்முடைய வேந்தன் என்று கருதிக் கண்ணீரைப் பரப்பிக் குடிமக்கள் பழி தூற்றும் கொடுங்கோலை உடையேன் ஆகுக" என்று சபதஞ் செய்துகொண்டான். இச்சபதத்தை நெடுஞ்செழியன் நிறைவேற்றினான். இளையனாய் இருந்தும் வலியன் என்று உணராது பகைவர் எளிதில் ஜயமும் கொள்ளையும் பெரிது கிடைக்குமென்று போர் தொடங்கினர். மதுரை நகரையும் அணுகினர். அப்பொழுது நெடுஞ்செழியன் தண்டெடுத்துப் பற்றலரைத்துரத்தித் தலையாலங்கானத்தில் போர் செய்து வெற்றி அடைந்தான். இந்த யுத்தத்திலேயே சேரநாட்டு யானைக்கட்சேய் மாந்தரஞ் சேர லிரும்பொறையை உயிரோடு சிறைப் பிடித்திருக்கலாம். இவ்விதம் தன்னை எதிர்த்த விரோதிகளைத் தோற்கடித்த பிறகு அயல்நாடுகள் மீது படையெடுத்தான். கொங்குநாட்டை ஆண்ட அதிகமானை உறையூருக்குச் சமீபத்தில் ஜயித்தான். நீடூர்த் தலைவனான (மாவேள்) எவ்வியை அடிப்படுத்தித் தற்காலம் தஞ்சை ஜில்லாவில் அடங்கிய மிழலைக்கூற்றத்தையும் முத்தூர்க்கூற்றத்தையும் தன் இராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டான். இவன் வைதிக ஹிந்து மதத்தைச் சேர்ந்தவன். அநேக யாகங்களை இயற்றியதாகச் சொல்லப்படுகிறான். இவனே ஒரு கவி. கல்விமான்களைப் போற்றினான். மாங்குடி மருதன், நக்கீரர், பரணர், கல்லாடனார், இவர்கள் இவ்வரசனைப் பாடியுள்ளார். இதரப் பாண்டியர்களைப்பற்றிச் சுருங்கச் சொல்வோம். இவர்களில் சிலர் ஆண்டிருக்கலாம். ஏனையோர் இராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கலாம்.

| | |
|---|---|
| கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி | பரிபாடல்—15 |
| | புறம்—182 |
| | நற்றிணை—55,56 |
| நம்பி நெடுஞ்செழியன் | புறம்—239 |
| பாண்டியன் நல்வழுதி | பரிபாடல்—12 |
| சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் | புறம்—59 |

| | |
|---|---|
| அண்டர் மகன் குருவழுதி | குருந்தொகை—345 |
| | அகம்—150, 228 |
| பாண்டியன் பன்னாடுதந்தான் | குறுந்தொகை—270 |
| பாண்டியன் மலைமாறன் | குறுந்தொகை—245 |
| பாண்டியன் முடத்திருமாறன் | நற்றிணை—105, 228 |
| பாண்டியன் மாறன்வழுதி | நற்றிணை—97, 301 |
| பாண்டியன் வெள்ளியம் பலத்துத் துஞ்சிய பெருவழி | புறம்—58 |
| கருங்கையோன் வாட்பெரும் பெயர்வழுதி | புறம்—3 |
| பாண்டியன் கீரன் சாத்தன் | புறம்—178 |
| கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி | புறம்—51, 52 |

தன் பெயருக்கேற்ப பாண்டியன் அறிவுடை நம்பி அநேக அழகிய சிறுபாக்கள் பாடியுள்ளார்[1]. இவரைப்பற்றி பிசிராந்தையார் புறம் 184-ஆம் பாவில் பொருட் தொகுதியை விரும்பாமல் குறைகொள்ளு நெறியை அறிந்துகொண்டால் நாடு தழைக்கும் என்று கூறியுள்ளார். பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பற்றி நக்கீரர் முதலிய சிறந்த கவிகள் பாடியுள்ளார்[2]. இப்பாண்டியனையே இகழ்ந்து 'கொடார்ப்பழித்தற்கு' இலக்காக புறம் 196, 198 பாக்கள் கூறுகின்றன. இவ்வாறு பழித்தற்குக் காரணம் என்கொலோ! திருக்குறள் இயற்றிய திருவள்ளுவர் காலத்து விளங்கிய மற்றொரு செழியன் உக்கிரப் பெருவழுதி. இவன் 'கானப்பேரெயில்' தந்தவன் என்ற பட்டம் கொண்டவன். போரில் வல்லவன். மீட்டற்கரிதான கானப்பேர் எயிலைக் கைப்பற்றி அதன் தலைவனையும் வென்றான். கானப்பேர் என்பது தற்காலத்துக் காளையார் கோயில் என்பர். இவனே ஒரு கவி. அகநானூற்றைத் தொகுப்பித்தவன். டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள், உக்கிரபாண்டியனும் சிலப்பதிகாரத்தில் கூறப்படும் நெடுஞ்செழியனும் ஒருவனே என்று 'புராதன இந்தியா'[3] என்ற புத்தகத்தில் கூறுகிறார். ஆனால் அது அவ்வளவு சரியான தீர்மானமாகத் தோன்றவில்லை. இவ்வரசனைப்பற்றியுள்ள பாக்கள் புறம் 21,367; இவ்வரசன் இயற்றியது அகம் 26, நற்றிணை 98; திருவள்ளுவமாலை 4, இவைகளிற் காண்க.

1. குறுந்தொகை 250, நற்றிணை 15, புறம் 188, அகம் 28.
2. புறம் 55—57.
3. *Ancient India*, pp. 355—356.

ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்

இவன் ஒல்லையூர் கொண்டவன். ஒரு கவி. புறம் 71-ஆம் பாட்டு இவன் பாடியது. இவனைப்பற்றி [1]புறம், அகம் இரண்டிலும் செய்யுள்கள் உள. இவன் மனைவி பெருங்கோப் பெண்டு கவித்திறம் வாய்ந்த கல்விச் சிறப்புடையவள். கற்பிற் சிறந்தவள். இவள் தன் கணவன் இறந்ததுந் தீப்பாய்ந்தாள். அக்காலத்து மற்றப் புலவரை நோக்கி, "நின் தலைவனோடிறப்ப நீ போ வென்று கூறுது அதனைத் தவிர்கவென்று சொல்லி விலக்கும் பொல்லாத விசாரத்தையுடைய பலசான்றவிரே, அணிலினது வரிபோலும் வரியை யுடைய விளைந்த வெள்ளரிக்காயை அரிவாளால் அரிந்திடப்பட்ட விதைபோன்ற நல்ல வெள்ளிய நறிய நெய் தீண்டாமல் இலை இடையே பயின்ற கையாற் பிழிந்துகொள்ளப்பட்ட நீர்ச்சோற்றுத் திரளுடனே வெள்ளிய எள்ளரைத்த விழுதுடனே புளிகூட்டி அடப்பட்ட வேளையிலை வெந்த வேவையுமாகிய இவை உணவாகக்கொண்டு பருக்கைகளாற் படுக்கப்பட்ட படுக்கையின் கண் பாயுமின்றிக் கிடக்கும் கைம்மை நோன்பால் வருந்தும் பெண்டிருள்ளேமல்லேம் யாம்; புறங்காட்டின்கண் உண்டாக்கப்பட்ட கரிய முருட்டால் அடுக்கப்பட்ட பிணப்படுக்கை உங்களுக்கு அரிதாவதாகுக; எமக்கு எம்முடைய பெரிய தோளை யுடையவனுகிய கொழுநன் இறந்துபட்டானுகை, முகையில்லையாக வளவிய இதழ்மலர்ந்த தாமரையையுடைய நீர் செறிந்த பெரிய பொய்கையும் தீயும் ஒரு தன்மைய" என்று பொருள்படும் செய்யுளைப் பாடினுள்[2]. அவள் மனோதிடம் எத்தன்மைத்து!

இக்காலத்து இலக்கியங்களிலிருந்து தமிழரின் சங்ககாலத்து நாகரிக நிலைமை தெரிகிறது. காலஞ்சென்ற ஸ்மித் துரை இந்நிலையைப்பற்றி பின்வருமாறு சொல்லுகிருர். 'வடஇந்தியா சம்பந்தம் கொஞ்சமும் இல்லாமல் தமிழர்கள் செழித்தோங்கிய நரகரிகநிலையை அடைந்தனர்'[3]. ஊன்றிப்பார்த்தால் இவ்வபிப்பிராயம் அவ்வளவு சரியல்ல என்று தெரியவரும். வடதேசத்து மூன்று மதங்களாகிய பிராமண, பௌத்த, ஜைன மதங்களும் தென்னுட்டில் பரவியிருந்தன. ஆரிய நாகரிகம் மேலிட்டிருந்தது. பூர்விகக் குடிகளின் மதாசாரங்கள் பின்வாங்கின. அநேக பாண்டிய அரசர்கள் வேதோக்தமான யாகங்கள் செய்தார்கள் என்று முன்னமேயே சொன்னேம். இந்தியாவில் மற்ற பாகங்களைக் காட்டிலும்

1. புறம், 246, 247, அகம் 25.
2. புறம் 246.
3. Early History, pp. 457, by V. A. Smith.

தமிழ் நாட்டில் ஆரியரல்லாதாரின் கொள்கைகள் தனித்தோ கலந்தோ தற்காலம்வரை நீடித்திருக்கலாம். திருமுருகாற்றுப்படையில் வேலன் ஆடல், சிலப்பதிகாரத்தில் (12-ஆவது அங்கம்) வேட்டுவர் வழிபாடு, என்ற பாகங்கள் ஆரியரின் முற்பட்ட குடிகளின் நிலையை உணர்த்தும். இருந்தும், இங்கேகூட ஆரியசம்பந்தம் ஊடுருவிச் சென்றிருப்பதைக் காண்போம். வேட்டுவ வரியில் கொற்றவையைச் சிவனின் பாரியை என்றும், லக்ஷ்மியின் அம்சம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. கொற்றவையின் மகனை முருகக் கடவுளையும் பிராமணக் கடவுளாக்கினர். புறம் 55-ஆம் பாட்டிலிருந்து சிவன் திரிபுரம் அழித்ததும், செந்தில் (திருச்செந்தூர்) முருகனின் கோயில் இருந்ததும் தெரிகிறது. ராமர், கிருஷ்ணர், இவர்களின் லீலைகள் சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையில் முழுதும் காணலாம். ஆகவே தமிழகத்தில் ஆரியக்கதைகள் எவ்வளவு பரவியிருந்திருக்கவேண்டும்! கண்ணப்பர், சண்டேசுரர், காரைக்காலம்மை, இவர்கள் ஆரியக் கலப்பில்லாத காலத்தவர்கள் என்று சொல்லலாம். சிலப்பதிகாரம், மணிமேகலை, இந் நூல்களிலிருந்து மற்ற மதங்களோடு பௌத்த, ஜைன மதங்களும் கலந்து வளர்ந்து வந்ததாகத் தெரியவருகிறது. சிற்பம் முதலிய இதர ஆதாரங்களால் இதன் உண்மை வலியுறுகிறது.

அரசியல்:—அரசாங்க முறையைக் கவனிப்போம். ஏகநாயக முறையை (*Monarchy*) அனுஸரித்த அரசியல் நடைபெற்று வந்தது. 'ஐம்பெருங்குழு', 'எண்பேராயம்', என்ற அங்கத்தினர்கள் வேந்தர்களின் அவைக்களத்தை அலங்கரித்தனர். உரையாசிரியர்கள் இவ்வங்கத்தினரை வெவ்வேறு விதமாய்க் கூறுகின்றனர். அவை பின் வருமாறு:

ஐம்பெருங்குழு:—(1) "மாசனம், பார்பார், மருதர், வாழ் நிமித்தர், (ஓர்) அமைச்சர், ஆசில் அவைக்களத்தார் ஐந்து."

(2) "அமைச்சர், புரோகிதர், சேனபதியர், தவாத்தொழிற்றூதுவர், சாரணர் என்றிவர் பார்த்திபர்க் கைம்பெருங்குழு வெனப்படுமே."

எண்பேராயம்:—(1) "சாந்துபூக்கச் சாடை பாக்கிலை கஞ்சுகநெ, யாய்ந்த விவரெண்ம ராயத்தார்—வேந்தர்க்கு...."

(2) "காரணத்தியலவர் கருமகாரர்க் கணக்கர் கனகச் சுற்றங் கடை காப்பாளர், நகரமாந்தர், களிபடைத்தலைவர், யானைவீரரி வுளிமறவ, ரிணையரெண் பேராயமென்ப."

இவர்களில் ஒவ்வொருவரும் எவ்விதக் கருமம் மேற்கொண்டார், எவ்வித அதிகாரம் செலுத்தினர் என்று ஐயமறச் சொல்ல

முடியவில்லை. அவ்வாறிருக்க இவர்கள் ஜனங்களின் பிரதிநிதிகளாயிருந்து அவர்களது சுதந்திரங்களையும் உரிமைகளையும் பாதுகாத்தனர் என்று ஸ்ரீமான் கனகசபை அவர்கள் சொல்லியிருக்கும் அபிப்பிராயத்தை நாம் அங்கீகரிக்க இடமில்லை (*The Tamils, pp.* 109). திருக்குறளில் அரசநெறியைப் பற்றிச் சிலாக்கியமான அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அநேக கவிகள் இவ்விஷயத்தைப்பற்றி அரசர்களிடம் வற்புறுத்திக் காட்டியிருக்கின்றனர். (உ - ம்) புறம் 184ஆம் பா, அரசன் இறைகொள்ளும் நெறியைக் கூறுகிறது. நெல்லை யறுத்து யானைக்குக் கவளமாகக் கொடுத்தால் பல நாளைக்காகும். ஆனால் யானை தனித்துப் புகுந்து உண்ணுமாயின் எண்ணப்படுவதினும் மீதிபட்டு அதிக நெல் அழியும். அவ்வாறே அறிவுடைய அரசன் இறைகொள்ளுநெறியை அறிந்துகொள்ளின், வேந்தனும் நாடும் தழைக்கும். ஆனால் முறைதப்பிப் பொருட்டொகுதியை விரும்பின் யானைபுக்க புலம்போலத் தானும் பயனடையான், நாடுங் கெடும் என்பது.

புறம் 55ஆம் பா, வேந்தரது வெற்றி, அறநெறியை முதலாக வுடைத்து என்ற நீதியைக் கூறுகின்றது. 'இவர் நம்முடையரென அவர் செய்த கொடுந்தொழிலைப் பொறுத்துக் கோல் வளையாது, இவர் நமக்கு அயலாரென்று அவர் நற்குணங்களைக் கெடாது, சூரியனைப்போன்ற வீரமும், சந்திரனைப்போன்ற மேன்மையும், மழையைப்போன்ற வண்மையும், ஆகிய இம்மூன்றையும் உடையவனாகிய நீ நெடுங்காலம் வாழ்வாயாக' என்று பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனை மதுரை மருதனிளநாகனார் பாடியுள்ளார். சிலப்பதிகாரத்திலிருந்து மதுரையில் பாண்டியனின் கோயிலில் (அரண்மனையில்) இடையர்கள் நெய் யளக்கும் முறை யிருந்ததாகத் தெரியவருகிறது (17ஆவது அங்கம், வரி 7). மௌரிய அரசனாகிய சந்திரகுப்தன் காலத்தில் பாடலீபுரத்தில் வசித்துவந்த யவனநாட்டுத் தூதனான மெகஸ்தனீஸ் (*Megasthenes*) ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொருநாளும் அரண்மனைக்கு வேண்டிய பொருள்களைக் கொடுப்பது வழக்கம் என்று எழுதியிருக்கிறார். நெய்யளப்பதும் இதைப்போல் அரசனுக்கு முறைப்படி செலுத்தவேண்டிய காணிக்கைப் பொருள் போலும்.

மதுரைபோன்ற நகரங்களில் சமூகவாழ்க்கை மேல்பாடடைந்திருந்தது. கவிகள் மாத்திரமல்லாமல் பாணர்கள் ஊரூராய்ச் சென்று யாழ் முதலிய இசைக்கருவிகளோடு பாடி, அரசர், குறுநில மன்னர், இவர்களிடம் பரிசில் பெற்று வாழ்ந்து வந்தனர். இவர்

களில் சிலர் கவித்திறம் வாய்ந்தவர். புறம் 235ல் அதியமான் நெடுமானஞ்சியைப்பற்றி வருந்தி 'இனிப் பாடுவாருமில்லை, பாடுவார்க்கு ஒன்றீவாருமில்லை' என்று ஔவையார் உருக்கமாகப் பாடியுள்ளார்.

பத்துப்பாட்டில் ஒன்ருன மதுரைக்காஞ்சியில் சமூகநிலையைப் பற்றி நேர்த்தியான வர்ணனைகள் இருக்கின்றன. 64-67வரிகளில் யுத்த முறையைப்பற்றியும், அரண்களைப்பற்றியும் உள்ளவர்ணனையிலிருந்து யுத்த முறைகளில் குடிகள் கைதேர்ந்தவர்கள் என்று தெரிகிறது. பரதவர் என்பவர் போரில் வீரியமுடையவர்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. நெடுஞ்செழியன் இவர்களைத் தன் படையாக அடிப்படுத்தியிருக்கலாம், "தென்பரதவர் போர் ஏறு" என்ற சிறப்பு வாய்ந்தவனுதலின். சாலியூர் என்ற துறைமுகத்தையும் அதன் வியாபாரத்தையும் பற்றிய விவரம் (75—88 வரிகளில்) பெரிப்ளஸில் [*Periplus*] கூறியிருப்பதை ஒத்து இருக்கிறது. யவனர்கள் நல்ல குப்பியில் கொண்டுவந்த குளிர்ந்த நறு நாற்றத்தையுடைய தேறலைப் பொன்னுற் செய்யப்பட்ட புனைந்த கலத்தின் கண்ணே ஏந்தி நாடோறும் ஒள்ளிய வளையை உடைய மகளிருட்ட மகிழ்ச்சிமிக்கு இனிதாக நடப்பாயாக என்று பொருள்கொண்ட வரிகளைப் புறம் பா 56ல் காண்க.

"இரவலர்க்கு அருங்கல மருகா தீயா
யவனர் நன்கலந்தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத்தேந்தி நாளு
மொண்டொடி மகளிர் மடுப்ப மகிழ் சிறந்த
தாங்கினி தொழுகுமதி யோங்கு வாண்மாற"

கொற்கையில் முத்துக்குளித்தல் சம்பந்தமான விவரத்தை, மதுரைக்காஞ்சி வரிகள் 131—8ல் காணலாம்.

"நட்டவர் குடி யுயர்க்குவை
செற்றவரரசு பெயர்க்குவை
பேருலகத்துமே எந்தோன்றிச்
சீருடைய விழுச் சிறப்பின்
விளைந்து முதிர்ந்த விழுமுத்தி
னிலங்குவளை யிருஞ் சேரிக்
கட் கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கொற்கையோர் நசைப்பொருந."

மதுரைமா நகரின் மாடங்களும், மதில்களும், அகழிகளும், கூடகோபுரங்களும், கோயில்களும், அழகுபெற வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. பொதுமகளிர் சமூகவாழ்க்கையில் முக்கியமானவர்

களாய்க் கருதப்பட்டனர். அவர்கள் அக்காலத்தும் சங்கீதம், நாட்டியம் என்ற கலைகளைக் கையாண்டு வந்தனர். இல்லறத்தின் பெருமையும் செவ்வனே எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. நாடகக் கணிகையான மாதவியைப்பற்றியும், குலஸ்திரீயான கண்ணகியைப் பற்றியும் சிலப்பதிகாரத்திலுள்ள வர்ணனையைக் காட்டிலும் அழகுபெறச் சொல்வது அசாத்தியமாகும். பெண் பாலர்களில் புலமை வாய்ந்தவர்கள் அநேகர் துறவற தருமத்தைக் கைப்பிடித்து வந்தனர். பார்ப்பனர் வைகறை யாமத்தில் வேதம் ஓதினர். இசையில் வல்லோர் கூத்தும், பாட்டும், தாளங்களும் நிகழ்த்தினர்.

இந்நூல்களில் சொல்லப்பட்ட அநேக விஷயங்கள் கவிக் கூற்றாக இருக்கலாம். ஆனால் அவை அக்காலத்து நிகழ்ச்சிகளை உள்ளதை உள்ளவாறு எடுத்துரைத்துப் பிறகு காலக்கிரமத்தில் ஒருவித நிலைத்த கூற்றாக ஸ்திரப்பட்டனவாகவேண்டும்.

கி. பி. மூன்றாவது நூற்றாண்டிலோ அல்லது சற்றுப் பின்னோ சங்ககாலம் முடிவடைந்திருக்கலாம். இதுமுதல் ஆறாவது நூற்றாண்டின் இறுதி வரையில் இருள் சூழ்ந்த காலமாக இருக்கிறது. அதைப்பற்றி நமக்கு யாதொரு விவரமும் தெரியவில்லை. அக்காலத்துப் பல்லவர்களின் சரித்திரத்திலிருந்துகூட அக்காலத்துப் பாண்டியநாட்டின் நிலைமை நமக்குத் தெரியவில்லை.

# ஆதித்தநல்லூர்ப் பறம்பு

எல். ஆதிநாதப் பிள்ளை

---

இது திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்ரீ வைகுண்டத்துக்கு இரண்டுமைல் தூரத்தில் மேற்கே தாம்ரபர்ணியாற்றின் தென்கரையிலுள்ள பறல் நிறைந்த மேட்டுநிலம். இதில் உடைமரம் நிறைந்திருக்கிறது. கால்மைல் குறுக்களவுள்ள வட்டமான இம் மேட்டு நிலத்தின் ஊடே திருச்செந்தூர் செல்லும்வழி வெட்டியிருக்கிறது.

இவ்விடம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் இடுகாடாக இருந்தது. தாழிப் பானைகளும், புதைகுழிகளும் எங்கும் காணப்படுகின்றன. ஒரு தாழியின் குறுக்களவு 32 அங்குலம் இருக்கிறது. ஓடுகளும் வாய்களும் குதிர்களை நினைப்பூட்டும்.

புதைகுழியில் பல சட்டிபானைகள், இரும்பாயுதங்கள், வெண்கல உருவங்கள், கலங்கள், அணிகள், இரும்பு விளக்கு, உமியுள்ள மட்கலம், எலும்புக்கூடு இருக்கும் தாழிப்பானை, தங்கப்பட்டம், வாழைப்பூப்போன்ற வேலைப்பாடமைந்த விலையுயர்ந்த வைரக்கல், அம்மி, உரல் முதலிய பலபொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மட்கலங்களிலுள்ள பல்வேறுவகைகள், குடுவைகள், குடம், மூடி, கலவடைகள் (பானை, சட்டிகளை வைத்துக்கொள்ள உரல் போலிருக்கின்றன), சட்டி, கூஜா முதலியன. அவற்றின் பூச்சுவரிகள் யாவும் குயவர்களின் வேலைப்பாட்டை விளக்கும்.

இரும்பாயுதங்கள் வாள், வேல், தூக்குவிளக்கு, முக்காலி, முதலியவை கொல்லர்களின் கைத்திறனைக் காட்டும்.

வெண்கலப் பொம்மை, தவலை, கிண்ணம், மணி, அதன் பிடி, பிடியிலுள்ள கவர்த்தபத்து அரும்புகள், பறக்கும் வடிவில் பண்ணிய பறவைகள்—இவையெல்லாம் கன்னர்களின் தொழிற்சிறப்பைப் புலப்படுத்தும்.

13, 15 அடி ஆழமுள்ள கல்லறைகள் அக்காலத்தில் ஈண்டுறைந்த செல்வர், சிற்றரசர், படைமறவர், தலைவர்களைக் குறிக்கும்.

தலைவர் அல்லது அரசர் மரித்தபின்பு நெய்தற்பறை கொட்டி வாட்டமுற்ற நாற்படையுடன் இடுகாட்டுக்குக் கொண்டு செல்வர். குயவன் செய்த தாழியும், பிற கலங்களும், எரிகிற விளக்கு, பயன்

படுத்திய படைக்கலங்கள், மணி தானியவகைகள், பல்வகைத் தின் பண்டங்கள்—இவையாவும் உடன்போதரும். பத்துப் பதினைந்தடி ஆழமான குழி தோண்டுவர். நீள அகலம் ஆறு அடிகள்தான் இருக்கும். குழியினுள் பிணத்தை வைத்துத் தாழி கவித்து ஆயுதங்களை நாற்புறமும் நட்டு வைத்து, விளக்கும், நீரும், நெல்லும், பணியாரங்களும் அவற்றிற்குரிய பாத்திரங்களில் வைத்து மணியடித்துப் பூசனை புரிந்து எல்லாவற்றையும் அப்படியப்படியே வைத்து மூடி மேற்புறம் பலகைகளைப் பரப்பி நன்றாக அடைத்து விடுவார் போலும்.

உழவர் (பள்ளர்) ஐவராசா கோயிலொன்றை அப்பறம்பில் வழிபடுகின்றனர். அது ஐந்து அரசர்களின் புதை குழிகளாயிருக்கலாம், அல்லது யுவராஜா (இளவரசன்) கல்லறையாயிருக்கலாம். இதுவன்றி இன்னும் சாத்தனர் (ஐயனர்) கோயில்களும் பறம்பிலுள்ளன.

புரநானூறில் கூறப்படும் 'கலம்செய் கோவே!' என்ற விளியையும், 'கவி செந்தாழிக் குவி புறத்தையும்' இப் புதை குழிகளும் தாழிப் பானைகளும் நினைவுக்குக் கொண்டுவரும்.

சங்ககாலக் குறிகள் இவையன்றி வேறில்லை. தேவாரக்காலத்தையும், நாலாயிரம் பாடியவர்கள் காலத்தையும் குறிப்பிடத்தக்க கோயில்களும், கற்குகைகளும் எங்கும் காணக்கிடக்கின்றன. பெரிய புராணம், திருவிளையாடல், இராமாயணம், இவை பாடியவர்கள் காலத்தைக் கல்வெட்டெழுத்துக்கள் காட்டும்.

இராயர், நாயக்கர்கள் தங்களுருவங்களைக் கல்லில் பொறித்துக் காண வைத்திருக்கின்றனர்.

ஆதித்தநல்லூருக்கு முற்காலத்தில் நல்லூர் என்ற பெயரே வழங்கி யிருந்திருக்கவேண்டும். பின்பு இராஜேந்திர சோழர் காலத்தில் தென்னடும் அவராட்சியின்கீழ் வந்தபொழுது ஸ்ரீ வைகுண்டம் இராஜேந்திரசதுர்வேதிமங்கலமாகவும், நல்லூர் அவர் முன்னேர் பெயருடன் ஆதித்தநல்லூராகவும் மாறியிருக்கலாம். இராஜேந்திரர் கி. பி. 1012 முதல் 1032 வரை தஞ்சையிலிருந்து அரசுபுரிந்தவர்.

பறம்பும் பண்டைப் பெயர்தான். 'பறம்பிற் கோமான்பாரி', 'பாரிபறம்பு' என்று கபிலர் கூறுவர். பாறைகளும் பருக்கைகளும் நிறைந்த சிறு மலைகளைப் பறம்பென்றழைத்தனர் போலும்.

முள்ளும் கல்லும் நிறைந்த முதுகாட்டைப் பறந்தலை யென்றழைப்பதுமுண்டு. இது பறம்பாகவும், பறந்தலையாகவுமுளது. (பறந்தலை போர்க்களமாகவுமிருந்தது).

இம் முதுகாட்டுக்குரிய ஊர் எங்கிருந்ததோ தெரியவில்லை. இப்பொழுது ஆதித்தநல்லூர் அப் பறம்பிற்குக் கிழக்கே யிருக்கிறது.

மழவை

இன்னும் கிழக்கே ஒருமைல் வந்தால் புதுக்குடி என்னும் ஊர் இருக்கிறது. இது ஸ்ரீவைகுண்டத்துக்கு நேர் தென்கரையிலுள்ளது. இப்பெயர் இவ்வூருக்கு 800 ஆண்டுகளுக்கு முன்பு கிடைத்தது. ஆதித்தநல்லூர் அல்லது வேளூரிலிருந்து மக்கள் பல்கி இங்கு புதிதாகக் குடியேறியிருக்கவேண்டும். புதுக்குடிக்கு ஒருமைல் தெற்கே வேளூரும், வேளூருக்கு ஒருமைல் தெற்கே மழவையு மிருக்கின்றன. இம்மூன்று ஊர்களிலும் 800 ஆண்டுகளுக்கு முற்பட்ட இறைவன் கோயில்களுள்ளன. வடநக்கர், நடுநக்கர், தென்னக்கர் எனப் பெயரிட்டிருக்கின்றனர். புதுக்குடிக் கோயில் அழிந்து தாம்பரபர்ணியின் வெள்ளத்தில் கெட்டுவிட்டதனால் அங்கிருந்த லிங்கத்தை எடுத்துக்கொண்டுபோய் வேளூர்க் கோயிலில் வைத்திருக்கின்றனர்.

மழவை என்பது மழவனூர் என்பதன் திரிபாயிருக்கலாம். மழைபாடி யென்று ஒரு பாடல்பெற்ற தலமுள்ளது.

"மழவும் குழவும் இளமைப் பொருள" என்பது தொல்காப்பியம். இளையவனுறைந்த ஊர் அல்லது இளையஊர் என்றிருக்க வேண்டும். வேளூர் என்பது வேளிர் இருந்த பழைய ஊராகும். இப்போதும் அப்பாகங்களில் வேளாண்மாந்தர் மிகுதி.

மழவையில் 800 ஆண்டுகளுக்குமுன் லிங்கமும் அதற்குக் கருவுடைத்திருவில்லும் (கர்ப்பக் கிருகமும்) அர்த்தமண்டபமும் கட்டினர். கோயிலுக்கு வடகிழக்கில் கல்வரி வைத்துக் கட்டினர்.

400 ஆண்டுகளுக்குமுன் உமையுருப் பொறித்து அதற்கு ஒரு கோயில் வடபுறத்தி லமைத்தனர். அர்த்த மண்டபத்துக்கு ஒரு முன் மகாமண்டபமும் கட்டி விமானத்தையும் புதுப்பித்துள்ளனர். இறைவன் கிழக்கு நோக்கியும், உமை தெற்கு நோக்கியு மிருப்பர்.

200 ஆண்டுகளுக்குள் கணபதி, முருகன், வள்ளி, தெய்வயானை, சண்டேச்வரர், சனீச்வரர், தக்ஷிணாமூர்த்தி, வைரவர் முதலிய உருவங்களைக் கல்லில்செய்து வைத்திருக்கின்றனர்.

இவற்றுள் கணபதி உருவம்தவிர மற்றெல்லா உருவங்களும் உயர்ந்த வேலைப்பாடமைந்தவை. உலகில் எங்கும் அத்தகைய கைத்திறனைக் காண்பதரிதென்னலாம். பல்லவர் காலத்திலும் பிற்காலப் பாண்டிய சோழர் காலங்களிலும், இராயர் நாயக்கர் காலங்

களிலுமுள்ள சிறந்த சிற்பத்தொழில்களைவிட இவ்வேலைப்பாடு மேம்பட்டது.

மரத்திலுள்ள கடைசல்வேலைகளும், உலோகவார்ப்பு வேலைகளும், இக் கல்வேலைகளுக்கீடாகா. முருகனுரு திருவாசியுடன் 35 அங்குலங்கள்தானிருக்கும். முடிமுதல் அடிவரை 25 அங்குல உயரம். முகம், கை, கால், மார்பு, கொப்பூழெல்லாம் அவ்வவற்றிற்குரிய அழகில் குறைபாடின்றி உயிருள்ள உருவத்துக்கமைந்தவை போன்றுள்ளன.

கண், மூக்கு, வாய், காது, கன்னங்கள், விரல், நகங்கள், பரந்த மார்பு, அழகிய வயிறு, முழங்கால், முன்கால், பாதங்கள், கணுக்கால்கள், சதைக்கட்டு, நரம்பு ஓட்டம்—இவை யாவும் உற்று நோக்குவாருள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்.

திருவாசியிலுள்ள யாளிவாய் முதலிய தொழிற்சிறப்பு சொல்லத் தரமன்று.

உருத்திராக்கமணிகள்போன்று பொடிமணி கோத்த மாலைகள் எல்லா உருவங்களின் கழுத்து, மார்பு, கை, கால்களில் மிகுதி. அவை அவ்வுருவங்களுக் கழகு மிகத் தருவதோடு நூலில்செய்து கோத்தவையோ என்று மருளத்தக்க மாண்புடைய வேலைப்பாடமைந்தனவாயிருக்கின்றன.

வள்ளி தெய்வயானையாரின் கைகளிலணிந்திருக்கும் பொடி வளையல்கள் பொலிவுள்ள தோற்றமமைந்தவை.

வைரவரின் இடுப்பிலும், மார்பினூடேயும் ஒலிக்கு மணிகளைக் கோத்தணிந்தவைபோன்று கல்லில் செதுக்கியிருப்பது வியக்கத்தக்க தொழிலாகும்.

இவற்றைச் செய்தோரும் செய்வித்தோரும் இவ்வுலகில் அழியாப் புகழ்படைத்தவரென்பதில் ஐயமில்லை. சிற்பக் கலையின் சீர்மை இவ்வளவு மேம்பாடு பெற்றதா என்பது இத்தகைய வேலைபாட்டைப் பார்த்தால்தான் விளங்கும்.

இப்பொழுது அவ்வூர் வயல்சூழ்ந்த சிறு சேரியாக விருக்கிறது. கோயில் பழுது பார்க்கப்படுகிறது. மேற்பார்வையிட்டுத் திருப்பணி செய்விப்பவர் ஆழ்வார்திருநகரி வெண்டர் இல. ஆழ்வார் ராமானுஜம் பிள்ளையவர்கள். 13-7-36ல் போய்ப்பார்க்க நேரிட்டது. ஆதித்தநல்லூரை அன்று காலையிலும், 15-7-36 காலையிலும் சென்று ஆராய நேரிட்டது.

# ஸம்ஸ்க்ருதப் பெண்கவிகள் *

டாக்டர். வே. ராகவன், எம். ஏ. பிஎச். டி.

## ஆயிச்சாம்பா

ஸ்வயம்பூதேவன் என்றவர் மிகப்ரஸித்திபெற்ற அபப்ரம்ச பாஷா கவி. அவருக்கு கவிராஜ சக்ரவர்த்தி, சந்தச் சூடாமணி யென்று இரு விருதுகள் இருந்தன. அவருடைய மனைவி ஆயிச் சாம்பாவும் கவிதை செய்பவள். ஜைனர்களுக்குள்ளும் ராமாயணம் வழங்கிவருகிறது; ஆனல் அது கதையில் பல வேறுபாடுகளுடன் பத்மசரிதமென்று சொல்லப்படும். அபப்ராம்சத்தில் இது 'பௌம சரியை' என்ருகும். இதை எழுதியவர் ஸ்வயம்பூ. இதில் 42-ஆவது ஸந்தியில் அயோத்தியாகாண்டம் முடிவுபெறுகிறது. அம்முடிவில், அயோத்யாகாண்டம் முழுமையும் தன் பார்யை ஆயிச்சாம்பா எழுதியதாய் ஸ்வயம்பூவே சொல்லியிருக்கிருர். ஸ்வயம்பூ எட்டாம் நூற்ருண்டிலிருந்து பத்தாவது நூற் ருண்டிற்குள் இருந்தவர்.[1]

## பீனபாயீ

யாதவ ராஜவம்சத்தைச் சார்ந்த மண்டலிகன் என்ற அரச னுக்கு பீனபாயீ என்ற நல்ல படிப்புவாய்ந்த குமாரி யொருத்தி யிருந்தாள். அவளைக் கல்யாணம் செய்துகொள்ளும் பாக்கியம் ஹர ஸிம்ஹன் என்ற அரசனுக்குக் கிட்டியது. இந்த பீனபாயீ பதினெ ட்டுப் புராணங்களையும், வேதங்களையும், ஸகல ஸ்ம்ருதி நூல்களை யும் கற்ருள். ஈச்வரபூஜை, தானம், கவனம், இவைகளில் காலத்தைக் கழித்தாள். எல்லா ஆன்மாக்களும் பிழைத்துப் போகுமாறு இவள் த்வாரகாபத்தளம் என்ற ராமாநுஜ மத நூலொன்றைச் செய்திருக் கிருள். இப்புத்தகத்தின் ஏட்டுப்ரதி ஒன்றே ஒன்றுதான் தற் பொழுது இருப்பதாகத் தெரிகிறது.[2] இந்த ப்ரதி எழுதிய காலம் ஸம்வத். 1574; அதாவது கி.பி. 1517. இதிலிருந்து பீனபாயீ பதினைந்தாம் நூற்ருண்டிற்குமுன் இருந்திருக்கவேண்டும் என்று ஏற்படுகிறது.

---

*முன் கலைமகளில் வெளி வந்த கட்டுரைகளின் தொடர்பு.

1. *Journal of the Nagpur University, Vol. I. No. 1. Hiralal Jain's article on Svayambhu and his two Poems.*

2. *Report of Search for Sanskrit Manuscripts in the Bombay Presidency between 1891 - 95, by Abaji Vishnu Kathwate, B. A. Ms. No. 142. Extract p. 113.*

## லக்கிமா தேவீ

கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டின் நடுவில் மிதிலையில் காமேச்வர ராஜவம்சத்தைச் சேர்ந்த சந்திரஸிம்ஹன் என்ற அரசன் ஆண்டு வந்தான். சந்திரஸிம்ஹனின் தகப்பன் தர்ப்ப நாராயணன்; தாய் தீரமதி. இந்த தீரமதி என்ற அரசி ஆக்கியதாக தானவாச்யாவளி என்று ஸ்ம்ருதி நூலொன்று வழங்கி வருகிறது. இந்நூலை இயற்றுமாறு தூண்டியது மாத்திரம் அவள் செய்ததே ஒழிய, அதை யுண்மையில் ஆக்கியது வித்யாபதி என்ற பண்டிதரே. ஆனாலும் இந்த அரசிக்கு, பண்டிதர்களை யாதரித்து நூல்களை யெழுதச் செய்யும் ஊக்கமும் பெருநோக்கமும் இருந்தது மிகப் போற்றத் தக்கதே. அதிலும் ஸ்ம்ருதியில் நூல் எழுத அவள் தூண்டுகோலாயிருந்தது விசேஷம். இந்த தீரமதிக்கும் தர்ப்ப நாராயணனுக்கும் இரண்டு பிள்ளைகள்: மேற்சொன்ன சந்திரஸிம்ஹனும், பைரவேந்திரனும். இவ்விருவர்களுக்கும் வாய்த்த மனைவிகள் தம் மாமியார்போல் கலைகளையும் வித்யைகளையும் ஆதரிக்கும் நல்லுணர்ச்சி யுடையவர்களாயிருந்தனர். பைரவேந்திரனின் மனைவிக்கு ஜயா என்று பெயர். அவளுடைய பெயரால் த்வைத நிர்ணயம் என்ற ஸ்ம்ருதி நூல் ஒன்று வழங்கி வருகிறது. இந்நூலில் ஆசிரியையாய்க் கூறப்படுவது ஜயாவின் பெயரானாலும், இதை உண்மையில் எழுதியவர் அவளையண்டி விளங்கிய வித்வான்களில் ஒருவரான வாசஸ்பதி யென்பவர். ஜயாவின் ஓரத்தியும் சந்திரஸிம்ஹன் மனைவியுமானவள் லக்ஷ்மீ என்ற லக்கிமாதேவீ. லக்கிமா டாகுராணீ என்றும் அவள் பெயர் காணப்படுகிறது. இவளால் ஆதரிக்கப்பட்டவரும் தூண்டப்பட்டவருந்தான் மிசருமிச்ரன் என்ற ஆசிரியர். அவர் லக்கிமாவினால் ஏவப்பட்டுத்தான் தம்முடைய நியாயவைசேஷிக சாஸ்த்ர நூலான பதார்த்த சந்திரிகையையும், ஸ்ம்ருதியில் வ்யவஹாரப் பகுதியிலுள்ள விஷயங்களை விளக்கும் விவாதசந்திரம் என்ற நூலையும் இயற்றினார்.

இந்த ல்க்கிமா தேவீ மிகப்படித்தவள். அவளது அறிவையும் கவிதா சக்தியையும்பற்றிப் பற்பல கதைகள் மிதிலையில் இப்பொழுதும் சொல்லப்பட்டு வருகின்றன. அவள் தன் மகளை ஒரு பண்டிதனுக்கு விவாஹம் செய்துகொடுத்திருந்தாளாம். தன் பெண்ணைப் புக்ககம் அனுப்பும்போது தன் பண்டித ஜாமாதாவுக்கு ஒரு ச்லோகம் எழுதியனுப்பினாள். அச்செய்யுளில் உள்ள பொருள் மிகப் பெரிதொன்றுமில்லை. பெண்ணையும் பிள்ளையையும் பற்றிக் கூறி, பெண்ணும் பிள்ளையும் கூடும் காலம் வந்துவிட்டதால், ரஸிகனான கணவன் அவளை இன்புறச் செய்யவேண்டுமென்று

தான் சொல்லியிருக்கிறாள். ஆனால் இப்பொருளைப் பொருத்த அவள் மிகச் சாதுர்யமாயும் புதிர் போட்டாற்போலு மிருக்கும் பதங்களைச் சேர்த்தாள். பன்னிரண்டு ராசிகளையும் சிலேஷையாய் அமைத்துக்கொண்டிருக்கும் இந்த ச்லோகம் எல்லா ரஸிகர் களுக்கும் நன்கு தெரிந்ததே.

*"பத்துக்கொடியோனின் ஆதிக்கியத்தால் தவித்தவளாயும், தரையில் போடப்பட்ட நாலு, பன்னிரண்டைப் போல் கஷ்டப் படுபவளாயும், பதினொன்று போன்ற மார்புடையவளாயும், ஐந்து போன்ற இடையுடையாளாயும், ஒன்பது போன்ற புருவமுடைய வளாயும், ஏழு இல்லாதவளாயுமான இந்த ஆறுவதானவள் எட்டாற் போல் வேதனைப்படுகிறாள்; இரண்டு மதியுள்ளவனே! சீக்கிரமாய் மூன்றாவதாக ஆவாயாக."

மேற் கண்டதின் பொருள்: பத்துக்கொடியோனின் ஆதிக்கி யம் என்றால் மன்மத பாதையின் ஆதிக்கியமென்று பொருள்; பத்து =மகரம்; மகரக்கொடியோன், மகரத்வஜன், மன்மதன். நாலு, பன்னிரண்டு=கர்க்கடம், மீனம்; நண்டும் மீனும்; இவை நீரிலிருப் பவையானதால் தரையில் போட்டுவிட்டால் கஷ்டப்படும். பதி னொன்று=கும்பம்; அதுபோன்ற ஸ்தனமுடையவள். ஐந்து= ஸிம்ஹம்; அதன் இடை சிறியது; சிறிய இடையுடையாள். ஆறு வது=கன்யா; பெண். ஒன்பது போன்ற புருவம்=தனுஸ்(வில்) போன்ற புருவம்; ஏழு=துலா; ஏழு இல்லாதவள் என்றால் சம மில்லாதவள், அதாவது நிகரில்லாதவள். எட்டாற்போல் வேதனை யென்றால் வ்ருச்சிகத்தினால் (தேளால்) கொட்டப்பட்டால் எப் படித் துடிப்பாளோ அப்படித் துடிக்கிறாள். இரண்டு=விருஷம், விருஷபம்; இதற்கு ச்ரேஷ்டம் என்று பொருள்; மேன்மை யான மதியுள்ளவனே என்று மாப்பிள்ளையழைப்பு. மூன்று: மிதுனம்=கூடியிருப்பது.*

---

* सन्तता दशमध्वजस्य गतिना संमूर्च्छिता निर्जले
तुर्यद्वादशवद् द्वितीयमतिमन् एकादशाभस्तनी ।
सा षष्ठी कटिपञ्चमी च नवमभ्रूस्सप्तमीवर्जिता
प्राप्नोत्यष्टमवेदनां त्वमधुना तूर्णं तृतीयो भव ॥

இது நம் தென்னாட்டுப் பாடம். வடதேசபாடத்தில் சிலபேதங்கள் காணப்படுகின்றன:— आक्रान्ता दशमध्वजातिगतिना। सा षष्ठी नृपपञ्चमस्य। परिहरेत्तूर्णं तृतीयोद्भवः ॥ தென்பாடத்தில் 'பெண்' என்று மட்டுமே பொருள் ஏற்படு கிறது; வடதேச பாடத்தில் 'அரசனின் பெண்' என்று ஏற்படுகிறது. ஆனாலும், தென்தேச பாடமே மேலாயிருக்கிறது. இரண்டு பாடப்படியும் முதல் ராசியான 'மேஷம்' காணப்படவில்லை.

ஒரு ஸமயம், இந்த லக்கிமாதேவியின் படிப்பையும் சாதுர்யத்தையும் பற்றிக் கேட்டு அவள் உள்ளபடி அவ்வளவு சிறந்தவளா என்று பரீக்ஷை செய்ய எண்ணங்கொண்டு ஒரு பண்டிதன் அரண்மனைக்கு வருவதாய்ச் செய்தி லக்கிமாவுக்கு எட்டியது. உடனே தண்ணீர் கொண்டுவருபவள்போல் உடையணிந்து வாவியில் நீரெடுத்துக் குடமும் இடையுமாய் லக்கிமா வந்து கொண்டிருந்தாள். வழியில் சென்றுகொண்டிருந்த பண்டிதனை லக்கிமா இரண்டொருதடவை உற்று உற்றுப் பார்த்துவிட்டு நடந்தாள். இதைக் கண்ட அப்பண்டிதன் அவளைக் கூவிப் பின்வரும் ச்லோகத்தைச் சொன்னான்:

"இடையில் குடத்துடன், பாதி மூடிய வக்ரப் பார்வையுடன் ஏன் என்னைப் பார்க்கிறாய்? உன்னுடன் கூடுவதற்கு யோக்யமான வேறொருவன் எவனையாவது இதுமாதிரி பார்; நீர்க்குடமெடுத்துச் செல்லுபவளை நான் கையால்கூடத் தொடமாட்டேன்."

किं मां हि पश्यसि घटेन कटिस्थितेन
वक्रेण चारु परिमीलितलोचनेन ।
अन्यं हि पश्य पुरुषं तव कार्ययोग्यं
नाहं घटाङ्कितकटीं प्रमदां स्पृशामि ॥

இதற்கு லக்கிமா அளித்த பதிலாவது:

"மாரன் அம்புகளின் செயலை யறியாப் பண்டிதா! உண்மையாய்ச் சொல்லுகிறேன்; நான் உன்னை யடைய விரும்பி உன்னை நோக்கினவளல்ல; உன்னைப் போல் தோற்றமுடைய என் வேலைக்காரன் ஒருவன் ஓடிப்போய்விட்டான்; நீ அவனாயிருக்கலாமோ என்று ஒரு ஸந்தேகம். ஆகையால்தான் உன்னைப் பார்த்து யோசித்துக் கொண்டிருக்கிறேன்."

सत्यं ब्रवीमि मकरध्वजबाणमुग्ध
नाहं त्वदर्थमनसा परिचिन्तयामि ।
दासोऽद्य मे विघटितस्तव तुल्यरूपः
स त्वं भवेन्न हि भवेदिति मे वितर्कः ॥

மிதிலையில் சில கீழ் ஜாதியினர் தம் பெண்களைத் தமக்கும் கீழான ஜாதியிலுள்ள தனிகர்களுக்குப் பணத்திற்கு விற்றுவிடும் வழக்கமுண்டாம். இப்படிப் பெண்களை விற்கும் வர்த்தகர்களின்

ஜாதிக்குப் 'பிகௌயா' என்று பெயராம். ஒரு ஸமயம் தன் ஸஹோதரி யொருத்தியை விற்றுவிட்டு, அவசரமாய்ப் போய்க் கொண்டிருக்கும் ஒரு பிகௌயாவைப் பார்த்து, அக்கேவலமான ஜாதியாரின் அருவருப்புக்கிடமான அப்பழக்கத்தைக் கடுமையாய் ஒரு ச்லோகத்தினுல் லக்கிமா கண்டித்திருக்கிருள்.*

## சாரதா

விஜயநகர அரசர்களில் ஒருவரான ஸால்வ நரஸிம்மன் பெயரில் முல்லண்ட்ரம் கவிகளைச் சேர்ந்த சோணுத்ரி (அருணகிரி) நாதன் என்ற கவி ராமாப்யுதயம் என்றொரு மஹா காவ்யம் எழுதி யிருக்கிருர். இதன் ஏட்டுப்ரதி ஒன்றேஒன்று திருவனந்தபுரத் தில் இருக்கிறது. இக்காவ்யத்தின் ஆரம்பத்தில் இதர கவிகளைப் புகழுமிடத்தில் சாரதா என்றொருத்தியைப்பற்றிக் கவி பின்வரு மாறு சொல்லுகிருர்:

"வசனத்திலும் விருத்தத்திலும் அநேக காவ்யங்களையும், பதினெட்டு நாடகங்களையும், இரண்டு ப்ராக்ருத காவ்யங்களையும் சாரதா செய்தாள்".

गद्यपद्यप्रबन्धानां पङ्क्त्याष्टादशनाटकैः ।
साकं प्राकृतकाव्याभ्यां साहित्यं शारदा व्यधात् ॥

இந்த சாரதா என்ற பெண்மஹாகவியைப் பற்றி வேறு விவரங்கள் ஒன்றும் தெரியவில்லை. ஸால்வ நரஸிம்மன் காலம் கி.பி. 1482 - 92.

## வைஜயந்தீ

வங்காளத்தில் பரித்பூர் ஜில்லாவில், தனுகக்கிராமத்தில் மூரபட்டர் என்ற வித்துவானுக்கு வைஜயந்தீ (ஜயந்தீ) என்ற குமாரி இருந்தாள். கோடளிபதம் தூர்க்காதாஸ தர்க்கவாகீசரின் குமாரரான க்ருஷ்ணநாதன் என்பவரை அவள் மணந்துகொண் டாள். அவள் காலம் கி.பி. 17ஆம் நூற்றுண்டின் மத்யம். தன் தந்தையிடம் அவள் ஸம்ஸ்க்ருதம் கற்று மீமாம்ஸா சாஸ்திரத்தில் விசேஷமான புத்திலாபத்தைப் பெற்றுள். தன் கணவன் பாடம் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருக்கும்போது செய்த ஒரு பிழை யை அவள் திருத்தினதாய்க் கதை சொல்லுகிருர்கள். இவள் இனி மையாய்க் கவிபாடுவாள். ஆனுல் இவள் செய்த செய்யுள்களெல் லாம் ஆனந்தலதிகா சம்பூ என்ற காவ்யத்தில் இருக்கின்றன; இக் காவ்யம் இவளும் இவள் கணவனும் சேர்ந்து இயற்றியதாகையால், எவ்வெப்பாகங்கள் யாரியற்றியன என்று அறியக்கூடவில்லை.

---

*Sources: *Indian Antiquary*, Vol. XV. and P. V. Kane, *History of Dharma Sastra Literature*. VOL. I.

# சாஸ்திரம்

## மனிதன் எம்மாத்திரம்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

---

குடியானவன் ஒருவனை யாதாயினும் பக்கத்திலுள்ள ஓர் ஊர் எவ்வளவு தூரம் என்று கேட்டால், இரண்டு, அல்லது மூன்று நாழிகை தூரம் என்பான். அதாவது இரண்டு அல்லது மூன்று நாழிகைகளில் ஒரு மனிதன் சாதாரண நடையாக நடந்தால் செல்லும் தூரம் என்று பொருள்.

இவ்வாறு கால அளவில் தூரத்தை அளந்து சொல்லுவது கிராமத்திலுள்ள குடியானவர்கள் மட்டுமல்ல. பௌதிக சாஸ்திரங்களில் சாதாரண அளவுக்கு எட்டாத தூரங்களை இவ்வாறு கால அளவை வைத்துச் சொல்லுவது முறை. ஆனால் சாதாரண நடை வேகத்தை வைத்துக் குறிப்பிடுவதற்குப் பதில், நமக்குத் தெரிந்த விசைகளனைத்தினும் பெரும் விசையான ஒளி விசையைக் கொண்டு அளந்து சொல்வார்கள். காசி எவ்வளவு தூரம் என்று கேட்டால் இக்காலத்தில் கால்நடை யளவில் சொல்லமாட்டோம். நான்கு நாள் பிரயாணம் என்று புகைவண்டிப் பிரயாணத்தை அளவாக வைத்துக் கொண்டு சொல்லுவோம். அம்மாதிரியே விஞ்ஞான சாஸ்திரிகள் ஒரு நட்சத்திரம் பூமிக்கு எவ்வளவு தூரம் என்றால், இத்தனை "ஒளி வருஷங்கள்" என்பார்கள். அதாவது ஒளியானது ஒரு வருஷத்தில் செல்லும் தூரத்தை அளவையாக வைத்துக்கொண்டு நட்சத்திரத்திற்கும் நமக்கும் இடையிலுள்ள தூரத்தை அளந்து குறிப்பார்கள்.

ஒரு வண்ணான் துணி துவைப்பதைத் தூரத்தில் மேட்டில் உட்கார்ந்து பார்ப்பவர்களுக்கு ஒவ்வொரு தடவையும் கல்லின் மேல் துணி விழுவதைக் கண்ட கொஞ்ச நேரத்திற்குப் பின் இடைவிட்டுத்தான் அடியோசை கேட்கும். உற்சவ காலத்தில் வாண வேடிக்கை பார்க்கும்போது, "அவுட்" வாணம் மேலே கிளம்பி விசித்திர கோலமாகப் பொறி பூத்த கொஞ்ச நேரங்

கழித்துத்தான் வெடி சப்தம் காதுக்கு எட்டுகிறது. இவ்வாறு சப்தம் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடம் போய்ச் சேர தொலைவுக்குத் தகுந்த நேரம் பிடிக்கிறது என்பதை அறிகிறோம். ஒலியின் விசை புகை வண்டியினதைவிட மிக அதிகம். ஆனால் ஒலியின் விசைகூட நட்சத்திரங்களின் தூரங்களை அளக்கப் போதாது. காசிக்கும் காஞ்சிக்கு முள்ள தொலைவைக் காலடியால் அளந்து சொல்வதைப்போலவேயாகும்.

சப்தத்தைப் போலவே ஒளிக்குங்கூட ஓர் இடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போகக் கொஞ்ச நேரம் பிடிக்கிறது. ஆனால் அதன் விசை ஒலிவிசையைவிடப் பன்மடங்கு அதிகம். மிகவும் வேகமான புகைவண்டியைவிட 12 மடங்கு விசையில் சப்தம் செல்லுகிறது. ஒலியின்விசையைவிடப் பன்மடங்கு அதிகம் ஒளியின் விசை. ஒலி 10 மைல் செல்வதற்குள் ஒளி 1 கோடி மைல் சென்று விடும்! இந்தியாவின் வட கோடியிலிருந்து தென் கோடிக்கு ஒளியானது ஒரு விநாடியில் நூற்றில் ஒரு பங்கு காலத்திற்குள் தாண்டிவிடும். இவ்வளவு விசையாகப் பறக்கும் ஒளியானது நட்சத்திரங்களுக்குள் நமக்கு மிகச் சமீபம் என்று சொல்லக்கூடியவைகளிலிருந்து நம்முடைய உலகத்திற்கு வந்து சேர மூன்று வருஷமாகிறது.

ஒரு நாளில் கோடி இந்தியாவைத் தாண்டும் ஒளிவிசை மிக நெருங்கி நிற்கும் நட்சத்திரத்திற்கும் நமக்குமுள்ள தூரத்தைக் கடந்துவர மூன்று வருஷங்களாகு மென்றால், நட்சத்திரங்கள் எவ்வளவு தூரத்திலிருக்கின்றன வென்பதை ஒருவாறு உணரலாம். சில நட்சத்திரங்கள் மூன்று வருஷமல்ல, 50, சில 500, சில 1000 வருஷ தூரத்திலிருக்கின்றன. அங்கிருந்து அவற்றின் ஒளி நம்மிடம் வந்து சேருமுன் இடையில் நாம் புத்தகங்களில் படிக்கும் இந்திய சரித்திரம் முழுதும் நடைபெற்றது! இன்று நாம் அசுவினி, கிருத்திகை, முதலிய நட்சத்திரங்களைப் பார்க்கிறோமல்லவா? 10, 50, அல்லது 1000 வருஷங்களுக்கு முந்தி யிருந்த காட்சியைத்தான் நாம் இன்று காண்கிறோம். ஒளி அவ்விடங்களிலிருந்து புறப்பட்டு நம் கண்ணுக்கு எட்ட அவ்வளவு காலம் செல்லும். இப்போது வானத்தில் பறக்கும் ஆகாயக் கப்பல்களெல்லாம் சாதாரணமாக நான்கு மைல் உயரத்திற்குமேல் செல்வதில்லை.

பூமியின் சுற்றளவு சுமார் 25,000 மைல். இந்த அளவு கொண்ட பூகோளத்தை ஒரு சிறு எலுமிச்சம்பழ அளவாக வைத்துக் கொண்டால், சூரியனுடைய பரிமாணம் 9 அடி குறுக்களவுகொண்ட ஒரு பெருஞ் சுடர் கோளமாகும். அந்த அளவு

கொண்ட சூரியனுங் கூட சில நட்சத்திரங்களுக்கு முன் அணுமாத்திரமேயாகும். இவ்வளவு மகத்தான இடை வெளியில் இவ்வளவு பேரளவுகொண்டு அங்கங்கே சுழன்று செல்லும் அண்டங்களின் வேகங்களையும், நிலைகளையும் இடைவிடாமல் ஆண்டு வரும் மகா சக்தியே ஈசுவர சக்தி. இதில் மனிதனின் பிரமாணம் எவ்வளவு சிறிது! அவனுடைய வெறுப்புகளையும் விருப்புகளையுமே வைத்து உலகத்தின் நன்மை தீமையை அளக்க முடியுமா?

ஜகத்தனைத்தும் சேர்ந்து ஓர் உடல். அதனுள்ளூடி நின்று அதனை ஆளுவது ஒரு பரமாத்மா. ஜகம் முழுதும் சேர்ந்த முற்றுப் பொருளில் ஒவ்வொரு ஜீவனும் ஓர் உயிருள்ள அவயவம். அனைத்தும் ஒரு சக்தியால் ஓர் ஒழுங்குக்கு உட்பட்டு நடைபெற்று வருகிறது; ஒழுங்கற்ற வெறும் பொருட்கூட்டமல்ல. இரவில் வானத்தில் மின்னும் நட்சத்திரங்களைக் கண்டு நாம் மகிழும்போது இதையெல்லாம் எண்ணிச் சிந்திக்கவேண்டும்.

# கந்தகம்

கே. ஸ்ரீநிவாஸகிருஷ்ணன், பி. ஏ.

---

ரஸாயன மூலப்பொருள்களுள் கந்தகம் மிகவும் பழமை யானது. ரஸவாத காலந்தொடங்கி இதுகாறும் உபயோகமா யிருப்பது கந்தகம். மேல்நாட்டு ரஸவாதிகள், கந்தகத்தையும் பாதாஸத்தையும் பொன்னேபோல் போற்றி வந்தார்கள். இவ்விரு மூலப்பொருள்களின் உதவியால், சாதாரண உலோகங்களைத் தங்க மாக மாற்றலாம் என்று நம்பி, அநேகவிதமான முறைகளைச் செய்து பார்த்தார்கள். ஆனல் பயன்படவில்லை. கந்தகத்தின் சிறந்த மருந்துத்தன்மை முன்னுளிலிருந்தே தெரியவந்திருக் கின்றது. சில களிம்புகளில் கந்தகம் கலக்கப்படுகின்றது. சில சரும நோய்களுக்குக் கந்தகம் சேர்ந்த மருந்துகள் உள்ளுக்குங் கொடுக்கப்படுகின்றன. கிருமிகொல்லிகளில் கந்தகம் முக்கியமான தாகக் கருதப்படுகின்றது.

**கந்தகத்தின் பழமை.**

சாதாரணமாக வழங்கப்படும் கந்தகம், மஞ்சள் நிறமுள்ள ஒரு கனபதார்த்தம். அது இயற்கையில் எண்கோண வடிவமுள்ள தாக இருக்கின்றது. அது தண்ணீரில் கரையாது. கார்பன் பை - ஸல்பைட் அல்லது த்வி கந்தகாங்காரம் என்ற திரவ பதார்த்தத்தில் எளிதாகக் கரையும். 113° *C*-இல் உருகும். கந்தகம் பிராண வாயு வுடன் இரண்டு படியாகக் கலந்து, இரண்டு கூட்டுப்பொருள்களைக் கொடுக்கின்றது. இரண்டும் ஆமலக ஸத்துக்கள். அவற்றுள், 'ஸல்பர் டை - ஆக்ஸைட் அல்லது 'த்விப்ராண கந்தகவாயு' என்பது ஒரு வாயுபதார்த்தம். மற்றொன்று, 'ஸல்பர் ட்ரை - ஆக்ஸைட்' அல்லது 'த்ரிப்ராண கந்தகம்' என்பது ஒரு கனபதார்த்தம். இவைகள் தண்ணீரில் கரையும் இயல்புள்ளவை. முறையே, 'ஸல்ப்யூரஸ் ஆஸிட்', 'ஸல்ப்யூரிக் ஆஸிட்' (அக்கினித்திராவகம்) என்ற திராவகங் கள், மேற்சொன்ன பதார்த்தங்கள் தண்ணீரில் கரைவதினுல் கிடைக்கின்றன. அக்கினித்திராவகத்திலிருந்து கிடைக்கும் உப்புக் கள் சில, அதிக உபயோக முள்ளவையா யிருக்கின்றன. 'க்வினின் ஸல்பேட்' என்ற கொயினு உப்பு, முறைக்காய்ச்சல் என்ற ஜ்வரத்திற்கு ஒரு சிறந்த மருந்து. 'மெக்னிஸியம் ஸல்பேட்'

**கந்தகத்தின் சில கூட்டுப் பொருள்கள்.**

என்ற உப்பு வயிறுபேதிக்கும் மருந்தாக உபயோகப்படுகின்றது. 'பொடாஸியம் ஸல்பேட்' என்ற உப்பும், 'அமோனியம் ஸல்பேட்' என்ற உப்பும் வயல்களுக்கு எருவாக உபயோகப்படுகின்றன. 'பிளாஸ்டர் ஆவ் பாரிஸ்' என்ற உப்பு, கட்டடங்களுக்கு உபயோகப்படுகின்றது. 'ஆலம் பொடாஷ்' என்ற சீனக்காரம் அநேகவிதமாய் உபயோகப்படுகின்றது. கண்ணுக்கு ஓர் ஔஷத மாகப் பாவிக்கப்படுகின்றது. சாயங்கள் கெட்டியாகப் பிடிக்கும் வண்ணம் உபயோகிக்கும் மருந்துகளில் சீனக்காரம் ஒன்று. எளிதில் தீப்பற்றும் இயல்புடைய மரம், துணி முதலியவைகளைத் தீப்பற்றுமல் செய்வதற்குச் சீனக்காரம் மிகவும் உபயோகப் படுகின்றது. படப்பதிவு செய்யும் காகிதங்களில் பூசியிருக்கும் 'கிலேடின்' என்ற பதார்த்தத்தை இருகச்செய்வதற்கும் இந்த உப்பு உபயோகிக்கப்படுகின்றது.

கந்தகத்தின் கூட்டுப்பொருள்கள் இன்னும் பல உள. ஜலவாயு வுடன் கந்தகஞ் சேர்ந்து, 'ஹைட்ரஜன் ஸல்பைட்' அல்லது 'ஜல-கந்தகவாயு' என்ற ஒரு கூட்டுப்பொருளைக் கொடுக்கின்றது. இந்த வாயு மிகுந்த துர்க்கந்தமுள்ளது. 'அழுகின கோழிமுட்டையின் நாற்றம்' என்று சொல்லுவார்கள். இந்த வாயு எரியுந்தன்மை யுள்ளது. இந்த வாயுவும் ஓர் ஆமலக சத்துத்தான். ரஸாயன சாஸ்திரத்திற்கு இது ஓர் இன்றியமையாத வாயு. ஏனெனில் உலோக வகைகளை ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்தெடுப்பதற்கு இந்த வாயு உபயோகமாயிருக்கின்றது. கந்தகமும் கரியுஞ் சேர்ந்து உண்டாகுங் கூட்டுப்பொருள்தான் 'கார்பன் டை ஸல்பைட்' அல்லது கந்தக த்வயாங்காரம் என்ற திரவபதார்த்தம். அதை நெருப்புப்பக்கத்தில் வைத்தால், அது தீப்பற்றும். அதில் கந்தகம், அயோடின், பாஸ்பரஸ், முதலிய மூலப்பொருள்கள் கரையும். வெடிமருந்து, சில நச்சுப்புகைகள், முதலிய பொருள்கள் செய்வதற்குக் கந்தகம் உபயோகப்படுகின்றது.

ஒரு மூலப்பொருள், அநேக வகையாக இருக்கக்கூடும். உதாரணமாக, கரி ஐந்துவிதமாக இருக்கின்றது. கரியின் பேதங் களை, அந்த மூலப்பொருளைப்பற்றின கட்டுரையில் காணலாம்.

**கந்தகத்தின் வகைகள்.**

கந்தகமும் அவ்வாறே பலபடியாக இருக் கின்றது. முக்கியமாக நான்கு விதக் கந்த கங்கள் இருக்கின்றன. அவற்றுள் இரண்டு வடிவமுள்ளவை. மற்றவிரண்டும் வடிவமற்றவை. வடிவமுள்ள கந்தகங்களில் ஒன்றுதான் முன்சொன்ன எண்கோணக் கந்தகம். அதன் தன்மையை முன்னமே கொஞ்சம் படித்திருக்கின்றோம். அந்தக் கந்தகத்தை உருக்கி, அந்தத் திரவபதார்த்தம் வைக்கோல்

நிறமுள்ளதாக இருக்கும்பொழுது, அதைக் காகிதத்தினுற்செய்த புனல் வடிவமுள்ள பேணியிற் கொட்டி, ஆறவைத்து, மேல்பக்கம் கெட்டியானவுடன் அதைக் கீறி, உள்ளிருக்குங் கந்தகத்திரவத்தை வெளியே கொட்டினுல், கூரிய முனையுள்ளதும், ஸ்தூபிபோன்ற உருவமுள்ளதுமான கந்தகங் கிடைக்கின்றது. அதுவும் மஞ்சள் நிறமுள்ளதுதான். ஆனுல், அதிகப் பிரகாசமுள்ளதாக இருக்கின்றது. அது 119° *C*-இல் உருகும். மற்றக் கந்தகத்தைப்போல் இதுவும் தண்ணீரில் கரையாது; த்வி கந்தகாங்காரத்திற்ருன் கரையும். இந்தக் கந்தகம் 94°.5*C* க்கும், 119°*C* க்கும் இடையில் கூரிய முனைவடிவ முள்ளதாக விருக்கும். 94°.5*C* க்குக் கீழே எண்கோண வடிவமுள்ள கந்தகமாய் மாறிவிடும். 119°*C* க்குமேல் உருகி, நிறம் குணம் சில மாறி, வடிவமில்லாத கந்தகங்களில் ஒன்ருக ஆகிவிடும்.

வடிவமில்லாத கந்தகத்தில் இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒன்று மெல்லிய மஞ்சள் நிறமுள்ளதாய் சவ்வுபோல் இழுபடக் கூடியதாகவிருக்கும். அதற்குப் 'பிளாஸ்டிக் ஸல்பர்' என்று பெயர். மற்ருென்று வெண்மை கலந்த மஞ்சள் நிறமுள்ள தூள். அதை வெள்ளைக் கந்தகம் என்று சொல்லுவது வழக்கம். சவ்வு போன்ற கந்தகம் சாதாரண கந்தகத்திலிருந்துதான் கிடைக்கின்றது. சாதாரண கந்தகத்தை உருக்கி, அத் திரவகந்தகம் சிறிது தடித்து நிறம் மாறிவரும்போது தண்ணீரில் அதை ஊற்றினுல், திரவகந்தகம் உடனே கனபதார்த்தமாகி 'ரப்பர்' போல் இழுபடக்கூடியதாக ஆகிவிடுகின்றது. இந்த கந்தகத்தின் மிருதுத் தன்மையும் சவ்வுத் தன்மையும் எப்பொழுதும் இரா. ஏனெனில், இந்தக் கந்தகம் மெள்ள மெள்ள நிறம்மாறி, கடினப்பட்டு, எண்கோணவடிவமுள்ள கந்தகமாக ஆகிவிடுகின்றது. இந்தச் சவ்வு போன்ற கந்தகம், அங்கார கந்தகத்வயத்தில் கரையும். மற்றக்கந்தகம் (வடிவமில்லாத மற்ருென்று) கந்தகக் கூட்டுப்பொருள்களின் ரஸாயன விகாரங்களினுல் உண்டாகின்றது. உதாரணமாக, த்வி ப்ராண கந்தகவாயுவும், ஜல - கந்தகவாயுவும் ஒன்றுகூடி ரஸாயன விகாரமேற்பட்டால், வெள்ளைக்கந்தகம் உண்டாகின்றது. இந்த கந்தகத்தை வேறுவிதமாகவும் உண்டாக்கலாம். 'ஹைட்ரோக்ளோரிக் ஆஸிட்' என்ற திராவகத்தை, 'ஸோடியம் தயோஸல்பேட்' என்ற உப்பில் சேர்த்தால், த்விப்ராண கந்தகவாயுவும், வெள்ளைக் கந்தகமும் கிடைக்கின்றன. வெள்ளைக் கந்தகம் அநேகவிதமாக இருக்கின்றது. சிலவித வெள்ளைக் கந்தகங்கள் தண்ணீரில் கரையும். சிற்சில, அங்கார கந்தகத்வயத்திலும் கரையாமல் இருக்கின்றன.

இவ்வாறாகக் கந்தகம் பலவகையாக இருக்கின்றது. அவற்றுள், எண்கோண கந்தகந்தான் நிரந்தரமாக உள்ளது. ஊசி போன்ற முனையுள்ள கந்தகமும், சவ்வுபோன்ற கந்தகமும், மெள்ள மெள்ள எண்கோண கந்தகமாய் மாறிவிடுகின்றன. எந்தவிதமான கந்தகமாயினும், பிராண வாயுவுடன் கூடினால், த்விப்ராண கந்தக வாயுவே கிடைக்கின்றது. ஆதலால், ஸ்தூலத்தில் வேறு தன்மையுள்ளதாயினும், கந்தகம் ஒரே ரஸாயன மூலப்பொருளைக் கொண்டதென்பது தெற்றென விளங்கும்.

தனிமையாகவும், கூட்டுப்பொருளாகவும், கந்தகம் பூமியிலிருந்து வெட்டியெடுக்கப்படுகின்றது. எரிமலையுள்ள பிரதேசங்களில் அதிகமாகக் கந்தகம் கிடைக்கின்றது. இத்தாலி தேசத்திற் கருகிலுள்ள ஸிஸிலி என்ற தீவிலும், ஜப்பான் தேசத்திலும், ஸ்பெயினிலும், வட அமெரிக்காவிற் சிற்சில விடங்களிலும் கந்தகம் ஏராளமாகக் கிடைக்கின்றது. பூமியிலிருந்து வெட்டியெடுத்தவுடன் மண் மணல் முதலியவற்றுடன் கந்தகங் கலந்தே யிருக்கும். அதைச் சாய்ந்த தளமுடைய காளவாயில் போட்டுக் காய்ச்சினால், கந்தக முருகி திரவபதார்த்தமாகி, சாய்ந்த தளத்தின் வழியே ஓடி வழிந்துவிடுகின்றது. இந்தக் கந்தகத்தை மறுபடியும் சுத்தஞ் செய்கிறார்கள்.

**கந்தகம் எவ்வாறு கிடைக்கின்றது.**

அமெரிக்கா தேசத்தில், கந்தகச் சுரங்கங்கள் அதிக ஆழத்திலிருக்கின்றன. சுமார் 700 அல்லது 800 அடிகளுக்குக் கீழே கந்தகம் கிடைக்கின்றது. அவ்வளவு ஆழத்திற்கு, இரண்டு குழாய்களை ஒன்றக்குளொன்று வைத்துச்செலுத்தி, ஒரு குழாயின் மூலம் கொதிக்கும் நீரைச் செலுத்தினால், சுரங்கத்திலுள்ள கந்தகம் உருகி, மற்றக் குழாய்வழியாக வெளியே தள்ளப்படுகின்றது. இந்தவிதமாக நாளொன்றுக்கு 400 டன்கள் நிறையுள்ள கந்தகம் டெக்ஸாஸ் என்ற விடத்தில் எடுக்கப்படுகின்றது. இவ்வாறு எடுக்கப்படும் கந்தகம் நூற்றுக்கு ஏறக்குறைய நூறு வீதம் சுத்தமானதாக விருக்கின்றது.

கந்தகம் பலவித உபயோகமுள்ளது. 100-க்கு 34 வீதம் திராவகங்கள் முதலிய ரஸாயனங்களுக்கும், 100-க்கு 8 வீதம் வெடிமருந்துகளுக்கும், 100-க்கு 24 வீதம் காகிதஞ் செய்வதற்கும், 100-க்கு 30 வீதம் எரு முதலியவை செய்வதற்கும், மீதம் 100-க்கு 4-ம் புழுக் கொல்லுதல், சாயம் போக்குதல், முதலிய உபயோகத்திற்கும் செலவாகின்றது. கந்தகத்தை ரப்பருடன் சேர்த்து 300°$F$ வரை காய்ச்சினால், 'இபொனைட்' என்ற

**கந்தகத்தின் உபயோகம்.**

பொருள் கிடைக்கின்றது. அது மின்சாரத்தை ஊடுருவிச் செல்ல விடாது. ஆதலால், மின்சார சம்பந்தமான எல்லாக் கருவிகளுக்கும், பிடிகளாகவும், இணைத்தியிடங்களாகவும் அது உபயோகப் படுகின்றது.

---

| | | |
|---|---|---|
| *Sulphur* | — | கந்தகம். |
| ,, (*Octohedral*) | — | ,, (எண்கோண) |
| ,, (*Needle-shaped*) | — | ,, (ஊசியுருவ) |
| ,, (*Plastic*) | — | ,, (சவ்வு) |
| ,, (*White*) | — | ,, (வெள்ளை) |
| *Carbon—di-sulphide* | — | கரியிரு கந்தடு |
| *Sulphur—di-oxide* | — | கந்தக ஈருயிரி |
| *Sulphur-tri-Oxide* | — | கந்தக மூவுயிரி |
| *Plaster of Paris* | — | கந்தகக்களி |
| *Sulphuric Acid* | — | கந்தக த்ராவகம் |
| *Magnesium Sulphate* | — | நிலவியக் கந்தகேற்று (?) |
| *Alum Potash, Potassium* | — | சீனக்காரம் |
| *Bleaching agent* | — | சாயம் போக்கி |
| *Mordant* | — | சாயமிறுத்தி |
| *Malaria Fever* | — | (மலைக்காய்ச்சல்) முறைக் காய்ச்சல் |
| *Acidic Substance* | — | ஆமலக ஸத்து |
| *Hydrogen Sulphide* | — | ஜல-கந்தகவாயு |
| *Poison gas* | — | நச்சுக்காற்று |
| *Crystalline* | — | வடிவமைந்த |
| *Amorphous* | — | வடிவமற்ற |
| *Switch-board* | — | இணைத்தியிடம் |

---

# மாதுளே

## ஸி. எஸ். ஜகதீசசுந்தரம் பிள்ளே

**மா**துளங்கம், மாதுளம், கழுமுள் என்பன மாதுளேயின் பெயர்கள். இதற்கு ஹிந்தியில் அனர் என்று பெயர். சாதாரண மாக இது தோட்டங்களிலும், வீட்டுக் கொல்லேகளிலும், வீட்டு முற்றங்களிலும் பயிர் செய்யப்படுகிறது. விசேஷமாக மகம்மதியர் வீடுகளில் காணலாம். மகம்மதியருக்குப் பிரியமான மரங்கள் நான்குண்டு. அவை முருங்கைமரம், கொய்யாமரம், மாதுள மரம், பப்பளிமரம். முக்கியமாக, பழத்துக்காகவே இச்செடி யைப் பயிர் செய்தாலும், இதன் ஒவ்வொரு பகுதியும் மிகவும் உபயோகமானதாகவிருக்கிறது.

இனிப்புள்ள மாதுளம்வித்தானது சுக்கிலத்தை இறக்கு வதுந் தவிர அதிலுள்ள குற்றத்தையும் பிரமேகச் சுறுக்கையும் நீக்கி, இருதய பலவீனத்தையும் போக்குகிறது; இரத்தத்தை விருத்தி செய்கிறது; ஜீரணசக்தியை உண்டுபண்ணுகிறது. மாது ளம் விதையை மென்று சுவைத்துச் சாப்பிடச் சீதபேதியைக் கண்டிக்கிறது. மாதுளம் விதை, இந்துப்பு, மிளகு இவற்றைக் கொஞ்சமாகச் சேர்த்து அரைத்துச் சாப்பிட்டால் பித்தசாந்தி யும், பித்தத்தால் ஏற்படும் பயத்தையும் போக்கும். நேத்திர ரோகங்களுக்கும் மாதுள விதை உபயோகப்படுகிறது. கண் ணேய்க்கு இதைவிடச் சிறந்த மருந்து இல்லே. கண்ணுக்கு மிக வும் குளிர்ச்சியைக் கொடுக்கும். மெல்லிய வஸ்திரத்தை மாதுள ரசத்தில் நனேத்துக் கண்மேல் போடக் கண்நோய் தீரும். மகம் மதியர் நித்தியமும் கண்களுக்குத் தடவுகிற “சுர்மா” என்னும் சாம்பல் நிறமுள்ள தூள் இவ்விதையினுலே செய்யப்படுகிறது,

மாதுளம்பூ பித்தவாந்தி, வயிற்றுவலி, வெப்பம், இரத்தமூலம், முதலியவற்றைப் போக்கும். இரத்த புஷ்டியையும் வலிவையும் தரும். இரத்த ஸ்ராவத்தைக் கட்டும் துவர்ப்புள்ள மருந்தாகவும் உபயோகப்படுகிறது. மாதுள மொட்டை இடித்து வஸ்திரகாயஞ் செய்து நான்கு மாத்திரை எடை தினம் கொடுத்துவரக் காச ரோகம் தீரும்.

புளிப்பு மாதுளம் பிஞ்சு, இரத்தபேதி, சீதபேதி, கழிச்சல், அதிசாரபேதி, முதலியவைகளைக் குணமாக்கும்.

மாதுளம்பழம், நினைப்பையும் பேச்சையும் ஒழிக்கின்ற சந்நிரோகத்தை நீக்கும்; விக்கல், வாந்தி, கபம், மிகுதாகம், முதலியவற்றைத் தீர்க்கும்; மலட்டுத் தன்மையைப் போக்கும்; வாய்நீர்ச் சுரப்பையும், நீங்காத மயக்கத்தையும் ஒழிக்கும். வெடித்த மாதுளம்பழத்தைச் சீக்கிரமாகப் பிழிந்து மெல்லிய வஸ்திரத்தால் வடிக்கட்டித் திட்டமாகச் சீனி கற்கண்டு சேர்த்துச் சாப்பிட உஷ்ணம் ஒழியும்; சரீரமுழுதும் குளிர்ச்சியடையும்.

> "வாய்நீரூறல் கசப்பு வாந்தி விக்கன் மந்தமிக
> காய் வெப்ப நெஞ்செரிவு காதடைப்பு—வோயா
> மயக்கமுந் தீர்ந்து விடு மாதுளம் பழத்தாற்
> றயக்கமனத் தேன் மொழியே சாற்று"

மாதுளம்பழத்தைத் தோலுடன் உரலில் போட்டு இடித்து ரசத்தைப் பிழிந்து மிளகு சேர்த்துக் குடிப்பதால் வாந்தியும் பேதியும் நிற்கும். அதிகமாக மதுவுண்டு வெறியில் கிடப்பவர்களுக்கு இதைக் கொடுப்பதால் வெறி தெளியும்.

சீதபேதி, அஜீர்ணபேதி, ஆரம்பமாகும்போது மாதுளம் தோலில் ஒருபங்கும் வெந்நீர் பத்துப் பங்கும் கூட்டி, வாசனைக்காகக் கொஞ்சம் இலவங்கப்பட்டை அல்லது இலவங்கத்தூள் சேர்த்து கால் மணிநேரம் கொதிக்கவைத்து, இறக்கி வடிக்கட்டிக் குளிர்ந்தவுடன் நாளொன்றுக்கு மூன்று வேளை, இரண்டவுன்ஸ் வீதம், கொடுத்துவரக் குணமாகும். இரத்தபேதியினால் கஷ்டப்படுகிறவர்களுக்கு இக் கியாழத்துடன் அபினிரசம் ஐந்துதுளி வரையில் சேர்த்துக் கொடுக்க பேதி நின்றுவிடும். மாதுளம்பழத்தின் தோலைச் சுட்டுக் கரியாக்கிய பொடியுடன் கோதுமைஅரிசி சாதத்தில் கலந்து சாப்பிட, வயிற்றுவலியுடன் அடிக்கடி வெளிக்குப் போவது நிற்கும். இதன் தோலைச் சுட்டுப் பொடியாக்கித் தண்ணீரில் கலந்து ஆசனத்தைக் கழுவிவர மூலத்தில் இரத்தம் விழுதல் நிற்கும். மேலும் இப்பொடியை ஆசனத்தில் தேய்ப்பதால் ஆசன அரிப்பு, முளைமூலம், யாவும் போகும்.

மாதுளம் வேரின் கியாழம் கிருமிகளை வெளிப்படுத்த மிகவும் சிறந்த மருந்து. காய்ந்து உலர்ந்துபோகாத வேரின் பட்டையை எடுத்து இடித்து, ஒருபங்குக்கு இருபது பங்கு ஜலம் கூட்டிச் சுண்டக் காய்ச்சி வடிக்கட்டி, வெறும் வயிற்றில் இரண்டவுன்ஸ் வீதம் அரைமணிக்கொரு முறையாக நான்கு முறை கொடுத்துப் பின்னர் சிற்றாமணக்கெண்ணெய் கொடுக்க, ஒரு மணி நேரத்தில் கிருமி வெளிப்படும்.

மாதுளக் கியாழம், தொண்டைக்கம்மல், தொண்டை ரணம், முதலிய தொண்டையைப்பற்றின வியாதிகளுக்கு உபயோகப் படுகிறது. கியாழத்துடன் கொஞ்சம் படிகாரம் பொடிசெய்து வெந்நீர் கலந்து வாய்க்கொப்பளித்தால் தொண்டைப் புண்ணை ஆற்றும்.

மாதுள இலையை விளக்கெண்ணெய்விட்டு வதக்கிச் சுடச்சுட ஒத்தடம் கொடுக்க வெளிமூலம் போகும்.


நல்ல மாதுளம் பழமாக, பெரிதான ஆறு பழங்களிலுள்ள மணிகளை உதிர்த்து, ஈயம்பூசின பாத்திரத்தில் கொட்டி, ஒரு கை அஸ்கா சர்க்கரையைப் போட்டு 15 நிமிஷம் வைத்திருந்தால் மணிகளிலுள்ள சாறு இறங்கும். அதைத் துணியில் வடிக்கட்டி வைத்து மணிகளில் கொஞ்சம் ஜலம்விட்டு மத்தினுல் கடைய, வரும் சாற்றையும் எடுத்துக்கொண்டு ஒரு படி ஜலம்விட்டு ஒருவீசை அஸ்கா சர்க்கரையைக் கொட்டி அடுப்பில் வைத்துக் காய்ச்சித் தேன்பதமாக வரும்போது கலர்பவுடர் கொஞ்சம் போட்டு இறக்கி, ஆறினபின்பு புட்டியில் ஊற்றி வைத்துக் கொண்டு, தினம் காலையில் சாப்பிட்டுவரச் சூட்டைத் தணிக்கும்; பித்தத்திற்கும் நல்லது; நாவறட்சிக்கும் நல்லது; வீரிய விருத்தியையுமுண்டாக்கும். இதுதான் மாதுளம் ஷர்பத். புளிப்பு மாதுளை ஷர்பத் இன்னும் விசேஷமான குணங்களைச் செய்யும். பித்தாதிக்கத்தினுல் உண்டாகும் தலைச்சுற்றல், மயக்கம், வாந்தி, குமட்டல், இவைகளுக்கு இது மிகவும் நல்லது.

மாதுளம் மணிகளை உதிர்த்துத் தயிரில் போட்டுப் பச்சடி செய்வதுண்டு.

மாதுளை வேர், பிஞ்சு இவைகளால் வமனமும் அதிசாரமும் நீங்கும். பழத்தினுல் உஷ்ணங் குறைந்து வீரியவிருத்தி யுண்டாகும். இலை, காய், புஷ்பம் இவைகளால் முற்கூறிய ரோகங்களெல்லாம் தீரும். ஆகவே, மாதுள மரத்தின் ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு காரியத்திற்குப் பிரயோசனப்படுவது விளங்கும்.

---

| | | |
|---|---|---|
| *Pomegranate* | ... | மாதுளை |
| *Bronchitis* | ... | காசம் |
| *Laudanum* | ... | அபினிரசம் |
| *Tapeworm* | ... | வயிற்றுக்கிருமி |



# விஷ விருக்ஷம்

பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாய

(274-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## இருபத்தோராவது அத்தியாயம்

### ஹீரா விளைத்த கலகம்—விஷ விருக்ஷத்தின் மோட்டு

குந்தநந்தினி ஹீராவிற்கு வசப்பட்டு விடுவாள்—அதில் ஒரு ஸந்தேகமும் இல்லை. ஆனால் நகேந்த்ரனுடைய கண்களுக்கு ஸூர்யமுகி விஷமாகத் தோன்றவேண்டுமே. இது நடக்காது போனால் ஹீராவின் மனக்கோட்டை யாவும் வ்யர்த்தமே! அவள் செய்ய வேண்டிய முதல் தொழில், வேறுபடாது ஒன்றாக இழையும் இருவர் ஹ்ருதயங்களைப் பிரிப்பதுதான்.

என்றும்போல் ஒருநாள் காலை பாபி ஹீரா, தன் வேலையார்த்தமாய் தத்தர் மாளிகைக்கு வந்தாள். அங்கே கௌசல்யா என்று இன்னொருத்தி ஊழியம் செய்துவந்தாள். ஹீரா, புத்தியில் தானே உயர்ந்தவள், மேலும் வீட்டு யஜமானியின் பிரியத்திற்குப் பாத்திரமானவளும் தானே, என்ற அகந்தையினால் அடிக்கடி கௌசல்யாவைத் துச்சமாகக் கூறி அவமதிப்பதுண்டு. ஆனால் என்றைக்குமா ஒருத்தி பொறுத்துக்கொண்டு இருப்பாள், நூறு தாழ்ந்தவளாயிருந்தாலும்! அன்று ஹீரா அவளைப்பார்த்து, "அடி கௌசீ, எனக்கு இன்னிக்கு உடம்பு என்னமோ மாதிரி இருக்கு. என் காரியத்தையும் செய்கிறாயாடி?...." என்றாள். கௌசல்யாவிற்கு ஹீராவைக் கண்டால் சற்று பயம்—யஜமானி அம்மாளுக்குப் பிரியமானவளாயிற்றே! எப்போதும் ஹீராவின் வார்த்தையைத் தட்டாமல் உடன்படும் கௌசல்யா, இந்தத் தடவை—என்னமோ, அவளுக்கும் உடம்பு அசௌக்யமாயிருக்கலாம்—"அம்மா, உன்னைப்போலதானே என் உடம்பும்? இன்னிக்கு என்னால் முடியாது" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள்.

சண்டைக்கு எது சாக்கு என்று காத்துக்கொண்டிருக்கும் ஹீரா இந்த வார்த்தையை வைத்துக்கொண்டு சச்சரவை மூட்டினாள்—"அடி கௌசீ! காலம் கார்த்தாலே சண்டைக்கா வருகிறாய்? வரவர கிறுக்கு உனக்கு அதிகமாகி விட்டதா என்ன? வாயை அடக்கிப் பேசு" என்று சீறினாள் கர்வம் கொண்ட ஹீரா.

விடாகண்டியான கௌசல்யாவும் "அடி, கிறுக்கு உனக்கா எனக்கா? நானு உன்னைச் சண்டைக்கு இழுக்கிறேன்! அடி, நீ தேரையும் எழுதுவாய் சித்திரத்தையும் திருப்புவாய்! அம்ம அம்ம....இதோ எல்லாரெதிரிலும் ஒரே யடியாய் வார்த்தையைப் புரட்டிவிடுகிறாயே! உன்னைப்போலதானே நானும், எனக்கும் உடம்பு கஷ்டமாயிருக்கு, வேலைசெய்ய முடியவில்லை என்று சொன்னேனே யொழிய, வேறு எந்த ஜோலிக்கு உன்னோடு வந்தேன்? அதற்குள் பாறையைத் தூக்கித் தலையில் போடுகிறாயேடீ!" என்றாள்.

"அடி, என்னைப் பச்சென்று பார்க்க உன் கண் வெடிக்கிறதா? நான் உழைத்து உழைத்து ஓடாகப் போகிறேனே....அந்தப் பாழும் யமன்தான் வரமாட்டானே....நீங்களெல்லாம் கொழு கொழுவென்று இருங்கோ.....நான் சாகிறேன்....அப்புறமாவது உங்கள் வயிற்றெரிச்சல் தீராதா....!" என்றாள் ஹீரா.

"ஹீரா, உன்னைப்போல் நானும்தான் செத்துச் சுண்ணாம்பாய்ப் போகிறேன். நீ சாகிறாயோ எக்கேடுகெடுகிறாயோ, அதற்காக என்பேரில் எரிந்துவிழுந்து அடித்துக்கொள்வானேன்? என்றைக்கிருந்தாலும் சாகவேண்டியதுதானே? யமன் யாரை விடப் போகிறான்—உன்னையாகட்டும் என்னையாகட்டும். அம்மா, கொஞ்சம் குளிர்ந்த முகமாக இரு."

ஹீரா "காலங் கார்த்தாலே யார் மூஞ்சியில் விழித்தேனோ, இந்தமாதிரி உன் வசவைக்கேட்க....உன்னை நான் படுத்தி வாயில் போட்டுக்கொள்கிறேனாமே—இந்த மாதிரியெல்லாம் என்னைப்பற்றி ஊர் முழுவதும் கோள் சொல்லித் திரிகிறாயா? அப்படித்தான் என் ஹிம்ஸை தாளாமல் உயிரை விட்டுவிடேன்....அடி அல்பாயுஸே, அடி அபஸ்மாரகமே, ஒழிந்து போய்விடேன். நாசமாகத்தான் போயேன். நான் நன்றாக இருக்க உனக்கு ஸஹிக்குமா? அடி, உன் கண்ணில் கொள்ளி வைக்க!" என்றாள்.

ஹீரா பொழியும் வசவு பாணங்களை ஏந்திக்கொண்டு திடுக்கிட்டு நின்றாள் கௌசல்யா. அவளும் ஸஹிக்கமாட்டாதவளாய் சொல்லம்புகளைத் தொடுக்க ஆரம்பித்தாள்—"அடி, நீ பாழாய்ப் போக. ஏண்டி இப்படிப் பொய் சொல்லுகிறாய்?....உன் நாக்குப் புழுத்துப்போக. நானு உன்னைப் பார்த்து வயிற்றெரிச்சல் படுகிறேன்?"—வசவு வன்மையில் ஹீராவிற்குத் தோற்றவளல்ல கௌசல்யா. அப்பேர்ப்பட்ட வாய்படைத்த ஹீராவுக்கும் பதில் மரியாதை கிடைத்தது.

ஹீரா தமுதமு வென்று முகத்தை வைத்துக்கொண்டு உடனே ஸூர்யமுகியிடம் இதைப்பற்றி முறையிடச் சென்றாள். யாராவது கூர்ந்து கவனித்திருந்தால், ஹீராவின் முகபாவனை ஏதோ எழலுக்காகப் பண்ணும் அபிநயமே என்று நன்றாகப் புலப் பட்டிருக்கும்; அப்பொழுது அவளுடைய இதழ்க்கடையில் தோன்றின ஒரு கள்ளச்சிரிப்பே இதைக் காட்டியிருக்கும்.

ஸூர்யமுகியைக் கண்டதும், ஹீரா தன் முகத்தில் க்ரோத லக்ஷணங்களை நன்றாக வரவழைத்துக்கொண்டாள். ஸ்த்ரீகளுக்கு ஈச்வரனால் அளிக்கப்பட்ட பெரிய அஸ்த்ரமான அழுகை, கண் ணீருடன் வெடித்து வந்தது.

ஸூர்யமுகி அவள் பிராதை ஏற்றுக்கொண்டு, கௌசல்யாவை வரவழைத்து இருவரையும் விசாரணை செய்தாள். குற்றம் ஹீராவின்மேல்தான் என்று தெரிந்தது. ஆனால் ஹீராவின் மேலுள்ள அபிமானத்தினால், ஸூர்யமுகி கௌசல்யாவை இரண் டொரு திட்டுத் திட்டி, புத்தி புகட்டி அனுப்பினாள். இதனால் ஹீராவின் மனம் ஸந்துஷ்டி அடையவில்லை. "அம்மா! அந்தக் கொடுமைக்காரியை அப்புறப்படுத்தினாலொழிய நான் இந்த வீட்டில் வேலை செய்யேன்!" என்றாள். ஸூர்யமுகிக்கு இதனால் ஹீராவின்மீது சற்று வெறுப்பு ஏற்பட்டது—"அடி ஹீரா! நான் இடம் கொடுக்கிறேன் என்று ஏறுகிறாயா? முதலில் அவளை நீ சண்டைக்கு இழுத்தாய். தப்பிதம் உன்பேரில் இருக்க அவளை எந்த மூஞ்சியை வைத்துக்கொண்டு துரத்திவிடும்படி சொல்லு கிறாய்? அப்படி உனக்கு இங்கு இருக்க இஷ்டமில்லாதபக்ஷத்தில் நீ தாராளமாய்ப் போகலாம்" என்றாள்.

இந்த வார்த்தைக்காகவே ஹீரா காத்திருந்தாள்.

"அப்படியானால் சரி, போகிறேன்" என்று சொல்லிக் கொண்டே கண்ணும் கண்ணீருமாய் ஹீரா நகேந்த்ர பாபுவைக் காண வெளிமஹலுக்கு வந்தாள்.

அன்று நகேந்தரன் தனிமையாகத் தன்அறையில் இருந்தான். கொஞ்சநாளாகவே அவன் ஸூர்யமுகியின் ஸஹவாஸத்தை விட்டுத் தனிமையிலேயே காலம் கழிக்கிறான். ஹீரா அங்கு தோன்றித் தன்னெதிரே கண்ணீர் உகுப்பதைப் பார்த்து "என்ன, ஹீரா! எதற்காக அழுகிறாய்?" என்று கேட்டான்.

ஹீரா: பாபு, கணக்குப் பார்த்து என் சம்பளத்தைக் கொடுத்து விடுங்கள்..நான் போகிறேன்.

நகேந்த்ரன்: (வியப்புற்று) என்ன நடந்தது..சொல்லு?

ஹீரா: எனக்கு அம்மாள் சீட்டுக் கொடுத்துவிட்டார்கள். என்னை வேலையைவிட்டு நீக்கிவிட்டார்கள்.

நகேன்: நீ என்ன செய்தாய்?

ஹீரா: கௌசல்யா என்னை அகாரணமாகத் திட்டினுள். அதற்காக நான் அம்மாளிடம் முறையிட்டுக்கொண்டேன். அவளுடைய பேச்சை நம்பி என்னை வீட்டைவிட்டுப் போகும்படி உத்தரவிட்டு விட்டார்கள்.

நகேந்த்ரன் தலையசைத்துச் சிரித்த வண்ணம், "ஹீரா, இது நன்ருக இல்லை. நடந்ததைச் சொல்லு" என்று கேட்டான்.

அப்போது ஹீரா கண்களைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்து நோக்கி, "பாபு, நான் ஒரு க்ஷணம்கூட இந்த இடத்தில் வேலை செய்யமாட்டேன்" என்ருள்.

"ஏன் அப்படி?"

"அம்மாளுக்கு நான் என்ருல் ஆவதில்லை. இதார் பேச்சைக் கேட்டுக்கொண்டு என்னை அவர் என்ன வேண்டுமானுலும் சொல்ல இடமிருக்கிறது. அதனுல் நான் இங்கு இருப்பது உசிதமில்லை, ஸ்வாமி!"

நகேந்த்ரனுடைய புருவம் சுளித்தது—"இதென்ன பேச்சு, ஹீரா?" என்ருன்.

தன் சூழ்ச்சி பரிபக்குவமடைவதைக் கண்டு, ஹீரா மிகவும் மனச்சஞ்சலமுற்றவள்போல் நகேந்தரனை நோக்கி, "பாபு, அன்றைக்குக் குந்தநந்தினியை இம்மாதிரிதான் அநியாயமாக வைதார்கள். அதனுல்தான் அவள் தாளாமல் எங்கேயோ போய்விட்டாள். என்னையும் இப்படித்தானே ஒருநாள் சொல்லுவார்கள்.. நான் மானி; எனக்கு ரோஷம் அதிகம். முன்ஜாக்ரதையாகவே விலகிவிடுவது மேலல்லவா?" என்ருள்.

நகேந்த்ரன்: இதென்ன புது சமாசாரம், ஹீரா? எனக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாதே?

ஹீரா: பாபு, உங்கள் முன்னிலையில் இதெல்லாம் சொல்வதென்ருல் எனக்குக் கூச்சமாய் இருக்கிறது.

இதைக் கேட்டதும் பல கலவரங்கள் நகேந்த்ரனுடைய நெற்றிக்கட்டைச் சுருங்கச் செய்தன. அவன் ஹீராவைப் பார்த்து "நீ வீட்டிற்குப் போ. .வேலையைவிட்டு நீங்கவேண்டாம். ....நாளைக்கு உன்னை அழைத்து விசாரிக்கிறேன்....போ, அந்தப்புரத்திற்கு!" என்ருன். ஹீராவின் மனோரதம் முக்கால்வாசி ஈடேறிவிட்ட மாதிரிதான்! இதற்காகவே அவள் அன்று வீட்டில் வீண்கலகம் விளைவித்தாள்.

நகேந்த்ரன் எழுந்திருந்து ஸூர்யமுகியைக் காண அந்தப்புரத்திற்கு வந்தான். ஹீரா மெல்லடி வைத்து அவன் பின்னாலேயே மறைந்து சென்றாள்.

ஸூர்யமுகியைத் தனிமையில் அழைத்து நகேந்த்ரன், "நீ ஹீராவை வேலையிலிருந்து நீக்கிவிட்டாயா என்ன?" என்று வினவினான்.

ஸூர்யமுகி "ஆமாம்" என்று சொல்லி, கௌசல்யாவுக்கும் ஹீராவுக்கும் நடந்த சச்சரவைப்பற்றி விவரமாகக் கூறினாள். அதைக் கேட்டபிறகு நகேந்த்ரன், "அது கிடக்கட்டும்....நீ குந்தநந்தினியை என்னமாவது ஏற்ற வித்யாசமாகச் சொன்னாயா?" என்றான். ஸூர்யமுகியின் முகம் நிறம் மாறி சுண்டுவதை நகேந்த்ரன் கவனித்தான். அவள் பீதியடைந்து புரிபடாத, தடுமாறின, குரலில் "என்ன சொன்னேன்....நான்?" என்றாள்.

நகேந்த்ரன் "அவளை நீ வைததுண்டா?" என்று கேட்டான்.

சற்றுநேரம் ஸூர்யமுகி மயக்கமுற்று நின்றாள். பிறகு தான் திட்டினதற்கு ஸமாதானம் கூறலானாள்—"நீங்கள்தான் எனக்கு ஸர்வமும். உம்மிடம் நான் எதையும் ஒளித்துக் கூறமாட்டேன். இதுவரை நான் அம்மாதிரி செய்தது கிடையாது. குந்தநந்தினியின் மனம் நோகும்படி சில வார்த்தைகளைச் சொன்னது உண்மைதான். நீர் கோபித்துக்கொள்வீர் என்ற திகிலினாலேயே உம்மிடம் இதை நான் சொல்லவில்லை. நான் அபராதம் செய்தவளே. என்னை மன்னித்து விடும்..நான் எல்லாவற்றையும் சொல்லிவிடுகிறேன்."

ஹரிதாஸி வைஷ்ணவி அந்தப்புரத்திற்கு வந்ததிலிருந்து குந்தம் தன்னால் திரஸ்கரிக்கப்பட்டவரை நிகழ்ந்த வரலாறுகள் எதையும் மறைக்காமல் கூறிவிட்டாள் ஸூர்யமுகி.

"குந்தநந்தினியைத் துரத்தினதற்காக என் மனதே என்னை அறுக்கிறது. நான் உள்ளுக்குள்ளேயே குன்றிச் சாகின்றேன். ஊர் ஊராக அவளைத்தேட ஆட்களை ஏவியிருக்கிறேன். அல்பமாக நடந்துகொண்ட என்னை மன்னிக்கவும்" என்று வேண்டினாள்.

**நகேந்த்ரன்:** ஸூர்யமுகி, நீ ஒருதவறும் செய்யவில்லை. குந்தநந்தினியிடம் களங்கம் இருக்கிறது என்று யாரோ சொல்லக் கேட்டுத்தான் நீ இந்தக் காரியத்தைச் செய்தாய். எந்த சீலமுள்ளவள்தான் இப்பேர்ப்பட்ட செய்தியைக் கேட்டபிறகு குந்தத்திடம் இன்முகம் காட்டுவாள்....இது உன் குற்றமல்ல....ஆனால் நீ உன் காதில் பட்டது உண்மையா இல்லையா என்று தீர விசாரித்து எதையும் செய்திருக்கவேண்டும்.

ஸூர்யமுகி: அது என்னுடைய பிசகுதான். பெண்புத்தி என்றைக்கும் பின்புத்தியே. அதற்காக நான் உருகிச் சாகிறேன்.

நகேன்: அப்பொழுதே இது ஏன் உனக்குத் தோன்றவில்லை?

ஸூர்யமுகி: என்னைச் சுற்றியெல்லாம் ஏதேதோ தாறுமாறாக நடப்பதாகப் பிரமை கொண்டேன்.

இதைச் சொல்லி ஸூர்யமுகி—பதியைப் பிராணனாகப் பாவிக்கும் அந்தக் கற்புடையாள்—நகேந்த்ரனுடைய காலடிகளில் விழுந்தாள். கண்ணீர் வெள்ளத்தில், அவள் நெஞ்சில் குமுறும் துக்கம் கரைந்தோடிற்று. கணவனை நிமிர்ந்து நோக்கி, "பிராணேசா! நான் பாவி. என் மனதில் பாப எண்ணங்களுக்கும், விபரீத ஸந்தேஹங்களுக்கும் இடம் கொடுத்தேன்....ஐயோ! என்னை வாட்டும் வேதனை....அதைச் சொல்ல என்மனம் நடுங்குகிறது. .....எல்லாம் என் விதியின் கொடுமை.....நான் செய்த ஜன்மாந்தர பாபம்....நடந்ததெல்லாம் என் தவறே" என்றாள்.

நகேந்த்ரன், "ஸூர்யமுகி..நீ ஏன் வருத்தப்படுகிறாய்? குந்தநந்தினியின்மீது நான் மயல் கொண்டிருக்கிறேன் என்ற ஸம்சயமே உன்னை இம்மாதிரி செய்யத் தூண்டியது....அது எனக்குத் தெரியும்" என்றான்.

ஸூர்யமுகி நகேந்த்ரனுடைய பாதங்களில் முகத்தை மறைத்துக்கொண்டு அழத்தொடங்கினாள்....அவள் துக்கம் விக்கிவிக்கி வெளிக்கிளம்பிற்று. பனிதோய்ந்த பத்மமலர்போன்ற அவளுடைய முகம் மறுபடியும் கணவனை நோக்கியது—"உங்களை நான் என்ன சொல்லமுடியும். என் துயரம் என் மரணத்தோடுதான் நீங்கும்....உங்களுக்குத் தீராத துன்பத்தை உண்டாக்குமே என்ற பயத்தினாலேயே நான் பிராணனை விடவில்லை. இன்னொருத்தி உங்களுடைய ஹ்ருதயத்தைக் கவர்ந்து பங்கிட்டிருப்பதை அறிந்ததும் உயிர்தரிக்க எனக்கு இஷ்டமில்லை. மறலியைத்தான் எதிர்பார்க்கிறேன். ஆனால் மனம்மட்டும் துணியவில்லையே!.... நான் நிரபராதி—அந்த நம்பிக்கையுடனேயே நான் சாக ஆசைப்படுகிறேன்....என்னால் உங்களுக்கு ஸுகம் இல்லை. என்னுடைய குற்றத்தைப் பொறுத்தருள்வீர்....." என்று கூறும்போது அவள் நெஞ்சில் புதைந்துகிடந்த வேதனை யார் மனதையும் உருக்கி இருக்கும். ஆனால் நகேந்த்ரனுடைய மனதை....?

வெகுநேரம்வரை நகேந்த்ரன் ஒன்றும் பேசாமல் இருந்தான். கடைசியில் ஒரு பெருமூச்சு விட்டுக் கூறலானான்: "ஸூர்யமுகீ, குற்றம் செய்தவன் நானே....உனக்கு த்ரோஹம் செய்தேனே....ஐயோ! என் பாழும் மனம் குந்தநந்தினியையே

தாவிப் பிடிக்கிறது. இதற்கு நான் என்ன செய்வது?....நான் படும் மனச்சஞ்சலம்—அதைஎப்படி உனக்குச் சொல்லுவது?... ஸூர்யமுகி! என் மனதை நான் அடக்கி ஆளவில்லையென்று நீ எண்ணியிருக்கலாம்....என்னையே நான் நிந்தித்துக் கொள்ளு கிறேன்....மனதோடு நான் போராடுவது ஸர்வேச்வரனுக்குத் தான் தெரியும்....நான் மஹாபாபி....என் சித்தம் எனக்கு வசமாகமாட்டே னென்கிறது.''

ஸூர்யமுகி கணவன்படும் தீவ்ர வேதனையைப் பார்த்து ஸஹிக்காதவளாய், கைகளைக்கூப்பித் துயர்நிறைந்த குரலில், ''நீர் வருத்தப்படவேண்டாம். உம்மை வாட்டும் அந்த விஷயத்தை என்னிடம் சொல்ல வேண்டாம். இது ஒன்றே என் ஹ்ருதயத்தில் வேல்போல் ஊடுருவிப் பாய்கிறது....என் அதிர்ஷ்டப்படி தானே எதுவும் நடக்கும்....அந்த வார்த்தைகளை என் செவியில் போடவேண்டாம்....என் நெஞ்சு வெடிக்கிறது..ஐயோ....!'' என்றாள்.

''இல்லை, ஸூர்யமுகி,..இன்னும் நான் சொல்லவேண்டியது எவ்வளவோ இருக்கிறது. ரொம்ப நாளாக இதைப்பற்றிப் பிரஸ்தாபிக்க உன்னிடம் வரலா மென்றிருக்கிறேன். அதற்கு ஸமயமும் இதோ வாய்த்திருக்கிறது. எனக்கும் இந்த வாழ்க்கை பிடிக்கவில்லை. நான் ஓடிப்போய்விடலாமென்றால் எனக்குத் தைர்யம் வரவில்லை. வீடு வாசல், ஸம்ஸாரம், எதுவும் எனக்கு வேண்டாம். எதிலும் எனக்கு ஸுகம் இல்லை. உன்னையும் நான் ஸுகத்தில் வைக்கவில்லை....நான் உனக்குத் தகுந்தவன் அல்ல. நான் அயோக்யன். பரிசுத்தமான உன்னோடு வாழ்ந்துகொண்டு நெறிதவறி நடப்பது பகவானுக்கே அடுக்காது. நான் செய்த பாபம் உன்னை அணு அணுவாக எரித்துக் கொன்றுவருகிறது. குந்தநந்தினியைச் சுற்றி என் மனம் அலைகிறதே..அவளைத் தேடாமல் இனிஅரைக்கணமும் இரேன்....நீ இந்த வீட்டிலேயே இரு....கணவன் இறந்துவிட்டான் என்று எண்ணிக்கொள். இந்தமாதிரி புருஷன் இருந்தாலும் ஒன்று, இறந்தாலும் ஒன்று. உன்னுடைய மாசற்ற வாழ்வைக் கெடுக்க எனக்கு இஷ்டமில்லை. ஐயோ! ஏனோ பரஸ்த்ரீயின்பேரில் மோஹமுற்று அதலத்தில் வீழ்ந்தேன்!..இதோ நான் போகிறேன்....குந்தநந்தினியை என் றைக்கு மறக்கிறேனோ அன்றைக்குத் திரும்பி உன்னிடம் வந்து விடுகிறேன். இன்றேல் இதுவே நீயும் நானும் கடைசியாக ஸந்திப்பது....'' என்றான்.

முள்போல் தைக்கும் இம்மொழிகளுக்கு ஸூர்யமுகி என்ன பதில் தருவது? சலவைக்கல் சிலைபோல் தரையைக் கண் கொட்

டாமல் நோக்கிகொண்டிருந்தாள்....அடுத்த க்ஷணம் குப்புறச் சாய்ந்து புலம்பத் தொடங்கினாள். அறைபட்டுக் குற்றுயிராய்த் துடிக்கும் மானை, வேங்கை உணர்ச்சியற்றுப் பார்ப்பதுபோல் நகேந்த்ரனும் இருந்தான்.

'சாவதேமேல்.... எப்போது சாவு வரும்.... ஈச்வரன் இச்சை என்றைக்கோ....? எனக்குத் தைர்யமில்லையே....இவ ளுடைய வேதனையை எப்படி ஆற்றுவேன்?.... எனக்கு ஒன்றும் தோன்றவில்லை....குந்தத்தை என்னால் மறக்க முடிய வில்லையே....நான் மடிகிறேன்....மடிகிறேன்...அதனால் ஸூர்ய முகியின் வேதனை தீருமோ?..அவள் உயிர்வைத்துக்கொண்டு இருப்பாளா? மாட்டாள்..நகேந்த்ரா! நீ இறந்தபிறகு ஸூர்ய முகிக்கு வாழ்வு வேண்டியிருக்குமா? அவளும் உடனே உயிரை விடுவாள்....ஆனால் நீ சாவதே உத்தமம்' என்றெல்லாம் அவன் மனம் துடித்தது.

சிறிது நாழிகைக்கெல்லாம் ஸூர்யமுகி எழுந்து தன் புருஷ னுடைய பாதங்களைப்பற்றி "ஒரு பிச்சை" என்று கேட்டாள்.

"என்ன?"

"இன்னும் ஒருமாதம் இருங்கள்...போகவேண்டாம். இதற் குள் குந்தநந்தினி அகப்படாது போனால் நீர் ஸம்ஸார த்யாகம் செய்யும்....நான் அதற்குத் தடை கூறமாட்டேன்."

நகேந்த்ரன் இதைக் கேட்டுக்கொண்டு மௌனமாக வெளியே வந்தான். மனதிற்குள்ளேயே "இன்னும் ஒரு மாதம்" என்று ஸ்திரப்படுத்திக்கொண்டான்.

கணவன் தன் வேண்டுகோளுக்கு இணங்கியதை ஸூர்யமுகி உணர்ந்தாள். திரும்பிச் செல்லும் தன் பதியின் உருவத்தைக் கண் கொட்டாமல் கவனித்துக்கொண்டிருந்தாள். 'என் செல் வரே, உம்மை வருத்தும் முள்ளை நீக்க என் பிராணனை வேண்டு மானாலும் தருகிறேன். இந்தப் பாழும் ஸூர்யமுகியின் பொருட்டு நீர் வாழ்வு துறப்பானேன்?....நீர் உயர்ந்தவரா....நான் உயர்ந் தவளா?'— இவ்வாறு தன்னுள்ளேயே கூறிக்கொண்டாள் ஸூர்யமுகி.

## இருபத்திரண்டாவது அத்தியாயம்

### கள்ளியை மிஞ்சிய கள்ளி

ஹீரா வேலையை விட்டு நீங்கினபோதிலும் தத்தர் மாளிகை யின் சம்பந்தத்தை விடவில்லை. அங்கு நடக்கும் விஷயங்களை அறி வதில் ஸதா ஊக்கமாய் இருந்தாள். மாளிகையிலிருந்து யாரா

வது தன் வீட்டுப்பக்கம் வந்தால், அவர்களுடன் அவள் வம்பளக்க ஆரம்பித்துவிடுவாள். அவளுடைய பிரயாசையெல்லாம் எதற்காக?—தன்னுடைய கலகம் நன்ருகப் பலனை அளிக்கிறதா, ஸூர்யமுகிக்கும் நகேந்த்ரனுக்கும் மனேமாலின்யம் ஏற்பட்டதா என்பதை அறியவே. சிற்சில சமயம் இவளும் மாளிகைக்குச் சென்று வேலைக்காரிகள் இருக்கு மிடத்திலிருந்து செய்தி திரட்டி வருவாள்.

இப்படியே சில தினங்கள் கழிந்தன. ஹீராவின் வீட்டில், ஒரு நாள் வேடிக்கையான சம்பவம் ஒன்று நடந்தது. அது பிற்படிக்கு வரப்போகும் ஒரு விபரீதத்திற்கு ஹேதுவாய் இருந்தது. தேவேந்த்ரனுடன் ஹீரா பழக்கமானதுதொட்டு, அங்கு இடைச்சி மாலதியின் போக்குவரத்து ஏற்பட்டிருந்தது. இது ஹீராவுக்குப் பிடிக்கவில்லை என்று மாலதிக்கு நன்ருகத் தெரியும். இன்னுமோர் அதிசயம். வீட்டில் ஓர் அறை பூட்டப்பட்டிருப்பதைச் சில தினங்களாகவே கவனித்துவருகிருள் மாலதி. இத்தனை நாள்வரை பூட்டப்பட்டேயிருந்த அறை, அன்று எதிர்பாராதவண்ணம் தாளிடப்பட்டு மட்டும் இருந்தது அவளுக்கு மேலும் ஆச்சர்யத்தை விளைவித்தது. ஹீரா பராக்காக இருந்த ஸமயம், மாலதி கதவைத் திறந்து உள்ளே எட்டிப்பார்த்தாள். இருட்டில் அங்கு இருப்பது ஒன்றும் புலப்படவில்லை. ஆனல் அவளுக்கு என்னமோ ஸந்தேகம்தான். இதைப்பற்றி ஹீராவை ஒன்றுமே அவள் கேட்கவில்லை. மனதில் மட்டும் ‘உள்ளே யார் இருப்பார்கள்?’ என்று எண்ணினுள். முதலில் ‘எவனுவது புருஷனுயிருக்குமோ?’ என்று சந்தேகம் கொண்டாள். ‘அப்படி இருந்தால் எந்த புருஷன் இந்தமாதிரி, இத்தனைநாளாக, இங்கேயே விழுந்துகிடப்பான்? ஹீரா லேசானவளல்ல. கள்ளப்புருஷனுயிருந்தால் நான் அடிக்கடி வருவதை உத்தேசித்தாவது இங்கு மறைத்து வைக்கமாட்டாளே! ஹீராவிற்குத் தெரிந்த ஒவ்வொரு மனிதனையும் எனக்கும் தெரியுமே—இதுவும் அல்ல. பின் யாராய் இருக்கும்? இரு....ஒருவேளை குந்தம் இங்கு இருக்கிருளோ என்னமோ....?’—கொஞ்ச நாளாகக் குந்தநந்தினி காணுதது மாலதிக்குத் தெரியும்....இந்த ஸந்தேகத்திலிருந்து தீர்ந்துதெளிய ஓர் உபாயம் செய்தாள். ஹீரா தத்தர் மாளிகையிலிருந்து மான்குட்டி ஒன்றை ஓட்டிவந்து வளர்த்துக்கொண்டிருந்தாள். அது துள்ளி ஓடிவிட எத்தனிப்பதைப் பார்த்து, ஹீரா அதை ஒரு கம்பத்தில் கட்டிவைத்திருந்தாள். அவள் சமையலறைக்குச் சென்ற சமயம் பார்த்து மாலதி அதை அவிழ்த்து வெளியேதுரத்தி அது தானே ஓடிப்போனதாக

அவளிடம் அறிவித்துவிட்டாள்! ஹீரா மான்குட்டியைப் பிடிக்க அதைத் துரத்திக்கொண்டு வீட்டிற்கு வெளியே ஓடினாள். ஹீரா ஓடுவதைப்பார்த்து மாலதி பரிதாபமான த்வனி போட்டுக் கொண்டு, "அடி ஹீரா! உனக்கென்னடீ திடீரென்று சித்தப் பிரமையா? இப்படி வெறிபிடித்து ஓடுகிறாயே!....என் கற்பகமே! ....அடி, என் ஹீரா!" என்று பாசாங்கு செய்து கதறி, தாளிட்டிருக்கும் அறைக்கதவைத் தட்டி, "அடி என் மருக்கொழுந்தே! ....அம்மா, குந்தம்....சீக்கிரம் வெளியே வா. உன் ஹீரா வின் கதியை வந்து பார்!" என்று ஓலமிட்டாள். குந்தம் திடுக் கிட்டுப்போய்க் கதவைத் திறந்தாள். மாலதி அவளைப் பார்த்த தும் 'இடி இடி' யென்று நகைத்துவிட்டு, பின் அவ்விடத்தை விட்டு மறைந்தாள். குந்தம் கதவை மூடிக்கொண்டாள். ஹீராவிடம் இதைப்பற்றிச் சொல்ல அவளுக்குப் பயம்.

மாலதி நேராக தேவேந்த்ரனிடம் சென்று குந்தம் ஹீரா விடம் இருப்பதாக 'வத்தி' வைத்துவிட்டாள். தேவேந்த்ரன் தானே வந்து ஹீராவின் குடிலை ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் சோதனை செய்துவிடுவதென்று உறுதிகொண்டான். அன்று மாலை ஒரு 'பார்ட்டி' (சிற்றுண்டி விருந்து)க்குச் செல்லவேண்டி இருந்தமையால் அவன் அடுத்ததினம் போய்க் கண்டுபிடிப்பதாக உத்தேசித்திருந்தான்....நாளைக்குள்ளா பக்ஷி பறந்து போய் விடப் போகிறது?

(தொடரும்)

# சுத்த வீரன்

"அம்பி"

---

"ஐயோ, இது க்ஷத்திரிய தர்மமல்லவே!" என்று பெருமூச் செறிந்தான் ஜெயசிங். "ஆனால் கஷ்டகாலத்தில் என்னசெய்வது. நானும் ஒருகாலத்தில் உன்னத ஸ்திதியில்தானிருந்தேன். காலம் மாறும்போது தர்மாதர்மமெங்கே பார்க்கமுடிகிறது. என் ஏழைக் குடிகள் சாப்பாட்டுக்குக்கூட இல்லாமல் திண்டாடும்போது அவர்கள் கஷ்டத்தைக் குறைக்கவேண்டுமே யொழிய, அதற் காக நான் செய்வது நியாயமா அநியாயமா என்று யோசனை பண்ண முடியுமா?"

ஜெயசிங் ஒரு ரஜபுத்ர அரசனாக இருந்தவன். அவனுக்கு இப்போது 26 அல்லது 27 வயதுதானிருக்கும். 18 வயதுக்குள் ளேயே அவன் கீர்த்தி எங்கும் பரவியிருந்தது. அவனுடைய தைரியத்தையும், பராக்கிரமத்தையும் மெச்சாதவர்கள் இல்லை. ஆனால் விதியின் கொடுமையால் அலாவுதீன் அவன் அரசைக் கைப்பற்றிக்கொள்ளவே, அவன் போன இடமே தெரியாமல் மறைந்தான். அரசவம்சத்தில் பிறந்த அவனுக்கு, ராஜ்யம் போனதைவிடக் குடிகள் கஷ்டப்படுவதே அதிகம் வருத்தம் தந் தது. அலாவுதீனின் ஆட்கள் ராஜ்யத்திலுள்ள ஜனங்கள், சொத்து, யாவற்றையும் கொள்ளையடித்துக்கொண்டதால், ஜனங்கள் சாப் பாட்டுக்கே கஷ்டப்படவேண்டி வந்தது. தோல்வியடைந்த ஜெயசிங் மற்ற ரஜபுத்ர அரசர்களை உதவி கேட்பது தனக்கு இழிவென்று கருதினான். ஏழைகளின் கஷ்டத்தை நிவர்த்திக்க வேறு வழி இல்லாததால், இரவில் பணக்கார வழிப்போக்கர்களைக் கொள்ளையடித்து அந்த வருமானத்தால் ஏழை எளியவர்களின் கஷ்டத்தை ஏதோ இயன்றவரை குறைத்துவந்தான்.

* * * * *

நள்ளிரவு. அன்று யாரோ ஒரு பெரிய தனவந்தர் அக்காட்டு வழி வருவதாக ஒற்றர்கள் சமாசாரம் கொண்டுவந்தனர். ஜெயசிங் தகுந்த உடையணிந்து தன்னுடைய கருங்குதிரையில் ஏறிக் கொண்டு மரமடர்ந்து இருண்டு பயங்கரமாயிருந்த ஓர் இடத்தில் மறைந்து காத்திருந்தான்.

தீவட்டிகளின் வெளிச்சம் தெரிந்தது. பத்துப் போர்வீரர்களிடையில் ஒரு பல்லக்கு வந்துகொண்டிருந்தது. சரியான வேட்டைதான் என்று ஜெயசிங்க் சந்தோஷப்பட்டான். 'பல்லக்கில் வருவதால் நல்ல பணக்காரராகத்தான் இருக்கவேண்டும். சில ஏழைகளின் கஷ்டம் சிலநாட்களுக்குக் குறையும்' என்று எண்ணினான்.

பிரயாணிகள் ஜெயசிங்க் இருந்த இடத்தை நெருங்கினர். திடீரென்று அவர்கள் மத்தியில் ஒரு கருங்குதிரை பாய்ந்தது. அதன் மேலுள்ளவன் கத்தியை வீசவே, பயந்துபோன காவல்வீரர்கள் அவனை எதிர்த்துச் சிறிதுநேரம் போர் புரிந்தனர். எதிர்பாராது நேரிட்ட ஆபத்தினால் அவர்கள் மனம் கலங்கியிருந்ததாலும், அக்கொள்ளைக்காரனின் வாள் வீச்சு சாமர்த்தியத்தாலும், அவ்வீரர்கள் நிலைகுலைந்து அவன்முன் நிற்கமுடியாமல் மூலைக்கு ஒருவராய் ஓடினார்கள். பல்லக்குத் தூக்குபவரும் அதைக் கீழே வைத்துவிட்டு ஓட்டம் பிடித்தனர். ஜெயசிங்க் குதிரையைவிட்டு இறங்கி பல்லக்கருகில் சென்றான்.

பல்லக்கிலிருந்து ஒரு யுவதி உருவிய கத்தியுடன் வெளிப்பட்டு அவன் உள்ளத்தையே உணருபவள்போல அவனைக் கூர்ந்து பார்த்தாள்.

எவ்வளவோ கஷ்டங்களிலும் அஞ்சாத ஜெயசிங்கின் மனம் பதறியது. சடக்கென்று தன் கத்தியைக் கீழேபோட்டுவிட்டு, மரியாதையாகத் தலைவணங்கினான். அவன் தலைநிமிருமுன், அப்பெண் தன் கத்தியின் முனையை அவன் மார்புக்கு நேராக வைத்துவிட்டாள்.

ஜெயசிங்கின் முன் நின்றவள் பதினாறு வயதுள்ள ஓர் இளமங்கை. ரஜபுத்ர ஸ்திரீ. அதிலும் பெரிய அரசவம்சத்திலுதித்தவள் என்பதை அவள் முகமும் தைரியமும் காண்பித்தன. அவள் அழகையும் மனவன்மையையும் கண்டு பிரமித்துப்போன ஜெயசிங்க் அவள் கண்களிலிருந்து கோபாக்னி பறப்பதையும் பார்த்தான்.

"ஏ, பதர்களா, வாருங்கள் இப்படி. இவனைப் பிடித்துக் கட்டுங்கள். ஆண்பிள்ளைகளா நீங்கள்? பதின்மர் ஒருவனுக்கு முன்னால் நிற்கமுடியாமல் ஓட்டம் பிடித்தீர்களே! அதுவும் ஒரு கொள்ளைக்காரன்முன்! நன்றாயிருக்கிறது உங்கள்வீரத்தனம்!" என்று இந்திரகுமாரி அவளுடன்வந்த வீரர்களை இடித்துரைத்தாள்.

"அம்மணி, மன்னிக்கவேண்டும். இவர்கள் என்னைக் கட்டுவதைவிட, தாங்கள் இந்த வாளினால் என்னை வெட்டிவிடுவது நலம். இவர்களிடம் சிறைபடும் அவமானத்தைவிட தங்கள் கைவாளால் வெட்டுப்பட்டு சாவது மேல்" என்றான் ஜெயசிங்க்.

"கொள்ளைக்காரனுக்கு மானம் வேறு" என்று இகழ்ந்தாள் இந்திரகுமாரி.

"அம்மணி, நான் எப்போதும் கொள்ளைக்காரனாக இருந்தவனன்று. அசல் கொள்ளைக்காரனாக இருந்தால் தாங்கள் ஒரு பெண் என்பதைப் பாராட்டாமல் கொள்ளையடித்திருப்பேனல்லவா? என் காலவித்தியாசத்தால் இத்தொழிலை மேற்கொள்ள வேண்டிவந்தாலும் நான் என் குலதர்மங்களை விட்டுவிடவில்லை. வருவது ஒரு ஸ்திரீ என்று தெரிந்திருந்தால், நான் வழிமறித்திருக்கவேமாட்டேன். மேலும் ரஜபுத்ர ஸ்திரீ என்று தெரிந்திருந்தால் நான் தலைவணங்கி உங்களுக்குப் பாதுகாப்பாகக்கூட வந்திருப்பேன். அம்மணி, நான் சாகவேண்டிவரும் என்று பயப்படவில்லை. ஒரு காலத்தில் போர்வீரனாக இருந்த என்னை, வாளால் வெட்டுப்பட்டு இறக்கும்படி தாங்கள் கிருபைசெய்யவேண்டும்" என்று ஜெயசிங்க் வேண்டினான்.

"அவைகளெல்லாம் என் தகப்பனார் உதயசிங்கிடம் சொல்லிக்கொள்—சரி, அடே! இன்னும் என்ன விழிக்கிறீர்கள்? உங்கள் சூரத்தனத்தை நீங்களே கண்டஞ்சி விட்டீர்களா என்ன? என் தகப்பனார் உங்களிடம் நிரம்ப நம்பிக்கை வைத்திருந்தாரே! உங்களைப்போல் வீரர்கள் இருக்கும்வரை ஏன் மகம்மதியர் நமது நாட்டைக் கைப்பற்றி இவ்வாறு துன்பம் விளைக்கார்கள்?" என்று சொல்லிவிட்டு இந்திரகுமாரி பல்லக்கில் ஏறினாள்.

"ஆஹா, உதயசிங்கின் குமாரியா! சிங்கத்துக்குப் பிறப்பது சிங்கக்குட்டிகளல்லவா!" என்று சொல்லிக்கொண்டே ஜெயசிங்க் கட்டுப்பட்டான்.

கௌரி பூஜைக்குச் சென்ற தன் கடைசி குமாரி இன்னும் திரும்பிவரவில்லையே என்று கவலையுற்ற உதயசிங்க், வழிபார்த்து வரும்படி படைவீரர்களுக்கு உத்தரவிட்டுக்கொண்டிருந்த சமயம், இந்திரகுமாரியும், காப்பாளர்களும், கட்டுண்டிருந்த ஜயசிங்கும் அங்கு வந்து சேர்ந்தார்கள்.

"ஏன் இவ்வளவு தாமதம்?" என்றார் உதயசிங்க்.

"தந்தையே, கட்டுண்டிருக்கும் இக்கொள்ளைக்காரனால்தான். தாங்கள் என்னுடன் அனுப்பிய பாதுகாப்பாளர் மஹாவீரபுருஷர்கள்!" என்று இந்திரகுமாரி நடந்ததைச் சொன்னாள்.

"அடே, யாரடா நீ? என்ன தைரியம் உனக்கு? உதயசிங்க் புத்திரியையுமா கொள்ளையடிக்கத் துணிந்தாய்?" என்று உதயசிங்க் கோபத்துடன் கேட்டார்.

"ஆனால், தந்தையே, இவன் என்னைக் கண்டவுடன் வாளைக் கீழே போட்டுவிட்டுத் தலைவணங்கினான். தங்கள் பெயரைக் கேட்டவுடன் ஏதேதோ தனக்குத்தானே சொல்லிக்கொண்டு ஒருவித பரவசமடைந்தான். கொள்ளைக்காரரைப்போல் தூக்கில் போடாமல், தன்னை வெட்டிக் கொன்றுவிடவேண்டுமென்று என்னைக் கேட்டுக்கொண்டான்'' என்றாள் இந்திரகுமாரி அவனை நோக்கியவண்ணம்.

"கொள்ளைக்காரனுக்கு மரியாதை வேறா? ஏண்டா, பதரே, விழிக்கிறாய்? கேட்டதற்குப் பதில் எங்கே? நீ யார்? ஏன் முகத்தை மறைக்கும்படி தலைப்பாகை அணிந்திருக்கிறாய்? சொல் சீக்கிரம்'' என்றார்.

இதுவரையில் தலைகுனிந்து பேசாமலிருந்த ஜெயசிங் "அரசே, நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. தாங்கள் என்னை வீரர்களைத் தண்டிக்கும் முறையில் சிக்ஷை செய்யவேண்டும் என்றுமட்டும் கேட்டுக்கொள்கிறேன்'' என்று வணக்கத்தோடு பதிலளித்தான்.

அச்சமயத்தில் உதயசிங், கொள்ளைக்காரனிடமிருந்து இந்திரகுமாரியால் கைப்பற்றப்பட்ட வாளைப் பார்த்தான். பார்த்ததும் ஒருவித அதிர்ச்சியால் தாக்குண்டவன்போல பரபரப்போடு, "ஆஹா, இது ஜெயசிங்கிற்கு என்னாலளிக்கப்பட்ட வாள் அல்லவா? அந்த அஞ்சா நெஞ்சம் படைத்த இளஞ்சிங்கத்தின் கதி என்ன வாயிற்றோ?'' என்று பெருமூச்செறிந்து, "அடே, துராத்மா! இந்த வாள் உனக்கு எப்படிக் கிடைத்தது, சொல்'' என்று கோபத்துடன் அவனை ஒரு குலுக்குக் குலுக்கினான். திடீரென்று கைதியினுடைய தலைப்பாகை கீழே விழுந்தது. அவனுடைய அழகிய, விசாலமான நெற்றியில் கத்தியால் ஏற்பட்ட நீண்ட காயவடு ஒன்று தென்பட்டது.

"ஆ, ஜெயசிங்!'' என்று கூவிப் பெருமகிழ்வோடு உதயசிங் அவனைக் கட்டிக்கொண்டார். "சென்ற ஐந்துவருஷ காலமாய் நீ எங்கேயிருந்தாய்? உன்னைக் கண்டுபிடிக்க நான் எவ்வளவு பிரயாசைப்பட்டேன்? அலாவுதீன் உன் ராஜ்யத்தைத் தந்திரமாய்க் கைப்பற்றியபின் உன்கதி என்னவாயிற்றோ என்று எவ்வளவு கலங்கினேன்?—இந்திரா, பாடலீபுரத்தில் என்மேல் விழவேண்டிய கத்தி வீச்சைத் தடுத்துத் தான் ஏற்று நெற்றியில் காயமடைந்த இவரும் நானும் மட்டுமே அலாவுதீன் சேனையைச் சிதற அடித்தோமென்று சொல்லியபோது, 'அம்மாதிரி க்ஷத்திரிய வீரர்களும் இக்காலத்தில் இருக்கிறார்களா' என்று நீ சந்தேகப்பட்டாய். இதோ பார், ஒரு சுத்தவீரனை! என் உயிரையும் என் ராஜ்யத்தையும்

காப்பாற்றினது இந்த ஜெயசிங்கே!'' என்று நன்றியோடு கூறிவிட்டு, இந்திரகுமாரியின் காப்பாளர்களை நோக்கி, “வீரர்களே, ஒரு பெருஞ் சேனையையே சிதற அடித்து ஓடும்படிசெய்த ஜெயசிங்க் முன்னால் நீங்கள் நிற்க முடியாமல் போனது உங்கள் வீரக்குறைவாலல்ல. அவருடைய கட்டை யவிழுங்கள்'' என்று சந்தோஷத்தால் தடுமாறும் குரலோடு உதயசிங்க் கட்டளையிட்டார்.

இந்திரகுமாரி தன் முன்னால் நிற்கும் ஜெயசிங்கை அப்பொழுதுதான் நன்றாகக் கவனித்தாள். அதேசமயம் ஜெயசிங்க் அவள்பக்கம் திரும்பவே, அவளுடைய கண்களில் காட்டில்கண்ட கோபாக்னிக்குப் பதில் ஒரு கனிந்த பார்வையும், நாணத்தால் சிவந்த முகத்தில் ஒருவித ஆதரவும் இருப்பதைக் கவனித்தான்.

“ஜெயசிங்க், அன்று யுத்தம் முடிந்த வுடனேயே இந்திராவை உனக்குக்கொடுப்பது என்று உத்தேசம்பண்ணிவிட்டேன். உனக்கு வரித்த பெண்ணை வேறெவருக்கும் கொடுக்க இஷ்டமில்லாததால், இந்திராவை கௌரீ விரதம் செய்யும்படி சொன்னேன். கௌரீதேவி இந்திராவுக்கு அருள்புரிந்து உங்களிருவரையும் சந்திக்கும்படி செய்தாள். ஜய கௌரீ!'' என்று உதயசிங்க் ஜய கோஷம் செய்தார்.

அவ்விடமிருந்தவர்கள் அனைவரும் “ஜே, கௌரீ!'' என்று ஜயகோஷம் செய்தனர். இக்குரல்களிடையே “ஜே, கௌரீ!'' என்று மிருதுவான ஒரு இனியகுரலும் கேட்டது.

---

# விரக்தி எப்பொழுது?

எஸ். என்.

---

வெங்கடகிரி சர்மா பெரிய ஆஸ்திகர். தாசில்தார் வேலையில் அல்லல்பட்டபோதிலும், ஒழிந்த நேரங்களை பகவத் கைங்கர்யத்திலேயே கழித்து வந்தார். காலையில் பூஜை, மாலையிலும் பூஜை. நடுவில் அக்னிஹோத்ரம், ஜபம், முதலிய நியமங்களில் தவறுவதில்லை. சுற்றுப்பிரயாணம் போகும் காலங்களில்கூட எப்படியாவது தன் நியமங்களை விடாது செய்தே முடிப்பார் என்றால் அதிகஞ் சொல்வானேன்? சிப்பந்திகளிடமிருந்து வெகு நாளாக 'மடிசஞ்சி தாசீல்' என்ற பெயரும் பெற்றுவிட்டார். அவர் செய்த புண்யம், அவருக்கு எவ்விதத்திலும் அனுசரணையாயுள்ள ஸஹதர்மிணியை அடைந்திருந்தார். அன்னருக்கு வயது நாற்பத்தைந்துக்கு மேற்பட்டும் சந்தானமில்லாததால், 'புத்' என்னும் நரகத்திற்கு ஆளாய் விடுவோமோ என்ற பயம் சர்மாவுக்கு அதிகமாய்க்கொண்டே வந்தது.

சர்மாவின் குடும்பத்தில் இதுவரையில் எல்லாரும் சந்நியாசம் வாங்கிக்கொண்டே சித்தியானவர்கள். சர்மா தனக்கும் அந்த அவா இருப்பதாகச் சொல்லிக்கொண்டார். மேலும் அவர் படிப்பும், அனுஷ்டானங்களும் அவரை அதிலே கொண்டுபோய்ச் சேர்த்து விடும் என்றே எல்லோரும் நம்பினர்கள். அந்த ஊருக்கு வரும் சந்நியாசிகளுக்கு சர்மாவின் வீட்டில் பிக்ஷையுண்டு. சர்மாவும், பக்தி சிரத்தையாக அவர்களுடன் வேதாந்த விசாரணைகள் செய்வார்.

சர்மா வீட்டில் சிரார்த்தம் என்றால் பிராமணர்களுக்கு மிகுந்த சிரமம். முதல்நாள் இரவே அவர் வீட்டுக்கு வந்துவிடவேண்டும். பூரா பட்டினிதான் மறுநாள் சிரார்த்தம் முடிந்து சாப்பிடும் வரை. சர்மா வீட்டிற்கு வரும் சமையல்கார அம்மாள், நியம நிஷ்டையுள்ளவளாய், ஒரே வேளை ஆகாரியாக, காபி சிற்றுண்டிகள் தள்ளுபடி செய்தவளாய்த்தானிருக்கவேண்டும், சர்மா,

இவ்வித யோக்கியதாம்சங்கள் உள்ளவர்களை நன்ருய்ப் பரிசீலனை செய்தே வேலைக்கு வைப்பார்.

நமது கதை ஆரம்பிக்கும்போது, சர்மாவின் மனைவி அவரைப் பரிதபிக்க விட்டுவிட்டுப் பரலோகம் சென்றுவிட்டாள். சர்மாவின் துக்கம் சொல்லத்தரமன்று. எப்படியோ ஒரு வருஷத்தை ஏகாங்கியாகவே கழித்தார். அவர், சிராத்தம் முதலிய பிராமணனுக்குரிய கிரியைகளைச் செய்ய யோக்யதை யற்றுப்போய்விட்டதாக அவருக்குச் சில சாஸ்திரப்பிரமாணங்கள் எடுத்துக்காட்டிப் பண்டிதர்கள் தெளிவாக்கினர்கள். மேலும் தனக்குள்ள ஐவேஜிக்கு வார்சு இல்லாமல் போவதுகூட பெரிய காரியமல்ல, தன்னை 'புத்' தென்னும் நரகம் வரவேற்கக் காத்துக்கொண்டிருப்பது, அவரை அல்லும் பகலும் துன்புறுத்தியது.

மேற்படி காரணங்களை உத்தேசித்து ஏதாவது ஒரு பெண்ணை, தன் வாழ்க்கைத்துணைவியாக ஏற்படுத்திக்கொள்ள முனைந்தார். பெண்களின் பெற்ருேர்கள், எவ்வளவுதான் ஏழைகளாய் இருந்தபோதிலும், பல்போன பணக்காரக் கிழவனைவிட ஏழைப் பிரம்மசாரிப் பையன்களையே நாடிச்சென்றனர். ஆனுலும் சர்மா மனமுடையவில்லை. அவர் திருஷ்டி தன் ஆபீஸ் தலைமை குமாஸ்தா சங்குவையரின் பெண் சானு பேரில் விழுந்தது.

சங்குவையர் பெருத்த சம்சாரி. சம்சாரசாகரத்தில் சமாளிக்க முடியாமல் தத்தளித்துக்கொண்டிருந்தார். அவருக்கு ஆண்சந்ததிகள் மூன்றும், அதேதொகை பெண் சந்ததியும் உண்டு. அவருக்கு சர்க்கார் அளிக்கும் ரூபாய் அறுபதுக்குள் அந்தக் குடித்தனம் நடக்கவேண்டும். ஐயருக்கோ குடும்பப்பற்று ரொம்ப அதிகம். பீ.ஏ. படிக்கும் பிள்ளை, கலியாணமான இரண்டு பெண்கள், இவர்களுக்காகச் செட்டிகடையில் ரூபாய் மூவாயிரம் வாங்கி, அதற்கு வட்டிகூட கொடுக்கமுடியாமல் துன்பப்பட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் ஆபீஸுக்கு புறப்பட்டுக்கொண்டிருக்கும்போது தபால்காரன் மூன்றுகடிதங்களைக் கொடுத்துச் சென்ருன். ஒன்றில் பட்டணத்தில் படிக்கும் பிள்ளை பரீக்ஷைக்குப் பணம் கட்ட ரூபாய் நூறு வேண்டுமென்றும், அது கிடையாவிட்டால் தன்னைப் பரீக்ஷைக்கு அனுப்ப மாட்டார்களென்றும் எழுதி யிருந்தான். இரண்டாவது ரங்கூனிலிருந்து வந்திருந்தது. அதில், 'உங்கள் பெண் ஆறுமாதமாகக் குளிக்கவில்லை, உடம்பு மிக்க அசௌகர்யமாக இருக்கிறது. புறப்பட்டு வரவும். டாக்டருக்கு ரூபாய் இருநூறு கொடுக்கவேண்டும்' என்று கண்டிருந்தது. மூன்ருவது, வட்டி ரூபாய் ஐந்நூறுக்காக வக்கீல் நோட்டீஸ்.

ஐயருக்கு மூளை குழம்பிவிட்டது. ஒன்றும் பேசமுடியாமல் திண்ணைமேல் உட்கார்ந்துகொண்டு சுவரில் சாய்ந்தார். உள்ளேயிருந்து வந்த அம்மாள் ஐயரின் நிலைமையைக் கண்டு திடுக்கிட்டாள். ஐயரும் ஒருவாறு சங்கதியைத் தெரியப்படுத்தவே, அம்மாள் மெதுவாக, "ஈசுவரன் நம்மையேன் இப்படி சோதிக்கிறான்?—" என்று சொல்லிக்கொண்டே பல பல வென்று கண்ணீரைக் கொட்டினாள். சற்று நேரம் கழித்து அம்மாள், "ஒன்று செய்தாலென்ன? உங்க தாசில்தார் நம்ப பொண்ணைக் கேக்கரானே. அவனுக்கே கொடுத்தூட்டா அவன் ஏதாவது உதவி செய்யமாட்டானா?" என்றாள். ஐயர் நிமிர்ந்து உட்கார்ந்து, "அது முடியவே முடியாது. என்கண்மணி சானுவை அவனுக்குத் தரவேமாட்டேன். அவன் கிட்டக் கட்டாயம் நான் உதவியை எதிர்பார்ப்பேனென்று தான், அந்தச் செட்டியை நோட்டீஸ் அனுப்பும்படி செய்திருக்கிறான். நான்—" என்று மேலே பேசமுடியாமல் மௌனமாயிருந்தார்.

அன்று ஆபீஸில் அவருக்கு வேலைமேலேயே புத்தி ஓடவில்லை. அன்று கஜானா ஐயரின் மேல்பார்வையில் இருந்தது. சாயந்திரம் ஆபீஸ் பணத்தை கஜானாவில் வைத்துப் பூட்டிவிட்டு வீட்டிற்குப் புறப்பட்டுப் பாதிதூரம் வந்துவிட்டார். அவர்தோள்மேல் ஒருவர் கைவைத்து, "ஸார், உங்கள் பேரில் ஐந்நூறு ரூபாய்க்கு ஸிவில் வாரண்டு வந்திருக்கிறது. இதற்கு ஜவாப் சொல்லிவிட்டுப் போங்கள்" என்று சொல்வதைக்கேட்டுத் திரும்பிப் பார்க்க, கச்சேரி அமீனா நிற்பதைக் கண்டார்.

ஐயரின் கை கால்கள் உதறலெடுத்தன. ஒருவீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துவிட்டார். அமீனா அவரைக் கடுபுடிபடுத்த ஆரம்பித்தான். ஐயருக்கு ஒரு யோசனை தோன்றிற்று—கஜானாப் பணத்திலிருந்து எடுத்து இப்பொழுது கொடுத்துவிட்டு நாளைக்கு ஏதாவது வீட்டுநகைகளை விற்றுத் தொலைத்துவிடலாமென்பதே. உடனே ஆபீஸுக்குள்சென்று ரூபாய் ஐந்நூறைச் செலுத்திவிட்டு வீட்டிற்கு வந்தார். வீட்டிலிருந்தது ஆறுபவுன் கொண்ட ஒரே ஒரு சங்கிலிதான். மனைவியிடம் சமாசாரத்தைச் சொல்ல முடியவில்லை. நிலைமையும் சமாளிக்கமுடியாமல் போய்விட்டது. மறுநாள் ஆபீஸ் நேரம் வந்துவிட்டது. தாசில்தார் அங்கே வந்தவுடன் தன் திருட்டைக் கண்டுபிடித்துவிடுவாரே, என்ன செய்வது? அந்தச் சங்கிலியைமட்டும் எடுத்துக்கொண்டு கிளம்பினார். சாயந்திரம் ஐயர் வீட்டிற்கு வரவில்லை.

ஐயரின் திருட்டு ஊரெங்கும் பரவிவிட்டது. ஐயரின் மனைவி இடியோசை கேட்ட நாகம் போல் கலங்கினாள். வாயிலும் வயிற்றிலும் போட்டுக்கொண்டாள். என்ன பயன்!

## II

வருடங்கள் பத்துப் பறந்தன. சர்மா உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டு விட்டார். அவருக்குப் புதிதாக ஓர் இளம் மனைவி ஏற்பட்டிருந்தபோதிலும் இன்னும் சந்ததி கிடையாது. ஒரு நாள் காவேரிக் கரைக்கருகில் வந்திருந்த யதி ஒருவரை பிக்ஷைக்கு அழைத்துவந்தார். போஜனம் முடிந்ததும் வழக்கம்போல் அவருடன் சல்லாபித்துக்கொண்டிருக்கும்போது, அத்துறவி "தங்கள் மைத்துனன் என்று ஒருவரைக் காட்டினீர்களே, அவர் எனக்குப் பரிசயமானவர்போல் தோன்றுகிறாரே. அவர் பூர்வோத்தரம் யாதோ?" என்றார்.

"முந்தி சங்குவையர் என்று ஒருவர் இருந்தார். அவருடைய பிள்ளைதான் இவர்" என்றார் சர்மா.

"ஓஹோ, தாலுக்காவிலிருந்த சங்குவா! அதுதான்! சங்கு எனக்குப் பள்ளித்தோழனாயிற்றே!" என்றார் யதி.

"அப்படியா! அவர் பத்துவருடத்திற்கு முன் யாரிடமும் சொல்லாது கொள்ளாது போய்விட்டார். நான்தான் அவர் குடும்பத்துக்கு உதவி செய்தேன். அவர் மூத்த பிள்ளைக்குத் தாலுக்காவில் உத்யோகம் பண்ணிவைத்தேன். ஏதோ நான்தான் என்னாலான உபகாரத்தை அவர்கள் குடும்பத்திற்குச் செய்கிறேன்" என்றார் சர்மா. யதி பதில் ஒன்றும் கூறவில்லை. பிறகு பற்பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள் இருவரும். கடைசியில் சர்மா, "நானும்தான் 'ஆச்ரமம்' வாங்கிக் கொள்ளவேண்டுமென்று நினைக்கிறேன். அதற்கு ஏதாவது வழி சொல்லவேண்டும்" என்றார் வினயமாக.

யதி சிரித்தார். அது ஏளனச்சிரிப்பாக சர்மாவுக்குப் பட்டது. மேலும் அவ்வளவு படித்துப் பக்குவமடைந்த தன்னை அந்த யதி அவமானப்படுத்துவதாகவும் தோன்றிற்று.

"சரி, அஸ்தமித்து விட்டது. நான் போகவேண்டுமே" என்றார் யதி.

சர்மாவும், சங்குவையரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் யதியை வணங்கினர்.


“ஒரு விஷயம். சங்குவை மூன்று வருஷத்திற்குமுன் சிருங் கேரியில் பார்த்தேன். அநேகமாய் சமீபத்தில் பார்ப்பேன்” என்றார் யதி, எங்கேயோ பார்த்துக்கொண்டு.

“பார்ப்பீர்களா! பார்த்தால் உடனே இங்கே வரச்சொல் லுங்கள்” என்றாள் சங்குவின் மனைவி, பரபரப்புடன்.

“நான் வருகிறேன். சங்கு யதியாய்ப் போய்விட்டான். அவன் இனிமேல் இங்கு திரும்பமாட்டான்” என்று அவசரமாய்ச் சொல் லிக்கொண்டே மங்கியவெளிச்சத்தில் வேகமாக நடந்து மறைந்து போனார் யதி.

சர்மாவும் கூடஇருந்தவர்களும் மறைந்த அவ்வுருவத்தைச் சந்தேகத்தோடு பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

---




## பாட்டி கதைகள்

### 1. காக்கை கறுப்பாயிருப்பதேன்?


பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், பி. ஏ., பி. எல்.

---

"பாட்டி, பாட்டி, காக்காய் எல்லாம் ஏன் கறுப்பாயிருக்கிறது?" என்று கேட்டாள் குழந்தை பத்மா.

"அது தெரியாதா உனக்கு? சொல்லுகிறேன் கேள்" என்று பாட்டி கதைசொல்ல ஆரம்பித்தாள்.

"முன்னை நாளிலே காக்காய் நல்ல அழகாய் இருக்குமாம். அன்னத்தைப்போல வெள்ளையாய் இருக்குமாம். பட்டுப்போல சிறகும், பஞ்சுபோலக் காலும், வெள்ளிபோல மூக்குமாக அது நன்றாக இருக்குமாம். ஆனால் அதற்கு இருந்த பெருமைக்குக் கணக்கே கிடையாதாம். தன்னை விட்டால் அழகி இல்லை என்று எங்கும் போய்ச் சொல்லுமாம்.



மூன்று வேளையும் தேய்த்துக் குளிக்குமாம். ஒருவேளை ஆற்றிலே குளிக்குமாம். இன்னொரு வேளை குளத்திலே குளிக்குமாம். வாய்க்காலைக் கண்டால் வாய்க்காலிலே குளிக்குமாம். ஓடையைக் கண்டால் ஓடையிலே குளிக்குமாம். குளிக்கிறதும், முகத்தைத் துடைக்கிறதும், காலை நனைக்கிறதும், சிறகை அலசுகிறதும்தான் அதற்கு வேலை.

வேறொருவேலையும் அது செய்யாதாம். எல்லாரை யும் பார்த்துச் சிரிக்குமாம்.

"அப்புறம்" என்றாள் பத்மா.

"ஒரு மனுஷன் ஒருத்தன் வந்தானாம். அவன் பகலெல்லாம் அலைந்து அலைந்து அலுத்துப் போயி ருந்தானாம். அவனுக்குத் தாகம் ஒட்டிக்கொண்டு வந்ததாம். அங்கே ஒரு ஓடை இருந்ததாம். அதைக் கண்டு அவன் அதிலே ஜலம் குடிக்கலாம் என்று வந் தானாம். அதன் பக்கத்திலே ஒரு மரம் இருந்ததாம். அந்த மரத்துமேலே அந்தப் பெருமைக்காரிக் காக் காய் உட்கார்ந்துகொண்டு பெருமையடித்துக்கொண் டிருந்ததாம். அவன் அதைப் பார்க்கவில்லையாம். 'இந்த மனுஷனைப் பாரு, மனுஷனை. நான் உட் கார்ந்து கொண்டிருக்கிறேன், என்னைப் பார்க்கிறானா பார், என் அழகைப் பார்க்கிறானா பார், அவன்!' என்று சொல்லிக்கொண்டதாம்."

"உம்" என்றாள் பத்மா.

"சொல்லிக்கொண்டே மரத்திலிருந்து தொப் பென்று ஓடையில் குதித் ததாம். குதித்துச் சிறகை யும் மூக்கையும் காலையும் போட்டு அடித்துக் கொண்டு முங்கி முங்கிக் குளித்ததாம். ஓடை ஜலம் எல்லாம் கலங்கிப் போயிற்றாம்."




"அப்புறம்" என்றாள் பத்மா.

அத்தனை ஜலமும் சேறும் மண்ணுமாக ஆய் விட்டதாம். அந்த மனுஷனுக்கு மூக்குக்குமேலே கோபம் வந்துவிட்டதாம். அவன் சாதாரண மனு ஷன் இல்லையாம்.


"பின்னே?" என்றாள் பத்மா.

"அவன் ஒரு மந்திரவாதியாம். அவனுக்கு நிறைய மந்திரம் தெரியும். அவன் காக்காயைப் பார்த்து "பொல்லாத சிறுக்கி! போக்கிரிக் காக்காய்! நாம்தான் அழகாயிருக்கிறோம் என்று உனக்கு இவ்வளவு பெருமையா? தாகத்தோடு வந்தவனைத் தண்ணீர் குடிக்கவொட்டாமல் பண்ணிவிட்டாயே! இத்தனை கர்வமா உனக்கு? உன் அழகுமாச்சு, நீயுமாச்சு, கரியாகப்போக நீ!" என்று சபித்துவிட்டானும். உடனே காக்காய் உடம்பெல்லாம் ஒரே கரியாய்ப் போய்விட்டது. மூக்கு கரி, சிறகு கரி, கால் கரி, எல்லாம் கன்னங்கறுக்க ஒரே கரியாய்ப் போய்விட்டது. அதனால்தான் காக்காய் எல்லாம் கறுப்பாக இருக்கிறது. தெரிந்ததா?"



"அப்படியா?" என்றாள் பத்மா.

---




## மகுடாபிஷேகம்

எட்டாம் எட்வர்ட் 1937-ஆம் வருஷம் மேமீ 12௨ வெஸ்ட்மின்ஸ்டர் கோயில் மண்டபத்தில் வந்து மகுடம் சூட்டிக்கொள்ளத் திருவுள்ளம் பற்றி யிருப்பதாக மன்னர் மாளிகை காரியஸ்தர்கள் அறிக்கை யிட்டிருக்கிறார்கள்.

வெகுகாலத்திற்கு முன் இங்கிலாந்துக்கு நார்மண்டி சிற்றரசர்கள்தான் மன்னராவது வழக்கம். அரசன் இறந்ததும் அடுத்தபாத்தியக்காரன் சிறிதும் தாமதமின்றி மகுடாபிஷேகங் கொண்டு விடுவது அவசியம். ஏனெனில், அக்காலத்திய நிலைமையில் தம் மகுடாபிஷேக முகூர்த்தத்தை நீண்ட நாள் தள்ளிவைத்துக் கொள்வார்களானால் அது பெரிய தொல்லைகளுக்கு ஏது வாகும். யாராவது தாயாதிக்காரன் முன்னாடியாகவே அபிஷேக மண்டபம் போய்ச் சேர்ந்துவிட்டால் என்ன செய்வது? எந்தச் சமயம் எப்படி இருக்கு மோ? யார்கண்டார்கள்? ஆனால், இக்காலத்தில் அப்படிப்பட்ட பயம் ஒன்றும் இல்லை. சாவதானமாக மகுடாபிஷேக உத்ஸவத்துக்கு ஏற்பாடுகளைச் செய் யலாம். இவ்வுத்ஸவத்துக்கு உலகின் எல்லாப் பாகங்களிலிருந்தும் ஜனங்கள் வருவார்கள். திருவிழாவும் சிறப்பும் இதுவரையில் கண்டிராததாயிருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

எவ்வளவுதான் கூட்டங்கள் கூடினாலும், ஆடைகளும் அலங்காரங் களும் மின்னினாலும், மகுடாபிஷேகம் என்பது முக்கியமாய் ஒரு வீட்டுச் சடங்குதான். இங்கிலாந்தின் அரசாங்கமும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அரசாங்கமும் ஆதியில் மன்னர் மாளிகைப் பெரியதனத்திலிருந்துதான் படிப்படியாய் வளர்ந்தது என்பதை இந்த உத்ஸவம் காட்டுகிறது. அபிஷேக உத்ஸவத்தில் பிரபலமாக முன் வந்து உபயம் செய்கிற பிரமுகர்கள் அவர் பிரதான மந்திரியுமல்ல, மந்திரி சபையில் சாம்ராஜ்ய நாடுகளை நிர்வகிக்கும் காரிய தரிசிகளுமல்ல. ஆதியில் மன்னர் மாளிகையில் ஊழியம் செய்தவர் களாகிய தவசிப்பிள்ளையும் (பட்லர்), உக்கிராணக்காரரும் (சேம்பர்லேன்), குதிரை (லாய)க்காரனும்தான். அந்த ஒருநாள் மாத்திரம் இவர்களுக்கு விசேஷச் சிறப்பும் பெருமையும். இச்சிறப்பும் பெருமையும் அரசனுக்குச் செய்யும் தொண்டின் சிறப்பையும் பெருமையையும் வெளியாக்குகின்றன. ஏனெனில், இத்தொண்டு மன்னனுக்கு ஆற்றுதலாலும், அம்மன்னன் மண்ட லத்துக்கு அதிபதியாயிருப்பதாலும் அவருக்குச் செய்த பணி நாட்டுக்குச் செய்ததாய் மகாஜன சமூகத்துக்கே தொண்டு ஆகும்.

இப்புராதன கைங்கரியங்களை இன்னின்னார் செய்வது என்று நிர்ண யிப்பதற்காக ஒரு தனிப் பஞ்சாயத்து (Court of claims) ஏற்படுத்தி யிருக் கிறார்கள். இது மாமூல்படி எற்படுவது. பஞ்சாயத்தார் பரம்பரை பாத்தியங்

களைத் தீர்த்து அபிஷேக மகோத்ஸவத்தில் செய்யவேண்டிய ஐதிகச்சடங்கு களில் இன்னின்னவற்றை இன்னின்னார் செய்ய வேண்டியதென்று தெரி விப்பார்கள். லார்டு சபையிலே ஓர் அங்கத்தினரை நியாயம் விசாரிக்க நேர்ந்தபோது இந்தஅதிகாரி லார்டு ஹெயில்ஷாம் என்று ஏற்பட்டது.

அப்படிப்பட்ட அபார அதிகாரம் இரண்டொரு ஜாமத்துக்குமேல் ஒரு வருக்கு இருந்தால் நாட்டுக்குத் தீங்கு விளையும் என்று அநுபவத்திலிருந்து தெரிகிறது. சில நூற்றாண்டுகளாக இவ்வதிகாரி மகுடாபிஷேக தினத்தன்று மாத்திரம் உருக்கொண்டு இருந்து அபிஷேகத்துக்குப் பிறகு அவ்வதி காரத்தை விட்டுவிடுவது வழக்கமாயிருக்கிறது. மன்னர், ஊர்வலத்தையும் விருந்தையும் நிறுத்திவிடத் தீர்மானித்திருக்கிறார். இதனால் அநேக ஐதிகக் காரர்களுக்கு ஏமாற்றம் உண்டாயிருக்கும்.

முன்னே, முடிசூடும் மன்னனுக்குப் போட்டியாய் வரும் ராஜகுமாரர் களைச் சவால் கூறிச் சண்டைக் கழைக்கும் யுத்தவீரனை மன்னரின் காரிய ஸ்தன், உச்சிமுதல் உள்ளங்கால்வரையில் ஆயுதபாணியாய்ப் புரவிமீதேறி வெஸ்ட்மின்ஸ்டர் மண்டபத்துக்கு வருவது வழக்கம். அந்தச் சவால்வீரன் இந்தத்தடவை வரக் காணமாட்டோம். முதல் வில்லியம் மன்னன், தன் தவசிப்பிள்ளைக்கு மான்யமாய் விட்ட ஆடிங்டன் ஜமீன் இப்போது யார் வசமிருக்கிறதோ அவர்கள் வந்து மன்னனுக்கு மகுடாபிஷேகப் புலவு பரி மாறுவது வழக்கம். விருந்து நின்றுவிட்டதனால் அதையும் இப்போது பார்ப் பதற்கில்லை. ஆனால் துறைமுகப் பாளையக்காரர்கள் மாத்திரம் தங்கள் "புரா தன வழக்கப்"படி மன்னன்ஊர்வலத்தில் கூராடத்தைப் பிடித்துக்கொண்டு வரும் பாத்தியதையை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளுவார்கள். ஒரு "மகா தானதிகாரி" நியமனம்பெறுவான். அவன் பிச்சைக்காரர் அமளியை அடக்க அதிகாரம் பெறுவான். பிரதான உக்கிராணக்காரன் எண்பது முழம் சிவப்பு மகமல்லினாலான உடுப்பைத் தரித்துக்கொண்டு, மன்னன் படுக்கையறையில் உள்ள,மஞ்சம், பஞ்சணை, ஆடை, ஆசனங்களை நீக்கும் சுதந்திரம் பெறுவான்.

விக்டோரியா ராணியாரின் ஆட்சியின் போதே அநேக சுதந்தர பாத்தியதை வழக்குகள் தீர்ந்துபோனபடியினால், ஏழாம் எட்வர்டு மன்னன் மகுடாபிஷேகத்தின்போது சச்சரவுகள் ஒன்றுமில்லை. 1910-ஆம் வருஷம் ஜார்ஜ் மன்னர் மகுடாபிஷேகத்தில் முந்தின அபிஷேக உத்ஸவத்தில் நடந்த வைகளையே ஊர்ஜிதம் செய்தார்கள். ஒவ்வொரு ராஜாவின் காலத்திலும் இப்படி ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்துவது வழக்கம். அதில் ஏற்படும் முறை கள் இங்கிலீஷ் தேசிய வழக்கங்களின் அழியாமையைக் காட்டுகின்றன.

ஏ. டி. கே.

## செஞ்சிலுவை என்றால் என்ன?

நாம் இக்காலத்தில் ஸர்வசாதாரணமாக ஆஸ்பத்திரிகளிலும், 'ஆம்பு லென்ஸ்' வண்டிகளிலும், செஞ்சிலுவைச் சின்னம் வரையப்பட்டிருப்பதைக் காண்கிறோமல்லவா? 'செஞ்சிலுவைச்சங்கம்' என்றொரு ஸ்தாபனம் இருக் கிறதே அது எக்காரணத்தினால், எப்பொழுது, ஏற்பட்டதென்று அறிய உங் களுக்கு ஆவலிருக்கலாம்.

ஸ்விட்ஜர்லாந்திலுள்ள ஜெனீவா நகரில் வருஷா வருஷம் ஸகல தேசத்துப் பிரதிநிதிகளும் அடங்கியதொரு மகாஸபை கூடுவது வழக்கம்! 1864-ஆம் வருஷத்திய கூட்டமொன்றில், எல்லா பிரதிநிதிகளும் ஒன்று சேர்ந்து, யுத்த சமயத்தில் ஆஸ்பத்திரிகளிலும் வெளியிலும் சுச்ரூஷை செய்யும் ஆட்கள், டாக்டர் இவர்களுக்கும், ஆஸ்பத்திரி, 'ஆம்புலன்ஸ்' இவற்றிற்கும் யாதொரு தீங்கும், எக்கட்சியினரும், விளைவிக்கக்கூடாது என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றினர். சுத்தமான வெண்ணிறத்தின் நடுவே செஞ்சிலுவைச் சின்னம் கொண்டது ஸ்விட்ஜர்லாந்து தேசத்துக் கொடி. இதை எங்கு நாட்டி வைத்திருக்கக் கண்டாலும், அங்கு குண்டுமாரியோ, வேறெவ்வித அஸ்திரப் பிரயோகமோ செய்யக்கூடாது என்று ஒரு கட்டுப்பாடு. அதுமுதல்தான் ஆஸ்பத்திரிகளிலும், மற்ற சிகித்ஸாலயங்களிலும், இச்சின்னத்தைக் கையாள ஆரம்பித்தனர். ஆனால் சமீபகாலத்தில் சில தேசங்கள் இக்கட்டுப்பாட்டை மீறியுள்ளன என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமாகும்.

## துப்பாக்கி மீன்

மனிதர் தூரத்தில் செல்லும் பக்ஷி மிருகங்களைத் துப்பாக்கியினால் சுட்டு வீழ்த்துவதுபோல் ஒரு மத்ஸ்யத்தினால் செய்யமுடியும் என்பதை நீங்கள் நம்புவீர்களா? அநேக வருஷங்களாக இந்தவித மீனைப்பற்றி விஞ்ஞானிகளிடையே விவாதம் நிகழ்ந்து வருகிறது.

கி. பி. 1764-ஆம் ஆண்டில் லண்டனில் பிரசுரிக்கப்படும் 'ராயல் ஸொஸைட்டி' பத்திரிகையில், முதன் முதலாக இம்மச்சத்தைப்பற்றி மனதைக் கவரக்கூடிய விவரங்கள் அடங்கியதொரு கட்டுரை வெளிவந்தது.

அதை எழுதிய, படேவியா ஆஸ்பத்திரி கவர்னர், மிஸ்டர் ஹோமெல் என்பவர், "ஜாகுலேடர் என்று பெயர்கொண்ட ஒரு மீன் இனம், இங்குள்ள நதி, ஸமுத்ரங்களில் விசேஷம். மரம், செடி, கொடி, புதர்கள் அடர்ந்திருக்கும் ஆற்றங்கரை யோரங்களில், ஆழமில்லாத இடங்களில் இம்மீன் இலைகள் மீதுள்ள புழுபூச்சிகளைத் தூரத்திலிருந்து கவனித்து அருகில் வரும். ஐந்தாறு அடி தூரத்தில் தண்ணீரில் இருந்துகொண்டு, அப்புழுவின்மேல் குறிபார்த்து ஒரு பொட்டு ஜலத்தை மிக ஸாமர்த்தியமாகத் துப்பும். அந்தக் குறி தப்பவே தப்பாது. ஜலம் புழுவின்மீது விழுந்த அதிர்ச்சியில் அது தண்ணீரில் விழ உடனே மீனானது அதைப் பிடித்துத் தின்றுவிடும். இந்த மத்ஸ்யத்தின் ஸாமர்த்தியத்தை நன்கு பரிசோதிக்க, நான் பெரிய பெரிய அண்டாக்களில் ஜலம் நிரப்பி, அதில் இம்மீனை விட்டுவைத்தேன். அந்த இடத்தில் கொஞ்சநாள் பழக்கமேற்பட்ட பின், நான் சிறிய சிறிய புழு, பூச்சிகளைக் கொண்டுவந்து ஜலத்துக்கு மேல் ஐந்தாறடி உயரத்தில் வைத்தேன். முன் பார்த்ததுபோலவே செய்து அம்மீனானது புழு பூச்சிகளைக் கொன்று தின்றுவிட்டது. அப்படி ஒருதரம் குறி தவறிவிட்டாலும் அது சோர்வடையாமல், புழு ஜலத்தொட்டியில் விழும்வரை துப்பிக்கொண்டிருக்கும்!" என்று கூறினர்.

ஆனால் விஞ்ஞானிகள் முதலில் இதை நம்பவில்லை. வெறும் கல்பனை என்றே கருதி வந்தனர். ஏனெனில், ஹோமெல் என்பவருக்குப் பின்னர்

அந்தப் பிராந்தியத்தில் 35 வருஷகாலம் வசித்து இம்மீனைப்பற்றி ஆராய்ச்சி செய்த டாக்டர் பீடர் ப்ளிகார், அப்படிப்பட்ட விசேஷம் ஒன்றையும் தாம் நேரில் காணாததால், அது சுத்தக் கட்டுக்கதை என்று கூறிவிட்டார்.

19-ஆம் நூற்றாண்டின் முடிவில், இந்தியா, பர்மா பிரதேசங்களில் மத்ஸ்யங்களைப்பற்றி 25வருஷகாலம் ஆராய்ச்சி செய்த டாக்டர் ப்ரான்ஸிஸ் டே என்பவர் 'பிரிட்டிஷ் இந்தியாவின் ஜலஜீவன்கள்' என்ற புஸ்தகத்தில், "இந்த மீன்கள் புழுபூச்சிகளை ஒரே பொட்டு ஜலம் துப்பி வீழ்த்திக் கொன்று தின்கின்றன என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் ப்ளிகார் போன்ற விஞ்ஞானிகள், 'துப்புவதற்கு ஏற்றமாதிரி அமைக்கப்பட்டிருக்கவில்லையே அவற்றின் வாய்பாகம். அதனால் எப்படித் துப்பக்கூடும்'? என்று சொல்வதால் இதை நேரில் கண்டாலொழிய உண்மையென்று கூற முடியாது!" என்றார்.

ஆனால் இந்த நூற்றாண்டில் ருஷிய விஞ்ஞானியான ஜோலெனிஸ்கி மிக சிரமப்பட்டு ஆராய்ச்சி செய்ததன்பேரில் இச்சந்தேகம் நிவர்த்தியாகிவிட்டது. அவர் சிங்கப்பூரிலிருந்து இவ்வகை மீன்களை உயிருடன் கொண்டு வந்து, அவற்றின் ஸாமர்த்தியத்தை முக்யமான எல்லா விஞ்ஞானிகளிடமும் பிரத்யக்ஷமாகக் காட்டி "ஜலத்தருகில் பறந்துசெல்லும் பூச்சிகளையும், இலைகளில் இருக்கும் பூச்சிகளையும் தின்று வாழ்வன இவை. ஒரு பூச்சியைப் பார்த்த மாத்திரத்தில், இவை அதை நெருங்கி நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும்வரை கண் கொட்டாமல் காத்திருந்து குறிதவறாமல் அதை வீழ்த்தித் தின்றுவிடுகின்றன" என்றார்.

மற்றொரு விஞ்ஞானியான எச். எம். ஸ்மித் என்பார் சமீபத்தில் தீவிர ஆராய்ச்சி செய்து, அவற்றின் வாயினுள் சிலநுட்பமான அவயவங்கள் இருப்பதைக் கவனித்துத் துப்புஞ்சக்தி அவைகளுக்கு எப்படிக் கிடைத்தது என்று கண்டுபிடித்தார்.

ஸினிமாப் படத்தில் அதன் ஒவ்வொரு செயலையும் பிடித்திருக்கிறார். அவருடைய நண்பர் ஒருவர் இம்மீன்கள் வசிக்கும் கரையோரமாக உள்ள ஒரு வீட்டின் ஜன்னலண்டை சுருட்டுக் குடித்துக்கொண்டிருந்தாராம். அப்பொழுது இரண்டு தடவை இம்மீன் சுருட்டை நோக்கி ஜலம் துப்ப, அது அணைந்துவிட்டதாம்!

இந்தத் துப்பாக்கி மீன்கள், வங்கதேசத்தின் தென் பாகத்திலுள்ள ஸமுத்ரம், நதி இவைகளில் விசேஷமாகக் காணப்படுகின்றன. அங்கே இதற்கு 'நோசா' அல்லது 'காட காயி' என்று சொல்லுகிறார்கள். இதைத் தவிர்த்து இந்துமஹாஸமுத்ரத்தில் 'ஸிடோடெண்ட்' என்று பெயர்கொண்ட மீனும் இதுமாதிரிச் செய்யச் சக்திகொண்டதாம்.

—ப்ரபாஸி.

## ஞாபகசக்தி

ஒரு சாதாரணமனிதன் ஏகஸந்தைக்கிராஹி ஆகமுடியுமா? இந்தக் கேள்விக்கு அமெரிக்காவிலுள்ள ஒஹியோ நகர ஸர்வ கலாசாலையார் 'முடியும்' என்று பிரத்தியக்ஷப் பிரமாணங்களுடன் பதில் கூறுகின்றனர். ஸாதாரண

அறிவுபடைத்த காலேஜ் மாணவர்கள் பலரை 76 மணி நேரத்தில் அதி மேதாவிகளாக ஆக்கி விடுகின்றனர். (ஒரே மூச்சில் என்று கூறவில்லை. மொத்தநேரம் அவ்வளவு என்றே சொல்லுகிறேன்.)

ஸர்வகலாசாலையாருக்கு இந்தப் புதிய உணர்ச்சி யாரால் ஏற்பட்ட தென்றால், டாக்டர் ஸாலோ பிங்கெல்ஷ்டைன் என்ற கணக்கறிஞரின் வருகையினாலேயே. அமெரிக்காவில் 1932ஆம் வருஷத்தில் நடந்த தலைமைப் பதவி தேர்தலுக்குப் பின், வரவுசெலவுக் கணக்குகளைப் பரிசோதிக்க அவரை அழைத்திருந்தார்கள். ஏனென்றால் 'டோடலைஸர்' என்ற யந்திரத்தை விட வேகமாக விடை சொல்லக்கூடியவராம் அவர்! இது விஷயமாக அவர் ஒஹியோவில் ஒன்றரை வருஷம் தங்க நேரிட்டது. மனோதத்துவ ஆராய்ச்சி யாளர் பலர் அவரைப் பலவிதங்களில் பரீக்ஷித்துப் பார்த்தனர். அவற்றுள் ஒன்று: ஒரு பெரிய சதுரத்தில் 25 கட்டங்கள்; ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வோர் எண் எழுதப்பட்டிருந்தது. ஒன்பதே ஒன்பது வினாடிகள் அச் சதுரத்தை நோக்கிவிட்டுக் கண்களை மூடிக்கொண்டு கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தயாரானார் டாக்டர் பிங்கெல்ஷ்டைன்! இத்தனாவது கட்டத்தில் இத்தனாம் வரிசையில் (மேலிருந்தோ, கீழிருந்தோ, பக்கங்களிலிருந்தோ) என்ன எண் இருக்கிறது என்றெல்லாம் கேட்டார்கள். அவற்றிற்குச் சரி யான விடைகள் அளித்துவந்தார் அந்த டாக்டர்.

இதனாலேயே ஸர்வகலாசாலை அதிகாரிகளுக்கு காலேஜ் மாணவர்களை யும் என் இவ்விதம் பழக்கக்கூடாது என்ற எண்ணம் உண்டாயிற்று. ஸாதா ரணமாக நமக்கு 62470694598619326l832 என்பதை மனதில் பதியவைத் துக்கொள்ள எவ்வளவு நேரம் பிடிக்கும்? பிங்கெல்ஷ்டைன் 4.43 வினாடி களுக்குள்—அதாவது நாம் அதைப் படித்து முடிப்பதற்கு எத்தனை நாழி யாகுமோ அதற்குள்ளாகவே—நெட்டுருப் பண்ணிவிட்டார். ஆனால் அவரை விட சீக்கிரமாக சாதாரண காலேஜ் மாணவன் ஒருவன் இந்த வித்தையைச் செய்து காட்டினானாம்!

தற்கால மனோதத்துவ பண்டிதர்கள், நம்மைப் போன்ற ஸாதாரண மனிதர்களும் நம்மையறியாமல் எவ்வளவோ அற்புதங்கள் நிகழ்த்துகிறோம் என்கிறார்கள். ஒருவனுக்கு ஒரு விஷயத்தின்மேல் அக்கரை இருந்தால் கட்டாயம் இவ்வித்தையில் தேர்ச்சியடையலாம் என்கிறார்கள். நடிகன் தான் பேசவேண்டிய பாகங்களை எப்படி நன்றாக ஞாபகம் வைத்துக்கொள் கிறான்? ரெயில்வண்டியில் சில கௌரவதைப் பிச்சைக்காரர்கள் வருவார் கள். அவர்கள் கையில் ஒரு நோட்டுப்புத்தகம் நிறைய பல பெரிய மனித ரின் நற்சாட்சிப் பத்திரங்கள் இருக்கும். அவரவர்கள் பெயர்களைச் சொல்லிக் கொண்டே கண் மூடியபடியே நோட்டுபுஸ்தகத்தின் பக்கங்களைப் புரட்டிக் கொண்டு போவான். அவன் சொன்ன பெரிய மனிதரின் பெயரை நாம் காதால் கேட்கும் அதேசமயத்தில் அவருடைய நற்சாட்சிக் கடிதம்கொண்ட பக்கத்தைக் காணலாம்.

ஒரு பால்காரன் தன்னுடைய ஞாபகசக்தியால் ஒரு பெரிய பால் வியாபாரியாகிவிட்டான். அவனுக்கு 300 விலாசதாரர்கள் தெரியும், அவனை

விட அவன்கீழ் உத்தியோகம் பார்த்துவந்த மற்றவன் மகா கெட்டிக்காரன். 3000 மனிதர்களின் பெயரும், விலாசமும், அவரவர் வீட்டில் எவ்வளவு பால் ஊற்றுவதென்பதும் அவனுக்குக் குருட்டுப்பாடம்.

பார்தோல்ட் நைபூர் என்ற ஜெர்மன் சரித்திர அறிஞர் சிறுவயதில் 'அக்கௌண்டெட்' ஆக இருக்கையில், ஒரு வரவுசெலவுக் கணக்குப்புத்தகம் அங்கு ஏற்பட்ட ஒரு தீ விபத்தின்போது எரிந்து சாம்பலாகி விட்டது. தன் ஞாபகசக்தியைக்கொண்டு அவர் அதை மறுபடியும் எழுதி விட்டாராம்!

அமெரிக்காவில் போலீஸ் உத்தியோகஸ்தராகச் சேருவதற்கு முன் ஒரு பரீக்ஷை நடத்துகிறார்கள். மோட்டாரும் ட்ராமும் மோதிக்கொள்வது, மோட்டார் மனிதன் மேல் ஏறிவிடுவது, வீடு தீப்பற்றிஎரிவது,இவைபோன்ற பல கலவரங்களைக்காட்டும் படம் ஒன்றை மூன்றுநிமிஷம் அவர்களிடம் பார்க்கக் கொடுக்கிறார்கள். அப்புறம், 'மோதிக்கொண்ட காரின் நம்பர் என்ன? எந்தத் தெரு? கார் ஏறி இறந்த மனிதன் என்ன உடை உடுத்தியிருந்தான்?' என்பன போன்ற பல கேள்விகள் கேட்கிறார்கள். அவற்றிற்குப் பதில் சரியாகக் கூறிவிட்டால் வேலைக்கு எடுத்துக்கொள்கிறார்கள் அதிகாரிகள்.

நமது ஞாபகசக்தியைக் கண்டே நாம் சிலசமயம் அதிசயிக்கலாம். தினமும் நாம் பார்க்கும் இடத்தில் இன்ன மூலையில் இந்த அடையாளம் இருக்கிறது என்றெல்லாம் ஒன்றுவிடாமல் சொல்லி, சித்திரம் எழுதும் திறமை யிருப்பின் எழுதியும் காட்டிவிடலாம்.

ஆறு ச்லோகங்களை நெட்டுருப் பண்ணவேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது தனித்தனியாகவோ, இரண்டு மூன்றாகவோ, உருப்போடுவது பிசகு. மொத்த ச்லோகங்களும் மனதில் பதியும்வரை படிக்கவேண்டும். ஒரே மூச்சில் மூளையைக் குழப்பிக்கொள்ளலாகாது. அப்படிச் செய்தால் சீக்கிரம் மறந்துவிடக்கூடும். டாக்டர் பிங்கெல்ஷ்டைனின் அபாரசக்திக்குக் காரணம் இதுவேயாகும்.

—பாபுலர் ஸையன்ஸ்.

---




## நீலகேசி

[சமய திவாகர வாமன முனிவர் மணிப்பிரவாள நடையில் எழுதிய உரையோடும், சிற்சில குறிப்புக்களோடும், இப்புத்தகம் நன்றாக அச்சிடப் பட்டிருக்கிறது. விலை: ரூபாய் ஐந்து. கிடைக்குமிடம்: சாது பிரஸ், இராயப் பேட்டை, சென்னை.]

பாஞ்சால நாட்டின் தலைநகராகிய புண்டரவர்த்தன மென்னும் நகரத்திலே சமுத்திரசாரன் என்னும் மன்னன் அரசுபுரிந்துவந்தான். அந்நகருக்கு வெளிப்புறத்திலே பலாலையம் என்னும் பெயருள்ள பிணம்படு பெருங்காடு ஒன்றிருந்தது. அதிலே ஓங்கியுயர்ந்த மூங்கிலும், வாகையும், இண்டங் கொடியும், ஈங்கையும் ஒன்றோடொன்று நெருங்கிப் பின்னி வளர்ந்துகிடந்தன. குழிந்து ஆழ்ந்துகிடக்கும் விழிகளையுடைய பேய்களும், கோட்டான்களும் கூச்சலிட்டுக் கத்துவதினால், மனிதர் யாவரும் அவ்விடம் செல்ல அஞ்சினார்கள். இரவிலும் பகலிலும் அங்கே உண்டான ஒலியானது கடலின் ஒலியைப் போன்றிருந்தது. பயங்கரமான அவ்விடத்திலே பிடாரியின் கோயில் ஒன்று இருந்தது. அந்தக் கோயிலின் பக்கத்திலே முனிச்சந்திரன் என்னும் முனிவன் ஒருவன் தியானம் செய்துகொண்டிருந்தான். அவன் பொறுமை மிக்கவன்; திறமையும் மிக்கவன். ஓடும், மணியும் ஒன்றாக மதிக்கும் இயல்பினன்.

அந்தப் பிடாரிகோயிலிலே ஆடுகளைப் பலியிடும்பொருட்டு அந்நகரத்து ஜனங்கள் வந்தார்கள். அவர்களைக்கண்ட முனிச்சந்திரன் அவர்களுக்கு அஹிம்ஸா தர்மத்தை உபதேசித்து நற்புத்தி கூறினான். அவர்கள் மனம் கசிந்து ஆடுகளைப் பலியிடாமல் திரும்பினர். உணவை இழந்த பேய்கள் பிடாரியுடன் சென்று நீலகேசி என்னும் பெருந்தெய்வத்தினிடத்தே முறையிட்டன. அந்தத் தென்திசைத் தெய்வப்பெண் கோபங்கொண்டு முனிச்சந்திரனை வந்து எதிர்த்துப் பலவகையாக மருட்டினாள்.[1] அவன்

---

1 கல்வி னாற்கடுங் கனலினுங் கடுகென வெடிக்கும்
வில்லின் வாய்ப்பெய்த விளங்குவெண் பகழிகள் விடுக்கும்
மல்லி னாறசென்று மறித்திடு வேனென நெறிக்கும்
பல்லி னாற்பல பிணங்களி னிணங்களைப் பகிரும் [53]

சிந்தைகலங்காமல் இருக்கக்கண்டு, அவனைச் சூழ்ச்சியால் வெல்லும்பொருட்டு அந்நாட்டரசனுடைய புத்திரியாகிய காமலேகை என்பாளைப்போல் உருவெடுத்துக்கொண்டு அவனைவந்து வணங்குவதுபோல் பாவித்தாள். அவள் கொண்ட வடிவமானது அழகுமிக்கதாய், அணிகள் பூண்டதாய், மிகவும் வியக்கத்தக்கதாயிருந்தது. ஆயினும், தன்னுடைய தெள்ளிய அறிவினால் முனிவன் அவளைக் காளி என்று எளிதில் உணர்ந்துகொண்டான். ஆதலால் அவளுடைய மாயவலையில் அவன் விழவில்லை. அதற்குமாறாக, அவள் அவனது சிறந்த குணங்களைக்கண்டு, அவற்றிலே ஈடுபட்டு, அவனை வணங்கி அவனிடம் உபதேசம் பெற்றாள்.[2] அதன் பிறகு அம்முனிவனைத் தொழுது, துதித்துப் பாடினாள்.[3] அவனிடம் விடைபெற்று, இனிமேற் செய்யவேண்டியது என்னவென்று கேட்க, உன்னுடைய தீமைகள் கெடும்பொருட்டு ஜைன நெறியைத் தெளிவாகத் தெரிந்து உலகத்தாரிடைப் பரவச்செய்வாயாக வென்று உத்தரவிட்டான்.

அந்த ஆணையைத் தலைமேற்கொண்ட நீலகேசி ஊரூராகச் சென்று, ஆங்காங்குள்ள வேற்றுமத குருக்களையும் பெரியார்களையும் கண்டு, அவர்களோடு வாதம்புரிந்து, அவர்கள் அனைவரையும்வென்று, தன் மதத்தை நிலைநிறுத்தினாள்.

முதலாவது, அவள் தென்பாஞ்சால நாட்டின் தலைநகராகிய காம்பிலிக்குச் சென்றாள். அங்கே குண்டலகேசி என்னும் பௌத்த மதத்தினள் ஒருத்தி நாவற்கிளையொன்று நட்டிருப்பதைக் கண்டு, அவளை வாதத்துக்கு அழைத்து, அவளோடு தருக்கித்து, வென்றாள். உடனே அந்நகரத்து மக்கள் 'வட்டிகொள் பறைகொட்டி வழுவுரை பலசொல்லி வாரலென்று பெட்டன பல செய்து', தோற்றுப்போன குண்டலகேசியை அந்நகர்வாயிலைவிட்டுத் துரத்திவிட்டார்கள்.

பிறகு, அவள் உஞ்சைமாநகருக்குப் (உஜ்ஜயினிக்குப்) போனாள். அந்நகரிலே அருக்கசந்திரன் என்றவன், புத்தநூல்களை நன்கு கற்றுணர்ந்து, புத்ததருமங்களை உபதேசம் செய்துகொண்டிருந்தான். வாதத்திற் புலி போன்றவனான அவனையும் வென்றாள்.

அதன்பிறகு, நீலகேசியானவள் பத்மாபுரம் என்னும் நகரத்துக்குச் சென்று, அங்கே தருமோபதேசம் செய்துகொண்டிருந்த மொக்கலனை வென்றாள். ஸ்ரீ புத்ததேவனது முக்கியமான சிஷ்யர்களுள் மொக்கலன் ஒருவன். அவனோடு அஹிம்ஸையைப்பற்றி வாதாடும்போது, 'செடிகளுக்கு உயிர் உண்டா? தொட்டால் சுருங்குகின்றனவே. அவை உறங்குகின்றனவா? இலைகள் கூம்புகின்றனவே' என்னும் விஷயங்கள் தருக்கிக்கப்பட்டன.

---

[2] அறவிய மனத்தினை யாகி யலங்கழித் தொழிலொழிந் தடங்கி
உறவிபை யோம்பினை யிருவென்றுயர்தவ னுரைத்தலு மிருந்தான் [74]

[3] அல்லற் பிறவி யகன்றோய்நீ யாசை வெவ்வே றறுத்தோய்நீ
வெல்லற்கரிய வனங்கனைமெய் வெண்ணீறாக வெகுண்டோய்நீ
கொல்லக்கருதி வந்தேனைக் குணங்களாலே வணங்குவித்த
சொல்லற்கரிய பெரியோய் நின்றோமில்பாதந் தொழுவல்யான் [138]

பிறகு, அவள் புத்ததேவன் வசித்துவந்த கபிலபுரத்துக்குச் சென்று தத்துவோபதேசம் செய்துகொண்டிருந்த அந்தத் தேவனை எதிர்த்து, 'பித்தர் போல் பிதற்றினீர்' என்று சொல்லி வழக்குக் கிழுத்தாள். நடந்த வாதத்திலே 'கொல்லுவதுதான் பாவமா? கொலை என்றால் என்ன?'[1] என்னும் கேள்விகள் ஆராயப்பட்டன. முடிவில் புத்ததேவனும் தோற்றுப் போனான்.

பிறகு, நீலகேசி ஆகாயவழியாகச் சென்று தேவனைப் பாடிக்கொண்டே குக்குடமா நகருக்கு அருகாமையிலுள்ள சமதண்டம் என்னும் ஊரை அடைந்தாள். அங்கே பூரணன் என்ற பெரியோன் ஒருவன் ஆசீவகர்களுக்கு உபதேசம் செய்துகொண்டிருந்தான். அவர்களுக்கு இறை மற்கலி. பூரணனையும் வாதத்தில் நீலகேசி வென்றாள். பிறகு, அவள் அத்தினபுரத்துக்குச் சென்று, அங்கே கொடியெடுத்து அறைகூறியிருந்த சாங்கியனாகிய பராசரன் என்பவனைக் கண்டாள். நீலகேசி அவனையும் வழக்கில் வென்றாள்.

பிறகு, அவள் லோகஜித் என்பவனுடைய ஆச்சிரமத்துக்குப் போனாள். அவன் கணாதனைப்போன்ற பெருமை யுடையவன். வைசேஷிக மார்க்கத்தைச் சேர்ந்தவன். அவனோடு வாதம்செய்து அவனையும் வென்றாள்.

பிறகு, பலகாதம் கடந்து, காகந்தி என்னும் நகரையடைந்தாள். அங்கே வேதம், வேதாங்கம், வித்தைகள், ஆகியவற்றை உபதேசித்து வந்த பூதிகன் என்னும்அந்தணன் ஒருவனுடைய அத்தியயனசாலைக்குச் சென்றாள். யாகத்தைப்பற்றி விரிவாக வழக்குப் பேசினாள். வேதத்தை நிந்தித்தாள். பூதிகனும் தோற்றேனென்று ஒப்புக்கொண்டான்.

பிறகு அவள் மதனசித்தனென்னும் அரசனுடைய சபையிலே பிசாசகன் என்னும் பூதவாதி ஒருவனோடு வழக்குப் பேசினாள். பிணிகொள் மூஞ்சிப் பிசாசகனும் தோல்வியுற்றான்.

இதுதான் நீலகேசிக் கதை.

இது ஒரு ஜைன நூல்; இதை எழுதியவரின் பெயரும் ஊரும் தெரியவில்லை. அவர் இன்னகாலத்தில் இருந்தவர் என்பதும் தெரியவில்லை.

நீலகேசி என்பது ஐஞ்சிறுகாப்பியங்களுள் ஒன்றாகவும், அவற்றுள் மற்றொன்றான குண்டலகேசி என்னும் பௌத்த நூலுக்கு மறுப்பாக எழுதப்பட்ட நூலாகவும் கருதப்படுகிறது.

இந்நூல் இதுவரை அச்சாகவில்லை. குண்டலகேசி அழிந்து போனதுபோல் இதுவும் போய்விடுமோ என்றஞ்சிய புரொபசர் சக்கரவர்த்தி நயினாரவர்கள் தமக்குக் கிடைத்த நான்கு பிரதிகளை வைத்துக்கொண்டு இதைப் பதிப்பித்திருக்கிறார்கள். இவற்றுள் இரண்டு மீதி இரண்டின் பிரதிகளாகத் தோன்றுகின்றன வென்றும், ஆதலால்

---

[1]ஒன்றி நின்ற வுயிரை வுயிரிது
வென்று சிந்தித் தழிப்ப னெனவெண்ணி
நன்றி யிஃறெழி றேற்ற நவையினாற்
கொன்றதே கொலை யென்றைந்திற் கூறினாய் [541]

தமக்குக் கிடைத்துள்ள தனிப்பிரதிகள் இரண்டென்றே கருதவேண்டுமென்றும், இவற்றாலும் பிற காரணங்களாலும் பிழைகள் நேர்ந்திருக்கக்கூடும் என்றும், பதிப்பாசிரியர் கூறுகிறார். 5-ஆம் பாட்டில் 'நாப்பண்ணி' என்றிருப்பது 'நாப்பணின்' என்றிருக்கலாமோ வென்று தோன்றுகிறது.

இப்புத்தகத்துக்கு ஆங்கிலத்தில் ஒரு முகவுரையைப் பதிப்பாசிரியர் எழுதியிருக்கிறார். நூலாசிரியருடைய காலம், உரையாசிரியருடைய காலம், கதாநாயகியின் வரலாறு, கதையின் நோக்கம், நூலைப் பற்றிய குறிப்பு, நூலில் உள்ள சமய உண்மைகள் காணக்கிடக்கும் புத்தமத விஷயங்களைப் பற்றிய விளக்கம், நூலில் கூறப்பட்ட ஜாதகக் கதைகள், கதைச் சுருக்கம், முதலியவற்றை இம் முகவுரையிலே காணலாம். ஆங்கிலம் படித்தவர்கள் இந்நூலைப் படித்துத் தெரிந்துகொள்ளுவதற்கு இம்முகவுரை மிகவும் சௌகரியமாக இருக்கிறது.

இந் நூலாசிரியரின் காலமானது கி. பி. முதலாவது நூற்றாண்டாக இருக்கலாமென்றும், ஆனால் தீர்மானமாகச் சொல்லுவதற்கில்லை யென்றும் பதிப்பாசிரியர் கூறுகிறார். அவர் சொல்லுவதாவது:—இந்நூல் தொல்காப்பியம், நாலடியார், குறள் இம் மூன்றுக்கும் பிற்பட்டது. ஆதலால் இது முதலாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாயிருக்க முடியாது. இதிலே ஆறாவது சருக்கத்திலே ஆஜீவக வாதத்தை விரிவாகக் கூறியிருப்பதால் அந்த வாதம் பிரபலமாயிருந்த காலத்தில் இந்நூல் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். அசோகனுடைய சாஸனங்களிலும், மணிமேகலையிலும் அம்மதம் கூறப்படுகிறது. ஆஜீவக வாதிகள் குக்குடநகருக்கு அருகாமையில் சமதண்டம் என்னும் ஊரிலே இருந்தார்கள் என்று நூல் கூறுகிறது. குக்குடநகரம் என்பது உறையூர். ஆனால் தேவாரத்திலே ஆஜீவகர்களைப்பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. ஆகையால் அக்காலத்துக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பேனும் அவர்களுடைய மதம் அழிந்து போயிருக்கவேண்டும். சங்கரர், ராமானுஜர் முதலிய பெரியாரின் கொள்கைகளை இந்நூல் எடுத்து ஆக்ஷேபிக்கவில்லை. ஆகையால் இந்நூல் ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதா யிருக்க முடியாது. 5-ஆம் பாட்டில், 'தேவன் உரைப்பத் தெளிந்தேன்' என்று நூலாசிரியர் சொல்லுகிறார். 'தேவன்' என்றால் குறளாசிரியர் ஒருவரையே குறிக்கும். ஆதலால் நீலகேசியின் ஆசிரியர் குறளாசிரியரிடத்திலே நேரில் உபதேசம் பெற்றவராக இருத்தல் வேண்டும். ஆகையால் அவர் முதல் நூற்றாண்டிலுள்ளவராகத் தோன்றுகிறது—இதுதான் பதிப்பாசிரியருடைய அபிப்பிராயம்.

இக்காரணங்கள் சற்று வலிந்து கொள்ளப்பட்டனவாகத் தோன்றுகிறது. ஏனென்றால் 'தேவர்' என்பது திருத்தக்க தேவரையும் (சிந்தாமணி 205, 247, 250 பக்கங்கள்) மற்ற ஜைனப் பெரியார்களையும் குறிக்கும் சொல்லாக உள்ளது. ஆஜீவக வாதத்தைப் பற்றிச் சிவஞானசித்தியாரிலும் (15-ஆம் நூற்றாண்டு) கூறப்பட்டிருக்கிறது. இதைப் பதிப்பாசிரியரே காட்டுகிறார். குக்குடநகர் என்பது தென்னாட்டிலுள்ள உறையூர் என்பதற்கு ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. நீலகேசி சென்ற மார்க்கத்தைப்

பார்த்தால், இது வடநாட்டிலுள்ள ஊர் ஒன்றாக இருக்கலாம் என்றே தோன்றுகிறது. அதனால் இவற்றை ஒட்டிய கால ஆராய்ச்சிக்கு அவ்வளவு பலம் கிடையாமற் போய்விடுகிறது.

நூலாசிரியரின் காலத்தைப்பற்றி ஒன்றுமட்டிலும் நிச்சயமாகக் கூறலாம். யாப்பருங்கல விருத்தியில் இந்நூல் கூறப்படுவதால் அதன் காலமாகிய பத்தாம் நூற்றாண்டுக்கு இவ்வாசிரியர் முற்பட்டவர்; வேறொன்றும் நிச்சயமில்லை.

பிறமதக் கொள்கைகளைக் கண்டனம் செய்து ஜைன மதக் கொள்கைகளை நிலை நிறுத்துவது இந்நூலின் நோக்கம். இது கொல்லாமையை மிகவும் அழுத்தமாக வற்புறுத்துகிறது. கொலையின் அங்கங்கள் இன்னவை என்று சொல்லும் ஒரு செய்யுள் சட்டநூல் கூறுவதுபோல் இருக்கிறது.

(1) உயிருள்ள பிராணி ஒன்று வேண்டும். (2) அது உயிர் உள்ளது என்பது கொல்வோனுக்குத் தெரிந்திருத்தல் வேண்டும். (3) அவ்வுயிரைக் கொல்வேன் என்ற எண்ணம் வேண்டும். (4) கொலைத் தொழில் வேண்டும். (5) கொலையுண்ட உயிர் சாதல் வேண்டும் [541-ஆம் செய்யுளைப் பார்க்கவும்].

நூலிலே நயமான இடங்களும், அழகான சொற்றொடர்களும் காணப்படுகின்றன. சமயக் கோட்பாடுகளைப் பற்றி வழக்காடுகிற நூலாதலால் சமயத்திலும் வழக்கிலும் பற்றுள்ளார்க்கு இந்நூல் சுவையாக இருக்கும்.

பெ. நா. அ.

---

Sec 299. Whoever causes death, by doing an act with the intention of causing death, or with the intention of causing such bodily injury as is likely to cause death, or with the knowledge that he is likely by such act to cause death, commits the offence of culpable homicide.

Sec 300. Except in the cases hereinafter excepted, culpable homicide is murder, if the act by which the death is caused is done with the intention of causing death, or.........[*The Indian Penal Code.*]




# மாணாக்கர் விளையாட்டுக்கள்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

## 4

### பாடஞ்சொல்லாத பாட்டு

கும்பகோணம் காலேஜில் நான் வேலையை ஒப்புக்கொண்ட இரண்டு வருஷங்களுக்குப் பின் பி.ஏ. பரீக்ஷைக்குப் பிரபோத சந்திரோதயமென்னும் நூலிலிருந்து ஒரு பகுதி பாடமாக வந்தது. அகலிகையை விரும்பிய தோஷத்தால் இந்திரனுடைய தேக முழுவதும் விகாரமடைந்ததென்ற ஒரு செய்தி அதில் சொல்லப் பட்டுள்ளது. இச்செய்தி ஏனைய நூல்களிற் சொல்லப்பட்டதற்கு மாறானது. அந்தச் செய்யுள் மாணாக்கர்களுக்குப் பொருளை விளக்கிப் பாடஞ்சொல்லத் தக்கதன்று. நான் பாடஞ்சொல்லி வருகையில் அச்செய்யுளுக்கு மட்டும் பொருள் சொல்லாமல் மற்றச் செய்யுட்களுக்குப் பொருள் சொன்னேன்; அன்றியும், "இந்தச் செய்யுளை நீங்கள் கவனிக்கவேண்டாம். இதில் அருவருப்பான செய்தியொன்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிற் கேள்வி வாராது" என்றும் சொன்னேன். பாடமாக வைப்பதற்கே தகுதியில்லாத அச்செய்யுளில் யாரும் கேள்வி கேளாரென்பது என் எண்ணம்.

அக்காலத்தில் பி.ஏ. பரீக்ஷையானது சென்னையில் மட்டும் நடந்துவந்தது. கும்பகோணம் காலேஜ் பிள்ளைகள் அவ்வருஷம் சென்னைக்குச் சென்று பரீக்ஷையில் விடை யெழுதிவிட்டு வந்தார்கள். அவர்களுள் ஒருவர் தமிழ்ப் பரீக்ஷை முடிந்தவுடன் சென்னையிலிருந்தே தபால் மூலம் தமிழ் வினாப்பத்திரத்தை எனக்கு அனுப்பினார். நான் அதைப் பார்த்தேன். எந்தச் செய்யுளுக்கு நான் பொருள் சொல்லாமல் விட்டுவிட்டேனோ அதற்குப் பொரு

ளெழுதும்படி ஒரு கேள்வியும் வேறு சில சிறு கேள்விகளும் அதில் இருந்தன. அப்போது என்னுடைய மனநிலை இன்னபடி யிருந்த தென்பதை இங்கே எழுதுதல் இயலாது. நான் வேலைக்கு வந்து சில வருஷங்களே ஆகியிருந்தன; 'நம்மைப் பிள்ளைகளெல்லாம் நன்றாக வைதிருப்பார்கள்; நாம் செய்தது பெரும்பிழை' என்று எண்ணித் தவித்தேன்; 'இதை அறிந்தால் பிரின்ஸிபாலாகிய ராயரவர்கள் என்ன எண்ணுவாரோ!' என்றும் பயந்தேன்.

பரீக்ஷையானபின், மாணாக்கர்கள் கும்பகோணம் வந்து சேர்ந் தனர். வந்த தினத்திலே அவர்களுள் பத்துப்பேர்கள் சேர்ந்து என் னிடம் வந்தார்கள். அவர்கள் வருதலைநோக்கிய நான், 'இவர்கள் நம்மிடம் சண்டைபோடத்தான் வருகிறார்கள்' என்று நிச்சயம் செய்துகொண்டேன். செய்தது செய்தாகிவிட்டது; அப்பால் அதை எப்படி மாற்றுவது!

அவர்கள் அருகில் வந்தவுடன் நான் மிக்க வருத்தத்தோடு, "நான் உங்கள் விஷயத்தில் துரோகம் செய்துவிட்டேன். அந்தச் செய்யுள் அருவருப்பான கருத்தையுடையதாக இருந்தாலும் பொருள் சொல்லியிருக்கவேண்டியது என் கடமை. என்னுடைய பொல்லாத வேளையினால் இப்படி வந்து சேர்ந்தது" என்றேன்.

அம்மாணாக்கர்கள் முகமலர்ச்சியோடு, "நீங்கள் சிறிதும் கவலைப்படவேண்டாம். வினாப்பத்திரத்தை நீங்கள் கண்டவுடன் வருத்தத்தையடைந்து கவலையோடிருப்பீர்களென்றெண்ணினோம்; உங்கள் கவலையைப் போக்குவதற்காகவே நாங்கள் இவ்வளவு அவசரமாக உங்களிடம் வந்தோம். அந்தச் செய்யுளை நீங்கள் பாடஞ்சொல்லவில்லை யென்ற குறையே எங்களுக்கு இல்லை. மற்றக் கேள்விகளைக் காட்டிலும் இந்தக் கேள்விக்கே நாங்கள் நன்றாக விடையெழுதி யிருக்கிறோம்" என்றார்கள்.

நான், "உங்களுக்கு அந்தச் செய்யுளின் பொருள் எவ்வாறு தெரிந்தது?" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

**மாணாக்கர்கள்:** நீங்கள் அந்தப் பாட்டிற்கு அர்த்தம் சொல் லாமல் விட்டமையால், அதில் ஏதோ விசேஷம் இருக்குமென்று எங்களுக்குத் தோன்றிவிட்டது. நாங்கள் எல்லோரும் ஒருங்கு சேர்ந்தோம். அகராதிகளை யெல்லாம் புரட்டிப் புரட்டி வார்த்தை களுக்கு அர்த்தம் தெரிந்துகொண்டோம். வடமொழி வித்து வான்களைக் கேட்டு அதிலுள்ள வரலாற்றைத் தெளிவாக உணர்ந்துகொண்டோம். சிறிதேனும் சந்தேகமே இல்லை. இந்தக்

கேள்விக்கு எங்களைப்போல ஒருவரும் செவ்வையாக விடை எழுதவில்லை.

**நான்:** அப்படியா! ஆனாலும் நான் சொல்லாமலிருந்தது பிழைதானே?

**மாணுக்கர்கள்:** நீங்கள் சொல்லாமல் இருந்ததனாலேதான் அதில் எங்களுக்கு அதிக ஞாபகமும் கவனமும் உண்டாயின. நீங்கள் பிழை செய்ததாக எண்ணவேண்டாம்.

'இந்த மட்டில் நம்மைக் கடவுள் காப்பாற்றினாரே!' என்று எண்ணி ஆறுதலடைந்தேன்.

## 5

## ஆஜானுபாகு

கம்பராமாயணப்பகுதி ஒன்றை ஒரு சமயம் பாடஞ்சொல்லி வந்தேன். அதிலுள்ள ஒரு செய்யுளில் இராமன், 'முழங்காலளவும் நீண்ட கைகளை உடையவன்' என்று கூறப்பட்டுள்ளார். அப்பொழுது, "சிறந்த புருஷ லக்ஷணங்களுள் ஒன்று இது. இராமரைப்போலவே வேறு சிலரிடத்திலும் இந்த லக்ஷணம் அமைந்திருந்ததாகச் சொல்வார்கள். இங்ஙனம் முழங்காலளவும் நீண்ட கைகளையுடையவரை ஆஜானுபாகு வென்று வடமொழியிற் சொல்வது வழக்கம். அவர்கள் கல்வி, வீரம், செல்வம் முதலியவற்றிற் சிறந்தவர்களாக இருப்பார்கள்; எளிதிற் பிறர் மனத்தைக் கவரும் சக்தி அவர்களுக்கு இருக்கும்" என்று சொல்லி விளக்கி வேறு சில செய்யுட்களிலிருந்து ஆதாரங்களை எடுத்துக் காட்டினேன்.

பாடத்தில் விசேஷமான செய்திகளை நான் சொல்லும் போது, மாணுக்கர்கள் அவற்றை யெல்லாம் குறித்துக்கொள்ளுகிறார்களா வென்று கவனிப்பது என் வழக்கம். மேற்கூறிய விஷயத்தைச் சொல்லிவிட்டு, அவ்வாறு வகுப்புமுழுவதும் பார்த்தேன். நெருக்கமாகப் பிள்ளைகள் உட்கார்ந்திருந்த ஒருகோடியிலுள்ள ஒருவர் மெல்ல எழுந்துநின்று தம் கையைக் கீழே நீட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். நான் சொன்ன லக்ஷணம் தம்மிடம் அமைந்திருக்கிறதாவென்று பார்த்துத் தெரிந்துகொள்ளவேண்டுமென்பது அவரது ஆசை. அதைக் கவனித்த நான், "சரியாக இருக்கிறதா, அப்பா?" என்று கேட்டேன். அவர் வெட்கமுற்று அப்படியே உட்கார்ந்துவிட்டார். பிள்ளைகள் யாவரும் சிரித்தார்கள். அது முதல் அந்த மாணுக்கரை யாவரும் ஆஜானுபாகுவென்றே அழைக்கலாயினர்.

## ௬

## தேனுஸ்வாஸபுரம்

ஒவ்வொரு வருஷமும் நூதனமாக வந்து சேரும் மாணுக்கர்களுடைய ஊர், அவ்வூரிலிருந்த பெரியவர்கள், கோயில், அவ்வூர் ஸம்பந்தமான சரித்திரம், முதலிய விஷயங்களை அவர்களிடம் நான் விசாரித்துத் தெரிந்துகொள்வேன். பிள்ளைகளுக்கும் தங்கள் ஊர்ப் பெருமைகளைப்பற்றிச் சொல்லிக்கொள்வதில் விருப்பம் இருக்கும். அவ்வாறு வினவித் தெரிந்துகொண்டவற்றிற் பல செய்திகள் மிகவும் அருமையானவை.

ஒருமுறை ஒரு மாணுக்கரைப் பார்த்து, "உன் ஊர் எது?" என்று கேட்டேன். "அவர், தேனுஸ்வாஸபுரம்" என்றார். அது காறும் அத்தகைய ஊரொன்றை நான் கேட்டிராமையால், "அந்த ஊர் எங்கே இருக்கிறது?" என்று வினவினேன். "கும்பகோணம் தாலூகாவில்தான்" என்ருர் அவர்.

கும்பகோணம் தாலூகாவிலுள்ள ஊர்களிற் பெரும்பாலன எனக்குத் தெரிந்தவை. ஆனல் தேனுஸ்வாஸபுரத்தைப்பற்றி நான் கேள்விப்பட்டது கூட இல்லை. ஆகையால் மறுபடியும், "அப்படியா! எனக்குத் தெரியவில்லையே; எந்த ஊருக்கு அருகில் இருக்கிறது அது?" என்று கேட்டேன்.

"ஆவூருக்கு அருகில்" என்று கூறினர் அவர்.

"ஆவூருக்கு அருகிலா? ஆவூருக்கு அருகில் இப்படி ஓரூர் இருப்பது இதுவரையில் எனக்குத் தெரியவில்லையே! ஆவூரும் அதற்கு அருகிலுள்ள ஊர்களும் எனக்கு நன்ருகத் தெரியுமே" என்றேன்.

அவர், "ஊற்றுக்காடுதான் அது" என்ருர்.

ஏதோ புதிய ஊரென்று நினைக்கும்படி அம்மாணுக்கர் சொல்லிவந்தமையால் நான் மயங்கினேன்; "ஊற்றுக்காடா? அதற்கு அந்தப் பேர் எப்படி வந்தது?" என்று விசாரித்தேன்.

"அருகில் உள்ள ஆவூரில் காமதேனு சிவபெருமானைப் பூசை செய்தது; செய்துவிட்டு எங்கள் ஊருக்கு வரும்போது மூச்சு விட்டது; அதனல் இதற்குத் தேனுஸ்வாஸபுரமென்ற பேர் வந்தது; அது தமிழில் மூச்சுக்காடென்று வழங்கிப் பிறகு ஊற்றுக்காடென்று ஆயிற்று" என்று அவர் வியாக்கியானம் செய்தார்.

வகுப்பிலுள்ள பிள்ளைகள் சிரித்தார்கள்; தேனுஸ்வாஸபுர வாஸி அவர்கள் சிரிப்பதைக்கேட்டு வெறுப்போடு அவர்களைப் பார்த்தார்.

"சந்தோஷம்! உங்கள் ஊர் மாகாத்மியம் எனக்கு இன்று தெரிந்தது. நீ முதலில் ஊற்றுக்காடென்று சொல்லியிருந்தால் இவ்வளவு சிரத்தையாக விசாரிக்கமாட்டேன். ஏதோ புதிய ஊரென்று தோற்றும்படி நீ சொல்லி மயங்கச் செய்தாய்; அதனால் இவ்வளவு விவரங்கள் தெரியவந்தன. ஆனாலும் நீ முதலிலே ஊற்றுக்காடென்று சொல்லியிருந்தால் நான் மயங்காமல் இருந்திருப்பேன். வழங்கும்பெயரை விட்டுவிட்டுப் புராணப்பெயரைச் சொல்லி வியாக்கியானம் செய்தாய்; இப்படிச் சொன்னதில் உன் நண்பர்களுக்கு ஒருகால் விருப்பமில்லாமல் இருக்கலாம்" என்றேன். நண்பர்களென்பது மற்ற மாணுக்கர்களையே. அவர்கள் மீண்டும் ஒருமுறை சிரித்தார்கள். அதுமுதல் அம்மாணுக்கருக்குத் தேனுஸ்வாஸபுரமென்ற புனைபெயர் வழங்கலாயிற்று.

## 7

## 'உரையாசிரியர் எழுதியிருக்கிறார்'

நாலடியார் பாடஞ்சொல்லிவந்தேன்; முதல்நாட் பாடத்தில் வழக்கம்போலக் கேள்விகேட்கும்போது ஒரு மாணுக்கர் ஒரு தொடருக்குச் சிறிதேனும் பொருத்தமில்லாத பொருளொன்றைச் சொன்னார். அதை நான் கேட்டு, "பொருத்தமில்லாதபடி அர்த்தம் சொல்லுகிறாயே, நான் சொன்னதைக் கவனித்துப் படித்துவரலாகாதா?" என்றேன்.

அவர், "நீங்கள் நேற்றுச் சொன்னது எனக்கு ஞாபகம் இல்லை; அதனால் உரையைப் படித்தேன்; உரையாசிரியர் இப்படித்தான் எழுதியிருக்கிறார்" என்றார்.

'உரையாசிரியர் இப்படித்தான் எழுதியிருக்கிறார்' என்ற போது அவர் கையினால் புத்தகத்தை வேகமாகச் சுட்டிக் கொண்டே உத்ஸாகத்தோடு பேசினார்; அந்த அபிநயம், 'உரையாசிரியரே எழுதியிருக்கிறபோது நீங்கள் எவ்வாறு பிழையென்று சொல்லலாம்?' என்ற கருத்தை வெளியிடுவதுபோல இருந்தது.

நான், "இப்படி யாரும் எழுத நியாயமில்லை. எழுதியிருந்தால் அதைக் கிழித்தெறிய வேண்டியதுதான். எங்கே அந்த உரையைக் கொண்டுவா, பார்க்கலாம்" என்றேன்.

அவர் கையில் ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு கம்பீரமாகவும் வேகமாகவும் என் மேஜைவரையில் நடந்துவந்தார். வகுப்பில் இருந்த பிள்ளைகளும் உரையாசிரியர் யாரென்பதை அறியவேண்டுமென்ற விருப்பத்தோடிருந்தனர்.

என் மேஜைவரையில் மிகவேகமாக வந்த அந்த மாணாக்கரோ, மேஜைக்கு வந்தவுடன் மெல்லக் குனிந்தார்; அவர் முகத்திலே கம்பீரம் இல்லை; ஏதோ ஒரு குற்றம் செய்தவன் மன்னிப்பை வேண்டும்போது இருக்கும் தோற்றம் அதில் உண்டாயிற்று; 'நான் படிக்கவில்லை; தெரியாமல் சொன்னேன். மன்னிக்கவேண்டும். உரையாசிரியர் எழுதியிருக்கிறாரென்றால் நீங்கள் பயந்துவிடுவீர்களென்று எண்ணி அவ்வளவு கம்பீரமாகச் சொன்னேன். இனிமேல் இப்படிச் செய்யமாட்டேன்" என்று பணிவாகக் கூறினார். "இனியாவது கவனமாகப் படி" என்று நான் உரைத்தேன். அப்பால் முகம் கவிழ்ந்துகொண்டே தம் இடத்திற்போய் அவர் உட்கார்ந்தார்.

## 8
## தேர்வலான்

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டத்திலுள்ள ஒரு செய்யுளில் சுமந்திரனைப்பற்றி, 'தேர்வலானினைய கூற' என்ற தொடர் வருகிறது. அதற்குப் பொருள் சொல்லும்போது 'தேர்வலான்' என்பதற்குத் தேரைச் செலுத்துதலில் வல்ல சுமந்திர னென்பது பொருள். சுமந்திரன் மந்திராலோசனை செய்வதற்குரிய மந்திரிகளுட் சிறந்தவனாதலின் ஆராய்ச்சியில் வல்லவனென்பதும் இங்கே பொருத்தமாக இருக்கிறது. தேர் என்பது தேர்தல் என்னும் பொருளைத்தந்து முதனிலைத் தொழிற்பெயராக நின்றது" என்றேன்.

இந்தப் பொருளை மாணாக்கர் யாவரும் கேட்டு மகிழ்ந்தார்கள். அவர்களுடைய அகமகிழ்ச்சியை முகமலர்ச்சி தெரிவித்தது; அவர்களுள், கோவிந்தராவ் என்ற ஒருவர் அந்தப் பொருள் மிகவும் பொருத்தமாக இருப்பதை யெண்ணி இன்புற்றார்; தாம் அடைந்த சந்தோஷ மிகுதியால், "ஐயா, இந்த அர்த்தம் மிகவும் நன்றாக இருக்கிறது!" என்று சொல்லிப் பாராட்டினார். அவ்வார்த்தைகள் அவருடைய மனங்கனிந்து வந்தனவாதலின் எனக்குத் திருப்தியை விளைவித்தன; "இவ்வளவு கவனித்து நீ கேட்பதைப்பற்றி எனக்கு மிக்க சந்தோஷம் உண்டாகிறது. நீ நல்ல நிலைக்கு வருவாய்" என்று சொன்னேன்.

இது நடந்து சற்றேறக்குறைய 15 வருஷங்கள் சென்ற பின், தஞ்சாவூரில் வந்திருந்த புதுக்கோட்டை ஜாகீர்தாராகிய ஸ்ரீமான் இராமசந்திரத் தொண்டைமானவர்கள் பங்களாவுக்கு அவரைப் பார்க்கும்பொருட்டு நானும் அந்நகரிற் பிரபல வக்கீலாக இருந்த கே. கல்யாணசுந்தரையரவர்களும் சென்றோம். நாங்கள் வந்திருப்பது தெரிந்தவுடன் தொண்டைமான் எங்களை நோக்கி

வந்து வரவேற்ருர்; அவரோடு வேருெருவரும் வந்து அமர்ந்தார். புதியவர் என்னை நோக்கி, "நமஸ்காரம்" என்று சொன்னுர். அவருடைய தோற்றப் பொலிவையும் உயர்ந்த உடைகளையும் காதில் இருந்த கடுக்கன் முதலியவற்றையும் கண்டபோது அவர் யாரோ மகாராஷ்டிர அரச பரம்பரையினராக இருக்கலாமென்று எண்ணினேன். அவர் யாரென்று என்னுடன் வந்த வக்கீலை விசாரித்தேன். "இவர் ஜாகீர்தாரவர்களின் அந்தரங்கக் காரிய தரிசி" என்ருர் அவர். நான் கேட்பதை அறிந்து அக்காரியதரிசியே, "நான் தங்கள் மாணுக்கன்" என்ருர். அப்போதிருந்த அவருடைய தோற்றப் பொலிவினுல் அவரை இன்னுரென்று தெரிந்து கொள்ள என்னுல் இயலவில்லை.

**நா**ன்: பேர் என்ன?

அவர்: கோவிந்த ராவ்.

**நா**ன்: தேர்வலானே?

அவர்: ஆமாம்!

எனக்கு அளவற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. அருகிலிருந்த வேறு இருவருக்கும் எங்கள் சம்பாஷணை விளங்கவில்லை. அப்போது நான் 15 வருஷங்களுக்கு முன் காலேஜில் நடந்ததைச் சொன்னேன்; "அடிக்கடி எனக்கு இவருடைய ஞாபகம் வரும்; அப்பொழுதே இவர் நல்ல புத்திசாலி என்றும், நல்ல நிலைக்கு வரக்கூடியவரென்றும் நான் கண்டுகொண்டேன். படித்தபொழுது இருந்த உருவத்தையே நான் மனக்கண்ணுல் பார்ப்பவனுதலின், இந்தத் தோற்றம் எனக்குப் புதிதாக இருந்தது. அதனுல் தெரிந்து கொள்ளவில்லை. சுமந்திரன் தேர்ச்சியில் வல்லவனுக இருந்ததுபோலவே இவரும் ஜாகீர்தாரவர்களுக்கு ஆலோசனை கூறுவதில் வல்லவராக இருப்பதனுல் இவரையும் தேர்வலானென்று சொல்லலாம்" என்றேன்.

கோவிந்த ராவ், "தாங்கள் என்னை நினைத்துக்கொண்டிருப்பது போல நானும் உங்களை நினைத்துக்கொண்டே இருக்கிறேன். அன்று தாங்கள் 'நீ நல்ல நிலைமைக்கு வருவாய்' என்று ஆசீர்வாதம் செய்ததன் பலனே இந்த ஸ்திதியில் நான் இருப்பது" என்று பழைய விசுவாசத்தோடே பேசியபோது என் மனம் சந்தோஷக்கடலில் முழுகியது.

### ௭

### 'எங்கள் ஊர், ஐயா'

வில்லிபுத்தூரார் பாரதப்பகுதியொன்றை எப். ஏ. வகுப்புக்கு ஒரு வருஷம் பாடம் சொல்லி வருகையில் திருக்

கோவலூரைப் பற்றிச் சொல்லும் சந்தர்ப்பம் நேர்ந்தது. அது புறநானூற்றை நான் பதிப்பித்துவந்த காலம்; ஆதலின் அந்நூலால் அவ்வூரைப் பற்றித் தெரிந்த விஷயங்களையும் வேறு சில செய்திகளையும் சொல்லத் தொடங்கினேன்: "திருக்கோவலூர் மிகவும் பழைய ஊர். சங்க காலத்தில் மலையமான் திருமுடிக்காரி யென்ற சிற்றரசன் ஒருவன் அங்கே இருந்து வந்தான். அவன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன். மகாவீரன். போரில் சேர சோழ பாண்டியர்களுள் யாருக்கு அவன் படைத் துணையாகச் செல்வானோ அவ்வரசனுக்கே வெற்றி உண்டாகும். திருக்கோவலூருக்கருகில் முள்ளூர்க்கானமென்ற காடொன்று இருந்தது. அதைப்பற்றிப் பழைய தமிழ் நூல்கள் மிகச் சிறப்பாகச் சொல்லுகின்றன. சங்கப் புலவர்களுட் சிறந்தவராகிய கபில ரென்பவர் தம்முடைய இறுதிக்காலத்தில் திருக்கோவலூருக்கு வந்து தங்கியிருந்தார். அன்றியும் அவ்வூர் ஒரு பெரிய ஸ்தலம். சிவபெருமானுக்குரிய அட்டவீரட்டங்களுள் ஒன்று. திருமால் திருப்பதிகளில் ஒன்றாகவும் அது விளங்குகின்றது. முதலாழ்வார்கள் மூவரும் அங்கே ஒருசமயத்தில் ஒருங்கிருந்து திருமாலை வழிபட்டார்கள்" என்று அவ்வூர்ப் பெருமையை ஒருவாறு கூறி நிறுத்தினேன்.

நிறுத்தினவுடன் இந்தச்செய்திகளைக் காதுகுளிரக் கேட்டுக் கொண்டிருந்த மாணாக்கர் ஒருவர் எழுந்து நின்றார். ஏதாவது சந்தேகம் இருக்கக் கூடுமென்று நான் எண்ணினேன்; "ஏன் நிற்கிறாய்?" என்றேன். அவர் மிகவும் பணிவாக, "அந்த ஊர் எங்கள் ஊர், ஐயா!" என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தார். அவருடைய முகத்தில் ஒரு பிரகாசம் அப்பொழுது காணப்பட்டது. ஞானிகளுக்கே தங்கள் தங்கள் ஊரினிடத்தில் அபிமானம் இருக்கும்போது அம்மாணாக்கருக்கு இருந்ததில் அதிசயம் ஒன்றுமில்லை. நான் திருக்கோவலூர்ப் பெருமையைச் சொல்லச் சொல்லத் தாம் அந்த ஊர்க்காரரென்பதை வெளியிட வேண்டுமென்ற ஆவல் சிறிது சிறிதாகப் பெருகி, நான் சொல்லி நிறுத்திய மறு கணத்திலேயே அதனை வெளியிட வைத்ததென் பதை உணர்ந்தேன்; "அப்படியா! மிக்க சந்தோஷம்! அந்த ஊருக்கு ஏற்றபடி நீ நல்ல புகழை அடையவேண்டும்" என்று அம்மாணாக்கரிடம் சொல்லிவிட்டு, மற்றவர்களையும் பார்த்து, "எல்லோருக்கும் இப்படியே தங்கள் தங்கள் ஊரினிடத்து அபிமானம் இருக்கவேண்டும்" என்று கூறி மேலே பாடத்தை நடத்தலானேன்.

## 10

### "கேள்வி முறை யில்லையா?"

விநோத ரஸமஞ்சரியில் ஒருபகுதி பாடமாக வந்திருந்தது. அதில் ஓரிடத்தில் முகம்மதிய அரசரொருவரைப் பற்றிக் கடுமை யான வரலாறு ஒன்று எழுதப்பட்டிருந்தது. அவர் கோவில்களை இடித்தாரென்றும், குடிகளைத் துன்புறுத்தினரென்றும், வேறு கொடுமைகளைப் புரிந்தாரென்றும் அதில் கூறப்பட்டிருந்தது. வகுப்பில் அந்தப் பகுதி நடக்கும்போது, மாணாக்கர்களுள் ஒரு முகம்மதியர் திடீரென்று எழுந்து நின்று, "இதற்கொன்றும் கேள்விமுறையில்லையா? இவ்வளவு அவதூருக அவ்வரசரைப் பற்றி எழுதியிருக்கிருர்களே!" என்ருர்.

அவர் மிகப்பணிவாகவும் அடக்கமாகவும் இருப்பவர். ஆயினும் தம்முடைய மதத்தினரைப்பற்றிக் குறைகூறியிருப்ப தைக் காண அவர் உள்ளம் பொறுக்கவில்லை. அவருக்கு உண் டான உணர்ச்சியின் மிகுதி, அது வகுப்பென்றும், பல பிள்ளை களும் உபாத்தியாயரும் இருக்குமிடமென்றும் நினையாமல் இந்த வார்த்தைகளைச் சொல்லச்செய்தது. அபாண்டமான பழி சுமத் தப்பட்ட ஒருவன் பெருங்கூட்டத்தின் நடுவில் முறையிடுவதைப் போல இருந்தது அவர் பேச்சின் தொனி. நான் அவரைநோக்கி, "இத்தகைய பாடங்கள் உங்களைப்போன்றவர்களுக்கு ஏற்றன வல்ல. எவ்வளவோ பொது விஷயங்கள் இருக்கையில், ஒரு வகுப்பார் மனத்தைப் புண்படுத்தும்படியுள்ள விஷயங்களைப் பாடமாக வைப்பது பெரும்பிழை. இந்த விஷயம் சரித்திரஸம்பந்த மானது. ஆதலால் இதிற் கூறப்பட்ட வரலாறு உண்மையா வென்பதை ஆராய்ச்சிக்காரர்கள் தேர்ந்து துணியவேண்டும். நீ இதைக்குறித்து வருந்தவேண்டாம். உன்னிடத்தில் யாவரும் பிரியமாக இருக்கும்படி நடந்துகொள். உண்மையில் ஒருவன் குற்றம்செய்தவனுக இருந்தால் அவனை யாவரும் குறைகூறுவது இயல்பே. அத்தகைய குற்றவாளி நம் சாதியினன், நம் சமயத்தா னென்பதற்காக அவனைக் குறைகூறுவதைப் பிழையாகக் கருதக் கூடாது. குற்றமுள்ளவனை உலகமே வெறுக்கும். நம் வீட்டு நெருப்பென்று நம் வஸ்திரத்துக்குள் வைத்துக்கொள்ளலாமா?" என்று ஒருவாறு ஆறுதல் கூறினேன்.

## 11

### கணபதி சுப்பிரமணியர்

ஒருசமயம் பி. ஏ. வகுப்பில் கணபதி ஐயர், சுப்பிரமணிய ஐயரென்ற இருவர் படித்துவந்தனர். இருவரும் சிறந்த புத்திமான்

கள்; ஒருவருக்கொருவர் நெருங்கிய நட்புடையவர். ஆயினும், வகுப்பில் ஒருவருக்கொருவர் மாறுபாடுடையவர்போல நடந்து வருவர். நாள்தோறும் ஒருவர்மீது ஒருவர் ஏதேனும் குறை கூறிக்கொண்டே யிருப்பர். பாடத்திலுள்ள விஷயத்தை ஒருவர் சொன்னால், அது பிழையென்று மற்றொருவர் சொல்லி வாதிப்பார். இங்ஙனம் நடந்துவந்ததை எவ்வாறேனும் குறைக்க வேண்டுமென்று எண்ணினேன்.

ஒருநாள் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் துறைமங்கலம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளைப்பற்றிப் பேச நேர்ந்தது. அவர் கற்பனைக் களஞ்சியமென்று சிறப்பிக்கப்படுவாரென்றும், சாதுரியமான செய்யுட்களைப் பாடும் வன்மையை யுடையவரென்றும் சொல்லிவிட்டு அவர் இயற்றிய செய்யுளொன்றைச் சொல்லிக் காட்ட எண்ணி, அதிலுள்ள விஷயத்தை முதலிலும் அப்பாற் செய்யுளையும் சொல்லலானேன்:—

“ஒருசமயம், சிவபெருமானும் உமாதேவியாரும் கைலாசத்தில் வீற்றிருக்கையில் அவர்களிடம் விநாயகர் அழுது கொண்டே வந்தார்; தம்முடைய தும்பிக்கையால் காதைத் தடவித் தடவிச் சிணுங்கினர். அவரைக்கண்ட சிவபிரான் ‘ஏனப்பா அழுகிறாய்?’ என்று கேட்டார். அவர், ‘சுப்பிரமணியன் என்காதில் அழுத்திக் கிள்ளிவிட்டான்!’ என்று சொல்லி விட்டு மேலும் மேலும் அழத்தொடங்கினர். உடனே சிவபெருமான் முருகக்கடவுளை வேகமாக அழைத்து, ‘நீ ஏன் இப்படிச் செய்தாய்?’ என்றுகேட்டார். முருகக்கடவுள், ‘அவன்மட்டும் என்முகத்தில் எத்தனைகண்கள் இருக்கின்றனவென்று எண்ணலாமோ?’ என்று கோபத்துடன் கூறினர். தந்தையார் விநாயகரைப் பார்த்து, ‘ஏன் அப்பா இப்படி வேடிக்கை பண்ணினாய்?’ என்று கேட்டார். அவர், ‘என் துதிக்கையைப் பிடித்திழுத்து முழம்போட்டு அளந்தால் நான் சும்மா இருப்பேனா?’ என்று சொன்னர். முருகக்கடவுள் அதைக் கேட்டுக் கடகட வென்று சிரித்துக்கொண்டு நின்றார். இந்தப் பிள்ளைகளின் விளையாட்டை விசாரிக்கத் தொடங்கினால் அதற்கொரு முடிவே யிராதென்று சிவபிரான் எண்ணி, உமாதேவியாரைப்பார்த்து, ‘உன் பிள்ளைகளின் லக்ஷணத்தைப் பார்!’ என்று சொன்னர். உடனே அத்தேவியார், அழுது கொண்டிருந்த விநாயகரை அழைத்து முதுகைத் தடவிக்கொடுத்து, ‘அவன் கிடக்கிறான் விஷமக்காரன்; நீஅழாதேயப்பா!’ என்று ஆறுதல் கூறினர். இந்த விஷயமே,

'அரனவ னிடத்திலே யைங்கரன் வந்துதான்
    ஐயவென் செவியை மிகவும்
அறுமுகன் கிள்ளின னென்றே சிணுங்கிடவும்
    அத்தன்வே லவனைநோக்கி
விரைவுடன் வினவவே யண்ணனென் சென்னியில்
    விளங்குகண் ணெண்ணினனென
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்துநீ யப்படி
    விகடமேன் செய்தாயென
மருவுமென் கைந்நீள முழமளந் தானென்ன
    மயிலவ னகைத்து நிற்க
மலையரைய னுதவவரு முமையவளை நோக்கிநின்
    மைந்தரைப் பாராயெனக்
கருதரிய கடலாடை யுலகுபல வண்டங்
    கருப்பமாய்ப் பெற்ற கன்னி
கணபதியை யருகழைத் தகமகிழ்வு கொண்டனள்
    களிப்புட னுமைக் காக்கவே'

என்ற பாட்டில் அமைந்திருக்கிறது. கணபதி சுப்பிரமணியர்களுக்கிடையில் விஷமம் நடப்பது ஸகஜம்போல இருக்கிறது. இந்த வகுப்பிலுள்ள இந்த இரண்டு பேரே அதற்குச் சாக்ஷி" என்று சொல்லிக்கொண்டே முற்கூறிய இருவரையும் சுட்டிக் காட்டினேன். பிள்ளைகளெல்லாம் கொல்லென்று சிரித்தார்கள். அதுமுதல் அவ்விருவரும் ஒருவர்மேல் ஒருவர் குறைகூறுவதை நிறுத்திவிட்டனர்.

# இலக்கியம்

## பொருளற்ற சண்டைகள்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

---

[இது நான் 1930-ஆம் வருஷத்தில் என்கூட சிறையிலிருந்தவர்களுக்குச் சோன்னது]

தமிழ்நாட்டில் ஓர் இயக்கம் பரவப் பார்க்கிறது. அதனல் ஒற்றுமைக்குக் கேடு. தமிழன்பும் தமிழ்க்கல்வியும் தமிழர்களுள் ஒற்றுமை யுண்டாக்க வேண்டியிருக்க, அதைக்கொண்டே பிரிவினை யுண்டாக்கச் சிலர் பார்க்கிறுர்கள். தமிழ்த்தாய் தன் குழந்தைகளை ஒன்றுபடுத்தத் தனக்குத் தந்த பிரசாதமாக சுப்ரமணிய பாரதியார் தன் கவிதையைக் கருதி பயன்படுத்தினர். இப்போது சிலர் தம் தமிழ்க் கல்வியைக்கொண்டு தமிழ் மக்களை இரு வகுப்பாகப் பிரித்து நாட்டைப் பாழாக்கப் பார்க்கிறுர்கள்.

தமிழ் நாகரிகம் வேறு ஆரிய நாகரிகம் வேறு என்றும், தமிழ் நாகரிகத்தை ஆரிய நாகரிகம் கெடுத்துவிட்டதாகவும், மறுபடி தமிழ் நாகரிகத்தை வாழ்வில் உயர்பதவிக்குக் கொண்டுவந்து நிறுத்துவது தமிழர் கடமையென்றும் இவர்கள் உபதேசித்து வருகிறுர்கள். இத்தகைய கொள்கைகளுக்கு மூலம் ஐரோப்பியர் சிலர் எழுதிய புத்தகங்களும் சொல்லிவந்த கற்பனைகளுமே. இந்தியாவிலுள்ள மக்கள் ஒரு ஜாதியாரல்ல, ஒரு நாகரிகம், ஒரு பாஷை, ஒரு பூர்வ சரித்திரம் கொண்டவர்களல்ல, எளிதில் அவர்களைப் பிரித்தாளலாம் என்பதே அவர்கள் ஆசையும் அவர்கள் எண்ணமுமாகி, அதை அனுசரித்தே அவர்களுடைய ஆராய்ச்சியும் கற்பனைகளும் நடைபெற்றன. அதைப் படித்துப் படித்து நம்மவர்களும் அவைகளில் நம்பிக்கையும் மோகமும் கொண்டு ஆரியதிராவிட வேற்றுமைகளை விடாமல் பிடித்துக்கொண்டிருக்கிறுர்கள்.

மிகப் பழைய தமிழ்நூல்களிலுங்கூட 'ஆரியர்' இன்று வணங்கும் தெய்வங்களையேதான் காண்கிறேம். அக்காலத்துத் தமிழர்

வேறு தெய்வங்களைக் கும்பிட்டதாகக் காணப்படவில்லை. நமக்குக் கிடைத்திருக்கும் தமிழ் நூல்களில் மிகத் தொன்மையானதென்று கருதப்படும் நூலிலும் வேதத்தில் சொல்லப்பட்ட இந்திரனைத் தமிழர் வணங்கியதாகப் படிக்கலாம். தமிழர்களும் அறம், பொருள், இன்பம், வீடு என்றே வாழ்க்கை நலன்களைப் பிரித்து வந்தார்கள். இவ்வாறே இன்னும் பல விஷயங்களும்.

வங்காளத்திலுள்ள மக்கள் தங்கள் நாட்டின் நாகரிகத்தை ஆராய்ச்சி செய்து, அதில் எப்பகுதி வங்காளத்திலேயே உண்டான புராதனப்பகுதி, எப்பகுதி வடமேற்கிலிருந்து ஆரியர் கொண்டுவந்தது என்று பிரித்து மகிழ்வதும் வெறுப்பதும் கிடையாது. தமிழராகிய நாம் மட்டும் ஏன் நம்முடைய வாழ்க்கைச் செல்வத்தைப் பிரித்து, எது நமது, எது வெளியிலிருந்து வந்தது என்று நோண்டியளப்பதில் மனம் செலுத்தவேண்டும்? ஐரோப்பிய வித்வான்கள் சிலரின் அறியாமையும் கற்பனைகளுமே இதற்குக் காரணம். அது பெரிய ஆபத்தாய் முடிந்திருக்கிறது. பழம் பொருளாராய்ச்சிக்காரர் சிலர் மேல்நாட்டிலிருந்து வந்து, எதைக் கண்டாலும் அதன் இரகசியத்தை யுணரவல்லோம் என்று இந்தியாவில் வழங்கும் புராணங்களை எல்லாம் ஆராயப் புகுந்தார்கள். இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் பார்த்தார்கள். "ஓஹோ! ஆரியர்களுக்குள் இருகூட்டத்தார் பெரிய கலகம் ஒருகாலத்தில் நடத்தினார்கள். அதுவே பாரதயுத்தம்; இராமாயணக்கதை ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் நடந்த பெரியதொரு யுத்தம்" என்றார்கள். அதை வைத்துக்கொண்டு ஆங்கிலப் பள்ளியில் படித்த நம் பண்டிதசிகாமணிகளும் ஆராய்ச்சி வேட்டை ஆரம்பித்தார்கள். சிறு வயதில் புகட்டிய கற்பனைகளை மனதைவிட்டு எளிதில் விலக்கமுடியாது; குழந்தை குடித்த தாய்ப்பாலின் சக்தி மாதிரி ஐரோப்பிய ஆராய்ச்சிக்காரர்கள் கற்பித்த அஸ்திவாரத்தை வைத்து இவர்கள் அதன்மேல் இன்னும் புதுக் கற்பனைகளைச் சேர்த்துக்கட்டி வேற்றுமை உணர்ச்சி கிளப்புகிறார்கள்.

'வடக்கிற்கும் தெற்குக்கும் நடந்த கோரயுத்தமே இராமாயணம்' என்னும் வேடிக்கையைக் கண்டு அழுவதா சிரிப்பதா தெரியவில்லை. ரைடர் ஹாகார்டு என்னும் ஆங்கில ஆசிரியர், 'ஷீ' என்ற ஒரு கதை எழுதினார். அதை ஓர் உண்மை சரித்திரமாக எண்ணி அதைக்கொண்டு ஆப்பிரிக்கா தேசத்துப் பூர்விக சரித்திரத்தை ஆராய்ச்சி செய்தால் நகைப்பார்கள். ஆனால் அத்தகையதே இராமாயண இதிகாசத்தை ஆரியதிராவிடப் போராக்குவது.

இந்தப் பண்டித சிகாமணிகளில் சிலர் இராவணனை ஒரு தமிழனாகப் பாவித்து வருகிறார்கள்! அதிலும் இராமனைத் தீயவனாகவும்

இராவணனை உண்மையில் நல்லவனாகவும் கருதிப் பார்க்கிறார்கள்; தமிழர் இம்மாதிரி இராவணனைப் பாராட்டப் பார்ப்பதைக்கண்டு தெலுங்கர் நகைப்பார்கள். படித்த தமிழருள் இந்த விபரீத கற்பனை எவ்வளவு தூரம் பரவியிருக்கிறது என்பதைத் தெலுங்கர் எப்படி யறிவார்கள் பாவம்! நமக்குள் இவ்விஷயத்தில் தீவிர மத வேறுபாடு ஏற்பட்டு ஒருவரையொருவர் வெறுப்பதும் பகைப்பதுமாகவிருக்கிறது என்று அவர்கள் அறியாதபடியால் இது ஒரு வேடிக்கை என்று ஆந்திரர்கள் எண்ணலாம். வால்மீகிமுனி, அல்லது யார் முதலில் பாடினாரோ அந்தக் கவி, ஓர் அரக்கனைக் கற்பித்தார். உள்ளும் புறமும் மகா பயங்கரமாகவிருந்த ஒரு பிரகிருதியைச் சிருஷ்டித்தார். தமிழர் சிலர் அந்த அரக்கனை நம் குல புருஷன் என்று வைத்துக்கொள்ள முற்படுகிறார்கள்! கதையைச் சரித்திரமாக்கி, அதனின்று பகைமை யுண்டாக்கிக்கொண்டு ஒருவரையொருவர் தாக்கி, இல்லாத துக்கத்தைச் சம்பாதிக்கப் பார்க்கிறோம். கவியொருவர் ஒரு காரணத்தை முன்னிட்டு ஒரு கற்பனை செய்து பாடினால், அந்தக் கற்பனையைச் சரிதையாக வைத்துக் கொள்ள முயல்வது மதியீனமாகும். நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வேற்றுமையைக் காட்டக் கவி கற்பித்த பாத்திரங்களை நம் முன்னோர்களாக எண்ணலாமா? நன்மைக்கும் தீமைக்கும் நடக்கும் போரைக் காட்டக் கவிகள் பாடியது இராமாயணம் ஒன்றேயல்ல. இராமாயணத்திற்கும் முன், தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் கடும்போர் நடந்ததாக வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விருகூட்டத்தாரும் வாசுகியைக் கயிறாகவும் மேரு மலையை மத்துக்கோலாகவும் அமைத்துக்கொண்டு பாற்கடலைக் கடைந்ததாகக் கதையுண்டல்லவா? இதுவும் தமிழரைப் பற்றியோ? பாற்கடலைக் கடைந்ததும் ஆரியர் தமிழரை ஏமாற்றிய வரலாறோ? ஆழ்ந்த உண்மையையும் உயர்ந்த எண்ணங்களையும் எடுத்துக்காட்டக் கவிகள் கற்பித்த அழகிய கற்பனைகளைப் பாடியும் படித்தும் பயன் பெறுவதற்குப் பதில், பத்திரிகைகளில் நமக்கு வேண்டாதாரைப்பற்றி மறைவாக நாம் இக்காலத்தில் எழுதி அவதூறு செய்வதுபோல் கவிகள் அக்காலத்தில் தமக்கு வேண்டாதாரைத் தாக்கிப் பாடிய பாட்டுகளாக அவைகளை எண்ணுவது மூடத்தனமாகும்.

நம் நாட்டைப்பற்றிச் சரியான சரித்திரமில்லையாயின், இல்லையென்று ஒப்புக்கொள்வது நலம். வெறுங் கதைகளையும், கற்பனைகளையும் சரித்திரமாக்கி, ஒருவரையொருவர் துவேஷிக்கவேண்டாம். படித்த மூடர் கவிகளுடைய கற்பனைகளை வெறுத்து, 'சரித்திர ஆராய்ச்சி செய்கிறோம்' என்று நூல்கள் எழுதினாலும்

அவை ஆராய்ச்சியாகவே நின்றால் பொறுத்துக் கொள்ளலாம்; வேடிக்கையாகவிருந்தால் சிரிக்கவும் சிரிக்கலாம். ஆனால் அந்த யூகங்களை அரசியல் போரில் கலந்து, மக்களிடையில் போட்டியும் துவேஷமும் புகுவதற்குக் கருவிகளாக்குவதைப் பொறுத்தல் கூடாது.

சில தமிழர் தங்கள் புதல்வர்களுக்கு இராவணன், கும்ப கர்ணன், என்று பெயரிடக்கூடத் தலைப்பட்டார்கள்! அரக்கன், அசுரன், இராவணன், கும்பகர்ணன் என்ற பெயர்களெல்லாம் அதருமம், அசத்தியம், தீமை என்பதைச் சுட்டிநிற்கும் பெயர்கள்; பேராசை, மக்களை இம்சித்தல், சோம்பல் முதலிய துர்க்குணங்களை நன்மக்கள் வெறுத்து விலகவேண்டுமென்று கற்பித்த உருவங்களும், நாமங்களுமாகும். ரிஷிகளுடைய கற்பனாசக்தியும், கவித்திறமை யும், வேதாந்த ஞானமும், அந்த உருவங்களுக்கு உயிர் தந்தன. உடனே நாம் அவர்கள் எங்கள் முப்பாட்டன்மார்கள் என்று உறவு கொண்டாடுகிறோம்! இதைவிட என்ன வேடிக்கை வேண்டும்!

இந்த ஆரிய திராவிட குலவேற்றுமையும் சண்டைகளும் உண்மை என்றே வைத்துக் கொள்வோம். பல்லாயிர வருஷங் களுக்கு முன் நடந்த சம்பவங்களை இப்போது கிளப்பி சமூக ஒற்றுமையையும் முன்னேற்றத்தையும் தடைபடச் செய்வானேன்? இவ்விதப் போட்டிக்கதைகளைச் சொல்வதும், துவேஷ மனப்பான் மைகளை உண்டாக்குவதும் ஜாதி யொற்றுமைக்குப் பெருந்தடை யாகும்.

நான் சீமைக்குப் போய் 'ஸெய்ண்ட் ஜார்ஜு (*St. George*)க் கும் ட்ராகனு (*Dragon*)க்கும் நடந்த சண்டை கதையல்ல, ஸெய்ண்ட் ஜார்ஜ் ஸாக்ஸனிய ஜாதித் தலைவன்; ட்ராகன் கெல்ட் ஜாதித் தலைவன்; இந்த இரண்டு ஜாதியாருக்குள் நடந்த யுத்தத் தை ஒருவாறு குறிக்கும் இதிகாசம் இது' என்று பிரசாரம் செய் தேனானால், ஆங்கிலேயர் என்னைப் பார்த்துச் சிரிப்பார்கள். ஆங்கி லேயர் ஸெய்ண்ட் ஜார்ஜ், ட்ராகன், ஆர்தர் முதலிய புராணக் கதைகளை நல்லதற்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்; மக்கள் குணாபிவிருத்திக்கும், இலக்கியப் பெருக்கத்துக்கும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நாமோ சில நாளாக இராமாயண மகாபாரதங்களை முன்னிட்டு மக்களுக்குள் பகைமை யும் வெறுப்பும் உண்டாக்கிக்கொண்டு வருகிறோம். கவித்திறமை யால் தீய பாத்திரங்கள்கூட கம்பீரமும் விசித்திர அழகும் பெறக் கூடும். இராவணன், ஷைலாக், முதலிய கதாநாயகர்கள்கூட அழகும், கலைச் சித்திரமும் கொண்டு விளங்குவார்கள். ஆனால்

இத்தகைய கற்பனைமனிதர்களைக் காரணமாக வைத்து நாம் ஜாதிச் சண்டை செய்வதா?

இராமாயணத்தில் இராமனுடைய குணத்தைப்பற்றியும் செயல்களைப்பற்றியும், இராவணனைப்பற்றியும், புது விமரிசனங்கள் ஜனங்களின் மனதைப் புண்படுத்தாத முறையில் எழுதினால் அவைகளை மிகவும் ரஸமாகவே படித்து அனுபவிக்கலாம். 'இராவணன் சாஸ்திரங்கள் படித்த பண்டிதன்; சீதையைத் தூக்கிச் சென்றானாயினும் அவளை எவ்வளவு மரியாதையாக நடத்தினான்; கஷ்டகாலங்களிலும் தைரியமிழக்காமல் மிக கம்பீரமாக நடந்துகொண்டான். இராமன் பல சந்தர்ப்பங்களில் திடமான மதிகொண்டவனாகத் தோற்றப்படவில்லை' என்றெல்லாம் விமரிசனை செய்யலாம். இராவணன் எவ்வளவு கம்பீரம், மேதை பொருந்தியவனானாலும் எவ்வளவு வேதம் ஓதியவனானாலும், நாம் மறவாமல் கவனிக்க வேண்டியது, பாபத்திற்கும் புண்ணியத்திற்கும் நடக்கும் போராட்டத்தில் இராவணன் என்ற கற்பனை பாவத்தையும், இராமன் என்ற கற்பனை புண்ணியத்தையும் குறிக்கின்றன வென்பதே. துரியோதனனும் சகுனியும் இவ்வாறே பாவத்தைக் குறிக்கும் கற்பனை பாத்திரங்கள். சகுனியும், காந்தாரியின் தகப்பனும், பஞ்சாபுக்கும் அதற்கு மேற்கே ஏதோ தேசத்திற்கும் அரசர்களாயிருந்தார்கள் என்று வைத்துக்கொள்ளலாம். அதனால் இத்தகைய மகாபாரதக் கற்பனையைக் காரணமாக வைத்துக்கொண்டு பஞ்சாபு தேசத்து ஜனங்கள் யாருடனாவது இப்போது சண்டையிடுவார்களா? இராமன் வாலியின்பால் நடந்தது சரியல்லவென்று ஆதி முதற்கொண்டு ஆட்சேபணை உண்டு. வால்மீகியே இந்த விஷயத்தை எடுத்துச் சமாதானம் சொல்லப் பார்க்கிறார். அது முற்றிலும் ஒப்புக்கொள்ள முடியாதென்று அதிலேயே விளங்குகிறது. ஷைலாக் என்னும் கொலைபாதக வட்டி வசூல்காரனை ஷேக்ஸ்பியர் எழுதிய ஒரு நாடகத்தில் பார்க்கிறோம். அவன் தன் மகள்பால் வைத்திருந்த அன்பை ஆசிரியர் மனதைக் கவரும்படி சித்திரித்திருக்கிறார். தற்கால மனோபாவங்களின்படி பஸ்ஸானியோ முதலியவர்கள் அந்த நாடகத்தில் ஷைலாக்கை நடத்தியது மிகவும் இழி முறையென்றே சொல்லலாம். தெய்விகப் புலவர்கள் எதைத் தொட்டாலும் அது பொன்மயமாகும். அதனாலேதான் இராவணன் கூட கம்பீரமும், அழகும் பொருந்தி விளங்குகிறான். அதனாலேயே அவன் திராவிட குலத்தின் தலைவனாகிவிடமாட்டான். அவன் வால்மீகி முனியின் கற்பனை உருவமே.

இராமன் சீதையைத் தேடித் தெற்குமுகமாய்ச் சென்றதாக வால்மீகி பாடிவிட்டார். இராவணன் வடக்கேயோ, மேற்கேயோ

போய் அங்கே சீதையைச் சிறைவைத்ததாகக் கவி பாடியிருந்தால், இந்த ஆரிய திராவிடக் கலவரம் உண்டாயிருக்காது. பண்டிதர்கள் இவ்விஷயமாகச் சண்டை போட்டாலும் தேசபக்தர்கள் இச் சண்டையில் தலையிடாதிருக்கவேண்டும். ஸாக்ஸனியரும், தானியரும், ஸ்காட் ஜாதியரும், 'நான், நீ' என்று இப்போது ஆங்கிலேயர்களுக்குள் சண்டை கிளப்புகிறார்களா? இல்லை. ஒரே பெருமையும் மகிழ்ச்சியுங் கொண்டு குலபேத உணர்ச்சியின்றி சரித்திரம் படிக்கிறார்கள். சரித்திரத்தைத் தமக்குள் குலபேதமும் ஜாதி வெறுப்பும் உண்டாக்கப் பயன் படுத்துவதில்லை. ஒற்றுமை ஏற்படுத்திக்கொள்ள இன்னும் எவ்வளவோ முயற்சிகள் செய்யவேண்டியிருக்க, பழைய கதைகளையும், உண்மையான பழைய சரித்திரத்தையுங்கூட நோண்டி எடுத்து நமக்குள் பேதங்களை உண்டாக்கிக் கொள்ளக்கூடாது.

திராவிடர்கள் தென்னிந்தியாவில்தான் இருக்கிறார்கள் என்று எண்ணுவது தவறு. வங்காளம், நேபாளத்திலுங்கூட திராவிட குலமென்று சொல்லக்கூடியவர்களைப் பார்க்கலாம். எங்கும் கலப்பு ஏற்பட்டு எங்கும் எல்லா இனத்தாரும் இருக்கிறார்கள். நான் ஆரியன் என்று தென்னாட்டுப் பிராம்மணரல்லாதார் எண்ணலாம். வடக்கே போனால் அங்குள்ளவர்கள் என்னைப் பார்த்து 'நீ திராவிடன்' என்கிறார்கள். என் பாஷை சுத்த திராவிடமொழி. ஆரிய பாஷையே எனக்குப் பேச முடியாது. இவ்வளவு கலப்புகள் உண்டாயிருக்க, கலப்புகளும் நாம் கோருவதாயிருக்க, மறுபடி பிரிக்கப் பார்ப்பது மடமையன்றோ? இராமன், இலக்குமணன், கிருஷ்ணன், என்ற பெயர்களை விடுத்து இராவணன், கும்பகர்ணன், என்று பெயரிடுவது என்ன பேதைமை! அப்படித் திராவிடப் பெயர்கள் வேண்டுமாயின் நல்ல பெயர்களில்லையா? இம்சை, பாவம், தூக்கம், கோரம், இவைகளைக் குறிப்பதற்கே பல்லாண்டுகளாய் நின்ற இந்தப் பெயர்களைத் தவிர்த்து நல்ல அழகிய திராவிடப் பெயர்கள் உண்டு. அவைகளைக் குழந்தைகளுக்கு வைக்கலாம். சண்டை இடவேண்டுமாயின் இடுவோம். ஆரியன் திராவிடன் என்று வேண்டாம். தற்காலத்தில் நாம் கொண்டிருக்கும் குணாதிசயங்களைப்பற்றிச் சண்டையிடலாம். அதற்கு விமோசனமுண்டு.

---

# பொறியூர்தி

வி. எம். கோபாலகிருஷ்ணமாச்சாரியார்

உலகில் இயல்பாகக் காணப்படுவதையே மனம் நம்புகின்றது. அங்ஙனமல்லாதவற்றை நம்பத் துணிவதில்லை. பாருங்கள்; பரகாய பிரவேச* மென்று ஒரு வித்தையுண்டு என்று ஒருசார் பண்டைய நூல்களிற் படிக்கிறோம். இவ்வாறானவற்றைப் படிக்கும்போதெல்லாம், இவை நிகழக்கூடியனவா என்ற ஐயம் மனத்தகத்துத் தோன்றுகின்றது. இவ்வாறு மனந் தடுமாறுமிடத்து, 'எல்லாம் வல்ல இறைவனது அருளை முன்னிட்டு முயன்று நிற்பார்க்கு, எதுதான் செய்ய இயலாது' என்று ஒருசார் மனம் சமாதானப்படும். இங்ஙனம் தோன்றப் பெறுதவரோ கண்டதே பொருளென்றும் மற்றவை கற்பிதமென்றும் நினைப்பாராதலால், அவர் மனம் தெளியுறாது.

இவ்வண்ணம் சிலர் சில பொருள்களில் நம்பிக்கை கொள்ளாமை குறித்து அவர்மீது குறைகூறுவதிற் பயனில்லை. ஆனால், தாம் கண்கூடாகக் காணாதவையெல்லாம் உண்மையல்லவென்று கூறத் துணிவது நல்லறிவுக்கு அழகல்ல என்பதை மட்டும் வற்புறுத்திக் கூறலாம். நாம் காணாத எத்தனையோ வெளிநாடுகளிலுள்ள பொருள்களைப்பற்றிப் பத்திரிகை வாயிலாக அறிகிறோம்! அங்ஙன முணரும்போது அவை மெய்யென்று நம்பவில்லையா? அவ்வண்ணமே முற்காலத்து நூல்களிற் காணப்படுஞ் சில 'இங்ஙனிருக்குமா?' என்று நம்மிளமையில் ஐயுற்றவை, அங்ஙனம் இருந்திருக்கலாமென்று ஓரெண்ணம் நம் நெஞ்சில் தோன்றுமாறு பிற்காலத்துச் செய்வன இல்லையா? அவற்றுள் ஒன்றைப் பற்றி இங்கு கூறுவேன்.

இராமபிரான் இராவணனைச் சங்கரித்துச் சீதையை மீட்டதும், நாட்களைக் கணக்கிட்டுப் பார்த்தான். 14 வருஷம் கழித்துத் தான் மீண்டுவருவதாகப் பரதனிடம் குறித்த நாள் அன்றே என்று தெரியவந்தது. அப்போது ஸ்ரீராமன் விபீஷணனை நோக்கி,

---

* பரகாயப் பிரவேசம் - ஒருயிர் தான் இருக்கும் உடலைவிட்டு வேறொரு உடலில் தன் விருப்பினாற் சேர்தலென்பதே.

ஆண்டு பத்தொருநாலு மின்றோட றுமாயின்
மாண்டதா மினியென்குலம் பரதனேமாயின்
ஈண்டுபோக வோரூர்தி யுண்டோ....................

"பதினான்கு ஆண்டுகள் வனத்திற் கழித்துவிட்டு நான் மீண்டு வருவதாகப் பரதனுக்கு வாக்களித்தேன். அதன்படி நான் இன்று வருவேன் என்று பரதன் எதிர்பார்த்து நிற்பான். என்னைக் காணாவிடின் உயிர் நீப்பன். பரதன் மாள என் குலமே அழியும். ஆகையின், கடுவேகமாகச் சென்று இன்று சூர்யாஸ்தமனத்திற்குள் என்னை அயோத்தி சேர்ப்பிக்கக்கூடிய ஊர்தி ஏதேனுமுண்டோ" என்று வினவினான். விபீஷணன், 'தூண்டு (வி)மானமுண்டென்று தொழுது',

ஈங்குளாரெலா மிவருவது இவரினீயினிது
பூங்குலாநகர் புகுதியிஞ்ஞான்று.................

"எம்மிடம் ஒரு விமானமுளது, அதில் இவர்ந்து சென்றால் இன்றே அயோத்தி சேர்ந்துவிடும்" என்று புகன்றான்.

பின்னர்த் தன்னாணையால் விபீஷணன் கொணர்ந்த புஷ்பக விமானத்தின்மீது சேனையோடு சேர்ந்து இராமபிரான் அன்றே பரத்துவாசாச்சிரமஞ் சார்ந்து, அநுமனைத் தான் மீண்டுவந்த செய்தியைப் பரதனிடங் கூறுமாறு அனுப்பினான். அனுமான், அக்கினிப்பிரவேசஞ் செய்யச் சித்தனாயிருந்த பரதனுக்கு இராம பிரான் மீண்டுவந்த செய்தியை யுணர்த்தி, அவனை அங்கியிற் புகவொட்டாது தடுத்துக் காத்தானென்று இராமாயணத்திற் படித்திருக்கிறோம்.

தாம் காணாதவை யெல்லாம் மெய்யன்றென்று எண்ணும் மனப் பான்மையார், இற்றைக்கு வெகு சிலவே யாண்டுகட்கு முன்பு இது கட்டுக்கதை யென்று எண்ணியிருப்பர். இப்போது படை களுடன் வானத்துப் பறந்துசெல்லும் வானக் கப்பலைப்பற்றி யறிந்திருத்தலால், இராமாயணத்துக் கூறிய புஷ்பகவிமானச் செய்தி யும் ஒருக்கால் உண்மையாயிருக்கலாமென்று எண்ணுதற்கு இடந் தருகின்றதன்றோ?

இராமாயணத்துக் கூறிய புஷ்பகவிமானம் போன்று சீவக சிந்தாமணி யென்ற பெருங்காப்பியத்தில் ஒரு வகையான ஊர்தி யைப் பற்றிய நிகழ்ச்சி சொல்லப்பட்டுளது. இராசமாபுரத்திலே குருகுலத்துதித்த சச்சந்தனென்னு மரசன், விசயை யென்பாளை மணந்து அவளது பேரழகை எப்போதும் நுகர்ந்திருக்கக் கருதி நாட்டைக் கட்டியங்கார னென்பானிடம் ஒப்புவித்துத் தான்

அந்தப்புரத்திலேயே இன்புற்றிருந்தான். இங்ஙனிருக்கையில், விசயை கருவுற்றவள், ஒரு நாள் மூன்று கனாக்கண்டு அவற்றை அரசனிடங் கூறினாள். அரசனும் அவற்றின் பயனைக் கனா நூலின்படி ஆய்ந்துரைத்தனன். பின்னர் விசயையுற்ற கருவு நாடோறும் வளரலாயிற்று. அப்போது மன்னனுக்கு எந்திரவூர்தி ஒன்று இயற்றுவிக்க வேணுமென்று ஓரெண்ணந் தோன்றிற்று. அதனால், மன்னன் அந்தக் கலையில் வல்லானொருவனைக் கூவி, ஓரெந்திர வூர்தி யியற்றக் கட்டளையிட்டனன். அந்தத் தச்சனும் மன்னவன் கட்டளைப்படி,

"பல்கிழியும் பயினுந் துகினூலொடு
நல்லரக்கும் மெழுகுந் நலஞ்சான்றன
அல்லனவு மமைத்தாங் கெழுநாளிடைச்
செல்வதோர் மாமயில் செய்தனனன்றே."

அவ்வாறு இயற்றிய அந்த மயிற்பொறி உயிருடனிருக்கும் மயில் போலவே தோன்றிற்று. அந்த மயிற்பொறியின்மீது ஏறி வான வழியாகச்செல்லவும் பூமியிலிறங்கவும் தன்னுடைய தேவியைச் சச்சந்த மன்னவன் பயிற்றுவித்தான். பின்னர் ஒருசமயம், கட்டியங் காரனென்பான் அரசை வௌவக் கருதி அந்தப்புரத்தை முற்றுகை செய்தபோது, சச்சந்தன் மனைவியான விசயை, அந்த மயிற்பொறி யின் மூலமாகவே அரசன் அநுமதியின்மேல் அந்தப்புரத்தினின்று வெளியேறினாளென்பதே இந்நிகழ்ச்சி. சிறிது காலத்திற்கு முன் இந்தப் பகுதியைப் படித்தவரிற் பலர், பறக்கும் மயிற்பொறி அரசன் இயற்றித்தர அதன் மூலமாக விசயை பறந்து அந்தப் புரத்தினின்று வெளியேறினாளென்ற செய்தியைப்பற்றி, 'இது நிகழ்ந்திருக்குமா?' என்று நினைத்திருப்பர். விஞ்ஞான சாஸ்திரம் வளர்ச்சியுற்று மயிற்பொறிபோன்ற வானவிமானம் பறந்துசெல் வதைப் பல்காலும் கண்கூடாகக் கண்டறியும் இக்காலத்திலோ, இது நிகழ்ந்தது கூறியதாகவே கருத இடந் தருகின்றதல்லவா?

இங்ஙன் வானத்தியங்கும் பொறிகளேயன்றி நிலத்திலூர்ந்து செல்லும் பொறியும் இருந்ததாகக் காண்கிறது. அது கூறுவேன்.

அவந்தி நாட்டில் உஞ்சைப்பதியில் சண்டமகாசேனனென் னும் பெயர்பூண்ட பிரச்சோதனனென்று ஓர் அரசனிருந்தான். அவனுக்கு வாசவதத்தை என்று ஓர் அருமை மகளிருந்தாள். அன்னாளுக்கு உதயணனை யாழ் பயில்விக்குமாறு செய்யப் பிரச் சோதனன் விரும்பினான். பிறகு மந்திரிமாரோடு ஆலோசித்து, அவனை யகப்படுத்தச் சூழ்ச்சிசெய்தான். அதன்படியே சண்ட மகாசேனனென்ற பிரச்சோதனன் வேழப்பொறி யொன்றை இயற்றுமாறு பணிக்கப் புனையாளரும்,

"அரக்கினும் மெழுக்காகிய நூலினும்
மாத்தினும் கிழிமாவின் மயிரினும்
விரித்ததோலினும் வேண்டியவற்றினும்
தரித்து யானையைத் தாமிக்கியற்றினர்."

இவ்வாறு இயற்றிய வேழப்பொறி செய்தொழில் வன்மையால் போலியானையாகப் புலப்படாது இயற்கை யானையாகவே புலப் பட்டதென்பது உதயணன் சரிதையைப் படிப்பார்க்கு இனிது விளங்கும்.

மற்றும் உதயணன் கதையை யுற்றுநோக்குவார்க்கு நிலத் தியங்கும் மற்றோர் ஊர்தியும் இருந்ததென்பது விளங்கும். உதயணனுக்கு உயிர்த்தோழனும் மந்திரியுமான யூகியென்பான், உதயணனைத் தனது மதியின் வலியால் பிரச்சோதனனிடமிருந்து வாசவதத்தையோடு வெளியேற்றிச் சயந்திநகரம் புகுவித்த பிறகு, தான் உஞ்சையம்பதியில் முடிக்கவேண்டுவன முடித்துத் தனது நட்பினனான யவனப்பாடித் தலைவன்

"கையிற் புனைந்த கழிநுண் சிறப்பொடு
வையகத் தியங்கும் வெய்யவ னூரும்
தேரி னன்ன செலவிற் றாகி
யாவரு மறியா இவரும்பொறி யாணியின்
இருப்புப் பத்திர மிசையக் கவ்வி
மருப்புப் பலகை மருங்கணி பெற்றுப்
பூணி யின்றியும் பொறியினியங்கும்
மாண்வினை வையம் மனத்தினொப்பக்
கடுப்பும் தவிர்ப்புங் கண்டன னாகி,
வத்தவ னன்னா டத்திசை முன்னி
வித்தக வாணி வேண்டுவயின் முறுக்கி
பூந்தார் மார்பிற் புரந்தர குமரனிற்
போந்தனன்"

(பெருங்கதை. இலாவங். யூகிபோதரவு—171.........195.)

என வருவது காண்க.

இங்ஙனிருந்த நம் கலையறிவுகள் இடையிற் பிறநாட்டாரின் போராட்டத்து நேர்ந்த குழப்பத்தினால் மங்கிவிட்டன. இனி யாவது நம் நாட்டார் மனவமைதியுற்று விஞ்ஞான சாஸ்திரம் முதலிய கலைகளில் வல்லுநராய் மேம்பட்டுத் திகழ்வார்களாக.

---

# சரித்திரம்

## குருகூர்ச் சடகோபர்—II

(ஆழ்வார்திருநகரி வரலாறு)

எல். ஆதிநாதப் பிள்ளை

ஸ்ரீ நம்மாழ்வாரின் முன்னோராட்சியிலிருந்தே தென்குருகூராகிய ஆழ்வார் திருநகரி, ஆட்சியிலும், தொழிலிலும், உழவிலும், கல்வியிலும், கடவுளன்பிலும் சிறப்புற்றிருந்ததென்றாலும், ஆழ்வார் காலத்திலிருந்து அவராலும், அவரதரிய அருளிச்செயல்களாலுந்தான் நாம் ஆராயக்கூடும்.

சிற்றரசு பெற்றிருந்ததால் ஆட்சித்திறனும், போர்க்காரியாரென்ற பெயரால் பொரும் ஆண்மையும், மாடமாளிகை சூழ்ந்தழகாய திருக்குருகூரென்றதனால் தொழில் சிறப்பும், சேற்றில் செந்நெல் கமலமொடு ஓங்கும் திருக்குருகூர் என்றதனால் உழவின் மேன்மையும், ஆசிரியம், விருத்தம், வெண்பாக்களால் கல்விமிகுதியும், திருமால் இறைவன் கோயில்களால் கடவுள்மாட்டன்பும் விளங்கும்.

பாட்டின் பயனைக் கூறுமிடத்தில் ஒவ்வொரு பதிகத்தினிறுதியிலும் இவை பத்தும் வீடளிக்கும், மனைவி மக்களுடன் இன்புற்று வாழலாம், வீடுவாசல் மாடுமனை பெருகும், தேவர்களுக்கு விருந்தாகலாம், இறைவனுடன் இன்புற்றழியாது வாழலாமென்று இம்மை மறுமை யின்பப்பயனைக் கூறுவார். துறவும் அவர் பாட்டிலுண்டு.

சேரசோழ பாண்டியராகிய முடியுடை மன்னர், பனந்தோடும், ஆத்திமாலையும், வேப்பந்தாரும் அணிந்திருந்தது போன்று ஆழ்வார் மரபினர் நாட்கமழ் மகிழ்மாலையை மார்பிலணிந்தனர். அன்றன்று பூத்து மணக்கும் மகிழமலர் தொடுத்த மாலையை மார்பிலணியும் மாறன் சடகோபன் என்று ஆழ்வார் தன்னைக் கூறிக் கொள்வார்.

அக்காலத்தில் பல்லவரும் பாண்டியரும் செய்தது போன்று ஆழ்வார் மரபினரும் அந்தணர் பலரைக் கொண்டுவந்து குடியேற்றி தானம் செய்திருக்கின்றனர்.

இராமாயணம், பாரதம் முதலிய வடமொழி நூற்களை ஆழ்வார் படித்தறிந்திருக்கவேண்டும், அல்லது கூறக் கேட்டிருக்க வேண்டும். திருமாலின் பத்துப் பிறப்பும் பாங்குறக் கூறப்படுகிறது.

ஆழ்வார் காலத்திலேயே அருகிலுள்ள திருக்கோளூர்ப் பார்ப்பனரொருவர் அவருக்காட்பட்டார். அவர் இனிமையாகப் பாட வல்லவர். அதனால் அவருக்கு மதுரகவி என்ற காரணப்பெயருண்டாயிற்று. அவரே தன் வாயால் 'தென்குருகூர் நம்பி பாடிய பாவின் இனிய இசையைப் பாடிக்கொண்டு திரிவேன்' என்று கூறுகிறார். 'அன்னையாய் அத்தனாய் எனையாண்டிடும் தன்மையான் சடகோபன் என் நம்பியே' என்பதும் அவர் பாட்டு.

ஆழ்வார் பிறந்தது திருக்கோளூருக்கு வட கரையிலிருக்கும் அப்பன்கோயிலென்பர். அங்கு ஸ்ரீநிவாசப்பெருமாள் கோயிலுண்டு. ஸ்ரீ நம்மாழ்வார் தாம் பாடிய பாடல்களுள் ஒன்றிலும் அவ்வூரைக் குறிக்கவில்லை. குருகூர்ச் சடகோபனென்றே கூறுவர். அதனால் அவ்வூர் பிற்காலத்திலேற்பட்டதென விளங்கும். 'மாறனலங்கார'த்திலுள்ள மேற்கோள் பாட்டிலெல்லாம் ஆழ்வார் பிறந்தது வடகரை யென்றே கூறப்பட்டிருக்கிறது. அவ்வூரவர் அவ்வாறெண்ணுவ தியல்பு. அப்பன்கோயிலில் 'காரிமாறன்களம்' என்று ஓரிடத்துக்குப் பெயரிட்டிருக்கின்றனர். ஆழ்வாரும் வைகாசி மாதம் 8-ஆம் நாள் விழாவில் அங்கு சென்று கண்ணன் கோலம் கொண்டுவருவதுண்டு.

ஆழ்வாரைப் புதைத்த புளியமரத்தடியில் கோளூர் மதுரகவிகள் கோயில்கட்டி உருவமைத்து விழாக் கண்டருளினார். இங்கு ஆழ்வார் பிறந்த வைகாசி விசாகத்தை முடிவாகக்கொண்ட பத்து நாள் விழா நடைபெறும். விசாகத்தில் தீர்த்தவாரியுண்டு. இவ்விழாவின் சிறப்பைக் கருதி 'உண்டோ வைகாசி விசாகத்துக் கொப்பொரு நாள்' என்ற வெண்பா ஏற்பட்டது. அப்புறம் நாளாக வாக அதன் முன் நாள் நடைபெறும் தேர்விழா உயர்ந்தது. இப்பொழுது ஒன்றேகால் நூற்றாண்டுகளாக ஐந்தாம் நாள் விழவு அதிக உயர்வு பெற்றுளது.

பண்டல ராமசாமி நாயக்கரவர்கள் 1809-ஆம் வருஷம் மாசித் தெருவின் வடகீழ் மூலையில் 'ஸ்ரீ பராங்குச விலாசம்' என்று ஒரு மண்டபம் கட்டி, அதற்கு ஒவ்வொரு விழாவிலும் ஆழ்வார் பெருமாளுருவங்களை எழுந்தருளச் செய்தார். ஆறும் நாள் விழவு அம்மண்டபத்திலேயே நடைபெறும். அவர் ஐந்தாம் நாள் விழவில் நவதிருப்பதிப் பெருமாளுருவங்களையும் 50 ரூபாய் கொடுத்து

ஆழ்வார் திருநகரிக்கு வரச் செய்து, இரவு ஒன்பது கருடன்மீது ஒன்பது கோயில் பெருமாளும், அன்னவாகனத்தி லாழ்வாரும், கோளூர் மதுரகவியாழ்வாருரு தோழிக்கிண்ணத்திலும், ஊர்ந்து ஊர்வலம் வர ஏற்பாடு செய்தார். அதுமுதல் நவதிருப்பதி கருட சேவை சிறப்பதாயிற்று.

ஆழ்வாருருவம் அக்காலத்ததென்று அதன் முகமும் முடியும் உணர்த்தும். வடித்த காதும், கைபட்டு மழுங்கிய முகமும், புத்தர் முடிபோன்று மண்டைக்குமேல் பந்துபோன்ற முடியும் ஆயிரமாண்டுகளுக் கதிகமென்பதை யறிவிக்கும்.

ஆழ்வார் காலத்திலிருந்து அவ்வூரில் வாழ்ந்த பல்பெரும் புலவர் வரலாறு தெரியக் கிடக்கிறது. ஆழ்வார்திருநகரியில் மணவாளமாமுனிகள் வடமொழி தென்மொழி இரண்டிலும் வல்லவராகி நூலியற்றினர். மாறனலங்காரம், நம்பெருமாள் மும்மணிக்கோவை, மாறன் அகப்பொருள், அதன் 108 திருப்பதிக் கோவை, முதலிய நூற்கள் 400 ஆண்டுகளுக்கு முன்பு கவிராயர் களால் பாடப்பெற்றன. குருகூர்ச் சுப்பிரமணிய தீக்ஷிதர் 'பிரயோக விவேகம்' என்னும் ஓரிலக்கண மொழிபெயர்ப்பாசிரியர்.

இக்காலத்திலும் 3 கவியரசரில்லங்களுண்டு. அவற்றிலிருந்து மதுரைத்தமிழ்ச் சங்கத்துக்கும், மஹா மஹோபாத்தியாயர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்களுக்கும் பல சங்கநூற்களும் பிற்கால நூற்களும், சொந்த நூற்களும், சென்றிருக்கின்றன.

கவிராயர்களுக்குக் கோயிலில் மரியாதையும், முறையும், மானியமுமுண்டு.

இதுதவிர, கோளூரில் மதுரகவிகளும், புளிங்குடியில் முத்தமிழாசாரும், அவர் மகன் நாற்கவிராஜ நம்பிகளும், தென்திருப்பேரையில் மாறனலங்கார உரையாசிரியரும், ஸ்ரீவைகுண்டத்தில் குமாரகுருபர சுவாமிகளும், பெரும்புலமை பெற்ற பேராசிரியர்களாவர். அவர்கள் வழுதி வளநாட்டுப் புலவர்கள்.

ஸ்ரீ நம்மாழ்வார் வைணவ சமயத்துக்குப் பேராசிரியரானர். அதனல் மதுரகவிகள், நாதமுனிவர், கம்பர், இராமானுஜர், மணவாளமாமுனிவர், தேசிகர் போன்ற மதப்பற்றுடைய பெரியோர் அவருக்காட்பட்டனர். தென்னடு நிறைந்து வடநாட்டிலும் ஆழ்வார் புகழ் பெருகியது. அவருடைய பரந்த கொள்கையும், சிறந்த பொருளும் உலகிலேயே விரைவில் பரவத்தக்க சிறப்புடையன.

ஆழ்வார்காலத்துப் புளியமரம் இன்னும் முதிர்ந்த பருவத்திலிருக்கிறது. 'பொந்தாயிரம் புளியாயிரம்' என்பதுபோல் இது

ஆயிரத்துக்கதிகம் ஆண்டுகள் சென்றும் வாழ்ந்திருக்கிறது. இது இருந்தவிடத்தில் மண்ணையிட்டுக் கிளைகள்வரை நிரப்பிக் காத்தனர். அதனால் இப்பொழுது ஏழு கிளைகளும் ஏழுமரம்போல் ஒரு சிறு 20 அடிச் சதுர நிலத்திலிருக்கின்றன. முன்பு இது ஆற்றங் கரையிலிருந்தது. இப்பொழுது கரையை வடக்கே ஒதுக்கிவிட்டதனால் ஊருக்கு நடுவிலமைந்திருக்கிறது. இப்புளி இரவில் இலை பொருந்துவதில்லை. அதனாலிதனை 'உறங்காப்புளி' யென்பர். பழுப்பதும் அரிது. அதனால் பழுக்காத புளி என்றும் கூறுவதுண்டு. 20 ஆண்டுகளுக்கு முன் ஒருமுறை பழுத்துக் கொட்டை யெடுத்த நினைவுண்டு. முதிர்ந்ததனால் பல ஆண்டுகளுக்கொரு முறைதான் பழுக்குமோ என்னவோ! பூத்துக் காய்ப்பது ஒவ்வொரு ஆண்டிலு முண்டு. இதை வெட்டினாலும் எரித்தாலும் ஈழையும் குருதியும் போன்று ஒருவித நாற்றமுள்ள பசைநீர் வெளிப்படுகிறது. அதைச் சந்தனமப்பிக் காக்கின்றனர். இத்தகைய காரணங்களால் நெடுங் காலம் ஆழ்வாருடன் பெயர்பெற்ற இம்மரத்தைத் தெய்வத்தன்மை யமைந்ததென்றெண்ணுவர்.

இவ்வூரையும், ஆழ்வாரையும், அவரருளிச்செயலையும் சிறப்பாகக் கூற மூன்று கதைகளுண்டு.

ஒன்று, ஆழ்வார் செய்யுளைச் சங்கத்தார் ஏற்றுக்கொள்ளாத தனால் அவருக்கு விருது கூறக்கூடாதென்று தடுக்க, மதுரகவிகள் திருவாய்மொழியிலுள்ள 'கண்ணன் கழலினை' என்னும் அடியை எழுதிய முறியைப் பலகையில் வைக்கப் பலகை புலவர்களைப் பொற்றாமரைப் பொய்கையில் கவிழ்த்திவிட்டுச் சுவடியை மட்டும் தாங்கியதென்பது.

மற்றொன்று, கம்பர் குருகூருக்கு வரும்போது வழியில் பனையேறியின் மனைவி அவனை யிழந்து அழுத ஒப்பாரியின் இரண்டா மடியை முடிக்க முடியாமல் மறுநாள் அவளாலது முடிக்கப்பட்டதைக்கேட்டும், ஏற்றமிறைப்போர் பாட்டின் நலத்தையும் அதை இடைநடுவில் தன்னால் முடிக்க முடியாமையைக் கருதியும், அஞ்சி மீண்டு சோழநாடு சென்ற கதை.

மூன்றாவது, பொருநல்யாற்றின் வடகரையிலிருந்த முனிவரொருவருடைய நாய் குருகூர்த் தெருவில் எச்சிலையுண்டு மீளும் போது ஆற்றில் வெள்ளம்வந்து நாயை யீர்த்துச்செல்ல, நீரில் மூழ்கிய நாய் ஒளிவடிவெய்தி மேலுலகம் சென்றதென்பது.

**கோயில்:** பண்டைநாளில் மருத நிலமாயிருந்த இவ்விடத்தில் முருகன் கோயிலும், இந்திரன் கோயிலும் இருந்து இந்திர விழவு நடைபெற்றிருக்க வேண்டும். பின்பு திருமால் கோயிலும்,

சிவபெருமான் கோயிலும், கண்ணன், பலராமன், விரிசடையோ னுருவங்களுடன் விளங்கியிருக்கலாம். கடைச்சங்கநாளில் சமண சாக்கிய(புத்த)ப் பள்ளிகளும் சேர்ந்திருக்கவேண்டும்.

இப்பொழுது திருமால் கோயிலொன்றே யுளது. அதில் திரு மாலும் மலர்மகளும், நிலமகளும், நீளாதேவியுமுண்டு. திருமா லுக்கு ஆதிநாதர் என்பது பெயர். ஆதிநாதர் என்பது சமண ரிறைக்குள்ள பெயர். ஆழ்வார்,

> "குன்றம்போல் மணிமாடம் நீடு திருக்குருகூரதனுள்
> நின்ற ஆதிப்பிரான் நிற்கமற்று எத்தெய்வம் நாடுதிரே"

என்று கூறுவதனுல் ஆதிநாதரெனப் பெயரிட்டனர்.

> "மலிந்து செந்நெற் கவரிவீசும் திருக்குருகூரதனுள்
> பொலிந்து நின்றபிரான் கண்டீர் ஒன்றும் பொய்யில்லை போற்றுமினே"

என ஆழ்வார் அருளிச் செய்வதால் எழுந்துலாப் போதரும் செப்புருவத்துக்குப் 'பொலிந்துநின்ற பிரான்' என்ற பெயருண்டு.

இக்கோயிலின் தென்புறம் ஏனத்துருவில் ஞானப்பிரான் கோயிலுண்டு. இதைப் பழையதென்பர். இது புதிது. இதற்கப் புறம் ஒருமுறை ஆதிநாதர் கோயில் திருப்பணி செய்யப்பெற் றிருப்பதனுல் ஞானப்பிரான் கோயில் பழையதும், ஆதிப்பிரான் கோயில் புதியதுமாயின.

இது கி. பி. பத்தாம் நூற்ருண்டில் கட்டப்பட்டது. செவ் விருக்கை நாட்டுச் சக்கரபாணி நல்லூர் அரையன் வீரம்முடித் தானுன பல்லவராயர், மண்டபம் கட்டி வராகநாராயணரை எழுந் தருளச் செய்தார்.

ஸ்ரீ நம்மாழ்வார் கோயில் ஆதிநாதப் பெருமாள் கோயிலுக் குத் தெற்கே அறுபதடி தூரத்திலிருக்கிறது. பெருமாள் கோயிலுக்குப் பின்னுல் இருமருங்கிலும் இரண்டு நாச்சியார் கோயில்கள் தனித்தனியாக வுள்ளன. பொதுவாக ஆதிநாத வல்லி நாச்சியாரென்றழைக்கின்றனர். மலர்மகளும், மண்மகளு மாவர். இவை யாவும் ஒரு மதிலுக்குள்ளாகிய கோயில்கள். இவையன்றி முன் பத்துநாள் விழாமண்டபம், மார்கழிப் பின் பத்துநாள் விழாவயரும் நூற்றுக்கால் மண்டபம், மடைப்பள்ளி, முதலியனவும் அம்மதிலுக்குள் உண்டு.

ஆதிநாதர், ஆழ்வார் கோயில்களுக்கு மேல் இரு பெரு விமா னங்களும், நாச்சியார்களுக்கெடுத்த இரு சிறு விமானங்களும், மதில் வாயிலில் கீழ்புறம் மூன்றுநிலை மாடமும், வடமதிலினிடையிலுள்ள சுவர்க்க வாயிலில் மூன்று நிலை மாடமுமுண்டு. உள்மதிலினுட்புறம்

எல்லாவிடங்களும் மூடப்பட்டுள்ளன. பெரிய விமானங்களைச் சுற்றியும், வெளிச்சத்துக்காக விடப்பட்ட மேற்கற்காவணத்திலுந் தான் இடைவெளியுண்டு.

இதைச் சூழ வேறு ஒரு பெரிய மதிலுண்டு. இது கோட்டகை போல் அமைந்தது. முன்புறம் கிழக்கேயுள்ள ஓரே நால்நிலைக் கோபுரவாயில்தானுண்டு.

இதன்முன் கல்லினால் பந்தல் மண்டபம் ஒன்றிருக்கிறது. அதன் இருபுறமும் நான்கு பெரிய மண்டபங்கள் கடவுளுருவுடனுள்ள கோயில்களாகவும் இருக்கின்றன. அவற்றில் கண்ணாடி மண்டபம், வாகன மண்டபம், கோயில் காரியாலயம் என்பன மூன்று. தென்புறம் நெற்குற்றுப் பிறை. மேற்கே வசந்த மண்டபமும் நந்த வனமுமுள. வடக்கே முத்தி வாயிலையடுத்துத் திருமாமணி மண்டபம். தென்கிழக்கு மூலையில் இருமருங்கும் இரு சிங்கங்களுடன் கூடிய கருடப்புள்ளைக் காணலாம். இதற்கு ஆடி-சுவாதியில் நீராட்டும் அலங்காரமுண்டு.

கோபுர வாயிலின்முன் கல்லினால் பந்தல் மண்டபமிருக்கிறது. மதிலைச் சுற்றிய மாடத்தெருவில் வடபுறம் திருவேங்கடத்தான் கோயிலும், அரங்கநாதன் கோயிலு மிருக்கின்றன. மேற்கே, திருமலை நாயக்கர் கட்டிவிட்ட மொட்டைக்கோபுரம் நடுவிலிருக்கிறது. தெற்கே, திருவேங்கடமுடையான் பிள்ளை, லோகாச்சாரியார், தேசிகர், இவர்கள் கோயில்கள் நடுவிலும், கீழ்புறம் ஆண்டாள்கோயிலும், மேல்புறம் மணவாளமாமுனி கோயிலுமுண்டு. அதற்கு மேற்கே உடையவர் கோயிலிருக்கிறது. அதன் அருகிலும் முன்புறமும் சிறு கோயில்களுண்டு. கூரத்தாழ்வார் கோயில் சிறந்தது.

உடையவர்கோயில் ஏற்பட்டு 570 ஆண்டுகளிருக்கும். மணவாளமாமுனிகளின் ஆசிரியர் சடகோபதாதர் (தாசர்) என்ற திருவாய்மொழிப்பிள்ளை வைத்திருந்தது உடையவரின் உருவம். அவர் காலம்முதல் இதுவரை 31 பட்டம் ஆகிறது. 8-ஆவது பட்டம் திருப்பதியிலிருந்து வந்த ஸ்ரீநிவாசப் பட்டருக்குக் கிடைத்தது. அவர் கற்றவர். 1523ல் மாறனலங்காரத்தைக் காரிரத்னக்கவிராயர் அவரிடம்தான் அரங்கேற்றினர். அவர் உடையவர் கோயிலையும், ஆழ்வார், பெருமாள் கோயில்களையும் சீர்திருத்திக் கட்டினர்.

ஆழ்வாருடைய முன்னோர் காலத்திலிருந்து நாயக்க மன்னர் காலம் வரையில் அரசர்களுடைய துணையைக்கொண்டு கோயில்களும் கட்டடங்களும் சிறப்பெய்தின. அப்புறம் விழாக்களை

முன்னைய முறையில் சிறப்பாகச் சில அதிகாரிகளும், செல்வர்களும், ஜீயர்களும் சீர்பெறச் செய்தனர்.

வைகாசிவிழா முதன் மூன்றுநாட்களிலும் அகோபில மடம் ஜீயரும், அடுத்த மூன்று நாட்களில் திருக்குறுங்குடி ஜீயரும், ஏழாம்நாள் குருகூர் எம்பெருமானார் கோயில் ஜீயரும், கடைசி மூன்று நாட்களிலும் வானமாமலை ராமானுஜ ஜீயரும், முதன் மரியாதை பெறும் வழக்கம் இன்னுமிருந்து வருகிறது. விசாகத்தன்று, ஆழ்வார் பிறந்த நாளில் முதலில் தீர்த்தம் பெறும் வானமாமலை ஜீயர், ஐந்தாம்நாள் விழவுயர்ந்ததால் அன்று நவதிருப்பதித் திருமால்களிடமும் முதன் மரியாதை பெறுவதுதான் சிறப்பென்று கருதித் தானே என்றும் முதன் மரியாதைக்குப் போராடுவதுண்டு. இப்போராட்டம் விழாச் சிறப்பையும், சமயச் சால்பையும், உருவ வழிபாட்டையும், ஆசிரியர் நிலையையும் மாசுபடுத்தும். இப்பூசலேற்பட்டு இருபது ஆண்டுகளாகும்போலும்.

நூற்றைம்பது ஆண்டுகளின் முன்பிருந்த பிள்ளையன் என்னும் ஒரு வேளாளர் திருச்செந்தூர் ஏழாம் நாள் விழவையும், ஆழ்வார் திருநகரி ஐந்தாம்நாள் விழவையும், தன் செலவில், தனது மண்டபத்தில் படிகொடுத்து அயர்ந்தார். 'பிள்ளையன் மனை' என்ற இடத்துக்கு ஐந்துமைல்கள் சென்று மண்டகப்படி பெற்று வருவதுண்டு.

சோணாடு வழங்கிய சுந்தர பாண்டியர் காலத்தில் (13-ஆம் நூற்றாண்டில்) நம்மாழ்வாருருவம் மார்கழி விழாவுக்குத் திருவரங்கம் சென்றது. திருக்கார்த்திகைக்கு மறுநாள் புறப்பட்டு 15 நாட்களில் திருவரங்கத் திருநாளாரம்பத்தில் சென்றுவிடும். அதற்காகப் பத்து மைல்களுக்கொரு விடாயாற்றும் மண்டபம் நான்கு கற்கால்கள் நாட்டிக் கட்டப்பட்டிருக்கிறது. மார்கழி இருபது நாள் விழாவும் முற்றுப்பெற்றதும் மீண்டு வருவதுண்டு.

இன்னும் அம்முறையில் திருக்கார்த்திகைக்கு மறுநாள் திருவரங்கத்தில் சுடலை கொளுத்தியதும் குருகூருக்குப் பட்டோலை எழுதியனுப்பும் வழக்கமுளது.

மலையமா நாட்டுத் திருவண் பரிசாரத்தில் இருந்த திருவாழ்மார்பர், ஆழ்வாரின் பாட்டனாரானால், ஒருக்கால் தாய்வழியில் மலையமான் திருமுடிக்காரிக்கு இயைபுண்டோ இல்லையோ. இக்காலத்திலும் ஆழ்வார்திருநகரியிலுறையும் வேளாண்மாந்தரொவ்வொருவருக்கும் எழுதலைமுறைக்குக் குறையாமல் குடிவழி தெரியும். கவியரசர்களும் பிறரும் பல குழூஉக்களாகப் பிரிந்த தத்தம் வழிமுறை எழுதி வைத்திருந்தனர்.

| ஆழ்வார் குடிவழி | ஓரேடுத்துக்காட்டு |
|---|---|
| திருவழுதி வளநாடர் | புன்கத்துடையார் பிள்ளை (1729) |
| அறந்தாங்கியார் | மணவாள பிள்ளை |
| சக்கரபாணியார் | பிள்ளைக்கண்ணுப் பிள்ளை |
| அச்சுதர் | ஆதிநாதப் பிள்ளை (1800) |
| செந்தாமரைக்கண்ணர் | பெரியதிருவடிப்பிள்ளை |
| செங்கண்ணர் | லக்ஷ்மண பிள்ளை (1856-1904) |
| போர்க்காரியார் | **ஆதிநாதப் பிள்ளை** (1901-பிறப்பு) |
| காரியார் | |
| **மாறன் சடகோபர்** | |

தென்குருகூர் இக்காலத்திற்றான் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு 'மாறனலங்காரத்தையும்', மகா. மகோபாத்தியாயர் சாமிநாதையரவர்களுக்குப் பலநூற்களையும் வழங்கியதென்பதில்லை. பண்டையிலும், பன்னிரண்டாம் நூற்றாண்டில் நாதமுனிக்கு நாலாயிரம் வழங்கியது.

நம்மாழ்வார் பாசுரங்களில் முதலாழ்வார் மூவருடைய பாக்களைப் போன்ற சில பாக்களுண்டு. சொல்லும், பொருளும் இயைந்தவை அப் பாக்கள். திருமங்கை மன்னன் பாக்களுக்கும் ஆழ்வாரருளிச் செயல்களோடு இயைபுண்டு. ஆகையால் ஆழ்வார் காலத்திற்கு முன்பே அவை குருகூரடைந்திருக்கவேண்டும். ஆழ்வார் அவற்றைத் தெளியக் கற்றிருக்கவேண்டும்.

பின்னால் வந்த மதுரகவிகளும் அவர் வழியினரும் நாலாயிரத்தையும் தொகுத்து வைத்திருந்தனர்போலும். மற்ற வைணவ ஆசிரியர்களெல்லாம் ஆழ்வாருக்கு முற்பட்டவராதலால் ஆழ்வாரும், மதுரகவிகளுமே நாலாயிரத்தையும் தொகுத்திருக்கலாம்.

---

# ஸம்ஸ்க்ருதப் பெண்கவிகள்

டாக்டர். வே. ராகவன், எம். ஏ., பிஎச். டி.

(343-ஆம் பக்கத்தொடர்ச்சி)

## லக்ஷ்மீ

**கி. பி.** 17-ஆவது நூற்றூண்டின் இறுதியிலும் 18-ஆவது நூற்றூண்டின் முற்பாதியிலும் ஸகல சாஸ்த்ர பாரங்கதராயும், விசேஷமாய் வ்யாகரணத்தில் மிகப் பெரியவராயும் விளங்கிய நாகோஜி பட்டரென்பவருக்கு வைத்தியநாத பாயகுண்ட என்ற தக்ஷிண ப்ராம்மண சிஷ்யரொருவரிருந்தார். இவரும் வ்யாகரணத்திலும் ஸ்ம்ருதியிலும் நிபுணர். இவருக்கு லக்ஷ்மீ என்ற ஒரு மனைவி இருந்தாள். இவர்கள் குமாரரான பாலக்ருஷ்ணர் (பாலம்பட்டர்) ஸ்ம்ருதியில் விசேஷ பாண்டித்ய முள்ளவராயிருந்தார். லக்ஷ்மீ, முத்கல கோத்ரத்தைச் சார்ந்த மகாதேவருடைய புத்ரீ.

யாக்ஞவல்க்ய ஸ்ம்ருதிக்கு விக்ஞானேச்வரர் எழுதிய 'மிதாக்ஷரா' என்ற வ்யாக்யானத்தின்மேல் 'லக்ஷ்மீ வ்யாக்யானம்' என்றோர் உபரிவ்யாக்யானம் வழங்கிவருகிறது. இதுபோலவே மாதவரின் காலநிர்ணயத்திற்கு 'லக்ஷ்மீ வ்யாக்யானம்' என்று ஒரு வ்யாக்யான நூல் இருக்கிறது. இவ்விரண்டு லக்ஷ்மீவ்யாக்யானங்களான ஸ்ம்ருதிநூல்கள் மேற்சொன்ன வைத்தியநாதரின் மனைவி லக்ஷ்மீ எழுதியவை என்று இந்நூல்களில் காணப்படுகின்றன.

ஆனல், இவை உண்மையில் லக்ஷ்மியால் எழுதப்பட்டவையாவென்று ஆராய்ச்சிசெய்ததில், இவை அவள் புத்திரரான பாலம்பட்டரால் எழுதப்பட்டு, தாயின் பேரால் வெளியிடப்பட்டிருக்கின்றன என்று தெளிவாய்த் தெரிகின்றது. இவற்றில், மிதாக்ஷரையின் வ்யாக்யானத்தில் மட்டும் ஒரு ஸ்த்ரீயின் மதி கலந்திருப்பது நன்கு விளங்குகிறது. ஒருவேளை நல்ல படிப்பாளியான லக்ஷ்மீ, ஸ்த்ரீகள் சம்பந்தமாய் ஸ்ம்ருதியிலுள்ள விஷயங்களில் தைர்யமாய்ப் புது அபிப்ராயங்களைக் கொண்டவளாயிருந்து, தன் மகனை யவ்வாறே எழுதவேண்டுமென்று கட்டளையிட்டிருக்கலாம். தன் தாயின் அபிப்ராயங்கள் தன் மனத்திற்கும் நல்லவையென்றுபட்டு பாலம்பட்டர் அவ்வபிப்ராயங்களைத் தைர்யமாய் எழுதி

யிருக்கலாம். பாலம்பட்டீ, லக்ஷ்மீ, என்ற இரண்டுபேராலும் குறிப்பிடப்படும் மிதாக்ஷரையின் வ்யாக்யானத்தில் ஸ்த்ரீகளின் நலத்திற்காகப் பல இடங்களில் அர்த்தம் ஸ்த்ரீகளுக்கு வெகு அநுகூலமாய் எழுதப்பட்டிருக்கின்றது. 'பிள்ளை', 'ஸஹோதரர்கள்' என்று வரும் இடத்தில், 'பிள்ளை'யென்றால் பெண்களும்கூட வென்றும், 'ஸஹோதரர்கள்' என்றால் ஸஹோதரிகளும்கூட வென்றும் 'பாலம்பட்டீ' சொல்லுகிறது. ஒருவரின் ஸொத்திற்கு ஸஹோதரனும் ஒரு ஸமயம் பாத்யமடைவான் என்றவிடத்தில் ஸஹோதரிக்கும் இவ்வுரிமையுண்டு என்பது பாலம்பட்டியின் அபிப்ராயம். ஸஹோதரனின் பிள்ளைகளை வார்ஸாகச் சொல்லுமிடத்து, ஸஹோதரியின் பிள்ளைகளும் வார்ஸுதான் என்று 'பாலம்பட்டி'யில் காணப்படுகிறது. பாலம்பட்டி என்ற நூல் பம்பாயில் ப்ரமாணமில்லை. காசியில் அது ஒரு ப்ரமாண நூலாகக் கருதப்பட்டாலும், ஸ்வீகார விஷயத்தில் அந்நூல் நந்தபண்டிதரின் நூலிற்குக் கீழ்ப்பட்ட ப்ரமாணந்தான். ஸ்வீகாரங்களைச் செய்துகொள்ள ஸ்த்ரீ கணவனின் உத்தரவு பெறவேண்டும் என்பது நந்தபண்டிதரின் கொள்கையாகும்; இதுவே ப்ரமாணமாய் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. பாலம்பட்டியோ கணவன் உத்தரவில்லாவிட்டாலும் ஸ்த்ரீ ஸ்வீகாரம் செய்துகொள்ளலாம் என்று சொல்லிவிட்டது. இதுபோலவே, ஒருவனின் நேர் வார்ஸுகளில் நாட்டுப்பெண்ணும் சேர்ந்தவள் என்பது பாலம்பட்டியின் மதம். இவ்வபிப்ராயங்கள் ஒரு ஸ்திரீ இந்நூலை எழுதுவதில் கலந்திருக்கிறாளென்பதையோ, தன் அபிப்ராயங்களை வெளியிடவேண்டுமென்று மகனை எழுதச்சொல்லி யிருக்கிறாளென்பதையோ காண்பிக்கின்றன.[1]

## த்ரிவேணீ

சென்ற 19-ஆம் நூற்றாண்டில் உதயேந்திரபுரம் அனந்தாசார்யர் என்றொரு கவியிருந்தார். இவர் 'யாதவ-ராகவ-பாண்டவீயம்' என்று முப்பொருள்கொண்ட ச்லேஷகாவ்யத்தை இயற்றினார். மூன்று கதைகள் ஒவ்வொரு ச்லோகத்திலும் அமைக்கப்பட்டிருக்கும். இக்காவ்யத்தில் க்ருஷ்ண கதை, ராமகதை, பாண்டவர்களின்கதை இம்மூன்றும் கங்கை, யமுனை, ஸரஸ்வதீ என்ற மூன்றாறுகளும் த்ரிவேணியில் ஒன்றாவது போலிருக்கும். ஆகையால் இதுபோன்ற முப்பொருள் காப்பியங்களை த்ரிவேணிக்கு ஒப்பிடுவது வழக்கம். அனந்தாசார்யர் இந்த த்ரிவேணி காவ்யத்தை

---

1. Source: P.V. Kane's History of Dharma Sastra Literature, Vol. I.

முடித்ததும் அவருக்கு ஒரு பெண் பிறந்தாள்; பிறந்த ஸமயத்தை யொட்டி அவளுக்கு த்ரிவேணீ என்று பெயரிட்டார்.

த்ரிவேணீ பின்பு ஸ்ரீபெரும்புதூர் ப்ரதிவாதி பயங்கரம் வேங்கடாசார்யர் என்பவருக்கு மனைவியானாள். த்ரிவேணியிருந்த காலம் கி. பி. 1817-1883. கல்யாணத்திற்கு முன்பே வித்தையை ஸம்பாதித்துக்கொண்டு நல்ல கவியாகிவிட்டாள். கல்யாணமான பிறகு, தன் கணவரிடம் சாஸ்த்ரக்ரந்தங்களைப் படித்தாள். இவளுக்கு ஒரே பிள்ளைதான் இருந்தான். அவனும், அவளுடைய கணவனும், இறந்து போனார்கள். விதந்துவாய்ப்போன பிறகு இவளுக்குத் தன்னகத்தில் சில விக்ரஹங்கள் அகப்பட்டன. இவளுடைய ஹ்ராரதி பஞ்சகம் என்ற கவியைக்கேட்டு த்ருப்தியடைந்திருந்த கலெக்டர் அவ்விக்ரகங்களை அவளிடமே கொடுத்துவிட்டார். இம் மூர்த்திகளுக்குக் கோயிலொன்று கட்டவேண்டுமென்ற அவாக்கொண்டு த்ரிவேணீ, திருவாங்கூர், மைசூர், இவ்விரண்டு ஸம்ஸ்தானங்களுக்கும் சென்றாள். மைசூர் திவான் ரங்காசாரியார் செய்த உதவியைக்கொண்டு ஆலயங்களைக் கட்டி முடித்தாள்.

ஸமஸ்யாபூர்த்தியென்பது, பழைய ச்லோகங்களின் ஓரடியைக் கொடுத்தால், அதற்குப் புதிதாய் மூன்றடிகள் கட்டி நிரப்புவது. இவ்வேலையில் த்ரிவேணீ மிக சாமர்த்யமுள்ளவள். இவள் ஏராளமாய் எழுதியிருக்கிறாள். இவள் எழுதிய அநேக ஸ்தோத்திரங்களில் முக்கியமானவை லக்ஷ்மி ஸஹஸ்ரமும், ரங்கநாத ஸஹஸ்ரமும். இவளுடைய மஹாகாவ்யங்களில் இரண்டு — ரங்காப்யுதயமும், ஸம்பத்குமாரவிஜயமும். காளிதாஸனின் இணையற்ற 'மேகஸந்தேசம்' என்ற சிறு காவ்யத்தை அனுசரித்துக் கணக்கில்லாக் கவிகள் தம் தம் ஸந்தேசங்களை எழுதியிருக்கிறார்கள். ஸந்தேசகாவ்யமென்றால் தூதுவிடு காவ்யம். இவ்வகையில் த்ரிவேணீ சுக (கிளி) ஸந்தேசம், ப்ருங்க (வண்டு) ஸந்தேசம், என்று இரண்டு எழுதியிருக்கிறாள். த்ரிவேணியின் பல நூல்களில் இரண்டு நாடகங்களுமுள. அவை ரங்கராட்ஸமுதயம், தத்வமுத்ராபத்ரோதயம். தத்வமுத்ராபத்ரோதயமென்பது வேதாந்தபரமான நாடகம். இது க்ருஷ்ணமிச்ருடைய ப்ரபோத சந்த்ரோதயம், வேதாந்த தேசிகருடைய ஸங்கல்ப ஸூர்யோதயம், முதலிய சாந்தரஸ நாடகங்களைப் பின்பற்றி எழுதப்பட்டது.

### மனோரமா

கேரளத்தில் கோழிக்கோட்டில் மனோரமா என்றொரு பண்டிதை இருந்ததாய்ச் சொல்லுகிறார்கள். அவளால் செய்யப்

பட்ட நூலொன்றும் அகப்படவில்லை. அவளுடைய விடுதிச்லோகங்களாவது அகப்படலாமென்று தேடியும் எனக்கு அகப்படவில்லை.

அவளைப்பற்றி ஒரு சிறு ஸம்பவத்தைமட்டும் எல்லோரும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவள் வ்யாகரணத்தில் பண்டிதை. அவளிடம் ஆண்களிலும் பலபேர் கற்க வந்தனர். ஒரு யுவா அவளிடம் இந்த சாஸ்த்ரத்தில் 'மனோரமா' என்று சொல்லப்படும் நூலைப் படித்துவந்தான். ஒரு நாள் "மனோரமையில் என் மனம் மிகவும் ஈடுபட்டிருக்கிறது" என்று இரு பொருள் கொள்ளும்படி அவன் பேச, அவனை அத்துடன் படிப்பின்றி மனோரமா அனுப்பிவிட்டாளாம்.

## லக்ஷ்மீ ராணீ

ஸ்ரீமத் பாகவதத்தில், தசமஸ்கந்தத்தின் உத்தரார்த்தத்தில், எண்பத்தொன்பதாவது அத்யாயத்தில் அழகிய சிறுகதை யொன்று இருக்கிறது. த்வாரகையிலுள்ள ஒரு ப்ராம்மணனின் குழந்தைகள் ஒவ்வொன்றாய் அல்பாயுஸ்களாய் மடிந்துபோக, அவ்வந்தணன் கிருஷ்ணனின் அரண்மனைக்கு வந்து "ராஜ்யத்தில் தர்மமில்லாமல் போனதால்தான் இப்படி அகால ம்ருத்யு தாண்டவமாடுகிறது" என்று கதறினான். இப்புலம்பலைக் கேட்டுக்கொண்டு அங்கு உட்கார்ந்திருந்த அர்ஜுனன் தன் காண்டீவத்தின் சக்தியிலுள்ள நம்பிக்கையால், ப்ராம்மணனைத் தேற்றி, "நான் ம்ருத்யுவை வரவொட்டாமல் செய்கிறேன்" என்று வில்லுங் கையுமாய் ப்ராம்மணனுடைய வீட்டிற்கு வந்தான். அங்கு குழந்தை இருக்கும் அறையைச் சரக்கூடால் மூடினான். ஆனாலும், ம்ருத்யு நுழைந்து அந்தக் குழந்தையையும் எடுத்துக்கொண்டு போய்விட்டான். மிகக் கோபங்கொண்டு பார்த்தன் தன் ரதத்திலேறி யமனைத் துரத்திக்கொண்டு சென்றும் பயனில்லை. கர்வம் குறைந்து அவன் குனிந்த தலையுடன் திரும்ப, க்ருஷ்ணனுடைய சக்கரத்தின் மஹிமையால் ப்ராம்மணரின் குழந்தைகள் மறுபடியும் உயிர்பெற்றெழுந்தன. இவ்வத்புதத்தைக் கண்டு பால்குனன், 'மனிதனுக்கு ஏதேனும் வீர்ய முண்டானால் அவையாவும் அவனருள்' என்று தீர்மானித்துக்கொண்டான்.

இக்கதையை மூன்று ஸர்க்கங்களடங்கிய சிறு காவ்யமாக ஒரு பெண்கவி எழுதியுள்ளாள். அக்காவ்யத்துக்கு 'ஸந்தான கோபால காவ்யம்' என்று பெயர். அதை எழுதியது, கேரளதேசப் பகுதிகளான கடதனாடு, இகவளம், கோவிலகம் என்ற இடங்களைச் சேர்ந்த லக்ஷ்மீராணீ என்ற ராஜஸ்த்ரீயாவள். இக்காவ்யத்தின் மூன்றாவது ஸர்க்கம் யமகாலங்காரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இக்காவ்யம் திருச்சூரில் அச்சாயிருந்தும் கிடைப்பது

அரிதாயிருக்கிறது. இதன் ஏட்டு ப்ரதிகள் இருக்கின்றன. லக்ஷ்மீ ராணி ராமவர்ம ராஜாவின் தாயார்.

### ஸுந்தரவல்லி

சுமார் முப்பத்தைந்து வருஷங்களுக்குமுன் மைசூரில் ஸுந்தரவல்லியென்று ஒரு ஸ்த்ரீ ஸம்ஸ்க்ருதத்தில் நல்ல கவிதா சக்தி பெற்றவளாயிருந்தாள். அவள் தந்தைக்கு நரஸிம்ம ஐயங்கார் என்று பெயர். அவள் கஸ்தூரி ரங்காசார்யரின் சிஷ்யை. ராமாயணக்கதையை கத்யபத்யமான சம்பூகாவ்ய ரீதியில் ஆறு ஸர்க்கங்களில் 'ராமாயண சம்பூ' என்று ஸுந்தரவல்லி எழுதியிருக்கிறாள். இந்நூல் பங்களூரில் அச்சாயிருக்கிறதாகத் தெரிகிறது.

### ஞானஸுந்தரீ

முப்பது வருஷங்களுக்குமுன் கும்பகோணத்தில் ஞானஸுந்தரீ என்ற தேவதாஸியொருத்தி நல்ல கவியென்ற புகழ்வாய்ந்தவளாயிருந்தாள். இவள் குப்புஸ்வாமி சாஸ்திரிகள் என்றவருடைய புத்ரியும் சிஷ்யையுமானவளென்று சொல்லுகிறார்கள். இவள் ஏராளமாய் எழுதியிருக்கிறாள். இவளது கலையையும், கவிதையையும் பற்றி வயோதிகராயிருக்கும் பலருக்குத் தெரிந்திருக்கலாம். கதை, பாட்டு, நாட்யம் முதலியன ப்ரஸித்தமாய்ச் செய்துகொண்டிருந்ததாகத் தெரிகிறது. மதுரையில் இருந்த ஆர். பிஷர் (*R. Fisher*) என்னும் வக்கீல் (*Bar-at-law*), இவளை ஆதரித்தவர்களில் ஒருவராம். மைசூர் ஸம்ஸ்தானம் சென்று 'கவிரத்னம்' என்று பட்டம் பெற்றாள். இவளுடைய நூல்களில் 'ஹாலாஸ்ய சம்பூ' என்று சொல்லப்படும் நூலொன்றே ப்ரஸித்தமாய்க் கிடைக்கிறது. இது ஆறு ஸர்க்கங்களில் மதுரைக்ஷேத்திரத்தின் கதைகளைச் சம்பூ வகையில் எழுதிய காவ்யம்.

### காமாக்ஷீ அம்மாள்

மாயவரத்திலுள்ள துபாஷ் அக்ரஹாரத்தைக் கட்டித் தானஞ்செய்த துபாஷ் ராமஸ்வாமி ஐயர் என்று சுமார் நூறு வருஷங்களுக்கு முன்னிருந்த ஓர் ஆந்த்ரப்ராம்மணரின் ஸந்ததியில் ஸமீபகாலத்தில் காமாக்ஷீயம்மா என்ற ஒரு விதுஷி இருந்தாள். இவள் முதலில் தெலுங்கில் நல்ல படிப்புள்ளவளாயிருந்தாள். 1871-ஆம் வருஷம் இவள் கல்யாணமான சில வருஷங்களுக்குள் தன் கணவனான யனமந்த்ரம் ராமலிங்கையா என்றவரை இழந்தாள். இதன்பிறகு இவளுக்குப் படிப்பில் மிகவும் ஊக்கம் வந்து, ஸம்ஸ்க்ருதத்தில் வித்பன்னையாகித் தர்க்கம், அத்வைத வேதாந்தம் இவ்விரண்டிலும் பெரும் நூல்களையும் நன்றாய்க் கற்று

ஸ்வாதீனமாக்கிக் கொண்டாள். இவள் தர்க்கத்தில் ஒரு நூலும், அத்வைத வேதாந்தத்தில் இரண்டு நூல்களும் இயற்றியிருக்கிறாள். மூன்றும் அச்சில் இருக்கின்றன. மூன்றும் வ்யாக்யான நூல்கள். அவற்றின் பெயர்கள் நியாயபோதினீ நீலகண்டீய விஷயமாலா,[1] அத்வைத தீபிகை, ச்ருதிரத்ன ப்ரகாசிகை. இவை கும்பகோணம் ஸ்ரீவித்யா அச்சுக்கூடத்தின் மூலம் வெளியாயின. இந்நூல்களைக் கண்டு ஆங்காங்குள்ள பெரிய சாஸ்திர வித்வான்கள் புகழுரைகள் எழுதியிருக்கிறார்கள். மிகவும் நிரடான அத்வைதஸித்தி, ப்ரம்மாநந்தி முதலிய அத்வைத நூல்களில் இந்த ஸ்த்ரீ யடைந்திருந்த பாண்டித்யத்தை மஹாமஹோபாத்யாய சந்த்ரசேகர சாஸ்த்ரிகள், த்ராவிட லக்ஷ்மண சாஸ்த்ரிகள், வாஸுதேவ ப்ரம்மேந்த்ர ஸரஸ்வதீ யென்ற ஸந்நியாசிகள், முதலியோர் வியந்து புகழ்ந்திருக்கிறார்கள். மேற்சொன்ன நூல்களில் இவள் எழுதியிருக்கும் சில கவிகளும் அழகாயிருக்கின்றன.

முன்சொன்ன மாயூரம் காமாக்ஷியம்மாவைப்போல் இன்னும் மூன்று சாஸ்த்ர விதுஷிகளைப்பற்றியும் இங்கே சொல்லலாமென்று நினைக்கிறேன். மத்யார்ஜுனம் என்ற திருவிடைமருதூரில் அம்பா அம்மாள் என்று ஒரு பண்டிதை இருந்ததாகவும், ஸமீபகாலத்தில் அவள் சில நூல்கள் எழுதியிருப்பதாகவும் சொல்லுகிறார்கள். திருவையாறென்ற பஞ்சநதக்ஷேத்திரத்தில், என் மாமன், பெரிய தாயார், முதலியோருக்கு நன்றாய்த்தெரிந்த பண்டிதை யொருத்தியிருந்தாள். அவள் பெயர் குட்டியம்மாள் என்றும் லக்ஷ்யாநந்தம் என்றும் சொல்லுகிறார்கள். இவள் பெரிய பணக்காரக் குடும்பத்தில் பிறந்து பால்யத்தில் விதந்துவானாள். பிறகு பல இடங்களுக்குத் தாயாருடன் யாத்ரை செய்தாள். ஸம்ஸ்க்ருத பாண்டித்யத்தை நன்கு ஏற்படுத்திக்கொண்டு சாஸ்த்ரங்களையும் அப்யாஸஞ் செய்து கொண்டாள். கடைசியில் திருவையாற்றில் தங்கி, வெகு ப்ரஸித்தையாயிருந்தாள். எங்கள் ஊரான திருவாரூரிலேயே ஓகை ஸுந்தரியம்மாள் என்ற ஒரு பண்டிதை யிருந்தாள். நல்ல ஸம்ஸ்க்ருத வித்பன்னையாயும், ஸம்ஸ்கிருதத்தில் பேசுந்திறமை வாய்ந்தவளாயுமிருந்தாலும், இவள் நூலொன்றும் எழுதவில்லை. குட்டியம்மாளும் ஒன்றும் புத்தகரூபமாய் எழுதவில்லை யென்று தோன்றுகிறது. ஸுந்தரிப் பாட்டியை நான் பார்த்திருக்கிறேன். என் தங்கைக்கு அவள் சில ஸமயம் காவ்யார்த்தங்கள் சொன்னதுண்டு. ஸுந்தரிப் பாட்டியின் பெரியோரொருவர் கவனஞ்செய்த ராமாயண ஓடம் ஒன்று மிகவும் அழகாயிருக்கும். அதை அவளிடம் நான் கேட்டு எழுதி வைத்திருக்கிறேன்.

---

1. இது 1912-ஆம் வருஷம் வெளியாயிற்று.

# சாஸ்திரம்

## நமது நாற்கால் நண்பர்கள்

ராவ்சாஹிப் வி. பி. சுப்பிரமணிய முதலியார்

---

பல்லாயிர வருடங்களுக்கு முந்திய காலத்தில், மனிதர்கள் வீடுகளில்லாமல் காடுகளில் மிருகங்கள்போல வாழ்ந்து வந்தார்கள். அந்தக் காலத்தில், அவர்கள், மிருகங்களை வேட்டையாடிக் கொண்டும், மிருகங்களால் வேட்டையாடப்பட்டுக்கொண்டு மிருந்தார்கள். இப்படி யிருந்துவந்த நெடுங்காலத்துக்குப் பின்பு அவர்கள் காட்டு மிருகங்களை வீட்டு மிருகங்களாகப் பழக்கி, யுத்த காலங்களிலும் சமாதான காலங்களிலும் தங்களுக்கு வேண்டிய வாறு பலவகையாக உபயோகப்படுத்துவாரானார்கள்.

இவ்வாறு பழக்கப்பட்ட மிருகங்கள், மனிதர்களுக்குப் புலிகள்போலப் பகையாயிராமல் நாய்கள்போல நட்பாயிருப்பதனால், 'நமது நாற்கால் நண்பர்கள்' எனத் தக்கவையாயின. பழக்கப்பட்ட மிருகங்களில் பிரதானமானவை, யானை, குதிரை, ஒட்டகம், மாடு என்பவைகளாம். இவைகளைப்பற்றிய சில விவரங்கள் பின்வருவன:—

### யானை

யானை, தரையில் வாழும் பிராணிகளெல்லாவற்றினும் பருமனும் பலமும் உடையதாயிருப்பதோடு, மற்ற மிருகங்களுக்கில்லாத வேறு சிறப்புத் தன்மைகளும் உடையது; அதன் உடலின் பெருமையை நோக்க, மிகவும் குறுகிய கழுத்தும் சிறுத்த கண்ணும் உள்ளது. யானையின் கால்கள் ஏனைய மிருகங்களின் கால்கள் போலன்றி, முடக்கில்லாமல், நேரானவைகளாய், தூண்கள் போன்றிருக்கின்றன. அதன் மூக்கும் மேலுதடும் ஒன்று சேர்ந்து அமைந்த துதிக்கை, விசேடமாகச் சிறந்ததென்பது விரித்துரைக்க வேண்டியதில்லை. அந்தத் துதிக்கை, புல், குழை முதலிய உணவுப்பொருள்களையும் தண்ணீரையும் எடுத்து வாயின் உள்ளே சேர்த்தற்கும், உத்திரம் போன்ற பெரிய பொருள்களை

யும், ஊசி போன்ற சிறிய பொருள்களையும் இலகுவாகப் பற்றி யெடுத்தற்கும், மனிதரின் கையும் விரலும் செய்யும் வினைகளுள் பலவற்றைச் செய்தற்கும் ஏற்றதாயிருக்கின்றது. யானைக்குக் கழுத்துக் குறுகியதாயிருத்தலால், போதிய அளவு குனிந்து புல் மேயவும் தண்ணீர் குடிக்கவும் கூடாத குறையைத் துதிக்கை நிரப்புகின்றது.

பழக்கப்பட்ட மிருகங்களுள் மற்றவையெல்லாம் இளமைப் பருவத்திலன்றிப் பயன்படு தொழில்களும் விளையாட்டு வித்தை களும் பயிற்றக் கூடாதனவாயிருப்ப, யானைமட்டும் இளமை நீங்கிய பின்பும் எளிதாகப் பயிற்றக்கூடியதாயிருப்பது அதன் சிறப்புத் தன்மையாம்.

கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே, எகிப்தியர்களால் யானைகள் யுத்தங்களில் உபயோகிக்கப்பட்டன; பிந்திய காலங்களில் பகைவர்களைக் கொம்புகளாற் குத்தித் துளைத் தும், துதிக்கையாற் கட்டி நெரித்தும், காலால் மிதித்து நசுக்கியும் கொல்லவும், கோட்டை வாயிற் கதவுகளை முட்டித்திறக்கவும், பீரங்கிகளைக் கொண்டுபோகவும் உபயோகப்படுத்தப்பட்டன. சமாதான காலங்களில், காடுகளில் வெட்டி வீழ்த்தப்பட்ட விருட்சங்களை வேண்டுமிடங்களுக்குக் கொண்டுபோகவும், புலி வேட்டையாடுவோர் அச்சமின்றி ஏறிச் செல்லவும் உதவுகின்றன; நாடு நகரங்களில், ஆடையாபரணங்களால் அலங்கரிக்கப்பெற்று அம்பாரி மேல் வைத்துக் கட்டப்பட்டு, அரசர், பிரபுக்கள், மண மக்கள், முதலியோர் கோலாகலமாகப் பவனிவரும் வாகனமாகவும் ஆடம்பர வைபவங்களைச் சிறப்பிக்கின்ற கம்பீரமான காட்சிப் பொருளாகவும் உபயோகப்படுகின்றன.

யானைக்குக் கர்ப்பகாலம் இரண்டுமாதங் குறைய இரண்டு ஆண்டாகவும், வளர்ச்சிக்காலம் இரண்டு வியாழ வட்டமாகவும், உன்னதம் இரண்டு ஆள் உயரமாகவும், ஆயுசு இரண்டு நூற்றாண் டாகவு மிருப்பது அறியத்தக்கது.

## குதிரை

குதிரைகளுக்குக் குளம்புகள் பல்லாயிர வருடங்களுக்கு முன் ஒவ்வொரு காலிலும் நான்காயிருந்தனவென்றும், அவைகள் கால கதியில் மூன்றாகி, இரண்டாகி, ஒன்றாகியிருக்கின்றனவென்றும், குதிரைகளின் பிறப்பிடம் அமெரிக்காவென்றும், அவைகள் அங்கிருந்து மற்றக் கண்டங்களுக்குப் பரவினவென்றும், யாது காரணத்தினாலோ அமெரிக்காவில் ஒன்றுமில்லாமல் ஒழிந்து போயினவென்றும், கோலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்த

போது அங்கே குதிரையே யில்லாதிருந்ததென்றும், பின்பு அங்கே குதிரைகள் ஐரோப்பியரால் கொண்டுபோகப்பட்டு, விருத்தியாயினவென்றும், இப்போது அமெரிக்காவைப் போலக் குதிரை மிகுந்த இடமில்லையென்றும் பிராணி நூலார் வாயிலாக வும் சரித்திராசிரியர் வாயிலாகவும் அறிகின்றோம்.

குதிரைகள் சரித்திர காலத்துக்கு மிக மிக முற்பட்ட சிலா காலத்திலேயே (*Stone age*) மனிதராற் பழக்கப்பட்டும், அவர்கள் எழுதவும் படிக்கவும் பழகுதற்குப் பல்லாயிர ஆண்டுகட்கு முன்னரே ஏறி நடத்தப்பட்டும், உணவாக உபயோகிக்கப்பட்டும் வந்தனவென்று விஞ்ஞான சாஸ்திரம் வெளியிடுகின்றது.

குதிரைகள் இங்கிலாந்து முதலிய சில தேசங்களில் உழு தொழில் புரிகின்றன. அவைகள் எல்லாத் தேசங்களிலும் ஏறு குதிரையாகவும், பொதிக் குதிரையாகவும், பாரவண்டிக் குதிரை யாகவும், உபயோகிக்கப்படுகின்றன; அதன்றி ,வேறு பல வேலை களிலும் உபயோகமாகின்றன. குதிரைகள் உபயோகிக்கப்படும் தொழில்கள் காரணமாக, வேட்டைக் குதிரை, பந்தயக் குதிரை, போலோக் குதிரை (*Polo ponies*), போர்க் குதிரை யெனப் பல பெயர்கள் வழங்கப் பெற்றிருக்கின்றன. படையில் ஒரு முக்கிய மான பகுதி குதிரைப்படை யென்பது கூறவேண்டியதில்லை.

குதிரை மனிதனினும் மூன்று மடங்கு வேகமும் இருபது மடங்கு பலமும் உடையதென்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

## ஒட்டகம்

ஒட்டகங்கள், ஒரு திமில்* உடையனவும் இரு திமிலுடை யனவுமென இருவகைப்படும். முன்னதை அரேபியாவிலும் பின்னதை மத்திய ஆசியாவிலும் காணலாம். ஒட்டகங்களுக்குப் பிறப்பிடம், குதிரைகளுக்குப் போலவே, அமெரிக்காவென்பது குறிக்கத்தக்கது. இக்காலத்தில் ஒட்டகங்கள் ஆஸ்திரேலியாவுக் கும் வேறிடங்களுக்கும் கொண்டுபோகப்பட்டு விருத்தி செய்யப் பட்டிருக்கின்றன.

ஒட்டகம், வளமற்ற வறண்ட காடுகளில் வளர்வனவும் மற்ற மிருகங்களெல்லாம் வெறுப்பனவுமான கசப்பும் முள்ளுமுள்ள செடிகளை விருப்போடு மேயும்; உவர்த் தண்ணீரை உவப்புடன் குடிக்கும். அதற்கு இரைப்பையில் பல நாட்களுக்குப் போது மான தண்ணீரைச் சேமித்துவைக்கும் பல சிறு பைகளுண்டு.

---

*இமில், சிமிழ், திமில், முரிப்பு ஆகிய நான்கும் ஒருபொருள் குறித்தவை,

ஒட்டகத்தின் பாதங்கள் 'பாவடி' என்றவாறு பரந்தவைகளாய் மணலில் அழியாதவைகளா யிருக்கின்றன. இத்தன்மைகளால் ஒட்டகம் தண்ணீர் கிடையாததாய்க் கடல்போல விரிவான மணல் வனாந்தரங்களைக் கடப்பதற்குத் தக்க சாதனமாயிருக்கின்றது. இவ்வாறிருத்தல்பற்றி, ஒட்டகத்திற்கு வனாந்தரக் கப்பல் என ஒரு பெயர் வழங்கப் பெற்றிருக்கின்றது.

அராபியர், ஒட்டகத்தின் இறைச்சியை உணவாகவும், பாலைப் பானமாகவும் உபயோகிப்பார்கள்; அதன் உரோமத்தைக்கொண்டு உடுக்கும் ஆடையும், கூடாரச் சீலையும் செய்வார்கள்; அதன் முதுகின்மேல் அம்பாரிபோல் அமைத்த 'படவீடு' என்னும் கூடாரத்தில் குடும்பத்தோடிருந்து பிரயாணஞ் செய்வார்கள். இவ்வாறாக ஒட்டகம், அராபியருக்குத் தின்ன மாமிசமும், குடிக்கப் பாலும், உடுக்க ஆடையும், குடியிருக்க வீடும், சவாரியும் யுத்தமுஞ் செய்யக் குதிரையும், மூட்டைச் சுமக்கப் பொதியெருதும், மணற் பாலைவனக்கடலைக் கடக்கக் கப்பலுமாயிருக்கின்றது.

## மாடு

(பசு, காளை: எருமை, கடா.)

ஒட்டகங்கள், ஒரு திமிலும் இரு திமிலும் உடைமை காரணமாக இருவகைப்பட்டதுபோல, மாடுகளும் (காளைகளும் பசுக்களும்) திமில் உள்ளவை, திமில் இல்லாதவையென இருவகைப் பட்டிருக்கின்றன. இந்தியா தேசத்து மாடுகள் திமிலுடையவை. ஐரோப்பிய கண்டத்து மாடுகள் திமில் இல்லாதவை.

இந்தியா தேசத்தைப் போல மாடுகள் இன்றியமையாத தேசம் உலகத்தில் ஒன்றுமில்லை யென்றும், இந்தியரில் நூற்றெண்பது பங்கினருக்கு விவசாயமே பிழைப்புத் தொழிலாயிருக்கிறதென்றும், எஞ்சிய இருபது பங்கினரில் பதினைந்து பங்கினர் விவசாயத்தோடு நெருங்கிய தொடர்புடைய தொழில்களை சீவனோபாயமாக உடையாரென்றும் அறிஞர்கள் கூறுகின்றனர். அதனால், விவசாயம் இந்தியாவுக்கு முக்கியமானவற்றுள் முக்கியமானதென்பது தெளிவாம். இந்திய விவசாயத்துக்கு மாடு இன்றியமையாததென்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. ஆதலால் 'இந்தியாவுக்கு உயிர்நிலை விவசாயம்' * என்றும் 'இந்திய விவசாயத்துக்கு உயிர்நிலை மாடு' † என்றும் கூறப்பட்டிருப்பது முழுதும் உண்மையேயாம்.

---

* "Agriculture is the backbone of India."

† "Cattle in India are the backbone of agriculture."

குடியானவர்கள், விவசாய வேலைகள் கொஞ்சங்குறைய எல்லாவற்றையும் மாடுகளைக் கொண்டே செய்விக்கின்றார்கள். உழுதல், விதைத்தல் முதலாக அறுவடை யிறுதியாக பயிர்த் தொழில் முழுவதும் இயந்திரங்களைக் கொண்டு செய்யும் அமெரிக்கர் முதலிய மேல்நாட்டுக் கிருஷிகர்போல இந்திய விவசாயிகள் மாடுகளுக்குப் பதிலாக இயந்திரங்களை உபயோகிக்கும் காலம் சமீபமாக இல்லை. காளைமாடுகள், உழுதலும், பரம்படித்தலும், பயிரடித்தலும், தண்ணீர் இறைத்தலும் செய்கின்றன; நெல் முதலிய விளைபொருள்களைப் பொதியெருதுகளாகச் சுமந்தும் வண்டிக் காளைகளாக வண்டியில் வைத்து இழுத்தும் மணல், சேறு, மேடு, பள்ளம் மிகுந்துள்ள கஷ்டமான பாதைகள் வழியாகக் களஞ்சியங்கள், சந்தைகள் முதலிய இடங்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன; எண்ணெய் வித்துக்களைச் செக்கில் ஆட்டலும், கரும்புகளை ஆலையில் அரைத்தலுமாகிய உழைப்புகளைச் செய்கின்றன. பசுமாடு, அனேகமாக, வருடந்தோறும் ஒரு கன்று ஈனுதலோடு, குழந்தைகள் நோயாளிகள் முதலியோர்க்கு உபயோகமான பாலுங் கொடுக்கின்றது. ஆணும் பெண்ணுமாகிய மாடுகளெல்லாம் நிலத்தை வளப்படுத்தி விளைவை மிகுவித்தற்கு உதவுகின்ற சாணமும் மூத்திரமும் தருகின்றன.

ஹிந்துக்களின் சமயச் சடங்குகளான சுபாசுப கருமங்களில், மாடுகள் பிராம்மணருக்கும் கோயில்களுக்கும் தத்தம் பண்ணப்படுகின்றன. இறந்துபோனவர்களுக்கு, இந்த உலகத்தில் பிரசித்தி உண்டாகவும், மேல் உலகத்தில் நன்மை விளையவுங் கருதி, அவர்களுடைய சந்ததியார், இளங்காளைகளைக் கோவிற்காளைகளாகச் சுவாமிக்கு நேர்ந்துவிடுகிறார்கள். அவைகள் தெய்வமாகக் கருதப்பட்டு பயிராயிருக்கும் புலங்களுள்பட எல்லா நிலங்களிலும் எவராலும் தடை செய்யப்படாமல் யதேச்சையாய்த் திரிந்து மேய்ந்து செழிப்பாக வளர்ந்து பசுக்களைச் சினையாக்கப் பயன்படுகின்றன.

பசுவின் பால், தயிர், நெய், சாணம், மூத்திரம், ஆகிய ஐந்தும் கலந்த பஞ்சகவ்வியம் சுத்திசெய்யும் சடங்கில் பிரயோகிக்கப்படுகின்றது.

மாடுகள் இறந்த பின்னும் உபகாரப்படுதல் ஒழிவதில்லை. கோரோசனை, சில மாடுகளின் பித்தநீர்ப்பை (*Gall bladder*) யினின்று எடுக்கப்படுகிறது. செத்த மாட்டின் முழு உடம்பையும் உரம் (எரு) ஆக உபயோகிக்கலாம். ஒரு மாட்டின் உடலானது மழை, வெயில், காற்றுக் குட்படாதபடி பாதுகாத்துப் பருவப்

படுத்திய முப்பது வண்டி யெருவுக்குச் சமானமென மதிப்பிடப் பட்டிருக்கின்றது. பின் வருவது டாக்டர் ஷார்ட் என்பவரது 'இந்திய கால்நடைச் சுவடி' (*Manual of Indian cattle*) யில் உள்ளதன் கருத்து:—

கொல்லப்பட்ட மாட்டு மாமிசம், உலகத்திற் பெரும்பாலா ரான மனிதருக்கு உணவாகின்றது. அதன் தோல், பதனிடப் பட்டுப் பலவாறு உபயோகப்படுகின்றது. கொம்புகள், பெட்டி களாகவும் சீப்புக்களாகவும் கத்திக் கைப்பிடிகளாகவும் பான பாத்திரங்களாகவும் உருவாக்கப்படுகின்றன. எலும்புகள் தந்தங் களுக்கு அடுத்தபடியாக உபயோகிக்கப்படுகின்றன. தோற்கழிவு களையும் குளம்புகளையும் கொதிக்கவைத்து வச்சிரப்பசை உண்டாக்கப்படுகின்றது. நரம்புகளைச் செம்மார்களும் பிறரும் நூலுக்கும் கயிறுக்கும் பதிலாக உபயோகிக்கின்றார்கள். குளம்பு களிலிருந்து செய்யப்படும் நீற்றுயில் (*Neat oil*) என்ற எண்ணெய் தோல்களை மிருதுவாக்குதற்கு மிகச் சிறந்த சாதன மாயுள்ளது. கொழுப்பிலிருந்து மெழுகுவத்திகள் செய்யப்படு கின்றன. இவ்வாறாக மாட்டின் உடம்பான எந்தப் பகுதியும் பயன்படுத்தப்படாமல் அவமாவதில்லை.

குடியானவர்கள் தங்கள் பிள்ளைகள் இறந்ததற்கும் அதிகமாக மாடுகள் இறந்ததற்குத் துக்கப்படுவதை, இதனை எழுதுபவர், மிருக வைத்திய இலாகா உத்தியோகத்தராயிருந்தபோது பார்த் திருக்கின்றார். இப்படிப்பட்ட காட்சி, மாடுகள் குடியானவர் களுக்கு எவ்வளவு உபகாரமாயிருக்கின்றன வென்பதைத் தடிகொண்டடித்துத் தெரிவித்தாற்போல(!) மனத்துள் என்றும் மறவாதழுந்தும்படி வற்புறுத்தித் தெரிவிப்பதாம்.

மாடுகளால் ஆதிமனிதர் அடைந்த நன்மைகள் அடியில் வருவனவற்றால் விளங்கும்:—

தமிழ்மொழியில் மாடு என்ற சொல் செல்வம் என்றும் பொருள்படுவதுபோலவே, பல பாஷைகளில் மாட்டைக் குறிக்கும் சொற்களுக்குச் செல்வம் என்ற பொருளும் இருத்தல் கவனிக்கத் தக்கது. இதன் காரணம், அதி பூர்வகாலத்திலிருந்த மனிதருக்கு மாடே செல்வமாயிருந்ததேயாம். அக்காலத்தில் அதிக மாடு களுடையவர்கள் அதிகச் செல்வமுடையவர்களாகவும், குறைந்த மாடுகளுடையவர்கள் குறைந்த செல்வ முடையவர்களாகவும் மதிக்கப்பட்டிருந்தார்கள்.

மனிதர் காட்டுமாட்டைப் பிடித்து அடக்கி வசப்படுத்திய காலமே நாகரிகம் துவங்கிய காலமென்றும், அதுவரையும் நிலைப்


பிடமின்றி மிருகங்கள்போலத் திரிந்துகொண்டிருந்த மனிதர்களே தமக்கு அகப்பட்ட மாடுகள் தப்பியோடிவிடாமல் கட்டுப்பட்டுத் தங்கிநிற்கும் (தொழு) இடங்களையும் அவைகளைத் தாங்கள் பக்கத்திலிருந்து காத்துக்கொண்டிருக்கும் (குடில்) இடங்களையும் நிலைவரமாக உபயோகிப்பாரானார்களென்றும், பசியை நீக்க வேட்டையாடும் அவசியமின்றி தம் வசமாயிருந்த மாடுகளின் மாமிசத்தைப் புசித்தும், வாடை குளிர்களால் வருந்தாமலிருக்க அந்த மாடுகளின் தோலை உடுத்தும், சுமைகளைச் சுமத்தலும் இழுத்துக்கொண்டு போதலும் ஆகிய வேலைகளை அம்மாடுகளை செய்யச்செய்தும் வாழ்வார்களானார்களென்றும், இவ்வாறாக நாகரிகத்துக்கு முதற்காரணம் மாடு என்றும் விஞ்ஞானசாஸ்திரிகள் விளம்புகின்றார்கள்.

முன், இந்திய விவசாய விசாரணைக் கமிட்டித் தலைவராயிருந்து இந்தியாவெங்குஞ் சென்று, இந்தியாவின் பல நிலைமைகளையும் தாமே நேரில் பார்த்தும் விசாரித்தும் தெரிந்துகொண்டு செய்த முதிர்ந்த ஆலோசனையின் முடிவாக, இந்தியாவின் செல்வ முன்னேற்றத்துக்கு முதற்படி மாட்டின் முன்னேற்றமே யென்ற கொள்கையுடையவரும், இப்போது இராசப்பிரதிநிதி யாயிருப்பவருமான லின்லித்சோப் பிரபு, தாம் இந்திய இராச்சியாதிகாரத்தை மேற்கொண்ட தொடக்கத்தில், மாடுகளை அபிவிருத்தி செய்தலே இந்தியாவின் முன்னேற்றத்துக்கு முதன்முதற் செய்யவேண்டியதாகக் கருதித் தம் சொந்த செலவில் சில பொலி யெருதுகளை விலைக்கு வாங்கிவிட்டு மற்றவர்களையும் அவ்வாறு செய்யும்படி தூண்டிவருகிறாரென்றால், மாட்டின் சிறப்பை வற்புறுத்த வேண்டுமோ?

கண்ணபிரானும் சகதேவனும் மேய்த்த மாடுகளின் சந்ததிகளாய், இப்போது இந்தியாவிலிருக்கின்ற உயர்சாதி மாடுகளுக்குத் தாழ்வானவைகளாயிருந்த இங்கிலாந்து தேசத்து மாடுகளில் சிறந்தவைகளைத் தெரிந்தெடுத்து அவைகளை ஆங்கில கால்நடை அபிவிருத்தியாளர் ஏறக்குறைய இரண்டு தலைமுறைக் காலமாகச் சாஸ்திரமுறையாக அபிவிருத்தி செய்த விடாமுயற்சியின் பயனாக அம்மாடுகளிலே சிறந்த காளை ஆறு வயசாயிருந்தபோது 1 டன், 6 அந்தர் வெயிற்று நிறையுள்ளதாயிருந்ததும், சிறந்த பசு 338 நாளில் 3001 காலன் பால் கொடுத்ததும் கால் நடைகள் வைத்திருப்பவர் யாவரும் கவனிக்கத்தக்கவை. (ஒரு டன் இரண்டாயிரத்திருநூற்று நாற்பது ராத்தல்; இரண்டுவண்டி பாரம். ஒரு அந்தர்வெயிற்று, நூற்றுப் பன்னிரண்டு ராத்தல். ஒரு காலன், இரண்டரைப் பட்டிணம் படி.)

ஆங்கிலேய கால்நடைக்காரரை அடியொற்றி, இந்திய மன்னர்களும், ஜமீன்தார்களும், பிரபுக்களும், பெருஞ் செல்வவான்களும், குடியானவர்கள் கூட்டுறவுச் சங்கங்களும், இடை விடாமல் தொடுத்து ஒரு தலைமுறைக் காலமாவது கால்நடையை யபிவிருத்தி செய்வார்களானால், இந்திய கால்நடைகள் இங்கிலாந்தின் கால் நடைகளுக்குப் பிந்தாத சிறப்புடையனவாமென்பது மிகை யாகாது.

செம்மறியாடும், வெள்ளாடும், பன்றியும், நாயும், நமக்கு உபகாரமானவைகளாய் நமது நாற்கால் நண்பர்கள் எனத்தக்கவைகளானாலும், அவைகளின் விருத்தாந்தங்கள் விரிவஞ்சி விடுக்கப் பட்டன.



# வாயுமண்டலமும் வாயுக்களும்

'கிருஷ்ணன்'

---

**ந**மது பூகோளத்தைச் சுற்றிலும் சுமார் 200 மைல் வரையில் வாயுமண்டலம் வியாபித்திருக்கிறது. வாயுமண்டலம் இல்லையேல் உயிரினங்கள் வாழ முடியாது என்பது எல்லோரும் அறிந்ததுதான். இவ் வாயுமண்டலத்தைப்பற்றி அநேக நூற்றாண்டுகளாகப் பல விஞ்ஞானிகள் பலவிதமான எண்ணங்களைக் கொண்டிருந்ததாகத் தெரியவருகிறது. அவைகளைக் காலக்கிரமப்படி ஒன்றன் பின்னொன்றாக ஆராய்ந்தால், அநேகமாய் சென்ற பல நூற்றாண்டு களாகப் படிப்படி முன்னேற்றமடைந்த ரசாயன வளர்ச்சி நூலையே கற்றதாக ஆகும்.

பண்டைக் காலத்தில் ஆகாய வெளியையும் வாயுமண்டலத்தையும் தெய்விகத் தன்மை வாய்ந்ததாகக் கருதிவந்தார்கள். கண்ணாற் பார்க்க இயலாத பொருள்கள் இருப்பதாக நம்பிக்கை ஏற்படுவது கடினமாக இருந்தது. பின்பு நிலம், நீர், ஒளி, காற்று, வெளி, என்னும் பஞ்சபூதங்களின் உண்மைகளை அறிந்தவுடன் ஐம்பொறிகளில் ஏதாவது ஒன்றின் வாயிலாக அறியக்கூடிய பொருள்களை மட்டுமே ஒப்புக்கொண்டு, காற்றின் தன்மையையும் இருப்பையும், மணம், உணர்ச்சி இவைகளால் அறிய முடிந்தமையால், காற்றையும் பஞ்சபூதங்களில் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டார்கள்.

ஆனால், மேல்நாட்டு விஞ்ஞானிகள், சில நூற்றாண்டுகளுக்கு முன்புவரை நிலம், நீர், ஒளி, காற்று, இந்நான்கு பொருள்களால் தான் எல்லாவகையான பொருள்களும் ஆக்கப்படுகின்றன என்று சொல்லிவந்தனர். மற்றும் காற்றுள்ள இடத்தில் விளக்குகள் நன்றாக எரிவதும், அடைபட்ட இடங்களில் சிறிது பொழுது நன்றாக எரிந்து பின் மங்கி அணைந்துவிடுவதும் அவர்களுக்கு ஓர் ஆச்சர்யத்தைக் கொடுத்தன. அடைபட்ட இடங்களில் விளக்குகள் ஏன் அணைகின்றனவென்றால், அவைகளினின்றும் அவ்விளக்குகளுக்குள்ளிருக்கும் சுவாலைகள் வெளியேறமுடியாமல் அடைபட்டு இருப்பதால்தான் என்று சமாதானம் கூறிவந்தனர்! வாயுமண்டலத்தின் தன்மை என்ன? சுவாலைகள் அடைபடாத

இடங்களில் நன்றாக எரிவானேன்? அடைபட்ட இடங்களில் மங்கி அணைந்து போவானேன்? இக்கேள்விகளுக்கு வெகுகாலம் வரையில் மேனாட்டு விஜ்ஞானிகள் சரியான சமாதானங்களைச் சொல்லவில்லை.

### சாதாரண வாயுக்கள்

மேல்நாட்டில் ராபர்ட் பாயில் என்னும் விஜ்ஞானிதான் 17-ஆவது நூற்றாண்டில், முதன்முதலில் காற்றின் உண்மைகளைப் பற்றியும், அதனுடைய பௌதிகத்தன்மை, ரசாயனத்தன்மை, இவைகளைப்பற்றியும், உலகத்திற்குத் தம்மால் எழுதப்பட்ட 'காற்றின் பொதுசரித்திர வரலாறு' என்னும் நூலில் தெரிவிக்கலானார். ஆனால் அவர் வாயுமண்டலத்திலுள்ள காற்றிற்கும், எஃகுதூள்களின் பேரில் கந்தகத்திராவகத்தை ஊற்றினால் அதிலிருந்து உண்டாகும் காற்றிற்கும், பதார்த்தங்கள் புளிக்கும் போது அவைகளிலிருந்து வெளிப்படும் காற்றிற்கும் உள்ள வேறுபாடான தன்மைகளைச் சரியாக அறிந்தவராகப் புலப்படவில்லை. வாயுமண்டலத்திலுள்ள காற்றின் தன்மையை முற்றிலும் அறிந்தவராகச் சொல்லமுடியாவிட்டாலும், காற்றைப் பற்றிய பிற்காலத்திய விஜ்ஞான ஆராய்ச்சிகளுக்கு இவர் அடிகோலியாக இருந்தார் என்பதை நாம் மறக்கக்கூடாது.

ராபர்ட் பாயில் காலத்தவராகிய ஜான் மேயோ என்பவர் காற்றின் ரசாயன ஆராய்ச்சியில் ஈடுபட்டு சில புதிய தன்மைகளைக் கண்டுபிடித்தார். வாயுமண்டலத்திலுள்ள இருவகையான காற்றில் ஒன்று சுடர் தணல் எரிவதற்கும், உயிரினங்கள் மூச்சுவிட்டு வாழ்வதற்கும் உபயோகப்படுவதால் அதற்கு எரிக்கும் காற்று அல்லது நெருப்புக்காற்று என்று பெயர் வைத்தார். மற்றொன்று (வாயுமண்டலத்திலிருந்து முன் சொன்ன பகுதியை அப்புறப்படுத்திவிட்டால் மிகுந்திருக்கும் காற்று) எரிப்பதற்கும் மூச்சுவிட்டு வாழ்வதற்கும் இயலாதது என்று காட்டினார். மற்றும், சாதாரணக் காற்று அடைபட்டிருக்கும் ஒரு குப்பியில் ஒரு சிறு மெழுகுவத்தியைக் கொளுத்தினால், வத்தி சிறிதுபொழுது எரிந்து பின் மங்கி அணைந்துவிடுகிறது. அப்பொழுது அக்குப்பியில் மிகுந்திருக்கும் காற்று முந்திய அளவைக் காட்டிலும் குறைந்துபோவதைக் கண்டு, காற்றிலுள்ள உஷ்ணம் வெளியேறுவதால் இக்குறைவு ஏற்படுகிறது என்று சமாதானம் சொன்னார். நெருப்புக்காற்றில் இருக்கும் பொருளுடன் உஷ்ணமும் கூடவே உள்ளடங்கி யிருப்பதாகவும், அக்காற்றின் உதவியால் வத்தியோ சுடர்தணலோ எரியும்

பொழுது அக்காற்றிலுள்ள உஷ்ணத்தை மாத்திரம் சுடர் இழுத்துக் கொள்கிறதென்றும், அதனால்தான் காற்றின் பரிமாணம் குறைகிறதென்றும் கூறிவந்தார். இதிலிருந்து ஜான் மேயோ அநேகமாய் வாயு மண்டலத்திலுள்ள காற்றின் தன்மைகளை அறிந்துவிட்டதாகவே நாம் கொள்ளலாம். ஆனால் மேற்கூறிய நெருப்புக்காற்று இப்போது நம்மால் அறியப்படும் பிராணவாயு தான் என்றும், தணல் எரியும்பொழுது பிராணவாயு உபயோகப் படுத்தப்பட்டு கரியமில வாயு உண்டாகிறதென்றும் இப்பெரியார் காலத்துக்குச் சுமார் ஒரு நூற்றாண்டுக்கு அப்புறம்தான் கண்டு பிடிக்கப்பட்டது.

அடுத்தபடியாக ஹேல்ஸ் என்னும் மற்றொரு விஞ்ஞானி தாவரங்களைப்பற்றி பல ஆராய்ச்சிகள் நடத்தியபொழுது, தாவரங்கள் தங்கள் வேர்களின் மூலமாகக் காற்றை உட்கொள்ளு கின்றன என்று கண்டறிந்தார். மற்றும் அவர் வடிப்புமுறையை அநுசரித்துத் தாவர சம்பந்தமானதும் ஜீவஜந்துக்கள் சம்பந்த மானதுமான ரத்தம், கொழுப்பு, கொம்பு, சிப்பி, மரத்துண்டு, தானியங்கள், சர்க்கரை, கடலை, புகையிலை, சூடம், ஆளிவிதை, எண்ணெய், தேன், தேன்மெழுகு, நிலக்கரி, மண், சுண்ணாம்பு, உப்பு, எலும்புச் சாம்பல், போன்ற பற்பல சரக்குகளைத் தனித்தனியாக வும், பலவகையிற் கூட்டியும் காய்ச்சி வடித்து அவைகளிலிருந்து அநேக வகையான வாயுக்களை உண்டுபண்ணினார். இப்போதைய ரசாயன அறிவைக்கொண்டு ஹேல்ஸ் தம் ஆராய்ச்சியிலிருந்து பிராணவாயு, ஜலவாயு, கரியமிலவாயு, உப்புவாயு, நவச்சார வாயு, குளோரீன் என்னும் பச்சைவாயு, முதலியவைகளை உண்டாக்கி யிருக்கவேண்டுமென்று முடிவு செய்யலாம். அவர் காலத்தில் ரசாயன அறிவு போதாததால் அவர், தம் ஆராய்ச்சிகளிலிருந்து உண்டாக்கின காற்றுக்களுக்கும் வாயுமண்டலத்திலுள்ள காற்றுக் கும் அநேகமாக வேற்றுமை கிடையாது என்று நம்பினார்.

1755-ஆம் ஆண்டில் ஜோசப் பிளாக் என்னும் அறிவாளி வாயு மண்டலத்தில் கரியமிலவாயு என்னும் தனிப்படையான ஒரு வாயு கலந்திருக்கிறதென்ற உண்மையை எல்லோரும் நம்பும்படி விளக் கிக்காட்டினார். இவர் சுண்ணாம்புக் கற்களை நெருப்பில் காய்ச்சினால் அவைகள் தம் இடையில் குறைவுபடுகின்றனவென்றும் அதற்குக் காரணம் சுண்ணாம்புக் கற்களில் ஒருவகையான காற்று அடங்கிக் கலந்திருப்பதே என்றும், காய்ச்சின உடனே அக்காற்று வெளிக் கிளம்புகிறதென்றும், அது வாயு மண்டலத்திலுள்ள காற்றைக் காட்டிலும் பளுவானதென்றும், எரியும் சுடரை அவித்து விடுமென்றும், பிராணிகள் இதைச் சுவாசித்தால் உயிர் நிலைக்கா

தென்றும், சுண்ணும்புத்தெளிவை வெளுக்கச்செய்யும் தன்மையை யுடையதென்றும், தம் ஆராய்ச்சிகளால் விளக்கிக் காட்டினர். மற்றும் இவ்வகையான காற்று வாயுமண்டலத்தில் சிறிதளவு கலந்தே இருக்கவேண்டுமென்றும், இக்காற்று வாயுமண்டலத்திலுள்ள சாதாரணக் காற்றிலிருந்து வேறுபட்ட தன்மையுடையதென்றும் கண்டுகொண்டார். இக்காற்று சுண்ணும்புக் கல்லில், சுடுவதற்கு முன், நிலேத்திருந்ததால் நிலேத்த காற்று (*fixed air*) என்று பெயரிட்டார்.

மேற்குறித்த ஆராய்ச்சிகளுக்குப் பின் ஜோசப் பிளாக்கின் சீடரான டேனியல் ரூதர்போர்ட்டு, சாதாரணக் காற்றில் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்ட நெருப்புக்காற்று (*fire air*) நிலேத்த காற்று (*fixed air*), இவைகளேத் தவிர வாயுமண்டலத்தில் வேறு பிரத்தியேகமான தன்மைகளேக் கொண்ட மற்ருெரு காற்று இருப்பதாகக் கண்டு பிடித்தார். அவர், சாதாரண காற்றின் ஒரு பாகத்தில் மெழுகுவத்தியை எரித்து நெருப்புக்காற்றை நீக்கி, மிகுந்திருந்ததில் நிலேத்தகாற்றை சுண்ணும்புத் தெளிவுபோன்ற சுண்ணும்புச் சத்துள்ள பொருள்களேக்கொண்டு நீக்கும்போது, ஒருவகையான காற்று மிகுந்திருப்பதாகக் கண்டார். இதற்கு எரிக்கும் குணமும் இல்லே; சுண்ணும்புத் தெளிவை வெளுக்கச் செய்யும் தன்மையும் கிடையாது; ஆனல், நிலேத்தகாற்று மாதிரி எரிப்பை அணேக்கும் தன்மையிருந்தது. இதற்கு அன்னர் எரிக்கும் தன்மை நீத்த வாயு (*phlogisticated air*) என்று நாமகரணம் சூட்டினர்.

பிராணவாயு என்பது ஒருவகைக் காற்று; அது ஆகாய மண்டலத்தில் மற்றக் காற்றுகளுடன் கலந்திருக்கிறது; இது ஜீவனுக்கு ஜீவாதாரமான காற்று என்று முதன்முதலில் கண்டு பிடித்தது ப்ரீஸ்ட்லீ என்பவர்தான். இதேசமயத்தில் ஸ்வீடன் தேசத்து விஞ்ஞானியாகிய ஷீல் என்பவரும் இதே உண்மையைக் கண்டு பிடித்தார். 1774-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதலில் ப்ரீஸ்ட்லீ சிறிதளவு ரசபஸ்மத்தைக் காய்ச்சி அதிலிருந்து வரும் காற்று சாதாரணக் காற்றைக் காட்டிலும் நெருப்புச்சுடரை நன்ருக எரியச் செய்யு மென்பதையும், ஒரு சுண்டெலி சாதாரணக் காற்றைக் காட்டிலும் அதே அளவுள்ள இந்தப் புதுக் காற்றில் அதிகநேரம் ஜீவித்திருப்பதையும் அறிந்து, இப்புதுக் காற்று ஜீவாதாரத்திற்கும் எரிப்புக்கும் மிகுந்த உதவியாக இருத்தலால் இதற்கு எரிகுணம் பெற்ற காற்று (*dephlogisticated air*) என்று பெயர் வழங்கினர்.

ப்ரீஸ்ட்லீயின் காலத்திலேயே ப்ரான்சு தேசத்திலிருந்த விஞ்ஞானியான லவாய்சியர் என்னும் அறிஞர் இது சம்பந்தமான பரிசோதனையைத் தொடர்ந்துசென்று அநேக விஷயங்களை அறிந்துகொண்டு நவீன ரசாயன சாஸ்திரத்திற்கே தந்தையாக விளங்கினுர். இவ்வறிஞர் செய்துவந்த ரசாயன ஆராய்ச்சியைக் கண்டு ராஜாங்கத்தார் இவர் பேரில் ராஜரீகமான சில சந்தேகங் களைக் கொண்டு 1794-ஆம் ஆண்டு இவரைத் தூக்கில் போட்டு விட்டனர். தூக்கிடும்பொழுதும், தன் வாழ்நாளின் கடைசி வேண்டுகோளாக, தான்செய்துவரும் ஆராய்ச்சியை முடித்துவிட்டு வருவதாகச் சொல்லியும் ராஜாங்கத்தார் இவர் வேண்டுகோளைப் புறக்கணித்துவிட்டனர்! இப்பெரியார்தான் முதன்முதலில் வாயு மண்டலத்தில் எரிப்பதற்குச் சாதகமான பிராணவாயு இருப்ப தாகவும், எரியும்போது பொருள்கள் பிராணவாயுவை எடுத்துக் கொண்டு கரியுடன் பொருத்தி நிலைத்தகாற்று என்று சொல்லக் கூடிய கரியமிலவாயு உண்டாக்குகிறதென்றும், ஆதலால் வாயு மண்டலத்திலும் இது இருக்கிறதென்றும், இவ்விரண்டைத் தவிர மந்தமான தன்மைகளையுடைய மந்தவாயுவும் இருப்பதாகக் கூறினுர்.

19-ஆவது நூற்றுண்டின் முடிவு வரையில் ரசாயன சாஸ்திரி களால் செய்யப்பட்டுவந்த பற்பல ஆராய்ச்சிகளிலிருந்து நமது வாயுமண்டலத்தில் மந்தவாயு, பிராணவாயு, ஜலவாயு, கரியமில வாயு, நீராவி, முதலியவைகளுடன் சிறிதளவு ஓஜோன் என்று சொல்லக்கூடிய அதிபிராணவாயுவும், அம்மோனியா என்று சொல்லும் நவச்சார வாயுவும், மந்தவாயுவும் பிராணவாயுவும் சேர்ந்த கலப்பு வாயுக்களான நைட்ரஸ், நைட்ரிக் முதலிய திராவகங்களும் இருக்கின்றன என்று கண்டனர். இவைகளில் முதலில் சொல்லிய மந்தவாயு, பிராணவாயு, ஜலவாயு, இவை மூன்றும் மூலப்பொருள்கள். மிகுந்திருப்பன, ஆகாய வெளியில் மேகங்களுக் கிடையே ஏற்படும் மின்னல்களின் உதவியால் இம்மூன்றினின்று கூட்டுப்பொருள்களாக ஏற்படுகின்றனவென்று விஞ்ஞானிகள் கூறுகிறுர்கள். முற்சொன்ன மூலப்பொருள்களான மூன்று முக்கியமான வாயுக்களைத் தவிர, வேறு மூலப் பொருள் களுடன் யாதொருவிதமான கூட்டுப் பொருள்களையும் உண்டாக் காமல் மந்தமான தன்மைகளையுடைய வேறு வாயுக்கள் வாயு மண்டலத்தில் இருப்பதாகச் சென்ற 40 வருஷங்களில் செய்த ஆராய்ச்சியால் நமக்குத் தெரியவருகிறது.

## அபூர்வ வாயுக்கள்

சமீப காலம் வரையிலும் ரசாயன சாஸ்திரிகள், வாயு மண்டலத்திலிருக்கும் காற்றுகளையெல்லாம் கண்டுபிடித்துவிட்டதாகவும் இனிமேல் கண்டுபிடிக்க வேண்டிய தொன்றுமில்லையென்றும் எண்ணிக்கொண்டிருந்தனர். ஆனால், 1894-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ராலி பிரபு என்னும் விஞ்ஞானி, வாயு மண்டலத்திலுள்ள சிறிதளவு காற்றை எடுத்துக்கொண்டு, அதிலிருந்து குப்பை, தூசி, நீராவி, பிராணவாயு, ஜலவாயு, கரியமில வாயு, அம்மோனியா என்னும் நவச்சார வாயு, இன்னும் சுலுவாகப் பிரித்து எடுத்துவிடக்கூடிய இதர காற்றுக்கள், இவற்றைக் கூடிய மட்டிலும் நீக்கி மிகவும் சுத்தமான மந்தவாயுவைப் பிரித்தெடுத்து பௌதிக ரசாயன ஆராய்ச்சிகள் செய்து அதனுடைய குணங்களை அறிந்துகொண்டு வந்தார். மற்றும், மந்தவாயு சம்பந்தமுள்ள ரசாயனச் சேர்க்கைப் பொருள்களிடமிருந்து ரசாயன முறையில் சிறிது மந்தவாயுவைப் பிரித்தெடுத்து இதனுடைய தன்மைகளையும் ஆராய்ந்துபார்த்தார். அப்பொழுது வாயு மண்டலத்திலிருந்து தயாரித்த மந்தவாயுவும், ரசாயன முறைப்படி தயாரித்த மந்தவாயுவும் செறிவில் வேறுபட்டன. இவ்வித்யாசம் சாதாரணமாக ஆராய்ச்சிகளில் ஏற்படும் வழுவைக் காட்டிலும் அதிகமாக இருந்தது. தன் ஆராய்ச்சியைப் பன்முறையும் செய்து பார்த்ததில் இதே முடிவுக்கு வந்தார். இந்த வேறுபாடான செறிவுக்கு முகாந்திரம் அவருக்குப் புலப்படாமல் 'நேசர்' என்னும் விஞ்ஞான வெளியீட்டில் தன் ஆராய்ச்சிகளையும் அவைகளின் முடிவையும் வெளியிட்டு மற்ற விஞ்ஞானிகளின் அபிப்பிராயத்தை எதிர்பார்த்தார். அப்பொழுது ரசாயன விரிவுரையாளரான ராம்சே என்னும் அறிஞர் இவ்வாராய்ச்சிகளைத் தான் மேற்கொண்டு நடத்துவதாக ராலி பிரபுவிடம் உத்திரவு பெற்று ஆராய்ச்சி நடத்தியதில், வாயு மண்டலத்திலிருந்து பிரித்தெடுத்த மந்தவாயுவின் செறிவு, ரசாயன முறைப்படி சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட, கலப்பற்ற, மந்தவாயுவின் செறிவைக்காட்டிலும் அதிகமாகவே இருந்ததைக் கவனித்தார். முடிவில் இவ்வறிஞர் ரசாயன முறைப்படி தயாரித்த மந்தவாயு கலப்பற்றதென்றும், வாயுமண்டலத்திலிருந்து பிரித்தெடுத்த மந்தவாயு, இதுவரைக்கும் பிரிக்க இயலாததும், மந்தவாயுவைக் காட்டிலும் செறிவு அதிகமானதும், ஆகிய வேறு சுறுசுறுப்பற்ற வாயுவுடன் கலந்திருக்க வேண்டும் என்றும் தீர்மானித்தார். ஆனால், இப்புதிய காற்று எத்தன்மையது என்று அப்பொழுது புலப்படவில்லை. மற்றும் வாயுமண்டலத்திலிருந்து பிரித்த மந்தவாயுவின் வழியாய்

மின்பொறியை விட்டு அதிலிருந்து வரும் ஒளியை நிறமாலை காட்டியின் மூலமாய்ப் பார்வையிட்டதில் நிறமாலையில் புதுமாதிரியான குறுங்கோடுகளிருக்கக் கண்டு, மந்தவாயுவுடன் வேறே மூலவாயு சேர்ந்திருக்கவேண்டும் என்று நிச்சயித்தார். அதே காலத்தில் ராலி பிரபுவும் வேறு வகையான ஆராய்ச்சியின்மூலம் இதே முடிவிற்கு வந்தார். இப்புதிய காற்றிற்கு அவர்கள், இது சுறுசுறுப்பற்று மற்ற மூலப்பொருள்களுடன் உறவாடாமல் தன்னந்தனியே இருப்பதைக் குறித்து, ஆர்கான் என்ற பெயரை யிட்டார்கள்.

1868-ஆம் ஆண்டு நமது தேசத்தில் தோன்றிய சூரிய கிரஹணத்தில், சூரியனுடைய வெளிமண்டலத்தை நிறமாலை காட்டியின் மூலம் ஆராய்ந்த பொழுது, சூரிய நிறமாலையில் மிகவும் ஒளியுள்ள மஞ்சள் கோடு ஒன்று புதிதாகத் தென்பட்டது. முதலில் இது 'சோடியம்' என்னும் மூலப்பொருளின் இருப்பால் ஏற்படும் நிறக்கோடோ என்று ஐயம் தோன்ற, இம்மாதிரி நிறக்கோட்டை ஆராய்ச்சிமந்திரத்தில் உண்டாக்கச் செய்த முயற்சியெல்லாம் வீணாயின. ஆகையினால் இது ஏதோ சூரியனுடன் சம்பந்தப்பட்ட, நமது வாயு மண்டலத்திலில்லாத, புதிய மூலப் பொருளாக இருக்கவேண்டுமென்று தீர்மானித்து, இப்புது மூலப் பொருளிற்கு ஹீலியம் என்று பெயரிட்டார்கள். கிரேக்கர் பாஷையில் ஹிலியஸ் என்றால் சூரியன் என்று பொருள். சூரிய சம்பந்தமானதாகையால் இதற்கு இப்பெயரிடப்பட்டது. இச் சம்பவம் நடந்த சுமார் 20 ஆண்டுகளுக்குப் பின் அமெரிக்கா நாட்டின் பூகர்ப்ப சாஸ்திரியான டாக்டர் ஹில்லிபிராண்டு என்பவர் அநேக கனிப்பொருள்களை ஆராய்ந்து வந்ததின் பயனாக 'க்ளீவைட்' என்னும் கனிப்பொருளிலிருந்து ரசாயன ஆராய்ச்சி மூலமாய் ஒருவகை வாயு பிரிக்கப்பட்டது. இதை அவர் மந்த வாயு என்று நம்பியிருந்தார். ஆனால் அச்சமயம் மந்தவாயு சம்பந்தமான தீவிர ஆராய்ச்சிகளை நடத்திவரும் ராம்சே, இப்புது வாயுவையும் நிறமாலைகாட்டிமூலமாய் தரிசித்தபொழுது, அச் சமயத்திலும் முன் சூரிய வெளிமண்டல ஆராய்ச்சியில் கண்ட நிறமாலையில் மஞ்சள்கோடு இருந்த இடத்திலேயே அம்மாதிரி மிகவும் ஒளிபொருந்திய மஞ்சள்குறுங்கோடிருப்பதைப் பார்த்தார். முதலில் இது 'சோடிய'த்தால் ஏற்பட்டிருக்கலாம் என்று ஐயமடைந்து ஆராய்ச்சியில் உபயோகிக்கப்பட்ட எல்லா நிறமாலை காட்டிகளையும் கழற்றி, சீர்செய்து, மறுபடியும் சரியாக அமைத்துப் பார்க்கும்போது அதேமாதிரி புது மஞ்சள் குறுங்கோடு இருப்பதைக் கண்டார். ஆகையால் சூரியனில் காணப்பட்ட


அதே ஹீலியம் நமது வாயு மண்டலத்திலும் வாயுரூபமாக இருப்பதாக நிச்சயித்தனர்.

மேலே குறிப்பிட்ட ஆர்கான், ஹீலியம், இவ்விரண்டு வாயுக்களையும் பற்றி ஆராய்ச்சி செய்யும்பொழுது, அணுவெடை 20 உள்ள மற்றொரு மூலவாயு இவைகளுடன் வாயு மண்டலத்தில் கலந்திருக்கவேண்டுமென்ற ஒரு சந்தேகம் பிறந்தது. உடனே ராம்சேயும், டிராவர்ஸ் என்னும் மற்றொரு ஆராய்ச்சிக்காரரும் சேர்ந்து இயற்கையிலிருந்து கிடைக்கும் பற்பல பொருள்களை ஆராய்ந்து வந்தார்கள். எழு விண்மீன் கட்டிகள், பற்பல கனிப்பொருள்கள் சம்பந்தமான நீர்கள், 150 விதமான கனிப் பொருள்கள், இவைகளை வைத்துக்கொண்டு பலவகையான ஆராய்ச்சி செய்தும் பலனற்றுத் திகைத்தனர். இவ்வாராய்ச்சிகள் நடந்துகொண்டிருக்கும் காலத்தில்தான், காற்றை திரவமாக்கும் வகையை ரசாயன ஆராய்ச்சிக்காரர் கண்டுபிடித்தனர். கடைசியாக ராம்சே திரவக்காற்றைத் தன் ஆராய்ச்சியில் வைத்துப் பார்க்கும் பொழுது, திரவக்காற்று ஆவியாய் பரிணமிக்கையில் க்ரிப்டான் எனும்—அதாவது மறைந்திருக்கும் வாயு என்று பொருள்படும்படியான—மற்றொரு புதிதான, சுறுசுறுப்பற்ற வாயுவைக் கண்டறிந்தனர். இதே முறையில் திரவக்காற்றைப் படிப்படியாக ஆவியாக்க, நீயான், க்சினன் என்றழைக்கப்படும் மற்றும் புதிதான இரண்டு மூலவாயுக்களையும் கண்டுபிடித்தனர்.

இப்படி சுமார் 350 ஆண்டுகளாகச் செய்யப்பட்ட பல ஆராய்ச்சிகளிலிருந்தும் நமது வாயுமண்டலத்தில் பிராணவாயு, மந்தவாயு, கரியமிலவாயு, ஜலவாயு, நீராவி, ஆர்கான், ஹீலியம், கிரிப்டான், நீயான், க்சீனன், மற்றும் நவச்சார வாயு, நைட்ரிக் திராவகம், நைட்ரஸ் திராவகம், இவை இருப்பதாகக் கண்டுபிடித்து அவைகளின் பௌதிக ரசாயனத் தன்மைகளையும் கண்டறிந்து, மனிதவர்க்கத்தின் நாகரிக முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொண்டனர். இத்துடன் வாயுமண்டலத்திலுள்ள சுறுசுறுப்பற்ற வாயுக்கள்முற்றிலுங் கண்டுபிடித்து விட்டதாக விஞ்ஞானிகள் எண்ணிக் கொண்டிருந்தனர். ஆனால், சமீப காலத்தில் ப்ரான்சு தேசத்தில் ஔரியத்தையும், அது சம்பந்தப்பட்ட மற்ற மூலப் பொருள்களையும் பற்றி நடந்த ஆராய்ச்சி முடிவுகளில் சில வாயுமண்டலத்தைப் பற்றிய நம்மறிவைச் சிறிது விசாலிக்கச் செய்திருக்கின்றன. ஔரியம், தோரியம் முதலியவைகளிலிருந்து சில புதுமையான தன்மைகள் பெற்ற காற்றுக்கள் வெளியாகின்றன என்று கண்டுகொண்டனர். ஆனால், அவைகளின்

தன்மைகளைப் பற்றிய ஆராய்ச்சி இன்னும் முடிவடையவில்லை. ஆகையால் நமது வாயுமண்டலத்தில் முற்குறித்த காற்றுகளைத் தவிர வேறு சில காற்றுகளும் இருக்கவேண்டும் என்று ஏற்படுகிறது. ஆனால் இவைகளின் அளவு வாயுமண்டலத்தில் மிகவும் அற்பமாக இருக்கிறது. இம்மாதிரி வாயுமண்டலத்திலுள்ள வாயு ஒரு தனிப்பொருள் அன்று என்று நிரூபித்துக் காட்டிய ரசாயன ஆராய்ச்சிகளின் மாண்பு எத்தகையது!

| | | |
|---|---|---|
| *Atomic weight* | ... | அணுவெடை |
| *Ārgon* | ... | ஆர்கான் |
| *Chemical property* | ... | ரசாயனத்தன்மை |
| *Chlorine* | ... | குளோரீன், பசியம் |
| *Density* | ... | செறிவு |
| *Experimental error* | ... | ஆராய்ச்சி வழு |
| *Electric spark* | ... | மின்பொறி |
| *Evaporation* | ... | ஆவியாதல், ஆவியாக்கல் |
| *Fractional distillation* | ... | படிப்படியாய் ஆவியாதல், ,, ஆக்கல் |
| *Distillation method* | ... | வடிப்புமுறை |
| *Helium* | ... | ஹீலியம் |
| *Inert gas* | ... | சுறுசுறுப்பற்ற வாயு |
| *Krypton* | ... | க்ரிப்டான் |
| *Lime stone* | .. | சுண்ணாம்புக்கல் |
| *Lime water* | .. | சுண்ணாம்புத்தெளிவு |
| *Liquid air* | .. | திரவக்காற்று |
| *Minerals* | ... | கனிப்பொருள்கள் |
| *Mineral water* | ... | கனிப்பொருள் கவிந்த நீர் |
| *Meteorite stone* | .. | விண்மீன்கட்டி |
| *Neon* | .. | நீயான் |
| *Ozone* | .. | அதிப்பிராணவாயு, 'ஓஜோன்' |
| *Physical property* | .. | பௌதிகத்தன்மை |
| *Radium* | .. | ஔரியம் |
| *Spectrum* | .. | நிறமாலை |
| *Spectroscope* | .. | நிறமாலைகாட்டி |
| *Thorium* | .. | தோரியம் |
| *Xenon* | .. | க்சீனான் |



# விஷ விருக்ஷம்

பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாய

(364-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## இருபத்துமூன்றாவது அத்தியாயம்

### பஞ்சரத்துக் கிளி

ஹீராவின் குடில் ஒரு சிறையாகவே இருந்தது குந்தநந்தினிக்கு. கூட்டில் அடைபட்ட பறவை படும் வேதனையை அவள் அனுபவித்தாள். எதிரெதிராக வரும் இரு நீரோட்டங்கள் ஒன்றையொன்று தாக்கும்போது பெருவெள்ளமாக மாறுகின்றன. குந்தநந்தினியின் ஹ்ருதயமும் அதுபோலவே இரு வெவ்வேறு உணர்ச்சிகளால் அலைக்கப்பட்டது. ஒருபுறம் அவமானம், திரஸ்காரம்—முகத்தைக் காட்ட வழியில்லை. ஸூர்யமுகிதான் அவளை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டாளே! ஆனால் இதையெல்லாம் மீறிக்கொண்டு காதல் வெள்ளம் பாய்ந்துசென்றது. இவ்விரு உணர்ச்சிகள் கலந்த அதிர்ச்சியில் ப்ரேமையே முடிவில் வெற்றியடைந்தது. பெரிய நதியின் ஜலத்தில் சிற்றாறு மறைந்துவிட்டது. ஸூர்யமுகி இழைத்த மானக்கேட்டை அவள் மறக்க ஆரம்பித்தாள். அவள் மனதைச் சுற்றி நின்றதெல்லாம் ஒருவனுடைய உருவமே! எங்கு நோக்கினும் நகேந்த்ரன் மயமாக இருந்தது குந்தநந்தினிக்கு. 'ஸூர்யமுகி இரண்டொரு வார்த்தை கூறிவிட்டால்தான் என்ன குறைந்து போய்விடுகிறேன்? நகேந்த்ரன் அல்லவா எனக்கு முக்யம்—எனக்கு ஸர்வமும்? மாளிகையில் இருக்கும்போது இந்தக் கண் அவரை ஒருநாளாவது நழுவவிடவில்லை. இப்போது அவரை எங்ஙனம் காண்பது? அங்கு செல்கிறேன். என்னை மறுபடியும் அவள் ஏசினால்? அந்தத் திவ்ய புருஷனை க்ஷணநேரமாவது நான் பார்க்காது போனால் என் உயிர் எகிறிவிடும்போலிருக்கிறது.' கங்குலும் பகலும் இந்த ஒரு சிந்தனையே அவளை வாட்டியது. 'தத்தர் மாளிகைக்கு மீண்டும் திரும்புவதா? போய்த்தான் பார்க்கிறேனே? என் பிராணன் நிற்காதுபோலிருக்கிறது. அவரை எப்படியாவது காண்பதே சரி. ஸூர்யமுகியின் வசவுகளை நான் லக்ஷ்யம் செய்யப்போவதில்லை. இந்தத்தடவை கட்டாயம் சென்றே தீருவேன். என் காதலனைக் கண்டு இன்புறுவேன்'— இம்மாதிரி மனதில் எழும் பல ப்ரச்னை

களுக்கு அவள் ஸமாதானம் சொல்லிக்கொண்டு ஒரு தீர்மானத்திற்கு வர முயன்றாள்.

ஆனால் எந்த முகத்தோடு அந்த வீட்டுப் படியைக் குந்தம் மிதிப்பாள்? தனியாகச் சென்றால் மானம் சிந்திவிடும்போலிருக்கிறது. ஹீராவைக் கூட்டிச் சென்றாலென்ன? தன் அந்தரங்க விஷயத்தை ஹீராவுக்குத் தெரிவிக்கக் குந்தம் மிகவும் வெட்கப்பட்டாள்—அதை அவள் சொல்லவே இல்லை.

பிராணநாதனைப் பார்க்கக் குந்தநந்தினியின் ஹ்ருதயம் துடித்தது. அவளால் இருக்கமுடியவில்லை. ஒருநாள் பின்னிரவுவேளை. அவள் படுக்கையை விட்டெழுந்தாள். பக்கத்தில் அடித்துப் போட்ட மாதிரி தூங்கிக்கொண்டிருந்தாள் ஹீரா. சந்தடி செய்யாமல் வாயிற்கதவைத் திறந்துகொண்டு வெளியேவந்தாள் குந்தநந்தினி.

கிருஷ்ணபக்ஷமாதலால் தேய்பிறை ஸ்வப்னத்தில் வரும் ஒரு படகுபோல் வானக்கடலில் மிதந்து கொண்டிருந்தது. அடர்ந்த தருவீதிகளிடையே குவையாகக் கவிழ்ந்திருக்கும் இருள். மாருதமும் மெதுவாக வீசிற்று. தாமரை இலைகள் நிரம்பிய தடாகத்தில் ஜலம் அசையும் ஓசையே கேட்கவில்லை. ஓங்கிய விருக்ஷங்களின் உச்சிக்குமேல் கருநீல ஆகாயத்தில் தாரகை மணிகள் சிதறிக்கிடந்தன. தண்மையான அந்தப் பின்னிரவில் இயற்கை அழகார்ந்து ரகஸியம் குடிகொண்டு விளங்கிற்று. குருட்டு வழியாகக் குந்தநந்தினி கால்கள் தடுமாற மாளிகையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தாள். அவள் மனதில் வேறெந்த எண்ணமும் இல்லை. 'எப்போது நகேந்த்ரனைக் காண்பேன்?' என்ற பெரும் ஏக்கமே. 'மாளிகையில் ஒருத்தியாக மீண்டும் ஆவேனோ என்னமோ? என் ஆருயிரை மறைவில் கண்டால் என்ன தவறு? ஆனால் அந்த பாக்யம் எனக்குக் கிட்டுமா? என் இஷ்டதேவதை எங்கு எனக்குப் பிரஸன்னமாகுமோ? அறியேன்!'—இம்மாதிரி எண்ணங்கள் அவளைச் சஞ்சலத்திற்கு உட்படுத்தின. கடைசியில் ஒரு ஸ்திரத்திற்கு வந்தாள். 'இரவு கழியும்வரை இந்த மாளிகையைச் சுற்றி அலைவேன். சாளரத்தண்டையாவது, வெளிமஹல் வாயிற்படியிலாவது, உத்யானவனத்திலாவது, குளத்துப் படியிலாவது, அவரைக் காணாது போகிறேனா?'—நகேந்த்ரன் அதிகாலையில் எழுந்து வெளியே உலாவுவது அப்யாஸம். குந்தநந்தினிக்கு இது தெரியும். ஆதலால் அவளுடைய ஊகம் எப்படிப் பொய்யாகும்?—'நகேந்த்ரனை ஒருதரம் கண்ணுறப் பார்த்ததும் அப்படியே திரும்பிவிடுவேன். ஒருதரம் தரிசித்தால் போதும், உயிரளவிற்கும் அதுபோதும்'— இதையே குந்தம் மனப்பூர்வமாகப் பிரார்த்

தித்தவளாய் அந்த இருட்டில் தத்தர் மாளிகையை நோக்கிச் சென்றாள். மாளிகையின் சமீபம் அடையும்போது கீழ்வானம் வெளுக்க ஆரம்பித்தது. குந்தம் சுற்றுமுற்றும் கவனித்தாள். மாளிகையின் வெளியே நகேந்த்ரனைக் காணவில்லை. மாடியை நோக்கினாள்; அங்கும் அவன் உலாவவில்லை. சாளரத்தைக் கவனித்தாள்; அங்குமில்லை. 'இன்னும் அவர் விழித்துக்கொள்ளவில்லையோ? ஒரு வேளை அவர் வர இன்னும் நாழிகை இருக்கிறதோ? பொழுது நன்றாகப் புலரும்வரை இந்த மரத்தடியில் காத்திருப்பேன்' என்ற பிரதிஜ்ஞையுடன் குந்தம் அங்கு ஒரு மரத்தின்கீழ் உட்கார்ந்தாள்.

அவ்விடத்தில் இன்னும் இருள் சூழ்ந்திருந்தது. பக்கத்திலுள்ள சவுக்கு மரத்திலிருந்து காய்கள் 'டப் டப்' என்று குளத்து நீரில் விழும் சப்தம். தலைக்குமேலே கிளைகளில் பக்ஷிகள் சடசட வென்று இறகை அடித்துக்கொள்ளும் பேரரவம். வேலையாட்கள் மாளிகையிலுள்ள கதவுகளையும் சாளரங்களையும் திறக்கும் ஓசை சற்றுத்தொலைவில் கேட்டது. உஷக்காலத்தில் எழும் மெதுவான காற்று உல்லாஸமாக வீசிச் சென்றது. ஒரு வானம்பாடி ஆகாயத்தைத் தன் ஸ்வரஅலைகளால் கம்பிக்கச் செய்தது. ஏதோ ஒரு மரத்திலிருந்து குயிலொன்று நெருப்புச்சுவைக் குரலில் 'குஹூ குஹூ' என்று கூவிற்று. அப்புறம் ஒவ்வொன்றாக பக்ஷிகளெல்லாம் பறந்துவந்து வைகறையைச் சிறப்பித்துப் பாடின.

'இன்னும் வரக்காணேனே?'—குந்தம் கொண்ட நம்பிக்கை மங்க ஆரம்பித்தது. 'எத்தனை நாழிகை இந்த மரத்தடியில் உட்கார்ந்திருப்பது? நன்றாக வெளிச்சமாகிவிட்டதே, யாராவது என்னைப் பார்த்துவிட்டால்?'—இம்மாதிரி மனதில் கவலைகள் சுழல, குந்தம் சலிப்பு ஏற்பட்டவளாய்த் திரும்பிச் செல்ல எழுந்திருந்தாள். ஆனால் இன்னுமோர் ஆசை பார்த்துவிடுகிறது என்று மீண்டும் அவள் மனதில் நம்பிக்கை எழுந்தது. நகேந்த்ரன் தென்படக்கூடிய இடம் இன்னும் ஒன்றுண்டு. அது அந்தப்புரத்தைச் சேர்ந்த பூங்காவே. காலையில் காற்றுவாங்க அவன் அங்கு வருவது வழக்கம். 'ஒருக்கால் அவர் அங்கு இருக்கலாம்? இந்த ஓர் ஆசை பார்த்துவிட்டே திரும்புவேன்......ஆனால் அந்தப் பூங்காவை அடைவது எப்படி? அதைச்சுற்றியுள்ள சுவரை எப்படித் தாண்டுவது? உள்ளே செல்லப் புழக்கடை வழியொன்றே இருக்கிறது. அது திறந்து இருக்குமோ?.....பார்க்கலாம்' என்று எண்ணமிட்டுக்கொண்டே அவள் அங்கு சென்று பார்க்கையில் கதவு திறந்திருந்தது. குந்தநந்தினியின் ஹ்ருதயம் 'திக் திக்' என்று அடித்துக்கொண்டது. எப்படியோ தைர்யத்தைக்

கைவிடாமல் மெள்ளப் பூஞ்சோலையை அடைந்து அந்தப் பெரிய மகிழமரத்தின் நிழல் மறைவில் வந்து நின்றாள். மரங்களின் வரிசையின் மத்தியில் செல்லும் கால்பாதை சலவைக்கற்கள் பரப்பப்பட்டு இருந்தது. அதன் நடு நடுவே வெள்ளை, சிவப்பு, நீலம், மஞ்சள் நிறங்கள் கொண்ட மலர்களுடைய பூப்பாத்திகள். மலர்களில் ஊறும் தேனைப் பருகியவண்ணம் ப்ரமரங்கள் பம்பிக்கொண்டிருந்தன. மானிடர்க்கு உள்ள ஒரு ஸ்வபாவத்தை ஒத்து அவைகளும் அதிக மது நிறைந்த மலரையே நாடிக் கூட்டமாக அலைந்தன! விசித்ர வர்ண இறகுகள் படைத்த சிறு புள்ளினம் இணர் விரிந்த மரக்கொப்புகளில், செங்கனியோ என்று ஸந்தேஹிக்கும்படி மது உண்ட மயக்கத்தில் ஊசலாடின. களிப்பின் மிகுதியால் அவற்றின் கண்டங்களிலிருந்து ஏழு இசையும் மாறி மாறி வரும் த்வனி எழும்பிக்கொண்டிருந்தது. காலைக் காற்றின் மெல்லிய அலை பட்டு புஷ்பபாரம் தாங்காது கிளைகள் ஆடின. மற்றவை நெறித்து நின்றன—அவை மலரின் பளுவைச் சுமக்கவில்லை போலும். எங்கோ ஒரு தருவின் இலைமறைவில் அசரீரியான குயிற்பிள்ளை ஆற்றும் மதுரநாதமே இதர பக்ஷிகள் அளிக்கும் இசைவிருந்தைக் காட்டிலும் மேலாக இருந்தது.

காவின் மத்தியில் ஒரு லதாமண்டபம். அதன் மேல் தாவிய கொடிகள் நன்கு படர்ந்து, இலைகள் செழித்துப் புஷ்பசோபையுடன் விளங்கின. அவற்றின் பக்கலில் செம்மண் தொட்டிகளில் அழகான வெவ்வேறு பூஞ்செடிகளின் வரிசை.

குந்தநந்தினியின் கண்கள் ஓர் உருவைக் காண ஆவலுடன் காவைச்சுற்றி அலைந்தன. ஆனால் அந்த ஸௌந்தர வடிவம் அங்கு தென்படவில்லை. கொடி வீட்டில் சலவைக்கல் மேடையில் யாரோ படுத்திருப்பது தெரியவே அது நகேந்த்ரனாகத்தானிருக்கும் என்று எண்ணியவளாய், நன்றாக அறியக் கொடி மறைவிலேயே பதுங்கிச் சென்று மண்டபத்தை அணுகினாள். அவள் துரதிர்ஷ்டம், அங்கு சயனித்துக்கொண்டிருந்த ஆளும் எழுந்து வருவது தெரிந்தது. துர்ப்பாக்கியவதி குந்தம் யாரைக் கண்டாள்?—நகேந்த்ரனை அல்ல, தன்னை இகழ்ந்த ஸூர்யமுகியைத்தான்!

வெருவி, குந்தம் ஒரு புதரின் மறைவில் ஒடுங்கிக்கொண்டாள். ஓடிவிடலாமென்றால் அவளுக்குக் கால் எழவில்லை. சில் விட்டுப் பிரதிமைபோல் நிலைத்து நின்றாள். ஸூர்யமுகி பூப்பறித்துக்கொண்டே ஒவ்வொரு செடியண்டையும் வந்தாள். தான் மறைந்திருக்கும் புதரின் அருகில் அவள் நெருங்கினதும், 'நான் இருப்பது தெரிந்துவிடுமே! ஐயோ, மானக்கேடு!' என்று குந்தம் உடலைக் கூசிக்கொள்ளும்போது ஸூர்யமுகியும் அவ்விடத்தை

நண்ணினுள். இலைமறைவில் நிற்பது யாரென்று தெளிவாகத் தெரியாமையால் "யார் அங்கே?" என்று வினவினுள் ஸூர்யமுகி.

குந்தம் பேதுற்று வாயடைத்து நின்ருள். அவளுடைய கால்களும் கைகளும் நடுங்கின. ஸூர்யமுகி அவள் அருகில் வந்து பார்த்தாள். குந்தநந்தினி என்று தெரிந்ததும் அதிக வியப்புற்ற வளாய் "யார்?....குந்தமா!" என்ருள்.

அப்பொழுதும் குந்தத்தால் பதில் சொல்லமுடியவில்லை. ஸூர்யமுகி அவளை அணுகி "குந்தா....வா, என் கண்ணே, உன் மனம் நோகும்படி இனி நான் ஒன்றும் சொல்லமாட்டேன். ....நீ வா" என்று கூறிக் குந்தநந்தினியின் கைகளைப் பிடித்துக் கொண்டு அந்தப்புரத்திற்கு அவளை அழைத்துச் சென்ருள்.

## இருபத்துநான்காவது அத்தியாயம்

### நிறை அழிதல்

அன்றிரவு தேவேந்த்ரபாபு மாறுவேஷம் புனைந்து மதி ராவின் போதையுடன் குந்தநந்தினியைப் பெண்டாள ஹீராவின் வீட்டினுள் புகுந்தான். ஒவ்வோர் அறையாகத் தேடிப் பார்த் தான் குந்தத்தை. ஆனுல் அவள் அகப்பட்டால்தானே? இவனு டைய வ்யர்த்த சேஷ்டைகளைக் கண்ணுற்றதும், ஹீரா முகத்தைத் தலைப்பில் மறைத்துக்கொண்டு பக பக வென்று நகைத்தாள். தேவேந்த்ரன் கோபமடைந்து "எதற்காக அப்படிச் சிரிக்கிருய், ஹீரா?" என்ருன்.

"நீங்கள் படும் அவஸ்தையைப் பார்த்துத்தான். நீங்கள் இப்படி அவதிப்படுவது எனக்குப் பரிதாபமாயிருக்கிறது. பக்ஷி எப்பவோ பறந்துபோய்விட்டதே, நீர் எங்கு தேடினுலும் அகப் படாதே" என்ருள் ஹீரா.

தேவேந்த்ரன் விஷயம் யாதென்று வினவியபோது, ஹீரா நடந்ததையெல்லாம் ஆதியோடந்தமாக மொழிந்து, "அவள் போய்விட்டது எனக்கும் இன்று கார்த்தாலைதான் தெரியும். நாலாதிசையும் தேடிப்பார்த்தேன்....கடைசியில் ஓர் ஆசை பார்க்கலாமென்று பெரிய மாளிகைக்குச் சென்றபோது, அங்கே குந்தநந்தினியைக் கண்டுபிடித்தேன்.....இப்போது அவளுக்கு என்ன குறைச்சல்? மஹாராஜியாய் இருக்கிருள்.....எல்லாரும் அவள் பேரில் ஆதரவாய்த்தான் இருக்கிருர்கள்" என்று முடித் தாள்.

தேவேந்த்ரன் வீண்பிரயாசை எடுத்துக்கொண்டதுதான் மிச்சம். ஆனுல் அவன் மனதைவிட்டு ஓர் எண்ணம்மட்டும் போகவேயில்லை. ஹீராவைத் தட்டிக்கொடுத்து அவள் மூலமாகக்

குந்தநந்தினியைக் கைப்பற்ற வேண்டுமென்பதே, அந்தத் துர் எண்ணம்!

அப்போது ஆகாயத்தில் கார்மேகம் கவழ்ந்துவருவதை ஒரு வியாஜமாகக்கொண்டு, "மழை வரும்போலிருக்கிறதே" என்று கூறிச் சற்றுத் தயங்கினுன் தேவேந்த்ரன். இதுவிஷயமாக ஹீராவினுடைய மனத்தை ஆழம்பார்க்கவே தேவேந்த்ரன் அங்கு தங்கினுன்போலும்!....ஹீராவின் கோரிக்கையும் அதுவே! ஆனுல் இளவயதினளான தான் தனியாக இருக்கையில்—அதுவும் இரா வேளையில்—ஒரு புருஷனை 'இருந்துவிட்டுப் போ' என்று சொல்ல அவளால் எப்படி முடியும்? 'இதை ஏதாவது ஒரு கண் பார்த்துக் கொண்டிருந்தால் ஜகமுழுதும் பரவச்செய்துவிடுமே! அப்புறம் விரஸம். அப்படி அவனை ஒருக்கால் இருக்கும்படி சொல்லிவிட்டால், என்ன விபரீதம் நேர்ந்துவிடுமோ, எவரும் இகழும்படி எந்த குணக்கேட்டிற்கு இழுத்து விடுவானே?' என்று சங்கைகொண்ட போதிலும் ஹீரா தேவேந்த்ரன் அங்கு தங்குவதை ஏனே ஆக்ஷேபிக்கவில்லை! அந்தமாதிரி நடக்கவேண்டுமென்று அவளுக்கு விதி இருக்கிறதே!

ஹீரா மௌனமாக இருப்பதைக்கண்டு "ஹீரா, உன்னிடம் குடையிருக்கிறதா?" என்ருன் தேவேந்த்ரன். ஹீராவிடம் குடை இல்லை. தேவேந்த்ரன் "இங்கு சற்றுநேரம் உட்கார்ந்துவிட்டு, மழை ஓய்ந்தவுடன் சென்ருல் நீ ஒன்றும் எண்ணிக்கொள்ளமாட்டாயே...?" என்று கேட்கும்போது, ஹீரா சட்டென்று "ஏன் எண்ணிக்கொள்ள மாட்டேன்? நான் தனியாக இருப்பதை அறிந்து நீர் இங்கு வந்தது தவறுதான். ஆனுலும் வந்துவிட்டீர், இனிமேல் என்னசெய்வது?" என்றுகூறிக் கண்களை வெட்கத்தினுல் மறைத்துக்கொண்டாள்.

தேவேந்த்ரன் "ஆனுல் நான் இங்கு இருப்பது உனக்குஇஷ்டம் தானே?" என்று கேட்டான். ஹீரா பதில் தரவில்லை. தேவேந்த்ரன் அவள் சொல்வதற்கு முன்பே தரையில் உட்கார்ந்தான்.

பாபு கீழே வெறும் கட்டாந்தரையில் உட்காருவதைக் கண்டு ஹீரா பரபரவென்று தன் பஞ்சணைமீது சலவைசெய்த துப்பட்டியை விரித்து அவனை வீற்றிருக்கும்படி செய்தாள். பெட்டியிலிருந்து ஒரு சிறு வெள்ளி ஹுக்காவை எடுத்து தன்கையிலேயே அதன் குவளையில் தண்ணீர் நிரப்பி, சுகந்தப் புகையிலைத் துகளைக் குழையில் திணித்து, தேவேந்த்ரனிடம் நீட்டினுள்.

தேவேந்த்ரன் இந்த உபசாரத்தை இனிதுமுடிக்க ஓர் ஒயின் (சாராய) புட்டியைத் தன் மடியிலிருந்து எடுத்தான். ஸுராவைக்

குடிக்கக் குடிக்க அவன் கண்கள் சிவந்துகொண்டே வந்தன. எதிரே நிற்கும் ஹீரா அவனுடைய சுழலும் விழிகளுக்கு அழகுத் தெய்வமாகத் தோன்றினாள். அவளுடைய அந்த பத்மலோசனம் தான் அவனை இன்னும் மயக்கிவிட்டது. ஹீராவின் கயல்விழிகளிலும் ஒரு பிரகாசம்—மோஹவலை வீசும் ஒரு சஞ்சலப்பார்வை!

“ஹீரா, என்ன அழகான கண்கள் உனக்கு....!” என்று தேவேந்த்ரன் பிதற்றும்போது, ஹீராவின் முகத்திலும் முல்லை அரும்பிற்று. மூலையில் பழையதொரு பிடில் எடுப்பாறற்றுக் கிடப்பது அப்பொழுது தேவேந்த்ரன் கண்ணிற்குப் பட்டது. முணுமுணுவென்று பாடிக்கொண்டே அதை எடுத்து மீட்டித் தந்திகளின்மேல் வில்லை இழுத்தான். வாத்திய யந்த்ரத்திலிருந்து ‘கொய்ங்க் கொய்ங்க்’ என்று மூக்குஸ்வரம் கிளம்பிற்று.

“இந்தப் பிடில் எங்கு கிடைத்தது உனக்கு, ஹீரா?”

“சிப்பாய் ஒருவன் எனக்கு விற்றான்.”

தேவேந்த்ரன் பிடிலை வாசித்துக்கொண்டே, ஸுகபாவத்துடன் மதுராஸம் பொழியும், மோஹ நினைவுகளை ஊட்டும், ச்ருங்கார பதங்களைப் பாடினான். அந்த ஒரு விநாடி, ஹீரா உலகை மறந்து பாவ ஸமுத்ரத்தில் நீந்தினாள். தேவேந்த்ரனைத் தன் புருஷனாகவும், தன்னை அவனுடைய பத்னியாகவும் பாவித்துக்கொண்டாள்! பிரம்மன் தங்கள் இருவரையும் ஒருவருக்கு ஒருவரென்றே படைத்திருக்கிறார் என்று எண்ணிக்கொண்டாள். வெகுகாலமாகப் பிரிந்திருந்த தம்மிருவரையும் ஒன்றாகக்கூடி, ஒரே நாடியுடன் அடித்துக்கொள்ளும்படி தூண்டிய அதிசயத்தை நினைந்து நினைந்து அவள் புளகம்கொண்டாள். மயல்கொண்ட ஹீராவின் மனதில் செல்லும் உவகையின் வேகம், தடுமாறிவரும் அவள் சொற்களின் மூலமாக வெளிக்குத் தெரிந்தது. அவள் மிழற்றும் அந்த அரைச் சொற்களைக்கொண்டு காமுகனான தேவேந்த்ரன் அவள் மனது செல்லும் திசையை நன்கு ஊகித்தவனாய், ‘மனது வரைக்குமாவது என் வசமாகி வருகிறாளே இவள்’ என்று பரம த்ருப்தி அடைந்தான்.

மோஹமிகுதியால் தன் வாய் என்னென்னவோ உளறிக் கொட்டுவது திடீரென்று ஹீராவின் ஸ்மரணைக்கு வந்தது. அவளுடைய மூளை ‘கிர்’ என்று சுழன்றது. ‘ஏதாவது அநீதம் நடந்து விட்டதோ?’—இதயத்தில் திக்கென்று ஒரு வேதனை வாரிப்போட, வெறி பிடித்தவள் மாதிரி, தன்னெதிர் காமமே உருவாக நிற்கும் தேவேந்த்ரனை விளித்து “பாபு, நீர் சீக்கிரம் இந்த இடத்தை விட்டுப் போம்!....சீக்கிரம் போம்!” என்றாள்.

தேவேந்த்ரன் ஒன்றும் தோன்றாதவனாய், "இதென்ன ஹீரா?" என்றான்.

ஹீரா உக்ரமாக "நீர் உடனே போம்..! இல்லாவிடில் இதோ போய் ஊரை ஒன்றாய்க் கூட்டிவிடுவேன்!" என்றாள்.

"ஹீரா, நீ சொல்வதெல்லாம் விசித்திரமாயிருக்கிறதே?" என்றான் தேவேந்த்ரன்.

"போம் என்று சொன்னால் போம். நீர் என்னைக் கெடுக்க வல்லவோ இங்கு வந்தீர்!" என்று வெருட்சி அடைந்தவள்போல் ஹீரா ஆவேசத்துடன் கூறினாள். அவள் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது. ஸமீபத்தில் நேரவிருந்த ஏதோ விபத்தை அவள் மீறினதின் அறிகுறியை அது காட்டியது.

"அடி ஹீரா! இதுதான் பெண்களுக்கு உள்ள நயவஞ்சகம் என்பது. ஸ்திரீகள் துஷ்டைகள்!" என்றான் தேவேந்த்ரன். ஹீராவின் முகம் கோபத்தினால் சிவந்தது. "ஆம். ஸ்திரீகள் எல்லாம் துஷ்டிகளே. ஆனால், அவர்கள் நீர் நினைத்ததுபோல் கேவலமானவர்கள் அல்ல. உம்மைப்போன்ற புருஷர்கள்தான் தூர்த்தர்கள், பாதகர்கள். நெறியை வழுவி நடக்க அஞ்சார். உங்களுடைய மனோபீஷ்டம் நிறைவேற எந்த ஹீனமார்க்கத்தை வேண்டுமானாலும் கடைப்பிடிப்பீர்கள்.....அப்புறம் உம்முடைய வலையில் சிக்கிய பிராணிகள் எக்கதி கெட்டால் என்ன? உம்முடைய ஸுகமே உமக்குப் பிரதானம். எந்த ஸ்திரீயின் கற்பை அழிக்கலாம் என்று தேடி அலைகிறீர்கள்...பின் ஏன் இந்த அவவேளையில் நீர் என் வீட்டிற்கு வரவேண்டும். என்னுடைய நாசத்தை விளைவிக்கவல்லவா..? வாஸ்தவமாக உம்முடைய கள்ளமனம் இதைத் தூண்டவில்லையா சொல்லும்?.." என்றாள் கம்பீரத்வனியில். தேவேந்த்ரனுடைய முகத்தில் ஈயாடவில்லை. முகம் அப்படிச் சுண்டிக் கிடந்தது. மீண்டும் ஹீரா கூறத்தொடங்கினாள்: "என்னை நீர் கேவலம் ப்ரஷ்டை யென்று நினைத்துக்கொண்டீரோ..? உமக்கு இந்தத் தைர்யம் எங்கிருந்து பிறந்தது, ஸ்வாமி? நான் பதிதையல்ல. ஏழையானாலும் என் உடலை உழைத்து ஜீவித்து வருகிறேன். வேசித் தொழில் புரிய எனக்கு அவகாசம் இல்லை, ஐயனே! பெரியமனிதர் வீட்டுப் பெண்டாயிருந்தால் ஒருவேளை இந்த இழிவான காரியத்தைச் செய்வேனோ•என்னமோ.."

படபடவென்று பொழியும் இந்தச் சொல்மாரியை ஏந்திக்கொண்டு தேவேந்த்ரன் புருவத்தைச் சுளித்தான். ஹீரா ஓய்ந்துவிட்டாள். அவள் மனதை அழுத்தியிருந்த பாரம் அவ்வளவும் நீங்கிவிட்டது. தேவேந்த்ரனை நிமிர்ந்து நோக்கி, நிலைத்த பார்வை

யுடன் "பாபு, உம்முடைய மன்மத ரூபத்தைக் கண்டு நான் மயங்கினது வாஸ்தவம்தான். நீர் காமவேட்கையுடன் என்னை நோக்கினீர். விலைமாது என்று எண்ணிக்கொண்டீர் போலும்.... அப்படி நீர் எண்ணுவது பிசகு. உம்மைப் பார்த்து என் மனம் என்னவோ பொங்குகிறது. இந்த ஒரு விஷயத்தினால்தான் நான் உம்மை இவ்வளவு நாழிகையாவது உட்காரவைத்திருக்கிறேன். நீர் 'சற்றுத் தங்கலாமோ' என்று என்னைக் கேட்டபோது, அதனால் தான் நான் அதற்குத் தடைகூறவில்லை. ஆனால் அபலையான ஒரு பெண் கொஞ்சம் இடம் கொடுத்தால் நீர் தலைக்கேறி விடுகிறீர், அதுவும் இந்த இரவுவேளையில் நான் தனியாக இருப்பதைப் பார்த்ததும்!....நீர் மஹாபாபி. ஒரு துர்எண்ணத்தை வைத்துக் கொண்டு என் மானத்தைப் போக்க வீட்டில் நுழைந்துவிட்டீர். இப்போது நீர் எழுந்து போகலாம்" என்றாள்.

தேவேந்த்ரன் சீசாவில் மிகுந்திருந்த மதுவைப் பானம்பண்ணி விட்டு, "பேஷ்..பேஷ்..ஹீரா! நீ நன்றாகப் பேசுகிறாய்..உன்னை ஒருநாள் எங்களுடைய பிராஹ்மஸமாஜத்தில் உபந்யாஸம் செய்ய அழைத்துச் செல்லவேண்டும்......" என்றான்.

தேவேந்த்ரன் இப்படி ஏளனமாகத் தன்னைக் கூறுவது ஹீரா வின் மனதை உறுத்தியது. அவள் ரோஷம் தாங்காமல் "ஸ்வாமீ, நான் உம்முடைய உபசாரணைகளுக்கு ஆட்டாளியல்ல; நான் படித்தவளும் அல்ல. எனக்குப் பிரும்மஞானம் எங்கிருந்து வரப்போகிறது? தர்மம், சாஸ்த்ரம், இவையெல்லாம் பலம் என்ன விலை என்று கேட்பவளுக்கு இதெல்லாம் எதற்கு, பாபு? ஆஹா! ஒரு திக்கற்ற ஸ்த்ரீயை ஸுலபமாகக் கற்பழிப்பதற்கு உதவி செய்யும் மிருகஇனத்தைச் சேர்ந்தவளல்ல நான். உம்முடைய காமவலையில் விழுந்து தவிக்கக்கூடாதென்பதே என்னுடைய பிரார்த்தனை....எவ்வளவு அநீதமாக என்னை நீர் கூறியபோதிலும் நான் உம்மை அலக்ஷியம் செய்யவில்லை. உண்மையில் நீர் என் மேல் காதல் கொண்டிருப்பீரானால் நான் இந்த முடிவிற்கு வந்தே இருக்கமாட்டேன். எனக்கு தர்மம் என்றால் என்ன தெரியும், பக்தி என்றால் என்ன தெரியும்? உள் ஒன்று வைத்துப் புறமொன்று பேசும் உங்களைப்போல் மேதாவிகளுக்கு அல்லவோ இதெல்லாம் அறிமுகம். இதுமட்டும் சொல்லுகிறேன். காதலைக்கொண்டு உம்மைப் பூஜிக்கவிருந்த என்னை த்ருணமாக எண்ணி எனக்கு விஷக்கனியைப் பிரஸாதமாக அளிக்கப் பார்க்கிறீரா? நீர் என்னை ஸத்யமாக நேசிக்கவில்லை என்று தெரிகிறது. ஏதோ காரணத்தை உத்தேசித்து என்னை நயவஞ்சகமாக உம்முடைய கருவியாக்க முயல்கிறீர்....இது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறதே....

ஐயோ! எனக்கு வந்த ஆபத்து நீங்கிற்று! இப்பொழுது நினைத்தால்கூட பயமாயிருக்கிறது.....வீண் கேட்டை விலைகொடுத்து வாங்கினமாதிரி அல்லவோ முடிந்திருக்கும். தெய்வமே, மீண்டேன். இன்றைக்கு என் முகத்தைத் துடைத்துவிட்டு நாளைக்கே ஸகாக்களுடன் என்னைப் பச்சையாக வர்ணிக்கும் பாவியாயிற்றே நீர்....உம்முடைய அடிமை அல்ல நான்....நீர் என்றைக்கு என்மேல் அநுராகம்கொண்டு என்னிடம் வருகிறீரோ, அது என்று என் அந்தக்கரணத்திற்குப் பூர்ணமானது என்று விளங்குகிறதோ, அன்றைக்குத்தான் நான் உம்முடைய காலடியில் தாஸியாக விழுந்து கிடப்பேன், ப்ரபு!'' என்று முடித்தாள்.

இந்தமாதிரி பலவித மனப்போக்குகளைக் காட்டும் வார்த்தைகளைக் கேட்டு தேவேந்த்ரன் ஹீராவின் சித்தம் செல்லும் வழியை அறிந்துகொண்டு 'அடி, உன்னை நான் தெரிந்து கொண்டேன். இனிமேல் பரவாயில்லை. யந்திரம் நான் சொல்லுகிறபடி ஆடும். உன்னுடன் பழகும்விதம் புரிந்துவிட்டது..... நாரீ ஜன்மமே! நீ இவ்வளவுதானா? பூவைப் போன்ற இந்த ஸ்த்ரீவர்க்கத்தைக் கசக்கி எறிவது கடினம் என்று இதுவரை எண்ணியிருந்தேன். ....சீ இவ்வளவுதானா? மலையில் விளைந்த நெல்லானாலும் குந்தாணியின்கீழ் மசிந்தே யாகவேண்டும்.......உன் மூலமாக என் மனோரதத்தைப் பரிபூர்ணமாக்கிக் கொள்ளுவேன்...அந்தத் திவ்ய மலர் குந்தம் எனக்கே உரியவள்.....அடி ஹீரா, பேதாய்!' என்று எண்ணியவாறு அவ்விடத்தைவிட்டு அகன்றான்.

தேவேந்த்ரன் ஹீராவை மதிப்பிட்டது சரியே. ஆனால் ஹீராவின் மனதை இன்னும் அவன் முழுமையும் அறியவில்லை. ஸ்த்ரீகளின் நெஞ்சாழத்தை அறிந்தவர் யார்?

## இருபத்தைந்தாவது அத்தியாயம்

### 'ஸந்தோஷ சமாசாரம்'

நல்ல மத்யான வேளை. ஸ்ரீச பாபு தன் கார்யஸ்தலத்திற்குச் சென்று வெகு நாழிகை ஆயிற்று. வீட்டிலுள்ளோர் யாவரும் சாப்பாடு முடிந்ததும், பகல் உறக்கத்திற்குச் செல்லலாயினர். பாபுவின் பைடக்கானா* பூட்டப்பட்டிருந்தது. அதன் வாயிற்படியில் இருஜாதியான 'டெரியர்' நாய் ஒன்று, கால்மிதியின்மீது சுருட்டிப் படுத்துக்கொண்டு நித்திரையில் ஆழ்ந்திருந்தது. வீட்டின் பின்கட்டில், இளம் வேலைக்காரி ஒருத்தி

*ஸல்லாபக்ருஹம்.

ஸந்தர்ப்பம் வாய்த்ததும் தன்னுடைய கள்ளப் புருஷனைச் சந்தித்து அவனுக்கு வெற்றிலை மடித்துத் தந்தவண்ணம் 'இதை வாங்கித்தா, அந்த நகை செய்து போடு' என்று 'ரோதனை' பண்ணிக்கொண்டிருந்தாள். கமலமணி தன் சயனஅறையில் கால்களை நீட்டிய படி ரத்னகம்பளத்தில் பூவேலை செய்துகொண்டிருந்தாள். ஈரம் உலருவதன் நிமித்தம் அவளுடைய அழகிய கூந்தல் முடியிடாமல், விரிகோலத்தில் விளங்கிற்று. அந்தப் பகல்வேளையில் வீட்டில் ஒரு சந்தடியும் இல்லை—கமலமணியின் அருகில் குழந்தை ஸதீச் பலத்வனிகள் போட்டுக்கொண்டு, விளையாடியவண்ணமிருந்தான். ஆனாலும் அவன் கவனமெல்லாம் தன் தாயின் கையில் இருக்கும் கம்பளி வர்ணநூலின் பேரில்தான். அன்னையின் அருகில் அவன் நூலைக் கவர வரும்போதெல்லாம் அவள் அதன் மேல் காவல்புரிவதைக் கண்டு, கீழே கிடக்கும் ஒரு மண் புலி பொம்மையின் முகத்தைத் தன் இஷ்டம் பூர்த்தியடையாது போகவே ஆத்திரத்துடன் கடித்தான். சற்றுத் தொலைவில், பீரோவின் ஓரமாகப் பூனை ஒன்று இவர்கள் இருவரையும் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டே முன்னங்கால்களின்மேல் ஊன்றி உட்கார்ந்திருப்பது, மிகவும் கம்பீரமான முகபாவத்துடன் எதன் பேரிலும் ஆசைவைக்காத ஒரு வேதாந்தியின் ஞாபகத்தை உண்டாக்கியது. 'இந்த மனிதர்கள்வழியே வேடிக்கையாக இருக்கிறது (ஸம்ஸாரோயம் அதீவ விசித்ரம்). எப்போதும் கார்ப்பெட் பின்னுவதும் பொம்மையோடு விளையாடுவதும்தான் இவர்கள் வேலை. அல்ப கார்யங்களின்மீது மனதைச் செலுத்துகிறார்கள். தர்மம், பக்தி என்றால் இவர்களுக்கு என்ன தெரியப்போகிறது? என்னைப் போன்ற மார்ஜாலவர்க்கத்தினர் அப்பேர்ப்பட்ட பிரம்ம ஞானத்தைத் தேடி அலைவதால் அல்லவோ, வயிற்றிற்கு உணவு தேடுவதையும் மறந்திருக்கிறார்கள். அந்தோ! இந்த மானிடர் அடையப்போகும் கதியை நினைக்கும்போதே எனக்குப் பரிதாபமாயிருக்கிறது'—இம்மாதிரி அந்தப் பூனையார் எண்ணமிட்டுக் கொண்டிருக்கவேண்டும். அது தன் உதட்டைத் தூக்கித் தழைத்தும், மீசையை ஆட்டியும், மாந்தர்மேலுள்ள வெறுப்பைப் புலனாக்கிற்று.

சுவரில் ஒரு பல்லி நிலைத்த பார்வையுடன் சுட்டுவிடுவது போல் ஈயொன்றின் மேல் இலக்கு வைத்திருந்தது. அதுவும் ஒரு வேளை பூச்சிஇனத்தைச் சபித்துக்கொண்டிருந்ததோ என்னவோ? வண்ணாத்திப் பூச்சி யொன்று தோட்டத்தைவிட்டு வழிதவறி அறையினுட் புகுந்து பறந்துகொண்டிருந்தது. ஸதீச் 'ஸந்தேச்' தின்றுகொண்டிருந்தான். அவ்விடத்தை மொய்த்தவண்ணம் ஈக்க

ளின் கூட்டம். தித்திப்பின் ஸமாசாரம் எப்படியோ எட்டிவிட்டது; எறும்புகளும் சாரிசாரியாக வரத்தொடங்கின. சுவரில் இருக்கும் பல்லி வெகுநேரம் காத்துவிட்டு, பலகாரத்திற்கு ஈயொன்றும் தன்னிடம் சிக்காது போகவே வெறுப்படைந்து வேறு இடத்தை நோக்கிப் பாய்ந்தது. 'இந்தப் பாழும் மனிதர்களுக்கு நெஞ்சு இளகுவதில்லை' என்று சபித்துக்கொண்டே, சோம்பல் முறித்துவிட்டு,மெள்ள வாலைநெறித்தவண்ணம் வெளியேசென்றது பூனை. வண்ணாத்திப் பூச்சியும் தட்டித்தடுமாறி எப்படியோ சாளரத்தைக் கடந்து தோட்டத்திலுள்ள புஷ்பங்களோடு புஷ்பமாய் மறைந்துபோயிற்று. கமலமணியும், பூவேலையில் சளைத்தவளாய் அதைச்'சட்' என்று கீழே போட்டுவிட்டு ஸதீசுடன் பேச ஆரம்பித்தாள். "அடா, என் ஸது! இந்தச் சனியன்பிடித்த புருஷாள் ஏனோ உத்யோகத்திற்குப் போகிறார்கள்?" என்றுதாயார் கேட்கும்போது சிசுவானது புதிதாகக் கற்றுக்கொண்ட தன் பாஷையில் "இலி-லி—ப்ளி. . . இ" என்றது.

கமல: அட, என் கண்ணு? நீ பெரியவனானால் உத்யோகத்துக்கே போகவாணும்.

குழந்தை அதற்கு "உம்" என்றது.

கமல: நீ 'ஊம்' என்றதற்கு அர்த்தம் என்னடா, பாப்பா? . . . . நீ ஆபீசுக்குப் போக வாண்டாம். உத்யோகம் பண்ணப் போனால் உன் பெண்டாட்டி மத்தியானமெல்லாம் ஆத்திலே பொழுதுபோகாமல் அழுவாள். தெரியறதா?

ஸதுபாபு இந்த வார்த்தையை அர்த்தம் புரிந்துகொண்டவன் போல் தன் தாயின் முகத்தை நோக்கினான். பெண்டாட்டி என்ற பதம் அவன் புத்திக்கு விளங்கியிருக்குமா இந்தச் சின்ன வயதில்? குழந்தையும் தன்தாயின் கேள்விக்கு, "பொன்ன ஆத்தி" என்று பதில் சொன்னது.

"ஆமாம், என் செல்லமே! பொன் அகத்திதான். நீ ஆபீசுக்குப் போனா அவ அழுவோ . . . . ." என்று கமலமணி குழந்தையுடன் கொஞ்சிப் பேசினாள்.

கிள்ளைமொழியாள் கமலமணி, மழலைச்சொல் பயிலும் தன் குழந்தையுடன் நடத்தும் சம்பாஷணை வெகுநேரம் இப்படியே நீடிக்குமோ என்று கேட்பீர்கள். அது நமக்குத் தெரியாது. ஏனென்றால் அந்தச் சமயம் பணிப்பெண் ஒருத்தி அப்போதுதான் தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டதினால் கண்களைப் பிசைந்துகொண்டே யஜமானி அம்மாளின் கையில் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தாள். ஸூர்யமுகியின் லிகி

தம் என்று கமலமணி பார்த்த மாத்திரம் தெரிந்துகொண்டாள். அதைப் பிரித்துப் படித்தாள்.....மீண்டும் படித்தாள்...சிறிது நாழிகைவரை அவள் மனம் வேதனையினால் துடித்துக்கொண்டிருந்தது. கடிதத்தைத் திரும்பவும் பிரித்துப்பார்த்தாள். அதில் கண்டிருந்த விஷயம்:

"என் பிரியமுள்ள கமலமணி,

நீ கல்கத்தாவிற்குச் சென்றதும் என்னை மறந்து விட்டாயாக்கும். நீ போய் ஒரே ஒரு கடிதாசிதான் எனக்குப் போட்டாய். உங்களுடைய க்ஷேமத்தைப் பற்றிய சமாசாரமே ஒன்றும் தெரியவில்லை. நீ குந்தநந்தினியைப் பற்றி விசாரித்திருந்தாயே, அவள் அகப்பட்டுவிட்டாள். இதைக் கேட்டு உன்மனம் நிம்மதியடையும் என்று எண்ணுகிறேன். அம்மனுக்கு நீ வேண்டிக்கொண்டபடி, அபிஷேகம் செய்து வை. இன்னொரு ஸந்தோஷ சமாசாரம். குந்தநந்தினிக்கும் என் புருஷனுக்கும் விவாஹம் நடக்கப்போகிறது. நானே இதை முடித்துவைத்திருக்கிறேன். விதவா விவாஹத்தில் தோஷம் ஒன்றுமில்லையாமே? இதற்கு சாஸ்த்ரஸம்மதம் உண்டாமே? இந்த வாரத்திலேயே, ஒரு நல்ல நாளில் கல்யாணம் நடந்துவிடும். உன் காரியங்களை விட்டுவிட்டு—அவரையும் விட்டுவிட்டு—உன்னால் எப்படி வரமுடியப் போகிறது? இல்லாவிட்டால் உன்னை இந்தக் கல்யாணத்திற்கு அழைத்திருப்பேன். உன்னைப் பார்க்கவேண்டுமென்று ஆவலாயிருக்கிறது. இன்னும் எவ்வளவோ சமாசாரம்...என் நெஞ்சு வெடிக்கிறது......நேரில் சொல்லுகிறேன்."

ஸூர்யமுகி எழுதியிருப்பதின் கருத்து ஒன்றுமே விளங்கவில்லை கமலமணிக்கு. அதை அறிந்துகொள்ள அவள் மண்டையை உடைத்துக்கொண்டாள். தன் அரும் செல்வமான ஸதீசைப் பார்த்து, பேதை இதன் மர்மத்தைப் புகலும்படி கேட்டாள். அப்போது ஸதீச் கொட்டை கொட்டையாக விழித்து, தினசரியின் ஒரு பக்கத்தைக் கிழிப்பதில் ஸ்வாரஸ்யமாயிருந்தான். கமலமணி அவன் எதிரே அக்கடிதத்தைக் காண்பித்து, "இதென்னடா, என் கண்மணி ஸது, உன் மாமி இப்படிஎழுதியிருக்காளே?" என்றாள். தாய் வினவும் இந்தக் கடின ப்ரச்னையை அறிந்துகொண்டவன் போல் ஸதீச் எழுந்து கமலமணியின் தாடையோடு தன் தாடையை அழுத்திக்கொண்டான். மகனின் இன்ப ஸ்பர்சம் பட்டதும் கமலமணி எல்லா துக்கத்தையும் மறந்து நின்றாள்.

சாயங்காலம் என்றும்போல் மணிக்கணக்குத் தவறாமல் ஸ்ரீசசந்த்ர பாபு ஆபீஸிலிருந்து வந்து தன் ஆடைகளைக் களைந்துவிட்டு, ஒரு ஸுகாஸனத்தின்மீது ஆயாஸத்துடன் சாய்ந்தார். கமலமணி தன் முகத்தை ஒருவிதமாக வைத்துக்கொண்டு, கணவனுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களை மட்டும் ஒன்று விடாமல்

செய்தாள். அவை முடிந்ததும், முன் ஸதீசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டபடி முகத்தில் பொய்க் கோபக்குறி வரவழைத்துக் கொண்டு பொத்தென்று பஞ்சணை மஞ்சத்தின் மீது சாய்ந்தாள். கமலமணி ஊடல் கொண்டு இருப்பதைப் பார்த்து ஸ்ரீசசந்திர பாபுவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அவனும் ஹுக்காக்குழலை எடுத்துக்கொண்டு, ஒரு நாற்காலியை இழுத்துப்போட்டு அதன் பேரில் உட்கார்ந்தான். கையிலிருக்கும் ஹுக்காவை நோக்கி அவன் "ஹே ஹுக்காய்! நீ உன் வயிற்றில் பதிதபாவனியான கங்கை நீரை ஏந்தி நிற்கிறாய். உன் தலையில் பரம பூதமான அக்னி தேவனைத் தாங்குகிறாய். இதோ உன் பேரில் ஆணையிட்டுச் சொல்லுகிறேன்: என்னோடு யார் கோபித்து முகத்தைக் கோணிக் கொண்டு இருக்கிறார்களோ அவர்கள் உடனே என்னை அணுகி வார்த்தையாடுமாறு செய்யவேண்டும். இல்லாவிட்டால் நீ எதற்கும் தகுதியற்றவளாகி விடுவாய்....உன்னைச் சபிப்பேன். உன் குழையில் ஓயாது புகையிலைத்துகளை அடைத்து, நான் உட்கொள்ளும் புகைப்படலத்தினால் இங்கு உள்ளவர் யாவரையும் திணற அடிப்பேன்" என்று தன் திட ஸங்கல்பத்தை வெளியிட்டான்.

இதைக் கேட்டதும் கமலமணி எழுந்திருந்தாள். ஒருக்கால் புகையிலையின் புகைக்குப் பயந்துவிட்டாளோ என்னவோ? ஆனாலும் கோபத்தை அபிநயிக்கத் தன் நீலோத்பல விழிகளைச் சுழற்றி அவள், "போதும், இந்த அறையைப் புகை கப்பும்படி செய்ய வேண்டாம். நானும் குழந்தையும் திணறிச் சாகவேண்டியதுதான்" என்று கூறி, படுக்கையைவிட்டு எழுந்துவந்து கணவன் ஏந்தியிருக்கும் ஹுக்காவைப் பிடுங்கி அப்புறப்படுத்தினாள்.

கமலமணியின் கோபம் தணிந்தது. வீட்டிற்கு வந்ததும் தனதாருயிர் நித்யம்போல முகமுலர்ச்சியுடன் இராமல், வேறுவிதமாக இருப்பதைக் கண்டு, ஏதோ பிரமாதம் நடந்து விட்டது என்று திகில் கொண்டிருந்த ஸ்ரீசசந்த்ரபாபுவும் மனநிம்மதி அடைந்தான். தன் வேதனைக்குக் காரணமான ஸூர்யமுகியின் கடிதத்தைக் கணவனிடம் காண்பித்து "இதற்கென்ன அர்த்தம்? சொல்லுங்கோ. இதைச் சொல்லாவிட்டால் நீங்கள் எனக்கு மந்திரியாய் இருக்க யோக்யமில்லை. சம்பளத்தைக் குறைத்துவிடுவேன்" என்றாள் கமலமணி.

ஸ்ரீசன் "அது சரிதான், என் ராணி. முன் சம்பளமாய் எனக்கு ஏதாவது கொடுத்தால்தான் நான் யோசனை சொல்லுவேன்" என்றான். அப்புறம் கமலமணி ஸ்ரீசசந்த்ரனின் முகத்தோடு தன் முகத்தை வைத்து அவன் விரும்பிய சம்பளமான முத்தம் ஒன்றை ஈந்தாள். "இதுவா தமாஷிற்கு வேளை?" என்று சற்று முகத்

தைத் திருப்பிக் கொண்டிருந்துவிட்டு, கணவனுக்குக் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தாள்.

"எதைத் தமாஷ் என்று சொல்லுகிறாய்? இந்தக் கடிதத்தில் வரும் விஷயத்தையா? அல்லது நீ என்னை அந்தமாதிரி...." என்று ஒரு கள்ளச்சிரிப்புடன் ஸ்ரீசசந்த்ரன் எதையோ சுட்டிக் கூறும்போது கமலமணி, "போதும், வாயை மூடுங்கோ. வேளை, ஸமயம் கிடையாதா? எப்பவும் ஒரு விளையாட்டா?" என்றாள்.

"ஆனால் என்னோடு வேடிக்கையாயிருக்க உனக்கு இஷ்டமில்லை? நான் என்ன பண்ணிவிட்டேன் உன் மனம் அப்படி கசந்து போகும்படி, கமலா?" என்றான் ஸ்ரீசசந்த்ரன்.

"பிராணேசா, உங்களை எதற்காக வெறுக்கவேண்டும்? என் அந்தக்கரணத்தின் சாக்ஷியாக உங்களை நான்...." என்று சொல்லி முடிப்பதற்குள், துக்கம் கமலமணியின் தொண்டையை அடைத்துக்கொண்டது.

ஸ்ரீசசந்த்ரன், தன் மனைவியை அணைத்துக்கொண்டு, "அசடே, நான் விளையாட்டாகப் பேசினால் நீ ஏன் இப்படி விபரீதமாக எண்ணிக்கொண்டு ஆணை இடுகிறாய்....என் கண்மணி கமலம், அழாதே" என்று தேற்றரவு கூறினான்.

"நான் அதற்காக அழவில்லை. ஸூர்யமுகியின் தலையெழுத்தை நினைத்துத்தான் நான் துக்கப்படுகிறேன்....அண்ணா அவளைத் தள்ளிவிட்டு வேறு கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாராம்" என்றாள். ஸ்ரீசசந்த்ரன் திடுக்கிட்டு, "என்ன, என்ன?..நீ சொல்வது ஒன்றும் புரியவில்லை. கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறானா? அப்படியானால் இதைப்பற்றி அவனுக்குக் கடிதம் எழுதித் தெரிந்துகொள்ளட்டுமா, கமலமணி?" என்றான்.

இதற்கு கமலமணியும் சம்மதித்தாள். ஸ்ரீசசந்த்ரன் நகேந்த்ரனை இகழ்ந்து உடனே ஒரு கடிதம் எழுதினான். அதற்கு நகேந்த்ரனுடைய பதிலும் கிடைத்தது:—

"நண்ப! என்னை வீணாக என் பழிக்கிறாய்? நான் அதற்காக வருத்தப் படப்போவதில்லை. கல்யாணம் செய்துகொள்ளத் துணிந்துவிட்டேன். இந்த உலகத்தவரே என்னை அசேதனம் என்று விலக்கிவிடினும் நான் கொண்ட உறுதியிலிருந்து ஒரு மயிரிழைகூடப் பிறழமாட்டேன்..... என் விருப்பத்தின்படி இதைச் செய்யத் தவறினால் எனக்குப் பைத்தியம் தான் பிடித்துவிடும்—கட்டாயமாக. வேறு எதைச் சொல்லுவேன்? என் நோக்கத்தை விளக்க வேறு எந்த வார்த்தையும் அநாவச்யம். என் மனதைத் திருப்பும்படி நீங்கள் ஒன்றும் சொல்லமாட்டீர்கள் என்றே நம்புகிறேன். அப்படி ஆக்ஷேபிப்பீர்களானால், உங்களோடு வாதாடவும் தயாராயிருக்கிறேன்.

"விதவாவிவாஹத்தை ஹிந்து தர்மத்திற்கே விரோதமானது என்று கூறுபவர், ஈச்வர சந்த்ர வித்யாஸாகரர் எழுதிய கட்டுரையைப் படிக்கட்டும். அவர்களே அப்புறம் என்வழி சார்வார்கள். 'சாஸ்த்ரமே விதவா விவாஹம் நடத்தலாம் என்று பறையறைகிறது' என்று அந்த சாஸ்த்ர விசாரதர் சொல்லுகிறாரே! அதைக் கண்டித்து 'இது அசாஸ்த்ரீயம்' என்று யாரால் ஆக்ஷேபிக்கமுடியும்? 'சாஸ்த்ரம் இதை ஆதரித்தாலும், சமூக வாழ்விற்கு இது உகந்ததல்லவே' என்று கூறுவோர்க்கு நான் சொல்வதாவது, 'ஐயா, மறுவிவாகம் பண்ணிக்கொள்ளத்தான் போகிறேன். என்னை வேண்டுமானால் ஜாதியை விட்டு நீக்கிவிடுங்கள். ஆனால் இது மட்டும் கவனமிருக்கட்டும். இந்த கோவிந்தபுரத்தில் என்னை ஜாதிப்ரஷ்டம் செய்ய எவன் தலைபடைத்து இருக்கிறான்? நானே இங்கு ஸமாஜ கர்த்தாவாக இருக்கும்போது அதைப்பற்றி அஞ்சவேண்டியதில்லை, ஸ்ரீசா! ஆனாலும் இந்த விவாஹ விஷயத்தை உங்களுக்கு மட்டும்தான் தெரிவிக்கிறேன். உங்கள் மனம் தீர்ந்து தெளியவே; எனக்குப் பிறரைப்பற்றி அக்கரை இல்லை. வேறு யாருக்கும் இதைப்பற்றித் தெரிவிக்கமாட்டேன்.

"நீ என்னைப்போல ஸ்வபாவ முடையவன். மேற்படி காரணங்களைக் கொண்டு என்னை தூஷிக்கமாட்டாய். ஆனால் சொல்லுவாய், இரண்டு விவாஹம் ஸ்த்ரீகளுக்கு அருவருப்பை அளிக்கும் காரியமாயிற்றே என்று. ஸ்ரீசா, இது ஸ்த்ரீகளுக்கு இன்னலை விளைவிக்கும் என்பது உனக்கு எப்படித் தெரியும்? ஒருவேளை இங்கிலீஷ்காரர்களின் நீதியைப்போல நம்முடைய இந்திய ஸமஸ்யைகளும் என்று எண்ணிக்கொண்டாய் போலும். ஆனால் ஆங்கிலேயர் மூடர்கள் அல்ல. யூதர்களின் தர்மவிதியை அவர்கள் தழுவி நடக்கிறார்கள். ஆனால் உனக்குத்தான் தெரியுமே—யூதர்களின் கொள்கை வேறு, நம்முடையது வேறு என்று. பின் எந்தக் காரணத்தினால் இரண்டு தாரம் கொள்வது தவறாகும்?

"நீ இப்படியும் சொல்ல இடமிருக்கிறது; ஒரு புருஷன் இரு மனைவிகளைக் கொள்வதைப்போல, ஏன் ஒரு ஸ்த்ரீ இரு புருஷர்களைக் கொள்ளக் கூடாது என்பாய். அதற்குப்பதில்: ஒரு ஸ்த்ரீக்கு இரு புருஷர்கள் இருப்பதனால் எவ்வளவோ கெடுதல்கள் ஏற்பட வழியிருக்கிறது—கொலையளவும் அந்த நட்பு இழுத்து விடும்; ஆனால் ஒரு புருஷன் இரு நாரிகளைக் கொள்ளும்போது இம்மாதிரி கெடுதல்கள் நேராது. ஒரு ஸ்த்ரீக்கு இரண்டு கணவன்மார் இருந்தால், அவர்களுக்கு உண்டாகும் ஸந்ததிகளுக்குத் தகப்பன் யார் என்ற பெரும் ஸந்தேகம் உண்டாகிவிடுகிறது. அதனால் களங்கம். பிதாவே தன் ஸந்தானத்தின் பாலனகர்த்தாவானதால் இந்த விஷயத்தில் கந்தர்கோளம் ஏற்பட்டு ஸமூஹத்தில் ஒரு பெரும் கலவரம் மூண்டுவிடுகிறது. ஆனதுபற்றி அம்மாதிரி விவாஹம் தள்ளுபடி; சாஸ்த்ரத்திற்கும் விரோதமானது. ஸமூஹ வாழ்விற்கும் அடுக்காதது. ஆனால் புருஷனுக்கு இரண்டு மனைவிகள் இருப்பதில் யாதொரு கெடுதலும் நேருவதில்லை. இதில் பிதாவைப் பற்றிய ஸந்தேகம் நீங்கிவிடுகிறது—ஏனென்றால் மக்களின் தாய்மார் வேறு வேறாக இருப்பதால். சக்களத்திகள் இருவருக்கும் மனஸ்தாபம் மூளுமே என்றால், அது எல்லா ஸந்தர்ப்பத்திலும் நேரும்

என்று என்ன நிச்சயம்? அப்படி நேர்ந்தால் புருஷன் அதை ஸஹித்துக் கொள்ள வேண்டியதுதான். இன்னும் என் பக்ஷமாக ஒரு வார்த்தை சொல்லவேண்டி யிருக்கிறது.

"எது பலருக்குத் தீங்கு இழைக்கிறதோ அது நெறிக்கு விரோத மானது—ஸந்தேகம் இல்லை. அப்படி ஒரு புருஷன் ஒரு மனைவியிருக்க இன்னொருத்தியை மணப்பது அநீதியான செயலென்றால், அது எந்த விதத் தில் என்பதை நீ நிரூபிக்க வேண்டும்.

"வீட்டில் அடிக்கடி இரு மனைவிகளிடையே கலகம் மூளும் என்ற ஹேதுவைக்கொண்டு நீ என்னை எதிர்ப்பாய். அதற்கும் ஜவாப் சொல்ல சித்தமாயிருக்கிறேன். எனக்கு ஸந்தான பாக்யம் இல்லை. நான் மரித்தால் என் குலம் அதோடு அழிந்து விடும். நான் மறுவிவாகம் பண்ணிக் கொள்ளு வதனால் மக்கட் பேறு உண்டாக இடம் இருக்கிறது. இது தவறானதா?

"கடைசித் தடங்கல் ஸூர்யமுகி. 'இந்தக்கார்யம் உன்னையே உயிராகப் பாவிக்கும் அந்தப் பதிவ்ரதை ஸூர்யமுகியின் உள்ளத்தில் முள்போலத் தைக்கும்' என்று நீ சொல்லலாம். அதற்குச் சமாதானம்சொல்லுகி றேன் கேள்—ஸூர்யமுகி இந்த விவாஹத்திற்குக் குந்தகமாக நிற்கவில்லை. அதனால் அவள் எள்ளளவும் துக்கிக்கவில்லை. அவளே இதை முடித்து வைத்திருக்கிறாள் என்றால் வேறு என்ன வேண்டும்? என்னை இந்த மாதிரி செய்துகொள்ளும்படி தூண்டியவளும் அவளே! வேறு என்ன தடங்கல் இருக்கிறது? இனி எந்தக்காரணத்தை உத்தேசித்து நான் பண்ணிக் கொள் ளப்போகும் மறுமணம் அநீதமென்று சொல்ல முடியும்?"

(தொடரும்)

# இஷ்ட தெய்வம்*

ஸ்ரீமான் சரத்சந்த்ர சட்டோபாத்யாய

## 1

ஒரு கிராமத்திலுள்ள நதிக்கரையோரத்தில் இரண்டு குயவர் குடும்பங்கள் வசித்துவந்தன. அவர்கள் ஆற்றுக் களிமண்ணை எடுத்து பொம்மைபண்ணி சந்தையில் போய் விற்று வருவார்கள். வெகுநாட்களாக இந்தத்தொழில் அவர்கள் வயிற்றுக்கு அன்னமும், உடுப்பதற்கு உடையும் அளித்துவருகிறது. ஜலம் தூக்குவது, குழந்தைகுட்டிகளுக்குச் சாதம் போடுவது, சூளையில் வெந்த பொம்மைகளையெல்லாம் எடுத்துத் தூசுபோகத்தட்டி வர்ணம்பூசுவதற்காகப் புருஷர்களிடம் கொடுப்பது, இதெல்லாம் அவர்கள் வீட்டுப் பெண்டுகளின் வேலை.

சக்திநாத் என்ற நோஞ்சலான பிராம்மணச் சிறுவன் இந்த மண்பொம்மைமேல் கொண்ட மோகத்தினல் ஒரு நாள் தன் படிப்பு விளையாட்டையெல்லாம் விட்டுவிட்டு, குயவர்களுடனேயே சதாகாலமும் வாசம் செய்யத் தொடங்கினன். அவர்களுக்கு உதவியாக மூங்கில் கொம்புகளைக் கூராகச் சீவிவைத்து, பொம்மைகளை யெல்லாம் மழமழ வென்று தேய்த்துக்கொடுத்து, அவர்கள் அசட்டையாக வர்ணம் தீட்டுவதை மிக்கவெறுப்புடன் பார்த்துக்கொண்டிருப்பான். பொம்மைகளுக்குக் கறுப்புவர்ணத்தினல் புருவம், கண்கள் இவற்றை எழுதுவார்கள். சிலவற்றின் புருவம் பட்டையாகவும், சிலவற்றினுடையது அரைகுறையாகவும், சிலவற்றின் மோவாயில் கறுப்பு வர்ணம் அதிகமாகவும் தீட்டப்பெற்று விகாரமாக விளங்கும். சக்திநாத், "கிழவா, இப்படி அசட்டையாக ஏன் வர்ணம் தீட்டுகிருய்?" என்று கேட்பான். அதற்குக் கிழக்குயவன் அன்புடன் சிரித்துக்கொண்டே, "ஸ்வாமீ, நன்ருக வர்ணம் தீட்டுவதென்ருல் அதிக விலையாகுமே. அவ்வளவு கொடுத்து யார் வாங்கப் போகிருங்கோ? காலணு பொம்மை ஓரணுவுக்கு எப்படி விலைப் போகும்?" என்று பதில் கூறுவான்.

## 2

இந்த சாமான்யமான வார்த்தைகளைப்பற்றி எவ்வளவு சிந்தித்துப் பார்த்தும் கூட சக்திநாதனுக்கு அதன் அர்த்தம் ஏதோ கொஞ்சம்தான் புரிந்தது—புருவம் இருந்தாலும் இராவிட்டாலும் அதன்விலை என்னமோ காலணுதான். ஒரு கண் சின்னதும் இன்னென்று பெரிதுமாக இருந்தாலும் அதே விலைதான். இதற்காக யார் வீண் சிரமப்படுவார்கள்? பொம்மையைச் சிறு குழந்தைகள் வாங்கி, இரண்டொரு மணிநேரம் அதை இடுப்பிலும் பக்கத்திலும் வைத்துக்கொண்டு விளையாடிவிட்டுப் பிறகு அதை உடைத்து விடப் போகிறதுகள். இவ்வளவுதானு?—சக்திநாத் அதிகாலையில் வீட்டிலிருந்து தோசையை மடியில் கட்டிக்கொண்டு வந்திருந்தான். அதில்

---

* வங்காளியிலிருந்து த. நா. ஸேனாபதி மொழிபெயர்த்தது.

சாப்பிட்ட மீதி இன்னும் இருந்தது. வேறேதோ கவனமாய் அதை மென்றுகொண்டும் கீழே இறைத்துக்கொண்டும் தன் இடிந்த வீட்டுத் தாழ் வாரத்தை வந்தடைந்தான். வீட்டில் யாருமில்லை. நோயுற்ற அவன் கிழத் தகப்பனார், ஜமீந்தார் வீட்டிலுள்ள மதனமோஹன ஸ்வாமிக்குப் பூஜை செய்யப் போயிருந்தார். தினமும் வாழைக்காய், அரிசி, முதலிய வாயனம், பிரஸாதம், இவைகளைப் பெற்றுவருவார். அப்புறம் சமைத்துப் பையனுக்குப் போட்டுத் தானும் சாப்பிடுவார். வீட்டுமுற்றத்தில், மல்லிகை, செவ்வலரி, பாரிஜாதம், முதலிய புஷ்பச்செடிகளும் தருக்களும் நிறைந்திருந்தன. கிருஹலக்ஷ்மி இல்லாத அவ்வீட்டில் ஒழுங்கென்பதே காணப்படவில்லை. கிழ மதுஸூதன் பட்டாச்சாரி எப்படியோ நாட்களைக் கழித்துவந்தார். சக்திநாத் புஷ்பங்களைப் பிய்த்து, இலைகளைக் கிள்ளி முற்றமுழுதும் இறைத்துத் திரிவான்.

இப்போதெல்லாம் அவனே வர்ணம் தீட்டும் வேலைக்கு அதிகாரியாகி விட்டான். கிழக்குயவன் பொம்மைகளுள் சிறந்ததைப் பொறுக்கிக்கொடுத்து "எடுத்துக்குங்கோ, ஸ்வாமி, நீங்க உங்க இஷ்டப்படி தீட்டிக்கொள்ளுங் கோ" என்பான். சக்திநாதனுக்கு இதைச் செய்துமுடிக்க வெகுநேரம் பிடிக்கும். அவன் கைவேலை ரொம்ப நன்றாகத்தானிருக்கும். ஆனால் ஒரு காலணாவுக்குமேல் அது விற்பனையாகாது. ஆயினும் கிழக்குயவன் வீட்டிற்கு வந்ததும், "அய்யர் வர்ணம்கொடுத்த பொம்மை இன்னிக்கு இரண்டு பைசாவுக்கு விற்றது" என்பான். சக்திநாத் அதைக்கேட்டு மகிழ் வெய்துவான்.

## 3

அந்தக் கிராமத்து ஜமீந்தார் ஒரு காயஸ்தர். பிராஹ்மண விச்வாஸி; பகவத்பக்தி கொண்டவர். அவர் வீட்டில் உயரமான இடத்திலமைந்த பூஜாக்ருஹத்தில் கறுப்புச் சலவைக்கல்லால் நிருமிக்கப்பட்ட மதனமோஹன ஸ்வாமி விக்ரஹமும், அதன் பக்கலில் ஸ்ரீராதையின் ஸ்வர்ணவடிவமும் வெள்ளி மந்தஹாஸத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தன. பூஜையறைச் சுவர்முழுதும் பிருந்தாவன லீலைகளைக் காட்டும் சித்திரங்கள். மேலேயுள்ள வெண்பந்தலிலிருந்து நூறு கிளைகளுடைய லஸ்தர் விளக்கு தொங்கிக் கொண் டிருந்தது. ஒரு புறம் சலவைக்கல் மேடைமீது பூஜாத்ரவ்யங்கள். அறை முழுவதும் கமழ்ந்த சந்தனுதி புஷ்பவாசனை ஸ்வர்க்கத்தின் நினைவை மூட்டியது.

## 4

வெகுநாட்களுக்குமுந்திய சமாசாரம்—ஜமீந்தார் ராஜநாராயண் பாபு முதிர்பருவம் வரவர தன் தன ஜன யௌவனமெல்லாம் மங்கிவருவதை யுணர்ந்தார். அவர் பூஜாக்ருஹத்தில் பக்திபரவசமாய் கண்ணீர் உகுத்த அன் றையதினம் நிகழ்ந்ததைக் கூறுகிறேன்—அவருடைய ஒரே பெண்ணான அபர்ணு அப்பொழுது ஐந்துவயது பாலிகை. மதுஸூதன் பட்டாசார்யார் அக்கறுப்பு விக்ரஹத்திற்குச் சந்தனபிஷேகம் செய்து மலர்கொண்டு மந்த ஹாஸத்தை அலங்கரிப்பதைத் தகப்பனாருகில் நின்றவண்ணம் ஏகாக்ர

சித்தத்துடன் கவனித்துக்கொண்டிருந்தாள் அபர்ணா. புஷ்பங்களின் நறுமணம் அவளை ஆசீர்வதித்துச் செல்வதுபோல் இருந்தது. அன்றுமுதல் பிரதி தினமும் தவறாமல் அபர்ணா தன்தந்தையுடன் பூஜையைப் பார்க்க வருவாள். மெய்மறந்து அதில் லயித்திருப்பாள்.

அபர்ணா பெரியவளாகிக்கொண்டு வந்தாள். தகப்பனாருடைய பூஜா க்ருஹத்தைத் தன் கண்ணாகவே பாவித்துவந்தாள். விளையாட்டின்போது கூட அதை அவள் மறப்பதில்லை. நாள்முழுதும் அங்கேயே இருந்து கொண்டு சுத்தமாக தூம்புதூசு இராதவாறு பார்த்துக்கொள்வாள். ஒரு பொட்டு ஜலம் கீழே சொட்டியிருந்தாலும் அதைப் புடவைத்தலைப்பினால் துடைத்து விடுவாள். தகப்பனார் தெய்வபக்தியுடையவர் என்று பெயரெடுத்தபோதிலும், அபர்ணாவின் தேவஸேவை அவருடைய பக்தியைக் காட்டிலும் உன்னதமாயிருந்தது. பகவானுக்கு நடந்துவரும் உபசாரங்கள் இப்பொழுது முன்னைவிடப் பன்மடங்காகிவிட்டன. பழைய சந்தனக் கிண்ணம் போதவில்லை. புஷ்பங்கள் ஏராளமாகிவிட்டன. நைவேத்யான்னத்தின் வகைகளும் அதற்கேற்றபடி அதிகமாயின. நித்யமும் விதவிதமான பூஜை ஏற்பாடுகள் செய்து, அவை சரிவர நடக்கின்றனவா என்று மிகுந்த அக்கறையுடன் அவள் கவனித்து வந்ததால், பட்டாசாரியார் உள்பட யாவரும் சிரத்தையுடன் தத்தம் காரியத்தைச் செய்யவேண்டியதாயிற்று. ராஜநாராயண்பாபு இதையெல்லாம் பார்த்து 'பகவான் தமக்குத் தொண்டு புரிய இந்த மஹாலக்ஷ்மியை நம் க்ருஹத்திற்கு அனுப்பியிருக்கிறார் போலும்!' என்று பூரிப்புக் கொள்வார்.

## 5

தக்கவயதில் அபர்ணாவுக்கு விவாகம் நடந்தேறியது. தன் அருமையான தேவஸந்நிதானத்தை விட்டு அவள் இப்பொழுது செல்லவேண்டியிருக்கிறதே!—இந்தச் சஞ்சலமே அவள் முகத்தில் ஒளிரும் இன்முறுவலை மறைத்துவிட்டது. புக்ககம் செல்ல நாளும் பார்த்தாகிவிட்டது. மழை பொழியுமுன் கார்மேகம் ஒன்று மின்னொளியை ஏந்திநிற்பதுபோல், அபர்ணா அந்த தினத்தன்று கண்களில் நீர்தளும்ப நின்றாள். தகப்பனாரிடம் சென்று, "அப்பா, நான் இருக்கும்போது எப்படிப் பார்த்துக்கொண்டேனோ அந்த விதமே ஒரு குறைவும் ஏற்படாதபடி நீ கவனித்துக் கொள்ளவேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள். கிழத்தந்தை "உன் இஷ்டம் போலவே, அம்மணி!" என்று சொல்லி உடல் குலுங்க அழத்தொடங்கினார். பெண்ணை விட்டுப் பிரிவதனாலுண்டாகும் துயரின் சாயை அதில் கலந்திருந்தது. அபர்ணா மௌனமாக அவ்விடம் விட்டு வந்தாள். தன் துக்கத்தை வெளிக்காட்ட அவளுக்குத் தாயார் இருந்தால்தானே? ஒரு யுத்த வீரன், பல வேதனைகள் அவன் மனதை வருத்திப் பின்னுக்கிழுத்த போதிலும் அதையெல்லாம் அடக்கிக்கொண்டு திடசித்தனாய்ப் புரவி மீதேறி போர்முனைக்குச் செல்வது போல், அபர்ணாவும் தான் அறியாத புதியதொரு வாழ்க்கை நடத்த மனஉறுதியுடன் சிவிகையில் ஏறித் தன் பிறந்தகத்தை விட்டுச் சென்றாள். பொங்கி எழும் கண்ணீர் வெள்ளத்தை அடக்கிக் கொள்ளும்போது, 'தகப்பனாருக்கு ஆறுதல் கூற இனி யார் இருக்கிறார்கள்?' என்ற எண்ணம் தோன்றி அவள்

ஹ்ருதயத்தை வாட்டியது. செல்லும் வழியில் தூரத்தில் எதோ ஒரு கிராமத்து ஆலயத்தினின்று வரும் மணியோசையானது குழந்தைப் பருவ முதற்கொண்டு பரிசயமான அவள் இஷ்டதெய்வத்தின் ஞாபகத்தை மூட்டி விட்டது. சட்டென்று அவள் சிவிகையின் எழினியைத் திறந்தாள். தூரத்தில், ஓங்கி வளர்ந்து, அந்தி மங்கலில் இருண்டு தெரியும் ஒரு தேவதாரு விருக்ஷத்தை தேவாலயமாகப் பாவித்து விக்கி விக்கி அழத்தொடங்கினள். சிவிகையோடு வரும் புக்ககத்துப் பணிப்பெண் ஒருத்தி அதைப்பார்த்து, "சுபமாக மாமியார்வீடு செல்லும்போது அழலாமா என்ன?" என்று தேற்றரவு கூறினள். அபர்ணா கண்களைத் துடைத்துக்கொண்டு சிவிகையின் திரையை மூடிவிட்டாள்.

அதேசமயத்தில், பூஜையறையில் மதனமோஹன ஸ்வாமிக்கருகில் வணங்கி நிற்கும் ராஜநாராயண் பாபுவின் நீர்திரையிட்ட கண்களுக்குத் தூபத்தின் மங்கலில் தெரியும் தேவியின் வதனம் தன் அருமை மகளின் சாயலாகவே தோன்றியது!

## ௬

இப்பொழுது புருஷன் வீட்டில் இருக்கிருள் அபர்ணா. தன் கணவனுடன் சம்பாஷிப்பதில் அவள் எள்ளளவும் பிரியம்கொள்ளவில்லை. தாம்பத்ய வாழ்க்கையின் ஆரம்பதசையில் எற்படும் புதிய உணர்ச்சியும் அவள் முகத்தை விட்டு மறைந்துபோன பழைய பொலிவை மீண்டும் கொண்டு வரவில்லை. புருஷனும் மனைவியும் ஒருவரோடொருவர் ஒற்றுமையுடனிருந்தாலும், விவரிக்க இயலாத ஒருவித மனவேற்றுமையுடன் வாழ்ந்துவந்தனர். வெள்ளம் கரைபுரண்டு செல்லும்போது நதிக்கு அணைபோடுவது கடினமாக விருப்பதுபோலவே, அவர்கள் வாழ்க்கையும் சிக்கலான ஸமஸ்யைகள் நிறைந்து இருந்தது.

ஒருநாள் நள்ளிரவில் அமரநாத் நிதானமாக, "அபர்ணா, உனக்கு இங்கு இருக்கப் பிடிக்கவில்லையா சொல்?" என்று கேட்டான். அபர்ணா "ஆமாம்" என்ருள்.

அமரநாத் : அப்பா வீட்டிற்குப் போகிருயா?

அபர்ணா : போகிறேன்.

அமரநாத் : நாளைக்குப் போகிருயா?

அபர்ணா : போகிறேன்.

எதிர்பாராத இப்பதிலைக் கேட்டதும் அமரநாத் திடுக்குற்ருன். சற்று நேரம் மௌனமாயிருந்து, "அனுப்பாவிட்டால்?" என்று கேட்க, "இப்பொழுது இருப்பதுபோலவே இருந்தால் போகிறது" என்று பதிலளித்தாள் அபர்ணா. மறுபடியும் இருவரும் கொஞ்சநாழிவரை நிச்சப்தமாக விருந்தனர். பிறகு அமர், "அபர்ணா!" என்று கூப்பிட்டான். "என்" என்ருள் அபர்ணா, வேறு சிந்தையில் ஈடுபட்டவளாய்.

"என்னால் ஒரு விதப் பிரயோஜனமும் இல்லையே உனக்கு?" என்று கேட்டான் அமர்.

அபர்ணா போர்வையை நன்றாக இழுத்துப் போர்த்துக்கொண்டு, "இந்தமாதிரி வார்த்தைகளுக்குப் பதிலளித்தால் வீண் சச்சரவுதான் ஏற்படும்" என்றாள்.

"சச்சரவு நேரிடும் என்று உனக்கு எப்படித் தெரியும்?"

"எங்க அப்பா வீட்டிலே என் சின்ன அண்ணாவுக்கும் மதனிக்கும் சதா இதுமாதிரி சண்டை நடக்கும். எனக்குச் சண்டை சச்சரவு என்றால் பிடிக்காது."

இதைக் கேட்டதும் அமரநாதனின் சரீரத்தில் ஒருவித உணர்ச்சி உண்டாயிற்று—அவ்வாறு நேரவேண்டும் என்பதுதான் அவன் எண்ணம்! இன்று அச்சந்தர்ப்பத்தை நழுவவிடாமல், "வா அபர்ணா, நாம் இருவரும் இப்படி இருப்பதைவிட சண்டை போட்டுக்கொண்டிருப்பதே மேல்" என்றான். அபர்ணா, "சே, எதற்காகச் சண்டை? நீங்கள் தூங்குங்கள்" என்றாள்.

அதற்குப்பின் அபர்ணா தூங்கிக் கொண்டிருந்தாளா விழித்திருந்தாளா என்பதை அமரநாதனால் அறிந்துகொள்ள முடியவில்லை.

காலையில் எழுந்ததுமுதல் சாயந்திரம்வரை ஜபதபத்திலேயே காலத்தைக் கழித்துவருவாள் அபர்ணா. கேலி தமாஷாக்களில் கலந்துகொள்ளாதிருப்பதைக் கண்டு அவள் வயதுக்கீடான பெண்கள் அவளைத் திட்டின போதிலும், நாத்திமார்கள் 'பண்டாரச்சி' என்று பரிகஸித்தபோதிலும், அபர்ணா அவர்கள் கோஷ்டியில் சேருவதில்லை. தன் வாழ்க்கை வியர்த்தமாய்ச் சென்று கொண்டிருக்கிறது என்று ஸதா அவளுக்குத் தோன்றியது. இதனிடையே தன் இஷ்டதேவதையின் ஞாபகம் வந்துகொண்டிருக்கும். பௌர்ணமி யன்று கொந்தளித்தெழும் கடல்போல், தன் தகப்பனார் பிரதிஷ்டை செய்த அந்த பகவானுடைய ஸாந்நித்யத்தை என்று அடைவோம் என்ற தீவ்ர ஏக்கமே அவள் ரத்தம் முழுதும் பாவியிருந்தது. இதை எப்படி அவளால் ஆற்றமுடியும்? வீட்டுக்காரியங்களிலும், சில்லரை விளையாட்டுகளிலும் கவனம் செலுத்துவதனாலா? இப்பேர்ப்பட்ட ஒரு மகத்தான மாயையில் அவள் மனம் மூழ்கி அலையும்போது புருஷனுடைய அன்போ பந்துக்களின் கூட்டுறவோ அவளை எவ்வாறு அண்டும்? கன்னியாகவே யிருந்து தேவஸேவையில் ஈடுபடவிரும்பும் அவள், பெண் ஜன்மமெடுத்ததின் பயனை எங்ஙனம் அறிவள்?

## 7

அமரநாத் ஒன்றும் அறியாத இயல்புடையவன். அவன் தன் மனைவிக்குப் பிரீதியாக அளிக்கவேண்டுமென்று ஏதோ ஒன்று எடுத்து வந்திருந்தான். அப்போது காலை ஒன்பது அல்லது பத்துமணி யிருக்கும். ஸ்நானத்தை முடித்துவிட்டுப் பூஜை செய்யச் சென்றுகொண்டிருந்தாள் அபர்ணா. அமரநாத் அவளிடம் வந்து, மிருதுவான குரலில், "அபர்ணா, ஒரு வஸ்து கொண்டு வந்திருக்கிறேன். தயவுசெய்து அதை வாங்கிக் கொள்வாயா?" என்று கேட்டான். அபர்ணா சிரித்த முகத்துடன், "வாங்கிக் கொள்ளாமலென்ன" என்றாள். அமரநாதனுக்கு வந்த ஆனந்தத்திற்கு எல்லையில்லை. தன்மனோரதம் பூர்ணமாக ஈடேறிவிட்டதாகப் பிரமை

கொண்டான். பெருமிதத்துடன் ஸொகுஸான கைக்குட்டையில் கட்டப் பெற்ற ஒரு சிறிய பெட்டியைத் திறந்தான். அதன் மூடிமேல் அபர்ணாவின் பெயர் பொன்னால் பொறிக்கப்பட்டிருந்தது. நிமிர்ந்து பார்த்தான் அமர். சூன்யத்ருஷ்டியுடன் அபர்ணா அப்பெட்டியை நோக்குவதைக் கண்டான்! அவன் உத்ஸாஹமெல்லாம் குன்றிப்போயிற்று. அர்த்தமற்ற ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். வெட்கம் கொண்டுபோக, தலைநிமிராமல், பெட்டியிலிருந்து சில 'குந்தலீன்' லிஸாக்களையும் மற்றும் எதெதையுமோ வெளியே எடுக்கப் போனபோது, அபர்ணா அவனைத் தடுத்து, "இவற்றையா எனக்காகக் கொண்டுவந்தீர்கள்?" என்றாள். கள்ளம் கபடற்ற அமரநாத், " ஆமாம், உனக்காகத்தான் இதெல்லாம் கொண்டு வந்திருக்கிறேன். இந்த விலாசத் திரவ்யங்கள்—" என்று மிகுதியும் சொல்லி முடிப்பதற்குள் அபர்ணா, "பெட்டி கூடத்தானே எனக்குக் கொடுக்கிறீர்கள்?" என்றாள். "ஆமாம்" என்றான் அமர். "அப்படியானால் அதையெல்லாம் வீணாக வெளியிலெடுப்பானேன், பெட்டியிலேயே இருக்கட்டுமே?" என்றாள் அபர்ணா.

"அது இருக்கட்டும். நீ இதை உபயோகிப்பாயா?"

அபர்ணாவின் புருவங்கள் சுளித்தன. உலகவழக்கிற்கே எதிர்ப்பாக இருக்கும் இவளுடைய இந்த வைராக்ய வாழ்க்கைக்கு இவ்வன்பு நிறைந்த வேண்டுகோள் முரண்பட்டதாகத் தோன்றியது. அவள் சஞ்சலமுற்று, உடனே "அது ஒன்றும் பாழாகிவிடப்போகிறதில்லை. வைத்துவையுங்கள். என்னைத் தவிர்த்து எத்தனையோபேருக்கு அது உபயோகமாக விருக்கும்" என்று கூறிவிட்டு அவனுடைய பதிலுக்காகக் காத்திராமல் பூஜையறையை நோக்கிச் சென்றாள்.

அமரநாத் ஒன்றும் தோன்றாதவனாய் மறுதளிக்கப்பட்ட அப்பெட்டியின் பேரில் கையை வைத்துக்கொண்டு கீழே உட்கார்ந்து விட்டான். தன்னைத் தானே ஆயிரம் தடவை 'முட்டாள், முட்டாள்' என்று வைதுகொண்டான். வெகுநேரம் கழித்து ஓர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டான். 'அடி கல்நெஞ்சக்காரி!' என்ற பதங்கள் அவன் வாயினின்று வெளிவந்தன. கண்களில் நீர் நிரம்பியது. அதைத் துடைத்துக்கொண்டான். அபர்ணா ஸ்பஷ்டமாக 'அது வேண்டாம்' என்று கூறியிருந்தால் கூட விஷயம் வேறு விதமாக முடிந்திருக்குமே! ஆனால் வாயால் சொல்லாமல் இப்படிச் செய்தது அவன் ஹ்ருதயத்தில் ஆழப் பதிந்து வாட்டியது. இதற்குப் பதில் எப்படித் தீர்த்துக்கொள்வான்? 'அபர்ணாவைப் பூஜையறையிலிருந்து இழுத்துவந்து திரஸ்கரிக்கப்பட்ட இந்த வஸ்துவை உடைத்துப் போட்டு, அவள் மூஞ்சியில் இனி விழிக்கப்போவதில்லை என்று பிரதிஜ்ஞை செய்துகொண்டு விடலாமா?...இப்பொழுது நாம் என்ன செய்வது? எந்த நோக்கமுமின்றி எங்கேனும் ஓடிப்போய் விடலாமா? அப்படியிருந்தால் என்றாவது அபர்ணா கஷ்ட தசையிலிருக்கும்போது ரக்ஷிக்கமுடியும்'— இம்மாதிரி நடக்கக்கூடியதும் கூடாததுமான எண்ணங்கள் மூண்டு அவன் மூளையைக் குழப்பின. ஆனாலும் முன்போலவே அழுதுகொண்டுதானிருந்தான்; ஒரு முடிவிற்கும் வந்தபாடில்லை.

## 8

இரண்டு இரவுகளாக அவன் படுக்கையறையில் வந்து படுப்பதில்லை. அவன் தாயார் இதையறிந்து மருமகளைக் கண்டித்து, பிள்ளைக்கும் புத்தி சொல்லி ஒருவழியாக இருவரையும் சமாதானப்படுத்திவைத்தாள். அபர்ணா ராத்திரி புருஷனிடம் வந்து, "உங்கள் மனதைப் புண்படுத்தியிருந்தேனானால் தயவுசெய்து என்னை மன்னியுங்கள்" என்று இறைஞ்சி வேண்டிக் கொண்டாள். அமரநாதனால் ஒன்றுமே பேச முடியவில்லை. படுக்கையின்மேல் விரித்திருந்த வெண்மையான துப்பட்டியைச் சரியாகப் போட்டுக் கொண்டிருந்தான். அபர்ணா அவனெதிரில் நின்றவண்ணம் மறுபடியும், "என்னை மன்னிக்க மாட்டீர்களா?" என்றாள். அமரநாத் தலை நிமிராமல், "எதற்காக உன்னை நான் மன்னிப்பது? உன்னை மன்னிக்க எனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?" என்றான்.

அபர்ணா புருஷனின் இருகரங்களையும் தன் கையில் பற்றிக்கொண்டு, "அம்மாதிரி சொல்லவேண்டாம். நீங்கள் என் புருஷர். என்பேரில் கோபித்துக்கொண்டால் நான் என்ன செய்வது? நீங்கள் என்னை க்ஷமிக்காவிட்டால் நான் எங்கு செல்வேன்? எதற்காக என்மீது கோபம்?" என்றாள். கம்மின குரலில் அமரநாத், "உன்பேரில் என்னகோபம், ஒன்று மில்லையே!" என்றான்.

"இல்லையா?"

"இல்லை."

அபர்ணாவுக்குச் சண்டை யென்றால் பிடிக்காது. அதனால் அவன் சொன்னதை நம்பியே தீரவேண்டியிருந்தது. பிறகு மனச்சஞ்சலம் நீங்கினவளாய் படுக்கையின் ஓர் ஓரத்தில் படுத்துக்கொண்டாள். அமரநாதனுக்கு இது பெரிய ஆச்சரியமாயிருந்தது! வேறு பக்கமாகத் திரும்பிக்கொண்டு, 'நாம் சொன்னதை இவள் எப்படி நம்பினாள்? இவ்வளவு பிரமாதமான விஷயம் இத்தனை சீக்கிரமாக சரிப்பட்டு இப்படி வீணாய்ப் போய்விட்டதே' என்றெல்லாம் எண்ணமிட்டவண்ண மிருந்தான்.

பிறகு அபர்ணா உண்மையிலேயே நிச்சிந்தையாகத் தூங்குவதைக்கண்டு எழுந்து உட்கார்ந்து, உரத்த குரலில், "தூங்குகிறாயா என்ன, அபர்ணா?" என்று கேட்டான். அவள் விழித்துக்கொண்டு, "என்னைக் கூப்பிட்டீர்களா என்ன?" என்று எழுந்திருந்தாள்.

"ஆமாம். நாளைக்கு நான் கல்கத்தாவுக்குப் போகப் போகிறேன்."

"இதைப்பற்றி என் இதுவரை பிரஸ்தாபிக்கவில்லை? இதற்குள் உங்களுக்குக் காலேஜ் திறந்துவிட்டார்களா என்ன? இன்னும் இரண்டு நாளாவது இருக்கமாட்டீர்களா?"

"முடியாது."

அபர்ணா சற்று சிந்தித்தவளாய், "நீங்கள் என்மீது கோபித்துக் கொண்டா போகிறீர்கள்?" என்று கேட்டாள். அவள் சொன்னது வாஸ்தவந்தான். ஆனாலும் அமரநாத் அதை ஒத்துக்கொள்ளவில்லை. எங்கிருந்தோ சங்கோசம் வந்துவிட்டது அவனுக்கு. அபர்ணாவின் உயர்ந்த நோக்கத்திற்கு நாம் தடையாக இருக்கப்போகிறோமே என்ற பயம் அவனுக்கு. புருஷ

னுக்குள்ள ஸ்வதந்த்ரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக ஆகர்ஷித்துக்கொண்டு விட்டாள் அபர்ணா. அவன் எந்த விதத்தில் தன் கோபத்தை வெளிக்காட்டுவான்? அபர்ணா மீண்டும், "கோபித்துக்கொண்டு எங்கும் போகவேண்டாம், அதனால் என் மனம் மிகவும் அல்லல் படும்" என்றாள்.

அமரநாத் நிஜமும் புளுகும் கலந்து பதில் கூறினான். தனக்குக் கோபமில்லை யென்றும் அதற்கு அத்தாக்ஷியாக இன்னும் இரண்டுநாள் இருந்துவிட்டுப்போவதாகவுஞ் சொன்னான்; தங்கவும் தங்கினான். தான் தோல்வியுற்றதை எண்ணி அவமானம்கொண்டு மனஸுக்குப் பிடிக்காமல் அந்த இரண்டு நாட்களும் வீட்டில் இருந்து தொலைத்தான்.

௭

அடைமழை பொழிவதில் ஒரு நன்மை இருக்கிறது. ஆகாயம் பரிஷ்காரமாகி விடுகிறது. ஆனால் சிறு தூறல்களினால் மேகங்கள் கலைவதில்லை. சேறும், சதசதப்பும், அதனால் மனதிற்கு அஸ்துஷ்டியும் ஏற்படுவதைத் தவிர வேறொரு பயனுமில்லை. வீட்டிலிருந்து புண்பட்ட மனத்துடன் கல்கத்தாவிற்கு வந்தான் அமர். அவ்வளவு விசாலமான நகரில்கூட அவனுக்கு மனச்சாந்தி ஏற்படவில்லை. முன்பு அவன் இங்கு அனுபவித்த ஸுகத்திற்கெல்லாம் இப்பொழுது அவன் மனம் இடம் கொடுக்கவில்லை. படிப்பின்மேலாவது மனம் சென்றதா? அதுவுமில்லை. திரும்பி வீட்டிற்குப் போகவும் பிடிக்கவில்லை. இதயத்தில் வேதனை நிரம்பியிருந்தது. அவன் மனம் அதை அகற்றப் பாடுபட்டது. ஆனால் அது முடிந்தால்தானே?

இம்மாதிரி மனநோய்க்காளாகி ஒருநாள் கடும் ஜுரத்தில் வீழ்ந்தான். அந்தச் செய்திகேட்டு உடனே தாயாரும் தகப்பனாரும் வந்தார்கள். ஆனால் அபர்ணாவை அழைத்து வரவில்லை. அமரநாதனுக்கு அவள் வரமாட்டாள் என்று தெரிந்திருந்தபோதிலும் ஏனோ அவன் மனம் 'திக்' என்றது! நோய் வரவர அதிகமாகிக்கொண்டே வந்தது. இப்பொழுது அபர்ணாவைப் பார்க்கவேண்டுமென்று வாஸ்தவமாகவே ஆசையாயிருந்தது அவனுக்கு. ஆனால் அதை வாய்விட்டுச் சொல்ல முடியவில்லை. தாய் தந்தையரும் அதை அறிந்துகொள்ள வில்லை. திருப்பித் திருப்பி, மருந்தும், பத்யமும், டாக்டரும் தான். ஆனால் அதெல்லாம் எத்தனை நாள்? கடைசியாக ஒருதினம் நித்ய சாந்தி நிலவும் உலகிற்கேகினான் அமர்.

அபர்ணா ஸ்தம்பித்துப்போய்விட்டாள். அவளுடைய கோரிக்கையை இப்படியா இறைவன் அர்த்தம் புரிந்துகொண்டான்? இதையா அவள் இத்தனைநாள் மனதினுள் எதிர்பார்த்திருந்தாள்? எவ்விதமோ பகவான் அவளுடைய விருப்பத்தைப் பூர்த்திசெய்து விட்டார்!—வெளியில் தன்கிழப்பிதா அழுவதுகேட்டது—இதெல்லாம் கனவோ? அவர் எப்போது இங்கு வந்தார்?—அபர்ணா ஜன்னலைத்திறந்து பார்த்தாள்; வாஸ்தவமாகவே ராஜநாராயண்பாபு தரையில் புரண்டு ஒரு குழந்தைபோல் அழுதுகொண்டிருந்தார். அவளும் கீழேவிழுந்து கண்ணீர் வெள்ளம் புரளப் புலம்பத் தொடங்கினாள்.

அந்திப்பொழுது நெருங்கிவிட்டது. தந்தை "அம்மா, அபர்ணா!" என்று அவளை மார்போடு அணைத்துக்கொண்டு கதறினார்.

"உன் மதனமோஹனன் மறுபடியும் உன்னைப் பூஜாக்ருஹத்திற்கு அழைக்கிறார், அம்மா."

"சரி, அப்பா, போகலாம்."

மறுநாள் பெண்ணை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

அபர்ணா கட்டியிருக்கும் வெள்ளாடையும், வாரப்படாது விரித்த கூந்தலும் அவளுக்கு ஒத்திருந்தன. 'கடவுள்தான் இவ்விதம் செய்து தன்னை அழைத்துக்கொண்டார். அதனால்தான் அவர் முகத்தில் முல்லை முறுவல் விளையாடுகிறது' என்றெல்லாம் எண்ணி, இஷ்டதெய்வத்திற்கு ஸேவை செய்யத் தன்னை ஸ்வதந்த்ரமாக விட்டுச் சென்ற கணவன் நித்யசாயுஜ்ய பதவியடையுமாறு மனப்பூர்வமாகப் பகவானைப் பிரார்த்தித்தாள்.

## 10

சக்திநாத் ஒரே கவனத்துடன் ஸ்வாமி பொம்மை பண்ணிக்கொண்டிருந்தான். பூஜைசெய்வதைப் பார்க்கிலும் ஸ்வாமி பண்ணுவது அவனுக்கு அதிகம் பிடித்திருந்தது. எப்படி மூக்கு வைப்பது, கண் எவ்விதம் இருந்தால் நன்றாயிருக்கும், எந்த வர்ணம் தீட்டினால் ஒத்திருக்கும், இதெல்லாம் தான் அவனுடைய சிந்தனைகள். எப்படிப் பூஜை செய்வது, எப்படி மந்திரம் சொல்வது, இந்த விஷயங்களில் அவன் மனஞ் செலுத்தவில்லை. இப்பொழுது சக்திநாத் பெரிய பையனாகி விட்டான். அதனால் அவனுடைய கிழப்பிதா "அப்பா, சக்தி, இன்றைக்கு எனக்கு உடம்பு அதிகமாயிருக்கிறது; ஜமீந்தார் வீட்டுக்குப்போய் நீ பூஜை செய்துவிட்டு வா" என்றார்.

"ஸ்வாமி பண்ணிண்டிருக்கேனே?" என்றான் சக்தி.

கிழவர் பலஹீனமாய் எரிச்சலுடன் "விளையாட்டெல்லாம் அப்புறம் ஆகட்டுண்டா. போய்ப் பூஜை பண்ணிவிட்டு வா!" என்று ஆக்ஞாபித்தார்.

சக்திநாதனுக்கு அதில் கொஞ்சம்கூட இஷ்டமில்லை. ஆயினும் 'விதியே' என்று ஸ்நானம் செய்துவிட்டு ஜமீந்தாரின் பூஜாக்ருஹத்திற்கு வந்தான். இதற்கு முன்புகூட இரண்டொரு தடவை பூஜைபண்ண அங்கு வந்திருக்கிறான். ஆனால் இப்போதிருந்த மாதிரி ஆடம்பரத்தையும் அமர்க்களத்தையும் அவன் அப்பொழுது பார்த்ததில்லை. 'எவ்வளவு வாசனை? நைவேத்யான்னத்தில் எத்தனை வகைகள்! இவ்வளவையும் வைத்துக்கொண்டு என்ன பண்ணுவது? எப்படி, யாருக்குப் பூஜை செய்வது?' என்றெல்லாம் அவனுக்கு யோசனை மூண்டது. எல்லாவற்றையும்விட அபர்ணாவைப் பார்த்துத்தான் அவன் மிகவும் ஆச்சரியமடைந்தான்!—இவள் யார்? எங்கிருந்து வந்தாள்? இத்தனை நாட்களாக எங்கு இருந்தாள்?

அபர்ணா அவனைப் பார்த்ததும், "பட்டாச்சாரியாரின் பிள்ளைதானேயப்பா நீ?" என்று கேட்க, சக்திநாத் "ஆம்" என்றான்.

"அப்படியானால் கை காலை அலம்பிக்கொண்டு பூஜை செய்ய வா!"

பூஜை செய்ய உட்கார்ந்த சக்திநாத் கொஞ்சநஞ்சம் தெரிந்த மந்திரத்தையும் மறந்துவிட்டான். அதன்பேரில் அவன் கவனம் செல்லவேயில்லை. 'இந்தத் திவ்ய ரூபிணி யார்?' என்ற யோசனை ஒன்றுதான் அவன்

மனதில். பூஜைசெய்யும் முறையும் தாறுமாறாக இருந்தது. புஷ்பம் அர்ச்சிக்கவேண்டிய சமயத்தில் மணியடித்தும், நைவேத்யான்னத்தின் மேல் ஜலத்தைச் சுற்றுவதற்குப் பதிலாக அதன்மேல் நினைத்தபோதெல்லாம் தெளித்தும் இந்த மட்டிப் புரோகிதச் சிறுவன் பூஜை செய்வதுபோல் பாவனை பண்ணுவதை, பூஜாவிதிகளில் தேர்ச்சி பெற்ற அபர்ணா கவனித்து வந்தாள்.

பூஜை முடிந்ததும் அவள், "பிராமணனுடைய பிள்ளையாயிருந்து உனக்குப் பூஜை செய்யக்கூடத் தெரியவில்லையா?" என்று கடிந்துரைத்தாள். சக்திநாத் அதற்கு, "தெரியும்" என்றான். "என்னத்தைத் தெரியும்? மண்ணாங்கட்டிதான் தெரியும் உனக்கு" என்றாள் அபர்ணா.

சக்திநாத் ஒன்றும் தோன்றாது அவள்முகத்தை நோக்கிவிட்டு வெளியே செல்ல யத்தனித்தான். அபர்ணா "இந்தா, இவற்றையெல்லாம் எடுத்துப் போ! நாளைக்கு நீ வரவேண்டாம். உன் தகப்பனாருக்கு உடம்பு சொஸ்த மானதும் அவர் வரட்டும்" என்று கூறி அவனிடம் வாயனம், பிரஸாதம், இவைகளைக் கொடுத்தனுப்பினாள்.

பூஜாக்ருஹத்திலிருந்து வெளிவந்தான் சக்திநாத். அவன் உடல் சிலிர்த்தது.

அவன் சென்றதும் அபர்ணா வேறு பிராம்மணர் ஒருவரைக் கூப்பிட்டுப் பூஜையைச் சரிவர செய்துமுடித்தாள்.

## 11

ஒரு மாதம் கழிந்தது. ஒருநாள் ஆசார்ய யதுநாத், ஜமீந்தார் ராஜநாராயண் பாபுவைப் பார்த்து, "நீங்கள் ஸமஸ்தமும் அறிந்தவாள். இப்பேர்ப்பட்ட பெரிய பூஜாக்ருஹத்தில் மதுஸூதன் பட்டாச்சாரியின் பிள்ளையை வைத்துக்கொண்டு நடத்தினால் பூர்ணமாக இராது" என்றார். ராஜநாராயண் பாபு "அதைத்தான் அபர்ணாவும் சொன்னாள்" என்று அவர் சொன்னதை ஆமோதித்தார். அதற்குப் புரோகிதர் "ஆமான்னா, ஸாக்ஷாத் மஹாலக்ஷ்மியே உருவெடுத்து வந்ததுபோலிருக்கிறாளே, அவளுக்குத் தெரியாதது ஒன்றுண்டோ!" என்று கூடத் தாளம் போட்டுவிட்டு, "பூஜை நான் பண்ணாலும் சரி, யார் பண்ணாலும் சரி, சுத்தமாகச் செய்யவேண்டுமென்பதுதான் என் கோரிக்கை. அவர் செத்தபிற்பாடு அவர் பிள்ளை வரவேண்டியது நியாயம் தான். இருந்தால்கூட அவன் அதற்கேற்றவனல்ல. விளையாட்டில் காலம் கழிப்பதனால் பூஜை அர்ச்சனை ஒன்றும் பண்ணத்தெரியவில்லை" என்றார்.

"சரிதான், நீங்களேதான் பூஜை செய்யுங்களேன்" என்று சொல்லிவிட்டு ராஜநாராயண்பாபு, "எதற்கும் அபர்ணாவைக் கேட்டுவிட்டு வருகிறேன்" என்றார்.

தகப்பனாரிடமிருந்து இதைக் கேட்டதும் அபர்ணா அதற்குச் சம்மதியாமல், "அப்படிச் செய்யலாமா என்ன? பிராம்மணப் பையன், அதிலும் திக்கற்ற சிறுவன். அவனுக்குத் தெரிந்த வரையில் செய்யட்டும். அதிலேயே திருப்தியடைவார் பகவான்" என்றாள்.

பெண்சொன்னது உசிதமென்றே பட்டது ராஜநாராயண் பாபுவுக்கும். "உன் இஷ்டம் எப்படியோ அவ்விதமே செய்யம்மா" என்றார்.

அபர்ணா சக்திநாதனை வரவழைத்து அவனையே பூஜைசெய்ய ஏற்பாடு செய்தாள். அவள் கடிந்துகொண்ட அன்றைய தினத்திலிருந்து அவன் இப்பக்கம் வரவில்லை. இதனிடையே தகப்பனார் இறந்துவிட்டார். அவனுக்கும் உடம்பு சரியாகயில்லை. துயர் நிறைந்து வாடிய அவன் முகத்தைக் கண்டதும் அபர்ணாவிற்கு அவன்மீது ஒருவித பாசம் ஏற்பட்டது. ''உனக்குத் தெரிந்தவரை செய்'' என்று வாஞ்சையுடன் கூறினாள். அதைக் கேட்டதும் அவனுக்குப் புதிய பலம் உண்டானது போலாயிற்று. பூஜையில் மனம் ஒன்றியவனாய் உட்கார்ந்துகொண்டான். அது முடிந்ததும் அபர்ணா ப்ரஸாதம் முதலியவற்றைத் தானே கட்டிக்கொடுத்து, ''இன்றைக்கு நன்றாகப் பூஜை பண்ணினாய்—நீயேவா சமைத்துக் கொள்கிறாய்?'' என்று கேட்டாள். ''முடிந்த அன்று சமைத்துக்கொள்வேன். முடியாவிட்டால் கம்மென் றிருந்துவிடுவேன்.''

''உனக்கு யாருமே திக்குக் கிடையாதா?''

''இல்லை.''

அவன் போனதும் அபர்ணா கைகுவித்து, ''பகவானே, அவன் குழந்தை. செய்யத்தெரியாவிட்டாலும் அவன் பூஜையை ஏற்றுக்கொள்ளவேண்டும்'' என்று மனமாறப் பிரார்த்தித்தாள். அபர்ணா அன்றுமுதல் சக்திநாத் சாப்பிட்டானா இல்லையா என்று வேலைக்காரி மூலமாக அறிந்துகொள்வாள்.

அதிலிருந்து சிறுவனும் யுவதியும் ஒரே மனதாக இறைவன் தொண்டில் ஈடுபட்டனர். அவன் பூஜை செய்கையில் அவள் அவனுக்குத் தெரியாதவற்றைக் கற்றுக்கொடுப்பாள். அவன் புஷ்ப சந்தனத்தைக் கையில் எடுத்துக் கொண்டதும் அபர்ணா அவற்றை எங்கெந்த சமயங்களில் போடவேண்டும் என்று சொல்வாள். இதையெல்லாம் பார்த்துவந்த யதுநாத் ஆசார்யர், ''என்ன இது, சிறுபிள்ளை விளையாட்டாயிருக்குதே?'' என்பார். கிழ ஜமீந்தார், ''எப்படியானால் என்ன? அவள் துக்கத்தை மறந்து நிம்மதியாக இருந்தால் போதும்'' என்பார்.

## 12

சினிமாவில் ஒரு காட்சியைப் பார்த்த மறுவினாடி அது மறைந்து இன்னொன்று வருவதுபோல், இந்த லோகத்தில் ஸுகபோகத்தினிடையே பழைய எளிமை, துக்கம், யாவும் மறைந்து விடுகின்றன. சக்திநாதனின் வாழ்க்கையும் அவ்விதமே மாறிவிட்டது. நடு நடுவே அவன் மனதில், முன்னர் பொம்மை பண்ணிக்கொண்டு யதேச்சையாயிருந்த நினைவெல்லாம் ஞாபகத்திற்கு வரும். இப்போதோ அபர்ணா அவனை விலைகொடுத்து வாங்கினமாதிரி ஆகிவிட்டது. அவளுடைய அன்பானது அவனை ஆகர்ஷிக்க ஆரம்பித்தது.

திடீரென்று ஒருநாள் சக்திநாதனின் அம்மான்சேய் வந்தான். மாமா கல்கத்தாவில் வசிப்பவர். இப்போது சௌக்யமான நிலையிலிருப்பதால் தங்கைபிள்ளை ஒருவன் இருக்கிறான் என்ற நினைவு வந்து தன் பெண்ணுடைய கல்யாணத்திற்கு அவனை அழைத்து வரும்படி தம்முடைய பிள்ளையை அனுப்பி யிருந்தார். இந்தச் செய்தி கேட்டதும் சக்திநாத் மிகுந்த சந்தோஷமடைந்தான். அன்றிரவெல்லாம் அம்மான்சேயிடமிருந்து கல்கத்தாவி

லுள்ள ஒவ்வோர் அதிசயத்தையும் பற்றிக் கேட்டுத் தெரிந்துகொண்டான். மறுநாள் கோயிலுக்குச் செல்ல அவனுக்கு இஷ்டமில்லை. பூஜை நேரமாகியும் அவன் வராதிருப்பதைக்கண்டு அபர்ணு அவனை ஆளைவிட்டு அழைத்து வரச் சொன்னுள். சக்திநாத் வந்து, "நான் இன்று கல்கத்தா போகிறேன். என் மாமா பெண்ணுக்குக் கலியாணம்" என்று சொல்லி சங்கோசத்துடன் நின்றுன். அபர்ணு சற்றுநேரம் மௌனமாயிருந்து, "எப்பொழுது திரும்புவாய்?" என்று கேட்டாள்.

சக்திநாத் பயத்துடன், "மாமா எப்பொழுது அனுப்புகிறுரோ அப்பொழுது வருகிறேன்" என்றுன். அபர்ணு பதிலொன்றும் கூறவில்லை.

மறுபடியும் அந்த யதுநாத் ஆசார்யரே பூஜை பண்ண வந்தார். அபர்ணு பழையபடி அதைப் பார்த்துக்கொண்டு மட்டும் இருந்தாள்; தான் சொல்ல வேண்டியது இப்போது ஒன்றுமில்லை.

கல்கத்தாவுக்கு வந்து பல்வேறு அதிசயக்காட்சிகளைப் பார்த்தும் சக்திநாதனின் மனம் தன் வீட்டை எண்ணியே ஏங்கியது. அவனுக்கு அந்நகரில் இருக்கப் பிடிக்கவில்லை. இரவில், அபர்ணு தன்னை அடிக்கடி கூப்பிடுவது போலவும், தான் பதில் சொல்லாதிருப்பதால் அவள் கோபம் கொள்வது போலவும் கனவு காண்பான். ஒரு நாள் மாமாவிடம் வந்து, "நான் ஆத்துக்குப் போகவேண்டும்" என்றுன். அவர், "அந்தப் பட்டிக்காட்டில் என்னடா வைத்திருக்கிறது? இங்கேதான் இரேன். நன்றுக எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டால் உன்னை வேலையில் அமர்த்துவேன்" என்றுர். சக்திநாத் 'மாட்டேன்' என்னும் பாவனையாகத் தலையசைக்கவே அவர்கோபத்துடன், "எப்படியாவது ஒழிந்துபோ!" என்று சொல்லிவிட்டார்.

வீட்டுப் பெரிய மருமகள் சக்திநாதனைக் கூப்பிட்டு, "நாளைக்குப் போகப் போகிறுயா என்ன, ஊருக்கு?" என்று கேட்டாள். சக்தி "ஆமாம்" என்றுன். "அபர்ணுவை நினைத்துக்கொண்டு விட்டாயா? அவள் உன்னிடத்தில் ரொம்பப் பிரீதியாயிருக்கிறுளாக்கும்" என்றுள் வீட்டு மருமகள். இதற்கு முன்பே அவள் அபர்ணுவைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறுள்—"அப்படியானுல் அவளுக்குப் பிடித்த வஸ்துவைத் தருகிறேன். அதை எடுத்துக் கொண்டுபோய் அவளிடம் கொடு" என்று கூறிவிட்டு ஒரு சிறிய வாசனைத் தைல சீசாவை அவனிடம் கொடுத்தாள்.

## 13

சக்திநாத் மறுநாள் தன் வீட்டிற்குத் திரும்பினுன். அச்சிறிய சீசாவை மடியில் வைத்துக்கொண்டு கோயிலுக்கு வந்திருந்தான். பூஜை முடிந்ததும் அதை அபர்ணுவிடம் கொடுக்கலாம் என்று எண்ணியிருந்தான். ஆனுல் தைரியம் வரவில்லை. இந்த மாதிரியே ஒரு வாரம் கழிந்தது. பிரதி தினமும் அவன் அதைக் கொண்டுவருவதும் கொடுக்காமல் திருப்பி எடுத்துப்போவதுமாக இருந்தான். முன்போல் அபர்ணு அவனை அழைத்துப் பேசினுலாவது அதை அவளிடம் கொடுத்திருப்பான். இப்பொழுது எவ்வாறு முடியும்? இரண்டு தினங்களாக அவனுக்கு ஓயாமல் ஜுரம் அடித்துக்கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும் பூஜைசெய்யத் தவறுவதில்லை. அவனை யறியாது ஏதோ பயத்தினுல், தனக்குக் காய்ச்சல் என்றுகூடச்

சொல்லிக்கொள்ளவில்லை. ஆனாலும் அபர்ணாவுக்கு இது எப்படியோ தெரிந்துவிட்டது.

"உனக்கு ஜுரமாமே! ஏன் என்னிடம் சொல்லவில்லை? ஏன் பிரதிதினமும் ஸ்நானம் பண்ணிவிட்டுப் பூஜைசெய்ய வருகிறாய்?" என்று கேட்டாள்.

ஜுரவேகத்தினால் சக்திநாதனின் கண்கள் சிவந்து நீர் பெருகியது. க்ஷணநேரம் எல்லாவற்றையும் மறந்து, மடியிலிருந்த சீசாவை எடுத்துக் கொடுத்து "இதை உனக்காகக் கொண்டுவந்தேன்" என்றான்.

"எனக்கா?"

"ஆமாம், உனக்குத்தான். வாசனை என்றால் உனக்கு ரொம்ப இஷ்டமாமே?"

அபர்ணா அதில் என்ன இருக்கிறது என்று அறிந்துகொண்டவளாய் முகம் கடுகடுக்க வெளியில் வாடிப்போன நிர்மால்யங்கள் கிடந்த இடத்தில் அதை விட்டெறிந்தாள். பயத்தினால் சக்திநாதனின் ரத்தம் பனிக்கட்டி போல் உறைந்துவிட்டது!

அபர்ணா கடினமான குரலில், "அடே! உனக்கு இவ்வளவு எண்ணமா? இனி என்னெதிரில் நிற்காதே! வெளியே போ!" என்று வெளிப்பக்கத்தைச் சுட்டிக் காட்டினாள்.

சக்திநாத் போய் மூன்று தினங்களாகிவிட்டன. பழையபடி யதுநாதரே பூஜை செய்துகொண்டிருந்தார். பூஜை முடிந்ததும் ப்ரஸாதத்தை அங்கவஸ்த்ரத்தில் முடிந்துகொண்டே, பெருமூச்சுடன், "பாவம், ஒரு வைத்யமும் பார்த்துக்கொள்ளாமல் பையன் அநியாயமாகச் செத்துப்போய் விட்டான்" என்றார்.

அபர்ணா திடுக்கிட்டு, "யார் போய்விட்டா?" என்று கேட்டாள்.

"உனக்குத் தெரியாதா, அம்மா? மது பட்டாச்சாரி பிள்ளை சக்திதான்."

அபர்ணா ஒன்றும் தோன்றாமல் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தாள். யதுநாதர், "பகவதாராதனையைக் கேவலம் சிறுபிள்ளை விளையாட்டாகக் கருதலாமா என்ன, அந்த பாபம்தான்" என்று சொல்லிக்கொண்டே வெளியே சென்றார்.

அவர் போனதும் அபர்ணா, பூஜையறைக் கதவைத் தாளிட்டுவிட்டு தன் தலையைத் தரையில் இடித்துக்கொண்டாள். கண்ணீர் சொரிந்த வண்ணம், "பகவானே! இது யாருடைய சாபம்?" என்று வினவலானாள். வெகு நேரங்கழித்து அவள் எழுந்து வெளியே வந்து நிர்மால்யங்களிடையே கிடக்கும் அந்தக் 'குந்தலீன்' புட்டியை—அன்பின் அறிகுறியாக அளிக்கப் பட்டு தன்னால் இருமுறை மறுதளிக்கப்பட்ட அந்த வஸ்துவை—எடுத்துத் தன் சிரஸின்மேல் வைத்துக்கொண்டாள். மறுபடியும் ஸந்நிதானத்தை யடைந்து மதனமோஹனனின் கழலடியில் அதை வைத்து வணங்கி வேண்டினாள்: "ஸ்வாமீ, நான் வெறுத்துத் தள்ளிய இதை நீயாவது பெற்றுக்கொண்டு திருப்தியடைவாயாக! நானே உன்னை என்றும் பூஜை செய்ய அருள்தாராய். இதைத் தவிர வேறு பிரார்த்தனை ஒன்றுமில்லை."

———

# வீரப் பெண்

"சுந்தரா"

---

"கண்ணே சுந்தரா, ஏன் இப்படி வருந்துகிறாய்? வீரலட்சுமி எனக்குத் துணைபுரிவாள். கவலையுறாதே. நான் அந்த மதனபுரிக்கோட்டையைப் பிடித்து ஆணவமிகுந்த அவ்வூர் அரசனை நம் மன்னனது ஆணைக் கடங்கச்செய்வேன், இது நிச்சயம். அவ்வாறு நான் வெற்றிபெற்றுத் திரும்புங்கால் உனக்கு என்ன கொண்டுவரவேண்டும், சொல்?" என நீதிவிஜயன் தன் காதலியைக் கேட்டு, அவளது பதிலை வெகுஆவலுடன் எதிர்பார்த்தான். அவன் பரிதிபுரத்தரசனின் சேனைத்தலைவன். சுந்தராபாய் தன் நாயகனது ஆற்றலை யறிவாள். அவன் வெற்றிமாலை சூடி வரக்கூடுமாயினும், போர்முடிந்து திரும்பிவரும்வரை அவனது பிரிவைத் தான் எவ்வாறு சகித்திருப்ப தென்பதே அவள் கலங்கியதற்குக் காரணம். மேலும், தனது காதலன் என்னதான் வீரனாயினும் அதிர்ஷ்டம் எப்பொழுதும் ஒருவர் பங்கிருக்குமா? ஆதலால் அவன் சொன்ன வார்த்தைகள் அவள் காதிலே விழவில்லை. "என்ன, போர் முடிந்துவிட்டதா! எப்போது?" என்றாள் ஆச்சரியத்தோடு. இதிலிருந்து அவள் வியாகூலத்தின் பெருக்கை ஒருவாறு அறிந்து கொண்ட நீதிவிஜயன், "என் ஆருயிரே, கவலையை விடு. தைரியம் கொள். உன் தந்தையைச் சரிவரக் கவனித்துவா. இவ்வுலகில் நமக்கு வேறு யாரிருக்கிறார்கள்! நேரமாகிவிட்டது. வா, தேவியை வணங்கப் போவோம்" என்றான்.

இருவரும் தங்கள் குலதெய்வமாகிய வீரகன்னியை வேண்டிய பின்னர், நீதிவிஜயன் தன் உயிரைத் தனது அன்னத்திடம் நிறுத்திக்கொள்ள, அவனது உடல் தன் திறமையைக் காட்டுவதற்காகப் பரிதிபுரப் படையை நடத்திச்சென்றது.

மறுநாட்காலை மதனபுரிக்கோட்டையை நீதிவிஜயனுடைய சேனை சூழ்ந்துகொண்டது. தலைவன் கோட்டையினுள் படாததும் பட்டு நுழைந்தான். படைகளும் அவன்பின் தொடர்ந்தன. கோட்டையினுள்ளும் கடும்போர் விளைந்தது. வீரர்களது சிரங்கள் வீதியை அலங்கரித்தன. நீதிவிஜயனது பரி, கரும்புத்தோட்டத்

தினுட்புகுந்த கரிபோன்று எதிரியின் படையைக் கலக்கிற்று. அதனுடைய மிதிக்குத் தப்பியவர்கள் தலைவனது கைவேலுக்கு இரையாயினர். மதனபுரிப் படையிலுள்ள குதிரைகளில் அநேகம் தத்தம் வீரரோடு விழுந்து மண்ணைக் கவ்வின. உயிர்ச்சேதத்திற்குக் கணக்கே யில்லை. எங்கும் பிணக்குவியல். எதிரியின் படையில் அன்று போரில் எஞ்சியவர்கள் அஞ்சியோடிவிட்டனர். நீதிவிஜயன் மதனபுரி யரண்மனை வாயிலை யடைந்தான். கதவு உட்பக்கம் தாளிடப் பெற்றிருந்தது. அதை உடைத்தெறிந்துவிட்டு உள்ளே பிரவேசித்தான். கட்டிலின்கீழ் பதுங்கிக் கிடந்த மதனபுரி யரசனது உச்சிமயிரைப் பிடித்தவாறே அவனை வெளியே கொண்டு வந்தான். அச்சமயம் எங்கிருந்தோ ஓர் அம்பு நீதிவிஜயனது விலாவில் வந்து ஆழப் பாய்ந்தது. கீழே விழுந்தான். எதிரியின் இரத்தத்தில் குளித்திருந்த அவனது உடலைவிட்டு உயிர் நீங்கியது.

சிறைப்பட்ட மதனபுரியரசன் தப்பியோடிவிட்டான். பரிதிபுரப் படையினர் தங்களது தலைவனை யடக்கம்செய்துவிட்டு ஊருக்குத் திரும்பினர். அவர்கள் தங்களது தலைவனது பிரிவிற்காக வருந்தியது கொஞ்சமல்ல.

சுந்தராவுக்கு அச்செய்தி எட்டியது. அவளது நெஞ்சம் குமுறிற்று. கொடுங்கோலனான மதனபுரி யரசன்மீது பழிவாங்கத் துடிதுடித்தாள்; முதலில் எண்ணியபடி தீக்குளியாது நின்றாள். தனது தந்தையின் அனாதரவான நிலைமையும் அவளைத் தடைசெய்யக் காரணமாயிருந்தது. தந்தையிடம் நடந்தவற்றை ஒருவாறு தெரிவித்தாள். அவரது தோள்கள் துடித்தன. வெற்றியுடன் மாண்டான் விஜயன் என்பதனால் சற்று நிம்மதி யடைந்தார். சுந்தரா, தன் நாதன் தான் போர்செய்து ஜெயித்தவிதத்தை அடிக்கடி சொல்லித் தன்னை மகிழ்வித்த நாட்களை எண்ணி எண்ணிப் பிரலாபித்தாள். யாதுபயன்? மாண்டார் மீள்வரோ?....நாட்கள் கடந்தன.

படைத்தலைவனது மரணத்திற்குப் பரிதிபுரமே பரிதவித்தது. சின்னாட்கழித்து நீதிவிஜயனது பதவி மற்றோர் வீரனுக்களிக்கப் பட்டது. புதிய தலைவனும் எதிரியை வென்றடக்கப் படைதிரட்டி மதனபுரிக்கு நடத்திச்சென்றான். வீரர்கள் இவனது வீராவேச மொழிகளால் புதிய உற்சாகம் கொண்டனர். யுத்தகளத்தில் அன்று தலைவன் காட்டிய வீரமும் சாகசமும் இன்னும் அப்பிரதேசத்தில் கதையாகச் சொல்லப்பட்டுவருகிறது. அவனுடன் வந்த படைகளும் வீரவெறிகொண்டு பகைவரை இருந்த இடந்தெரியாமல் பரந்தோடச் செய்தனர்.

பரிதிபுரப்படையினர் வெற்றி ஆரவாரம் செய்யும் சமயத்தில் திடீரென்று மதனபுரியரசன் ஒரு சிறு சைனியத்துடன் படைக் களத்தில் மீண்டும் தோன்றினன். அவனைக்கண்ட பரிதிபுரத்தலைவன் வீரகர்ஜனைசெய்து அவனருகில் தன் குதிரையை முடுக்கினன். வழியில் தன் ஈட்டியினல் அநேகம் வீரர்களை யமனுலகனுப்பினன். அரசனை நெருங்கிவிட்டான் படைத்தலைவன். இதற்குள் அவன் கையில் பிடித்திருந்த ஈட்டி தன்வேலைமிகுதியினல் முறிந்துவிழ தலைவன் மன்னனருகில் நிராயுதபாணியாக நின்ருன். அடுத்தவினடி மதனபுரியரசனது வேல், வீரனது மார்பில் பாய்ந்தது. சேனைத் தலைவன் நிதானமாகத் தன் மார்பில் பாய்ந்த வேலை வெடுக்கெனப் பிடுங்கினன். மறுகணம் அது மதனபுரியரசனது இதய ஆழத்தைக் கண்டது.

கீழேவிழுந்த தலைவனை அவனது படையினர் தூக்கிச்சென்றனர். அவனது கவசங்களைக் கழட்டினர். என்னஆச்சரியம்! பரிதிபுரப் படைத்தலைவனுகப் போர்புரிந்து மதனபுரப்படைகளையும் மன்னனையும் உயிருண்டது ஒரு பெண். அவள் முகத்திலிருந்த ஒட்டு மீசையை நீக்கினர். அவளே சுந்தராபாய்! நீதிவிஜயனது இணைபிரியாக் காதலி தனது மனோரதத்தை நிறைவேற்றி வெற்றி கொண்டாள்!

ஏதோ அலுவலாக ஊரைவிட்டுப் போய்வருவதாகச் சொல்லிச் சென்ற தன் குமாரத்தியின் வருகையை மரணப்படுக்கையிலிருந்த சத்தியகுமாரர் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். சுந்தரா, தான் இல்லாத சமயத்தில் தன் தந்தையைக் கவனித்துக்கொள்வதற்காக ஒருதாதியை நியமித்திருந்தாள். அவள் மூலம் சத்தியகுமாரர் நடந்ததை யறிந்தார். அவரது உள்ளத்தில் பொங்கி எழுந்த உவகை அவரது கண்களின் மூலம் பிரகாசித்தது. மறுநிமிஷம் அவரது ஆத்மா நிம்மதியடைந்தது.

——




# அத்தி வடை

ஸி. எஸ். ஜகதீச சுந்தரம் பிள்ளை

---

அன்று ஞாயிற்றுக்கிழமை. சுந்தரி வடை சுட்டுக்கொண்டிருந்தாள். அப்போது செல்லம் வந்தாள்.

"என்ன, சுந்தரீ, வடை சுடராப்போல இருக்கே! என்ன வடை? காரவடையா, கீரை வடையா?" என்று கேட்டாள்.

"அல்ல, ஆனை வடை சுடுகிறேன்" என்றாள்.

"என்ன ஆனை வடையா? அதென்ன வடையடி யம்மா?" என்று கேட்டுவிட்டுச் சிரித்தாள் செல்லம். "ஆனைவடை என்றுகூட ஒரு வடையுண்டா? நீ சொல்றது வேடிக்கையாக இருக்கே. காலம் கெட்டுப்போச்சு. நாகரிகம் முற்ற முற்ற ஆனைவடையும் பூனை வடையும், அணில் (onion) வடையுமாக வரலாயிற்று. எங்கள் ஆத்துக்காரர்கூட நேற்று இரண்டு வடை வாங்கி வந்தார். மிகவும் அழுத்தமாக இருந்தது. 'இதென்ன வடை?' என்று கேட்டதற்கு 'கல்லுவடை' என்று சொன்னார். பெயருக் கேற்றாப்போல வடையும் கல்லாட்டமா யிருந்தது. மெல்லவே முடியல்லே. நீ சொன்ன வடைதான் இன்னும் அதிசயமாயிருக்கு."

"இப்பொழுது அதிசயமாகத்தான் இருக்கும். சொல்லி விட்டப்புறம் சாதாரணமாயிருக்கும். நீ ஆமைவடை கேள்விப் பட்டதில்லையா? சாதாரண உளுந்து வடைக்கு அந்தப்பேர் ஏற்பட்டிருக்கும்போது இந்த வடைக்கு ஏன் நூதனப் பெயர் இடலாகாது? போகட்டும். ஆனைவடை என்ற பெயர் உனக்குப் பிடிக்காவிட்டால் அத்திவடை என்று வைத்துக்கொள்ளேன்.


செல்லம் பின்னுஞ் சிரிக்கலானுள். "ஏண்டீயம்மா, பெருமாள் என்ற பெயரை நீக்கிவிட்டுப் பெரிய பெருமாள் என்று வைத்துக் கொண்டதைப் போல இருக்கே. யானைக்கு அத்தி என்றொரு பெயர் உண்டல்லவா? யானைமுகமுடைய விநாயகருக்கு அத்தி முகன் என்று வழங்கி வருவது எனக்குத் தெரியாதா?"

"சரிதான், நான் சொன்னாலும் நீ நம்பமாட்டாய். இதைச் சாப்பிட்டுப் பார்த்து என்ன வடை என்று சொல்லேன்" என்று கூறி சுந்தரி தட்டில் நாலுவடை வைத்துக்கொடுத்தாள்.

செல்லம் அதைப் பிட்டு வாயில் போட்டாள். "செல்லம், எப்படி இருக்கிறது?" என்று சுந்தரி கேட்டாள்.

"ருசிகரமாகவே இருக்கு முந்திரிப்பருப்பு நிறைய வறுத்துப் போட்டு இருக்கு. ஆனால் இது என்ன மாவில் செய்த தென்று தெரியல்லே. கடலைமாவு மல்ல, உளுத்தம் மாவுமல்ல. இதை எப்படி, சுந்தரி, செய்யறது?"

"ருசி பார்த்தும் இது இன்ன வடை என்று தெரியவில்லையே. அத்திவடை என்றால் சிரிக்கிறாய். அத்திக்காய் வடை என்றால் சிரிக்கமாட்டாயல்லவா? — இது ஒன்றும் பிரமாதமில்லை. சாதாரண வடை சுடுவதுபோலத்தான். அதற்கு வேண்டிய சாமான்கள் சொல்லுகிறேன், கேள். ஆழாக்குப் பொட்டுக் கடலைமா, இஞ்சி, பச்சை மிளகாய், வெங்காயம், கறிவேப்பிலை, கொத்துமல்லி கீரை, உப்பு, உழக்கு அத்திக்காய்—இவ்வளவுதான். அத்திக்காயை ஜலத்தில் அலசியெடுத்து, ஜலம்விட்டு வேகவைத்து எடுத்துக்கொண்டு, அம்மியிலாவது கல்லுரலிலாவது நெகிழ ஆட்டியெடுத்துப் பின்பு பொட்டுக் கடலை மாவையும், இஞ்சி, உப்பு, முதலியவற்றையும் கலந்து, வெங்காயம், பச்சை மிளகாய்களை நெய்யில் வதக்கிப்போட்டுக் கூட முந்திரிப்பருப்பும் ஒரு கை வறுத்துப்போட்டுப் பிசைந்து வடையாகத்தட்டி, வாணலியில் எண்ணெயோ நெய்யோ வைத்துச் சுட்டுக்கொள்ள வேண்டியது. இதுதான் ஆனை வடை அல்லது அத்திவடை."




## "அழாதே, பாப்பா, அழாதே"

என். ஆர். சேஷாச்சாரியார்

---

பதினாலு வயது பாண்டுரங்கன் மாடி அறையில் இரைந்து படிக்கிறான். பன்னிரண்டு வயது பத்மலோசனி ஹார்மோனியம் வாசித்துக்கொண்டிருக்கிறாள். ஒன்பது வயது மணியும், ஏழுவயது லோனாவும் கலியாணக்கூடத்தில் மேஜையின்மேல் வைத்திருந்த 'ஹரிகேன்' விளக்கைக் கீழே தள்ளிவிட்டு (நல்லவேளையாக எவ்வித ஆபத்துமில்லாமல்) "நீதானே தள்ளினே, அப்பா வரட்டும் சொல்றேன்" என்றும், "ஓஹோ! என்ன என்மேலே பழி போட்றே? நான் இப்பவே போய் அம்மாகிட்ட சொல்றேன், பார்" என்றும் ஒருவரையொருவர் கிள்ளிக்கொண்டு (ஓசைப்படாமல் அழமூட்டும் வழி) சச்சரவு செய்கின்றனர். தாயார் கௌரியம்மாள் சமையலறையி லிருக்கிறாள். ஒருவயது பாலன் தொட்டிலில் வீறிட்டு அழுகிறது.

பால்காரன் வந்து "அம்மா! பால்காரன் வந்திருக்கேன், அம்மா" என்று உரத்துக் கூப்பிடுகிறான். குழந்தைகள் செய்யும் சந்தடியில் கௌரியம்மாளுக்குக் காது கேட்கவில்லை. கீழே விழுந்த விளக்கு 'புக், புக்' என்று புகைந்து எரிவதைப் பால்காரன் பார்த்து

விட்டு, "ஐயையோ! நல்லவேளை பிழைச்சீங்க. இதென்ன இப்படி சண்டை போட்றீங்களே?" என்று சொல்லிக்கொண்டே விளக்கை அணைத்துவிட்டு எலியும் பூனையும்போல் பாலர்கள் இடும் சச்சரவை விலக்குகிறுன்.

இதற்குள் மிஸ்டர் பாஸ்கர் கச்சேரியிலிருந்து வந்து, "என்னடா இது, ஒரே இருட்டாயிருக்கு? ஏண்டா, பாப்பா இப்படி வீறிட்டு அழுகிறுன்? பாண்டு படிக்கிற இரைச்சல், பெட்டி இரைச்சல், உங்கள் பேரிரைச்சல்—இந்த அமர்க்களத்திலே உங்கள் அம்மாவுக்கு ஒன்றும் காதுகேட்கவில்லை. போடா மணி, போய் அம்மாவைக் கூப்பிடு" என்று அதட்டுகிறுர்.

உடனே கௌரியும் ஒரு வெண்கலப்பானையை எடுத்துக்கொண்டு "ஒருநாளைக்கா, இரண்டுநாளைக்கா இந்தக் கஷ்டம்? பொழுதுவிடிந்தால் பொழுதுபோனுல், உங்களுடன் யாரால் மாரடிக்க முடியும்? ஒரு பொம்மனுட்டியைப்போல ஒரு கதையா, பாட்டா; நல்லதா, பொல்லாததா; கோவிலா, குளமா, என்ன முடிகிறது என்னுலே? யாரடா அவன் பால்காரன்? பால் கறந்தாய்விட்டதா? ஒரு படி பால் போடு" என்று அலுத்துச் சலித்துப் பேசிக்கொண்டே வெளியே வருகிறுள். மிஸ்டர் பாஸ்கர் ஒரு தினசரிப் பத்திரிகையைப் பிரித்துக்கொண்டே சாய்வுநாற்காலியில் சாய்ந்துகொள்ளுகிறுர்.

பத்மலோசனி ஹார்மோனியம் வாசிப்பதை நிறுத்திவிட்டு, தொட்டிலில் கிடந்த பாப்பாவை எடுத்து "அழாதே, பாப்பா, அழாதே! நான் பாட்டுப் பாடுகிறேன், கேள்" என்று சொல்லி, அவள் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொண்ட ஏழு ரூபிகள் பாட்டு, நந்தவனப் பாட்டு, வானவில்பாட்டு, கோலாட்டப் பாட்டு,

முதலிய பாட்டுக்களைப் பாடி 'சந்தமாமா'வைக் காட்டுகிறாள். குழந்தையோ வாய் ஓயவில்லை. இந்த சமயம் கந்தஸ்வாமி கோயிலுக்குப் போயிருந்த பட்டுப்பாட்டியம்மாள் திரும்பிவருகிறாள்.




"ஏண்டி, பத்மா, பாப்பா அழுகிறான், அதுகள் இரண்டும் அழறது? யாரடிச்சா?" என்று கேட்கிறாள்.

"நான் என்ன பண்ணட்டும், பாட்டி, அம்மாவுக்கோ கை ஒழியவில்லை. கும்மிப்பாட்டு, கோலாட்டப்

பாட்டு, சோபனப்பாட்டெல்லாம் பாடினேன். அது வாயடங்கவில்லை. கிளாக்ஸோ மாவும் கரைச்சுப் போட்டியாச்சாம். தூங்கட்டுமென்று தொட்டிலில் விட்டால் இம்மாதிரி அழுகிறதே" என்று வெறுத்துக் கொள்ளுகிறுள் பத்மா.

"அந்தப் பாட்டெல்லாந்தான் பச்சைப் பாலனிடம் பாடுவாளோ? அதன் வயசுக்குத் தகுந்தாப் போல் சந்த மாமாப் பட்டு, சின்னிப்பாட்டு, கை வீசம்மா பாட்டு, தாலாட்டுப்பாட்டு முதலிவைகளைக் கொஞ்சிக் கொஞ்சிப் பாடினுல் குழந்தைகள் அழுகையை நிறுத்தி முத்துமுத்தாய்ச் சிரிக்கும்; அயர்ந்து தூங்கும். இதெல்லாம் பாடுவதனுல் இன்னும் பல நன்மைகளுமுண்டு. குழந்தைகளுக்குப் பிடிவாத குணம் ஏற்படாது. பாஷாஞானம், நல்ல சுபாவம், இவைகள் உண்டாகும். இதையெல்லாம் இந்தக் காலத்தில் ஒருவரும் கவனிப்பது கிடையாது, தெரிந்த பேர் சொன்னுல் கேட்பதும் கிடையாது, தெரிந்தாலும் சொல்வதற்கு வெட்கம், மற்றவாள் பாடினுலும் பரிகாசம்" என்று சொல்லியபடியே பாட்டி குழந்தையை வாங்கிக்கொண்டு முத்தமிடுகிறுள்.

"எனக்கு அதெல்லாம் தெரியாது. பள்ளிக்கூடத்தில் சொல்லிக்கொடுக்கும் பாட்டுகளெல்லாம் வேறு. நீ கற்றுக்கொடுத்தால் அவற்றைப் பாடுகிறேன்" என்கிறுள் பத்மா.

"காகிதம் பென்ஸில் கொண்டுவா. இப்போது சொல்றேன். நன்னு எழுதிக்கொள். தினம் கொஞ்சமாய் சாயங்காலத்தில் கற்றுக்கொள். குழந்தைக்கும் பாடலாம், உனக்கும் வேடிக்கையாயிருக்கும்" என்று பாட்டி சொல்லிவிட்டு நடுமுற்றத்துக்குப் போய் நிலாவைக்காட்டி, சந்தமாமா பாட்டைப் பாடி பாப்பாவை சாந்தப்படுத்துகிறுள். மணியும் ஷோனுவும் ஈன

ஸ்வரத்துடன் கேவிக்கேவி அழுதுகொண்டே பாட்டி யின் பக்கத்தில் உட்காருகின்றனர். பத்மலோசனி எழுதுகிறாள். பாட்டி பாப்பாவை இரு கையிலும் ஏந்திப் பாடி அவனை ஆட்டுகிறாள்.

### ஆனை ஆட்டுதல்


"ஆனை ஆனை அழகர் ஆனை
அழகிய எம்பெருமான் ஏறும் ஆனை
குட்டிக்கரும்பை முறிக்கும் ஆனை
எட்டித் தேங்காயைப் பறிக்கும் ஆனை
குட்டி ஆனைக்குக் கொம்பு முளைத்ததாம்
பட்டணமெல்லாம் பறந்தோடி போச்சாம்"

இப்படிச் சொல்லி ஆட்டும்போது பாலன் கண்ணை மூடி மூடித் திறக்கின்றான். பத்மாவிடங் கொடுத்து அவனைத் தொட்டிலில் விட்டு ஆட்டச்சொல்லி வெளி யில் நின்று பாட்டி பாடுகிறாள்.

"ஆராரோ ஆராரோ ஆராரோ ஆரிரரோ
முத்தே பவழமே முக்கனியே சர்க்கரையே
கொத்து மருக்கொழுந்தே கோமளமே
கண்வளராய்.

ஆணிப் பசும்பொன்னே ஆராத தெள்ளமுதே
மாணிக்கமே எங்கள் வாழ்வே நீ கண்வளராய்.
அத்தை அடித்தாளோ அம்மான் அடித்தானோ
முத்துக்கண்ணீர் நிறுத்தி மௌனமாய்க்
கண்வளராய்.

பாட்டி அடித்தாளோ பால்வார்க்கும் கையாலே
வாட்டம் ஒழிந்து நீ மைந்தனே கண்வளராய்.
ஆயர்குலத்துதித்த அருமந்த மாமணியே
மாயனே கண்ணா மகிபனே நீ கண்வளராய்."



இப்பாட்டு முடிவதற்குள் குழந்தை அயர்ந்து தூங்கி விடுகிறான்.

"பாட்டி, இந்தமாதிரி இன்னும் ரொம்ப பாட்டுகள் இருக்கிறதோ?" என்று பத்மாலோசனி கேட்கிறாள்.

"அதற்கென்ன, எத்தனையோ இருக்கு. (1) பூச்சி பூச்சிப்பாட்டு (2) குழந்தை தேடும் பாட்டு (3) சொல்பழக்கப் பாட்டு (4) உள்ளங்கை நெல்குத்தும் பாட்டு (5) நிலாவோடு வார்த்தையாடும் பாட்டு (6) நிலாச்சோறு சமைக்கும் பாட்டு (7) கட்டிய கை வாங்கும் பாட்டு (8) கண்மூடி ஆடுதல் (9) கிள்ளாப் பிரண்டை கீப்பிரண்டை (10) உல்லாச வழிநடை (11) சிற்றுண்டி சமைத்தல் (12) தோட்ட விளையாட்டு, இந்தமாதிரி அந்தந்த வயசுக்குத் தக்கபடி கணக்கு வழக்கில்லாத பாட்டுகள் கிடக்கின்றன. பாடுகிற வாளைத்தான் காணோம். பாடினாலும் கேட்பாரைக் காணோம்" என்கிறாள் பாட்டி.

"அப்படியானால் நாளைக்குக் கொஞ்சம் கற்றுக் கொடுக்கிறாயா, பாட்டி?" என்கிறாள் பத்மா.

"ஆகா! அதற்கென்ன. உன் கூட்டாளிகளைக் கூட அழைத்துவா, எழுதிக்கொள்ளட்டும். நாழியாகிறது, சாப்பிடப் போ" என்று பாட்டி சொல்கிறாள்.

பத்மா சந்தோஷமாய்ப் போகிறாள்.

---




## போனோக்ராப் (ஒலிப்பதிவு கருவி)

சுமார் அறுபது வருடங்களுக்கு முன் அமெரிக்காவிலுள்ள ஒரு தந்தி ஆபீஸில் தாமஸ் ஆல்வா எடிஸன் என்றொரு 'பேர்வழி' தந்தி 'ஆபரேடர்' உத்யோகம் பார்த்து வந்தார். ஒருநாள் அவர் ஒரு சிறிய காகிதத்துண்டில் கோணல்மாணலாக நான்கு சித்திர சதுரங்கள் வரைந்து அவற்றின் கீழ், 'க்ரூவி, இதைச்செய்—எடிஸன். ஆகஸ்ட் 12. 1877' என்று ஸம்க்ஷேபமாக எழுதி அதை ஓர் ஆளிடம் கொடுத்தனுப்பினார் ஜான் க்ரூவி என்பவனுக்கு. போனோகராப் அன்றுதான் உலகில் ஜனித்தது.

எழெட்டு வருஷங்களுக்குமுன், இப்பொழுது உலகம் போற்றும் அந்த எடிஸன் தம்முடைய 80-ஆம் பிறந்த தினத்தன்று, "எத்தனையோ அதிசயங்கள் கண்டு பிடித்திருக்கிறீரே நீங்கள், அவற்றுள் எதனால் உம்முடைய பெயர் விளங்கவேண்டும் என்று விரும்புகிறீர்? இதைத் தயவுசெய்து தெரிவிக்கவேண்டும்" என்று ஒரு பத்திரிகை நிருபர் எழுதியிருந்த துண்டுக் கடிதத்தை எடுத்து அந்தக் கேள்வியின் கீழ், "போனோக்ராப்பினால்" என்று சுருக்கமாகப் பதில் எழுதிப் போட்டுவிட்டாராம்!

தந்தி ஆபீஸிற்கு வரும் செய்திகளைத் தானாகவே பதிவுசெய்து கொண்டு, பிறகு மற்றோரிடத்திற்கு அவற்றை அனுப்பக்கூடிய ஒரு புதிய 'டெலெக்ராப் ரிபீட்டரை'க் கண்டுபிடிக்க முயலுகையில் திடீரென்று 'என் மனிதர்குரல்களையும் சாச்வதமாகப் பிடித்து வைத்துக்கொள்ள முடியாது?—பார்க்கலாம்' என்று ஒரு புதிய யோசனை எடிஸனுக்கு உதித்தது. உடனே 'டெலெக்ராப் ரிபீட்டரை'ப் பற்றிய நினைவை அடியோடு மறந்து விட்டார். அப்புறம்தான் ஜான் க்ரூவியிடம் அந்த யந்திரம் செய்யக் கொடுத்தது முதலியனவெல்லாம். இரண்டு மூன்று தினங்களுக்குள் அதை க்ரூவி செய்து முடித்துக் 'கிழவன்' (எடிஸனுக்கு அப்பொழுது 30 வயதுதான் என்றாலும் மற்றெல்லோரும் அவரை அப்படி அழைத்தனர்) முன்னால் கொண்டு வைத்தான். க்ரூவிக்கு அதில் நம்பிக்கையில்லை. 'சுத்தப் பைத்தியக்கார யோசனை' என்று சொல்லிக்கொண்டிருந்தான்.

எடிஸனுடன் வேலை செய்யும் மற்ற உத்யோகஸ்தர்கள் எந்திரத்தைச் சூழ்ந்து நின்றனர். எடிஸன் அதன் கைப்பிடியைச் சுழற்றிக் உருளையில் ஒரு மெல்லிய தகரத்தகட்டைக் கொடுத்து அது உருளையோடு உருளையாக இறுகப் பிடித்துக்கொள்ளுமாறு செய்து, வாய்வைத்துப் பேசவேண்டிய குழாயருகில் வந்து கைப்பிடியைச் சுழற்றியவண்ணம், "மேரி ஓர் ஆடு வைத்திருந்தாள்....." என்று ஆங்கிலத்தில் பிரபலமான சிறுவர் பாட்டைப் பாடினார்.

அங்கிருந்தவர்களெல்லோரும் இதைக் கேட்டுக் கொல்லென்று நகைத்தனர். எடிஸன் அவர்களைச் சட்டை செய்யாமல் திரும்பவும் வெளிவிடும் 'டயாப்ர'த்தகட்டை உருளையில் கொடுத்து எல்லாவற்றையும் சரிப்படுத்தி வைத்துக்கொண்டபின், கைப்பிடியை மீண்டும் சுழற்ற ஆரம்பித்தார். உடனே அத் தகட்டிலிருந்து ஒரு மெல்லிய குரல் பாடுவது கேட்டது!

"மேரி ஓர் ஆடு வைத்திருந்தாள்........."

எடிஸன் முடித்ததுபோலவே அதுவும் முடிந்தது! ஒரு பதம் கூடத் தவறவில்லை!

அன்று முழுதும் ஒரு விழவு தினமாகவே தோன்றியது எல்லாருக்கும். வீட்டிற்குக் கூடப் போகவில்லை எவரும். அந்தப் புதிய எந்திரத்தைச் சுற்றி நின்று கொண்டு ஒருவர் மாறி ஒருவர் பாடுவதும், பேசுவதும், திரும்பவும் தங்கள் குரல்களைக் கேட்டு ஆனந்த பரவசமாவதும்—இந்தமாதிரியே அன்று இரவு பகல் முழுவதையும் கழித்தனர்.

மறுநாள் எடிஸன் அந்த முதல் 'போனோக்ராப்'பைக் கையிலெடுத்துக் கொண்டு நியூயார்க் நகர் சென்று, அங்குள்ள தன் சிநேகிதன் ஒருவனின் ஆபீஸில் யாவரும் அறிய இந்த வித்தையை நடத்திக் காண்பித்தார். உடனே இச்செய்தி பத்திரிகைகளில் அச்சிடப்பட்டு 'கேபில்' மூலமாக வெளிநாடுகளுக்குப் பரவிற்று.

நாலாவிடங்களிலிருந்தும் அதற்காக 'ஆர்டர்கள்' வந்து குவிந்தன. எடிஸனுக்கு அதை இன்னும் சீர்திருத்தி அமைக்கக்கூட சாவகாசம் கிடைக்கவில்லை. பரபரவென்று அதே மாதிரியில் அநேக யந்திரங்கள் செய்து அனுப்பித்தார். அதன்மேல் கொண்ட மோஹத்தினால் ஒரு வியாபாரி தன் கடையில் ஏராளமாக வாங்கி வைத்திருந்தார். ஒரே வாரத்தில் அவையெல்லாம் விற்றுப்போய் அவர் 1800 பவுன் லாபம் அடித்துவிட்டார்!

—பாபுலர் ஸையன்ஸ்.

## ஜீவ அணுக்களின் வெளிச்சம்

மனிதன் இதுவரையில் கண்டுபிடித்துள்ள எந்த வெளிச்சமும் உஷ்ணங் கொண்டதாகவே இருக்கிறது. இயற்கையாக உண்டான சில வஸ்துக்களினின்று வரும் வெளிச்சம் அப்படிப்பட்டதில்லை. உதாரணமாக, மின்மினிப் பூச்சிபோன்ற சில பூச்சிகளும், டார்ஜீலிங் பிரதேசத்தில் காணப்படும் சில புழுக்களும் உஷ்ணமில்லாத ஒளியைத் தருகின்றன. இவற்றின் சரீரத்திலிருந்து நீலநிற ஒளி பிரகாசிக்கிறது. தென் அமெரிக்கா சுதேசிகள் அங்குள்ள பெரியவகையைச்சேர்ந்த மின் மினிப்பூச்சிகளைப் பிடித்து வைத்துக்கொண்டு இரவில் வேலைசெய்வார்களாம். இப்பூச்சிகளின் சரீரத்தினுள் 'லூஸிபெரின்' என்ற ஒரு வஸ்து இருக்கிறது. இதுதான் வெளிச்சம் தருவது. இவ்வித ஜீவன்களுக்குப் பிராணவாயு அதிக அளவில் அவசியம்.

சமுத்திரம், நதி, இவைகளில் இருளில் இயற்கையான வெளிச்சம் தென்படும். காற்று வீசும்போது அவ்வொளியானது கொழுந்துவிட்டுத் தீ எரிவதுபோல் இன்னும் அதிகமாக ஆகிறது. இவ்வெளிச்சத்தைப்பற்றி வெகு

காலந்தொட்டு மனிதர்களுக்குத் தெரியும். ஆனால் அது எக்காரணத்தினால் உண்டாகிறது என்று அக்காலத்தில் எவரும் அறிந்தனரில்லை. ஏதோ சமுத்திரதேவதையின்—அச்வனிதேவர்களின்—திருவிளையாடல் என்று எண்ணி வந்தனர்! டார்வின்துரை தென்பசிபிக் மஹாஸமுத்திரத்தில் இத்தகையதோர் அற்புதக்காட்சியைக் கண்டு அதைக்குறித்து எழுதியிருக்கிறார். கண்ணுக்கெட்டின தூரம்வரை ஒரே ஒளிமயமாகத் திக்குதிகந்தமெல்லாம் பற்றி எரிவதுபோல் இருந்ததாம். இது எதனால் என்பது வெகுநாள்வரை தெரியவில்லை. கி. பி. 17-ஆம் நூற்றாண்டிலிருந்த விஞ்ஞானிகள், சமுத்ரம் பகலில் சூரிய கிரணத்தைக் கிரஹித்துக்கொண்டு இரவுவேளையில் அதை வெளிவிடுகிறது என்று எண்ணிவந்தனர். ஒரு விஞ்ஞானி 'பூமி சுழல்கின்ற வேகத்தால் காற்றும் ஜலமும் ஒன்றோடொன்று தாக்குற, அவ்வதிர்ச்சியின் பயனாக வெளிச்சம் உண்டாகிறது' என்று கூறினார். கி. பி. 18-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்கூட விஞ்ஞானிகள் 'ஸமுத்திரஜலத்தில் உள்ள பாஸ்பரஸே அதற்குக் காரணம்' என்று சொன்னார்கள். கி. பி. 1750-ஆம் ஆண்டில் இரு இத்தாலிய விஞ்ஞானிகள் முதன் முதலாக இதன் உண்மைக் காரணத்தை ஊகித்தனர். அவர்கள் எட்ரியாடிக் ஸமுத்ர ஜலத்தை பூதக்கண்ணாடியின் உதவிகொண்டு பரிசோதித்துப் பார்த்தபோது, அதில் கண்ணுக்குப் புலப்படாத சில ஜீவாணுக்கள் இருப்பதைக் கண்டுபிடித்தனர். அதற்குப்பின் மற்றும் சிலர் ஆராய்ச்சி செய்ததன்பேரில் சமுத்ர ஜலத்தில் சஞ்சரிக்கும் பெரிதும் சிறிதுமான ஜீவன்களும், அதிசூக்ஷ்மமான ஜீவாணுக்களும் இருப்பது உலகிற்குத் தெரிந்தது. சமுத்ர ஜலத்தில் வெளிச்சம் உண்டாவதற்கு முக்யமான காரணம் 'நக்டிலுகா மிலியாரிஸ்' என்று பெயா கொண்ட சூக்ஷ்மமான ஜீவ அணுவே. பூதக்கண்ணாடி மூலம் இதைக் கவனிப்போமாகில், வட்டமான சிறிய வலையை யொத்துக் காணப்படும். இதன் தேகம் $\frac{1}{50}$ அங்குல அளவு கொண்டது. இலைகளில் இருப்பது போல் இவற்றின் மேல்பாகத்தில் அநேக ரேகைகள் காணப்படுகின்றன. வால் போன்றதோர் அவயவம் உடலிலிருந்து நீட்டிக்கொண்டு நிற்கிறது. இதன் உதவியால் தங்களைவிடச் சிறிய ஜீவன்களைப் பிடித்துத் தின்று ஜீவிக்கின்றன. 'நக்டிலுகா' வானது தக்க பருவத்தை யடைந்ததும் தன்னை உயிருள்ள இரு ஜீவஅணுக்களாக இரட்டித்துக் கொள்ளும் சக்தியைப் பெறுகிறது. அந்த ஜீவாணுக்கள் இரண்டும் இவ்விதமே நான்காகி, நான்கு பதினாறாகி, இப்படியே வெகு விரைவில் எண்ணற்றவையாக விருத்தியடைந்துவிடுகின்றன. இவற்றிற்கு இயற்கையாகவே மரணம் சம்பவிப்பதில்லை. பரிசோதனை செய்வதற்காக இவற்றை எத்தனைநாள் வைத்திருந்தாலும் உயிருடன்தான் இருக்கும். யாதுகாரணம்பற்றியாவது ஒளி வீசாது இருப்பின், ஒரு பொட்டு சாாரயத்தை இவற்றின்மேல் விட்டால், உடனே இவை ஆக்ரோஷம்கொண்டு மீண்டும் வெளிச்சம் தருகின்றன. இந்த ஜீவாணுக்கள் அடங்கிய ஜலத்தில் ஒரு மசியொத்திக் காகிதத்தைத் தோய்த்து அதிலிருந்து வீசும் வெளிச்சத்திற்கு 8, 9 அங்குல தூரத்திலிருந்து படிக்கக்கூட முடியும்! இந்த ஜலத்தில் உஷ்ணமானியை வைத்துப் பரிசோதித்தும்கூட உஷ்ணம் இருப்பதாகத் தெரியவில்லை,

அப்படி யிருந்தும் எவ்விதம் இவற்றின் சரீரத்தில் அவ்வெளிச்சம் உண்டா கிறது என்பதுதான் தேவரகஸ்யமாக இருக்கிறது. இவற்றின் உடலில் ரத்த ஓட்டத்திற்கு இன்றியமையாததான நரம்பு ஓட்டமே காணப்படவில்லை. இவற்றிற்குக் கண்ணே கிடையாது. வடதுருவத்திலிருந்து உஷ்ணப்பிரதே சங்கள் வரையிலுள்ள சமுத்ரங்களில் இத்தகைய வெளிச்சம் தெரிகிறது. பசிபிக் சமுத்ரத்தில் சில இடங்களில் ஸ்நாநம் செய்தால் உடம்பெல்லாம் ஒரு மணிகாலம்வரை பிரகாசமாகக் காண்கிறது—அவ்வளவு ஜீவாணுக்கள் அங்குள்ளன! இரவில் அந்தக் கரையோரங்களிலுள்ள மணல்கூடப் பளபள வென்று ஜ்வலிக்குமாம்.

இவற்றையும் தவிர்த்து சமுத்திரத்தினடியிலுள்ள சில மின்சார மீன் களிடமும், சமுத்ர சஞ்சாரம் செய்யும் பக்ஷிகளிடமும், சில மரம், செடி, கொடிகளிடமும் இவ் வெளிச்சந்தரும் சக்தி காணப்படுகிறது. தாவரங் களில் முன்சொல்லப்பட்ட மாதிரி ஜீவாணுக்கள் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

—ப்ரபாஸி.

## ஸ்பெயினின் உள்நாட்டுக் குழப்பத்திற்குக் காரணம்

சிலதினங்களாக 'ஸ்பெயினின் உள்நாட்டுக் குழப்பம்' என்று பெரிய பெரிய எழுத்துக்களில் தினசரிப் பத்திரிகைகளில் செய்தி வருவதை நாம் அனைவரும் கவனித்து வருகிறோம். அந்த தேசத்திலுள்ள ஜனங்களிடையே கட்சிபேதம் ஏற்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும். ஆனால் இத்தனைநாட் களில்லாமல் இப்பொழுது திடீரென்று இவ்வளவு குழப்பம் உண்டாவானேன்? எல்லாதேசங்களிலும்தான் கட்சிகள் பல இருக்கின்றன. இங்கிலாந்தில் மூன்று நான்கு கட்சிகள் இருக்கின்றன; என்றால், ஸ்பெயினில் ஏற்பட்டிருக் கும் கட்சிபேதம் அதுமாதிரியல்ல.

ஐந்து வருஷத்திற்கு முன் அங்கு ஆட்சி புரிந்துவந்த அரசரின் பெயர் ஆல்பான்ஸோ. இக்காலத்தில் உலகமுழுதும் கோரும் ஜனநாயக முறை ஸ்பெயினிலும் ஏற்பட்டது. ஆகவே ஆல்பான்ஸோ பதவி துறந்து நாட்டைவிட்டு ஓடவேண்டியதாயிற்று. உடனே குடியரசு ஏற்பட் டது. ஆல்பான்ஸோ அரசாண்டபோது அவருக்குப் பக்க பலமாக ஸேனா திபதிகள் அடங்கிய ஜுண்டா என்று பெயர்கொண்ட சபை ராஜாங்க காரியத்தைக் கவனித்து வந்தது. அவர்கள் வீண் டம்பக்காரர். காரியத்தில் சுத்த உபயோகமற்ற பேர்வழிகள். ஜனநாயகமுறைப்படி சாதாரண ஜனங் கள் கையில் ராஜ்யநிர்வாகம் வந்ததும், அவர்களிடையிலும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டுப் புதியகட்சிகள் கிளம்பின. தீவிரக்கொள்கைகள் கொண் டவர் ஒரு சாரார்: இவர்கள் இப்போதுள்ள சமூகநிலையை அடியோடு மாற்றிப் புதிதாக நிர்மாணம் செய்யவேண்டுமென்று விரும்புவோர். இவர் களுக்கு இடக்கையர் என்றும், இதே நிலையில் இருந்தால்போதும் என்ப வர்களுக்கு வலக்கையர் என்றும் பெயர் உண்டாயிற்று. ராஜ்யபாரம் வகித்த வர்கள் இடக்கையர். இவர்கள் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் கொஞ்சம்

கொஞ்சமாக 'ஜுண்டா' சபையாரின் பலத்தை ஒடுக்கி வந்தனர். இதை யுணர்ந்த ஸேனதிபதிகள் தாங்கள் இனிச் சும்மாயிருந்தால் காரியம் மிஞ்சி விடும் என்று கண்டு கலகம் விளைவிக்கத் தலைப்பட்டனர். இடக்கையரின் கட்சியில் போலீஸ், ஸிவில் பாதுகாப்பாளர், கப்பற்படையாளர், ஆகாய விமானப் படையைச் சேர்ந்த பலர், பத சைன்யத்தைச் சேர்ந்த சிலர், இவர்கள் பக்கபலமாயிருக்கின்றனர். அந்தக்கட்சிக்கு பாபுலர் ப்ரண்ட் (பொது ஜன முன்னணிப்படை) என்று பெயர் ஏற்பட்டது. ஸேனதிபதிகளின் கட்சியில் குதிரைப்படையாளர், பீரங்கிப் படையாளர், பத ஸைனிகர்கள் ஒரு சிலரைத் தவிர்த்து மற்றெல்லோரும், ராஜா ஆல்பான்ஸோவின் நண்பர்கள், இவர்களெல்லாரும் இருக்கின்றனர்.

## இலைகள் ஏன் பச்சையாயிருக்கின்றன?

இலைகளிலுள்ள பசுமைநிறமேனிக்கு 'க்ளோரோபில்' என்று பெயர். இது சூரியவெளிச்சத்தின் உதவியைக்கொண்டு காற்றிலுள்ள 'கார்பன் டை ஆக்ஸைட்' என்ற ஆவியிலிருந்து தாவரங்களுக்கு இன்றியமையாத ஆகாரப் பொருளைச் சேகரித்துக் கொடுக்கிறது. 'க்ளோரோபில்' ஏன் நீலநிற முள்ளதாக இருக்கக்கூடாது என்று நீங்கள் கேட்கலாம்—சூரியனின் கிரணத்தில் ஊதா, அவிரி, நீலம், பச்சை, மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு—இவ்வேழு நிற ரச்மிகள் அடங்கியுள்ளன. சூரியவெளிச்சமானது ஒரு வஸ்துவின்மேல் பட்டதும் அவ்வஸ்து சில வர்ண ரச்மிகளைமட்டும் கிரஹித்துக் கொண்டு சிலவற்றைக் கிரஹிக்கச் சக்தியில்லாததால் அவற்றை வெளிவிட்டு விடுகிறது. அதுபோலவே 'க்ளோரோபில்' என்ற வஸ்து பச்சைநிறத்தை கிரஹிக்கச் சக்தியற்றதால் அதை வெளியே பரவவிட்டு மற்ற நிறங்களை மட்டும் உட்கொண்டுவிடுகிறது.

## உலகில் பெரிய வாக்கியம்

பிரபல பிரெஞ்சு நாவலாசிரியரான விக்டர் ஹ்யூகோவின் 'லெ மிரெபிள்' என்ற நவீனத்தில் ஒன்றரைப்பக்கம் நீளமுள்ள, 823 பதங்கள், 93 கமாக்கள், 51 ஸெமிகோலன்கள், 4 கோடுகள், (டாஷ்), அடங்கிய ஒரு வாக்கியம் உள்ளது. அவ்வளவு பெரிதான வாக்கியத்தை வேறு எந்த நூலாசிரியரும் இதுவரை எழுதியிருப்பதாகத் தெரியவில்லை.

—ராமதனு.




[ஸ்ரீ குலசேகராழ்வார் சரிதம். ஆசிரியர்: ச. செல்லம், சுசீந்திரம். விலை அணு 4; பக்கம் 52.

பெருமாள் திருமொழியை அருளிச்செய்த குலசேகராழ்வாரின் நாடு, நகர், குலம், காலம், சிறப்புகள், முதலியவற்றை ஆராய்ந்து அறுதியிடும் ஒரு சிறு நூல். இவ்வாழ்வாரைப் பற்றியும், இவரது காலத்தைக் குறித்தும் உள்ள மயக்கங்கள் பல. அவற்றிற் சிலவற்றை இந்நூலாசிரியர் போக்க முயன்றிருப்பது மகிழ்ச்சிக் குரியதே. புறநானூறு, சிலப்பதிகாரம் முதலியவற்றில் கூறப்பட்டிருக்கும் 'வானவரம்பன்' 'சேரன் பொறையன் மலையன்' என்ற சேர மன்னன், (நூற்றுவர்க்கும் ஐவர்க்கும் நிகழ்ந்த) பாரதப்போரில் இரு திறத்தாருக்கும் உதவிபுரிந்தான் என்ற பொருத்தமில்லாதொன்றையும், சேரமன்னனுக்கும் சேரமான் பெருமாளுயனுருக்கும் ஏற்பட்டிருந்த குழப்பத்தையும் காரணங்கண்டு விளக்கியிருப்பது கவனத்திற்குரியது. இன்னும் இவைபோன்றவை விரிக்கிற் பெருகும்.

சரித்திர நிகழ்ச்சிகளை விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்து எழுதுவோர் வெகு சிலரே. இந்நூலாசிரியர் இச்சிறு 'சரித'த்தில் நல்ல ஆராய்ச்சிமுறையில் சரித்திர உண்மைகளை எழுதி உதவியிருப்பது போற்றத்தக்கதே. நடையும், இனிமையும், எளிமையும் ஒருங்கேபெற்றுச் சிறிதும் படாடோபமின்றி அமைந்து இருப்பது நூலைச் சிறப்பிக்கின்றது. தமிழிலும், தமிழ்நாட்டுச் சரித்திரத்திலும் ஆர்வமுள்ள அனைவரும் படிக்கவேண்டிய நூல்.

கட்டுரைக்கலம்பகம். ஆசிரியர்: வித்துவான் ச. கு. கணபதி ஐயர், 627, திருவல்லிக்கேணி ஹைரோடு, திருவல்லிக்கேணி. விலை அணு 10. பக்கம் 108. தமிழில் தற்காலம் அதிகம் பயன் தருவது நல்ல நடையும் விஷயச்சிறப்புங்கொண்ட வசனநூல்களே. இத்துறையில் பெரிதும் அக்கரை கொண்டு கவி சுப்பிரமண்ய பாரதியார் உழைத்தது தமிழுலகமறிந்தது. அவரைப் பின்பற்றி அத்தொண்டு செய்வோர் யாவரும் தமிழகத்தின் நன்றிக் குரியாரே.

வித்துவான் ச. கு. கணபதி ஐயர் வெளியிட்டுள்ள மேற்கண்ட நூல் 'கலைமகள்' வாசகர்களுக்குப் புதிதாயிராது; அது நமது பத்திரிகையில் அவ்வப்போது அவர் எழுதியுதவிய கட்டுரைகளின் தொகுதியே. அக்கட்டுரைகளை ஏற்கெனவே படித்தவர்கள் அவற்றின் அருமையை நன்கு அறிவர்.

பண்டைத் தமிழ் நூல்களிலிருந்து தெரியவரும் செய்திகளைத் தொகுத்து அவர் எழுதியிருந்தனவற்றைக் 'கலைமகளி'ல் படியாத நண்பர்களுக்கும் இப்பொழுது படிக்க ஒரு சமயம் நேர்ந்திருக்கிறது. 'பாணர்கள்', 'குழல்,' (புதிதாக எழுதிச் சேர்க்கப்பட்ட) 'முரசு' முதலிய கட்டுரைகளை (மேற்கோள்களோடு) எவ்வளவுமுறை படித்தாலும் பயனுண்டு. நடையில் 'அமைப்பு' அதிகமில்லாவிட்டாலும், எளிமையும், இலக்கண சுத்தமும் அமைந்திருப்பதால், மாணவர்களுக்குப் பெரிதும் உபயோகமாயிருக்கும். தமிழபிமானிகள் எல்லோரும் படிக்கவேண்டிய புத்தகம்.

**சுப்ரமணிய பாரதி சரிதம்.** ஆக்கியோன்: ஆக்கூர் அனந்தாச்சாரி; கிட்டப்பா மலர்ப் பிரசுராலயம், செங்கோட்டை. விலை அணா. 6.

முன்னர் இரண்டொரு சமயங்களிற் கூறியிருப்பது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்: நமக்கு இவ்வளவு சமீபகாலத்தில் இருந்த தேசிய கவியின் ஜீவிய நிகழ்ச்சிகளைப் பற்றிப் பொதுஜனங்களுக்கு ஒன்றும் அறிய முடியவில்லையே யென்று. கவியைப் பற்றி ஏதோ சில செய்திகளைத் தொகுத்துக் கூறிய வரையில் ஆக்கூர் அனந்தாச்சாரியார் தமது கடமையை நிறைவேற்றிக் கொண்டார் என்று மட்டுமே சொல்லலாம். மற்றபடி, அவர் ஆக்கியிருக்கும் 'சரிதம்' உண்மைச் சரித்திரமென்று எவ்வகையிலும் கூற முடியாது. 'ரெயில்வே' நிலையங்களில் வண்டி வந்து நின்றதும், இறங்கித் தத்தம் வழிசெல்லும் பிரயாணிகள்போல், வேண்டிய சம்பந்தமும் முறைமையுமில்லாத நிகழ்ச்சிகள் சிலவற்றை அடுக்கி வைத்துவிட்டால் அது ஜீவிய சரித்திர மாகிவிடாது. அதற்கு இந்நூலே போதுமான அத்தாட்சி. பாரதியை நேரில் நன்கு அறிந்த தக்கோர் எவரேனும் இப்பணியை மேற்கொண்டு பாரதியாரைப்பற்றிய செய்திகளையும், வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், அவர் சம்பந்த மான கடிதங்களையும் திரட்டி, பாரதியாரின் குணகுணங்கள் அவற்றினின்றும் நன்கு விளங்குமாறு, கொள்வன கொண்டு வேண்டாதன நீக்கி, நல்லமுறையில் தொகுத்து விரைவில் வெளியிடுவது அத்தியாவசியம். இன்றேல், பாரதியாரைப் பற்றிய பலவகை விவரங்கள், மெய்யானவும் அற்றனவும், கதைகளாக வளர்ந்து பாரதியாரின் பெயருக்கே கேடு விளைவிக்கக்கூடும்.

**தினமணி வருஷமலர்:** [விலை 6 அணா. தினமணி ஆபீஸ், 40 & 42 A. மூக்கர் நல்லமுத்துத் தெரு, ஜி. டி. சென்னை.] இதில் பல கற்பனைக் கதைகளும், கட்டுரைகளும் அடங்கியுள்ளன. 'கலை என்றால் என்ன?' என்பதைப்பற்றி பல அறிஞர்களின் அபிப்பிப்பிராயங்கள் தொகுக்கப் பட்டிருக்கின்றன. 'கௌரங்கர்' என்ற படம் நன்றாக இருக்கிறது. அச்சுப்பிழைகள் அவ்வளவு அதிகமாகயிருப்பதன் காரணம் எவ்வளவு யோசித்தும் விளங்கவில்லை.




## மாணாக்கர் விளையாட்டுக்கள்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

### 12

### 'இது கும்பகோணமல்ல'

சென்னை இராசதானிக் கல்லூரியில் நான் 1903-ஆம் வருஷம் டிசம்பர் முதல் வேலைபார்க்கத் தொடங்கினேன். இங்கே வருவதற்குமுன் பலர், "அது பெரிய நகரம்; பிள்ளைகள் அடங்க மாட்டார்கள்" என்று பயமுறுத்தினார்கள். கடவுளே துணையென்று நான் வந்துசேர்ந்தேன். வந்த சிலகாலத்தில் அவர்கள் கூறியது உண்மை என்பதை உணர்ந்தேன். நாகரிகம் அதிகமாகவுள்ள சென்னையில் மாணாக்கர்கள் சுதந்தரபுத்தி மிக்கவர்களாகவே இருந்தார்கள். உபாத்தியாயரைப் பாடஞ் சொல்லிக்கொடுக்கும் யந்திரமாகவே அவர்கள் கருதினார்களென்று தோற்றியது. ஆசிரியர்களிடம் மரியாதையாக நடக்கவேண்டுமென்ற விஷயமே அவர்களுக்குத் தெரியவில்லை. 'பிரின்ஸிபால்' முதலிய அதிகாரமுள்ள பெரிய ஆசிரியர்களிடம் பயத்தினால் அடங்குவதும் மற்றவர்களிடம் மனம்போல் நடப்பதுமாக இருந்தார்கள்.

ஒருசமயம் பல மாணாக்கர்கள் ஒரு வகுப்புப் பரீட்சைக்காக வந்து அமர்ந்திருந்தார்கள். தேசபாஷா பண்டிதர்களுக்குத் தலைவராக இருந்த ஸ்ரீமான் ராவ்பகதூர் ம. ரங்காசாரியரவர்கள் வந்து வினாப்பத்திரங்களைக் கொடுப்பது வழக்கம். அவர் வரும்வரையில் பண்டிதர்களும் மாணாக்கர்களும் காத்திருந்தார்கள். அப்பொழுது பிள்ளைகள் கூச்சலிட்டுக்கொண்டும் சிரித்துக்கொண்டும் இருந்தார்கள். பின் வரிசையில் இருந்த சில மாணாக்கர், தம் தொப்பியை மேலே வீசினர். அதை முதல்வரிசையில் இருப்பவர் தலையால் ஏந்தினர். காகிதம், புஸ்தகம், பென்ஸில்கள் முதலியன ஒருவர்

கையிலிருந்து மற்றொருவர் கைக்கு ஆகாயமார்க்கமாகப் பிரயாணம் செய்தன.

இந்தக் குழப்பத்தை நான் பார்த்தேன்; 'சென்னபட்டணத்துக்கே உரியதாகச் சிறப்பித்துச் சொல்லப்படும் காட்சி இதுதான் போலிருக்கிறது!' என்றெண்ணினேன். மெல்ல ஒரு மாணாக்கரிடம் சென்று, "பேசாமல் இரும்; ஏன் சத்தம் போடுகிறீர்?" என்று கூறினேன். அவர் என் பேச்சைக் கடுகளவுகூட லக்ஷியம் செய்யவில்லை. "நீங்கள் பேசாமல் போங்கள்! இங்கே அப்படித்தான் நடக்கும். இது கும்பகோணமல்ல" என்று கம்பீரமாக விடைகூறினார். நான் மேலே பேசுவதனாற் பயனொன்றுமில்லையென்று அறிந்தேன். 'இதையும் கும்பகோணம்போல் ஒருகாலத்தில் ஆக்கிவிடலாம்' என்று நம்பியிருந்தேன். தெய்வானுகூலத்தால் விரைவில் மாணாக்கர்கள் பின்பு அடங்கி நடப்பாராயினர். கும்பகோணத்தைப் போலவே சென்னையும் எனக்குத் திருப்தியைத் தந்தது. கும்பகோணத்தைக் காட்டிலும் இந்நகரில் அதிகப் பிள்ளைகளுக்குப் பாடஞ்சொல்லி வந்தமையால் என்னுடைய சந்தோஷம் மிக்கது.

## 13

### சமயத்திற்கு உபகாரம்

மூன் எழுதிய நிகழ்ச்சி நடந்த மறுநாள் வகுப்பில் பாடஞ் சொல்லத் தொடங்கினேன். முதல்வரிசையில் இருந்த மாணாக்கர் ஒருவர் வலதுகாலைத் தூக்கி இடது தொடைமேற் போட்டு அவ்வலது முழங்காலை இரண்டுகையாலும் கட்டி மேலே உயர்த்திக் கொண்டும், இடையிடையே காலை அசைத்துக்கொண்டும் உட்கார்ந்திருந்தார்; என்னையாவது பாடத்தையாவது அவர் சிறிதும் கவனிக்கவேயில்லை. நான் அதைக் கவனித்தேன். அவருடைய இருப்பு, 'இவ்வளவு அழகான இடத்திலிருந்து படிக்கும் பாக்கியம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்தக் காற்றும், கட்டிடமும் நம்மோடு கீழ் வகுப்புக்களில் படித்த எல்லோருக்கும் கிடைக்குமா? நமக்கல்லவா கிடைத்திருக்கிறது!' என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தாரென்று காட்டியது.

அப்பொழுது நடந்த பாடம் கம்பராமாயணம். அனுமானைப்பற்றிச் சொல்லும் சந்தர்ப்பம் தற்செயலாக நேர்ந்தது. "அனுமான் மகாதீரர். அவர் இராவணனுடைய சபைக்குச் சென்றார். இராவணன் உயர்ந்த சிங்காதனத்தில் ராஜஸத்தோடு வீற்றிருந்தான். வந்த அனுமானுக்கு ஆசனம் கொடுக்கவுமில்லை; உட்காரச் சொல்லவுமில்லை. அனுமான் பார்த்தார். அவனை அவமானப்படுத்த வேண்டுமென்பது அவர் எண்ணம். மிகவிரைவாக

இராவணனுடைய சிங்காதனத்துக்கருகில் தம் வாலைச் சுற்றிச் சுற்றி அச்சிங்காதனத்தைவிட உயரமாக ஓர் ஆசனத்தை உண்டாக்கி அதன்மேல் தாவினார். கால்மேல் காலைப்போட்டு முழங்காலை உயர்த்திக் கைகளாற் கட்டிக்கொண்டு பேச ஆரம்பித்தார். அவர் உட்கார்ந்திருந்த நிலையை எப்படி நான் தெளிவாகச் சொல்லமுடியும்? இதோ இவர் உட்கார்ந்திருக்கிறாரே, இப்படித்தான்!" என்று அந்த மாணாக்கரைச் சுட்டிக் காட்டினேன். பிள்ளைகளுடைய சிரிப்புக் கோஷம் அடங்கச் சிறிதுநேரம் ஆயிற்று. எல்லாரையும்போல அதைக் கேட்டுக்கொண்டிருந்த அந்த மாணாக்கர் அந்தக் கதை தம்மிடத்தில் வந்து முடிந்தவுடன் திடுக்கிட்டார். அவர் கைகள் கட்டவிழ்ந்தன; காலை மெல்ல நழுவவிட்டார்; சரியானபடி வைத்துக்கொண்டார்.

பாடம் முடிந்தபிறகு பிள்ளைகள் வேறு வகுப்புக்குச் சென்றார்கள். முன்னே குறிப்பிட்ட மாணாக்கர் என்னிடம் தனியேவந்து, "என்னை இப்படி அவமானம் பண்ணலாமா?" என்று கேட்டார். "உன்னுடைய உருவமும் நீ உட்கார்ந்திருந்த நிலையும் நன்றாக இருந்தன. நான்மட்டும் பார்த்துச் சந்தோஷிப்பதில் என்ன பயன்? எல்லோரும் பார்க்கவேண்டுமென்றுதான் காட்டினேன். அன்றியும், நீ அப்படியிருந்தது சமயத்திற்கு நல்ல உபகாரம் செய்தது. இல்லாவிட்டால் நான் உதாரணம் சொல்லமுடியாமல் விழித்திருப்பேன்" என்றேன்.

அவர் பேசாமல் சென்றார். 'அவர் உட்கார்ந்திருந்த கோலத்திற்குக் கதை உதாரணமாக வந்ததா? கதைக்கு உதாரணமாக அக்கோலம் ஆயிற்றா?' என்ற சந்தேகம் யாருக்கும் இராதென்றே கருதுகிறேன்.

## 14

## கிழவியின் வாழ்த்து

வில்லிபுத்தூரார் பாரதம் பாடம் நடக்கையில், திருமாலுக்குரிய பெயர்களுள் பன்னிரண்டு ஒருவகையென்றும் அவை கேசவாதி நாமங்களென்றும் சொல்லநேர்ந்தது. அப்பொழுது ஒரு பிராம்மண மாணாக்கரைப் பார்த்து, "கேசவாதி நாமங்கள் பன்னிரண்டும் தெரியுமா? தெரிந்தால் சொல்" என்றேன்.

"எனக்குத் தெரியாது" என்றார் அவர்.

"ஆசமனீய மந்திரம் தெரியுமா?" என்றேன்.

"தெரியாது" என்றார்.

பின்பு வேறு சில மந்திரங்களைக் கேட்டேன். அவர் ஒன்றும் சொல்லவில்லை.

அப்பால், "ஒவ்வொருவரும் தம் தம் குலாசாரங்களைக் கடைப்பிடித்து அனுஷ்டானம் செய்துவரவேண்டும். தெய்வப் பிரார்த்தனையை மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் உரியகாலத்திற் செய்யவேண்டியது. உலகத்திலுள்ள ஒவ்வொரு மதத்தினருக்கும் ஒவ்வொரு ஜாதியினருக்கும் உரிய பிரார்த்தனைகள் பெரியோர்களால் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைச் செய்துவந்தால் நமக்குக் கடவுள் அருளால் நன்மை உண்டாகும். சந்தியாவந்தனமும் ஒருவகையான தெய்வப் பிரார்த்தனையே. அதனை ஒழுங்காகச் செய்துவந்தால் ஞாபகசக்தியும் கூரிய அறிவும் உண்டாகும்" என்று சொல்லிவிட்டு மேலே பாடத்தை நடத்தலானேன்.

சிலநாட்கள் சென்றன. ஒருநாள் காலேஜ் வேலை முடிந்தவுடன், நான் யாரைச் சந்தியாவந்தன மந்திரங்களைப்பற்றிக் கேட்டேனே அந்த மாணுக்கர் என்னிடம்வந்து, "பலநாளாக என் தகப்பனார் தங்களைப் பார்க்கவேண்டுமென்று விரும்புகிறார். இன்று எங்கள் வீட்டுக்கு வந்துபோகவேண்டும்" என்றார். அவர் வீடு காலேஜிலிருந்து என் வீட்டுக்குப் போகும் வழியிலுள்ள தெருவில் இருந்தமையால் நான் உடன்பட்டேன். அங்கே சென்றதும் அவர் தந்தையார் மிகவும் உபசரித்துச் சிற்றுண்டிகள் கொடுத்துப் பிரியமாகப் பேசிக்கொண்டிருந்தார். அவர் என்னிடம் கும்பகோணத்திற் படித்தவர்.

அப்பொழுது சமையலறையிலிருந்து ஒரு கிழவியின் தலை மட்டும் வெளியிலே தெரிந்தது. அதைக் கண்டவுடன் அவர், "இவர்தான்" என்று விரைவாகச் சொல்லி என்னை அந்தக் கிழவிக்குச் சுட்டிக்காட்டினார்.

எனக்குத் திடுக்கென்றது. என்னை யாருக்கு எதற்காகச் சுட்டிக் காட்டினாரென்று விளங்கவில்லை. ஏதேனும் அவர்களுக்கு வெறுப்பான காரியத்தை நான் செய்துவிட்டேனோவென்று பயந்தேன்.

என்னுடைய பார்வையினால் நான் விஷயமறியாமல் மயங்குகிறேனென்பதை யுணர்ந்த அம்மாணுக்கரின் தந்தையார், "அவள் என்னுடைய தமக்கை. சிலகாலமாக என்னுடைய பிள்ளை ஒழுங்காகச் சந்தியாவந்தனம் செய்துவருகிறான். தனியே பஞ்சபாத்திரம், உத்தர்ணி, விபூதிப்பை ஆகியவைகளை வாங்கியிருக்கிறான். வேளை தவறாமல் சந்தியாவந்தனம் செய்கிறான். என்னுடைய தமக்கை முன்பு எத்தனையோமுறை அதை விடக்கூடாதென்றும், செய்யவேண்டுமென்றும் சொல்லிவந்தும்

இவன் கவனிக்கவேயில்லை. அதனால் அவளுக்கு வருத்தமாக இருந்தது. திடீரென்று இவன் ஒருநாள் சாஸ்திரிகளைக் கூட்டி வந்து அவரிடம் மந்திரங்களை நன்றாகக் கற்றுக்கொண்டு சந்தியாவந்தனம் செய்யத் தொடங்கினான்; ஒழுங்காகச் செய்ய லானான். எங்களுக்கு உண்டான ஆச்சரியத்துக்கு அளவில்லை. 'ஏதப்பா, இவ்வளவு தூரம் உனக்குப் புத்தி வந்தது?' என்று விசாரித்தோம். இவன், 'எங்களுக்கு ஒரு புதிய தமிழ் ஆசிரியர் வந்திருக்கிறார். அவர் சந்தியாவந்தன மந்திரம் கேட்கிறார்; வேறு மந்திரங்களையும் கேட்கிறார்; சந்தியாவந்தனம் பண்ணாமல் இருக்கக்கூடாதென்று சொல்கிறார்' என்றான். அது முதல் ஒவ்வொருநாளும் என் தமக்கை தங்களை வாழ்த்திக் கொண்டே இருக்கிறாள். 'இந்தப் புதிய நாகரிகத்தில் இப்படியும் சொல்கிறவர் ஒருவர் இருக்கிறாரா! அவரை ஒருமுறை பார்க்கவேண்டும்' என்று அவள் தினந்தோறும் சொல்லிவந்தாள். அதனால்தான் இன்று அழைத்துவரச் சொன்னேன்" என்றார்.

"தாயார் தகப்பனாரை விட்டுப் பலபிள்ளைகள் இங்கே வந்து படிக்கிறார்கள். தங்கள் பிள்ளைகள் ஒழுங்காக நடந்து வருவார்களென்று அவர்கள் எண்ணிக்கொண்டிருப்பார்கள். இங்கே பிள்ளைகளைப்பற்றிக் கவலைகொள்ளுவோர் யாரும் இல்லை. உபாத்தியாயர்களே கவனிக்கவேண்டும். இந்தக்காலத்திற் சிலருக்கு நான் செய்வது சரியாகத் தோற்றாது. ஆனாலும், நான் பிள்ளைகளின் நன்மையை உத்தேசித்தே செய்வதனால் அவர்கள் அபிப்பிராயத்தை நான் பொருட்படுத்துவதில்லை. உங்களைப்போன்ற சிலராவது என் செயலை நல்லதென்று ஆமோதிக்கிறார்களென்று தெரிந்ததில் எனக்கு உண்டாகும் திருப்தி சொல்வதற்கரியது" என்று நான் ஒருவாறு என் சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொண்டேன்.

உள்ளேயிருந்த கிழவி தட்டுநிறையப் பழமும் தாம்பூலமும் வைத்து ஒருகுழந்தையின் மூலம் அனுப்பினாள்.

## 15

## பேச்சுக்குத் தடை

ஒருநாள் பாடஞ் சொல்லிக்கொண்டிருக்கையில் வகுப்பில் இடைவரிசையிலிருந்த இரண்டு பிள்ளைகள் பாடத்தைக் கவனியாமல் பேசிக்கொண்டிருந்தனர். நான் சிலமுறை கவனித்தேன். அவர்கள் என்னைக் கவனிக்கவில்லை. உடனே நான் பாடம் சொல்லுவதை நிறுத்திவிட்டுப் பேசாமல் இருந்தேன். நிறுத்தினதற்குக் காரணத்தை மாணாக்கர்கள் தெரிந்துகொள்ளவில்லை.

முதல்வரிசையில் இருந்த மாணாக்கர் ஒருவர் எழுந்திருந்து, "மேலே சொல்லவேண்டும்" என்றார்.

"சொல்லலாம். அந்த இரண்டுபேர்களும் மிக அருமையாகச் சம்பாஷித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பேச்சுக்குத் தடையாக நான் பாடஞ்சொல்வது உசிதமாக இராதென்று எண்ணுகிறேன். இருவரும் ஒருவர்க்கொருவர் நெடுந்தூரத்தில் வசித்து வருபவர்களாக இருக்கலாம். அவசியமான விஷயங்களைப் பேச வேண்டுமென்றால் அவ்வளவு தூரம் வந்து பேச முடியாதல்லவா? இந்தச் சமயத்தைப்போலக் கடற்காற்று வீசும்போது சந்தோஷமாகப் பேச அவகாசம் கிடைப்பது அருமை. அதனால் அவர்கள் பேசுகிறார்கள். நாம் அதற்கு அனுகூலமாக இராவிட்டாலும் பிரதிகூலமாவது செய்யாமல் இருக்கலாமே. அதனால்தான் பாடத்தை நிறுத்தினேன்" என்று நான் சொல்லிவிட்டு அவ்விருவர்களையும் பார்த்து, "ஏன், இன்னும் சிறிது நேரம் ஆகலாமா?" என்று கேட்டேன். மலர்ந்த தாமரைகளுக்கு நடுவில் இரண்டு வாடிய தாமரைகளைப்போல் அவ்விருவர் முகங்களும் மாறியதைக் கண்டு மேலே பாடஞ் சொல்லத் தொடங்கினேன்.

## 16

## துரைராஜா நாற்காலி

புதுக்கோட்டை யரசருடைய இளையசகோதரர்களில் ஒருவரான ஸ்ரீ சுப்பிரமணிய துரைராஜா என்பவர் காலேஜில் படித்து வந்தார். 'பிரின்ஸிபா'லுடைய உத்தரவின்மேல் அவருக்கு மட்டும் தனி நாற்காலியொன்று வகுப்பில் போடப்பட்டிருந்தது. அதில் அவர் இருந்து பாடங் கேட்டுவந்தார்.

ஒரு சமயம் அவர் சிலநாட்கள் பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை. அவர் வரமாட்டாரென்பதை ஒரு மாணாக்கர் அறிந்துகொண்டார். வகுப்பிற்கு வந்தவுடன் அவருடைய நாற்காலி வறிதே இருப்பதை யறிந்து அதில்போய் உட்கார்ந்துகொண்டார். மாணாக்கர்களும் நானும் அதைக் கவனித்தோம். மாணாக்கர்கள் அவரை அடிக்கடி பார்த்து நறுமொறுத்தார்கள்.

மறுநாள் அந்தமாணாக்கர் உயர்ந்தமுறையிற் கூடியவரையில் துரைராஜாவைப் போல உடையணிந்துகொண்டு வந்தார். நாற்காலிக்கு ஏற்றபடி தம் உடை இருக்கவேண்டுமென்பது அவர் நினைவு. நெடுநாட்களாக அந்த நாற்காலியில் உட்காரவேண்டுமென்ற அவா அவருக்கு இருந்திருக்கலாமென்று தோற்றியது. அவர் வெகுவேகமாக நாற்காலிக்குரிய இடத்திற்குவந்தார். அங்கே

அது காணப்படவில்லை. ஏமாந்துபோய் நின்ருர். அப்பால் வேறு எங்கேனும் இருக்கிறதாவென்று ஆராய்ந்தார்.

வகுப்பில் இருந்த நான், "ஏனப்பா? ஏதாவது விழுந்து விட்டதா? எதைத் தேடுகிருய்?" என்று கேட்டேன்.

அவர் விடையளிப்பதற்குள் வகுப்பிலிருந்த நாராயணசாமி ஐயரென்பவர், "நாற்காலியைத் தேடுகிருர்!" என்ருர். எனக்கு விஷயம் தெரியுமாயினும் தெரியாதவனைப்போல இருந்தேன்.

"நாற்காலியா? எந்த நாற்காலி?"

"துரைராஜா நாற்காலி. நேற்று உட்கார்ந்ததுபோல இன்றைக்கும் உட்கார எண்ணித் தேடுகிருர்."

"அப்படியா? எங்கே அது?"

"அது பத்திரமாக இருக்கிறது. துரைராஜா வரும்போது வரும். இவ்வளவுபேர் தங்கள் தங்கள் ஆசனத்தில் இருக்கும் போது இவருக்குமட்டும் என்ன நாற்காலி? பிறருடைய நாற்காலியில் உட்காருவதனுல் திருப்தியடைவது நியாயமாகுமா?"

"வாஸ்தவந்தான். துரைராஜாவுக்குப் பிரின்ஸிபாலவர்களே நாற்காலியிலிருக்க உத்தரவு கொடுத்திருக்கிருர். அவர் ராஜ வம்சத்தினர். எல்லோரும் நாற்காலியில் இருப்பது சாத்தியமாகுமா? அன்றி இங்கே நாற்காலியில் உட்காரவா வருகிறீர்கள்? பாடம் கேட்பதற்கல்லவா வருவது? நாற்காலியில் உட்கார்ந்தால் தான் பாடம் படிக்கமுடியுமோ? இன்றைக்கு இவர் அந்த நாற்காலியில் உட்காருவதற்குத் தக்க அலங்காரத்தோடே வந்திருக்கிருர். ஆனுலும் பாதகமில்லை. பழைய இடத்திற்கூட உட்காரலாம்" என்றேன். அம்மாணுக்கர் பேசாமல் ஒரு மூலையில் போய் அமர்ந்தார்.

## 17

## நாமம் இட்டுக்கொண்டுவந்த மாணவர்

ஒருநாள் பாடத்தில், நெற்றியில் விபூதி முதலியன தரிப்பதைப் பற்றிய செய்தி வந்தது. இந்துக்கள் சூன்யமான நெற்றியுடன் இருக்கலாகாதென்று சொன்னேன்.

மறுநாள் அந்த வகுப்பில் பாடஞ் சொல்லத் தொடங்குகையில் மாணுக்கர் பெயர்கள் வாசிக்கப்பட்டன. ஒரு ஸ்மார்த்த மாணுக்கரின் பெயரைக் கூப்பிடுகையில் விடையளித்தவர் வேருெருவராக எனக்குத் தோற்றினர். அவரைப் பார்த்தேன். முகத்தில் மிகவும் பிரகாசமாகத் திருமண் இட்டுக்கொண்டிருந்தார்.

"அவனுக்காக நீ ஏன் விடையளிக்கிறாய்?" என்று அவரைக் கேட்டேன்.

"நான்தான் அவன்" என்றார் அவர்.

நான் உற்றுக் கவனித்தேன்; "அடடா! நாமமல்லவா உன்னை மறைத்துவிட்டது! இதை ஏன் இட்டுக்கொண்டாய்?" என்று கேட்டேன்.

"நேற்று நீங்கள், எல்லோரும் நெற்றிக்கு இட்டுவர வேண்டுமென்று சொன்னீர்களே!"

"இதை நீயாக இட்டுக்கொண்டாயா? வேறு யாராவது இட்டார்களா?"

"இவனே எனக்கு நாமம் போட்டான்" என்று ஒருவரைச் சுட்டிக்காட்டினார். எல்லோரும் சிரித்தார்கள்.

"நீ செய்தது சரியன்று. அவரவர்கள் எந்த எந்தச் சின்னங்களைத் தரித்துக்கொள்ள வேண்டுமோ அவற்றைத்தான் தரிக்கவேண்டும். உங்கள் முன்னோர்கள் எப்படி நெற்றிக்கு வைத்துக்கொள்கிறார்களோ அப்படி நீங்களும் செய்யவேண்டும். உனக்குப் பதிலாக ஐயங்கார் யாரோ வந்திருக்கிறாரே யென்று நான் மயங்கினேன். நீ இன்று செய்தது ஒருவகையில் நல்லதுதான்; நெற்றிக்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் தோன்றியதே; அதுபோதும்!"

அதுமுதல் அவர் சரியாக நெற்றிக்கு இட்டுக்கொண்டு வரலானார்.

## 18

### 'ரஸத்தைச் சொல்லுங்கள்'

ஒருநாள் பாரதத்தில், துரோணாசாரியர் இறந்தபோது அசுவத்தாமன் வருந்துவதாக உள்ள செய்யுட்களைப் பாடஞ்சொன்னேன். அச்செய்யுட்களில் சொற்சுவை பொருட்சுவை மிகவும் சிறப்பாக அமைந்திருந்தன. பாடஞ்சொல்வதற்குமுன் வில்லிபுத்தூராழ்வாரது பெருமையையும் கல்வியாற்றலையும் எடுத்துச் சொல்லிவிட்டு, "இந்தப்பகுதி மிகவும் ரஸமுள்ள பாகம்" என்று கூறினேன். பாடஞ் சொல்லி முடித்தபிறகு, "பார்த்தீர்களா? இந்தச் செய்யுட்கள் எவ்வளவு ரஸமுள்ளனவாக இருக்கின்றன! இப்படியே தமிழில் ஆயிரக்கணக்கான செய்யுட்கள் உண்டு. தமிழ்ச் சுவையை அனுபவிப்பதைக் காட்டிலும் சிறந்த இன்பம் வேறொன்று இருப்பதாக எனக்குத் தோற்றவில்லை" என்றேன்.

பாடம் முடிந்தவுடன் பிள்ளைகள் வெளியே சென்றார்கள். ஒருவர் மாத்திரம் தனியே உட்கார்ந்துகொண்டிருந்தார். அவர் தம் கையில் பென்ஸிலும் குறிப்புப் புத்தகமும் வைத்துக்கொண்டு என்னைப் பார்த்தவண்ணம் எதையோ எழுதத் தொடங்குப வரைப் போல இருந்தார்.

"ஏன் நீ மட்டும் இருக்கிறாய்?" என்று கேட்டேன்.

"ஒன்றும் இல்லை. நீங்கள் அந்தச் செய்யுளில் ரஸம் இருக்கிறதென்று சொன்னீர்களே. அந்த ரஸத்தைச் சொன்னால் எழுதிக் கொள்ளலாமென்று காத்திருக்கிறேன்" என்றார்.

எனக்கு வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டேன். செய்யுளின் ரஸம் எலுமிச்சம்பழ ரஸமா? இன்ன விடை கூறுவதென்று எனக்குத் தோற்றவில்லை; பிறகு, "ரஸத்தை நம்முடைய அறிவினால் அறிந்துகொண்டு சந்தோஷிக்க முடியுமேயன்றி எழுதவும் சொல்லவும் முடியாது. தமிழில் அன்பு அதிகமாக ஆக அந்த ரஸம் உனக்கே புலப்படும்" என்று சொல்லி அனுப்பினேன்.

தாம் எதிர்பார்த்தபடி எழுதிக்கொள்ள முடியவில்லையே யென்ற வருத்தம் அவருக்கு இருந்திருக்கக் கூடும். அதற்கு நான் என்ன செய்வேன்!

## 19

## மாப்பிள்ளைகள்

என்னிடம் பலர், காலேஜில் படிக்கும் தங்கள் மாப்பிள்ளைகளைப் பற்றிக் குறை கூறுவதுண்டு. அவர்களை நான் திருத்தக் கூடுமென்பது அவர்கள் எண்ணம். மாப்பிள்ளைகளால் நேரும் செலவு, மனவருத்தம் முதலியவற்றை நன்றாக அவர்கள் மூலம் நான் அறிந்தேன்.

பாடஞ் சொல்லும்போது மாப்பிள்ளைகளைப் பற்றிப் பேசும் சந்தர்ப்பம் ஒன்று வாய்த்தது; "இந்தக் காலத்து மாப்பிள்ளைகள் சிலரை நினைத்தால் வருத்தப்படவேண்டியிருக்கிறது. காலேஜில் படிக்கிற மாப்பிள்ளைகள் தம் தகப்பனாரிடமிருந்து வருகிற பணம் போதாமல், மாமனாருக்கும் எழுதிப் பணம் பெற்றுப் பலவகையான வீண் செலவு செய்கிறார்கள். மாமனாருக்கு அதிகாரத்தொனியோடு எழுதுகிறார்கள்; பயமுறுத்துகிறார்கள். நீங்கள் அப்படிச் செய்யமாட்டீர்கள். ஆனாலும், உலகிலுள்ள இயல்பைச் சொல்ல வந்தேன்" என்றேன்.

அப்பொழுது பின்வரிசையில் இருந்த இருவர் ஏதோ பேசிக்கொண்டிருந்தனர்.

"நீங்கள் என்ன பேசிக்கொண்டிருக்கிறீர்களென்று எனக்குத் தெரியும். இந்த உபாத்தியாயருக்கு மாப்பிள்ளைகளால் தொந்தரவு உண்டாயிருக்கிறதென்று பேசுகிறீர்களல்லவா?" என்று அவர்களைக் கேட்டேன்.

"ஆமாம்" என்று அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

"நீங்கள் நினைத்தது தவறு. எனக்குப் பெண்களே இல்லை. ஆனாலும் பல மாமனார்களோடு பழகுவதனால் இந்த விஷயங்கள் தெரியவந்தன. உங்களுக்குச் சொன்னால் இந்த அபக்கியாதிக்கு நீங்கள் பாத்திரராகாமல் இருப்பீர்களென்று சொல்லலானேன்" என்றேன்.

---

# இலக்கியம்



## வங்க இலக்கியமும் அதன் வளர்ச்சியும்

டி. என். எஸ்.

---

தற்காலம் இந்தியாவினுள் வங்கபாஷையைப் போல் முன்னேற்றமடைந்துள்ள பாஷை வேறெதுவுமில்லை எனலாம். இலக்கிய உலகில், இன்று, வங்க மொழி ஒரு பிரத்தியேக ஸ்தானத்தை வகிக்கிறது. இதற்கு வங்காளிகளின் ஸ்வதேசப் பற்றும், பாஷாபிமானமுமே காரணமாகும்.

### வங்கபாஷையின் உற்பத்தி வரலாறு

வட இந்தியாவில் பேசப்பட்டுவந்த கொச்சை மொழிகளை மொத்தமாகப் பிராக்ருதம் என்று சொல்லுவார்கள். பிராக்ருதத்தில் எத்தனையோ வகையுண்டு. அதில் ஒன்றான மாகதி (मागधि) யிலிருந்து, முக்யமாக வங்காளி, மைதிலி, ஓரியா இம்மூன்று பாஷைகளும் உண்டாயின. கௌதம புத்தர் உபதேசம் செய்தருளியது இப்பழைய மாகதி மொழியில்தான்.

### புராதன இலக்கியம்

வங்க பாஷை இலக்கிய விஷயத்தில் மிகப் புராதனமானதென்று கருதுவதற்கு இடமில்லை. கி.பி. 10-ஆம் நூற்றாண்டுக்கு முன் அதில் இலக்கியங்கள் இருந்தனவென்பதற்குப் போதுமான சான்றுகளில்லாமையால், சார்யாசார்ய விநிச்சய (चार्याचार्य विनिश्चय) என்ற நூலே முதன் முதலாக வங்க மொழியில் இயற்றப்பட்ட நூல் என்று கொள்ளவேண்டும். ஸமகாலத்தில் வசிக்காத ஆசார்யர் என்று சொல்லப்படும் 22 மஹாயான பௌத்த ஸன்யாஸிகளின் கானங்கள்* இதில் அடங்கியுள்ளன. இவை

---

*இக்கானங்களையெல்லாம் மிகவும் சிரமப்பட்டு ஓலைச் சுவடியுருவில் நேபாளத்தில் கண்டுபிடித்து, இன்னும் சில சுவடிகளுடன் சேர்த்து மகாமகோபாத்யாய ஹரப்ரஸாத் சாஸ்த்ரி என்பவர், ‘ஆயிரம்வருஷத்திற்கு முந்திய புராதன வங்க பாஷையில் பௌத்தகானமும், குறள் வெண்பாக்களும்’ என்ற புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்.

யோகஸாதனங்களைப் பற்றியும், சில தாந்த்ரிகக்கொள்கைகளைப் பற்றியும் கூறுகின்றன. இந்நூலை இயற்றியவர்கள் கி. பி. 850-ஆம் ஆண்டிலிருந்து கி. பி. 1200-ஆம் ஆண்டிற்குள் வெவ்வேறு காலங்களில் இருந்தனரென்று சில ஆதாரங்களைக்கொண்டு நிச்சயித்திருக்கிறார்கள். இந்த கானங்கள் மேற்கு வங்காளத்தில் அச்சமயம் வழக்கிலிருந்த மொழியில் இயற்றப்பட்டனவாகும்.

## கீதகோவிந்தம்

ஜயதேவர் என்ற வைஷ்ணவ கவி வங்காளத்திலுள்ள ராட ப்ரதேசத்தில் கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் இருந்தார். துருக்கர் அப்போது வங்காளத்தின்மீது படையெடுத்தாகவில்லை. 'கீத கோவிந்தம்' என்ற காவியத்தை அவர் ஸம்ஸ்க்ருதத்தில் இயற்றிய போதிலும், அதை கௌடீய நடையில் எழுதியிருப்பது குறிப்பிடத் தக்கது. சீக்கியர்களின் புனித நூலான 'ஆதி க்ரந்தி'ல் ஜயதேவருடைய பாடல்கள் இரண்டு, கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் சேர்க்கப்பட்டன. அவை 12-ஆம் நூற்றாண்டில் மேல் வங்காளத்தில் வழங்கிவந்த மொழியில் எழுதப்பட்டனவென்று, மிகச் சிரமப்பட்டு சில அறிவாளர்கள் கண்டு பிடித்திருக்கின்றனர். இதனால் ஜயதேவர் ஒருவேளை 'கீதகோவிந்த'த்தை முதலில் வங்க மொழியில் எழுதியிருக்கலாம் என்றும், அக்காலத்துப் பண்டிதர்கள்—(அபப்ரம்சத்தை) கொச்சைமொழியை வெறுத்த பண்டிதர்கள்—ஸம்ஸ்க்ருத மொழிபெயர்ப்பை மட்டும் வைத்துக்கொண்டு மூலத்தைப் போக்கிவிட்டனரோ என்றும் ஸந்தேஹம் கொள்ள இடமிருக்கிறது. ஆனால் நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை.

## க்ருஷ்ண கீர்த்தனை

வைஷ்ணவ கவி சண்டிதாஸரின், ராதாக்ருஷ்ண நாயகநாயகீ பாவத்தைக் காட்டும் உருக்கமான 'க்ருஷ்ண கீர்த்தனை'யைத்தான் (ஸந்தேஹமின்றி) சார்யா கவிகளுக்குப்பின் எழுதப்பட்ட அடுத்த வங்காளி நூலாகக் கொள்ளக் கூடும். இது கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்பது மூல ஓலைச்சுவடியில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள லிபியிலிருந்து தெரியவருகிறது.

## பிரஸித்தமான சில நாட்டுப் பண்கள்

இந்த நூற்றாண்டில்தான் துருக்கர் படையெடுத்துவந்து வங்காளத்தைக் கைப்பற்றினர். எங்கும் ஒரே கலவரமாயிருந்த ஸமயம். ஆனாலும் வங்க இலக்கியம் இச்சமயத்தில் கொஞ்சம்

முன்னேற்ற மடைந்தது. ஹரிதத்தர், மயூரபட்டர், மாணிக்க தத்தர் போன்ற சில புலவர், வட வங்கத்தில் பிரஸித்தமான [1]கோபீசாந்த் ராஜாவின் சரிதையையும், பேஹுலா, காலகேது போன்ற மற்றக் கதைகளையும் பாட்டுருவில் அமைத்துப் பாமர ஜனங்களின் மனதைக் கவர்ந்தனர்.

### இதிஹாஸ புராண நூல்கள்

பௌத்த நூலான சூன்யபுராணம் அதே நூற்றுண்டில்தான் எழுதப்பட்டது. கி. பி. 15-ஆம் நூற்றுண்டு முடிவதற்குள் எத்தனையோ முக்யமான நூல்கள் இயற்றப்பட்டன. அவை, க்ருத்திவாஸரின் ராமாயணம், காசீராமதாஸரின் மஹாபாரதம், பாகவதபுராணம் போன்ற நூல்கள்.

### மைதிலியின் ப்ரபாவம்

கி.பி. 15-ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில், வித்யாபதி டாகுர் என்பவர் மைதிலிபாஷையில் க்ருஷ்ணன் ராதை இவர்களின் தெய்விகக் காதலை வர்ணிக்கும் அழகிய பதாவளியை இயற்றினர். இது மிகப் பிரபலமாயிருந்தது. 16-ஆம் நூற்றுண்டில், அதாவது ஸ்ரீக்ருஷ்ண சைதன்யரின் காலத்தில், அநேக வைஷ்ணவ கவிகள் தோன்றி வித்யாபதியின் பதாவளியை அனுஸரித்து, மைதிலிச் சொற்களும் வங்காளி மொழிகளும் கலந்த ப்ரஜபுலி[2] என்ற ஒரு வித மணிப்ரவாள நடையில் எழுதத் தலைப்பட்டனர். இவர்களுள் முக்யமானவர்கள், கோவிந்ததாஸரும் ஞானதாஸரும். இதே ஸமயத்தில் முகுந்தராம் சக்ரவர்த்தி கவிகங்கண சண்டி[3] என்ற காவியத்தை எழுதினர்.

### புதுமொழிக் கலப்பு

கி.பி. 17-ஆம் நூற்றுண்டின் இறுதியிலிருந்து வங்க இலக்கியத்தில் மற்றொரு சகாப்தம் ஆரம்பமாயிற்று. இதற்கு முந்திய நூல்களில், மைதிலி அல்லது ஹிந்திச் சொற்கள் அதிகமாக உபயோகிக்கப்பட்டுவந்தன. இப்பொழுது ராஜ்யம் முகம்மதியர் வசமானதால் உர்து, பார்ஸி இவ்விரண்டும் ராஜாங்க

---

1. ராஜா கோபீசந்த்ரன் இளவயதிலேயே யாவற்றையும் துறந்து, ஜாலந்தரிபாதர் என்ற மகாயோகியைப் பின்தொடர்ந்து கானகம் சென்ருன்.

2. ப்ரஜபுலி—க்ருஷ்ணன் வ்ரஜ தேசமான ப்ருந்தாவனத்தில் சிறுவயதில் விளையாடினதைப்பற்றிக் கவிகள் எழுதியிருக்கிறார்களாதலால் இந்நடைக்கு இத்தகைய பெயர் வந்தது.

3. சண்டியின் மீது காப்பு.

பாஷைகளாகக் கருதப்படவே, இக்காலத்தில் இயற்றப்பட்ட நூல்களில் கொஞ்சம் கொஞ்சமாக இந்த பாஷைச் சொற்களைக் கையாளத் தொடங்கினர். பண்டிதர்களுடைய பாஷை முன் போலவே சுத்த ஸம்ஸ்க்ருதமாக இருந்தது. இச்சமயத்தில் வசித்த பாரத சந்த்ர ராய், ராமேச்வர பட்டாசார்யர் போன்ற ஆசிரியர்கள் உர்து, பார்ஸி, வங்காளி, ஸம்ஸ்க்ருதம், இந்நான்கு மொழிகளிலும் வல்லவர்கள். அப்பொழுது போர்த்துகீஸியர் கீழ்வங்கத்தில் வியாபாரத்துறையில் ஓங்கி இருந்ததனால் அம்மொழிச்சொற்கள் சில வங்கமொழியில் வந்து கலந்தன.

## கீழ்வங்காள நாட்டுப்பாட்டுகள்

கி. பி. 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் கீழ் வங்காளத்தில் பிரபலமாக இருந்த *கேனராமேர் பாலா, மஹுயா, சந்த்ராவதி போன்ற சில நாட்டுப்பண்கள் மிக நன்றாக இருக்கும்.

## ஆங்கில மோகம்

முகலாய ராஜ்யம் வீழ்ச்சியடைந்து, ஆங்கில ஆட்சி ஆரம்பமாயிற்று. முன் உர்து, பார்ஸி மொழிகளைக் கையாளத் தொடங்கினபோது எவ்வாறு மைதிலிச்சொற்களை அலக்ஷ்யம் செய்தனரோ, அதுபோலவே இப்பொழுதும் உர்து, பார்ஸிச் சொற்களைக் கைவிட்டனர். முதன்முதலாக ஆங்கிலக் கல்விமுறையைப் புகுத்தினதும் அதன்பால் கொண்ட மோகத்தினால் எவரும் வங்கபாஷையின் முன்னேற்றத்தைப்பற்றி முதலில் அக்கரை கொள்ளவில்லை. பனை ஓலைகளில் எழுதப்பட்டோ, அல்லது கையால் செய்த நாட்டுக்காகிதத்தில் செல்லரிக்காதிருக்க மஞ்சள் பூசப்பட்டோதான் வங்க நூல்கள் கிடைத்தனவேயன்றி, அச்சுருவாக வெளிவரவில்லை.

---

*கேனராமேர் பாலா — இது வழிப்பறிக்கொள்ளைக்காரனை கேனராம் சிறந்த வைஷ்ணவ பக்தனைதைப்பற்றிய கதை.

மஹுயா—ஒரு பிராமண ஜமீந்தார் ஒரு கீழ்ஜாதிப் பெண்ணின் மேல் காதல்கொண்டு, தன் கௌரவத்தை யிழந்தும் காதலை மறக்காம லிருப்பதாக அமைந்த ஒரு கதை.

சந்த்ராவதி—இது சந்த்ராவதி என்ற வைஷ்ணவ பக்தையின் கதை. இவள் ராமாயணத்தைக் கீர்த்தனையாக வங்காளியில் எழுதியிருக்கிறாள்.

இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்துக் கல்கத்தா ஸர்வகலாசாலையாரின் உதவியைக் கொண்டு தீனேச்சந்த்ர ஸேன் என்பவர் 'பூர்வ வங்க கீதிகா' (கிழக்கு வங்காள நாட்டுப் பண்கள்) என்ற புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்.

## முதல் வங்காளி அச்சுப்புத்தகங்கள்

ஸ்ரீராம்புரியில் (*Serampore*) முதன்முதலாக ஐரோப்பியப் பாதிரிமார் க்ருபார் சாஸ்த்ரேர் அர்த்தபேத (அருள் மார்க்க விளக்கம்) என்ற கிறிஸ்தவ மதஸம்பந்தமான நூலை வங்கமொழியில் அச்சிட்டனர். பின்னர், கல்கத்தாவிலுள்ள வடதலா என்ற பேட்டையில் வங்கநாட்டினரே இத்தொழிலில் ஈடுபட்டனர். இவர்கள் வெளியிட்ட புத்தகங்கள் கணக்கில்லாத எழுத்துப்பிழைகள் நிறைந்து, அநேக விதங்களில் மோசமாக விருப்பினும், வங்க மொழியை முன்னுக்குக் கொண்டுவர இவர்கள் இவ்வளவாவது பாடுபட்டது மிகவும் போற்றத்தக்க செயலாகும். இவர்கள் மேற்கொண்ட முயற்சியினால்தான் சில அரியநூல்கள்—வைஷ்ணவப் புலவர்களின் கவிதைகள் அடங்கிய பத கல்பதரு, க்ருத்திவாஸ ராமாயணம், காசீராமதாஸ மகாபாரதம், கவிகங்கண சண்டி முதலியன இப்போது கிடைக்கின்றன.

## ஆங்கிலத்தின் ப்ரபாவம்

வங்கபாஷையின் வசன நடை 19-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஸம்ஸ்க்ருத ஆதிக்கத்திலிருந்தது. எல்லோருக்கும் அது புரிவது கஷ்டமாயிருந்தது. முதன் முதலாகத் தெளிவான வசனநடையில் எழுதியவர் சீர்த்திருத்தக்காரரான ராஜா ராம் மோஹன் ராய் அவர்களே. மகா புத்திதீக்ஷண்யம் வாய்ந்தவர் இவர். ஸம்ஸ்க்ருதம், வங்கம், பார்ஸி, ஆங்கிலம், இந்நான்கு மொழிகளிலும் பாண்டித்யம்பெற்ற இவருடைய வசனநடை மாதுர்யமாகவும், ஸரளமாகவும் இருக்கும்.

அவருக்குப்பின் ஈச்வரசந்திர வித்யாஸாகரர் வசன நடையை நன்கு சீர்திருத்தி அமைத்தார். இவரும் பலபாஷைகளில் விற்பன்னர். இவர் வங்கபாஷையில் ஆரம்ப பாடபுத்தகங்கள் எழுதுவதில் மிக ஸமர்த்தர். சிறுவர் சிரமமின்றி, சீக்கிரம் வசன நடையில் தேர்ச்சிபெறச் சிறந்த ஸாதனமாக இவை இன்றும் விளங்குகின்றன.

இச்சமயத்தில் கல்கத்தாவானது, அறிவாளிகளின் நிலயமாகத் திகழ்ந்து வந்தது. காளீப்ரஸன்ன ஸிம்ஹ என்பவர் ஹுதோம் பேஞ்சார் நக்ஸா ('கோட்டானின் கூச்சல்' முதலிய இலக்கிய சித்திரங்கள்) என்ற புத்தகத்தை வெளியிட்டார். அது கல்கத்தாவில் பேசப்படும் கொச்சை வங்கமொழியில் எழுதப்பட்டு, 19-ஆம் நூற்றாண்டின் மத்தியில் இருந்த கல்கத்தா (வங்க) வாசிகளின் சமூக வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டுகிறது.

ராம்மோஹன் ராய் எத்தனையோ கவிதைகள் வங்கமொழியில் இயற்றியுள்ளார். வித்யாஸாகரர் காலத்தில் மற்றொரு விசேஷம், *மிகேல் மதுஸூதன தத்தர் மேகநாதவதம் என்ற ராமாயண ஸம்பந்தமான மஹாகாவ்யத்தை இயற்றியதாகும். இவர் ஒரு வங்கநாட்டுக் கிறிஸ்தவர். 19-ஆம் நூற்றாண்டின் முதற்பாதியில் சென்னையிலுள்ள கிழக்கிந்தியக் கம்பெனியில் உத்யோகம் பார்த்துவந்தார். ஆங்கிலத்திலும், ஸம்ஸ்க்ருதத்திலும் தேர்ச்சி பெற்றவர். இவரை வங்காள மில்டன் (*Milton*) என்று சொல்லுவார்கள். கேசவ சந்த்ர ஸேன், மஹர்ஷி தேவேந்த்ரநாத் டாகுர் (ரவீந்த்ரரின் பிதா) போன்ற பிரும்ம ஸமாஜத் தலைவர்களும் தங்காளாலியன்ற ஸேவையை இத்துறையில் செய்துள்ளனர்.

### முதல் நாவலாசிரியர்கள்

இந்தியாவில் முதன்முதலாக நூதன முறையில் 'நாவல்' எழுதிய பெருமையும் வங்கநாட்டினருக்கே உரியதாகும்; அதிலும் பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாயருக்கு. டெபுடி மாஜிஸ்ட்ரேட்டாக உத்தியோகம் பார்த்துவந்த ஸமயம் போக மற்றநேரங்களில் எத்தனையோ சிறந்த நவீனங்கள் எழுதினர். அவற்றுள் ஆனந்த மடம், சந்த்ரசேகரன், ராஜஸிம்ஹன், துர்க்கேசநந்தினீ போன்ற நாவல்கள் அவருடைய ஆழ்ந்த சரித்திர ஞானத்தையும், தேச பக்தியையும் காட்டுகின்றன. மற்றும் க்ருஷ்ணகாந்தரின் உயில், விஷவிருக்ஷம் போன்ற நாவல்களில் அக்கால வங்கநாட்டுச் சமூக வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுகிறார். ஏறக்குறைய இதே சமயத்தில் இருந்த ரமேச் சந்த்ர தத் என்ற நூலாசிரியரின் 'மாதவீ கங்கண்' என்னும் சரித்திர ஸம்பந்தமான நவீனம் மிகப் பிரஸித்திபெற்றது.

### முதல் நாடகாசிரியர்கள்

தீனபந்து மித்ர என்பவர் எழுதிய *நீலதர்ப்பண் என்ற நாடகம் 19-ஆம் நூற்றாண்டில் சிறந்து விளங்கியது. இது அவுரித் தோட்டங்களில் ஏழைக் கூலிகள், வெள்ளை எஜமானரிடம் படும் கஷ்டங்களைத் தெளிவாகக் கூறுகிறது. ஏறக்குறைய இதே சமயத்தில் புத்தசரிதம் போன்ற உயர்தர நாடகங்கள் எழுதிப் பெயரெடுத்தார் கிரீச் சந்த்ர கோஷ் என்பவர்.

---

*நீலதர்ப்பண் = நீலிக்கண்ணாடி. இந்நாடகத்தையும், இதன் ஆங்கில மொழிபெயர்ப்பையும், ஆங்கிலத்வேஷம் உண்டுபண்ணுகின்றன வென்று சர்க்கார் இப்பொழுது பறிமுதல் செய்துவிட்டார்கள்,

## ரவீந்த்ரநாதர்

'கீதாஞ்ஜலி'யை எழுதி உலகப்ரஸித்தி பெற்ற கவியரசர், தாம் சிறுவயதில் படித்த பழைய வைஷ்ணவ ஸாஹித்யங்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறார். [1]கவிதையில் மட்டுமன்றி, [2]நவீனம், [3]நாடகம், [4]கட்டுரை,

---

1. கீதாஞ்ஜலி, நைவேத்ய, இவை யிரண்டும் பல பாவங்களில் கடவுளைப்போற்றும் பாடல்கள். சித்ரா, ஸோணர் தரி (பொன் ஓடம்) போன்றவை பல விஷயங்களைக் குறித்து எழுதப்பட்ட கானங்கள். சிசு என்பது குழந்தைகளின் உலகை வர்ணிக்கும் அழகான பாடல் திரட்டு.

2. கோரா தேசாபிமானம் நிறைந்த ஒரு நவீனம். நௌகா டுபி (படகு முழுகினது) சமூக சம்பந்தமானது. கரே பாஹிரே (வீடும் வெளியும்)என்பதில் போலித் தேசபக்தர்களைப்பற்றியும், உண்மை ஊழியர்களைப்பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. இதில் ஒரு விசேஷம்—தத்தம் வாயாலேயே கதா பாத்திரங்களில் முக்யமானவர்கள் கதையைச் சொல்லுகிற மாதிரி எழுதியிருக்கிறார் கவி. யோகாயோக் (ஒற்றுமையும் வேற்றுமையும் அல்லது குமுதினி) தாம்பத்ய வாழ்க்கையில் ஏற்படும் மனக்கசப்பை வர்ணிக்கிறது. சேஷேர் கவிதா (கடைசிக் கவிதை), துயிபோன் (இரு ஸஹோதரிகள்), இவ்விரண்டும் அதிநாகரிக வங்காளி சமூகத்தைப் பற்றிக் கூறுகின்றன. சார் அத்பாய (நான்கு அத்தியாயங்கள்) வங்காளப் புரட்சியாளரின் கொள்கையைக் கண்டித்து, அவர்கள் மனோரதம் ஈடேறாதென்பதைக் காட்டுகிறது. இவை நான்கும் ஸமீபத்தில் எழுதப்பட்டவை.

3. ராஜா, ரக்த கரபி (செவ்வலரி), பால்குன் (பங்குனி), ப்ரக்ருதிர் ப்ரதிசோத (இயற்கையின் வஞ்சம்) இவை நான்கும் ரூபகநாடகங்கள். ராஜாவில், பகவானை அரசனாகவும், ஜீவாத்மாவை சஞ்சலசித்தமுடைய ராணியாகவும் காட்டியிருக்கிறார். ரக்தகரபியில் ஸாம்ராஜ்யவாதம் எனும் கொள்கையை ஒரு கொடுங்கோல்மன்னனாகவும், அடிமைத்தனத்தினால் பீடிக்கப்பட்ட தேசங்களை எலும்பெடுத்த கைதிகளாகவும், தேசப்ரேமையைத் தைரியமுள்ள ஒரு யுவகனாகவும் சித்திரித்துள்ளார். பால்குனில் கிழத்தனத்திற்கும் சாவுக்கும் பயப்படக்கூடாது என்பதைத் தெரிவிக்கிறார். ப்ரக்ருதிர் ப்ரதிசோத என்பதில் ஒரு மனிதன் உலகத்தை வெறுத்துத் துறவியான போதிலும் இயற்கை அவனைத் திரும்பவும் இப்பாழும் உலகிற்கே கொண்டு வந்து தள்ளுகிறது என்னும் தத்துவம் விளக்கப்பட்டிருக்கிறது. சித்ராங்கதா என்பது அர்ஜுனன் மணிபுராராஜனுடைய பெண் சித்ராங்கதையைக் காதலித்த கதை. இது உயர்தரமான நாடகமென்று கொண்டாடப்படுகிறது. விஸர்ஜ்ஜன (த்யாகம்), த்ரிபுராராஜ்யத்து ஜீவகாருண்யமுள்ள அரசன் கோவிந்தமாணிக்யன் ஆட்டுபலியை நிறுத்தியதைப் பற்றிய நாடகம்.

4. ப்ராசீன ஸாஹித்யத்தில் ராமாயணம், சாகுந்தலம், முதலிய பழைய நூல்களைப்பற்றிய சிறந்த விமர்சனக் கட்டுரைகள் இருக்கின்றன.

[1]கடிதம், [2]சிறுகதை, இவற்றை எழுதுவதிலும் திறமைவாய்ந்து விளங்குகிறார். இவராலேயே வங்க இலக்கியம் ஒரு புதிய யுகத்தை அடைந்ததெனலாம்.

## இதர நூலாசிரியர்கள்

இப்பொழுது சரத்சந்த்ர சட்டோபாத்யாயர் வங்காளத்தில் மனதை உருக்கக்கூடிய [3]நவீனங்களும் [4]சிறுகதைகளும் இயற்றுவதில் கீர்த்தி வாய்ந்து விளங்குகிறார்.

இவருக்கு அடுத்தபடி விபூதிபூஷண் பந்த்யோபாத்யாயர் ப்ரகாசிக்கிறார். இவர் எழுதிய பதேர் பாஞ்சாலி (வழிக்கூத்தன்) என்ற நவீனம் கிராமவாழ்க்கையை அழகாகச் சித்திரித்துக் காண்பிக்கிறது. இதே நாவல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தால் நோபெல் பரிசை அடைந்திருக்கும்.

காவிய உலகில் இன்று ஸ்ரீமதி உமாதேவியின் வாதாயன (சாளரம்), யதீந்த்ர நாத் ஸேன்குப்தாவின் மருமார்க்க(பொட்டல் வழி), ஜாவிமுத்தீன் என்பவரின் ராகாலி (இடைச்சி), பாலு சர (மணல்வெளி) போன்றவை ப்ரபலமாக இருக்கின்றன. கிரிஜா நாத் முகர்ஜி, மைத்ரேயி தேவி, ராதாராணி தேவி, யதீந்த்ர மோஹன் பாக்சி, முதலியவர்கள் இப்பொழுதுதான் முன்னணிக்கு வந்திருக்கும் கவிகள்.

ஹாஸ்யக்கதைகள் எழுதுவதில் 'பரசுராம்' என்று புனை பெயர் கொண்ட ராஜசேகர் வஸு[5] சிறந்து விளங்குகிறார். சிறு

---

1. ருஷியார் சிடி (ருஷியக் கடிதங்கள்) ஜாபானீ ஜாத்ரீ (ஜப்பான் யாத்ரிகன்) இவை, கவியாசர் ருஷியாவிலும் (ருஷியாவைப் பற்றியும்) ஜப்பானிலும் எழுதிய கடிதங்கள்.

2. சதுரங்க போன்ற சிறுகதைகள் மனோபாவம் நிறைந்து விளங்குபவை.

3. ஸ்ரீகாந்தனில் அவர் தம் அனுபவங்களையெல்லாம் கதாநாயகனின் வாய்மூலமாக வெளியிடுகிறார். தேனுபாவ்னு (கொடுக்கலும் வாங்கலும்) சமூகசம்பந்தமானது. பதேர் தாபி (வழியுரிமை) என்பது தீவ்ராஜீயக் கொள்கைகள் நிறைந்து இருந்ததால் சர்க்கார் அதைப் பறிமுதல் செய்துவிட்டனர். ஸ்வாமி (புருஷன்) என்பது புதுவிதமான நவீனம்.

4. மந்திர் (ஆலயம்) பதநிர்த்தேச (வழிகாட்டுதல்) சேஷ ப்ரச்ன (கடைசி கேள்வி), பிந்துர் சேலே (பிந்துவின் மகன்), இவை குடும்பச சச்சரவு, சமூகக்கோளாறுகள், இவற்றை வருணிக்கின்றன.

5. இவர் எழுதிய கதைகள் சிலவற்றை இப்பொழுது 'குமுதினி' என்ற பெண்மணி தமிழில் மொழிபெயர்த்து 'லம்பகர்ணன்' என்னும் பெயருள்ள புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்.

கதை எழுதுவதில் தேர்ச்சி பெற்றவர்கள், சைலஜானந்த முகோபாத்யாயர், ரவீந்த்ரநாத் மைத்ர முதலியோர். சிறுவர்களுக்கேற்ற லால காலோ (கறுப்பு எறும்பும் வெளுப்பு எறும்பும்) போன்ற குட்டிக்கதைகள் எழுதுவதில் கிரீந்த்ர சேகர் வஸு ஸமர்த்தர்.

பூபேந்த்ர நாத் பந்த்யோபாத்யாயரின் தேசேர் டாக் (தாய் நாட்டின் கூப்பாடு), யதீந்த்ர மோஹன் ஸிம்ஹரின் த்ருவதாரா, அனுரூபா தேவியின் மந்த்ரசக்தி போன்ற நாடகங்கள் சிறந்தவை.

சரித்திர நூல்களில் யதுநாத ஸர்க்காரின் சிவாஜியை முக்கியமானதாகக் கூறலாம். அரசியல் ஸம்பந்தமான நூல்களில் ஸுபாஷ் சந்த்ர வஸுவின் தருணேர் ஸ்வப்ன (இளமையின் கனவு), தாரகநாத பந்த்யோபாத்யாயரின் விச்வ ராஜநீதிர் கதா (உலக அரசியலின் விருத்தாந்தம்) இவற்றை உதாரணங்களாகக் கூறலாம்.

தர்சன, தர்மசாஸ்த்ர நூல்களில், ப்ரமத்நாத் முகோபாத்யாயரின் ஹிந்து ஷட்தர்சனம் என்பதையும், க்ஷிதிமோஹன் ஸேன் எழுதிய பாரதீய மத்யயுகே ஸாதனர்தாரா (பாரதவர்ஷத்தில் கி. பி. 10-ஆம் நூற்றுண்டிலிருந்து 15-ஆம் நூற்றுண்டுக்குள் கடவுளை வழிபட ஏற்பட்ட ஸாதன முறைகள்) என்பதையும் முக்கியமாகக் கொள்ளலாம்.

விஞ்ஞானத்துறையில், ஜகதீச்சந்த்ர வஸுவின் அவ்யக்த (வாயில்லா ஜீவன்), ஜகதாநந்த ராயின் நவவிஞ்ஞானம், இவ்விரண்டும் உயர்தரமானவை. ப்ரக்ருதி (இயற்கை), பத (வழி) என்ற இரு விஞ்ஞானப் பத்திரிகைகள் நல்ல முறையில் நடத்தப்பட்டு வருகின்றன.

பிரயாண நூல்களுள் ப்ரமோத குமார் சட்டோபாத்யாயரின் ஹிமாலயேர் பரபாரே கைலாஸ ஓ மானஸ ஸரோவர் (ஹிமாலயத்திற்கு அப்பால் கைலாஸமும் மானஸ ஸரோவரமும்) என்பது குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

மொத்தத்தில் எல்லாத் துறைகளிலும் வங்கபாஷை முன்னணியில் நிற்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். அதைப் போலவே தமிழ்மொழியையும் சிறந்து விளங்கச் செய்வது நம் ஒவ்வொருவரின் கடமையுமாகும்.*

---

*ஸ்ரீமான் ஸுநீதிகுமார் சட்டோபாத்யாயரின் '*Origin & Development of the Bengali Language*' என்ற புத்தகம் இக்கட்டுரையை எழுத எனக்கு மிகவும் உதவியாக இருந்தது.

# மழவைச் சிதம்பர பாரதியார்

ஜே. வேங்கடராம ஐயர்

(311-ஆம் பக்கத்தொடர்ச்சி)

மதுரைக்கும்மியில், மதுரையிலுள்ள பெண்கள் வைகையில் நீராடி ஆலயஞ் சென்று ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேச்வரர்களைத் தரிசித்து மீனாக்ஷியம்மன் மஹிமையைப் புகழ்ந்து கும்மியடிப்பதும், மீனாக்ஷியம்மன் சந்நிதி மஹிமையும், ஹாலாஸ்ய மகாத்மிய மஹிமையும், சுந்தரமூர்த்தி நாயனார் பெருமையும், கர்நாடக அரசரும் அமைச்சரும் செய்துள்ள திருப்பணிக்கட்டளைகளும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் முக்கியமாக:—

''நானிலங்காத்த திருமலைநாயக்க—ராஜாதிராஜன்தன்கட்டளையும்
யானைக்குமுன்வந்த தானப்பமுதலி—யார்செய்திடுந்திருக்கட்டளையும்''
''ஸ்தானிகர்க்கோங்குமரியாதைமன்னர்—தங்கட்கு முண்டோபிரச்யாதம்
மாநிலம் போற்றுமநுநீதிமன்னை—வாசற்கினியு மகிழ்ந்தேத்தும்''

என்று புதுமண்டபங் கட்டிய திருமலைராயனையும், அக்கிரகாரம் கட்டளை முதலியவைகளை ஸ்தாபித்த தானப்பமுதலியாரையும் மநுநீதிச்சோழனையும் யாரும் மறக்கமுடியாததுபோல் கவியும் ஸ்மரித்திருக்கிறார். பெண்கள் ஒருவர்க்கொருவரை யழைக்குமிடத்தில் இயற்கையில்போலவே ''வாருங்கோடி'' என்று வழங்கி வரும் வாசகத்தையே கையாண்டிருப்பது நன்றாயிருக்கிறது.

''பூவைமிதிக்கினுங்கொப்பளிக்கும்பதப்—பாவையேமால் ரதியைப்பழிக்கும்
எவைநிகர்விழிச்சுந்தரியந்தரி—யெட்டொருபெண்களும் வாருங்கோடி''
''பூவுலகைமதன் பூமயக்குமந்தப்—பூமதனைவிழியான்மயக்கும்
பாவனையுந்தெரிமாவனைய தங்கப்—பாகீரதி யெங்கே கோகிலமே?''
''வந்தவினங்களைச்சேருங்கோடியின்னும்—வாராதமாதரைப் பாருங்கோடி
ஸுந்தரஞ் சேர்கயற் கண்ணிவனஜத்—துணைச்சரணைத் துணைகோருங்
கோடி''

என்ற இக்கும்மிகளின் கற்பனைகள் மனத்தைக் கவர்ந்து நிற்கின்றன. மாதர்கள் மலர்போல் குவிந்தும் வலைபோல் விரிந்தும் கைகொட்டியாடி நடிப்பதை அப்படியே வர்ணித்திருக்கிறார்;—

"ஸுந்தராமா தரினங்கூடிக்குயி—லுந்தனியோடவிசைபாடி
வந்துபுகழ்ந்து மீன்வீசும்—வலைபோல் விரிந்து திரும்பவும்
சிந்தைகனிந்து அந்திமரை—செப்பக்குவிந்து நடம்புரி
செம்பொற்சர ணின்ப(து)மவள—னஞ்சத்தமெனுஞ்சிற்பணி
சிலம்பச்சுற்றிநடித்தாரே குழை—யிலங்கக்கும்மியடித்தாரே."

இச் சந்தக் கும்மிக்கு வேம்பத்தூர்ப் பிச்சுவையரவர்கள்,

"பதம்பாவினேர்க்கருளும் பக்தரையே பாடுஞ்
சிதம்பர பாரதியாஞ் செல்வ—னிதம்பெறவே
அண்டர்புகழ் மீனுக்ஷி யம்மையின்மேற் பாடினன்சீர்
கொண்டபல சந்தக்கும் மி"

என்று சாற்றுகவி பாடியுள்ளார்.

## II

## பேரின்பக் கீர்த்தனங்கள்

"ஞானனந்தப் பேரின்பக் கீர்த்தனம்" என்ற பெயருடன் இவ்வாசிரியர் இயற்றியுள்ள கீர்த்தனங்கள் இவர் புதல்வரால் 1927ஆ அச்சிடப்பட்டிருக்கின்றன. அம்பிகை, சிவன், திருமால், முருகன் இந்தத் தெய்வங்களின் ஸ்தோத்திரமாக இனியமொழிகளில் இக்கீர்த்தனங்கள் நூதனமான வர்ணமெட்டுக்களில் தாளக் கட்டுடன் பொருட்சுவை பொலிந்து விளங்கும்படி பாடப் பட்டிருக்கின்றன. இக்கீர்த்தனைகள் வாயிலாய்ப் பெருவாழ்வும், பேரின்பமும், ஞானமுமே மானிடரின் உயர்நோக்கமென அறிகிறேம். ஈசனை வழிபடுதல் இவ்வுலகவின்பங்களை யடைவதற் கன்று. உலகவின்பங்களைத் துறந்து பிறவாநெறி யெய்துதலே மனிதவாழ்க்கையின் லக்ஷியம். இதைக் கடைப்பிடித்த இக்கவி தன் கொள்கைகளையே இக்கீர்த்தனைகளில் அடக்கியுள்ளார். இவர் வாழ் நாளில் பற்பல க்ஷேத்திரங்கள் சென்று ஆங்காங்குள்ள ஆலயங்களில் தெய்வங்களை வணங்கிப் பக்தியில் மூழ்கித் தம்மனத்தினில் ஆனந்தம் பொங்கிவருவது போலவே இக்கீர்த்தனங்களைப் பாடியிருக்கிறார். இவர் ஜனன பூமியாகிய மழவை சிவகங்கை சம்ஸ்தானத்தி லுள்ளது. இச்சம்ஸ்தானத்திலுள்ள குன்றக்குடி, திருவொற்றியூர் முதலிய க்ஷேத்திரங்களிலும், மதுரை, பஞ்சனதம், மாயவரம், சிதம்பரம், காளத்தி முதலிய பாண்டியசோழ தேசங்களிலுள்ள க்ஷேத்திரங்களிலும் இவர் யாத்திரை செய்திருக்கிறதாய் அறிகிறேம். குன்றக்குடிக் குமரன் பேரிலும், சுவாமிமலைச் சுவாமிநாதன் பேரிலும் பாடியிருக்கும் இரண்டு பிலஹரி ஆதிதாளக்கீர்த்தனங்களும், இரண்டு நூதனமான வர்ணமெட்டுக்களுடனும் தாளக்கட்டுடனும் சொற்பொருட் சுவையும் பக்திரஸமுங் கலந்த பனுவல்களென

லாம். இவைமாதிரி வேறு கீர்த்தனங்கள் காணப்படவில்லை. பெரு வாழ்க்கையே மானிடர் பெற்ற பேறு என்று கவி இக்கீர்த்தனங்களின் மூலம் வெளியிட்டிருக்கிறார். ஆண்டவன் பாதமலரின் பூசை நேசமே நிலையெனக் கோரிய வாழ்வை விரும்பியிருக்கிறார். சுவாமிநாதன் பேரிலுள்ள பிலஹரி ஆதிதாளக் கீர்த்தனம்:

பல்லவி

*மா-மயூர—மீதிலேறிவா—என்னை ரக்ஷிக்க* (மா)

அநுபல்லவி

*காமிதார்த்த பல—தாயகஸுரவர—ஸாமிநாதமரகதசயிலசதிருச* (மா)

2-ஆம் சரணம்

*பாசபவமெனு—மோகவலைதனையே—கடந்துனது*
*பாதமலரிணை—யே துதிசெய் தனையே—பணியுமன*
*தாசையுமகிழ்புரி—பூஜையுந்தினந் தின—மேசெயும் படியருள்*
*நேசமுடனுதவ* (மா)

இக்கீர்த்தனத்திற்கு இன்னுமிரண்டு சரணங்கள் உண்டு. 2-ஆவது சரணமே இக்கீர்த்தனத்தின் உட்கருத்து. நிராசையே தன் ஆசையாகவும் கொண்டு பவமொழித்துப் பாதமலர் பணிந்து பூசித்துப் பாடித் துதிப்பதே தம்வாழ்க்கைப்பயன் என்பது இச்சரணத்தின் கருத்து. மற்றொரு பிலஹரி ஆதிதாளக் கீர்த்தனையில்,

பல்லவி

*மால் மருகனையநுதினம் நினை, மனமே,*
*தினமே, கனமே யுதவிய* (மால்)

அநுபல்லவி

*வேலையணிகர பாலஸுகுணவி*
*சாலமிருதய சீல கோலாகல* (மால்)

3-ஆவது சரணம்

*ஸோமமுகவபி ராமஸுகதம்ப தாமமணிபுய நேமசிதம்பர*
*நாமகவிக்கருள் பூமனடியவர் தாமகிழ்வுபெற—க்ஷேமமுதவிய* (மால்)

இக்கீர்த்தனம் வடமொழியுந் தென்மொழியு மிணைந்து இனிய நடையிலமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. இக்கவியின் பாட்டுக்களில் இம்மாதிரி வடமொழியும் தென்மொழியும் இன்னிசையுடன் பொருட்சுவையளித்து நிற்பது ஒரு விசேஷம்.

சிதம்பரத்தில் நடராஜமூர்த்தியைத் தரிசித்தபோது பைரவி ரூபகத்தில் பாடியிருக்கும் "சித்ஸபேசன்" என்ற கீர்த்தனம்

முத்துஸ்வாமி தீக்ஷிதரவர்களின் "சிந்தயமாகந்த மூலகந்தம்" என்ற பைரவிக் கீர்த்தனத்தின் சாயையையொட்டிப் பாடப்பட்டிருக்கிறது. எனினும் இக்கீர்த்தனத்தில் நிதானமாய் முடுகுகளமைக்கப் பட்டு, தாளக்கட்டாய்ச் சொற்கள் இணைக்கப்பட்டிருப்பது ஒரு தனி நடையென்னலாம். முத்துஸ்வாமி தீக்ஷிதரவர்களின் கீர்த்தனம் போல், ஒலிபொருந்திப் பொருள் நிறைந்து இசைமிகுந்து பாடுவோர்க்கு உற்சாகமளிப்பதுடன் நடராஜரின் நர்த்தனக் காட்சியைப் பாடுவோன் அகக்கண்ணின்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது.

பைரவி—ரூபகம்.

பல்லவி

சித்ஸபேசன்—தரிசனங்கிடைத்ததுவே—அன்னைவயிற்றினிற்பிறந்
தெய்த்துழலுமார்க்—கத்தினையடைத்ததுவே—தில்லைமன்றினில்
நடம்புரிந்திடும்......... (சித்ஸ)

அனுபல்லவி

சுத்தஹிருதயமுனிவர்களிருபாலும்—மால்
மத்தளமயன்—கைத்தாளத்துடன் மேலும்—சூழத்
தத் நவநாததும்புரு—ஒத்திசையாழிசைதம்புரு
வைத்ததிகீதமுழங்கிட—மெத்தவுநிருத்தம் விளங்கிடச்...... (சித்ஸ)

முதல் சரணம்

கண்டவர்கள்தம்—மிருவினைகளும் பறக்கப்—பிரமானந்தத்துடன்
அண்டர்கள் பொழி—நறுமலர்மழைசிறக்கக்—களி
கொண்டமரர்கள் துதித்திடுமொலிநிறக்க—வழித்
தொண்டர்கள் பரவசத்தொடுதமை—மறக்க—மெய்யில்
மண்டியபுளகம் செழிக்கக்—கொண்டுயர்பாஷ்பம் கொழிக்க
வந்தில்லவர் துதிவிரியச்—சந்தியாநடந்தெரியச்...... (சித்ஸ)

திருவொற்றியூர் பாகம்பிரியாள் பேரில் இயற்றியிருக்கும் நாட்டைக்குறிஞ்சி, திரிபுடைதாளக்கீர்த்தனம் ஒருமையுள்ள வர்ண மெட்டில் அமைந்திருக்கிறது. இக்கீர்த்தனத்தில் மனத்தூய்மையும் மலரடிப்பற்றும் இன்றியமையாதவை யென உரைத்திருக்கிறார். முதல் சரணத்தில் "தாபதர்கள் நாடுமுனது சரணேபணிய" என்றது த்யாகராஜர் கீர்த்தனைகளில் "தாரினி தெலுஸுகொண்டி" என்ற சுத்தசாவேரிக் கீர்த்தனத்தின் மூன்றுவது சரணத்தில் "ஆஜன்மமுபெத்தலு தமமதிலோ நீஜபமே முக்திமார்க்கம்" அதாவது "பெரியோர் தம்வாழ்க்கை முழுவதும் நின் ஜபத்திற் செலுத்துவதே முக்திமார்க்கம்" என்ற அபிப்பிராயத்தையொத்திருக்கிறது.

நாட்டைக்குறிஞ்சி—திரிபுடை.

பல்லவி

கருணைபுரிந்துரக்ஷி—யம்மா—இனிதான (கருணை)

அனுபல்லவி

தருணரவிகிரண—ஸதிருசஸுபூஷணங்கி
சக்தமேவுபுற்றீசர்க்கவி—பக்தநாயிகே வரதாயிகே நின்— (கருணை)

முதல் சரணம்

தாபதர்கள்நாடுமுனதுசர—ணேபணியவேநினதருள்புரி
தீபவொளிநேர்மணியணிதாயே—அன்பின்தொண்டின்சங்கம்தங்கு
சோபனையநீ பதவிணையருள்—சித்தசுத்தர்கட்கு நித்தமுதவிசெய்
(கருணை)

ஆவுடையார்கோயில் யோகநாயகியம்பாள் ஸ்தோத்திரமாக, காப்பி ராக ஆதிதாளத்திலுள்ள "அம்பா கிருபை" என்ற கீர்த்தனம் நூதன வர்ணமெட்டிலுள்ளது. இக்கீர்த்தனம் பாட்டுக் கச்சேரிகளில் சிலரால் இப்போது பாடப்பட்டு வருகிறது.

காப்பி—ஆதி

பல்லவி

அம்பாகிருபை—தந்துரக்ஷியம்மா—யோகநாயிகேஜக—தம்பா (அம்பா)

அனுபல்லவி

அன்பாய்த் திருப்—பெருந்துறைதனில்வளர்
அலங்கிருதம்—புரிந்திடும்—படிதிகழ் (அம்பா)

3-ஆவது சரணம்

வாரிஜதள—சதிருசநயனவிஸ்தாரீ—மலையத்வஜ பாண்டியகு
மாரிசிதம்—பாந்தமிழ்க்கருளுப—காரியாத்மநாத
பாரிதயாபரி......... (அம்பா)

இச்சரணத்திலும் வடமொழியும் தென்மொழியும் சேர்ந்திசைத்தொலிப்பது நன்றாயிருக்கிறது. மேலும் தாம் பாடுந் தமிழ்க்குத் திருவினருளே துணையெனச்சொல்லியிருப்பதும் இவர் பக்தியையும் தமிழினிடங்கொண்ட அன்பையும் காட்டுகிறது. இதே போல் செஞ்சுருட்டி ஆதிதாளக் கீர்த்தனத்திலும் 3-ஆவது சரணத்தில்,

"வாதபுரீசருக்கு—ஆதரவாகியமூலமே—ஆத்ம
நாதருடதனுவில்—பாதியெனப்பொருந்தும் கோலமே—தமிழ்
ஓதுஞ் சிதம்பரஞ்சொல்—மீது மனமகிழும்
உனையே—தினம்வந்—தனையே—செயநவ— மணிகொஞ்சிய"

என்றதிலும் தமிழமுதின் சுவையைக் காட்டியிருக்கிறார். அருணசலக் கவிராயர், கவிகுஞ்சரபாரதிகள் முதலியோர் தம் கீர்த்தனைப் பாடல்களில் பழமொழிகளையமைத்துப் பாடியிருப்பது

போல் இக்கவியும் பழமொழிகளையும் உலகவழக்கங்களையும் அமைத்துக் கீர்த்தனங்களைச் சிறப்பித்துள்ளார். "கதியுன்ற னிருதாளம்மா" என்ற தர்பார் சாப்புக் கீர்த்தனத்தின் முதல் சரணத்தில், "அடித்தாலும் தாய்காலைப்பிடித்துப் பிடித்துச் சுற்றி —அழுவது பிள்ளை முறையே" என்றும், 2-ஆவது சரணத்தில் "மடுவில் முட்டிவருத்தும் கன்றுக்குப் பால் சுரந்து—வழங்கும் தேனுவைப்போலே" என்றும் சொல்லியிருக்கிறார். மேற்கண்ட உலக நீதிகள் கீர்த்தனத்தின் துறைக்குப் பொருத்தமாகவுமிருக்கின்றன.

பியாகடை திரிபுடையில் "கருணை தந்தெனை" என்ற பஞ்சநதம் தர்மஸம்வர்த்தனியின் ஸ்தோத்திரம் இக் கீர்த்தனமஞ்சரியிலுள்ள முதன்மையான கீர்த்தனமெனலாம். இதிலும் தமிழின் சுவையை யறிந்து தம் அனுபவத்தைப் பாடியிருக்கிறார். இக்கீர்த்தனத்தையும் காரைக்குடி வீணைசகோதரர்கள் கானம் செய்யக் கேட்டிருக்கிறேன்.

பியாகடை—திரிபுடை.

பல்லவி

கருணை தந்தெனையாளம்மா—கமலாஸனி ஸுந்தரி
சந்த்ரவதனி பொழி.. (கருணை)

அனுபல்லவி

தருணம் தருணம்—தர்ம—ஸம்வர்த்தனி, ஸுகுணாகரி ஜகத்
ஸம்ரக்ஷகி—ஜநகீஸு—நயனீயுன்.. (கருணை)

சரணம்

1. அன்பர்க்கருள்கடாக்ஷி—அகிலபுவன சாக்ஷி
இன்பமறையின்ஸுக்ஷி—யென்றனிருகண்காட்சி
சம்பாரிபு—ரிபுமோகினிஜக—தம்பமதூ— சுகநாதினிஜல
ஜம்பொருவிழியருள்வாகினியதி — ஜகம்புகழ்ந் — திடுந்தரந்தரிமிகு...
(கருணை)

2. சங்கரிமஹிஷாஸுர—சங்கரிமுகில்போல்நிறச்
சங்கரிஸோதரிஸாது—சங்கரிடமுபகாரி
துங்ககனகயுகபூதரிமது—ரங்குலவியகுழல்மாதிரிமகிழ்
பொங்கியடியர் தமையாதரிநூ—புரம்பதஞ்சிலம்பிடும்படிவந்து (கருணை)

3. பைந்தமிழிசைச்சிதம்—பாந்தமிழ்க்கருள்சிதம்—
தந்து மிகவுசிதம்—தனில்ரக்ஷிப்பாய் சந்ததம்
ஐந்தருநிகர்தருபாணிகள்பெறு—மைந்தியான்மகிழ்ராணிவளரும்
சிந்தையுலவு ஜயநாரணிசுப—மிகுந்திடும்ஜயந்தரும்படிபெருகு (கருணை)

இதைத் தவிர, புதுக்கோட்டை பிரகதம்பாள் பேரிலும் ராயபுரத்திலும் சூரைக்குடியிலும் கோயில் கொண்டிருக்கும் மீனாக்ஷியம்மன்பேரிலும் "பாகிபாகி மாம் பிருகந்நாயிகே" என்ற தேவகாந்தாரிக் கீர்த்தனமும் "பூமேல் வளருமன்னையே" என்ற ஆனந்தபைரவிக்

கீர்த்தனமும் பாடியிருக்கிறார். "பாஹி பாஹிமாம்" என்றது த்யாகராஜஸ்வாமி "வினராத நா மனவி" என்ற கீர்த்தனத்தின் பல்லவி போலிருக்கிறது. ஆனால் இதன் சரணம் வேறுநடையில் அழகாய் அமைந்திருக்கிறது. "பூமேல் வளரு மன்னையே" என்றது சியாமா சாஸ்திரிகளின் "ஹிமாசலதனய ப்ரோசுடகிதி" யென்ற ஆனந்தபைரவிக் கீர்த்தனைபோலவே யமைக்கப்பட்டிருக்கிறது. புன்னாகவராளி ரூபகத்தால் "மனமேயென்றன்" என்ற ஆத்ம ஸம்போதனக் கீர்த்தனை காஞ்சீபுரம் ஏகம்பவாணரைப் பாடிய துதியாயிருக்கிறது. இக்கீர்த்தனத்தின் முதல் சரணத்தில் "ஒட்டிலேயகப் பட்டு வாடிய—சிட்டுநேர் மயங்காதே" என்ற பிரயோகத்தில் உலகவியல்பை யெடுத்துக்காட்டியிருக்கிறார். இதில் "ஒட்டு" என்பதற்கு சிட்டுக்குருவி பிடிப்பதற்கு ஆலம் பாலைத் தடவி அதில் சில தானியத்தைத் தூவிவைக்கும் பொறியென்று பொருள். சிட்டுக்குருவி தானியத்தைப் பொறுக்க அதில் உட்கார்ந்ததும் ஆலம்பாலின் பிசின் அதன் காலிலொட்டிக் கிளம்பவிடாது பிடித்துக்கொள்ளும். வேடன் அப்போது அதைப் பிடித்துக்கொள்வான். இதைப்போல் உலகவின்பம் நுகரப் பவத்தைத்தீண்டினால் ஜீவனை உலகம் பற்றி யிழுத்துக்கொண்டு மேல்நோக்கிச் செல்லவிடாது என்ற தத்துவத்தை விளக்கியிருக்கிறார்.

"ஒட்டிலேயகப்—பட்டுவாடிய—சிட்டுநேர்மயங்காதே—
பொட்டிலேயுடைக்—கட்டிலேகட்டு—மெட்டிலேதயங்காதே
பட்டிமாட்டினைப்போலேசுத்தி—வெட்டியாயெருக்காலே—விசைப்
பம்பரம்போ—லச்சுழலாமலே—கம்பமூர்த்தியை நம்புவாய் நல்ல
—மனமே"

என்ற சரணம் இக்கவியின் கருத்தை வற்புறுத்துகிறது. இக்கீர்த்தனத்தில் இவர் நாம முத்திரை காணப்படவில்லை யெனினும் இவருடைய மற்றக் கீர்த்தனங்களிற்போலவே இவர் மனத்துறவு தெரிகிறது. "பட்டிமாட்டினைப்போலவே" என்ற பிரயோகம் "எடுலப் ரோதுவே" என்ற த்யாகராஜர் சக்ரவாகக் கீர்த்தனையில் "பரடி கொட்டுரீதி" (பட்டிமாட்டைப்போல) என்றது போலிருக்கிறது. இந்தக் கீர்த்தனங்களை இவ்வாசிரியரின் புதல்வரிடமும், இவர் பெண் வயிற்றுப்பேரன் ஸங்கீதவித்வான் சுப்பராமையரவர்களிடமும் கேட்டு ஆனந்தித்திருக்கிறேன். செவிக்கின்பத்துடன் மனதைப் பரிசுத்தப்படுத்தும் தன்மையுடைய இக்கீர்த்தனங்கள் யாவராலும் பாடத்தகுந்தவை. ராகஞானமும், தாளவியல்பும், உயர்நோக்கமும் உண்டாக்கவல்ல இக்கீர்த்தனங்கள் தமிழ்ப் பாஷைக்கே பெருமை தருவன என்பது மிகையாகாது.

# சரித்திரம்

## பாண்டியரது முதல் ஏகாதிபத்திய காலம்

எஸ். ஆர். பாலசுப்பிரமணிய ஐயர், எம். ஏ., எல். டி.

---

சங்க காலத்திலிருந்து பாண்டிய அரசர்கள் முதலில் ஏகாதிபத்தியம் அடைந்த காலம் வரையிலுள்ள ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகளைப்பற்றி யாதொரு விவரமும் தெரியவில்லை. கி. பி. ஏழாவதுமுதல் பத்தாவது நூற்றாண்டுவரையில் இவ்வேகாதிபத்தியம் நீடித்திருக்கலாம்.

பாண்டியரது முதல் ஏகாதிபத்திய காலத்து அரசர்களைப் பற்றி உள்ள சாஸனங்கள் பின்வருமாறு:—

1. பராந்தக நெடுஞ்சடையனது வேள்விக்குடிச்சாஸனம் [ஏறக்குறைய 768 கி. பி.]
2. சின்னமனூர்ச் சிறிய சாஸனம்.
3. சின்னமனூர்ப் பெரிய சாஸனம்.
4. ஜடிலவர்மனது சென்னை 'மியூஸியம்' பட்டயங்கள்.
5. (i) மாறன் சடையனது ஆனைமலைக் கல்வெட்டு (1906 ன் 453)

   (ii) பராந்தகனது ஆனைமலைக் கல்வெட்டு (1906ன் 454); இது கலியுகம் 3871-ல் (கி. பி. 770) ஏற்பட்டது.
6. வரகுணனது ஐவர்மலைக் கல்வெட்டு. இது சக வருஷம் (அல்லது சகரயாண்டு—*Saka Era*) 792 (கி. பி. 870)-ல் ஏற்பட்டது. இது வரகுணனது 8-ஆம் ஆண்டுச் சாஸனம்.

இப்பாண்டிய அரசர்களது வம்சாவளியை முதலில் தீர்மானிக்க வேண்டியது அவசியம். இதனடியிற்கண்ட வம்சாவளியிலிருந்து அரசர்களின் பாரம்பரியமும் ஆளுகைக்கால அளவும் தெரியவரும்.

| சென்னை மியூஸியம் பட்டயங்கள். | வேள்விக்குடிச் சாஸனம் | சின்னமனூர்ச் சிறியசாஸனம் | சின்னமனூர்ப் பெரிய சாஸனம். |
| --- | --- | --- | --- |
| | (1) கடுங்கோன் (கி.பி.590—620) | | |
| | (2) மாறவர்மன் அவனி சூளாமணி (ஏறக்குறைய, கி.பி. 620-645) | | |
| | (3) சேந்தன் | (1) ஜயந்தவர்மன் | |
| | (4) அரிகேசரி மாறவர்மன் (சுமார் 670-710 கி. பி.) | (2) அரிகேசரி மாறவர்மன் | (I) அரிகேசரி பராங்குசன் |
| | (5) கோச்சடையன் (சுமார்710-740 கி.பி.) | | (II) ஜடிலன் |
| 1. மாறவர்மன் பல்லவபஞ்சனன் | (6) மாறவர்மன் இராஜசிம்மன் (சுமார் 740-765 கி.பி.) | | (III) இராஜஸிம்மன் I |
| 2. ஜடிலவர்மன் நெடுஞ்சடையன் | (7) ஜடிலபராந்தக நெடுஞ்சடையன் (சுமார் 765-815 கி.பி.) | | (IV) வரகுண மஹாராஜா |
| | | | (8) V. ஸ்ரீமாற ஸ்ரீவல்லபர் (சுமார் 815-862 கி.பி.) |
| | | (9) VI. வரகுண வர்மன் (சுமார் 862-880 கி. பி.) | (10) VII. பராந்தக வீரநாராயணன் (சுமார் 880-900 கி. பி.) |
| | | | (11) VIII. மாறவர்மன் இராஜசிம்மன் II (சுமார் 900-920 கி. பி.) |

வேள்விக்குடிச் சாஸனம் தமிழ்ப் பாகத்தில் 7 தலைமுறை அரசர்களையும், ஸம்ஸ்கிருத பாகத்தில் இறுதி நான்கு அரசர்களையும்

பற்றிக் கூறப்பட்டிருக்கின்றது. ஸம்ஸ்கிருத பாகத்திற் கூறப்பட்ட அரசர்களுட் கடைசியில் உள்ள பராந்தகனென்னும் ஜடிலனும், தமிழ்ப்பாகத்திற் கடைசி அரசனுன நெடுஞ்சடையன் என்பவனும் ஒருவனே என்று தோற்றுகிறது. மேலும் வேள்விக்குடிச் சாஸனத்துப் பராந்தக நெடுஞ்சடையனும், சின்னமனூர்ப் பெரிய சாஸனத்து ஸம்ஸ்கிருத பாகத்தில் சொல்லப்பட்டிருக்கும் இரண்டாம் அரசனுன ஜடிலனும் ஒருவனே என்பது அநேகர் அபிப்பிராயம். ஆனுல் அவ்வாறு கொள்வதால் இரண்டு தலைமுறை கூட அடங்கிய பாண்டிய வம்சாவளி கிடைக்கிறது அதற்கு அவசியமில்லை. அவ்வாறன்றி வேள்விக்குடிச் சாஸனத்துப் பராந்தக நெடுஞ்சடையன் சின்னமனூர்ப் பெரிய சாஸனத்து வரகுண மஹாராஜனே யென்று கொண்டால் முற்கூறிய ஆக்ஷேபம் விலகும். மேலும் வேள்விக்குடிச்சாஸனம் பராந்தகனுக்கும் நெடுஞ்சடையனுக்கும் உள்ள ஒற்றுமையைக் காட்டுகிறது; ஆனைமலைக் கல்வெட்டு பராந்தகனையும் மாறஞ் சடையனையும் (மாறன் மகன் சடையன்) சம்பந்தப்படுத்துகிறது. மாறஞ்சடையனுடைய திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டுக்கள் (1904ஞ 413, 414) அவனைப் பாண்டியாதிராஜ வரகுணன் என்று கூறுகின்றன.

பராந்தக நெடுஞ்சடையனும் வரகுணனும் ஒருவனே என்று கொள்வதால், இராஜசிம்மன் என்றவன் இருமுறை வருவதை நிவர்த்திக்கலாம். அன்றியும் வரகுண வர்மனும், பராந்தக வீரநாராயணனும் பராந்தகன் என்ற வரகுண மஹாராஜாவின் பேரர்களாக ஆகிறுர்கள். இதுவே மிகவும் பொருத்தமானது. வரகுண மஹாராஜாவினது அம்பாசமுத்திரக் கல்வெட்டில் சொல்லப்பட்டிருக்கும் படைபெழுச்சி, வேள்விக்குடிச் சாஸனத்திற்கண்ட பராந்தக நெடுஞ்செழியனுக்கே பொருத்தமுள்ளதாகத் தோற்றுகிறது. ஏனென்ருல் அப் பராந்தகன் பட்டத்துக்கு வந்த கொஞ்சகாலத்திற்குள் காவேரி நதிக்கரையில் அநேக சண்டைகள் செய்து வெற்றியடைந்ததாக வேள்விக்குடிச் சாஸனம் கூறுகிறது. வேள்விக்குடிச் சாஸனத்து *'ஆஞ்ஞப்தி' (=சாஸனத்தை ஆக்கியவன்)யும், ஆனைமலைக் கோயிலைச் செய்வித்தவனும் ஒருவனுகவே இருக்கவேண்டுமென்று கருத இடமுண்டாகிறது. ஆகையால் இவ்விரண்டு சாஸனங்களும் ஒரே அரசனுக்கு உரியனவாக இருத்தல் வேண்டும். திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டுக்கள் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனின் மூத்த மகனுன வரகுணவர்மனின் சாஸ

*இது தமிழில் ஆணத்தியென வழங்கும்.

னங்கள் என்பது ஸ்ரீ வெங்கையா அவர்களது அபிப்பிராயம். ஆனால் அவர் அவ்வபிப்பிராயத்துக்குக் காரணம் ஒன்றும் கூற வில்லை (தென்னிந்திய சிலாசாஸன அறிக்கை, பக்கம் 53ல் 21-ஆவது பாரா—1907-ஆம் வருஷத்தது). இந்த வம்சாவளிக்கு ஓர் ஆக்ஷேபமுண்டு. அதைப்பற்றிப் பின்னால் கவனிப்போம்.

சின்னமனூர்ச் சிறிய சாஸனத்தை அளித்தோன் பராந்தக நெடுஞ்சடையனாகவாவது அல்லது அவனுக்குப் பிற்பட்ட வேறு ஓர் அரசனாகவாவது இருக்கலாம் என்பது ஸ்ரீமான் கிருஷ்ண சாஸ்திரிகள் துணிபு. ஆனால் வம்சாவளியிற் காட்டியபடி இச் சாஸனத்து அரிகேசரி மாறவர்மனும் வேள்விக்குடிச் சாஸனத்து நான்காம் அரசனான அரிகேசரி மாறவர்மனும் ஒருவனாக இருக்க லாம் என்பது வெளியாகின்றது.

சென்னை மியூஸியம் பட்டயத்து ஜடிலவர்மனும் வேள்விக் குடிச்சாஸனத்துப் பராந்தக நெடுஞ்செழியனும் ஒருவனே என்ப தற்கு ஆதாரமான காரணங்கள் பின்வருமாறு:—

(i) பண்டிதவத்ஸலன், வீரபுரோகன், விக்கிரமபாரகன், பராந்தகன், நெடுஞ்சடையன், ஸ்ரீவரன் என்ற பல பெயர்கள் இரண்டு சாஸனங்களிலும் இவ்வரசனுக்குப் பொதுவாக உள்ளன. வெவ்வேறு அரசர்களுக்கு இப்பெயர்கள் பொதுவாயிருந் திருக்கும் என்று கொள்ள இடமில்லை.

(ii) வேள்விக்குடிச் சாஸனத்தில் 'கண்டகநிஷ்டூரன்' என்றுள்ள விருதுக்கு ஏற்பச் சென்னை மியூஸியம் சாஸனத்தில் "கண்டக சோதனை தான் செய்து" என்றிருக்கிறது.

(iii) வேள்விக்குடிச் சாஸனப்படி நிலக்கொடையை யடைந் தவர்களில் மூர்த்தி எயினன் ஒருவன். சென்னை மியூஸியம் சாஸ னத்து ஆஞ்ஞப்தி, தீரதரன் மூர்த்தி எயினன் என்பவன். அவன் அரசனுடைய மஹாசாமந்தன் என்று சொல்லப்படுகிறான். இவர் கள் இருவரும் ஒருவராக இருக்கலாமென்றும், இவன் ஆனைமலைக் கல்வெட்டுப்படி மாறன்காரியின் சகோதரன் என்றும் ஊகிக்கலாம். மாறன்காரி, வேள்விக்குடிச் சாஸனத்து ஆணத்தி (*Executor*) யாகவும் ஆனைமலைக் குகைக் கோயிலைச் (*Rockcut-cave temple*) செய்விக்கும் காலத்து ராஜாவின் உத்தரமந்திரியாக வும் இருந்தவன்.

(iv) வேள்விக்குடிச் சாஸனத்துப்படி பல்லவர்கள்பால் அடைந்த வெற்றி, பராந்தகனின் தந்தையான மாறன் (அல்லது ஸம்ஸ்கிருத பாகப்படி மாறவர்மன் இராஜசிம்மன்) என்பவன் அடைந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மியூஸியம் சாஸ

னத்தில் ஜடிலவர்மனின் தந்தையான மாறவர்மனுக்குப் பல்லவ பஞ்சனன் என்ற விருது கொடுக்கப்பட்டிருக்கிறது. இக்காரணங்களைக்கொண்டு இவ்விரண்டு சாஸனங்களும் ஒரே அரசன் காலத்து ஏற்பட்டவையென்று சொல்லத்துணியலாம்.

இவ்வரசர்களின் கால நிர்ணயத்தைக் கவனிப்போம்: ஆனைமலைக் கல்வெட்டு கலியுகம் 3871-ல் வெட்டப்பட்டது. இது கி. பி. 770-க்குச் சமம். ஆகவே இது (7) பராந்தகனான வரகுண மஹாராஜாவின் காலத்தது என்ற நிச்சயமான காலக்குறிப்பு கிடைக்கிறது. அவ்வாறே ஐவர்மலைக் கல்வெட்டு (1905-ஆம் வருஷத்தின் 705) சகவருஷம் 792 (870 கி. பி.) ஆனது வரகுணனுக்கு எட்டாம் ஆண்டு என்ற மற்றொரு நிச்சயமான காலக்குறிப்பு கிடைக்கிறது. இவன் நெடுஞ்சடையனான வரகுணனின் பேரனான வரகுணவர்மனாக (9) இருக்கவேண்டும். முன் சொல்லியபடி இந்த வம்சாவளியமைப்பிற்குரிய ஆக்ஷேபத்தைக் கவனிப்போம். சுமார் 770 கி. பி. யில் ஆனைமலைக் கல்வெட்டு இயற்றின நெடுஞ்சடையனுக்கும், 862 கி. பி. யில் பட்டத்திற்கு வந்த வரகுணவர்மனுக்கும் நடுவில் ஓர் அரசனிருக்கிறான். அவன் நூறு வருஷம் அரசாட்சி செய்திருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. இது முடியாத காரியம் என்பது ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயர் அபிப்பிராயம். ஆனால் இது அவ்வளவு தப்பென்று சொல்வதற்கில்லை. இவ்விரண்டு சம்பவங்களுக்குமிடையே 92 வருஷங்களே இருக்கின்றன. முதலாவது வரகுணன் பட்டத்திற்கு வந்த சிலகாலத்திற்குள் ஆனைமலைச் சாஸனம் ஏற்பட்டிருக்கவேண்டும். வரகுணனும் ஸ்ரீமாறஸ்ரீவல்லபனும் நீண்டகால ஆட்சிசெய்தவர்களாயிருக்கலாம். இதேமாதிரி பல்லவசரித்திரத்தில் நந்திவர்மன் பல்லவமல்லனுக்கும் தெள்ளாறெறிந்த நந்திக்கும் இடையில் 113 வருஷங்கள் இருந்திருக்கவேண்டுமென்றும், இவ்விருவர்க்கு மிடையில் தந்திவர்மன் என்ற ஒரே அரசன்தான் இருந்தான் என்றும் தூப்பிராயில் துரை எழுதியிருக்கிறார்.*

வம்சாவளியில் கடைசியாகச் சொல்லப்பட்டிருக்கும் இராஜசிம்மன் (II) என்பவன் கி. பி. 10-வது நூற்றாண்டின் முற்பகுதியில் பராந்தக சோழனால் தோல்வியுற்ற இராஜசிம்ம பாண்டியனாக இருக்கவேண்டும். இது மற்ற விஷயங்களுக்குப் பொருத்தமாகவிருக்கிறது. ஆகவே 7-ஆவது முதல் 10-ஆவது நூற்றாண்டு ஆரம்பம் வரை மூன்று நூற்றாண்டுகளாக முற்கூறிய பாண்டிய அரசர்கள் உன்னத பதவியை அடைந்திருந்தனர். அக்காலத்

*The Pallavas*, பக்கம் 66.

தைப் பாண்டியர்களின் முதலாவது ஏகாதிபத்திய காலம் என்று கூறலாம். களப்பிரர்கள் வசமிருந்து மீட்டுப் பாண்டியராஜ்யத்தைக் கைப்பற்றிய கடுங்கோன் காலமுதல் பாண்டியர்களுக்கும் பல்லவர்களுக்கும் யுத்தம் பலமாக நடந்தது. கடைசியில் பல்லவர்கள் வலிமைகுன்றச் சோழர்கள் தலையெடுத்தனர். தஞ்சாவூர்ச் சோழனான விஜயாலயன் வம்சத்துதித்த முதல் பராந்தகன் என்பவன் மதுரையைக் கைப்பற்றினான். இதனுடன் பாண்டிய முதல் ஏகாதிபத்தியம் முடிவடைந்தது.

இவ்விஷயத்தை விவரமாய்க் கவனிப்பதற்கு முன், களப்பிரர் என்பவர் யாரென்றும், இவர் பாண்டிய ராஜ்யத்தைக் கைப்பற்றியதைப்பற்றியும், தென்னிந்திய சரித்திரத்தில் இவர்களுடைய சம்பந்தம் யாதென்பதையும் கவனிப்போம்.

(1) "...நீடு புக்திதுத்தபின் னளவரிய ஆதிராஜரை அகல நீக்கி
அகலிடத்தைக் களப்பிர னென்னுங் கலி அரைசன்
கைக்கொண்டதனை இறக்கியபின்."

(2) "துளக்கமில்லாக் கடற்றானையர் களப்பிர ராலிறக்கப்பட்டது"

—வேள்விக்குடிச்சாஸனம்.

களப்பிரன் என்ற கலியரசன் அளவரிய ஆதிராசரைத் துரத்திப் பூமியைத் தன்வசப்படுத்தியதாக வேள்விக்குடிச்சாஸனம் கூறுகிறது. பன்மை வாசகம்படக் களப்பிரர் என்றும் குறித்து அவர்கள் கடல்போல் திரண்டசேனைகளுடையவர்கள் என்று சாஸனம் சொல்லுகிறது. கலிஎன்பதை ஸ்ரீமான் கிருஷ்ண சாஸ்திரியார் ஒரு குலம் என்று அபிப்பிராயப்படுகிறார். ஆனால் கலி குலம் என்று ஒரு வம்சத்தார் இருந்ததாகத் தெரியவில்லை. களப்பிரர் என்று பன்மையிலிருப்பதிலிருந்து அவர் ஒரு படைத்திறம் வாய்ந்த சாதியாராயிருக்கலாம் என்று தோற்றுகிறது. முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டிய அரசன் காலத்திற்குப் பிறகு களப்பிரர் பாண்டிய நாட்டைக் கைப்பற்றியதாகத் தெரியவருகிறது. ஆனால் நிச்சயமாக எவ்வளவு காலத்திற்குப் பிறகு இந்நிகழ்ச்சி நடந்ததென்று சொல்லவியலாது. எவ்வாறு பாண்டியர்களைக் களப்பிரர்கள் வென்றார்களென்றும், எத்துணைக் காலம் களப்பிரர்கள் ஆட்சி நீடித்திருந்தது, எப்படி களப்பிரர்கள் துரத்தப்பட்டார்களென்றும் நிச்சயமாய்ச் சொல்ல இடமில்லை. ஆறாவது நூற்றாண்டின் இறுதியில் (கி. பி. 575) பட்டத்திற்கு வந்த பல்லவ அரசனான சிம்மவிஷ்ணு என்பவனும் களப்பிரரை வென்றதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே ஒரே காலத்தில் பல்லவ பாண்டிய ராஜ்யங்களுக்குக் களப்பிரர்களால் கெடுதி

ஏற்பட்டதென்பதும், சேர்ந்தோ தனித்தோ இவ்விரு வம்சத்தரசர்களும் தங்களுக்கு நேர்ந்த தீங்கை நிவர்த்தித்தார்கள் என்பதும் பெறப்படுகின்றன.

பெரிய புராணம், திருவிளையாடற்புராணம் என்பவற்றிலுள்ள மூர்த்திநாயனுர் புராணத்தை ஆதாரமாகக்கொண்டு களப்பிரன் என்பவன் எருமையூரன் என்றும், அவன் ஜைன மதத்தைச் சேர்ந்தவனும் மதுரையை ஆண்டவனுமான கர்நாடக ராஜனென்றும், தலையாலங்கானத்தில் பாண்டியனை எதிர்த்துப் போர் செய்தவனென்றும், களப்பிரரை நெடுஞ்செழியன் துரத்தியிருக்கலாமென்றும் ஸ்ரீமான் வெங்கையா அவர்கள் கருதினுர்கள் (1908-ம் வருஷ அறிக்கை, பக்கம் 53). புராணத்தில், மூர்த்தியென்பவர் சந்ததி இல்லாத வேற்று வம்சத்தரசனுன கருநாட அரசனுக்குப்பின் பட்டத்திற்கு வந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கடுங்கோனைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆகவே இக்கொள்கை அவ்வளவு பொருத்தமானதாகத் தோற்றவில்லை.

கன்னடத்தில் களபரு என்பது களவரா என்று சிதைந்து பின்பு களப்பிரர் என்று மாறிவந்திருக்கவேண்டுமென்றும், சாதவாகனர்கள் தக்ஷிணத்தில் பரவ, களப்பிரர் தென்னிந்தியாவின் மேற் படையெடுத்தனரென்றும் டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார் சொல்லியிருக்கிறுர்.

களப்பிரரைப்பற்றி வேருெரு கொள்கையைக் கவனிப்போம்: பண்டிதர் மு. இராகவையங்கார் அபிப்பிராயம் பின்வருமாறு: தென்னுட்டரசர்களை அழித்த களப்பிர அரசன் சிதம்பரத்திலாண்ட அச்சுதனுக விருக்கலாமென்றும், அவ்வச்சுதனைப்பற்றிப் புத்ததத்தர் கூறியுள்ளார் என்றும், வேள்விக்குடிச்சாஸனத்துக் களப்பிரனைக் கலியரசனென்று சொல்லியிருப்பதிலிருந்து பெரிய புராணத்துக் கூற்றுவநாயனுர் சரித்திரத்துக் கூற்றுவநாயனுரே களப்பிர ராஜனுக இருக்கலாமென்றும், களப்பர், களப்பாளர், களப்பிரர் எனத் தமிழ் நூல்கள் கூறும் என்றும், அவர்கள் வேளாளர்களுக்கு நெருங்கின சம்பந்தமுடையவர்களாயிருக்க வேண்டுமென்றும் அவர் கூறுகிறுர்.

புத்ததத்தர் என்பவர் பௌத்த ஆசிரியர்களிற் பிரபலமானவர். பௌத்தமதத்தைப்பற்றிச் செவ்வனே கற்றுக்கொள்ளச் சிங்களத்தில் சிலகாலம் இருந்தார். அவர் எழுதியுள்ள அபிதம்மாவதாரம் என்ற நூலில் காவேரிப்பட்டணம், அதிலிருந்த வியாபாரிகள், சிங்காரவனங்கள் ஆகியவற்றைப்பற்றி விவரமாய்க் கூறியுள்ளார்.

மேலும் அந்நகரில் கண்டதாஸரால் கட்டப்பட்ட பௌத்தப் பள்ளியில் தாம் சிலகாலம் தங்கிச் சுமதி என்பவருடைய வேண்டுகோளுக்கு இணங்கி, அந்நூலை ஆக்கினதாகக் கூறுகிறார்.

வினய விநிச்சயம் என்ற நூலைப் புத்தசீலர் என்பவர் பொருட்டு, காவிரிநதிக்கரையில் உள்ள பூதமங்கலத்தில் விளங்கிய வேணுதாஸருடைய பௌத்தப்பள்ளியில் தங்கியிருந்த காலத்து எழுதினதாகவும், அந்நூல் எழுதப்பட்ட காலத்துக் களப்பிர குலத்து அச்சுதவிக்கந்தன் அந்நாட்டை ஆண்டதாகவும் தெரிவித்திருக்கிறார். இவ்வச்சுதனும், யாப்பருங்கலக்காரிகையில் அமித சாகரர் உதாரணமாக எடுத்துக்காட்டியுள்ள செய்யுட்களில் புகழப்பட்டிருக்கும் அச்சுதனும் ஒருவனைத்தான் இருக்க வேண்டும். இச்செய்யுட்கள் தென்றில்லை அச்சுதன் என்பவன் தமிழ் மூவேந்தர்களான சேர சோழ பாண்டியர்களை வென்றதாகப் புகழ்கின்றன. அவனைப்பற்றியுள்ள செய்யுட்கள் பின்வருமாறு:

(1) "தினைவிளைத்தார் முற்றந் தினையுணங்குஞ் செந்நெல்
தனைவிளைத்தார் முற்றமது தானும் - கனைசீர்
முரசுணங்கச் சங்குணங்கு மூரித்தேர்த் தானை
அரசுணங்கு மச்சுதன்முற் றத்து." —(சேரன்)

(2) "அரச குலதிலக னச்சுதன்முற் றத்தில்
அரச ரவதரித்த வந்நாள்—முரசதிரக்
கொட்டிவிடு மோசையினுங் கோவேந்தர் காற்றளையை
வெட்டிவிடு மோசை மிகும்." —(சோழன்)

(3) "குறையுளா ரெங்கிரார் கூர்வேலி ராமன்
நிறையாறு திங்க ளிருந்தான்—முறைமையால்
ஆலிக்குந் தானை யலங்குதா ரச்சுதமுன்
வாலிக் கிளையான் வரை." —(பாண்டியன்)

(4) [பாண்டிய னிது பாடியபின்பு ஒரு விலங்கு கூடப்போடப் பின்பு பாடியது.]

"குடகர் குணகடலென் றார்த்தார் குடகர்க்
கிடவர் வடகடலென் றார்த்தார்—வடகடலர்
தென்கடலென் றார்த்தார்தென் றில்லையச்சு தாநின்றன்
முன்கடைநின் றார்க்கு முரசு."

(5) "துவைக்குந் துளிமுன்னீர்க் கொற்கை மகளிர்
அவைப்பதம் பல்லிற் கழகொவ்வா முத்தம்
மணங்கமழ்தா ரச்சுதன் மண்காக்கும் வேலின்
அணங்கு மமுதமு மந்நலார் பாடல்."

(6) "அடுதிற லொருவநிற் பரவுது மெங்கோன்
தொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்

கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரி
புயலுறழ் தடக்கைப் போர்வே லச்சுதன்
தொன்றுமுதிர் கடலக முழுதுடன்
ஒன்றுபுரி திகிரி யுருட்டுவோ னெனவே."

கல்வெட்டுக்களிலிருந்து களப்பிரர் சேரர்களை வென்றதைப் பற்றி யாதோர் ஆதாரமும் கிடைக்கவில்லை. ஆனால் பல்லவர்களையும் பாண்டியர்களையும் வென்றனரென்றும், சுமார் ஏழாம் நூற்றாண்டில் பல்லவ அரசனான சிம்மவிஷ்ணுவும் பாண்டிய அரசனான கடுங்கோனும் முறையே தங்கள் வம்சத்தை நிலைநிறுத்தினார்கள் என்றும் செய்திகள் கிடைக்கின்றன. இக்காலத்துச் சோழர்கள் அழிவுக்கும் களப்பிரரே காரணமாயிருக்கலாமென்று நாம் ஊகிக்க இடமுண்டு.

மணிமேகலை சரிதை, மாணிக்கவாசகர் சரித்திரம் இவைகளிலிருந்து சங்ககாலத்தின் இறுதியில் பௌத்தமதம் தழைத்தோங்கியிருந்ததென்று தெரிகிறது. பௌத்த மதத்தைப் போற்றியவனும், களப்பிரர் குலத்தவனுமான தென்றில்லை அச்சுதன் என்ற புகழ்பெற்ற அரசன் தென்னாட்டை ஆண்டதாகவும், அவன் மற்றத் தமிழ்நாட்டரசர்களை வென்று நாட்டில் குழப்பமும் துன்பமும் விளைவித்தான் என்றும், இக்களப்பிரர்களின் அழிவுக்குப் பிறகே பூர்விகத்தென்னாட்டரசர்கள் தலையெடுத்தனர் என்றும் தெரியவருகிறது. ஆகவே இவ்வச்சுதனது குலத்தவரே களப்பிரராயிருக்கலாமென்று தோற்றுகிறது.

# இந்தியாவின் மிகப்பழைய ஓவியம்

தி. நா. சுப்பிரமணியன்

---

பண்டை இந்தியமக்கள் சிற்பத்திலும் ஓவியத்திலும் திறமை வாய்ந்தவர்களாக இருந்தார்கள். இவ்விரு கலைகளையும் ஒரே கலையின் பகுதிகளாகவே கருதி, இரண்டையும் ஒன்றாகவே பயின்று வந்தார்கள். ஆகையால் முற்காலத்திய சிற்பங்களும் வர்ணந்தீட்டப் பெற்றனவாக இருந்தன.

இந்தியாவின் பழைய கோயில்களுக்குள் பெயர்பெற்றவை மலைச்சரிவுகளிலும், செதுக்கப்பட்ட குன்றுகளிலும் உள்ள 'குடைவரைக்கோயில்'களே. அக்கோயில்களில் உள்ள சிற்பங்களும் பதுமைகளும் வர்ணம் பூசப்பட்டிருந்தன. அவ்வர்ணத்தின் சின்னங்கள் இன்னும் ஒன்றிரண்டு இடங்களிற் காணப்படுகின்றன. சிற்பங்கள் நிருமிக்கப்படாத சுவர்ப்பாகங்களில் ஓவியங்கள் எழுதப்பட்டுவந்தன. பண்டைக் கோயில்களில் சிற்பமோ ஓவியமோ இல்லாத பாகம் கிடையாது.

இந்தியாவின் பழைய ஓவியங்களுள் பிரசித்தியானவை அஜந்தாவில் உள்ள சித்திரங்களே. அவை பௌத்தமத சம்பந்தமானவை. அவை வரையப்பட்ட காலத்தை நாம் நிர்ணயித்துக் கூறுவதற்குப் போதிய சாதனங்கள் இல்லை. எழுதப்பெற்ற காலத்தை நாம் நிச்சயமாகக் கூறக்கூடிய பழைய ஓவியங்கள் தென்னாட்டிலே தான் காணப்படுகின்றன. கி. பி. ஏழாம் நூற்றாண்டின் துவக்கத்தில் வரையப்பட்டுள்ள சித்தன்னவாசல் கோயில் ஓவியங்களே இதுகாறும் கண்டுபிடிக்கப்பட்ட ஓவியங்கள் யாவற்றுள்ளும் மிகப் பழைமையானவை. இவை ஜைனமத சம்பந்தமானவை. பல்லவ அரசனான மஹேந்த்ரவர்மன் காலத்தைச் சார்ந்தவை. காலவரையறையில் அவற்றிற்கு அடுத்தபடியாகக் கூறக்கூடியவை காஞ்சீபுரம் கைலாசநாதர் கோயிலில் காணப்படும் ஓவியங்கள். அவை ஏழாம்

நூற்றாண்டின் இறுதியில் வரையப்பட்டவை. சைவபரமான அச் சித்திரங்கள் பல்லவ அரசனான இராஜசிம்மன் காலத்தில் எழுதப் பட்டவையாகும்.

இவற்றைக்காட்டிலும், காலத்தில் முற்பட்டனவாயும், ஆத லால் இந்தியாவிலே இதுகாறும் கண்டுபிடிக்கப்பட்ட யாவற் றுள்ளும் மிகப்பழையனவாயும் உள்ள ஓவியங்கள் சில சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. அவை தக்காணத்தில் வாதாபியில் உள்ள குடைவரைக் கோயில்களுள் மூன்றும் நெம்பர் குகை என்று குறிக் கப்படும் வைஷ்ணவக் கோயிலில் உள்ளவை. இந்துக்களின் புரா ணக்கதைகளை விளக்கிக்காட்டுபவை.

அக்கோயில், எண்டிசையும் புகழ்பரக்க ஆண்ட புலிகேசியின் தந்தையான கீர்த்திவர்மன் ஆட்சி செய்துவந்த காலத்தில் அவன் தம்பியான மங்கலேசனால் கி. பி. 578-ஆம் (சக. 500-ஆம்) ஆண்டில் வெட்டுவிக்கப்பட்டது.

அக்கோயிலில் ஒரு கர்ப்பக்ருஹமும் ஒருமுக மண்டபமும் அதன் முன்புறத்தில் ஒரு தாழ்வாரமும் உள. மண்டபத்துள் வெய்யில் அடிக்காதபடி அதன் முன்பாகத் தாழ்வாரத்தின் மேல் சார்ப்புப்பந்தல் போல ஒரு பாறை நீட்டிக்கொண்டிருக்கிறது. அது மண்டபத்தின் பக்கத்தில் உயர்ந்து முன் பக்கத்தில் தாழ்ந்து சாய்வாக இருக்கிறது. பாறையாலாகிய அக்கொடுங்கையின் உட்புறத்தில் இச்சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன. ஆகை யால் வர்ணம் தீட்டப்பெற்ற இச்சித்திரங்கள் வெய்யில் மழை முதலியவற்றால் இன்றளவும் பழுதடையாமல் காப்பாற்றப்பட்டுள் ளன. வெளிச்சத்தினின்றும் உள்ளே வருவோர்களின் கண்களுக்கு இருட்டிலுள்ள இச்சித்திரங்கள் நன்கு புலப்படா. ஆதலின் அவை இதுகாறும் கவனிக்கப்படாமல் இருந்தன.

அவை மங்கலாகவே காணப்படுகின்றன. ஆயினும் உயர்ந்த முறையில் எழுதப்பட்டுள்ளன.

அங்கு உள்ள சித்திரங்களுள் ஒன்று, சிவபெருமான் ஒரு மன்றத்துள் நடனமாடுவதைக் காட்டுகின்றது.

மற்றொன்று, பரமசிவன் பார்வதியைப் பாணிக்கிரஹணம் செய்துகொள்வதைக் காட்டுகின்றது. பர்வதராஜனும், கரும்பு வில்லை ஏந்திய மன்மதனும் கூட இருக்கிறார்கள். ஜடாமகுடதாரி

யாகிய சிவன் தலைகுனிந்து நிற்கும் பார்வதியின் கையைப் பிடித்துக் கொள்ளும் சமயம். மேன்மாடங்களிலிருந்து பெண்கள் இக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். மேகமண்டலத்தில் கந்தர்வ அப்சர உருவங்களும் காணப்படுகின்றன.

இச்சித்திரங்களின் வர்ணவேலை மிகவும் ரம்மியமாக அமைந்திருக்கிறது. பலவகையான வர்ணங்கள் தீட்டிய இச்சித்திரங்கள் இந்தியரின் ஓவியச்சிறப்பை நன்றாக எடுத்துக்காட்டுகின்றன.

இந்த ஓவியங்களைக் கண்டுபிடித்து உலகிற்கு அறிவித்த பெருமை இதுகாறும் கல்கத்தா சர்வகலாசாலையில் இருந்து இப்பொழுது லண்டன் சர்வகலாசாலைக்குச் சென்றிருக்கும் கலா நிபுணியான டாக்டர் ஸ்டேல்லா கிராம்ரிஷ் (*Dr. Stella Kramrish*) என்னும் அம்மையாருக்கே உரியது. அவர் இதைப்பற்றிய குறிப்பு ஒன்றை இல்லஸ்ட்ரேடட் லண்டன் நியூஸ் என்னும் பத்திரிகையில் 1936-ஆம் வருஷம் ஆகஸ்டு மீ 8௳ யில், 249-ஆம் பக்கத்தில் எழுதியுள்ளார். அத்துடன் பார்வதியின் கல்யாணத்தைக் காட்டுகின்ற மேற்கூறிய சித்திரத்தின் படம் ஒன்றையும் அச்சிட்டிருக்கிறார்.

# நார்வே யாத்திரை

'ஸ்ரீரங்கன்'

**நா**ர்வே ராஜ்யத்தின் மலைநாடுகளும் சமுத்திரக் கரைகளும் மிகவும் அழகாக இருக்குமென்று மெச்சப்படுகிறபடியால், அவைகளைக் காணவேண்டுமென்ற ஆவல் தென்னிந்தியர் நால்வருக்கு உண்டாயிற்று.

இவ்வாலிபர்கள், லண்டனுக்குச் சென்று, பரீக்ஷைக்குப் படித்துக் கொண்டிருந்தவர்கள். பரீக்ஷை முடிந்ததும், அது வரையில் தங்கள்மீது இருந்த சுமை அப்பொழுது நீங்கினவர்களாய்ச் சந்தோஷத்துடன் மறுதினமே நார்வேக்கு யாத்திரை செய்யப் புறப்பட்டுவிட்டார்கள்.

அவர்களில் ஒருவனுன ஜகந்நாதன் இந்தியாவுக்கு வந்தவுடன் அவனை நாங்கள் சூழ்ந்துகொண்டு கேள்விகள் கேட்கலானோம்.

பிரியம்வதை: நார்வேயின் அதிசயங்களைக் காணப்போனீர்களே, லண்டனில் அதிசயம் ஒன்றும் இல்லையா?

ஜகந்நாதன்: அதிசயம் என்று ஒன்றுமில்லை. சென்னைப் பட்டணத்தில் உள்ள விசேஷங்கள்தான் அங்கேயும். ஆனால் விஷயத்திற்குத் தகுந்தபடி ஒன்றுக்குப் பத்தாகவோ, ஒன்றுக்கு நூருகவோ நாம் பெருக்கிக்கொள்ள வேண்டியதுதான்.

நான்: காலேஜுகளும் கட்டடங்களும் சம்பந்தப்பட்ட வரையில் அப்படி இருக்கலாம். மனிதர்களிலாவது விசேஷமாய்ச் சொல்லும்படி ஒருவருமில்லையா?

ஜகந்நாதன்: (சற்று ஆலோசித்து) கொஞ்சகாலத்திற்குமுன் பணக்காரனும் பிரபலஸ்தனுமான எம். பி. (பார்லிமெண்டு மெம்பர்) ஆக இருந்த ஒரு மனிதன் அவனுடைய துரதிர்ஷ்டத்தினுல் ஏழையாக மாறி என்னுடைய விடுதியில் வேலைக்காரனுக இருந்தான். இம்மாதிரி ஓர் எக்ஸ்-எம். பி. (பார்லிமெண்டு மெம்பராக இருந்தவன்) வணக்கமாய்க் கொண்டுவந்து கொடுக்கும் காப்பியை நான் முந்நூறு தடவைகளுக்கதிகம் கம்பீரமாக வாங்கிக் குடித்திருக்கிறேன். அப்படி இருந்தும் எனக்கு அகம்பாவம் மேலிடாமல் உங்களுடன் முன் போலவே சகஜமாய்ப் பேசுகிறேனல்லவா! ஆகையால் நான்தான் லண்டன் நகரத்தில் அதிசயக் காட்சி என்று எண்ணுகிறேன்

நான்: இது மிகவும் ஆச்சரியந்தான்! இம்மாதிரி வேறு அதிசயங்களும் லண்டனில் உண்டோ?

ஜகந்நாதன்: என்னுடைய மலையாளி சிநேகிதரைக் குறித்து இப்போதுதான் ஞாபகத்திற்கு வருகிறது. அவருடைய நாட்டில் அம்பட்டன் என்றால் மிகவும் இழிவாம். லண்டனில் ஒரு வெள்ளைக்காரன் இவருக்கு க்ஷவரம் செய்யும்போதெல்லாம் இவ்விதம் கூட நடக்குமா வென்கிற ஆச்சரியம் இவரை விடுவதில்லையாம். ஓர் அசல் வெள்ளைக்கார துரை க்ஷவரவேலை செய்வதா? ஆகையால் நடப்பது வாஸ்தவந்தான் என்று தனக்கே நம்பிக்கை உண்டாகும் பொருட்டு, அந்த வெள்ளைக்காரன் தனக்கு க்ஷவரம் செய்யும் பத்து நிமிஷமும், "ஏ, அம்பட்டா! ஏ, அம்பட்டா!" என்று அவனைக்குறித்து இவர் ஜபித்துக்கொண்டே இருப்பது வழக்கம்.

குமுதினி: லண்டனிலிருந்தே நார்வேக்குக் கப்பல் ஏறினீர்களோ?

ஜகந்நாதன்: இல்லை. நியூகாஸில்-ஆன்-டைனுக்கு ரெயில் மார்க்கமாகப் போய் அங்கேதான் கப்பலேறினோம்.

பிரியம்வதை: விடுமுறைநாட்களில் அங்கேயும் ரெயில் வண்டியில் கூட்டத்தினால் கஷ்டமுண்டோ?

ஜகந்நாதன்: கூட்டமுண்டு. ஆனால் கஷ்டமில்லை. எல்லாருக்கும் இடம் கிடைக்கும். அங்கே ரெயில்வண்டிகளில் இரண்டாம் வகுப்பு வண்டி என்பதே கிடையாது. மூன்றும் வகுப்பு வண்டிகளிலும் மெத்தை தைத்திருக்கும். போஜனமளிக்கும் வண்டி உள்பட, எல்லா வண்டிகளிலும் முதல் வகுப்புக்குள்ள எல்லா சௌகரியங்களும் உண்டு. அங்கே கட்டணம் என்ன தெரியுமா? மைலுக்குக் காலணா, நாலுதம்படி என்கிற பேச்சுக் கிடையாது. மைலுக்கு ஒன்றரை அணா; முதல் வகுப்புக்கே இரண்டணாதான்.

குமுதினி: நியூகாஸில்-ஆன்-டைன் என்று எவ்வளவு நீளம்? அது என்ன பெயர்?

ஜகந்நாதன்: அதுவா? ஏதோ தொள்ளாயிரம் வருஷங்களுக்கு முன் ஓர் இளவரசன் அங்கே ஒரு நியூகாஸிலை—அதாவது ஒரு புதிய கோட்டையைக்—கட்டினானாம். அதனால் அந்த ஊருக்கே இந்தப் பெயர். அப்பொழுது பிடித்துக்கொண்டது இன்னமும் வழங்கிவருகிறது.

பிரியம்வதை: ஏன், புதுச்சேரி, புதுப்பாளையம், புது அக்கிரகாரம், என்ற பழைய ஊர்கள் நமக்கில்லையா?

ஜகந்நாதன்: ஆம், அதேமாதிரிதான். ஆனால் நியூகாஸில் என்கிற பெயருடன் பல ஊர்கள் இருக்கிறபடியால், இந்த ஊர் 'டைன்' நதியின்கரையில் உள்ளது என்று குறிப்பிடுவதற்காக நதியின் பெயரையும் சேர்த்துச் சொல்லுகிறார்கள்.

பிரியம்வதை: டைன் நதி என்ன? கங்கையா, காவேரியா?

ஜகந்நாதன்: அவர்களுக்கு அதைக் காட்டிலும் விசேஷம். நதியின் சங்கமத்திற்குப் பத்துமைல்களுக்கு மேல் புறத்தில் ஊர் இருக்கிறது. அந்தப் பத்துமைல் தூரமும் நதி வெகுவிசாலமாக இருப்பதனால் இருகரைகளிலும் வர்த்தகக்கப்பல்களும், சண்டைக் கப்பல்களும் செய்யப்படுகின்றன. கஸ்பா என்ற ஊரிலே, நம்முடைய நாட்டுக்கு வரும் அநேக எஞ்சின் வண்டிகள் செய்யப்படுகின்றன.

கப்பலில் ஏறிச் சிறிதுதூரம் சென்றவுடன் அநேகருக்கு வயிற்றுப் புரட்டல் கண்டு வாந்தி தொடங்கிவிடும். மறுபடியும் கரையை யடையும்பொழுதுதான், அதுவரையில் வயிற்றில் ஆகாரம் தங்காதபடியினால், மெலிந்ததேகமும், வாடினமுகமுமாய்த் தங்களுடைய அறையைவிட்டு அவர்கள் வெளியே வருவார்கள். ஆனால் ஒவ்வொருவரும், கப்பலேறியவுடன் தம்மிடம் இந்த 'சமுத்திரவியாதி' அணுகாதென்று வீரியம் பேசுவது வழக்கம். இதை நினைத்துக்கொண்டு "உங்களில் யாருக்காவது சமுத்திர வியாதி வந்ததா?" என்று நான் கேட்டேன்.

ஜகந்நாதன்: நாங்கள் ஒவ்வொருவரும் "வேறு யாருக்கு வந்தாலும் சரி, எனக்கு மாத்திரம் சமுத்திர வியாதி வராது" என்று சொல்லிக் கொண்டிருந்தோம். உள்ளுக்குள்ளேயும் பயமில்லை என்று காண்பிப்பதற்காகக் கப்பலேறினவுடன் நிறையச் சாப்பிட்டோம். ஆனால் சமுத்திரத்தில் அரை மைல் தூரம் போவதற்குள்ளே எங்களில் இருவர் எழுந்திருந்து தாமாகவே நடப்பதற்குக் கூட முடியாமல் ஒரோர் நாற்காலியின் முதுகைப்பிடித்துக்கொண்டு, ஒன்றும் பேசாமலே, தம்முடைய அறைக்குத் தட்டித் தடவிப் போய்ச் சேர்ந்தார்கள். உடனே மற்றொருவர், "இவர்களுடைய பவிஷு எல்லாம் எனக்கு நன்றாய்த் தெரியும்" என்று சிரித்தார். ஆனால், வர வர அவருடைய முகமும் மாறிற்று. கடைசியிலே பச்சைநிறமாகவே பிரகாசித்தது. ஒரு மணி நேரத்திற்கெல்லாம் அவர் எழுந்து நின்று "இந்த மூன்று மணி நேரமாக என் வயிற்றில் ஆகாரத்தை வைத்துக் கொண்டிருந்தேனே, அது போதாதோ?" என்று சொல்லி, டப்பென்று தன்வாயைக் கையினால் பொத்திக் கொண்டு, அறையை நோக்கி ஓடிவிட்டார். நல்லவேளையாய், எனக்கு ஓர் உபத்திரவமும் வராமல் அக்கரை போய்ச்சேர்ந்தேன்.

நான்: நான் அப்படித்தான் நினைத்தேன். இதற்காகவென்று நானும் சமுத்திரத்தில் கொஞ்சகாலம் போய்ப் பரீக்ஷைபார்த்திருக்கிறேன். எனக்கும் சமுத்திர வியாதி வரவில்லை. நானாகவே சொல்லிக்கொள்ளக்கூடாது—இம்மாதிரி விசேஷ குணங்கள் வம்ச வழியிலே இறங்கிவரும்.

பிரியம்வதை: இன்னும் என்ன குணங்களெல்லாம் குடும்பத்திற்குச் சொந்தமோ?

நான்: அநேகமுண்டு. தேள் கொட்டினால் வலிக்காமல் இருப்பது, ஸ்திரீகள் என்ன பேசினாலும் அவர்களிடத்தில் பொறுமையாயிருப்பது—

பிரியம்வதை (பேச்சைமாற்றி): நார்வே தேசத்திய மனிதர்கள் என்ன மாதிரியானவர்கள்?

ஜகந்நாதன்: என்னமாதிரி என்று கேட்டால் எப்படிச்சொல்வது? ஆங்கிலேயர்களைக்காட்டிலும் அவர்கள் உயரம் அதிகம். வெள்ளைக்காரர்கள் என்றால் அவர்களுக்குத்தான் அந்தப்பெயர் தகும். ஆங்கிலேயர்களை வெள்ளைக்காரர்கள் என்று நாம் சொல்லுகிறோமே, அது சரியல்ல. ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பலதேசங்களில் உள்ள மனிதர்கள் எல்லாரும் ஒரே வர்ணமில்லை. தேசத்திற்குத்தேசம் ஜனங்களின் வர்ணம் வித்யாசப்படுகிறது. எங்களைக் கண்டே, சில நார்வேஜியர்கள், "உங்களுக்கு இதாலியா தேசமா?" என்றும், "உங்களுடைய தேசம் ஜெக்கோஸ்லோவாகியாவா?" என்றும் கேட்டார்கள். ஆகவே, நம்முடைய வர்ணமுள்ள ஐரோப்பியர்களும் உண்டு. இப்பேர்ப்பட்டவர்களை உத்தேசித்து ஆங்கிலேயர்களைச் சாதாரண வெள்ளைக்காரர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு நார்வேஜியனைக் காணும்போது இவன்தான் அசல் வெள்ளைக்காரன் என்றும், இவனோடு ஒப்பிடும்போது ஆங்கிலேயர்கள் மத்திம நிறங்கொண்டவர்கள்தான் என்றும் தோன்றுகிறது.

குமுதினி: அங்கே படிப்பு எப்படி?

ஜகந்நாதன்: பொதுஜனக் கல்வி அதிகமென்றே சொல்லுகிறார்கள். இருந்தாலும் படித்தவர்களில்கூட சிலர், பூகோள சாஸ்திரத்தில் ஞானசூனியமாயிருந்ததை ஆச்சரியமென்றுதான் சொல்லவேண்டும்.

நான்: அவர்களுக்கு என்னத்திற்காக பூகோளசாஸ்திரம்? ஆங்கிலேயர்கள் மாதிரி உலகம் முழுவதும் ராஜ்யமும் வியாபாரமும் இருந்தால் அந்தப் படிப்பிற்கு அவசியமிருக்கும். அல்லது நம் மாதிரி ஆங்கிலேயர்களின் கல்வி ஏற்பாட்டையெல்லாம் பின்பற்றுகிற வழக்கமாவது இருக்கவேண்டும்.

ஜகந்நாதன்: இதன் பலன் என்னவென்றால், நார்வேஜியர்கள் எங்களை விதவிதமாகக் கேள்விகள் கேட்கத் தொடங்கினார்கள். ஒருவர், "உங்களுடைய தேசமான இந்தியாவிலிருந்துதானே, ஓர் இளவரசர் சமீபகாலத்தில் லண்டனுக்கு வந்தார்?" என்று கேட்டார். அப்படி இல்லை என்றும், சியாம் தேசத்து இளவரசர்தான் ஐரோப்பாவுக்கு வந்தார் என்றும் நாங்கள் சொன்னோம்.

அதன்மேல் அவர் "ஓ! மறந்துவிட்டேன். இந்தியா! இந்தியா! இப்பொழுது தெரிந்தது. அதுதானே காந்தி இருக்கும் இடம்?" என்று ஞாபகப்படுத்திக்கொண்டார். மற்றொருவருடைய எண்ணத்தில் இந்தியாவும் அபிசீனியாவும் ஒன்றுதான். ஆகையால் நாங்கள் இந்தியர்கள் என்று அவர் உணர்ந்தவுடன், "அப்படியானால் முசோலினியுடன் யுத்தம் செய்வதற்காக நீங்கள் சீக்கிரம் உங்கள் நாட்டிற்குத் திரும்பி விடுவீர்களல்லவா!" என்று கேட்டார். இன்னும் ஒருவர், எங்களுடைய உதவியில்லாமலே, எங்களுக்கு எந்தத்தேசம் என்று கண்டுபிடிப்பதாகப் பாவனை செய்தார். அவர்களுடைய பாஷையில் 'ஜ' என்கிற எழுத்திற்கு 'ய' என்கிற சப்தம்தான் உண்டு. 'ஜப்பான்' என்கிற பெயரை, 'யப்பான்' என்றுதான் சொல்லுவார்கள். ஆகையால் அவர் என்னிடம் வந்து "மிஸ்டர் யகந்நாதன், நீங்கள் யப்பானிலிருந்து வந்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

பிரியம்வதை: நீங்கள் நார்வேயில் எந்த இடத்திற்கெல்லாம் போனீர்கள்?

ஜகந்நாதன்: நாங்கள் ஒரு முக்கோண யாத்திரை செய்தோம். முதல்பாகம் ரெயில் வண்டி, இரண்டாம் பாகம் கப்பல், மூன்றும் பாகம் கால்நடை. இதுதான் அந்த நாட்டின் மாமூல். இது எவ்விதம் என்றால், நாங்கள் நார்வேயில் முதலில் போய்ச் சேர்ந்த இடம் கிறிஸ்டியானியா என்ற மறுபெயர் உள்ள ஆஸ்லோ என்னும் நகரம். இதுதான் ராஜதானி. சென்னைப்பட்டணம் அவ்வளவு பெரியதுதான். அதனுடைய சிங்காரவனங்களும், விசால வீதிகளும் உயர்ந்த கட்டடங்களும் வெகு அழகாயிருந்தன. அது ராஜ்யத்தின் தென்கிழக்கு மூலையிலுள்ளது. அங்கிருந்து அஅண்டல்ஸினிஸ் (*Aandalsenes*) என்கிற பட்டணத்திற்குப்போனோம். அவர்களுடைய பாஷையில், 'ஆ' எழுத வேண்டுமானால் 'அஅ' என்று இரண்டு தடவை எழுதினால் போதும் போலிருக்கிறது. இதற்காக ஒரு புது எழுத்தைத்தேட வேண்டாம். நான் சொன்ன முதல் பட்டணத்திற்கும் இரண்டாம் பட்டணத்திற்கும் இடையில் அதி உன்னதமான மலைகளும், அவைகளுக்குத் தக்கபடி பள்ளத்தாக்குகளும் உண்டு. அவ்வழியைக் கடப்பதற்கு ரெயில்பாதை போடப்பட்டிருக்கிறது. வழியின் காட்சிகளைப் பார்ப்பதற்காக ஒவ்வொரு வருஷமும் எங்கள்மாதிரி அன்னிய நாட்டு ஜனங்கள் ஆயிரக்கணக்காகக் கூடுகிறார்கள். அதற்கேற்றபடி ரெயில்வண்டித் தொடர்களை ஓர் எறும்புச்சாரிமாதிரி வெகுநீளமாகக் கூட்டுகிறார்கள். அஅண்டல்ஸினிஸ் என்ற ஊர் ராஜ்யத்தின் வடமேற்குக் கரையில் இருக்கிறது.

அவ்விடமிருந்து தென்மேற்குக் கரையிலுள்ள பெர்க்கன் என்கிற பட்டணத்திற்குச் சென்றோம். இதற்குக் கடல்வழி தான்; கரையோரமாகவே கப்பல் போகும். அதில் என்ன விநோதமென்றால், கரைமுழுவதும், இடையிடையே, 'ப்யோர்' (*Fjord*) என்கிற வெகு அழகான வளைகுடாக்கள் உண்டு. அவை, ஒன்றிரண்டு மைல் முதல் நூறுமைல் வரை நீளம் இருக்கும். அவைகளுக்குள் கப்பல் போய்விட்டு வரும். அவைகள் வளைந்து வளைந்து இருப்பதால் நாம் ஒவ்வொரு வளைவு திரும்பிய வுடன், திடீரென்று ஒரு புதியகாட்சி தென்படும். இவைகளைப் பார்ப்பதற்காகவும், வருஷாவருஷம் நானு தேசங்களிலிருந்து அநேக ஜனங்கள் வருகிறார்கள். அம் மலைப்பிரதேசங்களின் அழகையாவது, சமுத்திரதீரங்களின் அழகையாவது நான் உங்களுக்கு எப்படிச் சொல்லுவது?

நான்: இவ்விதம் சொல்லி, இத்துடன் விட்டுவிடுகிறதே நல்லது. என்றால் ஓர் அல்லிக்குளத்தைக்கூட வர்ணிக்க முடிகிற தில்லை.

ஜகந்நாதன்: என்றால் வர்ணிக்கமுடியாது என்று சொல்ல வில்லை. ஆனால் நார்வேயின் அழகைப்பற்றிச் சரியாகச் சொல்ல வேண்டுமென்றால், அவர்களுடைய பாஷையிலேயேதான் எடுத்துப்பேசவேண்டும். அப்படி நான்பேசினால் உங்களுக்குப் புரியாதே என்றுதான் நான் வர்ணிக்கவில்லை.

குமுதினி: அவர்களோடு பேசுவதற்கு நீங்கள் என்ன செய் தீர்கள்?

ஜகந்நாதன்: அது அதிகக் கஷ்டமில்லை. அவர்களுடைய பாஷை டேனிஷ் பாஷைதான். அது ஜெர்மன் பாஷைக்குச் சகோதரன் மாதிரியே. எனக்குக் கொஞ்சம் ஜெர்மன் தெரியுமாகையால் அதை வைத்துக்கொண்டு சமாளித்துவிட்டோம். ஆனால் அது நகரங்களில் முடிந்ததேயொழிய நாட்டுப்புறங்களில் முடியவில்லை.

நான்: அதற்குக் காரணம் எனக்குத் தெரியும்.

ஜகந்நாதன்: அதென்ன?

நான்: தமிழ்ப்பாஷையில், செந்தமிழும், எளிய தமிழ் என்கிற கொச்சைத்தமிழும், ஆக இரண்டுவிதம் இருக்கிறமாதிரி, டேனிஷ் பாஷையிலும் இரண்டுவிதம் உண்டு. முதல்விதம்தான், ராஜபாஷை. சர்க்காரின் உத்தரவுகள் அதில் வெளியிடப்படும். இலக்கியங்களும் அதில்தான் எழுதப்பட்டுவந்தன. ஆனால் இரண்டாவதுவித பாஷையில்தான் ஜனங்கள் சாதாரணமாகப் பேசுவது.

குமுதினி: நார்வேயைப்பற்றி உள்ள புஸ்தகம் ஒன்றை அப்பா முன்பே படித்து வைத்திருக்கிறுப்போலிருக்கிறது.

நான்: சற்றுப் பொறுங்கள். நான் பாடம் பண்ணினதையெல்லாம் சீக்கிரத்தில் ஒப்பித்துவிடுகிறேன். நார்வேயில், பொது ஜனங்கள் சில வருஷங்களாக நூலாசிரியர்களை நோக்கி, ஒரே முரண்டாக உங்களுடைய "உயர்ந்த பாஷையை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். நாங்கள் பேசும் பாஷையில் எழுதினுல் தான் உங்களுடைய புஸ்தகங்களை வாசிப்போம்" என்று சாதித்து விட்டார்கள். ஆகையால் இப்பொழுது இலக்கியங்கள்கூட இந்தப் பொதுஜனபாஷையில் எழுதப்படுகின்றன. 'உயர்ந்த டேனிஷ்' என்று கூறப்படுவதை நகரங்களில் சிலர் மாத்திரம், கார்யாவச்யத்திற்காகக் கற்றுக்கொண்டிருக்கிறுர்கள்.


பிரியம்வதை: தமிழிலும் இம்மாதிரி நேரிடுமோ என்னவோ.

நான்: ஆகையால் ஜகந்நாதனுக்கு, உயர்ந்த டேனிஷ் பாஷையில் 'வதனம் விளர்த்தது' என்று விளம்பினுல் விளங்கியிருக்குமேயொழிய 'முகம் வெளுத்தது' என்கிறதற்குச் சமமாய் சாதாரண டேனிஷில் சொல்வது புரிந்திருக்காது.

ஜகந்நாதன்: அப்படித்தான் இருக்கவேண்டும். ஆகையால் ஒரு கடையிலோ, ஒரு சாப்பாட்டு விடுதியிலோ நாங்கள் என்ன செய்வதென்றுல், நுழைந்தவுடன் பணத்தை எடுத்து மேஜையின் மேல் வைத்துவிடுவோம். பிறகு எங்களுக்கு வேண்டிய பதார்த்தங்களை எடுத்துக்கொண்டு, சொந்தக்காரனை நோக்கிச் சிரிப்போம். அவன் தனக்குப்புரிந்தது என்பதற்கு அடையாளமாக 'யா' 'யா' என்று சொல்லித் தலையை ஆட்டிக்கொண்டு, பதிலுக்குச் சிரித்து விட்டு, எங்களுக்குப் பாக்கி கொடுக்க வேண்டிய சில்லரையைக் கொடுத்துவிடுவான். இருபக்கத்திலும் திருப்தியுடன், விடைபெற்றுப் பிரிவோம். விலை அறியாத எங்களை ஏமாற்றவேண்டுமென்கிற எண்ணம் அவனுக்குக் கொஞ்சமேனும் கிடையாது.

எங்களுடைய யாத்திரையின் மூன்றும் பாகம் பெர்க்கனிலிருந்து முதலில் சொன்ன ஆஸ்லோ நகரத்திற்குக் கால்நடைப் பிரயாணம். நாங்கள் போன வழியில் ரொம்ப தூரத்திற்கொரு தடவைதான் வீடுகளைக் காணுவோம். அப்படி இருக்கையில், அவ்வளவு நல்ல ரோடுகள் எதற்காகவென்று கேட்டால், எங்களைப்போல பிரயாணிகளாக வருஷா வருஷம் வரக்கூடியவர்களுக்குவேண்டிய சௌகர்யங்களைச் செய்து கொடுத்தாலல்லவா அநேகம் ஜனங்கள் வருவார்கள், வந்த இடத்தில் பணத்தைச் செலவு செய்வார்கள், சுதேச ஜனங்கள் லாபமடைவார்கள் என்பதற்காகத்தான்.

கால்நடைப் பிரயாணத்தின்போது, எங்களில் இருவரை மற்ற இருவர் பிடித்த படம் ஒன்று இது. (படத்தைப் பார்க்கவும்.) எங்களுடைய நிழலிலிருந்து சூரியன் எவ்வளவு உக்கிரமாய்ப் பிரகாசித்தான் என்று அறியலாம். ரஸ்தா முழுவதும் ஒரே வெளுப்பாகக் காணுகிறதே, அது என்ன தெரியுமா? அத்தனையும் உறைந்த பனிக்கட்டி. அப்பிரதேசத்தினுடைய குளிர்ச்சியினால், அந்த வெய்யிலிலும் பனிக்கட்டி உருகுவதில்லை. அவ்விடங்களை உத்தேசித்து நீலகிரியும் கொடைக்கானலும் உஷ்ணபூமிகளென்றே சொல்ல வேண்டும். அப்படிக் குளிராயிருந்தும் தேகத்திற்கு ஹிதமாயும் சந்தோஷகரமாயும் இருந்தது.



பிரியம்வதை: நீங்கள் கால்நடையாகப் போகும் பொழுது சாமான்களை எப்படிக் கொண்டுபோனீர்கள்?

ஜகந்நாதன்: எங்களுக்கு என்ன சாமான் தேவை, எந்தெந்த இடங்களில் ஹோட்டல்கள் உண்டு என்று காண்பிக்கும் தேசப் படங்களை மாத்திரம் கொண்டுபோவோம். எந்த ஹோட்டலுக்குப் போனாலும் புதிதாய்ச் சலவை செய்த விரிப்பு, துப்பட்டியுடன் படுக்கை கொடுப்பார்கள். எங்கள் உடுப்புகளையும் சலவைசெய்து தருவார்கள். ஹோட்டல்கள் இல்லாத இடங்களில் பசித்தால் ரஸ்தாவின் அருகிலுள்ள குடியானவன் வீட்டிற்குச் சென்று சிற்றுண்டி சாப்பிடுவோம். அங்கே எல்லோரும் பிரியமாயிருப்பார்கள். அங்கேயும் நாங்கள் கைசமிக்ஞையினாலே சிரித்துக்கொண்டு பேசுவோம்.

பிரியம்வதை: நல்ல ஆகாரத்திற்குக் கஷ்டம் இல்லாமல் இருந்ததா?

ஜகந்நாதன்: ஒருவிதக் கஷ்டமுமில்லை. அவர்கள் சாப்பாட்டிற்கு உதவியாகக் கொடுக்கும் வஸ்துக்களே என்னைப்போன்ற தென்னிந்தியனுக்கு ஏராளமான ஆகாரம் ஆகும். அதாவது சுடச்

சுட ரொட்டியும், ஓர் ஆரஞ்சுப் பழத்தின் அளவுக்கு உறைந்த வெண்ணெயும், ஒரு கூஜா அளவிற்குப் பால் அல்லது காப்பியும் கொடுப்பார்கள். இது தவிர, நாமாக வேண்டாம் என்று சொல்லு கிறவரையிலும் மதுரமான ஆப்பிள் முதலான பழங்களையும் கொடுப்பார்கள். இவைகளெல்லாம் ஆகாரத்திற்குத் துணைப் பதார்த்தங்களாகக் கிடைக்கும். நாங்கள்போகும் வழியெல்லாம், அடிக்கடி பழங்களாலே மூடப்பட்டிருக்கும் மரங்களுள்ள தோட் டங்களைப் பார்த்துக்கொண்டே செல்வோம். எல்லாச் செலவு களும் இங்கிலாந்தில் விடக் குறைவு. நாங்கள் கணக்குப் பார்த்த தில், அத்தனைநாட்களும் நாங்கள் லண்டனிலேயே தங்கியிருந்தால் செலவாயிருக்கும் பணத்திற்கே இவ்விதம் சாப்பாட்டுச் செலவு உள்பட இந்த நார்வே யாத்திரை முழுவதும் செய்துவிட்டு வந்தோம் என்று தெரியவந்தது.

குமுதினி: நார்வேயில், உனக்கு, எல்லாவற்றிலும் எது அதிக சந்தோஷத்தைக் கொடுத்தது.

ஜகந்நாதன்: ஒன்றைப் பற்றி மாத்திரம் விசேஷமாகச் சொல்லுவதற்கில்லை. இருந்தாலும் ஒன்று சொல்லுகிறேன். நார்வேயைப் பற்றி ஒருவிஷயம் உனக்குத் தெரிந்திருக்குமே. நம்முடைய நாட்டிலேயே, ஆனி மாதத்தில், சூரியன் அரைமணி நேரம் பிந்தி அஸ்தமனமாகி அரைமணிநேரம் முந்தியே உதய மாய் விடுகிறான். நம்முடைய தேசத்தைக் காட்டிலும் வடக்கே இருக்கிற இங்கிலாந்தில், வெய்யிற் காலத்தில், ராத்திரி எட்டு மணிக்குக் கிடைக்கும் சூரியவெளிச்சத்தில் புஸ்தகம் வாசிக்கலாம், கிரிக்கெட்டு விளையாடலாம். காலையில் மூன்று, அல்லது நாலு மணிக்கே சூரியோதயமாய் விடும். இன்னும் வடக்கே இருக்கிற நார்வேயில் இந்தச் சூரிய கதியை இன்னும் விசேஷமாக எதிர் பார்க்கலாம். அங்கே ஒரு நாள் ராத்திரி பத்து மணிக்கு, சூரிய வெளிச்சத்திலே, இயற்கை அற்புதங்களைக் கண்டது இரட்டிப்பு மடங்கு சந்தோஷமாயிருந்தது. அதற்குப் பிறகு நாங்கள் எல் லோரும் தூங்கப் போனோம். ராத்திரி இரண்டுமணிக்கு சூரிய வெளிச்சத்தைக் கண்டவுடன், நான் என் சிநேகிதர்களைத் தட்டி எழுப்பவே, அவர்கள் பொழுது விடிந்தது என்று எண்ணி, காலை யில் கவனிக்கவேண்டியிருந்த சில காரியங்களைச் செய்யப் போய் விட்டார்கள். நான் மாத்திரம் குளிருக்கடக்கமாகப் போர்த்துக் கொண்டு தூங்கப்போனேன். அது சந்தோஷத்திற்கு வட்டியைச் சேர்த்ததுபோலிருந்தது.

பிரியம்வதை: உன்னுடைய தமையன், பட்டணத்திலிருந்த படியே இந்த மாதிரிக் காரியத்தைச் செய்து விட்டான். ஒரு

தடவை எங்களில் சிலர் காலை மூன்று மணிக்கு எழுந்து ஸ்நானம் செய்துவிட்டுக் காஞ்சிபுரத்திற்குப் போவதாகப் பேசியிருந்தோம். உன் தமையன் ராத்திரி பதினொரு மணிக்கே விழித்து, மற்றவர்களுடைய வீட்டுக்குச் சென்று கதவைத்தட்டி அவர்களை எழுப்பி, "புறப்படுவதற்கு நேரமாகி விட்டது" என்று சொல்லிவிட்டு, வீட்டிற்குத் திரும்பிவந்து, சந்தடி செய்யாமல் படுத்துக்கொண்டு தூங்கிவிட்டான். அவர்கள் எல்லாரும் ஸ்நானம் செய்துவிட்டு, இரவு பன்னிரண்டு மணிக்கே எங்கள் வீட்டிற்கு வந்து கதவைத் தட்டும்போதுதான் நடந்த சமாசாரம் தெரியவந்தது.

நான்: ஓகோ! சற்று முன்னே, எந்தெந்தக் குணங்கள் குடும்பத்திலே வழங்கிவரும் என்று கேட்டாயே, அவைகளுக்கு இரண்டு ஜாப்தா ஏற்படுத்தவேண்டும். தகப்பன் வழிக்காக ஒன்றும், தாயார் வழிக்காக ஒன்றும். இப்பொழுது சொன்னதை முதல் ஜாப்தாவில் சேர்க்கவேண்டாம்.

குமுதினி: உனக்குப் பொதுவில் நார்வே பிடித்ததா, இங்கிலாந்து பிடித்ததா?

ஜகந்நாதன்: இதை அவ்வளவு சுலபமாகச் சொல்லமுடியுமா? ஆனால் ஒன்று சொல்லலாம். நார்வேயிலும், சமுத்திரத்தில் வரும் போதும் ஆகாயம் நிர்மலமாயிருந்தது. நியூகாஸிலில் வந்து சேர்ந்தவுடனே மூடுபனியும், நிலக்கரிப் புகையும் வழக்கப்படி சூழ்ந்து விட்டன. லண்டனைப்பற்றியோ கேட்கவே வேண்டாம். அரைமணி நேரத்திற்குள் வெள்ளை வஸ்திரங்கள் அடையும் ஸ்திதியைச் சொல்லவேண்டியதில்லை. ஆகையினால்தான் வெள்ளை உடுப்புகளைத் தரித்து அவைகள் வெகு சீக்கிரத்தில் அழுக்காய்ப் போவதைக் காட்டிலும் சுபாவத்திலேயே அழுக்கு நிறமுள்ள உடுப்புகளையே ஜனங்கள் புத்திசாலித்தனமாக அணிந்து கொள்ளுகிறார்கள். அவைகளின்மேல் கரி படிந்தால் என்ன? அதை அந்த உடுப்புக்கள் எடுத்துக் காட்டப்போவதில்லை. லண்டனை விட்டு பம்பாய்க்கு வந்து சேர்ந்த பிறகு, இந்தியர்கள் உடுக்கும் பலவித வர்ண வஸ்திரங்களைத் திரும்பியும் காணும்போதுதான் ஆகாயத்திலிருக்கக்கூடிய வான வில்லுகளெல்லாம் சேர்ந்து பூமிக்கு இறங்கி விட்ட மாதிரி முதலில் தோன்றுகிறது.

பிரியம்வதையும் குமுதினியும் தங்களுடைய புடவைகளின் வர்ணங்களை ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டார்கள். நடந்த சம்பாஷணையை எழுதும் பொருட்டு நான் எழுந்து சென்றேன்.

---

# சாஸ்திரம்

## நத்தையின் வயிற்றில் பிறந்த முத்து

ராவ் ஸாகேப் டி. என். எஸ். ராகவாச்சாரி, பி. ஏ.

இழிகுலத்திலே தோன்றி, விசேஷமான கல்விகேள்விகளினால் மேம்பாடடைந்து, ஜனசமூகத்தில் நடுநாயகமாய் விளங்கும் ஒருவனைப்பற்றிப் பேசும்போது அவன் நத்தையின் வயிற்றிற் பிறந்த முத்தெனக் குறிப்பிடுதல் உலகவழக்கு. நத்தை இழிவான ஜந்து என்பதும், முத்து மிகச் சிறந்த ரத்தினமென்பதும் குறிப்பு. நவீன நாகரிகப் போக்கின் காரணமாக, இயற்கைப் பொருள்களைக் காட்டிலும் பகட்டான போலிப் பொருள்கள் தயாரிக்கப்பெற்றுச் சொற்பவிலைக்குக் கிடைக்கின்றன. நவரத்தினங்கள் என்னும் இயற்கைப் பொருள்கள் மிக்க விலையுயர்ந்தவை. போலி வைரம், போலிச்சிகப்பு, போலி வைடூரியம், சூது முத்து முதலியவை தற்காலத்தில் ஏராளமாக ஆபரணங்களாக அணியப்பெற்று வருகின்றன. ஆயினும், இப் போலிமணிகள் தம் இயல்பை வெகு சீக்கிரத்தில் புலப்படுத்திவிடுகின்றன. அவைகளை வாங்குவதிற் செலவிடும் பணம் வீணேயாகும்.

நம் சென்னை இராஜதானியில் தூத்துக்குடியில் சுமார் 7 அல்லது 8 வருஷங்களுக்குமுன் 'முத்துச்சலாபம்'' செய்து முத்துச் சிப்பிகளை மூழ்கியெடுத்து விற்பனை செய்தார்கள் என்பது பலரறிந்த விஷயம். ஆயினும் முத்துச்சிப்பிகள், நத்தைகள், முத்துமணிகள் ஆகியவற்றின் இயற்கையையும் இவைகளுக்குள்ள சம்பந்தத்தையும் குண விசேஷணத்தையும்பற்றி அறிந்துள்ளவர்கள் மிகச் சிலரேயாவர்.

பல்லாயிரம் ரூபாய் விலை மதிக்கப்பெற்ற ஒரு முத்து, நத்தையின் வயிற்றிற்பிறப்பதெப்படி? முத்தையுண்டாக்கக்கூடிய நத்தைகள் ஒருதனிவகையைச் சேர்ந்தனவா அல்லது எல்லா நத்தைகளும் முத்தை யுண்டாக்கும் சக்தி வாய்ந்தனவா? முத்து நத்தைகள் வருடந்தோறும் முத்துக்களை உண்டாக்கி தரக்கூடியனவா? அல்லது சிலவருஷங்களுக் கொருமுறையே முத்துச் சலாபம் செய்வதற்கேற்றபடி வளர்ச்சியடைவனவா? அப்படியானால் ஏன்

அந்த நத்தைகள் பல வருஷங்களுக்கொருமுறையோ இருமுறையோதான் முத்துக்களைச் சேகரித்துத் தருகின்றன? ஒருமுறை சலாபம் செய்தபின் அச்சலாபஞ்செய்த விடத்தில் பல வருஷங்கள் வரையில் நத்தைகளே காணக்கிடைப்பதில்லையே. அது ஏன்? முத்தானது, நத்தையின் வயிற்றில் இயற்கையாகவே உண்டாகும் ஒரு பொருளா? அல்லது, வேறு அந்நியப் பொருளோ, அல்லது ஜந்துவோ நத்தையை வந்தடைவதால் ஏற்படும் சேர்க்கைப் பொருளா? முத்து நத்தையின் (*Pearl oyster*) கிளிஞ்சில் கூட்டிற்குள்ளே புகுந்த சில புழுக்களை நத்தைகள் கொன்று அந்த விடத்திலேயே அடக்கஞ் செய்து அதன்மேற்கட்டிய சமாதியே (கோரி) முத்து. முத்துச்சிப்பி (*Pearl oyster*) என்னும் ஜந்து கரடுமுரடான இரு கிளிஞ்சில்களால் ஆக்கப்பெற்ற கூட்டிற்குள் வாழும் ஒரு நத்தை. இந்நத்தையின் கிளிஞ்சிற்கூட்டின் கிளிஞ்சில் ஒவ்வொன்றும் மூன்று அடுக்குகள் அமையப்பெற்றது. வெளியடுக்கு மிகவும் கரடுமுரடாகவும், உறுதியாகவு மிருக்கும். உட்புறத்து அடுக்கோ பளபளப்பாயும் மிருதுவாகவுமிருக்கும். இவ்வுட்புறத்திற்கே மதர் ஆவ் பேர்ள் (*Mother of Pearl*) அல்லது 'சுக்திபுடம்' என்று பெயர். இக் கிளிஞ்சிற் கூட்டிற்குள் வசிக்கும் நத்தை மிகவும் மிருதுவான ஜந்து. அதன் உடலானது, போர்வை போன்ற ஒரு தோலினால் இருபுறமும் மூடப்பெற்றிருக்கும். அப்போர்வை, இருகிளிஞ்சில்களின் உட்பக்கம் முழுவதும் வியாபித்திருக்கும். இத் தோல்போர்வைதான் (*Mantle*) கிளிஞ்சிலின் உட்பக்கத்தில் 'சுக்திபுடம்' உண்டாக்குங் உறுப்பு. நத்தை மேற்கூறிய சுக்திபுடத்தை எப்படி யுண்டாக்குகிறதென்பது திட்டமாக இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆயினும் சமுத்திர ஜலத்திலுள்ள 'அராகொனைட்' (*Aragonite*) என்னும் உப்புச்சத்தைத் தனது உடலிலிருந்து உண்டாகும் மற்றொரு மூலவஸ்துவோடு கலந்து சுக்திபுடமாகிற பளபளப்பமைந்த பொருளை நத்தை உண்டாக்குகிறது.

நத்தை வசித்துவருமிடத்தில் வேறெவ்வித ஜந்துவோ அல்லது இதரவஸ்துவோ வந்து கிளிஞ்சிற்கூட்டிற்குள் சிக்கிக்கொண்டால், அவ்வஸ்துவின்மேல் சுக்திபுடமாகிற முத்துச்சிப்பித் திரவத்தைப் பூச்சுமேல் பூச்சாகப் பூசி, முத்தாக மாற்றிவிடுகிறது. இந்த மர்மத்தை யறிந்த சீனர்கள், கிளிஞ்சிற்கூட்டைத் திறந்து ஈயத்தாலாக்கப்பெற்ற சிறு புத்தர் சிலைகளை கூட்டிற்குள் வைத்துவிடுவதால் இச்சிலைகளின்மேல் நாளடைவில் முத்துப் பூசப்பெறுகிறது. செவ்வனே பூசப்பட்ட பின்னர் நத்தைக் கூட்டைத் திறந்து முத்து - புத்தரை எடுத்துக்கொள்ளுவார்கள்.

சுத்தமான நல்முத்து இயற்கையில் எப்படி யுண்டாகிறது என்பதைக் கவனிப்போம். மனிதன் உள்பட எல்லா ஜீவஜந்துக்கள்மேலும் — மரத்தின்மேல் புல்லுருவிபோல் — ஒட்டுணியாக வசித்து வாழும் இதர ஜந்துக்களைக் கடவுள் சிருஷ்டித்துள்ளார். நமது வயிற்றில் நாக்குப்பூச்சினும், தலைமயிரில் பேனும், இரத்தத்தில் நோயையுண்டுபண்ணக்கூடிய மலேரியாப்பூச்சியும் ஒட்டுணிகளே (*Parasites*). முத்துநத்தைக்கும் இவ்வித ஒட்டுக்களின் உபத்திரவமுண்டு. இந்நத்தைகளின் கூட்டிற்குள் புகுந்து நத்தையைப் புசிக்க ஒருவகைப் புழுக்கள் வந்து சேரும். அப்பொழுது நத்தை தனது உடலிலிருந்து சுக்திபுடமாகிற முத்துரேக்கைப் புழுக்களின்மேற் பூசிக் கொன்றுவிடுவதல்லாமல், மேன்மேலும் பூச்சுப்பூசுவதால் அப்புழுக்கள் முத்துக்களாக மாறிவிடுகின்றன. எனவே முத்தானது புழுவின் சமாதியாகிறது. நத்தைக்கிளிஞ்சிற்குள் புகுத்தப்படுகிற மணல், சிறுகல், முதலிய அந்நிய வஸ்து எதுவும் மேற்கூறிய விதம் முத்தாக்கப்படும். என்றாலும், புழுக்களின்மேல் பூச்சு ஏறுவதால் ஆக்கப்பெறும் முத்துக்களே விலையுயர்ந்தவை; பரிசுத்தமான நல்முத்தென மதிக்கப்பெறுவனவும் அவைதாம்.

ஒரு புழுவின்மேல் முதற்பூச்சுப் பூசியவுடன், அப்புழுவின் சமாதி ஏறக்குறைய புழுவின் உடலின் வடிவத்தை யொத்திருக்கும். ஆனால் மேன்மேலும் சுத்திபுட மாகிற (*Nacre*) முத்துப்பூச்சு ஏறுவதனால் பந்துபோன்ற உருண்டையான வடிவடைந்து, முத்து பார்ப்பதற்கு உருண்டையாகவும் அழகாகவும் மாறுதலடைகிறது. எவ்வளவுக் கெவ்வளவு முத்து உருட்சியாகவும் பருமனாகவும் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு விலையுயர்ந்ததாகிறது. சில சமயங்களில் முத்துக்கள் சிப்பியில் ஒட்டிக்கொண்டிருக்கும். அப்படி யொட்டிக்கொண்டிருக்கும் சிப்பியும் மிகப் பளபளப்பாகவிருக்கும். முத்துக்கள் ஒட்டிக்கொண்டிருந்த இடமும் நன்கு புலப்படும். சிப்பியில் ஒட்டிக்கொண்டிருந்த முத்துக்களைக்காட்டிலும், நத்தையின் மிருதுவான உடலிலிருந்து கிடைக்கும் முத்துக்களே சிலாக்கியமானவை.

முத்துநத்தைகள் சமுத்திரத்தில் பற்பல இடங்களிலும் வசிக்கின்றன. ஆஸ்ட்ரேலியா கண்டத்தின் வடக்கேயுள்ள சமுத்திரத்தில் இவை காணப்படுகின்றன. பர்ஷியா தேசத்துக்கருகிலுள்ள பர்ஷியன் வளைகுடாவில் முத்துச் சலாபம் வருஷந்தோறும் நடக்கிறது. இலங்கைத் தீவில் முத்துச் சிப்பிகள் சில வருஷங்களில் மட்டுமே சலாபம் செய்யப்படுகின்றன. தென்னிந்தியாவில் தூத்துக்குடியில் சென்ற இருபது வருஷங்களில் மூன்று

தடவைதான் முத்துக் குளித்திருக்கிறார்கள். இலங்கைத் தீவில் நடத்தும் முத்துச் சலாபத்தில் மிக விலையுயர்ந்த முத்துக்கள் கிடைப்பதுண்டு.

முத்துத் தரும் நத்தைகள் சமுத்திரத்தில் 50 அடிக்குமேல் 75 அடி ஆழத்தில் சாதாரணமாக மணற்பாங்கான சரிவுள்ள திட்டுக்களில் வசிப்பன. முத்துக்குளிப்பவர்கள் தண்ணீருக்குள் முழுகிக் கிளிஞ்சிற்கூட்டுடன் நத்தைகளை வாரிக் கூடைகளிற் போட்டுக்கொண்டு 2 நிமிஷத்திற்குள் மேலே வந்துவிடுவார்கள். இலங்கையில் நடக்கும் முத்துக்குளிப்பில் ஒரு மாதத்தில் சுமார் நான்கு கோடி முத்துச்சிப்பிகள் வெளிப்படுத்தப்பட்டு கரைக்குக் கொண்டுவரப்படுகின்றன. ஒரேநாளில் 45 லக்ஷம் சிப்பிகள் ஒரு தடவை கிடைத்தனவாம். இவ்விதமாகக் கோடிக் கணக்கான நத்தைகள் வெளிப்படுத்தப்பட்டும், மேன்மேலும் அவைகள் குஞ்சுபொரித்து வளர்ந்துவருகின்றன. சில வருஷங்களுக்குமுன் சர்க்கார் அதிகாரிகள் ஒரு முத்துச்சலாபக் கரையிலிலுள்ள குஞ்சுநத்தைகளைக் கணக்கிட்டுப் பார்த்ததில், (100 000 000 000) நூறுலக்ஷங் கோடிக்கதிகமான குஞ்சுகள் இருந்ததாக மதித்துள்ளனர்.

கிளிஞ்சிற்கூட்டில் வசிக்கும் நத்தைகளில் பலவிதமுண்டு. ஒரு வகை நத்தை உணவுக்கேற்றது. இந்நத்தைகள் ஒரே இடத்தில் வசிப்பவை. இடம் விட்டு இடம் மாறும் திறன் அற்றவை. முத்து நத்தைகளோ ஒரே இடத்தில் வசிப்பனவல்ல. தாம் வசிப்பதற்கேற்றதோர் கரையை நாடி யடைந்தவுடன் இந்நத்தைகள் பருத்திநூல்போன்ற சில நுட்பமான சரடுகளால் மணலில் வேரூன்றி அவ்விடத்திலேயே வசிக்கும். அவ்விடத்தை விட்டு வேறோரிடம் செல்லவேண்டுமானால் மணலில் புகுத்தியுள்ள நுண்ணிய வேர்கள்போன்ற சரடுகளைக் கழற்றிக்கொண்டு சஞ்சரிக்கும். அவை இப்படி இடம் மாறுவதற்குக் காரணம் தாங்கள் உயிர்வாழ்வதற்குத் தேவையான ஆகாரத்தைத் தேடிக் கொள்ளுவதே யாகும்.

முத்துக்குளிப்பவர்கள் படகுகளில் ஏறிக்கொண்டு சமுத்திரத்தில் கொஞ்சதூரம் போய், தண்ணீருக்குள் முழுகிச் சிப்பிகளைச் சேகரித்துப் படகில் ஏற்றிக்கொண்டு கரை சேர்வதற்கு முன், சிப்பிகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் கற்கள், பூண்டு முதலியவைகளை அப்புறப்படுத்திக் கரை சேர்ந்தவுடன் சர்க்கார்க் கட்டடமொன்றுக்குள் சிப்பிகளைக் கொண்டுவந்து சேர்ப்பார்கள். இவ்விதம் சேகரிக்கப்பட்ட முத்துச்சிப்பிக் குவியல்களை மூன்று பாகமாகப் பிரித்து, இரண்டு பாகத்தைச் சர்க்கார் எடுத்துக்கொ

ண்டு ஒருபாகத்தை முத்துக்குளித்தவர்களுக்குக் கொடுத்துவிடுவார்கள். முத்துக் குளித்தவர்கள் இப்பாகத்தைத் தங்களுக்குட் பகிர்ந்துகொள்வர். சர்க்கார் தங்கள் பாகத்தை சுமார் ஐம்பதினாயிரம் சிப்பிகள் சேர்ந்த குவியல்களாக ஏலம் போடுவர். ஏலத்தில் வாங்குபவர் சிப்பிகளை எடுத்துப் போய் ஒருவாரம் நல்ல தண்ணீரில் ஊறப்போட்டு, நத்தைகள் இறந்து மக்கிப்போனபின், கிளிஞ்சிற்கூடுகளை யுடைத்து முத்துக்களை யெடுத்து விற்பார்கள்.

சாதாரணமாக முத்துச் சலாபம் ஓரிடத்தில் இரண்டு மாதங்களுக்குமேல் நடைபெறாது. நத்தைக் குஞ்சு பொரித்து நான்கு வருஷம் வளர்ந்த நத்தைகளிலிருந்து கிடைக்கும் முத்துக்கள் தாம் நன்றாகத் தேறி விளைந்த நல்முத்துக்கள். நான்கு வருஷத்துக்குட்பட்ட வயதுடைய நத்தைகளின் முத்துக்கள் சிலாக்கியமானவையல்ல. ஏழுவருஷங்களுக்குமேல் முத்துநத்தை வயோதிகமடைந்து விடுவதால், ஏழுவயதிற்குமேல் அவைகள் முத்துக்களையுண்டுபண்ணுஞ் சக்தியை இழந்து காலகதியடைகின்றன.

முத்துக்குளிப்பவர்களுக்கு உண்டாகக் கூடிய விபரீதங்கள் பல. முத்துச்சலாபக்காலத்தில் முத்துக்குளிப்பவன் ஒவ்வொருவனும் தினந்தோறும் சுமார் 40 அல்லது 50 தரம் தண்ணீருக்குள் முழுகி வெளிவருவான். ஆகவே அவனது சுவாசாசயத்துக்கு நிச்சயமாகக் கெடுதியும் சுகக்குறைவும் ஏற்படும். தண்ணீருக்குள் முழுகி யிருக்கும் சமயத்தில் சுறுமீன்கள் அவனை யடித்துக் கொன்றுவிடுவதும் உண்டு.

முத்துக்கள் சிறு மிளகுப் பிரமாணமுதல் பெரியகோழி முட்டையின் பிரமாணம்வரையில் பற்பல பிரமாணங்களிலும் வடிவங்களிலும் கிடைக்கின்றன. எனினும் சாதாரணமாகச் சுண்டைக்காய்ப் பருமனுள்ள முத்துக்கள் தாம் நூற்றுக்கு 30 வீதம் கிடைப்பன. எஞ்சிய எழுபதில் அறுபத்தொன்பது மிளகளவுள்ளவையே. எனவே நூற்றிலொன்றுதான் சுண்டைக்காய்க்கும் பெரிதாகக் கிடைக்கக் கூடியது.

ஸ்காட்லாந்து தேசத்து நீரோடைகளில் வசிக்கும் நத்தைகள் (*Mussel*) சிலவற்றிற்குள்ளும் முத்துக்கள் விளைவதுண்டு. இம்முத்துக்கள் சுமார் நூறு வருஷங்களுக்கு முன்பு கண்டெடுக்கப்பட்டுச் சிலாகிக்கவும் பெற்றன. ஆனால் தற்காலத்தில் இம்முத்துக்களைப்பற்றி விசேஷமான ஊக்கமிருப்பதாகத் தெரியவில்லை. இந்நத்தைகளிலுண்டாகும் முத்துக்களும் கடல்வாழும் முத்துநத்தையிலுண்டாகும் முத்துக்களைப் போலவேதான் உற்பத்தியாகின்றன.

# மந்தவாயுவின் இன்றியமையாமை

"கிருஷ்ணன்"

---

பூமியைச்சுற்றி இருக்கும் காற்றுவெளியில் சுமார் நூற்றிற்கு 80 பங்கு மந்தவாயுவாக இருக்கிறது. ரசாயன சாஸ்திர ஆராய்ச்சியின் ஆரம்பதசையில் இதற்குத் தக்க பெயர் ஒன்றும் தோன்றவில்லை. இது சுறுசுறுப்பற்று, யாதொருவிதத் தொழிலும் பயனுமேயின்றி, ரசாயன கலப்புவஸ்துக்களில் சேராமலுமிருந்ததன் நிமித்தம் இதற்கு 'மந்தவாயு' என்று பெயரிட்டனர். பின்பு சுறுசுறுப்பற்ற காற்றுக்களான ஆர்கான், ஹீலியம், க்ரிப்டான், நியான், க்சீனன் முதலியவை கண்டுபிடிக்கப்படவே, இவைகளடங்கிய சோம்பேறி மடத்திற்கு இம்மந்தவாயுவைத் தலைவனாக வைத்து இதைப்பற்றி அதிகக் கவனம் செலுத்தாமல் இருந்தனர். ஆனால் இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இதன் மேன்மையும், இது மனிதன், விலங்கினங்கள், தாவரங்கள் முதலிய எல்லா வகையான உயிர்வாழ்வனவற்றிற்கும் இன்றியமையாத பொருள் என்னும் உண்மையும் நன்றாக விளங்கலாயின. இவ்வுலகில் பொருளாதார வளர்ச்சிக்கும், மனிதவர்க்கம் பசிப்பிணியின்றி இருத்தற்கும் இது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது.

உயிர் வளர்ச்சிக்கு அவசியமான மூலப்பொருள்களில் மந்தவாயுவும் ஒன்று. ஜீவிகளின் உணவிலிருந்து இந்தப்பொருளை விலக்கிவிட்டால் அவைகள் நோய்ப்பட்டு, பலங்குன்றி, இறக்க நேரிடும். விலங்குகளையும் தாவரங்களையும் உண்டு மனிதன் உயிர் வாழ்கிறான். விலங்குகள் மற்ற விலங்குகளையோ தாவரங்களையோ புசித்து வாழ்கின்றன. தாவரங்களோ பூமியையே நம்பி அதிலிருந்து கிடைக்கக்கூடிய உணவுப்பொருள்களை உண்கின்றன. ஆதலால் மனிதனும் விலங்குகளும், இவை இரண்டினால் உண்ணப்படும் தாவரங்கள் எல்லாமும் மண்ணையே நம்பி வாழ்கின்றன. மண்ணே நம் பிறந்தகம்; மண்ணே நம் உணவு; மண்ணே நம் இருக்கை; மண்ணே நம் சமாதி. இப்படி எல்லாவகையான உயிர்ப்பிராணிகளும் மண்ணையே நம்பியிருப்பது பெரும் விந்தையல்லவா!

தாவரங்கள் மண்ணிலுள்ள மந்தவாயுவைத் தம் வேர்களின் மூலமாகப் புசிக்கின்றன. அவைகளுக்கு இது இன்றியமையாத உணவுப்பொருள். ஆனால் இம்மண்ணை மந்தவாயு எப்படி அடைகிறது? இதற்குப் போதியஅளவு மந்தவாயு எங்கிருந்து கிடைக்கிறது? ஆராய்ந்ததில், நம்முடைய பூகோளத்தைச் சுற்றியிருக்கும் காற்றுவெளியிலிருந்துதான் கிடைக்கிறதென்று விஞ்ஞானிகள் தீர்மானித்திருக்கின்றனர். நம் மண்ணுலகத்தில் காற்றுவெளி உண்டான காலம் முதற்கொண்டு பல்கோடி நூற்றாண்டுகளாக வானத்தில் ஏற்பட்ட கணக்கிலடங்கா மின்னல்கள் காற்றுவெளியிலுள்ள மந்தவாயுவையும் பிராணவாயுவையும் இணைத்து, நைட்ரிக் திராவகத்தை உண்டுபண்ணி, அந்தத் திராவகத்தை மழைஜலத்தில் கரைத்து, வானத்திலிருந்து மண்ணுலகிற்குக் கொணர்ந்து, பல்லாயிரம் ஆண்டுகளாக மண்ணையடைவிக்கிறது. இத்திராவகத்தைத் தாவரங்களிலும் மண்ணிலுமுள்ள கோடானுகோடி அணுஜீவிகள் உண்டு மனித சமுதாயத்திற்கும் விலங்கினங்களுக்கும் உணவை யளிக்கின்றன. இக்காரியமும் கடவுளின் மாயா சக்திகளில் ஒன்றல்லவா! கேவலம் உணவுப்பொருள்களுக்காக மட்டுமல்ல நாம் மண்ணை நம்பி இருப்பது. மற்றும் நவநாகரிகத்தில் மந்தவாயுவின் சேர்க்கையினாலாகிய பற்பல அழகிய சாயவகைகளும், நோயற்ற வாழ்விற்கு இன்றியமையாத மருந்துகளும், அநேக வாசனைப்பொருள்களும், போர்க் கருவிகளான துப்பாக்கிரவைகள், பீரங்கிக்குண்டுகள், மருந்துகள் எறிகுண்டுகள், விஷப்புகைகள் முதலியவும் மந்தவாயுவால்தான் தயாரிக்கப்படுகின்றன.

மண்ணிடத்துள்ள மந்தவாயுவை நாம் எடுக்கும் அளவு மண்ணானது இயற்கையிலிருந்து அதைப் பெறும் அளவைக்காட்டிலும் மிகுதியாக இருக்கிறது. இதனால் மண்ணின் வளம் குன்றித் தாவரங்கள் மேன்மையடையப் போதிய உணவு இல்லாமற்போகிறது. இயற்கைத் தாய் மண்ணிற்குக் கொடுக்கும் மந்தவாயுவின் அளவிற்கு வரம்பு இருக்கிறது. உலகில் ஜனத்தொகை நாளடைவில் மிகுந்துகொண்டே வருகிறது. நாகரிகம் முற்ற முற்றப் பொது ஜனங்களின் வாழ்க்கைநிலையும் உயர்ந்துகொண்டிருக்கிறது. மேல்நாட்டு அரசியல்கள் போர்முஸ்தீப்புகளைப் பன்மடங்கு பெருக்கிக் கொண்டு வருகின்றன. ஆகையால் பசிக்குத் தக்க உணவுப்பொருள்கள் இல்லாமற் போய்விடும் போலிருக்கிறது. உலகச்செயல்கள் மண்ணையும் மண்ணிலிருந்து கிடைக்கும் மந்தவாயுச் சேர்க்கையாலான பொருள்களையும் பொறுத்திருப்பதால், மண்ணின் வளத்தைப் பெருக்கவேண்டியது விஞ்ஞானிகளின் கடமை.

இதை உணர்ந்த ஐரோப்பியர் அமெரிக்கர் முதலான மேல் நாட்டார் மந்தவாயுச்சேர்க்கையான செயற்கை எருக்களைச் சில ஆண்டுகளாக உபயோகித்துத் தாவர உற்பத்தியையும் உணவுப் பொருள்களின் அளவையும் பெருவாரியாக விருத்திசெய்து வருகிறார்கள்.

நிலக்கரியைக் காய்ச்சும் தொழிலில் துணைப்பொருளாகக் கிடைத்துவந்த அம்மோனியம் ஸல்பேட் என்னும் நவச்சார கந்தகத்தைச் செயற்கை எருவாகப் பயன்படுத்துகிறார்கள். உலகம் வேண்டுமளவு எரு இம்முறைகளில் கிடைப்பதில்லை. தென்னமெரிக்காக் கண்டத்தில் சிலி என்னும் மாகாணத்தில் இயற்கை யாகவே சிலி சால்ட் பீடர் என்னும் நவச்சார கந்தகம் இருப்பதாகக் கண்டுபிடித்து அதை உபயோகிக்கலாயினர். ஆனால் இதன் அளவும் உலகம் வேண்டும் அளவிற்கு வருங்காலத்தில் போதாது போய் விடும். இது இன்னும் நாற்பது ஆண்டுகளுக்குள் தீர்ந்து போய் விடும் என்று விஞ்ஞானிகள் கணக்கிட்டனர். ஆதலால் உலகிலுள்ள எல்லாவகையான பண்ணைத்தொழிலாளிகளும், கைத்தொழிலாளிகளும், இச்சிறு மாகாணத்திலுள்ள சிலி சால்ட் பீடரை எதிர்பார்ப்பது என்பது தவறான காரியம். செயற்கை நவச்சார கந்தகமும் இயற்கை சால்ட்பீடரும் இவ்வாறாகக் குறைந்து கொண்டே வந்தால் உலகில் உணவுப் பொருள்களின் பஞ்சம் ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் விஞ்ஞானிகளுக்குள் ஏற்பட்டது. தவிர ஜெர்மானியர்களும் சிலி நைடருக்கு முதலாளிகளான ஆங்கிலேயரை எதிர்பார்க்காமல் தம் நாட்டிலேயே துப்பாக்கி மருந்து, வெடியுப்பு, எருவகைகள் முதலியவற்றைத் தயார்செய்யவேண்டிய நெருக்கடியான நிலைமை ஏற்பட்டது. இவ்விதமான சந்தர்ப்பத்தில் ஜனங்கள் ரசாயன சாஸ்திரங்களின் உதவியை நாடினர். ஜெர்மனி அரசாங்கத்தார் தம் நாட்டில் இருந்துகொண்டே வெடியுப்பு, எருவகைகள், துப்பாக்கிமருந்து முதலியவற்றைச் செய்விப்பதற்குத் தூண்டுகோலாக பெரிய பரிசுகளை ஏற்படுத்தினர். கடைசியில் விஞ்ஞானிகள் மிகுந்த பாடுபட்டு மனிதனுடைய பசிப்பிணியையும் உணவுப் பஞ்சத்தையும் அறவே ஒழிக்கக்கூடிய எளிய முறையொன்றைக் கண்டுபிடித்தனர். அதை முதலில் கண்டுபிடித்த பேரறிஞருக்கு மனமார்ந்த நன்றியைச் செலுத்துவது நமது கடமையாகும்.

பூமியைச்சுற்றியுள்ள காற்றுவெளியில் வேண்டியஅளவு மந்தவாயு தயாராக இருக்கிறது. அதைச் சரியானபடி பயன்படுத்துவது விஞ்ஞானிகளின் கடமை. இது எல்லா நாட்டினருக்கும்

பொதுவான பொருள். யார்வேண்டுமானாலும், எவ்விடத்திலிருந்துகொண்டும், எவ்வளவுவேண்டுமானாலும், இதைப்பிரித்துத் தமக்கு வேண்டியமட்டில் பயன்படுத்திக் கொள்ளுவதற்கு ஒருவரும் தடைசெய்யமுடியாது. ஆனால் காற்றில் இது பிறபொருளுடன் சேராத மூலப்பொருளாக இருக்கிறது. மற்ற வாயுக்களுடன் பௌதிகக் கலப்பாக இருக்கிறதேயொழிய ரசாயனச் சேர்க்கையுள்ளதாக இருக்கவில்லை. ஆகையால் இதை மற்ற மூலப்பொருள்களுடன் சேர்க்கவேண்டும். அப்படிச் சேர்க்கப்பட்டாலொழிய இதனால் யாதொரு பயனும் உண்டாகாது. இதற்காக, விஞ்ஞானிகள் இயற்கையில் நடக்கும் செயலை ஒட்டியே மனிதவர்க்கத்திற்குப் போதிய அளவு மந்தவாயு சேர்ந்த பொருள்களைத் தயார் செய்கின்றனர்.


அநேக ஆண்டுகளுக்கு முன் காவண்டிஷ் (*Cavendish*) என்னும் ஆங்கிலேய விஞ்ஞானி, தம் ஆராய்ச்சிகளில் உண்டாக்கப்படும் சிறு மின்சாரத் தீப்பொறிகளின் தன்மையை அறிந்தபோது, இவைகளினால் பிற்காலத்தில் மனிதவர்க்கத்தின் தினசரி உணவுப்பொருள்களையும்கூடத் தயாரிக்க முடியலாம் என்று கூறினார். வானத்தில் திரியும் மேகங்களில் ஒவ்வொரு விநாடியிலும் எவ்வளவோ ஆயிரம் மின்னல்கள் ஏற்படுகின்றன. மின்னல்கள் என்பது இயற்கையில் ஏற்படும் மின்சாரத் தீப்பொறிகளே. இவை காற்றிலுள்ள பிராணவாயு, மந்தவாயு இவைகளை நைட்ரஜன் பெராக்ஸைட் என்னும் ரசாயனப்பொருளாகச் செய்கின்றன. இது மழைநீர்த் திவலைகளில் கரைக்கப்பட்டு பூமியை அடைந்து மண்ணை வளப்படுத்துகிறது. இந்த உண்மை வெகுகாலத்திற்கு முன்பே கண்டறியப்பட்டது. நம் பள்ளிக்கூடத்திலுள்ள ஆராய்ச்சிக்கழகத்திலுங்கூட மின்சாரத் தீப்பொறிகளை உண்டாக்கி ஆராய்ச்சிகளைச் செய்து பார்த்தால், காற்றிலுள்ள பிராணவாயுவும் மந்தவாயுவும் ஒன்று சேர்வதால் நைட்ரிக் திராவகத்தின் நெடி உண்டாவதை நாம் உணரலாம். இம்மாதிரி இயற்கையின் செயலை அநுசரித்துக் காற்றிலிருந்து இதர வாயுக்களை நீக்கி, எஞ்சி நிற்கும் பிராண மந்தவாயுக்களைச் சரியான அழுத்தம், வெப்பநிலை முதலியவற்றுக்கு உட்படுத்தி சுமார், 3000 முதல் 5000 வரை வோல்டுகள் கொண்ட மின்சாரத் தீயின் சூட்டின் உதவியைக் கொண்டு அவைகளை ரசாயன முறையில் சேரும்படி செய்தால், அவை நைட்ரஜன் பெராக்ஸைட் (*Nitrogen Peroxide*—$NO_2$) ஆக மாறி ஜலத்தில் கரைந்து நைட்ரிக் திராவகமாக ஆகிவிடும். இதை ஜெர்மனியில் முதன் முதலில் (*Birkeland and Eyde Process, Haber*

*Process* என்னும்) இருமுறைகளில் தயார்செய்து அதிலிருந்து நவச்சாரவாயு, அநேகவகையான உரங்கள், உப்புக்கள் முதலியன தயார் செய்கிறார்கள். இம் முறைகளுக்கு மிக்க வன்மைவாய்ந்த மின்சாரம் தேவையாக விருப்பதால், மின்சார சக்தியைச் சுளுவாகக் குறைந்த செலவில் உண்டாக்கும் நார்வே, ஸ்வீடன், ஜெர்மனி முதலிய மேல்நாடுகளில் இம்முறை கையாளப்படுகிறது. நமது நாட்டிலுங்கூட மின்சாரசக்தி சௌகரியமாய்க் குறைந்தவிலைக்குக் கிடைக்கத்தொடங்கியிருப்பதால், நம் நாட்டிலும் முதலாளிகள் பெரியதொழிலாலைகளை உண்டாக்கி ஏராளமான உப்புவகைகளையும், செயற்கை எரு முதலிய மந்தவாயு சம்பந்தப்பட்ட பொருள்களையும் உண்டாக்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மந்தவாயுவானது தன் பெயருக்குத் தக்கவாறு தன் தனிமையான நிலையில் மிகவும் சோம்பேறியாய் மற்ற மூலப்பொருள்களுடன் சுளுவாய்க் கலவாமல் நிற்கிறது. ஜோதிடர்கள் புதன் என்னும் கிரகத்தைப்பற்றிச் சொல்லும்போது, அது பாபிகளுடன் சேர்ந்தால் ஜாதகனும் பாபியாகிவிடுகிறான் என்றும், சுபர்களுடன் சேர்ந்தால் நல்லவனாகிவிடுகிறான் என்றும் சொல்லுவார்கள். அதுபோல் இந்த மந்தவாயு உயிர்ப்பிராணிகளனைத்திற்கும் முக்கியமானதும் அத்தியாவசியமுமான பிராணவாயுவோடு கலந்தால் இது நல்ல ஜீவாதாரப் பொருளாக ஆகிறது. ஆனால் இது, கந்தகம், வெடியுப்பு, கரிப்பொடி, க்ளோரீன், முதலிய பாபிகளுடன் சேர்ந்தால், உயிரை மாய்க்கும் மிகக்கொடிய வெடிமருந்தாகவும் மாறிவிடுகிறது. மந்தவாயு சம்பந்தமில்லாத உணவுப்பொருள்களே அநேகமாக இல்லை; மந்தவாயு சம்பந்தப்படாத வெடிமருந்துகளே கிடையாது.

---

| | | |
|---|---|---|
| அணுஜீவிகள் | — | *Microbes* |
| துணைப்பொருள்கள் | — | *By-products* |
| காற்று வெளி | — | *Atmosphere* |
| சுறுசுறுப்பற்ற | — | *Inert* |
| மின்சாரத் தீப்பொறி | — | *Electric Spark* |



# விஷ விருக்ஷம்

பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாய

(457-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## இருபத்தாறுவது அத்தியாயம்

### யாருக்கு இது அஸம்மதம்?

கமலமணி கடிதத்தைப் படித்தாள். “‘எந்த விஷயத்தில் இது தவறு’ என்று கேட்கிறாய்?” என்று பெருமூச்சுடன் தன்னுள்ளேயே சொல்லிக்கொண்டாள். “இந்தக் கேள்விக்கு ஸர்வேச்வரனால்தான் பதில் தரமுடியும்! புருஷாளுக்கு இந்த விஷயமெல்லாம் புரியாது. எது எப்படியானாலும் சரி, மந்திரி, நீர் தயாராக வேண்டும். நாம் சீக்கிரம் கோவிந்தபுரம் சென்று அறிந்துவருவதே உத்தமம்” என்றாள் தன் புருஷனை நோக்கி.

ஸ்ரீச: அந்தக் கல்யாணத்தை உன்னால் நிறுத்திவிட முடியுமோ?

கமல: அப்படி என்னால் முடியாதுபோனால், அண்ணாவின் காலடியில் உயிரை விட்டுவிடுகிறேன்.

ஸ்ரீச: அது அழகல்ல. நீ அந்தமாதிரி போய்விட்டால் நானும் குழந்தையும் போகிற கதி? புது நாட்டுப்பெண்ணின் மூக்கை அறுத்து வருவதுதான் சிலாக்கியம்.

இருவரும் கோவிந்தபுரத்திற்குச் செல்ல ஆயத்தமாயினர். மறுநாள் காலையில் அவர்களுடைய படகு கோவிந்தபுரத்தை நோக்கிப் புறப்பட்டது. படகும் யதாஸமயத்தில் அவ்வூரையடைந்தது.

மாளிகையை அடையுமுன்பே வீட்டைச் சேர்ந்தவர் சிலரும், கிராமத்துப் பெண்டுகளும் கமலமணியை அழைத்துச் செல்லத் துறைக்கு வந்திருந்தனர். நகேந்த்ரனுக்குக் கல்யாணம் நடந்ததா இல்லையா வென்று அறியக் கமலமணிக்கும் அவள் கணவனுக்கும் பேராவல். ஆனால் அதை அவர்கள் அடக்கிக்கொண்டனர். அண்ணன் செய்யும் இந்த வெட்கக்கேடான காரியத்தைப் பிறரிடமிருந்து தெரிந்துகொள்வது கேலிக்கு இடமில்லையா?

வேதனையுள்ளவளாய், கமலமணி அந்தப்புரத்தினுள் பிரவேசித்தாள். அவளுக்கு ஏற்பட்ட கவலையில் குழந்தை ஸதீசைக்

கூட கவனிக்கவில்லை. அவன் பின்னால் தங்கிவிட்டான். அந்தப் புரத்தை அடைந்ததும் பொறுமை இழந்தவளாய் அவள் அங்கு இருந்தவர்களைப் பார்த்து, "ஸூர்யமுகி எங்கே?" என்று திகிலுடன் கேட்டாள். அவள் பயந்ததெல்லாம் எதற்கு? யாராவது ஒருவேளை 'கல்யாணம் நடந்தாகிவிட்டது. அதனால் ஸூர்யமுகி மனம் உடைந்து மரித்துவிட்டாள்' என்று சொல்லப்போகிறார்களோ என்பதற்காகவே.

நல்லகாலம், "ஸூர்யமுகி சயனஅறையில் இருக்கிறாள்" என்ற செய்திவந்தது. கமலமணி அவ்வறையை நோக்கித் தாவிச்சென்றாள்.

உள்ளே நுழைந்ததும் முதலில் யாருமே அவள் கண்களுக்குத் தென்படவில்லை. சிறிது நாழிகை இங்குமங்கும் தேடினாள். கடைசியில் அறையின் ஒருமூலையில் மூடிய சாளரத்தின் பக்கலில் முகத்தைத் தழைத்துக்கொண்டு ஸூர்யமுகி உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். காலடிச்சப்தம் கேட்கவே ஸூர்யமுகியும் நிமிர்ந்து பார்த்தாள். அவளைப் பார்த்ததும் கமலமணிக்கு என்ன விசாரிப்பதென்று தோன்றவில்லை. தேவதாருவை நிகர்த்த ஸூர்யமுகியின் தேகமானது வில்லைப்போல் வளைந்து வாட்ட மெய்தி எலும்பும் தோலுமாய் விளங்கிற்று. அவளுடைய மலர் விழிகள் குழிவிழுந்து கிடந்தன. வட்டமதிபோன்ற அவளுடைய வதனமண்டலம் நீண்டு அழகே போய்விட்டமாதிரி தோன்றியது. இந்த லக்ஷணக்குறைவுகளைக் கண்டுதான் கமலமணி அந்தக் கல்யாணம் நடந்துவிட்டதென்று கருதி "எப்போ மன்னி, நடந்தது?" என்று கேட்டாள். ஸூர்யமுகியும் அதே கம்மின குரலில் "நேற்று" என்றாள். அப்புறம் இருவரும் வெகுநேரம்வரை அவ்விடத்திலேயே புலம்பிக் கண்ணீர் சிந்திகொண்டிருந்தனர். ஸூர்யமுகி கமலமணியின் மடியில் தன் முகத்தை மறைத்துக்கொண்டு தேம்பித்தேம்பி அழுதாள். கமலமணியின் கண்ணீர்த்துளிகள் அவளுடைய மார்பையும், கருநீலக் கூந்தலையும் ஈரமாக்கின.

அப்போது நகேந்த்ரன் தன் பைடக்கானா*வில் உட்கார்ந்துகொண்டு என்னயோசனையில் ஆழ்ந்திருக்கிறான்?—'குந்தநந்தினி! குந்தா, குந்தா, உயிரினும் இனிய என் குந்தநந்தினி, மனோன்மணி, நீயே எனக்கு உரியவள்'—இம்மாதிரி குந்தஸ்மரணையில்தான்.

அருகில் ஸ்ரீசன் தன் மைத்துனனையே சற்றுநேரத்திற்கு ஒருதரம் கடுகடுத்து நோக்கியவண்ணம் மௌனமாக வீற்றிருந்தான். இவர்களிடையே ஸம்பாஷணையோ, நடந்தேறிய விவாகத்தைப் பற்றிய பேச்சோ, ஒன்றும் ஏற்படவில்லை. தன் நண்பன் ஸ்ரீசன்

*ஸல்லாபக்ருஹம்.

தன்னை வெறித்துப் பார்க்கும்போதெல்லாம், நகேந்த்ரன், 'ஸூர்யமுகியே முனைந்து எனக்கு இதைச்செய்து வைத்தாள். அவளே தடை கூருமல் இருந்தபோது, பின் வேறு யார் ஆக்ஷேபனை கூற முடியும்?' என்று எண்ணுவான்.

## இருபத்தேழாவது அத்தியாயம்

### ஸூர்யமுகியும் கமலமணியும்

பொழுது இறங்கிவந்தது; மாலையும் மங்கிற்று. சற்றுத் துயரம் ஆறினதும், ஸூர்யமுகிக்கும் கமலமணிக்கும் தங்கள் மனதில் தோன்றுவதைப் பரஸ்பரம் வெளியிட ஆவல் ஏற்பட்டது. தன் மதனியின் வாயிலிருந்தே நகேந்த்ரனுக்கும் குந்தநந்தினிக்கும் நடந்தேறிய விவாகத்தின் விருத்தாந்தம் அனைத்தும் கமலமணி அறியலானுள். ஸூர்யமுகி சொல்வதைக் கேட்டுக் கமலமணி வியப்புற்றவளாய் "இந்தக் கல்யாணம் உன்னுலேதான் ஏற்பட்டது. உன் ம்ருத்யுவை நீயே வலுவில் அழைத்துக்கொண்டாய்" என்ருள்.

ஸூர்யமுகி வறண்ட சிரிப்புச் சிரித்துவிட்டு, "நான் என்ன? நான் யார், தடைசொல்வதற்கு?" என்ருள். மறுபடியும் அதே முறுவல் அவள் முகத்தில் குன்றித் தென்பட்டது. மழை ஓய்ந்ததும் வானக்கோடியில், ஒதுங்கின மேகத்திடை மின்னல் கீறுவது போல் இருந்தது, அந்தச் சிரிப்பு. "நான் யாரோ, இனிமேல் நான் எதற்கு உபயோகம்?..போ, கமலமணி, ஒருதரமாவது உன் அண்ணவைப் பார்த்துவிட்டு வா....முகம்குளிர்ந்து இரண்டொரு வார்த்தை பேசிவிட்டு வா....இந்தக் காரியம் அவருக்கு எவ்வளவு இன்பத்தைத் தந்திருக்கிறது என்று உனக்கு அப்பொழுதுதான் புரியும். அவர் சுகப்படுவதைக் காணுமல் பின் வேறெதற்கு இந்தக் கண்? அதனுல் அல்லவோ என் வாழ்க்கை ஸபலமடைகிறது. அரைநாழிகையாகிலும் அவர் மனக்கிலேசப்படுவதைப் பார்க்க நான் தாளமாட்டேன். என் உயிரை வேண்டுமானுலும் விட்டு அவர் ஸுகமாய் வாழ நான் வழி தேடுவேன். பகலும் இரவும் அவரை ஏதோ ஒரு வேதனை உள்ளூற வருத்திக்கொண்டிருந்தது. அதை என்னிடம் சொல்லவில்லை. என்னையும், சுற்றத்தாரையும் துறந்துவிட்டுப் போய்விடுவதாகக் கூறினபோது, நான் எப்படி சும்மா இருப்பேன்? அவரை இழந்துவிட்டு எனக்கு என்ன சுகம் வேண்டியிருக்கு? 'ப்ரபுவே! உங்களுடைய ஸுகமே என்னுடைய ஸுகமும். நீர் குந்தநந்தினியை மணந்துகொள்ளும். அதற்கு நான் தடங்கலாக நிற்க

வில்லை' என்று சொல்லி அவரைத் தைரியப்படுத்தினேன். அதனால் அல்லவோ அவர் அவளை மணந்தார்.''

கமல: ஆனால் உனக்கு இதனால் ஸுகமும் திருப்தியும் ஏற்பட்டிருக்கிறதா?

ஸூர்ய: என்னைப்பற்றி ஏன் எடுக்கிறாய்? நான் எம்மாத்திரம்? புருஷனுடைய காலில் முள் தைத்திருப்பதைப்பார்த்து நான், 'அவருடைய பாதத்தை என் மார்பில்கூட அணைத்துக் கொள்ளாமல் போய்விட்டேனே? என் மார்பின்மீது அவர் நடந்து செல்லலாகாதா? அது அவருக்கு எவ்வளவோ ஆறுதலை அளிக்குமே? பின் வேறெதற்கு இந்த ஜன்மம்?' என்றெல்லாம் எண்ணி இதை முடித்துவைத்தேன், கமலா!

இதை மொழிந்ததும் ஸூர்யமுகி சிறிது காலம் மௌனமாக இருந்தாள். அவள் விடும் கண்ணீர் மேலாடையை நனைத்துவிட்டது. அப்புறம் சட்டென்று முகம் நிமிர்ந்து "கமலா! பெண்ணாய்ப் பிறந்தால் கொன்றுவிடுகிறார்களாமே, அது எந்த தேசத்தில்?'' என்றாள். கமலமணி அவளுடைய மனத்தின் போக்கை ஒருவாறு அனுமானித்து, "பெண்ணாய்ப் பிறந்தால்தான் என்ன? தலை எழுத்து எல்லாருக்கும் இப்படியே இருக்கிறதா?'' என்றாள்.

ஸூர்ய: என்னைக்காட்டிலும் வேறு யாருக்கு இவ்வளவு பாக்யம் கிட்டியிருக்கிறது? யாருக்கு இந்தமாதிரிப் புருஷன் லபித்து இருக்கிறான். அழகில் குறைச்சலா, குணத்தில் குறைச்சலா, ஐச்வரியத்தில்தான் குறைச்சலா? இந்தமாதிரி புருஷன் தேடினாலும் கிடைப்பது அரிது. எல்லாம் என் விதி. அதன் கொடுமைதான். பின் ஏன் இப்படியெல்லாம் நடக்கவேண்டும்? ஆனாலும் ஏனோ என் மனம் காரணமின்றி வெந்து புண்ணாகிறது!

கமல: ஸூர்யமுகி! நீதான் உன் புருஷனைத் தெய்வமாகக் கொண்டாடி அவர் அடைந்த ஸுகத்தினால் பரம திருப்தியை அடைந்து இருக்கிறாயே! பின் ஏன் மறுபடியும் 'ஏனோ என் நெஞ்சம் பற்றிக்கொண்டு எரிகிறதே' என்று சொல்லுகிறாய். இதென்ன இரண்டுவிதப் பேச்சு? எது உண்மை?

ஸூர்ய: இரண்டும் வாஸ்தவமே. அவர் ஸுகமாயிருப்பதைப் பார்த்து என் மனம் குளிர்கிறது. ஆனால் என்னை....அவர் காலின் கீழ்த்தள்ளி....விக்....விக்....தாழ்த்திக்....குறைத்து (கண்களில் நீர் வெடித்து வருகிறது. சொல் தழதழக்கிறது. தீவ்ரமான வேதனைதோய்ந்த குரலில்) இகழ்ந்து வைத்திருப்பதுதான் என்னை இவ்வளவு பாதிக்கிறது....விக்....விக்....க்க்..

அதற்குமேல் அவளால் பேசமுடியவில்லை. துக்கம் கண்டத்தை அடைத்தது. மாரிபோல் விழிநீர் பெருகிற்று. ஸூர்யமுகி கூறிய வார்த்தையின் மர்மத்தைக் கமலமணி ஊகித்துக்கொண்டாள்.

"உன்னைத் தள்ளிவிட்டானென்று நீ துடிக்கிறாய்? 'நான் யார் இனிமேல்.... எதற்கு உபயோகம்?' என்று ஏன் நீ உன்னையே நிந்தித்துக் கொள்ளவேண்டும்? உன்னுடைய அந்தரங்கத்தில் பாதி நான் நிரம்பி இருக்கிறேன். இந்தமாதிரி உன்னுடைய சுகத்தை அதலஜலத்தில் மூழ்த்தி உன் உள்ளத்தை வேதனைஜ்வாலை பட்டு எரியவிட்ட அவன் பேரில்—பரிசுத்தமான உன் ஹ்ருதயமலரைக் காலடியில் நசுக்கிய சண்டாளன் மீது—இந்த அநுதாபம் காட்டுவானேன்?"

"அநுதாபம் காட்டவில்லை, கமலா! 'அவருக்கு நன்மையே செய்தேன். ஆனால் என்னிடம் அவர் கொண்ட காதல் செத்த பிறகு நான் எதற்கு உயிர் தரிக்கவேண்டும்? எனக்கு யமன் ஒருவனே இதத்தைச் செய்யக்கூடியவன். என் கையாலேயே சாக விரும்புகிறேன். என் மனோவ்யாகூலத்தை உன்னுடன் அழுது தெரிவித்துக் கொள்ளக்கூடாதா?"

கல்மனமும் இளகும்படி ஸூர்யமுகி அழும் காட்சி, ஸாக்ஷாத் பாக்ய தேவதை அதர்மத்திற்குப் பயந்து மரண ஸாகரத்தின் கரையில் உயிர் துறக்கப் புலம்புவதுபோல் இருந்தது. அவளுடைய ஆத்மார்த்த நேசி கமலம் அவளைக் கெட்டியாக அணைத்துக்கொண்டாள். இருவரும் அதிகமாக வாயால் பேசாவிடினும் இருவர் மனமும் பரஸ்பரம் கலந்து ஏகோபித்து விளங்கியது. ஸூர்யமுகியின் இதயத்தைக் கூரிய வேல் குடைந்து புண்ணாக்கி இருப்பதைக் கமலமணி நன்கு அறிவாள். தனக்காகக் கமலமணி உள்ளூறப் பரிதாபப்பட்டு உருகுவதை ஸூர்யமுகியும் அறிவாள்.

இருவர் விழிகளிலும் கண்ணீர் வற்றிவிட்டது. தங்களை அலைத்த வேதனையை மறக்கப் பேச்சை வேறு விஷயத்தில் திருப்பினார்கள். குழந்தை ஸதீசைக் கொஞ்சுவதில் எவ்வளவோ நிம்மதி ஏற்பட்டது அவர்களுக்கு. குழந்தையைப்பற்றிய பேச்சே இரவு முழுவதும்: அவனை எப்படி வளர்க்கவேண்டும். எந்த மாதிரிப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொடுக்கவேண்டும், இம்மாதிரி அர்த்தமற்ற ஆலோசனைகள் நள்ளிரவு வரை நிகழ்ந்தன. ஸூர்யமுகி கமலமணியைச் சேர்த்துக் கட்டிக்கொண்டாள். குழந்தை ஸதீசின் உச்சியை முகர்ந்து அவனுடைய மாம்பழ வாயில் முத்தம் தந்தாள். கமலமணியை விட்டுப் பிரியும்போது ஸூர்யமுகியின் துயர் பன்மடங்கு பொங்கி, அழுகை தடைக்கஞ்சாமல்

கிளம்பிற்று. கண்ணீரும் கம்பலையுமாய்க் குழந்தை ஸதீசனின் தலையைத் தொட்டு "என் கண்ணே, நீ உன் மாமாவாட்டம் குண சாலியாய் இருக்கவேண்டும். இதுதான் உன்னை ஆசீர்வதிப்பது" என்று அவளுக்கு இயற்கையிலேயே அமைந்த மெல்லிய குரலில் சொன்னாள். ஆனாலும் அவளுடைய கண்டஸ்வரத்தின் விகாரம் கமலமணிக்கு அடக்கமுடியாத துயரை மூட்டிவிட்டது. இறக்கும் தருவாயில், மங்கும் குரலில் யாரோ பேசுவதுபோலிருந்தது அந்த த்வனி. கமலமணி "மன்னி! உன் மனதை என்னமோ உறுத்துகிறது. அதை என்னிடம் ஒளிக்கிறாய்" என்றாள்.

"ஒன்றுமில்லையே?"

"என்னிடம் மறைக்காதே."

"உன்னிடம் மறைத்து என்ன ஆகவேண்டும் எனக்கு?"

இதைச் சொன்ன பிறகுதான் கமலமணி சற்று நிம்மதி அடைந்து தன் சயன அறைக்குச் சென்றாள். ஸூர்யமுகி தன் மனத்திலுள்ள ஒரு ஸங்கல்பத்தை ஒளித்தது மட்டும் உண்மையே! அதைக் கமலமணி மறுதினம் காலையில்தான் அறிய நேரிட்டது. கமலமணி அதிகாலையில் எழுந்து ஸூர்யமுகியைப் பார்க்க அவள் படுக்கையறைக்குச் சென்றபோது அங்கு அவளைக் காணவில்லை. படுக்கை ஓரிடத்திலும் நலுங்கவில்லை. தலைமாட்டண்டை ஒரு கடிதம் மடித்தபடி இருந்தது. கமலமணிக்கு 'திக்' என்று வாரிப் போட்டது. அவளுக்கு அயோமயமாகி வந்தது—"என்ன விபரீதம் நேர்ந்து விட்டது!"—கைகள் நடுங்க அவள் கடிதத்தைப் பிரித்தாள். அதைப் படிக்காமலே அவள் ஊகித்துக் கொண்டாள். நேற்று ஸூர்யமுகி மறைத்த மர்மத்தைப் புரிந்துகொண்டாள். "அவள் குளம் குட்டையில் விழுந்து மடிந்துவிட்டாளோ! இதென்ன பகவானே! இந்தக் குடும்பத்திற்கு ஏன் இவ்வவதூறு?"—கடிதத்தை ஊன்றிப் படிக்க அவளுக்கு இஷ்டமில்லை. அதை உள்ளங்கையிலேயே வைத்தபடி நெற்றிக்கட்டில் 'படீர்', 'படீர்' என்று அறைந்துகொண்டு மஞ்சத்தின்மீது சாய்ந்தாள். "ஏனோ நான் முட்டாள்தனமாய் அவளைவிட்டு இரவில் வந்துவிட்டேன்? மோசம்போனேனே! ஐயோ, ஸூர்யமுகீ, நேற்று இதற்காகத்தான் என்னிடம் மறைத்துக் கூறினாயோ? அம்மா, பெண்பாவம் இந்த மாசற்ற குடியில் ஏற்பட்டுவிட்டதே! நகேந்த்ரா, அட சண்டாளா!" என்று புலம்பினாள். அருகில் நின்றுகொண்டிருந்த ஸதீச், தாயார் நெற்றியில் அடித்துக்கொள்வதைப் பார்த்து ஒன்றும் புரியாதவனாய்த் திகிலடைந்து கோவென்று அலற ஆரம்பித்து விட்டான்.

## இருபத்தெட்டாவது அத்தியாயம்

### ஆசீர்வாத லிகிதம்

சோகத்தின் முதல் பெருக்குத் தணிந்ததும், கமலமணி ஸூர்யமுகி எழுதிவிட்டுச் சென்ற கடிதத்தைப் பிரித்துப் படித்தாள்:

“கமலமணி! என் புருஷன் என்றைக்கு என்னை அணுகி, ‘உன்னால் நான் ஸுகம் அடையவில்லை—(ஸந்தான பாக்யம் இல்லாதது என் தவறா?)—குந்தநந்தினியின்மேல் மோஹம்கொண்டு அணு அணுவாகத் துடித்துச் சாகிறேன். அவள் கிடைக்காவிட்டால் நான் வாழ்வு துறந்து மரிப்பேன்’ என்று சொன்னாரோ அப்பவே, நான் ‘சரி, இந்தக் குந்தநந்தினியை எப்படியாவது தேடிப்பிடித்து அவருக்கு விவாஹம் செய்துகொடுத்துவிட்டு, அவருடைய மனச்சஞ்சலத்தை நீக்கிவிடுவது’ என்ற முடிவிற்கு வந்துவிட்டேன். குந்தநந்தினி அகப்பட்டதும் என் கணவனுக்கே தானம் செய்துவிட்டேன். அப்புறம் எனக்கு என்ன வேலை? நான் வீட்டைவிட்டுப் போகவேண்டியதுதான் பாக்கி. ஏனென்றால், என் புருஷன் இனி குந்தத்திற்குத்தானே உரியவர். அவருடன் அவள் கூடிக்குலாவி மகிழும்போது நான் அங்கு இருப்பது உசிதமில்லை. மேலும் நானும் சகியேன். இதோ குந்தம் என்புருஷனுக்கு வாழ்க்கைப் பட்டுவிட்டாள். எனது ஸங்கல்பமும் ஈடேறிவிட்டது. என்னவர் அவளுடன் இன்புற்றிருக்கும் சமயமே நான் போவதற்கு நல்ல தருணமில்லையா?—நான் போகிறேன், கமலமணி!

“விவாக தினத்தன்றே போய்விடலாமென்று எண்ணினேன். ‘சே! உடனே போகக்கூடாது; இரண்டொரு நாள் நம் புருஷன் தெம்பாக இருக்கும்போது நாம் பார்க்கவேண்டும்’ என்று ஆசைப்பட்டேன். அதையும் பார்த்தாகி விட்டது. மேலும், போவதற்கு முன் உன்னை ஒருதரம் காணவேணுமென்று இச்சையாக இருந்தது. உனக்குக் கடிதமும் அதனால்தான் எழுதியிருந்தேன். நீ அவச்யம் வருவாய் என்று மாத்திரம் நம்பிக்கை உண்டு எனக்கு. அதுபோலவே நடந்துவிட்டது. இனிமேல் என்னைக் கவனித்துக்கொள்ளப் போகிறதில்லை. என் பிராணனுக்கும் மேலானவர் இப்போது குந்தநந்தினியை அனுபவிக்கும் ஸுகத்தில் லயித்து இருக்கிறார். இதுவே தருணம், நான் மறைந்து போவதற்கு. உன்னிடமிருந்து ஒருமாதிரி விடையும் பெற்றுக் கொண்டாகி விட்டது. இப்போது நான் போகலாம்.

"இந்தக் கடிதத்தை நீ பிரித்துப் படிக்கும்போது நான் எந்த இடத்தில் இருப்பேனோ? இதைப்பற்றி ஏன் நான் சொல்லவில்லை என்றால், என்னுடைய ஸங்கல்பத்தை வெளியிட்டிருந்தால் நீ என்னைப் போகவிட்டிருப்பாயா? ஒரு வேண்டுகோள்: என்னை நீங்கள் யாரும் தேடவேண்டாம்.

"மறுபடியும் நாம் இருவரும் சந்திப்போமென்று எனக்குத் தோன்றவில்லை. குந்தநந்தினி இருக்கும்போது இவ்விடத்தை நான் அணுகேன். என்னை நீங்கள் வீணாகத் தேடி அலையவேண்டாம். நான் வழியேபோகும் பிச்சைக்காரிக்கு ஸமானம். பேய் போல் உருமாறி ஊர் ஊராய்த் திரிவேன். நான் உருக்குலைந்த பிறகு என்னை யார் கண்டுபிடிக்கப் போகிறார்கள். 'வேண்டிய பணம் எடுத்துக்கொண்டுபோய் ஸுகமாய் எங்கேயாவது கண்மறைவாகக் காலம் கழிக்காலாமே' என்று என்னைக் கேட்கலாம்? புருஷனையே நான் விட்டுச் செல்லும்போது பாழாய்ப்போன அந்தப் பொன்னும் வெள்ளியும் எனக்கு எதற்கு?

"ஒரு காரியம் எனக்கு நீ செய்யவேண்டும். என் புருஷனுடைய பாதங்களில் என்னுடைய சதகோடி நமஸ்காரங்களை ஸமர்ப்பிக்கவும். அவருக்கும் கடிதம் எழுதலாம் என்று காகிதத்தை எடுத்தேன். எழுதும்போது என் கண்ணீர்த் திவலை அதைத் தடுத்துவிட்டது. மீண்டும் எழுத உத்தேசித்தேன். என் விரல்கள் ஏனோ ஓட மறுத்துவிட்டன. என்னமோ அசட்டுப் பிசட்டென்று இரண்டொரு கிறுக்கல் கிறுக்கிவிட்டு, சட்டென்று வெறுப்படைந்து அதைக் கிழித்தெறிந்தேன். என் மனோ வேதனையை எழுதுவதென்றால் ஒரு கடிதம் போதாது. ஆகையால் அவருக்கு ஒன்றுமே எழுதாமல் விட்டுவிட்டேன். உனக்கு எப்படித் தோன்றுகிறதோ அதன்படியே அவரிடம் என்னுடைய விஷயத்தைப் பற்றித் தெரியவை. நான் கோபித்துக்கொண்டோ வேறு எக்காரணம்பற்றியோ போய்விடவில்லை என்று மட்டும் அவருக்குச் சொல்லு. அவருடைய நன்மையை உத்தேசித்தே நான் அகன்றுவிட்டேன். அவர்மீது எனக்குத் தினையளவேனும் மனஸ்தாபம் கிடையாது. அவர்பேரில் நான் ஏன் கோபித்துக் கொள்ளவேண்டும்? நானே இந்தக் காரியத்தை முனைந்து நடத்தி இருக்கும்போது எனக்கு அவர்பால் எப்படிக் கசப்பு ஏற்படும்? என் புருஷர் திருப்தியடைந்துவிட்டார் என்பதை நினைக்கும்போதே ஸந்தோஷம் கொண்டு பொங்கும் எனக்கு, அவரிடம் ஊடல் எதற்கு? அவரிடம் விச்வாஸமும், நீங்காத பக்தியும் கொண்டிருக்கிறேன் நான். அவர் என் தெய்வம் அல்லவா? இந்த சரீரம் மண்ணோடு மண்ணாகப் போகும்வரை அவருடைய நினைவு

என் உள்ளத்தை விட்டு மறையவே மறையாது. அவருடைய அபாரகுணங்களைக் கண்டும் அவருடன் இத்தனைநாள் பழகியும் இருக்கிற எனக்கு எப்படிச் சலிப்பு ஏற்படும், சொல்லு? இதுவே நான் அவருக்குத் தொண்டு செய்வதின் காரணமும். ஒரு தவறுக்காக அவருடைய குணாதிசயங்களை நான் மறப்பதென்றால் நான் எங்ஙனம் பதிவ்ரதையாக முடியும்? நான் அவரைவிட்டு என்றும் பிரிந்து போகிறேனே—இது ஒன்றே என்னைப் பாதிக்கும் வருத்தம். உனக்கு இன்னும் எப்படித் தெளிவாகத் தெரிய வைப்பேன்? உன்னைவிட்டு எப்போதுமே பிரிந்து விடுவேனோ? என் ப்ரார்த்தனையெல்லாம், நீயும் உன் புருஷனும், குழந்தையும் நீடூழி வாழவேண்டும் என்பதே. ஒருவேளை உனக்கும் உன் கணவனுக்கும் எனக்கு நேரிட்டதுபோல் வேற்றுமை ஏற்பட்டால், வேறு கதியில்லை. உயிரை விடுவதே இந்த துக்கஸாகரத்திலிருந்து மீளும் வழி. இந்த நிர்ப்பாக்யவதி உனக்குச் சொல்லும் யோசனையைப் பார்? அந்தமாதிரி எனக்கு யாருமே ஆசீர்வாதம் பண்ணவில்லை."

## இருபத்தொன்பதாவது அத்தியாயம்

### விஷவிருக்ஷம் என்றால் என்ன?

*"ஸம்ஸார வ்ருக்ஷம் அகுபீஜம் அனந்தகர்ம
சாகாயுதம் கரணபத்ரம் அனங்கபுஷ்பம்
ஆருஹ்ய துக்க ஜலதௌ பதிதோ..."

ஆதிசங்கரர்.

மூளையாகி, மரமாக வளர்ந்து, பூத்து, கனிதொங்கும் இந்த விஷவிருக்ஷம் ஒவ்வொருவர் அகத்திலும் உண்டு. பகையே (காம க்ரோத லோப மோஹாதி ரிபுக்கள்) இது உண்டாவதற்குக்காரண பூதமாக இருக்கிறது. கால, ஸ்தான பேதங்களில் இந்த மரம் வெவ்வேறு பலனை அளிக்கின்றது. ராகம் (கோபம்), த்வேஷம், காமம் முதலிய தீய குணங்கள் தீண்டாத மனிதப்பிறவியே கிடையாது; ஞானிகள்கூட இவற்றிற்கு அடிமையாகிறார்கள். ஆனால் ஒரு மனுஷ்யனுக்கும் இன்னொரு மனுஷ்யனுக்கும் வித்யாசம் இருக்கிறபடியால், சிலர் தம்முடைய திட சித்தத்தினால் இவற்றை அடக்கி வெல்கின்றனர். பெரும்பாலோர் இதற்குப் பலியாகிறார்கள். இவர்களுக்கென்றே இந்த மரத்தின் வித்து நடப்படு

---

*संसारवृक्षं अघुवीजं अनन्तकर्म
शाखायुतं करणपत्रं अनङ्गपुष्पम्
आरुह्य दुःखजलधौ पतितो ......

கிறது. இதை நசுக்கமுடியாத ஒரு தன்மையே இதன் முளையாம்; ஒருதரம் இது குருத்துவிட்டால் அப்புறம் ஓங்கி வளரவேண்டியதுதான். இந்த விருக்ஷம் சீக்கிரத்தில் விருத்தியடைகிறது. வேர் ஊன்றிவிட்டால் அதற்கு அழிவே கிடையாது! இதன் சோபை கண்ணைக் கவரும்படி இருக்கிறது. தொலைவிலிருந்தே இதனுடைய பூவும் கனியும் நம்மை மயக்கி அழைக்கின்றன. ஆனால் அதன் நிழலை அண்டி அந்த மாயக்கனியை உண்பவர் சாவது திண்ணம்.

இடபேதங்களில் இந்த விஷவிருக்ஷத்தின் பழம் பலவித ருசியை உடையதாயிருக்கிறது. இதை விரும்பி உண்டு களிப்பவர், சோகங்களுக்கும் ரோகங்களுக்கும் ஆளாகி மாள்கின்றனர். இதனுடைய மயக்கத்திலிருந்து விலக மனதைக் கட்டுவதற்கான சக்தி இயற்கையிலேயேதான் அமையவேண்டும். முயற்சி இருந்தால் தான் வெற்றியும் உண்டு. அவ்வித ஆற்றல் ஸ்வபாவத்தில் ஏற்படுவது. அதைச் செய்யவேண்டிய முயற்சியோ அல்லது ஊக்கமோ கல்விப்பயிற்சியினால் தோன்றுவது. இயற்கையும் இந்தப்பயிற்சி விசேஷத்தின் மீதே நிலையாக நிற்கிறது. ஆதலின் இப்பயிற்சியே அவ்வித விருப்பத்தை நசுக்குவதற்கு மூலகாரணமாயிருக்கிறது. குருவினிடம் கற்ற ஞானமே பயிற்சி என்று நாம் சொல்லக் கூடாது. நமது அந்தக்கரணமும் பூரணமாக இந்த முயற்சியில் ஈடுபட வேண்டும்—இதுவே கல்விப் பயிற்சியின் ஸாரம்.

நகேந்த்ரனுக்கு இம்மாதிரி சிக்ஷை ஏற்படவே இல்லை. ஈச்வரன் அவனை ஸகல ஸங்கங்களுக்கும் அதிபதியாகச்செய்து இம்மண்ணுலகில் அனுப்பியிருக்கிறார். மன்மதரூபம், அழியாத செல்வம், வியாதியற்ற சரீரம், நல்ல அறிவு, உயர்தர வித்யா ஞானம், ஒழுங்கான நடத்தை, கற்புடைய மனையாள், இவ்வளவு ஸௌபாக்யங்களும் அவனுக்கு ஏற்பட்டிருக்கின்றன. ஸாதாரணமாக ஒருவனிடத்தில் இவ்வனைத்தும் காண்பது அரிது; இம்மாதிரி குணாதிசயங்கள் ஒன்றாய்ச் சேருவது துர்லபம். பிரதானமாக நகேந்த்ரனுடைய நடத்தையே அவனை இதுவரை ஸங்கத்தில் வைத்திருக்கிறது. அவன் உண்மையே சொல்பவன், இன்முகமாய் இருப்பவன், பரோபகாரி, நியாயப்படி நடப்பவன். தர்மிஷ்டன்; ஆனாலும் மிதமாக வழங்குபவன். யாரிடத்திலும் ஸ்நேகப்பான்மையுடையவன்; ஆனாலும் தன்னுடைய கார்யங்களைப் பிரதிஜ்ஞையுடன் செய்து முடிப்பவன். தாய்தந்தையர் இருக்கும்போது அவர்கள் மனம் நோகாதபடி நடந்து வந்தான். மனைவியிடத்தில் அளவற்ற ஆசைகொண்டவன், நண்பர்களுக்கு ஹிதத்தைச் செய்பவன், எளியோரிடத்தில் கிருபை உடையவன், தன்னை அண்டின

வர்களை ஆதரிப்பவன், சத்ருக்களுக்கும் கெடுதி நினைக்காத இயல்பினன், யோசனை சொல்லுவதில் சமர்த்தன், கார்யத்தில் நயமுடையவன், பேச்சில் அமரிக்கையுடையவன், ரகஸ்யத்தைக் காப்பாற்றுவதில் கெட்டிக்காரன். இவ்வித உன்னத குணங்கள் உடையவனுக்கு நித்யஸுகமே பரிசாக ஏற்படுகிறது. நகேந்த்ரனுக்கு இந்தமாதிரி ஓர் அதிர்ஷ்டம் அவன் சிறுபிள்ளையாய் இருக்கும்போதே ஏற்பட்டு, நீடித்துவருகிறது. தன்னூரில் கௌரவமும், சென்றவிடங்களில் சிறப்பும், நன்றியுள்ள சேவகர்களும், ஸாதுவான குடிமக்களும், ஸூர்யமுகியிடமிருந்து அழியாத தூய்மையான காதலும் பெற்றிருக்கின்றான். இவ்வளவு ஸுகங்கள் அவனுக்கு ஏற்பட்டதனால் அல்லவோ அவன் இந்தத் துக்கங்களை அனுபவிக்க நேரிட்டிருக்கிறது? கடைசியில், பார்த்தீர்களா, இவ்வளவு நற்குணங்கள் வாய்ந்தவனும் அந்த விஷவிருக்ஷத்தைக் கண்டு மயங்கிப்போய்விட்டான்.

வாழ்வில் துக்கத்தை ஒருதரமாவது அனுபவித்திருந்தால் இந்த மோஹத்திற்கு ஆளாகி இருக்கவேண்டாம். குந்தநந்தினியைக் காண்பதற்கு முன்பு அவன் இம்மாதிரி கேடான நிலைமைக்கு வரவில்லை. குறைபடுவதற்கு ஒரு காரணமும் இல்லை. அவனுக்குப் பகவான் எல்லாம் அளித்திருக்கிறார். அதனாலேயே சட்டென்று எதிர்பாராத விதமாக வரும் இந்த மாயாமோகத்தை அடக்க அவனுக்குச் சாவகாசம் ஏற்படவில்லை. மானஸிக அப்யாசம் அத்தகைய தொழிலுக்கு இன்றியமையாதது. அதுதான் அவனிடத்தில் சூன்யம். அவன் தன் மனதைக்கட்டி ஆள எவ்வளவு பிரயத்தனித்தபோதிலும் அது அடங்கினால்தானே! எல்லையற்ற ஸுக போகமே துக்கத்தின் மூலம். நிலைபட்ட இன்பம் துக்கத்தை முதலில் அனுபவித்த பிறகே உண்டாகிறது.

நகேந்த்ரனிடம் குணக் கோளாறுகளே இல்லையென்று செல்லமுடியாது. அவன் செய்த குற்றமோ மஹத்தானது. அதற்குப் பிராயச்சித்தமும் பெரிதாக ஆரம்பமாகிவிட்டது.

## முப்பதாவது அத்தியாயம்

### தேடி அலைதல்

ஸூர்யமுகி காணமற் போன சமாசாரம் மாளிகை முழுவதும் பரவிவிட்டதென்று சொல்ல வேண்டியதில்லை. அவளைத் தேட ஆட்கள் நாலாதிசையும் ஓடினார்கள். நகேந்த்ரனும் ஸ்ரீசனும் வெளி அறையிலிருந்தே இதற்கான முயற்சிகளைச் செய்துவந்தனர். கமலமணி அந்தப்புரத்திலுள்ள சிலரை, அவளைத்

தேடிவர ஏவினாள். வேலை செய்பவர்கள் தத்தம் வேலையை அப்படியே விட்டுவிட்டுப் பரபரப்புடன் சென்றனர். ஹிந்துஸ்தானி காவலாளிகள் தலைப்பாகைகளை நன்றாகப்போட்டுக்கொண்டு கையில் மூங்கில் தடிகளை ஏந்தி முறுக்காகக் காலில் செருப்புகள் 'சைசை' யென்று சப்திக்கக் கிளம்பினர். சமையற்காரர்கள் அழுக்கடைந்த சவுக்கத்தைத் தோளில் போட்டுக்கொண்டு வீட்டு யஜமானியைத் தேடி அழைத்துவரச் சென்றனர். உற்றார் உறவினர் வண்டிகளைத் தயாரித்து ரஸ்தாக்களில் தேடி அலைந்தனர்; கிராமத்துக்குடிகள் வழி துறை ஒன்றுவிடாமல் மூலைமுடுக்குகளையும் சோதித்து அலுத்துப்போயினர். பெரிய கிழவர்கள் கிராமத்து நடுச்சந்திகளிலும், பெரிய மரங்களின் நிழலிலும் 'கமிட்டி' கூடி ஜமீந்தாரிணி காணாது போய்விட்டதைப்பற்றி வம்பளந்து கொண்டு கட்டுக்கட்டாகச் சுருட்டுக்களைப் பஸ்மம் செய்தனர்.

சிறியவர்களும், பெரியவர்களும் இதுதான் சமயமென்று பெரிய பாபுவின் மாளிகையில் புகுந்து ஆராய்ந்தனர். அங்குள்ள விசித்திர சாமான்களே அவர்களை மிகவும் ஆகர்ஷித்தது. கட்டாயம் அன்று பாட்சாலையை வாத்யார் மூடிவிடுவார் என்று சிறுவர்கள் நம்பியிருந்தனர்.

ஸ்ரீசன், நகேந்த்ரனுக்கும் கமலமணிக்கும் தேறுதல் கூறினான்: "அவள் வெகுதூரம் போயிருக்கமாட்டாள். அவளால் எப்படி முடியும்? இந்தப் பிராந்தியத்தில்தான் இருப்பாள். அவள் போய் எல்லாம் மூன்று மணி காலந்தான் ஆகியிருக்கும்."

ஆனால் அன்று ஸாயந்திரம்வரை அவளைப்பற்றி ஒரு செய்தியும் வரவில்லை. நகேந்த்ரன் அன்று பகலெல்லாம் வெயிலில் திரிந்ததுதான் மிகுதி. 'ஒருவேளை இத்தனை நாழிகைக்கு அவள் வீட்டிற்கு வந்திருப்பளோ?' என்று ஸந்தேஹித்து அவன் திரும்பி வந்து பார்க்கையில் அவனுடைய க்ருஹம் முன்போலவே சூன்யமாயிருந்தது.

'ஸ்ரீசசந்த்ரன் சொன்னது வாஸ்தவமே. ஸூர்யமுகி கால் நடையாக வெகுதூரம் சென்றிருக்கமுடியாது. அவளுடைய பட்டுப்போன்ற பாதங்கள் எவ்வளவு தொலைவுதான் நடந்து செல்லும்'—இதுவே அவன் அனுமானித்ததும். மாளிகைக்கு அரை க்ரோசதூரத்தில் ஓர் இருண்ட மாந்தோப்பிலுள்ள குளக்கரையில் ஸூர்யமுகி களைத்துப் படுத்திருந்தாள். ஒரு வேலையாள் அவளை இன்னாரென்று கண்டுகொண்டு, "அம்மணி, திரும்பி வாருங்கள்" என்று வேண்டினான். ஸூர்யமுகி அதற்குப் பதிலே தரவில்லை. அவன் மீண்டும், "அம்மணீ, உங்களுக்காக வீட்டில்

யாவரும் திகில் படுகிறார்கள். எழுந்து வாருங்கள்'' என மன்றாடினான்.

அப்போது ஸூர்யமுகி எரிமுகத்துடன், "உன் பாட்டிற்குப் போ! என்னைப்பற்றி யாரும் கவலை எடுத்துக்கொள்ளவேண்டாம்! நீ இங்கேயே நின்றிருந்தால் இதோ குளத்தில் விழுந்து மடிவேன்'' என்றபோது, அவன் திடுக்கிட்டுப்போய், உடனே மாளிகையை அடைந்து இந்தச்செய்தியை எட்டவிட்டான். நகேந்த்ரனே பல்லக்குடன் அவளை அழைத்துச்செல்ல அந்தத் தோப்பிடை வந்தான். ஆனால் அந்நிர்ப்பாக்யவதி அங்கு அகப்பட்டால் தானே! அருகில் எங்குதேடியும் அவளைப்பற்றிப் புலனே தெரியவில்லை.

ஸூர்யமுகி குத்துச்செடிகள் அடர்ந்திருந்த காட்டினுள் மறைந்துபோனாள். அங்கு கிழவி ஒருத்தி சுள்ளி பொறக்கிக் கொண்டே வரும்போது, ஒரு ஸ்த்ரீ முகவாட்டத்துடன் புதரின் கீழ் உட்கார்ந்திருப்பதைக் கண்ணுற்றதும், காதுவிசேஷமாய்க் கோவிந்தபுரத்து ஜமீந்தாரிணி காணுமற்போனது தெரிந்திருப்பதால் ஒருகால் இங்கு உட்கார்ந்திருப்பவள் அவள்தானோ, அவளைத் தேடிப்பிடித்துவிட்டால் பரிசு கிடைக்குமே என்ற அவாவால், "அம்மா, யாரடீ நீ, இங்கே இந்தக் காட்டிலே தனியாக உட்காந்திருக்கே? உன்னைப் பார்த்தால் ராணியாட்டம் இருக்கே ....நீ யாரோ, தெரியல்லையே?'' என்று வினவினாள்.

ஸூர்யமுகி: நான் ஓர் அநாதை.

கிழவி: அம்மா, நீ எங்கள் ஜமீந்தார் ஸம்ஸாரம் போலிருக்கே?

ஸூர்யமுகி: பாட்டி, அவள் எப்படி இருப்பாள்?

கிழவி: அவள்தான் எங்கள் பெரியபாபுவின் சீமாட்டி. அவள் ஓடிப்போய்விட்டாளாமே, உனக்குத்தெரியாதா?

ஸூர்யமுகி: தெரியாதே. இதோ பார். என் உடம்பில் ஏதாவது நகை கிகை இருக்கிறதா, பார். நான் எப்படி அவளாவேன்?

கிழவி: அப்படியானால், நீ இல்லையா அவள்?

இதைக் கூறிவிட்டு அந்தக் கிழவி, கூனியவண்ணம் கூடையில் சுள்ளியைப் போட்டுக்கொண்டே காட்டினுள் மறைந்துபோனாள்.

இந்தமாதிரி அன்றைப் பொழுது வீணாகக் கழிந்தது. அதற்கு அடுத்ததினமும் இப்படியே சென்றது. அப்படியும் அவளைத் தேடுவதில்மாத்திரம் யாருக்கும் உத்ஸாஹம் குன்றவில்லை. ஸூர்யமுகி

யைச் சிலருக்கு இன்னவள் என்று தெரியாது. வழியில் செல்லும் ஸ்திரீகளை அவள் என்று ஸம்சயித்து மாளிகையில் கொண்டு வந்தனர். நகேந்த்ரனுடைய உப்பைத் தின்றுவிட்டுச் சும்மா இருக்கக்கூடாதே என்று சிலர் பல்லக்கை எடுத்துக்கொண்டனர்; ஊர் ஊராகச் சுற்றித் திரிந்தனர். நாகரிகமாக ஆடை உடுத்தியிருக்கும் சிலரைத் தங்கள் யஜமானி அம்மாள்தான் என்று எண்ணிச் சிவிகையை இறக்கி ஏறும்படி வேண்டினர். இதுதான் பல்லக்கில் சற்றுநேரமாவது செல்லச் சரியான ஸந்தர்ப்பம் என்று கண்டு சில பெண்மணிகள் பாபுவின் பல்லக்கில் ஏறித் தங்கள் ஆசையைத் தீர்த்துக்கொண்டனர்.

உத்யோக அவஸரத்தினால், ஸ்ரீசசந்த்ரன் கோவிந்தபுரத்தில் மேலும் சில தினங்கள் தங்கி இருக்கமுடியாமல் போய்விட்டது. கல்கத்தாவிற்குச் சென்றதும் அங்கும் ஸூர்யமுகியைத் தேடப் பிரயத்தனம் எடுத்துக்கொண்டான். கமலமணி கோவிந்தபுரத்தில் இருந்துகொண்டே ஸூர்யமுகியைக் கண்டுபிடிக்கப் பின்வாங்கவில்லை.

(தொடரும்.)

# மாயை

'ஸேஞ'

---

சாத்தூரில் ஜில்லாபோர்ட் ஸ்கூல் வந்ததும், அது இருபது வருஷகாலமாகத் திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்திவந்த கந்தசாமி அய்யருடைய வாயில் மண்ணைப் போட்டுவிட்டது. அவருடைய மாணவர்களின் தொகை நாளுக்கு நாள் குறைய ஆரம்பித்தது.

ஒருநாள் திண்ணை வெறும் சூன்யமாய்விட்டது. அன்று அந்திவேளையில் ஏதோ யோசனையிலாழ்ந்தவண்ணம் தம் குடிசையில் உட்கார்ந்திருந்தார் உபாத்தியாயர் கந்தசாமி. அவருக்கு வயது ஏறக்குறைய அறுபது இருக்கும். தாடைகள் ஒட்டி, பல்லெல்லாம் போய், கண்கள் குழிவிழுந்து கிடந்தன. அவர் மனைவி பதினைந்து வருஷங்களுக்கு முன்னரே இறந்துபோய் விட்டாள். அவருக்கு ஒரே ஒரு செல்வமகன்—பெயர் ஸ்வாமிநாதன். ரொம்ப புத்திசாலி. ஆனல் விதி யாரைவிடும்? இரண்டொரு வருஷம் கழித்து அவனும் தாயார்போன இடத்திற்கே சென்றுவிட்டான்.

நன்ருக இருட்டிவிட்டது. கடைசியாக ஒரு பெருமூச்சு விட்டுக் கந்தசாமி அய்யர் எழுந்து உள்ளே சென்ருர். சற்று நேரம் கழித்துக் கையில் ஒரு தடி, சிறிய கித்தான் பையொன்று, இவற்றுடன் வெளியே வந்தார். அவைதான் அவருடைய ஆஸ்தி. தேவாரம், திருக்குறள், இறந்துபோன மகனின் ஞாபகார்த்தமாக அவன் படித்த ஓர் இரண்டாம் வாசக புத்தகம், இரண்டொரு துணிமணிகள், இவைகளே அந்தப் பையில் இருந்தன. குடிசையின் கதவைச் சார்த்திவிட்டு நிதானமாக இருண்டவீதியில் தடியை ஊன்றிக்கொண்டு மனம் போனவழியே நடந்தார்.

* * * *

திருவாரூர் பெரிய மிராசுதார் மகாலிங்கய்யர் ஒருநாள் காலை எட்டு மணிக்குத் தமிழ்ப்பத்திரிகை யொன்றைப் படித்துக்கொண்டிருந்தார். அச்சமயம் அவருடைய ஐந்துவயது மகன் ஸ்வாமிநாதன், "அப்பா, யாரோ வந்திருக்கார்" என்ருன். "யார்?—இப்படி அழைத்துக்கொண்டு வா" என்ருர் மகாலிங்கய்யர். சிறுவன் வெளியில்போய் ஒரு கிழப் பிராம்மணருடன் திரும்பிவந்தான்.

மகாலிங்கய்யர், "வாருங்கள், இப்படி வந்து உட்காருங்கோ. தாங்கள் எந்த ஊர்?" என்று கேட்க, வந்தவர், "க்ஷேத்ர தரிசனம் பண்ண வந்திருக்கிறேன். பெயர் சாத்தூர்க் கந்தசாமி வாத்தியார் என்று சொல்லுவார்கள்" என்றார்.

கந்தசாமி அய்யர் தம் பூர்வ வரலாறுகளையும், தற்போதைய நிலைமையைப்பற்றியும் சொன்னதும், மகாலிங்கய்யர் அவரிடம் மிகவும் பரிதாபம்கொண்டு, "இந்தத் தள்ளாத வயதில் ஏன் வீணாக இப்படி ஊர் ஊராக அலைந்து உடம்பைக் கெடுத்துக் கொள்கிறீர். என்னமோ பகவான் கிருபையாலே சுகமாக ஜீவிக்க எனக்குப் போதுமான சொத்து இருக்கிறது. நீர் நம்ம பைய னுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுத்துக்கொண்டு ஆத்திலேயே இரும்" என்றார்.

இவ் வெதிர்பாராத் தயாளுத்தனத்தைக்கண்டு கந்தசாமி வாத் தியார் மிகவும் ஆச்சர்யமடைந்து தமது நன்றியறிதலைத் தெரிவித் தார். தம் பசிப்பிணி தொலைந்ததை அவர் பெரிதாக எண்ண வில்லை. இறந்துபோன தம்முடைய மகனை நினைவூட்டும் மகாலிங் கய்யரின் பிள்ளையாகிய ஸ்வாமிநாதனுடன் பழகக் கொடுத்து வைத்தோமே என்ற சந்தோஷமே பெரிதாக இருந்தது. அவனை வாசலில் பார்த்தமாத்திரத்திலேயே, அவரை யறியாமல் ஏதோ ஒரு சக்தியானது கந்தசாமி வாத்தியாரை அவனிடம் இழுத்துச் சென்றது.

அன்றுமுதல் ஸ்வாமிநாதனுக்குச் சிக்ஷை சொல்லிக்கொடுக்க ஆரம்பித்தார். பையனும் மிக்க ஊக்கத்துடன் கிரஹித்துக் கொண்டு சீக்கிரத்தில் தமிழ் நன்றாக எழுதப்படிக்கக் கற்றான்.

சிறுவன் ஸதா வாத்தியாரோடேயே இருப்பான். அவ னுடைய தாயாருக்கு இது சுத்தமாகப் பிடிக்கவில்லை. இரண் டொருதரம் தன் பர்த்தாவிடம் சொல்லிப்பார்த்தும், அவர் காதில் போட்டுக்கொள்பவராகக் காணோம்.

இவ்வாறு இரண்டு வருஷங்கள் கழிந்தன. ஸ்வாமிநாதன் தமிழில் நல்ல தேர்ச்சி பெற்றுவிட்டான். ஒருநாள் பட்டினத் தில் படிக்கும் மகாலிங்கய்யரின் மருமானான ஸோமநாதன் அங்கு வந்திருந்தான். ஸ்வாமிநாதனுக்கு ஈடான ஸோமநாதன் இங்கிலீஷ் பாடம் படிக்கும்போது தன் பிள்ளை வாயைப் பிளந்துகொண்டு நிற்பதைக்கண்டு எஜமானியம்மாள் பர்த்தாவை அழைத்து, "இதோ பாருங்கோ, அதே வயசுப் பையன் மட மடவென்று இங்கிலீஷ் படிக்கிறான். இது ஒன்றும் புரியாமல் மண்டுமாதிரி முழிக்கிறது!" என்றாள்.

மகாலிங்கய்யருக்கும் அவள் சொன்னது சரிதான் என்று பட்டது. பையன் பெரிய கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தனுக வேண்டுமென்பது அவருடைய எண்ணம். அப்படி இருக்க இங்கிலீஷ்பாஷை தெரியாவிட்டால் என்ன பிரயோஜனம்? அவர் தம் பிள்ளையைப் பார்த்து, "என்னடா சாமா, வாத்தியார் இங்கிலீஷ் கற்றுக்கொடுக்கிறதில்லையா?" என்று கேட்டார். "இல்லை, அப்பா, அவருக்கு இங்கிலீஷ் தெரியாது" என்ருன் பையன்.

"அப்படியானல் இங்கிலீஷ்தெரிந்த வாத்தியார் யாரையாவது வைத்துவிடுங்கள். பையனை இப்படி நாட்டுப்புறத்து எட்டனுக்கவேண்டாம்" என்ருள் அம்மாள்.

இது ஸ்வாமிநாதனுக்குப் பிடிக்கவில்லை. அவன் இங்கிலீஷ் பாஷையைத் தன் மனத்திற்குள்ளேயே வைதுகொண்டான்.

மறுநாட்காலை, கந்தசாமி வாத்யாரிடம் இந்தச்சமாசாரத்தையெல்லாம் ஸ்வாமிநாதன் சொல்லும்போது, அவருடைய கண்களில் நீர் சுரந்தது. 'இந்த ஜகமே மாயை. எப்படியிருந்தாலும் அயலார்பிள்ளைதானே! நமக்கென்ன உரிமை இருக்கிறது?" என்று தன்னுள்ளேயே பிதற்றலானர். சற்றுநேரம் கழித்துக் கண்களைத் துடைத்துக்கொண்டே, "உனக்கு நிச்சயமாகத் தெரியுமா?" என்று கேட்டார்.

அப்பொழுது "வாத்தியாரே" என்று கூப்பிட்டுக்கொண்டே மகாலிங்கய்யர் அங்கு வந்தார். அவரைப் பார்த்ததும் கிழவாத்தியாரின் உடல் ஏனே நடுங்கிற்று. மகாலிங்கய்யர் பாயில் உட்கார்ந்துகொண்டு கொஞ்சநாழிகை பலவிஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்துவிட்டுக் கடைசியில், "பையனுக்கு நன்ருகத்தான் கற்றுக்கொடுத்திருக்கிறீர்கள். ஆனலும் இந்தக்காலத்தில் இங்கிலீஷ் தெரிந்தால்தானே மதிப்பு. இப்பொழுதே பிடித்துக் கொஞ்சம் கொஞ்சமாகச் சொல்லிக் கொடுத்தீர்களானல் மேல்படிப்புக்குச் சௌகரியமாயிருக்கும். என்ன சொல்கிறீர்?" என்று சுற்றி வளைத்துப் பேசினர்.

கந்தசாமிவாத்தியார் தலையைச் சொறிந்துகொண்டே, "வாஸ்தவம்தான். ராஜபாஷை கற்றுக்கொள்ளவேண்டியது அவசியம் தான்" என்ருர்.

"உங்களுக்கு இங்கிலீஷ் தெரியுமோ இல்லையோ?" என்று மகாலிங்கய்யர் கேட்டார்.

எப்பொழுதோ சிறுவயதில் இங்கிலீஷ் அக்ஷரம் கற்றுக்கொண்டார் கந்தசாமி. அதெல்லாம் இப்பொழுது எப்படி ஞாபகத்திலிருக்கும்? ஒன்றும் தோன்ருதவராய், "ஸ்வாமீ, நான்

கர்நாடகப் பேர்வழி'' என்று பதிலளித்தார். அதற்கு மகாலிங்கய்யர் ''சரிதான். பரவாயில்லை. அடுத்த ஊரிலுள்ள ஜில்லா போர்ட் பள்ளிக்கூடவாத்தியார் யாராவது உங்களுக்குத் தெரியுமா? தெரிந்திருந்தால் சொல்லிவையுங்கள். நானும் பார்க்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

அவர் போனதும் ஸ்வாமிநாதன் அழுதுகொண்டே, ''நான் இங்கிலீஷ் படிக்கப்போவதில்லை. மாமாவாத்துக்கு ஓடிப்போய் விடப்போகிறேன்'' என்றான். வாத்தியார் சிறுவனை அணைத்துக்கொண்டு, ''சீ அசடே, அழாதே. அப்படியெல்லாம் செய்யக்கூடாது'' என்று ஆறுதல் கூறினார்.

மறுநாள் வாத்தியார் தன்னைக் கூப்பிடுவார் என்று ரொம்ப நேரம் காத்திருந்தான் சாமா. ஆனால் அவர் கூப்பிடவேயில்லை. அவனே அவர் அறையில் போய்ப்பார்க்க, அவர் படுக்கையில் படுத்திருப்பதைக் கண்டு, தூங்குகிறார் என்று எண்ணி, அவரை எழுப்ப வாசற்படியருகில் உட்கார்ந்துகொண்டு வாய்ப்பாடு படிக்க ஆரம்பித்தான். வாத்தியார் தூங்கவில்லை. ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தவர் அவனுடைய குரலைக் கேட்டதும், சட்டென்று எழுந்து ''சாமா, நான் பக்கத்து ஊருக்குப் போகணும்; வர நாழியாகும். வாத்தியார் இன்னிக்கு மத்யானம் சாப்பிட வர மாட்டார் என்று ஆத்திலே சொல்லிவிடு'' என்று கூறிக் கைத்தடியை ஊன்றிக்கொண்டே வெளியே சென்றார்.

சாயங்காலம் அவர் திரும்பிவந்தபோது மகாலிங்கய்யர், வாசலில் இருந்தார். ''யாராவது வாத்தியார்கள் அகப்பட்டார்களா?'' என்று கேட்டார். ''இல்லை'' என்று நாக்குளறக் கூறிவிட்டு கந்தசாமி அய்யர் உள்ளே போய்விட்டார்.

அவர் நிஜத்தைச் சொல்லவில்லை. ஓர் உபாத்தியாயரிடம் இதைப்பற்றிப் பிரஸ்தாபித்தார். ஏற்கனவே இவர்களுக்குப் பெரிய மிராசுதாரின் மகன்மேல் ஒரு கண். சந்தர்ப்பம் கிடைத்தால் விடுவார்களா? ஸ்திரமாக ஒன்றும் கூறாமல் வந்துவிட்டார் கந்தசாமிவாத்தியார். கையோடு இங்கிலீஷ் முதல் பாடப்புத்தகம் ஒன்றையும் யாரிடமிருந்தோ வாங்கிவந்திருந்தார். பையனைவிட்டுப் பிரியாமல் இருப்பதற்குத் தாமே இங்கிலீஷ் கற்றுக்கொண்டு என்றும் வாத்தியாராக இருக்கலாம் என எண்ணினார்போலும்!

இரவு வெகுநேரம் ஆனபின் அப்புத்தகத்தைப் பழைய ஞாபகத்தை வைத்துக்கொண்டு படிக்கப் பிரயத்தனப்பட்டார். எவ்வளவுநேரம் முயன்றும் அவரால் முடியவில்லை. பொழுது விடியும் சமயம் மிகச் சோர்வடைந்து படுக்கையில் சாய்ந்து கண்ணயர்ந்துவிட்டார்.

காலை ஏழுமணிக்கு மகாலிங்கய்யரின் கணக்குப்பிள்ளைத் தம்மைக் கூப்பிடுவதைக் கேட்டுத் திடுக்கிட்டுக் கண்விழித்தார். "அய்யர் உங்களை இட்டுக்கொண்டு வரச்சொன்னார்" என்றான் கணக்கன்.

"இதோ வந்துவிட்டேன்" என்று கூறிக்கொண்டே அவசர அவசரமாக முகத்தைத் துடைத்துக்கொண்டு அவனுடன் சென்றார்.

வீட்டுக் கூடத்தில் மகாலிங்கய்யர் ஜில்லாபோர்ட் வாத்தியார் ராமஸாமி அய்யருடன் பேசிக்கொண்டிருந்தார். அவரைப் பார்த்ததும் கந்தசாமி வாத்தியாரின் தலையில் இடி விழுந்தது போலாயிற்று. மகாலிங்கய்யர், "நேற்று இவரை வரச்சொல்லியிருந்தீராமே? நேற்றுச் சாயங்காலம் கேட்டதற்கு 'இல்லை' என்றீரே" என்றார்.

"ஆமாம். என்னமோ கவனமறதியாகச் சொன்னேன்."

"இவரையே இனிமேல் வாத்தியாராக வைத்துக்கொள்ளலாம் என்று எண்ணி இருக்கிறேன்."

"தங்கள் இஷ்டப்படியே."

அன்று மத்தியானம் தமது அறையில் உட்கார்ந்துகொண்டு, புதுவாத்தியார் வராண்டாவில் ஸ்வாமிநாதனுக்கு இங்கிலீஷ் கற்றுக்கொடுப்பதைப் பார்த்தவண்ணமிருந்தார் கந்தசாமி அய்யர். பையன் அடிக்கடி அவர் அறைப்பக்கம் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தான். கந்தசாமி அய்யரின் கண்களிலிருந்து நீர் ஆறாய்ப் பெருகிற்று. கடைசியில் ஏதோ ஒரு தீர்மானத்திற்கு வந்தவர்போலக் கண்களைத் துடைத்துக்கொண்டு அறையைவிட்டு வெளியேவந்தார்.

மகாலிங்கய்யர் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தார். கந்தசாமி அய்யர் அவரை நெருங்கி, "நமஸ்காரம், போய்வருகிறேன். விடையளிக்கவேண்டும்" என்றார்.

"எங்கே போகப்போகிறீர்?"

"பகவான் விட்ட வழியே. நான் இன்னும் எத்தனை நாளோ, எந்தப்படியோ இந்தப் பாழும் ஜன்மத்தைக் கடத்தித்தானே தீரவேண்டும்."

"அப்படியானால் போகத்தான் போகிறீரா? சரி, இராத்திரி என் அறைக்கு வாரும்."

இரவு ஒன்பது மணிக்குக் கந்தசாமி வாத்தியார் மகாலிங்கய்யரின் அறைக்கு வந்தார். இரண்டொரு உபசார வார்த்தை

கள் பேசிவிட்டு மகாலிங்கய்யர் நான்கு பத்துரூபாய் நோட்டுக்களை அவரிடம் கொடுத்து, "ஏதோ என்னாலானதைத் தங்கள் சிரமத் துக்காகக் கொடுத்தேன்" என்று சொன்னார். நோட்டுக்களை வாங் கும்போது கந்தசாமி வாத்தியாரின் கைகள் நடுங்கின. ஒருவாறு சமாளித்து அவற்றைப் பெற்றுக்கொண்டு, "விடிகாலை புறப்பட்டுப் போகிறேன். ஒருதரம் ஸ்வாமிநாதனைப் பார்க்கணும் என்று ஆசை யாயிருக்கிறது" என்றார்.

அதற்குள் மகாலிங்கய்யர், "அவன் இத்தனை நாழிகைக்குத் தூங்கிப்போய் விட்டிருப்பானே" என்றார். கந்தசாமி வாத்தியார், "அப்படியானால் எழுப்பவேண்டாம். இன்னிக்குப் பையனுக்கு ரொம்ப சிரமமாகத்தான் இருந்திருக்கும். சரி, நான் போய் வரேன். நமஸ்காரம்" என்று கூறி மகாலிங்கய்யரிடம் விடை பெற்றுச் சென்றார்.

மறுநாள் பொழுது விடியுமுன்னரே தம்முடைய பழைய பையுடன், கையில் தடியை ஊன்றிக்கொண்டே வீதியில் வந்தார். அவர் முகம் மிகவும் சுண்டி வறண்டு இருந்தது. ஒருதரம் ஸ்வாமி நாதனின் அறையைப் பார்த்துவிட்டு வெறுப்படைந்த முகத் துடன், "இந்த ஜகமே மாயை. என்ன இருந்தாலும் இதரர் பிள்ளைதானே, நமக்கு எப்படிச் சொந்தமாகும்?" என்று தன்னுள் ளேயே சொல்லிக்கொண்டு மீண்டும் தன் பிரயாணத்தைத் தொடங்கினார்.

* * *

ஒருமாதம் கழித்து ஸ்வாமிநாதனுக்கு ஒரு பார்ஸல் வந்தது. மகாலிங்கய்யர் ஆவலுடன் அதை உடைத்துப்பார்க்க அதில் ஒரு பொன் கடிகாரமும், ஒரு துண்டுக்காகிதமும் இருப்பதைக் கண் டார். காகிதத்தில் 'குழந்தை ஸ்வாமிநாதனுக்கு அவனுடைய வாத்தியார் தாத்தா அன்புடன் அளித்தது' என்றிருந்தது. விலா சம் ஒன்றும் காணப்படவில்லை.

மகாலிங்கய்யர் கடிகாரத்தைப் பையனிடம் கொடுத்து விட்டு வெகுநேரம் மௌனமாயிருந்தார். சட்டென்று, அன் றொருநாள் தாம் கண்ட ஒரு காட்சி—கிழ வாத்தியாரின் தோள் மேல் ஏறிக்கொண்டு ஸ்வாமிநாதன் குதிரை ஸவாரி செய்தது— அப்பொழுதுதான் நிகழ்வதுபோல் அவர் மனக்கண்முன் வந்து தோன்றியது.

இந்த ஜகமே மாயை!

# பதவியே உதவி

கே. ஸ்வாமிநாதன், எம். ஏ., பி. எல்.

---

பாத்திரங்கள்

சுந்தரமய்யர்—வயது 45.
மணி—(அவர் மகன்) வயது 20.
கிருஷ்ணன்—சமையற்காரன்.
முத்து — (அவருடைய காலஞ் சென்ற தங்கையின் மகன்) வயது 22.
கோவிந்தசாமி முதலியார்—வயது 50.
ராமானந்த பாகவதர்—(முத்துவின் தகப்பனர்) வயது 45.
தந்திச் சேவகன்.

காட்சி

[பம்பாய், மாதுங்காவில், ஒரு மாடி. முன்னே தாழ்வாரம், பக்கத்தில் இரண்டு கதவுகள்; ஒன்று ஸ்நான அறைக்கு; மற்றொன்று வெளியே போக. பின்னே ஒரு அறை. நடுக்கதவு சமையலறைக்கு வழி. சீமைக் கித்தான் நாற்காலி இரண்டு; மர நாற்காலி இரண்டு; ஸ்டூல் ஒன்று. ஜன்னலுக்கு ஜன்னல் கொடி, கொடியில் துணிகள். அலமாரிகள், பத்திரிகைகள், புஸ்தகங்கள், குடிக்கக் கண்ணாடிக் கோப்பைகள்.

சுந்தரமய்யர் கித்தான் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, தினசரிப் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருக்கிறார். மணி மேஜைக்கருகில் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, அகராதி சகிதமாய்ப் போட்டிப் பந்தய ஆராய்ச்சி நடத்துகிறான்.]

**மணி:** அனல், கனல், அழல், தழல். அனல், அழல், கனல், தழல். (அகராதியை ஓங்கி மேஜைமேல் எறிந்துவிட்டு, எண்ணெயும் நீருமாய்க் குழைத்துத் தலையில் வைத்துத் தேய்த்து நீளச்சீப்பால் தலையை வாரிக்கொண்டு) நேற்றுச் சொன்னேனே, அப்பா, அந்த ஸைகிளைப்பற்றி என்ன? புதுமாதிரி; பங்ச்சராகாத டயர், பச்சை வர்ணம்; துருப்பிடிக்காத க்ரோமியம்; எலெக்ட்ரிக் லைட்டு; உள்பக்கம் ப்ரேக்கு.

**சுந்தரமய்யர்:** (தினசரிப் பத்திரிகையைப் படித்துக்கொண்டே நாற்காலியில் சாய்கிறார். முதுகில் புஸ்தகம் உறுத்த, அதைத் தூக்கி வீசி எறிந்து) புஸ்தகம், நோட்டுப் புஸ்தகம்; புஸ்தகம், நோட்டுப் புஸ்தகம்; எங்கேபார்த்தாலும் புஸ்தகம்தான். புஸ்தகத்தைப் படித்தானுல் அழகாய் மூடி மடித்து ஒரு மேஜை அல்லது

அலமாரியில் வைத்தோம் என்கிறபாடு கிடையாது. கிடந்து இறைபடவேண்டியதுதான். நல்ல வீடு இது!

மணி: (கீழே விழுந்துகிடக்கும் புஸ்தகத்தை எடுத்துப் பார்த்து) என் புஸ்தகமில்லை யப்பா, முத்துவின் புஸ்தகம்.... அந்த ஸைகிள் இப்போது விலை ரொம்பக் குறைவு. இந்த மாஸத்துக்கப்புறம் விலை ஏறிவிடும். வாங்கித் தருகிறாயா, அப்பா?

சுந்: (பத்திரிகைக்குப் பின்னாலிருந்து) வாங்கித்தருகிறதா? எதை?

மணி: அதுதான் சொன்னேனே, அப்பா, அந்தப் புதுமாதிரி ஸைகிள்.

சுந்: கையிலே பணமில்லையே. உனக்குத்தான் ஸைகிள் இருக்கிறதே.

மணி: என்ன, அப்பா, நான் இத்தனை நாழி சொன்னதெல்லாம் செவிடன் காதில் சங்கா?

சுந்: நான்தான் செவிடு என்றால் நீயென்ன குருடா? நான் காரியமாயிருக்கிறேன் என்று தெரிகிறதா இல்லையா?

மணி: ஓஹோ! ஊர் வம்பை வாயாலே பேசினால் அது தோஷம். அச்சிலே படித்தால் அது காரியம்!

சுந்: போதும் உன் அதிகப்பிரஸங்கித்தனம். (மேஜையின் மேல் காப்பி வண்டலுடன் ஒரு கண்ணாடிக் கோப்பையைப் பார்க்கிறார்.) கிருஷ்ணனைக் கூப்பிடு.

மணி: (கூவுகிறான்) கிருஷ்ணா! கிருஷ்ணா!

சுந்: இரையாதேடா! இரைவதென்றால் உன் தயவு என்ன? சமையலறைக் கதவைத் திறந்து கூப்பிடேன். (கிருஷ்ணன் வருகிறான்)

கிருஷ்ணன் (உடுப்பிப் பக்கத்து ஆள்): யன்ன யஜமான்?

சுந்தர: இது "யன்ன யஜமான்"? (கோப்பையைக் காண்பிக்கிறார்)

கிரு: காப்பி.

சுந்: காப்பியா? வேறொன்றுமில்லை?

கிரு: ஆமாங்கோ, கொசுக்கூட ரெண்டு.

சுந்: அட மடையா! இது ஏண்டா இங்கே இருக்கவேண்டும்?

கிரு: நேற்று ஸாயங்காலம் மூத்த ஐயர் காப்பி குடித்த பாத்திரம்.

சுந்: ஓஹோ! அதை எடுத்துக்கொண்டு போய்க் கழுவ உனக்கும் ஒழியவில்லை, அவனுக்கும் ஒழியவில்லையாக்கும்.

கிரு: க்ஷமிக்கணும், யஜமான்.

சுந்: இப்போதாவது எடுத்துக்கொண்டு போய்த் தொலை. நிற்காதே. பத்திரம், மெள்ள வேலை செய். எல்லாவற்றையும் தவிடுபொடி செய்யாதே. (கிருஷ்ணன் சமையலறையில் நுழையப் போகிறான்). அடே இங்கேவா. (கிருஷ்ணன் திரும்புகிறான்). "காலையில் காப்பி சாப்பிட யாராவது வருவார்கள். இட்டிலி, காப்பி தயார் செய். நல்ல வண்ணானுக்குப் போட்ட வேஷ்டியும், ஷர்ட்டும் உடுத்திக்கொள்" என்றேனே; ஏண்டா இந்தப் பிடி துணியைச் சுற்றிக்கொண்டிருக்கிறாய்?

கிரு: இப்போதான் காப்பிபோட ஆரம்பித்தேன். அதற்குள் யஜமான் கூப்பிட்டுவிட்டுது.

சுந்: சரி, சீக்கிரம்போய் இட்டிலி, காப்பி தயார்செய்து வெள்ளைத் துணி ஒன்றைக் கட்டிக்கொண்டு வந்துசேர். (கிருஷ்ணன் உள்ளே போகிறான்.)

மணி: ஏன், அப்பா, வாங்கிக் கொடுக்கமாட்டாயா?

சுந்: எதை?

மணி: சரி சரி, விடிய விடியக் கதை கேட்டும் சீதையும் ராமனுந்தான்—அந்த ஸைகிளை, அப்பா.

சுந்: போதும் அந்த ஸைகிள் பேச்சு. நிறுத்து. எனக்குத் தலைவலி வந்துவிட்டது. கையில் பணம் இல்லை என்று ஒருதரம் சொன்னால் தெரியவேண்டாம்?

மணி: ஏன், முத்துவின் செலவுக்காக இந்த மாதம் மணி யார்டர்ப் பணம் வரவில்லையா?

சுந்: அதுதான் இரண்டு மாஸமாய் நின்றுபோய்விட்டதே.

மணி: அவன் அப்பாவுக்கு ஏன் எழுதக்கூடாது?

சுந்: எல்லாம் எழுதிப் பார்த்தாய்விட்டது. (கிருஷ்ணன் வருகிறான்) ஸ்..ஸ்..ஸூ (மணி எழுந்திருந்து மேஜை நாற்காலிகளைத் துடைத்து ஒழுங்கு செய்கிறான்.)

கிரு: என்ன, யஜமான், காப்பி கொண்டுவர நாழிகை ஆச்சா?

சுந்: இன்னும் இல்லை. முதலியார் வந்ததும் கூப்பிடுகிறேன். (கிருஷ்ணன் போகிறான்.)

மணி: முத்துவுக்காக நாம் ஏன் இப்படிப் பட்டினி கிடக்க வேண்டும்? எனக்கு அந்தப் புதிய ஸைகிள் வேண்டத்தான் வேண்டும்.

சுந்: சரி, பிராணனை வாங்காதே, முத்துவின் செலவுப்பணம் வந்தவுடன் வாங்கித் தருகிறேன்.

மணி: ஆமாம் 'எண்ணெய் மழை பெய்தால்' என்று சொல்லிவிடேன்! அது எங்கே வரப்போகிறது. இனிமேல் ஒரு நாளும் வராது.

சுந்: மாஸாமாஸம் மணியார்டர் வராவிட்டால் இனிமேல் முத்து தானே சம்பாதித்துத் தன் காரியத்தைப் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான்.

மணி: (ஆச்சரியத்துடன்) அவன் சம்பாதித்தா? அப்படியானால் இந்த வெட்டிப்படிப்பு, ஹரிஜன இயக்கம், தொழிலாளர் பிரசாரம், பத்திரிகைக்கு எழுதுதல், ஊர் ஊராய்த் திரிதல், எல்லாம் முடிந்ததா?

சுந்: முடிவானேன்? மத்தியானம் ஆபீஸுக்குப் போனால் காலையிலும் சாயங்காலத்திலும் இஷ்டமானதைச் செய்யட்டுமே.

மணி: ஆமாம், முத்துவுக்கு யார் என்ன வேலை கொடுக்கப் போகிறார்கள்?

சுந்: நமது கோவிந்தசாமி முதலியாரிடம் சொல்லி அவருடைய ஆபீஸில் ஒரு குமாஸ்தா வேலை போட்டுக்கொடுக்க ஏற்பாடு செய்யலாம் என்று பார்க்கிறேன்.

மணி: ஓஹோ, அதற்காகத்தானா முதலியாரைக் காப்பி சாப்பிடக் கூப்பிட்டிருக்கிறது?

சுந்: ஆமாம்.

மணி: அப்படியானால் நிச்சயம் முத்துவை வேலைக்கு விடுவாயா?

சுந்: ஆமாம், சந்தேகமென்ன? (மணி மும்முரமாய் ஒழித்து வைக்கிறான்.)

மணி: அவன் வேலைக்குப் போய்ச் சம்பாதித்தால் எனக்கு ஸைகிள் வாங்கித்தருகிறாயா?

சுந்: அதற்கென்ன, பார்த்துக்கொள்ளலாம். (கடியாரத்தைப் பார்க்கிறார்) கிருஷ்ணா! (உள்ளே பாத்திரங்கள் விழுந்து உடையும் சத்தம் பலமாய்க் கேட்கிறது.)

மணி: என்னடா செய்தாய்? (கதவைத் திறக்கிறான். கிருஷ்ணன் பாத்திரக்குவியலில் உழலுவதைக் காண்கிறான்.)

சுந்: இன்றைப்பொழுது போகட்டும். ஒழித்துவிடுகிறேன். விரலிலென்ன விளக்கெண்ணெயா?

கிரு: இல்லை, ஸ்வாமி, சின்ன யஜமான் கூப்பிட்ட அவஸரத்தில் பயந்து ஓடி வந்தேன். (வெளிக்கதவு தட்டப்படுகிறது.)

சுந்: சரி உள்ளே போய்த்தொலே. எல்லாம் வேறே சுத்தமாய்ப் புதிதாய்க் கொண்டுவா. இட்டிலி சனியன் தொலேயட்டும். பிஸ்கோத்தைக் கொண்டுவா. (கிருஷ்ணன் போகிறுன். சுந்தரம் வெளிக்கதவைத் திறக்க, கோவிந்தசாமி முதலியார் வருகிறுர். மணியும் சமையலறைக்குள் போகிறுன்.)

சுந்: வரவேண்டும், வரவேண்டும், முதலியார்வாள். வாருங்கள் உட்காருங்கள். சௌக்கியந்தானே?

கோ: (இருமல், தும்மல் சில முறை நடத்தியபின்) பனிக்காலம் இன்னும் முழுதும் போகவில்லே. ஏதோ ஜலதோஷம் மாதிரி தோன்றுகிறது. காலேயிலே வருவது உசிதமோ என்று யோசித்தேன். அப்புறம் கம்பளியைப் போர்த்திக்கொண்டு . . (தும்மல்.)

மணி: (சமையலறையிலிருந்து வந்துகொண்டு) என்ன முதலியார்வாள், சௌக்கியமா?

முதலியார்: கொஞ்சம் ஜலதோஷமாயிருக்கிறது.

சுந்: முதலியார்வாள்! தாங்கள் ரொம்ப நல்லவர் என்பதற்கு வேறு ருஜு வேண்டாம். தேக அஸௌக்யத்தைக்கூட லக்ஷியம் செய்யாமல் இந்தமட்டும் பெரிய மனஸு பண்ணி வந்தீர்களே! அப்பா, மணி, காப்பி ஏதாகிலும் இருக்கிறதோ பார். (மணி உள்ளேபோய், அவனும் கிருஷ்ணனுமாய் பிஸ்கோத்து, காப்பி கொண்டுவருகிறுர்கள். முதலியாரும், சுந்தரமும் சாப்பிடுகிறுர்கள்.) உப்பா? தித்திப்பா? ஸ்வதேசி பிஸ்கோத்தோ இல்லேயோ, இரண்டு விதத்திலும் கிடைக்கிறது.

கோ: அதிலே இரண்டு, இதிலே இரண்டு போடுங்களேன். (இருமல், தும்மல்.) உங்கள் மருமகன் முத்துசாமி எங்கே காணுமே?

சுந்: அந்தக் கஷ்டத்தை ஏன் கேட்கிறீர்கள்? பொழுது விடிவதற்கு முன் தொழிலாளர் 'சால்' எங்கே, பறைச்சேரி எங்கே என்று திரிகிறுன். துளியாவது பொறுப்பு, கவலே ஒன்றும் கிடையாது. ராஜீயமாம், பொருளாதாரமாம், தேச சேவையாம். காலணு ப்ரயோஜனமில்லாமல் காலத்தை வீணுக்குகிறுன். இந்த மாதிரி நரிமான், நாய்மான் இவர்களோடு சுற்றிக்கொண்டிருந்தால் வயிற்றுப் பிழைப்பிற்கு என்ன செய்கிறது? கழுதை காங்கிரஸ் வாலேப் பிடித்துக்கொண்டு ஊர் ஊராய் அலேகிறுன்.

மணி: அதுவும் முதல் க்ளாஸில் எம். ஏ. பாஸ் செய்துவிட்டு! படித்த மூடன் என்றுல் இவனுக்குத்தான் தகும். பேச்சுக் கேட்பதற்கென்று டெல்லி, லக்னௌ எல்லாம் போயிருந்

தான், போன டிஸம்பரில். நூறு ரூபாய் செலவு; தம்படி லாப மில்லை. வெறும் பேச்சுப் பயித்தியம்.

கோ: ஆமாம், ஸ்வாமி, எங்கள் துரைக்குக் கூடத் தெரியு மாம். ஏதோ ஒய். எம். ஸீ. ஏ. கூட்டத்தில் வாதித்தானும்.

சுந்: நான் சொன்ன விஷயத்தை உங்கள் துரையிடம் பிரஸ் தாபிக்க நேர்ந்ததா?

கோ: நன்றாய்க் கேட்டீர்கள்! திவ்வியமாய்ச் சொன்னேன்.

மணி: துரை என்ன சொன்னாரோ?

கோ: "ஸித்தமாய்க் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்றார். குமாஸ்தாவாக ஆரம்பிக்க இஷ்டமிருந்தால், முதல் தேதியிலி ருந்து வேலைக்கு வரலாம் என்றார்.

மணி: முதல் தேதி என்றால் இன்னும் நாலு நாளிலா?

சுந்: ரொம்ப சந்தோஷம், முதலியார்வாள். நீங்கள் செய்த உபகாரத்தை என்னவென்று சொல்லுவேன்? முத்து இந்த நாலுநாள்கூடப் பொறுக்கமாட்டான். "இன்றைக்கே வேலைக்குப் போவேன்" என்று குதிப்பான். இன்னுமிரண்டு பிஸ்கோத்து சாப்பிடுங்கள். இன்னுமொரு டம்ளர் காப்பி சாப்பிடுங்கள்.

கோ: (தும்மி, இருமி, சாப்பிட்டுக் கொண்டே) சம்பள மென்னவோ முதலில் சொல்பமாகத்தானிருக்கும். பிறகு தானே உயரும். ஒழுங்காய் வேலை செய்து துரையின் தயவு சம்பாதித்து விட்டால், அப்புறம் கொள்ளை தான். அதுபாட்டுக்கு ஐம்பது நூறு என்று ஏறும்.

(முத்து கதர் ஜிப்பா, காந்திக்குல்லா, புஸ்தகம் இவைகளு டன் கவலையற்று உல்லாஸமாய் நுழைகிறான்.)

முத்து: நமஸ்தே, மிஸ்டர் முதலியார்! என்ன அபூர்வமான விஸிட்டாயிருக்கே! சௌக்கியமா?

கோ: சௌக்கியம் (இருமல், தும்மல்) தான்.

மணி: (முத்துவை நோக்கி) இன்றைக்கென்ன இவ்வளவு சீக்கிரம் வீட்டுக்குத் திரும்பி வந்தாய்? சாப்பாட்டு நேரம் ஆகவில்லையே?

முத்து: எல்லாம் காரியமாகத்தான் வந்திருப்பேன். எனக்கு ஏதேனும் லெட்டர் கிட்டர் வந்ததா?

சுந்: ஒன்றும் வரவில்லை. ஆனாலும் நல்லவேளையில் நீ வந்து சேர்ந்தாய். முத்து, உனக்கென்ன அதிர்ஷ்டந்தான். முதலியார் உனக்கு நல்ல செய்தி கொண்டுவந்திருக்கிறார்.

முத்து: (மஹா ஆச்சரியத்துடன்) அதிர்ஷ்டமா? நல்ல செய்தியா? நீங்கள் என்ன கேள்விப்பட்டீர்கள்? எங்கே?

மணி: கேள்விப்படுகிறதா? எதை? என்னடா விழிக்கிறாய்?

முத்து: ஒன்றுமில்லை. என்ன சமாசாரம் என்ற ஆச்சரியம் தான். உங்கள் செய்தியைச் சொல்லுங்கள் கேட்கலாம். (காப்பிப் பாத்திரத்தை வெளியே தொட்டுப் பார்க்கிறான்). கிருஷ்ணா, சுடச்சுட இரண்டு டம்ளர் காப்பி கொண்டு வா பார்க்கலாம்.

மணி: காலையில் இரண்டாம்தரம் இரண்டு டம்ளர் காப்பியா! பேஷ்!

முத்து: வெல், முதலியார், கோ அஹெட்.* (பதிலில்லை.) ஔட் வித் யுவர் குட் ந்யூஸ்.†

சுந்: என்னடா இது, பெரியவர்களிடத்தில் மரியாதை இல்லாமல்? முதலியார் துரையோடு மன்றாடி, உனக்கு அவர் ஆபீஸில் ஒரு வேலை சம்பாதித்திருக்கிறார். அடுத்த மாஸம் முதல் தேதியிலிருந்து நீ வேலைக்குப் போகலாம்.

முத்து: வேலையா? என்னமாதிரி வேலை?

சுந்: ஆரம்பத்தில் எல்லாம் சிறியதாய்த்தான் தோன்றும். தானே வரவர உயரும். படிப்படியாய்த்தானே ஏறவேண்டும். இள வயதிலே ஓர் ஆபீஸில் புகுந்துகொண்டால்தானே நாளடைவில் முன்னுக்கு வரலாம்.

முத்து: ஏன் மாமா, உன்னை யார் இந்த வம்பிலெல்லாம் தலையிடச் சொன்னார்கள்.

சுந்: (கோபமாக) வம்பா? நல்லது செய்யப்போனால்—

முத்து: நல்லதா? எனக்கு குமாஸ்தா வேலையா, அதிலும் இங்கிலீஷ் கம்பெனியிலா?

சுந்: வயது வந்தும், தேச சேவை, சுதேசி என்று உளறிக் கொண்டிருந்தால் காலக்ஷேபம் எப்படி? என்றென்றைக்கும் இந்தமாதிரித் திரிந்துகொண்டிருக்க முடியுமா? என்னால் உன்னை வைத்துச் சோறுபோட முடியாது இனிமேல்.

முத்து: நீ என்ன செய்துவிடுகிறாய்? என் அப்பா 'அலவன்ஸ்' அனுப்புகிறார்.

சுந்: அப்பா அலவன்ஸைப் பார்க்கவில்லை அலவன்ஸை. அது நின்று இரண்டு மாஸத்துக்கு மேலாச்சே.

முத்து: அப்படியா? ஆனால் சரி. இனி உன் சோறும் வேண்டாம், (முதலியாரை நோக்கி) பரதேசிக் கம்பெனியிலே கணக்குப்பிள்ளை வேலையும் வேண்டாம். இனிமேல் என்பாட்டை நானே பார்த்துக்கொள்கிறேன்.

---

**Well, Mudaliar, go ahead.* †*Out with your good news.*

கோ: (இருமல், தும்மல்) கரும்பு தின்னக் கசக்கும், ஸார், இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு. சரி, சுந்தரமய்யர்வாள், நான் துரையிடம்—

முத்து: ரொம்ப தாங்க்ஸ்.* ஆனால் எனக்கு அவர் ஆபீஸ் உத்யோகம் வேண்டியதில்லை என்று சொல்லிவிடுங்கள். அதுதான் ஸார், 'டிக்ளைன்ட் வித் தாங்க்ஸ்.'†

கோ: அதற்கென்ன, சொல்லிவிடுகிறேன். வேலைக்கு லக்ஷம் பேர் காத்துக்கிடக்கிறார்கள். உன் இஷ்டம்போல் செய். ஆனால் நீ வேண்டும்போது உத்யோகம் கிடைக்காது. நான் போய்வருகிறேன்.

சுந்: வலுவில் வந்த லக்ஷ்மீதேவியை வேண்டாம் என்று உதைத்துத் தள்ளுகிறான். மஹா பாவி. அவன் கிடக்கிறான், முதலியார்வாள், தட்டுக்கெட்ட பயல்—நான் என்றும் மறக்க மாட்டேன் நீங்கள் செய்த உபகாரத்தை.

கோ: செய்யத் தயாராயிருந்த உபகாரத்தை என்று சொல்லுங்கள். நேரமாச்சு, போய்வருகிறேன். (தும்மி, இருமி வெளியே போகிறார். முத்து இரண்டாவது டம்ளர் காப்பியைச் சீப்பிச் சொகுசாய் உட்கொள்ளுகிறான்.)

மணி: வெகு அழகு! அன்னியர் முன்னிலையில் அன்னியர் வீட்டில் தண்டச்சோற்றுத் தடிராமன் செய்யும் அமர்க்களம்!

முத்து: போதும், மணி, மூடு வாயை.

சுந்: முத்து, என்னடா இப்படிக் குடியைக் கெடுத்தாயே. நன்றிகெட்டதுமன்றி, உன் சுயநலத்தையும் கைவிட்டாயே?

முத்து: ஸ்வயநலமா? ஸ்வயமான கேடாச்சே, இருபத்தைந்து ரூபாயிலே குமாஸ்தாவாய்ப் போவது.

சுந்: எதிர்த்துப் பேசாதே. என் வீட்டில் இருந்துகொண்டு நான் படைக்கும் சோற்றைத் தின்னும்வரை நான் சொன்னபடி கேட்கத்தான் வேண்டும்.

முத்து: நீ போடும் சோறுவது? என் அப்பா பணம் அனுப்பினார்; நீ சோறு போட்டாய். ஹோட்டல்காரனுக்குக் கீழ்ப்படிய வேண்டுமா என்ன?

சுந்: என்ன சொன்னாய்! அதிகப்பிரசங்கி! உன் அப்பனிடமிருந்து என்ன மஹாபணம் வந்துகொண்டிருந்தது? உன் நோட் புஸ்தகத்துக்காகுமா? போன கிரிஸ்மஸ் லீவில் டெல்லி, ஆக்ராவெல்லாம் நாய்மாதிரி அலைந்துவிட்டு வந்தாயே, அந்த ரயில் சார்ஜுக்காகுமா? இந்தப் பம்பாயில் கையகலம் இடத்துக்குக் குடிக்

---

*Thanks. †"Declined with thanks."

கூலிக்காகுமா? அப்பனும், அலவன்ஸாம்! அதுவும் நின்று மூன்று மாஸமாச்சு. ஏப்ரல் பத்தாச்சு இன்று. ஜனவரிக்கு அப்புறம் உன் அப்பனிடமிருந்து பேச்சு மூச்சுக் கிடையாது.

முத்து: நிஜமாகவா, மாமா, நிஜமாக அப்பா பணத்தை நிறுத்தி விட்டாரா?

சுந்: சந்தேகமென்ன? பணம் வரத்தானில்லை.

முத்து: ஒருவேளை மறந்துபோயிருப்பார். நான் எழுதுகிறேன்.

சுந்: திவ்வியமாய் நீ எழுது. நான் எழுதி எழுதிக் கையலுப்பும், தபால் செலவுந்தான் மிச்சம். இப்போதாவது தெரிந்ததா, நீ உனக்கு ஏதேனும் வழி தேடிக்கொள்ளவேண்டுமென்று?

(வெளியிலிருந்து ஓர் உரத்த குரல்—“மணி, மணி, வாடா கடைக்குப் போகலாம், ஸைகிள் கடைக்கு.”)

மணி: முத்து, இந்த வீட்டைவிட்டு நகருவதாக உத்தேசமோ இல்லையோ? உனக்கு இங்கேஎன்ன வேலை? (வெளியே போகிறான்)

முத்து: மணி சொல்வது சரிதான். ஆமாம்.

சுந்: எது சரி?

முத்து: நான் போகத்தான் வேண்டும். நான் இந்த வீட்டில் இருப்பது யாருக்கு நலம், யாருக்கு இஷ்டம்?

சுந்: பயித்தியம் மாதிரி பேசாதே. உனக்குப் போக்கிடம் ஏது?

முத்து: என் அப்பாவிடம் போகிறேன்.

சுந்: மலாய் நாட்டுக்கா! கப்பல்சார்ஜு ஏது உன்னிடம்? அல்லது அங்கே போய்த்தான் சாதிப்பதென்ன?

முத்து: ஏன், என் தகப்பனார் என்னை வைத்துக் காப்பாற்றக் கடமைப்பட்டவர். நான் போனால் அவருக்குச் சந்தோஷமாய்த்தான் இருக்கும்.

சுந்: யாரிடமடா இந்தக் கதையெல்லாம் அவிழ்க்கிறாய்? ராமானந்த பாகவதர், கிராமபோன் கியாதி பெற்ற ஸினிமா சிங்கம், எந்தக் கைம்பெண்டாட்டியுடனோ சீரழிகிறான். அவனோடு போய் நீ, எம். ஏ. பாஸ் பண்ணினவன், தூய கதராடை தரிப்பவன், வாழமாட்டாயா! அவனும் பரமதரித்திரனாய்விட்டான். என் தங்கை செத்தாலும் செத்தாள், தொலைந்தது அவன் அதிர்ஷ்டமும். அவனுக்குப் புதிய புதிய பந்தங்கள் எத்தனையோ. ஊரைவிட்டுப் போய்ப் பதினைந்து வருஷமாச்சு.

முத்து: எப்படியும் நான் போய் ஒருதரம் பார்க்கத்தான் வேண்டும்.

சுந்: போதும், போதும் உளறல். போகாத ஊருக்கு வழி தேடாதே. (வாசல்கதவு தட்டப்படுகிறது. கிருஷ்ணன் போய்ப் பார்த்து, திரும்பி வருகிறான்.)

கிரு: யாரோ பரதேசி, உங்கள் பேரைச் சொல்கிறான். உங்களைப் பார்க்கவேணுமாம்.

சுந்: யாரடா அது? போகச் சொல்லு.

ராமானந்த பாகவதர்: (சால்வை போர்த்திக் கையில் குடையுடன் புயற்காற்றுப்போல் உள்ளே வந்து,) என்ன சுந்தரம், சௌக்யமா? (கையைத் தூக்கிச் சுந்தரத்தின் பதிலை அடக்கி) என்னடா, உங்கள் வீட்டில் இங்கிலீஷ் பேப்பர், தமிழ் பேப்பர், ஹிந்தி பேப்பர் ஒன்றும் வரவழைப்பது கிடையாதா? என்னைப் பார்த்து உன் வேலைக்காரன் யார் என்று கேட்கிறானே? ஸினிமா சிங்கம், கிராமபோன் க்ரௌஞ்சம், நடிகர்நாயகம் ராமானந்த பாகவதர் படத்தைப் பார்த்திராதவன் ஒருவன் இன்று ஜீவிக்கிறானா? ஹா!

முத்து: (தனக்குள்) இதுவா என் அப்பா?

சுந்: ஏண்டா, ராமு, நீயா? எப்போ வந்தாய்? என்ன ஆச்சர்யம்!

ராமா: (பாடிக்கொண்டு, அபிநயித்து) சுந்தரமே, விந்தையிது; நந்தலாலா—மந்திரமாய் வந்தேன் யான்! நந்தலாலா—தந்தனன தந்தான நந்தலாலா. என்ன மச்சான், நீ சற்றுக்கூட மாறவில்லை. (முதுகில் தட்டிக் குலுக்குகிறான்) மயிரும் நரைக்கவில்லையே—மச்சான்—மனஸும் மாறவில்லையே! வயிறு நிறையச் சோறு—மச்சான்—வழங்கவே சொல் உடனே.

முத்து: (மூலையிலிருந்துகொண்டு கண்ணில் பயக்குறியுடன்) இதுவா, இதுவா என் அப்பா!

ராமா: (திடுக்கிட்டு, அப்போதுதான் முத்துவை நோக்கி) ஏன், மச்சான், யாரிவர்—இந்தத் தேசபக்தர், தீனபந்து, தியாகமூர்த்தி? மன்னிக்க வேண்டும் நான் ஏதோ தந்தானப் பாட்டுப் பாடினதற்கு. வணக்கமாய் நமஸ்கரித்து வேண்டுகிறேன். (கையைத் தூக்கி, கோஷிக்கிறான்.) மகாத்மா காந்திக்கு ஜேய்! வந்தேமாதரம்! அல்லாஹு அக்பர்! சரி, இனிமேல் எல்லோரும் ஒன்றுதானே! கனவான்களே! இந்தியநாட்டார் அனைவரும் சகோதரரென்று அறியீரோ?

சுந்: அடே, பயித்தியமே. இதுதானடா உன் பிள்ளை. முத்து, அப்பாவை நமஸ்கரியடா. (முத்து நமஸ்காரம் செய்கிறான்.)

ராமா: முத்துவா? இந்தப் பெரியவரா? இந்தத் தொண்டர் சிகாமணியா? அப்படியானால் என் நமஸ்காரம் வாபஸ். ஆசீர்வாதம் இதோ பெற்றுக்கொள். தீர்க்காயுஷ்மான் பவ! ரொம்ப ஸந்தோஷம். உன்னைப் பார்த்தாலே கண்ணுக்குக் குளுமையாயிருக்கிறது.

சுந்: (கூவுகிறார்) கிருஷ்ணு, அடே கொஞ்சம் சுடச் சுடக் காப்பி போட்டுக்கொண்டு வா. நான் ஸ்நானம் செய்ய நேரமாச்சு (போகிறார்).

முத்து: ஏன் அப்பா, நீங்கள் எந்த ஊரில் ஸ்திரமாயிருக்கப் போகிறீர்கள்; நானும் அங்கே வரட்டுமா, உங்களுடன், இப்போதே?

ராமா: ஏன், இங்கேயே இருப்பதில் உனக்கு என்ன கஷ்டம்?

முத்து: மாமாவுக்கு என்னை வைத்துக்கொள்ள இஷ்டமில்லை. "எனக்குக் குமாஸ்தா வேலை வேண்டாம்" என்றேன். "வீட்டை விட்டுப் போ" என்கிறார். (இதைக் கேட்டுக்கொண்டே சுந்தரம் வருகிறான். கொடியிலிருந்து ஒரு துவாலையை எடுக்கிறான்.)

சுந்: இந்த நாடகமெல்லாம் உன் அப்பனிடம் பலிக்காது. அவனுக்குத் தெரியாத நடிப்பு இல்லை!

ராமா: இதெல்லாம் என்ன சண்டை? எதைப்பற்றி? குமாஸ்தா வேலைக்கு என் பிள்ளை போவானேன்? குமாஸ்தா என்றால் அவனைக் காலை முதல் ராத்திரி வரையிலே மேஜையோடு சங்கிலி போட்டு ஒரே கட்டாய்க் கட்டிவைப்பார்களாமே.

சுந்: சுயேச்சையாய் உன்னைப்போல் உன் பிள்ளையும் வேண்டுமானால் திரியட்டும். நான் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் நான் ஏன் என் குழந்தையைப்போல் அவனை வைத்துக் காப்பாற்ற வேணும்? உன் பாட்டும் பஞ்சப்பாட்டுத்தான் என்று தெரிகிறது.

ராமா: அதை ஏன் கேட்கிறாய்? ஸோப்பு, வாஸனைஸாமான், ஸிகரெட்டுக்குக் காணாது என் வரும்படி. சாப்பாட்டுக்குக்கூட மிஞ்சுகிறதில்லை. இந்தத் தொழிலையே விட்டொழித்து விடப் போகிறேன்.

சுந்: அப்புறம்?

ராமா: அப்புறம் என்ன? கொஞ்சம் ஸொத்துள்ள பெண்ணாய் ஒருத்தியைப் பார்த்து வைத்திருக்கிறேன். த்விதீய விவாஹம்

முடித்துக்கொண்டு நிம்மதியாய் அவள் ஊரிலேயே அவளுடன் இருந்துவிட்டால் போகிறது.

சுங்: மறு கல்யாணமா? இந்த வயதிலா?

ராமா: வயது என்ன மஹா வயது எனக்கு! பெண் வீட்டாரிடம் சுமார் 30 இருக்கும் என்றுதான் சொன்னேன். ஒன்று இரண்டு கூடினுல், குறைந்தால் என்ன? (முத்துவை மேலும் கீழும் பார்த்து) இந்தப் பிள்ளை என்னமோ பனைமரம் மாதிரி வளர்ந்துவிட்டது.

சுங்: பின்னே என்ன, முத்துவின் கஷ்டமும் தீர்ந்தது. நீ குடியும் குடித்தனமுமாய் ஓர் ஊரிலே வாழ்ந்தால் உன் பிள்ளையையும் கூட வைத்துக்கொள்ளுவாய்.

ராமா: த்விதீயம் என்கிற விஷயத்தை அனுவசியமாய் வெளிப்படுத்தவேண்டாம் என்று உத்தேசம்.

சுங்: அப்படியானுல் முத்துவின் பாடு?

ராமா: அவன் மாமாவோடே ஸௌக்யமாயிருக்கிருன். அவனுக்கென்ன? கல்யாணச் செலவு, ரயில்செலவு, இந்தக் கஷ்டங்களாலே இன்னும் ஏழெட்டு மாஸம் நான் பணம் அனுப்ப முடியாது. அப்புறம் முடிந்தால் ஏதேனும் செலவுக்கு அனுப்புவேனே இல்லையோ? (கோபமும் ஆச்சரியமும் மூள, முத்து இருவரையும் மாறிமாறிப் பார்க்கிருன்.)

முத்து: போதும், போதும் நிறுத்துங்கள். மாமனும் ஆச்சு, அப்பனும் ஆச்சு. எனக்காக உங்களுள் ஒருவரும் இனித் துளிக்கூட கஷ்டப்பட வேண்டாம். ஒரு காலணு செலவழிக்கவேண்டாம். (தலையில் அடித்துக்கொள்கிருன்.) நான் எங்கேனும் தொலைகிறேன். என்னைத் தேடிப்பிடிக்காமல் விட்டால் போதும். உங்களுக்கும் எனக்கும் இனி ஒரு சம்பந்தமும் வேண்டாம். (வெளியே போகிருன்.)

ராமா: பையனுக்குப் பாடத் தெரியுமோ தெரியாதோ? ஸ்பஷ்டமாய், பாவத்துடன் பேசுகிருன். ரௌத்ர ரஸத்தை எவ்வளவு தெளிவாய்க் காட்டினுன் பார்த்தாயா? ஏனடா இப்படி உன் மருமகனுக்குக் கோபம் மூட்டுகிருய்?

சுங்: என் மருமகனுக்கா? நான் கோபம் மூட்டுகிறேனு? உன் பிள்ளைக்கு உன்னைக் கண்டால் கோபம் பொங்குகிறது. ஏன் பொங்காது? இந்த வயதிலே கல்யாணம் என்று பயித்தியம்.

ராமா: என் வயதைப்பற்றி உனக்கென்ன? குழந்தையை நல்ல வழியில் கொண்டுவர உனக்குச் சாமர்த்தியமில்லை.

சுந்: என், உன் குழந்தையை நீ நல்ல வழியில் கொண்டு வருவதுதானே! யார் வேண்டாம் என்கிறார்கள்? குசாலாய்க் கூட்டிக்கொண்டு போ! இன்றைக்கே போங்கள்!

ராமா: சுந்தரம், கோபம் வேண்டாம். நான் சொல்வதைக் கேள். இதோ பார், உனக்குத்தான் கோபம் வருகிறது, எனக்கா வருகிறது? உன்னிடமிருந்துதான் முத்து கற்றிருக்கவேண்டும். அவனை நான் எப்படி, எங்கே அழைத்துப்போவது? பதினைந்து வருஷமாய் நீ காப்பாற்றிவிட்டுத் திடீரென்று கைவிடலாமா?

சுந்: என்னாலே முடியாது இனிமேல்.

ராமா: உன்னாலே முடியாதா? என்னாலேயும் முடியாது.

சுந்: முடியவே முடியாது!

ராமா: என்னாலும் முடியவே முடியாது! (இந்தச் சண்டை நிகழும்போது கிருஷ்ணன் வருகிறான்.)

கிரு: (சண்டை சற்று ஓய்ந்ததும் சுந்தரத்தைப் பார்த்து) வெந்நீர் ஆறிப்போகுது. ஸ்நானத்துக்குக் காலமாச்சு.

சுந்: சரிதாண்டா, போடா. (சுந்தரமும், கிருஷ்ணனும் வெளியே போகிறார்கள்; கிருஷ்ணன் சமையலறைக்குள்ளும், சுந்தரம் ஸ்நானத்துக்கும்.)

ராமா: இதென்னடா இது? குடும்பம் வலுத்துவிட்டதே. பெண்டாட்டியோடு பிள்ளையுமொன்று! (வெளிக்கதவு 'டக், டக், டக், டக்' என்று தட்டப்படுகிறது. ராமானந்தர் போய்க் கதவைத் திறக்கிறார்; தந்திக்காரன் வருகிறான். சத்தம் கேட்டுக் கிருஷ்ணனும் வந்து சேருகிறான்.)

தந்திக்காரன்: முத்துஸ்வாமி?

ராமா: ஆம், இங்கே கொடு. (சீட்டில் கையொப்பமிட்டுத் தந்தியை வாங்குகிறார்.)

தந்திக்காரன்: பக்ஷீஸ், மஹாராஜ்!

கிரு: என்னடா, யாரோ ஸெத்துட்டாங்க! பக்ஷீஸா, போடா, வெளியே. (பிடித்து வெளியே தள்ளிவிடுகிறான். ராமானந்தர் உறையைக் கிழித்துத் தந்தியைப் படிக்கிறார்.)

ராமா: என்னடா, மூன்று மாஸத்துக்கு முன் முத்து—

கிரு: அதெல்லாம் சரிதான். யார் ஸெத்துட்டாங்க? தந்தி என்ன ஸொல்றது?

ராமா: அடே பயித்தியமே, யாரும் சாகவில்லை. முத்துவுக்கு நல்ல சமாசாரம் வந்திருக்கிறது. கேட்டதற்குப் பதில் சொல்லு.

மூன்று மாஸத்துக்கு முன் டெல்லிக்குப் போயிருந்தானு என்ன முத்து?

கிரு: அதை யேன் கேக்கிரீங்கோ? எங்கெங்கியோ ஓடித்திரிந் தார். ஒரு மாஸத்துக்கு மேல் ஊரிலேயே இல்லை, ஆளு.

ராமா: முத்துவுக்கு படே படே வேலை.

கிரு: (கைதட்டிக் கூத்தாடி, பாத்திரங்களைக் கீழே தள்ளி) ஸபாஷ், பலே ஸபாஷ். யாரும் ஸாவவில்லை. படே உத்யோகம் வந்தது!

ராமா: நிறுத்தடா, மடையா. ஸ்ஸு—இந்தத் தந்தி சமாச் சாரத்தை உன் யஜமானனிடம் சொல்லாதே.

கிரு: முத்துகிட்டே சொல்லலாமா? (சுந்தரம் ஸ்நானம் முடிந்து திரும்பி வருகிறுன். ராமானந்தர் தந்தியை ஒரு புஸ்த கத்துக்கு அடியில் வைக்கிறதைப் பார்த்துவிடுகிறுன். ராமானந்தர் ஸ்நானம் செய்ய உள்ளே போகிறுர்.)

சுந்: என்னடா, முத்துகிட்டே சொல்லலாமா?

கிரு: தந்தி வரவில்லை, யாரும் ஸாவவில்லை என்று—

சுந்: சரி சரி, உள்ளே போ! (சுந்தரம் தந்தியை எடுத்துப் படித்து இருந்தவிடத்திலேயே வைத்து விடுகிறுன். ராமானந்தர் வெளியே வருகிறுர்.)

ராமா: சுந்தரம், நான் ஆழ்ந்து யோசனை செய்து ஒரு முடி வுக்கு வந்திருக்கிறேன். உனக்குத் திருப்தியாய்த்தானிருக்கும். இத்தனை வருஷமாய் நான் என் குழந்தையை உன்னிடம் விட்டு வைத்திருந்தது தப்பு. இனிமேல் நானே அவனைப் பார்த்துக் கொள்ளப் போகிறேன்.

சுந்: ஓஹோ! இப்போதான் புத்தி வந்ததோ?

ராமா: நீ கோபக்காரன் என்றும், பணஆசை பிடித்தவனென் றும், இப்போதானே தெரிந்துகொண்டேன். இனி ஒரு க்ஷணங் கூட அவனை விட்டுப் பிரியமாட்டேன். உன்னை எட்டிக் கூடப் பார்க்கமாட்டான் அவன்.

சுந்: போதும் உன் சபதங்களெல்லாம்; அது ஒன்றும் நட வாது! முத்துவை நான் வளர்த்தேன். அவன் என் சொந்தப் பிள்ளைக்குமேல் எனக்கு!

ராமா: ஏனடா அப்பா, என்ன மறதி இது? இப்போதானே சொன்னுய், அரைமணி கூட இல்லையே: "அவன் இந்த வீட்டில் இருக்கமுடியாது. எங்கே வேணுமென்றுலும் தொலையட்டும்" என்று!

சுங்: அப்படியொன்றும் நான் சொல்லவில்லையே.

ராமா: அவனைக் குமாஸ்தாவாக்கி, மேஜையோடு மேஜையாய்ச் சங்கிலியால் பிணைக்கப்பார்த்த பாவியன்றோடா, நீ? உன்னிடம் நம்பி விடலாமா, என்னருமருந்தன்ன குழந்தையை?

சுங்: நடிப்பதற்கு இடம் இது இல்லை, பாகவதர்வாள். உனக்கு ஏதோ சமாசாரம் எட்டிவிட்டாற்போலிருக்குது. இல்லாவிட்டால் இந்தப் புத்ரவாத்ஸல்யம் திடீரென்று கிளம்புவானேன்?

ராமா: என்ன சமாசாரம்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே? (மணி உள்ளே ஓடி வருகிறான்.)

மணி: அப்பா, கேட்டாயா சமாச்சாரம்? முத்துவுக்கு ஐ. ஸி. எஸ். பாஸ் ஆய்விட்டதாம்! போஸ்டாபீஸில் தந்தி வந்ததாம்.

சுங்: எல்லாம் எனக்குந் தெரியுமடா. பாகவதர்வாள் காதில் கூட அந்தச் செய்தி விழுந்துவிட்டது!

ராமா: விழவில்லையே, என்காதில் ஒன்றும் விழவில்லை!

சுங்: (தந்தியைச்சுட்டி) அந்தத் தந்தி என்ன? யாருக்கு வந்தது? யார் உடைத்துப் பார்த்தார்கள்?

ராமா: (வேறுவழியில்லாமல் வீசி எறிகிறார்)—நீதான் பாரேன்.

சுங்: (முதல்முறை படிப்பதுபோல் படித்துவிட்டு) நான் கஷ்டப்பட்டுப் படிக்கவைத்துப் பையனை முன்னுக்குக் கொணர்ந்தேன். பையன் முன்னுக்குவந்தவுடன், நீ "என் பையன், என் பையன்" என்று கூத்தாடுகிறாய்.

ராமா: நீ முன்னுக்குக் கொண்டுவந்த அழகே அழகு! நீதான் அவனைக் குமாஸ்தா ஆக்கப் பார்த்தாயே!

சுங்: அதைப்பற்றியெல்லாம் இப்போது ஏன் பேசவேண்டும்? உனக்குத்தான் மறுகல்யாணம் ஆகப்போகிறதே. 30 வயது மாப்பிள்ளைக்கு ஐ. ஸி. எஸ். பிள்ளை யொன்றோ?

ராமா: கல்யாணப்பேச்சை நிறுத்து. அந்தக் குரூபியின் பணம் இனி எனக்கு எதற்காக? பிள்ளையிருக்கிறான், ஸம்பாதித்துப் போடுகிறான்; வயோதிகரான பிதாவைப் பார்த்துக்கொள்கிறான்.

சுங்: நீ உன் பிள்ளையைப் பார்த்துக்கொண்ட மாதிரிதானே அவன் உன்னைப் பார்த்துக்கொள்வான். செய்தவன் நானிருக்கிறேன். என்னைக் கவனிப்பானா, உன்னைக் கவனிப்பானா?

ராமா: பெற்ற தகப்பன் நான் மலைபோலிருக்க நீ யாரடா, நடுவிலே?

சுங்: நான் என் பிள்ளைக்குமேல் அருமையாய் வளர்த்தேன் முத்துவை. அதை என்னால்தான் மறக்கமுடியுமா, அவனால்தான் மறக்கமுடியுமா?

ராமா: வீண்பேச்சு ஏன்? நான் முத்துவோடுதான் என் காலத்தைக் கழிப்பேன் இனிமேல்.

சுங்: அது முடியாது. நான்தான் அவனோடு இருப்பேன்.

ராமா: அது முடியவே முடியாது! நான்தான் இருப்பேன்.

சுங்: அது முடியவே முடியாது! நான் தான் இருப்பேன்.

(கிருஷ்ணன் வருகிறான். சற்றுத் தயங்குகிறான்.)

கிரு: யஜமான்! யஜமான்!

சுங்: என்னடா மடையா, பேசிக்கொண்டிருக்கும்போது ஏன் தொந்தரவு செய்கிறாய்?

கிரு: க்ஷமிக்கணும், யஜமான். ஒரு பையன் முத்துசாமி கொடுத்தார் என்று ஒரு கடிதம் கொண்டுவந்தான்.

சுங்—ராமா: (ஒன்றாய்) எங்கேடா கடிதம்!

கிரு: பையனிடம் இருக்கிறது என்றுதான் சொன்னேனே!

ராமா—சுங்: அடே மடையா! வாங்கிக்கொண்டு வரலாகாதா. சரி, மணி, நீ ஓடிப்போய்க் கொண்டுவா. (மணி போகிறான்.)

ராமா: கடிதம் யார் பேருக்கு என்று நினைக்கிறாய்?


சுங்: ஏன், என் பேருக்குத்தானிருக்கும். (மணி கடிதத்துடன் வருகிறான். ராமாநந்தர், சுந்தரம் இருவரும் பிடுங்க முயல, மணியே படிக்கிறான்.)

மணி: "என்னைப் பழிக்கும் அப்பாவுக்கும், மாமாவுக்கும்—இத்தனைகாலமாய் நான் உங்களிருவருக்கும் சுமையாயிருந்து, உங்களைக் கஷ்டத்துக்குள்ளாக்கிவிட்டேன். மன்னிக்கவும். வேண்டா வெறுப்பாய் நீங்கள் இருவரும் எனக்குச் செய்த உதவியெல்லாம் போதும், போதும். இனிமேல் எனக்கு வழி நானே தேடிக் கொள்கிறேன். பிச்சை யெடுக்கிறேன்; அல்லது ரயிலுக்கடியில் விழுந்து சாகிறேன். நீங்களிருவரும் என்னுடைய பிடுங்கலில்லாமல் நீடூழிகாலம் ஸந்தோஷமாக வாழ்வீர்களாக! இப்படிக்கு, முத்து".

(சுந்தரமும், ராமாநந்தரும் ஒருவரையொருவர் கால்முதல் தலைவரை நோக்கிக்கொள்கிறார்கள். திரை விழுகிறது.)*

---

*[இது ஓர் ஆங்கில நாடகத்தைத் தழுவி எழுதியது.]





## விடாதே!

"முத்தண்ணா"

---

முன்காலத்திலே பாண்டிய அரசன் ஒருவன் சண்டைக்குப் போனான். சத்துருக்களைத் தோற்கடித்தான். அவர்களுடைய நாட்டிலிருந்து பொன்னையும் ரத்தினங்களையும் வாரிக்கொண்டான். அவற்றை மாடுகளின்மேல் பொதி பொதியாக ஏற்றித் தன்னுடைய ராஜ்யத்துக்குக் கொண்டுவந்தான்.

வரும் வழியில் ஒரு மாடு பொதியின் கனத்தைத் தாங்கமுடியாமல், தள்ளாடித் தடுமாறி நடந்தது. அந்த மாட்டை ஓட்டிக்கொண்டு வந்த போர்வீரன் அதைப் பார்த்தான். மாடுபடுகிற கஷ்டத்தைக் கண்டு அவன் மனம் இரங்கிற்று. அதனால் மாட்டின் மேல் போட்டிருந்த பொதி மூட்டையைத் தன் தலையின் மேல் தூக்கி வைத்துக்கொண்டு நடந்தான்.



ஊர் கிட்ட வந்துவிட்டது. ஆனாலும் மூட்டை கனமான மூட்டை யானதால் அவனால் தூக்கிக்கொண்டு மேல் நடக்கமுடியவில்லை. அவ

னுடைய கால்கள் தடுமாறின. அவன் தடுக்கி விழுந்துவிடுவான் போல் இருந்தது. ஆனாலும் விடாமல் பல்லைக் கடித்துக்கொண்டு கொஞ்ச தூரம் நடந்தான். இனிமேல் தாங்கவே முடியாது என்று கண்டு மூட்டையைக் கீழே போட்டு விடலாம் என்று அவன் எண்ணினான்.

இவ்வளவையும் பார்த்துக்கொண்டிருந்த பாண்டியன், "விடாதே! சற்று தூரம்தானே!" என்றான்.

போர்வீரன் மனவருத்தம் அடைந்தான். அரசனுக்கு இரக்கம் இல்லை என்று எண்ணினான். ஆனாலும் "உத்தரவு" என்று சொல்லி மேலே நடந்தான்.



அரசன் சிரித்துக்கொண்டே மறுபடியும் "விடாதே! அது அவ்வளவும் உன்னுடையதே. உன் வீட்டுக்குக் கொண்டுபோ!" என்று சொன்னான்.

பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். அவர்களைப் பார்த்து "இவன் வீரன். தைரியம் உடையவன்; தயையும் உடையவன். எவ்வளவு கொடுத்தாலும் இவனுக்குத் தகும். நான் கொடுத்தது கொஞ்சம்" என்று பாண்டியன் சொன்னான்.*

---

*[ஆங்கிலக்கதையொன்றைத் தழுவி எழுதியது]




## மார்க்கோனி—ரேடியோவின் சிருஷ்டிகர்த்தா

நியூபௌண்ட்லாண்டில், அட்லாண்டிக் மஹாஸமுத்ரத்தின் அருகில், ஒரு குன்றின்மீதுள்ள கட்டடத்தின் மேற்றளத்தில் விசித்திரமான சில கருவிகளைத் தன்னைச் சுற்றிலும் வைத்துக்கொண்டு ஒரு வாலிபன் உட்கார்ந்திருந்தான். கம்பிவளையங்களும் தொலைபேசிகளும் அவனைச் சூழ்ந்திருந்தன. இன்னொரு ஆளும் கூட இருந்தான். ஒலி வாங்கியை(ரிஸீவரை)க் காதருகில் வைத்துக்கொண்டு உற்றுக் கவனித்தான் வாலிபன். அப்பொழுது 'க்ளிக், க்ளிக், க்ளிக்' என்று மூன்றுதரம் சப்தம் கேட்டது. உடனே தன்னருகிலிருந்த அந்த ஆளைப்பார்த்து வாலிபன், "மிஸ்டர் கெம்ப், உமக்குக் கேட்கிறதா, பாரும்?" என்று கூறி ஒலிவாங்கியை அவனிடம் கொடுத்தான்.

"ஆமாம்" என்றான் அந்த ஆளும். குக்லீல்மோ மார்க்கோனி அச்சப்தமானது அங்கிருந்து 2000 மைல் தூரத்திலுள்ள போல்டுவிலிருந்து கேட்கிறது என்று அறிந்துகொண்டான். (இது இங்கிலாந்திலுள்ளது. இதற்கும் நியூஜீலாண்டிற்கு மிடையே அகன்ற அட்லாண்டிக் மஹாசமுத்ரம்!)

மனத்தினின்று பெரும்பாரம் நீங்கினவன்போல் ஒலிவாங்கியைக் கீழே வைத்தான். ஆனால் மூன்று மாதங்கள் கழித்தே—முழுச் செய்திகளை இங்கிலாந்திலிருந்து கானடாவுக்குச் செல்லும் கப்பல் ஒன்றிலிருந்து கேட்ட பிறகே—அவனுடைய சம்சயம் அற ஒழிந்ததெனலாம்.

மார்க்கோனிக்கு ரேடியோ கண்டுபிடிக்க வேண்டுமென்று எதனால் தோன்றியது?—அவனுக்கு வயது பத்தொன்பதாக இருக்கையில் ஓர் ஐரிஷ் பெண்ணை நேசித்துவந்தான். அப்பெண்ணின் தாயாருக்கு அது இஷ்டமில்லாததால் அவர்களிருவரையும் ஒருவரையொருவர் பார்க்கவொட்டாமல் தடுத்துவிட்டாள். இனி எந்தவிதமாகத் தானும் தன்காதலியும் பேசிக்கொள்ள முடியும் என்று யோசனை செய்யும்போதுதான் மார்க்கோனியின் மனதில் முதன்முதலாக இந்த எண்ணம் உதித்தது.

1896-ஆம் வருஷம் அவன் இங்கிலாந்து சென்று ஆராய்ச்சி ஸ்தானங்கள் ஏற்படுத்திக்கொண்டான். 1899-ஆம் வருஷத்தில் இங்கிலாந்திலிருந்து ப்ரான்ஸ் தேசத்திலுள்ள போலோன் என்றவிடத்திற்கு (இடையே இங்கிலீஷ் சானல் என்ற 22 மைல் அகலமுள்ள கால்வாய் செல்கிறது) செய்தி அனுப்பித்தான். பிறகு அமெரிக்காவிற்குச் சென்று மீண்டும் இங்கிலாந்து திரும்பினான். 200 அடி உயரமுள்ள கொடிமரங்கள் அமைத்த கப்பல் ஒன்றில் ஆராய்ச்சி செய்வதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் நடந்து வருகையில் ஒரு பெரும் புயலினால் கப்பலிற்குச் சேதம் ஏற்பட்டது. இதனால்

மார்க்கோனிக்கு மிகவும் வருத்தமுண்டாயிற்று. மறுமுறை அமெரிக்காவிற்குச் சென்றான். ஆனால் முன்தடவை போல் பத்திரிகைகள் அவனை வரவேற்கவில்லை. ஏதோ ஒரு மூலையில் அவன் வந்த செய்தியைச் சிறிய எழுத்துக்களில் அறிவித்தன. இதனால் மார்க்கோனி மனம் குன்றினானில்லை. ஸெண்ட் ஜான் துறைமுகத்தைப் பார்த்தாற்போலுள்ள ஸிக்னல் குன்று என்னுமிடத்தில் ஒரு ஸ்தானம் அமர்த்திக்கொண்டு மீண்டும் ஆராய்ச்சியைத் தொடங்கினான். போல்டுவில் தான் நிருமாணம் செய்திருந்த இடத்திலுள்ள தன் தோழர்களுக்குக் கேபில் மூலமாக மோர்ஸ் சங்கேதத்தில் மூன்று முறை 'க்ளிக், க்ளிக், க்ளிக்' (இதற்கு 'ஆம்' என்று அர்த்தம்.) என்று செய்யச் சொல்லிவிட்டு பதில் சங்கேதத்திற்காக எதிர்பார்த்திருந்தான். முதன் முதலில் அந்த சப்தம் சற்று மங்கலாகவும், பிறகு தெளிவாகவும் கேட்டது! மார்க்கோனி அடைந்த சந்தோஷத்திற்கு எல்லையில்லை. அன்று 1901-ஆம் வருஷம் டிஸம்பர் மாதம் பன்னிரண்டாம் தேதி !

இந்தச் செய்தி வெகு சீக்கிரத்தில் எங்கும் பரவிவிட்டது. முதன்முதலில் இதை தாமஸ் எடிஸன் என்ற பிரபல விஞ்ஞானி நம்பவில்லை. ஆனால் மார்க்கோனியின் கையெழுத்துப்பட அச்செய்தி வந்ததைப் பார்த்ததும், "மார்க்கோனி தானே அதை ஊர்ஜிதப்படுத்திவிட்ட பிறகு நான் இதை நம்பியே தீரவேண்டியிருக்கிறது. அவர் மேன்மேலும் ஆராய்ச்சி நடத்தி இதை சகலரும் உபயோகப்படுத்துமாறு செய்வாராக!" என்று ஆசிமொழி கூறினார்.

—பாபுலர் ஸையன்ஸ்.

## விநோத வினாவிடை

பிரபல ப்ரெஞ்சு நூலாசிரியரான விக்டர் ஹ்யூகோ என்பவர் தம்முடைய (பிரஸித்திபெற்ற) 'லெ மிஸெரெபிள்' என்னும் நாவலைப் பிரசுரிக்கக் கொடுத்தபோது "இது எப்படி இருக்கிறது?" என்பதற்குப் பதிலாகச் சுருக்கமாக ஒரு வினாக் குறியை (?) மட்டிலும் போட்டுக் கடிதம் எழுதி, பிரசுரகர்த்தருக்கு அனுப்பினார். அவரும், "அற்புதமாயிருக்கிறது!" என்பதற்கு ஸம்க்ஷேபமாக ஓர் ஆச்சரியக் குறி (!) மட்டிலும் போட்டு, பதில் கடிதம் எழுதினார். இவ்வளவு விநோதமான, சுருக்கமான கடிதப் போக்குவரத்து இதுவரையில் எங்கும் நிகழ்ந்திருப்பதாகத் தெரியவில்லை.

—ராமதனு.

---

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, MYLAPORE, MADRAS.

கலைமகள் வெளியீடு—சு.

உ

சிவமயம்

மிதிலைப்பட்டிக் குழந்தைக்கவிராயர்

இயற்றிய

# மான் விடு தூது

(குறிப்புரையுடன்)

—:o:—

பதிப்பாசிரியர்:

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி

**டாக்டர் உ. வே. சாமிநாதையர்**

சென்னை லா ஜர்னல் அச்சுக்கூடம், மயிலாப்பூர்.

யுவஹு பங்குனிமீ

1936

# இப்புத்தகத்தில் அடங்கியவை

——:o:——

இந்நூல் மிதிலைப்பட்டியில் வாழ்ந்த குழந்தைக்கவிராயர் என்பவரால் அவர்காலத்தே சிவகங்கைஸம்ஸ்தானத்தில் பிரதானியாக இருந்த முல்லையூர்த் தாண்டவராயபிள்ளையென்னும் வேளாளகுல திலகர்மீது இயற்றப் பெற்றது. "குழந்தை சொன்னதென்றே" என்று இந்நூலில் வரும்பகுதி இந்நூலாசிரியரின் பெயரைப் புலப்படுத்துகின்றது.

மானின்பெருமையை இது விரிவாக முதலில் விளக்குகின்றது; பின்பு முற்காலத்துத் தூது சென்றோர் இன்னோர் இன்னோர் என்பதையும், தூதுக்குரிய பத்துப் பொருள்களை விடாமைக்குக் காரணத்தையும் தெரிவிக்கின்றது. அப்பால் சிவகங்கை ஸம்ஸ்தானாதிபதியாகவிருந்த வடுகநாததுரையின் பெருமையையும், பாட்டுடைத்தலைவராகிய தாண்டவராயபிள்ளையின் சிறப்பையும், அவர் செய்த தர்மங்களையும், அவருடைய அவயவச்சிறப்பையும், அவருடைய தந்தை தமையன்மார் தம்பியர் பிள்ளைகள் முதலியோரைப் பற்றிய செய்திகளையும் விளக்குகின்றது. பிறகு அவர் பவனிவந்த சிறப்பும், அப்போது பல மகளிர் அவரைக்கண்டு மயல்கொண்டு வருந்தியதும், தலைவி சென்று பவனி கண்டு ஆசைகொண்டு வருந்தியதும் கூறப்படுகின்றன. அவற்றின்பின் தலைவி, தூதனுப்பப்படும் மானுக்கு இன்ன இன்ன வேளைகளிற் போதல் கூடாதென்பதையும் இன்ன சமயத்திற் போய் மாலை வாங்கிவரவேண்டுமென்பதையும் அறிவுறுத்தும் பகுதி அமைந்துள்ளது.

தலைவன், தலைவியின் விருப்பத்திற்கு உடம்பட்டானென்பதை அறிவிக்கும் அடையாளம் மாலையாதலின், இத்தகைய தூதுப்பிரபந்தங்கள் பெரும்பாலனவற்றில் தலைவனிடம் சென்று மாலை வாங்கிவரும்படி தலைவி கூறுவதாக உள்ள செய்தி அமைந்திருக்கும்.

இந்தநூல், முதலிற் காப்புச்செய்யுளான வெண்பா வொன்றையும் இறுதியில் வாழ்த்துச் செய்யுளொன்றையும் பெற்று 301 கண்ணிகளால் ஆகியது.

சொன்னயம் பொருணயம் செறிந்த இந்நூலின் ஏட்டுப் பிரதியொன்று சற்றேறக்குறைய 50 வருஷங்களுக்கு முன்பு மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக்கவிராயரவர்கள் வீட்டிலிருந்து எனக்குக் கிடைத்தது. அதன் இறுதியில், 'குழந்தையன் மானைவிடு தூது முற்றும்' என்று எழுதப் பெற்றிருந்தது.

இறைவன் திருவருளால் இன்றியமையாத பகுதிகளுக்குக் குறிப்புரை எழுதப்பெற்று இந்நூல் இப்பொழுது பதிப்பிக்க

E

# இப்புத்தகத்தில் அடங்கியவை

——:o:——

இந்நூல் மிதிலைப்பட்டியில் வாழ்ந்த குழந்தைக்கவிராயர் என்பவரால் அவர்காலத்தே சிவகங்கைஸம்ஸ்தானத்தில் பிரதானியாக இருந்த முல்லையூர்த் தாண்டவராயபிள்ளையென்னும் வேளாளகுல திலகர்மீது இயற்றப் பெற்றது. "குழந்தை சொன்னதென்றே" என்று இந்நூலில் வரும்பகுதி இந்நூலாசிரியரின் பெயரைப் புலப்படுத்துகின்றது.

மானின்பெருமையை இது விரிவாக முதலில் விளக்குகின்றது; பின்பு முற்காலத்துத் தூது சென்றோர் இன்னோர் இன்னோர் என்பதையும், தூதுக்குரிய பத்துப் பொருள்களை விடாமைக்குக் காரணத்தையும் தெரிவிக்கின்றது. அப்பால் சிவகங்கை ஸம்ஸ்தானாதிபதியாகவிருந்த வடுகநாததுரையின் பெருமையையும், பாட்டுடைத்தலைவராகிய தாண்டவராயபிள்ளையின் சிறப்பையும், அவர் செய்த தர்மங்களையும், அவருடைய அவயவச்சிறப்பையும், அவருடைய தந்தை தமையன்மார் தம்பியர் பிள்ளைகள் முதலியோரைப் பற்றிய செய்திகளையும் விளக்குகின்றது. பிறகு அவர் பவனிவந்த சிறப்பும், அப்போது பல மகளிர் அவரைக்கண்டு மயல்கொண்டு வருந்தியதும், தலைவி சென்று பவனி கண்டு ஆசைகொண்டு வருந்தியதும் கூறப்படுகின்றன. அவற்றின்பின் தலைவி, தூதனுப்பப்படும் மானுக்கு இன்ன இன்ன வேளைகளிற் போதல் கூடாதென்பதையும் இன்ன சமயத்திற் போய் மாலை வாங்கிவரவேண்டுமென்பதையும் அறிவுறுத்தும் பகுதி அமைந்துள்ளது.

தலைவன், தலைவியின் விருப்பத்திற்கு உடம்பட்டானென்பதை அறிவிக்கும் அடையாளம் மாலையாதலின், இத்தகைய தூதுப்பிரபந்தங்கள் பெரும்பாலனவற்றில் தலைவனிடம் சென்று மாலை வாங்கிவரும்படி தலைவி கூறுவதாக உள்ள செய்தி அமைந்திருக்கும்.

இந்நூல், முதலிற் காப்புச்செய்யுளான வெண்பாவொன்றையும் இறுதியில் வாழ்த்துச் செய்யுளொன்றையும் பெற்று 301 கண்ணிகளால் ஆகியது.

சொன்னயம் பொருணயம் செறிந்த இத்தூதின் ஏட்டுப் பிரதியொன்று சற்றேறக்குறைய 50 வருஷங்களுக்கு முன்பு மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக்கவிராயரவர்கள் வீட்டிலிருந்து எனக்குக் கிடைத்தது. அதன் இறுதியில், 'குழந்தையன் மானைவிடு தூது முற்றும்' என்று எழுதப் பெற்றிருந்தது.

இறைவன் திருவருளால் இன்றியமையாத பகுதிகளுக்குக் குறிப்புரை எழுதப்பெற்று இந்நூல் இப்பொழுது பதிப்பிக்க

லாயிற்று. இதனுள்வந்துள்ள மான்றேயம், புல்வாய்மாது முதலிய வற்றைப் பற்றிய செய்திகள் விளங்காமையால் குறிப்புரை எழுதக் கூடவில்லை. நாளடைவில் விளங்குமென்றெண்ணுகின்றேன்.

தமது 'கலைமகள்' பத்திரிகையின் வாயிலாக இதனை வெளி வரச் செய்த அப்பத்திரிகையின் ஆசிரியர் ம-ள-ள-ஸ்ரீ ரா. நாராயண சாமி ஐயரவர்கள்பால் மிக்க நன்றியறிவுடையேன். இவர்கள் இவ்வாறு செய்விப்பது பல பிரபந்தங்களை நான் வெளிப்படுத் தற்கு ஒரு தூண்டுகோலாகின்றது.

இந்த நூலை ஆராயும்போதும் ஒப்பு நோக்கும்போதும் உட னிருந்து உதவி செய்தவர்கள் சிரஞ்சீவி வித்துவான் வி. மு. சுப்பிர மணிய ஐயரும், சிரஞ்சீவி வித்துவான் கி. வா. ஜகந்நாதையரும், சிரஞ்சீவி வித்துவான் ச. கு. கணபதி ஐயரும் ஆவர்.

'தியாகராஜ விலாஸம்'
திருவேட்டீசுவரன்பேட்டை
12—2—1936.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

# குழந்தைக் கவிராயர்

இந்த நூலை இயற்றிய குழந்தைக் கவிராய ரென்பவர் சிவ கங்கை ஸம்ஸ்தானத்தைச் சார்ந்த மிதிலைப்பட்டியென்னும் ஊரினர்; பரம்பரையாகத் தமிழ்ப்புலமை வாய்ந்த குடும்பத்திற் பிறந்தவர். இவர்களுடைய முன்னோர்கள் பண்டைக் காலத்தில் தொண்டை நாட்டிலுள்ள* மல்லையென்னும் ஊரில் இருந்தவர்கள். அவர்களுள் ஒருவராகிய சிற்றம்பலக் கவிராயரென்பவர் வெங்களப்ப நாயகர்மீது ஒரு குறவஞ்சி பாடிச் சாலிவாகன சகாப்தம் 1570 (கி. பி. 1647-8)-ஆம் வருஷத்தில் மிதிலைப்பட்டியை மடப்புறமாகப் பெற்றார். அது முதல் அவருடைய பரம்பரையினர் அவ்வூரிலேயே வாழ்ந்து வரலாயினர். அவர்கள் பண்டார மென்றும் கவிராயரென்றும் வழங்கப்படுவரென்று பட்டயங்களால் தெரியவருகின்றது.

குழந்தைக்கவிராயர், மங்கைபாகக் கவிராயரென்பவருடைய புதல்வர். அம்மங்கைபாகக் கவிராயர் நத்தம் ஜமீன்தாராகிய இம்முடி லிங்கைய நாயகர் குமாரர் சொக்கலிங்க நாயகர்மீது வருக்கக் கோவை பாடிச் சாலிவாகன சகாப்தம் 1635 (கி. பி. 1712-3)-ஆம் வருஷத்தில் பூசாரிப்பட்டி யென்னும் ஊரைப் பெற்றார். இச்செய்தி ஒரு தாமிரப்பட்டயத்தால் வெளியாகிறது.

இந்நூலாசிரியருடைய முன்னோரும் பின்னோரும் பாடிய நூல்கள் அளவில. தென்னாட்டில் தங்கள் தங்கள் காலத்தே அங்கங்கே யிருந்துவந்த சிற்றரசர்களாலும் ஜமீன்தார்களாலும் பெரிதும் ஆதரிக்கப்பட்டு அவர்களால் பல கிராமங்களும் வரிசைகளும் பெற்றிருக்கின்றனர். தாம் பிறரால் ஆதரிக்கப் பெற்றுச் செல்வத்தை ஈட்டியதன்றி அங்ஙனம் ஈட்டியவற்றைப் பிற வித்துவான்களுக்கும் கொடுத்து அவர்களாற் பாராட்டப் பெற்ற பெருமை இப்பரம்பரையினருக்கு உண்டு. இவர்கள் புதிய நூல்களை இயற்றியதோடு பழைய நூல்களைப் படித்தும் ஆராய்ந்தும் தொகுத்தும் வந்தார்கள். இவர்களுடைய வீட்டில் இன்றும் தமிழ்த்தாயின் அணிகலன்களாகிய நூல்கள்பல இருத்தலைக் காணலாம். நான் பதிப்பித்த பழைய நூல்களின் ஏட்டுப் பிரதிகள்

---

*மல்லை - மாமல்லபுரம் அல்லது மகாபலிபுரம்.

பல இப்பரம்பரையினரிடத்திலிருந்து கிடைத்தன. அவை இயன்ற வரையில் திருத்தமுற்று விளங்கும்.

குழந்தைக் கவிராயர் பலஜமீன்தார்களாலும் பிரபுக்களாலும் ஆதரிக்கப் பெற்றார். இம்மான்விடுதூதின் பாட்டுடைத் தலைவரும் சிவகங்கை ஸம்ஸ்தானத்துப்பிரதானியுமாகிய தாண்டவராய பிள்ளையென்பவரால் பலவகையான வரிசைகளைப் பெற்றார். அவர் மீது இயற்றிய இந்த மான்விடுதூதை யன்றி அவ்வப்போது அவரைப்பாராட்டிப் பாடிய தனிப்பாடல்கள் அளவிறந்தன.

ஒரு சமயம், பஞ்சம் வந்தகாலத்தில் தாண்டவராய பிள்ளை ஏழைமக்கள் பலரை அன்னமிட்டுக் காப்பாற்றினர். அதனைப் பாராட்டி இக்கவிராயர் இயற்றிய பலசெய்யுட்களுள் ஒன்று வருமாறு:—

*"ஓர்தட்டி லேபொன்னு மோர்தட்டி லேநெல்லு மொக்கவிற்கும்
கார்தட் டியபஞ்ச காலத்தி லேகவி வாணருக்கு
யார்தட்டி னுந்தட்டு வாராது காத்தன்ன் தானந்தந்து
மார்தட் டினன்முல்லைத் தாண்டவ ராய வரோதயனே."

மற்றச்சமயங்களில் அவர்மீது இவர்பாடிய செய்யுட்களிற் சில வருமாறு:—

1†"கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா
இல்லைத்தான் பசியாம லிருக்கத்தான் பிரமத்தான் எழுதி னானா
அல்லத்தா னென்கவியை வெல்லத்தா னின்னைத்தான் அல்லா மற்றான்
சொல்லத்தான் வேறுமுண்டோ முல்லைத்தாண் டவராய சுகிர்த வேளே."

2. "செஞ்சிதஞ்சை மதுரைமைசூர் மாறு பாவை
செந்தமிழின் கனமறிந்து செய்ய மாட்டார்
மஞ்சுநிகர் கம்பளத்தார் கொடுத்தி ளைத்தார்
வளர்பாக நேரிக்கு வடபாற் கெல்லாம்
பஞ்சவிலக் கணமறிந்தார் மெத்த வுண்டு
பாவாணர் கவிதையவர் பாற்செல் லாது
தஞ்சமினி வேறுமுண்டோ முல்லை வேந்தே
தாண்டவரா யாகுவளைத் தாரி னானே."

[பாகநேரி - ஓரூர். பஞ்ச இலக்கணம் - பஞ்சத்தின்தன்மை.]

---

*இச்செய்யுள் படிக்காசுப்புலவர் சீதக்காதியைப் பாடியதாகச் சில வேறுபாடுகளுடன் தனிப்பாட்டிரட்டிற் காணப் படுகின்றது.

† இச்செய்யுளும் சில வேறுபாடுகளுடன் வேறு ஒருவர் இயற்றிய தாக வழங்குகின்றது.

3. "வெற்றியிலே கன்னனைவென் றபிமன் மாதா
மிடற்றிலே பொட்டைவைத்தான் விளங்கு மேழி
பற்றியகே தனத்துரைதாண் டவரா சேந்த்ரன்
பசுந்தமிழி னுவலர்க்குப் பணமு நெல்லும்
சுற்றியகே யூரமணித் தொடையு மீந்து
சுகந்தச்சந் தனம்பூசித் தொடுஞ்ச வாதால்
நெற்றியிலே பொட்டைவைப்ப தல்லாற் சீட்டு
நெல்லிலே பொட்டைவைக்க நேமி யானே."

[மிடற்றிலே பொட்டு; பொட்டு - தாலி.
நெல்லிலே பொட்டு; பொட்டு - கருக்காய்.]

4. "மகரநெடுங் கடலுலகம் புகழு முத்து
வடுகநா தேந்த்ரதுரை மகிழ்ப்ப தானி
சுகாதிமன் மன்மதன்றாண் டவரா சேந்த்ரன்
சொன்னமொழி தவறாத சுத்தி கண்டு
பகருநெடுந் திருமாலு நெயிற்கை யிட்டான்
பகீரதியும் பதினெட்டாம் படிமேற் கொண்டாள்
நிகர்பெறுக சேந்திரனு முதலைப் பள்ளம்
நீந்தினான் சிவனுமழு வேந்தி னானே."

5. "மாசற்றிடு திருமேனியில் வடுவுற்றது போலே
மதனப்பயல் கணைசற்றுடல் வந்துற்றன வையோ
காயத்தனை புண்ணானது துட்டத்தனை யிடமாய்க்
கையத்தனை யானான்மகண் மெய்யெத்தனை நோமோ
வாசற்படி கடவாளிவண் மயலெப்படி யறிவாள்
மனதுக்கொரு தடைசொல்பவர் வையத்திலு முளரோ
ஆசைப்பட வேபோய்மகண் மோசப்பட வசமோ
அருள்தாண்டவ ராயாதமி ழறியும்பெரு மானே."

இக்கவிராயர் பாடிய செய்யுட்களைக் கேட்டு மகிழ்ந்த தாண்டவராய பிள்ளை இவருக்கு ஆயிரக்கலம் நெல் அளக்கும்படி கட்டளை யிட்டார். அக்கட்டளையை உத்தியோகஸ்தர்கள் நிறைவேற்றத் தாமதித்தார்கள்; அப்பொழுது அதனைக் குறிப்பாகத் தெரிவித்தற்கு,

"அருள்விசய ரகுநாதப் பெரியவுடை யாத்தேவர்
அவர்கள் தந்த
நிருபமுந்தாண் டவராய சாமிசொன்ன வுத்தரவும்
நிலையா வென்றால்
துருவனுடைப் பட்டமும்போய்ப் பஞ்சகருத் தாக்களுடைத்
தொழிலு மாறி
இருசுடரு மொளிமழுங்கி யெழுபுவியு மிருளுறைந்த
தென்ன லாமே"

என்னும் செய்யுளை இவர் பாடினர். அதன் பின்பு தாண்டவராய பிள்ளையின் கடுமையான உத்தரவின்மேல் இவருக்கு அந்நெல் அளக்கப்பட்டது; பிரதானியின் கட்டளை பெற்றும் நெல்லைப் பெருத வருத்தம் மிக்கிருந்த இவருக்கு அந்நெல்லைப் பெற்ற காலத்தில் உண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. அம்மகிழ்ச்சி மிகுதியினால், அந்நெல்லையளந்த கறுப்பனென்பவனைப் பாராட்டி ஒரு செய்யுள் பாடினர். அதன் பின் இரண்டடிகள் வருமாறு:—

*"ஒறுப்பான காலத்தி னென்மாரி யாக வுதவிசெய்யும்
கறுப்பாவுன் யோகந் தழைக்கு மடாவெந்தக் காலமுமே."

தமக்குத்தாண்டவராயபிள்ளை ஆயிரக்கல நெல் வழங்கிய இச்செய்தியை இக்கவிராயர் இந்நூலில்,

"முந்தக், கொடுக்குங் குணமோ குழந்தைசொன்ன தென்றே
அடுக்கு மவன்மீதி லன்போ—எடுக்கும்
இருநிதியு நெல்லா யிரக்கலமுந் தந்தே
ஒருகவிதை கொண்டுபுக ழுற்றோன்" (கசரு - ச)

என்று பாராட்டி யிருக்கின்றனர்.

தம்முடைய செய்யுட்களில் தாண்டவராயபிள்ளை மிக்க விருப்பமுடையவரென்பதை,

"...................................தெள்ளுதமிழ்
மல்லையான் சொல்லு மதுர கவிக்கல்லால்
முல்லையா னம்பான் மொழிவானே" (உஎக-உ)

என்பதிற் புலப்படுத்தி யிருக்கிறார்.

தம்மைப் பலபடியாக ஆதரித்துப் போற்றிய தாண்டவராய பிள்ளை இறந்தபோது இவர் மிகவருந்திப் பாடிய செய்யுள் வருமாறு:—

"கருணா காமுல்லைத் தாண்டவ ராபகங் காகுலனே
இருணாடு நீவந் திராநாடு நீவந் திருந்தசபை
பொருணாடு நாவலர் வித்யாப்ர சங்கம் பொருந்துமையோ
தருணா தருண மறிந்தே யுதவுந் தயாநிதியே."

இத்தாண்டவராயபிள்ளையின் தமையனாராகிய இராம கிருஷ்ணபிள்ளையின்மீது இவர் சொல்லிய செய்யுள் ஒன்று வருமாறு:—

---

*இதன் முன் இரண்டடிகள் இப்பொழுது கிடைக்கவில்லை.

"தோடசைந் தாடுங் கனகாம் பரமயச் சோதியருட்
பீடிசைந் தோன்முல்லை ராமக்ருஷ் ணேந்த்ரன் பிடித்தெழுதும்
ஏடசைந் தாற்றெய்வ நாடசைந் தாடு மெழுத்தின்முனைக்
கோடசைந் தாலசை யுஞ்சக்ர வாளக் கொடுமுடியே."

இக்கவிராயர் ஒரு சமயம் நத்தம் ஜமீன்தாரிடம் போய் விட்டுத் தம்பல்லக்கின்மீது இவர்ந்து சிங்கம்பிடாரியென்னும் ஊர் வழியாக வந்தனர். இவருடைய பல்லக்குத் துணையை நம்பிச் சில அந்தணப் பெண்டிர் அருகிலுள்ள ஒருருக்குப் போவாராய்த் தொடர்ந்துவந்தனர். பல்லக்குச் சிறிது முந்திற்று. அந்தச் சமயத்தில் சிலதிருடர்கள் அப்பெண்டிரை வழிமறித்துத் துன் புறுத்தி நகைகள் முதலியவற்றைக் கவர்ந்துகொண்டனர். துன் புற்ற அவர்கள் கவிராயரை அடைந்து தாம் உற்றதைத் தெரிவித் தனர். அதனைக்கேட்டு மனம்வருந்திய இவர், அவ்வூரிலுள்ள ஐய னாகிய சேவகராயர்மீது,

"அண்டர்தொழுஞ் சிங்கையிற்சே வகராயா கேட்டாயோ ஐயோ வுன்றன்
வண்டுவிழி மலர்மாதர் பூரணைபுட் கலைதாலி வாங்கி னோரா
விண்டலவு கள்ளர்கள்வந் தென்பிறகே தொடர்ந்துவந்த மேலாஞ் சாதிப்
பெண்டுகளை யணிகவர விட்டாயே கெட்டாயே பேர்பட் டாயே"

என்ற செய்யுளைக் கூறினர். உடனே அவ்வூரிலுள்ள அதிகாரி களுடைய முயற்சியினால் அத்திருடர்கள் பிடிபட்டனர். பெண் டிர் இழந்தபொருளைப் பெற்றனர். ஐயனாருடைய சக்தியினால் அத்திருடர்களுக்குக் கண்தெரியாமற்போயினவென்றும், அதனால் மீண்டுவந்து அவர்களே திருடிய பொருள்களைக் கொடுத்துப் போயினரென்றும் கூறுவதுண்டு.

இப்புலவரை ஆதரித்தவர்களுள் புதுக்கோட்டை அரசராக இருந்த திருமலைத் தொண்டைமானென்பவரும் ஒருவர். அவரை இவர் பாராட்டிய பாடல்களிற் சில வருமாறு:—

1. "அந்தமிகு பொன்மலைக்குப் புராரிகையாற் சலனமுண்டங்
கரனார் மேவ
வந்ததொரு வெண்மலைக்குத் தசமுகனாற் சலனமுண்டு
மாயன் கையால்
சந்தமரு வியகோவர்த் தனமலைக்குச் சலனமுண்டு
தான சூரன்
இந்த்ரகுலன் றென்கோடித் திருமலைக்குச் சலனமென்றும்
இல்லைத் தானே."

2. *"உத்தரதிக் கினிற்பெரிய பொன்மலையொன் றிருத்தலினு
லோங்கு ஞான
சித்தர்வித்யா தரர்முனிவர் யாவருமே புகலிடமாச்
சென்று வாழ்ந்தார்
இத்தலஞ்சேர் தென்கோடித் திருமலைதக் கணதிசையில்
இருத்த லாலே
நித்தமறை வேதியரும் பாவலரு மாதுலரும்
நிலைபெற் ருரே."

3. "கொக்கோடி யடைகிடக்கக் குருகோடி விளையாடுங்
கோடி நாடன்
தைக்கோடிப் பிறைபோலத் தமிழ்க்கோடிப் புலவர்வந்தாற்
சலிப்பில் லாமல்
திக்கோடி யலைபாமற் றினங்கோடி கொடைகொடுக்கும்
திரும லேந்த்ரன்
எக்கோடி யானுலு மிவன்கோடி காலமட்டும்
இருப்பன் ருனே."

இவர் இங்ஙனம் பல தனிப்பாடல்களை அவ்வப்போது பாடினுலும் மான்விடுதூதையன்றி வேறு நூல் இயற்றியதாக இப்போது தெரியவில்லை.

---

*இச்செய்யுள், "வடதிசை யதுவே வான்றோய் இமயம், தென்றிசை யாஅய் குடியின் ருயிற், பிறழ்வது மன்னோவிம் மலர்தலை யுலகே" (கசுஉ) என்னும் புறநானூற்றுச் செய்யுட் பகுதியை நினைப்பிக்கின்றது.

# நூலாராய்ச்சி

இந்த நூலில் குழந்தைக்கவிராயர் மானின் பெருமையைப் பலபடியாக எடுத்துக் கூறிப் பாராட்டுவதனல் தமக்குள்ள விரிந்த நூலறிவையும், புலமைத் திறத்தையும், தாண்டவராய பிள்ளையின் பெருமையை விரித்துக்கூறுமுகத்தால் தம்முடைய செய்ந்நன்றி யறிவையும் வெளிப் படுத்துகின்ருர்.

## மானின் பெருமை

மான் தேவாமுதங் கடைந்த காலத்தில் தோன்றிய சந்திர னிடத்தே இருப்பதென்பதும், சிவபெருமான் திருக்கரத்தில் இருக்கும் பெருமை வாய்ந்த தென்பதும், திருமகள் மானுருவம் பெற்ற செய்தியும், வள்ளி நாய்ச்சியார் மான் வயிற்றில் அவதரித்த தும், கலைக்கோட்டு முனிவர் மான் கொம்பைப் பெற்ற தும், ஒருமானைத் துரத்திச்சென்றமை காரணமாகத் துரியோதனதி யரது ஏவலினுற் காளமா முனிவர் செய்த யாகத்திலிருந்தெழுந்த பூதத்தினின்றும் பாண்டவர் தப்பியதும், துர்க்கைக்கு மான் வாகனமாக இருப்பதும், மானை யெய்த பாவத்தால் பாண்டு வென்னும் அரசன் இறந்ததும், மான் வாயுவுக்கு வாகனமாக இருப்பதும் ஆகிய புராண இதிகாச வரலாறுகளை எடுத்துக்காட்டி மானைப்பாராட்டுகின்ருர். சிவபெருமான் மானைத் திருக்கரத்தில் ஏந்தியிருக்கும் செய்தியை,

> "மலையரையன் பெற்றெடுத்த மாதைத்—தலைநாள்
> ஒருகால் பிடித்திருந்தா ருன்னையுல குய்ய
> இருகால் பிடித்திருந்தார்"

என்று நயம்பெறக் கூறுகின்ருர்.

மானென்னும் பெயரைத் தன்பெயரின் ஒரு பகுதியாகக் கொண்டுள்ள கலைமான் (கலைமகள்) தம் நாவில் இருத்தலினுற் பிரமதேவர் பெருமையுற்ரு ரென்றும், பரமசிவன் திருமால் அர சர்கள் ஆகியவர் மானென்பதை ஒருபகுதியாகக்கொண்ட பெரு மானென்னும் பெயரைப் பெற்று வீறு பெற்றன ரென்றும், அப் படியே தத்தம் பெயரில் ஒருபகுதியாக மானென்பதை யுடைமை யால் அந்திமான் சந்திமானென்னும் வள்ளல்களும், சேரமான்

பெருமாளுயனும் புகழ்பெற்றனரென்றும் சாதுரியமாகப் பாராட்டுகின்றார்.

மானுக்குரிய பெயர்கள் சிலவற்றாற் குறிக்கப்படும் வேறு பொருள்களைப் பற்றிய செய்திகளை மானுக்குரியனவாகத் தோற்றும்படி அமைக்கின்றார்: வில்லுக்கும் மானுக்கும் உரிய பெயராகிய சாரங்கமென்பதை அமைத்து,

"...........................திருமாலும்
கூரங்க மானபடை கொண்டிருந்துந் தென்னிலங்கை
சாரங்க மேகுரங்காச் சாதித்தான்"

என்று இராமாயண வரலாறொன்றைக் கூறுகின்றார்.

அருணனுக்கும் மானுக்குமுரிய பொதுப்பெயரை யமைத்து, 'இருளை நீங்கச் செய்வது அருணோதயம்' என்று சொல்லுகின்றார். மானுக்குரிய புல்வாயென்னும் பெயரைக் குறிப்பாக எண்ணிப் பகைவர் வாயிற் புற்கௌவுதல் கண்டால் அரசர்கள் அவரைத் துன்புறுத்தாமல் விடும் செய்தியைத் தெரிவிக்கின்றார். ஆடைக்குரிய பெயராகிய கலையென்பது மானுக்குமுரித்தாதலையெண்ணி,

"..................தாழ்குழலா ராடவர்க்கும்
மானங்காக் குந்துரையே"

என்று சிறப்பிக்கின்றார். இவற்றால் மானின் பெருமையைச் சிலேடை வகையினால் புலப்படுத்தியிருத்தல் காண்க.

பின்னும் அகத்திய முனிவர் (25), நல்லியல்புடையோர் (35), சிற்றினஞ் சேராதவர் (41), பெரியோரைத் துணைக்கொள்வோர் (43), பாகவதர் (45) ஆகியவர்கள் செயலை மானின் செயலாகச் சிலேடையில் அமைக்கின்றார்.

மான்றேசம், மானூர், மானம்பலம், கலையூர் என்பவற்றைப் பற்றிய செய்திகளையும், தென்பாகை நாட்டிலுள்ள புல்வாய் மாதென்னும் ஒருத்தி வழக்குத் தீர்த்தல் முதலியவற்றைச் செய்யும் வரலாற்றையும் கூறி மானுக்கு ஏற்றம் கற்பிக்கின்றார். மகளிர் கண்களுக்கு மான்கண்ணை உவமை கூறும் மரபைப் புலப்படுத்தி,

"பண்போன் மொழிபயிலும் பாவையர்க்கெல் லாமிரண்டு
கண்போல வந்த கருங்கலையே" (48)

என்று பாராட்டுகின்றார்.

"துணையேவன் காமத் துயர்க் கடலை நீந்தும், பிணையே" (52)

என்றவிடத்துப் பிணையென்ற சொல் தெப்பமென்றும் மானென்றும் இருபொருள் பயந்து அவ்வுருவகத்தை அழகுபெறச் செய்கின்றது.

மானுக்குரிய பெயர்களாகிய அருணம், கலை, சாரங்கம், நவ்வி, பிணை, மறி, மிருகம், வச்சயம் என்பவற்றை அங்கங்கே எடுத்தாண்டுள்ளார்.

## தூது சென்றோர்

பண்டைக் காலத்தில் தூது சென்றவர்கள் இன்னர் இன்னரென்று கூறும் பகுதியில் சுந்தர மூர்த்திநாயனருக்காகச் சிவபெருமான் தூது சென்றதும், பாண்டவர்பொருட்டுக் கண்ணபிரான் தூது சென்றதும், இந்திரன் திறத்தில் நளன் தூது சென்றதும், தமயந்தியின் பால் நளன்விடுக்க அன்னம் தூது சென்றதும், குணமாலை ருக்குமிணி என்பவர்கள் ஏவலால் கிளி தூது சென்றதுமாகிய வரலாறுகள் எடுத்துச் சொல்லப்படுகின்றன.

தூதுக் குரியனவாகிய குயில் முதலிய பத்தும் குறைபாடுடையன வென்பதை அவ்வப் பொருளின் இயல்புகளை வேறுபொருள் தோற்றும்படி கூறி உணர்த்துகின்றார்.

## தசாங்கம்

பாட்டுடைத் தலைவருக்குரிய தசாங்கம் கூறும் வாயிலாகப் பொதியில் மலை, வைகைநதி, தென்பாண்டிநாடு, முல்லை மாநகர், குவளைமாலை, குதிரை, யானை, மேழிக்கொடி, முரசு, வேற்படை என்பவற்றைப் பாராட்டுகின்றார்.

பொதியில் மலையைப் பாராட்டுகையில், அதனைச் சிவபெருமான், திருமால், பிரமதேவர், தேவேந்திரன் என்பவர்களோடு சிலேடையமைய உவமிக்கின்றார். வைகைநதியைத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனரது ஏடேறச் சைவநிலை யீடேற வைத்த பெருமையையும், மாடேறுஞ் சொக்கர் மதிச்சடையில் மண்ணேற வைத்தபெருமையையும் உடையதென்று புகழ்கின்றார். தென்பாண்டி நாட்டின் இயற்கைவளங்களை வருணித்து, "பாவேந்தர், நாவேந்து தென்பாண்டி நாடு" எனக்கொண்டாடுகின்றார். முல்லைமாநகரை அழகிய சிற்ப இலக்கணங்களமைந்த வீடுகள் பல வுடையதென்று புனைகின்றார். குதிரையை,

"காற்கதியுங் காற்கதியே காணுமென வீரிரண்டு
காற்கதியி லேந்து கதிகாட்டி"ப்

போரில் வலம்புரியும் ஆற்றலுடைய தென்கின்றார். யானையை, "காலனுங் கண்புதைப்பக், கொண்டலென நின்றதிருங் குஞ்சரம்" என்று உணர்த்துகின்றார். வேற்படையைப்பற்றிச் சொல்லும் பகுதியில் போர்க்களத்தில் நிகழும் பல செய்திகள் காணப்படுகின்றன. பகைவர்களுடைய நாற்படைகளும் அழிந்து வீழ்வதும், பேய்கள்

பேருக்கத்துடன் உணவுண்டு பசியாறி மகிழ்வதுமாகிய செய்திகள் இதன்கண் உள்ளன. “அன்று கலிங்கத் தமர்க்களத்துக் கொப்பாக, இன்று கிடைத்தது” என்று பேய்கள் புகன்றன வென்றவிடத்துக் கலிங்கத்துப்போரை இவர் எடுத்துக்கூறுகின்றார்.

## வடுகநாத துரை

பாட்டுடைத்தலைவராகிய தாண்டவராய பிள்ளையைப் பிரதானியாகக் கொண்ட வடுகநாததுரையின் இயல்புகள் ஒருபகுதியிற் சொல்லப்படுகின்றன. அவர் சிவகங்கை ஸம்ஸ்தானத்துக் குத்தலைவர். சிவகங்கையென்னும் குளமொன்று அந்நகரிலுள்ளது. அது மிக்க சிறப்புள்ளதுபற்றி அதன் பெயரே அந்நகருக்கும் அமைந்தது. இங்ஙனமே தீர்த்தப்பெயரையுடைய ஊர்கள் தமிழ்நாட்டிற் பல உண்டு. இக்காரணம் பற்றியே சிவகங்கை இந்நூலில் குளந்தையென்னும் பெயராற் பாராட்டப்படுகிறது.

வடுகநாததுரையின் முழுப்பெயர் ‘ராசபுலி முத்து வடுகநாத பெரியுடையான்’ என்பது. அவர் திருக்கோட்டியூர் ஸ்ரீ சௌமிய நாராயணப் பெருமாளிடத்துப் பேரன்புடையவரென்றும், பெருஞ் செல்வத்தையுடையவரென்றும், திரிபுவனச் சோமன் என்னும் உபகாரியைப் போன்றவரென்றும், இராமநாதபுர அரசருக்குத்துணையாக நின்றவரென்றும், சசிவர்ண துரையின் குமாரரென்றும் இவ்வாசிரியர் தெரிவிக்கின்றார். அச்சசிவர்ணதுரையின் மீது ஒருபுலவரால் இயற்றப்பெற்றதும் வண்டோச்சிமருங்கணைதலென்னும் துறையைப் பொருளாகவுடைய 400 செய்யுட்களடங்கியதுமாகிய ஒருதுறைக்கோவையொன்றுண்டு.

## பாட்டுடைத்தலைவர் பெருமை

தாண்டவராய பிள்ளையைப் பாராட்டுகையில் அவர் வேளாள குலத்திற் பிறந்தவரென்னும் காரணம்பற்றிப் பல வேளாளப் பெரியோர் செய்த அருமைச் செயல்கள் அவர் செய்தனவாக ஏற்றிச் சொல்லப்படுகின்றன. இங்ஙனம் அரசர்களையும் பிரபுக்களையும் அவரவர் முன்னோர்களுடைய செயல்களைச் செய்தவர்களாகப் பாராட்டுதல் புலவர்கள் மரபு. இந்த வகையில், ஒரு வேளாளர் மேகத்தின் கால்விலங்குவெட்டுவித்தது, எழுபது வேளாளர் பழையனூர் நீலியின்பொருட்டுத் தம் உயிரை நீத்தது, அயன்றையென்னும் ஊரிலிருந்த சடையனென்னும் உபகாரி கருப்பஸ்திரீயின் முதுகிற் சுடுசோறளித்தது, இளையான்குடி மாறநாயனார் நெல்முளை வாரிச் சிவபிரானுக்கு அன்னமிட்டது, நின்றைக் காளத்தி முதலியார் பாம்பின்வாயிற் கை நீட்டியது, சடையப்ப

வள்ளல் பட்டாடை கிறிச் சோழனுக்குச் சிலந்தியைக் காட்டியது, [1]ஒருவர் முழங்கையைச் சந்தனக்கட்டையாகக் கொண்டு அரைத்தது என்பவற்றை அவர் செயல்களாக ஏற்றிக்கூறுகின்றார்.

அவர் ஸம்ஸ்தானத்தைக் காக்குந் தொழில்பூண்ட உரிமை பற்றிச் சில இடங்களில் திருமாலுக்குரிய பெருமைகளை உடையவராகப் பாராட்டப்படுகின்றார். இங்ஙனமே ஆட்சிபுரியும் மன்னர்களைத்திருமாலாகப் பாவித்தல் ஆன்றோர் மரபென்பது, "திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்" என்ற ஆழ்வார்திருவாக்கால் உணரப்படும்.

இந்த வகையில் திருமாலுக்குரிய பொது இயல்பையும் செயலையும்,

"கோகனகை, வந்து குடியிருக்கு மார்பினன்" (171)

"வாரணங் கூப்பிடுமுன் வந்தேன்வந் தேனென்ற, நாரணன்" (146)

என்றும், திரிவிக்ரமாவதாரச் செயலை,

" . . . தரணிமுற்றும்
ஓரடி கொண்டளந்தங் கோரடி தூக்கிநின்ற, ஈரடி" (22)

என்றும், இராமவதாரத்தில் நிகழ்ந்தவற்றிற் சிலவற்றை,

"மாப்பதுமன் போலவே வந்தமுனி நல்யாகம்
காப்பனெனச் சென்றமலர்க் காலினன்" (170)

" . . . போயளவி
இன்றிளைத்தாய் நாளைவா வென்றே யிராவணற்கு
நன்றுரைத்த தாண்டவ ராயமன்னன்" (146 - 7)

"கோட்டிலங்கை ராவணனைக் கொன்று விபீடணனை, நாட்டுதுரை"

என்றும், கண்ணபிரானுடைய திருவிளையாடல்கள் சிலவற்றை,

" . . ஐவர் பேரிடரைத்
தீர்த்தவரா யன்புபுரி சீதரமால்—பார்த்தனுக்குக்
காண்டா வனதகனங் காண ரதமூர்ந்தோன்" (177 - 8)

"நிலவுஞ் சகட நெறுநெறென வீழக்
கலகலென நீட்டுதண்டைக் கால்" (218)

"மலையேந்தி யான்புரந்த மால்" (277)

"...போரிற் - சவிச்சக்ரம்
ஆதவன்மே லேவிநின்றே யாரிருள்பூ ரித்துநின்ற. மாதவனே" (274)

என்றும் தாண்டவராயபிள்ளையைக் கூறியிருத்தல் காண்க.

---

[1]இங்ஙனம் செய்தவர் மூர்த்திநாயனர்; அவர் வைசியர்; ஆதலின் வேளாளர்களுள் இங்ஙனம் செய்த ஒருவர் உண்டென்று கொள்ள வேண்டும்.

பின்னும் தீர்க்காயுள், அழகு, பகைவரையடும் வீரம், வண்மை ஞானம், அருங்குணங்கள், குதிரையைச் செலுத்தும் ஆற்றல், வினயம், புலவர்களை ஆதரிக்கும் தன்மை முதலிய இயல்புகள் உடைமை காரணமாக உபசார வழக்குப் பற்றி இவ்வாசிரியர் அங்கங்கே அவரை மார்க்கண்டன், மன்மதன், அபிமன், சோமன், சனகன், காரியென்னும் வள்ளல், சீவகன், முருகன், கன்னன், நகுலன், சூரியன், சந்திரன், இந்திரன், சிபிச்சக்கரவர்த்தி, போசன் என்பவர்களாகப் பாராட்டுகின்றார்.

அவர் பல தலங்களில் இயற்றிய தருமங்கள் விரிவாகச் சொல்லப்படுகின்றன. அவருடைய கால், மார்பு, கை, நாசி, காது முகம் என்பவற்றை அவற்றின் செயல்களை எடுத்துக் கூறிப் புகழ்கின்றார். அவருடைய தந்தையார், தமையன்மார், தமையன்மாருடைய பிள்ளைகள், குமாரர், மருமான் என்பவர்கள் பெயர்களை உணர்த்துகின்றார். தம்மை ஆதரித்த செல்வர்கள்மீது புலவர்கள் இயற்றிய தூதுகள் பலவற்றில் இங்ஙனமே பாட்டுடைத் தலைவருடைய தந்தை முதலியோரை உணர்த்தும் பகுதிகள் அமைந்துள்ளன.

## பவனிச் சிறப்பு

தலைவர் புறப்படுதற்கு முன்னர் ஆடையணிகளை அணிவதாக அமைந்த பகுதியில் அவருக்குரிய அலங்காரங்கள் பல சொல்லப்படுகின்றன. அவை தலைப்பாகை, மாணிக்கம் முத்து மரகதம் முதலிய மூன்றும் பதித்துப் பூ வடிவமாகச் செய்யப்பட்ட காதணி, முருகு, பச்சை வச்சிரப் பதக்கம், கண்டசரம், வாகுவலயம், கைச்சரடு, காலிலணையும் மிஞ்சி என்னும் அணிகலங்களும், குவளை மாலையும், சலவையாடை, பீதாம்பரம் என்னும் உடைகளும், வெண்ணீறு, கத்தூரித் திலகமென்னும் நெற்றியலங்காரங்களும், குற்றுடை வாளும், மிதியடியுமாம். இவற்றால் அக்காலத்திலுள்ள பிரதானிகளின் கோலம் ஒருவாறு மனத்திற் புலனாகின்றது.

பவனிச் சிறப்பைக் கூறுகையில் உடன்வந்த பரிவாரங்களாக நால்வகைப் படை ஒட்டகங்கள் என்பவற்றையும், மன்னியவார், இராசவார், ராவுத்தர், துப்பாக்கிக்காரர், தோமரத்தர், கேடயக்காரர், விற்காரர், சட்டையிட்ட பிரதானிகள், வாட்காரர், சக்கராயுதம் பிடித்தோர், வாத்தியக்காரர், பரதநாட்டியம் புரியும் மாதர், ஆலத்தி யெடுக்கும் மாதர், கட்டியக்காரர், பராக்குச் சேவகர்கள், அடைப்பைக்காரர், காளாஞ்சிக்காரர், சாமரை வீசுவோர், சின்னம் ஊதுவோர் என்பவர்களையும் அமைக்கின்றார். இப்பகுதியில்

நகரா, பேரி, தகுணி (தகுணிச்சம்), இரட்டைச் சங்கு, தொண்டகப்பறை, சல்லரி, துந்துமி, மத்தளம், தாளம், கிடுபிடி, நாகசுரம், வாங்கா, காளம், கொம்பு, தம்புரு, வீணை, சுரமண்டலம் என்னும் வாத்தியங்கள் சொல்லப்படுகின்றன.

## மகளிர் கூற்று

தலைவர் பவனி வருகையில், 'ஏழ்பருவமாதர் கண்டு மாலாகி' இவர் பவனி வந்த யானையைப் பார்த்து, "யானையே! உன் காலே உரலாகவும் உன் கொம்பே உலக்கையாகவும் கொண்டு எங்களைத் துன்புறுத்தும் மன்மதனுடைய வில்லாகிய கரும்பை இடிக்க மாட்டாயோ? வயல்களிலே விளையும் கரும்பைத்தின்கின்ற நீ மன்மதன் கரும்பைத் தின்னக் கூடாதோ? அது கசக்குமோ? பகைவர்களுடைய குடைகளையெல்லாம் சிதைக்கும் நீ மன்மதன் குடையாகிய சந்திரனைச் சிதைக்கும் ஆற்றல் அற்றாயோ? குறுமுனியாகிய அகத்தியருடைய குறியகைக்குள் அடங்கியதும் எங்களுக்குத் துன்பத்தைத் தருவதுவாகிய இந்தக் கடலை உன்னுடைய நீண்ட கைக்குள்ளே அடக்க முடியாதோ? பகைவர்களுடைய செய்குன்றுகளை யெல்லாம் அழிக்கும் இயல்புடைய உன்னால் நாங்கள் துன்புறும்படி வீசும் தென்றலை உண்டாக்குகின்ற பொதியில் மலையை அழித்தல் ஆகாதா? எங்களிடம் பேசாமலிருக்கிறாயே: உனக்கென்ன மதமா? நால்வாயிருந்தும் பேசாதவிதம் என்ன?" என்று முறையிடும் பகுதி மிக்க நயமுடையதாக அமைந்துள்ளது.

## குறள் அமைப்பு

"சிற்றின மஞ்சும்" என்னும் திருக்குறளை 40-ஆம் கண்ணியிலும், "அரியவற்றுள்" என்னும் குறளை 42-ஆம் கண்ணியிலும், "பிறவிப் பெருங்கடல்" என்பதை 44-ஆம் கண்ணியிலும், "தொகச்சொல்லி" என்பதை 293-ஆம் கண்ணியிலும் இவ்வாசிரியர் இந்நூலில் அமைத்து அழகு செய்திருக்கிறார்.

## அணிகள் முதலியன

உவமை, உருவகம், சிலேடை, சொற்பின் வருநிலை என்னும் பொருளணிகளும், திரிபு, மடக்கென்பவையும், தொனியும் அங்கங்கே அமைந்துள்ளன.

'தனந்த தனனா தனந்த தனனா'

என்றும்,

'தனதந் தனதந் தனதந் தனதந்'

என்றும்,

*'தானதன தானதன தானதன தானதன'*

என்றும்,

*'தந்தனந்த தந்தனந்த தந்தனந்த தந்தனந்த'*

என்றும்,

*'தத்தனத்த தத்தனத்த தத்தனத்த தத்தனத்த'*

என்றும் வரும் குழிப்புக்களையுடைய சந்தங்களை இவர் ஆண்டிருக்கின்றனர்.

## செய்யுள் நடை

இந்நூல் வடசொற்கள் விரவியும், உலகவழக்குச் சொற்களும் திசைச் சொற்களும் அங்கங்கே அமைந்தும், பழமொழிகள் இடையிடையே பெற்றும் எளிதிற் பொருள் புலப்படும் இனிய நடையையுடையதாகி விளங்குகின்றது. இதில் வந்துள்ள உலகவழக்குச் சொற்களில் சில வருமாறு: துரை, பிசகு, தப்பிதம், சொந்தம், மெத்த, கெடி, கெருவிதம், நோண்டல், திட்டவட்டம், தாபரிப்போன், உதாகரிகன், சலவை, மிஞ்சி, நகரா, கிடுபிடி, கேப்புலி முதலியன.

தெப்பத்துக்குரிய புணையென்னும் சொல்லைப் பிணையென்றும் மானுக்குரிய அரிணமென்பதை அருணமென்றும் சார்ங்கமென்பதைச் சாரங்கமென்றும் அமைத்திருக்கின்றார்.

இந்நூலைப் படித்து இன்புறுபவர்களுக்கு இதன் ஆசிரியர், கருத்துக்களை அலங்காரமாக வெளியிடுபவரென்பதும், பண்டை இதிகாச புராணச் செய்திகளை மிக அறிந்தவரென்பதும், பழைய நூல்களைப் பயின்று அவற்றிலுள்ள கருத்துக்களை இடமறிந்து வெளியிடுபவரென்பதும், திருக்குறளின்பாற் பேரன்புடையவரென்பதும், தமிழன்பு வீறியவரென்பதும், உபகாரிகளை வாயார வாழ்த்தும் இயல்பினரென்பதும் வெளியாகும்.

# தாண்டவராய பிள்ளை

மான்விடு தூதின் பாட்டுடைத் தலைவராகிய தாண்டவராய பிள்ளை இற்றைக்குச் சற்றேறக்குறைய 230-வருஷங்களுக்கு முன் கார்காத்த வேளாள குலத்திலே காத்தவராய பிள்ளை என்பவருக்குப் புதல்வராகப் பிறந்தவர். இவருடைய ஊர் முல்லையூரென்பது. இளமைப் பருவத்திலிருந்தே நல்லறிவு வாய்க்கப் பெற்றுர். இவருடைய பரம்பரையினர் கணக்கெழுதும் உத்தியோக முடையவர்கள். இவர் காலத்தில் சிவகங்கை ஸம்ஸ்தானத் தலைவராக இருந்த ராசபுலி வடுகநாத துரை யென்பவர் இவருடைய அறிவின் திறமையையும், ஆற்றலையும் உணர்ந்து இவரைத் தமக்கு மந்திரியாக அமர்த்திக்கொண்டார். அதுமுதல் ஸம்ஸ்தானத்துக் காரியங்கள் யாவற்றையும் இவர் மிகவும் திருத்தமாகவும் சிறப்பாகவும் நடத்தி வந்தார்; இவருடைய அதிகார ஒழுங்கினுல் ஸம்ஸ்தாஞதிபதி யாதொரு கவலையுமின்றி வாழ்ந்து வந்தார். இவருக்கு அவர் பல்லக்கு, தண்டிகை, கவரி, குடை, காளாஞ்சி, குதிரை, ஊர் முதலிய வரிசைகளை வழங்கினர்.

இவருக்கு இராமகிருஷ்ண பிள்ளை, விசுவநாத பிள்ளை, சூரிய நாராயண பிள்ளை என்னும் மூன்று தமையன்மார் இருந்தனர்; அம்மூவர்களுக்கும் பத்மநாப பிள்ளை, சசிவர்ணராச பிள்ளை, சுப்பிரமண்ய பிள்ளை என்பவர்கள் புதல்வர்கள்; இவர்களுள் இன்னவர் இன்னவருடைய குமாரரென்று விளங்கவில்லை. தாண்டவராய பிள்ளைக்கு இராமகிருஷ்ண பிள்ளையென்ற ஒரு குமாரர் இருந்தனர். இவருடைய சகோதரி கணவராகிய நமச்சிவாயபிள்ளை யென்பவருக்குக் கைலாசபிள்ளை யென்ருெரு புதல்வர் உண்டு.

தாண்டவராய பிள்ளை வீரமும், கணக்கின் நுட்பமும் தெளிந்த அறிவும், இன்னுரை இன்னபடி நடத்தவேண்டுமென்னும் தகுதியுணர்ச்சியும், ஸம்ஸ்தானத்தின் வளங்களை மிகுக்கும் வழிகளையறிந்து முயலும் முயற்சியும், தைரியமும் உடையவர்; தம்மை அடுத்தவரைத் தாய்போல ஆதரிப்பவர்; பின்பு என்செய்வதென்று கருதாமல் வழங்கும் வண்மையினர்; சொன்ன மொழி தவருத வாய்மையை யுடையவர்; துட்டரை அடக்கி அஞ்சச் செய்யும் பராக்கிரமம் பொருந்தியவர்; நல்லோருக்கு நன்மை புரிபவர்; கல்வி கேள்வியில் விருப்பமுடையவர்; ஸங்கீதத்திற் பயிற்சியும் அதனைக் கேட்பதிற் பெருவிருப்பமும் உள்ளவர்; தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கும் தன்மையினர்; தம்முடைய உறவினரை மதித்துப்

பாதுகாப்பவர்; நியமமும் அனுட்டானமும் உடையவர்; பூசை முதலியவற்றைப் பக்தியுடன் செய்பவர்; பலவகையான தருமங்கள் புரிந்தவர்; 'தன்மசீரன் தருமசகாயன்' என்றும், 'ஆர்க்கும், உபகாரஞ் செய்யவென்றே யோதுநூல் கற்றோன், அபகாரஞ் செய்ய வறியான்' என்றும் பாராட்டப் பெறுபவர்.

இவர் இயற்றிய தர்மங்கள் அளவிறந்தன: குன்றக்குடியிலுள்ள முருகக் கடவுள் திருக்கோயிலைப் புதுப்பித்தார்; வையாபுரியென்னும் தடாகத்தை அமைத்து அதற்கு அழகியபடித்துறையும் அதனைச் சுற்றிலும் நந்தவனமும் வேத பாடசாலையும் நிறுவினார். இவற்றோடு முருகப்பெருமானுக்கு நித்தியக் கட்டளை, துவாதசிக் கட்டளை, தைப்பூசக் கட்டளை என்பவை நன்கு நடைபெறச்செய்தார்; திருப்புத்தூரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீதளீசுவரர், வயிரவமூர்த்தி, பிரான்மலையில் எழுந்தருளியுள்ள மங்கைபாகர், வயிரவர், திருக்கோட்டியூர் ஸ்ரீ சௌமிய நாராயணப் பெருமாள் என்னும் மூர்த்திகளுக்கு மண்டபம், மதில், நந்தவனம், வாகனம், நெய் விளக்கு முதலியவற்றை அமைத்து நித்திய நைமித்திகங்கள்குறைவின்றி நடந்துவரச் செய்தார். தென்பாகநேரி யென்னும் ஊருக்கு வடக்கேயிருந்த பெரிய காட்டை அழித்து ஊராக்கி அங்கே சோலைகளையும் ஒரு பெரிய தடாகத்தையும் அமைத்து அத்தடாகம் தம்முடைய அரசர் பெயரினால் 'முத்து வடுகநாத சமுத்திரம்' என்று வழங்கச் செய்தார். இங்ஙனமே அரசர் பெயரால் தடாகங்கள் வழங்கும் மரபு, மதுரையைச் சார்ந்த வண்டியூர்த் தெப்பக்குளத்தின் பெயராகிய திருமலைராஜ சமுத்திரமென்பதனாலும் தெரியவருகிறது. சோழபுரம் என்னும் ஊரில் திரியம்பக தீர்த்தத்தை இவர் உண்டாக்கினார்; வைகைநதிக் கரையிலுள்ள பரம்பைக்குடியில் குளம் கிணறு முதலியன வெட்டித் தண்ணீர்ப் பந்தல், நந்தவனம், பூஞ்சோலை, மடம், தருமசத்திரம் ஆகியவற்றை இயற்றினார்; அன்னதானம் மிகுதியாகச் செய்வித்தனர்; இதனை இந்நூல், "முந்தப், படிக்கட் டளையாய்ப் பசித்துவந்தோர்க் கெல்லாம், கொடிக்கட்டி யன்னங் கொடுத்தோன்' என்று சிறப்பித்துக் கூறும்.

இத்தகைய அறச்செயல்களைப் புரிந்து புலவர் பாடும் புகழுடையவராக விளங்கிய இவரைக் குழந்தைக் கவிராயர், நாவலர் தாரு என்றும் கன்னவதார வுபகாரி யென்றும், வாணர் புரவலனென்றும், புகழாபரணனென்றும் பாராட்டுதல் தன்மை நவிற்சியாகுமேயன்றி மிகையாகாது.

(குழாங்கொண்ட மகளிர் செயல்)

உ௫௩. மண்டபமு நந்தா வனமு மலர்வீடும்
கொண்ட பெருந்தெருவுங் கோபுரமும்—மண்டிவிளை

உ௫௪. யாடுகின்ற பேதையரே யாதியா யேழ்பருவ
வாடுமிடை யார்கோடி மாலாகி—ஓடிவந்து

உ௫௫. கண்ட வுடன்கமலக் கைகுவித்தார் மெல்லமெல்லக்
கொண்டுநட தந்தியெனக் கும்பிட்டார்—மண்டலமேல்

உ௫௬. ஆணி லழகனிவ னுமென்பார் கண்காண
வேணு மனந்தமென்பார் மெல்லியலார்—சேணிக்கு

உ௫௭. மாரனோ விந்திரனோ மாமாலோ சூர்தடிந்த
வீரனோ பாருமென்பார் மெல்லியலார்—மாரனென்றாற்

உ௫௮. கன்னற் சிலையுண்டே காணரதி யோநாமும்
வன்னிப் பரியெங்கே மாரனென்றாற்—பொன்னிலகு

உ௫௯. விண்ணாடர் கோமானேல் வெள்ளைமத யானையுண்டே
கண்ணா யிரமெங்கே காட்டுமென்பார்—எண்ணாமல்

உ௬0. முன்னகத்தை யேந்து முகில்வண்ண னுமாயிற்
பன்னகத்தை யுண்ணும் பரியெங்கே—அந்நகத்தைத்

உ௬௧. தாக்குமயில் வீரனென்றாற் சந்ததமு நீங்காமற்
காக்கு மயில்வா கனமுண்டே—பார்க்கினிவன்

உ௬௨. மேழி விருதால் விருதுசின்னஞ் சொல்லுவதால்
வாழி குவளைமலர் மாலையால்—ஆழிதொட்ட

---

உ௫௩. நந்தாவனம் - நந்தவனம். மலர்வீடு - மலர்மண்டபம்; லதாக் கிருகமென்று கூறப்படும். மண்டி - நெருங்கி.

உ௫௪. மாலாகி - மயலடைந்து.

உ௫௫. தந்தி - யானையே.

உ௫௬. காண அனந்தம் கண்வேணும்; அனந்தம் - அளவின்மை.

உ௫௬ - எ. இக்கு மாரன் - கருப்புவில்லையுடைய மன்மதன். சூர் தடிந்த வீரன் - முருகக்கடவுள்.

உ௫௮. கன்னற்சிலை - கரும்புவில். இரதியையன்றி ஏனையோர் கண்களுக்குக் காமன் புலப்படான். வன்னி - கிளி.

உ௬0. முன் நகத்தை; நகம் - கோவர்த்தனகிரி. பன்னகம் - பாம்பு. பரி - கருடன். அ நகத்தை - கிரவுஞ்சகிரியை.

உ௬௧. தாக்கும் அயில் வீரன்; அயில் - வேல்.

உ௬௨. விருது - இங்கே கொடி; வேளாளருக்கு மேழிக்கொடியும் குவளைமாலையும் உரியன. ஆழி - மோதிரம்.

உ௫௯-௬௨. "இந்திர னென்னி னிரண்டேக ணேறூர்ந்த, அந்தரத்தா னென்னிற் பிறையில்லை — யந்தரத்துக், கோழியா னென்னின்

உசுந. ராகவன்கைத் தாண்டவ ராயமன்ன னுமென்றே
மாகவன மாகவே வந்துநின்று—வேகமிக

(குழாங்களின் கூற்று)

உசுச. உன்கா லுரலா வுலக்கை மருப்பாக
வன்காமன் றன்சிலையை மாட்டாயோ—நன்கானச்

உசுரு. செய்க்கரும்பு தின்னத் தெவிட்டாதோ மன்மதனார்
கைக்கரும்பு தின்றாற் கசக்குமோ—மைக்களிறே

உசுசு. கொட்டமிடுந் தெவ்வர் குடையைச் சிதைப்பதலால்
வட்ட மதன்குடைக்கு மாட்டாயோ—குட்டைமுனி

உசுஎ. தன்கைக் கடங்குமிந்தத் தண்கடலை நீண்டிருந்த
உன்கைக்கு ளேயடக்க வொண்ணாதோ—பொன்கொட்டிக்

உசுஅ. கப்பமிடார் செய்குன்றைக் கட்டழிப்பாய் தென்மலையை
அப்பரிசு செய்யவுன்னா லாகாதோ—செப்பும்

உசுகூ. மதமோ மொழிந்திடநால் வாயிருந்துங் கூறா
விதமேதோ வேழையர்கண் மீதும்—கதமுண்டோ

உஎ0. என்றூர் நமதுபணி யெல்லாமுங் கைக்கொண்டால்
நன்றா மமைச்சருக்கு ஞாயமோ—குன்றாத

உஎக. வள்ளத் தனத்தியர்கள் வஞ்சரைச் சூறைகொள்வோன்
கள்ளத் தனத்தையெங்கே கட்டுரைப்போம்--தெள்ளுதமிழ்

உஎஉ. மல்லையான் சொல்லு மதுர கவிக்கல்லால்
முல்லையா னம்பான் மொழிவானோ—மெல்லியலீர்

---

முகமொன்றே கோதையயே, ஆழியா னென்றுணரற் பாற்று'' என்னும் பழம் பாடல் இதன் பொருளோடு ஒத்துள்ளது.

உசுந. ராகம் வன் கை - செம்மையையுடைய வலிய கை.

உசுச. சிலையை - கரும்பாகியவில்லை. மாட்டல் - இடித்தல்.

உசுரு. செய்க்கரும்பு - வயலில் விளையும் கரும்பு.

உசுசு. தெவ்வர் - பகைவர். குடைக்கு - குடையைச் சிதைத்தற்கு. மாட்டாயோ - வன்மையில்லாயோ. குட்டைமுனி - அகத்தியர்.

உசுஅ. தென்மலை - பொதியின்மலை; தென்றற்காற்றின் பிறப்பிட மாதலின் அம்மலையைத் தலைவி வெறுத்தனள்.

உசுகூ. நால்வாய் - நான்றவாய்; நான்குவாயென்பது தொனி. கூறா விதம் ஏதோ. கதம் - கோபம்.

உஎ0. பணி - ஆபரணம்.

உஎக. தனத்தியர்கள்: தன்மைப்பொருளது.

உஎஉ. மல்லையான் - மல்லையூரிலிருந்தவன்; மல்லையென்பது மிதிலைப் பட்டிக் கவிராயர்களுக்குரிய அடைமொழி. முல்லையான் - முல்லையூரான்; என்றது இப்பாட்டுடைத் தலைவரை.

உளரு. அந்தமல்லர் கோட்டைகட்டி யாளுகின்றான் பஞ்சணையில்
வந்தமல்லர் கோட்டைகட்ட வாரானோ—சொந்தச்

உளச. செயமங்கை வீற்றிருக்குஞ் செம்பொன் மணிக்குன்றும்
புயமங்கை யாற்றழுவப் போமோ—பயமென்றே

உளரு. ஏழையர் வார்த்தைசெவிக் கேறுமோ மேனியெல்லாம்
மாழையுருக் கொண்டோமோ வாருமென்னச்—சூழநின்று

(தலைவி தலைவனது பவனி காணவருதல்)

உளசு. கன்னியர்க ளின்னபல கட்டுரைக்கும் வேளையினில்
மன்னுமத யானையின்முன் வந்துநின்றேன்—கன்னற்

உளஎ. சிலையேந்து சிங்கார தேக மதனை
மலையேந்தி யான்புரந்த மாலைத்—தலைசேர்

உளஅ. சிவிச்சக்ர வர்த்தியைப்போற் சேர்ந்தோரைக் காத்த
புவிச்சக்ர வர்த்தியைமுன் போரிற்—சவிச்சக்ரம்

உளகூ. ஆதவன்மே லேவிநின்றே யாரிருள்பூ ரித்துநின்ற
மாதவனை நீள்கருணை வாரிதியை—மோது

உஅ0. பரதிமிர ராசியடர் பாற்கரனை யார்க்கும்
சரதகுண சந்த்ரோ தயனை—விரவு

உஅக. கரதலபங் கேருகனைக் காத்தவ ராயன்
வரதனய ஞன மணியைச்—சருவும்

உஅஉ. விரவலர் கோளரியை விற்பனனை வாணர்
புரவலனை நீலப் புயனை—இருநிதியைக்

---

உளரு. பஞ்சணையில்......கட்ட : குறிப்பு.

உளச. வீரமுடையார் தோளில் செயமங்கை இருப்பதாகக் கூறுதல் மரபு; "என்னேய் சிலமாத ரெய்தற் கெளியவோ, பொன்னே யனபாயன் பொன்னெடுந்தோள் - முன்னே, தனவேயென் றாளுஞ் சயமடந்தை தோளாம், புனவேய் மிடைந்த பொருப்பு." புயம் அங்கையால், போமோ - முடியுமோ.

உளரு. மாழையுரு - பசலைநிறம்.

உளசு. இன்ன பல - இத்தகைய சொற்கள் பலவற்றை.

உளஎ. ஆன் புரந்த - பசுக்களைப் பாதுகாத்த. தலை - தாசுத்தட்டு.

உளஅ. சிவி - சிபி. சவிச்சக்ரம் - ஒளியையுடைய சக்கராயுதத்தை.

உளகூ. பூரித்து - நிறைத்து.

உஅ0. பரதிமிர ராசி - பகைவர்களாகிய இருட்கூட்டத்தை. பாற்கரனை - சூரியனைப்போன்றவனை. சரதகுணம் - சரஸகுணம்.

உஅக. வரதனயன் - வரத்தாற்பெற்ற பிள்ளை.

உஅஉ. விரவலர் - பகைவர். கோளரி - சிங்கம். வாணர் - புலவர். நீலப்புயனை - குவளை மலர்மாலையை யணிந்த தோளையுடையவனை.

(தலைவி மயல்கொள்ளல்)

உஅங. கண்டேன் திருவழகைக் கண்குளிரச் சேவித்தேன்
கொண்டே னதிமோகங் கொண்டமயல்—விண்டுரைக்க

உஅச. இவ்வேளை நல்வேளை யென்றுசொல் லும் வேளையினிற்
செவ்வேழங் கான்மீறிச் செல்லவே— வெவ்வேல்

உஅரு. மதனம்பு பாய வரிக்கணம்பு பாய
விதனமொடு சோர்ந்து மெலிந்தேன்—பதன

உஅசு. இடைதுவளக் குன்றமென வேந்துவளக் கொங்கை
நடைதுவள மெல்ல நடந்தேன்—புடைதழுவு

உஅஎ. விஞ்சுசகி மார்செறிந்து மேலணைத்துக் கொண்டேக
நெஞ்சு சகியே னிலைதளர்ந்தேன்—பஞ்சணையிற்

உஅஅ. சேர்த்தினர் பன்னீர் தெளித்தார் தழலினிடை
வார்த்தவெண்ணெய் போலவுள்ளம் வாடினேன்—கூர்த்துமுகம்

உஅகூ. பாராத வன்மயலாற் பாவி யுடல்வருந்தத்
தேராத வன்குடபாற் சென்றொளித்தான்—பேராத்

உகூ0. துருத்திதென்றன் மாலை சுடர்மதியம் வெள்ளி
உருத்தசெழுந் தீயி னுருக்கி—விருத்தமதன்

உகூக. வாரி யிறைப்பதுபோல் வன்னிலவு வீசவிரா
ஒருகமே யாகி யுடலயர்ந்தேன்—பாரறிய

உகூஉ. அம்பலரும் பாரலரு மாக்கினன் மன்மதன்கை
அம்பலருக் காரவமே யாக்கினன்—அன்பு

உகூங. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூதென்—றகத்தறிந்தே

உகூச. புத்திமான் சந்து பொருந்துவாய் நீநினைந்தாற்
சித்தியா மென்றே தெளிந்துரைத்தேன்—பத்தியாய்ப்

---

உஅங. விண்டு உரைக்க - வெளிப்படையாகச் சொல்ல.

உஅரு. வரிக்கண் அம்பு; அம்பு - நீர். பதனம் - பாதுகாப்பு.

உஅஎ. சகிமார் - தோழியர். சகியேன் - பொறேனாகி.

உஅகூ. பாராதவன் - தலைவன். பாவியென்றது தன்னையே. தேர் ஆதவன். குடபால் - மேற்றிசையில்.

உகூ0. மாலையிற் சுடரும் மதியம். உருத்த - வெம்மையாகிய.

உகூஉ. அம்பல் - சிலர்கூறும் பழிமொழி. அரும்புதலார்ந்த அலர்; அலர் - பலர்கூறும் பழிமொழி. அம்பாகிய அலருக்கு. ஆரவம் - பகை.

உகூங. இது திருக்குறள்.

உகூச. புத்திமான் - புத்தியையுடைய மான், அறிவுடையவன், சந்து - தூது. சித்தி - காரியம் கைகூடல்,

(தலைவி தூதுரைக்கும் சமயத்தைக் கூறுதல்)

உகரு. பூசைபண்ணும் வேளையினிற் போகேல் சமத்தான
ராசவட்ட வேளையிலு நண்ணாதே—யோசனைசெய்

உகசு. தானபதியர் தளகர்த்தர் காரியத்தர்
ஆனத போது மணுகாதே—தானுக

உகஎ. ஒப்பமிடும் வேளையிலு மொன்னார் திறைகொணர்ந்து
கப்பமிடும் வேளையிலுங் கட்டுரையேல்—எப்புவிக்கும்

உகஅ. பேராட்டும் வாணர் ப்ரபந்தகவி வந்திருந்து
பாராட்டும் வேளை பகராதே—சீராட்டும்

உகக. உல்லாச மன்மதன்போ லொண்டொடியார் கூட்டமிடும்
சல்லாப வேளையிலுந் தானுரையேல்—வல்லாள

ஙOO. போசன் கொலுப்பெருக்கிப் போசனமுந் தான்பண்ணி
வீசுமலர்ச் சப்ரமஞ்ச மீதினிலே—நேச

ஙOக. மிதசனங்க டற்சூழ வீற்றிருக்கும் வேளை
மதுமலர்த்தார் வாங்கிநீ வா.

---

உகரு. சமத்தானம் - ஸம்ஸ்தானம்.

உகசு. தளகர்த்தர் - சேனபதியர். ஆனதபோது - நீங்காத காலத்தில்.

உகஎ. ஒப்பம் - கையொப்பம். ஒன்னார் - பகைவர். திறை - கப்பப் பொருள்கள்.

உகஅ. பேரைச் செலுத்துகின்ற. வாணர் - புலவர்.

உகக. உல்லாசம் - மிக்க களிப்பு. சல்லாபம் - அளவளாவல்.

ஙOO. கொலு - திருவோலக்கம். சப்ரமஞ்சம் - கட்டில்.

ஙOக. மிதசனங்கள் - அளவான பரிசனங்கள்.

## வாழ்த்து

(கட்டளைக் கலித்துறை)

உத்தம வேதிய ரானினம் வாழி யுயர்ந்தசெங்கோல்
முத்தமிழ் வாழி கிளைவாழ வாழிதென் முல்லைநகர்
வித்தகன் றுண்டவ ராசேந்த்ரன் வாழி விளங்குமனை
நித்தியஞ் சோபனங் கல்யாணம் வாழி நிலைபெறவே.

---

வாழ்த்து : செங்கோலும் முத்தமிழும் வாழி. கிளை - சுற்றத்தார். சோபனம் - மங்களம்.

# முகவுரை

தூதென்பது ஒருவர் தம்முடைய கருத்தை வேறொருவருக்கு இடை நின்ற ஒருவர் வாயிலாகக் கூறி விடுப்பது. அரசர்கள் பகையரசர்கள்பாலும், புலவர்கள் உபகாரிகளின்பாலும், தலைவி தலைவன்பாலும், தலைவன் மணத்தின் பொருட்டுத் தலைவியைச் சார்ந்தோர்பாலும், ஊடலை நீக்கும் பொருட்டுத் தலைவியின் பாலும் தூதுகளை அனுப்புதல் மரபு.

இராமாயணத்தில் வரும் அங்கதன் தூது முதலியனவும், பாரதத்திலுள்ள உலூகன் தூது, சஞ்சயன் தூது, கிருஷ்ணன் தூது என்பனவும் பகையரசர்கள்பால் விடுத்த தூதுகளாகும். கோவை நூல்களில் தூதிற் பிரிவென்னும் கிளவியிற் சொல்லப்படும் தூதும் இதனைச் சார்ந்ததே. திருக்குறளில் தூதென்னும் அதிகாரத்தில் இவ்வகைத் தூது செல்வாருடைய இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன. பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழன்பால் அன்னச்சேவலை விடுத்ததாகப் புறநானூற்றிற் கூறப்படும் தூது புலவர் உபகாரியின்பால் விடுத்ததற்கு உதாரணமாகும். குணமாலை சீவகனுக்குக் கிளியை விடுத்தது போன்றவை தலைவி தலைவனுக்குத் தூது விட்டனவாம். தலைவன் மணப்பொருட்டாகத் தூதுவிடுதல் கோவை நூல்களாற் புலனும். சுந்தரமூர்த்திநாயனார் சிவபிரானைத் தூதுவிட்டதும் பிறவும் தலைவியின் ஊடலை நீக்கத் தலைவன் தூது விட்டனவாம்.

இவற்றுள், தலைவி தலைவன்பால் விடும் தூதும், தலைவன் தலைவியின்பால் விடும்தூதும் பொருளாகத் தனியே அமைந்த பிரபந்தங்கள் பல தூதென்னும் பெயருடனே தமிழிலும் பிறமொழிகளிலும் வழங்குகின்றன. இப்பெயர்கள் தூதுவிடப்படும் பொருள்களின் பெயர்களைச் சார்ந்தே வழங்கும். இவை இரண்டனுள் முன்னது களவுக்காலத்தும், பின்னது கற்புக் காலத்தும் பெரும்பாலும் நிகழ்வனவாம். தமிழிலுள்ள தூதுப் பிரபந்தங்களில் தலைவி தலைவன்பால் தூதுவிட்டனவே மிகுதியாக உள்ளன.

தலைவனைப் பிரிந்த காமமயக்கத்தால் தலைவி அஃறிணைப் பொருளையும் உயர்திணைப் பொருளையும் தூது விடுப்பதாகச் செய்தல் கவிமரபு. அஃறிணைப் பொருள்களை அங்ஙனம் விளித்துக் கூறுதல் 'காமமிக்க கழிபடர் கிளவி' யென்று சொல்லப்படும்; "சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச், செய்யா மரபிற் றொழிற் படுத் தடக்கியும்" (தொல். பொருள். சூ. 2) என்பது இதற்குரிய விதி. இங்ஙனம் தலைவி தூதுவிட முயலுதலை வரைந்தெய்துங் கூட்டத்திற்கு ஏதுவாகிய எட்டுவகை மெய்ப்பாடுகளுள் தூது

முனிவின்மை என்பதனுள் அடக்குவர் (தொல். மெய்ப். சூ. 23); 'தூது முனிவின்மை - புள்ளும் மேகமும் போல்வன கண்டு சொல்லுமின் அவர்க்கென்று தூதிரந்து பன்முறையானும் சொல்லுதல்' என்பது பேராசிரியர் உரை.

இவ்வாறு விடப்படும் தூதைப் பொருளாகவுடைய செய்யுட்கள் முற்காலத்து நூல்களிலும் பிற்காலத்து நூல்களிலும் உள்ளன. அகநானூற்றுள், "கானலுங் கழறாது" (170) என்னும் செய்யுளில் ஒருதலைவி நண்டைத் தூதுவிட்ட செய்தியும், ஐங்குறு நூற்றில் "சூழ்கம் வம்மோ" (317) என்னும் செய்யுளில் நெஞ்சைத் தூதுவிட்ட செய்தியும் காணப்படுகின்றன. பரிபாடலிலுள்ள "தூதேய வண்டின் தொழுதி" என்னும் பகுதி வண்டைத் தூதுவிடும் மரபையும், நற்றிணையில் உள்ள "சிறுவெள்ளாங் குருகே" (70) என்பது வெள்ளாங் குருகைத் தூதுவிடுவதையும் புலப்படுத்துகின்றன. தேவாரத்திலும், திவ்யப்பிரபந்தங்களிலும், அந்தாதி, கலம்பகம் முதலிய பலவகைப் பிரபந்தங்களிலும் பல செய்யுட்கள் தூதாக அமைந்துள்ளன.

தூது விடுதற்குரிய பொருள் இவைதாமென்ற வரையறையில்லை. இரத்தினச்சுருக்கத்துச் செய்யுள் ஒன்று, அன்னம், மயில், கிள்ளை, மேகம், நாகணவாய்ப்புள், பாங்கி, குயில், நெஞ்சு, தென்றல், வண்டு என்னும் பத்துப் பொருள்களைக் கூறுகின்றது. இவற்றுள் ஒவ்வொன்றற்கும் தனித்தனியே இலக்கியமாக அமைந்த நூல்கள் முன்பு இருந்தனபோலும்; இப்பொழுது அன்னம், நாகணவாய்ப் புள், குயில் என்பவற்றைத் தூது விட்டதாக அமைந்த நூல்கள் தமிழிற் காணப்படவில்லை. மேற்கூறிய பத்தையும் தூது விட்டதாகத் தானப்பாசாரியாரென்னும் ஒருபகாரிமீது திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களால் இயற்றப்பட்ட [1]தசவிடுதூது என்னும் நூலொன்றுண்டு. இந்தப் பத்தையும் அல்லாத வேறு பல பொருள்களைத் தூது விட்டதாக அமைந்த தமிழ் நூல்கள் பல. ஒருவகையிலேயே ஒன்றுக்கு மேற்பட்ட நூல்களை வெவ்வேறு புலவர்கள் இயற்றியிருக்கிறார்கள். தூதுப் பிரபந்தங்கள்கலிவெண்பாவிற் செய்யப்படுதல் வேண்டுமென்பது இலக்கணம்.

தம்தம் கற்பனைத்திறத்துக்கு எவ்வெப்பொருள் ஏற்புடையனவாக இருக்கின்றனவோ அவ்வப் பொருள்களைத் தூதுவிடுத்ததாகப் புலவர்கள் பிரபந்தங்களை இயற்றியிருக்கின்றனர். அவற்றுள் இந்த மான்விடுதூதும் ஒன்றாகும்.

---

1. இப்போது அது கிடைக்கவில்லை.